

# சேதுபதி மன்னர் செப்பேடுகள்

டாக்டர். எஸ். எம். கமால்



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சேதுபதி மன்னர் செப்பேடுகள்

ஆசிரியர்

இராமநாதபுரம்

**டாக்டர். எஸ். எம். கமால்**

வெளியீடு :

**ஷர்மிளா பதிப்பகம்**

21, ஈசா பள்ளிவாசல் தெரு,

இராமநாதபுரம் - 623 501.

# BIBILIOGRAPHICAL DATA



| | | | |
|---|---|---|---|
| 1. | Title | : | Sethupathi Mannar Cheppedukal |
| 2. | Author | : | Dr. S. M. Kamal<br>21, Esa Pallivasal Street,<br>Ramanathapuram – 623 501. |
| 3. | Language | : | Tamil |
| 4. | Publication | : | First Edition, December, 1992 |
| 5. | Copy right | : | Author |
| 6. | Paper used | : | White Cream |
| 7. | Size of the book | : | 21.5 cm × 14 cm |
| 8. | Type used | : | 10pt. Roman |
| 9. | No. of Copies | : | 1000 |
| 10. | Pages | : | 720 |
| 11. | Printer | : | Parani Achchaham<br>4, Me.avadampokki. Street.<br>Madurai - 625 001 |
| 12. | Publisher | : | Sharmila Pathippakam,<br>21, Esa Pallivasal Street.<br>Ramanathapuram – 623 501 |
| 13. | Subject | : | Copper plates |
| 14. | Summary | : | Compilation of Copper grants issued by the Sethupathy Kings of Ramanathapuram Country during the period from 1607 A.D. to 1792 A.D. with Commentary and local history. |
| 15. | Price | : | Rs. **95-00** |

*வித்யாவாசஸ்பதி*
*சிலை மீட்ட செம்மல்*
டாக்டர் **இரா. நாகசாமி** *இயக்குநர்*
*தொல் பொருள் ஆய்வுத்துறை (ஓய்வு)*

*பெசன்ட் நகர்,*
*சென்னை 90*

# அணிந்துரை

இந்நூலாசிரியர் டாக்டர் எஸ். எம். கமால் அவர்கள் தமிழ் வரலாற்றில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதியவரல்லர். பலவரலாற்று நூல்களைப் படைத்து புகழ் கொண்டவர். கமால் அவர்களின் நூல்களில் வரலாறு மிளிரும்; தமிழ் மிளிரும்; இனிமை மிளிரும். விருப்பு வெறுப்பின்றி, சமநோக்கும் பொது நோக்கும் கொண்டு, வரலாற்று நெறி பிறழாது எழுதும் மரபு கொண்டவர். தாம் கூறும் கருத்துக்களுக்கு தக்க சான்றுகளை மேற்கோள்களாகக் காட்டி, தம்நூலை என்றும் நிலைத்து நிற்கும் அடிப்படைச் சான்று நூலாக ஆக்குவதில் கண்ணும் கருத்துமாக திகழ்பவர். பல பல்கலை கழகப் பேராசிரியர்களும். ஆராய்ச்சி மாணவர்களும் தேடித்திரட்ட வேண்டிய சான்றுகளை செய்திகளை தனியொரு மனிதராக சேகரித்து பேராசிரியர்களும் போற்றும் வண்ணம் தமது நூலைப் படைப்பவர் கமால் அவர்களின் நூல் என்றாலே தரமான நூல். உடனடியாகப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எழுதுபவர்.

பல வரலாற்று நூல்கள் சுவையின்றி சப்பென்று இருக்கும். ஆனால் கமால் அவர்களின் எழுத்தில் ஓர் சக்தி உண்டு. அச் சக்தி ஆக்கசக்தியாக மலருமே ஒழிய அழிவு சக்தியாக இருக்கவே இருக்காது. ஆதலின் தான் இவரது படைப்புகளில் பெரும்பாலானவை பரிசும் பாராட்டுகளும் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக *''விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்''* என்ற நூலைப் பார்த்தாலே நான் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துக் கருத்துக்களும் மிகையல்ல என்பது தெளியலாம்.

என்பதை கமால் அவர்கள் விளக்கியுள்ளார். ''ஆன்ம நேய ஒருமைபாட்டை உகந்தவர்களாக வாழ்ந்தனர்'' எனக்குறித் துள்ளார். இஸ்லாமிய புனித மகான்களது அடக்க இடங்களுக்கு நிலக்கொடைகளை வழங்கியுள்ள சேதுபதி மன்னர்கள், வள்ளல் சீதக்காதியைத் தங்கள் அமைச்சராகக் கொண்டு தம் உடன் பிறவாச் சகோதரராக விஜய ரகுநாத தம்பியாக மதித்தையும் ''நமது'' என்ற சொல்லால் இஸ்லாமியர்பால் இம்மன்னர்கள் கொண்டிருந்த நேயத்தையும், ''துலுக்கர்தறிக்கடமை நீக்கி'' என்ற தொடரையும் காட்டி வரலாற்றுக்கு பெரும் தொண்டாற்றி யுள்ளார் கமால் அவர்கள். அதுமட்டும்தானா! 1734ல், கிறிஸ்தவ புனித பிரிட்டோ பாதிரியாரின் நினைவாகக் கட்டப்பட்ட தேவா லயத்துக்கு, குமார முத்துரகுநாத சேதுபதி மன்னர் தாமே செங்கல் சுமந்து கட்டடத்தை தொடங்கி வைத்தார் என்ற புல்லரிக்கும் செய்தியையும் கொடுத்துள்ளார். கமால் அவர்கள் எழுதியுள்ள எல்லா நூல்களிலும் ஒருமைப் பாட்டைத்தான் காணமுடியுமே ஒழிய, பிறகாண முடியாது. அந்த அளவுக்கு பண்புள்ள எழுத்தாளர்; வரலாற்று நெறி பிறழாத எழுத்தாளர்.

''ஆவணங்கள் அரிமா நோக்கு'' என்ற பகுதியும், ''சேது நாட்டுச் செய்திகள்'' என்பதும், இச்செப்பேடுகளிலிருந்து திரட்டித்தரும் வரலாற்றுக்குத் தெவிட்டாத செய்திகள். நீர்ப் பாசனம், நிர்வாக அமைப்பு, சமுதாயக் கூறுபாடுகள், தொழில் கள் குறிப்பாக முத்துக்குளிக்கும் செய்திகள் ஆகியவை அழகுற குறிக்கப்பட்டுள்ளன முன்னர் எழுதிய ஆசிரியர்கள் கருத்தை ஏற்குமிடத்தில் பண்புடன் ஏற்றும், மறுக்குமிடங்களில் பண்புடன் மறுத்தும் இந்நூலை அற்புதமாக வடித்துள்ளார்.

செப்பேட்டு வாசகங்களைத் தெளிவாக்கியுள்ளார் இவற்றில் பல செப்பேடுகள் இவரே தேடி தொகுத்தவை. முன்னர் பழுதுற படிக்கப்பட்டிருந்ததை திருத்திப் படித்து பயனுடைத்தாக்கியுள் ளார். ஒவ்வொரு செப்பேட்டிற்கும் வாக்யங்களைக் கொடுத்து அதிலுள்ள செய்திகளையும் விளக்கியுள்ளார். ஒவ்வொரு செப் பேட்டிலும் தனியான சிறப்புச் சொல் ஏதாகிலும் இருக்கும். அதைத் தனியாக சுட்டிக்காட்டி பொருளை விளக்கியுள்ளது. பெருமைக்குரிய பணி சேதுபதி மன்னர்கள் ''விஜய'' ''ரகுநாத'

என்ற சொற்களை தமது பெயரில் இணைத்துக் கொண்டுள்ள தற்கு இவர் குறிக்கும் குறிப்பு சிறப்புடையது. தமிழ் மொழிக்கு தமிழ்ச் சான்றோர்க்கும் அரும் தொண்டாற்றிய இம்மன்னர்கள் தெலுங்கு மொழிக்கு இடம் கொடுத்துள்ளதையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இப்பெரும் நூலை சிறப்புற ஆக்கியுள்ள இவரை அனைவரும் பாராட்டுவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந் நூலாசிரியர் மேலும் பல நூல்களை இயற்றி நாட்டுக்கு தொண்டாற்ற, நேயத்தே நிற்கும் நிமலன் அடியை இறைஞ்சுகின்றேன்.

இரா. நாகசாமி

நடன காசிநாதன் M.A.
இயக்குநர், தமிழக அரசு
தொல் பொருள் ஆய்வுத்துறை

தரமணி
சென்னை. 113

# வாழ்த்துரை

டாக்டர். எஸ்.எம். கமால் அவர்கள் எழுதிய 'சேதுபதி மன்னர் செப்பேடுகள்' என்னும் இந்நூல், கி.பி 17-18ம் நூற்றாண்டுகளில் சேதுபதி மன்னர்கள் எவ்வாறு சீரோடும் சிறப்போடும் விளங்கினார்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. இந்நூலில் மொத்தம் 89 செப்புப் பட்டயங்களும் ஓர் ஓலைப்பட்டயமும் ஆக 90 பட்டயங்களின் வாசகங்கள் கொடுக்கப்பட்டு அவ்வாசகங்களுக்கான விளக்கக் குறிப்புகளும் பக்கத்திலேயே தரப்பட்டுள்ளன. சேதுபதி மன்னரான சடைக்கன் சேதுபதி காலம் முதல் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி முடிய 78 செப்புப் பட்டயங்களும், அரச குலத்தின் உறவினர்களான நால்வர் வெளியிட்ட செப்புப் பட்டயங்கள் மொத்தம் ஆறும், அரசு அலுவலர்கள், மற்றவர்களதுமான செப்புப் பட்டயங்கள் ஐந்தும் ஆக மொத்தம் 89 செப்புப் பட்டயங்கள் காணப்படுகின்றன இச்செப்புப் பட்டயங்கள் எந்தெந்த காரணத்திற்காக வழங்கப்பட்டன என்பதையும் ஆசிரியர் பட்டியலிட்டுத் தந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அப்பட்டியலைக் காணுகின்ற பொழுது இந்துச் சமயத் திருக்கோயிலுக்கு அதிக அளவிலும், அதற்கு அடுத்து இஸ்லாமியப் பள்ளி வாசல்களுக்கும், சமணத் திருக்கோயில்களுக்கும், கிறித்துவத் தேவாலயத்துக்கும் இம்மன்னர்கள் கொடை வழங்கியிருப்பது தெரிய வருகிறது.

சேதுபதி மன்னர்கள் காலத்தில் நாடு மிக அமைதியான சூழ்நிலையில் இருந்தது என்பதையும் அவர்களுடைய ஆட்சிக் காலம் ஒரு பொற்காலமாக மக்களால் போற்றப்பட்டது என்பதையும் இச்செப்புப் பட்டயங்கள் மூலமாக அறிய முடிகிறது. ஆசிரியர் தம்முடைய முன்னுரையில் இச்செப்புப் பட்டயங்கள் மூலம் தெரியக்கூடிய செய்திகளை மிக அருமையாகத் தொகுத்

துத் தந்திருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். இச்செப்புப் பட்டயங்கள் மூலமாக தெரிய வருகின்ற சீமைகள், நாடுகள், கூற்றங்கள், பற்றுகள், வட்டகைகள், புறவுகள் ஆகியவை வரலாற்றில் ஆர்வம் கொண்டு ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு அரிய கருவூலங்களாக அமைந்துள்ளவை ஆகும். சேதுபதிகளின் காலத்தில் வட்டாரம், வட்டகை, தட்டு, சேர்வை என்ற சொற்கள் நாட்டுப் பகுதியின் பிரிவுகளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன என்பது இச்செப்புப் பட்டயங்கள் தரும் புதிய செய்திகள் ஆகும்.

நீர்த்தேக்கங்களின் பெயர்களும் நிரம்ப காணப்படுகின்றன அவற்றுள் ஆறுகள்,ஏரிகள்,ஆறும் கண்மாய்கள் முப்பத்துநான்கும் ஏந்தல்கள் நாற்பத்து ஒன்றும் ஊரணிகள் இருபத்து ஒன்பதும் குளங்கள் பதினெட்டும் குண்டுகள் இரண்டும் குட்டம் மூன்றும் கால்கள் பதினைந்தும், குளக்கால் நான்கும், வாய்க்கால் ஆறும், ஓடைகள் ஐந்தும், மடைகள் ஆறும் பட்டியலிட்டுத் தந்திருப்பது ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனை வெளிப்படுத்துகின்றது. இச்செப்புப் பட்டயங்களில் குறிக்கப்பட்டுள்ள நிலங்களின் வகைகளையும் ஆசிரியர் தொகுத்துத் தந்திருக்கிறார் அவைகளை இனம்வாரியாகச் செய், புஞ்சை, வயல், தோட்டம், தோப்பு, தட்டு என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார் மேலும், அக்காலத்தில் இருந்த மக்கள் பிரிவுகளையும் அவர் இச்செப்புப் பட்டயங்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

மறவர் சீமையில் வழக்கிலிருந்த விழாக்கள் பற்றியும். அப்பொழுது நிகழ்ந்த எல்லைத் தகராறுகள்பற்றியும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும், நில அளவைகள் பற்றியும். முத்துச் சிலாப தானம்பற்றியும், ஒவ்வொன்றாக விளக்கியிருப்பது ஆய்வு மாணவர்களுக்கு கிடைத்தற்கரிய பொக்கிஷமாகக் காணப்படுகிறது வருவாய்த் துறையிலே அதிகாரியாக இருந்த இந்த ஆசிரியர், கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றின் துணை கொண்டு வரலாறு எழுதுவதில் முனைப்போடு செயல்பட்டு வருகின்றார். தனிப்பட்ட ஒருவர் மேற்காணும் தொண்ணூறு பட்டயங்களைத் தொகுத்து அதற்காக விளக்கங்களும் தந்து வெளியிட்டிருப்பது வரலாற்று

ஆய்வில் ஈடுபட்டோருக்கு அரிய தூண்டுகோலாக அமைந்துள்ளது மறவர் சீமையைப் பற்றியும் அந்நாட்டை ஆட்சி செய்த சேதுபதிகள் பற்றியும் ஆய்வுசெய்கின்ற வரலாற்று ஆய்வாளர்கள் இந்நூல் ஒன்றைப் படித்தாலே ஓரளவு தங்களுக்குத்தேவை யான செய்திக் குறிப்புகளைத் திரட்டிவிட முடியும் என்ற அளவில், மிகுந்த செய்திகளைக் கொண்டுள்ள ஒருநூலாக இது வெளி வருகிறது. இதனை அறிஞர் உலகமும்ஆய்வாளர் உலகமும் போற்றிப் பாராட்டும் என்று மனப்பூர்வமாக நான் கருதுகிறேன்.

இத்தகைய ஒரு நூலை வரைந்து வெளியிட்டுள்ள டாக்டர் எஸ்.எம். கமால்அவர்களை அன்போடுவாழ்த்துகிறேன். இது போன்று, மேலும் பல நூல்களை அவர் எழுதி அறிஞர் உலகுக்கு வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

**நடன. காசிநாதன்**

பேராசிரியர். எ. சுப்பராயலு
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர் - 5.

# பாராட்டுரை

தமிழ்நாட்டு இடைக்கால மூலச்சான்றுகளாக அமைபவை கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ஆகும். பொதுவாக, இதுவரை தமிழ்நாட்டு வரலாற்றாசிரியர்கள், சோழர்காலத்துக்குப் பின்னுள்ள கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் ஆர்வத்துடன் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு காரணம் சோழர் காலத்துக்குப் பின்னர் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விடுவது. இரண்டாவது, விசயநகர அரசு காலத்திலும் அதற்குப் பின்பும் எழுதப்பட்ட கல்வெட்டு, செப்பேடுகளில் உள்ள மொழி, பிழை மலிந்தும் இலக்கிய நடையற்றும் உள்ளது என்றும் கருதப்படுவது. வேறு வகையான ஆவணங்கள் நிறையக் கிடைப்பது மூன்றாவது காரணமாகலாம். இப்பிற்காலத்தில் கல்வெட்டுக்கள் குறைந்தாலும் செப்பேடுகள் மிகுந்த அளவில் கிடைக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். பிற அரசு ஆவணங்களில் இல்லாத பல செய்திகள் இவற்றில் குறிப்பிடப்படுகின்றன.

சோழர் காலத்தோடு தமிழ்நாட்டு வரலாறு, முடிந்துவிடவில்லை. அதனைத் தொடர்ந்து வரும் வரலாற்றைப் புறக்கணிப்பதால் இந்நாட்டுச் சமுதாய, பொருளாதார, வளர்ச்சியின் உண்மை நிலை விளங்காது போய்விடுகிறது. ஆகவே சோழர் காலத்துக்குப் பின்னுள்ள விசயநகர அரசு நாயக்க மராட்டிய அரசுகள், இன்னும் பல குறுநில அரசுகளின் கல்வெட்டுக்கள் செப்பேடுகள் தொகுத்து ஆராயப்பட வேண்டியவையாகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறை வெளியிட்டுள்ள ''மராட்டியர் செப்பேடுகள்'', ''கல்வெட்டுகள்'', 18, 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு எப்படி வளஞ் சேர்க்கின்றன என்பதை அவற்றை மேலோட்டமாகப் பார்த்தாலே

புரியும். அந்த வகையில் டாக்டர். எஸ் எம் கமால் அவர்கள் பதிப்பித்துள்ள இந்த ''சேதுபதி மன்னர் செப்பேடுகள்'' மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்று. பதினேழு பதினெட்டாம் நூற் றாண்டுகளில் தென் தமிழ்நாட்டின் வரலாற்றுக்குப் பல புதிய செய்திகளை இந்த நூல் அளிக்கின்றது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இந்நூலாசிரியர் தொண்ணூறு செப்பேடுகளை மறவர் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து அரிதின் முயன்று தொகுத் துள்ளார். செப்பேடுகள் கால வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் மூலப்பாடத்தைத் தொடர்ந்து அதனைப் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. ''விளக்கம்'' பகுதி யில் ஆசிரியர் செப்பேட்டுச் செய்திக்குத் தொடர்புடைய பிற ஆவணச் செய்திகள், செவிவழிச் செய்திகள் மற்றும் வரலாற்றுக் குறிப்புக்கள், ஆகியவற்றை உரிய சான்றுகளோடு ஆங்காங்கு கொடுத்துள்ளமை பாராட்டுதற்குரியது.

இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள நீண்ட முன்னுரை ஆசிரியரின் பரந்த வரலாற்றறிவினைப் புலப்படுத்துகிறது. சேதுபதி களின் வரலாற்றைத் தொடக்கத்திலிருந்து இறுதி வரை சுருக்க மாகக் கூறி விட்டு செப்பேடுகளை விரிவாகப் பகுத்தாய்வு செய் துள்ளார். சேதுபதி நாட்டில் சர்வமானிய ஊர்கள் மானிய ஊர்களாக இருந்தன என்பது ஒரு முக்கிய செய்தி. எந்தெந்த மன்னர் எவ்வளவு நிலக்கொடைகள் கொடுத்தார் என்பது அட்டவணை யிட்டு விளக்கப்பட்டுள்ளது. சேது நாட்டில் இருந்த நிர்வாகப் பிரிவுகள், நீர்ப்பாசன வசதிகள், சமுதாய அமைப்பு, நம்பிக்கை கள், பழக்கவழக்கங்கள் முதலிய பல செய்திகள் செப்பேடுகளி லிருந்து தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவற் றோடு தொடர்புடைய பிற ஆவணச் செய்திகளும் ஆங்காங்குச் சுட்டப்பட்டுள்ளமை ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவும்.

செப்பேடுகளின் மூலபாடங்களோடு அவற்றின் ஒளிப்படங் களையும் கொடுத்திருந்தால் இந்த நூலுக்கு மேலும் சிறப்பாக இருந்திருக்கும். பொருட் செலவு கருதி விடுபட்டிருக்கலாம்.

அடுத்த பதிப்பில் அவற்றையும் சேர்க்க முயலலாம். மூல பாடங்களில் சில இடங்களில் திருத்தங்களும் தேவைப்படலாம். ஆசிரியர் எடுத்துள்ள பெரு முயற்சியைக் கருத்தில்கொண்டால் இச்சிறு குறைகள் பெரிதாகப்படாது.

இவ்வரிய வரலாற்றுச் செல்வத்தை வழங்கியுள்ள டாக்டர். எஸ் எம். கமால் அவர்களுக்குத் தமிழ்நாட்டு வரலாற்றாசிரியர் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்.

**எ. சுப்பராயலு**

# உள்ளே


| | | | |
|---|---|---|---|
| i) | அணிந்துரை | — | iii |
| ii) | பதிப்புரை | — | xiv |
| iii) | இந்த நூல் | — | xv |
| iv) | நூலாக்கத்திற்கு பயன்பட்ட நூல்கள் | — | xviii |
| v) | நெஞ்சார்ந்த நன்றிக்கு உரியவர்கள் | — | xxii |
| 1. | சேதுபதிகள் | — | 1-20 |
| 2. | ஆவணங்கள் – அரிமா நோக்கு | — | 21-37 |
| 3. | சேதுநாட்டு சிறப்புச் செய்திகள் | — | 38-84 |
| 4. | செப்பேடுகள் - சடைக்கன் உடையான் சேதுபதி | — | 85-110 |
| 5. | செப்பேடுகள் - கூத்தன் சேதுபதி | — | 111-157 |
| 6. | செப்பேடுகள் - இரண்டாம் சடைக்கன் சேதுபதி | — | 158-159 |
| 7. | செப்பேடுகள் - திருமலை சேதுபதி | — | 160-265 |
| 8. | செப்பேடுகள் - ரெகுநாத கிழவன் சேதுபதி | — | 266-340 |
| 9. | செப்பேடுகள் - முத்துவிசையரகுநாத சேதுபதி | — | 341-398 |
| 0. | செப்பேடுகள் - குமார முத்துவிசையரகுநாத சேதுபதி | — | 399-451 |
| 1. | செப்பேடுகள் - சிவகுமார முத்து விசைய ரகுநாத சேதுபதி | — | 452-486 |
| 12. | செப்பேடுகள் - செல்லமுத்து விசைய ரகுநாத — சேதுபதி | — | 487-509 |
| 13. | செப்பேடுகள் - முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி | — | 510-610 |
| 14. | செப்பேடுகள் - அரசவழியினர் | — | 611-648 |
| 15. | செப்பேடுகள் - அரசு அலுவலர்கள் | — | 649-657 |
| 16. | பிறசெப்பேடுகள் | — | 658-697 |
| 17. | தானம் வழங்கப்பட்ட ஊர்கள் பட்டியல் | — | 698-720 |

# பதிப்புரை

வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர் இன மக்களில் மூத்த குடியினர் செம்பி நாட்டுக் கிளையினரான இராமநாதபுரம் மன்னர்கள். சேது காவலரான அவர்கள் செந்தமிழ் வேந்தர் களாக ஆட்சி புரிந்த ஆண்டுகள் ஐநூறுக்கும் அதிகம். அவர் களது அன்புநெறி, அருந்தமிழ்த் தொண்டு ஒப்பு உவமை இல் லாத கொடை, சமயப்பணி, சமரச நோக்கு ஆகியன தமிழகத்தின் வளம் மிகுந்த வரலாற்று ஏடுகளாம்.

இந்த அரிய ஆவணங்களை தொகுத்து வெளியிட்டு உதவுவது தமிழக வரலாற்றுக்கு பல துறைகளிலும் பெருமை சேர்க்கும் பணியாகும். இத்தகைய தொண்டினை பன்னூல் ஆசிரி யரும், வரலாற்று ஆய்வாளருமான இராமநாதபுரம் டாக்டர். எஸ். எம். கமால் அவர்கள் பல்லாண்டுகளாக மேற்கொண்டுள் ளார். அந்தப் பணியில் வெற்றியும் பெற்று வருகின்றார்.

அவரது முந்தைய படைப்புகளான ''விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்'', ''மன்னர் பாஸ்கர சேதுபதி'' ''மாவீரர் மருதுபாண்டியர்'' ஆகியவை அறிஞர் பெருமக்களின் பாராட்டு தலையும் தமிழக அரசின் சிறந்த வரலாற்று நூலுக்கான பரிசுகளையும் பெற்றுள்ளன.

சேதுபதி மன்னர்களது சிறப்பு ஆவணங்களான செப்பேடு களை பல ஊர்களுக்கும் சென்று, பல இடர்ப்பாடுகளுக்கு இடை யில் தேடிச் சேகரித்து, தொகுத்து, விளக்க உரையுடன் ''சேதுபதி மன்னர் செப்பேடுகள்'' என்ற தலைப்பில் இந்த நூலினை வரைந்துள்ளார்.

இன்றைய தலைமுறையினருக்கும் வரலாற்று ஆய்வாளர் களுக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ள இந்த அரிய தொகுப்பினை எங்களது பதிப்பாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

திசம்பர், 1992
இராமநாதபுரம்

*ஷர்மிளா பதிப்பகத்தார்*

# இந்த நூல்

பதினாறாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் வடபுலத்து வடுகரும், மேனாட்டு பரங்கிகளும் புகுந்து ஆங்காங்கு தங்களது அதிகாரத்தை நிலைநாட்டி வந்தனர். இதனால் நமது தாய்மொழியான தமிழும், தமிழரது வாழ்வும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் சேதுபதிகள் மூவேந்தர் வழி நின்று மூவாத் தமிழைக் காத்து வளர்த்தனர். புலவர்களது வறுமையையும், வாழ்க்கைச் சிறுமையையும் களைந்து, அவர்கள் பெருமையுடன் வாழ பூமியும், காணியும் வழங்கி புரந்தனர். மற்றும் மக்களிடையே சமய உணர்வும், சமரச மனப்பான்மையும் செழித்து வளர்ந்திட திருக்கோயில், திருமடம், தர்கா, தேவாலயம், ஆகிய பல்வேறு அமைப்புகளுக்கு ஏராளமான நிலக்கொடைகளை வழங்கி மகிழ்ந்தனர்.

வரலாற்று ஆவணங்களாக விளங்கும் இந்த மன்னர்களது செப்பேடுகளை தேடித் தொகுக்கும் பணியில், ஐந்து ஆண்டுகளாக முயன்று வந்தேன். காலநீட்சியில், பல்வேறு சமுதாயச் சூழ்நிலையில், பெரும்பாலான செப்பேடுகள் மறைந்து விட்டதை அறிந்து மனம் வருந்தினேன். சேதுமன்னர்களது நூற்றுக்கணக்கான செப்பேடுகளில் ஒரு நூறு செப்பேடுகளைக் கூட பெற இயலாத நிலை. எஞ்சியுள்ள சிலவற்றையாவது இறையருளால் இனங்கண்ட மனநிறைவுடன் இந்தத் தொகுப்பை நிறைவு செய்துள்ளேன்.

இந்தச் செப்பேடுகளை படிஎடுத்ததைவிட, இவைகளை படித்து, புரிந்து, விளக்க உரை வரைவதில் பன்மடங்கு இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழ் உரை நடையின் பிரதிபலிப்பான செப்பேடுகளின் தமிழ்ச் சொற்களுடன் கிரந்தம், சமஸ்கிருதம், தெலுங்கு, நாகரி. மோடி மொழிச் சொற்கள் மணிப்பிரவாளமாக கலந்து பிழையான சொற்றொடர்களாக அமைந்துள்ளது ஒருபுறம்.

இந்தச் சொற்றொடர்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களில் உள்ள, மெய் எழுத்துக்கள் புள்ளி (ஒற்று) இல்லாமல் வரையப்பட்டு உயிர்மெய் எழுத்தாக காணப்படுவது இன்னொரு புறம். இவைகளைத் தொடர்ந்து, சொல்லின் முன்பாக வரையப்

பட்டுள்ள கொம்பு, குறிலான ஒகரமா அல்லது நெடிலான ஓகாரமா என்பதும், சொற்களின் விகுதியில் உள்ள துணை எழுத்து அந்த எழுத்தின் காலா அல்லது தனி எழுத்தான ரகரமா என்பதனையும் அறிய தொடர் முழுவதையும் பொருள் நோக்கிப் படிக்கும் பொழுதுதான் புரிந்து கொள்ள முடிகிறது. இவை தவிர நீண்ட தொடர்களில் அமையும் ''உம்மை''களையும் குறிப் பாக ''கும், தும், யும், ரும், றும், னும்'' என்பனவும், மெய் எழுத்துக்கள் இரட்டித்து ஒலிக்கும் சொற்களில் குறிப்பாக க்க, ட்ட, ச்ச, த்த, ப்ப, ய்ய, என வருகின்ற உயிர்மெய் எழுத்துக் கள், கூட்டு எழுத்துக்களாகவும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவைகளுக்கு எல்லாம் மேலாக சேதுபதி மன்னர்களது சிறப்புப் பெயரான ''ரகுநாத'' ''விஜய'' என்ற பெயர் குதிவி கள் ஒருசில மன்னரது இயற்பெயராகவே இந்தச் செப்பேடுகளில் காணப்படுவதும், இதுவரை அறியப்படாத சில சேது மன்னர் வழியினரது செப்பேடுகள் கிடைத்திருப்பதும் விளக்க உரை வரை வதில் பெருங்குழப்பத்தை ஏற்படுத்துவனாக உள்ளன. மேலும், குறிப்பிடப்பட்டுள்ள சக ஆண்டுக்கு பிழையான தமிழ் ஆண்டுப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது போன்ற வேறு சிலகுறைபாடுகளும் இந்தச் செப்பேடுகளில் காணப்படுகின்றன. இவைகளை எல்லாம் களைந்த நிலையில், யாவரும் எளிதாக படித்து உணரும் வகை யில் செப்பேட்டின் படிகளும் விளக்கமும் இந்த நூலில் கொடுக்கப் பட்டுள்ளன.

ஆனால், செப்பேடுகளின் மூலவாசகங்களை அவைகளில் கண்டுள்ளவாறு எவ்வித மாற்றமும் செய்யாமல் எழுத்து சொல் தொடர் ஆகியவை அப்படியே பிழைகளுடன் பதிப்பிக்கப்பட்-டுள்ளன. இவை பெரும்பாலும் செப்பேடு வழங்கப்பட்ட அப்தம், திங்கள், நாள், நட்சத்திரம், காலம், ஓரை ஆகிய பகுதிகளிலும் விருதாவளி தொடர்களிலும் காணப்படுவதால் செப்பேட்டின் அடக்கப் பொருளினை அவை சிதைத்து விடவில்லை. கால அருமை நோக்கி விரைவுடன் மெய்ப்புகள் திருத்தம் செய்யப் பட்டதில் எழுத்துப் பிழைகள் சில இடங்களில் எழுந்து நிற்கின் றன. இந்தப் பதிப்பில் உள்ள சிரமங்களைக் கருதி வாசகப் பெருமக்கள் அவைகளை பொருட்படுத்தாமல் வரலாற்று நாயகர்

களான சேதுபதிகளது விசால மனப்பான்மையையும், சமுதாய உணர்வுகளையும் புரிந்து போற்ற வேண்டும் என்பது எனது அவா.

இங்ஙனம் செய்தல் தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிலை விளக்கமாக அமைவதுடன், தமிழக வரலாற்றின் ஒளிபடராத ஏடுகளில் அமைந்துள்ள உயர்ந்த படிப்பினைகளையும் புரிந்து கொள்ள உதவுவதாகும்.

செந்தமிழ்ச் சேது மன்னர்களது கொடை ஆவணங்களது தொகுப்பாக வெளியிடப்படும் இந்த முதல் நூலினை ஆய்வாளர்களும், அறிஞர் பெருமக்களும் அன்புடன் வரவேற்று உதவுவார்கள் என எண்ணுகிறேன்.

திசம்பர் : 1992 — *எஸ். எம். கமால்*
இராமநாதபுரம் — நூலாசிரியர்

# நூல் ஆக்கத்திற்கு பயன்பட்ட நூல்கள்

*அ) தமிழ் நூல்கள் ;*


1. அபிதான சிந்தாமணி [1910] - அ. சிங்கார வேலு முதலியார்
2. இராமேசுவரம் திருக்கோயில் குட முழுக்கு மலர் [1975] - இராமேசுவரம் தேவஸ்தானம்
3. இராமப்பையன் அம்மானை - தஞ்சை சரஸ்வதி மஹால்
4. இராமநாதபுரம் சமஸ்தான நவராத்திரி பாடல்கள் [1912] -
5. இராமநாதபுரம் சமஸ்தான நிலமான்ய கணக்கு -
6. ஒரு துறைக் கோவை - பொன்னாங்கால் அமிர்த கவிராயர்
7. கம்ப இராமாயணம் [1959] - மர்ரே - ராஜம் பதிப்பு
8. கல்வெட்டு [இதழ்கள்] - தமிழக தொல் பொருள் துறை
9. செந்தமிழ் [இதழ்கள்] - மதுரை தமிழ்ச் சங்கம்
10. தமிழ் நாட்டு முஸ்லீம் புலவர்கள் [1952] - M.R.M. அப்துல் ரஹீம்
11. தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் - Dr. R. நாகசாமி
12. திருப்புல்லாணி தலபுராணம் - இராமநாதபுரம் சமஸ்தானம்
13. திருவாலவாயுடையார் புராணம் - Dr. உ.வே சாமிநாத அய்யர் பதிப்பு
14. திருவிளையாடற்புராணம் - தென்னிந்திய சைவ சித்தாந்த பதிப்புக் கழகம்

15. தேவை உலா - பலபட்டடை சொக்க நாதக்கவிராயர்

16. தொல்லியல் கருத்தரங்கம் [1983] - தமிழ்நாடு தொல் பொருட்துறை

17. நவமணிகள் [1959] - T.S. வைத்யநாதன்

18. பாண்டிய நாட்டில் வாணாதி ராயர்கள் (1990) - வே. வேதாச்சலம் M.A.,

19. பெருந்தொகை [1932] - மதுரை தமிழ்ச்சங்கம்

20. மெய்க்கீர்த்திகள் [1983] - பூ. சுப்பிரமணியன்,

21. ராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி ஒரு துறைக்கோவை [1985] - மகாவித்வான் ரா. ராகவ அய்யங்கார்

விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் [1987] - Dr. S.M. கமால்

ஆ) ஆங்கில நூல்கள்

1. Manual of Madura Country [1868] - Nelson
2. Ramnad Samasthanam manual [1891] - T. Rajaram Rao
3. Pudukkottai Manual [1928] - Radhakrishna Iyer
4. A. S. S. I. Vol. IV [1886] - Dr. Burgess and Pandit Natesa Sastri.
5. Topo - graphical list of Inscriptions Vol 1 to 3 - K. V. Rangacharya.
6. Pudukkottai State Inscriptions [1928] -
7. Old Historical Manu scripts Vol 2 [1835] - C. J. Taylor
8. Mackenzie Mss. [1972] - Dr. T.V. Mahalingam
9. Indian Antiquary Vol. 12 - Dr. Burgess
10. South Indian Studies - Dr. R. Nagasamy
11. History of Madura Nayaks [1928] - S. Satianathaier
12. History of Madura [1972] - Dr. K. Rajayyan
13. History of Pandia Country [1962] - Dr S. A. Q Hussan

14 Concise History of Ceylon [1961] - Dr. K. Paranavitana and Nichols

15 Ceylon Historical Journal [1955] - Vol. 4

16 History of Pearl Fishery in Tamil Coast [1952] - S. Arunachalam

17 General and Physical History of Tinneveli - Dr. Cald well

18 History of East Indies [1805] - George Valentina

19 Travels in India - Taverniar

20 Travels of Jesuits - John Lockman

21 Short History of Muslim Rule in India [1939] - Dr. Eswari Prasad

22 Muslims in Sri Lanka [1983] - M. A. M. Shukri

23 Foeign Notices of South India [1972] - K. Neelakanta Sastri

24 Ettaiyapuram Past and Present - [1935] W. E. Ganapathia Pilla

25 Sethupathies [1972] - unpublished theory by K. Seshadri

26 Sathupathies of Ramnad - K. Thiruvengadachari

27 Sri Lanka and India [1975] - K. K. Pillai

28 Castes and Tribes of South India [1909] - Edgar Thurston

29 Red Sand [1947] - Fr. Saulier

30 Alpnapatical list of Villages in Ramnad district [1985] - Govt. of Tamil Nadu

31 Araveedu Dynasity - Rev. Fr. Heras

32 Statement of Accounts [1810] - Pudukkottai Records

33 South India and her Mohamaden Invaders [1921] - Dr. S. Krishnasamy Iyengar

34 Epigraphica Zailanica - Vol 2 and 4

35 Brief Notes on Traditions and History relating to Rameswaram Temple [1914] - R. Srinivasa Iyer

36 Tamil Nadu under Vijaya Nagar Rule - Dr. A. Krishnaswamy

37. TAMIL NADU ARCHIVES RECORDS

a) Gazetteer Madura district [1911] W. Francis

b) Gazetteer Ramnad district [1972] S. Ramasamy

c) Boards Misc. Register

d) Madura district Records Vols

e) Revenue consultations

f) Military Country Correspondence

# நெஞ்சார்ந்த நன்றிக்குரியவர்கள்

அ) *செப்பேடு வழங்கியவர்கள் :*

1. திருமதி ராணி R. இந்திராதேவி, B.A., இராமநாதபுரம்
2. திருமதி. அருள்மொழி தும்மணி மரைக்காயர், முத்துச் சாவடி, இராமேசுவரம்
3. திரு. இரா. தேசிகன், தெற்கு ரத வீதி, திருப்புல்லாணி
4. திரு. T.P.S. சுப்பிரமணிய சாஸ்திரி, தெற்கு ரத வீதி, திருப்புல்லாணி
5. திரு. S. ராமசாமி நாயக்கர், ஸ்ரீ ஆறுமுகம்சாமி மடம், வடக்கு நத்தம்
6. பங்கு குருக்கள் கத்தோலிக்க தேவாலயம், முத்துப்பேட்டை
7. திரு. S. மீனாட்சி சுந்தரம், பெருவயல்
8. திரு. C. சுந்தரசாமித்தேவர், தாம்பரம், சென்னை
9. அமரர். P.S. ஹுசைன் லெப்பை, ஏர்வாடி

ஆ) *செப்பேட்டு நகல் வழங்கியவர்கள் :*

1. திருமதி டாக்டர். R. பமீலா பிரைஸ், விஸ்கான்சின் பல்கலைக் கழகம், அமெரிக்கா
2. புலவர் திரு. செ. ராஜு, தமிழ் பல்கலைக்கழகம்
3. திருமதி. வள்ளி - சொக்கலிங்கம், M.A., காரைக்குடி தஞ்சாவூர்
4. அமரர். R. மங்களநாத துரை, சக்தி விலாசம் இராமநாதபுரம்

இ) *செப்பேடுகளுக்கு நகல் எடுக்க அனுமதி வழங்கியவர்கள் :*

1. திரு. S. நடன காசிநாதன் M.A., இயக்குநர் தொல்லியல் துறை, தரமணி, சென்னை.
2. திரு. சீனிவாச தேசிகன், M.A., உதவி இயக்குநர், அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

ஈ) *நூலகத்தில் மெய்ப்புக்கள் திருத்த உதவியவர்கள் :*

1. டாக்டர். திரு. செ. கந்தசாமி, தமிழ்த்துறை, செந்தமிழ்க் கல்லூரி, மதுரை
2. திரு. எம். ஷேக் ஜவஹர், B.Sc., பேகம்பூர், திண்டுக்கல்-2.

*''வரலாறு என்பது மனித நினைவாற்றலின்மீது
காலத்தினால் வரையப்பட்ட
கவிதைத் தொடர்''.*

—கவிஞர் ஷெல்லி (கி.பி. 1792-1822)



சீர்மிகு செந்தமிழ்ச் சேதுபதிகளின் வழித்தோன்றல்

மேதகு ராணி

**ஆர். இந்திராதேவி** B.A., அவர்கள்

# 1

# சேதுபதிகள்

தமிழகத்தின் தென்கிழக்கு கடற்கரைப் பகுதியும் அதனை அடுத்துள்ள நிலப்பரப்பும் தொன்மையான பாண்டிய நாட்டு எல்லைகளாக அமைந்து இருந்தன. இந்த நிலக்கூறு வெவ்வேறு காலங்களில் கானப்பேர் கூற்றம், முத்தூர்கூற்றம், மிழலைக் கூற்றம், துகவூர் கூற்றம் என்ற பெருங்கூறுகளாகவும், வரகுண வளநாடு, கேரள சிங்க வளநாடு, ராஜேந்திர மங்கல நாடு, முத்துநாடு, கானப்பேர்நாடு, கானநாடு, அதளையூர் நாடு, தென்னாலை நாடு, களவழிநாடு, மங்கலநாடு, இடையள நாடு, தழையூர் நாடு, செவ்விருக்கை நாடு, கிடாத்திருக்கை நாடு, கீழ்ச்செம்பி நாடு, வடதலைச் செம்பி நாடு, கைக்கிநாடு, வேம்பு நாடு, அழற்றுநாடு, புனல்பரளை நாடு, பொலியூர் நாடு, வல்லத்திருக்கை நாடு, பருத்திக்குடிநாடு, என்ற சிறுகூறு களாகவும் வழங்கப்பட்டு வந்தன.

பிற்காலப் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, இந்தப் பகுதிகளின் ஒரு பகுதி (கானநாடு, கோன்நாடு) வடக்கில் மாவலி வாண்தரையரும், தெற்கு கிழக்குப் பகுதிகளில்

மறக்குல மக்களின் மூத்தகுடியினரும், தங்கள் ஆட்சி அமைப்புகளை நிறுவினர். இராமபிரான் அமைத்ததாக கருதப்படும் புனித சேது அணையின் காவலர் என்ற பொருளில் மறவர் தலைவர்கள் ''சேதுபதிகள்'' என்றும், அவர்களது நாடு சேதுநாடு என்றும் குறிக்கப்பெற்று வந்தது.

செந்தமிழ்ப் புலவர்கள் இந்த மரபினரை

*''மிக்க புகழ் சேர்க்கும் சிலைராமன் சேது கண்ட முதலால்*
*காக்கும் தனுக்கோடிக் காவலன்''* எனவும்,

*''மனுக்கோடி காத்து மதுரையுங்காத்து வளருந்தெய்வத்*
*தனுக்கோடி காத்தவனே...''* என்றும்,

*''சூலம் கைக்கொண்ட இராமேசர் தாள்முடி சூடி எழு,*
*ஞாலம் கைக்கொண்ட ரகுநாயகன்...''*
என பொன்னாங்கல் கவிராயரும்.

*''சேட்கும் வழங்கும் புகழ்ச்சேதுகாவலன் செந்தமிழுக்கு,*
*நாட்கும் வழங்கும் பெருங்கொடையான்''*

என மகாவித்வான் இராகவனாரும்[1] சேதுவேந்தர்களது தெய்வப் பணியையும் தண்ணளியையும் சிறப்பித்துள்ளனர். இன்னும் மூவாத்தமிழின் வளர்ச்சியில் முனைந்து நின்று, செந்தமிழ்க் கவிவாணர்களை அவர்கள் காத்து வளர்த்தவர்கள் என்பதை,

*''அரசரில் உயர்ந்தவர் சேதுபதியாகும் அவர்*
*மணிவாயிலில் அகத்திய முனிவருக்கும் அதிகம் கற்ற பேர்கள்*
*ஆயிரங்கவிவாணர் உண்டு, அவர்களில் நான் ஒருவன்''*,

என்று மிகுந்த தன் அடக்கத்துடன் சேரமன்னனிடம் தம்மையும், தமது சேதுபதி வேந்தரையும் அறிமுகம் செய்தவர் அசாதாரணக் கவிஞரான அட்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர் ஆவார்.

இன்னும் இவை போன்ற சேதுமன்னர் பற்றிய ஏராளமான புகழ்ச்சிகள் கடந்த முன்னூறு ஆண்டுகளில் புலவர் பெருமக்களது தனிப்பாடல்களாகவும், சிற்றிலக்கியங்களாகவும் தமிழ் கூறும் நல்லுலகில் வழங்கி வந்துள்ளன. இந்த மன்னர்களது

1) மகாவித்வான், ரா. ராகவ ஐயங்கார் - ராஜ ராஜேஸ்வர சேதுபதி ஒரு துறைக் கோவை (1985) பாடல் 8

2) அட்டாவதானம் சரவணப் பெருமாள் - கவிராயர் - பெருந்தொகை பாடல் எண் : 1790

இறைப்பணியையும், தமிழ்த் தொண்டையும், தாளாத கொடைத் திறனையும் கட்டியங்கூறும் காலப் பெட்டகங்களாக அவை இன்னும் விளங்கி வருகின்றன.

*சேதுபதிகளின் தோற்றம் :*

ஆனால், இந்த மன்னர் பரம்பரையின் தொன்மையைத் துலக்கும் தெளிவான செய்திகள் வரலாற்றில் இல்லை. பாலையும் நெய்தலுமாக பரந்து விரிந்துள்ள கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் வளர்ந்து வாழ்ந்த இந்தப் பழங்குடியினர், ''வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்'' என்பது ஒருசில ஆய்வாளர் முடிவு.[3] இதன் காரணமாக, இந்த நாட்டின் இருபெரும் எல்லைகளாகிய இமயத்தையும் சேதுவையும் இடைப்படுத்தி வழங்கும் இராமகாதையின் இறுதிக்களமாகிய சேதுவை, நேரில் தரிசிப்பதற்கு பலநூற்றாண்டு காலமாக ஆண்டு முழுவதும் தல யாத்திரை வருகின்ற அனைத்து இந்திய மக்களை, ஆறலைக் கள்வர் பயம் நீக்கி, வேண்டும் வசதி வழங்குவதற்கு இந்தப் பகுதியில் நிலையான பலம்மிக்க அரசு பல நூற்றாண்டுகளாக இருந்திருக்க வேண்டும், என்பதும் அந்த அரசவழியினர்தான் இந்த சேதுவேந்தர்கள் என்பதும் வரலாற்று ஆசிரியர் நெல்சனது முடிவாகும்[4].

மற்றும், பத்தாம் நூற்றாண்டின் இறுதியில், ராஜராஜ சோழனது ஆட்சிக் காலத்து அவனது வெற்றிப்படையை பாண்டிய நாட்டிற்குள் வழிநடத்தி வந்து பாண்டிய மண்ணை சோழப் பேரரசின் அங்கமாக, சோழபாண்டிய மண்டலமாக மாற்றி இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக நிலையான ஆட்சி அமைய உறுதுணையாக இருந்த சோழநாட்டு சாமந்தர்களின் மரபினர் என இவர்களை எண்ணுவதற்கும் இடம் உள்ளது.[5] சேதுபதி மன்னர்களது காவல் அறணாகிய திருமயம் கோட்டை பற்றிய ஆய்வுரையிலிருந்து இந்த கோட்டையின் கீழ்ப்பகுதி கி.பி. 1120-ல் விஜயரகுநாத வயிரிய முத்துராமலிங்க சேதுபதி மன்னராலும், மேல்பகுதி கி.பி. 1185-ல் முத்துராமலிங்க சேதுபதி மன்னராலும் அமைக்கப்பட்டன எனத் தெரிகிறது.[6] பதின்மூன்றாம் நூற்றாண்டில் சோழப்பேரரசு சிதைந்து பாண்டியர்கள் வலிவும், பொலிவும் பெற்ற வல்லரசர்களாக

---

3) மகாவித்வான் ரா. ராகவ ஐயங்கார்-சேதுபதிகள்-செந்தமிழ் இதழ் (1905)
4) Nelson – Manual of Madura Country (1868)
5) Seshadri. K. Dr. – History of Ramnad Sethupathies (1972)
6) Pudukottai Durbar Records. R. Dis 1/1882

மாறிய பொழுது, இந்த மறக்குடியினரும் மாவலிவாணா-தரையர்களைப் போன்று பாண்டிய மன்னர்களுக்கு கட்டுப்பட்ட குடிகளாக விளங்கி பின்னர் உரிமைப்பூசலினால் பிற்காலப் பாண்டியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பொழுது பதினான்காம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வீறு கொண்டு தன்னாட்சிப் பெற்றவர்கள் இந்த சேது அரையர்கள் என்பது இன்னொரு வரலாற்று ஊகமாகும்.

மேலும், மெக்கன்ஸி சேகரித்துள்ள பழந்தமிழ் ஏட்டுப்பிரதியின் — ''தொண்டை மண்டல, சோழபாண்டிய மண்டல ராஜாக்கள் கைபியத்'' என்ற ஏட்டுத் தொகுப்பு மறவர்கள், பாண்டியர்களை வென்று, சேதுபதியை பாண்டியநாட்டு ஆட்சிக்கட்டிலில் அமர்த்தியதாகவும், அப்பொழுது மறவர்களது ஆட்சியின் எல்லை, தொண்டை மண்டலத்திற்கு தெற்கே சிதம்பரம் வரை அமைந்திருந்ததாகவும் அதில் வரையப்பட்டுள்ளது. அத்துடன் நாளடைவில் இந்த ஆட்சிப்பகுதியை நந்தர்களும், குறும்பர்களும், ஆனைகுந்தி நாயக்கர்களும், சிறிது சிறிதாக ஆக்கிரமித்துக் கொண்டனர் என்றும் பின்னர் வலிவும் பொலிவுமற்று இயங்கிக் கொண்டிருந்த மறவர் சீமையை வடதிசையில் இருந்து வந்த வடுகர்கள் முழுவதுமாக கைப்பற்றினர் என்றும் குறிப்பிடுகிறது.[7]

இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் ஒலைமுறி ஒன்று, மருதங்குளம் கிராமத்தை மங்கை பெருமாள் குருக்கள் என்ற அந்தணர்க்கு கி.பி. 1325ல் விண்ணரசு கொண்ட தேவர் என்பவர் வழங்கியதை குறிப்பிடுகிறது[8]. அதில் காணப்படும் விருதாவளிகளில் சில பிற்கால சேதுபதி மன்னர்களது விருதாவளிகளிலும் காணப்படுகின்றன. இன்னொரு ஆவணத்தின்படி மதுரை பாண்டியர்களுக்கு கட்டுப்பட்டுயிருந்த இந்த பழங்குடியினர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் பெரும்பாலும் கி.பி. 1380க்கு பின்னர் முஜாகித்ஷா என்ற ஆக்கிரமிப்பாளனது

7) Mahalingam T.V. - Meckenzie Mss No 30 (1972) pp : 200-201

8) Rajaram Rao T. Manual of Ramnad Samasthanam (1891) p. 206-209

தமிழக படையெடுப்பினால் மதுரை பேரரசு நலிவடைந்த நிலையில், சேதுபதிகள் தங்களை தன்னரசு மன்னர்களாக மாற்றிக் கொண்டனர் என்பதும் தெரியவருகிறது.

இந்த ஆவணச் செய்திகளை சேதுபதி மன்னர் வழியினரது ஆய்வுக்கு தொடர்புடையதாக எடுத்துக் கொண்டால், இந்த வழியினர் சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு குடிபுகுந்தவர்கள் என்ற கருத்தும் உறுதிப்படுத்தப்படுகிறது. அத்துடன் அவர்கள் சோழப் பேரரசர்களின் பணியில் இருந்து பாண்டிய நாட்டின் எல்லைப் பகுதியான கானாட்டில் முதலில் நிலைத்து இருந்தனர் என்பதும் பெறப்படுகிறது. ஆனால் அடுத்த இரு நூற்றாண்டுகளில் அவர்களது அரசியல் பணி காரணமாகவும், பாண்டிய நாட்டு குழப்பங்கள் காரணமாகவும் சேதுபதி மரபினர் கானாட்டில் நீடிக்க இயலாமல் இன்னும் தெற்கே பாண்டிய நாட்டு கிழக்கு கடற்பகுதிக்கு குடிபெயர்ந்தனர் என்பதும் ஊகிக்கப்படுகிறது.

என்றாலும், மறவர்களது குடியேற்றம் கானாட்டில் தொடர்ந்ததை சில வரலாற்றுச் செய்திகள் வலியுறுத்துகின்றன. அங்கே குடியிருந்த காராளர்கள் தங்களது உதவிக்காக ராஜேந்திர மங்கலநாட்டு மறவர் ஐநூற்றுவரை தங்களது நாட்டில் குடியமர்த்தினர் என்பதை புதுக்கோட்டை சீமை வரலாறு உறுதிப்படுத்துகிறது.[9] மற்றொரு செய்திப்படி அந்த மறவர்கள் சேது மன்னருடன் மணவினை கொள்ள மறுத்து கானாட்டில் குடியேறினர் என்பதும் தெரியவருகிறது.[10] இந்தக் குடியேற்றம் பதினான்காம் நூற்றாண்டிற்கும் முந்தியது எனக் கருதப்படுகிறது. மேலும் காரணம் எதுவாக இருந்தபொழுதும் கானாட்டில் மறவர்கள் ஆங்காங்கு நிலைகொண்டிருந்ததை பன்னிரண்டு பதிமூன்றாவது நூற்றாண்டுக் கல்வெட்டுச் செய்திவழி அறிந்து கொள்ளமுடிகிறது.[11] இதனை கி.பி. 1478-ம் ஆண்டு குழபிறைச் செப்பேடும் உறுதி செய்கிறது. இந்தச் செப்பேட்டில் மறவர்கள்

---

9) Pudukottai Manual – K. Venkatrama Ayyar (1928)
10) Venkatrama Ayyar K. Pudukottai Manual (1928)
11) Pudukottai State Inscriptions. No. S. 218, 644. 639, 501, 505. 554.

சேதுகாவலப்புரையர் எனக் குறிக்கப்பட்டுள்ளனர்.[12] பதினைந்தாம் நூற்றாண்டில் அவர்கள் சேதுகாவலர் என்று வழங்கப்பட்ட செய்தி இதன் மூலம் தெரியவருகிறது.

பதினான்காம் நூற்றாண்டு தமிழக வரலாற்றில் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் பற்றிய குறிப்பு எதுவும் இல்லாததால் தொடர்பு அற்ற நிலை. இந்தக் காலக்கட்டத்தில், மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியநாடு முழுவதையும் சோழநாட்டின் ஒருபகுதியையும் மதுரை சுல்தான்கள் தங்கள் ஆட்சியில் வைத்திருந்ததும், இதற்கு ஒரு காரணமாகக் கொள்ளலாம். அப்பொழுது தஞ்சை, நெல்லைப் பகுதிகளில் செல்வாக்கும், வலிமையும் குன்றியிருந்த பாண்டிய மன்னர்களைப் போன்று, அப்பொழுதைய குழப்பநிலையில் சேதுபதிகளைப் பற்றிய செய்திகளும் இல்லை. ஆனால் அவர்கள் ''பட்டணத்தில் (தற்போதைய பெரியபட்டினத்தில்) இருந்து ஆட்சிசெய்தனர் என்பதற்கு வடநாட்டு வரலாற்று ஆசிரியர் அமீர் குஷ்ரூவின் ''ஆஷிகா''வில் உள்ள செய்தி ஆதாரமாக உள்ளது.[13]

இந்தச் செய்தியின்படி தில்லித் தளபதி குஸ்ரூகான் கி.பி 1318ல் இராமேசுவரம் வரை சூறாவளிப் படையெடுப்பினை மேற்கொண்டபோது இராமேசுவரத்திற்கு சற்று முன்னதாக உள்ள ''பட்டினத்தில்'' மறவர்குல அரசர் ஆட்சி செய்ததாகவும் குஸ்ரூகானின் படைகள் அங்கு வருவதை அறிந்து முன்னதாகவே அங்குள்ள மன்னரும், மக்களும் பயந்து காட்டிற்குள் ஓடி ஒளிந்து கொண்டதாகவும் குறிக்கப்பட்டு இருப்பதால், அந்த மன்னர் சேதுபதி என நம்புவதற்குரியதாக இருக்கிறது. ஏனெனில் இந்தப் பெரியபட்டினத்தில் தொடர்ந்து மறவர்கள் மிகுந்து இருந்ததையும் மறவர்களது தலைமைப் பட்டணமாகிய இந்த ஊரில் மக்களை சீர்திருத்த கிறிஸ்துவமத பாதிரிகள் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதையும் பதினேழாம்நூற்றாண்டின் இறுதியில் அங்கு வருகை தந்த ஜான்நியூப் என்ற டச்சுப் பாதிரியரது குறிப்பில்[14] காணப்படுகிறது.

12) அப்துல் மஜீது-தொல்லியல் கருத்தரங்கு (1983) பக்கம் 100

13) Krishnasamy Ayyangar, S. Dr – South India and her Mohameden Invorders (1921) pp; 100-101

14) Sathiyanatha Ayyar K History Nayaks of Madura (1924) pp : 326–27

மேலும், இந்த ஊருக்கு அருகில் உள்ள ரெகுநாதபுரம், சேதுபதிகளது கோநகர்களின், ஒன்றாக இருந்தது என இராமநாதபுரம் மானுவல்[15] குறிப்பிடுவதையும் தில்லி படையெடுப்புடன் இதனை தொடர்புப் படுத்திச் சிந்திப்பதற்கு ஏதுவாக உள்ளது.

இந்தக் கருத்துக்கு ஆதாரமாக இராமேசுவரம் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் பதினைந்தாவது நூற்றாண்டில் சேதுபதி திருப்பணிகளைக் குறிக்கின்றன. இராமேசுவரம் திருக்கோயில் அமைப்புமுறைகளை ஆராய்ந்த டாக்டர் பெர்குசன் இந்தக் கோயிலின் கர்ப்பக்கிரகம், உடையான் சேதுபதியால் பதினைந்தாவது நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக்கருத்து தெரிவித்துள்ளார்.[16] அந்தக் கோயிலின் பிரதான அமைப்பை உருவாக்கிய உடையான் சேதுபதியின் கி.பி 1414ம் வருட கல்வெட்டினையும் கோயிலின் திருச்சுற்று மதிலை நிர்மானித்த சேதுமன்னரைப் பற்றி கி.பி. 1434-ம் ஆண்டுக்கல்வெட்டினையும் அவர் தமது கருத்துக்கு ஆதாரமாக குறிப்பிட்டுள்ளார்[17] அந்தக் கோயிலின் நித்யபூஜைக்கு சேதுபதி மன்னர்கள் கி.பி. 1414, 1434, 1490 ஆண்டுகளில் வழங்கிய நிலக்கொடை பற்றிய செய்திகளைச் சுட்டும் இராமேசுவரம், கல்வெட்டுக்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார்[18]. மேலும் இராமேசுவரத்தின் எதிர்க்கரையான யாழ்ப்பாண நல்லூரில் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்திற்கு சேதுபதி மன்னர் மூலமாக இராமேசுவர வேதவிற்பன்னர் சிலரை வரவழைத்து அர்ச்சகராக நியமனம் செய்யப்பட்டதை இதே நூற்றாண்டில் வரையப்பெற்ற ''கயிலாய மாலை'' என்ற சிற்றிலக்கியத்தில் குறிக்கப்பெற்றுள்ளது.[19]

---

15) Rajaram Rao. T. Manual of Ramanathapuram Samasthanam (1881) pp

16) Fergusson - History of India and Eastern Architecture pp 384-85

17) James Burgess J.E. Tracy - Indian Antiquary vol. XII Page : 137.

18) Thurston – Castes and Tribes of South India vol p. 126

19) Sashasdri. K. Dr – History of Sethupathies (1972) pp 181

தொடர்ந்து பதினாறாவது நூற்றாண்டிலும் இராமேசுவரம் திருக்கோயிலுக்கு சேதுபதி மன்னர்கள் நிலக்கொடை வழங்கிய விபரங்களை கி.பி. 1500, கி.பி. 1540 வருடத்திய கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[20] மேலும் இன்னொரு வரலாற்றுச் செய்தி மூலம் அன்றைய சேதுபதி ஆட்சியை அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது இராமேசுவரம் செல்லும் நெடுஞ்சாலையில் வேதாளை கிராமத்தில் கோட்டையொன்றை அமைத்து இராமேசுவரம் செல்லும் பயணிகளுக்கு போர்த்துக்கீசிய பரங்கிகள் தொல்லைகள் கொடுத்து வந்ததுடன் பயணிகளிடம் பலவந்தமாக ''தலைவரி'' ஒன்றையும் வசூலித்து வந்ததை, மதுரையில் உள்ள விஜயநகரப் பேரரசின் நாயக்கப்பிரதிநிதிகளுக்கு தகவல் கொடுத்தும் அவரிடமிருந்து இராணுவ உதவி பெற்றும் இந்தப் பரங்கிகளை கி.பி. 1549ல் சேதுபதி மன்னர் துரத்தியடித்த செய்தியும், வரலாற்றில் உள்ளது.[21] மேலும் கி.பி. 1605 வரை எட்டையபுரம் பாளையக்காரராக இருந்த ஜகவீர எச்சிலப்ப எட்டப்ப நாயக்கர், மறவர் சீமையின் மன்னரை நம்பிபுரத்தில் (கமுதி வட்டம்) பொருதி தோற்கடித்தார் என்ற செய்தி எட்டையபுரம் வரலாற்றில் காணப்படுகிறது[22]. இந்தப் போர் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்று இருத்தல் வேண்டும்.

இந்த வரலாற்றுக் குறிப்புகளில் இருந்து கிழக்கு கடற்கரைப் பகுதியில் சேது மன்னர்களது ஆட்சி, பதினான்கு, பதினைந்து, பதினாறாவது நூற்றாண்டுகளில் நிலவிவந்த விவரம் விளக்கமாக இல்லையென்றாலும் குறிப்பாக உள்ளது. அடுத்து மதுரையில் நாயக்கமன்னர் ஆட்சிநிலை நிறுத்தப்பட்டு மதுரை மன்னர்களுக்கும் சேதுபதிகளுக்கும் நெருக்கமான தொடர்புகள் இருந்ததால், சேதுபதிகளைப்பற்றிய கூடுதலான விவரங்கள் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, தொடராக கிடைத்துள்ளன.

---

20) இராமேசுவரம் குடமுழுக்கு மலர் (1975) பக்கம் 186
21) Rev. Fr. Heras – Araveedu dynasity - Foot Note pp 156
22) Ganapathia pillai – W.E - Ettayapuram Past and Present

கொண்ட கோப்பரகேசரி'' என அழைக்கப்பட்ட அந்த மன்னன் இராமேசுவரத் திருக்கோவிலுக்கும் சென்று அங்கு துலாபர தானம் செய்ததாக கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கிறது[24] அடுத்து கி.பி. 1168-ல் மதுரை அரியாசனத்திற்கு அருகதை; உடைய வர்களாக போட்டியிட்ட குலசேகரபாண்டியன் பராக்கிரம பாண்டியன் ஆகிய இளவல்களின் பூசலில் தலையிட்டு, பராக்கிரம பாண்டியனது மகன் வீரபாண்டியனுக்காக இலங்கைப் படைகள் இராமேசுவரத்தில் கரை இறங்கின. மறவர் சீமை முழுவதையும் அந்தப்படை தங்களது பொறுப்பில் மேற்கொண்டன. அப்பொழுது நிகழ்ந்த போர்களில் கலந்துகொண்ட மறவர் சீமையின் தலைவர் கள் வடவால திருக்கை நாடாள்வார், குண்டைய முத்தரையர், அஞ்சுகோட்டை நாடாள்வார், அதளையூர் நாடாள்வார், தழை யூர் நாடாள்வார், என்ற பலதலைவர்கள்.[25] அவர்களில் ''சேதுபதி'' என்ற பெயருடையோர் எவரும் குறிப்பிடப்பட வில்லை. தமிழகத்தில் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி யில் தங்களது ஆட்சியை துவக்கிய நரச நாயக்கர் (1417), கிருஷ்ண தேவராயர் (1517) சலுக்கராய திருமலை நாயக்கர் ( 532) ஆகியோர் இராமேசுவரம் திருகோவிலுக்கு வருகை தந்துள்ளதாக குறிப்புகள் உள்ளன. இராமநாதபுரத்திற்கு அண் மையில் உள்ள திருப்புல்லாணி திருக்கோவிலில் கம்பண உடை யாரது கி பி. 1374ம் ஆண்டு கல்வெட்டும்[26] தேவிபட்டினத்தில் சுந்தரத்தோளுடைய மாவலிவாணதிராயரது கி.பி. 1533 ஆண்டு கல்வெட்டும் காணப்படுகின்றன.[27] மற்றும் கீழக்கரை சொக்க நாதசாமி கோவிலில் உள்ள கி.பி.1540ஆம் வருடத்திய கல்வெட்டு மதுரை நாயக்கரது பாளையக்காரரான பரமக்குடி தும்பிச்சி நாயக்கரை குறிப்பிடுவதாக உள்ளது.

இந்தச் செய்திகள் எழுப்பும் வினாவிற்குரிய விடை இந்தப் பகுதியில் மறவரது ஆட்சி பரந்த அளவில் அப்பொழுது இல்லை என்பதே. மேலும் கி.பி. 1182ல் அரபு நாட்டில் இருந்து வந்து

---

24. N gasamy Dr. R. - South Indian Studies - Vol II (1979) p : 160-62.
25. Nilakanta Sastri. K.A - Ceylon Historical Journal Spl issue Vol 4 (1955) Chap III.
26. A R. 114/1903. Tiruppullani Temple
27. ASSI. Vol. IV ( 886) page 216.

இந்தப்பகுதிக்கு வருகை தந்து[28] பதின்மூன்று ஆண்டுகள் இந்தப் பகுதியில் பவித்திரமாணிக்கப் பட்டினத்தின் மன்னராக விளங்கி ஏறுபதியில் தியாகியாகி புகழுடம்பில் பொலியும் அரபுநாட்டுப் புனிதர் சுல்த்தான் செய்யது இப்ராகிம் (வலி) அவர்களது வாழ்க்கை குறிப்புகளும், இந்தப் பகுதிக்கு கி.பி. 1292ல் வருகை தந்த உலகப்பயணிகள் மார்க்கோ போலோ, கி.பி. 1343ல் வருகை தந்த இப்னு பதூதா ஆகியோரது பயணக் குறிப்பு களிலும்[29] மறவர் ஆட்சி பற்றிய செய்திகள் காணப்படாதது சேதுபதிகளது தொன்மைக்கு துணை செய்யாத ஆவணங்களாக அமைந்துள்ளன.

என்றாலும், சேதுபதி மன்னர்களது தலைமை இடமாக இருந்து வந்த சூரன்கோட்டை பற்றிய குறிப்பு இலங்கை வரலாற்றில் கொடுக்கப்பட்டுள்ளது. கி.பி. 1168ல் பாண்டிய மன்னர் வாரிசுப்பூசலில் பராக்கிரமபாண்டியனது அன்புக்கிழத் தியின் மகன் வீரபாண்டியனுக்கு ஆதரவாக ஈழத்தில் இருந்து இராமேசுவரம் வழியாக பாண்டிய நாட்டிற்குள் புகுந்த இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவின் படைகள் இளவல் குலசேகர பாண்டியனது படைகளை எதிர்கொண்டு அழித்த போர்க்களங்களின் பட்டியலில் சூரன் கோட்டை இடம் பெற்றுள் ளது.[30] இந்த மண்கோட்டையை மாமன்னர் கிழவன் சேதுபதி கி.பி. 1678-80ல் கற்கோட்டையாக மாற்றியதுடன், பெயரையும் இராமநாதபுரமாக மாற்றி சேதுநாட்டின் கோநகராக அமைத் தார்[31]. இதனை உறுதி செய்வது போல் முந்தைய இராமநாத புரம் கோட்டைப்பகுதி முழுவதும் வருவாய்த் துறை பதிவுகளில் ''சூரங்கோட்டை'' என்று மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கோட்டைப்பகுதி நீங்கலாக உள்ள இன்றைய இராமநாத புரம் நகர், அச்சுந்தன்வயல், ராசசூரியமடை, சக்கரக்கோட்டை

28. Hussaini S.A Q. - History of Pandya Kingdom (1962) pp :(48)
29. Nilakanta Sastry. K.A - Foreign Notices of South India (1972) pp. 270.
30. Concise History of Ceylon (1961) p 224 (Map)
31. Rajaram Rao T. Manual of Ramnad Samasthanam (1891) p. 223

பட்டணங்காத்தான், பேராவூர் என்ற வருவாய் கிராமப்பகுதி சளாக வருவாய்த்துறைப் பதிவுகளில் காணப்படுவதும் இங்கு நினைவு கூரத்தக்கதாக உள்ளது.

*சேதுபதிகளும் சோழர்களும்*

மேலும், இந்த மன்னர்கள் சோழப் பேரரசர்களை போன்று (அதாவது திருபுவன தேவன், ராஜராஜதேவன் என்பன போன்று) தங்களது பெயர்களில் ''தேவர்'' என்ற விகுதியையும் இணைத்துக் கொண்டனர். அத்துடன் சோழர்குல முன்னோரான சூரிய தேவரைச் சுட்டும் பெயர்களையே தங்களது அரசுப் பெயர்களாக (ராஜசூரிய தேவர், ரகுநாத தேவர், விஜயரகுநாத தேவர், குமார விஜயரகுநாததேவர்)என புனைந்து கொண்டனர். பிறப்பு, இறப்பு, முடிசூட்டல் போன்ற சடங்குகளில் பிராம்மணிய நடைமுறைகளையும் மேற்கொண்டனர். சோழர்களைப் போன்று வடமொழி வேதங்களில் சிறந்த விற்பன்னர்களையும் சிவப் பிராமணர்களையும் ஆதரித்து அவர்கள் சேது பூமியில் நிலைத்து வாழ்வதற்காகப் பல சதுர்வேதி மங்கலங்களை அமைத்து அவை களை அவர்களுக்கு சர்வ மானியமாக வழங்கினர்.

*சமயப்பிடிப்பு :*

தஞ்சையிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலும், பிரம்மாண்டமான ஆலயங்களை நிர்மாணித்த சோழர்கள் சாஸ்தா, பிடாரி, திரௌபதை, சப்தகன்னிமார் போன்ற சிறு தெய்வ வழி பாட்டிற்கும் உதவியது போல சேது மன்னர்களும் இராமநாத புரம், திருப்புல்லாணி போன்ற பெருங்கோயில்களை நிர்மாணித்த துடன் சிறு தெய்வங்களான ஐயனார் வாழ வந்த அம்மன், அரியநாச்சி அம்மன், மாரியம்மன், கருமாரியம்மன், அங்காள ஈஸ்வரி, நாகநாதர் ஆகியோர்களுக்கு திருக்கோயில் அமைத்து வழிபாடு நடத்த ஏற்பாடுகள் செய்தனர்.

இவ்விதம், பல்லாற்றானும் சோழர்களை பின்பற்றிய சேதுபதி மன்னர்கள் சமயத் துறையிலும், இந்து சமய-சைவ சித்தாந்த நெறியினை உறுதியாகப்பற்றி வந்தனர். குறிப்பாக இராமேசுவரம் திருக்கோயில் கொண்டுள்ள இராமநாத சுவாமி யிடம் அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு அந்த தெய்வத்தின் தொண்டரடிப் பொடியாக வாழ்ந்து வந்ததை வரலாறு விளம்பு

கிறது. தஞ்சைப் பெருவுடையாரிடம் பெரு விருப்புக் கொண்டு பல திருப்பணிகளை இயற்றிய சிவபாதசேகரனாகிய ராஜராஜ சோழனைப் போன்று இந்த சேதுபதி மன்னர்கள் அனைவரும் இராமேசுவரம் திருக்கோயிலின் வளர்ச்சியிலும் இயக்கத்திலும் தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டு இருந்தனர். கி.பி. 1795 வரை (அதாவது இராமநாதபுரம் சீமை தன்னரசு நிலையை இழக்காத வரை) இந்த சீமையின் ஆட்சிபீடத்தில் அமர்ந்து இருந்த சேதுபதி மன்னர்கள் அனைவரும் இந்தக் கோயிலின் விரிவாக்கத்திற்கு உதவியுள்ளனர். நித்ய பூஜைகள் விழாக்கள், நடைமுறைகளில் மிகுந்த அக்கரை கொண்டு இருந்த துடன் அவைகள் சிறப்பாக நடைபெற பலநூறு கிராமங்களை இறையிலிகளாக வழங்கினர். இந்த கிராமங்களில் இருந்து சேதுபதி மன்னருக்கு வரப்பெற்ற வருவாய்கள் அனைத்தும் இந்த திருக்கோயிலுக்கு கிடைத்து வந்தன. இனாம் ஒழிப்புச் சட்டம் (1952) அமுலுக்கு வந்த பிறகும் அந்த ஊர்களின் நிலையான வருவாய்த் தொகை ஆண்டுதோறும் திருக் கோயிலுக்கு அரசினரால் வழங்கப்பட்டு வருகிறது. அதனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சின்னஞ்சிறு கோயிலாக அமைந்திருந்த அந்த தாசரதி திருக்கோயில் தோற்றத்திலும், வழிபாட்டு முறையிலும் ஏற்றமும் எழிலும் பெற - அமைப்பிலும் கட்டுமானத்திலும் உயர்ந்து வளர உதவின. இதனால் இங்குள்ள இறைவர் கங்கை முதல் குமரி வரை, ஆத்திக உள்ளங்களில் 'இராமநாதராக' - இடம் பெற்றுள்ளார்.

இன்னும் இராமநாதபுரம், மதுரை, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில ஆலயங்களும், சேதுபதி சீமையின் கடற்கரை வழியில் (சேது பாதை) அன்னசத்திரங் களும், மடங்களும் மற்ற நிறுவனங்களும் மக்களுக்கு தொடர்ந்து பயன்பட இந்த மன்னர்களது தண்ணளியும், தாளாண்மையும் உதவின. அன்றாட வழிபாடுகள், சிறப்பான பூஜைகள், விழாக்கள், நிவந்தங்கள், கட்டளைகள், அன்னசத்திரங்கள், தண்ணீர்பந்தல் என்று பல வேறு சமய சமுதாயப் பணிகள் சிறப்பாக நடைபெற, இந்த மன்னர்கள் இறையிலியாக வழங்கிய ஏராளமான விளைநிலங்களும், ஊர்களும் அந்த மன்னர்களது இறையுணர்வையும் மக்கள் பால் கொண்டுள்ள பரிவு மனப் பான்மையையும் வெளிப்படுத்தும் சாதனங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

சமயப்பொறை :

உள்ளத்தால் இந்த மன்னர்கள் சைவ சமய நெறியைச் சார்ந்தவர்களாயினும், நடைமுறையில் இந்து சமயத்தின் இன்னொரு பிரிவானை வைணவத்திற்கும் வாழ்வளித்து வந்தார்கள் என்பது மிகையல்ல. திருமங்கை ஆழ்வார் மங்கள சாசனம் செய்த புல்லாணிப்பெருமாள் திருக்கோயில், இந்த மன்னர்களது திருப்பணிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அத்துடன் இராமநாதபுரம் கோதண்ட ராமசாமி பெருமாள் ஆலயம், அபிராமம் வரதராஜ பெருமாள் கோவில், ராஜசிங்க மங்கலம் கரியமாணிக்க பெருமாள் ஆலயம் தொண்டி உந்திபூத்த பெருமாள் திருக்கோயில் போன்ற ஏனைய வைணவத் திருக்கோயில்களும் இந்த மன்னர்களது வள்ளண்மையினின்றும் விடுபடவில்லை,

மேலும் வடமொழியில் வல்லுனர்களான வைணவப் பெருமக்களும் இந்த மன்னர்களது சிறப்பான ஆதரவுக்குரியவர்களாக இருந்து வந்தனர். அமைச்சர்களாகவும் அரசவைப் புலவர்களாகவும் மன்னர்களிடம் நெருக்கமான நிலையில் அவர்கள் இருந்து வந்துள்ளனர் என வரலாறு விளம்புகிறது.

இந்து சமயத்தினின்றும் பிரிந்து, தனித்து இருந்து தன்னிலை குன்றிய சமணச்சமயச் சிறுபான்மையினர் கூட, சேது மன்னர்களது தண்ணளிக்கு உரியவர்களாக இருந்ததை சில செய்திகள் தெரிவிக்கின்றன. மணிமுத்தாறு ஆற்றின் வடகரையில் உள்ள ஜீனேந்திர மங்கலம் என்ற அனுமந்தக்குடி[32] ஓலைச்சாசனம் இத்தகைய செய்தியொன்றை உள்ளடக்கியுள்ளது.[33] இந்த மக்கட்பிரிவினர் மறவர் சீமையில் மனநிறைவுடன் மற்ற பிரிவினர்களைப்போல் அறப்போது, கிடாரம், மேலச்சீத்தை, முத்தனேந்தல், நாகனேந்தல், நாகாடி, சாத்தனூர், சாத்தமங்கலம், சாத்தணி, மும்முடிசாத்தான் தெளிசாத்த நல்லூர் ஆகிய ஊர்களில் வாழ்ந்து வந்த செய்திகள் உள்ளன.

---

32. அனுமந்தக்குடி - இன்றைய பசும்பொன் மாவட்டத்தில் தேவகோட்டை நகருக்கு நேர் கிழக்கே எட்டுக்கல் தொலைவில் உள்ளது.
33. வேதாச்சலம் - கல்வெட்டு இதழ் எண் 18

சேது காவலர்களது சமயப்பொறை, அவர்களது குடிகளாக ஒழுகி வந்த ஏனைய சமயத்தினரது ஒழுகலாறுகளுக்கு ஒவ்வாத தாக இருந்ததில்லை. மாறாக சேதுநாட்டின் சிறுபான்மை இனத்தவரான சமண, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களது இறைக் கொள்கைகளையும் மதித்துப் போற்றும் மனோபாவம் பெற்று இருந்தனர். அந்த மக்களிடம் அன்பும், அனுதாபமும் கொண்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டை உகந்தவர்களாக விளங்கி வந்தனர். ''எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றும் அறியேன்'' எனப்பாடியுள்ள தாயுமான அடிகளது[34] பூதஉடம்பைத் தாங்கியுள்ள புண்ணிய பூமிக்கு அதிபதிகளான இந்த மன்னர்கள் சமரச மனப்பான் மையை அரசதர்மமாக கொண்டு கடைபிடித்ததில் வியப்பில்லை.

இஸ்லாமியர்களைப் பொறுத்தவரையில், அவர்களது தொழுகை இடங்களைப் பராமரிக்க, அவர்களது புனித இடங் களில் திருவிளக்கு ஏற்றி வைக்க, புனித மகான்களது அடக்க விடங்களுக்கு வருகை தருகின்ற மக்களுக்கு உணவு வழங்க, கந்தூரி போன்ற ஆண்டுவிழாக்களைக் கொண்டாட பல்வேறு அறச்செயல்களுக்கு ஆதரவாக நிலக்கொடைகளை இந்த மன்னர்கள் நல்கியுள்ளனர். மேலும், பெரியார்களை தமராகப் பேணிக் கொள்ள வேண்டும் என்ற பொய்யாமொழிப் புலவரது பொன்மொழிக்கிணங்க, வள்ளல் சீதக்காதியைத் தமது அமைச்ச ராகக் கொண்டதுடன் தம்முடைய உடன்பிறவாச் சகோதரராக 'விஜயரகுநாத பெரியதம்பி' யாகவும் மதித்து வந்தார் மன்னர் கிழவன் சேதுபதி. அவரது முன்னவரான திருமலை ரகுநாத சேதுபதி வழங்கிய செப்பேடு, ஒன்றில் 'நமது காவல்குடியின ரான 'துலுக்கர்தறிக் கடமை நீக்கி' என்ற தொடர் காணப்படு கிறது[35] இதில் இருந்து அந்த மன்னர் இஸ்லாமியத் தறியா ளருக்கு இயைந்த செயலை மேற்கொண்டிருந்தார் என்பதை புலப்படுத்துவதுடன் 'நமது' என்ற செப்பேட்டுச் சொல் அந்தப் பிரிவு மக்களிடம் அந்த மன்னர் கொண்டிருந்த நேயம் மிகு நெருக்கமான நிலையையும் விளக்குவதாக உள்ளது.

---

34. தாயுமான அடிகள் கி.பி 1659ல் இராமநாதபுரம் நகரின் வடகிழக்கே சமாதி கொண்டுள்ளார்
35. இராமேசுவரம் குடமுழுக்கு மலர் (1974) பக்கம் C. 77

இதே மன்னர் கி.பி. 1674ல் அனுமந்தக்குடி பள்ளிவாசலுக்கு பலநிலக்கொடைகளை வழங்கி உதவினார். அவரைத் தொடர்ந்து ரகுநாத கிழவன் சேதுபதி, குமார முத்துவிஜய ரகுநாத சேதுபதி, முத்துக்குமார ரகுநாத சேதுபதி ஆகிய மன்னர்கள் காரேந்தல், நாரணமங்கலம், பள்ளிவாசல்களுக்கும், இராமேசுவரம், இராமநாதபுரம்,கீழக்கரை, ஏறுபதி, ஆகிய ஊர்களில் அடக்கம் பெற்றுள்ள இஸ்லாமியப் புனிதர்களது அடக்கவிடங்களுக்கு வருகின்ற பயணிகள் உணவு பெறுவதற்கும், நுந்தா விளக்கு தர்மத்திற்கும் பல ஊர்களை இறையிலியாக வழங்கினர். விஜயரகுநாத முத்துராமலிங்க சேதுபதி என்ற மன்னர் (கி.பி. 1760-95), எமனேசுவரத்தைச் சேர்ந்த ஆசுகவி மீர்ஜவ்வாது புலவரைத் தமது அரசவைப்புலவராக அமரச்செய்ததுடன் அவரது குடும்ப பராமரிப்பிற்காக சுவாத்தன், வண்ணவயல் ஆகிய சிற்றூர்களை சர்வமான்யமாக அளித்து மகிழ்ந்தார்.[36] மேலும், அந்த மன்னர் வங்க நாட்டுடன் கொண்டிருந்த சங்கு வணிகத்திலும், யாழ்ப்பாணத்துடன் கொண்டிருந்த அரிசி வணிகத்திலும் தமது நாட்டு இஸ்லாமிய மக்களது பணிகளைப் பயன்படுத்தி வந்தார்.[37] இவ்விதம் சேது மன்னர்களது சமயப் பொறை, சமரசமனப்பாங்கு ஆகிய சிறந்த பண்புகளில் சேதுபதி சீமையில், இஸ்லாமியர் ஏனைய சமுதாயத்துடன் அமைதியாக அன்பு பிணைப்புகளுடன் வாழ்ந்து வந்தனர்.

இந்த மன்னர்களது இன்னொரு பிரிவு குடிமக்களான இயேசு மதத்தினர், பதினாறாவது நூற்றாண்டு தொடக்கம் தங்களது சமயக் கொள்கைகளை 'அஞ்ஞானிகளிடம்' விளக்கம் செய்து இணக்கமாணவர்களை அவர்களது சமயத்திற்கு மதமாற்றம் செய்து வந்தனர். நாட்டின் மொத்த மக்கட் தொகையில் இவர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையாளராக இருந்த பொழுதும், அவர்களுக்கும் வழிப்பாட்டு சுதந்திரம் வழங்கியதுடன், இராமநாதபுரம், கீழக்கரை, முத்துப்பேட்டை, பாம்பன், சருகணி பொன்னளிக்கோட்டை, ஓரியூர் ஆகிய ஊர்களில் தேவாலயங்களை அமைப்பதற்கும் உறுதுணையாக இருந்தனர். இவர்களது

36. அப்துல்ரகீம் எம்.ஆர்.எம்-தமிழ்நாட்டு முஸ்லீம் புலவர்கள் (1980) பக்கம் 150

37. கமால்]எஸ்.எம் Dr விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987) பக்கம் 43, 128

மிகப்பழமையான தேவாலயங்கள் (பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை - கீழக்கரையிலும், வேதாளையிலும் இருந்ததை வரலாற்றுக்குறிப்புகளில் காணமுடிகிறது.[38] ஓரியூர் கிராமத்தில் கொலையுண்ட புனித பிரிட்டோ பாதிரியாரது (அருளானந்தர்) நினைவாக கி.பி. 1734ல் நிர்மாணிக்கப்பட்ட தேவாலய கட்டுமானத்தின் பொழுது கட்டையத்தேவர் என்ற குமாரமுத்து ரெகுநாத சேதுபதி மன்னர் கலந்து கொண்டு செங்கல் சுமந்து கட்டுமானத் திருப்பணியைத் தொடங்கி வைத்தார் என்ற செய்தி இந்த மன்னர்களது மனிதாபிமானத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். [39]சிறுவெள்ளி, சருகணிப் பகுதிகளில் மதம் மாறிய மறவர்கள் தொடர்ந்து அவர்களுடைய பாரம்பரிய ''தேச காவல் கடமைகளை'' நிறைவேற்றுவதற்கு சேதுபதிகள் அனுமதித்தனர்.[40] மதம் மாறியதற்காக அவர்களது உரிமைகளும், சலுகைகளும் மறுத்தளிக்கப்படவில்லை. போர்த்துகீசிய பரங்கிகளால் அமைக்கப்பட்ட முத்துப்பேட்டை சர்வேசுவர சுவாமி தேவாலயத்திற்கு கி.பி. 1792ல் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி, இரண்டு கிராமங்களை அந்த ஆலயத்தின் பராமரிப்பிற்காக சர்வமானியமாக வழங்கி உதவினார். அந்த மான்ய கிராமங்களின் வருவாய்த்தொகையை அந்த ஆலய நிர்வாகி அரசிடமிருந்து தஸ்திக் அலவன்ஸாக ஆண்டு தோறும் பெற்றுவருகின்றனர்.

*சான்றோர்களுக்கு சர்வமான்யம் :*

மற்றும், இந்த மன்னர்கள் தங்களைப் பாடிவந்த தமிழ்ப் புலவர்க்கும், நாடிவந்த நன்னூல் வித்தகர்களுக்கும் பலநூறு கிராமங்களை, அகரங்களாகவும் சதுர்வேதி மங்கலங்களாகவும் ஈந்து மகிழ்ந்தனர். இதனால் ''பாவுக்கு இசையும் பெயரே மணந்து மெய்ப்பாவலர்தம் நாவுக்கு இசையும் பெரும் புகழார்'' என இந்தப் புவியரசர்களை கவியரசர்கள் தங்களது புனித வாக்கினால் வியந்து புகழ்ந்தனர். அந்தப் புலவர் பெருமக்களில் பொன்னாங்கால் அமுதகவிராயர், மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர், எமனேஸ்வரம் மீர்ஜவ்வாது

38. கீழக்கரை சொக்கநாத சுவாமி கோயில் கல்வெட்டு - AR
39. Sauliere S.J. Red sand (1947) p. 485
40. ராகவ ஐயங்கார்-மகாவித்வான். ரா. - தனிப்பாடல்கள்

புலவர், மருதூர் தலமலைகண்ட தேவர், பரத்தை வயல் முத்து நாயகப் புலவர், சிறுகம்பையூர் சர்க்கரைப் புலவர், மாசிலாமணிப் புலவர், மன்னாரெட்டிகள், கவிக்குஞ்சர பாரதியார், அட்டவ தானம் சரவணப்பெருமாள் கவிராயர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இன்னும் தொண்டால் உயர்ந்த கலைஞர்களை, திறனால் சிறந்த குடிமக்களையும், இந்த மன்னர்கள் ஆதரித்து மகிழ மறந்து விடவில்லை என்பதை அவர்களது செப்பேடுகள் சொல்லுகின்றன.[41]

இராமேசுவரம் திருக்கோயில் அருகே சேதுபதிமன்னர் பவனிவந்த ஆனையின் வாலைப்பிடித்து நிறுத்தி தமது வலி மையை நிலைநாட்டிய வல்லவர் முத்துவிஜயன் சேர்வை, மதுரை மீனாட்சி அம்மனுக்கு சிறப்பான அலங்காரம் செய்துவந்த குல சேகரபட்டர், அருப்புக்கோட்டை வாழவந்த அம்மன்கோவிலில் அற்புதமாக நாதஸ்வர வாத்திய சேவை செய்த கலைஞர் கறுப்பணன், திருச்சுழியல் திருக்கோவிலில் வேடங்கட்டி ஆடி மக்களை மகிழ்வித்த தேவரடியார் கல்யாணி, ஆவுடையார் கோவில் அம்மன் சன்னதியில் வீணை வாத்திய சேவை செய்த கலைஞர் கோபால் அய்யர் ஆகிய பெருமக்களுக்கு நிலமான்யங் கள் வழங்கி அவர்களது திறனும், தொண்டும் தொடர்ந்து சமுதாயத்திற்கு பயன்பட ஏற்பாடு செய்தனர். செவ்வை சூடு வார் என சிறப்பு விருதுபெற்றவரும் வடமொழி தென்மொழி வித்தகருமான வீரை கவிராஜபண்டிதருக்கு நல்லுக்குறிச்சி கடம்பங்குளம் சர்வமான்யமாக அளித்தனர். இவை தவிர வைத் தியம், பஞ்சாங்கம், புரோகிதம், அடைப்பம், அம்பலம், அவ தானம் கோவில் கணக்கு, திசைகாவல், தேசகாவல் போன்ற எண்ணற்ற ஊழியங்களுக்கு உயர்வும், உலுப்பையும் பெற்றோர் பலர். இங்ஙனம், சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலும், தக்காரும் மிக்காருமின்றி தனித்து ஒளிர்ந்த உன்னதப் பெரு மக்களை உயர்த்தி வாழ்த்தி வளமான வாழ்க்கையை அவர் களுக்கு வழங்கி மகிழ்ந்தவர்களும் சேதுபதி மன்னர்கள்.[42]

41. Board of Revenue-Misc. Register-Vol VI (1811 AD)
42. இராமநாதபுரம் சமஸ்தான நிலமானிய கணக்கு

அவர்களது இந்தக் கொடைப் பண்பினை,
''திருந்துதரு மாதனமுஞ் சீவிதமுங் கோயிற்
செய்யவள வூர்களு மடப்புறமு மன்னம்
அருந்தவரு சத்திரநல் லூர்களு மறத்திற்
காக்கிய சிறப்புனது பாக்கியமி தல்லாற்
பெருந்தகைமை கொண்டபுல வோரினிது வாழப்
பேணியுத வும்வயலி னூர்களை வாமோ
இருந்தவ முளராலது சேதுபதி யாதல்
எண்மையிலை யென்பருயர் வண்மையுள வேந்தே''
... எனப் பாராட்டி பாடியுள்ளனர். புலவர் பெருமக்கள்[43]

இவ்விதம் கி.பி. 1604 முதல் கி.பி. 1795 வரை இரண்டு நூற்றாண்டுகளில் தென்னகத்து தன்னரசினர் யாரும் செய்யாத சாதனையாக இராமனாதபுரம் சேதுபதி மன்னர்கள் சமய உணர்வுகளின் சிறப்பான வளர்ச்சிக்கும், சமய ஒருமைப் பாட்டிற்கும் தமிழ் மொழியின் செழிப்பிற்கும், உள்ளத்தால். உணர்வால் உயர்ந்த மக்களை உருவாக்குவதற்கும், திருக் கோயில்களையும், திருமடங்களையும், தொழுகைப் பள்ளிகளை யும், தேவாலயங்களையும் ஆதரித்து ஊக்குவித்து வந்திருப்பதை அவர்களது செப்பேடுகளும் ஓலைப்பட்டயங்களும், கல்வெட்டுக் களும், நிலமான்ய கணக்குகளும் செப்புகின்றன. வரலாற்று சிறப்புமிக்க இந்த மன்னர்களது சிறந்த சாதனைகளான அறப் பணிகளை வரலாற்று நோக்கில் ஆராய்ந்து அச்சிட்டு வெளி யிடுதல் தமிழக வரலாற்றுக்கு உதவும் உன்னத செயலாகும்.

ஆனால் இந்தப் பயனுள்ள பணியினை இதுவரை யாரும் மேற்கொள்ளாததால் வரலாற்றுக்கு உதவும் சேதுமன்னர்களது ஆவணங்கள் காலச்சுழலில் அருகி அழிந்து மறைந்து விட்டன. கி.பி. 1702லும், 1710லும், சேதுபதிச் சீமையெங்கும் ஏற்பட்ட புயல், வெள்ளம், கி.பி. 1701ல் இராணி மங்கம்மாளது படை யெடுப்பு, கி.பி. 1771ல் தஞ்சைமன்னர் துல்ஜாஜி படையெடுப்பு, கி.பி. 1772ல் ஆற்காட்டு நவாப்பும் ஆங்கிலேயரும் இணைந்து நடத்திய தாக்குதல், கி.பி. 1797 - 1799ல் மறவர் சீமை

43. மகாவித்வான் ரா. ராகவஐயங்கார்-நவராத்திரிப்பாடல்கள் (1913)

யெங்கும் கிளர்ந்தெழுந்த மக்களது ஆயுதப் போராட்டம் என்ற வரலாற்று நிகழ்வுகள் இந்த ஆவணங்களின் அழிவிற்குக் காரணமாக இருந்துள்ளன. எஞ்சியுள்ளவைகளையும் வைத்திருப்பவர்கள் ஆய்வாளர்களது பார்வைக்குக்கூட கொடுக்க மறுத்து அதிசயப்பொருளாக மறைத்துக் காத்துவருகின்றனர். அதனால் அவைகள் காலவெளிச்சத்தின் உண்மை விளக்கத்தைப் பெற முடியாமலும் தமிழக வரலாற்றின் தொய்வுப் பகுதிகளை நிறைவு செய்ய முடியாமலும் உள்ள நிலை நீடித்து வருகிறது.

இதனை வழிமொழியும் முகமாக கி.பி. 1860ல் இராமநாதபுரம் சமஸ்தானம் திவான் பொன்னுச்சாமித்தேவரது குறிப்புகள் அமைந்துள்ளன.

# 2

# ஆவணங்கள் - அரிமா நோக்கு

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் மன்னரது செங்கோன்மை அமைந்திருத்தல் வேண்டுமென்பது முந்தைய அரசியல். குடி தழுவி கோலோட்சிய மன்னர்கள் மக்களது தேவைகளை நிறைவு செய்வதை தங்களது தலையாய கடமையாகவும் இராஜ தர்மமாகவும் கொண்டிருந்தனர். அறியாமையில் ஆழ்ந்திருந்த மக்கள் ஆலயங்கள், வழிபாட்டுத் தலங்கள், திரு மடங்கள், வழி ஆன்மீக எழுச்சி பெறவும் அந்த வகையில் சமயநெறிச் சான்றோர்களது சேவை தொடரவும் ஆவன செய்து வந்தனர். சேது மன்னர்களும் இந்த அரிய பண்பினைப் பேணி வந்தனர் என்பதை அவர்களது அறக்கொடைகள் சான்று பகர்கின்றன.

இதுவரை கிடைத்துள்ள அவர்களது பட்டயங்களில் பெரும் பாலானவை நிலக்கொடை பற்றியவை. மற்றயவை மகமை, காணியாட்சி, இசைவு முறி, ஆணைகள், நியாயத் தீர்ப்புரை ஆகியவை இவையனைத்தும் வரலாற்று ஆவணங்கள் என்ற வகையில் மறவர் சீமையின் அரசியல் சமூகம், வணிகம்

விவசாயம், வரிப்பாடுகள், நிர்வாகம் நிலக்கூறுகள் ஆகியவை களை அறிவிக்கும் அரிய ஆவணங்களாக அமைந்துள்ளன. இவையனைத்தும் அமைப்பிலும் அளவிலும் முந்தைய மன்னர் களது செப்பேடுகளைப் போன்றதாகக் காணப்பட்டாலும் பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

இவைகள் ''தாம்புர சாசனம்'' ''மகாசாசனம்'' ''தர்ம சாசனம்'' தானசாசனம் ''கற்பக மடல்'' என்றபெயர்களில் குறிப் பிடப்பட்டுள்ளன. இவையனைத்தும் நீண்ட சதுரவடிவில் அமைக் கப்பட்டுள்ளன நீளப் பகுதியின் இடதுபுறம் தாமரை மொக்குப் போல கூம்பலாகக் கைப்பிடி அமைக்கப்பட்டுள்ளது. இவைகளில் பெரும்பாலும் முதல் இரண்டாவது பக்கங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரே ஒரு செப்பேட்டில் (செ. எண் 17) நான்கு பக்கங்களிலும் இன்னும் ஒரு செப்பேட்டில் (செ. எண்84) ஐந்து பக்கங்களிலும் வரையப்பட்டுள்ளன. இவைகளில் வடிவில் பெரியது நாற்பத்தி மூன்று சென்டிமீட்டர் நீளமும் பதின்மூன்று சென்டிமீட்டர் அகலமும் கொண்டது. (செ.எண் 7) இதனைப் போன்றே இதுவரைக் கிடைத்த செப்பேடுகளில் மிகச்சிறியது பதினெட்டு சென்டிமீட்டர் நீளமும் பதினான்கு சென்டிமீட்டர் அகலமும் உடையதாகும். (செ. எண் 23)

இந்தச் செப்பேடுகளில் மிகுதியான எண்பத்தியொன்பது வரிகளைக் கொண்ட செ.எண் 38, கி பி. 1714ல் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கான தானத்தைக் குறிப்பிடுகின்றது. கி.பி. 1764ல் விஜயரகுநாத முத்துராமலிங்க சேதுபதியினால் வழங்கப் பட்ட காணியாட்சி பற்றிய செப்பேட்டில் இருபத்தியொரு வரிகள் மட்டும் உள்ளன. (செ. எண்.63) குறைந்த வரிகளைக் கொண்ட செப்பேடு இது ஒன்றுதான்.

இந்தச் செப்பேடுகளில் முதலில் நமது பார்வையில் படுவது கைப்பிடிப் பகுதிக்கு அருகிலும் செப்பேட்டின் தலைப் பிலும் உள்ள வரைகோட்டுச் சித்திரங்கள், புடைச்சிற்பங்கள், மற்றும் மங்கலத் தொடக்கத்திற்கான சொற்கள், வேல், சங்கு, சக்கரம், மயிலும் பாம்பும்-வள்ளி, தெய்வானை முருகன் ஆகிய உருவச் சித்திரங்கள்; திருப்பெருந்துறை திருக்கோயில், திருவாடு துறை திருமடம், அழகர்கோயில், சம்பந்தப்பட்ட செப்பேடுகளில் கூடுதலான வரைகோட்டுச் சித்திரங்கள் காணப்படுகின்றன.

திருபெருந்துறை புராண வரலாறாக குருந்தமரம், சிவ லிங்கம், சிவபெருமான் சின்முத்திரை தோற்றம், மணிவாசகப் பெருமான், அரசு அலுவலர்கள் சக்தி, காளி, தாண்டவமூர்த்தி பதஞ்சலி, வியாக்கிரபாதர் மற்றும் திருமால் - குழல் ஊதும் கோபாலராக; குழலிசையில் மயங்கி நிற்கும் ஆநிரை. இவை களில் சில அற்புதமான புடைச்சிற்பங்கள்.

இவைகளைத் தொடர்ந்து பிள்ளையார்சுழி, சிவமயம் ஏகாம்பரநாதர் துணை, ஸ்ரீ ஆவுடையார் மாணிக்கவாசகர் என்ற சொற்கள். அடுத்து செப்பேட்டு வாசகத் தொடக்கமாக ''ஸ்வ ஸ்திஸ்ரீ'' என்ற மங்கலச் சொல், செப்பேட்டின் காலம், தமிழ் ஆண்டு, திங்கள், கிழமை, நட்சத்திரம் ஆகியவைகள், பின்னர் சேதுமன்னர்களது விருதாவளிகள், கொடை வழங்கிய மன்னர், கொடையினைப் பெற்றவர். பெயர், கொடையாக வழங்கப்பட்ட ஊர் அல்லது புரவு நான்கு எல்லைகளுடன். முடிவில் காப்புரை யாக சம்பந்தப்பட்ட தானதர்மத்தை செய்வதால் ஏற்படும் நன்மை கள்; அகிதம், நினைத்தால் விளையும் பாதகங்கள் மற்றும் முடிவில் இராமசுவாமி துணை, குருநமச்சிவாயம், இராமலிங்கம் துணை, இராமநாதன் துணை, இராமநாதசுவாமி சகாயம், வடமொழி சுலோகம் இவைகளில் ஏதாவது ஒரு தொடருடன் செப்பேடுகள் பெரும்பாலும் முடிவு பெற்றுள்ளன. பல செப்பேடு களில் இந்தத் தொடர் தெலுங்கில் வரையப்பெற்றுள்ளது.

கொடையல்லாத மற்ற தானங்களுக்கு அமைக்கப்பட்ட செப்பேடுகள் மேலே கண்ட நியதிகளில் சிறுசிறு மாற்றங்களுடன் காணப்படுகின்றன. பொதுவாக இவைகளின் சொற்றொடர். தமிழில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு சில செப்பேடுகளில் மட்டும் ஆங்காங்கு சமஸ்கிருதம், தெலுங்கு, கிரந்தம், நாகரி, மொழிச் சொற்களும், சொற்றொடர்களும் கையாளப்பட்டுள்ளன. செப் பேட்டின் நடுப்பகுதி அல்லது இறுதிப்பகுதியில் சேதுமன்னரது பெயர் காணப்படுகின்றது. திருமலை சேதுபதி, ரெகுநாத கிழவன் சேதுபதி, முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி ஆகியோர் களது கையெழுத்து தெலுங்கு எழுத்துக்களில் உள்ளன. இவை களில் திருமலை சேதுபதி மன்னரது தெலுங்குக் கையெழுத்து ஒரே மாதிரியாக இல்லை. ஸ்ரீ சுப்பிரமணிய திருமலைய சேதுபதி ரெகுநாதன், திருமலையதேவசேதுபதிரெகுநாதன், ஸ்ரீசுப்ரமணிய

திருமலைய இரண்ய கெற்பயாஜி சேதுபதி, ரெகுநாதன் என மாற்றமான தொடர்களில் உள்ளன. (செ. எண்கள் 14, 16 19, 20)

இந்தச் செப்பேடுகளின் காப்புரைகள் ஒரே மாதிரியாக வரையப்பட்டுள்ளன. உதாரணமாக,

*''இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணியவர் கோடி சிவலிங்க பிரதிட்டையும், கோடி பிரம்ம பிரதிட்டையும் பண்ணின சுகிர்தத்தையும், யாதாமொருவன் இந்த தர்மத்திற்கு அகிதம் நினைத்தால் சேதுவிலேயும் காசி யிலேயும், கோவதையும், பிர்ம்மகத்தியும் மாத்துருக மணமும் சிசுகத்தியும் பண்ணின பாவத்தை அடைவாராக''*

என்பன போன்ற தொடர்கள் பொறிக்கப்பட்டுள்ளன

சேதுபதிச் சீமையின் சிறுபான்மையினரான இஸ்லாமிய ருக்கு வழங்கிய செப்பேடுகளில் மட்டும் அவர்களது சமயநெறிக்கு ஏற்றவாறு காப்புரை மாற்றங்களுடன் வரையப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*''இந்த தன்மத்துக்கு தமிழன் ஆனாலும், நாலு வர்ணத்திலேயுள்ள பேர்களும், இஸ்லாமானவர்களும் பரிபாலனம் பண்ணின பேர்களும், கெங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும், மக்க, மதினத்திலேயும், புண்ணியத்தலங் களிலேயும்...''*

என்று தொடர்வது கி.பி. 1734ஆம் ஆண்டைச் சேர்ந்த செப்பேடு ஒன்று.

*''...யாதாமொரு இஸ்லாமானவர்களில் பரிபாலனம் பண்ணி விச்சவர்கள், கோடி அடிமை கொண்டு உருமை விட்ட பலனும் கோடி கச்சுச் செய்த பலனும் அடைவாராகவும், இந்த தன்மத்துக்கு விகாதம் பண்ணினவர்கள் மாதா, பிதா, ஒஸ்தாதை வதை பண்ணிவிச்சு மக்கத்துப்பள்ளியை இடித்த பாவத்தில் போவாராகவும்...''*

என்று இன்னொரு செப்பேட்டில் குறிப்பிட்டிருப்பது இஸ்லாமிய ரது அடிப்படைக் கொள்கைகளைச் சிறப்பாக இந்தச் சொற் றொடர்கள் மூலம் புலப்படுத்தி உள்ளனர்

இந்தக் காப்புரைகளை அடுத்து செப்பேட்டை வடித்தவர் பெயருடன் செப்பேட்டு வாசகம் நிறைவு பெற்றுள்ளது. இந்த வாசகங்களில் சிலவற்றை மன்னரது செயலரும், அட்டவணையும், பொக்கிஷமும் வரைந்து கொடுக்க அவைகளைஆசாரி.பத்தர், பண்டாரம், நாலங்கராயன் என்ற கலைஞர்கள் சிற்றுளி கொண்டு செப்புத் தகடுகளில் வடித்துள்ளனர். பெரும்பாலான வாசகங்களை ஓலைச் சுவடிகளில் பண்டிதர்கள் வரைந்து கொடுக்க அதனை செப்பேட்டு வரைவாளர்கள், வடித்துள்ளனர். இதன் காரணமாக செப்பேட்டின் சொற்றொடர்களில் சமஸ்கிருதச் சொற்களும், ஸ்லோகமும், கிரந்தமும், தமிழ்ச் சொற்களுடன் விரவி வந்துள்ளன. அவைகளில் போதுமான பயிற்சியில்லாத கலைஞர்கள் அவைகளைப் பொறித்திருப்பதால் பதிவு செய்யப் பட்ட எழுத்துக்களும், சொற்றொடர்களும், வரிசையாக அமையவில்லை. பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பேடுகள் இந்த வகையைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் செப்பேடு வரையும் கலை வளர்ந்திருப்பதை அந்தக் காலச் செப்பேடுகளின் தலைப்பும் வரை படங்களும், வாசகங்களும் துல்க்கமாகவும் வரிசையாகவும் பொறிக்கப்பட்டிருப்பதில் இருந்து தெரிய வருகிறது. இந்தக் கால கட்டத்தில் மிகுதியான எண்ணிக்கையில் செப்பேடுகள் வழங்கப்பட்டது இதற்குக் காரணமாக இருக்கலாம். இதுவரை இனம் கொள்ளப்பட்ட சேதுபதிகளது நானூறு செப்பேடுகளில் 278 செப்பேடுகள் இந்தக் காலத்துக்கு உரியனவாக உள்ளன.

இவைகளில் காலக்குறிப்பாக சாலிவாகன சகாப்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்றைய கிறித்தவ ஆண்டுக்கு எழுபத்தியெட்டு ஆண்டுகள் குறைவுடையது சக கணக்காகும். அதாவது சக ஆண்டு 1914 என்பது இன்றைய கிறித்தவ ஆண்டாகும். (1914+78=1992) இந்தச் சக ஆண்டுடன் அன்றைய தமிழ் ஆண்டு திங்கள், கிழமை, நட்சத்திரம், நேரம், ஆகியவைகளுடன் செப்பேடுகள் வரையப்பட்டுள்ளன. ஒரேயொரு செப்பேடில் மட்டும் (செ. எண் 34) கேரள நாட்டில் பயன்படுத்தப்படும் கொல்லம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. மேலும், ஐந்து செப்பேடுகளில் சக ஆண்டுக் கணக்கு சரியாகக் கணக்கிடப்படாமல் தவறான ஆண்டு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1) செ. எண். 30 – இந்தச் செப்பேட்டில் சகம் 1500 பிரபவ ஆண்டு ஆனி மாதம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பிரபவ ஆண்டிற்கு நேரான சகம் 1500 அல்ல. அத்துடன் இதனை வழங்கிய ரெகுநாத கிழவன் சேதுபதியின் ஆட்சிக்காலத்திற்கும் இந்தச் சகம் எண் பொருந்தி வரவில்லை. இந்த மன்னரது ஆட்சியில் வந்த பிரபவ ஆண்டு கி.பி. 1687 ஐச் சேர்ந்தது. ஆதலால் இந்தச் செப்பேட்டிற்குரிய சரியான காலம் சகம் 1609.

2) செ. எண். 58- இந்தச் செப்பேடு சிவகெங்கை பிரதானி தாண்டவராயபிள்ளை, தர்மமாக தேர்போகி கிராமத்தில் அளிக்கப்பட்ட நிலக்கொடை சம்பந்தப்பட்டது. இது சகம் 1648 பிரபவ ஆண்டு மகர மாதம் வழங்கப்பட்டதாக குறிக்கப்பட்டுள்ளது இந்த சக ஆண்டிற்குச் சரியான கிறித்தவ ஆண்டு கி.பி. 1726 ஆகும். ஆனால் இந்த ஆண்டில் சிவகங்கைச் சீமை என்ற ஒரு நாடோ அதன் பிரதானியாகத் தாண்டவராய பிள்ளையோ இல்லை யென்பது வரலாறு ஏனெனில் சிவகெங்கைச் சீமை கி.பி. 1730 ல் தான் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. ஆதலால் இந்தச் செப்பேடு வழங்கப்பட்ட பிரபவ ஆண்டுக்குச் சரியான சக ஆண்டு 1669. கிறித்தவ ஆண்டு கி.பி. 1747.

3) செ. எண். 35 - இந்தப் பட்டயம் திருப்புல்லாணி சுவாமி தெய்வச்சிலை பெருமாளுக்கு வழங்கப்பட்டதாகும். காலம் வெகுதான்ய - பங்குனி 15. இதில் குறிக்கப்பட்டுள்ள நாள் மட்டும் பஞ்சாங்கக் கணக்கிற்கு பொருந்திவரவில்லை.

4) செ. எண் : 43 - இந்தச் செப்பேடு சகம் 1651 சௌமிய ஆண்டு சித்திரை 16ந் தேதி சுக்லபட்ச சப்தமி சுக்ல வார அனுச நட்சத்திரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டிலும் மாதமும், தேதி, நட்சத்திரங்கள், பஞ்சாங்கக் கணக்கிற்குப் பொருத்தமாக இல்லை. சுக்லபட்ச சப்தமி கி.பி. 1729 ஆவணி மாதம் 19ந் தேதி புதன்கிழமை வருகின்றது.

5) செ. எண். 48 – இராம அய்யன் என்பவருக்கு சேரந்தை கிராமத்தை சர்வமானியமாக வழங்கிய இந்தச் செப்பேடு சகம் 1654 சயித்திர மீ" கிருஷ்ணபட்ச அமாவாசை திங்கட்கிழமை

வழங்கப்பட்டதாக குறிக்கப்பட்டுள்ளது. (17-4-1732). ஆனால் இந்த அமாவாசை வந்தநாள் வியாழக்கிழமை. திங்கட்கிழமை அல்ல. ஆதலால் நாள் சரியாக குறிப்பிடவில்லை.

*6) செ. எண். 54 - ஸ்ரீ ராமலிங்க குருக்கள் புத்திரன் மங்களேஸ்வர* குருக்களுக்கு வழங்கப்பட்ட இந்தச் செப்பேட்டிலும் குறிக்கப்பட்டுள்ள தமிழ்த் தேதி பஞ்சாங்கக் கணக்கிற்குபொருந்தி வரவில்லை.

பொதுவாக இந்தச் செப்பேடுகளில் முன்பகுதி மன்னரது விருதாவளிகளால் கணிசமான அளவிற்கு நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதேபோல செப்பேடுகளின் பின்பகுதியிலும் வழக்கமான ஓம்படைக் கிளவி இடம் பிடித்துக் கொண்டுள்ளது. ஆதலால் செப்பேட்டில் வரையப்படுகின்ற உரைநடைப்பகுதி சுருங்கிய அளவிற்குள்தான் அமைகின்றது. இந்தப்பகுதியில் தமிழ்ச் சொற்களுடன் சம்ஸ்கிருதம், தெலுங்கு, கிரந்தம் ஆகிய மொழிச் சொற்களும் தலை தூக்கி நிற்கின்றன. எனினும் இது தவிர்க்க முடியாத காலத்தின் கட்டாயம் எனக் கொள்ளுதல் வேண்டும்.

காரணம், இந்தச் செப்பேடுகள் வழங்கப்பட்ட கால நிலையில் சேதுநாட்டைச் சூழ்ந்துள்ள மதுரை தஞ்சைப் பகுதிகள் நாயக்க, மராத்திய மன்னர்களது பிடியில் இருந்து வந்தன. அவர்களால் ஊக்குவிக்கப்பட்ட தெலுங்கு, வடமொழி, தாக்கம், அடுத்துள்ள சேது நாட்டிலும் ஏற்படுவது இயல்பு. மக்களது பேச்சுத் தமிழில் இந்த மாற்று மொழிச் சொற்கள் புகுந்து அன்றாட வழக்கிலும் எழுத்திலும் இடம்பெற்றன. என்றாலும் சேதுபதி சீமைக்குரிய வட்டார வழக்குகள் இந்தச் செப்பேடுகளில் வழக்குப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக் காட்டாக

| | | |
|---|---|---|
| திருக்கோயில்கள் | — | காட்டுப்பிச்சர்கோயில், தாசரதிகோயில், ஏகாம்பரநாதர் கோயில், நம்புநாயகியம்மன் கோயில், குமரர் கோயில். |
| தெய்வத் திருமேனிகள் | — | தெய்வச்சிலை பெருமாள், தாண்டேசுவரர், அனுமேசுரர், மலைவளர்காதலியம்மன், வெள்ளை துர்க்கை, கருமேனியம்மன், வாள் அய்யனார், |

| | | |
|---|---|---|
| குடிமக்கள் பெயர் | — | வணங்காமுடி, வேல் வாங்கினான், தம்பிராமன், தம்பிநயினான். |
| குடிகள் | — | பள்ளு, பறை, இடை, குடி, பட்டுநூல் காரர், பனையேறி, சாணான், ஈழம் புஞ்சைக்காரர், சோனகர், செட்டி, வாணியர். |
| நிலங்கள் | — | காடுவெட்டிப் புஞ்சை, பஞ்சந்தாங்கி வயல், பொன்மாரி வயல், வணங்கா முடித் தோட்டம், பனங்கூடல், கள்ளி அடந்தல், கடைக்கொம்பு, பொருத்துக் கரை, ஊடுபாதை, தேரி, தொண்டாவி, ஓநாய் பொட்டல், நரிகுமிச்ச திடல். |

இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ள எண்பத்தொன்பது செப்பேடுகளில் அறுபத்து ஆறு நிலக்கொடை பற்றியவை. திருக் கோயில்கள், மடங்கள், அன்னசத்திரங்கள் மற்றும் தனியார்-களுக்கு வழங்கப்பட்டவைகள். இவைகளில் நாற்பத்திெட்டு செப்பேடுகள். நாற்பத்தெட்டு ஊர்கள் வழங்கியதையும், பதினோரு செப்பேடுகள் ஒருவருக்கு இரண்டு ஊர்களாக இருபத்திரண்டு ஊர்கள் வழங்கப்பட்டதையும், மூன்று செப்பேடுகள் மூவருக்கு மூன்று ஊர்களாக ஒன்பது ஊர்கள் வழங்கியதையும் இரண்டு செப்பேடுகள் இருவருக்கு ஐந்து ஊர்களாக பத்து ஊர்கள் வழங்கியதையும், ஒரு செப்பேடு ஒருவருக்கு ஆறு ஊர்கள் வழங் கியதையும், தெரிவிக்கின்றன- பிறிதொரு செப்பேட்டில் இருபத்து எட்டு ஊர்கள் திருப்புல்லாணி கோயிலுக்கு மட்டும் வழங்கப் பட்டுள்ளது. ஒரே ஒரு செப்பேட்டின் மூலம் (செ எண் 67) பத்து பேர்களுக்கு கூட்டாக ஒரே ஊரில் நிலக்கொடை வழங்கப் பட்டுள்ளது, இது இன்றைய நிர்வாகத்தில், வருவாய்ப் பதிவேடு களில் உள்ள கூட்டுப்பட்டா முறையை நினைவூட்டுவதாக உள்ளது. இங்ஙனம் தானமாக வழங்கப்பட்ட ஊர்களின் பட்டியல் இணைப்பு ''அ''வில் கொடுக்கப்பட்டுள்ளது,

சில செப்பேடுகளில் தானம் பெறுபவர்களது பெயர்கள் குறிப்பிடப்படாமல் வரையப்பட்டுள்ளன. இராமேசுவரம் பஞ்ச தேசத்து ஆரியர்களுக்கும் (செ எண் 2) காக்குடி கணபதியேந்தல் மகாஜனங்களுக்கு (செ. எண் 40) சின்ன நாட்டான், பெரிய

நாட்டான், கிராமத்து அசேச வித்வ மகாஜனங்களுக்குமாக (செ. எண் 62) மூன்று செப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைப் போன்றே இராமேசுவரம் அன்னதான மடம், திருப்பெருந்துறை மடம், திருவாவடுதுறை மடம் இராமநாதபுரம் பாலசுப்ரமணிய சுவாமி கோவில்' சுந்தரபாண்டிய பட்டணம் அக்கிரகாரம் ஆகியவைகளுக்கும் கொடையினைப் பெறுபவரது பெயர் குறிப்பிடப்படாமல் நிறுவனங்கள் பெயரால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்விதம் தானம் கொடுக்கப்பட்ட ஊர்களது அமைப்பு அதற்கான எல்லைகள் தெளிவாக இடம் பெற்றுள்ளன. இவைகள் அமைந்திருந்த முந்தைய நாட்டமைப்புகள் போன்ற செய்திகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஊர்களுக்கான பெருநான் கெல்லைகள் துலக்கமாக கொடுக்கப்பட்டுள்ள போதிலும், அன்றைய நிலையில் நிலங்கள் முழுவதும் அளவை செய்யப்பட்டு நிகுதி செய்யப்பட்ட நிலையில் இல்லை என்பதும் தெரிய வருகிறது. ''குலப்பிரமாணம்'' என்ற அளவை முறை மட்டும் அப்பொழுதிருந்ததால் நான்கெல்லைகளாக நஞ்சை, புஞ்சை, திட்டு திடல், தோப்பு, ஆறு, குளம் என்று மட்டும் குறிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் முந்தைய மன்னர்களும் அவர்களது அலுவலர்களும் மக்களது நன்மைக்காக அமைந்த ஆறு, கண்மாய் கால்கள், கோயில்கள், மடங்கள், பள்ளி வாசல்கள், சமணப் பள்ளிகள் ஆகியவைபற்றிய செய்திகளும் இந்த நான்கெல்லைகளிலிருந்து கிடைக்கின்றன, மேலும் குழிக்கல், குத்துக்கல் எல்லைக்கல். சக்கரக்கல் ஆகியவைகளையும், ஆலமரம், அரசமரம், புளியமரம், பழைய கோட்டை, அரண்மனை, மக்களது பயன்பாட்டிலிருந்த பெருவழிகள் ஆகியவைகளும் இந்த எல்லைகளாக இடம் பெற்றுள்ளன. இந்தப் பெருவழிகளில் (1) சேதுப் பாதை (2) இராமநாதபுரம் பாதை (3) உப்புப்பாதை (4) பண்ணந்தை பாதை (5) பனையூர் பாதை (6) புத்தூர் பாதை (7) தத்தங்குடி பாதை என்பன சில, இந்தச் செப்பேடுகள் குறிப்பிடப்படுகின்றன. எல்லையில் உள்ள ஊர்கள் இணைப்பு ''ஆ'' வில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் செப்பேடுகளை வழங்கியதில் சேதுபதி மன்னர்கள் சிறப்பான நான்கு மரபுகளைக் கையாண்டு வந்துள்ளனர். முதலாவதாக அந்த மன்னர்களது தலைமை இடமாகப் புகலூர், இராமேசுவரம், இராமநாதபுரம், ஆகிய நகர்கள் வெவ்வேறு

காலங்களில் வெவ்வேறு மன்னர்களது கோநகர்களாக அமைந் திருந்தன என்பது இராமநாதபுரம் சீமை வரலாறு. ஆனால் அவர்கள் வழங்கிய செப்பேடுகள் அனைத்திலும் ''துகவூர் கூத்தத்து குலோத்துங்க சோழநல்லூர்க் கீழ்பால் விரையாத கண்டனிலிருந்து'' வழங்குவதாகக் குறிப்பிட்டுத் தங்களது பூர் வீக ஊரின் நினைவைப் பெருமையுடன் போற்றி வந்திருப்பது.

*இரண்டாவது : கூத்தன் சேதுபதிக்கும்,* (கி.பி. 1622-33) அவரை அடுத்துச் சேதுமன்னர்களாகப் பட்டம் ஏற்றவர்களுக் கும் ஆண் வாரிசு இல்லையென்பது வரலாற்று உண்மை. என்றாலும் இவர்களது மிகப் பெரும்பாலோர் வழங்கிய செப் பேடுகளில் அவர்களது இயல்பான தந்தையின் பெயரைக் குறிப் பிடாமல் அவருக்கு முன்னர் சேதுபதியாக அரசோச்சிய மன்ன ரது புத்திரராகவே அவர்களைக் குறிப்பிட்டு வந்திருப்பது.

*மூன்றாவது :* பதினான்காவது நூற்றாண்டு முதல் தமிழ் மண்ணில் தொடர்ந்த அன்னியர் ஆட்சியினால் நமது தாய் மொழியாகிய தமிழுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டு தமிழ் மொழி யின் பெருமையும் பயிற்சியும், குன்றியிருந்தபொழுது தமிழைப் போற்றிப் புரந்த தமிழ் மன்னர்கள் சேதுபதிகள். அவர்களது ஆவணங்களான செப்பேடுகளில் குறிப்பாக, *திருமலை சேதுபதி, ரெகுநாத கிழவன் சேதுபதி, முத்துராமலிங்க சேதுபதி,* ஆகியோர் தங்களது கையொப்பத்தை தெலுங்கு மொழியில் எழுதி கைச்சாத் திட்டிருப்பது. திருமலை ரெகுநாத சேதுபதிக்கும் மதுரை மன்னர் திருமலை நாயக்கருக்கும் மிக நெருக்கமான நட்பும் தொடர்பும் இருந்தன. ஆதலால் அவர் தெலுங்கில் கையொப்ப மிட்டிருப்பதை ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் மதுரை யுடன் இருந்த உறவுகளை முற்றாக முறித்துக்கொண்டவர் ரெகுநாத கிழவன் சேதுபதி. இந்த மன்னருக்கு ஒரு நூற்றாண்டு காலம் பிந்தியவர் முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி. தமிழ்க்கடலான மீர் ஜவ்வாது புலவர் போன்ற பெரு மக்களை அரசவைக் கவிஞராகக்கொண்டிருந்தவர் இந்த மன்னர். ஆதலால் இவரும் இவரது முன்னவரும் தமிழ் மொழிச் செப்பேடு களில் தெலுங்கு மொழியில் ஒப்பமிட்டிருப்பது விடைகாண இயலாத விந்தையாக உள்ளது. வழிவழியாக வந்துள்ள ராமநாதபுரம் அரண்மனை மரபைத் தொடர்ந்து பேண வேண்டுமென்ற பேரவாவாக இருக்கலாம். எனக்கொள்வதைத் தவிர வேறு இல்லை.

தமிழ்நாடு அரசின் சென்னை ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள பதிவேடுகளில் மறவர் சீமையில் வழங்கப் பட்ட அறுநூற்றி ஐம்பத்தியேழு நிலக் கொடைகள் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. ஆனால் இவைகளைப் பற்றிய கூடுதலான விவரங்களைத் தெரிவிக்கக் கூடிய கையேடுகள் எதுவும் இல்லை. கி. பி. 1795-ல் மறவர் சீமையைக் கைப்பற்றி நேரடி நிர்வாகத்தைப் புகுத்திய கும்பினியார், அவர்களது தீர்வை யிலிருந்து விலக்கு அளிப்பதற்கான சர்வமானியக் கிராமங் களையும், கிராமப் பகுதிகளையும் கி. பி. 1811-ல் கணக்கெடுத் தனர். அதன் விளைவு இந்தப்பதிவேடுகள். இவைகளை வரையும் பொழுது, கணிசமான தொகையினை மொத்தத் தீர்வையி லிருந்து இழக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டதால் நில'க்கொடை பற்றிய பல ஆவணங்களை ஏற்றுக் கொள்ளாமல் மறுதளித்து உள்ளனர்.

குறிப்பாக, இராமநாதபுரம் கோட்டைக்கு வெளியே லெட்சுமிபுரத்தில் அமைந்துள்ள புனித குத்பு சாய்பு அவர்கள் தர்ஹாவிற்கு இராமநாதபுரம் சுங்கச் சாவடியிலிருந்து நாள் தோறும் ஒரு பணமும் வருடத் திருவிழாவிற்கு எட்டு கலம் அரிசி, இரண்டு கிடாயும் கொடுக்குமாறு சேதுபதி மன்னர் கி. பி. 1769-ல் உத்திரவிட்டதை ஏற்றுக் கொள்ளாமல், அந்த தர்மம் நடைபெற இயலாமல் செய்த விபரம் அரசு ஆவணங் களில் காணப்படுகின்றது.[1] இதனைப் போன்றே திருப்புவனம் மலுங்கு சாகிபு தர்ஹாவிற்கும் பார்த்திபனூர் தாடிப்பக்கீர் தர்ஹாவிற்கும் இதே அவலநிலை தான் ஏற்பட்டது.[2] காலப் போக்கில் இத்தகைய புனித இடங்கள் மறைந்து அழிவதற்கு அவர்கள் மறைமுகமாக செயல்பட்டனர் என்பது மிகையல்ல.

எனினும், ஆதாரப்பூர்வமாக வேறு ஆவணங்கள் இல்லாத நிலையில், மேலேகண்ட பதிவேட்டினை சேதுபதிகளது அறக் கொடைகளுக்குரிய மூல ஆதார ஆவணமாகக் கொள்ளவேண்டிய தாக உள்ளது. இந்தப்பதிவேட்டிலும் பல நிலக்கொடைகளைப் பற்றிய முழுமையான விவரங்கள் இல்லை. கீழ்க்கண்ட நானூறு நிலக்கொடைகளைப் பற்றிய விபரங்கள் மட்டும் கிடைத்துள்ளன.

1. Madurai District Records. Vol. 468C-A - 1833 AD. pp. 406
2. Madurai Dist. Records Vol. 1193/27-4-1815/pp 86-88

| மன்னர் பெயர் | கொடை எண்ணிக்கை |
|---|---|
| 1. உடையான் திருமலை சேதுபதி | 3 |
| 2. கூத்தன் சேதுபதி | 8 |
| 3. தளவாய் சடைக்கன் சேதுபதி | 7 |
| 4. ரெகுநாத திருமலை சேதுபதி | 71 |
| 5. ரெகுநாத கிழவன் சேதுபதி | 39 |
| 6. விஜயரெகுநாத சேதுபதி | 45 |
| 7. பவானி சங்கர சேதுபதி | 4 |
| 8. குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி | 35 |
| 9. சிவகுமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி | 30 |
| 10. செல்லமுத்து ரெகுநாத சேதுபதி | 22 |
| 11. முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி | 115 |
| 12. அரச வழியினர் :- | |
| 1. கிழவன் சேதுபதி மனைவிகாதலி நாச்சியார் | — 2 |
| 2. திருமலை ரெகுநாத சேதுபதி தமையனார் தனுக்காத்ததேவர் | — 14 |
| 3. விஜயரெகுநாத சேதுபதி சகோதரர் முத்து வயிரவனாத சேதுபதி மற்றும் முத்து ரெகுநாத சேதுபதி | — 5 |
| மொத்தம் | 400 |

இவை தவிர, இராமநாதபுரம் சமஸ்தான நிலமான்ய கணக்குப் பதிவேடு நூற்றுப்பதினான்கு அறக்கொடை பற்றிய விவரங்களைக் கொண்டுள்ளது. இவைகளில் முப்பத்தியேழு கொடைகளை வழங்கிய சேதுபதிகளது பெயர்கள் அறியத் தக்கதாக இல்லை. இருபத்து ஒரு நிலக்கொடைகளை சேதுபதிகள் அல்லாத சோழ, பாண்டிய, நாயக்க, மன்னர்கள் வழங்கியவை. மற்றும் ஐம்பத்து ஆறு அறக்கொடைகள் மட்டும் சேதுமன்னர்கள் வழங்கியவை.

மேலும், அரசாங்கக் கல்வெட்டு ஆய்வாளர் திரு. K.V. ரெங்காச்சார்யாவின் கல்வெட்டுப் பட்டியல் இருபத்தியெட்டு அறக்கொடைகளை வழங்கிய சேதுபதிகளைக் குறிப்பிடுகின்றது.

3. Rengacharya K V.–Topographical list of Inscriptions (1911) vol II.

இவைகளில் இருபத்துநான்கு செப்பேடுகளும், நான்கு கல்வெட்டுக்களும் அடங்கும். Dr. ஜேம்ஸ் பெர்ஜசும் பண்டித நடேச சாஸ்திரியும் இணைந்து தொகுத்து வெளியிட்ட தொகுப்பு நூலில்[4] சேதுபதிகளது பதினைந்து பட்டயங்களின் படிகளையும் புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்களின் தொகுதி,[5] சேதுபதிகளது நிலக்கொடை பற்றிய ஒன்பது கல்வெட்டுப் படிகளையும் தெரிவிக்கின்றன. செப்பேடுகளின் பட்டியல் என்ற அரசு அருங்காட்சியக வெளியிடு இந்த மன்னர்களது பதினாறு பட்டயங்களை பட்டியல் இட்டு உள்ளது. இவைகளில் பதின் மூன்று பட்டயங்கள் மட்டும் சேது மன்னர்களைச் சேர்ந்தவை.

இராமநாதபுரம் சமஸ்தான மேன்யுவல் இராமநாதபுரம் சீமையிலும் காசியிலும் உள்ள அன்னசத்திரங்கள், மடங்கள், தண்ணீர் பந்தல்கள், ஆகியவையின் பராமரிப்புக்காக சர்வமானியமாக வழங்கிய நாற்பத்தியொன்பது கிராமங்களின் பெயர்களைத் தெரிவிக்கின்றது. இவை தவிர சேதுபதி மன்னர்கள், திருக்கோயில்கள் வடமொழி, தென்மொழி வித்தகர்கள். கலைஞர்கள் அரசு அலுவலர்கள் ஆகியவர்களுக்கு இராமநாதபுரம் - வட்டத்தில் 193 ஊர்கள் முதுகுளத்தூர் வட்டத்தில் 227, ஊர்கள், கமுதி வட்டத்தில் 82 ஊர்கள், பள்ளிமடம் வட்டத்தில் 138 ஊர்கள், இராஜசிங்கமங்கலம் வட்டத்தில் 128 ஊர்கள், அனுமந்தக்குடி வட்டத்தில் 163 ஊர்கள் என மொத்தம் 933 ஊர்களை சர்வ மானியமாக வழங்கியுள்ளனர்[6]. இந்த ஊர்களின் மொத்த எண்ணிக்கை அன்றைய இராமநாதபுரம் அரசுப் பகுதியாக இருந்த மொத்தம் 2160 ஊர்களில் சரிபாதியாகும். நமது நாட்டு வரலாற்றில் ஒப்புவமை காணமுடியாத சாதனை வள்ளல் பாரி தனது பறம்பு நாட்டின் முன்னூறு ஊர்களையும் தம்மை நாடி வந்த நல்லிசை புலவருக்கும், இரவலருக்கும் வழங்கினான் என்பது இலக்கியச் செய்தி. ஆனால் இந்த மறவர்சீமை மன்னர்கள் வழங்கியுள்ள ஊர்கள் ஆயிரத்து எண்பத்து இரண்டு. ஆனால் இந்த அறக்கொடைகள் அனைத்தையும் தெரிவிக்கக்கூடிய

4. A.S.S.I. vol. IV (1886)
5. Pudukottai State Inscriptions (1928)
6. Rajaram Rao T. Manual of Ramnad. Samasthanam (1891) pp. 15, 156. 174. 178, 182, 190, 194.

ஆவணங்கள் இல்லை. கிடைத்துள்ள பதிவேடுகள் வழி அறியத் தக்க சேது மன்னர்கள் அறக்கொடைகள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பகப் பதிவேடு | ... | 400 |
| 2. | சென்னை அரசு அருங்காட்சியப் பட்டியல் | ... | 13 |
| 3. | இராமநாதபுரம் சமஸ்தான நிலமானியப் பதிவேடு | ... | 58 |
| 4. | ரெங்காச்சார்யாவின் கல்வெட்டுப் பட்டியல் | ... | 31 |
| 5. | இந்திய அரசு அகழ்வுத் துறைத் தொகுப்பு | ... | 15 |
| 6. | புதுக்கோட்டைச் சீமைக் கல்வெட்டுத் தொகுப்பு | ... | 9 |
| 7. | புதுக்கோட்டைச் சீமை வரலாறு | ... | 1 |
| 8. | இராமநாதபுரம் சமஸ்தான மேன்யுவல் | ... | 49 |
| 9. | சேதுமன்னர் கல்வெட்டுக்கள் | ... | 8 |
| 10. | சேதுமன்னர் ஓலைப்பட்டயங்கள் | ... | 10 |
| | மொத்தம் | ... | 594 |

ஆனால் இந்த 594 அறக்கொடைகளை முழுமையாக தொகுத்து வெளியிடக்கூடிய வாய்ப்பு நமக்குக் கிட்டவில்லை. அவைகளுக்கான மூல பட்டயங்களும் கிடைக்கவில்லை. டாக்டர். பர்ஜசும் பண்டித நடேச சாஸ்திரியும் இந்த அறக்கொடைகளில் 15 பட்டயங்களை முழுமையாக வெளியிட்டுள்ளனர்[7]. இதற்குப் பின்னர் சரியாக 86 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த 1975-ல் நடைபெற்ற இராமேஸ்வரம் திருக்கோயில் குடமுழுக்கு விழா வினையொட்டி மிகுந்த பிழையுடன் முப்பத்து ஒன்று பட்டயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவைகளில் இருபத்துஆறு மட்டும் சேது மன்னர்கள் வழங்கியவை. மூன்று பட்டயங்கள் நிறைவு பெறாத சிதைந்து போன செப்பேடுகள். மூன்று பட்டயங்கள் இந்திய அரசுத் துறையின் அகழ்வுத் துறைத் தொகுதியில் இடம் பெற்றவை. இவை நீங்கலாக குடமுழுக்கு விழா மடலில் காணப்படும் இருபது பட்டயங்களுடன், கடந்த பல ஆண்டுகளாக சொந்த முயற்சியில் சேகரிக்கப்பட்டவை 49 இவைகளில் ஐந்து முழுமையாக இல்லை. எஞ்சியுள்ளவைகளையும் ஒன்றாகத் தொகுத்து மொத்தம் எண்பத்து ஒன்பது பட்டயங்களின் தொகுப்பாக இந்த நூல் அமைக்கப்பட்டுள்ளது.

7. Asst Vol. IV (1886) pp. 68-104

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்களுக்கு | — 38 |
| 2. | சமணத்திருக்கோயிலுக்கு | — 1 |
| 3. | இஸ்லாமிய பள்ளிவாசல்களுக்கு | — 3 |
| 4. | கிறிஸ்தவ தேவாலயத்திற்கு | — 1 |
| 5. | திருமடங்களுக்கு | — 8 |
| 6. | சத்திரங்களுக்கு | — 4 |
| 7. | அக்கிரஹாரங்களுக்கு | — 5 |
| 8. | தனியார்களுக்கு | — 13 |
| 9. | காணியாட்சி | — 6 |
| 10. | இசைவு முறிகள் | — 5 |
| 11. | மன்னரது ஆணைகள் | — 3 |
| 12. | தீர்ப்புரை | — 1 |
| 13. | பரிந்துரை | — 1 |
| | மொத்தம் | — 89 |

இவைகளை வழங்கிய சேதுமன்னர்கள்: அவர்தம் வழியினர் அவரது அலுவலர்கள், மற்றும் அவர்கள் ஆட்சிக்காலத்தியவை என அவைகளை கீழ்க்கண்டவாறு பகுத்துக் கொள்ளலாம்.

அ சேதுமன்னர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | சடைக்கன் சேதுபதி | ... 3 |
| 2. | கூத்தன் சேதுபதி | ... 6 |
| 3. | திருமலை ரெகுநாத சேதுபதி | ... 15 |
| 4. | கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி | ... 11 |
| 5. | விஜயரெகுநாத சேதுபதி | ... 9 |
| 6. | குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி | ... 8 |
| 7. | சிவகுமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி | ... 6 |
| 8. | செல்லமுத்து விஜயரெகுநாத சேதுபதி | ... 2 |
| 9. | முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி | ... 18 |
| | | 78 |

ஆ. அரச வழியினர் :

| | | |
|---|---|---|
| 1. | ரெகுநாத கிழவன் சேதுபதியின் மனைவி காதலி நாச்சியார் | ... 2 |
| 2. | முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் தமையன் முத்து வைரவநாத சேதுபதி | ... 1 |
| 3. | டியார் தம்பி முத்துரெகுநாத சேதுபதி | ... 2 |
| 4. | முத்து விஜயரெகுநாத சேதுபதி மருமகன் தனுக்கோடித்தேவர் | ... 1 |
| | | 6 |

இ. அரசு அலுவலர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | பாண்டியூர் பெருமாள் சேர்வைக்காரன் | ... 1 |
| ஈ. | சேதுமன்னர் ஆட்சிக்காலத்தியவை | ... 4 |
| | | 5 |
| | ஆக மொத்தம் | 89 |

இதுவரை தமிழக வரலாற்றுக்குக் கிடைத்துள்ள செப்பேடுகளில் பல்லவர் காலத்துப் பள்ளன் கோயில், கூரம் செப்பேடுகள்; சோழர்களது ஆனைமங்கலம், ஆலங்காடு, கரந்தைச் செப்பேடுகள்; பாண்டியர்களது சின்னமனூர், தளவாய்புரம் செப்பேடுகள்; ஆகியவை தமிழக வரலாற்றுக்குப் பலவற்றாலும் பயனுள்ளவையாகக் கருதப்படுகின்றன. அவைகளைப் போன்றே, மறவர் சீமையின் மகுடபதிகளான சேதுமன்னர்களது இந்தச் செப்பேடுகளும் கி.பி. 1607க்கும் கி.பி. 1809க்கும் இடைப்பட்ட இரண்டு நூற்றாண்டுகாலச் செய்திகளை வழங்குகின்ற அரிய வரலாற்று ஏடுகள் என குறிப்பிடத் தேவையில்லை.

இந்தச் செப்பேடுகள் வழங்கிய மன்னர் பெயருடன் இனம் வாரியாக விவரங்கள் வருமாறு :

| மன்னர் | திருக்கோயில் | சமணக் கோயில் | பள்ளி வாசல் | தேவாலயம் | மடம் | சத்திரம் | அக்கிரகாரம் | தனியார் | பிற வகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. சடைக்கண் சேதுபதி | 2 | ... | ... | ... | ... | ... | ... | 1 | ... | 3 |
| 2. கூத்தன் சேதுபதி | 3 | ... | ... | ... | ... | ... | ... | ... | 3 | 6 |
| 3. திருமலை சேபதி | 9 | ... | ... | ... | 1 | ... | ... | 4 | 1 | 15 |
| 4. கிழவன் சேதுபதி | 5 | ... | ... | ... | 1 | 1 | 1 | 3 | ... | 12 |
| 5. முத்துவிஜயன் சேதுபதி | 6 | ... | ... | ... | ... | ... | 1 | 2 | ... | 9 |
| 6. குமாரமுத்து சேதுபதி | 3 | ... | 1 | ... | 2 | ... | 1 | 1 | ... | 8 |
| 7. முத்துக்குமார சேதுபதி | 1 | ... | 2 | ... | ... | ... | 1 | 2 | ... | 6 |
| 8. செல்லமுத்து சேதுபதி | 1 | ... | ... | ... | 1 | ... | ... | ... | ... | 2 |
| 9. முத்துராமலிங்க சேதுபதி | 3 | 1 | ... | 1 | 2 | 2 | ... | 8 | 1 | 18 |
| 10. அரசவழியினர் | 3 | ... | ... | ... | 1 | 1 | 1 | ... | ... | 6 |
| 11. அரசு அலுவலர்கள் | 1 | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | 1 |
| 13. மற்றவர்கள். | 1 | ... | ... | ... | ... | ... | ... | ... | 3 | 4 |
| மொத்தம் | 38 | 1 | 3 | 1 | 8 | 4 | 5 | 21 | 8 | 89 |

# 3

# சேதுநாட்டு சிறப்புச் செய்திகள்

பாண்டியப் பேரரசு, சோழ பாண்டியரது ஆதிக்கம், பிற்கால பாண்டிய அரசு, மதுரை சுல்தான்களது ஆட்சி, விஜய நகரப் பேரரசின் பிடிப்பு, மதுரை நாயக்கர்கள் ஆட்சி, என்ற பகுப்புகளில் கி.பி. 1736-ம் ஆண்டுடன் தமிழக வரலாறு முடிவுறுகிறது. இந்த காலக் கட்டத்தில் வரலாற்றுக்குத் தெரிந்தும் தெரியாமலும் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து வந்த ஒரே ஒரு தன்னரசு, மறவர் சீமையின் அரசு ஆகும். இவர்களது நல்லாட்சியினால் கிழக்கு இராமநாதபுரமாகிய மறவர் சீமை தொன்மைச் சிறப்பையும் வரலாற்றுப் பெருமையினையும் எய்தியது. பெருமை மிக்க தமிழ்ப்பாரம்பரியத்தின் வீர உணர்விற்கும் அறப்பணிகளுக்கு வரையாது வழங்கும் கொடைப்பண்பிற்கும், எடுத்துக்காட்டாக விளங்கிய தமிழ் மன்னர்கள் சேதுபதிகள் என்பதை பதினேழு, பதினெட்டாவது நூற்றாண்டு தமிழக வரலாறு உறுதிப்படுத்துகின்றது.

நாயக்க மன்னர்களில், மிக நீண்ட கால ஆட்சியின் மூலம் பெருமையும் புகழும் பெற்றவர் மதுரை மன்னர் திருமலை நாயக்கர் ஆவர். அவரது ஆட்சியில் (கி.பி. 1658-ல்) மதுரைச்

சீமை மீது மைசூர் படையெடுப்பு தொடங்கியது. பல அக்கிரமங்களைப் புரிந்து முன்னேறி வந்த இந்தப்படைகளை தடுத்து நிறுத்த இயலாத நிலை. மதுரைப் படைகளைத்திரட்டி தலைமை தாங்கிச் செல்ல முடியாமல் திருமலை மன்னர் நோயுற்றிருந்தார். இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தமது எழுபத்திரண்டு பாளையக்காரர்களது படைகளை தளவாய் ராமப்பையன் தலைமையில் மறவர் சீமைக்குள் அனுப்பி சேதுநாட்டை சிதைத்துச் சீரழித்த அதே திருமலை மன்னர், வேறு வழி இல்லாமல் சேதுபதி மன்னருக்கு ஓலை அனுப்பி வைத்தார் உதவி கோரி.

கடந்ததை மறந்து ரெகுநாத திருமலை சேதுபதி மன்னர், பதினைந்தாயிரம் மறவர் அணியுடன் மதுரையைக் காக்க விரைந்தார். மைசூர் படைகளை திண்டுக்கல் அருகே பொருதி துவம்சம் செய்தார். எஞ்சி ஓடிய மைசூர் படைகளையும் அவர்களது நாட்டின் எல்லைக்குள் துரத்தி அடித்து திருமலை நாயக்கரது புகழுக்கு பெருமை சேர்த்தார்.

இன்னொரு நிகழ்ச்சி கி.பி. 1680-ல் நிகழ்ந்தது. திருச்சிக் கோட்டையின் தளபதியான ருஸதம்கான் திடீரென நாயக்க மன்னர் சொக்கநாதரை சிறைப்படுத்தி திருச்சிக் கோட்டைக்குள் அடைத்து வைத்திருந்தான். இதனைக் கேள்வியுற்ற கிழவன் ரெகுநாத சேதுபதி கன்னிவாடி பாளையக்காரருடன் திருச்சிக்குச் சென்று தந்திரமாக ருஸ்தம்கானைக் கொன்று, நாயக்க மன்னரை சிறை மீட்டி உதவினார்.

மற்றுமொரு வரலாற்று ஏடு.கி.பி- 1736ல் மதுரை நாயக்க வழியினரின் கடைசி அரசியான ராணி மீனாட்சி வாரிசு இல்லாமல் இறந்தார். அவரது வளர்ப்பு மகனான விஜயகுமாரன் ஆட்சியை மேற்கொள்ள இயலாதவாறு பாண்டிய நாடு முழுவதும் பெரும் குழப்பம் நிலவியது. விஜயகுமாரனின் தந்தை பங்காரு, திருமலை, மதுரை அரசைக் கைப்பற்றுவதற்கு ஓர் அணியாகவும், ஆற்காட்டு நவாபும், மராத்தியரும் மற்றொரு அணியாகவும் முயன்ற இக்கட்டான நிலை. என்றாலும் மதுரையில் தொடர்ந்து பரம்பரை மன்னராட்சி ஏற்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் சேதுபதி மன்னர் தமது தளவாயான வெள்ளையன் சேர்வையை மதுரைக்கு அனுப்பி வைத்தார்.

மதுரைக் கோட்டையை ஆக்கிரமித்து இருந்த மைசூர் மன்னர் பிரதிநிதியான தளபதி கோப்பை போரிட்டுத் தோற்கடித்து ராணி மீனாட்சியின் வளர்ப்பு மகன் விஜயகுமாரனை மதுரை மன்னராக (கி. பி. 1751-ல்) முடி சூட்டித் திரும்பினார் அந்த தளபதி. அன்றைய நிலையில் யாரும் நினைத்துப் பார்க்க முடியாத அரிய சாதனை அது!.

இவ்விதம் தமிழகத்தின் இதயமாக விளங்கிய மதுரை அரசியலுக்கு ஆபத்து வரும் பொழுது எல்லாம் விரைந்தோடி தீர்வுகாண உதவியவர்கள் ஆபத்து உதவிகள் சேதுமன்னர்கள். செயற்கரிய சாதனைகளைச் செய்து பெருமை சேர்த்த வரலாற்று நாயகர்கள். இந்திய நாட்டவர் அனைவரும் ஏற்றிப்போற்றும் இராமேசுவரம் திருத்தலத்தின் பாதுகாவலர் என்ற முறையிலும், மதுரை மன்னர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் காலந்தொட்டு தமிழகத்தின் எழுபத்திரண்டு பாளையக்காரர்களின் தலைவர்-தளவாய் - என்ற வகையிலும் அவர்களுக்கு ஆன்மீக லெளகீக சமுதாயத்தில் பெரும் ஆதரவும் மதிப்பும் இருந்து வந்தன.[1]

இந்தக் காரணங்களினால் சேதுபதிகளுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அன்னிய ஆதிக்கங்களும் மோதுவதற்குமுனையவில்லை.[2] மாறாக, டச்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் தங்களது வணிக நலன்களுக்குத் தேவையான சலுகைகளை சேதுபதிகளிடம் இருந்து பெறுவதற்கு முயன்று வந்தனர். நாளடைவில் பொறாமை கொண்ட அண்டை அரசுகளான தஞ்சை மராத்தியரும். மதுரை நாயக்க மன்னர் சிலரும் மிகப் பெரிய தோல்விகளை மறவர் சீமை மண்ணில் சந்தித்தனர். தமிழகம் முழுவதற்கும் நவாபாக கி. பி. 1741-ல் நியமனம் பெற்ற வாலாஜா முகம்மதலி நெல்லைச் சீமை பாளையக்காரர்கள் அனைவரையும் அடக்கி ஒடுக்கிய பின்னர்தான் மறவர் சீமை மீது 1772-ல் படை தொடுத்தார்.[3] அதுவும் வெள்ளைக் கும்பினியாரது கூலிப்படைகளின் பக்கபலத்துடன்.

1. கமால் Dr, S. M. விடுதலைப் போரில் சேதுபதிமன்னர் (1987) பக்கம். 43.
2. Revenue Consultations. Vol. 50. A. (1793) pp. 539-56
3. Military Consultations. Vol. 42. 8—6—1772 p. 488.

இந்த மன்னர் பரம்பரையினரின் ஆட்சியினை தெரிந்து கொள்ளதக்க மூல ஆவணங்கள் இன்று இல்லை. அவைகளை பேணிப்பாதுகாக்கும் பொறுப்புள்ளவர்களின் தவறினால் காலம் அவைகளை விழுங்கி விட்டது. எஞ்சியவைகளும் அரசு ஆவணக் காப்பகங்களில் அடைபட்டுக் கிடக்கின்றன. இந்நிலையில் சேதுபதிகளைப் பற்றிய சரியான வரலாறு இதுவரை எழுதப்பட இல்லை. இவர்களைப் பற்றிய வரலாற்றினைக் குறிப்பாக 1868-ல் அலெக்ஸாண்டர் நெல்சனும், கி. பி. 1891-ல் சற்று விரிவாக ராஜாராம்ராவும் தொகுத்து வெளியிட்டனர் பிற்காலத் தில்இந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு, கி. பி. 1935-ல் பி. நடராசனும் கி. பி. 1976-ல் சேஷாத்திரியும் வரைந்த ஆய்வுரைகளிலும் 1959-ல் திருவேங்கடாச்சாரி எழுதிய நூலிலும் மிகவும் குறைவு பிற்காலத் தமிழக வரலாற்றலுக்கு இன்றியமையாத இந்த மன்னர்களது வரலாறும் கலை இலக்கிய சமுதாயப் பணிகளிலும் என்றெனினும் நினைவு கூறத்தக்கது. இவர்களைப் பற்றிய வரலாற்றுத் தடங்களில் ஒன்றான இவர் களது செப்பேடுகளில் புதிய செய்திகள் பொதிந்துள்ளன.

*வாரிசு இல்லாத மன்னர்கள்*

இந்த மன்னர்களது ஆட்சி பாரம்பரிய முறையைச் சேர்ந்தது. என்றாலும், இந்த மன்னர்களில் பெரும்பாலானவர் களுக்கு ஆண் வாரிசு இல்லை ஒரு மன்னரது மறைவிற்குப்பிறகு மறைந்த மன்னரது நெருங்கிய உறவினர் சேதுபதியாக முடி சூட்டிக்கொண்டார். கி.பி. 1604-ல் பட்டத்திற்கு வந்த உடை யான் சடைக்கத்தேவன் கி.பி. 1622-ல் மரணமடைந்த பொழுது அவரது மகன் கூத்தன் சேதுபதி மன்னரானார். அவர் ஆண் வாரிசு இல்லாமல் கி.பி. 1635-ல் இயற்கை எய்திய பொழுது, மறைந்த மன்னரது இளவல் சடைக்கன் இரண்டாவது சடைக் கண் சேதுபதி என வழங்கப்பட்டார். இவர், கி.பி. 1646-ல் இறந்த பொழுது, இவருக்கும் ஆண் வாரிசு இல்லாததால், மன்னரது உறவினர் திருமலை ரகுநாத சேதுபதி என பட்டம் சூட்டிக்கொண்டார்.

இந்த மன்னருக்கும் இதே நிலை ஏற்பட்டதால், இவரது மறைவின் பொழுது (கி.பி. 1678-ல்) அடுத்த உறவினர் கிழவன் என்பவர் ரெகுநாத கிழவன் சேதுபதி ஆனார். இந்த மன்னரது

மகன் அகால மரணமடைந்ததால், இவரது மறைவையொட்டி இவரது மருமகன் திருவுடையாத்தேவர் கி.பி. 1710-ல் முத்து விசைய ரகுநாத சேதுபதி ஆனார். இவருக்கு ஆண் வாரிசு இல்லாததினால் கட்டையத்தேவர், கி.பி. 1729-ல் குமார முத்து விசைய ரகுநாத சேதுபதி மன்னரானார். தொடர்ந்து சிவகுமார முத்து விசைய ரகுநாத சேதுபதி ஆகிய அனைத்து சேது மன்னர்களுக்கும் ஆண்வாரிசு இல்லையென்ற வரலாற்று உண்மை வியப்பைத் தருவதாக உள்ளது. (பார்க்க : செப்பேடுகள் எண். 15, 24, 31, 38, 43, சேதுபதிகளது செப்பேட்டுத் தொடர்களுடன் அவர்களது கீழே கொடுக்கப்பட்டுள்ள கொடி வழிப்பட்டியலை ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

ஆட்சிக்காலம்

இந்தநூலில் தொகுக்கப்பட்டுள்ள அந்த மன்னர்களது செப்பேடுகளில் இருந்து சில முக்கியமான உண்மைகள் வெளி வந்துள்ளன. குறிப்பாக மறவர் சீமையில் கி.பி. 1604-முதல் கி.பி. 1795 வரை தன்னாட்சி செய்த பதினாறு மன்னர்களில் கடைசி மன்னரான முத்துராமலிங்க சேதுபதியின் மகள் சிவகாமி நாச்சியார் தொடுத்த வழக்கின் ஆதாரங்களைக் கொண்டு சேது மன்னர்களது கொடிவழியினை திரு. ராஜாராம் ராவ் இராமநாத புரம் மானுவலில் வரைந்துள்ளார். கி.பி. 1891ல் வரையப்பட்ட இந்த நூலை ஆதாரமாகக் கொண்டு இராமநாதபுரம் பற்றிய வரலாறு பல வரையப்பட்டு உள்ளன. இரண்டாவது சேதுபதி மன்னராக ஆட்சி செய்து கி.பி. 1635-ல் இயற்கை எய்திய கூத்தன் சேதுபதிக்கு ஆண் வாரிசு இல்லை அவரது காமக் கிழத்தியின் மகன் தம்பி என்ற பெத்தண்ணா சேதுபதி பட்டத் திற்கு உரிமை கொண்டாடினார். அரச குடும்பத்தினர் அவரது விருப்பத்தை ஏற்காததால் அப்பொழுது மதுரை மன்னராக இருந்த திருமலை நாயக்கரது தலையீட்டை அவர் கோரினார்.

கூத்தன் சேதுபதிக்குப் பின்னர் மன்னராக்கப் பட்டமேறிய இரண்டாவது சடைக்கன் சேதுபதி மதுரை நாயக்கரது சமரச முயற்சியை சேதுநாட்டை பாகப்பிரிவினை செய்யும் திட்டத்தை ஏற்க மறுத்தார். என்றாலும், இந்த மன்னரும் கி.பி. 1645-ல் வாரிசு இல்லாமல் இறந்த பொழுது மீண்டும் தம்பியின் கோரிக்கை எழுந்தது. திருமலை நாயக்கரது தீர்ப்பை ஏற்று

கி.பி. 1649-ல் காளையார் கோவில் பகுதியைத் தம்பியும், திருவாடானைப் பகுதியை அவரது இளவல் தனுக்காத்ததேவர் என்ற தணக்கத்தேவரும், இராமநாதபுரம் பகுதியை ரெகுநாத திருமலையும் ஆட்சி செய்தனர். அடுத்தடுத்து தம்பியும், தனுக்காத்ததேவரும் இறந்து விட்டதால் ஒருங்கிணைந்த மறவர் சீமையின் மன்னராக திருமலை ரெகுநாத சேதுபதி விளங்கினார் என்பது இராமநாதபுரம் வரலாறு தெரிவிக்கும் செய்தி. ஆனால் தனுக்காத்தத்தேவர் கி.பி. 1650 முதல் கி.பி. 1673 வரை திருவாடானைப் பகுதியில் திருக்கோயில்களுக்கும், தனியார்களுக்கும், பதினைந்து நிலக்கொடைகள் வழங்கியதற்கான பதிவுகள் ஆவணங்களில் உள்ளன[4]. இவைகளிலிருந்து இதுவரை இராமநாதபுரம் சீமை வரலாறு எழுதியுள்ள ஆசிரியர்களது ஊகங்கள் உண்மையல்ல என்பதை அந்த ஆவணங்கள் நிருபிக்கின்றன.[5]

இதனைப் போன்றே ரெகுநாத திருமலை சேதுபதியின் மறைவு பற்றிய செய்தியும் அமைந்துள்ளது. இந்த மன்னர் பரிதாபி ஆண்டு ஆனி மாதம் இயற்கை எய்தியாக (அதாவது கி.பி, 1672ல்) இராமநாதபுரம் மானுவல் தெரிவிக்கின்றது,[6] மதுரை தமிழ்ச்சங்க இதழான ''செந்தமிழின்'' கட்டுரை ஒன்றில் இந்த மன்னர் திருப்புல்லாணி பெருமாள் கோயிலின் தேர்த்திருவிழாவினைக்கண்டு களித்த நிலையில் மரணமடைந்ததாகக் குறிப்பிடுகிறது. (இந்த தேர்த்திருவிழா ஒவ்வொரு ஆண்டும் பங்குனித் திங்களில் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகிறது.)

இந்த மன்னர் திருப்பெருந்துறை திருக்கோயிலின் உச்சிக் காலக் கட்டளைக்கு சர்வமானியமாக சிறுகானூர், பூதகுடி கிராமங்களை சக சகாப்தம் 1598 நள ஆண்டு மார்கழியிலும் (கி.பி. 1676) பில்லுகுடிவை சகம் 1600 - பிங்கல-தை மீலும்

4. O S. No. 3/1913 of Provincial court. madras.
5. Boards Misc. Regiter No. 6.
Archives of Tamilnadu Madras.
6. Rajaram Rao T. – Manual of Ramnad Samasthanam (1891) p. 225
7. செந்தமிழ் - மதுரை தமிழ்ச்சங்கம் - தொகுதி 6 பக்கம் 44/46

(கி.பி. 1678) வழங்கியதற்கான செப்பேடுகள் (செப்பேடு எண். 23, 24) உள்ளன. ''இரண்ய கர்பத்தனாய திருமலை சேதுபதி'' அந்த நிலக்கொடையை வழங்கியதை அந்தச் செப்பேடு குறிப்பிடுகிறது. சேதுபதிகளில் கிரண்ணிய கர்ப்ப வேள்வியை இயற்றியவர் இந்த மன்னர் ஒருவர் தான். ஆதலால் இந்தச் சிறப்பு விருதுடன் கூடிய முதல் சேதுபதி, திருமலை சேதுபதி மன்னர் மட்டும் இதற்கு அடுத்த செப்பேடு ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னரால் சக சகாப்தம் 1600 காளயுத்தி ஆண்டு வைகாசியில் (கி பி, 1678) வழங்கப்பட்டது ஆகும். இவைகளிலிருந்து திருமலை ரெகுநாத சேதுபதியின் இறப்பு கி.பி. 1678ல் நள ஆண்டு பங்குனியில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதியான உண்மையாகும். ஆதலால் ராஜாராம் ராவ், டாக்டர் சேஷாத்திரி ஆகியோர் இந்த மன்னரது மரணம் ஏற்பட்டது. முறையே கி.பி. 1672லும் கி. பி. 1670லும் எனக் குறிப்பிட்டிருப்பதும் பொருத்தமானது அல்ல என்பது புலனாகின்றது.[8]

மேலும், முத்துவிஜய ரகுநாத சேதுபதியின் ஆட்சி முடிவுற்றது. கி.பி. 1720 என டாக்டர் சேஷாத்திரியும் கி.பி. 1725-ல் என இராமநாதபுரம் மானுவலும் கி. பி. 1726ல் என ஆசிரியர் திருவேங்கடாச்சாரியரும் வரைந்துள்ளனர்.[9] ஆனால் நமக்குக் கிடைத்துள்ள செப்பேட்டின்படி (செப்பேடு எண். 43) அந்த மன்னர் கி. பி. 1729 (சவுமிய ஆண்டு மார்கழி) வரை ஆட்சி புரிந்துள்ளார் என்ற உண்மை தெரிய வருகிறது. முத்துவிஜய ரகுநாத சேதுபதிக்கு வாரிசு இல்லாத காரணத்தால், இராமநாதபுரத்தில் அவர் இறந்தவுடன் மறவர் சீமையில் நிலையான அரசு உடனே ஏற்படவில்லை என்றும் தெரிகிறது. இடைப்பட்ட குறுகிய காலத்தில் மறைந்த மன்னரது தம்பி முத்துவடுகநாதர் என்ற முத்துரகுநாதர் சேதுபதியாக இருந்து வந்துள்ளார் என்பதை அவர் கி. பி. 1730-ல் (சவுமிய ஆண்டு தை மீ")

8. Rajaram Rao -T. Manual of Ram - Samasthanam] (1891) p.
9. Seshadri Dr. K. Sethupathis of Ramnad unpublished Thesis) (1972)
10. Setharali Dr. K. Sethupathi of Ramnad (1972) Rajaram Rao. T- manual of Ramnad Samasthanams (1891) p. 235 Thiruvankatachari. S, Sethupathis of Ramnad (1959) p. 48

திருப்புல்லாணி திருக்கோயிலுக்கு வழங்கிய இரண்டு சர்வ மானியப் பட்டயங்களில் இருந்து (செப்பேடு எண். 58, 59) தெரிகிறது. இந்தச் செய்திகள் இதுவரை எந்த வரலாற்று ஆசிரியராலும் வெளிப்படுத்தபடவில்லை. தமிழக வரலாற்றிற்கு இவை புதியனவாகும். சிவகாமி நாச்சியார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சேதுபதிகளது கொடி வழியுடன் இதனை ஒப்பு நோக்கினால் கூத்தன் சேதுபதி தொடங்கி இராமநாதபுரம் அரியணையேறிய அனைத்து மன்னர்களுக்கும் நேர்வாரிசு இல்லை என்பது வியப்பளிக்கும் உண்மை விளங்கும்.

*சேதுபதி சீமை*

இராமநாதபுரம் சேதுபதிகளது சீமை, மறவர் சீமையை மட்டும் கொண்டதாக இல்லாமல் வடக்கிலும் வடகிழக்கிலும் சோழ மண்டலத்திற்குள்ளும் விரிந்து இருந்தது, இந்த உண்மையை, ரெகுநாத திருமலை சேதுபதி, ரெகுநாத கிழவன் சேதுபதி, முத்துவிசைய ரெகுநாத சேதுபதி மன்னர்கள், திருவாவடுதுறை ஆதின கர்த்தர்களுக்கும், திருப்பெருந்துறை பண்டாரத்திற்கும் திருவாரூர் தியாராசசுவாமி திருக்கோயிலுக்கும் வழங்கிய செப்பேடு (இந்த நூலின் தொகுப்பு எண்கள் 17,19,22,42 மற்றும் புதுக்கோட்டை சீமை வரலாறு கல்வெட்டுக்கள் வழியும் அறிய, முடிகிறது.[11] இதனைப் போலவே இந்த மன்னர்களது நாட்டின் கிழக்கு எல்லை இலங்கை நாட்டு மன்னார் முத்துசலாபத்துறை வரை தொடர்ந்து இருந்தது. தொன்று தொட்டு வந்துள்ள மன்னர் முத்து சலாப உரிமையினின்றும் இராமேசுவரம், திருப்புல்லாணி, ஆவுடையார் கோவில்களுக்கு தங்கள் படகுகள் மூலம் மன்னர் சலாபத்தில் முத்துக்குளித்துக் கொள்வதற்கு சேதுபதிகள் அளித்துள்ள செப்பேட்டு வாசகம் சான்றாகஉள்ளன. சேதுபதிகளின் சீமை தெற்கே வேம்பாற்றுவரை இருந்ததை கிழவன் சேதுபதி ஆட்சிக்காலப் பட்டயமொன்றும் செல்லமுத்து சேதுபதி கி.பி. 1759-ல் போகலூர் கனி சேர்வை என்பவருக்கு கன்னிராசபுரம் என்ற ஊரினைத்தானமாகவழங்கிய செப்பேடும் தெரிவிக்கின்றன[12].

11. Pudukotti State Inscriptions No. s. 870, 871, 872, 876 878. 901, 934.
12. Tamilnadu Archieves Madurai Dist Vol.

*நாட்டுப்பிரிவுகள் :*

சேதுபதிகளின் சீமை, முந்தைய சோழ பாண்டிய நிர்வாக அமைப்புகளைப் போன்று பலவிதமான எல்லைக் கூறுகளாகப் பிரிவினை செய்யப்பட்டு இருந்தன. (செப்பேடு எண்கள் : 15, 17, 39) இந்த மன்னர்கள் வழங்கிய சர்வ மானிய கிராமங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள நான்கு எல்லைகள் இருந்து சேது நாட்டில் கீழ்க்கண்ட நிலக்கூறுகள் முன்னர் அமைந்து இருந்தது தெரிய வருகிறது. பெரிய அளவிலான நிலக்கூறு ''சீமை'' ''நாடு'' என்றும் சிறு கூறுகள் ''கூற்றம்'' ''பற்று'' என்று வழங்கப் பட்டன. அவைகளில் சில :

*சீமைகள் :*

1. திருவாரூர் சீமை
2. பட்டுக்கோட்டை சீமை
3. அறந்தாங்கி சீமை
4. சூரக்குடி சீமை
5. அஞ்சிரண்டு சீமை
6. வெள்ளாம்பற்றுச் சீமை
7. மேலமாகாணச் சீமை
8. காளையார்கோவில் சீமை
9. சிவகங்கைச் சீமை
10. கமுதைச் சீமை
11. இராமநாதபுரம் சீமை
12. திருவாடனைச் சீமை
13. புதுக்கோட்டைச் சீமை

*நாடுகள்*

1. ஆப்பனூர் நாடு
2. செவ்விருக்கை நாடு
3. கீட்செம்பி நாடு
4. கைக்கி நாடு
5. பருத்திக்குடி நாடு
6. கிடாத்திருக்கை நாடு
7. கிழக்கு வளநாடு
8. குறிச்சி நாடு
9. ஏமூர் நாடு
10. சூரக்குடி நாடு
11. தென்னாலை நாடு
12. தேர்போகி நாடு
13. முத்தத்து நாடு
14. வடதலைச் செம்பிநாடு

*கூற்றங்கள்*

1. துகவூர் கூற்றம்
2. அரும்பூர் கூற்றம்
3. நடுவில் கூற்றம்
4. மிழலைக் கூற்றம்

*பற்றுகள்*

1. சிக்கில் பற்று
2. கைக்கி நாட்டு பற்று
3. வெள்ளாம் பற்று
4. அஞ்சுகோட்டை பற்று
5. குமாரணி பற்று
6. அமரடக்கிப் பற்று

வட்டகை

1. கிடாரம் வட்டகை
2. கைக்கிநாட்டு வட்டகை
3. ஓரூர் வட்டகை
4. காக்கூர் வட்டகை
5. அமரடக்கி வட்டகை

புரவு

1. இடிகரைப் புரவு
2. கப்பலூர் புரவு
3. திருவெற்றியூர் புரவு
4. சேமனூர் புரவு
5. பெருங்காட்டுப்புரவு
6. குமரி ஏந்தல் புரவு

இந்தப் பிரிவுகளைத் தவிர, இந்தப் பிரிவுகளின் பகுதியைக் குறிப்பிடுவதற்கு வட்டாரம், வட்டகை, தட்டு என்ற சொற்களும் வழக்கில் இருந்து வந்தது தெரிய வருகிறது. இவையனைத்தும் சேதுபதிகளில் இறுதி தன்னாட்சி மன்னராக இருந்த முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி ஆட்சிக் காலம் வரை நீடித்தது. அந்த மன்னரை பதவி நீக்கம் செய்து சிறையிலிட்டு ஆங்கிலேயர்கள், இந்த தன்னரசின் சிறப்பினைக் குலைத்து கி.பி. 1803-ல், இராமநாதபுரத்தை ஜமினாக மாற்றம் செய்து (கி.பி. 1844-ல்) புதிய நில அளவை முறையை புகுத்தியதும் இந்த நாட்டின் தொன்மையான இந்த நிலக்கூறுகளும், அவைகளை அறுதியிட்டுச் சொல்லக்கூடிய குலப்பிரமாண அளவு முறையும் மறைந்து விட்டன.

*நிலங்கள் :*

பொதுவாக இராமநாதபுரம் அரசுப்பகுதியில் அமைந்த பூமி, செவ்வல், கரிசல், பொட்டல், மணற்காடு என்று இயற்கைத் தன்மையை ஒட்டி வழங்கப்பட்டது. இவைகளில் நஞ்சை, புஞ்சை, தட்டு, வயல், தோட்டம் என்ற பகுப்புகள் இருந்தன. நீர்ப்பாசன வசதி உள்ளது. நஞ்சை எனவும், அவ்வித வசதி இல்லாது வானம் பார்த்த பூமி புஞ்சை என்றும்கருதப்பட்டது. சிறிய நீர் ஆதாரங்களைக் கொண்டு, விவசாயம் செய்யப்படும் நிலம் வயல், தட்டு, தேட்டு, என்றும் கேணி, கிணறு போன்ற சுருங்கிய நீர் வசதியுடைய விவசாயப்பகுதி தோட்டம் என்றும் வழங்கப்பட்டன. புதிதாக அமைக்கப்பட்ட தோட்டம் செய், ஆக்கல் என்ற பெயர்களும் இருந்தன. திருவாடனை வட்டத்தில் ஆக்கலூர் என்ற ஊர்இருப்பதுசிந்திக்கத்தக்கது இந்தநிலங்களின்

தொகுதி சீமையின் நடுப்பகுதியில் *கொத்து* என்றும் தென் பகுதியில் *கோர்வை* என்றும் வட பகுதியில் *சேர்வை* என்றும் பெயரிடப்பட்டிருந்தன. விளைச்சலுக்குப் பயன்படாது இயற்கையிலேயே மேடாக அமைந்த நிலத்தின் சிறு பகுதி *திட்டு* என்றும் பெரும் மேடு *திடல்* என்றும் குறிப்பிடப்பட்டன. (மயிலாடுதிடல் கானத்திடல், நரிக்குமிச்சதிடல்.) விரிந்த பரப்பும் விவசாயத்திற்குப் பயன்படாததுமான பரவலான பூமி என இந்த சீமையில் பொட்டல் எனப்பட்டது.

முனியன் பொட்டல், ஓநாய் பொட்டல், காஞ்சிரடிப் பொட்டல் சிவந்தியப்டன் பொட்டல், சோசியன் பொட்டல், என்ற சொற்கள் இந்தச் செப்பேடுகளில் இடம் பெற்றுள்ளன. இவைகளுக்கு இடையில், விளைந்த தானிய மணிகளை நீக்கிப் ஒப்படி, சூடு அடித்தல் போன்ற செயல்களுக்கு பயன்படுத்த *களம்* என்ற சிறிய அளவிலான நிலப்பகுதியும் இருந்தது. விவசாயம் இல்லாத பழமரங்கள், பயன்தரும் மரங்கள் கொண்ட பகுதி *தோப்பு* என அழைக்கப்பட்டு வந்தது பனை மரங்கள் மிகுதியாகவும் தொகுதியாகவும் இருந்த தோப்பு ஒன்றினைக் குறிக்க ''*பனங்கூடல்*'' என்ற சொல் ஒரு செப்பேட்டில் பயன் படுத்தப்பட்டுள்ளது.[13] இங்ஙனம் பலவாறு உட்பிரிவுகளைக் கொண்டு இருந்த நிலப்பகுதியின் பொதுவான எல்லை *வரம்பு*, *வரப்பு*, *புரவு*, *பொலி*, என வழக்குப் பெற்றிருந்தது. இவைகளின் பெரு எல்லைகளைக் குறிப்பிட *எல்லைக்கல்*, *சூலக்கல்*, *குத்துக்கல்* *சக்கரக்கல்* *குழிக்கல்*, *திருவாழிக்கல்*, என்பன நடப்பட்டன. சிவாலயங்களுக்கு விடப்பட்ட நிலப்பரப்பு எல்லையை குறிக்க ''சூலக்கல்லும்'' வைணவ திருக்கோயிலுக்கு வழங்கிய மானிய நில எல்லையைக் குறிப்பிட ''*சக்கரக்கல்*'' ''*திருவாழிக்கல்*''லும் பயன்பட்டன. மற்றும் கி. பி 1781-ல் முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி மன்னர் முத்துப்பேட்டை (இராமநாதபுரம் வட்டம்) தேவாலயத்திற்கு சர்வமானியமாக வழங்கிய முத்துப் பேட்டை கிராமத்தை குறிப்பிடுவதற்கு சிலுவை பொறித்த கல் புதுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதும் அண்மை அகழ்வில்

13. செப்பேடு எண் :

இருந்து தெரிய வருகிறது.[14] பள்ளிச்சந்தம், பள்ளிவாசல் மானிய ஊர், நிலம் எல்லையைக் குறிப்பிட நாட்டப்பட்ட கற்களுக்கு பெயர் ஏதும் இருந்ததா என்பது தெரியவில்லை.

*நீர் ஆதாரங்கள் :*

இந்தச் செப்பேடுகளில் நீர்தேக்கங்கள் குறிக்க கண்மாய், ஏந்தல், ஊரணி, குளம், குட்டை, குண்டு என்ற சொற்கள் பயிலப்பட்டு வந்துள்ளன. சில செப்பேடுகளில் *கண்மாய்* என்ற சொல் *கண்வாய்* என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கு ஆதாரமாக வைகை ஆற்றுப்பாய்ச்சல், பாண்டயாய் ஆற்றுப் பாய்ச்சல், தேனாற்றுப் பாய்ச்சல், விரிசிலை ஆற்றுப்பாய்ச்சல், குண்டாற்று பாய்ச்சல், ரெகுநாத காவேரி என்ற நீர் ஆதாரங்கள் ஆங்காங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இவைகளி லிருந்து ஆற்று நீரினைக் கொண்டு வருவதற்கு நீண்ட குறுகிய கால்கள் வெட்டப்பட்டு இருந்தன. இவை, நீர்வாங்கி, வரத்துக்கால் எனவும், *வாய்க்கால்* எனவும் வழங்கப்பட்டன. சில பகுதிகளில் இந்தச்சொற்கள் ''வகுத்துக்கால்'' என வழக்கில் இருந்தன. இவைகளின் மூலம் வரப்பெற்ற வெள்ள நீரை மிகுதியாகப் பெற்ற பொழுது அதனை வெளியேற்றுவதற்கு பிறிதொரு காலும் பயன் படுத்தப்பட்டது. அதற்கு *மறுகால்* எனப்பெயர், கண்மாய்களில் இருந்து நேரடியாக நீரை வெளி யேற்ற பெரிய கண்களை உடைய வழி *கலுங்கு* என்றும் சிறிய வழி *மடை* என்றும் வழக்குப் பெற்றிருந்தன. சிறிய ஏந்தல் கண்மாய்களின் நீர் கொள்ளளவு குறைவாக இருப்பதால், கூடு தலாக வரும் நீரினை வெளியேற்றுவதற்கு அந்தக் கண்மாய்க் கரையின் ஒரு இடத்தில், கரை இல்லாமல் இடைவெளி விட்டு கரை அமைக்கப்பட்டு இருக்கும். இதன் வழி வெள்ளம் தானாக வழிந்து வெளியேறும். அந்தப்பகுதி *''தான் போகி''* எனப் பட்டது. ஆற்று நீரைத்தவிர மழை நீரைக் கொண்டு வருகிற கால், ஓடை, எனப்பட்டது.

ஒரு கண்மாயின் நீண்ட கரை அடுத்த கண்மாயுடன் தொடர்ந்து இணைப்பாக அமைக்கப்பட்டு இருந்தால் அந்த இணைப்புப்பகுதி*''பொருத்து''* ஆகும். அந்தக் கண்மாயின்மூலை,

14. மாவட்ட செய்தி மடல் - கிராம மாவட்ட ஆவணக்குழு- நவம்பர். 89

தொடக்கம். அல்லது இறுதிப்பகுதி ''கொம்பு, கடைக்கொம்பு'' என்று குறிப்பிடப்பட்டன. இந்த கண்மாய் கரையையடுத்துள்ள கண்மாய்பகுதி ''உள்வாய்'' என்றும் இந்தப்பகுதியில், நீர்ப்பிடி யையொட்டி இருந்த விளைநிலம் ''குளம் கோர்வை'' என்றும் வழங்கப்பட்டன. இந்த கரைகள் மிகுதியான வெள்ளத்தினால் அழிந்து போனால் அவை ''உடைப்பு'' ஆகும். கண்மாய் களில் நீர் நிரம்பிய பிறகும், கிராமப்புறங்களில் நீர்ப்பிடி அல் லாத பகுதிகளிலும் அதாவது கண்மாயின் வெளிப்பகுதி தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதி *'காலாங்கரை'* எனப்பட்டது. காலை ஒட்டிய கரை. நாளடைவில் இந்தப் பகுதியின் நீர் வற்றி சகதியுமாக மாறிய ஈரப்பகுதி ''*வதி*'' இடம்பெற்றுள்ளன.

இவை போன்ற நிலம், நீர் சம்பந்தமான ஏராளமான கலைச்சொற்கள், பல நூற்றாண்டு காலமாக இந்தச் சீமையில் வழக்கில் இருந்து வருகின்றன. அவைகளில் நமக்குக் கிடைத் துள்ள செப்பேடுகளில் கையாளப்பட்டுள்ளவை மட்டும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளவை.

இந்தச் செப்பேடுகளில் காணப்படும் நீர்த்தேக்கங்களின் பெயர்கள் தொகுப்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*ஆறுகள்*

1. வைகை ஆறு
2. விரிசிலை ஆறு
3. மலட்டாறு
4. பாம்பாறு
5. தேனாறு
6. குண்டாறு

*ஏரிகள்*

1. இராமானுஜப்பேரேரி
2. இளமனேரி
3. கிழவனேரி
4. மாதவனேரி
5. மாணிக்கனேரி
6. வேளானேரி

*கண்மாய்கள்*

1. ஆத்தானூர் கண்மாய்
2. அன்னுனி கண்மாய்
3. ஆடிக்கண்மாய்
4. ஆய்க்குடி கண்மாய்
5. ஆண்டுகுடி கண்மாய்
6. இராமநாதபுரம் பெரிய கண்மாய்
7. ஏரணிக்கோட்டை கண்மாய்
8. இரைவிமங்கலம் கண்மாய்
9. கடுக்கனூர் கண்மாய்
10. கருக்காத்தி கண்மாய்
11. கருங்குடி கண்மாய்
12. கண்ணன்குடி கண்மாய்
13. கானாட்டான்குடி கண்மாய்

14. கொங்கிவயல் கண்மாய்
15. சிக்கில் கண்மாய்
16. சித்தனேந்தல் கண்மாய்
17. சிறுகானூர் கண்மாய்
18. சிறுகைக் கண்மாய்
19. சிறைக்குளம் கண்மாய்
20. சின்னாகைக் கண்மாய்
21. தவளைக்குளம் கண்மாய்
22. தேத்தாங்கால் கண்மாய்
23. தனிச்ச கண்மாய்
24. திருமண கண்மாய்
25. புல்லாக்குளம் கண்மாய்
26. புலியாத்தி கண் மாய்
27. புதுக்குடி கண்பாய்
28. பூதகுடி கண்மாய்
29. முதலூர் கண்மாய்
30. வளமாவூர் கண்மாய்
31. வலையன் கண்மாய்
32. வையை கண்மாய்
33. வெண்ணெய்குடி கண்மாய்
34. பேரா கண்மாய்

ஏந்தல்கள்

1. அய்யனாரேந்தல்
2. அருங்குளம் ஏந்தல்
3. ஆமணக்கு சுத்தியேந்தல்
4. இலங்கை வழிவந்தஏந்தல்
5. இறையான் ஏந்தல்
6. உப்புக்கடையேந்தல்
7. ஒட்டன் ஏந்தல்
8. ஒருவான் ஏந்தல்
9. கள்ளக்குடி ஏந்தல்
10. காவிரி ஏந்தல்
11. குமரி ஏந்தல்
12. கோட்டையேந்தல்
13. கோவிந்தன் ஏந்தல்
14. சாணான் ஏந்தல்
15. சிங்கன் ஏந்தல்
16. சீவநதி ஏந்தல்
17. கொன்னையன் ஏந்தல்
18. கொத்தங்குளம் ஏந்தல்
19. சம்மட்டி ஏந்தல்
20. ஸ்ரீராமன் ஏந்தல்
21. தச்சமல்லி ஏந்தல்
22. தாழியார் ஏந்தல்
23. நரசிங்கன் ஏந்தல்
24. நீலன் ஏந்தல்
25. நெட்டு ஏந்தல்
26. துரைராயன் ஏந்தல்
27. பலவலசை ஏந்தல்
28. பாப்பாகுடி ஏந்தல்
29. பாப்பான் ஏந்தல்
30. பள்ளிக்குத்தி ஏந்தல்
31. பணிக்கண் ஏந்தல்
32. புல்லுகுடி ஏந்தல்
33. பேய்ராமத்தேவன்ஏந்தல்
34. பொன்னரியான் ஏந்தல்
35. பொந்தியான் ஏந்தல்
36. தேவேந்திரனேந்தல்
37. தொண்டாரேந்தல்
38. செட்டியேந்தல்
39. முத்தத்தியேந்தல்
40. வைரவன் ஏந்தல்
41. விரியான் ஏந்தல்

ஊரணிகள் :

1. அருகு ஊரணி
2. அய்யனார் ஊரணி
3. ஆண்டி ஊரணி
4. இலுப்பையடி ஊரணி
5. உப்பூரணி
6. எத்திலுநாயக்கன் ஊரணி
7. சின்ன ஊரணி
8. குருகு ஊரணி
9. கொங்கால ஊரணி
10. சொக்கநாத ஊரணி
11. தச்சன் ஊரணி
12. தொல்லாப்பிள்ளைஊரணி
13. திருவத்தியார் ஊரணி
14. நவதேவன் ஊரணி
15. நொண்டி நாயன் ஊரணி
16. நந்திமேடு ஊரணி
17. தண்டலார் ஊரணி
18. பலுபாகல் ஊரணி
19. பாகல் ஊரணி
20. பிள்ளை ஊரணி
21. பெரிய கூத்தன் ஊரணி
22. பேய்க்குளம் ஊரணி
23. மல்லாரி ஊரணி
24. மாவிளங்கை ஊரணி
25. முத்திருளப்பபிள்ளை ஊரணி
26. வண்ணான் ஊரணி
27. வாகையடி ஊரணி
28. மல்லான் ஊரணி
29. மாவூரணி

குளங்கள்

1. அஞ்சிரங்குளம்
2. அருங்குளம்
3. எலிக்குளம்
4. காட்டுக்குளம்
5. நெல்லியடிக்குளம்
6. கொடிக்குளம்
7. கள்ளிக்குளம்
8. காரைக்குளம்
9. கோனாக்குளம்
10. சீகன் குளம்
11. பள்ளத்தூர் குளம்
12. புதுக்குடிக்குளம்
13. மாடைக்குளம்
14. முத்துக்குளம்
15. மணக்குளம்
16. நல்லூர்க் குளம்
17. வானாக்குளம்
18. அல்லிக் குளம்

குண்டுகள்

1. வெங்காயக் குண்டு
2. சக்கிலியன் குண்டு

குட்டம்

1. ஆனைக் குட்டம்
2. நந்துப்பிள்ளையார் குட்டம்
3. புலியன் குட்டம்

கால்கள்

1. அயக்குடி கால்
2. ஆய்க்குடி கால்
3. களத்தூர்க்கால்
4. களரிக்கால்
5. கல்லுக்கால்
6. காவனூர்க்கால்
7. கூத்தன்கால்
8. கூத்தன் தேனாற்றுக்கால் கொடிக்குளம் வடகால்
9. அழகுப்பிள்ளை கால்
10. ஆட்டான்குடிக் கால்
11. நாட்டார் கால்
12. திருமலைத்தேவர் கால்
13. சின்னாகைக்குடி கால்
14. ரெகுநாத காவேரிக்கால்
15. வளமாவூர்க்கால்

குளக்கால்

1. தனிச்சகுளக்கால்
2. திருமண குளக்கால்
3. நெட்டேந்து குளக்கால்
4. மச்சூர் குளக்கால்

வாய்க்கால்

1. படையன் வாய்க்கால்
2. பாண்ட வாய்க்கால்
3. பழம்பதி வாய்க்கால்
4. குண்டு வாய்க்கால்
5. விளத்தூர் வாய்க்கால்
6. வையை வாய்க்கால்

ஓடைகள்

1. குறிஞ்சான் ஓடை
2. சுரும்பனார் ஓடை
3. மஞ்சள் ஓடை
4. வைகை ஓடை
5. பூசாரி கடம்போடை

மடைகள்

1. ஆதிநாராயண மடை
2. இராமநாத மடை
3. ஓரச்சிறகு மடை
4. செவிட்டு மடை
5. புல்ல மடை
6. ராஜ சூரிய மடை

இந்த நீர்நிலைகளில் சில அவை அமைந்துள்ள ஊர்களை அமைத்தவர் பெயர்களில் வழங்கி வருவதை மேலே கண்ட பட்டியல் புலப்படுத்துகின்றது. இதனைப் போன்றே இந்த நீர் நிலைகளினால் பயன் பெறும் செய், நன்செய், புஞ்சை, வயல், தோட்டம், தோப்பு, தட்டு ஆகியவைகளும் அவைகளின் உரியவர்கள் பெயரே வழங்கி வந்துள்ளன. கீழே சில எடுத்துக்காட்டுகள்.

### செய்

1. பள்ளியான் செய்
2. சர்க்கார் ராவுத்தன் செய்
3. இடையன் செய்
4. கோட்டைவாசல் செய்
5. வலையன் செய்
6. வெட்டுச் செய்

### புஞ்சை

1. காவல் புஞ்சை
2. குடிமகன் புஞ்சை
3. கொல்லன் புஞ்சை
4. பத்தன் புஞ்சை
5. பட்டவிருத்தி புஞ்சை
6. பண்ணைக்காரன் புஞ்சை

### வயல்

1. இடையன் வயல்
2. கூத்தன் வயல்
3. கொங்கி வயல்
4. திருமண வயல்
5. பகையணி வயல்
6. வீராண்டார் வயல்
7. பஞ்சந்தாங்கி வயல்
8. சன்னவெட்டி வயல்
9. சிறுக வயல்
10. குணத்திரான் வயல்
11. ஈழத்தான் வயல்
12. தானத்தார் வயல்
13. புதுப்பையூர் வயல்
14. பொன்மணி வயல்

### தோட்டம்

1. உப்பளத் தோட்டம்
2. ஆளிப்பிள்ளை தோட்டம்
3. இபுராகிம் மரைக்காயர் தோட்டம்
4. வணங்காமுடி தோட்டம்
5. தன்னரசுத்தேவன் தோட்டம்
6, சேதுஆண்டான் தோட்டம்
7. பள்ளிவாசல் தோட்டம்
8. மருங்கன் தோட்டம்
9. மல்லம்மாள் தோட்டம்
10. கைக்கஞ்சம்பிள்ளை தோட்டம்
11. கொட்டமடக்கி தோட்டம்

### தோப்பு

1. ஆயித்தோப்பு
2. குமாரத்தோப்பு
3. குருமுடையான் தோப்பு
4. சின்னையர் தோப்பு
5. முத்துத்திருவுடையான் தோப்பு
6. நெல்லியடித்தோப்பு
7. பவானி சங்கரர் தோப்பு
8. ரெகுநாததேவர் தோப்பு
9. விஜயரெகுநாதர் பெரியதோப்பு
10. ரெகுநாத ஈஸ்வரர் தோப்பு

### தட்டு

1. பெரியகுருந்தன் தட்டு
2. பேயாண்டித்தட்டு
3. சேமனூர் தட்டு
4, திசைக்குருளி தட்டு
5. வாலிநாடான் தட்டு
6. பூசாரிநாடான் தட்டு
7. தொலிச்சவீரன் தட்டு
8. வண்ணான் தட்டு

*நிர்வாக அமைப்பு*

மறவர் சீமை அரசு சிறப்பாக இயங்குவதற்கு ஏற்ற வகையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியவர் மன்னர் முத்து விசைய ரகுநாத சேதுபதி (கி.பி. 1710 - 28) தமது அரசுப் பகுதியை நிர்வாக வசதிக்காக எட்டு மாகாணங்களாவும் எழுபத்திரண்டு பாளையங்களாகரும் பிரித்திருந்தார். எழுதப்படிக்கத் தெரிந்த வேளாளார் பெருமக்களை மதுரைச் சீமையில் இருந்து வரவழைத்து, அவர்களை கிராமக் கணக்கர்களாக நியமனம் செய்தார். மன்னருக்கு அடுத்த நிலையில் ஆணை செலுத்தியவர் *பிரதானி, தளகர்த்தர்* ஆகியோர். இவர்களுக்கு உதவியாக *ராயசம்* என்ற செயலரும் அவருக்கு உதவியாக *அட்டவணையும்* இருந்தனர். இவரை அடுத்து மன்னரான முத்துராமலிங்க விசைய ரகுநாத சேதுபதி, நிர்வாகத்தில் மேலும் பல மாற்றங் களைச் செய்தார். இவரது ஆட்சியில் சேதுநாடு பதினேழு கோட்டங்களாகவும் தொன்னூற்று ஆறு வட்டங்களாகவும் பிரிவினை செய்யப்பட்டன. ஒவ்வொரு வட்டமும் முறையே *மணியக்காரர் சம்பிரிதி, தண்டல்காரர்* என்ற மூவர் பொறுப்பில் இருந்தது, கோட்ட அளவில் *அமீன்* அல்லது *அமில்தார்* என்பவர் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அமீன், அமில் தார் - இவை இரண்டும் பார்சி மொழிச் சொற்கள். கி.பி. 1772 முதல் கி.பி. 1781 வரை இராமநாதபுரம் சீமையில் கர்நாடக நவாப்பின் ஆட்சி நடை பெற்ற பொழுது இந்த பணிப்பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. கி.பி. 1801 முதல் இங்கு ஆங்கிலேயரது ஆட்சி ஏற்பட்டது வரை இந்தப்பணிப்பதவிகள் நீடித்தன. அத்துடன் தண்டல் செய்யப்பட்ட வரித்தொகையைப் பெற்று காத்து வந்த காசாளர் *பொக்கிஷம்* எனப்பட்டார். கிராம அளவில் இவர்களின் உதவியாளராக *நோட்டக்காரர், காவல்காரர், தோட்டி, நீர்க்கண்டி* குடும்பன், *அளவன், வரியன், பொலிதள்ளி* எல்லை *விருத்தி* குடைவிருத்தி என்ற பணியாளர்கள் இருந்து வந்தனர். இவர்கள் அனைவரும் பரம்பரைப் பணியாளர்களாகவும் சுவந்திரம் மானியம் ஆகிய வருவாய்களில் அடிப்படையில் பணியாற்றி வந்தனர். இப்பொழுது கிடைத்துள்ள செப்பேடுகளில் பிரதானி தளகர்த்தர், மணியக்காரன், ராயசம், அட்டவணை பொக்கிஷம் பற்றிய குறிப்புகள் மட்டும் காணப்படுகின்றன.

*மறவர்*

இந்தச் சீமையின் குடிமகனாக பதினேழு, பதினெட்டாவது நூற்றாண்டுகளில் இருந்தவர்கள் பெரும்பாலும் மறவர்கள், நல்ல

உயரமும், உடற்கட்டும் உடைய இவர்கள், ஈட்டி, வில், அம்பு வளரி, கவண், துப்பாக்கி ஆகியவைகளில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். முன் பயிற்சி இல்லாமல் பல்வேறு அணிகளாகத் திரண்டு கட்டுப்பாட்டுடனும், விரைவுடனும் போர்க்கலங்களில் முன்னேறிச் செல்லத்தக்கவர்கள். இவர்களது தாக்குதலை சாதாரண காலாட் படையினர் சமாளித்தல் இயலாது.

இவர்களின் பிரதான ஏழுகிளைகளில் கொண்டையன் கோட்டை, செம்பி நாடு இவைகளைச் சேர்ந்தவர்கள் இங்கே மிகுதியாக வசித்து வந்தனர். இவர்களது போர்த்திறனையும்மான உணர்வினையும் மதித்த சேதுபதி மன்னர் இவர்களுக்கு ஆங்காங்கு ஜீவித காணிகள் வழங்கி இருந்தார். வாளும், வேலும் தாங்கி சமர் புரியக்கூடிய ஒருவருக்கு ஆண்டுக்கு ஐந்து கலம் அரிசி கிடைக்கத்தக்க நஞ்சை நிலம் கொடுக்கப்பட்டிருந்தது. துப்பாக்கி சுடக் கூடியவருக்கு ஏழு கலம் கிடைக்கத்தக்க நிலமும் நூறு வீரர்களுக்கு தலைமை வகிக்கும் சேர்வைக்காரருக்கு ஐம்பது கலம் அரிசி கிடைக்கக்கூடிய நிலங்களும் வழங்கப்பட்டு இருந்தன. இவர்கள் அனைவரும் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் நிலையில் படைக்கலன்கள் ஏந்தி போரிடுதல் வேண்டும். மேலும் அமைதிக்காலத்தில்இவர்கள் காவல்ப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர் அப்பொழுது காவல்பணி கொட்டாரக்காவல், திசைக்காவல் தெற்கத்தி காவல், நாட்டுக்காவல், தும்பச்சி காவல், தளவாய் காவல் என ஆறுவகையாகப் பகுக்கப்பட்டு இருந்தன,, இந்த செப்பேடுகளில் ''குடி'' ''படை'' என்று குறிப்பிடப்படும் குழூஉச் சொற்களுக்கு விளக்கமாக இந்த மறவர்களைக் கொள்ளலாம்.

*பள்ளர் பறையர்*

மேலும் ''பள்ளு'' ''பறை'' எனக் குறிப்பிடப்பட்டு இருப்பது பாட்டாளி, விவசாயிகளான பள்ளர், பறையர் என்ற இனத்தவர், அன்றைய சமுதாய அமைப்பில் இந்த மக்கள் தீண்டப்படாதவர்களாகவே இருந்து இருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது. கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி மன்னர் ஆட்சியில் மறவர் சீமையின் வடக்குக் காவல் அரணான திருமெய்யம் மலைக்கோட்டையை பெரியதாகவும், புதிதாகவும் அமைத்து திறப்பு விழா செய்த பொழுது, இரண்டு பறையர்கள் பலி கொடுக்கப்பட்டனர் என்ற பயங்கரமான உண்மை புதுக்கோட்டை சமஸ்தான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சேதுபதி மன்னர் செப்பேடுகள் அனைத்திலும் "...மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும், திட்டு, திடல், மாவடை மரவடை, குடி, படை, பள்ளு, பறை நிதி நிஷேச செலதருபாசன மெனச் சொல்லப்பட்ட அட்டபோக தேச சுவாமியங்களும்..." என்ற சொற்றொடர் காணப்படுவதில் இருந்து தானம் வழங்க பெறும் ஊர்களின் நிலையான பொருள் போன்று "பள்ளும் பறையும்" இன்றியமையாதவர்களாக கருதப்பட்டு வந்தனர் என்பது வெளிப்படை.

இவர்களைத் தவிர சேதுபதி மன்னர் சீமையில் இடையர் சாணார், செட்டி, கோமுட்டி, வாணியச்செட்டி, வண்ணார், குடும்பர், சக்கிலியர், பண்டாரம், கொல்லர், தச்சர், வலையர் அம்பட்டர், குருக்கள், ராவுத்தர், மரைக்காயர் என்ற பிரிவு மக்களும் இருந்து வந்தனர். இந்த மக்களிடையே சௌஜன்யமும் கூட்டு மனப்பான்மையும் நிலவி வந்தது. வேளாண்மைத் தொழில் பொதுவான தொழிலாக இருந்தாலும், இதற்கு அடுத்தபடியாக நெசவுத்தொழில் இருந்தது. துலுக்கர், பட்டுநூல்க்காரர், இளம் பஞ்சுக்காரர் வள்ளுவர் ஆகிய மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருந்தனர்.

*பிராமணர்*

வடபுலத்திலிருந்து தமிழகம் சேர்ந்த ஆரியர்கள் சங்க காலத்திலேயே தமிழ்ச் சமுதாயத்தின் அங்கமாகி விட்டனர். வேதம் ஓதுதல், இறைவழிபாடு நடத்துதல், ஆகிய ஆன்மீகப் பணிகளுடன் அரச மக்களது அந்தரங்கப் பணியாளர்களாகவும், தூதுவர்களாகவும் இருந்து வந்தனர். இதனால் தமிழ்வேந்தர்கள் அவர்களுக்கு பொன்னும், பூமியும் வழங்கிச் சிறப்பித்தனர். பௌத்த, சமண மதங்களினால் இந்து மதம் பாதிக்கப்பட்ட சில நூற்றாண்டுகள் தவிர்த்து ஏனைய காலங்களில் அவர்களது வாழ்க்கை முறை பாதிக்கப்படவில்லை.

சோழர்களும், பாண்டியர்களும் நாயக்க, மராத்த மன்னர்களும், இவர்களை பெரிதும் போற்றிப் புரந்தனர். அவர்கள் வழியில் பதினேழு, பதினெட்டாவது நூற்றாண்டுகளில் சேதுபதி மன்னர்களும் அந்தணர்களுக்கு ஆக்கமும், ஆதரவும் வழங்கினர். வேத விற்பன்னர்களாகவும் வியாகரண பண்டிதர்களாகவும் விளங்கிய அவர்களுடைய ஆன்மீக ஞானத்தொண்டினால் மறவர் சீமை மக்கள் பெரிதும் பயனடைய வேண்டும் என்ற பேரவா

இந்த மன்னர்களுக்கு இருந்தது. ஆதலால் அசேசவித்துவான்கள் அவதானிகள், ருக்வேத சாகாந்தியபகர், யஜுர்பிரியர், கோயில் குருக்கள் என்ற பிராமண சிரேஷ்டர்களை ஆதரித்து அவர்களுக்கு மனை நிலங்களையும், விளைபுலங்களைக் கொண்ட ஊர்களையும் தானமாக வழங்கியுதவினர். மேலும் திருக்கோயில் பணி அன்ன சத்திரம் ஆகிய அறப்பணிகளை சிறப்புடன் நிறைவேற்றவும் இந்த அந்தணர்கள் நியமிக்கப்பட்டதை சில செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இராமேஸ்வரம் திருக்கோயில் பணியில் இருந்த பிராமணர் தமிழ் ஆரியர் என்றும் பஞ்சதேசத்துப் பிராமணர் என்றும் ஏனைய திருக்கோயில் பணியில் இருந்த இதே மக்கள் குருக்கள் நம்பியார் பட்டர் என்றும் குறிக்கப்பட்டனர்.

இராமேஸ்வரம் திருக்கோயில் பணியில் இருந்த பிராமணர்கள் மொத்தம் 512 பேர் என கி. பி. 1772-ல் இராமநாத பண்டாரம் வரைந்து கொடுத்த இசைவு முறியில் குறிப்பிடப் பட்டு உள்ளது. இந்த ஆவணத்திற்கு சுமார் முப்பது ஆண்டு களுக்கு முன்னர் இயற்றப்பட்ட தேவை உலாவிலும், ''மெய் நூல் துறையில் விதி வழியே பூசிக்கும். ஐந்நூற்றுப் பன்னிருவர் ஆரியரும் ... '' என சரியாக கணக்கிடப்பட்டுள்ளது.

*மராட்டா பிராமணர்கள் :*

இவர்களும் பஞ்சதேசத்து பிராமணர்களின் வகையைச் சேர்ந்தவர்களானாலும் இவர்கள் மராட்டா குருக்கள் என்ற அழைக்கப்பட்டனர். தமிழ் பிராமணர்களுக்கு இல்லாத உரிமை இவர்களுக்கு இராமேஸ்வரம் திருக்கோயிலில் இருந்துவந்தது; இருக்கின்றது. திருக்கோயிலின் கருவறையில் உள்ள இறைவன் இறைவிக்கு ஆகம விதிகளின் படி ஐந்துகால பூஜைகளை நிறை வேற்றும் பணி இவர்களுடையது. தமிழ் பிராமணர்கள் இந்தத் திருக்கோயிலின் இறைபணியில் ஈடுபடுவதற்கு முன்னர், இந்த மராட்டா குருக்கள் இந்தப்பணிகளில் அவர்களை முந்திக் கொண்டனர் என்பதை கி. பி. 1745 ஆம் ஆண்டு செப்பேடு ஒன்றிலிருந்து (செ. எண். 86) தெரியவருகிறது. இவர்களில் சிறப்பும் செல்வாக்குமிக்க பிரமுகர்கள் சங்கர குருக்கள், ரெகுநாத குருக்கள், ஈஸ்வர பட்டர், ஆகியோர் பிரமுகர்களாக நவராத்திரி உற்சவங்களை நடத்துவதற்கும் சேதுயாத்திரையில் உதவுவதற்

கும், ''தேவர் கட்டளையை'' நிறைவேற்றிவைப்பதற்கும் இவர்களுக்கு காணியாட்சி உரிமைகளும்அளிக்கப்பட்டு இருந்தன.

*இஸ்லாமியர்*

துலுக்கரில் கடல் வாணிபம் செய்தவர்கள் *மரைக்காயர்* அல்லது *சோனகர்* என்றும், அரசு சேவை, போர்த்தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் *ராவுத்தர்* எனவும் இவையல்லாத நெசவு போன்ற தொழில்களில் ஈடுபட்டவர்கள் *லெப்பைகள்* எனவும் வழங்கப்பட்டனர். இந்தப் பிரிவுகள் அனைத்துப் தொழிலைக் கொண்டு எழுந்த பெயர்ப்பிரிவுகளே தவிர சாதிப் பிரிவுகள் அல்ல. இசுலாமியர் மிகுதியாக இன்றும் வாழும் கமுதி அபிராமம், எக்ககுடி, பரமக்குடி, இளையாங்குடி, சித்தார் கோட்டை பனைக்குளம், ஆகிய ஊர்களில் ''*பாவோடித்தெரு*'' என்ற பெயர்கள் நிலைத்து இருப்பது இந்த உண்மையை உறுதிப்படுத்துவது ஆகும். ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகப் பிரதிநிதி ஒருவரது கி. பி. 1794-ஆம் ஆண்டு அறிக்கை இந்த ஊர்களையும் சேர்த்து சேதுபதி சீமையில் பதின்மூன்று கிராமங்களில் 980 தறிகள் இருந்ததைக் குறிப்பிடுகிறது.[15]

*இடையர்*

பலநூற்றாண்டுகளாக ஆடுமாடுகளைக் கொண்டு தொழில் புரிந்து வந்தவர்கள் சேதுநாட்டின் இன்னொரு தொன்மைக் குடியினரான இடையர் ஆவர். இவர்கள் கடற்கரையல்லாத உள் நாட்டில் பரவலாக இருந்து வந்ததைப் பல செப்பேடுகளில் அவர்கள் இறுத்த வரிகள் பற்றிய விவரங்களில் இருந்து தெரிய வருகிறது. இந்த இடைக்குடி மக்கள் இறுத்த வரிப்பாடுகள் *கோசாலை வரி, நன்மாட்டுவரி, கீதாரம், எருதுவரி, சுரபிக்காத பசு வரி, பேடிவரி* என்பன. ஆடுமாடுகளை வைத்துப் பராமரித்து வாழ்க்கை நடத்தியவர் *கீதாரி* எனப்பட்டனர். இந்த மக்களில் ஒருசிலர் விவசாயத்தில் ஈடுபட்டு இருந்தனர். இவர்கள் *முக்கந்தர்* என வழங்கப்பட்டனர். *கீதாரி, முக்கந்தர்* என்ற இரு சொற்களும் ஆயர் குடியில் வளர்ந்த கிருஷ்ணனைக் குறிக்கும் கிரிதாரி, முகுந்தன் என்ற பெயர்களின் திரிபு. இவர்கள் *நாட்டு இடையர்* எனபட்டனர். பல்லக்கு தூக்கும் பணியில் இன்னொரு பிரிவினர்

15. Public consultations Vol. 1182 A-12-2.1793 pp. 851-862

இருந்தனர். இவர்கள் சிவியர் என வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இவர்கள் இராமநாதபுரம் சீமையின் வடக்கு மேற்குப் பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கும் இடைகுடி மக்களது ஏனைய பிரிவினர்களுக்கும் கொள்வினை, கொடுப்பினைத் தொடர்புகள் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

செட்டி என்ற பிரிவுகளில் மூன்று வகையான மக்கட்பிரிவினர் அடங்குவர். முதலாமவர் இந்த சேது சீமையின் வடகிழக்குப் பகுதியைச் சேர்ந்த *ஆயிர வைசியர்* என்ற தொகுதியினர். இவர்கள் அனைவரும் உள்நாட்டு வணிகத்தில் ஈடுபட்டு இருந்தனர். இதே பிரிவைச் சேர்ந்த ஒரு சிறு தொகுதி திருமலை ரெகுநாத சேதுபதி காலத்தில் மதுரையில் இருந்து வந்து இராமநாதபுரம் கோட்டையின் கிழக்கே லட்சுமிபுரத்திற்கு மேற்கே குடியேறினர்.[16] இவர்கள் நாளடைவில் *மதுரைச் செட்டிகள்* என வழங்கப்பட்டனர். இவர்கள் பொதுவாக வாணிபத்தில் ஈடுபட்டு இருந்தனர், இவர்களில், பதினெட்டாம் நூற்றாண்டில், முத்து சாத்தகுட்டி செட்டி மகன் முத்து கூரி செட்டி என்ற சிவனெறிச் செல்வரையும் சோழ சீமையுடன் தானிய வியாபாரத்தில் ஈடு பட்ட சிவந்தி செட்டி என்ற பெருமகனையும் பற்றிய செய்தி செப்பேடுகளில் இருந்து தெரிய வருகிறது. இவர்களைப் போன்று சோழவள நாட்டில் இருந்து குடியேறி தெலுங்கு மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட வணிகர்களும் *செட்டிகள்* என வழங்கப்பட்டனர். இவர்கள் இராமநாதபுரம் கோட்டையிலும், இராமேசுவரம் நகரிலும் மட்டும் வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களில் இன்னொரு வகுப்பினர் செக்குகள் அமைத்து எண்ணெய் வடித்து, எண்ணெய் விற்று வந்தனர். இவர்கள் பிற்கால சோழ பாண்டியர் கல்வெட்டுக்களில் சங்கரப்பாடியர், மாயிலட்டி, சோதி நகரத்தார் என்ற சமூகத்தினராகக் குறிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் ஏனைய செட்டிகளினின்றும் வேறானவர் களாக இருந்த பொழுதிலும் உலக வழக்கில் இவர்களும் செட்டி கள் என்றே வழங்கப்பட்டனர். திருக்கோயில்களில் நந்தா விளக்கு எரியச் செய்வதற்கும், சனிக்கிழமைகளில் தெய்வத்திருமேனி

16. இராமநாதபுரம் ஸ்ரீ முத்தால பரமேசுவரி அம்பாள் கோவில் *திருக்குடமுழுக்கு விழா சிறப்புமலர்* (1977)

களுக்கு எண்ணெய்க்காப்பிடுவதற்கு எண்ணெய்வழங்கும் பொறுப்பினை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் மரத்தினாலும், கல்லினாலும் ஆன செக்குகளை அமைத்திருந்தனர். கேரள சிங்கவள நாட்டில் (இன்றைய காரைக்குடிப் பகுதியில்) மிகுதியாக இத்தகைய செக்குகள் அமைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அந்த பகுதி செக்கு ஆலை என்றும் செக்காலைக் கோட்டை என்றும் வழக்குப்பெற்றுள்ளது.

இத்தகைய செக்குகளுக்கு சேதுநாட்டில் செக்கு இறை என்ற வரிப்பாடு இருந்து வந்தது. சிரேட்டி என்ற வடசொல் செட்டி என வழக்குப் பெற்றாலும் அந்த சொல் குறிப்பிடுகின்ற வணிகர் என்ற பொருளில் பல செட்டி வகுப்பினர் இருந்தாலும், எண்ணெய் வணிகம் செய்கின்ற இந்த வணிக மக்கள் 'வாணியர்' என்றும், ''வாணிகச் செட்டி'' என்றும் வழங்கப்பட்டனர்.

இவர்களைத் தவிர, இன்னொரு செட்டி வகையினரும் சேதுபதி சீமை குடிமக்களாக இருந்தனர். அவர்கள் தான் ''நாட்டுக் கோட்டையார்'' ''நகரத்தார்'' எனப்படும் செட்டி மக்கள். இவர்களைப் பற்றிய இந்தச் செய்திகள் செப்பேடுகளில் காணப்படவில்லை.

*சாணார்*

இவர்களது பரம்பரைத் தொழில் பனைமரத்தில் இருந்து கள் வடித்தல். இந்து ஆகம நெறிகள் மனித வாழ்க்கைக்கு ஆகாதவை எனக் குறிப்பிட்டுள்ள கள் தொழிலை இந்த மக்கள் மேற்கொண்டு இருந்ததால் இவர்களை இந்து சமூகத்தினர் தீண்டத்தகாதவர்களாகக் கருதிய காலமும் முன்னர் இருந்தது. பனை மரம் ஏறுவதற்கு கால்களில் பிணைத்துக்கொள்ளும் சாண் அளவு பனைநார் என்ற சொற்களிலிருந்து இவர்களுக்கு சாணார் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.[17] தமிழ் இலக்கியங்களில் இத்தகையப் பெயர் குறிப்பிடப்படவில்லை. இலக்கண கால்களிலும்—பிங்கலந்தை நிகண்டிலும், சூடாமணி நிகண்டிலும்—இந்தச்செயல் பட்டியல் இடப்படவில்லை. சௌந்திகர் என்ற வடசொல் சூடாமணி நிகண்டில் கள் வடிப்பவருக்கு குழூஉக்குறியாக குறிபிடப்பட்டதிலிருந்து சாணார் என்பதற்கு வேர்ச்சொல் சௌந்திகர் எனக் கருதப்படுவதும் உண்டு.

---

17. Edgar Thurston – Castes and Tribes of South India. (1909) Vol. IV. page. 369.

இந்த மக்கள் ''சான்றார்'' என அழைக்கப்பட்டனர் என்பது ஒரு செய்தி. இதற்கான இலக்கண இலக்கிய ஆதாரங்கள் இல்லையென்றாலும் பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த திருப்புல்லாணி திருக்கோயிலில் உள்ள கல்வெட்டில் ''சான்றார் உள்ளிட்ட சாதிக்கு'' என்ற தொடர் காணப்படுவது ஆய்வுக் குரியது.[18] உலக வழக்கில் அன்றும் இன்றும் இவர்கள் சாணார் களாகவே உள்ளனர். சாணார்வரி, பனங்கடமை, கலவஈழம், ஈழம் புஞ்சைவரி இந்த வரிப்பாடுகள் இவர்களிடமிருந்து வசூலிக்கப் பட்டு வந்தன.

*வரிப்பாடுகள்*

சேதுநாட்டுக் குடிமக்களிடமிருந்து பள்வரி, பலவரி. சொர்ணாதாயம், கோசாலை வரி, நன்மாட்டுவரி, மகாநவமி கிடாய்வரி, மானோம்புக் கிடாய் வரி, செம்பு வரி, களஞ்சிய வரி, மடத்து வரி, உசாடி வரி, எழுத்தாணி வரி, கம்பள வரி, கீதாரம், கலவஈழம், புஞ்சை வரி, கொல்லர் வரி, தச்சர் வரி, சாணார் வரி பனங்கடமை, திருகை வரி, பாசி வரி, பலபட்டடை வரி, எருது வரி, கத்திப்பெட்டி வரி, செக்கு வரி, உழக்கு வரி, நிலவரி மனை வரி, கூரை வரி, கல் வரி, தட்டு வரி, கொடிக்கால் வரி, புகையிலை வரி, கொத்துக்கணக்கு வரி, வேண்டுகோள் வரி, வரிசை வரி, ஆகிய வரிப்பாடுகள் தண்டல் செய்யப்பட்டு வந்தன இவைகளில் ''பல வரி'' ''பள் வரி'' என்ற வரிப்பாடுகளும் சேதுபதிச் சீமை முழுவதும் அமுல்படுத்தப்பட்டதாகும். ஆனால் இவைகளில் பெரும்பாலானவை பதினேழாம் நூற்றாண்டில் வடக்குப் பகுதியை விட தென் பகுதியில் தான் இறுக்கப்பட்ட தாகச் செப்பேடுகளில் காணமுடிகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டிலும் இந்த வரிப்பாடுகள் தொடர்ந்து அமுலில் இருந்தனவா என்று அறியத்தக்கதாக இல்லை. ஆனால், அம்பலம், காடு காவல், உழவு, காவல் சுவந்திரம், இடைகுடி வரி, கீதாரி வரி, துலுக்கர் தறிக்கடமை, செக்கு வரி, கடைவரி, பறைவரி, முள்ளுவரி, காணிக்கைவரி, இடங்கைவரி, வலங்கைவரி, சுங்கம், மகமை, பலவரி, பள்வரி

18. AR. 114/1903.

என்ற வரிப்பாடுகள் இந்த நூற்றாண்டிலும் இறுக்கப்பட்டு வந்தன. இவை தவிர அளக்கப்பட்ட சரக்குகள், எண்ணப்பட்ட சரக்குகள், நிறுக்கப்பட்ட சரக்குகள் என்ற இனங்களில் அள்ளுத்தீர்வை என்ற வரவினம் பெறப்பட்டது. இதனை இராமேசுவரம் திருக்கோயில் செப்பேட்டில் சற்று விளக்கமாகக் காண முடிகிறது. தவச தானியங்கள் ''அளக்கப்பட்டதெற்கெல்லாம் நூறு மரக்காலுக்கு ஒரு மரக்காலும் எண்ணெய், தேன், நெய் ஆகியவவைகளுக்கு நூறு படிக்கு ஒரு படியும், எண்ணப்பட்டதற்கெல்லாம் நூற்றுக்கு ஒன்றே முக்காலும் நிறுக்கப்பட்ட சரக்குகளுக்கு நூற்றுக்கு ஒன்றேகால் பணமும், மகமையில் பத்துப் பொன்னிற்கு அரைப் பணமும்'' என்ற நியதி ஏற்படுத்தப் பட்டிருந்தது. (செ. எண். 49)

இந்த வரிப்பாடுகளையும் வரவினங்களையும் அமீல்தாரும்' சம்பிரிதியும் தண்டல்காரரும் நேரடியாகவும் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருந்த சுங்கச் சாவடிகள் மூலமும் வசூலித்து ''பொக்கிஷத்துக்கு'' செலுத்தினர். இவை தவிர கீழக்கரை, தொண்டி, அக்கினி தீர்த்தக்கரை, புங்கடி, புளியடி, பாம்பன் துறைகளில் வந்து இறங்கிய, ஏற்றி அனுப்பிய, சரக்குப் பொதிகளுக்கும் அரண்மனைத்தீர்வை வசூலிக்கப்பட்டது. ஆனால் அவைகளுக்கான விவரம் கிடைக்கவில்லை.

விவசாயம் சம்பந்தப்பட்ட தீர்வைகள் தவிர ஏனையவை சுழிப்பணம், மின்னல்பணம், (செப்புக் காசுகள்), பொன் (பொன் நாணயம்) ஆகியவைகளில் செலுத்தப்பட்டன. இந்த நாணயங்கள் இராமநாதபுரத்தில் அமைந்திருந்த நாணயசாலையில் தயாரிக்கப்பட்டன. இந்த நாணயங்கள் தவிர, மறவர் சீமையில் மிகுதியாக வணிகத் தொடர்புகள் கொண்டு இருந்த பரங்கியர்களில் குறிப்பாக டச்சுக்காரர்களது போர்ட்டோ நோவா பக்கோடா என்ற பொன் நாணயமும் செலாவணியில் இருந்து வந்துள்ளது பதினெட்டாம்நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆற்காட்டு நவாப்பின் வெள்ளி ரூபாயும் செலாவணியில் இருந்தது.

*காணிக்கை வரி*

பக்தி மேலீடு காரணமாக தங்களது அரிய பொருள்களைத் இறையன்பர்கள் திருக்கோயில்களுக்கு அன்பளிப்பாக வழங்குவது காணிக்கை ஆகும். வடமாநிலங்களிலுள்ள இளம் பெண்கள்

தங்களது அழகிய கருங் கூந்தலைக் கங்காதேவிக்குக் காணிக் கையாக திரிவேணி சங்கமத்தில் அர்ப்பணம் செய்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. பாஸ்கர சேதுபதி மன்னர் திருக் கோவில்களுக்குச் செல்லும் பொழுதெல்லாம் அவர் புனைந்திருந்த அரிய அணிமணிகளில் ஒன்றை அந்தக் கோயிலுக்குக் காணிக்கை யாக அளிக்கும் வழக்கத்தையுடையவராக இருந்தார்.

அவரது முன்னோர்களும் சேது நாட்டின் ஆட்சிப் பொறுப்பையேற்று சேதுபதியாக பட்டம் சூட்டிக் கொண்டவுடன் தங்களது இதய தெய்வமாகிய ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு ஒரு கிராமத்தைக் காணிக்கையாக வழங்கும் மரபினைப் பேணி வந்தனர். இதற்கு பட்டக்காணிக்கை எனப் பெயராகும். இவ் விதம் கொடுக்கப்பட்ட காணிக்கை ஊர் ஒன்று கமுதி வட்டத்தில் இன்றும் காணிக்கூர் என வழங்கப்பட்டு வருகிறது.

அரசுக்குச் செலுத்தும் வரிகளில் ஒன்றாகக் காணிக்கை வரி செலுத்தி வந்ததை சேது மன்னர்கள் செப்பேடுகளில்தான் காணமுடிகின்றது. இறைவனுக்கு அடுத்த நிலையில் மன்னரை வைத்துப் போற்றிய மக்கள், மன்னருக்கு வழங்கும் வரியினைக் காணிக்கையாகக் கருதியதில் வியப்பு இல்லை. அரசுக்கு இறுக் கப்பட்ட பலவிதமான பாட்டங்களும் இறைகளும் வரிகளும் அந்த மக்களது நலனுக்காகவே தண்டல் செய்யப்பட்டது. மன்னரது சொந்தச் செலவுக்கென்றே தனியாக இந்த வரியினை மக்கள் அன்புடன் செலுத்திய காரணத்தால் காணிக்கைவரி எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

*பழக்க வழக்கங்கள்*

மறவர் சீமையில் பலதரப்பட்ட மக்களும் ஒரு குடும்பம் போல பல்லாண்டுகளாக ஒன்றிணைந்து வாழ்ந்து வந்தனர். அவர்களிடையே சாதிப்பிரிவினை போன்ற முந்தையச் சமு தாயத்தின் எச்சங்களும் மாற்றமில்லாது இருந்து வந்தன, என்பதைச் செப்பேட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

*1. சாதிப்பிடிப்பு*

அன்றைய நிலையில், அகம்படியரும், வலையரும் ஒரே மாதிரியான தகுதியுடையவராக இருந்தாலும் அகம்படியர் சமூகத்தைச் சேர்ந்த நயினுக்குட்டி சேர்வைக்காரன் என்ற

இளைஞன் ஒருவனை வலையர் சமூகத்தைச் சேர்ந்த வீராயி என்ற கன்னி களவு மணத்தில் கலந்து கர்ப்பவதியானாள். அவளது உறவினர்கள் அவளைத் துன்புறுத்திக் கொன்றதுடன் அவளது காதலனின் உடன்பிறந்தாளைப் பலிக்குப் பலியாகப் பெற்றனர். அத்துடன் உடையக்காள் என்ற அந்தக்கன்னியை கி.பி. 1691ல் உயிருடன் எரித்துக் கொள்ளவும் முயன்றனர். இந்த செய்தியை பட்டயம் ஒன்றில் அறிகின்றோம். (செ.எண் 85).[19]

2. இன்னொரு பட்டயம் ''முன்பின் சாதிக்கு இல்லாத காரியங்கள் வந்தாலும் ........, நாங்கள் அனைவரும் கூடி சாதிக்குப் புறம்பிட்டு கண்ணும் பறித்து தேசங்கடத்தி விடக்கட வோமாகவும்''. என சாதியின் பெயரால் இழைக்கப்படும் இன்னல்களுக்கு இசைவு தரும் பிடிபாடாக அமைந்துள்ளது. மறவர் சீமையில் கி.பி. 1707 முதல் கி.பி. 1712 வரை கிறிஸ்துவ சமயப்பணியில் ஈடுபட்டிருந்த ஜான் மார்ட்டின் என்ற பாதிரியரது கடிதங்களும் இந்தச் சீமைமக்களின் மனத்தடியில் மறைந்திருந்த கொடுமை களின் கோரவடிவினைக் கோடிட்டுக் காட்டுகின்றன.[20] மறவர் சாதியைச் சேர்ந்த இரண்டு குடும்பக்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவில் ஒரு குடும்பத்தினர் பாதிக்கப்படும் பொழுது எதிராளியான குடும்பத்தினர் தங்களது குழந்தையைக் கொன்று பழிக்குப் பழி தீர்க்கும் வழக்கத்தைப் பார்த்துப் பதைபதைத்த அந்தப் பாதிரியாராது குறிப்புகளில் காணப்படுகின்றன.

3. சேதுபதி மன்னர்கள் மக்களுக்குப் பயன்படுமாறு அன்னசத்திரங்களையும் மடங்களையும் அமைத்த போதிலும் இத்தகைய சாதிப்பிடிப்பின் காரணமாக பிராமணர்களுக்கு மட்டும் திருப்புல்லாணி புருசோத்தம பண்டித சத்திரத்தில் உணவு அளிக்கவும், தனுஷ்கோடி, இராமநாதபுரம், அத்தியூத்து, தேர்போகி, சுந்தரபாண்டியன் பட்டணம் ஆகிய ஊர்களில் அவர் களுக்கென்று தனியான குடியிருப்புகளை அமைப்பதற்கும், காணி களையும் ஊர்களையும், தனியாக வழங்கியிருப்பது தெரிய வரு கின்றது. ''சேரவாரும் ஜெகத்தீரே'' என அனைத்து ஆன்மீக

19. Madura mission Dossiers. Vol, II. (1709)
20. தமிழக தொல் பொருட்துறை இதழ். ''கல்வெட்டு'' எண். 22 (மே. 1989)

உள்ளங்களுக்கும் இராமநாதபுரத்தில் சித்திபெற்ற தாயுமான அடிகள் விடுத்த அழைப்பு ஒருபுறம் இருக்க, இத்தகையோர் தங்களைத்தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டதற்கான செய்திகளும் உள்ளன.

### 4. சகுனத்திற்கு பரிகாரம்

சூரிய. சந்திர, கிரகணங்கள், மனித இனத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியது என அன்றைய மக்களிடையே வலுவான நம்பிக்கை இருந்து வந்தது. அத்தகைய பொழுதினை சமுத்திர நீராடலிலும் இறை வழிபாட்டிலும் கழிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவைகளினால் அவர்களது பிதுர்களும் புண்ணியம் பெறுவர் என்பது ஐதீகம். இத்தகைய ''கிரகண'' நாள் ஒன்றில் இராமநாதபுரம் அரண்மனையில் மன்னர் உணவு கொள்ளும்பொழுது விளக்கு அணைந்தது ஒரு கெட்ட சகுனமாகக் கருதப்பட்டது. அதற்கான ஆலோசனைகளை சாஸ்திர வல்லுனர்களிடமிருந்து பெற்று பரிகாரம், காணப்பட்ட செய்தி செப்பேடு ஒன்றில் பதிவாகியுள்ளது. திருஉத்திரகோசமங்கை கோயில் குருக்கள் ஒருவர் ''திருவிளக்கு, திருவேறின, பாவ நிவாரணமாக'' அரசரிடமிருந்து கதையனேந்தல் என்ற ஊரினை தானமாகப் பெற்றார். (செ.எண். 54) சில சேதுபதி மன்னர்கள் தானம் வழங்குவதற்கு ஏற்ற நாட்களாக, சூரிய, சந்திரகிரகண நாட்களைத் தேர்வு செய்து, சேதுக்கரையிலும், தனுஷ்கோடி கரையிலும் இருந்து இந்ததானங்களை அளித்துள்ளனர். என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மறவர் சீமை விழாக்கள்

தமிழக விழாக்களான தமிழ்ப்புத்தாண்டு, ஆடிப்பெருக்கு தைப்பொங்கல் இவையனைத்தையும் அல்லது இவைகளில் ஒன்றிரண்டை ஆண்டுதோறும் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் மக்கள் கொண்டாடி வந்தனர். இவைகளை மறவர் சீமையிலும் கொண்டாடியிருக்க வேண்டும். இந்த பட்டயத் தொகுப்பிலிருந்து சேதுநாட்டில் வேறு இருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் பட்டதை அறியமுடிகின்றது. அவை ''மகர் நோன்பு'' ''மகா நவமி'' ஆகியவை.

மதுரை மன்னர் திருமலை நாயக்கரது வேண்டுகோளை ஏற்று மறவர் படையுடன் மதுரை சென்ற திருமலை ரெகுநாத

சேதுபதி மதுரைச் சீமையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கன்னடப் படைகளை முறியடித்து மதுரை நாயக்கர் பேரரசை நிலைகுலையாது காப்பாற்றினார். இந்தமகத்தான உதவியினால் மனம் நெகிழ்ந்த திருமலைநாயக்கர் சேதுபதி மன்னரை பலவாறு பாராட்டிச் சிறப்பித்ததுடன் அவரது அன்பளிப்புகளில் ஒன்றாக பொன்னாலான அம்பிகையின் திருமேனி ஒன்றையும் வழங்கி யிருந்தார். இராமநாதபுரம் அரண்மனையில் தனிக்கோட்டம் நிறுவிஅம்மனை வழிபாடு செய்துவந்த அரசர் அந்த அம்மனுக்கு ஆண்டுதோறும் புரட்டாசி திங்களில் ''தசரா'' பெருவிழா இராமநாதபுரம் நகரில் நிகழ்வுறவும் ஏற்பாடு செய்தார். இதுவே மகர் நோன்பு விழாவாகும். அதுவரை இந்த தசரா விழா மதுரை நகரில், மட்டும் கோலாகலமாக நடைபெற்று வந்தது.

பத்துநாட்கள் வரைத் தொடர்ந்த இந்த சமயத் திருவிழா சிறந்த கலைவிழாவாகவும் அண்மைக்காலம் வரை சேதுபதி தலைநகரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. தமிழ் புலவர்களும் வடமொழி வித்தகர்களும் ஆடல்பாடல் வல்லுநர் களும் இந்தவிழா நாட்களில் சேதுபதி மன்னர் முன் தங்களது திறமைகளைக் காண்பித்துப் பாராட்டும் பரிசுகளும் பெற்று வந்த னர். கொற்றவையின் கோர மூர்த்தமான இந்த அம்பாளுக்கு வாமபூஜையில் பலியிட மக்கள் கால்நடைச் செல்வங்களைக் காணிக்கையாக வழங்கினர். இத்தகைய கால்நடைகளின் மீது ''மகர் நோன்புக் கிடாய் வரி'' ஒன்று விதித்து வசூலிக்கப்பட்டது. மற்றொரு விழாவான மகாநவமிக்கும் ஆட்டுக்கிடாய்கள் விற் பனையில் இருந்து ''மகாநவமிக் கிடாய் வரி'' வசூலிக்கப்பட்டு வந்தது. இந்தவிழா இன்று மக்களால் கொண்டாடப்படவில்லை. என்றாலும் பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் சேதுபதி மன்னரது வாணிப சலுகைகளைப் பெற்றுவந்த டச்சுக்காரர்கள் ஆண்டுதோறும் இந்த விழாவின் பொழுது சேதுமன்னருக்கு உயர்ந்த அன்பளிப்புகளைஅளித்து வந்த செய்திகளிலிருந்து இந்த விழா இங்கு கொண்டாடப்பட்டது உறுதிப்படுகின்றது.

*கடமையின் முன்னால்*

அன்றைய தமிழ்ச்சமுதாயம் பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என்ற நான்கு பெரும் பிரிவுகளைக் கொண் டிருந்தது. பூவுலகத்தின் தேவர்கள் (பூசுரர்) என ஏனைய பிரி

வினர் ஏற்றிப்போற்றும் வகையில் சிறப்புடன் பிராமணர்கள் அன்று வாழ்ந்து வந்த பொழுதும் அவர்களது கடமைகளைச் செய்து முடிப்பதில் ஏனையவர்களை விட தங்களுக்கென சிறப்பான சலுகையெ; னையும் கோரவில்லையென்ற செய்தியை கி.பி. 1631ஆம் ஆண்டுச் செப்பேடு ஒன்று தெரிவிக்கின்றது. (செ. எண் 8)

இராமேஸ்வரம் திருக்கோயிலின் அன்றாட இறை பணிகளை நிறைவேற்றி வைப்பதில் பலநூறு பணியாளர்கள் ஈடுபட்டு இருந்தனர். கி.பி. 1772 ஆம் ஆண்டு பட்டயத்தின் படி அவர்களில் ஆரியமகாஜனங்கள் மட்டும் ஐநூற்று பன்னிரண்டு பேர். ''காலாகாலங்களில் பூஜை பண்ணாமல் இருந்தாலும் கோயிலை அடைத்தாலும் இராஜமுத்திரைக்குக் கட்டுப்படாமவிருந்தாலும் ... ... ... ... ஆயிரத்திநூறு பொன்னும் இறுத்து எங்களது காணி ஆட்சியையும் இழந்து போகக் கடவோமாகவும்'' ... என அவர்கள் இசைவுமுறியில் இணக்கம் தெரிவித்து கைச் சாத்திட்டிருப்பது கோயில் பணியினை நிறைவேற்றி வைப்பதற்கான நியதிகள் அந்தணருக்கும் அந்தணர் அல்லாதாருக்கும் ஒரே சீராக நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது தெரிய வருகிறது.

*எல்லைத் தகராறுகள் :*

நிலம், பொலி, புரவு பற்றிய சரியான எல்லைகள் அப்பொழுது நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. ஐப்பசி, புரட்டாசி மாதப் பெருமழை, வெள்ளம், ஆடி மாதப் பெருங்காற்று, போன்ற காரணங்களினால் நிலங்களில் நாட்டப்பட்டிருந்த குழிக்கல், குத்துக்கல், எல்லைக்கல், ஆகியவை இடம் மாறும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் வேளாண்மைக் காலங்களில் குடிமக்களிடையே குரோதமும், பூசல்களும், எழுவதற்கு இவை காரணமாகவிருந்தன.

இதனைத் தவிர்ப்பதற்காகச் சேது மன்னர்கள் சில ஊர்களில் *எல்லைவிருத்தி* என்ற அலுவலரை நியமனம் செய்திருந்தனர். இவரது பணி, சம்பந்தப்பட்ட குடிகளுடன் தகராறுக்குட்பட்ட பொலி அல்லது புரவிற்குச் சென்று சரியான எல்லையைக் காண்பித்துக் கொடுப்பது ஆகும். இவரது முடிவை இரு தரப்பினரும். ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது கட்டாயம். இந்த அலுவலர் அவரது பணியை நிறைவேற்றிய விபரங்கள் இராம

நாதபுரம் மேன்யுவலில் இடம் பெற்றுள்ளன. குறித்த நாளன்று எல்லைவிருத்தி நீராடி புத்தாடை புனைந்து கிராம தெய்வத்திற்கு ஆட்டுக்கிடாய் ஒன்றினை பலியிட்டு அதன் உதிரம் பெருகும் தலையைக் கொண்ட சட்டியைக் கையில் ஏந்தியவாறு எல்லைத் தகராறு இடத்திற்குச் செல்வார். குடி மக்களது வாய் மொழியினைக் கேட்டு சரியான எல்லையை அவர் காண்பிப்பார். கிராம தெய்வமே வந்து வாக்குச்சொன்னதாக இரு தரப்பினரும் அவரது தீர்ப்பை ஏற்றுக்கொள்வர். இந்தக் கடமையில் ஒரு தலைச் சார்பாக முடிவு மேற்கொண்டால் அதற்கான தெய்வ தண்டனை அவருக்கு உறுதி என்பதை உரக்க சொல்லிய பின்னர்தான் இந்தத் தீர்ப்பினை அவர் வழங்குவது உண்டு.

*நியாயத் தீர்ப்பு*

மனுநீதி என்பது மனுநீதிச் சோழன் ஆட்சி செய்த சோழ நாட்டிற்கு மட்டுமல்லாமல் அந்நாட்டை பலவகைவிலும் முன் மாதிரியாகக் கொண்டு ஆட்சி நடத்திய சேதுபதி நாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையாகும். மக்களது அல்லவை நீக்கி நல்லவை சேர்க்கும் பணியில் தமது மருமகன் (பெண்மக்களது கணவர்) குற்றவாளி எனத் தெரிந்ததும் தயங்காமல் மரண தண்டனை வழங்கினார் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி என வரலாறு தெரிவிக்கின்றது.[21]

இந்த மன்னரது மறைவுக்கு பின்னர் கி. பி. 1745-ல் குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி ஆட்சியில் சிக்கலான வழக்கு ஒன்று எழுந்தது. இராமேஸ்வரம் லட்சுமண தீர்த்தத்தின் வருவாய்களை அனுபவிக்கும் உரிமைபற்றியது அந்த வழக்கு, அன்றைய சமுதாயத்தில் மிகச் சிறந்த கல்விமான்களாகவும் புனிதப் பெருமக்களாகவும் கருதப்பட்ட இராமேஸ்வரம் தமிழ் ஆரியமகாஜனங்களும். மராட்டா குருக்களும் அந்த உரிமையினை தத்தமதாகக் கோரினர். தங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்ள முடியாத இந்தப் பூசலைத் தீர்வுகாண சேதுபதி மன்னரது அரசபைக்கு எடுத்துச் சென்றனர். வேதமும் வியாகர்ணமும் பயின்ற அந்தப் பெருமக்களுக்கு சரியான நியாயத் தீர்வு வழங்க சாதாரண மக்களைக் கொண்ட நடுவர் குழு ஒன்றினை நியமனம் செய்து வழக்கும் தீர்வு பெறுமாறு சேதுபதி மன்னர் உத்தர விட்டார்.

21. Rajaram Rao. T. Manual of Ramnad Samasthanam (1891) p. 237

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் சேதுபதி மன்னரது ஆட்சியில் இத்தகைய வழக்குகளுக்கு நியாயத் தீர்வு எவ்விதம் பெறப்பட்டது என்ற சிறப்பான செய்தியினை அந்தப்பட்டயம் தெரிவிக்கின்றது. வழக்கினைத் தீர்வு செய்வதற்கு நியமனம் பெற்ற நடுவர் குழு, வழக்கினைத் தொடுத்தவர்கள், மறுத்தவர் கள் ஆகியோரது வாய்மொழியினை முதலில் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர். பின்னர் முறிநறுக்குச் செய்தி, அட்டவனை இராமநாதபண்டாரத்திடம் உள்ள பழைய செப்பேடுகள், செய்தி அட்டவணைகள் முன்னூற்றுப்பதினேழு வருடங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட செய்தியட்டவணை, சடைக்கன் சேதுபதி, திருமலை சேதுபதி, விஜயரெகுநாத சேதுபதி ஆகியோரது ஆட்சிக்காலம் சம்பந்தப்பட்ட நடப்புகள் ஆகியவைகளை அடுத்து பரிசீலித்து இறுதியாக நல்ல தீர்ப்பு வழங்கியதாகத் தெரிகிறது. (செ. எண். 86)

*நிலஅளவை*

நீண்ட நெடுங்காலமாக சேதுபதிச் சீமையின் நிலங்களை அளந்து கணக்கிடுவதற்கு *குளப்பிரமாணம்* என்ற முறை கையாள பட்டு வந்தது. இதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல் *மாகாணிக்கோல்* என்ற மரக்கோல் ஆகும். இத னுடைய அளவை ஒரு கோலுக்கு ஒரு கோல் என்ற பரப்பு ஒரு மரக்கால் விரையடி என்றும், பதினான்கு கோலுக்கு பதினான்கு கோல் பரப்பு ஒரு கல விரையடி என்றும், நிர்ணயிக்கப்பட் டிருந்தது. இந்தச் செப்பேடுகளில் குறிப்பிடப்படுகின்ற மரக்கால் விரையடி, கலம் விரையடி, என்பன முகத்தல் அளவைக் குறி யீடுகள் அல்ல. விதைப்பாட்டிற்குரிய பரப்பு நிலம் விரையடி எனப் பட்டது. கல விரையடி என்பது இன்றைய நீட்டல் அளவை முறையில் ஒரு ஏக்கர் பதினேழு செண்ட் நிலப்பரப்பாகும். $8\frac{3}{8}$ சென்ட் பரப்பு நிலம், ஒரு மரக்கால் விரையடிக்குச் சமமானது. இந்தச் செப்பேடுகளில் குறிப்பாக நிலக்கொடை பற்றியவைகளில் குறிப்பிடப்படும் இந்த அளவை பற்றியவைகளில் குறிப்பிடப்படும் இந்த அளவை இப்பொழுது அமுலில் இல்லை. சேதிபதி சீமை யில் அமுலில் இருந்த இத்தகைய ''கோல்'' ஒன்றின் சரியான வரை படம் (இன்றைய நான்கு அடி நீளம்) இராமேசுவரம் திருக்கோயிலின் முதற்பிரகாரத்தின் மேற்கு மதிலில் வினாயகர் ஆலயத்திற்கு தெற்கே பொறிக்கப்பட்டு இருக்கின்றது.

கி.பி. 1783ல் இராமநாதபுரம் சீமைப் பிரதானியாக இருந்து நிர்வாகத்திம் பல அரிய சாதனைகளை இயற்றிய முத்திருளப்பபிள்ளை என்பவர் மாகாணிக்கோலுக்கு மாற்றமாக புதியகோல் முறை ஒன்றைப் புகுத்தியதாகத் தெரிகிறது. ஆங்கிலேயர் இந்தச் சீமையைத் தங்களது உடமையாக்கிய பிறகு கி.பி. 1814ல் ஆங்கில நாட்டு ஏக்கர், செண்ட் சங்கிலி முறையை புகுத்தியதால் இந்தக் குளப்பிரமாணம் காலவாதியாகிவிட்டது.

*முத்துச்சிலாபதானம் :*

அந்தணர்களுக்கும், மற்றவர்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்படும் பொன், பொருள், பூமி, அணிமணிகள் ஆகியன தானத்துக்குரியவை. இவை முப்பத்திரண்டு வகையின என்றும் நாற்பத்தியிரண்டு வகை என்றும் சில நூல்களில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளன. தை, மாசி, ஆடி, கார்த்திகை மாதங்களில், அமாவாசை, பௌர்ணமி, உத்தராயணம், துவாதசி, புண்ணிய காலங்களில் இந்த தானங்களை வழங்குவது புண்ணியம் பயக்கக் கூடியதாகச் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பான காலங்களிலேயே சேது மன்னர்கள் திருக்கோயில்களுக்கும். தனியார்களுக்கும், தான சாசனங்கள் வழங்கியுள்ளனர், இந்தத் தொகுப்பில் கண்ட செப்பேடுகளில் வழங்கப்பட்ட தானங்கவில் அமாவாசை நாட்களில் வழங்கப்பட்டவை இருபத்து ஏழு ஆகும். மேலும் இந்தப் புனித செயல்களுக்குக் கூடுதலாக புண்ணியம் சேர்ப்பது போல இந்தத் தான சாசனங்களை சேதுக்கரையிலும் ஆதி சேதுவிலும், இராமநாத சுவாமி சன்னதியிலும், சேதுபதிகள் வழங்கியதைச் செப்பேடுகளில் காணமுடிகின்றது.

உடமையை மட்டுமல்லாமல் உயிரோடு இயைந்த உடலையும் தானம் வழங்கும் வழக்கம் முன்னர் இருந்தது. மாணிக்கவாசகரால் புகழ்ந்து பாராட்டப்பட்ட இரதண்டாவது வரகுண பாண்டியன் தமது ஆருயிர் துணைவியை திருவிடைமருதூரில் மருதீசருக்குத் தானம் வழங்கியது ஒரு எடுத்துக்காட்டாகும்.

முத்துச்சிலாபம் போன்ற உரிமையினை சேது மன்னர்கள் திருக்கோயில்களுக்குத் தானம் வழங்கியிருப்பது வரலாற்றுப் பெருமை கூறும் நிகழ்வுகள் ஆகும். இந்த மன்னர்களுக்கு மன்னார்குடாக் கடலில் இருந்த முத்துக் குளிக்கும் உரிமையினை

இராமேஸ்வரம், திருப்புல்லாணி, திருப்பெருந்துறை திருக்கோயில்களுக்கு வழங்கியதை செ.எண். 4, 35, 43 தெரிவிக்கின்றன. இந்த தானங்களை உறுதிப்படுத்தும் வகையில் இராமேசுவரம், திருப்புல்லாணி, திருக்கோயில் படகுகள், சில முத்துச்சிலாபங்களில் பங்குகொண்ட செய்திகள் உண்டு. ஆங்கில அரசு இந்த நாட்டில் நிலைத்த பிறகுதான், புனித திருக்கோயில்களின் இந்த உரிமை புறக்கணிக்கப்பட்டது.[22]

*சேதுக்கரை :*

சேது மன்னர்களது பட்டயங்களில் பெரும்பாலும் ''*சேதுக் கரையில்*'' தானம்வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே போல அந்தப் பட்டயங்களின் இறுதி வாக்கியங்களிலும் ''இந்தப் புண்ணியத்தைப் பரிபாலனம் செய்தவர் சேதுக்கரையில் கோடி சிவலிங்கப் பிரதிட்டை பண்ணின பலத்தையும்'', ''இந்த தர்மத்திற்கு அகிகம் நினைத்தவர்கள் சேதுக்கரையில் மாதா, பிதா குருவையும், காராம் பசுவையும், பிராமணனையும் கொன்ற தோசத்திலே போகக் கடவாராகவும்'' என்று குறிப்பிடும் வழக்கமிருந்து வந்தது.

கம்பராமாயண யுத்த காண்டத்தில் புனிதமிக்க கங்கை நதியும், சேது ஆக பெற்றிலம் என வருந்துவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்விதம் புனிதமிக்க இடமாகக் கருதப்படும் சேதுக்கரை எது? தமிழ்மொழியின் கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணி நளன் என்ற வானர தச்சனால் நூற்றிரண்டு யோசனை நீளமும் பத்துயோசனை அகலமும் உடையதாக அமைக்கப்பட்டது சேது அணை என்றும், அது இராமேசுவரத் திற்கும் இலங்கைக்கும் மிடையால் அமைந்துள்ளது என்றும் வரையப்பட்டுள்ளது.

ஆனால் கன்னியாகுமரிப் புராணம் பாடிய சங்கர நாவலர் கடலுடைச் சேது ஒன்று கட்டிட கருத்தில் உள்ளிய இராம இலக்கு வர்கள் திடலுறு குமரியென்னும் தென்கடற்கரை வந்து சேதுவை அமைத்ததாகப் பாடியுள்ளார். ஐம்பெரும் காப்பியங்களில்

22. Arunachalam. S. History of Pearl Fishery of Tamil coast. (1952) pp. 113, 114.
Tamilnadu Archives-Madras Dist. vol. 4670/1-1-1822 p.20

ஒன்றான மணிமேகலையும், பண்டைய காலங்களில் கன்னியா குமரிக்கு மக்கள் தலயாத்திரை சென்று வந்ததை குரங்கு செய்க் கடலில் குமரியென்னப் பெருந்துறை எனக் குறிப்பிடுகிறது. சேது புராணம் பாடிய நிரம்பவழகிய தேசிகர் தேவிபட்டினமே ஆதி சேது எனக்குறிப்பிட்டுள்ளார். இவ்விதம் இலக்கியச் செய்திகள் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்துள்ள போதிலும் இராமேஸ் வர இராமலிங்கப் பிரதிட்டை ஏற்பட்ட காரணத்தினால் திருப் புல்லாணியையும், தனுக்கோடியையும் பல நூற்றாண்டுகளாக மக்கள் ஆதி சேது என போற்றிப் பரவி வருகின்றனர். இவைகளே சேதுக்கரையும் ஆகும்.

*ஊர்ப்பெயர் மாற்றம்*

சேது நாட்டில் அளவிலும், வளமையிலும், சிறந்த சிற்றூர் களின் பெயர்கள் மாற்றம் பெற்று வந்ததை இந்தச் செப்பேடு களில் காண முடிகின்றது. சில ஊர்ப் பெயரின் விகுதியாக ''சமுத்திரம்'' என்ற சொல் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. இராமநாத சமுத்திரம், நாகநாத சமுத்திரம், கோவிந்தராஜ சமுத்திரம், கிருஷ்ண சமுத்திரம், உடையநாத சமுத்திரம், மங்கைநாத சமுத்திரம், வேங்கடம்மா சமுத்திரம் என்பன அவை.

இன்னும் சில ஊர்கள் தானம் வழங்கப்பட்ட சேது மன்னர் பெயரால் வழக்குப் பெற்று வந்துள்ளன. திருமலைச் சேதுபதி மன்னர் தானம் வழங்கிய பெருங்கரை, ரெகுநாத சமுத்திரம் என்றும், ரெகுநாதக்கிழவன் சேதுபதி வழங்கிய பழஞ்சிறை ரெகுநாத சமுத்திரம் என்றும், முத்துராமலிங்க சேதுபதிவழங்கிய கருக்கத்தி, செப்பேடு கொண்டான், அரியக் குடி, என்ற ஊர்கள் முறையே முத்துராமலிங்கபுரம், முத்துராமலிங்கபூபாலபுரம், முத்துராமலிங்க சமுத்திரம், என்ற பெயர் மாற்றத்துடன் மக்களால் வழங்கப்பட்டு வந்துள்ளன. இதனைப் போன்றே ரெகுநாத கிழவன் சேதுபதி மனைவி காதலி நாச்சியார் தானம் அளித்த களத்தூர் கிராமம் ரெகுநாத காதலி ஆயிபுரம் என வழங்கப்பட்டது.

இவையல்லாமல் பேச்சு வழக்கிலும் ஊரின் பெயர்கள் திரிபு பெற்றுள்ளன. குசவன் குழி, குசவன் குடியாகவும், காஞ்சிரன் குளம், காஞ்சிரங்குடியாகவும், கமுதை, கமுதியாகவும், புல்லன் குளம், புல்லங்குடியாகவும் புல்லுகுடி,புல்லூராகவும், திருப்பொற்

கோட்டை, திருப்பாற்கோட்டையாகவும், காரம்பல் காரேந்தலாகவும் நயமொழி மங்கலம் நிலமழகிய மங்கலமாகவும் எக்கை குடி எக்ககுடியாகவும், மஞ்சியூர் மஞ்சூர் என்றும் மாற்றம் பெற்றதை இந்தச் செப்பேடுகளில் காணமுடிகின்றது. மற்றும் இன்றையப் பெயர்களான இளமனூர், வேளானூர், மாதவனூர் இளமனேரி, வேளானேரி, மாதவனேரி என்ற முன்னாள் பெயர் வழக்குகளின் திரிபுகள் என்பதை செப்பேட்டு வாசகங்கள் தெரிவிக்கின்றன.

*சேது யாத்திரை*

இராமேசுவரத்திற்கு நமது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இன்றுபோல் முன்னரும் மக்கள் சேதுயாத்திரையாக வந்துசெல்லும் வழக்கம் இருந்தது. போக்குவரத்து, உணவு, உறையுள், வசதிகளில்லாத அந்தக்காலத்தில் *சேது யாத்திரை* மேற்கொள்வது கடினமான செயலாகும்.

இந்த யாத்திரை இராமேஸ்வரம் தீவில் பாம்பன் அருகிலுள்ள வைரவ தீர்த்தத்தில் தொடங்கி தனுஷ்கோடி அனுப்பு தீர்த்தம் மற்றும் இராமேஸ்வரம் தீர்த்தங்களில் புனித நீராடி இராமநாதசுவாமி தரிசனம் பெறுவதுடன் முடிகிறது. இந்த யாத்திரையில் நீராடும் தலங்களாக சேதுக்கரை. திருப்புல்லாணி சக்கர தீர்த்தம், தேவிபட்டினம், நவபாஷாணம் ஆகியவைகளையும் சேர்த்துக்கொள்வது உண்டு. பின்னர், இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் அரண்மனையில் சேதுமன்னர்களைத் தரிசிப்பதுடன் அந்தப் பயணம் முடிவுபெறும். ''சேதுபதி தரிசனமே இராமலிங்க தரிசனம் எனச் செப்பலாமே'' என்பது ஒரு புலவரது வாக்கு.

இந்த சேது யாத்திரையை கி.பி. 1524 ல் விஜயநகரப் பேரரசர் தமது பட்டத்துராணிகளுடன் மேற்கொண்டார் என்பது வரலாறு. சென்ற நூற்றாண்டில் கூட திருவாங்கூர், கொச்சி, தார், சமஸ்தானாதிபதிகள் இந்தச் சேது யாத்திரையை மேற்கொண்டு சேதுபதி தரிசனத்துடன் முடித்த செய்தி இராமநாதபுரம் மேன்யுவலில் வரையப்பட்டுள்ளது[23]. இந்த யாத்திரையை

23. Raja Ram Rao. T. Manual of Ramnad Samasthanam (1891) pp. 208-209

சேதுபதி மன்னர்களும் தங்களது குடும்பத்தினருடன் மேற்கொள்ளும் வழக்கமுடையவராக இருந்தனர் (செ. எண். 63) அவர்கள் தனுஷ்கோடிக்கரையில் சூரிய கிரகணம், சந்திரகிரகணம், உத்தராயணம், ஆடி, தை, அமாவாசை நாட்களில் புனித நீராடி இராமேசுவரத்தில் திருக்கோயிலில் பூஜை முதலியவைகளை மேற்கொண்டனர் என்பதற்கு இந்தச் செப்பேடு சான்றாக அமைந்துள்ளது.

*சேதுபாதை :*

சேது யாத்திரைக்கு பல நூற்றாண்டுகளாகப் பயன்பட்ட பெருவழி இது. இப்பொழுது கிடைத்துள்ள செப்பேடுகளில் இருந்து (செ. எண்கள் 28, 30, 51, 57) இந்தப் பாதை மூன்று கிளைகளாகச் சென்று இராமேசுவரத்தை இணைத்தது எனத் தெரிய வருகிறது. முதலாவது பாதை, வடக்கே சோழ சீமையில் இருந்து தெற்கு நோக்கிக் கிழக்குக் கடற்கரை வழியே கோட்டைப் பட்டினம், சுந்தரபாண்டியன் பட்டினம், தொண்டி, திருப்பாலைக்குடி, ஆற்றங்கரை, மண்டபம் வழியாகச் சென்றது. மற்றொருபாதை, பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையிலிருந்து கிழக்கு நோக்கி வைகையாற்றின் தென்கரையைத் தொட்டவாறு மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம், நாகாச்சி, மண்டபம் வழி இராமேசுவரத்தை அடைந்தது. மூன்றாவது பாதை, கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலிச் சீமைக் கடற்கரைவழி வேம்பாற்றினை அடைந்து அங்கிருந்து வடக்கு முகமாக சேதுபதிச் சீமையின் குறுக்கே சாயல்குடி, கடுகுசந்தை, சிக்கில், திருஉத்திரகோசமங்கை, எக்கக்குடி, திருப்புல்லாணி, வேதாளை, வழியாக இராமேசுவரம் நகரைச் சென்றடைந்தது.

இந்தப்பாதையைப் பயன்படுத்தும் மக்களது பயணக் களைப்பையும், பசியினையும், ஆற்றுவதற்கு, ஆங்காங்குச் சங்கிலித்தொடர் போல சேது மன்னர்கள் அமைத்திருந்த அன்ன சத்திரங்கள் இந்தப் பெருவழியின் எச்சங்களாக இன்னும் சீரழிந்த நிலையில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் இதே பாதைகளை ஒட்டியே மத்திய மாநில நெடுஞ்சாலைகள், பிற்காலங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

*இராமநாத பண்டாரம்*

இராமேசுவரம் திருக்கோயில் இறைபணிகளைக் கண் காணித்து நிறைவேற்ற நியமிக்கப் பட்டிருந்தவர் இராமநாத பண்டாரம் எனப்பட்டார். சோழநாட்டில் இத்தகைய ஆதின கர்த்தர்கள் சிலர் இன்றும் இருக்கின்றனர். பதினேழாம் நூற் றாண்டுக்கு முன்னர் இத்தகைய பணிப்பதவி அந்தக் கோயிலில் இருந்ததாகச் செய்தி இல்லை. இராமநாதசாமியின்பால் இயற்றப் படுகின்ற தொண்டினைக் குறிக்கும் சொல்லாக இது அமைந் துள்ளது. பல்வேறு காலங்களிலும் இந்தப் பணியில் தொடர்ந்த சைவத்துறவிகள் அனைவருக்கும் *இராமநாத பண்டாரம்* என்ற பொதுச்சொல் வழக்கில் இருந்து வந்தது. ''இராமேசுவரம் கோயில் காரியக்காரர்' என்ற பெயரும் இவருக்கு இருந்தது.

முதலாவது சடைக்கன் உடையான் சேதுபதி (கி.பி. 1604-22) காலத்தில் இந்தப்பணிப் பதவி ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது. இந்த மன்னர் இயற்றிய தேவர் கட்டளையை அந்தக் கோயிலில் சிறப்புற நிறைவேற்றி வைக்கவும் நாள்தோறும் பூசை முதலான பணிகளைக் கண் காணிப்பதற்கும் இவர் நியமனம் செய்யப்பட்டார். மேலும் இராமேசுவரம் தீவில் திருட்டு, புரட்டு குற்றங்களை செய்தவர் களை தண்டித்து ஒழுங்கும், அமைதியும், நிலவச் செய்யும் உரிமை யையும், மன்னர் இவருக்கு வழங்கி இருந்தார். இந்தப் பணியில் அரசு ஊழியரான மணியக்காரரும் பண்டாரத்திற்கு உதவ வேண் டும் என மன்னர் உத்தரவு பிறப்பித்து இருந்தார். (செ. எண் 5)

3-6-1772 ல் ஆர்க்காட்டு நவாப் இராமநாதபுரம் கோட்டை யைப் பிடித்து மறவர் சீமையை அவருடமையாக்கியதுடன் சேதுபதி மன்னரையும் திருச்சி சிறையிலிட்டதால் இராமேசுவரம் கோயில் பணிகளில் தேக்கநிலை ஏற்பட்டது. ஆனால் கோயில் பணியாளர்களது முறையீட்டின் பேரில் இயல்பான பணிகள் நடைபெறுவதற்காக இராமநாத பண்டாரத்திற்கு முழு அதிகாரம் வழங்கிய காரணத்தால் அப்பொழுதிலிருந்த இராமநாத பண்டாரம் கோவில் தர்மகர்த்தா என அழைக்கப்பட்டார். சிறை யிலிருந்த சேதுபதி மன்னர் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்ட பின்னரும் அடுத்து கி.பி. 1803-ல் இராமநாதபுரம் சமஸ்தானம்

ஜமீன்தாரியாக மாற்றப்பட்ட பொழுதும் இவர் இராமநாதபுரம் ஜமீன்தாருக்குக் கட்டுப்பட்டவராக இருந்து வந்தார் என்றாலும் இராமேஸ்வரம் நகரில் திருக்கோயிலுக்குச் சொந்தமான மனைகளில் குடியிருந்தவர்களை குத்தகைப் பாக்கிக்காக வெளியேற்றம் செய்யும் உரிமை ஜமீன்தாரைப் போல இந்தப் பண்டாரத்துக்கும் இருந்து வந்தது.[24] சேதுராமநாத பண்டாரத்தை மதுரை ஜில்லா கலெக்டர் நியமனம் செய்ததை எதிர்த்துக் கும்பினியாருக்கு இராமநாதபுரம் ஜமீன்தார் மறுப்புத் தெரிவித்தார். தமது கடமைகளை அவர் முறைப்படி செய்யவில்லையென கும்பினியாருக்கு இராமநாதபுரம் ஜமீன்தார் புகார் ஒன்றினை அனுப்பினார். இவைகளை விசாரித்த ''சர்க்யூட் கோர்ட்'', பண்டாரத்திற்குத் தண்டனை விதித்துச் சிறையில் அடைத்தது. கி.பி. 1804ல் இலங்கையில் இருந்து இராமேசுவரம் வந்த ஜார்ஜ் வாலண்டினா என்ற ஆங்கிலேயர் அப்பொழுதிருந்த வயதில் மிகவும் இளையவரான பண்டாரத்தினைச் சந்தித்த விபரங்களை அவரது பயணக் குறிப்பில் பதிவு செய்துள்ளார்.[25] இந்தப் பண்டாரத்தின் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளினால் கி.பி. 1893ல் மதுரை மாவட்ட நீதிமன்றம் இராமநாத பண்டாரம் பதவியை நிரந்தரமாக நீக்கிவிட்டு அறங்காவலர் குழுவினை இந்தக் கோயிலுக்கு ஏற்படுத்தியது. அந்தக்குழு பல்வேறு அரசியல் நிலைமைகளில் பல மாற்றங்களுடன் இன்றும் தொடர்ந்து வருகிறது.

*மடைக்கிடாய் முக்கந்தர்*

மடையுடன் சம்பந்தப்பட்ட முக்கந்தர் என்பவர் இடைக் குலத்தைச் சேர்ந்தவர். முகுந்தன் என திருமாலைக் குறிக்கும் சொல் வழக்கில் முக்கந்தராக மாறியுள்ளது. பருவகாலத்தில் மழை பெய்து மறவர் சீமையின் கண்மாய்கள் நிரம்பியவுடன் நஞ்சையில் விவசாயம் தொடங்குவது இயல்பு. வேளாண்மைக்குக் கண்மாய்த் தண்ணீரை முதன் முறையாக மடைவழி திறப்பதற்கு நாளும் நேரமும் குறிப்பிடுவது உண்டு. ஆட்டுக் கிடாய் ஒன்றினை அந்த மடையருகில் பலியிட்ட பின்னர் மடைக் கட்டைகளை நீக்கி - நிலங்களுக்கு தண்ணீர் தடையில்லாமல்

24. Tamilnadu Archives - Madurai Dist Records.-Vol. 8900/ 7.3.1834- P. 83

Vol 8902/5.5.1835 pp 315-316

25. George Valentine-History of East indies (1805)

பாயுமாறு செய்தனர். கண்ணெச்சில் கழிப்பதற்காகப் பலி யிடப்படும் இந்தக் கிடாய் *திட்டிக்கிடாய்* எனப்பட்டது. இந்தக் கிடாயினை வளமையாக வழங்குவதற்கு நியமனம் செய்யப் பட்டவர்தான் *மடைக்கிடாய் முக்கந்தர்* ஆவார்.[26]

அரண்மனையிலும் கோயில்களிலும் பலி கொடுக்கப்படும் ஆட்டுக்கிடாய்களை அளிக்கவேண்டிய பொறுப்பும் இந்த முக்கந் தருக்கு இருந்ததினால் கிராமங்களில் சில சுவந்திரங்களும் மானியங்களும் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தன.

*பிற அளவைகள்*

தானியம், நெய். எண்ணெய், ஆகியவைகளை அளந்து கணக்கிட மாகாணி. உழக்கு, படி, நாழி, குறுணி, மரக்கால், கலம் என்ற அளவைகள் அன்று வழக்கிலிருந்தன. இவைகளில் குறைந்த அளவான மாகாணி என்பது ஒரு படி அளவில் பதினாறில் ஒரு பகுதி. ஒரு படி இன்றைய இரண்டு லிட்டருக்குச் சமமானது. இந்தப் படி அளவையை அரசு அலுவலர்கள் சரி பார்த்து அனுமதித்த பின்னரே பயன்படுத்தப்பட்டது. இந்தக் காரணத்தினால் செப்பேடுகளில் ''*முத்திரைப்படி*'' என்ற சொல் காணப்படுகிறது.

இவை தவிர நிர்ணயம் செய்யப்படாத பிற அளவுகளும் இருந்தன. உப்பு தவச தானியங்களை அளவை எதுவும் இல் லாமல் கைகளினால் அள்ளிக்கொள்ளும் முறை''அள்ளுத்தீர்வை'' என்றும் ''கையெடுப்பு'' என்றும் செப்பேடுகளில் குறிக்கப் பட்டுள்ளது. ஒரு கையினால் அள்ளிக்கொள்ளப்படும் அளவினைப் ''பிடி'' என்பது போல் இரண்டு உள்ளங்கைகளையும் ஒன்று சேர்த்து இணைத்து அள்ளப்படும் தானிய அளவு ''கையெடுப்பு'' ஆகும்.

நிறுத்தல் அளவையில் பலம், வீசை என்ற அளவுகளுடன் இவையல்லாத சுமை, நடை,பொதி என்ற அளவுகளும் பழக்கத்தி லிருந்தன. இந்த அளவைகளினால் கணக்கிடப் பெறும் பொருள்

26. Raja Ram Rao. T-Manual of Ramrad Samasthanam (1891) p. 310

களின் மதிப்பை ''*பொன்*'' என்ற தங்க நாணயத்திலும் ''*பணம்*'' என்ற வெள்ளி நாணயத்திலும் குறித்தனர். ஆடகம், சுழிப்பணம், மின்னல்பணம் என்பன அவை.

*விளைபொருட்கள்*

பருவகாலங்களில் பெய்யும் மழையைக் கொண்டுதான் உயிர் விளைக்கும் உணவுப் பொருள்கள் மறவர் சீமையில் விளைவிக்கப்பட்டன. இந்த விளைபொருட்கள் மீது விதிக்கப்பட்ட நிலத்தீர்வையை விட சின்னஞ்சிறு தொழில்கள் மூலமாக மிகுதியான வருவாயினை சேதுபதி சீமை அரசு ஈட்டியது. தெரிய வருகிறது. நஞ்சை புஞ்சைத் தானியங்களைத் தவிர இன்று பணப்பயிராகக் கருதப்படும் புகையிலை இந்தப் பகுதியில் இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சாகுபடி செய்யப்பட்டது தெரிய வருகிறது. பொதுவாக நல்ல தண்ணீர் பாய்ச்சல் வசதிகள் உள்ள பகுதிதான் புகையிலைப் பயிருக்கு ஏற்றவையாகும். மதுரைச் சீமையின் நீர் வளம் மிக்க பெரியகுளம், திண்டுக்கல் பகுதியில் இந்தப் பயிர் சென்ற நூற்றாண்டில் மிகவும் குறைந்த பரப்பில் ஆங்கிலேயர்களால் விவசாய அறிமுகம் செய்யப்பட்டது.[27] ஆனால் மிகவும் வறட்சியான இராமநாதபுரம் சீமையில் திருத்புல்லாணிப் பகுதியில் இந்தப் பயிர் சாகுபடி செய்யப்பட்டதை பதினேழாம் நூற்றாண்டுச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. (செ. எண்கள் 32, 45, 82)

நஞ்சை புஞ்சை பயிர் விளைச்சலுக்கு அடுத்த படியாக இங்கே உப்பும் விளைவிக்கப்பட்டது. கி. பி. 1659, கி. பி. 1644, கி. பி. 1733 ஆண்டு செப்பேடுகளில் இந்தப்பகுதியிலிருந்த உப்பளங்களிலிருந்து வருவாய் இறுக்கப்பட்டது தெரிய வருகின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கிழக்குக் கடற்கரையெங்கும், தொடர்ந்த உப்பளங்கள் ஆங்கிலேயர் ஆட்சியிலும் மிகுதியாக இருந்ததை அவர்களது ஆவணங்கள் தெரிவிக்கின்றன. வேம்பாறிலிருந்து கலியனேரி வரை ஆங்காங்கு இந்த உப்பளங்கள் அமைந்திருந்ததுடன் கீழக்கரைக் கெதிரேயுள்ள வாளைத்தீவு, ஆனைப்பார் தீவு ஆகியவைகளிலும் இந்த உப்பளங்கள் இருந்தன. கி.பி. 1819 ல் உப்பளங்களிலிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தீர்வைக்கான நடை

27. Francis W-Gazetteer of Madurai - VolI. (1909) page.

முறைகளையும் ஆங்கிலேயர் நிர்ணயம் செய்ததுடன், இந்தப் பகுதி உப்பு விளைச்சலை சேமித்து வைக்க இந்தக் கடற்கரைப் பகுதியில் முப்பத்துமூன்று இடங்களில் கிட்டங்கிகளையும் அவர்கள் நிர்மாணித்திருந்தனர்.[28] இந்த உப்பு விளைவிக்கப் படும் இடம் அளம் என்றும் விளைச்சலை அளவையிட பொதி, கண்டி என்ற அளவைகள் இருந்ததும் தெரியவருகின்றன.

மற்றும், இந்தப்பகுதியில் - கடற்கரையிலும், உள் நாட்டி லும் - பனைமரங்கள் மிகுதியாக இருந்தன. இவைகளில் இருந்து ஓலை, ஈர்க்கு, நார், மட்டை, அகனி, நுங்கு, கள், பதனீர் பழம், கருப்பட்டி - ஆகிய பொருட்கள் கிடைப்பதினால் இதனை மக்கள் கற்பக தருவாகக் கருதினர். இந்தப் பொருட்கள் அனைத்தும் மக்களது அன்றாட பயன்பாட்டிற்கு உதவிய பொழுதும்-பதனீரில் இருந்து தயாரிக்கப்பட்ட கருப்புக்கட்டி களும் (கருப்பட்டி) பனைபழத்திலிருந்து தயாரிக்கப்பட்ட பனை மட்டு (பனாட்டு)ம் எதிர்க்கரையில் உள்ள இலங்கைக்கும் அடுத் துள்ள சோழமண்டலக் கரைப்பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப் பட்டு வந்தன.

*மகமை*

சமுதாயப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்காக மக்கள் தாமாக முன்வந்து அளிக்கின்ற பணம், பொருள் மகமை எனப் படும். இந்தச் செப்பேடுகளில் ஐந்து மகமைகள் பற்றிய விபரங்கள் உள்ளன. குறிப்பிட்ட இலக்குகளை எய்துவதற்காக மகமைகள் உருவாக்கப்பட்ட போதிலும் அதனை இதய பூர்வமாக ஏற்று முறைப்படுத்த வேண்டியவர்கள் மக்கள் ஆனால் சேதுபதி சீமையில் அனைத்து மக்களும் இந்த மகமை வழங்குவதில் ஆர்வ முடன் ஈடுபட்டனர், என்பதை அறியும் பொழுது மக்களிடையே அன்றிருந்த பொதுமை நோக்கும், ஒருமைப்பாட்டுணர்வும் பாராட்டுதலுக்குரியவையாக உள்ளன.

இராமநாதபுரம் நகருக்கு அண்மையிலுள்ள பெருவயல் இரணபலி முருகையா ஆலயத்தில் அன்றாட கைங்கரியங்களும் ஆண்டுத் திருவிழாவும் நடைபெற உதவுவதற்கு மகமை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சேதுராஜன் பேட்டை வணிகர்கள்

28. Madura Dist. Records - Vol. 4684-B/26-2-1833/p.33 35
Vol. 1154/1808.AD/p. 143.

அனைவரும் தங்கள் வருவாயின் ஒரு பகுதியை மகமையாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து உள்ளனர். (செ. எண். 88) இதே மாதிரியான மகமை இராமநாதபுரம் மாரிதுர்க்கை திருக் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயில் திருப் பெருந்துறை ஆளுடைய பரமசுவாமி திருக்கோயில், மற்றும் கீழக்கரை சொக்கநாதசுவாமி திருக்கோயில் அர்ச்சகரது பராமரிப்புக்கும் சேது மன்னர்கள் மகமை ஏற்படுத்தியதை நான்கு செப்பேடுகள் தெரிவிக்கின்றன. (செப்பேடு எண்கள் 15, 17, 25, 49)

மறவர் சீமை மன்னர், மக்கள், ஆகிய இருபாலரது இறை யுணர்வினை இந்த ஆவணங்கள் வெளிப்படுத்துவதுடன்மன்னரது அதிகார வரம்பிற்குட்பட்ட சீமைகளில் மக்களது தொழில், விளைபொருட்கள், ஆலய விழாக்கள் ஆகியவைகளையும் அறியத் தக்க காலக் குறிப்புக்களாகவும் அவை இருந்துவருகின்றன.

*கோயில் வருவாய்கள்*

சேதுபதிச் சீமையில் உள்ள திருக்கோயில்களுக்கு குடிமக்கள் தங்களது அன்புக்காணிக்கையாக பலவிதமான பொருட்களை வழங்கி வந்ததை செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இந்தவரவினங் களில் கிராம மக்களது விளைபொருள்களுடன் அவர்களது கால் நடைச்செல்வங்களும் அடங்கியிருந்தன. இவைகளை இராமேசு வரம் போன்ற பெரிய திருக்கோயில்களில் பராமரித்து வருவதற் காகக் கால்நடைப் பட்டிகளும், பசுமடங்களும் ஏற்படுத்தப்பட்டி ருந்தன. இவை ''பசுவந்தனை'' என்றும் வழங்கப்பட்டது. இவை தவிர சுண்டுவாதம் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட மாடு களுக்கு அவை நோயின்றும் மீட்சி பெற சூட்டுக்கோலினால் சூலம் போடும் வழக்கமும் இருந்து வந்தது. இதற்கெனப் பெறப்பட்ட சிறு வருவாயும் இராமேசுவரம் திருக்கோயில் பண்டாரத்தில் சேர்க்கப்பட்டது.

இந்தக்கோயிலுக்கு மற்றுமொரு வருவாய் இருந்ததை செப்பேடு சொல்கின்றது. இறக்க முக்தி தலம் காசி என்பது ஆத்திகர்களது நம்பிக்கை ஆகும். முந்தைய காலங்களில் இவர்கள் காசிக்குச் சென்று கங்கையில் குளித்து விசுவநாதரைத் தரிசனம் செய்து நிலையான நிம்மதி பெற்றவுடன் அவர்கள் தங்களது வாழ்க்கையை அந்தப் புனித தலத்திலேயே முடித்துக்

கொள்ளும் பழக்கம் இருந்து வந்தது. இத்தகைய காசியாத் திரையை மேற்கொள்ள இயலாத சிலர் இராமேசுவரம் யாத் திரையின் பொழுதும் தங்களது வாழ்க்கையை முடித்துக் கொண்ட னர். இவ்விதம் இறந்த அனாதைப் பிணங்களின் உடமைகளும் அந்தத் திருக்கோயிலுக்கே சேர்க்கப்பட்டு வந்தது.

*வானமண்டல மாற்றங்கள் :*

சூரியனை அச்சாகக் கொண்டு செயல்படும் அண்ட கோளங்களில் பூமி பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சூரியனி லிருந்து அமைந்திருந்தாலும், சூரியனது இயக்கத்தில் ஏற்படு கின்ற இயல்பான மாற்றங்கள். பூமியின் இரவு, பகம் பொழு தினைப் பாதிக்கின்றன. அவை சந்திர கிரகணம், சூரிய கிரகணம் என்று வழங்கப்படுகின்றன. இந்தப் பாதிப்புகள் பூமியி லுள்ள மனிதர்களுக்கும் பொருந்தும் என்ற நம்பிக்கையும் உணர்வும் பல நூற்றாண்டுகளாக மக்களிடத்தில் இருந்து வரு கின்றது. ஆகையால் அந்தக் கிரகண காலங்களில் முக்கியமான பணிகளில் ஈடுபடாமல் அமைதியாக இறை தியானத்திலும் புனித நீராடலிலும், மக்கள் ஈடுபடுகின்றனர். சூரிய சந்திர இயக்கங்களை, ஆதாரமாகக் கொண்டு வரையப்படுகின்ற. சூரிய ஆண்டு, சந்திர ஆண்டு, கணக்குகளில் இந்த நிகழ்வுகள் முக்கிய மான காலக் குறியீடுகளாகக் குறிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செப்பேட்டுத் தொகுப்பில் ஐந்து கிரகண நிகழ்ச்சி கள் பதிவு செய்யப்பட்டுள்ளன :

1. சந்திர கிரகணம் — சக ஆண்டு 1595 பிரமாதீச வைகாசி 15 (கி. பி. 12-5-1673)
2. சூரிய கிரகணம் — சக ஆண்டு 1699 நள மார்கழி 21 (கி. பி. 10-12-1676)
3. சூரிய கிரகணம் — சக ஆண்டு 1611 விபவ சித்திரை மீ" (கி. பி. 20-04-1688)
4. சந்திர கிரகணம் — சக ஆண்டு 1658 பிங்கல வைகாசி மீ" (கி. பி. 25-03-1737)
5. சூரிய கிரகணம் — சக ஆண்டு 1684 சித்திரபானு ஐப்பசி மீ" (கி. பி 17-10-1762)

*பொழுதுபோக்குகள்*

விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில் வசதிகள் பெருகியுள்ளதைப் போன்று மக்களது பிரச்சினைகளும் மிகுந்

துள்ளன. அவைகளினின்றும் விடுபட பல பொழுதுபோக்குகள் தோன்றியுள்ளன. ஆனால் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் வறண்ட பகுதியான இந்தச் சீமையில் வாழ்ந்த மக்களது வாழ்க்கை பெரும் சுமையாக இருந்ததில்லை. அதனால் அவர்களது சிந்தனையும் செயல்பாடும் சமுதாய நலனுக்குச் சீரிய முறையில் பயன்பட்டன. அன்றைய சேதுநாட்டு மக்கள் வளரி எறிதல், வில் அடித்தல், மல் இடுதல், காளை அடக்குதல், கம்பு விளையாட்டுக்கள், போன்ற பொழுது போக்குகளில் ஈடுபட்டிருந்தனர். இவைகளைவிடப் பயனுள்ள பொழுதுபோக்குகளாக விழாக்கள் அவர்களுக்கு உதவின.

மாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் இராமேசுவரம் திருக்கோயிலிலும், புரட்டாசி மாதத்தில் இராமநாதபுரம் இராஜராஜேஸ்வரியம்மன் திருக்கோயிலிலும், மார்கழி மாதத்தில் திருஉத்திரகோசமங்கை திருக்கோயிலிலும், திருப்புல்லாணி பெருமாள் கோயிலிலும் இராமநாதபுரம், மாரிதுர்க்கை ஆலயத்திலும் சிறப்பானவிழாக்கள் எடுக்கப்பட்ட செய்திகளை செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இராமேசுவரம் ஆவணிமூலத் திருவிழாவும் இராமநாதபுரம் மகர் நோன்பு விழாவும் மக்களைப் பெரிதும் ஈர்த்து வந்தன. இவைதவிர, ஆடி, தை மாதங்களில் சேதுக் கரையிலும், தனுஷ்கோடியிலும், கடல் நீராடலில், மன்னரும், மக்களும் கலந்துகொள்வது பெரிய பொழுதுபோக்காகும்.

*கிடைக்காத செப்பேடுகள் :*

இராமேஸ்வரம் திருக்கோயிலின் மூன்றாவது பிரகாரம் உலகப் புதுமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த அற்புதக் கலைப் படைப்பினை கி. பி. 1720-க்கும் கி. பி. 1765-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சிசெய்த சேதுமன்னர்கள் செய்து முடித்துள்ளனர். கடல்சூழ்ந்த இராமேசுவரம் தீவில் பிரம்மாண்டமான இந்தக் கல் கட்டுமானத்தைக் காலங்கடந்து நிற்கும் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியின் சின்னமாக அவர்கள் அமைந்துள்ளனர். இதனை நிர்மாணித்த கல் தச்சர்களைச் சேதுபதிகள் பாராட்டி சீவித காணிகள் வழங்கிச் சிறப்புச் செய்திருக்க வேண்டும். ஆனால் அந்த ஆவணம் செப்பேடுகள் இன்று வரைக் கிடைக்கவில்லை. இதனைப் போன்றே திருப்புல்லாணி, திருவாடானை, காளையார் கோவில். நாட்டரசன் கோட்டைத் திருக்கோயில்களை அமைத்து உதவிய ஸ்தபதிகள் சேதுமன்னர்

மன்னர்களிடமிருந்து பெற்ற சர்வமானியச் செப்பேடுகளும் கிடைக்கப் பெறவில்லை.

மூவேந்தருமற்று மூன்று சங்கமும் போய் பாவேந்தர்கள் இலவம் பஞ்சாய் பரிதவித்த பொழுது தேவேந்திர தாருவாக, தமிழ்ப்புலவர்களைப் போற்றிப் புரந்தவர்கள் சேது மன்னர்கள். தளசிங்க மாலை, என்ற இலக்கியத்தைப் படைத்த அழகிய சிற்றம்பலக்கவிராயருக்கு ஐந்து ஊர்களைத் தானமாக அளித்து உதவினார் திருமலை சேதுபதி, அதே மன்னரது அவையில் ஒரே துறையில் ஒப்பற்ற நானூறு பாடல்களைப்பாடி ''ஒரு துறைக் கோவை''யை அரங்கேற்றிய அமிர்தகவிராயர் பொன்னாங்கால் என்ற ஊரினை சர்வமானியமாக பெற்றார்.

ஆதிசங்கரது ஆனந்த லஹரியையும்; சௌந்தரிய லஹரியையும் தமிழில் படைத்த கவிராஜ பண்டிதருக்கு நல்லுக்குறிச்சி கடம்போடை ஊர்களைப் பட்டயமிட்டு பரிசாக அளித்தார் ரெகுநாதகிழவன் சேதுபதி.

திருச்செந்தூர் கோவையைப் பாடிய சர்க்கரைப் புலவர், குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதியிடமிருந்து சிறுகம்பையூர், கொண்ட ஆலங்குளம், கொடிக்குளம், என்ற ஊர்களை பரிசாக பெற்றார்.

அரசவைக் கவிஞராக வீற்றிருந்த ஆசுகவி மீர்ஜவ்வாதுப் புலவர், சுவாத்தன், வண்ணவயல் ஆகிய கிராமங்களை முத்துராமலிங்க சேதுபதியிடமிருந்து முற்றூட்டாக பெற்று மகிழ்ந்தார்.

இன்னும் மருதூரந்தாதி பாடிய தலமலைக்கண்ட தேவர் மருதூர் புராணம் பாடிய சிற்றம்பல ஐயா, விஞ்சைக் கோவை, பணவிடுதூது பாடிய பலபட்டடை சொக்கநாதப்புலவர் கொடுமலூர், முருகன் பிள்ளைத்தமிழ் பாடிய சரவணப்பெருமாள்கவிராயர் ஆகிய புலவர் பெருமக்கள் சேது மன்னர்களது அன்பான அரவணைப்பில் வாழ்ந்து வந்தனர்.

இவையும் இவைபோன்ற இன்னும் ஏராளமான வரலாற்றுச் செய்திகளைச் சொல்லக்கூடிய செப்பேடுகள் இதுவரைக் கிடைக்கவில்லை. சேது மன்னர்களது சிறப்பான தமிழ்ப்பணியையும், இறையுணர்வையும் விளக்கக்கூடிய செப்பேடுகளைக் காண காலத்தின் கனிவினுக்கு காத்திருக்க வேண்டியது தான்.

# 4

# சடைக்கன் சேதுபதி (கி.பி. 1605-22)

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறவர் சீமையின் மன்னராக இருந்தவர் சடைக்கன் சேதுபதி என்பவர்[1] அவர் சடைக்கன் உடையான் என்றும் திருமலைஉடையான் சேதுபதி என்றும் வரலாற்று ஆவணங்களில் குறிக்கப்படுகிறார். இவருக்கு செயதுங்கள் என்ற ஒரு பெயரும் இருந்ததை பழஞ் சுவடியொன்று[2] தெரிவிக்கிறது.

பொதுவாக, சிவாலயங்களில் கோயில் கொண்டுள்ள மூர்த்தியைக் குறிப்பிடும் சொல் ''உடையார்''. இராமேசுவரத்து இராமநாத சுவாமிக்கு ஆட்பட்டவர் என்ற பொருளில் இந்த மன்னர், உடையார் என்ற பெயரைப் புனைந்து இருந்தார். ''இராமனாகிய திருமாலுக்கு நாதரான சிவன்''என்ற பொருளில் சைவ வைணவ சமய நெறிகளின் ஒற்றுமைப் பெயராக ''இராமநாதசுவாமி'' ''இராமேசுவரன்'' என்ற பெயர்கள்

1. Pedigiree field by Sivakami Nachiar in O. S. 3 of 1813 of the Pronimicial Court, Madras.
2. Taylor C. J.-Old Historical Manuscripts-Vol II (1835) p 22.

வழங்குவது போல இந்த மன்னரும் இந்த இருபெரு நெறிகளின் சார்பு தோன்ற செப்பேடுகளில் தமது பெயரை ''உடையான் திருமலை சேதுபதி'' எனப் பொறித்துள்ளார்.

இந்த மன்னரது ஆட்சிக் காலத்தில், மறவர் சீமை நீங்க லான பாண்டிய நாட்டை மதுரையில் இருந்து ஆண்டுவந்தவர், முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் (கி. பி. 1601-1609) ஆவர். இவரது ஆட்சியில் அரசியல் குழப்பமாக இருந்தது. அன்னியர்கள் குறிப்பாக போர்ச்சுகீஸியர், இலங்கை வரையான கிழக்கு கடல் முழுவதையும், தங்களது ஆதிக்கத்திலும், வாணிபபிடிப்பிலும் இருத்தி வைத்துக் கொள்ளும் நிலையெழுந்தது. ஆனால், அவர்களை முழுமையாகப் பொருதி அழிப்பதற்கு அல்லது அவர்களது கடல் செல்வாக்கை குறைப்பதற்கு ஏற்ற மறப்படை, தரைப்படை, கடற்படை, நாயக்க மன்னரிடம் இல்லை. கன்னியாகுமரியில் இருந்து இராமேசுவரம் வரையிலான கடல் பாதையில் போர்ச்சுகீசிய பரங்கிகள் பல இடங்களில் தங்களது நிலைகளையும் கோட்டைகளையும் அமைத்துக் கொண்டு அவைகளை நிர்வகித்து வந்ததுடன், பரவர்களைக் கொண்டு முத்துக்குளித்து பெரும் ஆதாயங்களையும் அடைந்து வந்தனர். இந்தமண்ணின் மரபுகளை சட்டதிட்டங்களை, ஆட்சியாளர்களை, மதித்து நடக்க வேண்டும் என்ற எண்ணங்கூட அவர்களுக்கு இல்லை.

இந்நிலையில், மன்னர் முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரது ராஜகுரு தலயாத்திரையாக இராமேசுவரம் வந்தார். அப்பொழுது மறவர் சீமையின் மன்னரை, அவரது ஆட்சித்திறனை நேரில் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அப் பொழுது''... தன்னரசு நாடாய், ஊருக்குஊர் கோட்டை உண்டு பண்ணி அரண்மனைக்கு வாரவரிசை கொடாமல், எங்கே பார்த்தாலும், காடுவளத்துக்கொண்டு சீமை கொள்ளையிடு கிறதும், சேதுமார்க்கத்தில் ராமேசுவரத்துக்குப் போகிறபரிசுகளை சில்லரை பண்ணி, வெட்டிக்குத்தி, பறித்துபோறதுமாயிருந்தது. கர்த்தாக்களாகிய முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருடைய குருக்கள் ராமேசுவரத்துக்கு தலயாத்திரை சென்றார். அப்போது போக லூரில் இருந்த உடையார் சேதுபதியானவர், குருக்களுக்கு காவ லாக இராமேசுவரம் வரைக்கும் போய் வழிப்பாதையில், சல்லிய

மில்லாமல், பத்திரமாய் பார்த்து குருக்கள் இராமேசுவரத்துக்குப் போய் மதுரை வருகிறவரைக்கும் கூடவே வந்தார் ... ... ...''[3] இதனால் பெரிதும் மகிழ்ச்சியடைந்த மதுரை மன்னர், சடைக்கன் சேதுபதியைப் பாராட்டி, தமது எழுபத்து இரண்டு பாளையக் காரர்களுக்கும் தலைமையான ''தளவாயாக'' நியமனம் செய் தார்.[4] கிழக்கு கடற்கரைப் பகுதியில் பரங்கியரது ஆதிக்கத்தைச் சமாளிப்பதற்கான, புத்திசாலித்தனமாக, மதுரை நாயக்கர் மேற் கொண்ட நடவடிக்கை இது என்பது கால்டுவெல் பாதிரியரது கருத்து[5]

சேதுபதி மன்னரும் மதுரை நாயக்க மன்னருக்கு அதிகாரத் துக்கு அல்லாமல் அன்பிற்கு கட்டுப்பட்டு அரசியல் உறுதுணை யாக உதவிவந்தார். வடக்கு வட்டகையான காளையார்கோயில், பட்டமங்கலம் பகுதியில் பயங்கரமான குழப்பங்களைத் தோற்று வித்த குறும்பர்களையும், தெற்கே சிவகிரி வன்னியனையும், அடக்கி அமைதி நிலைக்கச் செய்தார். மறவர்சீமையில் அவரது ஆட்சிப் பதினேழு ஆண்டுகள் நடைபெற்றன. இந்த மன்னரது தலைமையிடம் (சில காலம் போகலூரிலும்) பெரும்பாலும் இராமேசுவரத்திலும் இருந்ததாக தெரிகிறது. இராமேசுவரம் கந்தமான ஆலயத்திற்கு அண்மையில் உள்ள இடிபாடுகள் இந்த மன்னரது வரலாற்றிற்கு தொடர்புடையவை. மற்றும் இராமநாதபுரம் நகருக்கு மேற்கே பத்து கல்தொலைவில் உள்ள போகலூர் இந்த மன்னரது கோநகராக விளங்கிய அதற்கான தடயங்கள் எதுவும் இப்பொழுது இல்லை, இங்கு புகலிடம் பெற்ற மக்களது ஊர் என்ற பொருளிலோ (புகலூர்) அல்லது இங்குள்ள ஆலயத்தில் அமர்ந்துள்ள ''பெரும்புகழ் கூத்த நாயனார்'' நினைவாகப் ''புகழூர்'' என்று இந்த ஊரின் பெயர் அமைதல் வேண்டும்.

---

3 Taylor C.F. old Historical Manuscripts (1835) Vol II p.27-29

4. Sathianathier - History of Madura Nayaks (1924) pp. 92-93

5. Caldwell - Fr. General and Physical History of Tinneveli p, 71

இந்த மன்னர் அரசியலில் மதுரை நாயக்க மன்னரது தொண்டராகச் செயலபட்டாலும் மறவர் சீமைக்கென தனியான நாணயங்களை அச்சிட்டு வழங்கினார்.[6] ஒருபுறம் ''சேதுபதி'' என்ற நான்கெழுத்து சொல்லும் மறுபுறம் பிள்ளையார் திரு உருவும் கொண்ட இவரது செப்பு நாணயங்கள், இராமநாதபுரம், இராமேசுவரம், பெரியபட்டினம், ஏறுபதி ஆகியஊர்களில் கிடைத் துள்ளன. இவர் இராமேசுவரம் திருக்கோயிலில் பல கட்டுமானங் களை அமைத்ததுடன், அந்தகோயிலின் பூசனைகளுக்கும் பல கட்டளைகளை நிறுவி, அவைகளுக்கு உடலாகப் பலஊர்களை யும் மானியமாக அளித்தார். அத்தகைய நிலமானியகளுக்கான செப்பேடுகளில், கிடைத்துள்ள மூன்று மட்டும் இங்கே கொடுக்கப் பட்டுள்ளது.

6. Rengachariya—Indian Antiquary' Vol IV (1966). p. 106.

## மாதிரி செப்பேடு (முன்பக்கம்)



குளவயல் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு
**முத்துக்குமார விசைய ரெகுநாத சேதுபதி** அவர்கள்
9-6-1729 தேதியன்று வழங்கிய செப்பேடு
விளக்கத்தை செப்பேடு எண்-45ல் பக்கம் 400—408ல் பார்க்கவும்.

## மாதிரி செப்பேடு (பின்பக்கம்)



இதன் விளக்கம் செப்பேடு எண் 45ல் பக்கங்கள் 400—408ல் பார்க்கவும்

## செப்பேடு எண். 1
(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் 1529 யிதின்மே
2. ல் செல்லாநின்ற பராபவஷூ கார்த்திகைமீ 10 கிஷ்ணப
3. ச்சம் அமாவாசையும் அனுசநட்சத்திரமும் சுபயோக சுபகரண
4. மும் பெற்ற புண்ணியகாலத்தில் தேவை நகராதிபன் சேதுமூல
5. ரெட்ச துரந்தன் இராமநாதசுவாமி காரியதுரந்தன் சி
6. வ பூசாதுரந்தன் பாராசகெசிங்கம் சொரிமுத்து வண்ணிய-
7. ன மகாமண்டலேசுரன் மூவராயிகண்டன் கண்டனாடு கொண்டு கெ
8. காண்டனாடு குடாதான் பட்டமானங்காத்தான் துட்டராயி கண்ட
9. ன் புவனேகவீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர்கள் கா
10. வலன் அரசராவணராமன் பாதளவிபாடன் அந்தப்பிர கண்ட
11. ன் சுவாமிதுரோகியன் பஞ்சவர்னராவுத்தராயன் வைகை
12. வளநாடன் கொட்டமடக்கி யிவளிபாவடி மிதித்தேருவா
13. ர்கண்டன் வீரவெம்பாமாலையான் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம்
14. பகைமன்னர்சிங்கம் துரைராயன் மதப்புலி அடைக்கலங்கா

---

Published in A. 551. Vol. IV pp. 66-67
வடிவம் : 26. செ.மீ × 19. செ.மீ.

15. த்தான் தாலிக்கிவேலி சத்திராதியள் முண்டன் வன்னியரா ட்டம் த
16. விள்த்தான் மேவலர்கள் வணங்குமிருதோளினான் வீரமகா
17. கெம்பீரன் கீர்த்திபிரதாபன் ஆரியமானங்காத்தான் தொண்
18. டியன் துறைகாவலன் தூர்கரோபந்தன் அனுமகேதநன் குடைக்
19. கிகரணன் பரிக்கிநகுலன் பரதனாடகப்பிரவீணன் கறுணாக
20. டாச்சன் திலதணுதல் மடமாதர்மட லெளுதுவருசுமுகன் வி
21. சையலெட்சுமீகாந்தன் கலைதெரியும்விர்பன்ன காமினீ கந்தப்
22. பன் சத்தியபாசா அரிசந்திரன் சங்கீதசாயித்திய வித்தியாவி
23. நோதன் வீரதண்டைசேமதலை விளங்குமிருதாளினான் சகல சா
24. ம்பிராச்சிய லெட்சுமீவாசன் செய்துங்கராய வங்கிஷாதிப
25. னான துகவூர் கூத்ததில்காதூரான குலோத்துங்கசோளக நல்
26. லூர் கீள்பால்விரையாதகண்டனில் இருக்கும் றாசஸ்ரீ தளவா
27. ய் சேதுபதி காத்ததேவரவர்கள் இராமனாதசுவாமி பறுவதவ
28. ர்த்தனி அம்மன் அபிஷேகனெய்வேதனம் பூசைக்கி இராமனாதப
29. ண்டாரமவர்கள் பாரிசம் தான பூர்வமாக கட்டளையிட்டது
30. மும்முகாத்தன்பாண்டியூர் தியாகவஞ்சேரி வெங்கட்டங்
31. குரிச்சி கொந்தை அஞ்சுகிறாமமும் மேல்படி நாங்கெல்கை
32. க்குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுதிடல் ஏந்தல் பிரவிளை
33. டகுட்டம் குளம் பளவரி பணவரி சகல சமுதாயமும் ச

இரண்டாவது பக்கம்

34. றுவமானியமாக இராமனாதசுவாமிக்கு உபையமாக
35. தாம்புரசாதனபட்டையம் குடுத்தோம் இந்தகிராமம் ச
36. ந்திராதித்தாள் சந்ததிபிரவேசம் உள்ளவரைக்கிம் ஆ
37. ண்டு அனுபவித்துக்கொள்ளக்கடவாராகவும் இந்த தர்
38. மம் யாதாமொருதர் அபிமானிச்சு பரிபாலனம்பண்ணி
39. க்கொண்டவர்கள் கோடிகெங்காஸானம்பண்ணின
40. சுகிர்தமும் கோடிதனுக்கோடி தீர்த்தமாடின சுகிர்
41. தமும் கோடி கன்னிகாதானபலனும் கோடி பூதானம்பண்
42. ணின பலனும் கோடி அக்கிரகாரபிரதிட்டைபண்ணின ப
43. லனும் அடைவாராகவும் இதர்க்கு ஆரா இலும் அகிதம் ப
44. ண்ணினபேர்கள் கெங்கைக்கரையிலே காராம்பசுவை
45. வகொன்னதோசத்திலேயும் விறுமகத்திபண்ணின
46. தோசத்திலேயும் மாதாபிதாவை கொன்னதோசத்தி
47. லேயும் போவாராகவும் வ தளவாய் சேதுபதி வ

## செப்பேடு எண். 1

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : தளவாய் சேதுபதி காத்த தேவர்.
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் திருக்கோயில் இராமநாத பண்டாரம்.
3. செப்பேட்டின் காலம் : சகம். 1529. பிரபவ ஆண்டு கார்த்திகை 10 தேதி(2-9-1807)
4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயிலுக்கு ஐந்து கிராமங்கள் தானம்.

இந்த செப்பேட்டை வழங்கிய மன்னர் தளவாய் சேதுபதி காத்த தேவரது விருதாவளியாக கீழ்க்கண்ட ஐம்பத்து ஒரு சிறப்புப் பெயர்கள் இந்தப்பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

1. தேவை நகராதிபன்
2. சேது மூலரட்சா துரந்தரன்
3. இராமனாத சுவாமி காரிய துரந்தன்
4. சிவபூசா துரந்தரன்.
5. பரராசசிங்கம்.
6. சொரிமுத்து வன்னியன்
7. மகாமண்டலேசுவரன்.
8. மூவராய கண்டன்
9. கண்ட நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்
10. பட்டமானங் காத்தான்.

11. துட்டராயிர கண்டன்
12. புவனேகவீர கஞ்சுகன்.
13. வீரவளநாடன்.
14. வேதியர் காவலன்.
15. அரசராவண ராமன்
16. பாதள விபாடன்.
17. அந்தப் பிரகண்டன்
18. சுவாமி துரோகியன்.
19. பஞ்சவர்ண ராவுத்தன்
20. வைகை வளநாடன்.
21. கொட்ட மடக்கி
22. இவுளி பாவடி மிதித்து ஏறுவார் கண்டன்
23. வீரவெம்பாமாலையான்
24. இளஞ்சிங்கம்
25. தளஞ்சிங்கம்
26. பகைமன்னர் சிங்கம்
27. மதுரைராயன்
28. மதப்புலி
29. அடைக்கலங்காத்தன்
30. தாலிக்கு வேலி
31. சத்திராதியர் முண்டன்
32. வன்னியாராட்டம் தவிள்த்தான்
33. மேவலர்கள் வணங்கும் இருதாளினான்
34. வீரமகா கம்பீரன்
35. கீர்த்திப் பிரதாபன்.
36. ஆரியமானங்காத்தான்
37. தொண்டியந்துறைக் காவலன்
38. துரக ரேபந்தன்
39. கொடைக்கு கர்ணன்
40. பரிக்கு நகுலன்
41. பரத நாடகப் பிரவீணன்
42. கருணாகடாட்சன்
43. திலதநுதல் மடவார் மடல் எழுதவரு சுமுகன்
44. விசையலட்சுமி காந்தன்
45. கலைதெரியும் விற்பனன்
46. காமினி கந்தப்பன்
47. சத்திய பாசா அரிச்சந்திரன்
48. சங்கீத சாகித்ய வித்யா வினோதன்
49. வீரதண்டை சேமத் தலை விளங்கு மிருதாளினன்
50. சகல சாம்பிராச்சிய லெட்சுமீவாசன்
51. செயதுங்கராய வங்கிஷாதிபன்

இந்த விருதாவளிகளில், மகாமண்டலேசுவரன், மூவராய கண்டன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் என்ற மூன்று விருதாவளிகளும் விசைய நகரப் பேரரசர்களுக்கும் அவர்களது பிரதிநிதியான மதுரை நாயக்க மன்னர்களுக்கும் உரியவை.[1] என்றாலும், இந்த சடைக்கன் சேதுபதி மன்னர் மதுரை முத்துக்கிருஷ்ணப்பநாயக்கரது தளவாயாக பணியாற்றிய

---

1. சுப்பிரமணியன் பூ. மெய்க்கீர்த்திகள் (1983) பக்கம் 292-96

தால் அவரது விருதாவளியையும் தமது விருதாவளியாகக் கொண்டுள்ளார். இதனைப் போன்றே பதினைந்தாவது நூற்றாண்டின் இடைப்பகுதியில் மறவர் சீமையின் வடக்குப்பகுதியை தமது ஆட்சியில் கொண்டிருந்த சுந்தரத் தோளுடைய மாவலி வாணாதிராயரது சிறப்புப் பெயர்களான ''சேது மூலாரட்சதுரந்தரன்'', ''புவனேகவீர கஞ்சுகன்'' ''வேதியர்காவலன்'' — ஆகிய சொற்றொடர்களும்[2] இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன.

இந்த வாணாதிராயரது கல்வெட்டுக்கள் தேவிபட்டினம், திருப்புல்லாணி, காளையார் கோவில் திருக்கோயில்களில் உள்ளன. ''புவனேகவீரன்'' எனப்பொறிக்கப்பட்ட இந்த மன்னனது செப்புக்காசுகள் இந்த மாவட்டத்தில் அழகன்குளம், பெரியபட்டினம், ஆகிய ஊர் அகழ்வுகளிலும் கிடைத்துள்ளன. ''மைக்கருங்கண் மாதரார் மனங்கவர்ந்த மாரவேள், மதுரை வீரகஞ்சுகன்'' என்பது இந்த மன்னனைப் பற்றிய இனிய தனிப் பாடலின் தொடர்.[3]

எஞ்சிய நாற்பத்து ஐந்து விருதாவளிகளும் இந்த சேதுபதி மன்னரது வீரப்பண்புகளையும் சமயச்சார்பையும் கலைகளில் உள்ள ஈடுபாட்டையும் எடுத்து இயம்புவதாக உள்ளன. குறிப்பாக ''வன்னியராட்டந் தவிழ்த்தான்'' என்ற விருதின் பின்னணியில் முத்துகிருஷ்ணப்ப நாயக்க மன்னருடன் முரண்டிய சிவகிரி பாளையக்காரன் வன்னியனை இந்த சேதுபதி மன்னர் அடக்கியொடுக்கிய வீரவரலாறு,[4] இணைந்துள்ளது. இதனையொத்த வீரதீரச் செயல்களின் வடிவாகத்தான் இந்தச் செப்பேட்டில், வீரவளநாடன், பஞ்சவன்னராவுத்தன், கொட்டமடக்கி, வீர வெண்பா மாலையான், பகை மன்னர் சிங்கம், வீரமகா கம்பீரன், மேவலர்கள் வணங்கும் இருதாளினான், விசைய லட்சுமி காந்தன், பரராஜசிங்கம் என்ற விருதாவளிகள் இடம் பெற்றுள்ளன.

2. வேதாச்சலம் — வெ. பாண்டிய நாட்டில் வாணாதிராயர் (1988) பக்கம் 15.
3. பெருந்தொகை — மதுரைத் தமிழ்ச்சங்கப்பதிப்பு (1932) பாடல் எண். 1008.
4. Sathianathaier. S – History of Madurai Nayaks (1924)

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் இராமேசுவரம் திருக்கோயிலுக்கு தானமாக வழங்கியுள்ள ஏராளமான அறக்கொடைகளைக் குறிப்பிடுகின்ற செப்பேடுகளில், வரலாற்று ஆய்வாளர்களுக்கு கிடைத்த முதலாவது செப்பேடு இது. இராமேசுவரம் இராமனாதசுவாமி — பர்வத வர்த்தினி அம்மன் ''அபிஷேகம், நெய்வேதனம், பூசை''க்காக உடையான் சடைக்கத் தேவர் தானமாக ஐந்து கிராமங்களை இராமனாத பண்டாரம் என்பவருக்கு வழங்கிய செய்தி அதில் உள்ளது. திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம், திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாகத்தை நடத்திய ஆதின கர்த்தர்களான சைவத்துறவிகளைப் போன்று இராமேசுவரம் இராமனாதசுவாமி திருக்கோயிலின் நடைமுறைகளைப் பேணிப்பாதுகாத்த ஆதினகர்த்தர், இராமனாத பண்டாரம் என்பது தெரிய வருகிறது. இத்தகையதொரு ஆதினகர்த்தர் முறையை இந்தச் சடைக்கன் சேதுபதிதான் ஏற்படுத்தி இருக்க வேண்டும் என உறுதியாக நம்பலாம். ஏனெனில், இதற்கு முன்னர், கி.பி. 1585 ல் வரையப்பட்ட செப்பேட்டில் இராமேசுவரம் திருக்கோயில் பூஜாகர் சபையோர் அனைவரும், மதுரை மன்னர் வீரப்பநாயக்கருக்கு அளித்த இசைவு முறியில், இராமநாத பண்டாரம் பெயர் குறிப்பிடப்படவில்லை.

பின்னர், இந்த இராமநாத பண்டாரம் என்ற சொல்தளவாய். சேதுபதி, திருமலை சேதுபதி மன்னர்கள் ஆட்சிக்கால செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ளது. மற்றைய சேதுபதி மன்னர்கள் ஆட்சி காலச் செப்பேடுகளில் (நமக்கு கிடைத்தவைகளில்) இந்த ஆதின கர்த்தர் பற்றிய வேறு விவரங்கள் கிடைக்கவில்லை. என்றாலும் ராணி மங்களேசுவரி (கி.பி. 1803-12) ஆட்சிக்காலத்தில், ராணிக்கும் ஆதினகர்த்தருக்கும் இடையில் நல்ல உறவுகள் நிலவவில்லை யென்பதை சில ஆவணங்கள் தெரிவிக்கின்றன.[5] கி.பி. 1804 ல் இலங்கை வழியாக இராமேசுவரத்திற்கு வருகை தந்த ஆங்கிலநாட்டு ஜியார்ஜ் வாலண்டினா பிரபு, இராமேசுவரம் கோயிலில் தம்மை வரவேற்ற ''இளம் வயதும் முரட்டு உடல் அமைப்பும் உள்ள இராமேசுவரம் பண்டாரத்தை'' தமது குறிப்புகளில் வரைந்துள்ளார்.[6] கி.பி. 1833ல் ஆதின கர்த்தராக

5. Madurai Dist Records — Vol 1157 — 7-5-1810 p 29.
6. George Valentina — History of East indies — Vol. V.

இருந்த ''சேது இராமநாத பண்டாரத்திற்கும் இராமநாதபுரம் அரண்மனைக்கும் இடையில் தொடர்ந்து கசப்பான உறவுகள் நிலவிவந்ததை ஒரு ஆவணமும், குற்ற இயல் வழக்கு சம்பந்தமாக பண்டாரம் சிறைப்படுத்தப்பட்ட செய்தியை இன்னொரு ஆவணமும் தெரிவிக்கின்றன[7]. மேலும், மதுரை நீதிமன்றத்தில் கி.பி. 1857 ல் இந்த ஆதின கர்த்தர் பதவி நிரந்தரமாக நீக்கப்பட்டு இராமேசுவரம் திருக்கோயில் நிர்வாகம், இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியிடம் ஒப்படைக்கப்பட்டது[8].

இந்த செப்பேட்டின்படி, ஐந்து ஊர்கள், இராமேசுவரம் திருக்கோயிலுக்கு சருவமான்யமாக வழங்கப்பட்டது. அந்த ஊர்கள் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தைச் சேர்ந்தவை. வைகை ஆற்றின் வடகரையில் உள்ள மும்முகாத்தான், பாண்டியூர், தியாகவஞ்சேரி ஆகிய மூன்று ஊர்களும், வைகையாற்றுக்கு தெற்கே உள்ள வெங்கட்டங்குறிச்சி, கொந்தை ஆகிய இரண்டு ஊர்களும் ஆகும். மும்முடி சாத்தன் என்ற பெயர் மும்மு காத்தான் என திரிபு பெற்றுள்ளது. மறவர் சீமையில் இளையான்குடி திருஉத்தரகோசமங்கை, மேலச்சீத்தை, மேலக்கிடாரம், பெரியபட்டினம், மேலப்பனையூர், செம்பிலாங்குடி, அனுமந்தக்குடி, அறப்போது, சிறகிக்கோட்டை, ஆகிய ஊர்கள் சமணர்களது குடியிருப்பாக விளங்கியது போல இந்த ஊரும் சமணத்தலமாக இருந்தது என்பதை இந்த ஊரின் பெயரில் இருந்து ஊகிக்க முடிகிறது. தானமாக வழங்கப்பட்ட இந்த ஐந்து ஊர்களின் எல்லைகள் பற்றிய விவரங்கள் செப்பேட்டில் கொடுக்கப்படவில்லை.

ஆனால் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ''நான்கெல்லைக்குட்பட்ட'' என்ற சொற்றொடரில் இருந்து அந்த ஊர்களுக்கு அறுதி செய்யப்பட்ட நான்கு எல்லைகள் அப்பொழுது இருந்தன என்பது புலப்படுகிறது. மேலும் அந்த எல்கைகளுக்குள் அடங்கிய விவசாய நிலங்களான நஞ்சை, புஞ்சையும், விவசாயத்திற்கு

7. Madurai Dist. Records Vol 8900 — 7-2-1834 Page. 3
Vol 8902 - 13-4-1935 pp. 219-20
8. Srinivasa Iyer. R – Brief notes on Traditions and Historical relating to Rameswaram Temple (1914) p. 14

தகுதியற்ற மேடான திட்டு, திடலும், சிறியநீர் நிலைகளான ஏந்தலும், இந்த நிலங்களுக்கிடைப்பட்ட குட்டமும், குளமும், இவைகளில் இருந்து வசூலிக்கப்பெறுகின்ற பலவகையான வருவாய்களான பலவரியும் - (இவையனைத்தும் பொருளாக வசூலிக்கப்பட்டது) மற்றும் சில இனங்களில் இருந்து ரொக்கமாகப் பெறுகின்ற பணவரியும் இந்த தானத்தில் கட்டுப் பட்டது என்பதும் தெரிகிறது.

இந்த தர்மத்தை மனப்பூர்வமாக ஏற்று நடத்துபவர் களுக்கு கங்கையிலும், தனுக்கோடியிலும் கோடிமுறை தீர்த்த மாடிய பலனும், கோடி அக்கிரகாரங்களை நிறுவிய நன்மை யையும் இந்த தருமத்திற்கு இடையூறு செய்தவர்கள் கங்கைக் கரையில் காராம் பசுவைக்கொன்ற தோஷத்திலும், மாதாபிதா வைக் கொன்ற தோஷத்திலும் போவாராகவும் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. இந்து சமய சாத்திரங்களில் கங்கை மிகவும் புனிதமாகப் போற்றப்படுவதாலும், கங்கையிலே நீராடுதல் உலகத்தில் உள்ள மூன்றரைக் கோடி தீர்த்தங்களில் நீராடின பலனுக்கு ஒப்பானது என்று நம்பப் படுவதாலும் இராமபிரானது வில்லின் நுனியினுல் அகழ்ந்து அமைக்கப்பட்டதால் தனுஷ் கோடி தீர்த்தம் புனிதமானதாலும்[17] இவைகளில் ''நீராடின பலன்'' எனச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் இந்தச் செப்பேட் டின் இறுதிப் பகுதியில் மிகுதியான வடசொற்கள் - உபையம், சந்திர ஆதித்தாள், சந்ததி பிரவேசம், அபிமானிச்சு, கெங்காஸ் நானம், சுகிர்தம், தீர்த்தம், கன்னிகாதானம், பூதானம், அக் கிரகாரம், பிரதிட்டை, அகிதம், விறுமகத்தி, தோசம், மாதா பிதா, என்ற சொற்கள் - பயன்படுத்தப்பட்டிருப்பது பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் உரைநடை வடிவைக் குறிப்பதற்கான எடுத்துக்காட்டாக உள்ளது.

மற்றும், சடைக்கன் சேதுபதி, செப்பேட்டில் ''தளவாய்'' என்ற உத்தியோகப் பெயரில் கைச்சாத்து இட்டு தானம் வழங்கி யுள்ளார். தளவாய் என்பது தளபதி என்ற பொருளில் இருந்த பதவி. தளவாய்புரம் என்ற ஊர் தென் பாண்டியநாட்டில் உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

17. சிங்காரவேலு முதலியார் - அபிதான சிந்தாமணி (1908) பக்கம் 314.

## செப்பேடு எண். 2

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1559க்கு மேல் செல்லா நின்ற பிலவங்கநாமஸ வச்சரதில் தெட்சணாயநத்தில்
2. கிரீஷ்மருதுவில் ஆடிமாசத்தில் சுக்கிலபட்சத்தில் சதுற்தியும் அசுவதி நட்சத்திறமும் சுபயோக சுபகரணமும்கூடின
3. சுபதினதில் தேவை நகறாதிபன் சேதுமூல துறந்தறன் ஸ்ரீ இராம நாத சுவாமி காறியதுறந்தறன்
4. சிவபூஜா துறந்தரன் பறராஜ சேகறன்மஹாமண்டலேசுவறன்
5. அறியரயிறதளவிபாடன் பாகைக்குதப்புவராத கண்டன்
6. மூவராயகண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு குடாதான் பட்டமானங்காதான்
7. மூவராயகண்டன் வீரவளநாடன் வேதியர்காவலன் ஸ்ரீ இராமநாதசுவாமி சகாய சாடிக்காறகண்டன்
8. சாமி துறோகியன் முண்டன் கொட்டமடக்கிய வீற
9. இவன்பா ஸ்ரீமான் ஆரியமானங்காத்தான் சகலசாம்பிராசியவாசன் சேதுகாவலன்
10. வங்குஷாபதிப னாநது கவூற்க்குத்ததில் காத்தூறான
11. குலோத்துங்கநாம சோளகநல்லூர் கீள்பால் விறையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீ திருமலை உடையான்
12. செதுபதிகாத்த தேவரவர்கள் தானஸாஸனம் கொடுத்தபடி நாம் ராமீசுவரம் சேதுஸ்நானத்துக்கு வந்தமுன்னுக்கு றாமீசுவரம் ஸ்ரீ றாமநாதசுவாமிகோவில் ஸதானீகம்பூஜை

13. பறிசாறகம்செயிது கொண்டிருக்கிற பஞ்சதேசத்து ஆயறி மஹாஜெனங்கள்

14. நமக்கு செங்கோல்கொடுத்தனுப்பிவி 'க்கிற முன்னுக்கு' நாம் பூமி தானம் பண்ணிகொடுத்தது றாமீசுவரம் கோவில்

15. சன்னதி அக்கினிதீர்த்தத்துக்கு மேற்கு - வட சமுத்திறக் கறைக்கு தெற்கு - தென்சமுத்திரத்துக்கு

16. டக்கு - மேல்பாற் கெல்கை தாசறதி னாதற்கோவிலுக்கு கிளக்கு இன்னாங்கெல்கைக்கு

17. உள்ளிட்டபூமியும் அதிலுள்ள மாவடை மறவடை திட்டு திடல் மேல்நோக்கி

18. யமறமும் கீள்னோக்கியகிணரும் நீரும் பாசியும் குடி

19. படை சகலசமுதாயப்பிறாப்பிதியும் நிதி னிக்ஷேப ஜெலதரு பாக்ஷாண ஆக்ஷெண்ணிய

20. ஆகம்மிய சித்த சாதியமென்று சொல்லப்பட்ட। அஸ்ட்ட போக சுவாமியங்களும் சகிறண்ணியோத

21. தாறா! பூற்வமாக தானசாஸனம் கட்டளைஇட்டபடியி னாலே சந்திறாதித்திய சந்திறப்பிறவேசம் புத்திற

22. பௌத்திற பாறம்பறையாக ஸற்வமானியமாக ஆண்டனுப வித்துகொள்ளும்படி கட்டளையிட்டோம்' இந்த தான சாசன பட்டயம் கற்பக

23. மடல் வறைந்தெளுதினது ராமநாதபுரம் மேலாசாறி மகன் மாயாண்டியாசாரி கையெழுத்து,

---

* A.S.S.I. Vol. IV. p.p. 25.26
வடிவம் : 21.5. செ.மீ × 16.5. செ.மீ

## செப்பேடு எண் 2

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | இராமநாதபுரம் திருமலை உடையான் சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | பஞ்சதேசத்து ஆரிய மகாஜனங்கள் |
| 3. செப்பேட்டுக்காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1529 பிலவங்க ஆண்டு ஆடி மாதம் கிறித்தவ சகாப்தம் 1607 (கி.பி. 10-8-1607) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | இராமேசுவரத்தில் நிலக்கொடை |

*சேதுபதி மன்னரது விருதாவளிகள் :*

தேவைநகராதிபன்
சேதுமூல துரந்தரன்
ஸ்ரீ இராமநாதசுவாமி காரிய துறந்தரசன்
பரராஜ சேகரன்
மகாமண்டலேசுவரன்
அரியராய தளவிபாடன்
பாசைக்குத் தப்புவராயகண்டன்
மூவராய கண்டன்
கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்
பட்டமானங்காத்தான்
வீரவளநாடன்
வேதியர் காவலன்

ஸ்ரீ ராமநாத சுவாமி சகாயன்
சாடிக்கார கண்டன்
சாமித்துரோகியள் முண்டன்
கொட்டமடக்கிய வீர வெண்பா மாலையான்
ஆரிய மானங்காத்தான்
சகல சாம்பிராச்சிய வாசன்
சேதுகாவலன்

இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ள பத்தொபன்து விருதாவளிகளில், முந்தைய செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பதினான்கு விருதாவளிகளுடன் ''அரியராய தளவிபாடன்'' (பகைவர் படையை அழித்தவன்) ''பாசைக்குத் தப்புவராயக் கண்டன்'' (மொழிக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களை அழிப்ப வன்) சாடிக்கார கண்டன்'' (புரட்டர்களை ஒழிப்பவன்) ''சகல சாம்பிராச்சியவாசன்'' (அனைத்து நாடுகளையும் தனதாக்கிக் கொள்பவன்) ''சேதுகாவலன்'' (சேது என்ற திருவணையின் பாதுகாவலன்) என்ற ஐந்து புதிய விருதாவளிகளும் இடம் பெற்றுள்ளன. இவை பொதுவாக சேதுபதி மன்னரது பேராற்ற லைக் குறிப்பவை.

*புலப்படுத்தும் செய்தி*

இராமேசுவரம் திருக்கோயிலில் வழிபாடு(பூசை) கண்காணிப்பு (ஸ்தானிகம்) திருவமுதுபடைத்தல் (பரிசாரகம்) ஆகிய திருப்பணி களை, நீண்ட நெடுங்காலமாக இயற்றி வந்தவர் பஞ்சதேசத்து ஆரிய மகாஜனங்கள் எனப்பட்டனர். ஆந்திரம், கர்நாடகம், கேரளம், மராட்டம் கொங்கணம் என்றப் பகுதிகளில் இருந்து வந்தவர்கள் என்ற காரணத்தினால் பஞ்சதேசத்தினர் எனக்குறிக் கப்பட்டனர். இவர்கள் இராமேசுவரத்தில் எப்பொழுது குடியேறி னர் என்பதற்கான உறுதியான சான்று இல்லை. பாண்டிய நாட்டில் விஜய நகரப் பேரரசு ஆதிக்கம் ஏற்பட்ட பதினாறாவது நூற்றாண்டில் இவர்கள் இங்கு குடிபெயர்ந்து இருக்க வேண்டும் என்பது வரலாற்று ஊகம். ஏனைய நாட்டு பிராம்மணர்களை விட இவர்கள் ஆசாரத்தில் அப்பொழுது சிறந்து விளங்கியதும் இதற்கு காரணமாக இருக்கலாம். முந்தைய நூற்றாண்டுகளில், இந்திமொழி பேசப்படாத தென்னகப்பகுதிகளில் இருந்து தான் பெரும்பான்மையான மக்கள் இராமேசுவரம் திருக்கோயிலைத்

தரிசிக்க வந்து சென்றனர் என்பதை ஊகிக்க முடிகிறது. இதனை உறுதிப்படுத்துவதுபோல கும்பினியாரது ஆவணங்களில் இருந்து சில செய்திகள் கிடைத்துள்ளன. மராட்ட மாநிலத்தில் இருந்து, குறுநிலமன்னர் ஒருவர் ஆண்டுதோறும் இராமேசுவரம் இறைவருக்குச் சாத்துவதற்காக பட்டு முதலிய உயர்ந்த பொருள்களை அனுப்பி வந்தார் என்றும் அவைகளை இராமேசுவரம் நகர் எல்லையில், கோயில் அறங்காவலர் மிகுந்த மரியாதையுடன், வரவேற்று பெற்று வந்தனர் என்பது ஒரு செய்தி.[1] இன்னொரு ஆவணத்தின்படி திருவாங்கூர் மன்னர் இராமேசுவரம் திருக்கோயிலில் ''உதயமார்தாண்ட கட்டளை'' என்றதொரு நிவந்தத்தை ஏற்படுத்தி இருந்தார் என்றும், ஆண்டிற்கு இருமுறை கோயில் பட்டர் திருவாங்கூர் சென்று இந்தக் கட்டளைக்கான பொருளையும், பட்டு ஆடைகளையும் நேரில் பெற்று வரும் வழக்கம் இருந்து வந்ததும் தெரிகிறது.[2] இந்தக்கட்டளையை பதினாறாவது நூற்றாண்டுத் தொடக்கத்தில் திருவாங் கூரில் ஆட்சி செலுத்திய உதய மார்த்தாண்ட ரவிவர்மன் என்ற மன்னன் ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

மேலும், சாளுக்கிய மன்னன் கிருஷ்ணா III கி.பி, 910லும், ஹொய்சாள மன்னர் வீரபல்லாளா III (கி. பி. 1342) ஆந்திர பேரரசர் நரசிம்மா (கி. பி. 1408) கிருஷ்ண தேவராயர் (கி. பி. 1517) அச்சுதராயர் (கி. பி. 1532) மற்றும் விஜயநகரதண்ட நாயகர்களும் இராமேசுவரத்திற்கு வருகை தந்த செய்திகள் உள்ளன.''[3] ஆனால் ஆந்திரத்திற்கு அப்பால் நர்மதை நதிக்கு வடக்கே உள்ள அன்றைய ஐம்பத்து ஆறு தேசங்களில் இருந்து சிறப்பான மக்கள் யாரும் இராமேசுவரம் திருக்கோயிலை வந்து தரிசித்ததாக முந்தைய வரலாறு இல்லை. ஆதலால், இந்தக் கோயிலுக்கு மிகுதியாக வருகை தந்த பஞ்ச தேசத்து மக்களுக்கும் மன்னர்களுக்கும் புரோகிதம் செய்ய, அந்தந்த பகுதியைச்சேர்ந்த அந்தணர்கள் பூஜாகராக, அமைக்கப்பட்டது இயல்பு தான்.

---

1. Tamilnadu Archives-R.C. Vol 4681(A) – 1833 AD pp 427–30
2. Madura Dist. Records - Vol. 4681–15-3–1823.
3. கமால். எஸ். எம். — இராமநாதபுரம் ஆவணக்குழு செய்தி மலர் (ஏப்ரல் 1989)

இன்றும் மராட்டா மாநிலத்தைச் சேர்ந்த அந்தணர்கள் இந்தக் கோயிலின் முதன்மைக் குருக்களாக இருந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆரிய மகாஜனங்கள், குடியிருக்க விடுகள் அமைத்துக்கொள்ள சேதுபதி மன்னர் கி. பி. 1608ல் பூமிதானம் செய்ததைக் குறிப்பிடுவது இந்தச் செப்பேடாகும்.

இந்தக் கொடையில் கண்ட பூமி, இராமனாத சுவாமி திருக் கோயிலுக்கு கிழக்கு, வடக்கு தெற்கு, கடற்கரைகளும் இடைப் பட்ட மனைப்பகுதி (இன்று இந்தப்பகுதி இராமேசுவரத்தில் கிழக்குத் தெரு என்ற பெயருடன்) குடியிருப்பாக அமைந்துள்ளது. இதற்கான நான்கு எல்லைகளை செப்பேட்டில் பொறிக்கும் பொழுது அக்கினி தீர்த்தத்திற்கு மேற்கு என்றும், தாசரதினாதர் கோயிலுக்கு கிழக்கு என்றும் வரையப்பட்டுள்ளது. இன்றும், அதே அக்கினி தீர்த்தமும் திருக்கோயிலும் அப்படியே உள்ளன. ஆனால், கோயில் - இராமனாதசுவாமி கோயில் என்று குறிப் பிடாமல் ''தாசரதினாதற் கோயில்'' என அருமையாகச் சுட்டப் பட்டுள்ளது. தசரதன் மகன் தாசரதி என்பது வடமொழி. தாசரதியின் தமிழ் வடிவு இராமன் என்பது. இராமனது நாதனாகிய சுவாமி என்றும் இராமநாதனது சுவாமியென்றும் பொருள் கொள்ளும் வகையில் தற்பொழுது இராமநாத சுவாமி என்று வழங்கப்படுகிறது.

இன்னொரு செய்தி. இந்தச் செப்பேட்டை செப்பேட்டு வாசகத்தில் கற்பகமடல் என அழகாக வரைந்து இருப்பது ஒரு ஆபூர்வப் பிரயோகமாகும். தேவலோகத்தில் உள்ள கற்பகதரு வேண்டுவோருக்கு வேண்டுவன வழங்கும் வினோத படைப்பு ஆகும். அதுபோல கற்பகதருவை ஒத்த இராமநாதபுரம் மன்னரது புதுமைக் கொடையின் சின்னமாக விளங்கும் இந்தச் செப்பேடும் கற்பக மடல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. செப்பேட்டின் இறுதிப் பகுதி வடமொழித் தமிழாகவும் சிறந்தச் சொற்களின் தொடராகவும் உள்ளது. சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ள பூமியும் அதனைச் சார்ந்துள்ள மரங்கள், திட்டு, திடல், கிணறு, நீர் நீரில் உள்ள மீன்களும், குடியிருக்கும் பணியாளர்களும், அஸ்டபோகங்கள் எனச் சொல்லப்பட்ட பொன், ஆடை, அணிகலன், உணவு தாம் பூலம், பூக்கள், வாசனைப்பொருட்கள், வசதிகளும் தானம் பெற்ற

ஆரியமகாஜனங்களுக்கு உரிமையானவை என்றும் அவைகளை வழிவழியாக அனுபவிக்கும் தகுதியும் அவர்களுக்கு உண்டு என்பதை இந்த செப்பேட்டில் விளக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கொடையைக் காத்து வருவதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காக சிறந்த வடமொழி நூல் ஒன்றிலிருந்து சில தொடர்கள் இந்தச் செப்பேட்டின் இறுதி வாசகமாக வரையப்பட்டு உள்ளது. அதில் ஒரு அறக்கொடையினைப் பாதுகாத்து வருவது, ஒருவர் தான் செய்த இரு அறக் கொடைகளுக்குச் சமமானது என்றும், இன்னொருவர் செய்த தர்மத்தை தமதாக்கிக் கொண்டால் தான் செய்த தர்மம் பயனற்ற தாகி விடும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தானம், செய்தல், செய்த தானத்தைக் காத்தல் என்ற இரு செயல்களிலும், பிற்றையதைப் பேணுதல் போற்றத்தக்கது என்றும், அதனால் அவர் மறுமை இன்பமாகிய சொர்க்கம் எய்துவதுடன் அந்தக் காப்பாளர் காத்தல் கடவுளாகிய திருமாலுக்கு ஒப்பாகிறார் எனவும் பெருமை பாராட்டி குறிப்பிடப் பட்டுள்ளது.

## செப்பேடு எண் 3
(நகல்)

1. ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1530 யி
2. தின்மேம் செல்லாநின்ற பிலவங்க ஞூ ஆடிமீ 10 தேதி
3. கிஷ்ணபச்சம் அமாவாசையும் பூசநட்சித்திரமும் சுபயோ
4. க சுபகரணம்பெற்ற புண்ணியகாலத்தில் தேவை நகரா
5. திபன் சேதுமூல ரெட்சகதுரந்தரன் இராமனாதசுவாமிக
6. ாரியதுரந்தரன் சிவபூசாதுரந்தரன் பரறாசகெசிங்கம்
7. சொரிமுத்துவன்னியன் மகாமண்டலேசுவரன் மூவரா
8. யகண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடுகுடாதான்
9. பட்டமானங்காத்தான் துஷ்டராயிகண்டன் புவனேக
10. வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர்கள் காவல
11. ன் அரச றாவணராமன் பரதளவிபாடன் அந்தப்பிரக
12. ண்டன் சுவாமிதுரோகியன் பஞ்சவர்ண ராவுத்தராய
13. ன் வைகைவளனாடன் கொட்டமடக்கி யிவுளிபாவடிமிதித்
14. தேருவார்கண்டன் வீரவெம்பாமாலையான் இளஞ்சிங்
15. கம் தளஞ்சிங்கம் பகைமன்னர்சிங்கம் துரைராயன் மத
16. ப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்குவேலி சத்தி
17. ராதியள்முண்டன் வன்னியராட்டம் தவிள்த்தான் மே
18. லவர்வணங்கு மிருதாளினான் வீரமகாகம்பீரன்
19. கீர்த்திபிரதாபன் ஆரிய மானங்காத்தான் தொண்
20. டியன் துரைகாவலன் துரேகவேந்தன் அனும கேத

21. னன் குடைக்கி கறுணன் பரிக்கி நகுலன் பரதனாட
22. கப்பிரவீணன் கறுணாகடாச்சன் திலதனுதல் மட
23. மாதர் மடலெழுத வருஞ்சுமுகன் விசைய லெட்சு
24. மீகாந்தன் கலைதெரியும் விரப்பனன் காமினீ கந்த
25. ப்பன் சத்தியவாசா அரிச்சந்திரன் சங்கீதசாகியித்
26. திய வித்தியாவினோதன் வீரதண்டை சேமத்ᵕலை வி
27. ளங்கு மிருதாளினான் சகல சாம்பிராச்சிய லெட்சுமீ
28. வாசன் சேதுங்கராய விங்கிஷாதிபனான துகவூர்கூ
29. த்தத்தில் கரத்தூரான குலோத்துங்க சோளநல்லூர்
30. கீள்பால விளையாதகண்டனில் இருக்கும் ராசஸ்ரீ

## இரண்டாவது பக்கம்

31. தளவாய் சேதுபதிகாத்ததேவர் அவர்கள் ராம
32. னாதசுவாமி பருவதவர்த்தனி அம்மன் உடையவர் க
33. ட்டளை பூசைக்கி இராமனாத பண்டாரமவர்கள் பரி
34. சம் சேதுதனுக்கோடியில் தானபூறுவமாக கட்
35. டளை யிட்டது அப்பனூர்னாட்டில் கருங்குளம் கள்ளிக்
36. ருளம் கருசங்குளம் வேலங்குளம் பொட்டக்குளம் வெ
37. டந்தைகண்ணன் பொதுவணமூத்தான் சிறுகளம் ஆ
38. க எட்டுயேந்தலும் இமபடி ஏந்தல்கள்பரினா
39. ங்கெல்கைக்குள்பட்ட குட்டம்குளம் நஞ்சை புஞ்சை
40. திட்டுதிடல் வரிசைவரி பணவரி சோரனாதாயம் ச
41. கலமும் இராமநாதசுவாமி உடையவர் கட்டளை பூசை
42. சக்கி தானபூறுவமாக சறுவமானியமாக தாம்பிர
43. சாதனபட்டையம் குடுத்தோம் இந்த கிராமம் சந்திரா
44. தித்தாள் சந்ததி பிரவேசம் உள்ளவரைக்கும் ஆண்டு
45. அனுபவிச்சுக்கொள்ளக் கடவாராகவும் இந்த தர்ம
46. ம் யாதாமொருதர் அபிமானிச்சு பரிபாலனம்பண்ணி
47. க்கொண்டவர்கள் கோடிகெங்காஸ்நானம்பண்ணி
48. ன பலனும் கோடி தனுக்கோடி தீர்த்தம் ஆடின சு
49. கிர்தமும் கோடிகன்னிகாதன பலனும் கோடி அக்கிர
50. கார பிரதிட்டைபண்ணின பலமும் அடைவாராக
51. வும் இதர்க்கு ஆராகிலும் அகிதம் பண்ணினபேர்கள்
52. கெங்கைக்கரையிலே காராம்பசுவை கொன்ற
53. தோஷத்திலேயும் விறுமகத்திபண்ணின தோ
54. சத்திலேயும் மாதாபிதாவைகொன்ற தோசத்தி
55. லேயும் போவாராகவும்உ தளவாய் சேதுபதிஉ.

# செப்பேடு எண். 3

*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் : தளவாய்சேதுபதி என்றசடைக்கன் சேதுபதி.
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் திருக்கோயில் இராமனாதபண்டாரம்.
3. செப்பேட்டுக் காலம் : சாலிவாகன சகாத்தம் 1530 பிலவங்க ஆடிமாதம் 10ஆம் நாள் (கி. பி. 10 - 8 —1607)
4. செப்பேட்டின் பொருள் : ஸ்ரீ இராமநாத சுவாமி பர்வத வர்த்தினி அம்மன் உடையவர் கட்டளை பூஜைக்கு நிலக் கொடை.

இந்தச் செப்பேட்டின் முதல்பகுதியில் இராமநாதபுரம் தளவாய் சடைக்கன் சேதுபதியின் ஐம்பத்து ஒரு விருதாவளிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் முந்தைய இரண்டு செப்பேடுகளிலும் பயன்படுத்தப்பட்டிருப்பவைதான் அதில் ஒரே ஒரு விருதாவளி மதுரைராயன் என்பது துரைராயன் (வரி 15) என மட்டும் மாற்றமாக உள்ளது. பிரதி செய்யப்பட்ட பொழுது ஏற்பட்ட தவறுதலாக இருக்கலாம்.

மேலும், இந்தச் செப்பேடு, இராமேசுவரம் திருக்கோயில் ''உடையவர் பூசைக்கட்டளைக்கு'' ஆப்பனூர் நாட்டில், கருங் குளம், கள்ளிக்குளம், கருசங்ளம், வேலங்குளம், பொட்டக்குளம்,

விடந்தை, கண்ணன் பொதுவணமூத்தான்' சிறுகளம், என்ற எட்டு எந்தல்களும் அவைகளினால் நீர்பாயும் பகுதியில் உள்ள குட்டம், குளம், நஞ்சை, திட்டு, திடல் ஆகியவைகளையும் தானமாக சேதுபதி மன்னர் வழங்கியதைக் குறிப்பிடுகிறது. இந்த ஆப்பனூர் நாடு பற்றிய குறிப்புகள் ஒன்றும் இல்லை. இங்கு மறவர்கள் மிகுதியாக பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த காரணத்தினால் மறவர்களின் பிரதான எட்டுப்பிரிவுகளில் ஒன்று ஆப்பனூர் நாட்டு மறவர் என்பதாக வரையறுக்கப் பட்டுள்ளது.[1] இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில், முதுகுளத்தூருக்கும் சாயல்குடிக்கும் இடைப்பட்ட பகுதிதான் அந்த ஆப்பனூர் நாடு என்பது. இந்த நாட்டைப் பற்றிய 13, 14 வது நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் சிதைந்த நிலையில், முதுகுளத்தூர் வட்டாரத்தில் மேலக்கிடாரத்தை அடுத் துள்ள ஈசுவரன் கோயில் சுவர்களில் உள்ளன. இந்த நாட்டின் ஏந்தல்கள் சிறியகண்மாய்கள் - நீரை ஏந்தி இருக்கிற காரணத் தால் ஏந்தல் எனப் பெயர் பெற்றன)
பெரும்பாலும் மழை நீராலும், குண்டாறு, நாராயணகாவேரி மற்றும் அவைகளின் கிளைகளாலும் நிரப்பப்பெற்று மக்களுக்கு பயன்ஊட்டுபவை. அவைகளில் இந்த எட்டு ஏந்தல்களும் அடங்கும். இந்தப் பகுதிகளில் இருந்து சேதுபதி மன்னருக்கு வரவேண்டிய வருவாய்களான வரிசை வரி (அரண்மனைக்கு செலுத்த வேண்டிய தீர்வை) பனவரி (பனைவரி) பனைமரங் களுக்கான மரவரி) சொர்ணாதயம் (பணமாகச் செலுத்தப்படு கின்ற வரவினங்கள் இவை அனைத்தையும் (இந்தக் கட்டளைக் காக) கோயில் ஆதினகர்த்தரான இராமனாத பண்டாரம் ''அனுபவிச்சுக் கொள்ளுமாறு'' மன்னர் ஆணை பிறப்பித் துள்ளதை இந்த செப்பேட்டு வாசகம் தெரிவிக்கின்றது. ஆப்பனூர் நாட்டில் குறிப்பாக மேலக்கிடாரம், நரிப்பையூர், சாயல்குடி, கன்னிராஜபுரம் ஆகிய ஊர்களில் பனைமரங்கள் மிகுதியாக இருந்த காரணத்தினாலும், அந்த மரத்திலிருந்து பலவிதமான பலன்களை மக்கள் (குறிப்பாக பதநீர், நுங்கு, பழம் கிழங்கு, கருப்புக்கட்டி, ஓலை, குருத்து, ஈர்க்கி, மட்டை, கயிற்று நார், அகணி, சட்டம் என்பனவற்றை) அனுபவித்து வந்த காரணத்தி

1. Castes and Tribes of South Indian-Thurston(1909) Vol. V. pp 22-48

னால் அந்த மரத்திற்கு என வரி தண்டல் செய்யப்பட்டது. இன்னும், மீன், பழமரங்கள், வைக்கோல் ஆகியவைகளின் விற்பனைக்கு இராமநாதபுரம் சீமையில் வரிபணமாக வசூலிக்கப் பட்டு வந்தது. அதனையே *சொர்ண ஆதாயம்* (பணவரி) என வழங்கப்பட்டது.[2] இந்த வருவாய்கள் தவிர, வேறு வரிப்பாடு களும் இந்த ''தானத்தில்'' கட்டுப்படும் என்பதனை ''சகலமும்'' என்ற சொல் (வரிகள், 40, 41) சுட்டுகிறது.

வரலாற்றுக்குத் தெரிந்த வகையில், இராமேசுவரம் கோயிலில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளில், தளவாய் சேதுபதி மன்னர் ஏற்படுத்தியுள்ள ''இராமநாதசுவாமி உடை யார் கட்டளை'' என்பது தான் முதல் கட்டளை, எனத் தெரி கிறது. மற்றும், இராமேசுவரம் திருவிழாக்களில் ஆடி *அமாவசைத் திருவிழா* சிறப்பானதொன்று. இன்றுபோல நானூறு ஆண்டு களுக்கு முன்னரும் இந்த விழாக்காலத்தில் தனுக்கோடியில் நீராடுதல் என்னும் வழக்கம் இருந்ததை இந்தப்பட்டயத்தின் வாசகம் (வரிகள் 2, 3, 34) தெரிவிக்கின்றது. தனுக்கோடி, இராமேசுவரம் தீவின், கிழக்குக்கோடியில் வில் வளைக்கப் பட்டுள்ளது போல் காணப்படும் கடற்கரையின் தென்கிழக்கு முனையில் இருப்பதாலும், இராவண சம்ஹாரம் முடித்து திரும்பிய இராமபிரான், தமது வில்லின் நுனியினால், சேது அணையை மீண்டும் வேறு எவரும் பயன்படுத்தாமல் இருப்பதற் காக உடைத்ததாலும் அந்த இடம் புனிதமாக கருதப்பட்டு வருகிறது. அத்துடன் இரத்னாகரம் (குடாக்கடல்) எனப்படும் வங்க விரிகுடாவும், மகோததி (பெருங்கடல்) என்ற இந்துமாக் கடலும் இணையும் அந்தச் சிறந்த இடம் புனித சேது தீர்த்த கட்டமாக தொன்மைக்காலந் தொட்டு கருதப்பட்டு வருகிறது. ஆதலால் ஆடி, தை அமாவசைக் காலங்களிலும், *அர்த்தோதயம், மகோதயம்* எனப்படும் புனிதக்காலங்களிலும் இங்கு நீராடுதல் வழக்கமாக உள்ளது.[3] அதனால் ''நீடு தனுக்கோடியினை நினைந்தாலும், புகழ்ந்தாலும், நேர்கண்டாலும், வீடு பெறல் எளிதாகும்.'' என்ற சேது புராண செய்யுளை நினைத்து

2. Rajaram Rao T—Manual of Ramanathapuram Samasthanam (1891) p. 285.
3. கலியாணம் - ஜி - இராமேசுவரத்தல வரலாறு (1965) பக்கம் 10.

சேது மன்னர், ஆடி அமாவசை முழுக்கிற்கு தனுக்கோடி சென்று இருந்த பொழுது இந்த தானத்தை சருவமானிய மாக அறிவித்துள்ளார் என்பதை செப்பேட்டு வரிகள் 33, 34, தெரிவிக்கின்றன. 1964 டிசம்பர், 22/23 தேதியில் ஏற்பட்ட பெரும்புயலில் தனுக்கோடி ஊரும், தீர்த்த கட்டமும் கடல் கொள்ளப்பட்டதால், 1965 லிருந்து இராமேசுவரம் அக்கினி தீர்த்தக்கரை ஆடி, தை, அமாவாசை புனித நீராடல் இடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

# 5

## கூத்தன் சேதுபதி (கி பி. 1622-35)

சடைக்கன் உடையான் சேதுபதி மன்னரது நான்கு மக்களில் மூத்தவரான கூத்தன் மறவர் சீமையின் மன்னராக முடி சூட்டப் பெற்றார். இவரது தந்தையாரது ஆட்சித்திறத்தால் நிலவிய அமைதியும் வளமையும் இந்த மன்னரது ஆட்சியிலும் நீடித்தன. ஆனால் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் எதுவும் நிகழ்ந்ததாக செய்திகள் இல்லை.

என்றாலும், தமது தந்தையின் தொண்டுகளை நினைந்தவராக, இராமேசுவரம் திருக்கோயில் பணிகளில் மிகவும் அக்கரை கொண்டு இருந்தார். திருக்கோயிலின் முதற் பிரகாரத்தில் அர்த்த மண்டபம், நடமாளிகை மண்டபம் ஆகியவைகளை அமைத்து ஆலயத்தின் அழகிற்கு அணி சேர்த்தார். இந்த திருப்பணிகளை சகம் 1545ல் மேற்கொண்டதாக அங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. மற்றும், இராமநாதபுரம் கோட்டையின் மேற்கு 'மதிலுக்கு அண்மையில் கூரிச்சாத்த ஐயனாருக்கு ஆலயமொன்றையும் அமைத்து அங்கு விழா எடுப்பதற்கு திருவாடனைப் பகுதியில் நிலமானியங்களும் வழங்கினார்

இன்னும் இவை போன்ற தானங்கள் பலவற்றை அவர் அளித்து இருந்தும் அவைகளைத் தெரிவிக்கக் கூடிய ஆவணங்கள் கிடைத்தில.

மேலும், மக்களது வாழ்க்கை நலனிலும் இவர் மிகவும் ஈடுபாடு கொண்டு இருந்தார் என்பதற்கு இன்றளவும் அவரது பெயரால் வழங்கி வருகின்ற ''கூத்தன்கால்'' என்ற கால்வாய் ஒரு எடுத்துக்காட்டாகும். பரமக்குடி வட்டம் சூடியூருக்கு கிழக்கே வைகையாற்றில் கால்வாய் ஒன்று வெட்டப்பட்டு, ஆற்றிற்கு தெற்கே உள்ள பரமக்குடி, முதுகுளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த வறண்ட நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டன. இந்த நீர் வழங்கும் நிலையான கால்தான் கூத்தன் கால் ஆகும். கூத்தன் சேதுபதி ஆண்வாரிசு இல்லாமல் கி.பி.1635ல் காலமானார்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆவணத்தின்படி[1] இந்த மன்னருக்கு வேளாள சாதியைச் சேர்ந்த மனைவி ஒருத்தி மூலம் ஒரே ஒரு மகன் மட்டும் இருந்தான் என்றும், அவன்மறவர் சீமையின் மன்னன் ஆவதை மறக்குடித்தலைவர்கள் விரும்ப வில்லை யென்றும் அதனால் கூத்தனது இளைய சகோதரர் இரண்டாம் சடைக்கன் என முடிசூடினார் எனத் தெரிகிறது. என்றாலும், கூத்தனது மகன் தனது உரிமையை நிலைநாட்ட மதுரை மன்னர் திருமலை நாயக்கரது உதவியை நாடிப் பெற்றார்: இவரை வரலாற்றுச் சுவடிகள் ''தம்பி'' என்றும் ''பெத்தன்னநாயக்'' என்றும் குறிப்பிடுகின்றன.

1: Revenue Consultations No122(A) p. 1095 - 97

## செப்பேடு எண். 4

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் : 1546 இதின்மேல் செல்லானி ன்ற ரத்தாட்சி வருஷம்

2. தையி 25ந் தேதி வசந்தருது ஆசிரமாதம் கிருஷ்ணபட்சத் தில் அமாவாசையில்

3. கொப்பிர வாசமும் சுவாதி நட்சத்திரமும் சுபயோக சுபகரணமும் பெத்த புண்ணிய காலத்தில் தே

4. வை நகராதிபதி சேதுமூல ரெட்சாதுரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்த

5. ரன் சிவ பூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜசிங்கம் சொரிமுத்து வன்னியன் ம

6. கா மண்டலேஸ்வரன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்

7. பட்டமானங்காத்தான், சலுக்கராய கண்டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன், வீர

8. வளநாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் பாதாள விபாடன் நந்தம்பர

9. கண்டன் சுவாமித் துரோகியள் மிண்டன் பஞ்சவர்ணராய ராவுத்தன் வைகை

10. வளநாடன் கொட்டமடக்கி இவுளி பாவடி மிதித்து ஏறுவார் கண்டன் வீர வெண்பாமாலை

---

A.R.E — A. 24 / 1947

வடிவம் : 48 செ.மீ. × 18 செ.மீ.

11. இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம், பகைமன்னர் சிங்கம், மதுரை ராயன் மதப்புலி அடைக்கலங்

12. காத்தான், தாலிக்கு வேலி. சத்துராதியள் முண்டன், வன்னியராட்டம் தவிழ்ந்தான் மேவல

13. ர்கள் வணங்கு மிருதாளினான் வீர மகா கெம்பீரன் கியாதிப்பிரதாபன் ஆரியர் மானங்காத்

14. தான் தொண்டியந் துறைக்காவலன் துரகரே பந்தன் அனுமகேதனன், கொடைக்கு

15. கருணன், பரிக்கு நகுலன், பரத நாடகப் பிரவீணன் கருணா கடாட்சன் திலதநுதல் மட

16. மாதர் மடல் எழுதவரு சுமுகன் விஜயலெட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பணன் கா

17. மினி கந்தப்பன் சத்திய பாஷா அரிச்சந்திரன், சங்கீத சாகித்திய வித்தியா வினோதன்

18. வீர தண்டை சேமத்தலை விளங்கு மிரு தாளினன் சகல சாம்ராஜ்ய லெட்சுமி வாச

19. ன் செயதுங்க வங்கிசாதிபனான துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க

20. சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் இருக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவர் அவர்கள்

21. இராமேசுவரம் கோயில் இராமநாத பண்டாரம் அவர் களுக்கு தாம்பிர சாதனம் பண்ணி

22. க்கொடுத்தபடி சாதனமாவது மன்னார் சலாபத் துறையில் நம்மிட சமஸ்தானத்துக்

23. கு சலாபம் குளிக்கிறதில் ஸ்ரீ இராமநாத சுவாமி கட்டளைக்கு ஏழு கல் குளித்துக் கொள்

24. ளச் சொல்லி தான சாதனம் பண்ணி விச்சு சலாபம் குளிக்கிற வருஷம் தோறும்

25. சுவாமிக்கு ஏழு கல்லு குளித்து அதில் வருகிற ஊதியங் கோயிலைச் சாரப் பண்ணி விச்

26. சுக் கொள்ளச் சொல்லி கட்டளையிட்டபடியினாலே அந்தப் படிக்கு ஆசநாரர்கமாயனுப

27. வித்துக் கொள்வாராகவும் இந்தப்படிக்கு இராமேசுவரம் கோயில் இராமநாத பண்டாரம் அவர்

28. களுக்கு தாம்பிர சாதன பட்டயம் கொடுத்தோம் இது காரியத்தில் யாதொரு மொருத்தர்

29. அபிமானித்து நடத்தி வைத்தார்களே ஆனால் அவர் களுக்கு கோடி கெங்கா ஸ்நானமும் பண்ணின

30. சுகிர்தமும் கோடி தனுஷ்கோடி யாடின கோடி கன்னியா தானம் பண்ணின பலனும்

31. அடைவார் ஆகவும் அகிதம் பண்ணினால் கங்கை கரை யில் காராம் பசுவைக் கொன்ற

32. தோஷத்திலேயும் மாதா பிதாவை கொன்ற தோஷத்தி லேயும் போகக் கடவாராகவும்

33. இந்த தாம்பிர சாதனம் எழுதினேன் வீரப்ப பண்டாரம் மகன் திருப்புல்லாணி

34. தளவாய் சேதுபதி

## செப்பேடு எண். 4

*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் : தளவாய்சேதுபதி என்ற கூத்தன் சேதுபதி.
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் திருக்கோயில் இராமனாதபண்டாரம்.
3. செப்பேட்டின் காலம் : சகம் 1546 ரத்தாட்சி ஆண்டு தை மீ 25 (கி.பி. 13-1-1632)
4. செப்பேட்டின் பொருள் : இராமநாத சுவாமிக்கு மன்னர் சலாபத்தில் முத்துக் குளிக்க உரிமை வழங்கியது.

இந்த மன்னரது விருதாவளியாக இந்த செப்பேட்டில் ஐம்பத்து ஏழு சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளில் ''சலுட்டராய கண்டன்'', ''கியாதிப் பிரதாபன்'', என்ற இரு புதிய சிறப்புப் பெயர்களைத் தவிர, ஏனையவை அனைத்தும் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள மூன்று செப்பேடுகளில் காணப் படுபவை.

இராமேசுவரம் திருக்கோயில் எழுந்தருளியுள்ள இறைவர் மீது இந்த மன்னர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததை இந்தச் செப்பேட்டின் வாசகம் புலப்படுத்துகின்றது.

இராமேசுவரம் திருக்கோயிலுக்கு பல ஊர்களை இறையிலி யாக வழங்கிய இந்த மன்னர், தமக்கு உரிமைப்பட்டிருந்த மன்னர் சலாபத்துறையில், முத்துக்குளிக்கிற வருடத்தில் ''இரா

நாத சுவாமிக்கு ஏழுகல் குளித்து அதில் வருகிற ஊதியத்தை கோயிலைச் சாரப்பண்ணிவிச்சுக் கொள்ளச் சொல்லி'' கட்டளை யிட்ட செய்தியை இந்தச் செப்பேடு சொல்லுகிறது. இராமேசு வரம் கரைக்கு எதிர்க்கரையில் இருப்பது தான் இலங்கை நாட்டு மன்னார் துறைமுகம். இராமபிரானால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் சேது அணைக்கு தெற்கும், இலங்கை நாட்டு கடற் கரைக்கு மேற்கும், தமிழ்நாட்டின் நெல்லை மாவட்ட கடற் கரைக்கு வடக்குமாக உள்ள நான்கு எல்லைக்குட்பட்ட பரந்த கடல் பகுதி மன்னர் வளைகுடா என்று வழங்கப்பட்டு வருகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இந்தப் பகுதியில். மிகுந்த விலை மதிப்புள்ள முத்துக்கள் அங்கு கிடைத்து வந்தன.[1] சேதுபதி மன்னர்கள் அங்கு முத்துக் குளித்தலை நீண்ட நெடுங் காலப் பழக்கமாகக் கொண்டு இருந்தனர், என்ற உண்மைக்கு எடுத்துக்காட்டாக இந்தச் செப்பேட்டு அடக்க செய்தி அமைந்து இருக்கிறது.

அந்தப்பகுதியின் முத்து வளத்திற்கு, நாலாயிர திவ்விய பிரபந்த பாசுரங்களும் சான்றாக உள்ளன. இராமநாதபுரம் அடுத்துள்ள சேதுக்கரையையும் திருப்புல்லாணி திவ்ய தலத்தை யும் மங்களா சாசனம் செய்து பாடியுள்ள பாசுரங்களில், திரு மங்கை ஆழ்வார், ''இலங்கு முத்தும், பவளக் கொழுந்தும், எழில்தாமரைப் புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து அழகு ஆய திருப்புல்லாணி....''

''புணரி ஓதம் பனில மணி உந்து புல்லாணியே!'' என முத்துக்கு சிறப்பிடம் அளித்துள்ளார். கவிச்சக்கரவர்த்தி கம்பனது இராமாவதாரமும், '' ... சேண்டை முந்துத் தெளித்து எழு முத்தம் தொத்தலால், அந்தரத்தை எழுமுகில் அடையா அகன்பந்தர் ஒத்தது நெடும்பரிதி வானமே'[3]', என இந்தக் கடற்கரையில் முத்து தெறித்து எழுந்ததை கற்பனை செய்து காட்டுகிறார்.

1. வைத்திய நாதான் T. S. நவமணிகள் (1959) பக்கம் 81
2. பெரிய திருமொழி - மர்ரே. ராஜம் பதிப்பு (1956) பாசுரங்கள் 1768-80
3. இராமாவதாரம் — மர்ரே ராஜம் பதிப்பு (1959) யுத்த காண்டம் — சேதுபந்தன் படலம் - பாடல் எண். 13

அவரைத் தொடர்ந்து அமுத கவிராயரும். ''நன்னித்திலம் சொரி தேவையர் கோன்ரகுநாதன்'' ''பன்னும் தமிழ்ப்பயிர் வாடாது, மாரி இப்பாரின் முத்தும், பொன்னும் சொரியும் ஒரு நாதன்''[4] என்றும், தாயிற் சிறந்த தமிழர் பிரானாகிய சேதுபதி, புலவருக்கு பொன்னுடன் முத்தும் சொரியும் பண்புடையவராக இருந்ததைப் பாடியுள்ளார். இங்ஙனம் முத்து வளமிக்க வள்ளல்கள் சேதுமன்னர்கள் என்ற பொருளில் ''சொரிமுத்து வன்னியன்'' என்ற விருதுடன் வழங்கப்பட்டனர். மேலும் சேதுபதி மன்னர்களது இயற்பெயரிலும் ''முத்து'' இணைத்து வழங்கப்பட்டது. முத்து விஜயரகுநாத சேதுபதி, சிவகுமார முத்து விஜயரகுநாத சேதுபதி, முத்து ராமலிங்கசேதுபதி என்பன அவர்களது பெயர்கள். அவர்களது பெண்டுகளது பெயர்களிலும் முத்து இணைந்து வழங்கியது. ''முத்துவீராயி நாச்சியார்'' ''முத்து ஆத்தாள் நாச்சியார்'' என்பன சில.

கி.பி.1470ல் மேற்கு கடற்கரையான கோழிக்கோட்டிற்கு வருகை தந்த ருஷியநாட்டு பயணியான அபனாஷி நிகுதின், அங்கு விற்பனைக்கு கொணரப்பட்டு இருந்த பன்னாட்டுப் பொருள்களைக் குறிப்பிடும் பொழுது இராமேசுவரத்தில் இருந்து வரப்பெற்றுள்ள நன்முத்துக்களையும் குறிப்பிட்டுள்ளார்.[5] சேது மன்னருக்கு இராமேசுவரத்திலும், பெரியப்பட்டினத்திலும் முத்து விற்பனை நிலையங்கள் இருந்தன. அந்தப்பகுதிகள் இன்றும் முறையே முத்துச் சாவடி, முத்துப்பேட்டை என அழைக்கப்பட்டு வருகின்றன. மற்றும், கீழக்கரை துறைமுகத்திலும் முத்து விற்பனை இருந்ததை கி.பி. 1531ம் ஆண்டு கல்வெட்டில்[6] இருந்து தெரிகிறது. பதினேழாம் நூற்றாண்டில் இந்தப் பகுதிக்கு வருகை தந்த இத்தாலிய நாட்டு வணிகர் தாவர்னியர் மன்னார் பகுதி முத்துக்கள் மிகவும் சிறந்தவையென்று, பஹ்ரைன் குடா முத்துக்களை ஒப்பிட்டு வரைந்துள்ளார்.[7]

4. பொன்னங்கால் அமுத கவிராயர் - ஒருதுறைக் கோவை பாடல் எண்கள் : 40 & 104.
5. Appadorai. A. – Economic Conditions of South India Vol II
6. A. R. 396 / 1907
7. TAVERNIER - J.B. - Travels in India - Ch.20

மன்னர் வளைகுடா பகுதியில் கடலாதிக்கம் கொண்டு இருந்த போர்த்துகீசியரும் டச்சுக்காரரும், சேதுபதிமன்னரது முத்துச் சலாப உரிமையை மதித்து நடந்ததுடன், அந்த உரிமையை இணக்கமான முறையில் பெறுவதற்கும் அவர்கள் முயற்சித்து வந்தனர்.

இத்தகைய முயற்சி ஒன்றை மேற்கொண்ட டச்சுக்காரர் சிறந்த அன்பளிப்பு பொருள்களுடன் சென்று சேதுமன்னரைப் பேட்டிகண்ட நிகழ்ச்சியை, இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வண்ண ஓவியமாக இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனையில் தீட்டப்பெற்று இருப்பதை இன்றும் கண்குளிரக் காணலாம்.[8] முத்துக் குளிக்கும் உரிமை, இராமநாத புரம் சேதுபதிகளில் தன்னரசு மன்னராக விளங்கிய முத்துராம லிங்க விஜயரகுநாத சேதுபதி, கி. பி. 1795ல் பதவி நீக்கம் செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டது வரை நீடித்தது. சேதுபதிகளுக்கு முன்னர் தமிழகத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் திருக்கோயில்களுக்கு, பொன்னையும் பூமியையும் தானமாக வழங்கியதை அவர்களது கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் சொல்லுகின்றன. ராஜராஜ சோழன் முத்துக்களையும் முத்தால் புனைந்த ஆபரணங்களையும் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத் திற்கு மிகுதியாக வழங்கினான்[9] முன்னீர் பழனத்தின் பன்னீ ராயிரம் தீவுகளைக் கொண்ட வங்கக் கடல் முழுவதையும் அவன் தனது ஆணைச்சக்கரத்திற்குள் வளைத்து வைத்திருந்தும் கூட, முத்துக் குளிக்கும் உரிமையை தெய்வீகப்பணிக்கு வழங்கும் உள்ளம் அவனுக்கு ஏற்பட இல்லை. ஆனால் அளவில் சிறி தான சீமைக்கும் வடிவில் குறைந்த கடல்பகுதிக்கும் ஆட்சி யாளராக இருந்தும், சேதுமன்னர்கள் பொன்னையும் பூமியை யும் அள்ளி அள்ளி வழங்கியதுடன் அவர்களுக்கு உரித்தான மன்னார் சலாப உரிமையையும், இராமேசுவரம், திருப்பெருந் துறை, திருப்புல்லாணி திருக்கோயில்களுக்கு வழங்கி, வரலாற் றில் ஒப்புவமை இல்லாத உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளனர்.

8. Nagasami Dr - Ramanathapuram Archaelogical Guide (1978) p. 57
9. நாகசாமி — Dr. R. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் (1969) பக்கங்கள் 13-44.

முத்துக் குளித்தலில் ஈடுபட்டிருந்த இந்த திருக்கோயில் களின் படகுகள், ''*மானிபப் படகுகள்*'' என வழங்கப்பட்டதையும், பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில், அந்த உரிமையினைத் தமதுடமையாக கொள்ளை கொண்டதையும் பேராசை பிடித்த வெள்ளைப் பரங்கிகளது ஆவணங்கள் தெரி விக்கின்றன.[10]

10. Madurai Dist Vol. 4670 (1—2—1822) p. 20

## செப்பேட்டு எண் 5
(நகல்)

1) ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சாகாத்தம் 1546 இதின் மேற்
செல்லாநின்ற ரத்தாக்கிஷ ஹ தைய் மீ 25 உ சரத்

2) ருதுவில் ஆகிவிச மாதத்தில் கிட்டிணபட்சத்தில் அம்மா
வாசையும் கெற்ப்பிற வாசமும் சுவாதிநட்சத்திரமும்.

3) சுபயோக சுபகாணமும் பெத்த புண்ணிய காலத்தில் தேவை
நகாதிபன் சேதுமூலலெட்ஷா துரந்தரன் இராமநாதசுவ

4) ாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன்
பாராசகேசசிங்கம் சொரிமுத்து வன்னியன் மகாமண்ட

5) லேசுரன் மூவராயிரகண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட
நாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்டரா

6) யிரகண்டன் புவனேசு வீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன்
வேதியர் காவலன் அரச ராவணராமன் பாதளவிபாட

7) னந்தம்பிறகண்டன் சுவாமித் துரோகியள பஞ்சவன் ராய
ராவுத்தன் வய்கை வளநாடன் கொட்ட

8) மடக்கி இவிளி பாவடி மிதித்தேறுவார்கண்டன் வீரவெண்பா
இளஞ்சிங்கமப் தளஞ்சிங்கம் ப

9) கைமன்னர் சிங்கம் துரைராயன் மதப்புலி அடைக்கலங்
காத்தான் தாலிக்கு வேலி சத்துராதி யளமிண்ட

10) ன் வன்னிய ராட்டந் தவிள்த்தான் மேவலர்கன் வணங்குமிரு
தாழினான் வீரமகாகெம்பீரன் கீற்திப்பிரதாபன்

11) ஆரிய மானங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துர்க
ரேபந்தன் அனுமகேதனன் குடைக்குக் கர்னன்

12) பரிக்கு நகுலன் பரதநாடக பிறவீணன் கருணா கடாட்சன்
திலகநுதல் மடமாதர் மடலெழுத வருசுமு

13) கன் விசையலெட்சுமிகாந்தன் கலை தெரியும் விற்பன்னன்
காமினிகந்தப்பன் சத்தியபாஷா அரிச்சந்

14) திரன் சங்கீத சாயுத்திய வித்தியாவினோதன் வீரதண்டை
சேமத்தலை விழுங்குமிரு தாழினா

15) ன் சகல சாம்பிறாச்சிய லெட்சிமினீவாசன் சேதுங்கராய
வங்கிஷாதிபனான துகவூர் கூத்தத்

16) தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால்
விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீராசஸ்ரீ நழவாய்சேதுப

17) தி காத்ததேவர் அவர்கள் இராமநாத பண்டாரம் அவர்
களுக்குத் தாம்புர சாதன பட்டையங் கொடுத்தபடி இராம

18) நாத சுவாமிகளுக்கு நடக்கிற கிறாமத்திலேயிருந்து மணிய
காரர் கணக்கப் பிள்ளைமார் குடியானவர்களையும்

19) கோவிலிலே சஞ்சாரம் பண்ணுகிற தொழிலாளியகளையும்
பரிசு பட்டர் முதலான பேர்களையும் கோவில் தோ

20) ப்புக்காரர் நந்தவனக்காரர் இவர்கள் முதலான பேர்
களையும் அவரவர் செய்த குற்றாகுற்றங்களைப் பரிச்சுத்

21) தெண்டினை பண்ணி விலங்கிலிடுகிறபேரை விலங்கிலிட்டுக்
குற்றாகுற்றத்துக்குத் தக்கது இராமனாத பண்டாரமே

22) அவராதாம் வாங்கிறாபேரை அவராதம் வாங்கி நடப்பிச்சுச்
கொள்ளச்சொல்லி கட்டளையிட்டோம் இதுவல்லாம

23) ல் கோயில் நந்தவனம் கோயில்வகை வாழைத் தோப்புத்
தென்னந்தோப்பு இலுப்பைத் தோப்புப் பனைந் தோ

24) ப்பு இது முதலான தோப்புக்களிலே அன்னிதாக இருக்கிற
மானிடர் போய்த் திருடினார்களேயானாலந்தக் கள்ளனைப்
பண்

25) டாரமே தெண்டினை பண்ணி அவராதம் வாங்கிக் கொள்ளச்
சொல்லிக் கட்டளையிட்டோம் பண்டாரத்தின வகை

26) ப்பிராமணப்பிள்ளையள் தவசிப்பிள்ளையள் அவரைச்சார்ந்த சனங்களுக்கும் பாம்பன் துறைக்குப் பண்
27) டாரத்தின் சீட்டின்படிக்கு தோணிவிடச் சொல்லிக் கட்டளை யிட்டோம் யாதாமொரு கள்ளரைப் பண்டாரங்
28) காவல்ப்பண்ண வேணுமென்று கொல்லன் தச்சனை யழைக்கச் சொன்னால் அந்தப்படிக்குக் கேள்க்கச் சொல்
29) லிக் கட்டளையிட்டோம் கோவில் வகையாகயிருக்கிற பசு மாடு எருமைமாடு மடத்துப்பசு எருமைமாடு உ
30) ண்டானதுகளை யாதாமொரு கள்ளர் திருட்டுபிரட்டு நடப் பிச்சால் பண்டாரமே தெண்டினைபண்ணி
31) அவராதம் வாங்கிக்கொள்ளவும் பாம்பனாற்று வழியாகவும் கல்லடிசாலை அக்கினி தீர்த்தக் கரை புளியடி
32) த்துறை புங்கடித்துறை இந்தத் துறைமுகங்களிலே கோயில் வகை மாட்டை யாதாமொருதர் தோணியேற்றி
33) க்கொண்டுபோனால் பண்டாரம் அவர்கள் தலத்து மணியக்காரனுடனே சொல்லி மணியக்காரன் அந்தக் கள்ள
34) னைத் தெண்டினை பண்ணாதே போனால் நம்முடனே சொல்ல அவர்களை நாமே தெண்டினை பண்ணிக் கோ
35) விலுடமை வாங்கித் தருவோமாகவும் இந்தப்படிக்கு ராமீசுர கோவில் ராமனாத பண்டாரமவர்
36) களுக்குத் தாம்புர சாதன பட்டையங் குடுத்தோம் அந்தப் படிக்கு நடப்பிச்சுக் கொள்வாராகவும் இந்தப்படிக்கு
37) யாதாமொருதர் அபிமானித்து நடப்பித்தார்கள் அவர்கள் கோடி கெங்கா ஸ்நானம் பண்ணின சுகுற்தமும் கோடி
38) தனுக்கோடி தீத்தம்மாடின சுகுற்தமும் கோடி கன்னியா தான பலனும் கோடி பூதானம்பண்ணின பலனும் கோ
39) டி அக்கிறகாரபண்ணின பலனும் அடைவாராகவும் இதுக்கு ஆராகிலும் அகிதம் பண்ணினவன் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலேயும் பிரும்மகத்தி பண்ணின தோஷத்திலேயும் மாதா பி
40) தாவைக் கொண்ண தோஷத்திலேயும் போகக் கடவ ராகவும் உ.

## செப்பேடு எண். 5
(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | தளவாய் சேதுபதி என்ற கூத்தன் சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் இராமனாத பண்டாரம். |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1546 ரத்தாட்சி ஆண்டு தை மீ 25 தேதி (கி.பி. 23-1-1632) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | இராமனாத பண்டாரத்திற்கு பணியாட்களை தண்டிக்கும் உரிமை வழங்கியது. |

இந்தச் செப்பேட்டின் வரிகள் 3-15ல் இந்த மன்னரது விருதாவளிகளாக கொடுக்கப்பட்டுள்ள ஐம்பத்து மூன்று விருதாவளிகளும் ஏற்கனவே செப்பேடுகள் 3ல் கண்டவைதான். அவைகளில் மாற்றமோ அல்லது புதிய சொற்களோ இல்லை.

இராமேசுவரம் திருக்கோயில் நிர்வாகத்தை இயக்கி வந்த ஆதினகர்த்தர், இராமனாத பண்டாரம், அவரது பணியில் நடைமுறைகளை அமுல்படுத்தி கோயில் பணியாளர்களிடத்தும் மற்றவர்களிடத்தும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்துவதற்காக, சேதுபதி மன்னர் தமது அதிகாரங்களை இராமனாத பண்டாரத்திற்கு மாற்றி வழங்கியதை இந்தச் செப்பேடு குறிப்பதால், நமது நாட்டு நிர்வாக, நீதிவழங்கல் வரலாற்றில் அதிகாரத்தை பகிர்ந்து பரவலாக்குதல் என்ற வகையில் இந்தச் செப்பேடு ஒரு புதுமைப் படைப்பாக விளங்குகிறது. காரணம் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், நமது

நாட்டின் வடபகுதியில் கிருஷ்ணா ஆற்றுக்கும் இமயமலைக்கும் இடைப்பட்ட பகுதியில் முகலாயர்களது ஆட்சி நடைபெற்று வந்தது. அந்த மன்னர்களுக்கு நீதி வழங்கல் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும், சகல அதிகாரங்களும் இருந்த பொழுதும், அவர்கள் நியாயம் வழங்குவதில், இஸ்லாமிய சட்ட திட்டங்களிலும் அவைகளுக்கு ஆதாரமான திருகுர்ஆனிலும் திருத்தூதர் முகம்மது நபி அவர்களது போதனைகளிலும் நன்கு பயின்று முதிர்ந்த விற்பன்னர்களான ''காஜி'' களது கருத்தை ஏற்றுத்தான் நியாயம் வழங்கி வந்தார்கள்.[1]

ஆனால், அப்பொழுது தென்னகத்தில் தன்னரசு மன்னர்களாக விளங்கிய தஞ்சை, செஞ்சி, மதுரை, இக்கேரி நாயக்கர்களும், திருவாங்கூர் மன்னரும், இராமநாதபுரம் சேதுபதிகளும், முந்தைய அரசர்களது வழியில் நின்று அவர்களது அறிவிற்கும், அனுபவத்திற்கும் உகந்தவாறு அவர்களே தங்களது ''நியாயத் தீர்ப்புகளை'' வெளியிட்டனர். இத்தகையதொரு, தொன்மையான நடைமுறையிலும் சேதுபதி மன்னர் ஒரு சிறு மாற்றத்தை- புதுமையை - ஏற்படுத்தியதைத்தான் இந்தச் செப்பேடு குறிக்கின்றது. இராமேசுவரம் திருக்கோயில் ஸ்ரீ இராமனாதசுவாமி பர்வதவர்த்தினி அம்மன் திருத்தொண்டில் ஈடுபட்டு இருந்த இராமநாதயுரம் சேதுபதி மன்னர்கள் ''சேதுபதி'' என்ற பொதுப் பெயரால் வழங்கப்பட்டது போல, இராமேசுவரம் திருக்கோயிலின் ஆதினகர்த்தரும் இந்தச் செப்பேட்டில் இராமனாத பண்டாரம் (வரி 17) என்ற பொதுப்பெயராலே குறிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீ இராமநாத சுவாமிக்கு சேதுபதி மன்னர் அறக்கொடையாக வழங்கியுள்ள இராமேசுவரம் தீவு கிராமங்களில் உள்ள மணியக்காரர், கணக்கப்பிள்ளைமார், குடியானவர்கள், இராமேசுவரம் திருக்கோயில் பணியில் உள்ள பணியாளர்கள், பரிசு பட்டர், கோயில் தோப்புக்காரர், நந்தவனக்காரர்களை அவரவர் செய்த குற்றங்களுக்கு மறவர்சீமை மன்னர் என்ற முறையில் அவர்களை விசாரித்து ஆக்கினை செய்வதற்கு மன்னருக்கு சகல அதிகாரங்களும் இருந்த பொழு

1. Eshwari Prasad - A Short History of Muslims Rule in India (1939) p. 316.

தினும், ஒருமுற்போக்கு நடவடிக்கையாக தமது அதிகாரத்தை ஆதினகர்த்தர் இராமனாத பண்டாரத்திற்கு இந்தப் பட்டயத்தின் மூலம் மாற்றிக்கொடுத்துள்ளார்.

மேலும் ''அவரவர் செய்த குற்றங்களைப் பரிச்சுத் தெண்டினை பண்ணி விலங்குலிடுகிற பேரை விலங்கி லிட்டு குற்றா குற்றத்துக்கு ... அவராதம் வாங்கி நடப்பிச்சுக் கொள்ளச் சொல்லி கட்டளையிட்டதுடன் (வரிகள் 18-22)'' தோப்புகளில் அன்னிதாக இருக்கிற மானிடர் போய்த் திருடினார்களேயானால் ... கோவில் வகையாக இருக்கிற மாடுகளை யாதாரு கள்ளர் திருட்டு புரட்டு நடப்பிச்சால், கள்ளனைப் பண்டாரமே தெண்டினை பண்ணி அவராதம் வாங்கிக் கொள்ளவும் ....'' (வரிகள் 24, 25, 29) என்ற மன்னரது கட்டளையை, இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. அத்துடன், இந்தக் குற்றங்களைச் செய்தவர்களைக் காவல் பண்ண பண்டாரம், கொல்லன், தச்சனை அழைத்தால், அவர்களும் பண்டாரத்தின் கட்டளைக்கு கட்டுப் பட வேண்டும் என்றும் (வரிகள் 28, 29) கோயில் மாட்டை யாதமொருவர் தோணியேற்றி போகும் கள்ளரை, பண்டாரத்: துடன் சேர்ந்து மணியக்காரர் தண்டினை பண்ணத் தவறினால் மணியக்காரர் அரசரது ஆக்கினைக்கு உட்படுத்தப்படுவார் என்ற குறிப்பும் (வரியை 33, 34) இந்தச் செப்பேட்டில் காணப்படு கிறது. இராமேசுவரம் ஒரு தீவாக இருப்பதனாலும், திருக்-கோயில் சொத்திற்கு இழப்பு ஏற்படும் வகையில் திருடர்கள் கடல்வழித் தப்பிச் செல்வதற்கு வாய்ப்பு இருந்தாலும் அங்கு நிகழும் திருட்டு, கடத்தல் ஆகிய குற்றங்களை புகலூரில் இருந்த சேதுபதி மன்னருக்குத் தெரிவித்து தீர்வு காண்பதில் தாமதமேற் படுவதைத் தடுக்க மன்னர் இந்த முறையை புகுத்தி இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. அத்துடன் புனித பூமியான இராமேசுவரம் தீவில் குற்றங்கள் பெருகாமல் அவைகளை ஒடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திலும் இறையுணர்வுடன் கோவில் நிர்வாகம் இயற்றுகின்ற பண்டாரம், குற்றங்களைக் களைந்து நியாயம் வழங்குவதில் சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து ஒரு புறமும் சாராமல் மேன்மையுடன் நடந்து கொள்வார் என்ற நம்பிக்கையிலும், சேதுபதி மன்னர் ஆதினகர்த் தருக்கு இந்த அதிகார மாற்றத்தை அளித்துள்ளார். இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னணி எதுவாக இருந்த பொழுதினும்,

இந்தச் செப்பேடு தமிழக குற்றவியல் வரலாற்றின் சிறப்பு ஏடாக என்றும் விளங்கும் என்பதில் இயல்பு. இராமநாதபுரம் சீமையை, தென் தமிழ்நாடு முழுவதையும், பத்தொன்பதாவது நூற்றாண்டில் தங்களது உடமையாக்கிய பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியார் கி.பி. 1851ல் தான் தங்களுக்கு பல்லாண்டு பாடும் பரம்பரையொன்று இந்த நாட்டில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு ஆதரவான ''கனவான்களை'' குறிப்பிட்ட சில ஊர்களில் குற்றங்களை விசாரித்து அபராதம் வழங்குவதற்கு மட்டும் உரிமையுடைய நடுவர்களாக நியமனம் செய்ததை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுதல் பொருத்தமாகும். வெள்ளைப் பரங்கிகளது ஆட்சிக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகக் சமுதாயச் சொத்திற்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களுக்கு சேதுபதி மன்னர் அபராதம் மட்டுமல்ல, சிறைத்தண்டனையும் வழங்கத்தக்க வண்ணம் அரசு அதிகாரத்தை சாதாரன துறவிக்கு அதிகார மாற்றம் செய்திருப்பதும் வியப்பளிப்பதாக உள்ளது.

இராமேசுவரம் திருக்கோயிலுக்குச் சொந்தமான இராமேசுவரம் தீவில் நந்தவனம் மட்டுமல்லாமல், வாழைத் தோப்பு, தென்னந்தோப்பு, இலுப்பைத் தோப்பு, பனைத் தோப்பு, ஆகியவை இருந்த விபரமும் (வரிகள் 23) திருக்கோயிலைச் சார்ந்த பசுமடத்திலும் ஆதினகர்த்தரது மடத்திலும், பசுமாடு, எருமை மாடுகளும், பேணப்பட்டு வந்த செய்தியும் (வரி. 29) செப்பேட்டில் காணப்படுகிறது. தற்பொழுது திருக்கோயிலுக்குச் சொந்தமான தென்னந்தோப்பு மட்டும் பாம்பனுக்கும் தங்கச்சி மடத்திற்கும் இடையில் உள்ளது. ஆதினகர்த்தரது இருக்கை அவரது பசுமடம், ஆகியவைகள் இருந்த இடம் அறியத்தக்கதாக இல்லை. அத்துடன், இராமேசுவரம் தீவில், இராமேசுவரம் திருக்கோயிலுக்கு கிழக்கே உள்ள அக்கினி தீர்த்தக் கரையும் வடக்கே சுடுகாட்டம் பட்டி, மாங்குண்டு அருகே கல்லடிச்சாலை, புளியடிச்சாலையும், மற்றும் தங்கச்சி மடத்திற்கு அருகே புங்கடித்துறையும், பாம்பனும் சிறிய துறைமுகங்களாக செயல்பட்ட விவரத்தையும் (வரிகள் 31—32) இந்தச் செப்பேடு தெரிவிக்கிறது. இன்னொரு செய்தி, இராமேசுவரம் தீவில் முன்னர் ''புளி'' ''புங்கை'' மரங்கள் மிகுதியாக இருந்த காரணத்தினால் ''புளியடி'' ''புங்கடி'' என்ற பெயர்களில் துறைமுகங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1964ல் ஏற்பட்ட

பெரும்புயலின் அழிவிற்கு முன்னர் வரை, தமிழ்நாட்டின் கணிச மான ''புளி'' தேவையை இராமேசுவரம் தீவு புளிய மரங்கள் நிறைவு செய்து வந்ததை இங்கு நினைவில் கொள்ளத் தக்கது. மற்றும் இந்த புளியடிச்சாலை துறைமுகத்தில் கி. பி. 1168ல் இலங்கையில் இருந்து புறப்பட்டு வந்த இலங்கை தண்ட நாயகனது பெரும்படை கரை இறங்கியதாக வரலாறு குறிப்பிடு கிறது.[2]

மேலும், முந்தைய கிராம நிர்வாகத்திலும் மணியக்காரர், கணக்கப்பிள்ளை முக்கியமானவர்கள் என்பதும் தெரியவருகிறது. குடியானவர் (வரி 18) சஞ்சாரம் (வரி 19) குற்றாகுற்றம்(வரி 21) தெண்டினை (வரி 25) தோணி(வரி 29) திருட்டு பிரட்டு (வரி 30) ஆகியவை இராமநாதபுரம் வட்டாரத்தில் வழங்குகின்ற பழகு தமிழ்ச் சொற்கள் அன்னிதாக (அன்னியமாக) (வரி 24) பிராம்மணப்பிள்ளை (வரி 29) என்பன ஆபூர்வ வழக்குச் சொற்கள் சட்டாம்பிள்ளை, கணக்கப்பிள்ளை போன்று சமையல் காரருக்கு ''தவசிப்பிள்ளை'' என்ற வழக்கும் வந்துள்ளது. இன்னும் இந்தச் செப்பேட்டில் குற்றவிசாரணையை ''பரிசித்து'' (வரி 20) என்றும் தண்டனையை ''தெண்டனை'' (வரி 21) அபராதம் ''அவராதம்'' (வரி 22, 25) என்றும் பேச்சு வழக்கு உரைநடையாக அமைந்துள்ளது. இதனைப் போலவே இராமேசு வரம் தீவையும் மண்டபத்தையும் இணைக்கும் பாம்பன் நீர் வழி, பாம்பன் ஆற்று வழி என இயல்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது ''இராமேசுவரம் செல்லும் பொழுது'' பாம்பனாறு'' குறுக் கிட்டது என்பதும் இன்றும் இந்த வட்டாரத்தில் வழங்கும் பழமொழி. இந்த நீர்வழியில் படகுகளைக் கடத்தி விடும் உரிமை சம்பந்தமான பரங்கியரது ஆவணமொன்றில் இதனை ''பாம்பன் பார்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[3] கி. பி. 1639ல் இரண்டா வது சடைக்கன் சேதுபதிக்கும் மதுரை நாயக்க மன்னரது தளவாய் இராமப்பையனுக்கும் நடந்த போரினைப் பாடுகின்ற ''இராமப் பையனது அம்மானையில்'' இந்த வழி ''பாம்பாற்றங்கரை'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[4]

2. Krishnasamy Iyangar Dr. S. South India and Her Mohammadan Invaders ( 928) p. 3.
3. Madurai Dist Records Vol ; 4674 - 10—1—1826.
4. இராமப்பையன் அம்மானை(தஞ்சை சரஸ்வதி மகால் பதிப்பு)

மற்றும், பட்டயத்தின் வரிகள் 27-28ல் கள்ளரைப் பண்டாரம் காவல்பண்ண வேண்டுமென்று, கொல்லன் தச்சனை அழைக்கச் சொன்னால் ...'' என்ற தொடரில் இருந்து, இராமேசுவரத்தில் குற்றவாளிகளை அடைத்து வைக்க சிறை எதுவும் இல்லையென்றும், பிடிப்பட்ட கள்ளரை சங்கிலியில் பிணைத்து விலங்கிடுவதற்கு கொல்லனும், தக்க பாதுகாப்பான அறையில் இருத்தி, அடைத்து வைக்க தச்சனும் தேவைப் பட்டனர் என்பதும் விளக்கப்படுகிறது.

பட்டயத்தின் இறுதியில் (வரிகள் 37-40) அபிமானிச்சு, சுகிர்தம், தீர்த்தம், கன்னியாதானம், பூமிதானம், அக்கிரகாரம் தோஷம், அகிதம், மாதாபிதா, பிரும்மகத்தி ஆகிய வடசொற்கள் இயல்பான தமிழ்ச் சொற்களைப் போல பயன்படுத்தி உள்ளது அன்றைய மணிப்பிரவாள தமிழ்வழக்கை நினைவு படுத்துவ தாக உள்ளது.

# செப்பேடு எண் 6.

(மூலம்)

1) ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாற்த்தம் 1549 இதன்மேற் செல்லாநின்ற

2) விபவ ஹூ சித்திரை மீ 10வ சுக்கிலபட்சமும் திறையோதசியும் புணர்

3) பூசநட்செத்திரம் சோபனநாம யோகமும் வலவாகணமுந் கூடின

4) சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரெட்ஷா துரந்தரன் ராமனாத

5) சுவாமி காரிய துரந்தரன் பரராசசேகரன் சொரிமுத்து வன்னியன் மகாம

6) ண்டலேசுரன் மூவராயிரகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கு

7) டாதான் அந்தம்பர கண்டன் சுவாமித்துரோகி யள் முண்டன் வய்கை வழநாட

8) ன் அடைக்கலம் காத்தான் தாலிக்கு வேலி தொண்டியந் துறை காவலன்

9) வீரதண்டை சேமத்தலை விழங்குமிரு தாழினான் சேதுங்க ராய வங்கிஷாதி

10) பன் துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீள்

11) பால் விரையாத கண்டனிலிருருக்கும் உடையான் சேதுபதி காத்த தேவரவர்கள்

12) புத்திரன் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் ராமநாத சுவாமி காரி

---

* A. R. E. — A. 36/1947

இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை

அமைப்பு : 30 செ.மீ. × 14 செ.மீ.

13) ய துரந்தரன் ராமனாத பண்டாரமவர்களுக்குத் தாம்பிர சாதனப்ப

14) ட்டையம் யெளுதிக் கொடுத்த பரிசாவது சுவாமிக்கு னாம் பிச்சிப் பூவும்

15) பச்சைப்பாலும் அற்தசாமத்தில் அவிஷேகம் பண்ணிக் கொண்டு வருமி

16) டத்தில் றாமனாத 1சுவாமிக்குச் சகலயுபகரணங்களுடனே யும் கூட அபிஷேக நெய்

17) வேத்தியம் உச்சப முதலாகியது நடப்பிக்க வேணுமென்று கட்டளையுண்டு பண்

18) ணிக் கிராம பூமியளும் விட்டு நடப்பித்து வருமிடத்தில் தாங்களும் அர்ச்சகரு

19) ம் தானிகரும் நம்மிடத்தலே சொன்னது இந்தச் சேது வுக்கு ராசாவாயிருக்

20) கிறபடியினாலே அரமனை வாசலிலே உள்ள காரியக்கார ரும் இந்த ராச்சிய

21) த்திலுள்ள சறுசனங்களும் பாராட்டத்திலுள்ள சனங்களும் நமக்குப் பி

22) நிதிவரத்தக்க காணிக்கையன் உபையம் முதலாகிய தெல் லாம் நம்மு

23) டைய கட்டளையிலே் நடப்பிப்பார்களே யென்று சொன்ன படியினாலே நம்

24) முடைய கட்டளைக்கு நாம் குடுத்திருக்கிற கிராம பூமியளும் நம்முடைய ஆதீன

25) த்துக் கிருக்கிற பேர் குடுக்கிற பட்டக் காணிக்கைக் கிராம மல்லாமல்

26) நம்முடைய கட்டளைக்கு விடுகிற கிராமங்களிலேயும் உண்டாகிய பலப்

27) புரோசனங் கொண்டு நம்முடைய கட்டளைப் பூசை நடப் பித்துக் கொண்

28) டு வருகிறதே யல்லாமல் பூறுவாபூறுவம் கோவிலுள்த் துறை கட்ட

29) ளையிலே நடந்துவருகிற படிக்கு நம்முடைய ராச்சியத்திலே உண்டாகிய உபை
30) யங்கள் காணிக்கையளும் கோவிலுள்துறைக் கட்டளை யிலே தானேபூறு
31) வாபூறுவம் நடந்துவந்த படிக்கு அனுபவித்துக் கொள்ளச் சொல்லி
32) யும் நம்முடைய கட்டளையிலே நம்முடைய சொந்த திரவிய
33) ங் கொண்டு அவிஷேக நெய்வேத்தியம் உச்சபம் நடப் பித்து அந்தப் ப
34) லன் நம்மைவந்து சாருகிறதே அல்லாமல் பிறத்தியா ருடைய திரவிய
35) ம் பாவத் திரவியமாயிருக்கும் ஆனபடியினாலே நம்முடைய கட்ட
36) ளையில் வாங்கி நடப்பிக்கத் தேவையில்லை யென்றும் சேதுவிலே நி
37) லவரம் பண்ணிவித்து நம்முடைய ஆதினத்திலே சுவாமிக்கும் குடுக்கிற
38) பட்டக் கிராமமும் நம்முடைய ராச்சியத்திலே உள்ளக் காரியக்காரர் ம
39) த்தச் சனங்கள் குடுக்கிற உபையம் பரராட்டத்திலுள்ள உபையங் கா
40) ணிக்கை முதலானதெல்லாம் கோவிலுள்த் துறைக் கட்டளையிலே
41) தானே ஆதிசந்திரா ற்கம் அனுபவித்துக் கொள்ளச் சொல்லி ராமநா
42) த சுவாமி சன்னதியிலே தாராபூறுவமாகத் தாம்பிரசாதனங் குடுத்த
43) படியினாலே சந்திராதித்தர் வரைக்கும் இந்தத் தாம்பிரச் சாதனப்படிக்
44) குக் கோவிலுள்துறைக் கட்டளையிலே தானே அனுபவித் துக் கொள்ளகட
45) வாராகவும் ராமநாதன் துணை.

## செப்பேடு எண் 6.

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : தளவாய் சேதுபதி என்ற கூத்தன் சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் இராமனாத பண்டாரம்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1549 ஆண்டு விபவ ஆண்டு சித்திரை மாதம் 10ஆம் நாள் (கி.பி. 1627)
4. செப்பேட்டின் பொருள் : கோயில் உள்துறைக் கட்டளைப் பூசை நடப்பிப்பது சம்பந்தமான ஆணை

*விருதாவளிகள் :*

இந்தச் செப்பேட்டின் தொடர்பாக பதினாறு விருதாவளிகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடு எண்கள் 4, 5லும் பொறிக்கப் பட்ட விருதுகள் தான். ஆனால் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கான காரணம் தெரியவில்லை.

*புலப்படுத்தும் செய்திகள் :*

இராமேசுவரம் இராமனாத சுவாமிக்கு ஆறுகால பூசைகள் இப்பொழுது நடைபெற்று வந்தாலும் தொடக்கத்தில் அர்த்தசாம பூசை மட்டும் இரவு 9-00 மணிக்கு நடந்து வந்தது என்றும் அதற்கு இந்த மன்னர் பிச்சிப்பூவும் பச்சைப்பாலும் கொண்ட அபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்து இருந்தார் என்ற செய்தியை வரிகள் 14-15, தெரிவிக்கின்றன. பின்னர், இதே மன்னர் ''இராமனாத சுவாமிக்கு சகல உபகரணங்களுடனேயும் அபி சேகம், நெய்வேத்தியம், உச்சவம் முதலாகியது நடப்பிக்க

வேண்டுமென்று கட்டளையுண்டு பண்ணி, கிராம பூமியளும் விட்டு நடப்பித்து...'' (வரிகள் 16-18) வருமாறு செய்தார். இந்த நடைமுறையில் எழுந்த சிறு சிக்கல் ஒன்றினை இராமனாத பண்டாரமும், அர்ச்சகரும், ஸ்தானிகருமாக மூவரும் சென்று மன்னரைச் சந்தித்து சிக்கலுக்கு தீர்வு பெற்றதனை விளக்கும் அரசரது ஆணையைக் கொண்டது இந்தச் செப்பேடு.

மறவர் சீமையின் மன்னர் என்ற முறையில் தம்மைப் புகழ்ந்து பாராட்டக்கூடிய குடிகளும் ஊழியர்களும் அவருக்கு பிரியம் ஏற்பட வேண்டுமென்பதற்காக, அவரது வழிபாட்டுக் கட்டளைக்கு காணிக்கைகளும் உபயங்களும் அளித்தால், அவைகளை அந்தக் கட்டளைக்குப் பயன்படுத்தாமல், அவைகளைப் பூர்வமான கோயில் உள்துறை கட்டளையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என தெளிவுபடுத்தி இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளார். அதற்கு அடிப்படையாக அவர் கூறியுள்ள காரணம் வியக்கத்தக்கதாக உள்ளது. அவரது சொற்களிலே அந்த விளக்கத்தைப் பார்ப்போம் ''நம்முடைய கட்டளைக்கு நமது சொந்த திரவியம் கொண்டு அபிஷேக, நைவேத்தியம், உச்சபம், நடப்பித்து, அந்தப்பலன் நம்மை வந்து சாருகிறதேயல்லாமல், பிறத்தியாருடைய திரவியம் பாவத்திரவியமாக இருக்கும் ஆனபடியினாலே, நம்முடைய கட்டளையிலே வாங்கி நடப்பிக்கத் தேவையில்லை ....'' (வரிகள் 32-36) முன்னூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த மன்னர் ஒருவரது மனச்சான்று, எவ்விதம் அமைந்து இருந்தது என்பதை எடுத்துக்காட்டும் இணையிலாத ஆணையாக இது அமைந்து உள்ளது. ''தீதின்றி வந்த பொருள் தானே, அறம் ஈனும் இன்பமும் ஈனும்'' என்று திருவள்ளுவப் பெருந்தகை வரைந்துள்ள வள்ளுவத்தை வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்த அந்தத் தமிழ் மன்னரது செங்கோன்மை எப்படி இருந்து இருக்கும் என்று எண்ணிப்பார்க்கும் பொழுது ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ''இராமநாத சுவாமி காரிய துரந்தன்'' என்ற விருது அந்த மன்னருக்கு நூற்றுக்கு நூறு பொருத்தமானது தானே!

மற்றும், இந்தச் செப்பேட்டின்படி, இராமேசுவரம் திருக்கோயில், சேதுபதி மன்னரது சொந்த திருப்பணியாக இருந்த பொழுதினும், அந்தக் கோயிலின் அன்றாட நடைமுறைகளாக அபிசேகம், நைவேத்தியம் உற்சவம் ஆகியவைகளைத் திறம்பட

தொடர்ந்து நடத்துவதற்கு கோவில் உள்துறைக் கட்டளை என்ற அமைப்பும், சேதுமன்னர் அப்பொழுதக்கப்பொழுது சிறப் பான பூசைகள் நடத்துவதற்கு தனியான அமைப்பும் இருந்தன என்பது தெரியவருகிறது.

அர்த்தசாமம், சகல உபகரணங்கள், அபிஷேகம், நைவேத்தியம் உச்சபம் (உற்சபம்) அர்ச்சகன், தானிகர், கிராமம், பூமி, காரியக்காரர் பிரதிப், புரோசனம் (பிரயோசனம்) திரவியம், பாவம் ஆகிய வடசொற்கள், இயல்பான தமிழ்ச் சொற்களைப் போல இந்தச் செப்பேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பட்டக் காணிக்கை, பட்டக்கிராமம் என்பன மானியம்-மானியமாக வழங்கப்பட்ட ஊர் - என்பனவற்றை முறையே குறிக்கின்றன.

# செப்பேடு எண் 7

**(*மூலம்*)**

*முதல் பக்கம்*

1. பிறசோற்பத்தி வருடம் தையி மீ 15 உ திருமலை நாயக்க ராய்யவனர்களுக்கு தளவாய் சேதுபதி காத்த தேவரவர் களுக்கு ராமீசுரம் குருக்கள்மார் சபையார் தமிழ் ஆரியர் அனைவருமோம் இசைவுமுறி குடுத்தபடி நாங்கள் அனை வரும் சுவந்திர

2. சுவாமி யமரிமிதமாய் அதர்மனை ஏறிப்போய் வாசலில் கும்பிட்ட படியினாலே அரமனையார் கேட்கவே யதுபடி சுவாமி பூசிக்கிற குருக்கள்மார் அவர்கள் செய்யும் தொழில் அனுமேசுரரை பூசை பண்ணுகிறது ராமனாத சுவாமியை பூசை பண்ணுகி

3. றது மலைவளர் காதலியம்மனை பூசை பண்ணுகிறது படிக லிங்கத்தை பூசை பண்ணுகிறது உச்சவ விக்கிறகம் ராமனாத சுவாமியை பூசை பண்ணுகிறது தாண்ட வேசுரரைப் பூசை பண்ணுகிறது தேவை அம்பலவாண

4. ரை பூசை பண்ணுகிறது பல்லக்கு னாயகரைப் பூசை பண்ணுகிறது யெழுந்தருளப் பண்ணுகிறதும் வெள்ளை துற்க்கையம்மனை பூசை பண்ணுகிறது சுத்து கோவிலுக்கு பரிவார தேவதையளுக்கும் நெய்வே

5. த்தியம் தீபாராதனையும் பண்ணுகிறதும் திருவாபரணம் சாத்துகிறதும் யிந்த தொழில் காலா காலங்களிலே பண்ணிக் கொண்டு யெங்கள் சுவந்திரம் அனுமேசுர பூசைக்கு பணம் ராமனாத சுவாமி பூசை

6. க்கு பணம் 1ம் அம்மன் மலைவளர்காதலி அம்மன் பூசைக்கு பணம் $\frac{1}{4}$ மீ ஆக பணம் $1\frac{1}{4}$யும் பிறசாதம் பூறுவமில்லாத படியினாலே பிற்ப்பாடு கட்டளையிட்டது படிக லிங்க பூசைக்கு பிறசாதம் யிருநாழியும் வெள்ளைது

7) ற்க்கைக்கு னாழிப் பிறசாதமும் ஆகமுன்னாழி பிறசாதமும் சந்தனம் பத்துக்கு ஒன்றும் தோசை வடை பணியாரம் பத்துக்கு ஒன்றும் பாக்கு வெத்திலை யேழ்னாளைக் கொரு நாளும் யேற்றபடி மாதமொன்றுக்கு

8) கய்வித்தாரம் அழகு பணி சாத்த பணம் 4ம் திரு கார்த்தி கைக்கு பொன் பணம் 1 திருவிழாவுக்கு பொன் 2 பணம் 1ம் மாசித்திருவிழாவுக்கு கும்பவத்திரதுக்கு பச்சவடம் மூன்றும் கும்பதெட்சனை பொன் 3

9) ம் தன்மகற்த்தா உபயகட்டளையில் ருத்திர அபிசேகம் பண்ணிவித்தால் பணம் 7ம் பஞ்சாமிறுதம் பண்ணிவித்தால் ஒரு பணமும் கும்ப அபிஷேகம் காலம் உண்டிகயில் காசும் எள்ளும்

10) சுவாமிக்கு ரண்டு பங்கும் எங்களுக்கு ஒரு பங்கும் பத்திக் கொள்ள கடவோமாகவும் சபையார் செய்யிற தொழில் விசுவலிங்கம் ராமலிங்கம் மலைவளர் காதலி அம்

11) மன் எழுந்தருளும் நாயகர் தாண்டவேசுவரர் தேவை அம்பலவாண சுவாமி இவர்களுக்கு திருமஞ்சளம் எடுத்து கட்டுகிறது உள்ளே கொண்டு வந்து வ

12) ச்ச படிக் கட்டளையை எடுத்துக் கொடுக்கிறது சுயம் பாகமும் பண்ணி அந்த நெய்வேத்தியமும் சன்னதியில் கொண்டுவந்து போடுகிறது தூபதீபம் கொடு

13) றது சுத்துப் பரிவார தேவதையருக்கு அபிஷேகமும் பண்ணி நெய்வேத்தியம் கொண்டு போறது சீவிலி நாயகர் பல்லக்கிலெழுந்தருளப் பண்ணுகிறது யானை மேல்

14) திருமஞ்சனம் கொண்டு வருகிறது வந்த பரிசுக்கு கோடி தீற்த்தமெடுத்து விடுகிறது இந்த தொழில்களெல்லாம் சபையார் காலகாலங்களிலே செய்து கொ

15) ண்டு எங்கள் சுவந்திரம் னாளொன்றுக்குப் பிறசாதம் நாழி இருபத்து நாலும் சுத்துக் கட்டளை உபையத்தில் குறுணிக்கு நாழிப் பிறசாதமும் கறியமுது எட்டி லொன்றும் சில்வரி

16) க்கு நாளொன்றுக்கு அரைப்பணமாக மாதமொன்றுக்குப் பதினஞ்சு பணமும் பத்திக் கொள்ளக் கடவோமாகவும் தமிழ் ஆரியர் செய்யிற தொழில் இந்தவகைச் சன்னதிய

17) களுக்கு நெய்வேத்தியம் பண்ணின தளிகை மாத்துகிறதும் சய்வப் பண்டாரங்கள் யிருக்கிற அறை போக மத்துண் டாகிய அறை முறையிலே யிருக்கிறதும் சந்தனம்

18) அரைக்கிறதும் திருவிளக்குப் பார்க்கிறதும் பல்லக்குயெழுந் தருளப் பண்ணுகிறதும் உச்சவத்துக்கு சுவாமியை தேடகத் தில் திருத்தேரிலெருந்தருள

இரண்டாம் பக்கம்

19) பண்ணுகிறதும் அந்த அந்தச் சன்னதிவாசல் காத்திருக் கிறதும் வில்வம் திருமாலை கட்டுகிற பண்டாரங்களல்லாம் விசேஷமுண்டானால்

20) செய்து வருகிறநும் தானத்தார் திருவாபரணம் கொண்டு போய் வய்க்கிறதும் கட்டியம் அடப்பம் காளாஞ்சி அன்னக்கென்டியை பரிசை யடியொழுக்கு அ

21) ணைசு தாசியனுக்கு தட்டி பாற்க்கிறதும் நிற்மாலியம் சிலவழிக்கிறது வந்து இருக்கிற காரியக்காறர் மரியாதி மனுசருக்கு பிரசாதம் கொண்டு போய்க்கொடுக்கிறது இந்த தொழிலுண்

22) டாகிய தெல்லாம் செய்துகொண்டு யெங்களுக்கு நிலபரம் பண்ணின சோறும் சம்பளமும் பத்திக் கொண்டு காலா காலங்களிலே சுவாமி பணிவிடை தாட்சிவரா

23) மல் செய்துவரக் கடவோமாகவும் யிப்படி கால காலங் களிலே பூசை பண்ணாமலிருந்தாலும் கோவில் யடைத் தாலும் ராசமுத்திரைக் குள்ப்பட்டு நடவாமலிருந்தாலும்

24) அரமனைக்கு அபராதம் ஆயிரத்திருநூறு பொன்னு மிறுத்து யெங்கள் காணியாட்சியும் இழந்து போக கடவோ மாகவும் இந்தப்படிக்கு சம்மதித்து இசைவுமுறி குடுத்தோ

25) ம் திருமலை நாயக்கரய்யனவர்ளுக் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்களுக்கு குருக்கள்மார் சபையார் தமிழ் ஆரியருமோம் இந்தப் படிக்கு தி

26) ருமலை நாயக்கரய்யனவர்கள் பாதத்தாணை தளவாய் சேதுபதி காத்த தேவரவர்களாணையே தப்பாது இந்த இசைவு முறியெழுதினேன் முத்துக்கா

27) மாட்சி உ வாமதேவ குருக்கள் கெங்காதர குருக்கள் சங்கர குருக்கள் சறுவேசுர குருக்கள் ராமனாத குருக்கள் சந்திர சேகர குருக்கள் சவையாரில்

28) சேராமபட்டன் விரிசி பட்டன் நரசிங்கப் பட்டன் தமிழ் ஆரியரில் நயினார் அரிசந்திரன் நாராயணன் வேல் வாங்கினான் தம்பிராமன் உமையாதேவன் அ

29) மரர் தொழ நிண்ணான் சோமேசுரமுதலி கடலடைத் தான் கெங்கையாடி பெருமாள் சறுவேசுரன் ஆண்டயி னான் நயினா பிள்ளை சேது நிலையிட்ட பிரமாதிராயன் தெ

## செப்பேடு எண். 7
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : இராமேசுவரம் குருக்கள் சபை யாரும், தமிழ் ஆரியர் அனைவரும்.
2. செப்பேடு பெற்றவர் : தளவாய் சேதுபதி என்ற கூத்தன் சேதுபதி
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1553, ஆண்டு பிறஜோத்பத்தி தை மாதம் 15
4. செப்பேட்டின் பொருள் : இசைவு முறி

இதுவரை படித்த செப்பேடுகளுக்கு மாற்றமானது இந்தச் செப்பேடு. சேதுபதி மன்னருக்கு இராமேசுவரம் திருக்கோயிலில் பணி செய்து வந்த குருக்கள் சபையாரும் தமிழ் ஆரியரும் எழுதிக் கொடுத்த இசைவுமுறியாகும். இராமேசுவரம் திருக்கோயில் நடைமுறைகளை ஒழுங்காகவும் முறையாகவும் நிறைவேற்றி வைப்பதற்காக, திருக்கோயில் திருப்பணியாளர்கள் இணக்கம் தெரிவித்து வரைந்து வழங்கிய இந்தப்பிடி பாடு தளவாய் சேதுபதி மன்னருக்கும் எழுதப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டில் கண்ட மறவர் சீமை மன்னராக இருந்தவர் தளவாய் சேதுபதி என்ற கூத்தன் சேதுபதியாகும். மதுரை நாயக்க மன்னருக்கு கட்டுப்பட்ட தளவாயாக சேதுபதி மன்னர் இருந்ததால், அப்பொழுது ஆட்சியில் இருந்த திருமலை நாயக்கர் (கி.பி. 1623-59) பெயரும், முறியின் வாசக அமைப்பு முறைக்காக சேர்க்கப்பட்டுள்ளது.

ஏனெனில், மறவர் சீமையின் அரசியலை திறம்பட நடத்தியது மட்டுமல்லாமல் மதுரை முத்துக்கிருஷ்ணப்ப நாயக்ரது சிறந்த தளவாயாகப் பணியாற்றிய சடைக்கன் சேதுபதி

மன்னர் ஆட்சிக்காலம் தொடங்கி இராமேசுவரம் திருக்கோயில் நிர்வாகமும் முறையாக நடந்து வந்தது. ஆதலால் மதுரை நாயக்க மன்னருக்கும் இந்தக்கோயில் நிர்வாகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. திருமலை நாயக்க மன்னர் கி.பி. 1623ல் அரசுரிமை பெற்றதில் இருந்து கி. பி. 1635 வரை[1] அவர் திருச்சிராப்பள்ளியைக் கோ நகராகக் கொண்டு அங்கேயே இருந்து வந்தார். இந்த இசைவுமுறி எழுதப்பட்டபொழுதும் (கி.பி. 1631ல்) அவர் திருச்சியில் தான் இருந்தார். பின்னர், மதுரையைத் தலைநகராகக் கொண்டு இருந்தபொழுதும். மதுரைக்கு கிழக்கே நூறுகல் தொலைவில் உள்ள இராமேசுவரத் திற்கு ஒருமுறை கூட அவர் வருகை மேற் கொள்ளவில்லை. அன்றி, அங்கு அவர் எவ்வித திருப்பணியோ திருவாபரணமோ அளிக்கவில்லை யென்பதை வரலாற்று ஆவணங்கள் உறுதிப் படுத்துகின்றன.

ஆதலால் இந்த இசைவுமுறி, சேதுபதி மன்னரது ஆணை யின் பேரில் தான் வரையப்பட்டது என்பதை இந்த செப்பேட்டின் இன்னொரு பகுதி (வரிகள் 22-23) யில் கண்டுள்ள தொடர் ''ராச முத்திரைக்கு உட்பட்டு, நடவாமல் இருந்தாலும் அரண்மனைக்கு ஆயிரத்து இருநூறு பொன்னும் இறுத்து, எங்கள் காணியாட்கி யும் இழந்து போகக்கடவோமாகவும்'' என்றும் ''தளவாய் சேதுபதி காத்த தேவர்களாணையே தப்பாது...'' (வரி 24) என்றும் செப்பேட்டு வாசகம் இந்த உண்மையைத் தெளிவு படுத்துவதாக இருக்கிறது.

இராமேசுவரம் திருக்கோயிலுக்கு தலைமைக் கண்காணிப் பாளராக, சைவ பண்டாரத்தை ''இராமனாத பண்டாரம்'' என்ற பொதுப் பெயரில் மன்னர் முதலாம் சடைக்கன் சேதுபதி நியமித்து இருந்த பணியில், கூத்தன் சேதுபதி ஆட்சிக்காலத்தில், பண்டாரம் இல்லாத நிலையொன்று ஏற்பட்டது போலும் கோயில் நிர்வாக கண்காணிப்பு இல்லாது செவ்வனே நடை பெற வேண்டும் என்ற நோக்கில், கோயில் குருக்களைக் கட்டுப்படுத்தி தத்தம் கடமைகளை நிறைவேற்றச் செய்வதற்காக இந்தப் பிடிபாடு கைச்சாத்து பெற வேண்டியதாகிவிட்டது. எனத்தெரி

1. Sathianathaier S – History of Madurai Nayaks (1924) p. 115.

கிறது மேலும், இந்தப்பிடிபாடு அன்றைய கோயில் பணியாளர் களுக்கு எத்தகைய கடமைகள் இருந்தன என்பதையும் அவை களை இன்றைய நிலையுடன் ஒப்பீடு செய்வதற்கு உதவியா கவும் உள்ளது.

இந்த பிடிபாட்டில் ஒப்பமிட்டவர்கள் இருபிரிவினர் குருக்கள் மார் சபையார், தமிழ் ஆரியர்களும். குருக்களாக பணியாற் றுகின்ற அந்தணர், மராட்ட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராமேசுவரத் திற்கு இடம் பெயர்ந்து வந்து, அங்கேயே நிலையாகத் தங்கி விட்டவர்கள். இராமனாதசுவாமிக்கு பூசை பண்ணக் கூடிய தனி உரிமையை வழிவழியாகப் பெற்றவர்கள். இன்றும் அவர்களே இராமேசுவரம் திருக்கோயிலின் பூசாகர்களாக இருந்து வருகின்-றனர். இந்த சிறப்பான உரிமை, இங்குள்ள, தமிழ் அந்தணர் களுக்கு அல்லாமல் அவர்களுக்கு மட்டும் எந்த சூழ்நிலையில் வழங்கப்பட்டது, என்பதற்கான ஆவணங்கள் இல்லை. இத்தகையதொரு ஊழியமுறை திருச்சீரலைவாய் திருக்கோயிலில் இருந்து வருகிறது. திருமுருகனுக்கு நித்ய பூசை செய்கின்ற வர்கள் கேரளத்தைச் சேர்ந்த போத்திகள் என்ற அந்தணர்கள், பதினான்காவது நூற்றாண்டில், திருச்செந்தூர்ப்பகுதி ஒரு குறுகிய காலம் தான் கேரள மன்னர் பிடிப்பில் இருந்தது. அப்படி இருந்தும், இந்தக் கோயிலுக்குள் ''போத்திகள்'' எவ்விதம் புகுந்தனர் என்பதற்கான விளக்கம் இல்லை. இன்றும், குமரி மாவட்ட கோயில்கள் பலவற்றில் கேரள நாட்டு ''போத்தி களும்'' ''மேசாந்திகளும்'' கோயில் பணியில் இருப்பது குறிப் படத்தக்கது.

இவர்கள் மேற்கொண்டிருந்த கோயில் பணிகளாவன (வரிகள் 2-10)

1. அனுமேசுர பூஜை,
2. இராமநாதசுவாமிக்கு பூஜை.
3. மலைவளர் காதலிக்கு பூஜை.
4. படிகலிங்க பூஜை.
5. இராமனாதசுவாமி (உற்சவக்கிரக) பூஜை.
6. தாண்டேசுவரர் பூஜை
7. தேவை அம்பலவாணருக்கு பூஜை

8. பல்லக்கு நாயக்கருக்கு பூஜையும் அவரை எழுந்தருளப் பண்ணுகிறதும்.
9. வெள்ளை துர்க்கை அம்மனுக்கு பூஜை
10. பரிவார தேவதைகளுக்கு நைவேத்தியம் தீபாராதனை
11. திருவாபரணம் சாத்துகிறது.

இந்தப் பணிகளை இவர்கள் குறிப்பிட்ட காலங்களில் மேற்கொண்டிருந்தனர். அதற்காக முந்நாழி பிரசாதமும், சந்தனம் பத்துக்கு ஒன்றும், தோசை, வடை, பணியாரம் பத்துக்கு ஒன்றும், பாக்கு வெற்றிலை ஏழுநாளைக்கு ஒருநாளும், மாதம் ஒன்றுக்கு ஏழுபடியும் மற்றும், திருக்கார்த்திகை குடை, மார்கழி திருவிழா, மாசிதிருவிழா, ஆடித்திருவிழா ஆகியவைகளுக்கு பஞ்சாமிர்தம் பண்ணிவைத்தால் ஒரு பணமும், கும்பதெட்சினையும் கால்படி அபிஷேகமாகவும், உண்டியலில் கிடைக்கின்ற காசு, எள்ளு ஆகியவைகளில் சுவாமிக்கு இரண்டு பங்கும் குருக்கள்மார்களுக்கு ஒரு பங்கும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்து சபைபார் அல்லது தானத்தார் செய்ய வேண்டிய கடமைகள்.

1) விசுவலிங்கம், ராமலிங்கம், மலைவளர் காதலிஅம்மன் எழுந்தருளும் நாயகர், தாண்டேசுவரர், அம்பலவாண சுவாமி ஆகியவர்களுக்கு திருமஞ்சனம் செய்வித்தல் கட்டளையை எடுத்துக்கொடுத்தல்.
2) கர்ப்பகிருகத்திற்குள் கொண்டுவந்து வைக்கப்பட்ட படிக் கட்டளையை எடுத்துக் கொடுக்கிறது.
3) சுயம்பாகம் செய்து, நைவேத்தியம் முடிந்தவுடன் அதனை சன்னதியில் கொண்டுவந்து போடுகிறது.
4) தூப தீபம் எடுத்துக் கொடுக்கிறது.
5) பரிவார தேவதையளுக்கு அபிஷேகம் பண்ணி நைவேதியம் செய்கிறது.
6) சீவில்லி நாயகரை பல்லக்கில் எழுந்தருளப் பண்ணுகிறது.
7) ஆனை மேல் திருமஞ்சனம் கொண்டு வருகிறது.
8) பக்தர்களுக்கு கோடி தீர்த்தம் வழங்குதல்

இந்தக் கடமைகளை உரியகாலங்களில் செய்வதற்காக நாளொன்றுக்கு பிரசாதம் இருபத்து நான்கு நாழியும், சுத்துக் கட்டளை உபயத்தில் குறுணிக்கு ஒரு நாழிப் பிரசாதமும், கறிய முது எட்டில் ஒன்றும், வேறு சில பணிகளுக்கு நாளொன்றுக்கு அரைப்பணமாக மாதமொன்றிற்கு பதினைந்து பணமும் பெற்றுக் கொள்வது என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

கோயில் பணியாளர்களில் மூன்றாவது பிரிவினரான தமிழ் ஆரியர்களது கடமைகளாவன :

கோவில் சன்னதிகளில் நைவேத்தியம் பண்ணின தளிகை மாற்றுகிறது. சைவப் பண்டாரங்கள் இருக்கிற அறைகள் தவிர, ஏனைய அறைகளில் தங்கி இருக்கிறது. சந்தனம் அரைத்துக் கொடுத்தல். திருவிளக்கு பார்க்கிறது, பல்லக்கு எழுந்தருளப் பண்ணுகிறது, உற்சவத்திற்கு சுவாமியைத் தேடகத்தில், திருத் தேரில் எழுந்தருளச் செய்வது, அந்தந்த சன்னதி வாயில்களில் காத்து இருப்பது.

வில்வம், திருமாலை கட்டுகிற பண்டாரம் அவர்கள் பணியைச் செய்கிறது.

திருவாபரணம் கொண்டு போய் வைக்கிறது. கட்டியம், அடப்பம் - காளாஞ்சி, அன்ன கெண்டிகை பரிசை, படியொழுக்கு சுலமணை தட்டிப்பார்க்கிறது. நிர்மாலியம் செலவு செய்தல், பெரிய மனிதருக்கு பிரசாதம் கொண்டுபோய் கொடுத்தல் ஆகிய பணிகளைச் செய்வதாக இந்த அந்தணர்கள் இணக்கம் தெரிவித் துள்ளனர். கோயில் பிரசாதம் முதலியவைகளில், முந்தைய இரு பிரிவினருக்கும் நியதி செய்யப்பட்டுள்ளவாறு, இவர்களுக்கு இந்த இசைவு முறியில் குறிப்பிடப்படவில்லை. இதற்கான காரணம் என்ன என்பதை துலக்க இயலவில்லை என்றாலும், இந்தப்பணியாளர்களுக்கு திருக்கோயில் திருப்பணிக்காக பிர சாதம், வருவாயும் இருந்து இருக்க வேண்டும். ஒரு பழைய ஆவணம் ஒன்றின்படி,[2] இராமேசுவரம் திருக்கோயிலில் நாளொன்றுக்கு நூற்று எண்பது படி அரிசி திருவமுதுக்காக செலவு செய்யப்பட்டது என்றும் இதில் நாற்பது படி அரிசி கோயில் பணியாளர்களுக்கானது என்று குறிப்பிடப்பட்டு இருப் தால் இதில் தமிழ் ஆரியரும் அடங்குவர் எனக் கொள்ளலாம்.

2. The Indian Antiquary - The Rituals of Rameswaram Temple (1883) p. 317

அனுமனை, அனுமேசுவரர் என்று குறிப்பிட்டிருப்பது (வரிகள் 2-5) ஒரு புதிய வழக்கு. இராமேசுவரம் திருக்கோயிலின் அன்றாட வழிபாடுகள், கோயிலின் கிழக்கு முகப்பில் தெற்கு நோக்கி இருக்கும் அனுமார் திருக்கோயிலில் முதலில் சேகண்டி முழக்கத்துடனும் பின்னர் நாதசுர வாசிப்புடனும் தொடங்குகின்றன[3]. இந்த அளவிற்கு சிறப்புடன் அனுமனை, இராமனது தொண்டராக அல்லாமல் இராமனைப் போன்று தெய்வமாக (ஈசுவரர்) குறிப்பிடப்பட்டுள்ளது. இராமலிங்கப்பிரதிஷ்டையால் பெயர் பெற்று இருப்பது இராமேசுவரம் மட்டுமல்ல, அனுமனும் தானே!

இன்றைய சபாபதி, நடராஜர் சன்னதிகள் முன்னர் தேவை அம்பலவாணர், தாண்டேசுவரர் சன்னதிகள் என வழங்கப்பட்டு வந்துள்ளன. அதுபோல அம்மனின் பெயரும் பர்வதவர்த்தினி என்பதற்கு பதில் மலைவளர் காதலி என்றும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டு காலத்திற்கு பின்னர், இராமேசுவரம் திருக்கோயிலுக்கு வருகை தந்த தாயுமான அடிகள் அம்பிகையை தரிசித்து பாடியுள்ள பாடல்கள் ''மலைவளர் காதலிபதிகம்'' ஆகும். இவைகளைப்போன்றே இந்த திருக்கோயிலில் வடக்குப் பிரகாரத்தில் உள்ள சண்டிகேசுவரி வெள்ளை துர்க்கை அம்மன் (வரி 4) என வழங்கப்பட்டார். வெள்ளிக்கிழமை தோறும் இந்த அம்மனுக்கு சுக்கிர வார விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது. மேலும் செப்பேட்டில் கண்ட விசுவலிங்கம் (வரி10) இப்பொழுது ''ஜோதிர்லிங்கம்'' என வழங்கப்படுகிறது. வெள்ளை படிகத்திலான இந்த லிங்கம் சுமார் ஒன்றேகால் அடி உயரமும் முக்கால் அடி விட்டமும் கொண்ட ஒரு அரிய கலைப்படைப்பாகும். நாள் தோறும் வைகறையில் இந்த லிங்கத்திற்கு செய்யப்படும் பூசனை மிகவும் சிறப்பானதொன்று. தீப ஆராதனையின் பொழுது இந்த லிங்கம் மஞ்சளும் சிவப்பும் கலந்த வண்ணக் கலவையாக காட்சி அளிக்கின்றது.

நாழி (ஒன்றரைப்படி) குறுணி (ஆறுபடி) என்ற முகத்தல் அளவும், ஒரு பணம், அரைப்பணம், பதினைஞ்சு பணம் என்ற நாணய வகையும் இந்த செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

---

3. Indian Antiquary (1883) pp. 317.

பணத்தைப் பற்றி விளக்கம் இல்லை. பெரும்பாலும், பதினேழாம் நூற்றாண்டில் சேதுபதி மன்னர்களால் வெளியிடப்பட்ட ''சுழிப்பணம்'' ''மின்னல் பணம்'' என்ற வகைகளில் ஒரு வகையை இந்த பணம் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

திருமஞ்சனம் : திருமேனி நீராட்டலுக்குரிய நீர்

தளிகை : கடவுளுக்கு படைக்கப்படும் சோறு

கைவித்தாரம் : ஒப்பனை

திருவிளக்கு பார்த்தல் : எண்ணையினால் எரிந்து கொண்டு இருக்கும் விளக்கின் திரி அணைந்து விடாமல் அடிக்கடி கண் காணித்தல்.

கோடி தீர்த்தம் : இராமேசுவரம் திருக்கோயிலில் உள்ள இருபத்து இரண்டு தீர்த்தங்களில் மிக புனிதமாமாகக் கருதப்படுவது. தல யாத்திரை வருபவர்கள் கடைசியாக (கோடி) நீராட வேண்டிய தீர்த்தமாதலின் கோடி தீர்த்தம் என வழங்கப்பட்டது.

ராச முத்திரை : மன்னரது முத்திரையுடன் வெளியிடப்படும் ஆணை.

சுவந்தரம் : சுவந்திரம் அல்லது உரிமை.

அடியொழுக்கு, சுத்த :
கிளுரு : பொருள் புலப்படவில்லை.

இசைவுமுறியில் கையெழுத்திட்ட தமிழ் ஆரியரது பெயர்கள், நல்ல தமிழ்ப் பெயர்களாக அமைந்து இருப்பது அருமையாக உள்ளது (உ-ம்) வேல் வாங்கினான், தம்பிராமன், அமரர் தொழநின்றான். கடலடைத்தான் கெங்கையாடிப் பெருமாள் தம்பிநயினார், ஒப்பிலாத பெருமாள் என்ற பெயர்கள் அவை.

## செப்பேடு எண். 8

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிய வாகன சாகாத்தம் 1553 இதன் மேற்செல்லானின்ற
2. பிரசொற்பதி ஆண்டு தை 25 சரதுருவில் ஆசிவிச மாதத்தில் கிட்
3. டிண பட்ஷத்தில் அம்மவாசையும் கெற்ப பிரவாகமும் சுவாதி நட்செத்திரமும்
4. சுபயோக சுபகரணமும் பெத்த புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன்
5. சேது மூல லெட்ஷா துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன்
6. சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் பரராசகேசசிங்கம் சொரிமுத்து
7. வன்னியன் மகாமண்டலேசுரன் மூவராயிர கண்டன் கண்ட நாடு கொ
8. ண்டு கொண்ட நாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்
9. டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன்
10. அரசராவண ராமன் பிரதள விபாடன் நந்தம் பிர கண்டன் சுவாமித்து
11. ரோகியள் பஞ்சவன்னராயராவுத்தன் வய்கை வளநாடன் கொட்ட
12. மடக்கி இவுளி பரவடி மிதித்தேறுவார் கண்டன் விரவெண் பாமாலை

---

* A.R.E. A.31 / 1937

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

வடிவம்: 23 செ.மீ. × 13 செ.மீ.

13. இளஞ்சிங்க ந்தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் துரை ராயன் ம
14. தப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்குவேலி சத்துரா தியள்மிண்ட
15. ன் வன்னியராட்டந் தவிள்த்தான் மேவலர்கள் வணங்கு மிரு தாழி
16. னான் வீர மகாகெம்பீரன் கீற்றிப்பிரதாபன் ஆரிய பானங்காத்தான் தொ
17. ண்டியந்துறை காவலன் துரகரேபந்தன அனுமகேதனன் குடைக்கு
18. க் கர்ணன் பரிக்கு நகுலன் பரதநாடகப் பிரவீணன் கருணா கடாட்
19. சன் திலகநுதல் மடமாதர் மடலெழுத வரு சுமுகன் விசையலெட்
20. சுமிகாந்தன் கலைதெரியும் விற்ப்பன்னன் காமினி கந்தப்பன் சத்திய
21. பாஷா அரிச்சந்திரன் சங்கீத சாயுத்திய வித்தியாவினோ தன் வீர தண்
22. டை சேமத்தலை விழங்கு மிரு தாழினான் சகல சாம்பிறா ச்சிய லெட்சிமீனி
23. வாசன் சேதுங்கராய வங்ஷாதிபனான் துகவூர்க்கூத்தத் தில் காத்தூரான கு
24. லோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனி லிருக்கும்
25. ஸ்ரீராசஸ்ரீ தழவாய் சேதுபதியென்று பேருங்கொடுத்து ராமனாத சுவாமி
26. விருது காவியிடால், காவி கூடாரம் காவிப் பண்னாகம் காவி குடை உபைய சா
27. மரம் இது முதலானதெல்லாம் சுவாமி நமக்கு மிக வரிசையாகக் கட்டளை
28. யிட்ட படியினாலே மருதங்க நல்லூர்ரெங்கிற கிறாமம் நான்கெல்கைக்கு

29. ள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத்திடல் சகல சமுதாயமும் ராமநாதசுவாமி

30. க்குப் பட்டக் காணியாகக் கட்டளையிட்டு பருவத வர்த்தனி அம்மனுக்கு சந்தன

31. க்காப்பு மஞ்சள்க் காப்பு திருவிளக்குமாக இந்தக் கிறாமம் சந்திராதித்த சந்தக்

32. ப் பிறவேசம் வரைக்கு நடந்து வரத்தக்கதாக யாதா மொருத்தர் அபிமானிச்

33. சு கிறாமத்தை வழும் பண்ணிய நத்ததுக்கும் சுவாமிக்குச் சேற்ப்பித்தார்களானா

34. ல் அவர்கள் கோடி கெங்காஸ்நானம் பண்ணின சுகிரதமும் கோடி தனு

35. க் கோடி தீர்த்தமாடின சுகிர்தமும் கோடி கன்னியாதான பலமும் கோ

36. டி பூதானம் பண்ணின பலமும் கோடி அக்கிராகா பண்ணின பலமும்

37. அடைவாராகவும் இது ஆராகிலும் அகிதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே

38. காராம் பசுவைக் கொண்ண தோஷத்திலேயும் பிருமகத்தி பண்ணின தோஷத்தி

39. லேயும் மாதா பிதாவைக் கொண்ண தோஷத்திலேயு ம்போகக் கடவாராகவும்

## செப்பேடு எண். 8

**(*விளக்கம்*)**

1. செப்பேடு வழங்கியவர் : தளவாய் சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : இராமநாதசுவாமி திருக்கோயில் இராமேசுவரம்
8. செப்பேட்டின் காலம் : சகம் 1553 பிரசோற்பத்தி ஆண்டு தை 25 (கி. பி. 3-2-1631)
4. செப்பேட்டின் பொருள் : மேற்படி கோயிலுக்கு மருதங்க நல்லூர் தானம்.

இந்தச் செப்பேட்டில் தளவாய் சேதுபதி மன்னரது விருதா வளியாக ஐம்பத்துயொரு சிறப்புப் பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இவையனைத்தும் இவரது தந்தையார் உடையான் டைக்கன் சேதுபதியின் செப்பேடுகளில் காணப்பட்டவை.

இந்தச் செப்பேட்டின் காலமாக சகம் 1538 பிரசோற்பதி ஆண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரசோற்பதி ஆண்டு 1553ல் தான் வருகிறது. ஆதலால் இங்கே கொடுக்கப்பட்டுள்ள சகம் வருடம் தவறாக உள்ளது. இதனது சரியான காலமாக சகம் 1553 (கி.பி. 1631)ஐக் கொள்ளலாம் இதனை வழங்கிய வர் பெயர் தளவாய் சேதுபதி என பொதுவான பெயரில் இருந்தா லும் இந்தச் செப்பேட்டின் காலத்தைக் கொண்டு இதனை வழங்கியவர் தளவாய் கூத்தன் சேதுபதி எனக்கொள்ளலாம்.

இராமேசுவரம் இராமநாதசுவாமிக்கு பட்ட காணிக்கை யாக சேது மன்னர் மருதங்கநல்லூர் என்ற கிராமத்தை தான மாக வழங்கிய செய்தி இந்தச் செப்பேட்டில் உள்ளது. இராமேசு

வரம் பருவதவர்த்தினி அம்மனுக்கு சந்தனக் காப்பு, மஞ்சள் காப்பு, திருவிளக்கு, ஆகிய உபயங்களுக்காக இந்த ஊர் வழங்கப் பட்டுள்ளது. இந்த ஊரிலிருந்து அரசுக்கு இறுக்கப்பட்ட வரு வாய் விபரம் மற்றும் இந்த ஊருக்கான நான்கெல்கை ஆகியவை இந்தச் செப்பேட்டில் காணப்படவில்லையாதலால் அன்றைய நிலையில் இந்த ஊர் விளைநிலங்களை மட்டும் கொண்ட குடிகள் இல்லாத ஊராக இருந்திருக்க வேண்டும். இன்று கமுதி வட்டத்தில் கமுதி உத்திரகோசமங்கை சாலைக்கு வடக்கே இரண்டு கல் தொலைவில் மக்கள் குடியிருப்புடன் இந்த ஊர் இருந்து வருகிறது.

சேதுபதி மன்னர் பட்டமேற்கும் பொழுது திருக்கோவில் களிலிருந்து தீர்த்தம், பிரசாதம் போன்றவைகளை பெற்றுக் கொள்வது மரபாகும். அந்த முறையில் இந்த மன்னரும் இராமேசு வரம் திருக்கோயிலிலிருந்து பிரசாதம் முதலியவற்றுடன் அரச சின்னங்களான குடை உபய சாமரம், காவிடால், காவி பண்ணாகம், காவிக்கூடாரம், ஆகியவைகளைப் பெற்றுக் கொண்டதை ஸ்ரீராமநாதசுவாமியே அவைகளை அனுப்பியிருப்ப தாக பயபக்தியுடன் ஏற்றுக் கொண்டதை மன்னர் செப்பேட்டில் தெரிவித்துள்ளார். இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் அரண் மனையில் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி மன்னருக்கு திருப் புல்லாணிப் பெருமாளும், இராஜராஜேஸ்வரியம்மனும் செங்கோல் வழங்குவதாக உள்ள சுவரோவியங்கள் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

பட்டக்காணிக்கை என்பது சேதுபதி மன்னர் பட்டமேற்ற பிறகு தாம் வழிபடும் இறைவனுக்கு காணிக்கையாக வழங்குவது. இந்தச் செப்பேட்டில் அந்தக்காணிக்கை மருதங்கநல்லூர் என்ற ஊராகப் பட்டகாணிக்கையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## செப்பேடு எண். 9

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிய வாகன சகாத்தம் 1538 இதின் மேற் செல்லானின்ற பிறசொற்பதி
2. ஷு தைய் 25உ சாதுருவில் ஆசி விச மாதத்தில் கிட்டிண பட்ஷத்தில் அம்மாவாசையு
3. ம் கெற்பறவாசரமும் சுவாதி நட்செத்திரமும் சுபயோக சுபகரணமும் பெத்தபுண்
4. ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரெட்ஷா துரந்தரன் இராமநாத சுவா.
5. மி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசகேசரி சிங்கம் சொரிமுத்து வன்னியன்
6. மகாமண்டலேசுவரன் மூவாயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடா
7. தான் பட்டமானங் காத்தான் துட்டரயிர கண்டன் புவனேக வீரகஞ்சுகன் வீரவள
8. நாடன் வேதியர் காவலன் அரசராவண ராமன் பாதள விபாடனந்தம் பர கண்டன் சு
9. வாமித்துரோகியள் பஞ்சவன்னராய ராவுத்தன் வய்கை வளநாடன் கொட்ட மடக்கி
10. இவிளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பா மாலை இளஞ்சிங்கந் தளைஞ்சிங்க
11. ம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கு

---

A.R.E. A. 26/1947

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம்
இராமநாதபுரம்
வடிவம்: 24.செ.மீx12.5.செ.மீ.

12. வேலி சத்துராதியள மிண்டன் வன்னிய ராட்டந் தவிளித் தான் மேலவர்கள் வணங்கு
13. மிருதாழினான் வீரமகாகெம்பீரன் கீற்றிப்பிறதாபன் ஆரிய மானங்காத்தான் தொண்டிய
14. ந்துறை காவலன் துரகரேபந்தன் அனுமகேதனன் குடைக்குக் கற்னன்(ன) பரி
15. க்கு நகுலன் பரதநாடகப் பிரவீணன் கருணாகடாட்சன் திலதநுதல் மடமாதர்
16. மடலெழுதவரு சுமுகன் விசையலெட்சுமிகாந்தன் கலை தெரியும் விற்ப்பன்னன் கா
17. மினீ கந்தப்பன் சத்தியபாஷா அரிச்சந்திரன் சங்கீத சாயுத்தியா வித்தியா வினோதன்
18. வீரதண்டை சேமத்தலை விழங்குமிரு தாழினான் சகல சாம்பிறாச்சிய லெட்சுமீனி வாசன்
19. சேதுங்கராய வங்ஷாதிபனான் துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்
20. க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனி லிருக்கும் ஶ்ரீராசஶ்ரீ தழவாய் சேதுப
21. தியென்று பேருங் கொடுத்து ராமனாதசுவாமி விருது காவியிடால காவிகூடார
22. ம் காவிப்பன்னாக ம் காவிக் குடை, உபைய சாமரம், இது முதலானதெல்லாம் சு
23. வாமி நமக்கு மிக வரிசையாகக் கட்டளையிட்டபடியினாலே சேதுகாலென்
24. கிறகிறாமம் நான்கெல்லைக்குள்பட்ட நஞ்சைபுஞ்சை திட்டுத்திடல் சகலசமுதாயமும் ரா
25. மனாத சுவாமிக்குப் பட்டக் காணியாகக் கட்டளையிட்டுத் தாம்பிர சாதனப் பட்டை
26. யம் குடுத்தோம் இந்தக் கிறாமம் சந்திராதித்தர் சந்ததிப் பிறவேசம் வரைக்கு நடந்து வரத்த
27. கத்தாக யாதாமொருத்தர் அபிமானிச்சு கிறாமத்தை வழ பண்ணியந்தத்து கம சுவா

28. மிக்குச் சேர நடப்பித்தார்கள் அவர்கள் கோடி கெங்காஷத் தானம் பண்ணின சுகுறுதமும்

29. கோடி தனுக்கோடி தீர்த்தமாடின சுகுறுதமும் கோடி கன்னியாதான பலனு

30. ம் கோடி பூதானம் பண்ணின பலனும் கோடி அக்கிரா காரம் பண்ணின பலனும்

31. அடைவராகவும் இதுக்கு ஆராகிலும் அகிதம் பண்ணின வன் கெங்கைக் க

32. ரையிலே காராம்பசுவைக் கொண்ண தோஷத்திலேயும் விறுமகஷ்த்தி பண்

33. ணின தோஷத்திலேயும் மாதாபிதாவைக் கொண்ண தோஷத்திலேயும் போகக் கட

34. வாராகவும்.

## செப்பேடு எண் 9.

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : தளவாய் சேதுபதி என்ற கூத்தன் சேதுபதி (கி.பி. 1622-35)
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் திருக்கோயில்
3. செப்பேட்டுக் காலம் : சாலிவாகன சகாத்தம் 1553 பிரஜோற்பதி தை 25ம் நாள் (கி.பி. 23-1-1632)
4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் இராமனாத சுவாமிக்கு சேது கால் என்ற கிராமத்தை பட்ட காணிக்கையாக வழங்குதல்.

நாற்பத்து ஏழு வரிகளைக் கொண்ட இந்த பட்டயத்தில் வழக்கம் போல மன்னரது ஐம்பத்து இரண்டு விருதாவளிகள் (வரிகள் 4-19 வரை) 16 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும், இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் கண்டவையாதலின் அவை பற்றி சிறப்பாக குறிப்பிட வேண்டியது ஒன்றும் இல்லை.

இராமேசுவரம் திருக்கோயிலில் அமர்ந்துள்ள பர்வதவர்த்தினி அம்மனுக்கு சந்தனக்காப்பு, மஞ்சள் காப்பு திருவிளக்கிற்காக வழங்கப்பட்ட பட்டாக்காணி கிராமத்தை முந்தை செப்பேடு சொல்கிறது அல்லவா? அதே கோயிலின் இராமனாத சுவாமிக்கு, அதே மன்னரால், அதே நாளில், பட்டக்காணியாக சேது கால் என்ற கிராமத்தையும் மன்னர் வழங்கியதை இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது. காணி என்ற சொல் தமிழில் வென்னிலம்,

விளைநிலம், என்ற பொருளில் வழக்கில் வழங்கப்பட்டாலும், இந்தப்பட்டயத்தில் அந்தச் சொல் இடவாகு பெயராக பேரிடத்தைக் கொண்ட ஊரைக்குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பட்டவர்காணி, பலிக்காணி, தீப்பாஞ்சிகாணி என்றாற் போல, இந்த பட்டக்காணி என்ற சொல் வழக்கு இருந்தாலும் பட்டம் - முதன்மை, அல்லது பொருத்தம் என்ற பொருளில் பட்டம் காணிக்கை வந்துள்ளது. சேதுபதி மன்னர் பட்டத்திற்கு வந்தவுடன் வழங்கப்படும் முதல் தானம் என்பது இதன் பொருள். ஆடிப்பட்டம், பட்டத்து ராணி - என்ற சொற்றொடர்களை நோக்குக.

பரமக்குடி வட்டத்தில் உள்ள சேது கால் என்ற[1] பெயரிலான ஊர்தான் இந்த பட்டயத்தில் காணப்படும் ஊர் இதைப் போன்று இதே வட்டாரத்தில் திருமலை தேவன் கால் என்ற ஊர் ''தேத்தாங்கால்'' என்று வழங்கி வருகிறது. சேது காவலன் காலப்போக்கில் வழக்கொழிந்து இடைக்குறையாக சேது கால் என்ற பேச்சில்லா கிராமமாக ஆகி இருக்க வேண்டும். இவ்விதம் இயற்கை உற்பாதங்களான வறட்சி, பஞ்சம், வெள்ளம், மற்றும் போர், போன்ற காரணங்களினால் மக்களது குடியிருப்புகள், அழிந்து மக்கள் வேறிடம் புகுந்த காரணங்களினால் அந்த ஊர்கள் அழிந்து வருவதுண்டு, ஆனால் அந்த ஊரைச் சார்ந்த விளை நிலங்கள் மட்டும் ஒரு கால கட்டம் வரை உலக வழக்கிலும், அந்த ஊரின் பெயரில் வழங்கி வருவதுண்டு. அப்பொழுது அந்த ஊர் ''பேச்சில்லா கிராமம்'' எனப்படும். பேச்சு இல்லா என்பது மக்களது குடி இருப்பும் நடமாட்டமும் இல்லாதது என்ற பொருளில். இத்தகைய பல ''பேச்சில்லா கிராமங்கள்'' இந்த வட்டாரத்தில் உண்டு. மேலும் பட்டயத்தில் இந்த ஊரின் நான்கெல்கை குறிப்பிடாதது, இந்த ஊரை நிர்ணயம் செய்வதற்கு உதவாதநிலை. நான்கெல்லைக்குட்பட்ட என்ற தொடர் பொறிக்கப்பட்டிருப்பதில் இருந்து, இந்த கிராமத்திற்கான வரையறுக்கப்பட்ட எல்லைகள் இருந்து ''சூலக்கல்'' நாட்டப்பட்டு இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

---

1. Alphabatical list of Ramnad Dist - Government Puplication (1931) page 16.

மற்றும் வரிகள் 27 முதல் 33 வரையான வரிகளில் ''சந்திராதித்தர்'' ''சந்திரப்பிரவேசம்'' ''அபிமானிச்சு'' ''கெங்காஸ்நானம்'' ''சுகுர்தம்'' ''கன்னியாதான பலன்'' ''அக்கிரகாரம்'' ''தோஷம்'' ''விருமகத்தி'' என்ற வடசொற்கள் விரவி இருப்பதுடன், அவை இந்த வட்டார பேச்சுவழக்கில் அப்பொழுது புகுந்து ஒலித்த மணிப்பிரவாளம் என்பதும் தெரியவருகிறது.

சேதுபதி மன்னருக்குள்ள சிறப்புகள் எல்லா இராமனாத சுவாமி வழங்கியவையென்று மன்னர் உணர்ந்ததால், மிகுந்த பயபக்தியுடன், இந்த தானத்தை, இராமனாத சுவாமிக்கு நன்றிக்கடனாக - மன்னர் உத்தரவிட்டுள்ளார். இந்த தானத்தில் கட்டுப்பட்டுள்ள கிராமத்தை தெய்வ சிந்தனையுடன் வளப்படுத்தியவர்களுக்கு, கங்கையிலே கோடிமுறை குளித்து எழுந்த புண்ணியமும், கோடிமுறை தனுஷ்கோடியில் சேதுதீர்த்தமாடிய சுகிர்தமும், கோடி கன்னிகாதானம் கோடி பூதானம் செய்த பலனும் பெறுவார்கள் என்பதை வரிகள் 33—37 உணர்த்துகின்றன. எண்ணிக்கையில் கோடிக்கு மேலாக தமிழ் நெடுங்கணக்கு இல்லையாதலால் கோடி, கோடி என்ற சொல் பலமுறை விரவி வந்துள்ளது. இதற்கு எதிர்மறையாக இந்தமானியத்திற்கு ''அகிதம்'' பண்ணினவர்கள், புனிதமிக்க கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தில் உழல்வார்கள் என்பதும் நேரடியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகிர்தம், அகிதம், தீர்த்தம், கன்னியாதானம், பூதானம் அக்கிரகாரம், பிருமகத்தி, தோஷம் ஆகியவை வடசொற்கள்.

# தளவாய் சேதுபதி என்ற இரண்டாம் சடைக்கன் சேதுபதி

## (கி. பி. 1635-1646)

இந்த மன்னரது ஆட்சிக்காலம் அமைதிக்களமாகத் தொடர்ந்தது. என்றாலும் மறைந்த கூத்தன் சேதுபதியின் காமக் கிழத்தியின் மகன் ''தம்பி'' மறவர்சீமையின் ஆட்சி உரிமை பற்றிய முறையீட்டை மதுரை மன்னர் திருமலையிடம் எடுத்துச் சென்றான். சேதுபதி மன்னரது செங்கோன்மையிலும் செயல் திறனிலும் பொறாமை கொண்டு புழுங்கிய திருமலை மன்னர், தம்பியின் வாரிசு உரிமையை வலியுறுத்தி மறவர் சீமைப் பிரி வினைக்கு முயன்றனர். பிரிவினையென்றாலே பெருமைக்கும் வலிமைக்கும் பாதகம் விளைவிப்பது என்பது தான் பொருள். மறவர் சீமையின் வீழ்ச்சி மதுரை மன்னருக்கு மகிழ்ச்சி அளிப்பது. சேதுபதி மன்னர் திருமலை நாயக்கரது அறிவுரை யைப் புறக்கணித்தார்.

> ''வணங்காமல் இருக்கும் வம்பன் மறவனையும்
> வளைத்துப் பிடித்து வணங்க வைப்பேன் ... ''

என திருமலை மன்னரது தளவாய் இராமப் பையன் சூளுரைத்து மறவர் சீமை மீது தண்டெடுத்தான். மதுரை மன்னரது எழுபத்து இரண்டு பாளையக்காரர்களது படைகளும் மதுரைப்படையுடன்

இணைந்து மறவர் சீமைக்குள் புகுந்தன. பல இடங்களில் நிகழ்ந்த போர்களில் மறப்படை பின்னடைந்து இராமேசுவரம் தீவுக்குள் சென்றன. அந்த இறுதிப் போரை இயற்றுவதற்கு இரண்டாம் சடைக்கனும் அவரது மைத்துனர் வன்னியத் தேவனும் ஈடுபட்டனர். இதனையறிந்த இராமப்பையன் கோவாவிற்கு விரைந்து சென்று போர்ச்சுகீசிய பரங்கிகளது ஆயுத உதவியைக் கோரிப் பெற்றான். மறவர் அணிக்கு டச்சுக்காரர்கள் உறுதுணையாக இருந்தனர். தரையிலும் கடலிலும் கடும்போர் தொடங்கியது. இராமப்பையன் களத்தில் வீழ்ந்து இறந்தான். அவரது மருமகன் சிவராமையா மதுரைப் படைகளுக்கு தலைமை தாங்கினார். மறப்படையின் பெருவீரன் வன்னியத் தேவன் அம்மைகண்டு வீழ்ந்ததும் சேதுபதி சிறைப்பிடிக்கப்பட்டு மதுரைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சேதுபதி சீமையில் குழப்பம் நிர்வாகச் சீரழிவு. வேறு வழி இல்லாமல் திருமலைநாயக்கன் சேதுபதியை விடுதலை செய்து புகலூருக்கு அனுப்பி வைத்தார். சேதுபதி சீமையில் அமைதி ஏற்பட்டது. அடுத்த ஆறு ஆண்டுகளில், இராமேசுவரம் திருப்பணியில் மன்னர் ஈடுபட்டார். மூன்றாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் சபாபதி மண்டபம் எழுந்தது. கிழக்கு வாயிலில் எழுநிலை மாடக்கோபுரம் அமைக்க ஆயத்தங்கள் செய்த நிலையில் இந்த மன்னர் காலமானார்.

இவர் வழங்கியுள்ள, தானங்கள் பற்றிய ஆவணங்கள் செப்பேடுகள் இதுவரை கிடைக்கவில்லை.

# திருமலை சேதுபதி (கி. பி. 1646 - 1678)

மறவர் சீமை மன்னர்களில் மிகச்சிறந்த வரலாறு படைத்தவர் இந்த மன்னர். முப்பது ஆண்டு காலம் நீடித்த அவரது அமைதியான ஆட்சி, தமிழ் மொழியின் ஆக்கத்திற்கும் தெய்வீகத் திருப் பணிகளுக்கும் தோற்றுவாயாகத் திகழ்ந்தது. இராமேசுவரம் திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரம் இவரால் அமைக்கப்பட்டது. இன்னும், இராமநாதபுரம் ராஜ துர்க்கை அம்மன் கோயில், வனசங்கரி அம்மன் கோயில், திருப்புல்லாணி தர்ப்பாசன மழகியார் திருக்கோயில் - மேலச்சிறுபோது மலைவளர் காதலியம்மன் ஆலயம், ஆகியவைகளை அமைத்ததுடன் இராமேசுவரம் மற்றும் சில கோயில்களில் அன்றாட பூசனைகளும் விழாக்களும் நிகழ்வுற ஐம்பது ஊர்களை இறையிலியாக வழங்கினார்.

இன்னும், சேதுவழிப்பாதையில் இராமேசுவரம் வந்து திரும்புகின்ற பயணிகளது பயணக்களைப்பும் பசியும் தீர்ப்பதற்காக பல அன்ன சத்திரங்களையும் நிறுவினார். இராமேசுவரம் நகரிலேயே தங்கி இருந்து திருப்பணிகளை கண்ணும் கருத்துமாக கவனித்து வந்ததால் அவரை மக்கள் ''இராமேசுவரத்தையா'' என அழைத்தனர்.

சமயப்பணிகளில் இருந்த சிரத்தையும் ஈடுபாடும் காரண மாக தெய்வத்தமிழுக்கும் தொண்டு செய்ய முனைந்தார். அப் பொழுது அரிய புலமைபெற்று இருந்த மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரையும் தமது அவைக்கு வரவழைத்து பொன்னும் பொருளும் வழங்கிப் போற்றினார். சேது மன்னரது சோற்றுச் செருக்கால் செம்மாந்து நின்ற புலவர் பெருமக்கள்; துறைதோறும் தமிழ்வாரத் தொண்டு செய்தனர். ஒருதுறைக் கோவை, தளசிங்கமாலை, மருதூர் அந்தாதி ஆகிய தமிழ் இலக் கியப் படைப்புகள் அவரது தமிழ்க் கொடைக்குச் சான்றாக மலர்ந்தன.

இந்த மன்னரது செம்மையான ஆட்சியினால் சேது நாட்டு எல்லைகள் விரிந்தன. வடக்கே கானாட்டையும் கடந்து திருச் சிராப்பள்ளி வரையும், வடகிழக்கே சோழநாட்டை ஊடுருவி திருவாரூர் வரையும், இந்த எல்லைகள் தொட்டு நின்றன.[1] இத்தகைய வலிமையான மறவர்நாட்டின் வளர்ச்சி மதுரை மன்னர் திருமலை நாயக்கரது கண்களை அழுக்காறால் மறைத் தது. ஏற்கனவே, மறவர்சீமை அரசியலில் தலையீட்டு புனித பூமியான, இராமேசுவரம் தீவை போர்க்களமாக்கினார். இரண் டாவது சடைக்கன் சேதுபதியை மதுரையில் சிறையிலிட்டார். பின்னர், மக்களது எதிர்ப்பிற்கு அஞ்சி அவரை விடுதலை செய்தார். மீண்டும், இந்த மன்னரது ஆட்சியின் பொழுது மறவர்சீமையை துண்டாடுவதற்கு முயன்றார். ''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்ற'' இந்த மன்னனது கோலினை அகற்றுவதற்கு முயன்றார்; இயலவில்லை. ஆனால் திருமலை மன்னருக்கு ஏற்பட்ட இன்னல்களை சேதுபதி மன்னர் நீக்கி மகிழ்ந்தார். இன்னா செய்தார்க்கும் இனியவை செய்தல்'' என்ற தமிழ் மறைப்படி மதுரையைச் சூறையாடி வந்த குத்ப் கானது வடவர் படைகளையும் புறமுதுகிட்டு ஓடும் படி செய்த துடன் மதுரை மன்னர் நலிவுற்று படுக்கையில் கிடந்த நிலை யில் மதுரையைக் கைப்பற்ற வந்த மைசூர் மன்னரது படை களை திண்டுக்கல்லுக்கு அருகில் நடந்த போரில் துவம்சம் செய்ததுடன் எஞ்சியவர்களை மைசூர் எல்லைக்குள் துரத்தியடித்

1. Pudukottai State Inscriptions (1928)
அமுத கவிராயர் - ஒரு துறைக்கோவை பக்கம் 38.

தார்.[2] மேலும், மதுரை மன்னருடன் பகைமை கொண்ட எட்டயபுரம் பாளையக்காரரையும் அடக்கி, மதுரைப் பேரரசுக்கு வெளிப்பகையினாலும் உட்பகையினாலும்ஏற்படவிருந்த அபாயங் களை அகற்றி மதுரையில் அமைதி தவழச் செய்தார். இந்தப் போர்களின் பொழுது தற்காலிகமாக அமைக்கப்பட்ட மறவர் படையின் பாசறைகள், பின்னர் குடி யிருப்புகளாக மாறி திண்டுக்கல் சீமையில் தாடிக்கொம்பை அடுத்தும் கொங்கு நாட்டில் கோயம்புத்தூரை அடுத்தும் திருநெல்வேலிச் சீமையில் சிவகிரியையடுத்தும் ''இராமநாதபுரம்'' என்ற சிற்றூர்களாக விளங்குகின்றன. இத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்து முடித்த இந்த சேதுபதி மன்னரை மதுரை திருமலை மன்னர் உளமாரப்போற்றி, பொன்னும் மணியும், பெய்து, திருநெல் வேலிச் சீமையில் மன்னார் கோவில் என்ற பகுதியை அளித்து, நெல்லைக் கடல் முத்துசிலாபத்திலும் உரிமையையும் வழங் கினார்.[3]

கொடையின் சிகரமாக, வீரத்தின் திருவுருவமாக சமயச் செல்வராக, கலைக்குரிசிலாக, தமிழ்ப்புரவலராக முப்பது ஆண்டு களுக்கு மேலாக வாழ்ந்த இந்த மன்னர், இராமநாதபுரத்தை அடுத்த திருப்புல்லாணி தர்ப்பாசன அழகியரது திருத்தேர் விழாவை காணச் சென்ற பொழுது திருத்தேர் நிலைக்கு வந்து பெருமாளைச் சேவித்தநிலையில் கி.பி. 1678ல் அமரரானார்.[4] ''இராமேசுவரத்து ஐயா''வாக விளங்கி திருப்பணிகள் பல வற்றை முடித்த இந்த மன்னரது நிலையான நினைவாக இவரது திருவுருவச்சிலை பர்வதவர்த்தினி அம்மன் ஆலயத்தின் தெற்கு நுழைவாயிலில் அமைக்கப்பட்டு உள்ளது.

இராமேசுவரம் நகரில் இந்த மன்னரது மாளிகையாக வடமேற்கு ரதவீதியில் அமைந்து இருந்த அரண்மனை சிதைந்து மேனிலைப்பள்ளி, வங்கி, சத்திரம்யென்ற பொது நிறுவனங் களாகக் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது.

2. Nelson-Manual of Madurai country (1868) part III pp 137-38
3. Sathianathaier - History of Madura Nayaks (1924) pp 125-26
4. செந்தமிழ் - மதுரைத் தமிழ்ச்சங்கம். தொகுதி - 6 பக்கம் 44

## செப்பேடு எண். 10

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1570 இதன்மேல் செல்லா நின்ற சர்வ
2. சித்து வருஷம் மாசி மாதம் சோம வாரமும் பஞ்சமியும் சுவாதி நட்சத்திரமும்
3. சௌபாக்கிய நாம யோகமும் வால வாகனமும் பெத்த சுபயோக சுபதினத்தில்
4. தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் சிவ
5. பூசா துரந்தரன் பர ராஜ கெச சிங்கம், சொரிமுத்து வன்னியன் மகா மண்டேலேசுரன் அரிய
6. ராய தல விபாடணன் பாசைக்கு தப்புவார் கண்டன், மூவ ராய கண்டன் கண்ட
7. நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பட்டமானம் காத்தான் துஷ்டராயிர கண்டன்
8. புவனேக வீரன் வீர கஞ்சுகன் வீர வள நாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன்பாதாள
9. விபாடன் அந்தம்பர கண்டன் சாடிக்கார கண்டன், சாமி துரோகியள் முண்டன், பஞ்
10. சவர்ன ராய ராவுத்தன் பனுக்குவார் கண்டன், வையை வளநாடன் கொட்ட மடக்கி இவு
11. லி மிதித்து ஏறுவார் கண்டன் வீர வெண்பாமாலை இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகை
12. மன்னர் சிங்கம் மதுரை ராயன் ஆத்துப் பாய்ச்சி, கடலில் பாய்ச்சி, மதப்புலி

---

நூலாசிரியரது கள ஆய்வின் பொழுது கண்டுபிடித்து படி எடுத்தது.

13. அடைக்கலங் காத்தான் தாலிக்கு வேலி, சத்துராதியள் முண்டன் வன்னியராட்டந்

14. தவிழ்ந்தான் மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன் ஆரியர் மா

15. னங்காத்தான் கீர்த்திப் பிரதாபன் தொண்டியந்துறைக் காவலன் துரக ரேபந்தன்

16. அனுமகேதனன் கொடைக்குக் கர்ணன் பரிக்குநகுலன் பரத நாடக பிரவீணன்

17. கருணா கடாட்சன் குன்றிலுயர் மேருவைக் குன்றாய் வனைகினில் பொசித்தவன்

18. திலதநுதல் மடமாதர் மடலெழுத வரு சுமுகன் விசய லட்சுமி காந்தன் கலை

19. தெரியும் விற்பனன் காமினி கந்தப்பன் சத்திய பாசா அரிச்சந்திரன் சங்கீத சாகித்ய

20. வித்தியா வினோதன் வீரத்தண்டை சேமத்தலை விளங்கு மிரு தாளினன் சகல சாம்பிராச்

21. சிய லெட்சுமி விலாசன் செயதுங்க ராய வங்கிசாதிபன் ரணசூர கௌவர குலத்தில்

22. காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரை-யாத கண்டனில் இருக்கும் ஸ்ரீமது

23. இரண்ய கற்ப யாஜி ரெகு நாத சேதுபதி காத்தத்தேவர் அவர்கள் இராமநாத சுவாமி பர்வதா

24. வர்த்தினி அம்மன் பூசை நெய் வேத்தியத்திற்கும் ஆவணி மூல திருவிழா உற்சவத்திற்கும்

25. இராமநாத பண்டாரமவர்கள் பாரிசமாக நம்முட தனது கட்டளைக்கு தானபூர்வமாக

26. கட்டளையிட்டது அரும்பூர் குரத்தில் முகிழ்த்தகம் கிராமம் மேற்படி உள்கடை யேந்தல்களும்

27. பரி நான்கெல்கையில் உட்பட்ட குட்டம், குளம், நஞ்சை, புஞ்சை, திட்டு, திடல், பணவரி, சொர்ணா

28. தாயம் சகல சமுதாயமும் சர்வமானியமாக இராமநாத சுவாமிக்கு உபயமாக தாம்புர

29. சாதன பட்டயம் கொடுத்தோம் இந்தக்கிராமம் சந்திரா-
தித்தாள் சந்ததி பிரவேசம் உள்

30. ளவரைக்கும் ஆண்டு அனுபவிச்சுக் கொள்ள கடவா-
ராகவும் இந்ததர்மம் யாதாருமொ

31. ருவர் அபிமானுச்சு பரிபாலனம் பண்ணிக் கொண்ட
பேர்கள் கோடி கெங்கா ஸ்நானம் பண்ணின சுகிர் தமும்
கோடி கன்னி

32. காதான பலனும் கோடி பூதானம் பண்ணின பலனும்
கோடி அக்ரஹார பிரதிட்டை

33. பண்ணின பலனும் அடைவார்கள் இதற்கு யாராகிலும்
அகிதம் பண்ணினபேர்கள்

34. கெங்கைக் கரையில் காராம் பசுவை கொன்ற தோஷத்
திலேயும் பிரமம்கத்தி பண்ணின

35. ஸ்திரிகத்தி பண்ணின தோஷத்திலேயும் மாதா பிதாவை
கொன்ற தோஷத்திலேயும் போவார்களாக.

## செப்பேடு எண். 10

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : திருமலை ரகுநாத சேதுபதி மன்னர்.

2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் திருக்கோயில் ஆதினகர்த்தர் இராமனாத பண்டாரம்.

3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1570, சர்வசித்து ஆண்டு மாசி மாதம் (A.D. 1647).

4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் ஸ்ரீ இராமனாத சுவாமி — பர்வதவர்த்தினி அம்மன் பூசை நை வேத்தியம் ஆவணி மூலத்திரு நாள் விழாச் செலவுகளுக்கு முகிழ்த்தகம் கிராமம் தானம்.

இந்தச் செப்பேட்டில் திருமலை ரகுநாத சேதுபதி மன்னரைப்பற்றிய அறுபது விருதாவளிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளில் முந்தைய உடையான் சடைக்கன் சேதுபதி தளவாய் கூத்தன் சேதுபதி மன்னர்களது செப்பேடுகளில் பொறிக்கப் பட்டுள்ள விருதாவளிகளுடன் கூடுதலாக பரராஜ செயசிங்கம், அந்தப்பிரகண்டன், பனுக்குவார் கண்டன், ஆரியர் மானங்காத் தான், குன்றில் உயர் மேருவை குன்றாய் வருகினில் பொசித்த வன், கலைதெரியாவிற்பன்னன் என்ற ஆறு புதிய விருதாவளிகள்

இந்த மன்னரது வீரத்தை விளம்பும் விருதுகளாகக் குறிக்கப் பட்டுள்ளன. மேலும் ஹிரண்ய கர்ப்பயாசி என்ற புதிய அடை மொழியொன்றும் (வரி23) இந்தச் செப்பேட்டில்காணப்படுகிறது. ஹிரண்யகர்ப்பம் என்பது பசும்பொன். இத்தகையபசும்பொன்னி லான பசு உருவினை வைத்து வேள்வி யொன்றை இயற்றி அந்தப் பசுவினது புனித வயிற்றில் இருந்து பிறப்பு எய்துவது போன்ற சடங்கினைச் செய்து முடித்த பிறகு அந்த பொன்னுருவை அந்தணர்களுக்கு தானம் வழங்கிய காரணத்தினால் இந்த அடை மொழி இந்த மன்னருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம் ஸ்ரீ இராமனாதசுவாமி பர்வதவர்த்தினி அம்மன் பூசை, நைவேத்தியத்திற்கும், ஆவணி மூலத்திருவிழா உற்சவத்திற்கும் உடலாக முகிழ்த்தகம் என்ற கிராமத்தை தானம் வழங்கிய செய்தியை இந்தச் செப்பேடு சொல்லுகிறது. முந்தைய சேது மன்னர்கள் இராமேசுவரம், திருக்கோயில் பூசை, மஞ்சனம், காப்பு, போன்ற கைங்கரியங்களுக்கு பலதானங்கள் செய்து இருந்த பொழுதும், அவைகள் இன்னும் சிறப்பாக நடைபெறு வதற்கு உதவ இந்த நிலக்கொடையும் அளிக்கப்பட்டு இருக் கிறது. மேலும், இந்த நிலக்கொடை ''ஆவணிமூலத்திருவிழா'' விற்காக என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ஆவணி மூலத்திருவிழா, பல நூற்றாண்டுகளாக மதுரையில் தான் நடந்து வருகிறது. அங்கு ஆலவாய் அமர்ந்த அருஞ்சடைக்கடவுள் அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் ஒன்றாக ஆவணி மூல நட்சத்திரத்தன்று தமது அன்பரான வாதவூரடிகளது வாக்குறுதியை நிறைவேற்றி னார் இறைவன். அதாவது, கிழக்கு கடற்கரையில் வந்து கரை இறங்கிய அரபிக் குதிரைகளை வாங்கி வருமாறு அரிமர்த்தன பாண்டியன் கொடுத்தபொருள் அனைத்தையும் அவனது அமைச் சரானவாதவூர்அடிகள் திருப்பெருந்துறை திருக்கோயில் அமைப்பு பணியில் செலவழித்து விட்டதற்காக அவரைப் பாண்டியன் பல வகையிலும் வருத்தியபொழுது, அடிகளாரை விடுவிக்கும் வகை யில், ஆலம் அருந்தி அவனி காத்த பெருமான் நரிகளையெல்லாம் பரியாக்கிவந்து பாண்டியனிடம் கையளித்தது ஆவணி மூலத்திரு நாளன்று. இந்தச் செய்தி வடமொழியில் உள்ள ஹாலாஸ்ய புராணத்திலும் வேம்பத்தூரார் பாடிய திருவாலவாயுடையார் புராணத்தில்'' இருபத்து எட்டாவது படலமாகவும், பரஞ்சோதி

முனிவர் பாடிய ''திருவிளையாடற் புராணத்தில்'' ஐம்பத்து ஒன்பதாவது படலமாகவும் விரித்து பாடப்பட்டுள்ளது.[1] இந்த நிகழ்ச்சியை நினைவூட்டும் திருவிழா இராமேசுவரம் திருக்கோயி லிலும் பெருவிழாவாக நடைபெற்று வந்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

இந்த விழாவிற்காக வழங்கப்பட்ட ஊர் ''அரும்பூர் குரத்தில் ''முகிழ்த்தகம்'' கிராமமாகும். இன்றைய இராமநாத புரம் மாவட்டத்தில் திருவாடானை வட்டத்தில் திருவாடானைக் கும் தொண்டிக்கும் இடையில் அரும்பூர் உள்ளது. அரும்பூர் ''கூற்றத்தில்'' என்பது ''அரும்பூர் குரத்தில்'' எனச் செப்பேட் டில் திரிபு பெற்றுள்ளது. ஒரு காலத்தில் இந்தப் பகுதியில் மலர் கள் மிகுந்து இருந்த காரணத்தினால் ''அரும்பு ஊர்'' என்ற காரணப் பெயராக 'அரும்பூர் 'ஏற்பட்டு இருக்க வேண்டும் இதனை, இந்த ஊரிலும் இதனைச் சூழ்ந்த பன்னிரண்டு ஊர் களிலும் 1. திருவெற்றியூர், 2. முகிழ்த்தகம், 3. கொட்டகுடி 4. கள்ளிகுடி 5. விளத்தூர், 6. சூரம்புளி 7. அரும்பூர் மேல அரும்பூர், 8. கீழப்பனையூர், 9. ஆபிரவேலி, 10. அறுநூத்தி மங்கலம் 11. வாகைக்குடி, 12. பேரவயல் உள்ள ''அரும்பு குத்தி வேளாளர் என்ற மக்கட் பிரிவினர். உறுதிப்படுத்து கின்றனர். ''அரும்பு எடுத்தல்'' அரும்புகுத்தி என்பது, வெற்றிலை கிள்ளுதல் என்றார் போல அரும்பு குத்தி என்பது வட்டார வழக்கு. அத்துடன் இந்த வட்டாரத்தில் உள்ள பல ஊர்கள், காட்டையும் மலரையும் கொடியையும் தங்கள் பெயர் விருதிகளாகக்கொண்டு இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| *காரங் காடு* | *கொடிக்குளம்* |
| *காடாங்குடி* | *தளிர் மருங்கூர்* |
| *கார் கமலம்* | *தாழையூர்* |
| *கீழ் பனையூர்* | நம்பு (நல்ல) *தாழை* |

---

1) வேம்பத்தூர் பெரும்பற்றப் புலியூர் நம்பி - திருவாலவா யுடையார் புராணம் (டாக்டர். உ.வே.சாமினாதையர் பதிப்பு)
2) பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் (சைவ சித்தாந்த பதிப்புக் கழகம் - 1932) - பக்கம். 452.

நெடுமரம்
பருத்தி ஊர்
பிரண்டை வயல்
வாரிக் குடி
அரும் பூர்
புல்லுமடை, பில்லுமாரி, பில்லூர்,
பூவாணி
மலரி
மருதாணி
மாங்குடி
முள்ளுமுளை

இவைகளைப் போலவே, இந்த அறக்கொடையாக அமைந்துள்ள ''முகிழ்த்தகம்'' பெயரும் ''மலர்ச்சிபெற்றது'' என்ற பொருளில் அமைந்துள்ளது. அத்துடன் இந்த வட்டாரத்தில் சமண சமயச் செல்வாக்கு பெற்று இருந்த பொழுது, இந்த ஊரும் ஏற்பட்டு இருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது. அதற்கான தடையங்கள் எதுவும் இன்று இந்த ஊரில் இல்லை. என்றாலும், அண்மையில் உள்ள முதுகுளத்தூர் வட்ட கிராமமான 'அறப்போது' போன்று ''அறம் முகிழ்த்த'' ஊராக இருந்து இந்த ஊர் அமைந்து இருத்தல் வேண்டும். ஏனெனில் இந்த வட்டாரத்தில் பூமலி அசோகின் புனை நிழல் அமர்ந்த சாத்தனது பெயரில் சாத்தன் ஏந்தல், சாத்தன்குடி, சாத்தன் குளம், சாத்தனூர், குணங்குடி, ஜீனமங்கலம் ஜீனங்குடி, ஜீனேந்திர மங்கலம் என்ற ஊர்கள் அமைந்து இருப்பதும், திருவெத்தியூர் அருகே புத்தன்வயல் என்ற இடத்திலும், கீழப்பனையூர் செம்பிலான்குடி ஆகிய ஊர்களில் சமண சமயத்தின் தலையாய தீர்த்தங்கரரான மகா வீரரின் திருமேனிகள் இன்றும் இருந்து வருவதும் இதனை உறுதிபடுத்துகின்றன.

முந்தைய இரண்டு சேதுபதி மன்னர் காலங்களைப் போன்று! இந்த மன்னரது செப்பேட்டிலும் தானம் வழங்கப் பட்ட ஊருக்கான நான்கு எல்லைகள் விளக்கமாகக் குறிப்பிடப் படும் வழக்கம் இல்லை, என்பது தெரியவருகிறது. அதனால் ''முகிழ்த்தகம் கிராமமும் அதன் உள்கடை ஏந்தல்களும், பரினாங் கெல்கைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை, திட்டு திடல், ....'' என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலங்களின் வருவாய் மீது, பலவரி, சொர்ணாதாயம் என்ற இருவரிகள் மட்டும் வசூலிக்கப் பட்டன என்றும், ஏனைய வருவாய்கள் அனைத்தும் ''சகல சமுதாயம்'' என்ற சொற்களில் அடக்கம் பெற்றுள்ளன.

# செப்பேடு எண். 11

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1573 இதன் மேற் செல்லா நின்ற நந்தன ஸு தை மீ 6உ
2. சோமவாரமும் பவுற்ணமையும் பூசநட்சத்திரமும் சுகற் நாம யோகமும் கிரசவாகர
3. ணமுங் கூடின சுபதினத்தில் ஸ்ரீமன் ராசாதிராசன் பர மேசுரன் ராசமாத்தாண்
4. டன் ராசகெம்பீரன் மகாமண்டலேசுவரன் அரிய ராயிரதள படாவின் பாஷைக்குத்
5. தப்புவராயகண்டன் மூவராயிர கண்டன் கண்டநாட கொண்டு கொண்டநாடு கொடா
6. தான் பூறுவதெக்ஷிண பச்சிம உத்தரசமுத்துராதிபன் பட் மானங் காத்தான் வீரகஞ்சு
7. கன் வீரவள நாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் இவுளி பாவடி மிதித்தே
8. றுவார் கண்டன் வீரவெண்பாமாலை யிளஞ்சிங்கந் தளஞ் சிங்கம் ஆத்தில் பாச்சி கட
9. வில் பாச்சி மதப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்கு வேலி ஆரியர் மானங்காத்தான்

---

A.R.E. A. 33/1947.
இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம் இராமநாதபுரம்.
அமைப்பு : 30.செமீ × 14. செ.மீ.

10. தேவை நகராதிபன் சேதுமூலாட்சர துரந்தரன் ராமநாத சுவாமி காரிய துரந்த

11. ரன் பரராசசேகரன் சொரிமுத்து வன்னியன்அந்தம்பர கண்டனை சுவாமித்து

12. ரோகியள்முண்டன் வய்கை வளநாடன் வீரதண்டை

13. சேமத்தலை விளங்குயிரு தாழினான் சேதுங்கராய வங்கி

14. ஷாதிபன் துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலோத் துங்க சோழநல்லூர்க் கீள்பா

15. ல் விரையாத கண்டனிலிருக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் புத்திரன்

16. திருமலைச் சேதுபதி காத்ததேவரவர்கள் ராமநாதசுவாமி காரியகர்த்தரான ராம

17. நாத பண்டாரம் அவர்களுக்குத் தாம்பிரசாசனம் கொடுத்த பரிசாவது நம்முடைய பெரிய

18. அய்யா அவர்கள் அறக்கட்டளை யுண்டு பண்ணி நடந்து வருகிற போது கோவிலுள்

19. த்துறைக் கட்டளையிலே நடந்து வருகிற காரியத்துக்கு அய்யா அவர்கள் கட்டளையிலே

20. நடந்துவருகிற காரியத்துக்குத் தங்களுக்குத் தாம்பிர சாசனமெளுதித் தாராபூறுவ

21. வமாகக் கொடுத்து நடந்து வந்தது சரியாமெ அப்படி நடந்து வருமிடத்தில் நம்முடைய

22. ராச்சியத்திலிருந்து வருகிற காணிக்கை உபைய முதலா னதும் நம்முடைய கட்டளையிலே

23. வாங்கி நடப்பிக்க வேணுமென்று நம்முடைய அறை வாசலிலே யிருக்கிற காரியக்கா

24. றர் சொல்லிக்கொண்டிருக்கிறதாகத் தாங்கள் நம்முடனே சொன்னபடியினாலே நம்மு

25. டைய கட்டளைக்குப் பெரிய அய்யா அவர்கள் விட்டு நடந்து வருகிற கிராமங்களிலேயும்

26. னாம் விட்டு நடந்துவருகிற கிராமங்களிலேயும் உண்டாகிய ஆதாயங் கொண்டும் நாம்கொ

27. டுக்கிற திரவியங் கொண்டும் நம்முடைய அறைக் கட்டளை நடப்பித்து வருகிறதேய

28. ல்லாமல் மத்தப் பிறநாட்டிறத்திலிருந்து வருகிற காணிக் கையள் உபையங்களும் நம்மு

29. டைய ராச்சியத்திலே யிருந்து வருகிற காணிக்கை உபை யங்கலெல்லாம் நல்ல திரவிய

30. ங்களாக இருக்கிறதுமுண்டு பாவத் திரவியங்களாக இருக் கிறதுமுண்டு அப்படிக் கொண்றால்

31. ந்த திரவியம் வாங்கி நம்முடைய சொந்த கட்டளையிலே நடப்பித்தால் நமக்குப் பலனே

32. தென்கிறதைக் குறித்து நம்முடைய அறைவாசலிலே இருக் கிற காரியக்காறரைக் கண்டிச்சி நடப்

33. பித்துக் காணிக்கை உபையங்கள் ஒன்றும் வாங்குவோ மென்று நினைக்கத் தேவையில்

34. லையென்றும் நிலவரம் பண்ணிவிச்சு அனாதிபூறுவமாகக் கோவிலுள்த் துறைக்கட்டளை

35. யிலே வாங்கி நடந்துவத்த பிறகாரத்துக்குப் பெரிய அய்யா அவர்கள் கொடுத்த தாம்பிரசா

36. சனப்படிக்கு நடப்பித்துக்கொள்ளச் சொல்லியும் நம்முடைய ஆதீனத்திலுண்டாகிய

37. காரியக்காறர் பாளையக்காறர் முதலான பேர் உபையமாகக் கட்டளையுண்டு பண்ணிப் பிறத்

38. தீகமாக கட்டளை வைத்து நடப்பித்து வருகிற பேருடைய உபையங்களுண்டானதுமா

39. த்திரம் அவரவர் உண்டு பண்ணின அறை கட்டளையிலே தானே நடப்பித்துக்கொள்ளச்

40. சொல்லியும் மத்தப் பிறநாட்டிறத்திலிருந்து வருகிற காணிக்கைகளும் உபையங்களு

41. ம் நம்முடைய ராச்சியத்திலுண்டாகிய பேர் கொடுக்கிற காணிக்கை உபையங்களும் பூறு

42. வாபூறுவம் நடந்து வந்த படிக்குக் கோவிலுள்த் துறைக் கட்டளையிலே தானே வாங்கி

43. நடப்பித்துக் கொள்ளச் சொல்லியும் நம்முடைய ஆதீனத்தி லே பட்டத்துக்கிருக்கிற பேர்

44. களும் ராமநாதசுவாமிக்குப் பட்டக்கிறாமங் கொடுக்கிறது நீங்கலாக நம்முடை

45. ய அறைக்கட்டளைக்கு விடுகிற கிறாமங்களிலேயும் பெரிய அய்யா அவர்களு னாழும் விட்ட

46. கிறாமங்களிலேயும் உண்டாகிய திரவியங்கொண்டு நம் முடைய அறைக்கட்டளை பூசை முத

47. லாகியது நடப்பித்து அந்தச் சுகிற்தம் நம்முடைய ஆதீனத் துக்கு வந்துசேருகிற வளியாக நடப்

48. பித்துக் கொள்ளச் சொல்லியும் பிறருடைய திரவியங்கள் வாங்கி நடப்பிக்கத்தேவை

49. யில்லையென்றும் நிலவரம் பண்ணிவித்து தமக்கு நாம் தாம்பிர சாசனம் ராமநாதசுவா

50. மி சன்னதியிலே தாராபூறுவமாகக் கொடுத்த படியினாலே ஆதிசந்திராதித்ய மிந்த தாம்பிர

51. சாசனப் படிக்கு அனுபவித்துக் கொள்ளக் கடவராகவும் ராமநாத சுவாமி துணை.

# செப்பேடு எண். 11

*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் : திருமலை ரகுநாத சேதுபதி மன்னர்.
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் திருக்கோயில்
   : ஆதினகர்த்தர், இராமநாத-பண்டாரம்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1573 நந்தன ஆண்டு தை மாதம் கி.பி.3-1-1653
4. செப்பேட்டின் பொருள் ; சேதுபதிமன்னரது விளக்க உத்தரவு.

இந்தச் செப்பேட்டில், வரிகள் 3-14 வரையில் சேதுபதி மன்னரது முப்பத்தைந்து விருதுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளில் ''பூறுவ தெக்ஷின பச்சிம உத்திர சமுத்திராதிபன்' என்ற ஒரே ஒரு விருதினைத் தவிர, ஏனையவை ஏற்கனவே இந்த மன்னரது செப்பேட்டிலும் (செப்பேடு எண்10). அவரது முந்தையோரான உடையான் சடைக்கன் சேதுபதி அவரது மகன் தளவாய் சேதுபதி என்ற கூத்தன் சேதுபதியின் செப்பேடுகளில் (செப்பேடு எண் 1 முதல்9) காணப்படுகின்றவை இந்த மன்னரது செம்மையான ஆட்சி காரணமாக சேது நாட்டின் எல்லைகள் வடக்கிலும் வடகிழக்கிலும் சோழ சீமைக்குள்ளும் தெற்கே திருநெல்வேலிச் சீமை மன்னார் கோயில் வரையிலும் விரிந்து பரந்ததால் ''பூர்வ - தெற்கு, கிழக்கு, வடக்கு சமுத்திரங் களுக்கு தலைவர்'' என்ற விருது உயர்வு நவிற்சியாக வரையப்பட்டுள்ளது. மற்றும், இந்தச் செப்பேட்டை வழங்கியவர் ''தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் புத்திரன் திருமலைச்

சேதுபதி'' என (வரிகள் 15-16ல்) குறிப்பிடப்பட்டுள்ளது. ''தளவாய்'' என்ற பட்டம் கி.பி.1605ல் மதுரை முத்துக் கிருஷ்ணப்ப நாயக்க மன்னரால் ''உடையான் சடைக்கன் சேதுபதிக்கு'' முதலில் வழங்கப்பட்டாலும், பின்னர் அவரது புத்திரரான கூத்தன் சேதுபதிக்கும் (கி.பி.1622-35) அடுத்து அவரது சகோதரன் இரண்டாவது சடைக்கன் சேதுபதிக்கும் (கி.பி1635-46) இருந்து வந்துள்ளது[1]. இந்த சேதுபதி மன்னர், முந்தைய சேதுபதிகளான கூத்தன் சேதுபதி, இரண்டாவது சடைக்கன் சேதுபதி ஆகியோரது தங்கைமகன் என்பது வரலாறு[2]

இராமேசுவரம் திருக்கோயில் வழிபாட்டு முறைகளுக்கான நியதிகளையும் அதற்கு தேவையான நிதி வசதியையும் முதலில் ஏற்படுத்தியவர் ''உடையான் சடைக்கத் தேவர்'' என்பதை முன்னர் பார்த்தோம் (செ. எண்.1) அவர், அந்தக் கோயிலில் இரண்டு விதமான கட்டளைகளை ஏற்படுத்தினார். அவை ''கோயில் உள்துறைக்கட்டளை'' என்றும் ''அறைக்கட்டளை'' என்றும் பெயர் பெறும் இந்த உள்துறைக் கட்டளை என்பது சேதுபதி மன்னர் ஆதியில் வழங்கிய பொருள் உதவியைத் கொண்டு பின்னர் பக்தகோடிகளது காணிக்கை, இதர உபயங் களைக் கொண்டும், அன்றாட வழிபாட்டிற்கு பயன்பட்டு வருவது. சேதுபதி மன்னர் சிறப்பாக அணிமணிகளையும், பொருள்களை யும், கிராமங்களையும் ஸ்ரீ இராமநாத சுவாமியின் சிறப்பு பூசனை களுக்காக வழங்கி, அவ்வப்பொழுது நடைபெறும் திருவிழா போன்ற சிறப்பான நிகழ்ச்சிகளுக்கு பயன்பட நிறுவப்பட்டது அறைக்கட்டளை. இந்த இரு கட்டளைகளும், எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதில் சேதுபதி மன்னர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்து வந்தனர் என்பதை அவர்களது செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

கி.பி. 1627ல் மறவர் சீமை மன்னராக இருந்த கூத்தன் சேதுபதி என்ற தளவாய் சேதுபதி, இராமேசுவரம் கோயில் ஆதின கர்த்தர் இராமனாத பண்டாரத்திற்கு வழங்கிய

1. Raja Ram Row-T- Manual of Ramnad Samasthanam (1891) p. 221-222.
2. Pedigiree filed by Sivakamni Nachiyar no O. S. 3/1813 of the Proivincial court

ஆணையை ஏற்கனவே பார்த்தோம், (செப்பேடுஎண்.6) அவரைப் போன்று திருமலை ரகுநாத சேதுபதி வழங்கிய இந்தச் செப்பேடும், அத்தகைய தொரு ஆணையை விளக்கமாக கோயில் ஆதின கர்த்தருக்கு வழங்கியதைக் குறிக்கின்றது. ஆணையின் படி, இராமனாத பண்டாரம், மன்னரது பெரிய அய்யா (பாட்டனார்) சடைக்கன் உடையான் சேதுபதி கி.பி.1605-22 இராமேசுவரம் திருக்கோயிலுக்குத் தானமாக வழங்கிய கிராமங் களின் ஆதாயங்கள் அல்லது வருவாய்களைக் கொண்டும், இந்த மன்னர் வழங்குகின்ற திரவியங்களைக் கொண்டுதான், மன்னரது அறக்கட்டளையை ''நடப்பித்து'' வருதல் வேண்டும். சேது நாட்டிலும் ஏனைய நாட்டிலும் இருந்து வருகிற காணிக்கை களும் உவையங்களும் நல்ல திரவியமாகும், அல்லது பாவ திரவியங்களாகவும் அமைவதற்கு வாய்ப்பு இருப்பதால், அவை-களை மன்னரது சொந்த அறக்கட்டளையில் பயன் படுத்தாமல் கோயிலின் பொதுவான உள்துறைக்கட்டளையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது மன்னரது ஆணை. மேலும் மன்னரது சொந்தக்கட்டளை ஏனைய தருமங்களைப் போன்று மன்னரது ஆத்ம திருப்திக்காவும் மறுமை இன்பத்தை நோக்கியதாகவும் உள்ளதால் இத்தகைய புனித செயலில், பாலில் கலந்து விடும் விஷம் போல, தெரிந்தும் தெரியாமலும், பாவம் சேர்ந்து விடக் கூடாது என்ற புனித நோக்கில் மன்னர் மிகவும் எச்சரிக்கையுடன் கோயில் காரியங்களை உன்னிப்பாக கவனித்து வந்தார், என்ப தற்கு இந்த செப்பேட்டு ஆணை நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. மன்னரது இத்தகைய ஈடுபாடு, உள்ளப்பாங்கு, மனச்சான்று காரணமாக ''நம்முடைய அறைவாசலிலே இருக்கிற காரியக்காரரைக் கண்டிச்சு நடப்பித்து ''(வரிகள் 32-33) நிலவரம் பண்ணிவிச்சு'' (வரி34) நடப்பித்துக் கொள்ளச் சொல்லியும் (வரி 36,39,43,47) இந்தச் செப்பேட்டு வாயிலாக ஆணை வழங்கி உள்ளார்.

இந்த ஆணையில் கோயில் ஆதினகர்த்தருக்கு இன்னொரு விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது அறக்கட்டளையில், அந்தந்த சேதுபதி மன்னர்கள் அளிக்கின்ற திரவியங்களையும், உபையங்களையும்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, அந்த மன்னர் முடிசூடும் பொழுது ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு முதன்மையாக வழங்குகிற பட்ட கிராமம் அல்லது பட்டகாணிக்

கையை கோவில் உள்துறைக்கட்டளையில் தான் சேர்த்துக் கொள்ள வேண்டும். என்பது, மேலும் இந்தச் செப்பேட்டில் இருந்து மன்னரது காலத்திலேயே, சேதுநாட்டைத்தவிர மற்றைய மாநிலங்களில் இருந்தும் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு காணிக்கைகள் வந்து கொண்டு இருந்தன என்பதும் அவைகள் கோயில் உள்துறைக் கட்டளையில் சேர்க்கப்பட்டு வந்த விவரமும் தெரிய வருகிறது.

திருமலை சேதுபதி மன்னர், ஸ்ரீ இராமநாதசுவாமி தரிசனத்திற்கு இராமேசுவரம் திருக்கோயிலுக்கு சென்று இருந்த பொழுது அங்கு மன்னரது அறைக்கட்டளையை கவனித்து வந்த காரியக்காரரைப் பற்றிய முறையீட்டைக் கேட்டவுடனேயே, இந்த விளக்க ஆணையை மன்னர் ஸ்ரீ இராமநாதசுவாமி சன்னதியிலே வழங்கினார் என்பது (வரி 60) தெரியவருகிறது.

தாம்பிர சாசனம் (செப்புபட்டயம்), உபையம் (தருமம்) திரவியம் (பொருள்) அனாதி பூறுவம் (நீண்ட காலம்) பிரகாரம் (வகைப்படி) ஆதினம் (அரசு அமைப்பு) ஆதிசந்திராதித்யம் (சந்திர சூரியர் முதல்) ஆகியவை வடபுலச் சொற்களாக இருந்தாலும், அன்றைய கால தமிழ் உரைநடைக்கு ஏற்ப, செப்பேட்டு வாசகத்தில் பயன்படுத்தப்பட்டு, அவை இயல்பான தமிழ் சொற்கள் போல தோற்றமளிக்கின்றன.

## செப்பேடு எண். 12

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1579 இதன் மேல் செல்
2. லா நின்ற விளம்பி நாம சம்வச்ரத்து உத்தராயணத்தில் ஹேம
3. நித ருதுவில் உத்தர நட்சத்திரத்தில் கிருஷ்ணபட்சமும் சோமவாரமும்
4. ——————யாயபரண தோஷமும் பிரஸ்தராஜ யோகமும் வாகுவால
5. கரணமும் பெத்த சுபதினத்தில் தேவை நகராதிபன் சேது மூலா துரந்தரன்
6. ராமனாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராஜ கே
7. ச சிங்கம் ரவிகுலசேகரன் ரவிகுல சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்தி ஸ்ரீமண்
8. டலேசுரன் ராஜபரமேசுவரன் அரிராய தளவிபாடணன் பாஷைக்குத் தப்புவார்
9. கண்டன் மூவராயகண்டன் பதினெட்டு பாளையக்காரர் மிண்டன் கண்ட
10. னாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பட்டமானங் காத்தான் சேது கா
11. வலன் துட்டராய மிண்டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவள
12. நாடன் வேதியர்குல காவலன் அரசராவணராமன் அடி யார் வேளைக்கார

---

* அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.

13. ன் பாதாளவிபாடன் உரிகோல் சுரதானன் அண்டம் பரக்கண்டன் சத்திராதி

14. யள்மிண்டன் பஞ்சவன்னராய ராவுத்தன் வைய்கை வள நாடன் கொட்ட ம

15. டக்கி வய்யாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்து ஏறுவார் கண்டன்

16. வீர வெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் துர

17. கரேபந்தன் அனுமகேதனன் கொடைக்கு கர்ணன் குதி ரைக்கு நகுலன்

18. வில்லுக்கு வீமன் சொல்லுக்கு அரிச்சந்திரன் ஆனெக்கு தேவேந்திரன் பரத

19. நாடகப் பிரவீணன் கருணாகடாட்சன் கலை தெரியும் விற்பனன் காமினி கந்த

20. ப்பன் வீரதண்டை சேமத்தண்டை விளங்கு மிருதாளினான் சகல சாம்பிராச்

21. சிய ஸ்ரீனிவாசன் தொண்டியந்துறைக் காவலன் துரக ரேபந்தன்

22. ——————— செயதுங்கராய வம்சாதி பன் துகவூர் கூத் தத்தில் காத்

23. தூரான குலோத்துங்க சோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும்

24. திருமலை தளவாய் சேதுபதிகாத்த தேவரவர்கள் புத்ரன் அகோலய்யனுக்கு ஸ்ரீ ஹி

25. ரண்ணிய கர்ப்பயாசி திருமலை ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் கௌண்டினிய

26. கோத்திரத்து சௌம்மிய ராமையன் புத்ரன்

27. அகோபலய்யனுக்கு தாராபூர்வமாக தாம்பர சாசனப் பட்டயம் கொடுத்தபடி

இரண்டாவது பக்கம்

28. தானங் கொடுத்த கிராமமாவது காளையார்கோவில் சீமையில விரிசிலையாத்துப் பாச்சலில்

29. இடிகரைப் புரவில் சோசியன் திடலுக்கு கிளக்கு விரிசிலை ஆத்துக்கு தெற்கு பனஞ்செய்க்கும்

30. —புதுக்கோட்டைக்கும் மேற்கு திருமணக்குளக் காலுக்கும் வடக்கு இதற்குள் நான்கெல்கைக்கு

31. ள் உட்பட்ட பனிவயல், சூரநேம்பல், கீளைச்சூரனேம்பல், மாவூரணி, திருப்பநாதி, மல்லனூர

32. ணி, பெரியனேந்தல், இதுக்கு உள்பட்ட ஊரணி, உடப்பு நஞ்சை, புஞ்சை, திட்டு திடல், பள்ள

33. ம் படுகை, மாவிடை, மரவிடை, தோப்பு, துரவு, ஆத்துக் கால் மடக்குளி

34. உட்பட்ட சகல சமுதாயப் பிராப்திகளும் ஜலதருபாஷணமும் அமாவாசை

35. புண்ணிய காலத்தில் தனுக்கோடிக் கரையில் ஸஹிரண்ணிய தாராபூர்வமாக

36. தானசாசனம் பண்ணிக் கொடுத்தபடியினாலே தானாதி வினியோக விக்கிரயங்களுக்கு போ

37. க்கியமாக சர்வ ஜாகமும் புத்திர பவுத்திர பாரம்பரிய சந்திராதித்யம் சந்திரப்

38. பிரவேசம் சர்வமானியமாக ஆண்டு அனுபவித்துக் கொள் வாராகவும் இந்

39. த தர்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினவர்கள் தனுக்கோடிக்கரையிலே

40. யும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி சிவலிங்கபிரதிஷ்டையும்

41. பண்ணின பலத்தை அடைவார்களாகவும் இந்த தர்மத்திற்கு அகிதம் பண்ணினவர்கள் கெங்

42. கைக் கரையிலேயும் தனுக்கோடிக் கரையிலேயும் கொடிய பிரம்மஹத்தியும் கொடிய

43. சிசுஹத்தியும் ஸ்திரிஹத்தியும் செய்த கொடிய தோசத்திலே போவக்கடவார்களாகவும்......

44-49. கிரந்த எழுத்துத் தொடர்கள்

50. ராயசம் சொக்கநாத பிள்ளையவர்கள் வாக்குப்படிக்கு திருப்புல்லாணியில் இருக்கும்

51. தெய்வச் சிலை ஆசாரி மகன் வெற்றி வேலாயுதனாசாரி எழுத்து

## செப்பேடு எண். 12

(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | திருமலை ரெகுநாத சேதுபதி காத்தத்தேவர் அவர்கள், |
| 2. செப்பேடு பெற்றவர் | : | சௌமிய இராமைய்யன் புத்திரன் அகோபலைய்யன் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1579 விளம்பி ஆண்டு கி.பி. 1657 |
| 4. செப்பேட்டின் பொருள் | : | காளையார் கோயில் சீமையில் ஏழு கிராமங்கள் தானம் |

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக ஐம்பத்தியொரு சிறப்புப் பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இவைகளில் பதினெட்டு பாளையக்காரர் மிண்டன், ஆணைக்குத் தேவேந்திரன் என்ற இரண்டு விருதாவளிகளும் இந்தச் செப்பேட்டில் புதிதாக இடம் பெற்றுள்ளன. இதனை வரைந்தவர் கிரந்த எழுத்துக்களில் மிகவும் பயிற்சியுடைய-வராகத் தெரிகிறது. பல இடங்களில் தமிழ் எழுத்துக்களை புரிந்து கொள்ள இயலாதவாறு உள்ளன. இந்தச் செப்பேட்டைப் பெற்றவர் கௌண்டின்ய கோத்திரத்து சௌமிய இராமைய்யன் புத்திரன் அகோபலையன் என்பதாகும்.

இவர் கௌண்டின்யர் என்ற இருடியை தமது சந்ததி முதல்வராக கொண்டவர் பொதுவாக தமிழ்நாட்டு ஆரியர்கள் அனைவரும் அவர்களது கொள்வினை கொடுப்பினை போன்ற சமூக சடங்குகளுக்கு இந்தச் சந்ததி முறையைப் பேணி வருவது யாவரும் அறிந்த ஒன்று.

இவர் காளையார் கோவிலில் குடியமர்ந்தவராக இருக்க வேண்டுமென்பது ஊகிக்கப்படுகிறது. தேவார காலத்தில் சிறப்புற்று கானை என வழங்கப்பட்ட இந்தத் தலம் பதினான்காம் நூற்றாண்டு முதல் சீரழிவைச் சந்தித்தது. ஆகையால் இந்தத் தலத்தில் அகோபலையய்யன் போன்றவர்கள் இருந்து வருவது ஆன்மிக எழுச்சிக்கு உதவும் என மன்னர் நினைத்திருக்கக் கூடும். ஆதலால் இந்த மன்னர் தனியார்களுக்கு அது வரை அறக்கொடை எதுவும் வழங்காத நிலையில் இந்த வித்தகருக்கு முதன் முதலாக இத்தகையக் கொடையினை வழங்கியுள்ளார். அவர் கல்வி கேள்விகளிலும் வேத வியாகரணங்களிலும் விற்பன்னராக விளங்கிய காரணத்தினால் இவரைச் சிறப்பிக்கும் வகையில் காளையார்கோவில் சீமைப் பகுதியில் ஏழு கிராமங்களை ஒரே தொகுதியாக வழங்கி இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பனிவயல், சூரனேம்பல், கீழச்சூரனேம்பல், மாவூரணி, திருப்பநதி, மல்லன் ஊரணி, பெரியனேந்தல் என்பன அவை இந்தப்பகுதியும் இதற்கு வடக்கே உள்ள பட்டமங்கலம் பகுதியும் இந்த மன்னரது முன்னவர் திருமலை சடைக்கன் உடையான் சேதுபதி ஆட்சிமுதல் தொடர்ந்து மறவர் சீமையாக இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது இந்தமன்னருக்கு முன்னர் இந்தப் பகுதி கூத்தன் சேதுபதி மகன் தம்பியின் ஆளுகையிலும் சில காலம் இருந்ததை இராமநாதபுரம் மேன்யுவல் தெரிவிக்கின்றது.[1]

இந்த அறக்கொடையில் சம்பந்தப்பட்ட ஊர்களுக்கு நான்கு எல்லைகள் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளபோதும் இவைகளிலிருந்து அரசுக்கு பெறப்பட்ட வருவாய்கள் எவை என்பதை குறிக்கப்படாமல் சகல சமுதாய பிராப்திகள் என்று மட்டும் வரையப்பட்டுள்ளது. இதிலிருந்து அந்தக் கிராமங்களிலிருந்து வரிப்பாடுகள் எதுவும் சேதுபதி மன்னருக்கு வரப்பெறவில்லை என்பது ஊகிக்கப்படுகிறது.

கி.பி. 1659 வரை திருமலை சேதுபதி மன்னர் மதுரை நாயக்கரது மேலாதிக்கத்தை ஏற்றவராக இருந்த காரணத்தினால் மதுரை நிர்வாகத்தைப் பின்பற்றி சேதுநாடு நிர்வாகத்திலும் இராயசம் என்ற செயலர் பதவி இருந்ததை இந்தச் செப்பேட்டின் வரி 50ல் இருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

---

1. Rajaram Row-T – Manual of Ramnad Samasthanam **(1891)**p.

## செப்பேடு எண். 13

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாகன ஸகாப்தம் 1580யிதின் மேல்ச் செல்லாநின்ற யேவிளம்பிநாமஸம்வச்ரத்து உத்தரா-யணத்து ஏமந்தருதுவில் சுக்கிலபக்ஷத்து பூர்ணமாவாசையு மிந்து வாசரமு சுபயோக சுபகரணமுங்கூடின சுபதினத்-தில் தேவை

2. நகராதிபன் சேதுமூலரெட்சகதுரந்தரன் ராமனாதசுவாமி காரியதுரந்தரன் சிவபூசைத்துரந்தரன் பரராசசேகரன் பரராசகெசசிங்கம் ரவிகுலசேகரன் ரவிவர்மன் சொரிமுத்து வன்னியன் ஸிஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன்

3. அரியராயிரதளவிபாடன் பாசைக்குத் தப்புவரயிரகண்டன் மூவாயிரகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பட்டா மானங்காத்தான் துட்டராயிரகண்டன் புவனேகவீரன் வீரவண்ணா பன்வேதியர்

4. காவலன் அரசராவணராமன் அடியார் வினைக்காரன் பரதளவிபாடன் உரிகோல்சுரதனன் அந்தப் பிரகண்டன் சாடிக்காரர்கண்டன் சாமித்துரோகியள் முண்டன் பஞ்ச-வர்ன்ன ராயராவுத்தன் பனுக்குவார்கண்டன் வைகை-வளநாடன்

5 கொட்டமடக்கிவையாளி நாராயணன் இவுளிபாவடி மிதித் தேறுவார் கண்டன் வீரவெண்பா மாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் ஆத்திற் பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைகலங்காத்தான் தாலிக்கு

---

A. S. S. I. Vol. IV. pp. 70-71

6. வேலிசத்திராதியன் மிண்டன் வன்னியராட்டந் தவிளத் தான் மேவலர்கள் கோளரிமேவலர்கள் சிங்கம் மேவலர்கள் வணங்குமிருதாளினான் வீரகெம்பீரன் கீர்த்திப்பிரதாபன் ஆரியர் மானங்காத்தான் தொண்டித்துரை காவலன் [துரகரே] வந்தனன்.

7. அனுமகேதனன் கருடக்கேதனன் பரதனாடகப் பிரவீணன் கருணாகடாட்சன் குன்றினுயர் மேருவைக்குன்றாயருக் கருளில் பொறித்தவன் திலதநுதன் மடவராகன் மடலெழு-தவரு சுமுகன் விசயலட்சுமீகாந்தன் கலைதெரியும் விற்பனன் சத்தியபாஷா அரிச்

8. சந்திரன் சங்கீத சாகித்திய வித்தியாவிநோதன் வீர-தண்டை சேமத்தலைவிளங்கு மிருதாளினான் சகலசாம் பிராச்சிய வட்டைச்சுரிசவாசன் செயதுங்கராயன் வகுவீரயி வனானதுகவூர் கூற்றத்துக் கரத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால விரையாதகண்ட

9. னிலிருக்கும் ஸ்ரீ இரணியகருப்பயாஜீ சேதுபதி ரகுநாதத் தேவரவர்கள் புத்திரன் சேதுரகு நாதச்சேதுபதித் தேவர வர்கள் இராமீச்சுரத்திலிருக்குஞ் சங்கரகுருக்கள் முதலான குருக் கண்மார் சவையாரான வோர்க்குஞ் சாதனம் பண்ணிக்கொடுத்தது சாதனமாவது இராமீச்சுரம்

10. இராமனாதசுவாமி பருவதவர்த்தினியம்மன் பூசை சுயம் பாகம் பரிசாரகம் செய்துவரப்பட்ட மாராட்டகாளகுருக்கள் மார் சவையாரனவோருக்கும் முன்னிருந்த ராசாக்கள் உங்களுக்கு அர்சனாபாகத்துக்கு கிராமம் பூமி விடாத தினலே இராமீசுரம் ஸேதுஸ்நானம் சுவாமிதெரி

11. சனத்துக்குவருகிற மாராஷடர்கள் ஸகலசாதி பரிசைகளுக் கும் நீங்களே தீர்த்தப்புரோகிதம் செய்து வருமானத்தை நீங்களே அனுபவித்துக் கொண்டு சுவாமி பூசை பரிசாரகம் சுவயம் பாகம் நீங்களே சந்திராதித்ய சந்திரப்பிரவேசம் உள்ளவரைக்கும் ஆண்டு

12. அனுபவித்துக் கொள்ளும் படி கட்டளையிட்டோம்........[1] இந்த மஹாதர்ம்ம சாசனத்தை நம்மிட வம்சத்திலுண்-டானவர்கள் பரிபாலனம்பண்ணி வருகிறவர்களுக்கு கெங்-கை கரையிலும் சேதுக்

13. கரையி கோடி சிவலிங்கப்பிரதிஷ்ட்டை பண்ணின பலத்தையும் கோடி அக்கிரகாரப்பிர திஷ்ட்டைபண்ணின பலத்தையுமடைவார்கள் இந்த தற்மத்துகூ அகிதம் நினைத்தவர்களுக்கு கெங்கைககரையிலேயும் சேதுகரை

14. யிலும் காராம்பசுவைக் கொன்ற தோஷமு மாதா பிதா குருவைக்கொன்ற தோஷத்திலேயும் போககடவாறாகவும் இப்படிசூஸஹிரண்ணியதாறா பூர்வமாக மகாதற்மசாதனம் பண்ணிக்கொடுத்தோம் மாராஷ்டக சங்கர குருக்கள் முதலானகுருக்கள்

15. மார்சவையார் அனவோருக்கும் சேதுபதி சேது ரகுநாதத் தேவரவர்கள் இந்த தற்மசாதனப்பட்டயம் எளுதினேன் கீளக்கொடுமளூரிலிருக்கும் இலங்கமீட்டாபிள்ளை புத்திரன் இராயசம் தாண்டவராயன் கையெழுத்து

## செப்பேடு எண். 13

(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | திருமலைரகுநாத சேதுபதி மன்னர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் சங்கர குருக் களும் மற்றவர்களும். |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1580 ஏவிளம்பி - ஆண்டு (கிபி-1658) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | ஆலய வழிபாட்டில் உரிமை கள் |

சேதுமன்னரது செப்பேடுகளில் பொதுவாக குறிக்கப்பெற்றுள்ள விருதாவளிகளை விட, மிகுதியாக மொத்தம் அறுபத்து ஏழு - விருதுகள், இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. இதுவரை காணப்பெற்ற செப்பேடுகளில் குறிக்கப்படாதனவாக பதின்மூன்று புதிய விருதுகள் காணப்படுகின்றன. அவையாவன

| | |
|---|---|
| 1. ரவிகுல சேகரன் | 7. வையாளி நாராயணன் |
| 2. ரவிவர்மன் | 8. சத்துராதியள் மிண்டன் |
| 3. ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் | 9. மேவலர்கள் கோளரி |
| 4. வீரவண்ணாபன்(வீரவல்லபன்) | 10. மேவலர்கள் சிங்கம் |
| 5. அடியார் வேளைக்காரன் | 11. சகல சாம்பிராச்சிய வட்டை சுரிசவாசன் |
| 6. உரிகோல் சுரதானன் | 12. வகுவீரன் |

இவையனைத்தும் மன்னரது குடிச்சிறப்பையும், வீரத்-தையும் குறிப்பிடும் சிறப்பு பெயர்கள் என்பதைத் தவிர வேறு அல்ல. ஆனால் உரிகோல் சுரதணன் (ஒரு கோல் சுல்தான்)

என்ற விருது ஆந்திர நாட்டு வாரங்கல் (ஒரங்கல்) பகுதியில் அரசுரிமை பெற்று இருந்த காரணத்தால் தெலுங்கு மன்னர் களுடையனவாகவும் இருந்து அவர்களின் தளவாயான சேதுபதி களுக்கும் அதே விருதுகள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. தெலுங்கு நாட்டு வாரங்கல் அல்லது ஓரங்கல் நகரம் ஏக்சிலா நகரி எனப்பட்டது. அதன் மன்னன் என்ற பொருளில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் வையாளி நாராயணன் என்பது ஸ்ரீரங்கம் பெருமாளைக் குறிப்பிடுவது. ஏனெனில் இந்த பெருமாள், ஓராண்டில் ஏழு முறை சித்திரை வைகாசி, புரட்டாசி மார்கழி, தை, பங்குனி, மாதங்களில் குதிரை வாகனத்தில் (வையாளியில்) பக்தர்களுக்கு காட்சியளிப்பது, வழக்கமாக இருந்தது.[1] இதனை கோண வையாளி என்று சொல்வதுண்டு. இந்த விழாவினை முதன் முறையாக கி.பி 1383ல். அறிமுகபடுத் தியவர் விருபாட்சி நாயக்கர் ''வையாளி விடுதல்'' ''வையாளி வீதி'' என்பனவெல்லாம் இதனையொட்டி வந்த வழக்குகள். மற்றும், தமிழகத்தில் அரபுக் குதிரைகள் இறக்கத்தையொட்டி பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஏற்பட்ட இந்த மரபு நாளடை வில் பரிவேட்டையாக (பாரிவேட்டை என்று சில இடங்களில்) இன்றும் தொடர்ந்து வருகிறது. அதன் பொருளும் போக்கும் மாறுபடும்படியாக மக்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் குழுவாகச் சென்று வேட்டையாடுவதாக உள்ள வழக்கம் சில ஊர்களில் இருந்து வருகிறது. இதனைத் திருவிழாவாக ஸ்ரீரங்க ஆலயத் தில் நடத்துவதற்கு தக்க விளைநிலங்கள் கி.பி. 1555-ல் விஜய நகர மன்னர் சதாசிவராயரால் தானம் வழங்கப்பட்டது. திருவரங்கத்துப்பெருமாளது பெயர், திருமலை, சேதுபதி மன்னரது விருதாக, எவ்விதம் அமைந்தது என்பதைத் துலக்க ஆவணம் எதுவும் இல்லை.

இந்தச் செப்பேட்டில் காணப்படுகிற புதிய விருது ''அடியார் வேளைக்காரன்'' என்பது தொண்டருக்குத் தொண்டராகத் துணை நிற்பவர் என்ற பொருளில் இந்த விருது, இந்த மன்னருக்கு ஏற்பட்டு இருக்க வேண்டும். இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமியைத் தரிசிக்க வேண்டும் என்ற சிறந்த குறிக்கோளுடன் இந்திய நாட்டின் பலபகுதிகளில் இருந்தும்

1. Chitra Viji - South Indian Studies - Vol II pp, 171-172

இராமேசுவரம் நோக்கி வருகின்ற பல்லாயிரக் கணக்கான பக்த கோடிகளுக்கு பல்லாற்றானும் பணிசெய்யும் பாக்கியத்தை சேது மன்னர்கள் பெற்று இருந்தனர். இராமநாதபுரம் சீமையின் வடக்கு எல்லையான கோட்டைப்பட்டினத்தில் இருந்தும் தெற்கு எல்லையான வேம்பாற்றைக்கடந்தும் இராமேசுவரம் நோக்கி வருகின்ற பயணிகளுக்கு பயணக்களைப்பு நீங்க, ஓய்வு பெற்று உணவுபெற, பத்துக்கல் தொலைவிற்கு ஒரு அன்ன சத்திரம் என்று பல சத்திரங்களை நிர்மாணித்து அங்கே, பயணிகளுக்கு மூன்று நாட்கள் வரையிலும் உண்டியும், உறையுளும், இலவசமாக வழங்க ஏற்பாடு செய்துவந்தனர். மேலும் கங்கையைக் கடப்பதற்கு, இராம இலக்குமணருக்கு பரிசல் ஒட்டி பாத சேவை செய்த குகனைப் போன்று, இராமேசுவரம் பயணிகள் வையை ஆற்றைக்கடப்பதற்கு ஆற்றங்கரையிலும், பாம்பன் ஆற்றைக் கடப்பதற்கு பாம்பன் மண்டபம் இருகரைகளிலும் படகுகளை ஏற்பாடு செய்து இருந்தனர். இத்தகைய தொண்டுகளுக்கு துணையாக இருந்த அடியார் வேளைக்காரரான இந்த மன்னருக்கு இந்த விருது வழங்கப்பட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை. இத்தகைய விருதாவளிகள் உண்மையை உள்ளடக்கியவனாக இருந்தாலும் காலப்போக்கில் அவைகளைக் கருதுபவர்கள் இல்லாத காரணத்தினால், அதன் விவரங்கள் நமது ஆய்வுக்கு கிடைப்பது இல்லை.

மற்றும் ''வேளைக்காரன்'' என்ற சொல் பதினொன்று பன்னிரண்டு நூற்றாண்டு கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. ''மூன்று கை வேளைக்காரர்'' என்ற சொல் கோயில் பணிகளைக் கண்காணிப்பதற்காக சோழப் பேரரசர்களால் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் என்பது தெரிகிறது. மேலும். இலங்கை நாட்டின் வடகிழக்குப்பகுதி, சோழர்களால் கைப்பற்றப் பட்ட பொழுது புத்தசமய நாடான அங்கு தமிழகம் போன்று திருக்கோயில்கள் எழுந்தன. அங்கும் இந்த ''வேளைக்காரர்'' நியமனம் செய்யப்பட்டனர். அந்தக் கோயில்களின் பாதுகாப்பு பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது என்றும் அவர்கள் சைவர்களாக இருந்தனர் என்றும், கோயில் காணிக்கையில் ஒரு பகுதி அவர்களைச் சேர்ந்ததாக இருந்தது என்றும் அந்த நாட்டுக் கல்வெட்டுக்களில் இருந்து தெரிய வருகின்றன.[3]

3. Ephigraphica Zailamica Vol II p. 242 Vol. IV p. 191

இத்தகைய ''*வேளைக்காரர் கல்வெட்டு*'' என வழங்கப்படும் தமிழ்க் கல்வெட்டு ஒன்று இலங்கை பொலன்னருவாவில் ''தூபரமா'' என அழைக்கப்படும் சிதைவுற்ற புத்த சைத்ரத்துக்குப்பக்கத்தில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். இதில் ''வேளைக்காரது'' பணிகள் விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன.[4] இந்தப் பணியாளர் முறை பின்னர் வைணவக் கோயில்களிலும் பின்பற்றப்பட்டது என்பதற்கு திருப்புல்லாணி திருக்கோயிலின் கி. பி. 1374-ம் ஆண்டு கல்வெட்டில் ''திரு வேளைக்காரரைக் கொண்டு'' என்ற தொடர் சான்றாக உள்ளது.[5]

இந்தச் செப்பேடு வழங்கப்பெற்ற பதினேழாம் நூற்றாண்டில், இராமேசுவரம் திருக்கோயிலின் அன்றாட திருப்பணிகளில் ஈடுபட்டு இருந்தவர்கள், மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த அந்தணர்கள். அவர்கள் தனிக்குழுவாக இருந்த காரணத்தினால் அவர்கள் சவையார் (சபையார்) என இந்தச் செப்பேட்டில் (வரி 10) குறிக்கப்பெற்றுள்ளனர். அவர்கள் கோயிலில் பூஜை சுயம்பாகம், பரிகாரம் ஆகிய பணிகளைச் செய்து வந்தனர், அவர்களில் முக்கியமானவர் சங்கர குருக்கள். இவருக்கும்' ஏனைய மராட்டகாள குருமார்களுக்கும், அவர்களது பணிக்கான ஊதியம் எதுவும் வழங்காததாலும் அதற்கு ஈடான விளை நிலங்களையும் வழங்காததாலும், திருமலை சேதுபதி மன்னர் அதனை முன்னிருந்த ராசாக்கள் உங்களுக்கு அர்ச்சனா பாகத்திற்கு, கிராமம், பூமி விடாததினாலே...'' (வரி 10) என்று குறிப்பிட்டு, இராமேசுவரம், சேது ஸ்நானம், சுவாமி தரிசனம் ஆகியவைகளுக்காக வருகின்ற மராட்டிரர்களுக்கும், இன்னும், சகல பிரிவினர்களுக்கும், தீர்த்தம், புரோகிதம், செய்து வைத்து அதில் கிடைக்கும் வருவாய்களை அனுபவித்துக் கொள்வதுடன், அவர்கள் திருக்கோயில் பணிகளையும் செய்து கொள்ளும் உரிமையினை மன்னர் இந்தச் செப்பேட்டின் மூலம் சங்கர குருக்களுக்கு வழங்கி உத்திரவிட்டுள்ளார். அந்த இறை பணியாளர்கள், தங்களது திருப்பணியை இடையூறு எதுவும் இல்லாமல் தொடர்ந்து மனநிறைவுடன் நிறைவேற்ற வேண்டும் என்ற

4. K K. Pillay - Sri Lanka and India (1975) p 80
5. *திருப்புல்லாணி.* A.R. 114/1903.

நல்ல நோக்கில் அந்த ஆணையை வெளியிட்டுள்ளார். ஆதலால், மன்னர் இந்த தான சாசனத்தை, மகாதர்ம சாசனம் (வரி 14) என்றும், இதனை மன்னரது வழியினர் அவசியம் மதித்து நடக்க வேண்டுமென்பதற்காகவே ''நம்மிட வம்சத்தில் உண்டான பேர்கள்'' (வரி. 12) எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இது சேதுபதி மன்னரது சாதாரண ஆணையாக இருந்தாலும், பக்தர்களது பக்திப்பரவச வளர்ச்சிக்குப் பயன்பட, திருக்கோயில் திருப்பணியாளர்களது தொண்டு சிறக்க, அவர்களது வாழ்க்கை நிலை நிறைவாக அமைய வேண்டும் என்ற பேருண்மை தான் இந்தப்பட்டயத்தில் பிரதி பலிக்கின்றது.

இந்தப் பட்டயம், வேதவித்தகர்களான அந்தணர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையாதலின், வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. குருக்கள், தீர்த்தம், புரோகிதம், சுவாமி பூஜை, சுயம்பாகம் பரிகாரம், சுவாமி தெரிசனம், சகலசாதி பரிஷைகள், சந்திராதித்ய சந்திரப்பிரவேசம், மகாதர்ம சாசனம் பரிபாலனம், கோடி சிவலிங்க பிரதிஷ்டை, கோடி அக்கிரகாரம் அகிதம், தோஷம், ஸஹிரண்ணிய ஸாதக தாராபூர்வம் சேதுஸ் நானம் என்பன அவை.

இந்தப் பட்டயத்தில் சேதுபதி மன்னர், தமது பெயரான ரகுநாதத் தேவர் என்பதுடன், சேது என்ற சொல்லையும் சேர்த்து இணைத்து சேதுபதி சேது ரகுநாதத் தேவரவர்கள் எனப் பணிவுடன் கைச்சாத்துகிட்டிருப்பது இராமேசுவரம் பால் அவருக்குள்ள ஈடு இணையற்ற பக்திப் பெருக்கைக் குறிப் பிடுவதாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் இராம-நாதபுரம் மன்னர் சேது ரகுநாதத் தேவர் எனவும் வழங்கப் பட்டார். இதனை உறுதி செய்வது போல, தேவகோட்டை கல்லுப்பட்டி கிராமத்திற்கு வடமேற்கே சேதுரகுநாத பட்டணம் என்ற சிற்றூர் இருந்து வருகிறது. இந்தப் பட்டயத்தை கீளக் கொடுமலூரில் இருக்கும் இலங்கை மீட்டாபிள்ளை மகன் தாண்ட வராயன் என்பவர் வரைந்துள்ளார். அவரது கையெழுத்துடன் ''ராயசம்'' என்ற சொல் காணப்படுவதில் இருந்து, மதுரை மன்னர்கள் பணியினைப் போல சேதுபதி மன்னர் பணியிலும் ''ராயசம்''. (செயலர்) என்ற பதவி இருந்தது தெரியவருகிறது கீழக் கொடுமலூர் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளது. இந்த குடியிருப்பு முழுவதும் தற்பொழுது அரிசனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். பிற இனத்தவர் யாரும் இப்பொழுது அங்கு இல்லை.

நல்ல நோக்கில் அந்த ஆணையை வெளியிட்டுள்ளார். ஆதலால், மன்னர் இந்த தான சாசனத்தை, மகாதர்ம சாசனம் (வரி 14) என்றும், இதனை மன்னரது வழியினர் அவசியம் மதித்து நடக்க வேண்டுமென்பதற்காகவே ''நம்மிட வம்சத்தில் உண்டான பேர்கள்'' (வரி. 12) எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இது சேதுபதி மன்னரது சாதாரண ஆணையாக இருந்தாலும், பக்தர்களது பக்திப்பரவச வளர்ச்சிக்குப் பயன்பட, திருக்கோயில் திருப்பணியாளர்களது தொண்டு சிறக்க, அவர்களது வாழ்க்கை நிலை நிறைவாக அமைய வேண்டும் என்ற பேருண்மை தான் இந்தப்பட்டயத்தில் பிரதி பலிக்கின்றது.

இந்தப் பட்டயம், வேதவித்தகர்களான அந்தணர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையாதலின், வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. குருக்கள், தீர்த்தம், புரோகிதம், சுவாமி பூஜை, சுயம்பாகம் பரிகாரம், சுவாமி தெரிசனம், சகலசாதி பரிஷைகள், சந்திராதித்ய சந்திரப்பிரவேசம், மகாதர்ம சாசனம் பரிபாலனம், கோடி சிவலிங்க பிரதிஷ்டை, கோடி அக்கிரகாரம் அகிதம், தோஷம், ஸஹிரண்ணிய ஸாதக தாராபூர்வம் சேதுஸ் நானம் என்பன அவை.

இந்தப் பட்டயத்தில் சேதுபதி மன்னர், தமது பெயரான ரகுநாதத் தேவர் என்பதுடன், சேது என்ற சொல்லையும் சேர்த்து இணைத்து சேதுபதி சேது ரகுநாதத் தேவரவர்கள் எனப் பணிவுடன் கைச்சாத்துகிட்டிருப்பது இராமேசுவரம் பால் அவருக்குள்ள ஈடு இணையற்ற பக்திப் பெருக்கைக் குறிப் பிடுவதாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் இராம-நாதபுரம் மன்னர் சேது ரகுநாதத் தேவர் எனவும் வழங்கப் பட்டார். இதனை உறுதி செய்வது போல, தேவகோட்டை கல்லுப்பட்டி கிராமத்திற்கு வடமேற்கே சேதுரகுநாத பட்டணம் என்ற சிற்றூர் இருந்து வருகிறது. இந்தப் பட்டயத்தை கீளக் கொடுமலூரில் இருக்கும் இலங்கை மீட்டாபிள்ளை மகன் தாண்ட வராயன் என்பவர் வரைந்துள்ளார். அவரது கையெழுத்துடன் ''ராயசம்'' என்ற சொல் காணப்படுவதில் இருந்து, மதுரை மன்னர்கள் பணியினைப் போல சேதுபதி மன்னர் பணியிலும் ''ராயசம்''. (செயலர்) என்ற பதவி இருந்தது தெரியவருகிறது கீழக் கொடுமலூர் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளது. இந்த குடியிருப்பு முழுவதும் தற்பொழுது அரிசனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். பிற இனத்தவர் யாரும் இப்பொழுது அங்கு இல்லை.

# செப்பேடு எண். 14

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாத்தம் 1588 இதின் மேல் செல்லாநின்ற யேவிளம்பி நாம சம்பச்சரத்து உத்தராய ணத்து யேமந்தருதுவில் சுக்லபட்சத்து பூறண அமாவா சையும் இந்து வாசரமும் சுபயோக சுபகறணமும் பெத்த சுபதினத்தில் சேதுக்கரையில் சிவகோத்திரத்தில் தேவை நகராதிபன்

2. சேதுமூலதுரந்தான் ராமனாதசுவாமி காரியதுரந்தரன் சிவபூசை துரந்தரன் பரறாசசேகரன் சந்திரசேகரன் பரறாசசிங்கம் பரறாசசேகரநிசகாறாச சேகரன்றாசசிங்கம் இரவிகுலசேகரன் இரவிமார்தாண்டன் இரவிவர்ம்மன் சொரிமுத்துவன்னியன் சூரியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்ட [லேசுவரன்]

3. பாசைக்குதப்புவராகியகண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடுகுடாத படமானங்காத துடராகிய கண்டன் மூவராகியகண்டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் வேதியர் காவலன் அரசறாவணறாமன் அடியார் வேளைக்காறன் பரதளவிபாடன் உரிகொலச்சுர [தனன்]

4. அந்தப் பிறகண்டன் சாடிக்காரகண்டன் சாமித்துரோகியள் மிண்டன் பஞ்சவற்ன்னறாய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கிய வய்யாளிராயன் இவுளிபாவடி மிதித்ததெண்டு வார்கண்டன் வீரவெம்பாமலை இளஞ்-சிங்கம் தளஞ்சிங்கம் பரமன்னியர் சிங்கம் சுரக்கயல் ஆத்துப் [பாச்சி]

5. கடலில்பாச்சி மதப்புலி அடக்கலம் காத்தான் தாலிக்குவேலி சத்திராயள் மிண்டன் வன்னிய ராட்டந்தவிள்த்தவன்

மேவலர்கோளரி மேவலர் வணங்கு மிருதாளினான் வீரமா கெம்பீரன் கீற்திப்பிரதாபன் பரிக்கு நகுலன் குடைக்-கரு [ணன்]

6. பரதநாடகபத்திப்பிறியன், கருணாவுதாரன் கருணா-கடாச்சன் முண்டணைய மெருவில் குண்டைவளைக்குனில் பொறித்தவன்திலதனுல் மடமாதர் மடலெளுது வரிசுமுகன் வீரலட்சுமி சம்பன்ன விசையலெட்சு [மீ]

7. காந்தன் கலையும் தெரியும் விற்பன்ன கந்தர்ப்பபுறபாணன் சத்தியவாண்மையாகும் அரிச்சந்திரன் சங்கீத சாயுச்சிய வித்தியாவினோதரன் வீரதண்டை சேமத்தலை விளங்கு மிருதாளினான் செய்துங்கராய வங்கு[ஷன்]

8. நாடுகலக்கிய வாகனபுருஷன் தொண்டித்துறை காவலன் துகவூர்கூத்தத்துகரத்தூரான குலோத்துங்க சோளநல்லூர் கீள்பாலவிரையாத கண்டனில் உடையனாயகன் ரவிகுல சேகரன் இரவிகுலசேகர தளவராயன் திரு[மலைச்]

9. சேதுபதிகாத்ததேவரவர்கள் புத்திரன் ரெகுநாத் திருமலைச் சேதுபதிகாத்த தேவரவர்கள் தானசாதன பட்டையம் தானசாதன பட்டையமானது கௌதம மொத்ததில் ஆசுலாயி சூத்தரதில் ரிக்ஸாகாபகரான சதாசிவபடர்புத்திர

10. இறாமீசுபரத்திலிருக்கும் சங்கரகுருக்களுக்கு தானசாசனம் பன்னிக்குடுத்தது ராசராச ஈசுபரி அம்மன் நவராத்திரை உட்சொபத்துக்கு நமக்குக் காப்புதரிச்சு

*இரண்டாம் பக்கம்*

11. தாமும் காப்புத்தரிச்சுக் கொண்டு நவராதிரை பத்துனாளை உட்சொபத்துக்கும் இராசராச ஈசுபரி அம்மனுக்கு பூசை பன்னி உட்சொபம் செய்து அதில் வருகிற ஊதிபமும் தாமே அனுபவிச்சு

12. க்கொண்டு தமக்கு காணியாட்சியாக தானம் பண்ணிக்குடுத் திருக்கிறபடியினாலே ஆதிசந்திராதித் த சந்திரப்பிறவேசம் வரைக்கும் புத்திர பவுத்திர பாரபரியந்தரம் நவராத்திரை உட்

13. சொபம்செயிது தாமெ அனுபவிச்சுக் கொள்வாராகவும் இந்த சமஸ்த்தா [ன]

14. த்தில் நம்மிட வம்மிசத்திலுண்டானவர்கள் இந்த தற்மத்தை பரிபாலனம் பண்ணிக்கொண்டு வருகிறவர்களுக்கு றாம தனுக்கோடிக் கரையிலேயும் ஆயிர சிவலிங்கப்பிற திட்டையும்

15. ஆயிரம் அக்கிறாகாரப்பிரதிட்டையும்கோடி கன்னிகா தானமுனாத்தொட்டுச் சொட்சமகாதானமு பண்ணின புண்ணியஅனுபவிச்சுக் கொள்வார்கள் இதற்கு அகிதம் நினைதவர்களுக்கு கெங்கைக் ககரையிலே காராம்பசுவை

16. கொன்றதோசமு செதுக் கரையிலே பிறாமணரைக் கொன்ற தோசத்திலேயும் மாதா பிதா குருவைக் கொன்ற தோசதிலேயும் போகக்கடவாராகவும் இப்படிக்கி சகிரன்னியோதககதாராபூருவமாக காணியாட்சியான தர்மசாதன [பட்டையமாக]

17. வும் பன்னிக் குடுத்தோம் சங்கரகுருக்களுக்கு ரருநாத திருமலைச் சேதுபதி காத்த தேவரவர்கள். இந்த தர்மசாதன பட்டயம் எழுதினேன் இராயசம் அளகப்பன் கையெழுத்து.

## செப்பேடு எண் 14

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | திருமலை சேதுபதி என்ற ரகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் சதாசிவபட்டர் புத்திரர் சங்கர குருக்கள். |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1580 ஏவிளம்பி ஆண்டு ஆடி மாதம் (கி.பி. 1658) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | இராமநாதபுரம் ராஜராஜேஸ்வரி அம்மன் நவராத்திரி உத்சவம் பூஜை செய்யும் உரிமைப்பட்டயம். |

இந்தச் செப்பேட்டில் சேதுபதி மன்னரது அறுபத்து ஒன்பது விருதுகள் வரிசையிட்டு கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மூன்று விருதுகளை ஓரிடத்தில் ஒன்றாக இணைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. அதாவது.

1. கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்.
2. பட்டமானங் காத்தான்.
3. துட்டராகிய கண்டன்.

என்ற மூன்று விருதுகளும் செப்பேட்டு வரி 3ல் ''கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாத, பட்டமானங்காத்த, துட்ட ராகிய கண்டன்'' என ஒரே விருதாக கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஏற்கனவே முந்தைய பட்டயங்களில் கொடுக்கப்பட்ட இரண்டு விருதுகள், சற்று மாற்றத்துடன் பொறிக்கப்பட்டுள்ளன. அதாவது, ''இவுளிபாவடி மிதித்து ஏறுவார் கண்டன் என்பது இவுளி பாவடி *மிதித்தெண்டு*வார் கண்டன் என்றும், சத்திய பாஷா

அரிச்சந்திரன் என்பது சத்திய வாண்மையாகும் அரிச்சந்திரன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த விருதுகளில் விஜயநகர மன்னர்களது விருதுகளான மகாமண்டலேசுவரன், பாசைக்குத் தப்புவராய கண்டன், கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான், உரிகோல் சுரதனன் என்ற நான்கு விருதுகளைத் தவிர ஏனைய விருதுகளுடன், சந்திரசேகரன், பரராச சேகர நிரகாருக சேகரன், இரவிமார்த்தண்டன், இரவி வர்மன், சூரியன், ஸ்வஸ்தி ஸ்ரீமான், சுரக்கயல், வீரமகாகெம் பீரன், பரதநாடக பத்திப்பிரியன், கருணாவுதாரன், கந்தர்ப்ப புரபாணன், நாடுகலக்கிய வாகன புருஷன், இரவிகுலசேகர தளவராயன் ஆகிய பதினான்கு புதிய விருதுகளும் இந்தப் பட்டயத்தில் உள்ளன. பொதுவாக மன்னரது, கொடை, வீரம் கலைகளில் ஈடுபாடு ஆகியவைகளையே இந்த விருதுகளும் குறிப்பனவாக உள்ளன. சுரக்கயல், கந்தர்ப்பபுரபாணன், என்ற விருதுகளுக்கும் பொருள் விளங்க வில்லை. ஆனால் நாடுகலக்கிய வாகன என்பது திருமலை சேதுபதி மன்னரது சிறந்த குதிரை யைக் குறிப்பதாக உள்ளது. பெரும்பாலும் அந்தக் குதிரை சிறந்த அரபு நாட்டுக் குதிரையாக இருத்தல் வேண்டும். பரஞ் சோதி முனிவர் குறிப்பிட்டுள்ள,

"..............................

... புரவியடி வைத்தால் ஒத்த
பந்தெனவு நின்றாலோ மலையெனவும்
ஒலித்தாலோ பகடு சீறும்
வெந்தறுகணரி யெனவும் வேகத்தாற்
காற்றெனவும் மிதிக்கும் கூத்தால்
சந்த நட மகளெனவும் நடக்கில் அரி
தன்று எனவும்..........[1]", சொல்லக்கூடிய

பரியாக இருக்க வேண்டும். அதனால், திருமலை சேதுபதி மன்னர் நாடுகலக்கிய செயல்களுக்கு அந்தக் குதிரை உறுதுணை யாக இருந்து இருக்க வேண்டும். இந்த மன்னரது முந்தை யோரான இரண்டாம் சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி (கி.பி. 1635-46) யின் மைத்துனரும் போகலூர் கோட்டைத் தளபதியுமான வன்னியத் தேவன். "நாடுகலக்கி" என்ற சிறந்த

1. பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற்புராணம் (1939) நரி பரியாக்கிய படலம் — பாடல் எண். 118.

குதிரையொன்றைக் கொண்டு இருந்ததாகவும் இராமேசுவரம் தீவுப்போரில், மதுரை மன்னரது படைகளையும், மதுரை தளபதி இராமப்பையனையும்; "நாடு கலக்கி என்னும் நல்ல தொரு வான்பரியைக் கொண்டு வரச்செய்து" கலக்கமுறச் செய்தார் என இராமப் பையன் அம்மானை பாடுகிறது.[2] இத் தகைய தொரு நல்லவான் பரியொன்றை வைத்து நாடுகளைக் கலக்கி வந்ததால், சேதுபதி மன்னருக்கு "நாடுகலக்கிய வாகன புருஷன்" என்ற விருது ஏற்பட்டு இருக்க வேண்டும்.

மேலும், இந்த மன்னர், பரதநாட்டியக் கலையில் பெரு விருப்புக் கொண்டு இருந்தார். பக்திபூர்வமான பாவனைகளைப் பாடல்களுடன் அபிநயத்துக் காட்டும் பொழுது, பார்ப்பவர் உள் ளத்தில் டரவசம் ஏற்படச் செய்வதுடன், அந்தப் நடிப்பிலும் பாடலிலும் நம்மை முழுமையாக ஈடுபடச் செய்யும் ஆற்றல் மிக்க அரியகலை பரதநாட்டியம். இந்த மன்னர் திருச்சுழியல் திருக்கோயில் விழாவில் வேடம் புனைந்து மிகச்சிறப்பாக பரத நாட்டியம் ஆடிய தாசி கலியாணிக்கு பாறைக்குளம் என்ற கிராமத்தை தானமாக வழங்கிய செய்தியும் உள்ளது.[3] ஆதலால் இந்த மன்னருக்கு "*பரதநாடகப் பக்திப்பிரியன்*" என்ற புதிய விருதும் இருந்ததை இந்தச் செப்பேட்டில் காண முடிகிறது.

இராமனாதபுரம் அரண்மனைக்குள் உள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் நவராத்திரி விழாவிற்கு இராமேசுவரம் சதாசிவ பட்டர் புத்திரன் சங்கர குருக்களை நியமனம் செய்தது சம்பந்தமான ஆணையைக் கொண்டது இந்தச் செப்பேடு. மைசூர் படைகளால் கி பி.1658ல் பேரபாயம் ஏற்பட்டு கோநகர் மதுரையும் மைசூர் படைகளிடம் சிக்கும் நிலை ஏற்பட்டது. மதுரை மன்னர் திருமலை நாயக்கர் வேண்டுகோளின்படி சேதுபதி மன்னர் தமது மறப்படையுடன் மதுரைச் சீமைக்கு விரைந்து சென்று, மைசூர்படைகளுடன் பொருதி அழித்ததன் நினைவாக திருமலைநாயக்கர், இந்த

2. இராமப்பையன் அம்மானை (1950) தஞ்சை சரசுவதி மகால் பதிப்பு - பக்கம் 54.

3. இராம. சமஸ்தான நிலமானிய வேலைக்கணக்கு - குறிப்பு

சேதுபதிமன்னருக்கு பலவாறு சிறப்புகள் செய்து பாராட்டியதுடன் பொன்னாலான ராஜராஜேசுவரி அம்மன் சிலையொன்றையும் அன்பளிப்பாக வழங்கினர்[4]. இராமநாதபுரம் அரண்மனைக்குள் கொற்றவைக்கு கோட்டம் ஒன்று அமைத்து அங்கு அந்த திருமேனியை வைத்து வழிபட்டதுடன், ஐப்பசி மாதம் தோறும் மதுரையில் நடப்பது போன்று நவராத்திரி விழாவும் நடத்தி வந்தார். இந்த விழா மறவர் சீமைக்குப் புதிய தாகையால், அதனை முறைப்படி நடத்தி வைப்பதற்காக இராமேசுவரத்தில் இருந்த சங்கர குருக்களைத் தேர்வு செய்து நியமனம் செய்தார்.

''ராசராசஈசுவரி அம்மன் நவராத்திரி உட்சொபத்துக்கு, நமக்கு காப்பு தரிச்சு, தாமும் காப்பு தரிச்சுக் கொண்டு நவராத்திரி பத்துனாளை உட்சொபத்துக்கும் இராச ராசாஈசுவரி அம்மனுக்கு பூஜை பண்ணி, உட்சொபம் செய்து அதில் வருகிற ஊதியமும் தாமே அனுபவிச்சுக் கொண்டு தமக்கு காணியாட்சி யாக நடந்து வரவேண்டியது,'' என்பது சேதுபதி மன்னரது ஆணை. இந்த ஆணை ஆதிசந்திராதித்த சந்திரப் பிரவேசம் வரை, புத்திர பவுத்திர பாரபரியந்தரம் வரை செல்லத்தக்கதாக இருக்க வேண்டுமென்பதும், சேதுபதி மன்னரது உள்ளக்கிடக்கை. அதற்காக, இந்த ஆணையை சேதுபதி மன்னர், மிகவும் புனித நாளான பூரண ஆடி அமாவாசை நாளன்று (கி.பி.1659ல்) சேதுக்கரையில், இந்தப்பட்டயத்தை எழுதச் செய்து கைச்சாத்து இட்டுள்ளார். ராயசம் அளகப்பன் என்பவர் இந்தப்பட்டயத்தை வரைந்துள்ளார். மன்னரது உத்திரவில் கண்ட காணியாட்சி (வரி 12) என்பது பரம்பரை உரிமை என்ற வழக்கில் பயன் படுத்தப்பட்டுள்ளது ''நவராத்திரி பத்துநாள் உட்சபம் (வரி11) எத்தகையது என்பதும் எவ்வித நிகழ்ச்சிகள் அப்பொழுது இடம் பெற்றன என்பதற்குமான விளக்கம் இல்லை. ஆனால் கி.பி- 1892ல் இராமநாதபுரம் அரண்மனையில் நடைபெற்ற நவராத்திரி விழாபற்றிய விளக்க குறிப்பு ஒன்றில் இருந்து[5] அதற்கு முந்தைய நூற்றாண்டுகளில் இராமநாதபுரம் அரண்மனையில் நடைபெற்ற நவராத்திரி விழா எப்படி இருந்து இருக்கும் என ஊகித்துக் கொள்ள முடிகிறது.

---

4. Sathianathaier. R History of Madura Nayaks. (1924) p.126
Seshadri. K Sethupathis of Ramnad (1972) p. 33
. Miniature Hindu Excelsior Series - English. (1892)

அந்த விழாவின் சில முக்கிய நிகழ்ச்சிகள்.

1. வாபன சடங்கு அல்லது மன்னர் சடங்குகளுக்கு தம்மை ஆயத்தம் செய்து கொள்ளுதல்.
2. மங்கல நீராட்டு
3. சேது பீடத்திற்கு பூஜை
4. கலசஸ்தாபனம் ராஜராஜேஸ்வரி திருமேனியும் மரகத பீடமும் விழாப் பந்தலுக்கு பவனியாக எடுத்து வருதல்.
5. காப்புக்கட்டு சடங்கு சேதுபதி மன்னர் வழிபாடு.
6. பிற்பகலில் பீரங்கி முழக்கம், பேரிகை அறைதல், தேவ தாசிகள், நாதசுவரவித்வான்கள் அணிவகுத்து வருதல், இசை, நாட்டியக்காரர், சிப்பாய்கள், அலுவலர்கள், விருந் தாளிகள், மன்னர் வருகை, வரவேற்பு, அவை மண்டபத் தில் மன்னர் கொலுவீற்று இருத்தல்.
7. சாயங்கால பூசை, இரவு பூசைகளில் மன்னர் கலந்து கொள்ளுதல், தூப, தீப, நைவேத்தியம், தாம்பூலம், கர்ப் பூர ஆரத்தி.
8. இரவில், மன்னர் கொலுவீற்று இருத்தல், கலைஞர்கள், புலவர்கள் கலைப்படைப்புகளை அரங்கேற்றுதல், மன்னர் பரிசுகளும் பாராட்டும் வழங்கல்.

இத்தகு நிகழ்ச்சிகள் ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடை பெற்ற பிறகு பத்தாவது நாள் அன்று பிற்பகலில் சேதுபதி மன்னர் அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையில் பவனிசென்று கோட்டைக்கு வெளியே ஒருகல் தொலைவில் உள்ள மகர் நோன்பு பொட்டலில், ஏனைய திருக்கோயில்களில் இருந்து அங்கு எழுந்தருளிய தெய்வத் திருமேனிகளை தரிசித்து விட்டு அம்பிகை ராஜராஜேஸ்வரியின் தொண்டனாக அம்புகளை நான்கு திசைகளிலும் செலுத்தி அல்லவைகள் ஓடி ஒளியும்படி செய்து வாணவேடிக்கைகளைக் கண்டு களித்து அரண்மனைக் குத் திரும்புவது வழக்கம். இரவு பத்தாவது நாள் கொலு தசரா திருவிழாவில் இறுதி நிகழ்ச்சியாக நடைபெறும். தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் இத்தகைய இராம

நாதபுரம் நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு மன்னரிடமிருந்து மாதவிப் பொன்னாடைபரிசு பெற்றதை தமது ''என் சரித்திரத்தில்'' வரைந்துள்ளார்.

இந்தக் கலைவிழா காலத்தின் கரந்து போன இராமநாதபுரம் அரண்மனை நிகழ்ச்சிகளில் ஒன்றாகி விட்டது. இத்தகைய சிறப்பான நவராத்திரி நிகழ்ச்சிகள் இப்பொழுது இல்லை. இராமேசுவரம் சங்கர குருக்களது ''புத்திர பவித்திர பாரம்பரிய சுவந்திரமும் இல்லை'. காரணம் ஆங்கில கம்பெனியாரின் ஆதிக்க வெறிக்கு நமது புனித பாரத நாட்டின் பண்பாடுகள், மரபுகளை பிரதிபலித்த சமூக அமைப்பும் சடங்குகளும் சீரழிந்து சிதைந்து போனதும் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக தன்னாட்சி அரசாகத்திகழ்ந்த இராமநாதபுரம் சீமை பெருமையையும் புகழையும் இழந்துவிடும் வண்ணம், பாரம்பரிய தன்னரசு ஜமீன்தாரியாக மாற்றப்பட்டதும் ஆகும்.

## செப்பேடு எண் 15

(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிய வாகன சகாப்தம் 1580 இதன் மேல் நின்ற விகாரி வருஷம் அற்பிசி மாசம் 6உ மங்கள வாரமும் பஞ்சமியும்
2. முலநட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ மது தேவநகரா திபன் சேது மூலராட்
3. சாதுரந்தரன் ராமநாதசாமி காரிய துரந்தரன் பரராச சேகரன் பரரரச
4. சிங்கம் கிரவிகுலரசகரன் இரவிமார்த்தாண்டன் சொரி முத்து வன்னியன்
5. ஸ்ரீமன்மகா மண்டலேசுரன் அரியதள விபாடன பாசைக்கு தப்புவார் கண்டன்
6. கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், பாண்டிய மண்டல சண்டப்
7. பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண பட்டணமும் கெசவேட்டை கொண்
டருளிய ராஜாதிராஜன் ராஜ பரமேஸ்வரன் ராஜமார்த் தாண்டன் ராஜ
8. மருளிய ராஜாதிராஜன் ராஜ ம்ரமேஸ்வரன் ராஜமார்த் தாண்டன் கம்பீர
9. கம்பீரன் பாதாள விபாடன் உரிகோல் சுரத்தானன் அந் தம்பிர கண்டன் சாமி,
10. துரோகியன் மிண்டன் இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம், மிகை மன்னர் சிங்கம்

---

ஆசிரியர் களப்பணியில் கண்டுபிடித்து படி எடுக்கப்பட்டது

11. ராஜசிங்கம், ஆத்தில் பாய்ச்சி, கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான்

12. தாலிக்குதேலி சத்துராதியள் மிண்டன் வன்னியராட்டந்த விள்த்தான்

13. மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்கூம் மிருதாளி னான் வீரகெம்பீரன்

14. அசுபதி, நரபதி, கசபதி, தனபதி அறிவுக்கு அகத்தியன், சொல்லுக்கு அரிச்

15. சந்திரன் வில்லுக்கு விஜயன், மல்லுக்கு வீமன், தாலிக்கு வேலி அன்னசந்திர

91. சோமன், செம்பிவரா நாடன் பூலோக தேவேந்திரன செங்கா விகுடையான்

17. ஸ்ரீமது ஹிரண்ய கெர்ப்பயாஜி முத்துரெகுநாத திருமலை சேதுபதி காத்த

18. தேவர் அவர்கள் இராமநாதபுரம் மாரிதுர்க்கை அம்மனுக்கு நித்திய

16. கட்டளை அபிஷேக நைவேதனம் திருமாலை திருவிளக்கு பரிவட்டம் சோடச

20. உபசாரமும் நடப்பிச்சு வரச்சொல்லி பூசாரிக்கு காணி ஆட்சியாக

21. கொடுத்து சேத்திர சுவாத்தியம் கிராமம், பூதானம் மகமை கடையில் கா

22. செடுப்பு உப்புமுதல் கற்பூரம் வரைக்கும் பட்டணத்திலே விளைகிற

23. பதார்த்தங்கள் என்னவென்றாலும் கையெடுப்பும் நம்மிட களஞ்சியத்தி

24. லே படிமுறை சிலவில் களத்திற்கு ஒருபடி நெல்லும் உக்கிராணத்தில் தினம்

25. இரண்டுபடி அரிசியும் கடை உக்கிராணத்தில் நித்திய கட்டளை ஒரு கோழி

26. யும் அஞ்சு முட்டையும் மங்கள வாரத்திற்கு ஒரு கிடாயும் சீமையில்

27. குடி ஒன்னுக்கு வருஷகட்டளை ஒரு பணமும் சாணார் குடி கள் பானை

28. இறக்கையில் கால்பணமும் துவசத்து இடைக் குடியளுக்கு திருவிளக்குக்கு

29. வருஷத்தில் அரைப்படி நெய்யும் வாணியக்குடிகளுக்கு வருஷத்தில் நல்லெண்ணெய்

30. ஒரு படியும் கடையில் பூசாரி கையினாலே ஒரு கை யெடுப்பும் சேதுராஜ்ய

31. த்தில் துலுக்கர்கள், சோனகர்கள், பட்டுநூல்காரர்கள், இளம்பஞ்சுக்காரன், வள்ளுவன்

32. பறையன் எந்த சாதியிலே தறி போட்டாலும் நெசவன்தறி ஒன்னுக்கு

33. பரிவட்டத்துக்கு ஒரு பணமும் பனையேறி சாணான்குடி ஒன்னுக்கு

34. திருப்பணி வேலைக்கு முப்பது பலம் கருப்புக் கட்டியும் பங்குனித் திருவிழாவுக்கு அரண்

35. மனையில் சொந்தமாக நம்மிட வசமிருக்கும் குடை மேல் செல்லியும்

36. உள்ளவரைக்கும் அன்பது பொன்னும் அன்பது கல நெல்லும் பட்டுப்புடவை

37. இரண்டும் தீபத்துக்கு தினம் ஒன்றும் பதக்கு எண்ணெயும் பத்துக் கோழியும்

38. அஞ்சு முட்டையும் இரண்டு கிடாயும் கொடுத்து திருவிழா நடப்பிவிக்கிறது.

39. செம்பிநாடு குறிச்சி நாடு அஞ்சு கோட்டை நாடு, குமாரணிபத்து குணசையன்

40. கோட்டை கீழக்கரை மேலக்கரை, கமுதசீமை, கிவகங்கைச் சீமை, அறந்தாங்கி,

41. பட்டுக்கோட்டை சீமை நம்மிட சீமையிலிருக்கப்பட்ட குடிகள் பதினென்

42. சாதியும் குடி ஒன்னுக்கு முத்திரைப் படியில் ஒரு படியும் தவசமும்

43. கடல் துறைமுகத்தில் வலைதோணி ஒன்னுக்கு பத்து சிப்பியும் உப்பளத்தில்

44. குடி ஒன்னுக்கு இரண்டு பணமும் வாங்கிக் கொள்கிறது சர்வமானிய தர்மசாதனம்

45. பண்ணிக் கொடுத்த கிராமமாவது அல்லிக் குளத்துக்கு எல்கையாவது

46. மேற்கு எல்கை நீலகண்டி கோவிலுக்கு சூரன்கோட்டை எல்கைப் புரவிற்கும் கிழக்கு

47. தெற்கு எல்கையாவது காட்டுப் பிள்ளையார் கோவிலுக்கும் சேதுமார்க்கத்

48. திற்கும் வடக்கு கிழக்கு எல்கையானது பேராகண்மாய் தெற்கு புரகரைக்கும்

49. மேற்கு இன்னான்கு எல்லைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை மாவிடை, மரவிடை, திட்டு திடல்

50. கீழ் நோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும் சர்வ மானியமும் சூரங்கோட்டை

51. சக்கரக் கோட்டை கிராமத்தில் கல விரைப்பாட்டுக்கு அரை மரக்கால்

52. நெல்லும் விழாக் காலத்துக்கு ஒன்னரைப்படி நெல்லும் சூரங்கோட்டையில் சர்வமானியம்

53. இருகல விரையடியும் சக்கரக் கோட்டையில் ரெகு நாத-மடைப் பாசனத்தில் சர்வ

54. மானியம் இருகல விரையடியும் சேவ தாபன தானமாக ஆண்டு கொள்வீராகவும்

55. இதில் யாதம் ஒருவன் விக்கினம் பண்ணினால் கெங்கை கரையிலேயும் சேதுக்கரையிலேயும்

56. காராம் பசுவைக் கொன்ற தோசத்திலேயும் பிரமகத்தி பண்ணின

57. தோசத்திலேயும் போகக் கடவாராகவும்.

## செப்பேடு எண் 15.

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | திருமலைரகுநாத சேதுபதி மன்னர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமநாதபுரம் மாரி துர்க்கை அம்மன் ஆலயம் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன் சகாத்தம் 1581 விகாரி ஆண்டு அர்ப்பசி மீ" (கி.பி. 1659) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மேலே கண்ட ஆலயநித்ய கட்டளைக்கு ஏற்பாடு |

இந்தச் செப்பேட்டை வழங்கிய திருமலை ரகுநாத சேதுபதியின் விருதாவளியாக ஐம்பது விருதுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் 1. பாண்டிய மண்டல பிரதிஷ்டன். 2. ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண பட்டணமும் கஜவேட்டை கண்டருளிய ரஜாதிராஜன். 3. அசுபதி 4. நரபதி 5. கஜபதி 6. தளபதி, 7. அறிவுக்கு அகத்தியன் 8. அன்னசத்திர-சோமன், 9. செம்பிவள நாட்டின் பூலோக தேவேந்திரன் 10. செங்காவிக்குடையான் என்பன பத்து புதிய விருதுகளாகும் சத்திய பாஷா அரிச்சந்திரன் என்று முந்தைய செப்பேடுகளில் குறிப்பிட்ட சொல், இந்தச் செப்பேட்டில் சொல்லுக்கு அரிச்சந்திரன் என்று குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மன்னர், இராமநாதபுரம் சீமையில், இராமேசுவரம் திருக்கோயிலுக்கு தலயாத்திரை செல்லும் பயணிகளுக்காக அன்ன சத்திரங்களை

முதன்முறையாக சேது மார்க்கத்தில் ஆங்காங்கு அமைத்த காரணத்தினால் ''அன்னசத்திர கோமான்'' என்ற விருதும் வழங்கப்பட்டுள்ளது.

திருமலை ரகுநாத சேதுபதி மன்னர் தமது ஆட்சிக் காலத்தில் கொற்றவையின் மூர்த்தங்களான மாரிதுர்க்கை, வனசங்கரி, மலைவளர்காதலி, ராஜராஜேஸ்வரி ஆகிய அம்மன்களுக்கு நான்கு ஆலயங்கள் அமைத்தார். இவை இராமநாதபுரம் கோட்டைக்கு கிழக்கே ராஜமாரியம்மன் ஆலயம், கோட்டைக்கு தெற்கே வனசங்கரி அம்மன் ஆலயம், கோட்டைக்கு உள்ளே ராஜராஜேஸ்வரி ஆலயம் இராமநாதபுரத்திற்கு தென்மேற்கே இருபத்து ஐந்து கல்தொலைவில் மேலச்சிறுபோதில் மலைவளர் காதலி அம்மன் ஆலயம் என்பன. பொதுவாக அம்மனுக்கென அமைக்கப்படும் ஆலயங்கள் வடக்கு நோக்கி இருப்பதுதான் வழக்கம். ஆனால், இராமநாதபுரத்தில் உள்ள மாரிதுர்க்கை ஆலயம் கிழக்கு நோக்கியும், வனசங்கரி ஆலயம் தெற்கு நோக்கியும், அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு ஆலயங்களும் இவ்விதம் நடைமுறைக்கு மாற்றமாக சேதுபதி மன்னர்களால் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான காரணங்கள் அறியத் தக்கதாக இல்லை. இராமநாதபுரத்திற்கு வடக்கே பெருங்களூர் கிராம ஊரணிக்கரை பிள்ளையார் கோவில் பிள்ளையாரும், நயினார் கோவில் கிராமத்தில் நாகலிங்க சுவாமியும் கிழக்கு திக்கிற்குப் பதில் மேற்கு நோக்கி வீற்று இருந்து காட்சியளிக்கின்றனர்.

இராமநாதபுரம் மாரிதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நித்ய கட்டளை மற்றும் திருவிழா சம்பந்தமாக மன்னர் வழங்கிய உரிமை ஆவணமாக இந்தச் செப்பேடு விளங்குகிறது. இந்தச் செப்பேட்டின் வரி 21 இதனை ''காணியாட்சியாக க்ஷேத்திர சுவாத்தியமாக பூசாரிக்கு கொடுத்தது'' எனச் சொல்லுகிறது. இந்தச் செப்பேட்டில் ஆலயத்தின் பூசாரி பெயர் குறிக்கப் படாததால், அந்தப் பணி பரம்பரை பாத்ய மற்றதும் அப் பொழுதைக்கப்பொழுது மன்னரால் நியமனம் செய்யப்படத் தக்கது என்பதும் தெரிகிறது. மேலும் இந்த ஆலயத்தில் அபி ஷேகம், நைவேதனம், திருமாலை, திருவிளக்கு, பரிவட்டம், சோடச உபச்சாரம் ஆகியவை நாள்தோறும் நடைபெற்று வந் ததும் அதற்காக குடிமக்களிடமிருந்தும் அரண்மனையில் இருந் தும் பலவகையான பொருள்கள் வழங்கப்பட்டதும் தெரிய

வருகிறது. மேலும் உப்பு முதல் கர்ப்பூரம் வரை பட்டணத்திலே விற்கப்படுகிற அனைத்துப் பொருட்களிலும் ஒரு பிடி அளவுப் பொருளை வலியப் பெறுவதற்கும், மன்னரது களஞ்சியத்தில் இருந்து கொடுக்கப்படுகிற செலவு நெல்லில் ஒரு கலத்திற்கு ஒருபடி நெல்லும்; அரண்மனை சேமிப்பில் (உக்கிராணம்) இருந்து நாள்தோறும் இரண்டுபடி அரிசியும், ஒரு கோழியும் அஞ்சு முட்டையும் திங்கட்கிழமை தோறும் ஒரு கிடாயும் பெற்றுக் கொள்வதற்கும் இந்தச் செப்பேட்டில் உரிமை அளிக்கப் பட்டுள்ளது. பட்டணம் என்பது இங்கு இராமநாதபுரம் பட்டணமாகும்.

அத்துடன், வருடக்கட்டளையாக, ஒவ்வொரு குடிமகனும் ஒரு பணமும், சாராயம், கள் இறக்குபவர்கள் பானை ஒன்றுக்கு கால்பணமும், இடைகுடியினர் திருவிளக்கிற்காக வருடத்தில் அரைப்படி நெய்யும், வாணியர்குடி வருடத்திற்கு ஒருபடி நல்ல எண்ணையும் துலுக்கர், சோனகர், பட்டு நூல்காரர், இளம் பஞ்சுக்காரர், வள்ளுவன், பறையன் ஆகியோர் நெசவுத் தறி போட்டால், தறிஒன்றுக்கு ஒரு பணமும், பனையேறி, சாணான்குடி ஒன்றிற்கு முப்பது பல கருக்கட்டியும் பெற்றுக் கொள்ளவும் இந்தச் செப்பேடு ஆலய பூசாரிக்கு உரிமை அளித்துள்ளது. மேலும் இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் பங்குனி திருவிழாவிற்காக, அரண்மனையில் இருந்து, குடை, ஐம்பது பொன், ஐம்பது கலநெல், பட்டுப்புடவை, தீபத்திற்கு பத்துப் படி எண்ணை, பத்துக் கோழி, அஞ்சுமுட்டை, இரண்டு கிடாயும் கொடுத்து திருவிழா நடத்தப்பட்டு வந்ததும் தெரிய வருகிறது. இவைதவிர மன்னருக்கு கட்டுப்பட்ட அனைத்துச் சீமைகளில் உள்ள பதினெண் சாதியினரும் குடி ஒன்றுக்கு ஒருபடி தவசமும் துறைமுகத்தில் வலைதோணி (மீன் பிடி தோணி) ஒன்றுக்கு இரண்டு பணமும் முத்துச்சிலாபத்தில் தோணி ஒன்றுக்கு பத்து முத்துச்சிப்பியும் உப்பளத்தில் குடி ஒன்றுக்கு இரண்டு பணமும் பெற்றுக் கொள்வதற்கும் இந்தச் செப்பேடு வகை செய்கிறது. சீமை துறைமுகம் என பெயர் குறிப்பிடாததால், இராமநாதபுரம் சீமையில் உள்ள அனைத்து துறைமுகங்களிலும் எனறு பொருள் கொள்ள வேண்டியதாக உள்ளது. அன்றைய நிலையில், பாம்பன், இராமேசுவரம், கீழக்கரை, தேவிபட்டினம், தொண்டி ஆகியவை சிறப்பான கடற்கரைகளாக விளங்கின.

இவைகளைத் தவிர, இந்தக் கோயிலுக்கு தருமசாதனமாக நிலங்களும் கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இராமநாத புரத்திற்கு வடமேற்கே உள்ள சூரன்கோட்டை கிராமத்தில் இருகல் விரையடி நிலமும், இராமநாதபுரத்திற்கு தென்கிழக்கே உள்ள சக்கரக்கோட்டை ரெகுநாதமடைப் பாசனத்தில் இருகல் விரையடி நிலமும், அல்லிக்குளம் கிராமம் முழுமையும் சர்வ மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது, தெரியவருகிறது. விரையடி என்பது விதைஅடி என்பதன் திரிபு, இந்த வட்டாரவழக்கு. இருகல் விரையடி என்பது ஒரு நூற்று என்பதுபடி விதை நெல்லை வித்திடக் கூடிய நஞ்சை நிலப்பரப்பு பதக்கு (பத்துப் படி) கையெடுப்பு (ஒருபிடி) காசெடுப்பு (காணிக்கைப்பணம்) உக்கிராணம் (சேமிப்பு அறை) நெசவன்தறி (நெசவுத்தறி) அன்பது (ஐம்பது) வலைதோணி (மீன் பிடிக்க உதவும் படகு) ஆகிய சொற்களும் இந்த வட்டாரத்திற்கே உரிய அரிய வழக்குகள் மேலும் இராமநாதபுரம் சீமையில் அப்பொழுது நெசவுத் தொழிலில் பட்டு நூல்காரர்கள் மட்டும் அல்லாமல். முஸ்லீம்கள் — (துலுக்கர், சோனகர்) இளம் பஞ்சுக்காரன், வள்ளுவன், பறையன் ஆகிய பிரிவினரும் ஈடுபட்டு இருந்தனர். என்பதையும் இந்தச் செப்பேட்டு மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. நெய்யும் தொழிலுக்கு நிகரான தொழில் அப்பொழுது இல்லை என்பதால் சகலபிரிவு மக்களும் இந்த தொழிலில் ஈடுபட்டு இருந்தனர். வடக்கே இருந்து மெதுவாக நகர்ந்து வந்து நாயக்க மன்னர் ஆட்சியில் மதுரையில் நிலையாகத் தங்கிய பட்டுநூல்காரர், பட்டையும், ஜரிகையையும் பயன்படுத்தி விலை உயர்ந்த சிறந்த துணிகளை நெய்து வந்தனர். முஸ்லீம்களது நெசவில் ''முறி'' என்ற வகைத்துணியையும், பறையர் முதலானோர் கம்பளி, போன்ற முரட்டுத்துணி வகைகளையும் அப்பொழுது தயாரித்து வந்தனர். மதுரையைப் பொறுத்த வகையில் பட்டுநூல்காரர்கள்- மதுரை கோட்டைக்கு வெளியே கிழக்கே குடியேறினர்.

முஸ்லீம்கள் கோட்டைக்குள் தென்மேற்குப் பகுதியில் குடியேறிய மூத்த குடிகள். இராமநாதபுரம் கோட்டையைப் பொறுத்தவரையில் மூத்த குடிகள் பட்டுநூல்காரர், கோட்டைக் குள் தென்மேற்குப் பகுதியில் குடியேறினர் பிந்தைய குடிகளான முஸ்லீம்கள் இராமநாதபுரம் கோட்டைக்கு வெளியே கிழக்குப் பகுதியில் குடியேறியுள்ளனர். இவைகளை ஒத்திட்டுப் பார்க்கும்

பொழுது இந்த இரு இனத்து மக்களிடமும் கிழக்கு, தென் மேற்கு திக்குகளுக்கு ஒரு வகையான சிறப்பு இருப்பது போலத் தெரிகிறது.

முகத்தல் அளவைக் கலன்களுக்கு அரசு முத்திரையிட்டு சரியான அளவைக் கலன்களை மக்களிடையே பயன்படுத்தும் வழக்கம் அப்பொழுதும் இருந்தது என்பதை ''முத்திரைப்படி'' எனற சொல் தெரிவிக்கிறது. இவ்விதம் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைந்திருந்த ''சேது ராஜ்ய(ம்)''த்தின் எல்கைகள், சமூக அமைப்பு, தொழில்கள், அம்மன் வழிபாடு பற்றிய தகவல்களைத் தெரிவிக்கின்ற அரிய செப்பேடாக இது அமைந்துள்ளது.

## எண் செப்பேடு 16

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1582 மேல்ச் செல்லா நின்ற சார்வரி நாம ச[ம்வ]
2. த்சரத்து உத்தராயணத்து மாசி மாசத்து அபர பட்சத்து சதுற்தெசியும் ஆதித்ய
3. வாரமும் அவிட்ட நட்சத்திரமும் சிவநாம யோகமும் பெற்ற புண்ணிய காலத்து திருவாவடுது [றை]
4. ற அம்பலவாண பண்டாரம் அவர்களுக்கு தேவை நகரா திபன் சேது மூல ரட்சா துரந்தரன்
5. இராமநாதசுவாமி பறுவதவற்தனியம்மை காரிய துரந் தரன் சுப்பிரமணிய பாதாரவிந்த சே
6. சவிதன் பரராச சிங்கம் வரராச சூரியன் பரராச சேகரன் இரவிகுல சேகரன் சொரிமுத்து
7. வன்னியன் துட்ட ராயிர கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்துரோகியள் மிண்
8. டன் அந்தம்பர கண்டன் அடியார் வேளைக்காறன் அரசராவணராமன் பஞ்சத்து மாரி ப
9. ணுக்குவார் கண்டன் பட்டமானங் காத்தான் பட்டம் பரம் படித்தான் தாலிக்கு வேலி ஐவா
10. ய்ப்புலி இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் வீரவெண்பா மாலை வைகை வளநாடன் பரதள விபா

---

திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை,
அமைப்பு: 34. செ.மீ. × 18 செ.மீ.
படி எடுத்து வழங்கியவர் புலவர். திரு செ. ராஜு, தஞ்சாவூர்

11. டன் பஞ்சவன்ன ராய ராவுத்தன் புவனேக வீரன் வேதியர் காவலன் கொட்ட மடக்கி மை

12. வய்யாளி நாராயணன் இவுளி பாவடி மி[தி]த் தேறுவார் கண்டன் பகைமன்னர் சிங்கம் ஆத்தில்ப் பாச்சி

13. கடலிற்பாச்சி சத்துருக்கள் மிண்டன் மேவலர் கோளரி வீர கெ[ம்]பீரன் கீர்த்திப் பிரதாபன் கபட நாட

14. க சூத்திரப் பிரதாபன் பத்திமுத்திப் பிரியன் வீரலட்சுமி விசைய லட்சுமி பாக்கிய லட்சுமி காந்தன் சறபன்ன ப

15. ரஷா விச்சணன் சகல குண சாம்பன்னன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன் திருமலை நரேந்திரன் மெச்சிய சாமித்துரோ

16. கியள் மிண்டன் வீரை வள நாடன் தொண்டியந்துறை காவலன் அடைக்கலங் காத்தான் வன்னியரா

17. ட்டந் தவிழ்த்தான் மூவராய கண்டண் சாமித்துரோக வெண்டைய காவலன் வீர தண்டை சேம

18. த்தலை விளங்கிய தாளினான் துரை ராயன் செயதுங்க ராயன் ... யிபனான துகவூர்க் கூற்றத்துக் கரத்தா

19. ரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் தளவாய்ச் சே

20. துபதி புத்திரன் ஸ்ரீ திருமலைய சேதுபதி ரகுநாதத் தேவர் கத்தாக்கள் திருமலை நாயக்கரைய்ய

21. னவர்களுக்கும் தளவாய்ச் சேதுபதி காத்த தேவரவர்களுக்கும் எங்கள் மாதா பிதாவினுடை

22. ய வற்கத்துக்கும் புண்ணியமாக தற்ம சாதனப்பட்டயங் கொடுத்தபடி சுவாமி சிதம்பரேசு

23. ர சுவாமியார் சன்னதியிலே நித்தியம் மாயேசுர பூசை நடக்கவேணுமென்று மடப்புறம

24. ாகக் கட்டளையிட்டது முத்தத்து நாட்டுச்சேர்வையில் கட்டியேரி கங்கணி தேர்போக்கி

25. நாட்டுச் சேர்வையில் நாஞ்சிவயல் அருகாதங்குடிச் சேர்வையில் நாணாக்குடி இந்த நாலே

26. ந்தலும் சுருபம் பண்ணிக் கொள்ளச் சொல்லிக் கட்டளை யிட்டபடியினாலே நாலேந்

27. தலும் சுருபம் பண்ணிக் கண்டது [கமீ] சுவாமி சன்னதி யிலே பண்டார மயேசுர பூசை நம்

28. முடைய மயேசுர பூசையாகச் சந்திராதித்ய வரையும் நடத்திக் கொண்டு நாலேந்தலும்

28. அனுபவித்துக் கொள்ளவும் இந்த ஏந்தலுகளுக்கு பளவரி முதலாயுள்ள சகல பலவரியளும்

30. ஆள் அமஞ்சி உலுப்பை ஊழிய முதலானதும் வேண்டா மென்று சறுவ மானியமாக

31. க் கட்டளையிட்டோம் ஆகையினாலே நம்முடைய ஆதியீன பாரம்பரையாக உள்ளெ (த)

இரண்டாம் பக்கம்

32. இந்தத் தற்ம சாதனப் பட்டயப் படிக்கு ஒரு சில்லரை யளும் வராமல் இந்தப் புண்

33. ணியத்தை பரிபாலனம் செய்து நடத்திவரக் கடவராகவும் இந்தத் தற்மத்தை யாதாமொரு

34. வர் பரிபாலனம் செய்து நடத்தின பேர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக்கரையிலும் ஆ

35. யிரம் கபிலைப் பசுவும் ஆயிரம் பிரம்மப் பிரதிட்டை யும் அனேக கோடி பூதான கன்னிக

36. ா தானமும் அனேக சிவலிங்கப் பிரதிட்டையும் அநேக சிவத்தலங்களிலே அன்னதா

37. னங்கள் பண்ணின பலங்களையும் பெற்று மகாராசக் களாக இருக்கக் கடவாராகவும். இந்த

38. தற்மத்தின் பெருமை சிவஞானச் செயலுடையோர் கையில்த் தானமதில பிளவேசெய்தி

39. டினும் நிலமலைபோற் றிகழ்ந்து பவமாயக் கடலிலமுந் தாதவகை யெடுத்துப் பரபோகந்து

40. ய்ப்பித்துப் பாசத்தை யறுத்துத் தவமாரும் பிறப்- பொன்றிற் சாரப் பண்ணிச் சரிதைகிரிய

41. ா யோகந் தன்னிலுஞ்சாராமல் நவமாரும் தத்துவ ஞானத்
தை நல்கி நாதனடிக் கமலங்

42. கள் நணுகுவிக்குந் தானே இந்தத் தற்மத்துக்கு
யாதொருத்தர் அகிதம் செய்தவர்கள் கெங்கை

43. க் கரையிலும் சேதுக் கரையிலும் காராம் பசுவையும்
பிராமணரையும் குருவையும் மாதாபிதா

44. வையும் கொன்ற தோஷத்திலேயும் அனேக சிவத்தலங்
களிலே சிவத்துரோகம் பண்ணின நர

45. கத்திலேயும் போகக் கடவராகவும் இப்படிக்கு ஸ்ரீ
திருமலைய சேதுபதி ரகுநாத தேவர் திரு [வா]

46. டுதுறை அம்பலவாண பண்டாரம் அவர்களுக்குத் தாம்பிர
சாதனம் கொடுத்தோம் இப்படிக்கு

47. நாணாக்குடிக்குப் பதில் நாட்டி சேரியைக் கட்டளையிட்
டோம் உ

48. ஸ்ரீ சுப்பிரமணிய திருமலைய சேதுபதி ரகுநாதன்

49. ஸ்வஸ்திரஸ்தூ தாந பாலந யோமத்யே தாநா ஸ்ரயோநு
பாலநம் தாநாத் ஸ்வர்க்க

50. மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பிதம்

51. குருநமசிவாயம் - தாஸன்

# செப்பேடு எண் 16

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர்
2. செப்பேடு பெற்றவர் : திருவாவடுதுறை அம்பலவாண பண்டாரம்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1582 சார்வரி ஆண்டு மாசி மீ"
4. செப்பேட்டின் பொருள் : மயேசுர பூஜை நிகழ்த்த மடப்புரமாக நிலக்கொடை.

இந்தச் செப்பேட்டில் திருமலை சேதுபதி மன்னருக்கான ஐம்பத்து மூன்று விருதுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த மன்னரது முந்தையச் செப்பேட்டில் கண்டுள்ள விருதாவளியை விடக் கூடுதலாக பதினோரு புதிய விருதுகள் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

1. இராமநாதசுவாமி பருவதவர்த்தினி காரிய துரந்தரன்
2. சுப்பிரமணிய பாதாரவிந்த சேவிதன்
3. பஞ்சத்து மாரி
4. பட்டம் பரம்படித்தான்
5. ஐவாய் புலி
6. கபடநாடக சூத்திரப் பிரதாபன்
7. பக்திமுத்திப் பிரியன்
8. திருமலை நரேந்திரன் மெச்சிய சாமித்துரோகியள் மிண்டன்
9. சறபன்ன பாஷா விச்சனன்
10. சகலகுண சம்பண்ணன்
11. வீரை வளநாடான்

எந்த நிகழ்ச்சிகளை ஆதாரமாகக்கொண்டு, இந்த விருதுகள் மன்னருக்கு வழங்கப்பட்டன என்பது தெரியவில்லை. குறிப்பாக பட்டம் பரம்படித்தான், ஐவாய்புலி, கபடநாக சூத்திர பிரதாபன், சறபன்ன பாஷா விச்சானன் என்ற விருதுகள் சில குறிப்பிட்ட காரணங்களினால் வழங்கப்பட்டு இருக்க வேண்டும். ஏனையவை மன்னரது இறையுணர்வு, சமய ஈடுபாடு, கொடை ஆகிய பண்புகளின் பொதுவிளக்கமாகப் புனையப்பட்டு இருக்க வேண்டும்.

திருவாவடுதுறை திருக்கோயிலில் சிதம்பர ஈசுவரர் சுவாமி சன்னதியில் நாள்தோறும் மயேசுர பூசை நடத்தி வைப்பதற்கு ஏதுவாக திருமலை ரகுநாத சேதுபதி மன்னர் சில கிராமங்களை மடப்புரமாக, திருவாவடுதுறை ஆதினத்தலைவர் அம்பலவாண பண்டாரத்திடம் வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கிறது. மேலும், இந்த தர்மம், ''கர்த்தாக்கள் திருமலை நாயக்கரைய்ய னவர்களுக்கும், தளவாய் சேதுபதி காத்த தேவரவர்களுக்கும், எங்கள, மாதா, பிதாவினுடைய வர்க்கத்திற்கும் புண்ணிய மாக...'' (வரிகள் 20-22) ஏற்படுத்தப் பட்டதாகவும் தெரிவிக் கின்றது. மதுரை மண்ணுக்கு மைசூர் படைகளினால் ஏற்பட இருந்த ஆபத்தை அகற்றி காலத்தாற்செய்த உதவியைக் கரு திய திருமலை நாயக்க மன்னர், சேதுபதி மன்னரைப் பலவாறு பாராட்டி பரிசளித்த பான்மையை உள்ளி மகிழ்ந்த திருமலை சேதுபதி மன்னர் இந்த தர்மத்தை அந்த நிகழ்ச்சிக்கு அடுத்த ஓராண்டில் தமது மூதாதையர் பெயரில் ஏற்படுத்தும் பொழுது திருமலை நாயக்கரையும் அந்த தருமத்தில் இணைத்து வழங்கி யிருப்பது குறிப்பிடத்தக்க செயலாகும்.

இந்த, தருமத்திற்கு உடலாக வழங்கியுள்ள நிலப்பரப்பு, இராமநாதபுரம் மன்னரது சீமையின் பதினேழு மாகாணங்களில் ஒன்றான குத்தகை நாடு என வழங்கப்பட்ட அனுமந்தக்குடி மாகாணத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. இது முந்தைய பாண்டி நாட்டு மிழலைக் கூற்றத்தின் தென்மேற்குப்பகுதி யாகும். சேதுபதிகளது ஆட்சியில் இந்தப்பகுதி முத்தத்து நாடு என வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் இந்த நிலப்பிரிவு சேர்வை என்ற சிறு பகுதியாகவும் பிரிக்கப்பட்டு இருந்ததும்

தெரியவருகிறது. இதில் நாஞ்சிவயல், நாணாக்குடி ஆகிய ஊர்களில் உள்ள நான்கு ஏந்தல்களின் நீர்பாயும் நிலங்களும், அவைகளின் வருவாயான பலவரிகளும் இந்த தர்மம் ''சந்திராதித்யர்'' வரை நடைபெற ஏதுவாக, இந்த வரிகளையும், மற்றும் ஆன் அமஞ்சி, உலுப்பை, ஊழியம் ஆகியவைகளையும் தமக்குசெலுத்தப்படவேண்டியதில்லை. என்று இறையிலியாக இந்த நிலக்கொடையினை மன்னர் ஆணையிட்டுள்ளார். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் (வரி 30) என்பது சம்பந்தப்பட்ட ஊர்களில் இருந்து குறிப்பிட்ட காலங்களில் மன்னரது சேவைக்கு பெறப்பட வேண்டிய கூலி ஆள். அமஞ்சி என்பது மன்னரது சீமையில் உள்ள நஞ்சை நில விளைச்சலுக்காக செலுத்த வேண்டியது. அமனி என்பது மேல்வாரம். உலுப்பை. ஊழியம் என்பன மன்னரது முடிசூட்டுவிழா போன்ற மங்கல நாட்களில் குடிகள் மன்னருக்கு செலுத்த வேண்டிய அன்பளிப்புகள் ஆகும். இவையனைத்தும் மறவர் சீமைக்கு மட்டும் பொருந்துவனவாகும்.

மகேசுவர பூசை என்பது மயேசுர பூசை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. சைவசித்தாந்த தத்துவங்களில் ஒன்றான சதாசிவமூர்த்தி, பஞ்ச கிருத்தியங்களைத் தமதுள்ளத்தில் அமைத்து பக்த கோடிகளை அனுக்கிரகிக்கும் அவதாரப்பாங்கு-மகேசுரம். அப்பொழுது சிவன், வெண்ணிற முடையவராய், அரவப்பூசை நூல் அணிந்து, திருக்கரங்களில், வாள், சூலம், பாணம், ஜபமாலை, கமண்டலம், அபயம், வரதம், பதுமம் ஆகியவை-களைத் தாங்கி காட்சியளிப்பார் என்று கருதப்படுகிறது[1]. இத்தகைய திருமேனி திருமுன்னர் பாவாடை விரித்து, அன்னம் படைத்து பூசையிட்டு, அதனை அன்பர்களுக்கு வினியோகித்து தாமும் உண்டுகளிக்கும் நிகழ்ச்சி மகேசுர பூஜை எனப்படும். திருக்கோயில்கள் இத்தகைய அன்னம் படைத்து ஆன்ம திருப்தி அடைவதுடன் குடிமக்களது பகிப்பிணியை நீக்கும் இந்த அறச்செயல் நடத்துவதற்காக சோழர்களும் பாண்டியர்களும் தங்களது ஆட்சியில் ''சந்தி'' என்ற நிவந்தங்களை ஆங்காங்கு திருக்கோயில்களில் ஏற்படுத்தி இருந்தனர் என்பது ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

1. சிங்கார வேலு முதலியார் - அ. அபிதான சிந்தாமணி (1912) பக்கம் 1282

தெரியவருகிறது. இதில் நாஞ்சிவயல், நாணாக்குடி ஆகிய ஊர்களில் உள்ள நான்கு ஏந்தல்களின் நீர்பாயும் நிலங்களும், அவைகளின் வருவாயான பலவரிகளும் இந்த தர்மம் ''சந்திராதித்யர்'' வரை நடைபெற ஏதுவாக, இந்த வரிகளையும், மற்றும் ஆன் அமஞ்சி, உலுப்பை, ஊழியம் ஆகியவைகளையும் தமக்குசெலுத்தப்படவேண்டியதில்லை. என்று இறையிலியாக இந்த நிலக்கொடையினை மன்னர் ஆணையிட்டுள்ளார். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் (வரி 30) என்பது சம்பந்தப்பட்ட ஊர்களில் இருந்து குறிப்பிட்ட காலங்களில் மன்னரது சேவைக்கு பெறப்பட வேண்டிய கூலி ஆள். அமஞ்சி என்பது மன்னரது சீமையில் உள்ள நஞ்சை நில விளைச்சலுக்காக செலுத்த வேண்டியது. அமனி என்பது மேல்வாரம். உலுப்பை. ஊழியம் என்பன மன்னரது முடிசூட்டுவிழா போன்ற மங்கல நாட்களில் குடிகள் மன்னருக்கு செலுத்த வேண்டிய அன்பளிப்புகள் ஆகும். இவையனைத்தும் மறவர் சீமைக்கு மட்டும் பொருந்துவனவாகும்.

மகேசுவர பூசை என்பது மயேசுர பூசை எனக்குறிப்பிடப் பட்டுள்ளது. சைவசித்தாந்த தத்துவங்களில் ஒன்றான சதா சிவமூர்த்தி, பஞ்ச கிருத்தியங்களைத் தமதுள்ளத்தில் அமைத்து பக்த கோடிகளை அனுக்கிரகிக்கும் அவதாரப்பாங்கு-மகேசுரம். அப்பொழுது சிவன், வெண்ணிற முடையவராய், அரவப்பூசை நூல் அணிந்து, திருக்கரங்களில், வாள், சூலம், பாணம், ஜபமாலை, கமண்டலம், அபயம், வரதம், பதுமம் ஆகியவை-களைத் தாங்கி காட்சியளிப்பார் என்று கருதப்படுகிறது[1]. இத்தகைய திருமேனி திருமுன்னர் பாவாடை விரித்து, அன்னம் படைத்து பூசையிட்டு, அதனை அன்பர்களுக்கு வினியோகித்து தாமும் உண்டுகளிக்கும் நிகழ்ச்சி மகேசுர பூஜை எனப்படும். திருக்கோயில்கள் இத்தகைய அன்னம் படைத்து ஆன்ம திருப்தி அடைவதுடன் குடிமக்களது பகிப்பிணியை நீக்கும் இந்த அறச் செயல் நடத்துவதற்காக சோழர்களும் பாண்டியர்களும் தங்களது ஆட்சியில் ''சந்தி'' என்ற நிவந்தங்களை ஆங்காங்கு திருக் கோயில்களில் ஏற்படுத்தி இருந்தனர் என்பது ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

1. சிங்கார வேலு முதலியார் - அ. அபிதான சிந்தாமணி (1912) பக்கம் 1282

இந்த தருமம் என்றென்றும் நீடித்து நடக்க வேண்டும் என்ற மன்னரது உள்ளக்கிடக்கை "நம்முடைய ஆதீன பாரம் பரையாக உள்ள .... இந்த தர்ம சாதனப் பட்டயப்படிக்கு ஒரு சில்லறையளும் வாராமல் இத்தப் புண்ணியத்தை நடத்திவரக் கடவராகவும்".... (வரிகள் 31-33) "அனேக சிவத்தலங்களிலே அன்னதானங்கள் பண்ணின பலங்களையும் பெற்று மகாராசாக் களாக இருக்கக் கடவாராகவும்" (வரிகள் (36-37) என்ற தொடர்களிலும் புலப்படுகின்றது. மேலும், இந்த தருமத்தை வலியுறுத்த இந்தச் செப்பேட்டின் இரண்டாவது பக்கத்தில் "சிவஞானச் செயலுடையார் கையில்....." என்ற செய்யுளும் மேற்கோளாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டில் இருந்து இன்னொரு செய்தியும் தெரியவருகிறது. சேதுபதி மன்னர் இந்தச் செப்பேட்டை நிறைவு செய்து கையெழுத்திட்ட பின்னர், இந்த தருமத்திற்கு வழங்கப்பட்ட கிராமங்களில் நாணக்குடிக்குப்பதில் நாட்டிசேரியை வழங்குதல் நல்லது என மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், அந்த மாற்றத்தை மீண்டும் இதே செப்சேட்டில் தொடர்ந்து பதிவு செய்து (வரி 47) மீண்டும் சேதுபதி மன்னர் கையெழுத் திட்டு வழங்கி உள்ளார். செப்பேடுகளில் காணப்பெறாத புதுமை இந்த நில மாற்றப்பதிவு மேலும் சேதுபதி மன்னர் முதலில் (வரி 45) "திருமலை சேதுபதி ரகுநாதத் தேவர்" எனக் கைச்சாத்திட்ட பின்னர் ஊர் மாற்றத்தை ஒப்புதல் செய்த பொழுது *ஸ்ரீ சுப்பிர மணிய திருமலைய சேதுபதி ரகுநாதன்"* எனப் பொறித்திருப்பதும் (வரி 48) மற்றுமொரு புதுமையாகத் தோன்றுவதுடன், மன்னருக்கு உள்ள விருதாவளிகள் ஒன்றான "சுப்பிரமணிய பாதார விந்த சேவிதன்" (வரிகள் 5-6) என்ற விருதினை உறுதிபடுத்துவதாகவும் உள்ளது.

திருவாவடுதுறை ஆதினகர்த்தாக்கள், முன்னர் "பண் டாரம்" என்று மட்டும் நல்லதமிழில் வழங்கப்பட்டனர். என்ற செய்தியினை செப்பேட்டுவரிகள் 4, 46 தெரிவிக்கின்றன. ஆதீன கர்த்தர் அல்லது சந்நிதானம் என்பது வடசொல். தமிழகத்தில் உள்ள தொன்மையான பதினெட்டு சுத்த சைவ ஆதினங்களில் திருவாவடுதுறை முதன்மையானது. இந்தச் செப்பேட்டினைப்

பெற்ற ஆதினகர்த்தர். அம்பலவாண பண்டாரம், சித்தர் சிவப் பிரகாசரில் இருந்து தொடங்குகின்ற குரு பரம்பரையில் பதின் மூன்றாமவர் எனக் கருதப்படுகிறது.[2]

செப்பேட்டின் வரி 25ல் கபிலைப்பசு பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. கபில நிறமுள்ள பசு என்ற பொருளில் மட்டுமல் லாது, இது தெய்வப்பசு என்பதனையும் இந்தச்சொல் குறிப்ப தாக உள்ளது. பிரமதேவர் இந்தப்பசுவை பூமியில் உள்ள அனைத்து புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டும், அனைத்து புனிதப் பொருள்களையும் கொண்டு படைத்தார் என்பது ஐதிகம் இந்தப் பசுக்கள் பத்து வகைப்படும் என்பதும், இவைகளின் பால், தயிர், நெய், கோமயம், கோசலம், கோரோசனை அனைத்தும் தேவபூசைக்கு பயன்படுவது மட்டுமல்லாமல்-இவை களின் உடல் முழுவதும் தேவர்களுக்கும் மும்மூர்த்திகளும் உறைவிடமாகும் புனிதம் பெற்றவை. என்ற காரணங்களி னால் ''பசு'' என்று மட்டுமல்லாமல், ''கலைப்பசு'' என இங்கு பொறிக்கப்பட்டுள்ளது.

வரி 26ல் ''சுருபம்'' பண்ணிக் கொள்ள வேண்டியது என்ற தொடரில் சுருபம் என்பது வடசொல். சொந்தமாக்கிக் கொள்ளுதல் அல்லது கைப்பற்றிக் கொள்ளுதல் என்ற பொரு ளில் வந்துள்ளது. மேலும் இந்தச் செப்பேட்டில், மாதாபிதா வர்க்கத்திற்கு புண்ணியமாக (வரி 21, 22) சன்னதி (வரி 23) பரிபாலனம் (வரி 33) பிரம்மப்பிரதிஷ்டை (வரி 35) பூதானம் (35) கன்னிகா தானம் (வரி 36) சிவலிங்கப் பிரதிட்டை (வரி 36) அன்னதானம் (வரி 37) சிவத்துரோகம் (வரி 44) என்ற வட சொற்களும் பயன்படுத்தப்பட்டு இருப்பதுடன் வரிகளில் 49-50, வடமொழிச்சுலோகம் ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது.

2. சிங்காரவேலு முதலியார் — ஆ. அபிதான்சிந்தாமணி (1912, பதிப்பு) பக்கம் 338

## செப்பேடு எண். 17

**(நகல்)**

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1582 மேல் செல்லா நின்ற சார்வரி நாம சம்வத்சரத்து உத்தரா
2. யணத்து மாசி மாசத்து அபர பட்சத்துத் தசமியும் ஆதித்ய வாரமும் அவிட்ட நட்சத்திரமும் சிவநா
3. ம யோகமும் பெற்ற புண்ய காலத்து திருப்பெருந்துறையில் ஆவுடையப் பரம சுவாமியார்க்கு உஷைச் கா
4. ல பூசைக் கட்டளை நடத்தும் பரதேசி முத்திரையான அம்பலத்தாடும் பண்டாரம் அவர்களுக்கு சே
5. தவை நகராதிபன் சேது மூலா ரட்சா துரந்தரன் இராம நாத சுவாமி பறுவத வத்தனியம்மை காரிய து
6. ரந்தரன் சுப்பிரமணிய பாதார விந்த சேவிதன் பரரா[ச] சிங்கம் பரராச சூரியன் பரராச சேகரன் இரவி
7. குல சேகரன் சொரிமுத்து வன்னியன் துட்ட ராயிர கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்துரோ
8. கியள் மிண்டன் அந்தம் பர கண்டன் அடியார் வேளைக் காறன் அரச ராவண ராமன் பஞ்சத்து மாரீ/பனு
9. க்குவார் கண்டன் பட்டமானங் காத்தான் பட்டம் பரம் படித்தான் தாலிக்கு வேலி ஐவா

---

திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை

அமைப்பு : 40 செ.மீ. × 9 செ.மீ.

படி எடுத்து உதவியர் : புலவர். திரு.செ. ராஜு, தஞ்சை.

10. ய்ப் புலி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் வீரவெண்பா மாலை
வைகை வளநாடன் பர த(ா)ள விபாடன் பஞ்சவன்னர

11. ாய ராவுத்தன் புவனேக வீரன் வேதியர் காவலன்
கொட்டமடக்கி வய்யாளி நாராயண

12. ன் இவ்வுளி பாவடி மிதித்தேற்றுவார் கண்டன் பகை
மன்னர் சிங்கம் ஆத்தில் பாச்சி கடலிற்ப்பாச்சி

13. சத்துருக்கள் மிண்டன் மேவலர் கோளரி வீரகெம்பீரன்
கீர்த்திப் பிறதாபன் பகை நாட

14. க சூத்திரப் பிறதாபன் பத்தி முத்திப் பிறியன் வீரலட்சுமி
விசைய லட்சுமி பாக்கிய லட்சுமி காந்தன் ச

15. ர்றபன்ன பாஷா விசட்சணன் சகல குணசம் பண்ணன்
சங்கீத சாகித்ய வித்யா விநோதன் திருமலை நரே

16. ந்திரன் மெச்சிய சாமித் துரோகியள் மிண்டன் வீரைவள
நாடன் தொண்டியந் துறைவன் அடைக்கல

17. ங் காத்தான் வன்னியராட்டந் தவிழ்த்தான் மூவராயிர
கண்டன் சாமித்துரோக வெண்டைய காவ

18. லன் வீர தண்டை சேமத்தலை விளங்கிய தாளினான்
துரை ராயன் செயதுங்கராயன் வம்சாயிபனா

19. ன் துகவூர் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்கசோழ
நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்

20 கும் தளவாய் சேதுபதி புத்ரன் ஸ்ரீ திருமலைய சேதுபதி
ரகுநாதத் தேவர் கத்தாக்கள் திருமலை நாயக்கன

21. ரயனவர்களுக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்
களுக்கும் எங்கள் மாதா பிதாவினுடைய வற்க்

22. கத்துக்கும் புண்ணியமாகத் தன்ம சாதனப் பட்டையங்
குடுத்தபடி யிந்தப் பரதேசிக் கட்டளையி

23. ல் சேந்து நடக்கிற கிறாமங்கள் வெள்ளாம் பற்றுச்சீமை
அஞ்சிரண்டுச் சீமை அறந்தாங்கிச் சீமை பட்டுக்கோட்

24. டைச் சீமை புதுக்கோட்டைச் சீமை திருப்புத்தூர் சூரைக்
குடிச் சீமை தேர் போகி நாடு முத்து நாடு இந்தச்சீமைக

25. ளிலே நடக்கிற கிறாமங்கள் ஏந்தல் உள்க்கிடை முதலாகிய துக்கெல்லாம் பளவரி முதலாகிய சகல பலவரியளும் கட்டளையிலே சேந்த மனுஷர் உள்பட கோசாலை

26. வரி நன்மாட்டு வரி மகா நவமி கிடாய் ஓட்டுகிறது உர பிறியில் மற்றுமுண்டாகிய பல சில்லறை வரியளும் வேண் டாமென்று

27. நாம் அபிமானித்துச் சறுவ மானியமாகக் கட்டளையிட்ட படியினாலே நம்மை அடைந்த மனுஷாரல்லாம் இந்தத் தன்மசா

28. தனப்பட்டையப்படிக்கு ஒரு சில்லறைகளும் வாராமல் இந்தப் புண்ணியத்தை பரிபாலனம் பண்

*மூன்றாம் பக்கம்*

29. ண்ணிப் பூறுவா பூறுவம் நடந்தபடியே உத்தரோத்தர்மாக நடப்பிக்கக் கடவோராகவும் இந்தத்த

30. ன்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலும் சேதுகரையிலும் ஆ

31. யிரங் கபிலைப் பசுவும் ஆயிரம் பிராமணர் குடும்பப் பிறதிட்டையும் அனேக கோடி பூதான கன்னி

32. யாதானமும் பண்ணின புண்ணியத்தை அடையக்கடவா ராகவும் அநேக கோடி சிவலிங்க பிறதிட்டை

33. பண்ணின புண்ணியத்தையும் அடையக் கடவராகவும் இந்தத் தன்மத்துக்கு யாதொருத்தர் அகிதம் பண்

34. ணின பேர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக்கரையிலும் காராம் பசுவையும் குருவையும் மாதா

35. பிதாவையும் கொன்ற தோஷத்திலே போகக்கடவராகவும் இப்படி சம்மதித்து ஸ்ரீ திருமலைய சேதுபதி ரெகுநா

36. த தேவர் ஆவுடைய பரம சுவாமியார்க்கு உஷா கால பூசைக் கட்டளை நடத்து[ம்] அம்பலத்தாடும் பண்டாரம் அவ

37. ர்களுக்கு தன்ம சாசனப்பட்டையம் குடுத்தோம் இப்படிக்கு

38. ஸ்ரீ சுப்ரமண்ய திருமலைய சேதுபதி ரெகுநாதன்

39. ஸ்வஸ்திரஸ்தூஉ தாந பாலந யோர்மத்யே தாநாத் ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவா

40. ப்நோதி பாலநம் அச்சுதம் பதம் உ

## செப்பேடு எண். 17
(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | திருமலை ரகுநாத சேதுபதி மன்னர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | திருப்பெருந்துறை அம்பலத்தாடும் பண்டாரம். |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1582 |
| | : | சார்வரி ஆண்டு மாசி மீ" (கி.பி1660) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | திருப்பெருந்துறை ஆவுடையப்ப சுவாமி திருக்கோயில் பரதேசி கட்டளைக்கு உத்திரவு |

இந்தப் பட்டயத்தை வழங்கிய திருமலை ரகுநாத சேதுபதி மன்னரது விருதாவளியாக ஐம்பத்து ஐந்து விருதுகள் இந்தப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளில், 1) பகைநாடக சூத்திரப் பிரதாபன் 2) திருமலை நரேந்திரன் மெச்சிய சாமித்து ரோகியள் மிண்டன், சாமித்துரோக வெண்டய காவலன், என்ற மூன்று புதிய விருதுகளைத் தவிர ஏனையவை அனைத்தும் இந்த மன்னரதும் இவரது முன்னோரது செப்பேடுகளிலும் வழங்கப் பட்டவையாகும். திருமலை நாயக்க மன்னரது பகைவரான மைசூர் கூப்கானது பகையினைக்களைந்த காரணத்தினால் முதலாவது விருதும், கி.பி.1658ல் மதுரையைக் கைப்பற்ற வந்த மைசூர் மன்னரது பெரும் படையை, அம்மைய நாயக்கனூர். திண்டுக்கல் ஆகிய ஊர்களுக்கு அண்மையில் உள்ள

போர்க்களங்களில் பொருதி அழித்து வெற்றிவாகை சூடியதுடன் அவர்களில் எஞ்சி உயிர் தப்பி ஓடியவர்களை மைசூர் அரசு எல்லைவரை விரட்டி அடித்து திருமலை மன்னரது பாராட்டிற்கும் பரிசிலுக்கும் உரியவராக விளங்கியதால் இரண்டாவது விருதும் பாண்டிமண்டலத்து எழுபத்து இரண்டு பாளையக்காரர்களுக்கும் தகப்பன் சாமி போல விளங்கிய மதுரை திருமலை மன்னருக்கு எதிராக கலகக் கொடி உயர்த்திய எட்டையபுரம் பாளையக் காரனை வென்று அடக்கி,[1] அவனது தலையினைத் வீரவெண்ட யத்தில் பொறித்து தமது இடது காலில் அணிந்து வந்த காரணத்தினால்[2] மூன்றாவது விருதும் புதிதாக சேதுபதி மன்னரது விருதாவளியில் இடம் பெற்றுள்ளன.

திருப்பெருந்துறை ஆவுடையப்ப சுவாமி திருக்கோயில் பரதேசி கட்டளைக்கு உட்பட்ட வெள்ளாம் பற்றுச்சீமை, அஞ்சிரண்டுச் சீமை, அறந்தாங்கிச் சீமை, பட்டுக்கோட்டைச் சீமை, புதுக்கோட்டைச்சீமை, திருப்பத்தூர், சூரைக்குடிச்சீமை தேர்போகி நாடு. முத்துநாடு, ஆகிய சீமைகளில் உள்ள ஊர் கள் ஏந்தல்கள் - ஆகியவைகளில் இருந்து சேதுபதி மன்னருக்கு வசூலிக்கப் பெருகிற பளவரி, கோசாலைவரி, நன்மாட்டுவரி, மகாநவமிகிடாய், மற்றும் சில்லறை வரிகளை வேண்டாமென்று வரி நீக்கம், செய்து உத்தரவிட்ட ஆணையைத் தாங்கியுள்ளது இந்தச் செப்பேடு. மன்னரது இந்த நல்ல நடவடிக்கை மூலம், பரதேசிக் கட்டளையில் சேர்ந்த கிராமங்களில் இருந்து மக்கள் தாராளமாக மன்னருக்கு இறுக்க வேண்டிய கடமைகளை திருப் பெருந்துறை ஆவுடையப்பருக்கு அளித்து பரதேசிக் கட்டளை தருமம் சிறப்பாக நடைபெற ஏதுவாகும் என்பது சேதுபதி மன்னரது எதிர்பார்ப்பு என்பது தெரிகிறது. இதனை ஒரு தர்ம மாக, மன்னரது மூதாதையர் பெற்றோர் - மற்றும் மதுரை திரு மலை நாயக்கர் ஆகியோருக்குப் புண்ணியமாக ஏற்படுத்தப்பட்ட தாக பட்டயம் தெரிவிக்கின்றது வரி (20 - 21). இதில் சம்பந்தப் பட்ட ஊர்கள் இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்திலும்

1 Sathianathaier – History of Nayaks of Madurai (1928)

2 அமிர்த கவிராயர் - தளசிங்கமாலை

(வெள்ளாம்பற்றுச் சீமை, அஞ்சிரண்டு சீமை, அறந்தாங்கிச் சீமை புதுக்கோட்டை சீமையிலும், தேர்போகி நாடு, முத்துநாடு) திருப்பத்தூர் சூரக்குடிசீமை, பசும்பொன் மாவட்டத்திலும் பட்டுக் கோட்டைச் சீமை தஞ்சாவூர் மாவட்டத்திலுமாக அடங்கியுள்ளன. இன்றைய நிலப் பிரிவுகளில் இவைகளில் இருந்து சேதுபதி மன்னருக்கு வருவாயாக கோசாலைவரி, உரப்பிறியல் மற்றும் பல கல்லறை வரிகளும் செலுத்தப்பட்டு வந்த விபரத்தை இந்தச் செப்பேட்டில் இருந்துபுரிந்து கொள்ள முடிகிறது. கோசாலை வரி என்பது மாட்டு மந்தைகள் வைத்து இருப்பதற்கான வரி, நன்மாட்டு வரி, விவசாயப் பணிகளுக்கு மாடுகளை ஈடுபடுத்தி ஆதாயம் சேர்ப் பவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவது. இதனை சோழபாண்டியர்கல் வெட்டுக்களில் ''நல்லெருது'' எனக்குறிக்கப் பட்டுள்ளது. மகாநவமி கிடாய் ஒட்டுறதிற்கு வரி, இராமநாத புரம், சீமையில் மகாநவமி சிறப்பான விழாவாக கொண்டாடி யதற்கான குறிப்புகள் இல்லை. ஆனால் செல்லமுத்து சேது பதி காலத்தில் சித்திரை, மகாநவமி, தீபாவளி தைப்பொங்கல் ஆகிய விழா நாட்களில் டச்சுக்காரர்கள், பட்டு போன்ற சிறந்த அன்பளிப்பு பொருட்களுடன் மன்னரைச் சந்தித்து வந்தார் என்ற செய்தி இராமநாதபுரம் மானுவலில் (பக்கம் 243) குறிப்பிடப்பட்டதில் இருந்து மகாநவமி, மறவர் சீமையின் விழா நாளாக இருந்தது என்பது தெரிய வருகிறது. ஆனால் இந்த மன்னர் காலத்தில் இருந்து நவராத்திரி விழாவின் பத்தாவது நாள் அல்லது மகர் நோம்பு மிகவும் விமரிசையாக கொண்டாடப் பட்டதற்கு பல செய்திகள் உள்ளன. அதேபோல அந்த விழாவையொட்டி பலியிடப்படும் ஆட்டுக் கிடாய்களுக்கு மானோன்புக் கிடாய் வரியொன்று வசூலிக்கப்பட்டதை இந்த மன்னரது இன்னொரு (கி.பி.1678ம் வருட) செப்பேடு தெரிவிக் கின்றது. நவராத்திரி விழா நடத்தப்படும் பொழுது இராம நாதபுரம் அரண்மனையில் உள்ள ராஜராஜேஸ்வரி அம்மனுக்கு ஏராளமான ஆடுகள் பலியிடப்பட்டு இருக்கவேண்டும். அப்பொழுது அந்த அம்பிகையின் பூஜை வாமமார்க்க முறைப்படி உயிர்ப்பலியுடன் நடந்து வந்தது. கி. பி. 1894ல் இராமநாத புரத்திற்கு வருகைதந்த சிருங்கேரி மடாதிபதி, மன்னர் பாஸ்கரது வேண்டுகோளின்படி அம்பிகையின் மரகத பீடத்தை அகற்றி

சக்கரம் நிறுவி, மிருகபலியை மாற்றி, கொற்றவையின் கோர வடிவை சாந்த வடிவாக்கி உதவினார், அது முதல் இங்கு வைதிக முறைப்படி அன்றாட பூஜைநடைபெறுகிறது.[3]

மற்றும், இந்த பரதேசிக்கட்டளை, இந்த மன்னர் காலத்திற்கும், முந்தைய காலங்களிலும் ஏற்படுத்தப்பட்டு இருந்ததை ''பூறுவா பூறுவம்'' (வரி 29 பக்கம் 3) என்ற சொல்லில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

3 வாரனாசி ராஜகோபாலசர்மா — இராமேசுவரம் குடமுழுக்கு மலர் (1975) பக்கம் 183,84

## செந்நிலக்குடி செப்பேடு 18

(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகஷந சகாப்தம் 1589 யிதின்மேற் சொல்லநின்ற பிலவங்க சம்வத்
2. ஸரத்து உத்தராயணத்து சிசிர ரிதுவில் பால்குண மாஸத்தில் சுக்ல பகூஷத்தில்
3. குருவாஸரமும் அஸ்த நகூஷத்ரமும் மாஹேந்த்ர நாம யோகமும் தைதுலாககரணமும் கூடிய
4. புண்யகாலத்தில் தேவைநகராதிபந் சேதுமூலரக்ஷா துரந்தரந் ராமநாத
5. காரியா துரந்தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் பரராசகஜசிங்கம் ரவிகுல
6. சேகரன் ரவிவம்மந் சொரிமுத்துவன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேஸ்வ
7. ரன் அரியராயதள விபாடன் பாஷைக்கு தப்புவார் கண்டன் மூவராய
8. கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பட்டமான
9. ங் காத்தான் துட்டராயிர கண்டன் புவநேகவீரன் வீரகஞ் சுகன் வீரவளனாடன்
10. வேதியர் காவலன் அரசராவணராமன் அடியார் வேளைக் காறன் பரதளவிபாடன்

---

o ARE. 12/1936

அமைப்பு : 21. செ.மீ x 9. செ.மீ

படி கொடுத்து உதவியவர் : புலவர் திரு.செ. ராஜு தஞ்சை

11. உரிகோல் சுரதாநன் அந்தம்பரகண்டன் சாடிக்காறர் கண்டன் சுவாமித்து
12. ரோகியள் மிண்டன் பஞ்சவன்ன ராயராகுத்தன் பனுக்கு வார் கண்டன் வைகைவ
13. ளநாடன் கொட்டமடக்கி வைய்யாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார்க
14. ண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் கை
15. ராயன் ஆற்றில்பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக் கலங்காத்தான் தாலிக்குவே
16. லி சத்துருவாதியள் மிண்டன் வன்னியராட்டந் தபிழ்த் தான் மேவலர்கள் கோளரி மேவ
17. லர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கம்பீரன் கீர்த்திப் பிரதாபன் ஆரியர் மானங்கா
18. த்தான் தொண்டியந்துறை காவலன் துரகரேவந்தன் கொடைக்கு கன்னன் பரத நாடக
19. பிறவீணன் கருணா கடாக்ஷன் குன்றினுயர் மேருவிற் குன்றா் வளைகுணில் பொறித்
20. தோன் திலகநுதல் மடவார்கள் மடலெழுத வருசுமுகன் விசையலட்சுமி காந்தன்
21. கலை தெரியும் விற்பன்னன் காமினி கந்தப்பன் சத்திய அரிச்சந்திரன் சங்கித் சா
22. யித்ய வித்தியாவிநோதன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் சகலசாம்ப்
23. ராச்சிய லெக்ஷிநிவாசன் சேதுங்கராயன் வங்கிஷாதிப நாந துகவூர்க் கூத்தத்து
24. குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் இருக்கும் தளவாய்
25. சேதுபதி காத்ததேவர் புத்திரன் ஸ்ரீ திருமலையயிரணிய றெப்பயாசி சேதுபதி ரெகுனாததே
26. வேர் கொளுந்துறையிலிருக்கும் சிதம்பரன் சேருவைக் காரன் புத்திரன் மதவடைச்சியான்

27. கூறிச்சாத்தன் சேருவகாரன் ராமீசுரத்தில் ராமநாத சுவாமி க்கும் அறைக்கட்டளை தன்மத்துக்கு

28. க் கட்டளையிட்ட கிராமத்துக்கு தாநதன்மம் சாசநம் குடுத்தபடி யிப்போது பருத்திகுடி நாட்டி

29. ல் திசை குருழி தட்டில் சென்னீலகுடியாகிய கிறாமத்தை தன்னுடைய அறை கட்டளை தன்

30. மத்துக்கு ஸஹிரண்யோதக தாராபூர்வமாக ஆசந்திராற்க மாக கட்டளையிட்ட படியினா

31. லே கம்பான் அக்கிரகாரத்துக்கும் யிதின் தெற்கு கூட லழகிய பெருமாள் கோவில் கிராம

32. ம இடையன் குளத்துக்கும் யிதன் கௌக்கும் யிலிக்கும் யிதன் தெற்கு தேவேந்திர

33. பட்டர் கிராமம் அஞ்சானைக்குத்திக்கும் யிதன் தெற்கு திரு

34. க் குளத்துக் காலுக்கு வடக்கு பள்ளிமடை படுகைக்கும் உடையினான்பட்டி சிறுகுளத்

35. துக்கும் சீராமனேந்தலுக்கும் வாலிலாப்புலிக்கும் காரைக் குளத்துக்கும் யிந்த அஞ்

36. சு கிறாமத்துக்கும் கிழக்கு கள்ளிக் குளத்துக்குத் தெற்கு இன்னான் கெல்லைக் குள்ளான சென்

37. னீலகுடியாகிய கிராமமும் அதனுடனே சேந்த அய்யனா ரேந்தலும் அதிலுண்

38. டாகிய ஊத்து புரவு நஞ்சை புஞ்சை ஏந்தல் குட்டம் மாவடை மரவடை பட்டம் படு

39. கை திட்டுத் திடர் மேல் நோக்கிய மரம் கீள் நோக்கிய கிணறு நீரும் பாசியும் பள்ளு

40. ப் பறையும் முதலான அட்டபோக தேச சுவாமியங்களும் ஆண்டு அனுபவித்துக்

41. கொண்டு அறைக்கட்டளையுடனே கூடின தன்மம் சந்திராதித்திய சந்ததிப் பிரவேச

## செப்பேடு எண் 18

### (விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத திருமலை சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் ராமநாதசுவாமி திருக்கோயில் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1589 பிலவங்க ஆண்டு மாதம் (கி.பி. 18.3.1668) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | இராமநாதசுவாமி அறக்கட்டளைக்கு சென்னீலக்குடி கிராமம் தானம், |

இந்த அறக்கொடையை வழங்கிய திருமலை சேதுபதி மன்னரது விருதாவளியாக அறுபத்து ஐந்து சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் குறிக்கப் பட்டவைகள்.

சேதுபதி மன்னரது அலுவலர்களில் ஒருவரான கொழுந்துறைச் சிதம்பரம் சேர்வைக்காரன் என்பவன் இராமேசுவரம் திருக்கோயிலின் அறக்கட்டளை தன்மத்திற்கு சென்னீலக்குடி என்ற கிராமத்தை வழங்கினான். அதனை அந்த தர்மத்தை ஒப்புதல் செய்து வழங்கிய தான சாசனமாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது. சேர்வைக்காரன் என்பது பொதுவாக மறவர் சீமையிலுள்ள முக்குலத்தோரில் ஒரு பிரிவினரான அகம்படிய மக்களை குறிப்பதாகும். ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சேர்வைக்காரன் என்ற சொல் மன்னரது தளபதி அல்லது ஆருநர் என்ற பதவியின் விகுதியாக அமைந்துள்ளது இந்த

அறக்கட்டளையை வழங்கிய கூரிச்சாத்தான் சேர்வைக்காரன் கொழுந்துறை என்ற கிராமத்தைச் சேர்ந்தவன் என்பதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. கொழுந்துறை இன்றைய இராமநாதபுர மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்த சிற்றூர் ஆகும்.

அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டுள்ள சென்னீலக் குடி இன்றைய காமராஜர் மாவட்டம் திருச்சுழி வட்டத்தில் உள்ளது. இந்தக் கிராமத்தின் எல்லைகளான இடையன்குளம். அஞ் சானைக்குத்தி, சிறுகுளம், ஸ்ரீராமனேந்தல், காரைக்குளம், ஆகிய ஊர்கள் இன்னும் வழக்கில் உள்ளன. பள்ளிமடை என்ற கிராமம் இன்று பள்ளி மடம் என்று வழங்கப்பட்டு வருகிறது. பத்தாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் தென்பகுதியை ஆட்சி செய்த வீரபாண்டியன் இளமையில் காலமாகிய தனது சகோதரன் சுந்தரபாண்யனது பூதவுடல் மீது இங்கு பள்ளிப்படை கோயில் ஒன்றை எழுப்பினான்.[1] இந்தக்கோயில் பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈஸ்வரம் என கல் வெட்டுக்களில் காணப்படு கிறது. இந்தப் பள்ளிப் படை நாளடைவில் பள்ளி மடமாக மருவியுள்ளது.

மேலே கண்ட ஊர்களனைத்தும் முந்தைய மறவர் சீமை யின் நிலக் கூறான பருத்திக்குடி நாட்டில் திசைகுருளி தட்டில் அமைந்திருந்தன. பருத்திக்குடி நாடு என்பது பாண்டியப் பேர ரசின் நிலப்பிரிவு என்பதை பள்ளிமடத்தில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் இருந்து தெரியவருகிறது.[2]

1. குடந்தை சேதுராமன் - என் - பாண்டியர் வரலாறு (1989) பக்கம். 17.
2. பள்ளிமடம் கல்வெட்டு - A.R. 420/1916.

## செப்பேடு எண். 19

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 15
2. 86 இதன்மேல் செல்லா நின்ற
3. கீலக ஸூ தைய் மாதமும் பவுற்ணை
4. மையும் பூச நட்சத்திரமும் சுபயோ
5. க சுபகரணமும் கூடிய புண்ணிய தின
6. த்தில் தேவை நகராதிபன் சேது மூல
7. ரெக்ஷா துரந்தரன் ராமனாத சுவாமி ப
8. ாத சேகரன் சொரிமுத்து வன்னியன்
9. சாமித் துரோகிகள் மிண்டன் அடிய
10. ார் வேளைக்காறன் அரச ராவண ராம
11. ன் பஞ்சத்து மாரி பட்டமானங் காத்தான்
12. தாலிக்கு வேலி தளஞ்சிங்கம் வை
13. ஸ்ரீ சுப்ரமண்ய திருமல
14. ய் சேதுபதி ரகுநாதந்
15. ய்கை வள நாடன் பரதள விபாடன்
16. வேதியர் காவலன் வீரை வள நாட
17. ன் தொண்டியந் துறைவன் அடைக்க
18. லங் காத்தான் துரை ராயன் செயது

---

* திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை
அமைப்பு : 24. செ.மீ × 13.5 செ.மீ.
படிஎடுத்து உதவியவர் : புலவர். திரு. செ. ராஜு, தஞ்சை

19. ங்க ராயன் வங்கிசாதிபன் துகவூர்க்
20. கூற்றத்து காத்தூரான குலோத்துங்
21. க சோழ நல்லூர் கீழ்பால் விரைய
22. ாத கண்டனிலிருக்கும் தளவாய் சே
23. துபதி புத்திரன் திருமலைய சேது
24. பதி ரெகுனாதத் தேவரவர்கள் திருப்பெ
25. பருந்துறை ஆவுடைய பரமசுவாமிய
26. ார்க்கு உஷா காலப் பூசை நடத்தும் ப
27. ரதேசி முத்திரை அம்பலத்தாடும் பண்
28. டாரத்தின் கட்டளைப் பாரிசமாகச் சோ
29. த்துக் கலையூர்ச் செல்லப்பன் தற்மத்துக்
30. கு பெருங்காடு கட்டளையிட்டுத் தற்மச்சா
31. தனப் பட்டயங் கொடுத்தோம் அந்தப்பெ
32. ருங் காட்டுக்கு எல்லை புரவாவது கீழ்பாற்
33. கெல்லை இடையன் கோட்டைக்குள் வெ
34. ளிக்கும் மேன்மங்கலத்துக்குள்வெளிக்
35. கு மேற்குத் தென்பாற்கெல்லை வேங்கூ
36. ர் எல்லைக்கு வடக்கு மேற்பாற்கெல்லை
37. கீழ்வயல் வயலுக்குக் கிழக்கு வடபாற்
38. கெல்லை கோயிற்காட்டுக்கும் நாகம

இரண்டாம் பக்கம்

39. ங்கலத்துக்குள்வெளிக்குந் தெற்கு ஆ
40. க இசைந்த பெருநான்கெல்லைக்குள் ப
41. ட்ட புஞ்சை உள்பட சகல சமுதாய
42. ப் பிராத்திகளும் சந்திராதித்தவரையும்
43. ஆவுடைய பரம சுவாமியார் உஷாகா
44. ல அபிஷேக கட்டளைக்கு ஆண்டுமனுப
45. வித்தும் கொள்ளக் கடவாராகவும்
46. இந்தப்படிக்குத் திருமலைய சேதுபதி காத்

47. த தேவரவர்கள் பெருங்காட்டுக்கு தற்மசா
48. தனப் பட்டயங் கொடுத்தோம் இந்த தற்ம
49. த்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்
50. ணின பேர்கள் சேதுக்கரையிலும் கெங்கை
51. கரையிலும் அநேக சிவலிங்கப் பிறதிட்டை
52. யும் கோதான பூதானங்களையும் பண்ணின
53. புண்ணியத்தை யடையக்கடவாராகவும்
54. இந்தத் தற்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்
55. கள் மாதாபிதாவையும் குருவையும் காரா
56. ம் பசுவையும் கொன்ற தோஷத்திலே பே
57. ாகக் கடவாராகவும் உ
58. தான பாலன யோர்மத்யே தாநா
59. த்ஸ்ரயோநுபாலனம் தாநாத் ஸ்வ
60. ர்க்கம்வாப்நோதி பாலநாத் அச்சுத
61. ம் பதம் உ சுபமஸ்து

# சேதுபதி செப்பேடு எண் 19

(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | திருப்பெருந்துறை பரதேகி முத்திரையான அம்பலத்தாடும் பண்டாரம். |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1586. கீலக ஆண்டு தை மாதம் |
| 4. செப்பேட்டின் பொருள் | : | சோத்துக்கலையூர் செல்லப்பன் தர்மத்திற்கு நிலக்கொடை |

இந்த செப்பேட்டினை வழங்கிய திருமலை ரகுநாத சேதுபதி மன்னரது விருதாவளியாக பத்தொன்பது விருதுகள் இந்த செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது இவையனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்படுபவை தான்.

திருப்பெருந்துறை ஆவுடையப்ப சுவாமி திருக்கோயிலில் உஷாக்கால கட்டளைப்பூஜைக்கு சேதுபதி மன்னர் ''பெருங் காடு'' வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கட்டளையை ஏற்கனவே சோத்துக்கலையூர் செல்லப்பன் என்பவர் ஏற்படுத்தி இருக்க வேண்டுமென்பது செப்பேட்டு வரி 29ல் இருந்து பெறப்படுகிறது. மேலும் அந்த தர்மம் நன்றாக நடக் காத நிலையில் அல்லது இன்னும் சிறப்பாக நடக்க வேண்டும். என்ற நிலையில், பெரு விருப்புடன் பெருங்காட்டினை மன்னர்

பரதேகிமுத்திரை அம்பலத்தாடும் பண்டாரத்திடம் தானமாக வழங்கியுள்ளார். திருப்பெருந்துறை சிவாலயத்திருப்பணியில் ஈடுபட்டு இருந்த பரதேசி (பணியாளர்)கள் தலைவர் என்ற முறையில் ''பரதேசிமுத்திரை'' என்ற சொல் (வரி 27) கை யாளப்பட்டுள்ளது. இந்தப் பெருங்காட்டின் பரப்பு இவ்வளவு என்று குறிப்பிடாததில் இருந்து, மிகப்பரந்த இடம் என்பது புலப்படுகிறது. பெரும்பாலும் இன்றைய புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஆவுடையார் கோயில் வட்டங்களில் இந்தக்காடு அமைந்து இருத்தல் வேண்டும்.

இந்தச் செப்பேட்டில் தானம் வழங்கப்பட்ட இடமான பெருங்காடு, ஏற்கனவே இந்த திருக்கோயிலுக்குச் சொந்தமான காட்டுப்பகுதியை அடுத்து இருந்தது. என்பதை இந்தக் காட்டின் ''வடபாற்கெல்கை கோயில் காட்டுக்கும் நாகமங்கலத்துக்குள் வெளிக்கும் தெற்கு...'' (வரிகள் 38-39) என்ற தொடர் சுட்டு கிறது. கிழக்கு எல்கையாக ''இடையன் கோட்டைக்குள் வெளி'' குள் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோட்டை எப்பொழுது யாரால் நிர்மாணிக்கப்பட்டு எப்பொழுது அழிந்தது என்ற விபரங்கள் அறியத்தக்கதாக இல்லை. இந்தப்பகுதியில் சமணர் குடி இருப்பு இருந்து இருக்கவேண்டும் என்பதை நாகமங்கலம் என்ற ஊர்ப்பெயரில் இருந்து தெரிய வருகிறது.

மேலும் இந்தப்பட்டயத்தை வரைந்தவர் பெயர் குறிப்பிடப் படவில்லை. தொடர்ந்து பட்டயத்தின் வரிகள் 58-61ல் முன்பு குறிப்பிட்ட வடமொழி சுலோகம் பொறிக்கப்பட்டு இருப்பதால், முந்தைய இரண்டு பட்டயங்களையும் பொறித்தவரே இதனை யும் வரைந்து இருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

## செப்பேடு எண். 20

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹநத ஸகாப்தம் 1592 இதன் மேற் செல்லா நின்ற ஸாதாரண நாமஸம் வச்சரத்து உத்த ராய
2. நத்து சிசிர ரிதுவில் மாகமாசத்து கூடின பக்ஷத்தில் காற்திகையும் குருவாரமும் ஹஸ்த நக்ஷத்ரமும் சுகம்ம நாமயோகமும் ச
3. ணிஜவாகரணமும் பெற்ற புண்ய காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரக்ஷாதுரந்தரன் ராமநாத வாமி கா
4. ர்யதுரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் கெஜ சிங்கம் ரவிகுலசேகரன் ரவிவம்ம
5. கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பட்டமானங் காத்தான் துட்டாயிரகண்டன் புவ
6. நேகவீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்கார
7. ன் பரதாளவிபாடன் உரிகொல்சுரதாணன் அந்தம்பிர கண்டன் சாடிக்காறர் கண்டன் ஸ்வாமி துரோகியள
8. மிண்டன் பஞ்சவன்னாராயர்ராகுத்தன் பனுக்குவார் கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம்| தளஞ்சிங்க
9. தாலிக்கு வேலி சத்துருவாதி யள்மிண்டன் வன்னிய ராட்டந் தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வ

---

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அமைப்பு : 29.5. செ.மீ × 8.5. செ.மீ.

10. ணங்கு மிருதாழினான் வீரமஹாகம்பீரன் கீர்த்திப் பிரதா
பன் ஆரிய மானங்காத்தான் தொண்டியந்துறை

11. காவலன் துர்கரேவந்தன் அனுமகேதனன் கருடகேதனன்
கொடைக்குக் கர்ணன் பரதநாடகப் பிரவீண

12. ன் கருணா கடாஷன் குன்றினுயர் மேவிற்குன்றா வளை
குணில் பொறித்தவன் திலகநுதல் மடமாதர் மடலெ

13. முதவரு சுமுகன் விஜயலட்சுமி காந்தன் கலை தெரியும்
விர்ப்பன்னன் காமிநி கந்தப்பன் ஸத்ய ஹரிச்சந்திரன்

14. ஸங்கீத ஸாகித்ய வித்யாவிநோதன் வீரதண்டை சேமத்
தலை விளங்கிய தாழினான் ஸகலஸாம் பிறாச்சிய லக்ஷ்மீநி

15. வாஸன் சேதுங்கராயன் வங்கிஷாதிடன் துகவூர் கூற்றத்
துக் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர்

16. கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் தளவாய் சேதுபதித்
தேவர் ஸ்ரீமது ரகுனாத திருமலய ஹிரண்ய கர்ப்

17. யாஜி சேதுபதி ரகுநாததேவர் பெருங்கரைக்குப் பிரதி
நாமமான ராமநாத சமுத்திரம் அட்டாலைச் சொ

18. க்கநாதசுவாமி கோயிலுக்கும் மேர்படி ஊரில் தெய்வ
ராயன்கட்டிவிச்ச மடதம்பத்துக்கும் கட்டளையிட்ட

19. கிறாமத்துக்கு தானதர்மஸாஸநம் குடுத்தபடி இப்போது
புனப் பரளை நாட்டில் கொத்தங்குளமாகிய ஏந்தல்

20. கோயிலுள் பாதியும் தெய்வராயன் கட்டிவிச்ச மடத்தன்
மத்துக்குப் பாதியுமாக ஸஹிரண்யோதக தா

21. ராபூர்வமாக கட்டளையிட்ட படியினாலே பொன்னரியா
னேந்தலுக்கும் கொம் பூதிக்கும் மேர்கு

22. அருங்குளத்துக் குளத்துளவாய்க்கு கீழைச் சீகன் குளத்
துக்கும் சொக்கநாத யூரணிக்கும் கிழக்குப் பாத்திபசேக

23. ரநல்லூர் இருளப்பன் கோயிலுக்கும் முட்டுக்குளம் திரு
வாங்கிக்கும் தெற்கு இன்னான்கெல்லைக் குள்ளாகிய
கொ

24. த்தங் குளமாகிய கிறாமமும் அதிலுண்டாகிய ஊரது புரவு
நஞ்சை புஞ்சை ஏந்தல் மாவடை மரவ

25. டை பட்டம் படுகை திட்டுத்திடர் மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு நீரும் பாசியும் பள்ளும் பறை இது மு

26. தலான அஷ்டபோக தேஜஸ்வாம்யங்களும் அட்டாலைச் சொக்கநாத சுவாமி கோயிலுக்குப் பாதியும் தெய்வராய

27. ன் மடதம்மத்துக்குப் பாதியும் சந்திராதித்தவ ஸந்திரப் பிறவேசம் உத்தரோத்தமாக ஸர்வமானியமாக அனு

28. பவித்துக் கொள்ளுவாராகவும் இந்ததர்மம் யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினவர்கள் கோ

29. டி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்டையும் பண்ணின சுகுர்தத்தை யடைவாராகவும்

30. இந்த தர்மத்துக்கு யாதாமொருதர் அஹிதம் பண்ணின வர்கள் கங்கைக்கரையிலேயும் சேதுவிலே

31. யும் மாதா பிதாவையும் குருக்களையும் காராம் பசுவையும் பிராமணனையும் வதை பண்ணின தோ

32. ஷத்திலே போகக் கடவாராகவும் இப்படி சம்மதித்து ஸ்ரீ திருமலய் ஹிரண்ய கர்பயாஜி சேதுபதி ரகு

33. நாதேதேவர் பெருங்கரைக்குப் பிரதிநாமமான ராமனாத சமுத்திரம் அட்டாலைச் சொக்கநாத சுவாமி கோ

34. யிலுக்கும் தெய்வராயன் மட தர் மத்துக்கும் கட்டளை யிட்ட கிறாமத்துக்கு தாம்புர சாஸனம் குடுத்தோம் உ

35. தாந பாலநயோர் மத்யே தாநாத் ச்ரேயோநு பாலனம் தாநாத் ஸ்வர்க்கம் அவாப் நோதி பாலநாத் அச்சுதம் ப

36. தம் ஸ்வ தத்தாத் த்விகுணம் புண்யம் பரதத்தாநு பாலனம் பரதப்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம்

37. பவேத் உ இந்த ஸாஸநம் எழுதினேன் கடம்பவனமான் விசுவனாத ஆச்சாரி புத்திரன் ரகுநாதன்

38. லிஹிதம் உ. சுபமஸ்து.

## சேதுபதி செப்பேடு எண் 20.

**(விளக்கம்)**

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | திருமலை ரகுநாத சேதுபதி மன்னர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | பெருங்கரை அட்டாலைச் சொக்கநாதசுவாமி திருக்கோயிலும் தெய்வராயன் மடமும். |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1592 சாதாரண ஆண்டு மாசிமீ (கி.பி. 19-1-1671) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மேலே கண்ட கோயில், மடம் தர்மத்திற்கு நிலக்கொடை |

இந்தச் செப்பேட்டில், திருமலைரகுநாத சேதுபதி மன்னரது சிறப்புப் பெயர்களான நாற்பத்து ஒன்பது விருதுகள் குறிக்கப் பட்டுள்ளன. இவைகளில் ''ரவிவர்ம கண்டன்'', ''வீரமகா கம்பீரன்' என்ற இருபுதிய விருதுகளைத்தவிர ஏனைய நாற்பத்து ஏழு விருதுகளும் இந்த மன்னரது முந்தைய பட்டயங்களில் குறிப்பிடப்பட்டவைதான். வீரமன கம்பீரன் என்ற விருது பொதுவாக சேதுபதி மன்னரது வீரத்திருவுருவின் அடிப்படையில் வரையப்பட்டதாகும். ஆனால் ''ரவிவர்ம கண்டன்'' என்ற விருது, அவருக்கும், ''ரவிவர்ம'' என்ற விகுதியைக் [கொண்ட கேரளநாட்டு அரசருக்கும் உள்ள சிறப்பான தொடர்பு காரண மாக ஏற்பட்டு இருத்தல் வேண்டும். இத்தகைய வரலாற்று ஊகத்தை உறுதிப்படுத்த வேறு குறிப்புகள் ஏதுவும் இல்லை.

இராமநாதபுரம் சீமையில் உள்ள பெருங்கரை கிராமத்து அட்டாலைச் சொக்கநாதர் ஆலயத்திற்கும் அதே ஊரில் உள்ள தெய்வராயன் மடத்திற்கும், தானமாக கொத்தங்குளம் என்ற கிராமத்தை கொடுத்ததை இந்தச் செப்பேடு குறிப்பிடுகிறது. பெருங்கரை கிராமத்தில் இந்த ஆலயமும் மடமும், இராமநாத புரத்தில் இருந்து மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் பார்த்தி பனூருக்கு கிழக்கே மூன்று கல்தொலைவில் உள்ளது. பெருங் கரைக் கண்மாயின் தெற்குப்பகுதியில். இங்கு கோயில் கொண்டு ள்ளவர்கள், சொக்கநாதர் மீனாட்சி, இந்தக்கோயிலின் கருவறைக் கல்வெட்டு (கி.பி.1672) இந்த இறைவனும் இறைவியும் சுயம்பு என்றும் பெருங்கரை தெய்வக்கன்னியா பிள்ளை தெய்வராய பிள்ளையும் அவரது மனைவி வீராயி அம்மையும் சுவாமி கோயிலை கல்லினாலும், அம்மன் கோயில் பூசை மடம் ஆகியவற்றையும் அமைத்து திருமலை ரகுநாத சேதுபதி மன்னர் திருமுன்னர் மங்கலநீராட்டு நடத்திவைத்ததாகச் சொல்லு-கின்றது[1]. அந்தக் கோயிலின் வாயிலை அடுத்து கிழக்கே உள்ள சிறு அமைப்பு முந்தைய தெய்வராய மடத்தின் மறு உருவாகலாம்.

இந்தக் கல்வெட்டை மேலெழுந்தவாறு படித்தவுடன் சிறு குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஏனெனில் *கி.பி. 1672 ல்* நிர்மாணிக்கப்பட்ட கோயிலுக்கு, அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அதே கோயில் தர்மத்திற்கு *கி.பி. 1670ல்* சேதுபதி மன்னர் இந்தச் செப்பேட்டை எப்படி வழங்கி இருக்க முடியும் என்ற ஐயம் எழுகிறது. ஆனால் கல்வெட்டை சற்று கவனமாகப் படித்தால் தான் வினாவிற்கு விடை கிடைப்பதாக உள்ளது. 'பெருங்கரைச் சுயம்பு சொக்கனாதர் மீனாட்சியம்மைக்கு இவ் வூரில் தெய்வகன்னியாபிள்ளை தெய்வராய பிள்ளை அவர் மனைவி வீராயி அம்மையும் ...... கோயில் கட்டிக்கொடுத்து'' (வரிகள் 11-31) என்ற கல்வெட்டுத் தொடரில் இருந்து ஏற் கனவே அங்கு ''சுயம்பு''வாக சுவாமியும் அம்மனும் இருந்தது தெரியவருகிறது, ஆதலால், அந்த சுவாமியின் கோயிலுக்கு

1 முனிசாமி-சி- பெருங்கரையும் திருமலையும் (தொல்லியல் ஆய்வுத் தொகுதி - 85) பக்கம் 262-63

கி.பி. 1670 ல் இந்தச் செப்பேட்டுன்படி கொத்தங்குளம் கிராமத்தை தானம் வழங்கினார். கி.பி. 1672 ல் அந்த இடத்தில் தெய்வராய பிள்ளையும் அவர் மனைவியும் கல்லாலும் செங்கல்லாலும் திருக்கோயில் அமைத்து ''சம்புரோச்சனை சோடச உபகாரம், நித்திய திரிகாலபூஜை, அன்னதானம் உண்டாக்கி'' (கல்வெட்டு வரிகள் 44-50) னார்கள் என்று தெரிகிறது. அத்துடன், தெய்வராயன் பிள்ளை முதலில் மடத்தை ஏற்படுத்தி இருந்தார் என்பது செப்பேட்டில் இருந்து தெரிகிறது (வரி 18,20)

மேலும், பெருங்கரை கிராமம், ராமநாதசமுத்திரம் என்ற பெயரில் வழங்கியதாகத் தெரிகிறது. சேதுபதி மன்னர் ஆட்சி முறை ஏற்படுவதற்கு முன்னர், இந்தப்பகுதி மதுரை நாயக்க மன்னருக்கு கட்டுப்பட்டு இருந்தபொழுது, சிற்றூர்கள் ''சமுத்திரம்'' என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்தன. நாகநாத சமுத்திரம் (குதக் கோட்டை) கோவிந்தராஜ சமுத்திரம் (முதலூர்) மங்கைநாத சமுத்திரம், கிருஷ்ண சமுத்திரம், உதயண சமுத்திரம் ஆகிய ஊர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்றன. மற்றும், வரி 22, 23ல் குறிப்பிடப்பட்டுள்ள பார்த்திப சேகர நல்லூர், இன்று சுருக்கம் பெற்று பாத்திபனூர் என்று வழங்கப்பட்டு வருகிறது. இதே ஊர் பின்னர் பட்டநல்லூர் என்றும் பதினெட்டாம் நூற்றாண்டில வழங்கப்பட்டது. பாண்டி நாட்டின் தெற்குக் கோடியான திருநெல்வேலியை இணைக்கும் வர்த்தகச் சாத்துவழி இந்த ஊர் வழியாக சிவகெங்கை, காளையார்கோலில், தொண்டி, கோட்டைப்பட்டிணம் ஆகியவைகளைத் தொட்டுச் சென்றதால் இங்கு ஒரு சுங்கச்சாவடி இயங்கி வந்தது என்பதும் தெரிய வருகிறது.[2] வரி 22ல் ''அருங்குளத்து குளத்துள்வாய்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பது குளத்தின் உட்பகுதி என்பது. அதேபோல் ''முட்டுக்குளம் திருவாங்கி'' என வரி 23ல் குறிப்பிட்டுருப்பது முட்டுக்குளம் குளத்திற்கு நீர் கொண்டு வருகிற குளக்கால் - வட்டார வழக்கு, ''தான்போகி'' என்ற இன்னொரு வட்டாரச் சொல்லுக்கு எதிர்மறைச் சொல் இது, ....... நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் கோல்

2. கமால், எஸ். எம் - விடுதலைப்போரில் சேதுபதி மன்னர் (1987) பக்கம். 55-56.

உயரும், கோல் உயர குடி உயரும்'' என்பது அவ்வையார் வாக்கு. இதனை போன்றே குடிஉயர காரணமான விளைச்சல் செல்வத்தைப் பெருக்க உதவும் வெள்ளநீரைகொண்டு வருவதால் திருவாங்கி எனப்பெயர் பெற்றது.

இந்தச் செப்பேட்டு தர்மத்தில் கட்டுப்பட்ட கொத்தன் குளம் என்ற பெயரில் இந்த மாவட்டத்தில் பல ஊர்கள் இருந் தாலும் இந்த செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு எல்லை களில் இருந்து இந்த கொத்தங்குளம் பரமக்குடி வட்டத்தில் அமைந்துள்ளது புலனாகிறது. இந்தக் கோவிலுக்கு தெற்கே சற்று தொலைவில் இதே ஊர் அமைந்து உள்ளது.

## செப்பேடு எண் 21
(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1595ம் வருஷம் இதன் மேல் செல்

2. லாநின்ற பிரமாதிச வருஷம் தை மாதம் மங்கள வாரமும் திரையோத

3. சியும் திருவாதிரை நட்சத்திரமும் சௌபாக்கியா நாம யோகமும் பத்திர

4. வாகனமும் கூடிய சுபயோக தினத்தில் தேவை நகராதி பன் சேதுமூல ரட்சா துர

5. ந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் பரராஜ சிங்கம், சொரிமுத்து

6. வன்னியன் மகா மண்டலேசுரன் மூவராய கண்டன் கண்ட நாடு கொண்டு

7. கொண்டநாடு கொடாதான், பட்ட மானங்காத்தான், துட்டராயிர கண்டன் புவனேக

8. வீர கஞ்சுகன் வீரவள நாடன் அரச ராவணராமன் பா தாள விபாடன் அந்தப்பிற

9. கண்டன் சாமித் துரோகியள் முண்டன் பஞ்சவர்ணராயரா வுத்தன் பணுக்குவார் கண்டன்

10. வைகை வளநாடன் கொட்டமடக்கு இவுளி பாவடி மிதித்து ஏறுவார் கண்டன் வீர வெண்பா

---

நூலாசிரியரது களஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டு படி எடுக்கப் பட்டது.

11. மாலை இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் மதுரை ராயன் ஆற்றில்

12. பாய்ச்சி, கடலில் பாய்ச்சி மதப்புலி, அடைக்கலங் காத் தான் தாலி க்குவேலி, சத்ருவாதியள் முண்

13. டன் வன்னியராட்டம் தவிழ்ந்தான் மேவலர்கள் விளங்கும் இருதாளினான் வீர மகா

14. கெம்பீரன் கீர்த்திப் பிரதாபன் தொண்டியந்துறைக் காவலன் துரக ரேபந்தன் அனும

15. கேதனன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரத நாடக பிரவீணன் கருணா கடாட்சன்

16. குன்றிலுயர் மேருவை குன்றாய் வளைத்து பொசித்தவன் திலதநுதல் மடவார் மடல் எழுதவரு

17. சுமுகன் விசயலட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பனன் காமினி கந்தப்பன் சத்திய பாஷா அரிச்

18. சந்திரன், சங்கீத சாகித்ய வித்யா விநோதன் வீரத்தண் டை, சேமத்தலை விளங்கு

19. மிருதாளினன் சகல சாம்பிராட்சிய லெட்சுமி வாசன் செய துங்கி வங்கிசாதிபன் துக

20. வூர் கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்ட

21. னிலிருக்கும் ஸ்ரீ திருமலை சேதுபதி காத்த தேவர் அவர்கள் ஸ்ரீ இராமநாதசுவாமி பர்வதவர்த்தினி

22. அம்மன் பூசை நெய்வேத்தியத்திற்கும் ஆவணி திருவிழா உச்சவத்திற்கும் இராமநாத பண்டார

23. மவர்கள் பாரிசம் நம்முடைய கட்டளைக்கு தானபூர்வமாக கட்டளையிட்ட புளியங்குடி

24. கருமல் குமாரக்குறிச்சியும் மேற்படி உள்கடை யேந்தல் களும் மேல்படி பரிநான்

25. கெல்கைக்குட்பட்ட குட்டம் குளம், நந்சை, புஞ்சை, திட்டு திடல், பலவரி, சொர்ணாதாயம்,

26. செம்புவரி, களஞ்சியவரி, சகலமும் இராமநாதசுவாமி பூசைக்கு தாம்பர சாதன கட்டளை

27. இட்டோம் இந்தக் கிராமம் சந்திராதித்தாள் சந்ததிப் பிரவேசம் உள்ள வரைக்கும் ஆண்டு

28. அனுபவித்துக் கொள்ள கடவாராகவும் இந்த தர்மத்தை யாதொருவர் அபிமானித்துபரி பாலனம்

29. பண்ணிக் கொண்டவர் கோடி கெங்காஸ்நானம் பண்னின சுகிர்தமும் கோடி தனுஷ்கோடி

30. தீர்த்தமாடின சுகிர்தமும் கோடி கன்னிகாதான பலமும் கோடி பூதான பலமும் அடை

31. வாராகவும் இதற்கு யாராகிலும் அகிதம் பண்ணின பேர்கள் கெங்கைக்கரையிலே காராம் பசுவைக்

32. கொன்ற தோசத்திலும் பிரமகத்தி பண்ணின தோஷத்திலும் மாதாபிதாவை கொன்ற தோஷத்திலும் போவாராகவும்

## செப்பேடு எண். 21

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : திருமலை ரகுநாத சேதுபதி மன்னர்.
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் திருக்கோயில் ஆதி னகர்த்தர் இராமனாத பண்டாரம்.
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1595 பிர மாதீசு ஆண்டு தை மீ"(கி.பி.1673)
4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் திருக்கோயில் ஆவணி திருவிழா நிலக்கொடை

இந்தச் செப்பேட்டை வழங்கிய திருமலை ரகுநாத சேதுபதி மன்னரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் ஐம்பத்து மூன்று விருதுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திலும், ''சத்துரு வாதிகள் முண்டன்'' என்ற ஒரே ஒரு புதிய விருதைத், தவிர, மற்றவை அனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப் பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவைதான்,

இராமேசுவரம், இராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்மன் பூசை நைவேத்தியத்திற்கும், ஆவணித் திருவிழா உற்சவத்திற்கும், புளியங்குடி, கருமல், குமாரக்குறிச்சி ஆகிய மூன்று ஊர்களை தானபூர்வமாகக் கட்டளையிட்டுள்ளதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த கிராமங்களும் ''அவைகளின் உட்கிடையேந்தல்களும், அவைகளின் பரிநான்கு எல்லைக்குள்பட்ட, குட்டம், குளம், நஞ்சை, புஞ்சை, திட்டு, திடல், பளவரி, சொர்ணாதாயம், செம்புவரி, களஞ்சியவரி சகலமும்'' (வரி 25) என செப்பேடு விளக்கம் தந்துள்ளது. இந்த மூன்று ஊர்களும் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம்

முதுகுளத்தூர் வட்டத்தில், திருவுத்தரகோசமங்கை முதுகுளத் தூர் சாலையின் தெற்குப்பகுதியில் கருமலும், குமார்க்குறிச்சியும் வடபுரத்தில் புளியங்குடியும் அமைந்துள்ளன. இவைகளில் இருந்து சேதுபதி மன்னருக்கு இறுக்க வேண்டிய ''பளவரி'' ''சொர்ண ஆதாயம்'' பற்றிய முந்தைய செப்பேடுகளில் குறிக்கப் பட்டுள்ளன. ஆனால் இந்தச் செப்பேட்டில். *செம்புவரி, களஞ்சிய வரி* என்ற இருபுதிய அரசிறைகள் சொல்லப்பட்டுள்ளன,

இந்தச் செப்பேடு வழங்கப்பட்ட பதினேழாம் நூற்றாண்டிம் பிற்பகுதியில், இராமநாதபுரம் சீமையில் பரங்கிகளது நடமாட்டம் மிகுந்ததால், செம்பு (உலேகம்) இறக்குமதி பரவலாக ஏற்பட்டு செம்பினாலான பொருட்கள் தயாரிக்கும் நிலை ஏற்பட்டதால், அந்த தொழிலுக்கு இந்தப் புதியவரிஏற்பட்டு இருக்க வேண்டும் என ஊகிக்க இடமுள்ளது. அந்த தொழிலில் ஈடுபட்டவர்கள் ''கன்னார்'' என அழைக்கப்பட்டனர். அவர்களது குடியிருப்பு களும் கன்னார் இருப்பு (கமுதிவட்டம்) கன்னார் ஏந்தல், கன்னார் மிஞ்சி (திருவாடானை வட்டம்) கன்னார் பொதுவன் (முதுகுளத்தூர் வட்டம்) இராமநாதபுரம் சீமையில் இருந்ததை இந்த ஊர்ப் பெயர்கள் நினைவூட்டுகின்றன. இதனைப் போலவே செம்பு சம்பந்தப்பட்ட ஊர்களும் இந்தச் சீமையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. அவையாவன, செம்பன் ஊர், செம்பன் குடி (முதுவட்டம்) செம்படக்கி (முதுவட்டம்) செம்பு லான்குடி (பரமக்குடி, திருவாடானை வட்டம்)

மற்றும், கிராமங்களில், அறுவடை காலங்களில் மிகுதி யாகக் கிடைக்கும் தானியங்களை கிராமங்களில் பத்திரப்படுத்தி வைப்பதற்கான சேமிப்பு வசதிகளும், களஞ்சியங்களும், அப் பொழுது இல்லை. இராமநாதபுரத்தில் மட்டும், சேதுபதி மன்ன ரது அரண்மனையை அடுத்து பெரிய களஞ்சியம் ஒன்று இறை யாகப் பெற்ற தானியங்களைப் பத்திரப்படுத்தி வைப்பதற்கு ''இறையாயிரம் கொண்டான்'' என்ற பெயரில் பெருங்களஞ்சி யம் இருந்தது. இதன் அமைப்பு நீண்ட செவ்வகமாக சுமார் எண்ணூறு அடி நீளமும் இருபத்து ஐந்து அடி அகலமும், ஐம்பது அடி உயரமும் உடையதாக இருந்தது. இந்தக் களஞ்சி யத்தில் ஒர் ஆயிரம் கலம் நெல்லை சமனாகப் பரத்தினால் ஒரு இஞ்சி உயரம் தான் இருக்கும்! (ஒரு கலம் என்பது தொன்னூறு

படிகள் கொண்டது) ஆதலால் குடிமக்கள் ஆங்காங்கு தங்கள் ஊர்களில்,பொது இடங்களில் வைக்கோலைக் கொண்டும்உருளை வடிவத்தில் களஞ்சியங்கள் அமைத்து தானியங்களைச் சேகரித்து வைத்து வந்தனர். இவைகள் சேகரம் பட்டறை என்று இராம நாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் குசுப்பிடப்படுகிறது. இத் தகைய பொது இட ஆக்கிரமிப்பிற்கு வசூலிக்கப்பட்ட களஞ்சிய வரி என்பதாகும்.

இப்பொழுதும், இராமநாதபுரம் மாவட்டத்து கிராமங்க-ளில், இத்தகைய தானியக்களஞ்சியங்களை அறுவடைக் காலங் களில் அமைத்துப் பயன்படுத்துவதைக் காணலாம். இதனைக் ''குளுமை'' என்றும் வழங்குகிறார்கள்.

இந்த மன்னர், கி.பி. 1648லும் (செப்பேடு எண் 10) இராமேசுவரம் திருக்கோயிம் ஆவணி மூல திருவிழாவிற்கென முகிழ்த்தகம் கிராமத்தை தானமாக வழங்கியுள்ளதைக் கண்டோம் மீண்டும் அதே விழாவிற்கும் கோயில் பூசைக்கு இந்தப் பட்ட யத்தின் மூலம் நிலக்கொடை வழங்கி இருப்பதில் இருந்து, இராமேசுவரம் திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆவணி திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்ததும், அந்த விழா இன்னும் பொலிவும் பயனும் பெற வேண்டுமென்ற விருப்பில் தான் இரண்டாவது முறையாக அத்த விழாவினுக்கு தான சாதனம் வழங்கியுள்ளார் என்பதும் தெரிகிறது. அவ்வளவு சிறப்பாக அப்பொழுது அங்கு கொண்டாடப்பட்ட விழா இப் பொழுது கொண்டாடப்படுவது இல்லை.

## செப்பேடு எண் 22

(நகல்)

*முதல் பக்கம்*

*ஸ்ரீ ஆவுடையார்* *மாணிக்கவாசகர்*

1. ஸ்ரீமன் ஸ்வஸ்திஸ்ரீ மன் மஹாமண்டலேஸ்வரன் அரிய ராய தளவிபா
2. டன் பாசைக்குத் தப்புவராய கண்டன் மூவராய கண்டன் கண்டநா
3. டு கொண்டு கொண்டநாடு கொடாதான் தெக்ஷிண பச்சிம உத்த
4. ர ஸப்த ஸமுத்திராதிபதி எம்மண்டலமுங் கொண்டு ஈழ முந் திறை செ
5. காண்டருளிய ராஜாதிராஜந் ராஜபரமேஸ்வரந் ராஜமாத் தாண்ட
6. ந் ராஜகம்பீரந் ராஜாக்கள் தம்பிரான் ஸகலகுண ஸம்பன்ன
7. ன் சர்வ மஹாராயன் ஸகல கலாப்ரவீணன் ஸம்க்த ஸாயுச்சியன்
8. யிராய கெடி கோட்டு மல்லன் கெடி கோட்டு ராயன் துலுக்கர் தள விபாடன்
9. துலுக்கர் மோகந் தவிழ்த்தான் வடவரசர் மணவாளர் இளவரசர் குலைகா

---

இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம்.

வடிவம்: 25.5. செ.மீ × 18. செ.மீ

10. ரன் ராஜாதி ராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜகெம்பீரன் கோக்கண்டன் க
11. ட்டாரி சாருவன் ஒட்டியர் தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்
12. தான் வீரபிரதாபன் அதல பாதல ஸுதல ரிதல ரஸாதல மஹாதல பாத
13. ாள லோகப் பிறகண்டன் பாண்டிமண்டல பத்மநாசாரியன்
14. சோழமண்டல ஸ்தாபனாசாரியன் தொண்டைமண்டலப் பிரதிஷ்ட
15. ாபநாசாரியன் மதப்புலி பரிக்கு நகுலன் அஷ்டைஸ்வர்யன்
16. பரராஜசேகரன் அசுவபதி செசபதி தளபதி நரபதியான குமா
17. ர் மல்லிகாற்சுனராயர் விருபாக்ஷிராயர் குமாரமகாரா
18. ய அத்பலராயர் ஸ்ரீ விவனராயர் தேவராயர் அச்சுததேவ
19. மகாராயர் தர்மராயர் ஸதாசிவராயர் கிருஷ்ணதேவ மஹாராய
20. ர் ராமதேவ மஹாராயர் ப்ருத்விராஜ்யம் பன்னி அருளா தி
21. ன்ற ஸகாப்தம் 1595க்கு மேல்ச் செல்லா நின்ற பிரம
22. ாதீச ஹூ வைகாசி மீ 15உ சோமவாரமும் தசமியும் புனர்பூச ந
23. ட்சத்திரமும் சகர்மநாம யோகமும் தைதுல வாகரணமும்
25. க்ரஹன புண்ய காலமும் கூடிய சுபதினத்தில் ஸேதுமுல ரட்ச
25. ா துரந்தரரான ராசாதிராசன் ராசபரமேசுவரன் ராமநாத
26. ஸ்வாமி கார்யா துரந்தரன் இரவிகுல சேகரன் இ
27. ரவிகுல மாற்தாண்டன் சொரிமுத்து வன்னியன் தொண்டிய
28. ந்துறை காவலன் வைகை வளநாடன் வழியிற் கால்
29. வலியச் சருவி தாலிக்கு வேலி சாடிக்காறர் கண்டன் வீர
30. வெண்பாமாலை பனுக்குவார் கண்டன் பகைமன்னர் சிங்

31. கம் ஆத்தில் பாச்சி கடலில்ப் பாச்சி வீரலட்சுமி விஜய லெட்சுமி
32. சௌபாக்ய லட்சுமிகாந்தன் ஸத்ய உறரிச்சந்திரன் ஸகலகு
33. ண ஸம்பன்னன் சங்கீத சாயுச்சிய பரத நாடகப் பிரவீணன் வீரத
34. ண்டைச் சேமன் இரணியகர்ப்ப சுதாகரனாகிய திருமலைச்
35. சேதுபதி காத்த ரகுனாத தேவரவர்கள் தற்ம சாஸந
36. ங் கொடுத்தபடி நம்முடைய தர்மம் திருப்பெருந்துறை
37. ஆளுடைய பரமசுவாமியாருக்கு உச்சிக் காலக் கட்டளை
38. யு மிந்த ஸம்பத்தில் மடமுங் கட்டி தர்மத்துக்கு மருத பண்டார
39. த்தையும் கட்டளையிட்டு இதுக்கு ஸாத்தியம்க்கு அமரடக் கிப் ப
40. ற்றில் வீராளூர் உள்க்டை தச்சமல்லி யிந்தக் கிறா
41. மத்துக்கும் ஏந்தலுக்கும் எல்கையாவது மேற்பாற் செ
42. கல்கையாவது துற்கைவன தாழங்குடிக்கு சமனப்பள்ளிக்
43. கு கிழக்கு வடபாற்கெல்கை மேலைப் பிராந்தனி மயிலு மரி
44. ஊருக்குக் கிழக்கு கீழைப் பிராந்தனி குமுறூருக்கு
45. தெற்குக் கீழ்பாற் கெல்கையாவது வீழி மங்கலத்துக்கு

### இரண்டாம் பக்கம்

46. மேற்கு அடப்பந் தாழ்வுக்கு வங்கநூர்க்கு சீவனூறு நீ
47. ருகுடி மேற்கு தென்பாற் கெல்கையாவது அமரடக்
48. கி வட்டம் வயல் ஈழத்தானுக்கு வடக்கு இதுவும்
49. மேற்படி உள்க்கடை தச்சமல்லி யேந்தலுக்கு எ
50. ல்கையாவது மேற்பாற் கெல்கை குணத்திரான் வய
51. லுக்கு கிழக்கு வடபார்க் கெல்கை பந்தலாருறணி சின்னஊ
52. றணிக்குத் தெற்கு கீழ்பார்க் கெல்கை இத்தியடிக்
53. காடு பஞ்சந்தாங்கி வயலுக்கு மேற்கு தென்பார்க் கெ
54. கல்கை சன்னவெட்டி வயல் சிவனேரிக்கும் வடக்கு இ
55. ந்த நான்கெல்லைக் குள்பட்ட நஞ்சை புஞ்சை நிதி நிட்

56. சேபம் சில தரு பாஷாணம் கூப தடாகங்களும் சறு
57. வமானியமாக ஆளுடைய பரமசுவாமியாருக்கு அபி
58. ஷேகம் நிவேதனம் திருமாலை திருவிளக்குத் திருப்ப
59. ணி திருநந்தவனம் திருமடம் இது முதலாகிய சிவ கை
60. கயிங்கல்லிய மெல்லாம் ஆதி சந்திராற்கமாய்த் த
61. ற்ம்ம பரிபாலனம் பண்ணிக் கொள்ளக் கடவாராக
62. வும் இந்த தற்மத்தை யாதாமொரு வாக்கற்த ஸ
63. உறாயத்தினாலும் பரிபாலனம் பண்ணினவர்கள் வங்
64. கிச பாரம்பரையாய் ஸெளபாக்ய ஸந்தாநமும் அன
65. க சொற்காதி போகங்களையும் அனுபவிப்பார்கள்
66. இந்தத் தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர்கள் ம
67. ாதா பிதா குருத் துரோகிகளாய்க் கெங்கைக் கரை
68. யில்ப் பிராமணரையும் காராம்பசுவையும் கொன்ற
69. தோஷத்திலே போகக் கடவராகவும் இந்தச் சாஸ
70. னம் அட்டவனை சேதுராமலிங்கம் பிள்ளை யெழு
71. த்து இந்தச் சாஸனம் கல்லிலும் வெட்டிக் கொ
62. ள்ளவும் இந்தத் தற்மத்தை மருதப் பண்டாரமும் ஏகப்
73. ண்டாரமும் தற்மத்தைப் பரிபாலனம் பண்ணிக் கா
74. ணியாட்சியா யனுபவிச்சுக் கொள்ளவும் ராமலி
75. ங்கம் துணை

# செப்பேடு எண் 22

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : திருமலை ரகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருப்பெருந்துறை திருக்கோயில்
3. செப்பேட்டின் காலம் : சகம் (595 பிரமாதீச வைகாசி 15ந் தேதி (கி.பி. 12.5.1673)
4. செப்பெட்டின் பொருள் : மேலே கண்ட கோயில் உச்சிகால கட்டளைக்கு தச்சமல்லி கிராமம் தானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய திருமலை சேதுபதி மன்னர் மதுரை நாயக்கர் மன்னருடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால் இந்த செப்பேட்டின் தொடக்கத்தில் முதல் இருபது வரிகளில் விஜயநகரமன்னர்களின் விருதாவளிகளும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து, இருபத்திநான்காவது வரிகளிலிருந்து முப்பத்தி ஐந்தாவது வரி வரை சேது ւ ன்னர்களது விருதாவளியும் பொறிக்கப்பட்டுள்ளன.

திருவாவடுதுறை ஆதினத்திடம கொண்டிருந்த ஈடுபாடு கரரணமாக இந்த மன்னர் இந்த ஆதினத்துக்கும் திருக்கோயிலுக்கும் ஏற்கனவே பல கொடைகளை அளித்துள்ளார். இந்தச் செப்பேட்டின் மூலம் அந்தக் கோயிலில் உச்சிக்காலக் கட்டளையை நாள்தோறும் நிறைவேற்றி வைப்பதற்கும் அங்கு மடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கும் தச்சமல்லி ஏம்பல் என்ற கிராமத்தையும் உடலாக வழங்கியிருப்பதை தெரிந்துகொள்ள முடிகிறது. கொடையாக வழங்கப்பட்ட தச்சமல்லி அமரடக்கி பற்றில் விரானூர் உட்கடையில் அமைந்திருந்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

தச்சமல்லிக்கும், ஏம்பலுக்கும் நான்கு எல்கைகள் துலக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து இன்னொரு முக்கியமான செய்தியும் தெரிய வருகின்றது. எட்டு அல்லது ஒன்பதாவது நூற்றாண்டில் சைவ சமய எழுச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கிய மாணிக்கவாசகருக்கு திருப்பெருந்துறை இறைவன் காட்டதானவெல்லாம் காட்டி தன் கருணைத்தேன் காட்டி ஆட்கொண்ட இந்த தலத்திற்கு அருகில் சைவ சமயத்திற்கு எதிரான அமண் பள்ளி ஒன்று தாழங்குடியில் இயங்கி வந்துள்ளது தெரிய வருகிறது. தச்சமல்லிக்கு அருகே இருந்த ''பிராந்தணி'' ''மயிலுமாரி'' என்ற ஊர்ப் பெயர்களும் சமணர்களது குடியிருப்பபைத் தெரிவிப்பவனாக உள்ளன. ஆதலால் தமிழகத்தின் சமரசநோக்கிற்கு வரலாற்றுச் சான்றாகவும் இந்தப் பட்டயம் அமைந்துள்ளது.

சேதுபதி மன்னரது இந்த தர்மம்-அபிஷேகம், திருமாலை, திருவிளக்கு, திருநந்தவனம், திருமடம், ஆகியவை சிறப்பாக நடைபெறுவதற்கு திருப்பெருந்துறையைச் சேர்ந்த மருத பண்டாரமும் ஏக பண்டாரமும் நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கு காணி ஆட்சியும் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த தலத்தின் வரலாற்றுச் செய்தியை வெளிப்படுத்தும் வகையில் இந்தச் செப்பேட்டின் முதல் பக்க தலைப்பில் குருந்த மரத்தடியில் குரு வடிவாக திருப்பெருந்துறை இறைவனும் அவரிடம் தீட்சை பெறும் மணிவாசகபெருமானும் அவர்களை வணங்கி நிற்கும் பாண்டிய மன்னரது அலுவலர்களும் அரிய வரைகோட்டுச் சித்திரத்தில் தீட்டப்பெற்றுள்ளனர். இராமலிங்கம் துணை என்ற தொடருடன் முடியும் இந்தச் செப்பேட்டினை சேதுபதி மன்னரது அலுவலரான அட்டவணை சேதுராமலிங்கம் என்பவர் வரைந்துள்ளார்.

ஸ்ரீ ஆவுடையார் - மாணிக்கவாசகர் என்ற தலைப்புடன் தொடங்கும் இந்தப் பட்டயத்தில் எழுபத்து ஐந்து வரிகள் உள்ளன. செப்பேட்டை வரைந்தவர் பெயர் காணப்படவில்லை.

## செப்பேடு எண் 23

(நகல்)

*முதல் பக்கம்*

1. சுபதஸ்ரீ தறி விசையாபுதைய சாலியவாகன ச
2. கார்த்தம் 1599க்கு மேல் செல்லாநி
3. ன்ற நள வருடம் மார்கழி மீ 21ன் ஆதித்த வாரமும் சு
4. க்லபட்ச திரயோதெசியும் மக நச்செத்திரமும் கிறகண புண்
5. ணிய காலமும் கூடிய சுபதினத்தில் திருப்பெருந்து
6. றை ஆளுடைய பரமசுவாமியாருக்கு உச்சிக்கால கட்டளை அ
7. பிஷேசு நெய்வேத்தியத்துக்கு திருமாலை திருவிளக்குமா
8. க சேது துரந்தரன் ராசாதிராசன் ராசபரமேசுரன்
9. ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராமனாதசுவாமி ப
10. றுவதவர்த்தினி பாதசேவிகன் இரவி
11. குலசேகரன் இரவி மார்த்தாண்டன் சொரிமுத்து
12. வன்னியன் தொண்டியந்துறை காவலன் வை
13. கை வளநாடன் வலியச் சருவி வழியிற்கா
14. ல்னீட்டி தாலிக்குவேலி சாடிக்காறர் கண்
15. டன் வீரவெண்பா மாலை பனுக்குவார் க
16. ண்டன் இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகைமன்
17. னர் சிங்கம் மன்னரில் மன்னன் வன்னியராட்டந்

---

* திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை.
படி அளித்து உதவியவர் : புலவர். திரு. ராஜு, தஞ்சை.

18. தவிழ்த்தான் ஆற்றில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி அஷ்ட்ட
19. லெட்சுமி நிவாசன் கனவித்தியா வினோதன் வீரத்தண்
20. டை சேமத்தலையுடையவன் சத்திய அரிச்சந்திரன் இர
21. ணிய கெற்ப்ப சுதாகரனாகிய திருமலைச் சேதுபதி காத்த தே
22. தவரவர்கள் தற்ம சாதனப் பட்டையம் குடுத்தபடி நம்மு
23. டைய தர்மத்துக்குக் கிராமம் சிறுகானூர் புது குடியும் புது
24. க்குளமும் உள்கிடை ஏந்தல் ஏரணி சிங்கன் ஏந்தல்
25. கள்ளகுடி ஏந்தல் இம்மானியம் தானசாதனம் பண்
26. ணிக் குடுத்தபடி இந்தக் கிராமத்துக்கு எல்கையாவது
27. சிறுகானூருக்கு கீழ்பாற் கெல்கை கோடிக்குளம் தே
28. ாறோருக்கு மேற்கு தென்பாற்க் கெல்கை பாம்பாத்து
29. க்கு வடக்கு மேற்பாற்க் கெல்கை புதுக்குடிக்கும் மூ
30. மா ஊறணிக்கும் கிழக்கு வடபாற்க்கெல்கை கோடி
31. க்குளத்து ஆத்துக்கும் எச்சிக்கோட்டைக்கும் தெற்கு இந்
32. த எல்கைக்குட்பட்ட கலம் 70 விரையடியும் புதுக்குடிக்கு
33. பாற்க்கெல்கை சிறுகானூர்க் கண்மாயிக்கு மேற்
34. கு தென்பாற் கெல்கையாவது பாம்பாற்றுக்கு வடக்கு 3
35. மேற்பாற்க் கெல்கையாவது திருத்தங்கல்க் கிளிவ
36. யலுக்கும் பகையணிவயலுக்கும் கிழக்கு வடபாற்க்
37. கெல்கையாவது எச்சிக்கோட்டைக் கண்வாயில் தென் காலுக்கு

### இரண்டாம் பக்கம்

38. தெற்கு இந்த எல்லைக்குட்பட்ட நிலம் 50 விரையடி கிராம
39. ம் ரெண்டுக்கு ஏந்தலுள்பட கலம் 120 விரையடி உச்சிக்கா
40. ல கட்டளைக்கு வெட்டித்திருத்தி சரிப்படுத்தி சுவாமி கா
41. ரியம் தாச்சி வராமல் நடப்பிக்கச் சொல்லி சாதனம் ப
42. ண்ணிக் குடுத்தோம் இந்த எல்லைக்குள்பட்ட கூப

43. டாகம் சில தரு பாசான நிதிநிசபயாக நாம் அனு
44. பவித்துக்கொள்ளவும் இந்த தர்மத்தை யாதாமொ
45. ருதர் வாக்குச்சகாயம் அர்த்த சகாயம் சரீர சகா
46. யத்தினேலேயும் பரிபாலினம் பண்ணின பேர் அனேக
47. சிவலிங்க பிரதிஷ்டை பலனும் மாணிக்க
48. வாசகர் பெற்ற பேறும் பெற்று கோடிமகாவிரத போக
49. ங்களையும் அனுபவித்துப் புத்திர மித்திர களத்திரா
50. திகளுடனே சுகமே யிருப்பார்கள் இந்த தர்மத்து
51. க்கு யாதாமொருதர் விகாதம் பண்ணினபேர் மாதா
52. பிதாவையும் கெங்கைக்கரையிலே பிராமணாளையும்
53. காராம் பசுவையும் கொன்ற தோசத்திலே போவார்கள்
54. இந்தப்பட்டயம் எழுதினது அட்டவணை சேதுராமலிங்க
55. கம் பிள்ளை கைஎழுத்து

ராமலிங்கந் துணை.

## செப்பேடு எண் 25
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : கிழவன் என்ற ரகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : கீழக்கரை மீனாட்சி சொக்கநாத சுவாமி கோயில் ஸ்தானிகர் இராம லிங்க குருக்கள்.
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1600 காளயுக்தி வைகாசி (கி.பி. 1678)
4. செப்பேட்டின் பொருள் : கீழக்கரை துறைமுகத்து தீர்வைப் படுகிற பொருட்களில் மகமை.

நமக்கு கிடைத்துள்ள ரெகுநாத சேதுபதியின் செப்பேடு களில் முதலாவது இது. இராமநாதபுரம் மன்னராக முடிசூடிக் கொண்ட முதலாவது ஆண்டில், (அதாவது இரண்டாவது மாதத்தில்) வழங்கிய செப்பேடு. அறுபத்துமூன்று விருதுகள் மன்னரது சிறப்புப்பெயராகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை களில் ''பஞ்ச பாணாவதாரன்'' என்ற ஒரே ஒரு புதிய விரு தினைத் தவிர, ஏனையவை ஏற்கனவே இவருக்கு முன்னர் சேதுபதிகளாக இருந்தவர்கள் செப்பேடுகளில் பொறிக்கப் பட்டுள்ளவையாகும்.

இராமநாதபுரம் சீமையில் உள்ள கீழக்கரை முந்தைய காலங்களில் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது என்ற செய்தியை இந்தச் செப்பேடு சுட்டுகிறது. ஏற்கனவே இந்த ஊர் அனுத்தொகை மங்கலம், நினைத்தது முடித்தான்பட்டினம் என்ற பெயர்களில் வழங்கி வந்தது. அங்கு பதினெண் விஷயத் தார் என்று வழங்கப்பட்ட வணிகப்பிரிவினர் வாழ்ந்து வந்தனர் என்பதும் ''மடிச்சீலை'' (கைத்தறி துணி) முத்து வாணிபத்

# செப்பேடு எண். 26

**(விளக்கம்)**

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத கிழவன் சேதுபதி காத்ததேவர்
2. செப்பேடு பெற்றவர் : திருஉத்திர கோசமங்கை மங்கள நாத சுவாமி திருக்கோயில்.
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1600 காளயுக்தி ஆண்டு வைகாசி (கி.பி. 25-5-1678)
4. செப்பேட்டின் பொருள் : மேலேசுண்ட கோயிலுக்கு திருவிடையாட்டக் காணியாக நிலக் கொடை

இந்தச் செப்பேட்டில் ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னரது, விருதாவளிகள் மூன்று மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா, துரந்தரன், சிவகாரிய துரந்தரன் என்பன, மன்னரது இராமேசுவரம் திருக்கோயிலின் பால் உள்ள ஈடுபாட்டை குறிப்பிடுவன.

திருமலை ரெகுநாத சேதுபதி பரிதாபி ஆண்டு ஆனி மாத (கி.பி. 1672)ம் காலமானார் என்றும் அவருக்கு வாரிசு இல்லாத காரணத்தினால் கி.பி. 1673ல் அவரது சகோதரர் ராஜ சூரிய சேதுபதி அரியணை, ஏறியதாகவும் அன்னார் தஞ்சை நாயக்கமன்னரது சதிச்செயலினால் திருச்சியில் இறந்து விட்டதால் அவரது இளவல் அதானசேதுபதி பட்டமேறியதாகவும் இவ்விருவரது ஆட்சிக்காலம் சுமார் ஆறு மாதங்கள் மட்டும் நீடித்தாக இராமநாதபுரம் சமஸ்தான மான்யுவல் தெரிவிக்

தில் ஈடுபட்டு இருந்தனர் என்பதை அந்தக்கோயிலின் கி.பி. 1531, கி,பி. 1545ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்ற றனர்.[1] இத்தகைய வணிக வளர்ச்சியின் தொடர்பாக இந்தச் செப்பேடு விளங்குகிறது.

இந்த துறைமுகத்தில் தீர்வைப்படுகிற அனைத்துப் பொருள்மீதும், கீழக்கரை மீனாட்சி சொக்கநாதசுவாமி ஆலய ஸ்தானிகர் தேவேந்திர பட்டர் குமாரர் இராமலிங்க குருக்களுக்கு மகமை ஏற்படுத்திக் கொடுக்கும் உரிமைப்பட்டயம் இது. இங்கு வந்து கரை இறங்குகிற, ஏற்றுமதி செய்யப்படுகிற கீழ்க்கண்ட பொருட்களுக்கு செப்பேட்டில் கண்டுள்ளவாறு தீர்வை வசூலித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டு இருந்தது.

தீர்வைக்குரிய பொருட்கள் :-

1) தவசம் (நவதானியங்கள்) 2) நெல், 3) அரிசி 4) பாக்கு 5) மிளகு 6) பலசரக்கு 7) செம்பு 8) துத்தநாகம் 9) பட்டுப் புடவை 10) பன்னீர் 11) ஏலம், 12) கிராம்பு, 13) சாதிக் காய் 14) சாதிப்பத்திரி 15) பட்டுநூல் 16) கருப்புக்கட்டி 17) பினாட்டு 18) புளி 19) கருப்புக்கட்டி கொட்டான் 20) கொட்டைப்பாக்கு 21) தேங்காய் 22) சங்கு.

இந்தப்பட்டியலில் மடிச்சீலை (துணி) விடுபட்டுள்ள காரணம் தெரியவில்லை. ஒருவேளை நெசவுத்தொழிலை ஊக்குவிப்பதற்காக ஏற்றுமதியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு இருந்திருக்கலாம். ஏனெனில் இங்கு அராபிய முஸ்லீம்கள் 12வது நூற்றாண்டில் குடியேறத் தொடங்கியதில் இருந்து அவர்களது கடல் வணிகத்துடன் நெசவுத் தொழில் இங்கு வளர்ச்சியடையத் தொடங்கியது. இந்த ஊரின் கடல்துறையை அடுத்துள்ள பகுதி பஞ்சு வணிகர்களது இருப்பிடமாகியது. இன்றும் இந்தப்பகுதி பேரூராட்சிப் பதிவுகளின்படி பருத்திக்காரத் தெரு என வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் இந்தப் பகுதியில் டச்சுக்காரர்கள், சேதுபதி மன்னர் அனுமதியின் பேரில் நெசவு பட்டறை ஒன்றை நடத்தி வந்தனர். தெற்குத் தெருவில் ஏராளமான தறிகள் இருந்தன. இங்கும், இந்தப்பகுதியிலும்

1. A. R. 396 - 1907
A. R. 348 - 1907

நெசவு செய்யப்பட்ட துணிகளை வாங்குவதற்கும், இலங்கையில் இருந்து இறக்குமதியாகிய ஏலம், கிராம்பு, குறுமிளகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கொட்டைப்பாக்கு, ஆகிய பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கும் டச்சு, ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிகள் போட்டியிட்டதை பதினேழு பதினெட்டாவது நூற்றாண்டு ஆவணங்கள் தெரிவிக்கின்றன.[2] இந்த பொருட்கள் வாணிபத்தில் *சீதக்காதி மரைக்காயருக்கு* ஏகபோக உரிமை இருந்ததும் தெரியவருகிறது.

இந்தப் பொருட்களில், தவசம், நெல், அரிசி, பட்டுப் புடவை, பட்டுநூல், கருப்புக்கட்டி, கருப்புக்கட்டிக் கொட்டான், பினாட்டு, புளி, தேங்காய், சங்கு என்பன ஏற்றுமதியானவை என்றும் ஏனையவை இறக்குமதி என்றும் கொள்ளலாம். கருப்பட்டிக் கொட்டான், பினாட்டு என்பது இந்தப்பகுதி வட்டார வழக்கு. கருப்புக்கட்டிகளை வைத்து அனுப்புவதற்கு பனை ஓலையில் முடையப்பெற்ற பெட்டி கொட்டான் எனப்பட்டது. இந்தப்பகுதியில் பனை மரங்கள் ஏராளமாக இருந்தன. அவைகளின் பழம் மிகவும் நார் நிறைந்து இருப்பவை. இந்தப்பழங்களைத் தீயிலிட்டுச் சுட்டு, செம்மஞ்சள் நிறமான சதைப்பகுதியை (Guava) சுரண்டி எடுப்பார்கள். தின்பதற்கு இனிமையாக உள்ள இந்தப் பண்டம் *பனாட்டு* எனப்படும். ''*பனைமட்டு*'' என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு.

இந்தச் செப்பேட்டில் மன்னரது பெயர் ரகுநாத திருமலை சேதுபதி புத்ரன் ரகுநாத திருமலை சேதுபதி என்று (வரிகள் 30/32) குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இந்தப் பட்டயம் வழங்கிய கிழவன் என்ற ரகுநாத சேதுபதி - ரகுநாத திருமலை சேதுபதியின் புத்ரன் அல்ல. அவரது தங்கை மகன்-மருமகன். சேதுபதி பட்டத்திற்கு வருபவர் முந்தைய சேதுபதியின் மகனாக இருக்க வேண்டும் என்ற சம்பிரதாயத்தைப் பேணும் முறையில் ''புத்ரன்'' என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது, மற்றும் செப்பேட்டுவரி 38ல் மகமை ஊதியமாவது என்று குறிப்பிட்டிருப்பது இந்த வட்டார வழக்கு. இந்தக்கோயிலின் பூஜாகரரான

2. Shukri. Dr. M.A.M - Muslims of Sri Lankan (Colombo) pp. 179 - 183.

இராமலிங்க குருக்களுக்கு வேறு நிலையான வருவாய் இல்லாத காரணத்தால், மகமை ஊதியம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், மேலே கண்ட பொருள்களின் தீர்வையைத்தவிர, புதிதாக படகுசெய்து கடலில் இறக்கினாலும், கடை வாணியன் செக்கு ஆடினாலும், சரசுவதி பூஜை, தைப்பொங்கல், திருமணம் தின்மை அவைகளுக்கு என நிகுதி செய்யப்பட்ட வரிப்பாடுகளை யும் தண்டல் செய்து கொள்வதற்கு குருக்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டு இருந்தது. இந்தச்செப்பேட்டின் இறுதித் தொடர்கள் தேய்ந்து போய்விட்டதால், அவைகளைச் சரியாகப் படித்து அறிவதற்கு இயலவில்லை.

இந்த செப்பேட்டின் இன்னொரு முக்கிய செய்தி. இந்தச் செப்பேடு வழங்கப்பட்ட காலத்தில் கீழ்க்கரையில் பெருமளவு எண்ணிக்கையில் இசுலாமியர் வாழ்ந்துவந்தனர். இந்து சமயத் தினர் மிகவும் குறைவு. மன்னரது மகமை ஏற்படுத்தப்பட்டதற்கு காரணமே இதுதான். என்றாலும் கீழக்கரை துறைமுகத்தைப் பயன்படுத்தும் இஸ்லாமியர் இந்த மகமைத்தீர்வையை இராம லிங்க குருக்களுக்கு அளிக்க இணக்கமாக இருந்தனர் என்பது இந்தச் செப்பேட்டில் இணைந்துள்ள சிறப்பான செய்தியாகும்.

## செப்பேடு எண். 26

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1600 இதன்மேல் செல்லாநின்ற காலயுக்தி நாம

2. ருத்ராயணத்தில் வசந்த ரிதுவில் வைகாசி மாசத்து சுக்கில பட்சத்து பவர்ண

3. அமாவாசையும் சுக்கிரவாரமும் விசாக நட்சத்திரமும் சுபயோக சுபகரணமும்

4. பெற்ற புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேது மூலாரட்சா துரந்தரன்

5. சிவகாரிய துரந்தரன் துகவூர் கூத்தத்து காத்தூரான குலோத்துங்க

6. சோழ நல்லூர்க் கீள்பால் விரையாத கண்டனில் இருக்கும் இரண்ய கெற்பயாஜி

7. யான ரகுனாத திருமலைச் சேதுபதி காத்ததேவர் புத்ரந் ரகுனாத திரு

8. மலைச் சேதுபதி காத்த தேவர் தங்கள் மாத்ரு வர்க்கத் துக்கும் பித்ருவர்க்கத்துக்கும் புத்திரி

9. களுக்கும் புண்யமாக திருவுத்ரகோச மங்கை ஸ்வாமி மங்கைநாத ஸ்வாமி தி

---

* A.R.E. A. 35/1975
வடிவம் : 27 செ.மீ. × 26 செ.மீ.
இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் அரண்மனை அருங் காட்சியகம்

10. ரு விடையாட்டமாக திருவுத்தர கோர மங்கை முதலான கிறாமங்களுக் கெல்

11. லாம் ஸறுவமானிபமாக தாம்புரசாஸனப் பட்டயங் கொடுத்தபடி மடத்துவரி

12. உசாடி வரி, ஆயம், சுங்கம், கூரைவரி, பேர்வாரிக் கம்பளவரி, களஞ்சிய வரி பட்டண

13. சுவாமி வலங்கைவரி, எழுத்தாணிவரி, கீதாரம் நன் மாடு சுரபிக்கத்தாவரி, கலவ

14. ஈழம், புஞ்சைவரி மானோன்புக்கிடாய்வரி, கொல்லர், தச்சர் வரி, திருகைவரி, சா

15. ணார் வரி, பாசிவரி, பனைங்கடமை தறிக்கடமை, பலபட் டடை வரி இது முதலா

16. ன பலவரி உண்டானதும் ஊழியம் உலுப்பையும் சகல சமுத்தமும் ச

17. றுவமானியாக ஸ்வாமி மங்கைநாத ஸ்வாமிக்குக் கட்ட ளையிட்டு தாம்புரஸாஸந

18. ப் பட்டயங் கொடுத்தோம். இந்தப் படிக்கு ஆதி சந்திரா தித்த வரை சந்ததிப்ர

19. வேஸம் ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தர்மத்

20. தை யாதாமொருவன் பரிபாலநம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையி

21. லும் கோடிசிவலிங்க பிரதிஷ்டையும், கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின

22. பலத்தை அடைவராகவும் இதுக்கு யாதாமொருவன் அகுதம் ப

23. ண்ணினவர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக் கரையிலும் மாதா பிதாவை

24. யும் குருவையும் காராம் பசுவையும் பிராமணனையும் கொன்ற தோஷத்திலே

25. போகக் கடவாராகவும் உ ஸ்வதத்தா த்வி குணம் புண்யம் பரதத்தா

26. நு பாலனம் பரதத்பஹாரெண ஸ்வதத்தாம் நிஷ்மபலம் பவேத்

27. உ பரதேசி முத்திரை புழுகுவனச் சொக்கனாத பண்டாரம் கர்த்த

28. ாக்கள் கிட்ட வாங்கின செப்பேடு உ

கின்றது[1]. இவர்களை அடுத்து ரெகுநாத கிழவன் சேதுபதி பட்ட மேறியதாக (கி.பி. 1674ல்) அதே வரலாற்று நூல் விளம்பு கிறது.

சேதுபதி மன்னர்கள் பற்றிய ஆய்வுரை ஒன்றில் திருமலை சேதுபதி மன்னர் இறந்தது கி.பி. 1670 என நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது[2]. ஆனால் இதுவரைக் கிடைத்துள்ள கல்வெட்டு செப்பேடு ஆகியவைகளில் இருந்து இந்தக் கால நிர்ணயம் தவறு என்பது தெளிவாகிறது. இதனை திருமலை ரெகுநாத சேதுபதி மன்னரது சாலிவாகன சகாப்தம் 1598 நள ஆண்டு மார்கழி மாதம் 21 க்கு சரியான 1677 டிசம்பரில் வழங்கப் பட்டுள்ள திருபெருந்துறை கோயில் செப்பேடும் சக 1599 பிங்கல வைகாசிக்கு சரியான கி. பி. 1678ம் செப்பேடு என்றும் உறுதிபடுத்துகிறது. இந்தச் செப்பேட்டில் ''இரண்ய கற்பத்தனான திருமலை ரெகுநாத சேதுபதி'' என செப்பேடு வழங்கியவர் பெயர் தெளிவாக பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டிய மன்னர்களுக்குப் பிறகு முதன் முறையாக ''இரண்ய கற்ப'' வேள்வி நடத்தி இரண்ய கற்ப யாஜி என்ற பெயரைப் பெற்றவர் திருமலை ரெகுநாத சேதுபதி ஒருவர்தான். ஆதலால் அவரது திருப்பணியும் ஆட்சியும் கி.பி. 1678 வரை தொடர்ந்து வந்துள்ளன.

ஆதலால் இந்தச் செப்பேட்டில் குறிப்பிட்டுள்ள ''திருமலை ரெகுநாத சேதுபதி புத்திரன் திருமலை சேதுபதி'' ரெகுநாத கிழவன் சேதுபதியே யன்றி திருமலை ரெகுநாத சேதுபதி அல்ல. அதற்கு மாறாக, இந்தச் செப்பேடு கிழவன் ரெகுநாத சேதுபதி யால் வழங்கப்பட்டது ஆகும். சேதுபதி மன்னருக்கு வாரிசு இல்லாமல் இறந்து விட்டதால், அவருக்கு அடுத்து சேதுபதியாக பதவி பெறுவர் முந்தைய சேதுபதியின் மைந்தனாக இல்லா விட்டாலும் தம்மை இறந்துபோன மன்னரது மகனாக அரசு ஆவணங்களிம் குறிப்பது இராமநாதபுரம் அரண்மனையின் சம்பிரதாயமாக இருந்து வந்துள்ளது.

1. Rajaram Rao T. Manual of Ramnad Samsthanam (1891) page. 235-36.
2. Seshari Dr. R. Setupatis of Ramnad (1972) Unpublished Thesis

இந்தச் செப்பேடு திருஉத்திரகோசமங்கை சுவாமிக்கு திருவிடையாட்ட காணியாக திருஉத்திர கோசமங்கை முதலிய ஊர்களைக் கொடுத்துள்ளதை இந்தச்செப்பேடு தெரிவிக்கின்றது. அதுவரை அந்தக் கிராமங்களிலிருந்து சேதுபதி மன்னருக்குக் கிடைத்து வந்த மடத்து வரி, உசாடி வரி, ஆயம், சுங்கம், கூரை வரி, கம்பள வரி, களஞ்சிய வரி, வலங்கை வரி, எழுத்தாணி வரி, கீதாரம், நன்மாடு சோபிக்காத வரி, கலவை ஈழம், புஞ்சை வரி, மனோன்பிக்கிடாய் வரி, கொல்லர்தச்சர் வரி. திருகை வரி, பாசி வரி, சாணார் வரி, பனங்கடமை, தறிக்கடமை பலப் பட்டடை வரி ஆகிய வருவாய் அனைத்தும் அந்தக் கோயிலுக்கே சேருமாறு இந்தப் பட்டயத்தை சர்வமானியமாக மன்னர் வழங்கி யுள்ளார்.

ஒரே பக்கத்தில் மட்டும் வரையப் பெற்றுள்ள இந்தச் செப் பேட்டில் இருபத்து எட்டு வரிகள் உள்ளன. ஐந்தாவது வரி யின் கீழ் சேதுபதி என்ற தெலுங்குச் சொல் காணப்படுகின்றது திருஉத்திரகோச மங்கை திருக்கோயில் சார்பாக இந்தச் செப் பேட்டின் அந்தக் கோயிலின் நிர்வாகி புழுகுவனச் சொக்கநாத பண்டாரம் பெற்றுக்கொண்டுள்ள விவரமும் அவரது பணிப்பதவி பெயர் பரதேசி முத்திரை என்பதும் இந்தச் செப்பேட்டின் இறுதி வரிகளில் இருப்பது தெரிய வருகிறது.

## செப்பேடு எண் 27

(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலியவாகன சகாற்தம் 1601 இதின் மேல் செல்லாநின்ற சித்திராதிநாலை சம்வச்சற

2. தில் உத்திராயணதில் யேமந்தறுதுவில் மகாமாசத்து பூர்வ பஷத்து துதிகையும் குருவாசரமும் சதை

3. யநச்சத்திரமும் சுரபாசியநாமயோகமும் பிலாவாகறணமும் பெத்த சுபதினதில் தேவநகராதிபன்

4. சேதுமூல ரெக்ஷாதுறந்திரன் இராமநாதசுவாமி காரியது ரந்துரன் பரராசசேகரன் பரராஜசிங்

5. கன் ரவிகுலசேகரன் சிவபூசாதுரந்தரன் சொரிமுத்து வன்னியன் செகதலகீர்த்திப்பிரதாபன் மஹா

6. மண்டலேசுவரன் அரியதளவிபாடன் பாசைக்குத் தப்பு வராத கண்டன் கண்ட நாடு கொண்டு கொ

7. ண்டனாடுகுடாதான் பட்டமானங்காதான் துட்டராதிவ கண்டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன்

8. வேதியர் காவலன் அரசராவணராமன் அடியார் வேளை க்காரன் வைகைவழநாடன் கொட்டமடக்

9. கியவைய்யாளி நாராயணன் இவுளிபாவடி மிதித் தேறு வார்கண்டன் வீரத்தலை சேமத்தலை

10. விளங்கும் இருதாளினான் இலம்ஞ்சிங்கம்ந்தலஞ்சிங்கம் பகைமன்னற்சிங்கம் தொண்டிது

---

‡ ASSI. Vol. IV. PP.79-80.

11. ளைகாவலன் ஆதில்பாச்சி கடலில்பாச்சி மதப்பிவி அடக் கலம் ங்காத்தான் தாலிக்குவேலி சதிரா

12. திகள் முண்டன் ராசாதிராசன் ராசமார்தாண்டன் ராச கெம்பீரன் கீர்த்திப்பிரதாபன் ஆரியமா

13. னங்காத்தான் அனுமகேதணன் குடைக்கிகர்ணன் கருணா கடாக்ஷன் வீரலக்ஷ்மிபிரதாபன் விஜை

14. யலக்ஷ்மிபிரசண்ணன் சத்திய அரிச்சந்திரன் சகல வித்தியா விணோதன் சகலசாம்பிராச்சிய லட்சுமி

15. விலாசன் செயதுங்கறாயன் துகவூர்கூத்தத்துகாத்தூறான குலோதுங்கசோளநல்லூர் கீள்பால் விரை

16. யாதகண்டணிலிருக்கும் ஸ்ரீ யிரணியகெற்பயாசிரெகுநாத திருமலை சேதுபதிகாத்த தேவரவர்கள் புத்தி

17. ரன் ரெகுனாதசேதுபதி காத்ததேவரவர்கள்இராமீசுவறத்தி லிருக்கு இராமனாதசுவாமி பூசாபறாப

18. ரான சங்கரகுருகள் மகன் காசிபகோத்திரத்தில்ஆபஸ்தம்ப சூத்திரதில் ரெக்சாகாதியாபகரான ரெகு

19. நாதகுருக்களுகூ தானசாசனம் பண்ணிக் கொடுத்த சாதன மாவது இராமீசுறதில் நம்முடைய

20. குலதெய்வமான இராமனாத சுவாமிக்கு உச்சிகாலத் திருவனந்தல் அபிஷேகம் பூசை நெய்வேதிய

21. துக்காக தேவர் கட்டளை உண்டுபெண்ணி சேமணூர் முகிள்த்தகம், நிலமளகியமங்களம், சின்னதொ

22. ண்டிவகையிறா கிராமங்களும் அந்த கிராமங்களுக்கு நாம் தனித்தனியாயி பண்ணிகொடுதிருக்கிற

23. தானசாசன பட்டயங்களும் திருவாபறணம் பட்டு பருத்தி வெள்ளிவாகனங்கள் வெள்ளிபாத்திரம்

24. வகையறா சகலசம்பத்தை தம்முடைய வசமாககொடுத்து ஸ்ரீ இராமனாதசுவாமி கோவிலுக்கு

25. தம்மை முதன்மையான குருக்களாக யேர்ப்படுதி தமக்கு கிராமம் தண்டிகை பட்டுக்குடை ரெட்

26. டைதீவட்டி உபயசாமறம் அக்கிரதாம்பூலம் முதலனா சகலமரியாதிகளும் குடுத்து ஸ்ரீ கட்டளை

27. விசாறணை மிராசையும் நம்முடைய நாமாங்கிதமான தேவற்முதிரை மிறாசையும் இராமனாத

28. சுவாமி பருவதவர்த்தினி அம்மன் திருக்கலியாண உஜபம் மாசி - ஆனி - ஆடி - ஆவணி மாசங்க

29. ளில் நடக்கின்ற உஜவாதிகளுக்கு ரெக்ஷாபந்தனம் பண்ணிக்கொண்டு துசராரேகணம் முதலிய

30. உஜபகாரியங்களையும் அதற்குச் சேர்ந்த வருமானங் களையும் தமக்கு சகிரொண்ணியயோதக தாரா

31. பூர்வமாக தானசாசனம் பண்ணி குடுத்திருப்பதினாலே ஷை கட்டளை விசாறணை முதிரை உஜவா

32. திகள் இவ்வகை மிறாசுகளையும் தமக்கு நாம் சொந்தத் துக்காக குடுத்திருக்கிர கிராமத்தையும் காணி

33. யாச்சியாகவும் பரம்பரையாகவும் அனுபவித்து கொள்ளு கிறதுடன் ஷை கட்டளை கிராமங்களின்

34. வருமானத்திலும் சன்னதி திருமுன் காணிக்கை ஆதாய வரும்படியிலும் வருசம் க யெண்ணூரு

35. பொன்னு வீதம் சுவந்திரமாக யெடுத்து கொள்கிறது நெய் வெத்திய பிரசாதம் வகையில் காலம் ஒன்றுக்கு

36. அஞ்சுசாத அஞ்சு உருப்படியும் ரெண்டுகாலத்து நெய் வேதியவடிசலையும் ரெண்டு காலத்து காளா

37. ஞ்சி சந்தணம் வகையறாவும் ஸ்ரீ கட்டளை முத்திரை உச்சபம் வகையறாவுக்குள்ள வருமானசுவந்திர

38. முளுமையும் தாமெ புத்திரபவுத்திரபரம்பறையாகவும் ஆசாந்திரர்க்கஸ்தாயி ஆகவும் பரம்பறாபிரவே

39. சமாகவும் ஆண்டனுபவிச்சு கொள்ளக் கட்டளையிட்டோம் இத்ததற்மத்தை இந்த சமஸ்தானத்

40. தில் நம்முடையவம்மிசதில் உள்ளவர்கள் பரிபாலினம் பண்ணினவர்களுக்கு கெங்கைகரையிலும்

41. சேதுக்கரையிலும் கோடி சிவலிங்கப்பிரதிஷ்ட்டை பண்ணி னபலனும் கோடி கன்னிகாதானம்

42. பண்ணினபலனும் கோடி அக்கிரகாரப் பிரதிஷ்ட்டை பண்ணினபலனும் அடைவார்கள் இந்த தற்ம

43. துக்கு அகிதம் நினைத்தவர்கள் கெங்கைகரையில் காராம் பசுவை கொண்ட தோசத்தை சேதுக்கரையில்

44. மாதா பிதாவையும் குருவையும் கொண்ட தோஷத்தை அடைவார்களாகவும் இந்தப்படிக்கு சகிரண்

45. ணியோதககதாற பூர்வமாக கோவில் காணியாச்சி ஆன தர்மசாசன பட்டையம் பண்ணிகொடு

46. த்தோம் ரெகுநாதகுருக்களுக்கு ரெகுனாத சேதுபதிகாத்த தேவரவர்கள் இந்த சாதனபடயம்

47. எளுதினேன் ராயசம் ராமசாமி கையெழுத்து.

# செப்பேடு எண் 27

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| . | செப்பேடு வழங்கியவர் | : | ரகுநாத சேதுபதி காத்த தேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் சங்கர குருக்கள் மகன் ரகுநாத குருக்கள் |
| 3; | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1601 சித்தார்த்தி ஆண்டு (AD 1678) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | இராமநாதசுவாமி கோயிலில் மேலே கண்ட குருக்களுக்கு காணியாட்சி. |

இந்தச் செப்பேட்டில் சேதுபதி மன்னரது சிறப்புப் பெயர்களாக நாற்பத்து ஏழு விருதுகள் பொறிக்கப்பட்டுள்ளன, இவைகளில் பாராதிகேசவன், செகதலகீர்த்திப்பிரதாபன் என்ற இரண்டு புதிய விருதுகளைத் தவிர ஏனையவை, இந்த மன்னரதும் முந்தையோரதுமாக முந்தைய செப்பேடுகளில் காணப்படுபவையாகும்.

இராமேசுவரம் திருக்கோயில் குருக்களான சங்கர குருக்கள் மகன் ரகுநாத குருக்கள் சேதுபதி மன்னர், இராமேசுவரம் திருக்கோயிலில் ஏற்படுத்தியுள்ள தேவர் கட்டளை சம்பந்தப்பட்ட திருப்பணிகளை மேற்கொண்டு நடத்துவதற்காக சேதுபதியின் முதன்மை குருக்களாக நியமனம் செய்து கட்டளையிட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இராமநாத சுவாமிக்கு உச்சிக்காலம் திருவனந்தல், அபிசேகம், பூஜை நைவேத்திய, ஆகியவைகளை முறையாக நிறைவேற்றி வைப்பதற்கு உடலாக வழங்கப்பட்டுள்ள சேமனூர், முகிழ்த்தகம், நிலமழகிய மங்கலம் சின்னத்தொண்டி ஆகிய நான்கு கிராமங்களையும், மற்றும்

மன்னர் வழங்கியுள்ள திருவாபரணம். பட்டு, பருத்தி, வெள்ளி வாகனங்கள், வெள்ளி பாத்திரங்கள் மற்றும் இதர சம்பத்துக் களையும குருக்கள் பொறுப்பேற்று, இராமநாதசுவாமி பர்வத வர்த்தினி அம்மன் திருக்கலியாணம் உற்சவம், மாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் நடைபெற வேண்டிய உற்சவங்-களுக்கு காப்பு தரித்து, துவஜ ஆரோகணம் செய்து விழாக்களை முறையாக நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பது மன்னரது கட்டளை. இவைகளை நடத்தி வைப்பதற்காக குருக்களுக்கு சில மரியாதைகளையும் சலுகைகளையும் மன்னர் வழங்கி இருந்ததையும் இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. மன்னரது கோயில் கட்டளையை நிறைவேற்ற நியமனம் பெற்றவருக்கு மன்னரைப் போன்ற ஆடம்பர நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டு இருப்பது மன்னரது விசால மனப்பான்மையைக் காட்டுகிறது.

ரகுநாத குருக்களுக்கு தண்டிகை பட்டுக்குடை, இரட்டைத் தீவட்டி, உபயசாமரம். அக்கிர தாம்பூலம், ஆகிய மரியாதை கள் ஏற்படுத்தப்பட்டு கோவிலில், கட்டளை, விசாரணை மிராசு தேவர் முத்திரை மிராசு தகுதிகளும் அளிக்கப்பட்டன. இவைகளை காணியாட்சியாக அவர் பாரம்பரியமாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இதற்காக அவர், மேலேகண்ட கிராமங்களில் இருந்து வரும் வருமானத்திலும் கோயில் சன்னதியில் கிடைக்கிற காணிக்கை ஆகிய இந்த வகையான வரவுகளில் இருந்து வருடத் திற்கு எண்ணூறு பொன் சுவந்திரமாக எடுத்துக்கொள்ளவும்நெய் வேத்திய பிரசாதம், சந்தனம், காளாஞ்சி ஆகியவைகளில் பங்கு பெறுதல் விழாக்களில் பெறுகின்ற வருமானம் முழுவதையும் அனுபவித்துக்கொள்ளுதல் ஆகிய உரிமையினை இந்தச்செப்பேடு மூலம் மன்னர் வழங்கி இருந்தார் என்பதும் தெரிகிறது. தானம் வழங்கப்பட்ட கிராமங்கள் சேமனூர் இன்றைய பரமக்குடி வட்டத்திலும் ஏனைய மூன்று ஊர்களும் திருவாடானை வட்டத் திலும் அமைந்து இருக்கின்றன. இந்த ஊர்களைத் தவிர ரகுநாத குருக்களது சொந்த உபயோகத்திற்காக மன்னர் வேறு ஊர் ஒன்றினையும் வழங்கி இருந்தார் என்பது ''தமக்குச் சொந்தத்திற்காக குடுத்து இருக்கிற கிராமத்தையும்'' (வரி 32) என்ற தொடரில் இருந்து தெரிகிறது. *மிராசு* என்பது பார்சி மொழிச்சொல் தொடர்ந்து வரும் உரிமை என்ற பொருளில் வந்துள்ளது. முத்திரை என்பது பணி என்பது.

இந்தச்செப்பேடு வழங்கப்பட்ட காலத்தில், இராமேசுவரம் திருக்கோயில் பணிகளை நிறைவேற்றுவதற்காக இருந்த ஆதின கர்த்தர் பணி இடம் தொடர்ந்து ஏதோ ஒரு காரணத்தினால் காலியாக இருந்திருக்க வேண்டும். என ஊகிக்கப்படுகிறது. அத்துடன் சைவபண்டாரத்தைவிட வடமொழி ஆகமங்களில் வல்ல ஆரிய குருக்கள், முறையாக மன்னரது கட்டளைகளை செயல்படுத்துவார் என்ற நம்பிக்கையிலும் சேதுபதி மன்னர் ரெகுநாத குருக்களை, மேலே கண்ட திருக்கோயில் பணிகளை நிறைவேற்ற நியமனம் செய்து இருக்க வேண்டும்.

## செப்பேடு எண் 28

(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1615 இதின்மேல் செல்லாநின்ற ருத்ரோத்கரி நாம சம்வச்ரத்து உத்தராயண

2. ஹேமந்த ரிதுவில் புஸ்ய மாசத்தில் கிருஷ்ண பட்சத்து அமாவாசையும் ஹஸ்த நட்சத்திரமும்

3. சுபயோக சுபகரணமும் கூடிய சூரிய கிராண புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேதுமூலா

4. ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் இரவி குலசேகரன் வீரவள நாடன் வேதியர் காவலன்

5. வைகை வள நாடன் வன்னியராட்டம் தவிழ்த்தான் அனும கேதனன் குன்றினுயர் மேருவினில் குன்றா

6. வளை பொறித்தவன் சுவாமி துரோகியர் மிண்டன் வீர கஞ்சுகன் சகல சாகித்ய வித்யா வினோதன் அந்தம்பர

7. ராயன் துகவூர் கூத்தத்தில் குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் திருமலைய இரண்

8. ய கெற்ப யாசி சேதுபதி ரெகுநாத தேவர் அவர்கள் புத்திரன் ஸ்ரீ ரெகுநாததேவர் தம்முடைய கனிஷ்டர் வங்கி சத்தில் சுந்தர

9. பாண்டியன் பட்டணத்தில் அக்கிரகாரத்திற்கும் ஏகாம்பர நாத சுவாமி பூசைக்கும் நாம் சேதுமூலத்தில்

10. தானமாகக் குடுத்த கிராமங்கள் அஞ்சுகோட்டை பற்றில் மடதர்மத்துக்குக் குடுத்த கிராமமாவது சுந்தரபாண்டியன்

---

‡. சென்னை அருங்காட்சியத்தில் உள்ளது

11. பட்டணம் கொந்தளன் கோட்டை பொன்னுக்கு மீண்டான் சிறுகவயல் கரிசல் குளம் எட்டிசேரி மருங்கூர்
12. உடையநாத சமுத்திரம் இந்தவகை கிராமங்களுக்கெல்கை யாவது கீழ்பாற் கெல்கை சமுத்திரத்திற்கு மேற்கு தென்
13. பாற்க் கெல்லை வல்லம் பொருந்துக்கும் இடையன் மடத்துக்கும் நடக்கிற இடையன் வயலுக்கும் சமுத்திர முடையார் திருவிடை
14. ஆட்டமான புல்லு வயலுக்கும் மேற்படி தானத்தார் வயலுக்கும் மாதவனேரிக்கும் பழம்பதிநாதர் திருவிடையாட்டமான டட்டமங்கலத்துச்கும் அய்யனாரேந்த
15. லுக்கும் வடக்கு மேல்பாற்க் கெல்கை ஒருர் குழிக் கல் கிழக்கெல்கையாவது இடையன் செய்க்கும் பழம்பதி வாய்க்காலுக்கும் வெட்டுச் செய்க்கும் பண்ண
16. செய்க்கும் கோவலன் கிடங்குக்கும் கோட்டை வாசல் செய்க்கும் வெட்டுச்கு.............வீரனுக்கும் வளையன்
17. கிழக்கு வடபாற்க்கெல்கை விருசிலை நதிக்குத் தெற்கு இந்த நான்கெல்கைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை, திட்டு
18. திடல் உப்பளமும் ஏகாம்பரநாத சாமிக்குக் கொடுத்த பனஞ்சாயல் பள்ளித் தம்மத்தைச் சேர்ந்த புறவுக்குக் கீழ் பாற்க் கெல்கை புதுக்குடிக் குளத்துக்கும் மணக்குளத்திற்
19. கும் நடுக்கிராமத்துக்கும் மேம்பாற்க் கெல்கை மச்சூருக்கும் விரிசிலையாத்துக்கும் வட்டாணத்துக்கும் மச்சூருக்கு வருகின்ற குளக்காலுக்கும் வடக்கு மேற்பாற்க் கெல்லை
20. மருதூர்க்கும் கிழக்கு வடபாற்க் கெல்லை கப்பலூர் புரவுக்குத் தெற்கு ஆக இந்த நான்கெல்கைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடலும் சுந்தரபாண்டியன்
21. பட்டணத்தில் அக்கிரகாரத்துக்கு விட்டுக் கொடுத்த புல்லூர் மருதூருக்கு எல்லையாவது கீழ்ப்பாற்க் கெல்கை நாவலூர் குளத்துக்கும் பள்ளத்தூர் குளத்துக்கும் கிழக்கு
22. மடக்குளத்துக்கும் மேற்கு தெற்கு எல்கை விரிசிலை யாத்துக்கு வடக்கு மேல்பாற்க் கெல்கை மல்லனூருக்கும்
23. ஆக்கலூருக்கும் வீரத்தேவன் பட்ட பெருமாள் திருவிடையாட்டமான வெள்ளமுடையானுக்கும் கிழக்கு வடபாற்க்

24. கெல்கை புலிபூநக்கும் மண்டலக் கோட்டைக்கும் தெற்கு மாக இந்த நான்கெல்கைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை.

25. திட்டுத் திடலும் ஆக இந்த வகை கிராமங்களில் உண்டான நிதி நிட்சேபனங்கள் செல தருபாசான மென்கிற ......... அஷ்டபோக சுவாமியங் களும்

26. இவ்விதமாக நடந்நுவரக் கடவராகவும் இந்தப் படிக்கு தான சாசனத்தில் கண்டதைச் சேர்ந்த தர்மத்துக்கு

27. நடக்கிற கிராமங்களையும் ஏகாம்பரநாதர் சுவாமிக்கு நடக்கிற தர்மத்தையும், அந்த தர்மத்திற்கு நடக்கிற

28. கிராமத்தையும் பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலும் இராமேசுவரத்திலேயும் அநேக சிவலிங்க பிரதிஷ்டை பிரம்ம பிரதிஷ்டை பண்ணின மேன்மைகளை

29. அடையக் கடவராகவும் இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்கள் பெரும்பாதகத்தைப் பண்ணின பாவத்

30. தில் போகக்கடவராகவும் ...... தர்மம் அன்னதானம் சத்திர மட தர்மத்திற்கு கட்டளையிட்ட கிராமங் களுக்கும் ஏகாம்பர நாத

31. சுவாமிக்கு நாம் கொடுத்த திருவிளையாட்டத்துக்கு சுந்தர பாண்டியன் பட்டணத்தில் விட்டுக் கொடுத்த அக்கிரகார

32. தர்மத்துக்கும் பலவரி முதலியன சிலவரி பெருவரி உண்டான சகல வரியும் நாம் வேண்டாமென கட்டளையிட்ட

33. படியினாலேயே இந்தப்படிக்கு சர்வமானியமாக நடைப் பித்துக் கொள்ளக் கடவராகவும்

## செப்பேடு எண் 28
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி மன்னர்
2. செப்பேடு பெற்றவர் : பெயர் குறிப்பிடவில்லை
3. செப்பேட்டின் காலம் : சகம், 1615. ருத்ரோத்காரி புஷ்ய மீ கி.பி. 1693
4. செப்பேட்டின் பொருள் : சுந்தரபாண்டியன் பட்டினத்தில் அக்கிரகாரம், மடம், ஏகாம்பர நாதர் சுவாமி பூஜைக்கு ஊர்கள் தானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய ரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக பதின்மூன்று சிறப்புப் பெயர்கள் மட்டும் இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இந்த மன்னரது முந்தையச் செப்பேடுகளில் ,குறிக்கப்பட்டவையாகும்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேது மன்னர் ரெகுநாத தேவர் அவர்கள் புத்திரன் ஸ்ரீ ரெகுநாதத் தேவர் என்று மட்டும் குறிப்பிடுவதனால் சேதுபதிகளில் இவர் எந்த சேதுபதி என்ற ஐயப்பாடு எழுவது இயல்பு. சூரிய வம்சத்தினர் என்ற முறையிலும் இராமபிரானுக்கு நாதன் (ரெகுநாதன்) இராமநாத சுவாமியை வழிபடுகின்றவர்கள் என்ற வகையிலும் சேதுமன்னர்களனைவரும் ரெகுநாத என்ற பெயரினை தங்களது இயற்பெயராகவும் சிறப்புப் பெயராகவும் கொண்டு இருந்தனர். இந்தச் செப்பேட்டின் காலத்தைக் கொண்டும். ''இரண்ய கெற்ப யாஜியான சேதுபதி ரெகுநாத தேவர் அவர்கள் புத்திரன்'' என்ற சொற்றொடரிலிருந்தும் இந்தச் செப்பேட்டை வழங்கியவர் ரெகுநாதக் கிழவன் சேதுபதி என்பது புலனாகின்றது.

சுந்தரபாண்டின் பட்டினத்தில் அக்கிரகாரம், மடம், ஏகாம்பரநாத சுவாமி பூஜை ஆகியவைகளுக்கு எட்டு கிராமங்கள் தானம் வழங்கப்பட்ட செய்தியை இந்தச் செப்பேடு கொண்டுள்ளது. சுந்தரபாண்டியன் பட்டினம் கொந்தலன் கோட்டை, பொன்னுக்கு மீண்டான், சிறுகவயல், கரிசல்குளம், எட்டிசேரி, மருங்கூர், உடையநாத சமுத்திரம் என்பன அவை. இந்த கிராமங்களுக்கான பெருநான்கு எல்கைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதால் இவைகளிலிருந்து சில புதிய தகவல்களைப் பெறுவதற்கு ஏதுவாக உள்ளது.

சுந்தரபாண்டியன் பட்டினம் சேது நாட்டின் வடக்குப் பகுதியில் கடற்கரையில் அமைந்த ஊராகும். பிற்காலப் பாண்டியர்களில் சிறந்து விளங்கிய மாறவர்மன் சுந்தரபாண்டியன் அல்லது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆகிய பேரரசர் ஒருவரின் பெயரால் இந்த ஊர் எழுந்துள்ளது. இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ள இந்த ஊரில் இன்று அக்கிரகாரம் மடம், கோயில் என எதுவும் இல்லை. வருவாய்த்துறை பதிவுகளில் இந்த ஊர் சோனகன் பேட்டையைச் சார்ந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இந்த ஊருக்கு அண்மையில் இஸ்லாமியரது அஞ்சுவன்னம் ஒன்று இருந்ததை தீர்த்தாண்ட தானக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[1]

இஸ்லாமிய மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்த ஊர் முத்துக் குளித்தலிலும் முத்து வணிகத்திலும் சிறந்திருந்ததாக பதினேழாம் நூற்றாண்டு ஆவணங்கள் கூறுகின்றன. இந்த வட்டாரத்தில் திருவேகம்பத்து என்ற ஊரில் உள்ள இறைவனது பெயர் ஏகாம்பர நாதர் என்பதை கி.பி. 1667 ஐச் சார்ந்த செப்பேடு ஒன்றிலிருந்து தெரிவதால் ஏகாம்பர நாதர் சுவாமி பூஜை என குறிப்பிட்டிருப்பது திருவேகம்பத்து திருக்கோயில் இறைவனைப் பற்றியதாக இருக்கலாம்.

மற்றும் இந்தச் செப்பேட்டின் வரி பதினேழில் பனஞ்சாயல் பள்ளித் தம்மம் என்ற சொல் காணப்படுவதில் இருந்து பனஞ்சாயல் கிராமத்தில் சமணப்பள்ளி யொன்று இருந்து வந்ததும்

---

1. தீர்த்தாண்டதானம் கல்வெட்டு. A.R. 598/1926.
செப்பேட்டு தொடர். எண். 89.

தெரிய வருகிறது. இந்த ஊரின் மேற்கே விரிசிலையாற்றின் வடக்குக் கரையில் ஜீனேந்திரமங்கலம் என்ற அனுமந்தக்குடியில் இன்றும் சமணர்கள் வாழ்ந்து வருவதும் அவர்களது திருக்கோயில் ஒன்று மளவநாதர் பெயரில் அமைந்திருப்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் இந்த வட்டாரத்தில் சமண சமயம் பரவியிருந்தது என்பதற்குச் சான்றாக மயிலூரணி, நாகமங்கலம், நாகணி, நாகாடி, சாத்தனூர், சாத்தணி, சாத்தமங்கலம், சாத்தன்பள்ளி, சாத்தரசன் கோட்டை என்ற சிற்றூர்களும் இருந்து வருகின்றன.

பதினேழாம் நூற்றாண்டில் சேதுபதி சீமையில் கடல் நீரிலிருந்து உப்பு விளைவிக்கப்பட்ட செய்தி வரி எண். 16ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அண்மைக்காலம் வரை இந்த ஊருக்கு அருகிலுள்ள வட்டாணத்தில் பெருமளவில் உப்பளங்கள் இருந்ததை அரசு ஆவணங்களில் காண முடிகிறது. இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ள கிடங்கு, தம்மம், திட்டு, திடல், புரவு, பொருத்து, குளக்கால் ஆகியவை இந்த வட்டார வழக்குகள் ஆகும். கிடங்கு என்பது ஆடுமாடுகள் அடைக்கப்படும் பட்டி. தம்மம் - தருமம் - பொதுவாக ஊரணிகள்.

## செப்பேடு எண். 29

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் 1616 கலியத்தம்
2. 4785 இதின்மேல் செல்லாநின்ற ரத்தாட்சிநாம
3. சம்வச்சரத்தில் சுக்குலபட்சத்தில் வசந்தருதுவாகிய வைய
4. சிமாசத்தில் சுக்குலபட்சத்தில் பெற்ற அமாவாசையில் பானு
5. வாசரமும் விசாகநட்செத்திரமும் சுபநாம யோகமும் வாத்தி
6. வாகரமுபெத்த சுபதினத்தில் ஸ்ரீமகாமண்டலேசுபரன் அ
7. ரியதளவிபாடன் பாசைக்குத் தப்புவராத கண்டன் கண்ட நா
8. டுகொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்
9. டலத் தாபனாசாரியன் சோளமண்டல பிறதிஷ்டாபனாசாரி
10. யன் தொண்டமண்டல சண்டப்பிரசண்டன் ஈளமுங் கெ
11. ாங்கும் யாப்பாண பட்டணமு எம்மண்டலமு மளித்து
12. கெசவேட்டைகொண்டருளிய ராசாதிராசன் ராசபர
13. மேசுபரன் ராசமாற்தாண்டன் ராயராவுத்தமுண்டன்
14. மன்னரில்மன்னன் மருவலர்கள் கேசரி துஷ்டரில் து
15. ஷ்டன் துஷ்டநெட்டூரன் சிஷ்டபரிபாலனன் ஒட்டியர்தளவி
16. பாடன் ஒட்டியர் மோகந்தவிள்த்தான் துலுக்கர் தளவிப
17. ாடன் துலுக்கர் மோகந்தவிள்த்தான் சம்மடம் நாறாயண

---

ASSI. Vol. IV. p.p. 81-83
வடிவம் : 27. செ.மீ. × 22. செ.மீ.

18. ன் சாடிக்காறகண்டன் சாமித்துரோகியள் மிண்டன் தாலி
19. க்குவேலி தளங்கண்டு தத்தளிப்பார்கள் மிண்டன் இளஞ் சிங்கம்
20. தளஞ்சிங்கம் வைகைவளநாடன் ஆத்துப்பாக்சி கடலில் பாச்
21. சி சேதுநகர் காவலன் சேதுமூலா துரந்தரன் ராமனாத சுவாமி காரி
22. யாதுரந்தான் சிவபூசாதுரந்தான் அட்டலெட்சுமீவாசன் கா
23. மனி கந்தப்பன் கல்விதெரியும் விற்பன்னன் சோடசமகாத
24. ானகூசுவதாரன் குடைக்கு கற்னன் பொறுமைகூ தற்மன் மல்லு
25. க்குவீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் அறிவுக்கு
26. சகாதேவன் ஆனைக்குத் தெய்வேந்திரன் சத்தியபாசா அரிச்சந்தி
27. ரன் மெச்சிய சூரன் பட்டமானங்காத்தான் பரதேசிகாவலன்
28. சங்கீதசாகித்திய வித்தியாவினோதன் சேமத்தலை விளங்கு
29. மிருதாளினான் சொரிமுத்துவன்னியன் அனுமக்கொடி கெ
30. ருடக்கொடி விளங்குமிருதாளினான் இந்துகுல சறுவ கெருட
31. ன் புவனேகவீரன் இரவிகுலசேகரன் அசுவபதி நரபதி கெ
32. சபதி சேதுபதி பிறிதிவீராச்சிய பரிபாலினம் பண்ணிக்கெ
33. ாண்டருளாநின்ற தேவைநகராதிபன் ஸ்ரீமது இரணி
34. யகெற்பயாசி ரெகுனாதசேதுபதி காத்ததேவரவர்கள்
35. தென்னாலைநாட்டில் எளுவாபுரி விசுவேசுபரருக்கு
36. ம் அம்மன் அகிலாண்டீசுபரிக்கும் பூதானசாதனம்
37. பண்ணிக்கொடுத்தபடி பூதான தற்ம சாதனமாவது கா
38. ளையார்கோவில் சீமையில் தென்னாலைநாட்டில் அ
39. ரிசிலையாத்துப்பாச்சலில் ஈகனைப்புரவில் கள்ள
40. ன்குடிக்கணமாய்க்கு மேற்கு கொங்கிவயல்கண்
41. மாய் தென்கரைக்குவடக்கு ஈகரை ஆக்கலு

42. க்கு கிளக்கு திருமணக்குளக்காலுக்கு தெக்கு
43. இன்னாங் கெல்லைக்குள்ப்பட்ட புதுக்கோட்டை
44. யும் திருமணக்கண்மாய் காஞ்சிரயடிபொட்டலுக்கு
45. மேற்கு கோரெம்பலுக்குவடக்கு புதுக்கோட்டைப்
46. புரவுக்கு கிளக்கு திருமணக்குளக்காலுக்கு தெக்கு இன்
47. னாங்கெல்லைக்குள்ப்பட்ட கள்ளிக்குடியும் சிலம்பனு
48. க்கு மேற்கு நொண்டி நாயனாரணிக்கு வடக்கு மல்லாரி
49. ஊத்துக்கு கிளக்கு கல்லுக்குளக்காலுக்கு தெற்கு இன்னா
50. ங்கெல்லைக்குள்ப்பட்ட எடையன் வயலும் இந்த மூனு
51. கிறாமத்து பெருநாங்கெல்கைக்குள்ப்பட்ட ஏந்தல் பிற
52. வடை திட்டுத்திடல் மாவடைமரவடை நிதிநிக்ஷே
53. ப ஜல தரு பாஷாணயதவாஸதயாரம ஸித்தஸாத
54. மென்று சொல்லப்பட்ட அஷ்டபோகதேசஸாமி
55. யங்களும் தானாதிவினிமினிய விக்கிறையங்களுக்கும்
56. யோக்கியமாக ஆண்டனுபவித்துக் கொள்ளக்கட
57. வராகவும் இந்ததற்மத்தை பரிபாலினம் பண்ணின
58. பேர் அனேகம் சிவப்பிறதிஷ்டையும் அனேகம் வி
59. ற்மப்பிறதிஷ்டையும் பண்ணினபலனை அடைவா
60. ர்கள் இந்த தர்மத்துக்கு அகிதம்பண்ணினபேர்க
61. ள் கெங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற
62. தோஷத்திலும் பிராமணனைக் கொண்ட தோசத்
63. திலும் போகக்கடவாராகவும் இந்த தற்ம சாதன
64. மெளுதினேன் றாயசம் தற்மராசப்பிள்ளை புத்திரன்
65. சொக்குபிள்ளை சவாதுபடிக்கு உத்தரகோச
66. மங்கையிலிருக்கும் வீரனாசாரிமகன் அதிவீ
67. ரனாசாரி கையெழுத்து.

## செப்பேடு எண். 29

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத சேதுபதி காத்த தேவர் |
| 2. செபபேடு பெற்றவர் | : | எழுவாபுரீஸ்வரர் திருக்கோயில் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1606ம் ஆண்டு ரத்தாட்சி வையாசி மாதம் (கி. பி. 1684) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மேலே கண்ட திருக்கோயிலுக்கு மூன்று ஊர்கள் தானம் |

இந்தச் செப்பேட்டில் ரெகுநாத சேதுபதி காத்த தேவரது அறுபத்து இரண்டு சிறப்பு பெயர்கள் விருதாவளியாக கொடுக்கப் பட்டுள்ளன. இவைகளில், சேதுபதி மன்னர்களுக்கு உரிய விருதாவளியாக கீழ்க்கண்ட புதிய விருதுகள் இணைத்து வழங்கப்பட்டுள்ளன.

1. பாண்டி மண்டல தாபனாச்சாரியன்
2. சோள மண்டல பிறதீபனாச்சாரியன்
3. தொண்ட மண்டல சண்டபிரசண்டன்
4. மருவலர்கள் கேசரி
5. துஷ்டரில் துஷ்டன்
6. துஷ்ட நிட்டூரன்
7. சிஷ்ட பரிபாலனன்
8. ஒட்டியர்தளவிபாடனன்
9. ஒட்டியர் மோகந் தவிள்த்தான்
10. சம்மடம் நாராயணன்
11. தளங்கண்டு தத்தளிப்பார்கள் மிண்டன்
12. கோடச மகாதான கூசுவதாரன்
13. பொறுமைக்கு தர்மன்

14. அறிவுக்கு சகாதேவன்
15. ஆணைக்கு தெய்வேந்திரன்
16. மெச்சிய சூரன்
17. பரதேசிகாவலன்
18. இந்து குலசறுவகெருடன்

இந்த பதினெட்டு விருதுகளும் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள சேதுபதி மன்னர் செப்பேடுகளில் காணப்படாதவையாகும். இவைகளில் முதல் பதினோரு விருதுகள் இந்த மன்னரது சிறந்த வீரத்தைக் குறிப்பிட வரையப்பட்டவை. ஏனைய ஏழு விருதுகள் மன்னரது கொடை, பொறுமை, கல்வி, அரசியல், தீரம், சமயப்பற்று ஆகிய பண்புகளுக்கு சான்றாக விளங்குபவை. பரதேசி காவலன் என்ற தொடரில் உள்ள ''பரதேசி'' என்ற சொல் சைவசமயத்துறவியைக் குறிப்பிடுவதாகும். திருமலை ரகுநாத சேதுபதி மன்னரது (கி.பி 1634-78) திருப்பெருந் துறைக் கோயில் செப்பேடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள ''*பரதேசி முத்திரை*'' ''*பரதேசிகட்டளை*'' என்ற சொற்றொடர்களை (செப்பேடு எண்கள் 16, 17, 19) இங்கு நினைவு கொள்ளுதல் பொருத்தமாகும். மற்றும், ஒட்டியர் தளவிபாடன், ஒட்டிய மோகந்தவிள்த்தான் என்ற இரு விருதுகளும் ஒரிய நாட்டை தமதாக்கி வைத்துஇருந்த விஜயநகரப்பேரரசர்களுக்கு உரியவை. என்றாலும், ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள ''மகாமண்டலேசுவரன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பாண்டிய மண்டல தாபனாச்சாரியன், துலுக்கர் தளவிபாடன், துலுக்க மோகந்தவிள்த்தான்'' ஆகிய விஜயநகர பேரரசர் விருதாவளிகளுடன், இந்த இரு விருதாவளிகளும், மதுரை நாயக்க மன்னர் தளவாயாக, சேதுபதி மன்னர் பணியாற்றிய காரணத்தால், இந்த சேதுபதி மன்னரது விருதாவளிப்பட்டியலில் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

தென்னாலை நாட்டு எளுவாபுரி விசுவேசுரர் அகிலாண்டீசுவரி அம்மன் திருக்கோயிலுக்கு சேதுபதி மன்னர் மூன்று கிராமங்களைத் தானம் வழங்கிய செய்தியை இந்தச் செப்பேடு கொண்டுள்ளது. அந்தக் கிராமங்கள் காளையார் கோவில் சீமை தென்னாலை நாட்டில் உள்ள புதுக்கோட்டை, கள்ளிக்குடி, இடையன் வயல், என்பவையாகும். இந்த ஊர்களுக்கு நிருதி செய்யப்பட்டுள்ள பெருநான்கெல்கைகளில் இருந்து இந்த

மூன்று ஊர்களும் இன்றைய பசும்பொன் மாவட்டத்து தேவ கோட்டை வட்டத்தில் அமைந்து இருந்தது தெரியவருகிறது. முந்தைய பாண்டி மண்டலத்து பெருங்கூறான கல்லகநாடு அதளையூர் நாடு ஆகியவைகளுக்குத் தெற்காகவும், பாகனூர் கூற்றத்திற்கு கிழக்காகவும் இந்தப் பட்டயத்தில் சொல்லப்பட்டுள்ள தென்னாலை நாடு (வரி 39) அமைந்து இருத்தல் வேண்டும் என ஊகிக்கப்படுகிறது. நிலக்கொடை பெற்றுள்ள திருக்கோயில் ''எளுவாபுரி'' தற்பொழுது எழுவனூர் என வழங்கப்பட்டு வருகிறது. தேவகோட்டை நகருக்கு வடமேற்கே ஐந்து கல் தொலைவில் அமைந்துள்ளது. இந்த ஊரில் தான் செட்டி நாட்டு திருக்கோவில்களை அமைத்த ஸ்தபதிகள் வாழ்ந்து வந்தனர். இந்தச்செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விரிசிலையாத்துப் பாச்சல் (வரி 39) ஈகனை ஆக்கல் (வரி 41) மரவடை, மாவடை (வரி 52) ஆகியவை வட்டார வழக்குகள்.

திருமணக்குளக்கால். திருமணக்கண்மாய். என்ற பெயர்கள் இந்தச்செப்பேட்டில் குறிப்பிட்டு இருப்பது போல, இதே வட்டாரத்தில் உள்ள ஒரு சிற்றூர் திருமணவயல் என்ற பெயருடன் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பெருநான்கெல்கை யில் குறிப்பிடப்படும் சிலம்பன் என்ற ஊர் இன்று இல்லை. அரசு ஆவணங்களில் சிலம்பத்தான் என்ற ஊர்ப்பெயர் காணப்படுவதில் இருந்து, இந்த ஊர் பேச்சு வழக்கில் திரிபு பெற்று இருக்கலாம் எனக்கருத இடமுள்ளது. மற்றும், இந்த எல்லை விவரங்களில் ''கல்லுக்குளக்கால்'' என்ற சொல் காணப்படுகிறது. குளத்துக்கு நீரைக் கொண்டு வர உதவும் கல்லால் ஆன கால் என்பது இந்தச்சொல்லின் விரிவு. இதைப் போன்று கல்லுப் பிள்ளையார், கல்லுக்கட்டி, கல்லூரணி, கல்லுப்பட்டி, கல்லுவீடு என்பனவும் இந்தப்பகுதி வட்டார வழக்கினைச் சேர்ந்தது.

## செப்பேடு எண் 30

**(நகல்)**

*முதல் பக்கம்*

1. சொபத்தி ஸ்ரீ மகாமண்டலஷிபறி ஆறிதி பாடனுத்திரன் பாசை
2. க்குத்தப்பாத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டனா
3. டு குடாதான் பாண்டிமண்டலப் பிரதாசாறியான் சொறிமு
4. த்து வன்னியன் சேதுகாவலன் அடைக்கலங் காத்தா
5. ன் சேதுமூல துரந்திரன் சேதுகாவலன் செம்பி வளனா
6. டன் ஈளமுங் கொங்கமு ஆளுச்சுக் கெசை வேட்டை
7. கொண்டருளிய றாசாதி றாசன் றாச மாத்தாண்டன்
8. றாச கெம்பீரன் றாமனாதசுவாமி காரியதுறந்திரன் ரவிகு
9. ல திலகன் தொட்டியர் மோகந்தவுத்தான் துலுக்கர் முகந்தவு
10. த்தான் வெட்டுத்தலை காலிலேகட்டுங் கலங்காத கண்டன்
11. சேவக் கொடியுடையோன் அனுமக் கொடியு
12. டையோன் அஞ்சாத கண்டன் அஸ்ட்ட லெ
13. ச்சிமி தனலெச்சிமி சம்புக லெச்சிமி வீர
14. லெச்சிமி விசயலச்சிமி காந்தன் சொல்
15. லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன்

---

இராமநாதபுரம் நகரை அடுத்த இளமனூர் ஊர்ப் பொதுவில் உள்ளது. இந்தச் செப்பேடு நூலாசிரியரால் களஆய்வில் படி எடுக்கப்பட்டது.

16. குடைக்கி கர்ணன் பரிக்கு நகுலன் சாஸ்த்தி
17. ர சம்பறம் சகாதேவகுமணள் அசுபதி கெ
18. சபதி நறபதி ரெகுனாதச் சேதுபதி றாச்சிய பரி
19. பாலனஞ் செலுத்தி வருகையில் சாலிவ்வ
20. ாகன சகாற்த்தம் 1609க்கு மேல்ச் செலானி
21. ன்றை பிறபவ வருடம் ஆனி மாதம் மதுரை சே
22. கரமாகிய சின்ன இளமனூரிலிருக்கும் சோள
28. கை சேருவைக்காறன் பெண்ஞ்சாதி கொண் டே
24. டாடிக்காரி இருவகைப் பேரும் இளமனூா
25. ரிலிருந்து சேது ஆதிக்கம் மகா றாசாறாயஸ்த்தி
26. ரி துரையவர்கள் சம்ச்செபத்தில் வந்
27. துகண்டு வெகுநாள் வரைக்கும் சோள
28. க சேருவைகாறன் ஷை பெண்ஞ்சாதி கொ
29. ண்டோடிக்காரியும் காத்திருந்ததில் ஷை
30. யாளுக்கு அரமணை வாசலூளிய தானாபதிக்க
31. மும் சோளக சேருவைகாரனுக்கு பாளை
32. யப்பட்டு சேருவையுங் குடுத்து ஷை சோ
33. ளக சேருவைகாறனை கள்ள பக்தி நாட
34. னை ஒடிக்கிவரச் சொல்லியும் சேதுமா
35. ற்க்கங்கள் அசோத்தியம் ஒடிக்கிவரச்செ
36. ால்லியும் உத்தரவு கட்டளையிட்டு வெகுமதியும் கு
37. திரையும் குடுத்து ஷை யாருக்கு சீவன காரியத்துக்
38. கு இளமனேரியில் காடுகரை வெட்டிகு

இரண்டாம் பக்கம்

39. டியேத்திவிச்சு கைய்க்களக்குடி சானார்குடி
40. யுடனே சிறுகுடியும் யேத்திவிச்சு கண்மா
41. ய்கரை ஊறிணியும் வெட்டி பறாதனமாக அம்
42. பலம் கொத்துக் கணக்கு மானிபம் மடைப்போக்கு
48. உம்பள சம்பளமாயிருந்து கைய்யா

44. டிக் கொண்டு வரச்சொல்லி சமத்சேபத்தி
45. ல் உத்தரவுக் கட்டளையிட்ட புத்தி படிக்கி டியார் க
46. ாடு கரை வெட்டி கண்மாய் கரை ஊரணியும்
47. வெட்டி குடியும் யேத்திவிச்சதினாலே அம்பலம்
48. கொத்துக் கணக்கு மானிப மடைப்போக்கு உ
49. ம்பளம் சம்பளம் நிலங்கரை சகலமும் ஆதி
50. சந்திராதித்தாள் புல்லும் பூமியும் கல்லுங் காவே
51. ரியும் உள்ள வரைக்கும் பூறுவீகமாக கைய்யா
52. டிக்கொள்வாறாகவும் இந்தப்படிக்கு சமூகத்தில்
53. கட்டளையிட்டுத் திரு அக்கிய நலகளிட ஓனாய்ப் புளிக்கும்
54. மஞ்சக்காடு ஒத்தக் காலுக்கும் தெற்கு கொட்ட
55. மடக்கி தோட்டத்துக்கும் சேது ஆண்டான் தோ
56. ட்டத்துக்கும் மேற்கு அரங்க மூப்பன் காஞ்சர மரு
57. ங்கன் தோட்டத்துக்கும் மல்லம்மா தோட்டத்து
58. க்கும் வடக்கு காட்டுப் பிள்ளையார் கோவிலுக்கும் வ
59. டக்கு தன்னரசு தேவரின் தோட்டத்துக்கும் வை
60. ய்கை ஓடைக்கும் சுங்கிறாய்ப்புத்துக்கும் கிளெ
61. க்கு இந்த நான்கெல்கைக்கி உள்பட்ட கிறாம
62. ம் மலங்கரை சகலமும் கைய்யாடிக்
63. கொள்ளச் சொல்லி உத்தரவு கட்டளையிட்டோ
64. ம்றாமசெயம் - இதற்கு யாதமொருவர் அடி
65. அளிவு செய்தால் மாதா பிறாமணனை
66. கொன்ற தோசத்திலே கெங்கைக்கரை
67. யில் தனுக்கோடிக் கரையில் வதை செயித
68. தோசத்திலும் குருவை அடித்துக் கொண்ட
69. தேசத்திலும் போகக்கடவாராகவும் ருமநாத
70, ன் துணை.

# செப்பேடு எண். 30

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இளமனூர் சோளகை சேர்வைக் காரன் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1609 பிரபவ ஆண்டு ஆனி மாதம் (கி பி- 15-6-1687) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேலே கண்ட சேர்வைக்கார னுக்கு மலங்கரை கிராமம் தானம் |

இந்தச் செப்பேட்டில் ரெகுநாத சேதுபதி மன்னரது விருதா வளியாக முப்பத்துமூன்று சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந் தாலும் சாகித்ய சம்பரம், சகாதேவ குமணன் என்ற இரண்டு சிறப்புப் பெயர்கள் மட்டும் புதியன. இசையின்பால் மன்னருக்கு உள்ள ஈடுபாட்டையும் அவரது கொடைச் சிறப்பையும் குறிப் பிடும் புகழ்ச்சிப் பெயர்களாக இவை உள்ளன.

இந்தச் செப்பேட்டின் காலம் சகம் 1500 என குறிப்பிட் டிருப்பது பஞ்சாங்கக் கணக்கிற்குப் பொருத்தமானதாக இல்லை. இதில் உள்ள பிரபவ ஆண்டிலிருந்து இந்தச் செப்பேட்டின் சரி யான காலம் சகம் 1609 எனக் கொள்வது பொருத்தமாக உள்ளது.

மதுரைச் சீமை சின்ன இளமனூரிலிருந்த சோளகைச் சேர்வைக்காரன் கொண்டோடிக்காரி என்ற தனது மனைவியுடன் இராமநாதபுரம் மன்னரது மாளிகை ஊழியர்களுக்கு தலைவியான தானாபதி பதவியும் சேர்வைக்காரனுக்கு பாளையப்படு பதவி

யும் வழங்கப்பட்டன. இராமேசுவரம் பாதையில் கள்ளர் தொல்லையைக் களைந்து மன்னர் மனநிறைவு கொள்ளும் வகையில் பணியாற்றியதால் மலங்கரை கிராமம் சேர்வைக்காரனுக்கு தானமாக வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

இந்தக் கிராமத்தின் நான்கெல்லைகளிலிருந்து இன்றைய இராமநாதபுரம் நகரின் வடகிழக்குப் பகுதியில் அந்த ஊர் அமைந்திருந்ததாகக் குறிக்கப்படுகிறது, அந்த ஊரின் பெயர் இன்று வழக்கில் இல்லை. இந்தச் சிற்றூரின் தெற்கு எல்லையாகக்காண்பிக்கப்பட்டுள்ள *காட்டுப்பிள்ளையார் கோவில்* இன்றும் இருந்துவருகிறது. மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் முதன் முறையாக இந்தப்பகுதியில் குடியேறிய ஆயிரவைசிய மக்கள் அவர்களது வணிகத்திற்குக் கடவுளான விநாயகரை ஒரு மரக் கட்டையில் அமைத்து இங்கு அவர்கள் வழிபட்டதனால் அந்த ஆலயம் *கட்டைப்பிள்ளையார் கோவில்* என்று இருந்து பின்னர் காட்டுப்பிள்ளையார் கோவில் எனத் திரிபு பெற்றதாகவும் தெரிகிறது[1]. இந்தக் கோயிலுக்குக் கிழக்கேயுள்ள *மல்லம்மா தோட்டம்* இன்று *நல்லம்மா தோட்டம்* என்று வழங்கப்படுகிறது,

சோளகை சேர்வைக்காரன் இராமநாதபுரத்திற்குக் கிழக்கே இரண்டுகல் தொலைவில் உள்ள இளமனேரியில் குடியேறினதாகவும், பின்னர் அந்த ஊரினை வெட்டித்திருத்தி சாணார், கைக்கோளர், ஆகிய குடிகளையும் அங்கு கொண்டு போய் குடியேற்றியதை இந்தச் செப்பேட்டிலிருந்து தெரிய முடிகிறது.

இளமனேரி இன்று இளமனூர் என்ற பெயரில் உள்ளது. இந்த ஊரினை தானமாக வழங்கிய கிழவன் சேதுபதி தாமே ஒரு சிறந்த வீரராக இருந்ததுடன் வீரத்தில் மிக்கவரை நன்கு போற்றிப் புரந்தார் என்பதற்கு இந்தச் செப்பேட்டில் ''வெகுமதியும் குதிரையும் கொடுத்து மேற்படியாருக்கு சீவனத்துக்கு இளமனேரியில் காடுகளை வெட்டிக் குடியேத்திவிச்சு'' என்ற வரி 35, 37 லிலும் ''உம்பளம், சம்பளம், நிலங்கரை சகலமும் வழங்கி'' என வரி 47, 49 லும் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

---

1. முத்தாலம்மன் கோயில் குடமுழுக்கு மலர் (1975)

கானாட்டில் கள்ளரிடையே மிகுந்த செல்வாக்கு மிக்கவராக இருந்த ரெகுநாதராய தொண்டைமானையும் அவரது சகோதரர் நமனத் தொண்டைமானையும் இராமநாதபுரத்திற்கு வர வழைத்து மறவர் சீமையின் தளகர்த்தர் பதவியினை வழங்கியவர் இந்தச் சேதுமன்னர் என்பது வரலாறு. அந்தச் செய்தி வழி இந்தச் செப்பேடும் அமைந்துள்ளது.

''ஸ்ரீ இராமஜெயம்'' என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்கும் இந்தச் செப்பேடு எளிய உலகியல் நடையிலான எழுபது வரிகளுடன் ''இராமநாதன் துணை'' என்ற சொல்லுடன் முடிக்கப்பட்டிருப்பது மன்னரது இறை பக்தியை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. வரி 16ல் ''துரை'' என்ற திசைச்சொல் இடம் பெற்றுள்ளது. பெரும்பாலும் இந்தச் சொல் போர்த்துக்கீசிய மொழிச் சொல்லாக இருக்கவேண்டுமென நம்பப்படுகிறது.

சேது ஆதிக்கம் அரண்மனைவாசல் ஊழியம், சமூகம், தானாதிபதி, உம்பளம், சம்பளம், ஒடுக்கி, கொத்துக் கணக்கு என்ற சொற்கள் இந்தச் சீமைக்கே உரிய வட்டார வழக்குகள் ஆகும்.

## செப்பேடு எண் 31

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிய வாகன சகாத்தம் 1609 இதின் மேல் செல்லாநின்
2. றபபற்பவனாம ஸம் வச்சரத்து உத்தராயணத்து ஹேமந் தரிதுவில் புஷ்
3. நாயத்து புஷ்ய நக்ஷத்திரத்து தசமியும் சோமவாரமும் பாலவாகரணமும்
4. சுக்ரமனாம யோகமும் பெற்ற புண்ய காலத்தில் தேவ நகராதிபன் சேது
5. மூல ரக்ஷாதுரந்தரன் ராமநாத ஸ்வாமி கார்ய துரந்தரன் சிவபூஜா
6. துரந்தரன் பரராஜசேகரன் பரராஜகஜசிம்மன் விதுவ சேகர
7. ன் ரவிவம்மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலேசுவரன்
8. அரியராயதளவிபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன்
9. கண்டன் கண்டநாடு கொண்டுகொண்ட நாடு கொடா தான் பட்டனமானங் காத்தான் து
10. ட்டராயிர கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவள நாடன் வேதியர்

---

‡ ARE. A - 27-1947

இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை அருங் காட்சியகம்

வடிவம் : 23 செ. மீ. X 13 செ.மீ.

11. காவலன் அரசராவணராமன் அடியார் வேலைக்காரன் பரதள விபாடன் உரி
12. கோல்சுரதரணன் ... ம்பர கண்டன் சாடிக்காரர் கண்டன் சுவாமி துரோகிய
13. ள்மிண்டன் வன்னவர்ராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் வைய்கை வழ
14. நாடன் கொட்டமடக்கி வையாழி நாராயணன் இ வுளிபா வடி மிதித்தேறு
15. வார்கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் பகை மன்னர்
16. சிம்மம் துரைராயன் ஆத்தில்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கல
17. ங்காத்தான் தாலிக்கு வேலி சக்ரவர்தி யளமிண்டன் வன்னியராட்டத் தவி
18. ழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமஹா
19. கெம்பீரன் கீர்த்திப் பிரதாபன் ஆரியமானங் காத்தான் தொண்டியந்துறைகாவ
20. லன் துரகரேபந்தன் அனுமகேதனன் குடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் ப
21. ரத நாடகப் பிரவீணன் கருணா கடாஷன் குன்றினுயர் மேருவிற் குன்றாயவளை
22. க்குணில் பொரித்தவன் திலக நுதல் மடமாதர் மடலெழுத வருசுமுகன் விஜயலட்
23. சுமிகாந்தன் கலைதெரியும் விர்பன்னன் காமினி கந்தன் சகலபாஷாப்ரரிச் ...
24. ன் ஸங்கீத ஸாஹித்ய வித்யா விநோதன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு
25. தாழினான் ஸகலசாம்பிறாச்சிய லக்ஷமிநிவாசன் சேதுங்க ராய வங்சா
26. திபன் துகவூர்க் கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர்

27. கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ திருமலைச் சேதுபதி ஹிரண்யகர்பய

28. ாஜிரகுனாத தேவர் புத்திரன் ராஜஸ்ரீ ஹிரண்ய கர்பயாஜி ரகுநாத தே

29. வர் ராமநாத சுவாமிக்கு

30. இராசிங்க மங்கலத்தில் சிலுக வயலுக்கு வடக்கு புல்ல- மடைக்குத் தெர்

31. கு மேர்கு எல்லை குளத்துக்கு கிழக்கு கிழக்கெல்லை நாலுமடைக்கும் எவ்வளவு

32. நில்முண்டோ அவ்வளவு நிலம் இராமநாதமடைக்கு உண் டானது அதுக்குப்ப

33. ள்வரி பலவரி, செம்பு வரி, களஞ்சிய வரி, வண்டிக்கிடாக் கோட்டிய எ

34. ருது எதுவரிப் பிறந்ததோ அந்த வரிஎல்லாம் ஒன்றுந் தேவையில்லை என்று சறு

35. வ மானியமாக கட்டளையிட்டு சந்திராதித்த சந்ததிப் பிற வேஷம் நிதிநிட்சல தஷயம்

36. ரு பாஷாணம் உள்பட வுண்டு அனுபவிக்கக் கொள்ளக் கடவராகவும் இந்த தர்மத்தை

37. ஆராகிலும் பரிபாலனம் பண்ணுகிறார்கள் அவர்கள் சேதுவிலும் கெங்கையிலும்

38. ஆயிரம் கோதானம் பண்ணிய பலனை அடைவாராகவும் ஆயிரம் கன்னியாத

39. ானம் பண்ணின பலன் அடைவாராகவும் பதினாயிரம் சிவப்பிரதிட்டை பண்ணி

40. ன பலன் அடைவாராகவும் அய்யாயிரம் பிரம்மபிரதிட்டை பண்ணின பலன் அ

41. டைவாராகவும் இந்தப்படிக்கு இராமநாத சுவாமிக்கு இராமநாத பண்டாரம் வா

42. ...பாரிஷ்மாக அபிஷேக கட்டளைக்கு கட்டளையிட்ட படியினாலேயே ஆண்டு அனுபவிச்

43. சுவரக் கடவராகவும் இந்த தர்மத்துக்கு யாதாமொருவர் அகிர்தம் பண்ணினவர்கள் சேதுவி

44. லேயும் கெங்கையிலேயும் பதினாயிரம் பிரம்மஹத்தி பண்ணின தோஷத்திலேயும் போக கடவார

46. ாகவும் ஆயிரம்ஸ்திரிகத்தி பண்ணின தோஷத்திலேயும் போக கடவரா

46. ாகவும் ஆயிரம்ஸ்திரிகத்தி பண்ணின தோஷத் திலேயும் போக கடவராகவும் மாத

47. ா பிதாவைப் பேதம் பண்ணின தோஷத்திலேயும் போகக் கடவராகவும் உ

## செப்பேடு எண் 31

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி காத்ததேவர்
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயில்.
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1609 ஆண்டு பிரபவ வருடம் (கி.பி. 1687)
4. செப்பேட்டின் பொருள் : மேலேகண்ட கோயிலுக்கு ராஜ சிங்க மங்கலம் இராமனாத மடைப்பாய்ச்சலில் நிலக்கொடை

நாற்பத்து ஏழுவரிகளைக் கொண்ட இந்தச் செப்பேட்டில், ரகுநாத சேதுபதி மன்னரது விருதாவளியாக அறுபத்து எட்டு சிறப்பு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் கீழ்க் கண்ட மூன்று புதிய விருதுகளைத்தவிர, ஏனையவை ஏற்கனவே கண்ட செப்பேடுகளில் குறிப்பிடப் பட்டுள்ளவையாகும்.

1) பரராஜசிம்மன்
2) விதுல சேகர—
3) ஸ்வஸ்தி ஸ்ரீமன்
4) வன்னர்ராய ராகுத்தன்

இன்னும் இரண்டு விருதுப்பெயர்கள் (வரிகள் 12,23ல் காணப் படுபவை) முழுமையாகத் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. இந்தச் செப்பேடு வழங்கப்பட்ட கால கட்டத்தில், தமிழகத்தின் ஆட்சியில் இருந்த மதுரை சொக்கரையும், தஞ்சை ரகுநாத நாயக்கரையும் விஞ்சக்கூடிய வகையில் வீரத்

தில் இந்த மன்னர் சிறந்து விளங்கிய காரணத்தினால், முந்தைய சேது மன்னர்களுக்கு இல்லாத கூடுதல் அளவிலான சிறப்பு பெயர்கள் இந்தச் செப்பேட்டில் காணப்படுகின்றன.

இராமேசுவரம் திருக்கோயிலுக்கு அபிஷேக கட்டளைக் காக இராசசிங்க மங்கலம் கிராமத்தில் சேதுபதி மன்னர் நிலக் கொடை வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இராசசிங்கமங்கலம் கிராமம் இன்றைய இராமநாதபுரம் மாவட் டத்தில் திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ள ஊராகும். இந்த ஊர் பாண்டிய மன்னர் ஆட்சியில் வரகுண வளநாடு என்ற நிலக்கூற்றில் அமைந்து இருந்தது. மன்னன் இராசசிம்மன் (கி.பி. 900-920) பெயரால் ஏற்பட்ட மங்கலம் இந்த ஊர். அங்குள்ள நீர்த்தேக்கம் ''உலப்பில் ஓதவொலிகடல் ஒடுங்கு முன்னந்தானமைத்த இராசசிங்கபெருங்குளம்'' என சின்னமனூர் செப்பேட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.[1] பாண்டியர்வாரிசுப் போரில் பராக்கிரம பாண்டியனுக்கு உதவுவதற்காக கி.பி. 1170ல் வந்த இலங்கைப் படைகள், போரினால் நாசமடைந்த இந்தக் கண் மாயைச் செம்மைப்படுத்தியதாக இலங்கை வரலாறு சொல் கிறது.[2] இராநாதபுரம் சீமையைச் சேர்ந்த மிகப்பெரிய இந்த நீர்த்தேக்கம் நாற்பத்து எட்டு போக்கு மடைகளைக் கொண் டிருந்ததை ''நாரை பறக்காத நாற்பத்து எட்டுமடை ......'' என நாடோடிப்பாடல்கள் புகழ்ந்து பாடுகின்றன. இந்த தீர்த்தேக் கத்தினால் இந்தப்பகுதி குடிமக்கள் விவசாயத்தில் சீரும் சிறப் பும் பெற்று இருந்தனர். இந்தப்பகுதி இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது ''தானியக் களஞ்சியம்'' எனக் கருதப்பட்டு வந்தது.

இந்த தேக்கத்தில் இருந்து பாசனப்பகுதிக்கு நீரை எடுத்துச் செல்ல உதவும் வாய்க்கால்களின் தொடக்கம், ரகுநாத மடை, இராமனாதமடை, பிள்ளைமடை என்பன போன்று பெயர் சூட்டப்பட்டு இருந்தன. இவைகளின் எட்டுமடைப்பாசனத்தில் உள்ள நஞ்சைநிலம் அனைத்தையும் திருமலைரகுநாத சேதுபதி

1. இராசசிம்ம பாண்டியன் மெய்க்கீர்த்தி - சின்னமனூர்ச் செப்பேடு
2. Krishnasamy Iyeangar Dr. S. South India and Her Mohammaden Invaders (1921) p 6.

(கி.பி. 1639 - 78) அவர்மீது தளசிங்கமாலை என்ற சிற்றிலக்கியத்தைப்பாடிய மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயருக்குத் தானமாக வழங்கினார். ஆனால், இதே நிலங்களை பின்னர் புலவரிடமிருந்து பெற்று இராமேசுவரம் இராமநாத சுவாமிதிருக்கோயிலுக்கு வழங்குவதற்காக அவற்றிற்குப்பதிலாக மறவணியேந்தல் ஆகிய கிராமங்களைப் புலவருக்குத் தானமாக வழங்கினார்[3]. திருமலை சேதுபதி மன்னரை அடுத்து இராமநாதபுரம் சீமை அரசியலை மேற்கொண்ட கிழவன் என்ற ரகுநாத சேதுபதி, இந்தப் பட்டயத்தின் மூலம் இராமநாத சுவாமிக்கு மேலும் நான்கு மடைப்பாசன நஞ்சை அனைத்தையும் கொடையாக வழங்கியதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஏனைய வரியீடுகள் முந்தையச் செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வரிப்பாடு பற்றிய விபரம் இல்லை. ஆனால் பள்வரி, பலவரி, செம்புவரி, களஞ்சியவரி, வண்டிக்கிடா கோட்டிய எருதுவரி என்ற வரிப்பாடுகள் இருந்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

3. Nagasamy – Dr. R-Studies in Ancient Tamilnadu and Societies.

## செப்பேடு எண் 32

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1610 இதன்மேல் செல்லாநின்ற வி
2, ப நாம சம்வச்சரத்து உத்ராயணத்தில் அமரபட்சத்தில் வசந்த ரிதுவில்
3. அமாவாசையும் பரணி நட்சத்திரமும் சுபயோகம் சுபகரண மும் பெற்ற சூரிய
4. கிராண புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சே மூலா ரட்சா துர
5. ந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ சிங்க
6. ம் இரவிகுல சேகரன் சொரிமுத்து வன்னியன் பட்டமானங் காத்தான் ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகா
7. மண்டலேசுரன் அரியராயதல விபாடன் பாசைக்குத் தப்பு வராயிர கண்டன் மூவராயி
8. ர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடா தான் துட்டராயிர கண்டன் புவனேக வீர
9. ன் வீர கஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன் அரசராவணராமன் பரதளவிபா
10. டன் அந்தம்பிற கண்டன் சாடிக்காரர் கண்டன் சாமித் துரோகியள் மிண்டன் பஞ்சவன்

---

* இராமநாதபுரம், இராமலிங்க விலாசம் அரண்மனை அருங் காட்சியகம்

வடிவம் : 21 செமீ. X 13 செமீ.

11. ராயராவுத்தன் பனுக்குவார் கண்டன் வைகை வளநாடன் கொட்டமடக்கி வையாழிநாரா

12. யணன் இவுழி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீர வெண்பாமலை இளஞ்சிங்கந் தளஞ்சிங்க

13. ம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் ஆத்தில் பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடை

14. க்கலங் காத்தன் தாலிக்குவேலி சத்துராதிகள் மிண்டன் வன்னியராட்டந் தவிழ்ந்தான் மேவ

15. லர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாழினன் வீர கெம்பீரன் கீர்த்திப் பிரதாபன் ஆரிய

16. மானங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துரகரே பந்தன் அனுமகேதனன்

17. கொடைக்கு கர்ணன் பரதநாடகப் பிறவீணன் கருணா கடாக்ஷந் குன்றினுயர் மேருவிற்

18. குரைவளைக் குணில் பொறித்தோன் திலகநுதல் மட மாதர் மடலெழுத வரு சுமுகன் விசைய

19. லட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பன்னன் காமினி கந்தப்பன் சத்தியவாசக அரிச்ச

20. ந்திரன் சங்கீத சாயித்திய வித்தியா விநோதன் வீர தண்டை சேமத்தலை விழங்குமிரு தாழி

21. னான் சகல சாம்பிராட்சிய லட்சிமிவாசன் செயதுங்கராய வங்கி சாதிபனான துக

22. வூர்க் கூற்றத்து குலோத்துங்க சோழ நல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கு

23. ம் ஸ்ரீ மகா திருமலைய் இரணியகெற்பயாசி ரகுநாதன் சேதுபதி காத்த தேவரவர்கள் புத்

24. திரன் ரகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் புண்ணிய மாகக் கீள்செம்பி நாட்டில்

25. புல்லாரண்ணியச் சேத்திரத்தில சேதுமூல மூலத்தில் தெற் பாசன மழகியரான தெய்வச்சி

26. லைப் பெருமாள் நயினாருக்குச் சருவ மானியமாகக் கட்டளையிட்ட கிராமமா

27. வது திருப்புல்லாணியுடனே சேந்த இராமானுஷ பேரி உள்வாய் பிறவாய் நி
28. ல்மும் காவல்பற்று, முப்பனை முருக்கடிப்பற்று மனைய னேந்தல் கோரைக்கு
29. ளம், காவேரிஏந்தல், கோவிந்தனேந்தல், காரையடிமுறிவு வெள்ளாபற்று,
30. குத்தக்கோட்டை, உத்தரவை, மேதலைஒடை, சாமநத் தம், தினைக்குளம் தம்பிராட்
31. டி தரவை, இருவரை வென்றான் பட்டணம், முன்திரு வாழிக்கலுக்கு இன்
32. னாங் கெல்கைகுள்பட்ட யேந்தல் பிறவடையளும் இதுக் குள்பட்ட நஞ்சை புஞ்சையளும், நல்லாங்குடி, கடம்பங்குடி* நான்கெல்கைக்குள்பட்டன
33. ... இலங்கை வழிவந்த ஏந்தல், ஆதன் கொற்றங்குடியும், மாறந்தை, அதினு
34. டனே சேந்த திட்டகுளம், கொள்ளையனேந்தல், ஆமணக் கும் பற்றி ஏந்தல் பளவ
35. ல்ச ஏந்தல், விளாப்பத்தி ஏந்தல், இன்னான்கெல்கைக் குள்பட்ட நஞ்சை புஞ்சையும் இலந்தெ
36. குளம் அதினுடனே சேந்த நஞ்சை புஞ்சையளும் இரணிய கெற்பயாசி விசைய ரகுநாதச் சேதுபதி
37. காத்த தேவரவர்கள் பட்டாபிஷேகத்தில் தானபூறுவமாகக் கட்டளையிட்ட கைய்க்கு நாட்டுப்பத்தில்
38. பாறனூரும், அதினுடனே சேந்த மறிச்சுகட்டி, பணிக்க னேந்தலும், பண்ணிக்குத்தி ஏந்தல், இதுனு
39. டனே சேந்த ஊரணித் தன்மங்களும், இதனுடனே சேந்த நஞ்சை புஞ்சை திட்டுத்திடல் மாவடை
40. மரவடைகளும் தாம்பிரவேணி தீரத்தில் சவராமங்கலம் உள்க்கிடையின் ஆயற் பற்றுத் திருவாழிக்
41. கல்லுக்குள்பட்ட பல பட்டடை குடியும் நஞ்சை புஞ்சை திட்டுதிடல் மாவடை மரவடையும்

42. இந்தக் கிறாமங்களுக்குண்டாகிய பள்வரி பலவரி, திரு கைவரி, கலவரி, இடைவரி, மனைவரி கூரைவ

43. ரி, பாசிவரி, கொல்லன் தச்சன்வரி, ஈழம் புஞ்சைவரி, தட்டுவரி, நன்மாட்டுவரி, பனைங் கடமைவரி, கத்திப்

44. பெட்டிவரி, சாணார்வரி, நிலவரி, செக்குவரி, மகமை, ஆயம், கடைவரி, களஞ்சியவரி, உளக்குவரி, பல

45. பட்டடைவரி, தம்பட்டவரி, சொத்துக் கணக்குவரி, வைக் கோல்வரி, கொடிக்கால்வரி, புகை

46. யிலைவரி, இது, முதலாகிய பலவரியும் சறுவமானியமாக ஆடித்திருநாள் கட்டளைக்கும் நித்த

47. பூசைக்கும் திருநந்தாவிளக்கு திருநந்தவனம் திருத் தோப்பு திருப்பணி முதலாகிய தன

48. ங்கலெல்லாம் நம்முட உபயமாக நடக்க வேணுமென இதுமுதலான வரிக்கோர்வை எ

49. ல்லாம் நயினார் தெய்வச்சிலை பெருமாள் சுவாமிக்குச் சர்வமானியமாகக் கட்டளையிட்டோம் இந்த

50. த் தன்மத்தை யாதொருமொருத்தர் பரிபாலனம் பண்ணினவர் கோடி விஷ்ணுப் பிரதிட்டையும்

51. கோடி சிவலிங்கப் பிரதிட்டையும் கோடி பிரம்ம-பிரதிட்டையும் பண்ணின சுகிர்தத்தை அடை

52. வாராகவும். இந்த தன்மத்திற்கு யாதாமொருவர் அகுதம் பண்ணிக் கட்டிக்கொண்டவர்கள் மாதா பிதா

53. வையும் கொன்ற தோசத்திலே போகக் கடவாராகவும்.

## செப்பேடு எண். 32

**(*விளக்கம்*)**

1. செப்பேடு வழங்கியவர் : ரகுநாத சேதுபதி காத்ததேவர்.
2. செப்பேடு பெற்றவர் : திருப்புல்லாணி தர்ப்பாசனமழகியாரான தெய்வச்சிலைப் பெருமாள் நாயனார்.
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1610 விபவ ஆண்டு(கி.பி. 20-4-1688)
4. செப்பேட்டின் பொருள் : மேலே கண்ட சுவாமிக்குஊர்கள் தானம்.

மன்னர் ரகுநாத சேதுபதி காத்த தேவர் வழங்கியுள்ள ஐம்பத்து மூன்று வரிகளைக் கொண்ட இந்தச் செப்பேட்டில் மன்னரது சிறப்புப்பெயர்களாக ஐம்பத்து மூன்று விருதுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் கொடுக்கப்பட்டுள்ளவை தான்.

இராமநாதபுரம் நகருக்கு அண்மையில் உள்ள திருப்புல்லாணியில் பள்ளி கொண்டு இருக்கும் தெய்வச்சிலைப் பெருமாள் நயினாருடைய ஆடித் திருநாள் கட்டளைக்கும், தினப்படி பூஜைக்கும் திருநந்தாவிளக்கு, திருநந்தவனம், திரு தாப்பு, திருப்பணி ஆகிய கைங்கரியங்களுக்கு சேதுபதி மன்னர் தானமாக வழங்கிய செய்தியை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

ஸ்ரீ வைணவ சிறப்புத்தலமான நூற்று எட்டுத் திருப்பதிகளில் இதுவும் ஒன்று சேது அணையை அமைப்பதற்கு சமுத்திர ராஜனை வரவழைத்து, ஒத்துழைப்பு கோரியதாக இராமாயணம் குறிப்பிடுகின்ற இடம் இது என்று கருதப்படுகிறது. அத்துடன்

வீடணனின் சரணாகதியும் இங்கு நிகழ்ந்ததாக ஐதிகம். திரு மங்கை ஆழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்ட பெருமையும் இங்குள்ள தர்ப்பாசனமழகியாருக்கு உண்டு. இந்தத் திருக் கோயிலில் திருபுவனச்சக்ரவர்த்தி மாறவர்மன்சுந்தரபாண்டியன், கம்பண்ண உடையார், சுந்தரத் தோளுடைய மாவலி வாணா தரையன் ஆகியோரது கல்வெட்டுக்கள் உள்ளன. ஆனால் இப் பொழுதைய கோயில் அமைப்பு திருமலை ரெகுநாத சேதுபதி மன்னரால் செய்யப்பட்டதை தளசிங்கமாலை சொல்லுகிறது.

சேதுபதி மன்னர்கள் பொதுவாக சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். அதனால்தான் ''சிவாபூஜா துரந்தரன்'' என்ற விருது அவர்களுக்கு ஏற்பட்டது இராமேசுவரம், திரு உத்தரகோசமங்கை போன்ற திருக்கோயில்களுக்கும், திருப் பெருந்துறை திருவாவடுதுறை திருமடங்களுக்கும் பொன்னும் பொருளும், ஊரும் தேரும் வழங்கி வந்தனர். ஆனால் அவர் களில் மிகச்சிறப்பான வரலாறு படைத்த திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் (கி. பி. 1640 - 1678) சைவசமயப் பற்றுடன் வாழ்ந்ததுடன் இந்து சமயத்தின் இன்னொரு பிரிவான வைண வத்திற்கும் வாழ்வளிக்கும் பணிகளை மேற்கொண்டார். தமது சேதுநகரான இராமநாதபுரம் கோட்டைக்குள் உள்ள சிவால யத்தை ஒட்டி கோதண்டராம சுவாமி ஆலயத்தை அமைத்த துடன் திருப்புல்லாணி திருக்கோயிலைத் திருப்பணி செய்து, திருச்சுற்று, விண்ணகரம், திருவோலக்க மண்டபங்களையும் நிர்மாணித்து தேர்த்திருவிழாவையும் தொடக்கிவைத்தார். இந்த விழா இன்றளவும் ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் பிரம்மோத்ஸ்வமாக நடைபெற்று வருகிறது. பாண்டியர்களில் மிகச்சிறந்த மூன்றாம் ராசசிம்ம பாண்டியனைப் போன்று, ''பரமவைஷ்ணவனாக'' வாழ்ந்து, இறுதியில், திருப்புல்லாணி யில் ''ஸ்ரீஇராமபிரானது தேர்த்திருவிழாவைக் கண்டு கழித்த- வாறே, மரணமடைந்தார்[1].

அந்த மன்னரையடுத்து', பட்டமேறிய, ரகுநாத சேதுபதி என்ற கிழவன் சேதுபதி இந்தப்பட்டயத்தின் வாயிலாக சமய பேதமில்லாத வகையில் திருப்புல்லாணித் திருக்கோயிலுக்கு

1. செந்தமிழ்-மதுரை தமிழ்ச்சங்க இதழ் - (தொகுதி 6) பக்கம் 44.

இராமானுஜப்பேரி உள்வாய், பிறவாய் நிலங்கள், காவல்பற்று முப்பனை முருகக்கடிபற்று மனையனேந்தல், கோரைக்குட்டம், காவேரியேந்தல், கோவிந்தனேந்தல், காரையடிமுறிவு, வெள்ளாபற்று, குத்தக்கோட்டை, உத்தரவை, மேதலை ஓடை சாம நத்தம் தினைக்குளம், தம்பிராட்டிதரவை, இருவரைவென்றான் பட்டணம், (இவையனைத்தும் திருப்புல்லாணி கிராமத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்கள்) நல்லாங்குடி, கடம்பங்குடி, இலங்கை வழி வந்த ஏந்தல், ஆதன் கொத்தன்குடி, மாறந்தை, திட்டகுளம் கொள்ளையனேந்தல், ஆமணக்குப் பத்தி ஏந்தல், பலவலசை ஏந்தல், விளாப்பத்தி ஏந்தல் (இவையனைத்தும் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளவை.)

பரரனூர், மறிச்சுக்கட்டி, பணிக்கனேந்தல், பன்னிக்குத்தி ஏந்தல், (இவை பரமக்குடி வட்டத்தில் உள்ளவை) ஆகியவை யுடன் நெல்லை மாவட்டத்தில் உள்ள சவரான்மங்கலம், ஆயன் பற்று ஆகிய கிராமங்களை தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது இராமானுஜப் பேரேரி என்பதுதான் இராமானுஜப்பேரி, என்றாயிற்று, நெல்லை மாவட்ட விசுவநாதப் பேரேரி, குலசேகரப் பேரேரி போன்று இராமநாதபுரத்தில் இருந்து திருப்புல்லாணி செல்லும் நெடுஞ்சாலையில் ஐந்துகல் தொலைவில் உள்ளது. இந்தஏரி வைணவசம்பிரதாயத் தில் மிகச்சிறப்பாக ''உடையவராகப்''போற்றப்படும் ஸ்ரீஇராமானுஜர் பெயரில் இந்த ஏரியை அமைத்த மன்னர் யார் என அறியத்தக்கதாக இல்லை. இப்பொழுது விவசாயத்திற்கு பயனற்ற ஆயிரத்து இருநூறு ஏக்கர் பரப்பில் களர் நிலமாக இந்த ஏரி காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது.

இவைகளில் இருவரைவென்றான் பட்டணம், இலங்கை வழி வந்த ஏந்தல் ஆகிய ஊர்கள் இன்று வழக்கில் இல்லை. இந்த ஊர்களின் பிரிவு பற்று என வழங்கப்பட்டதும், இந்த ஊர் எல்லைகளுக்கு இடப்பட்ட கல், திருவாழிக்கல் என வழங்கப்பட்டதையும் இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. மேலும், இத்த ஊர்களில் இருந்து பள்வரி, பலவரி, திருகைவரி, களவரி, இடைவரி, மனைவரி, கூரைவரி, பாசிவரி, கொல்லன் தச்சன் வரி, ஈழம்புஞ்சைவரி, தட்டுவரி, நன்மாட்டுவரி, பனங்கடமை வரி, கத்திப்பெட்டி வரி, தம்பட்டவரி, சொத்துக்கணக்குவரி,

வைக்கோல்வரி, புகை இலை வரி, ஆகிய பல திறப்பட்ட வரிப் பாடுகள் தண்டல் செய்யப்பட்டதும் தெரிய வருகிறது. பெரும் பாலும் அனைத்து தொழில் செய்து பணம் ஈட்டுபவரிடமிருந்து வரிகள் வசூலிக்கப்பட்டு வந்தன. இன்னொரு குறிப்பு, இராம நாதபுரம் சீமையில் புகை இலை வரி வசூலிக்கப்பட்டதில் இருந்து, இந்த கிராமங்களின் செழிப்பான பகுதிகளில் புகை இலைப்பயிர் விளைச்சல் செய்யப்பட்டதை முதன்முறையாக இந்தப்பட்டயத்தில் இருந்து தெரிய வருகிறது. பொதுவாகப் புகையிலை நன்கு தண்ணீர் வசதி உள்ள ஆற்றங்கரைப்-பகுதியில் தான் பயிரிடப்படுவது உண்டு. ஆனால், தண்ணீர் தட்டுப்பாடு மிக்க இராமநாதபுரம் சீமையில் இத்தகைய பணப் பயிர் விளைச்சல் என்பது ஒரு மகத்தான சாதனையென்றே குறிப்பிட வேண்டும். குறிப்பாக பனையங்கால் புளியங்குட்டம், ஆற்றாங்கரை, அழகன்குளம், கங்கைகொண்டான் ஆகிய கிராமங்களில் புகையிலை நன்கு சாகுபடி செய்யப்பட்டது. ஆங்கிலேயர் காலம் வரை நீடித்த இந்த பணப்பயிர் சாகுபடி, கடுமையான சுங்கத்தீர்வையினாலும், தகுந்த இலாபம் இல்லாத காரணத்தினாலும் நாளடைவில் நசித்து மறைந்து விட்டது.

# செப்பேடு எண். 33

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ மகா மண்டலேசுவரன் அரியராய தளவி பாடன் பாதைக்கு தப்புவரா
2. யிர கண்டன் மூவாராய கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட னாடு குடாதா
3. ன் பாண்டி மண்டல ஸ்தாபனாசாரியன் சோழ மண்டல பிறதிஷ்டா காரியந்
4. தொண்ட மண்டலச் சண்டப் பிறசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ணப்பா
5. ணப்ட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமே
6. சுரன் ராசமார்த்தாண்டன் ராசகம்பீரன் ராசகுல திலகன் ராச சமே
7. ளன் மன்னரில் மன்னன் மருவலர் சேசரி துட்டரில் துட்டன்
8. சிட்ட பரிபாலன் ஒட்டியர் மோகந் தவுள்தான் துலுக்கர் தள விபா
9. டன் கட்டாரிச் சாளுவன் மலை கலங்கினு மனந் கலங்காதான்
10. வங்கி நாராயணன் வனிதையர்கள் மடலெழுது வருசுமுகன்
11. வஸ்ரீயுத்தன் புனிதன் தேவர் காலாந்தகன் பரி நகுலன் தளங்கண்

---

திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை.
படி எடுத்து உதவியவர் புலவர் திரு. செ. ராஜு அவர்கள் தஞ்சை.

அமைப்பு : 30.5 செ.மீ. × 20 செ.மீ.

12. டுத் தத்தளிப்பார் முண்டன் பஞ்ச வற்ணன் ராயா பனுக்குவார் கண்டன்

13. பர தளவிபாடன் பரிமள சுகந்தன் பட்ட மானங் காத்தான் தொட்டவராந்தவ

14. றாதான் சொரி முத்து வன்னியன் சொன்ன மொளி தவறாதான் அன்னச

15. த்திரசோமங் அந்தம்பர கண்டன் அரச ராவண ராமன் அடைக்

16. கலங்காத்தவன் அரசு நிலையிட்டு அரசராட்டந் தவுள்த் தான் அச்சந்

17. தவிள்த்தான் பரராச மனோகரன் பஞ்ச கால பயங்கரன் பரிக்கு நகுலன்

18. வில்லுக்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் ஆளுக்கு மன்மதன் வாளுக்கு

19. அபிமன் விருது மன்னிய குடாரன் வீரப் பிறதாபன் வீர வெண்பா மாலை

20. யான் வீர வெம்பரியான் வெத்தி மணவாளன் வேற்றரச தம்பிரான்

21. கத்துருக்கள் கண்டன் சமய ந(ா)ராயணன் சாடிக்காறர் கண்டன் சாமி

22. த் துரோகியள் முண்டன் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன் அட்ட

23. லெட்சுமி பிறசன்னன் இரவி குல சேகரன் தாலிக்கு வேலி தளஞ்சிங்

24. கம் இளஞ்சிங்கம் ஆத்து பாச்சி கடலில் பாச்சி தொண்டியி

25. ன் துறை காவலன் தேவை நக ராதிபன் செங்காவிக் குடையான் சே

26. துக்கரைப் புலி சிவபூசாதுரந்தரன் தனுக்கோடிக் காவலன் ராமனாத

இரண்டாம் பக்கம்

27. சுவாமி காரியா துரந்தரன் வேதியர் காவலன் இந்து வதன இர
28. ணிய கெற்ப இரவிகுல சேகர சோமாதிபதி ரெகுனாதச் சேதுபதி கா
29. த்த தேவரவர்கள் பிறிதிக்கனையாக ராச்சிய பரிபாலனம் பண்ணி அரு
30. ளா நின்ற சாலிய வாகன சகாத்தம் 1613ன் மேற் செல்லா
31. நின்ற பிரஜோற்பத்தி ஸு தைய் மீ 15 தேதி முருகப்பன் மட தற்ம
32. த்துக்கும் அக்கிரகாரத்துக்கும் கட்டளையிட்ட கிராமமாவது திருப்
33, பொற்கோட்டை பகையணி, பிராந்தனி, இந்த கிராமங்களில்
34. தற்மக்கிராமம் திருப்பொற் கோட்டைக்கு எல்கையாவது கீள்பாற்
35. கெல்லை வலையன் சோளியன் கண்மாய்க்கும் ஏறணிக்கோட்
36. டைக் கண்மாய்க்கும் மேற்கு தென்பாற் கெல்லையாவது சிறுகைக்க
37. ண்மாய் வடகீட் கொம்பு வடக்கு மேல்பாற் கெல்லையாவது
38. ஆம்பட்டன் கோட்டை செட்டி ஏந்தல் புளியாண்டான் கரிசலுக்கு கிள
39. க்கு வட பாற்கெல்லையாவது துக்காக்குடி ஆத்துக்கு தெற்கு மரமதா
40. ய்க் கிராமம் பகையெணி பிராந்தணிக்குளல்கையாவது கீள்
41. பாக்கெல்லை பாப்பான் கோட்டை அமனிப்புளியாலக்-கண்மாய்
42. க்கு மேற்கு தென்பாற்கெல்லை திடக்கோட்டை வட-வயலுக்கு வ

43. டக்கு மேற்பாற்கெல்லை சாணானேந்தல் கொள்ளுடை-
யாத னாமத்து

44. நெய் மேனிக்கு கிளக்கு வடபாற்கெல்லை அரையேணித்
தென்வயல் நவதே

45. வ தேவன் ஊறணிக்கும் தெற்கு இன்னான் கெல்கைக்-
குள்பட்ட மாவடை

46. மரவடை திட்டுத்திடல் பாம்பாடு பனை வடலி ஆவிரை
கொளுவுஞ்சி கீள்நோ

47. க்கிய கிணறு நிதி நிட்சேபம் சகலமும் தற்மத்துக்கு
அக்கிர காரத்துக்கு சறு

48. வமானிபமாக கட்டளையிட்ட படியினாலே இதுவே
தாம்புரதானப் பட்டையமா

49. க சந்திராதித்தவரை ரகுநாயக . . . . சந்திரப்பிரவேசம்
மட தர்மமும்

50. அக்கிரகாரமும் உத்திரோத்திரமாக நடப்பிச்சுக் கொள்ள
வும் இந்த தற்மத்

51. தை யாதாமொருத்தன் பரிபாலனம் பண்ணினவன் கோடி
லிங்கப்பிற

52. திட்டை கோடி விறுமப்பிறதிட்டையும் அசுவ மேத யாகம்
பண்ணினப

53. லத்தை அடைவராகவும் இந்த தற்மத்துக்கு அகிதம்
பண்ணினவன் குருவை

54. கெங்கை கரையில் காராம்பசுவைக் கொண்ண பாவத்திலே
போவாராகவும்.

## செப்பேடு எண். 33

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : ரகுநாத சேதுபதி காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : பெயர் குறிப்பிடப்படவில்லை.
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1613 பிரஜோற்பதி தை மீ 15 தேதி (கிபி. 13-1-1692)
4. செப்பேட்டின் அடக்கம்: முருகப்பன் மட தர்மத்திற்கும் அக்கிரகாரத்திற்கும் கிராமங்கள் தானம்

இந்தச் செப்பேட்டை வழங்கிய இராமநாதபுரம் ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் (கிழவன் சேதுபதி) விருதாவளியாக எழுபத்து எட்டு விருதுகள் இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளன இவைகளில் கீழ்க்கண்ட விருதுகள் புதிதாக, இதுவரை சேதுமன்னர் விருதாவளியில் பயன்படுத்தப்படாதவைகளாகும் :-

1) கட்டாரிச்சாளுவன்
2) ஸ்ரீயுத்தன்
3) புனிதன்
4) தேவர் காலாந்தகன்
5) பரிமள சுகந்தன்
6) தொட்டவராந் தவறாதன்
7) சொன்ன மொழி தவறாதவன்
8) பரராச மனோகரன்
9) வேற்றரசு தம்பிரான்

10. சமைய நாராயணன்,
11. சேதுக்கரைப்புலி.
12. சோமாதிபதி

இந்த விருதாவளிகளுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் எதுவும் இன்று அறியக்கூடியதாக இல்லை. ஆனால் செப்பேட்டின் வரிகள் 16-17ல் காணப்படுகின்ற ''அச்சந் தவிழ்த்தான்'' என்ற விருது, ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில் உள்ள ஊரின் பெயராக அமைந்துள்ளது. இதேபோல முந்தையபட்டங்களில் காணப்படுகின்ற ''மானங்காத்தான்'' என்ற விருதுவைப் பெயராகக் கொண்ட ஊர்கள் அருப்புக் கோட்டை, முதுகுளத்தூர், பரமக்குடி, ஆகிய வட்டங்களில் அமைத்து உள்ளன. வரி 21ல் காணப்படுகின்ற சத்துருகண்டன் என்ற விருது கமுதிவட்டத்தில் உள்ள ஒரு கண்மாயின் பெயராகவும் இருந்து வருகிறது.

இராமநாதபுரம் மன்னரது சீமைகளில் ஒன்றான குத்தகை நாட்டில் உள்ள முருகப்பன் மட தர்மத்திற்கும் அக்கிரகாரத்திற்குமாக திருப்பொற்கோட்டை, பகையணி, பிராந்தணி என்ற மூன்று ஊர்களைத் தானமாக வழங்கப்பட்டிருப்பதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊர்கள் இன்றைய பசும்பொன் முத்து இராமலிங்கம் மாவட்டத்து தேவகோட்டை வட்டத்தில் உள்ளன. திருப்பொற்கோட்டை பட்டும் திருப்பாக் கோட்டை என வருவாய்த்துறை ஆவணங்களிலும் வழக்கிலும் இருந்து வருகின்றது. இந்த ஊரை ரெகுநாத சேதுபதி மன்னரது தானமாகப் பெற்றவர் யார் என்டதை இந்தச் செப்பேட்டு வாசகம் தெரிவிக்கா விட்டாலும் இந்த ஊரினைப் பெற்றவர் திருவாவடுதுறை ஆதினகர்த்தர் என்டதை தனிப் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.

*''நதியாம் விரிசிலை நன்னகர் பொற்கோட்டை*
*பதியாந் துறைசைப் பதிக்கு விதியாக*
*தானமிட்டான் சேதுபதி தாரணி தானுள்ளவும்*
*ஈனமில்லை யெந்த நாளும்.''*[1]

1. பெருந்தொகை - மதுரை தமிழ்ச்சங்கப்பதிப்பு (1925) பாடல் 1296.

வறட்சியால் வாடிக் கொண்டிருந்த சேதுபதி சீமைக்கு ஒரு முறை திருவாவடுதுறை ஆதினகர்த்தர் வருகை தந்தபொழுது, மழைபெய்ய வேண்டிப்பாடு மாறு சேதுபதி மன்னர் கோரினார் என்றும், அதனை ஏற்று ஆதினகர்த்தர் தமிழ்பாட மழை பொழிந்தது என்பது ஒரு செய்தி. இன்னும், வளமையான விரிசிலை ஆற்று விளைச்சல் பகுதியான பொற்கோட்டை கிராமத்தைத் தானமாகப்பெற்று, சோற்று மயக்கம் தீர்ந்த காரணத்தினால், நாள்தோறும் இந்த ஆதினகர்த்தர்கள் சேது பதிகளுக்கு நன்றி பாராட்டும் வகையில் ''சேதுபதி அன்னமும் காவிரி நீரும், ஆவுடையப்பர் நிழலும்'' எனச் சொல்லிக் கொண்டாடும் மரபு இருந்ததாகவும் தெரிகிறது.[2]

இந்தச் செப்பேட்டு வரி 29ல் காணப்படுகின்ற ''பிறிதிக்கினையாக'' வரி 37ல் உள்ள ''கொம்பு'' வரி 50ல் ''உத்திரோத் திரமாக'' வரி 46ல் ''பனைவடலி என்ற சொற்கள் வட்டார வழக்குகள்.

தானமாக வழங்கப்பட்ட ஊர்களின் எல்லைகளாக பகையணி, பிராந்தணி, ஏரணி, அமணி, அரையயணி என்ற ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன. இவைபோல சறுகணி, மறவணி, கோவணி, எழுவணி, தேவர்தத்தணி, இலஞ்சணி, சங்கணி, கேசணி, கொத்தணி, சேந்தணி, குந்தணி, மருதணி, நாகணி, பாகணி, பொசுக்கணி, பூவாணி, சாத்தணி, சிந்தணி, சூச்சணி, தாவணி, திராணி, துதியணி, வடுகணி, வரவணி, வசந்தணி, வேளணி, என்பன சேதுநாட்டில் அணி என்ற விகுதியுடன் வழங்கும் ஊர்களும் உள்ளன.

மேலும், சிறுகைக்கண்மாய், புலியாண்டான்கரிசல், சொல்லுடையாத நாமத்து நெம்மேனி, நவதேவன் ஊரணி, வலையன் சோழியன் கண்மாய் என்பனவும் பொருள் பொதிந்த புதுச் சொற்களாகும். வரி 52ல் உள்ள ''அசுவமேதயாகம் பண்ணின பலத்தை .....'' என்ற தொடர் ஒரு புதிய சொல் லாட்சி ஆகும்.

2. பெருந்தொகை - மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு (1935) பாடல் 1296, அடிக்குறிப்பு பக்கம் 467.

## செப்பேடு எண். 34

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்தம் 1613 மேல்ச் செல்லா நின்ற கொல்லம் 1131 மேல்
2. ச் செல்லாநின்ற பூஜோபத்பதி நாம சம்வச்ரத்து தெக்ஷணாயத்தில் கிரீஸ்மரி
3. துகில் ஆஷாட மாஸத்தில் சுக்ல பட்சத்தில் பௌர்ணமாவாசியும் ஆதித்த வாரமும் தி
4. ருவோண நக்ஷத்ரமும் ஸௌபாக்ய பாலநாமயோகமும்க் சுபயோக சுபகரணமும் பெற்
5. ற புண்ய காலத்தில் ராமனாத சுவாமி சன்னதியில் ஸேதுக் கரையில் அன்னதான ம
6. டத்துக்குத் தேவை நகராதிபன் ஸேதுமூலாரக்ஷா துரந்தரன் ராமனாத சுவாமி
7. காரியம் துரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பர
8. ராசசிங்கம் பரராசசேகரி ரவிகுலசேகரன் ரவிவர்மன் ர பி மாத்தாண்டன் சொரி
9. முத்து வன்னியன் சொரி வன்னிய சூரியன் ஸ்வஸ்திஸ்ரீமான் மஹாமண்டலேசுவரன்
10. பாஷைக்குத் தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு

---

ARE. A. 32 / 1947

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம்
இராமநாதபுரம்
அமைப்பு : 25 செ.மீ. × 13.5 செ.மீ.

11. குடாதான் பட்டமானங் காத்தான் துட்டாயிர கண்டன் மூவ
12. ராயிர கண்டன் பஞ்சவன்னராய ராவுத்தன் புவனேக வீரன் வீர
13. கஞ்சுகன் வேதியர் காவலன் அரச ராவணராமன் அடி யார் வேளைக்கா
14. றன் பரதளவிபாடன் உரிகோல் சுதரணன் அந்தம்பிர கண்டன் சாடிக்கா
15. றர் கண்டன் ஸ்வாமித் துரோகி யள்மிண்டன் பணுக்கு வார் கண்டன் கொட்ட ம
16. டக்கி வய்யாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறு வார் கண்டன் கலங்காத
17. கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்
18. னர்சிங்கம் பரமன்னர் சிங்கம் துரைராயன் ஆத்திற் பாச்சி கடலிற்
19. ப்பாச்சி மதப்புலி அரசு நிலையிட்டான் அடைக்கலங்காத் தான் தாலிக்கு
20. வேலி துர்காதிபதிகள் மிண்டன் வன்னிய ராட்டந் தவிள் த்தான் மேவலர்கள்
21. கோளரி மேவலர்கள் வணங்கு இருதாளினான் வீரமா றுத கெம்பீரன்
22. கீர்த்திப் பிரதாபன் பரிக்கு நகுலன் குடைக்கு கர்ணன் பரதநாடக ப
23. க்திப் பிரியன் கர்ராவுதார் கருணா கடாட்சன் வீர.. மன் குன்றனைய மேரு
24. வில்பொன்றாவளரி பொறித்தவன் திலத நுதல் மடவார் கள் மட
25. லெழுத வரு சுமுகன் வீரலட்சுமி காந்தன் விஜலக்ஷிமி வாஸஸம்ப
26. ந்நன் கலைக்கு விற்பன்னன் கதர்வபுஷ்பபானன் ஸத்ய பாஷா ஹரிச்சந்திரன்

27. அனபத்தர் அமன்னிய கண்டன் மலைகலங்கினும் மனங்
28. கலங்காதான் சிந்தித்த கார்யம் பண்ணும் மனோகரன்
29. ஸ்ங்கீத ஸாயித்ய வித்யா வினோதன் வீரதண்டை ஸேமத் தலை விளங்குமிரு
30. தாளிநான் சேதுங்கராயன் வங்கிஷாதிபனான துகவூர்க் கூத்தத்து
31. க் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாத க
32. ண்டனிலிருக்கும் உடையனாயனான ரவிகுலசேகரன் தளவாயா
33. ன திருமலைச் சேதுபதி காத்த தேவர் ஸ்ரீ ஹிரண்ய கற்பயாஜி ஸோடஷ
34. மஹாதாந அகண்ட துரியமண்டலம் பிரதாபதி விப்ரந்த கீக்திப்ரகாஸ அக்ர
35. ஷஷ்டிகலாவிந்தன் ஸ்ரீ லக்ஷிமிகாந்த ஸேதுமூலா ரக்ஷா துரந்தர ரெகு
36. நாதச் சேதுபதி காத்த தேவர் பாதள ராமனாத சுவாமி சன்னதியில்
37. அன்னதான மடத்துக்கு கொடுத்த தம்மதானப் பட்டைய மாவது நாம்
38. கட்டளை இட்ட கிறாமமாவது நல்லுக்குறிச்சியும் அதுடனான சேந்த ஏந்
39. தல்பிறவடை ஊரது புரவுள்பட கட்டளையிட்ட படியினாலே
40. உண்டாகிய மாவடை மரவடை திட்டுதிடல் குடிபடை பள்ளுப் ப
41. றை இடையூறணி மேல் நோக்கிய மரம் கீள் நோக்கிய கிணறு நீரும் பாசியும் இ
42. ன்னான் கெல்கைக் குண்டாகிய தெல்லாம் யோக்கிய மாகவும் சந்திரார்தம்
43. சந்ததிப்ரவேசம் சறுவமானியமாக அனுபவித்து வருவா ராகவும் பானப் பிரமா

44. ணம் பண்ணி நிதி நிக்ஷேவ ஜல தரு பாஷாணம் மசுத ஸாத்யமென்று சொ

45. ல்லப்பட்ட சகல சமுதாய பிராப்த்தியம் அஷ்டபோனகதே ஸ்வாமி யங்களுக்கும் ப

46. ா நாதிவி ஆயங்களுக்கும் சுபசந்ததிப் பிரவேசமே சறுவ மானிய

47. மாக அனுபவித்து வருவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதாமொருவர்

48. அகிதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக் கரையிலும் காராம்

49. பசுவையும் பிராமணரையும் மாதாபிதாவையும் கொன்ற தோஷத்திலே போககட

50. வாராகவும் இந்ததான சாசனம் எழுதினேன் திருவுத்தர கோச மங்கை

51. யிலிருக்கும் சில்பாசாரியாரில் வீரப்

52. பாசாரி புத்திரன் அதிவீரன் விகிதம்

## செப்பேடு எண் 34

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி காத்ததேவர்
2. செப்பேடு பெற்றவர் : இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாத சுவாமி திருக்கோயில்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1613 பிரஜோற்பதி ஆண்டு (கி.பி. 13-7-1691)
4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் அன்னதான மடத்துக்கு நல்லுக்குறிச்சி கிராமம் தானம்

இந்த செப்பேட்டை வழங்கிய கிழவன் என்ற ரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் ஐம்பத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. *பரத நாடக பக்திப் பிரியன்* என்ற சிறப்புப் பெயரைத் தவிர ஏனையவை இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளிலும் அவரது முன்னோர்களது பட்டயங்களிலும் பயிலப்பட்டவையாகும். இந்த மன்னரது வெற்பு நிகர் வீரத்திற்கு இணையாக அவரது பக்தி உணர்வும் கலைகளில் ஈடுபாடும் இருந்ததை இந்த அடைமொழி உணர்த்துகிறது. குறிப்பாக இராம காதையில் இந்த மன்னருக்கு உள்ள ஈடுபாட்டைக் குறிப்பதே இந்த சிறப்புப் பெயர். இந்த மன்னரது சமகாலத்தவரான தஞ்சை ரெகுநாத நாயக்கரும் (கி.பி. 1700 - 30) மிகச்சிறந்த இராமபக்தராக விளங்கினார் என்பதையும் அவருக்கும் ''அணவரதராமகதாம்ருத சேவகன்'' என்ற விருது இருந்தது தெரிகிறது.

இந்தப் பட்டயத்தின் தொடக்கத்தில் முதன்முறையாகக் கொல்லம் ஆண்டு 1133 என கொடுக்கப்பட்டுள்ளது. மறவர் சீமையில் அந்த ஆண்டு முறை அப்பொழுதுதான் வழக்கிற்கு வந்து இருந்ததை இந்தப் பிரயோகம் பிரதிபலிக்கின்றது. ஆனால் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு தவறாக உள்ளது. ஏன் எனில் கொல்லம் ஆண்டு தொடக்கம் என்பது கிறித்துவ ஆண்டு கி.பி.825 க்கு சமமானது. இந்தச் செப்பேடு கி.பி 1691ல் வழங்கப் பட்டிருப்பதால் இந்த செப்பேட்டிற்கான கொல்லம் ஆண்டு 866 என இருத்தல் வேண்டும். இத்தகைய பிழைகள் இந்தச் செப் பேட்டின் 34, 35வது வரிகளிலும் காணப்படுகின்றன.

இராமேசுவரத்திலுள்ள அன்னதான மடத்திற்கு இந்த மன்னர் நல்லுக்குறிச்சி என்ற ஊரினை உடலாக வழங்கியுள் ளதைக் குறிப்பிடுகின்றது இந்தச் செப்பேட்டின் வாசகம். இந்த ஊர் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட் டத்தில் அமைந்துள்ளது. ஆனால் குறிப்பிடப்படும் அன்னதான மடம் இராமேசுவரம் நகரில் எங்கு இருந்தது என்பது தெரிய வில்லை. ஏற்கனவே இராமேசுவரம் மேலரதவீதியில் அமைந் திருந்த மன்னரது அரண்மனையையொட்டி அமைந்திருத்தல் வேண்டும். இன்று அந்த அரண்மனையும் இல்லை. அன்ன சத்திரமும் இல்லை.

## செப்பேடு எண். 35

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் 1619க்கு மேல் செல்லா நின்ற வெகுதானி
2. ய நாம ஸம்வத்யஸ்வத்தில் உத்தராயணத்தில் சிசித ருது வில் ஹை பங்கூனி மீ" 25வ
3. பூ றுவ பட்சத்தில் பூர்ண அம்மாவாசையும் ஆதித்த வாரமும் உத்திர நட்செத்திரமும்
4. சவுபாக்கிய நாமயோகமும் பத்திர வாகறணமும் பெத்த சுபதினத்தில் தேவை ந
5. கராதிபன் சேது மூலா துரந்தரன் ராமனாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூசா
6. துரந்தரன் பரராஜசேகரன் பரராஜ சிங்கம் இரவிகுல சேகரன் இரவி
7. மார்த்தாண்டன் சொரிமுத்துவன்னியன் சயஸ்ரீ மன் மஹா மண்டலேவரன் அ
8. ரியரயிரதள விபாடன் பாசைக்கித் தப்புவராயிர கண்டன் மூவாயிர கண்ட
9. ன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டி மண்டல ஸ்த
10. ரனாசாரியன் சோள மண்டலப் பிறதிஷ்ட்டாப னாசாரிப யன் தொண்ட மண்

---

* இராமலிங்கவிலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராம நாதபுரம்.

அமைப்பு : 28 செ.மீ. × 20.5 செ.மீ

11. டல சண்டப்பிறசண்டன் ஈளமுங் கொங்கும் யாள்ப்பாண ராயன் பட்ட
12. ணமும் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசா பரமேசுவரன்
13. ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் பரதளவிபாடன் உரி கோல் சுரதரணன்
14. அந்தம் பிற கண்டன் சாடிகாறர்கண்டன் சாமித் துரோகி யள்மிண்டன்
15. இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்க மதுரை ராசா பரசிங்கம்
16. ஆத்துல்ப் பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கி
17. வேலி சத்துருவாகி யள்மிண்டன் வன்னிய ராட்டந் தவிழ்த் தான் மேவ
18. லர்கள் கோளரி மேவலர்கள் வணங்கும் இரு தாளினான் வீரமகா கெம்
19. பீரன் கீர்த்திப் பிரதாபன் ஆரிய மானங் காத்தான் தொண்டியன் து
20. றை காவலன் துரக்கனார் வேந்தன் அனும கேதனன் கொடைக்கு கர்ண
21. ன் பரிக்கு நகுலன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேரு விற்க்குன்றோ
22. ய வளைக்குணில் பொரித்தவன் திலகனுதல் மடமாதர் மடலெழுத வரு
23. சுமுகன் விசையலெட்சுமி காந்தன் கலை தெரியும் விர் பன்னன் காமினி கந்த
24. ப்பன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு காலினான் ராசகுலதிலகன்
25. ராசமனோ பயங்கரன் மன்னரில் மன்னன் மகுட வர்தன வேந்தன் மன்
26. னர் சூடாமணி துட்டரில் துட்டன் துட்ட நெட்டூரன் அஷ்ட்ட திக்கு

27. மனோ பயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி நாராயணன் துலுக்கர் தள

28. விபாடன் துலுக்கர் மோக தவிள்த்தான் ஒட்டியர் தளவி பாடன்

29. ஒட்டியர் மோகந் தவிள்த்தான் மலைகலங்கினாலும் மனம் கலங்காதான் அறி

30. வுக்கு அகஸ்தியன் அழகுக்கு வாலசீவகன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வி

31. ல்லுக்கு விசையன் மல்லுக்கு வீமசேனன் தாலிக்கி வேலி அன்னசத்திர

32. சோமன் அடியார்வேளைக்காறன் செம்பிவளநாடன் பூ லோக தெய்வே

33. ந்திரன் செங்காவிக் கொடையன் தனுக்கோடி காவலன் கந்தமாதன கிரி

34. யான் அனுமக்கொடி கெருடக் கொடி மீனக் கொடி புலிக் கொடி சிங்கக் கொடி

35. செங்காவிக் குடையும் அதின்மேல் விருதி செல்லியும் உடையவன் அ

36. சுபதி கசபதி நரபதி சேதுபதி துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலொ

37, த்துங்க சோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனி லிருக்கும் ஸ்ரீ

38. யிரண்ணிய கெற்பயாஜி ரெகுனாத சேதுபதி காத்த தேவரவர்கள் நம்

39. காணியாட்சியான திருப்புல்லாணி தெய்வச் சிலைப் பெருமாள் நயி

40. னாருக்கும் தர் பசயனம் ராமசுவாமிக்கும் மன்னார் சலாபத்தில் நம்முட

41. கல்லில் ஒரு தோணியும் அஞ்சுகல்லும் நிந்தமாக முத்துக்கு முத்துக் கொ

42. ள்ளச் சொல்லி சறுவத்து மான்னியமாக பைங்கூனி உத்தரமான ரத உத்ஸ

43. வத்தில் சந்திர கிறண புண்ணிய காலத்தில் ஆதி சேதுவில் தான பூர்வமாக தாம்

44. பிரசாதனப் பட்டயம் பண்ணிக் குடுத்தபடியினாலே ஆதி சந்திராதித்திய குள்ள

45. வரைக்கும் ஒரு தோணியும் அஞ்சுகல்லும் நிந்தமாக முத்துக் குழித்துக் கொ

46. ள்வாராகவும் இந்தப் பட்டயப் படிக்கி பரிபாலனம் பண்ணிக் கொண்டவர்

47. கள் காசியில் கெங்கையிலே கோடி சிவலிங்கப் பிரதிஷ்ட்டையும்

48. கோடி விஷ்ணு பிரதிஷ்ட்டையும் கோடி பிறம பிறதிஷ்ட்டையும் செய்

49. த புண்ணிய பலங்களை பெறுவார்கள் இதற்கு யாதொருவர் அகிதம் பண்ணி

50. னவர்கள் கெங்கை கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷமும் பிற்

51. மஹத்தியும் ஸ்ரீஹத்தியும் சிசுஹத்தியும் மாதுறு துரோகமும் பண்ணின தோ

52. ஷத்திலே போகக் கடவாறராகவும் ஸ்வ தத்தாத் த்விகுணம் புண்யம் பரதத்த

53. ானு பாலனம் பரதத்தாபஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத் தா

54. ந பாலநயோர மத்ய தாநாத் ச்ரேோயோனு பாலனம் தாநாத் ஸ்வறர்க்கம் அவா

55. ப்நோதி பாலநாத அச்சுதம் புதம் உ.

# செப்பேடு எண் 35

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத கிழவன் சேதுபதி காத்தத் தேவர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | திருப்புல்லாணி தெய்வச்சிலை நயினார் திருக்கோயில் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1619வெகு தானிய வருடம் பங்குனி மாதம் 25ந் தேதி (கி.பி. 20-3-1699) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மன்னார் முத்துசலாபத்தில் முத்துக் குளிக்கும் உரிமை. |

இதுவரை எந்தச் சேதுபதி மன்னருக்கும் இல்லாத வகையில் இந்த மன்னரது இந்தச் செப்பேட்டில் எண்பத்தொன்பது சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளில் அழகுக்கு ''வாலசீவகன்'' ''கந்தமாதனகிரியான்'' என்ற இரு புது விருதுகளைத் தவிர ஏனையவை அனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளிலும் அவர்தம் முந்தையோரது செப்பேடுகளிலும் காணப்படுபவையாகும்.

திருப்புல்லாணி தெய்வச்சிலைப் பெருமாளுக்கு இராமநாதபுரம் சேதுபதி மன்னர், மன்னார் முத்துச் சலாபத்தில் ஐந்துகல் வைத்து முத்துக்குளிக்கும் உரிமையை நல்குவது இந்தச் செப்பேடு. இதன் மூலம் திருக்கோயில் திருப்பணி அன்றாடக் கோயில் பூஜைகள், விழாக்கள் ஆகியவைகளுக்கு விளை நிலங்களையும் ஊர்களையும் தானமாக வழங்குதல் என்ற அறப்பணிகளுடன் அமையாமல் தங்களது பாரம்பரிய உரிமையினையும் திருக்

கோயில்களுக்கு விட்டுக் கொடுத்திருப்பதை திருமலை ரெகுநாத சேதுபதியின் செப்பேட்டில் முன்னர் கண்டோம். வரலாற்றுக்குப் புதுமையான இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து ரெகுநாத கிழவன் சேதுபதியும் மேற்கொண்டார் என்பதே இந்தச் செப்பேட்டின் செய்தியாகும். இந்தச் செப்பேடு வழங்கப்பட்ட ஆண்டு (கி.பி. 1797)ல் மன்னார் பகுதியில் முத்துச்சலாபம் நடைபெற்றதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[1]

மேலும் திருப்புல்லாணி த் திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்திருநாள் அன்று பெருமாளுக்கு திருத் தேர்விழா நடைபெற்று வந்ததையும் இந்தச் செப்பேடு தெரிவிக் கின்றது. இந்தச் செப்பேட்டுத் தானம் ''ஆதி சந்திராதித்தியர் உள்ள வரை''க்கும் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிக்கப்பட் டுள்ளது. ஆனால் இந்தச் செப்பேடு வழங்கிய ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் சேதுபதி மன்னர் ஆட்சியையும் மன்னார் சலாப முத்துக்குளிக்கும் உரிமையையும் ஆங்கிலேயர் ஒழித்துவிட்டனர். ''இந்த தர்மத்திற்கு அகிதம் செய்தவர்கள் ......'' என்று தொடரும் பழியினை ஆங்கிலேயர் பொருட்படுத்தவில்லை. கீழை நாட்டு மக்களது அற உணர்வுகளை மதிக்கும் சுபாவம் அவர் களுக்கு இல்லையென்பதையே அவர்களது இந்தச் செயல் புலப் படுத்துகிறது.

1. Hornell — The Indian Pearl Fisheries of the Gulf of Mannar and Palk bay (1910) Page. 46

# 8

# முத்துவிஜய ரகுநாத சேதுபதி
## (கி.பி. 1710 — 1728)

மறவர் சீமையின் மகோன்னத ஆட்சியாளராக விளங்கிய கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி கி.பி.1710ல் இறந்தார். அவருக்கு ஆண்வாரிசு இல்லாததால் அவரது தங்கை உடையக்காளின் மகனான திருவுடையாத் தேவர் சேது மன்னராகப் பட்டம் சூடினார். இராமநாதபுரத்தில் ஆண்டுதோறும் புரட்டாசித் திங்களில் எடுக்கப்பெறும் நவராாத்திரி விழாவின் இறுதி நாளான தசரா எனப்படும் விஜயதசமி அன்று இவர் முடிசூடிக் கொண்டதால் முத்து விஜய ரெகுநாத சேதுபதி என அழைக்கப் பட்டார். இவரது தந்தை கடம்பத்தேவர் என்றும் தாயார் உடையக்காள் என்றும் தெரிய வருகிறது. இவரது ஊர் திருவுத்தர கோசமங்கை என்பதை இன்னொரு செப்பேடு மூலம் அறியலாம்.

திருமலை சேதுபதி கிழவன் சேதுபதி போன்றோரின் ஆட்சியைப் போல இந்த மன்னரது ஆட்சியும் நீண்டதாக அமையாவிட்டாலும், பல சிறந்த சாதனைகளின் பட்டியலாக

அமைந்திருந்தது. இந்தமன்னர் முதலில் சீமையின் நிர்வாகத்தை செம்மை செய்தார். மதுரைச் சீமையில் இருந்து வேளாளப் பெருமக்களை வரவழைத்து கிராம நிர்வாகப் பதிவேடுகளை பராமரிக்கச் செய்தார். கமுதி, இராஜசிங்க மங்கலம், ஓரியூர், அறந்தாங்கி, பாம்பன் ஆகிய ஊர்களில் வலிய அரண்களை அமைத்து நாட்டின் பாதுகாப்பை உறுதிமிக்கதாக ஆக்கினார்.

மற்றும் இவர் சிறந்த கலா ரசிகராக இருந்ததால் இசையும் கூத்தும் இவர் ஆட்சியில் நாடு முழுவதும் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்பட்டது. கோநகர் இராமநாதபுரத்தில் இந்தக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற கலையரங்கம் ஒன்றை அமைத்தார். இவற்றுக்கெல்லாம் மேலாக இராமலிங்க விலாசம் அரண்மனையைக் கண்ணைப் பறிக்கும் வண்ண ஓவியங்களின் கலைப் பெட்டகமாகச் செய்தார். இங்ஙனம் நிர்வாகத்திலும் கலை வளர்ச்சியிலும் ஈடுபாடு கொண்டிருந்த இவர், தமது முன்னோரை அடியொற்றி, தெய்வீகத் திருப்பணிகளில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இராமேசுவரம், திருப்புல்லாணி இராமநாதபுரம், திருப்பெருந்துறை, ஆகிய ஊர்களின் திருக்கோயில்களுக்குப் பல ஊர்களை சர்வமானியமாக வழங்கினார். இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி உலா வருவதற்கு அழகிய தேர் ஒன்றினையும்[1] பள்ளியறை சயனத்திற்கு ரூ.18680 ரூபாய் எடை வெள்ளி ஊஞ்சல் ஒன்றையும்[2] அமைத்து வழங்கிய செய்திகள் உள.

சேது யாத்திரை வரும் பயணிகளுக்குத் தீர்த்தாண்டதானத்திலும் இராமநாதபுரம், இலட்சுமி புரத்திலும் அன்ன சத்திரங்களை நிறுவிப் பயணிகளது பசியும் களைப்பும் தீர உண்டியும், உறையுளும் அளிக்க ஏற்பாடு செய்தார். மண்டபம் தோணிக்கரைக்கும் பாம்பனுக்கும் இடையில் பயணிகளுக்கு போக்கு வரத்து வசதிகளையும் செய்து கொடுத்தார். பாம்பனில் இந்தப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்த மன்னரது மருகர் தண்டத்தேவர், தவறு ஒன்று இழைத்தார் என்பதற்காக அதனை

1. பலபட்டடை சொக்கநாதப்புலவர் - தேவை உலா (உ.வே. சா. பதிப்பு)
2. இராமேசுவ்ரம் திருக்கோயில் கல்வெட்டு ASSI. Vol. Iv (1886) p.60

பெரிய சிவத்துரோகமாகக் கருதி அவருக்கு மரண தண்டனை வழங்கினார். மனு நீதிச் சேதுபதியாகவும், சிவநீதிச் செல்வ ராகவும், வரலாறு படைத்த இந்த மன்னரது இறுதி ஆண்டுகள் தஞ்சை மராத்திய மன்னருடன் போரிடுவதில் கழிந்தன. அறந் தாங்கிப் போரில் முனைந்திருந்த பொழுது இவர் நோயுற்று கி.பி.1728ல் மரணமடைந்தார்.

பல பட்டடை சொக்கநாதப்புலவர் இந்த மன்னர் மீது ''பணவிடு தூது'' என்ற சிற்றிலக்கியத்தைப் பாடியுள்ளார். இதே புலவர் பாடியுள்ள ''தேவை உலாயிலும், இந்த மன்னரது இராமமேசுவரம் திருக்கோயில் பணிகளைப் புகழ்ந்து போற்றி யுள்ளார்.

## செப்பேடு எண். 36

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1635 இதன்மேல் செல்லாநின்ற
2. விசய நாம சம்வச்ரத்தில் உத்ராயண கிரீஸ்ம ரிதுவில்
3. விதுல மாசத்தில் ... கிருஷ்ண பட்சத்தில் அமாவாசையும் சுபயோக சுபகரண
4. மும் அவிட்ட நட்சத்திரத்தில் பரிக நாம யோகமும் சாது ஸ்தா
5. ரணமும் கூடிய புண்ணியகாலத்தில் தேவை நகராதிபன் சேது
6. மூல ரட்சா துரந்தரன் இராமநாதசாமி காரியதுரந்தரன் சி
7. வபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ கெச சிங்கம் இரவிகுல
8. சேகரன் இரவிவர்மன், சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்தி ஸ்ரீமன் மக
9. ா மண்டலேசுரன் அரியராயதள விபாடன் பாசைக்குத் தப்புவராய
10. கண்டன் மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு
11. குடாதான் பட்டமானம் காத்தான் துட்டராயிர கண்டன்
12. புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவளநாடன் வேதியர் காவலன்

---

* அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

13. அரசராவணராமன் அந்தப்பிர கண்டன் சாடிக்கார மிண்டன் சு
14. வாமி துரோகியள் மிண்டன் பஞ்சவர்ணராய ராகுத்தன் பனுக்
15. குவார் கண்டன் வைகை வளநாடன் கொட்டமடக்கி வையாளி
16. நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீர வெண்ப
17. ாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் மதுரைரா
18. யன் ஆத்தில் பாய்ச்கி கடலில் பாய்ச்சி மதப்புலி, அடைக் கலங்காத்தான் தொண்டியந்
19. துறை காவலன் துரக ரேபந்தன் அனுமகேதனன் குடைக் குக் கர்ணன் பர
20. த நாடகப் பிரவீணன் கருணாகடாட்சன் குன்றுயர் மேருவில்
21. குன்றா வளைகுணில் பொறித்தவன் திலதநுதல் மட மாதர் மடலெ
22. ழுதவரு சுமுகன் விசையலட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பன்ன
23. ன் காமினிகந்தப்பன் சத்தியபாஷா அரிச்சந்திரன் சங்கீத சாகி
24. த்திய வித்தியாவினோதன் வீரதண்டை சேமத்தலை விளங்கு மிருதாளி
25. னான் சகல சாம்பிராச்சிய லட்சுமிவாசன் சேதுகாவலன் வங்கிஷ
26. ாதிபதியான துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோ த்துங்க சோழ ந
27. ல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் இரண்ய கெர்ப்ப
28. யாஜி ரெகுநாத சேதுபதி காத்தத்தேவர்புத்திரன் ஸ்ரீ இரண்ய கெர்ப்ப

29. யாஜி முத்து விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் அத்தியூத்திற்கு பிறதி

30. நாமமான முத்துவிசைய ரெகுநாத சேதுபதி பூபாலப் புரத் திலிருக்கும்

31. நானா கோத்திரத்து நானா சூத்திரத்து நானா சாகாத் தியரான அபிஷே

32. ஷச வித்துவனமான மகாஜனங்களுக்கு பூதான தர்ம சாச னங்குடுத்த

33. தாவது பாம்பஆத்துக்கு மேல் கரையில் முத்து விசைய ரெகுநாத சேதுபதி

34. க்கு வாய்த்த சத்திரத்து மேல் பாரிசமாக அக்கிரகாரமு கட்டியிருக்கச்

35. சொல்லி கட்டளையிட்ட கெண சங்கை பாகம் பதினாலும் மனை தர்ம

36. மாக பதினான்கு மனைக்கு கட்டளையிட்ட

இரண்டாவது பக்கம்

37. கிராமமானது செவ்விருக்கை நாட்டில் தேர்போகி ஒட்டானேந்த

38. ல் ஒருவானேந்தலுக்கும் மேற்கு திருவத்தியாயர்ஊணிக்கு வடக்கு சீமை

39. மஞ்சளோடைக்கு வட கிழக்கு வயலுக்கும் தெய்வேந்திர னேந்தலுக்கும்

40. சமுத்திரத்துக்கும் தெற்கு இந்நான்கு எல்கைக்குட்பட்ட

41. அத்தியூத்து கிராமத்துடன் சேர்ந்த ஏந்தல் பிறவிடை நஞ்சை, புஞ்சை, மா

42. விடை, மரவிடை, பட்டம் படுகை திட்டு, திடல் மேல் நோக்கிய மரம் கீழ்

43. நோக்கிய கிணறு நீரும் பாசியும் குடி, படை, பள்ளு, பறை, சமுதாயப்

44. பிராப்தியும் நிதி நிஷேப ஜலதரு பாஷான தெட்சனம்

45. என்று சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ சுவாமியங்களும்

46. தானாதி விநியோக விக்கிரையங்களுக்கு யோக்கியமாக சகி
47. ரான யோதா தாராபூர்வமாக ராம தனுஷ்க்கோடிக் கரையில் க
48. ட்டளையிட்ட படியினாலே சந்திராதித்தவரை சந்திரப் பிரவேஷம்
49. புத்திர பௌத்திர பாரம்பரை சர்வமானியமாக ஆண்டனுபவித்து
50. கொள்ளக்கடவராகவும் இந்த தர்மத்தை யாதொருவர் பரி
51. பாலனம் பண்ணினவர்கள் கோடி சிவலிங்கப் பிரதிட்டையும் கோ
52. டி விட்ணு பிரதிட்டையும் கோடி விர்ம்மப் பிரதிட்டையும் பண்ணின சுகிர்
53. தத்தை அடையக்கடவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதொருவர்
54- அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலும் இராமசேதுவி
55. லேயும் மாதாபிதாவையும் பிராமணனையும் குருவையும் பசுவை
56. யும் வதை பண்ணின தோசத்திலே போகக் கடவாராகவும் இந்தப்
57. படி சம்மதித்து இரண்ய கெர்ப்ப யாஜி முத்து விசைய ரெகுநாத
58. சேதுபதி காத்த தேவர் அவர்கள் அத்தியூத்துக்கு பிரதி நாமமான முத்து
59. விசையரெகுநாத சேதுபதி பூபாலபுரம் அபிஷேஷத்து வரான மகா
60. ஜனங்களுக்கு தனுக்கோடிக் கரையில் பூதானம் தர்மசாதனம் பண்ணி குடுத்தோம்.
61. — — — — — — — — — — — — — —
62. — — — — — — — — — — — — — —
63. — — — — — — — — — — — — — —
64. — — — — — — — — — — — — — —
65. — — — — — — — — — — — — — —
66. இந்த சாசனம் எழுதினேன் தன்மராயப்பிள்ளை மகன் வீரபத்திரன் ராயச
67 ம் சொஸ்தலிகிதம் இந்தப்படிக்கு நாளெங்காரியன் கையெழுத்து

## செப்பேடு எண். 36

*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : அத்தியூத்து கிராம அந்தணர்கள்
3. செப்பேட்டின் காலம் : 1635 விஜய வருடம் (கி.பி.1713)
4. செப்பேட்டின் பொருள் : அத்தியூத்து கிராமம் தானம்

இந்தச்செப்பேட்டை வழங்கிய இராமநாதபுரம் முத்து விஜய ரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக ஐம்பத்து நான்கு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் காணப்படுகின்றன. இவையனைத்தும் இந்த மன்னருக்கு முன்னர் இராமநாதபுரம் அரசுகட்டிலில் அமர்ந்திருந்த சேதுபதிகளது செப்பேடுகளில் காணப்பட்டவையாகும்.

இந்த மன்னர் சிறந்த சிவபக்தராக விளங்கியவர். குறிப்பாக இராமேசுவரம் இராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்மனிடம் இடையறாத பக்தி பூண்டு ஒழுகி வந்தவர். பயண வசதி இல்லாத அந்தக் காலத்தில் இராமநாதபுரத்திலிருந்து இராமேசுவரத்திற்கு நாள்தோறும் குதிரையில் சென்று திருக்கோயில் திருப்பணிகளைக் கண்காணித்து வந்தார். ஆதலால் கோயில் பணிகளை மேற்கொண்டு இருந்த அந்தணர்களிடமும் அவர் அனுதாபம் கொண்டிருந்தார் என்பதனை இந்தச் செப்பேடு புலப்படுத்துகிறது.

அத்தியூத்து என்ற கிராமத்தைப் பதினான்கு வைதிக பிராமணர்களுக்கு மனைதர்மமாக தானம் அளித்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கிராமம் அன்றைய செவ்விருக்கை நாட்டில் அமைந்திருந்ததாகத் தெரியவருகிறது. தற்

11. வலன் அடியார் வேளைக்காரன் பட்ட மானங்காத்தான் துஷ்டராயரில் கண்டன் இளஞ்

12. சிங்கம், தளஞ்சிங்கம், பகைமன்னர் சிங்கம் ஆத்துப் பாய்ச்சி, கடலில் பாய்ச்சி, தேப்புலி

13. அடைக்கலங்காத்தான், தொண்டியந்துறைக் காவலன் துரக ரேபந்தன், வையாளி நாராயணன் இ

14. வுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வைகை வளநாடன் செம்பி வளநாடன் அனும

15. கேதனன் கருட கேதனன் வன்னியராட்டந் தவிழ்ந்தான் கந்தனமாதன வெற்பினன் அர

16. சராவண ராமன் பரராச சேகரி பரராச சிங்கம் பரராச சற்ப கருடன், ரவிவர்மன், ரவி

17. குலதிலகன், துலுக்க தள விபாடன் துலுக்க மோகந் தவிழ்ந்தான் ஒட்டியதள விபாடன்

18. ஒட்டிய மோகம் தவிழ்ந்தான் ஆரிய மானங்காத்தான் மதுரை மானங்காத்தான்

19. நவகோடி நாராயணன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்கு மிரு தாளினான்

20. வீரமுடி சேமத்தலை விளங்குமிரு தாளினான் குன்றாய் மேருஷன் குணசீலனை விளங்கு

21. குணில் பொசித்தவன் திலதமுதல் மடவார் மடல்எழுத வரு சுமுகன் வீரலட்சுமி விசய

22. லட்சுமி காந்தன் காமினி கந்தப்பன் கலைதெரியும் விற்பனன் சகலகலை வல்லவன்சத்

23. திய பாஷா அரிச்சந்திரன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன் சிவபூசா துரந்தரன் இராமநாத

24. சுவாமி காரிய துரந்தரன் துகவூர் கூத்தத்து குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரை

25. யாத கண்டனில் இருக்கும் இரண்ய கற்ப யாஜி ரெகு நாத சேதுபதி காத்ததேவர் அவர்கள் குமாரர்

26. இரண்ய கற்பயாஜி விஜயரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் வைகுண்டவாசியாய ரெகுவங்கிசோதைய

27. ரான ஸ்ரீராம பவாரிகு ராவண அகிரி வித்யா விமோச ஸ்ரீ இராமநாத சுவாமி பாத
28. பர்வதவர்த்தினி அம்மனுக்கு தர்மசாதனப் பட்டயம் எழுதிக் கொடுத்த சாதனமாவது மன்
29. னார் சலாபத்துறையில் நம்மிட சமஸ்தானத்திற்கு சலாபம் குளித்து வருகிறதில்
30. நம்மிட சுக்கிரவாரக் கட்டளைக்கு மூணுகல் குளித்துக் கொள்ளச் சொல்லி பர்வதவர்த்தினி
31. அம்மன் சன்னதியில் தர்மதான பூர்வமாக தாம்பரசாதனம் பண்ணிக் கொடுத்த
32. படியினாலே சலாபம் குளிக்கிற வருஷந் தோறும் சுக்கிர வாரக் கட்டளைக்கு மூன்றுகல் குளித்து
33. அதில் வருகிற ஊதியப்படி நம்முட கட்டளையை சாரப் பண்ணிக் கொள்ளச் சொல்லி கட்டளையிட்ட
34. படியினாலே ஆசந்திராக்தமாய் அனுபவித்துக் கொள்வா ராகவும் அந்தப் படிக்கு தாம்பிர சாதன
35. பட்டயம் கொடுத்தேன் இராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்மனுக்கு இந்த தர்மத்தை
36. யாதாம் ஒருவர் பரிபாலனம் பண்ணிய பேருக்கு காசியி லேயும் சேதுவிலேயும் கோடி சிவலிங்க
37. பிரதிஷ்டை பண்ணிய பலனையும் கோடி பிரம்மப் பிர திஷ்டை பண்ணிய பலனையும் அடையக்
38. கடவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதாம் ஒருத்தர் விக்கினம் பண்ணின பேர்கள் காசியி
39. லேயேும் தனுக்கோடியிலேயும் ஸ்திரிவதை பண்ணின தோஷத்திலேயும் சிசு வதை பண்ணின
40. தோஷத்திலேயும் காரம் பசுவைக் கொன்ற தோஷத்தி லேயும் போவக் கடவாராகவும் இந்த
41. தர்மசாதனம் எழுதினேன் சென்ன வீரப்பபண்டாரம் மகன் ஏரப்ப பண்டாரம்

வழங்கியுள்ளார். இந்தச் செப்பேட்டின்படி திருக்கோயில்தானத்-தால் மன்னார் பகுதியில் (இலங்கை கடற்கரை) நடைபெறும் முத்துச்சலாபத்தில் மூன்று கல்வைத்து முத்துக்குளித்துக் கொள்ள வேண்டியது. சேதுபதிகளுக்கு எதிர்க்கரையான இலங்கையின் கொண்டாச்சி பகுதி வரையில் அறுபது கல் முத்துக்குளிப்பதற்கான உரிமை இருந்ததை இராமநாதபுரம் சமஸ்தான மேன்யுவல் தெரிவிக்கின்றது[1] என்றாலும் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியை கி.பி. 1795ல் சிறையிலிட்டு தங்களது ஆதிக்கத்தை சேது நாட்டில் ஏற்படுத்திய ஆங்கிலேய ஆதிக்க வெறியர்கள் திருப்புல்லாணி, இராமேசுவரம் திருக்கோயில்கள் தங்களது படகுகளைக் கொண்டு மன்னார் முத்துச்சலாபத்தில் கலந்துகொள்ளும் உரிமையை கி. பி. 1822ல் தடுத்துவிட்டனர்[2].

இத்தகைய வழிபாட்டுத்தலங்களுக்கான வருவாய்களையும் ஒருசேர ஆங்கிலேயர்களே அனுபவித்து வந்தனர். இந்த ஒரு விஷயத்தில் அவர்கள் பாராபட்சம் காண்பிக்கவில்லை! இராமநாதபுரம் குத்புதீன் சாகிப் தர்ஹா, பார்த்திபனூர் தாடிப்பக்கீர் தர்ஹா, திருப்புவனம் மலங்குசாகிப் தர்ஹா ஆகிய இஸ்லாமிய புனித இடங்களுக்கு நுந்தா விளக்கு மற்றும் கந்தூரி போன்ற செலவினங்களுக்கு ஆங்காங்கு உள்ள சுங்கச்சாவடிகளின் வசூலிலிருந்து சேது மன்னர்கள் அனுமதித்திருந்த மான்யத் தொகைகளை அவர்கள் நிறுத்தி விட்டதை வரலாற்று ஆவணங்கள் குறிப்பிடுகின்றன[3].

1. Rajaram Rao. T.-Manual of Ramnad Samasthanam (1891) Page 269
2. Madras District Records – Vol. 4670 (A.D.–1822) Page-20
3. Madras District Records vol. 4669, 4670, 4681-A.

# செப்பேடு எண் 38

(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1636 இதின் மேல்ச் செல்லாநின்ற ஜயஹூ சித்தி

2. ரைமீ கவ சோமவாரமும் தசமியும் ஸ்ரீவண நக்ஷத்திரமும் சுபயோக சுபகரணம்பெத்த புண்ணிய

3. தினதில் ஸ்ரீமன் மஹாமண்டலேசுவரன் அரியாயிரதளவி பாடன் பாசைக்குத் தப்புவராதகண்

4. டன் மூவராயகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பாண்டிமண்டலஸ் தாபனா

5. சரியான் சோளமண்டல பிரதிஷ்ட்டாபனா சாரியான் தொண்டமண்டல சண்டப் பிரசண்டன்

6. ஈளமும் கொங்கும் இயல்பான தேசமும் யெண்மண்டலமும் கெசவேட்டை கண்டருளிய ராஜாதிரா

7. ஜன் ராஜபரமேசுவரன் ராஜமார்த்தாண்டன் ராஜஉத் துண்டன் ராஜகெம்பீரன் அரியாயிதளவி

8. பாடன் உறிகுலசுறதறானன் அந்த பரகண்டன் பனுக்கு வார்கண்டன் சாடிக்காறகண்டன் சுவாமி

9. துரோகியள் முண்டன் துஷ்டரில் துஷ்டன் துஷ்ட நிஷ்டூரன் துஷ்டநிஹ்ரஹ சிஷ்டபரிபாலன் புவனாதி

10. வீரன் வீரகஞ்சுகன் வேதியர்காவலன் அடியார் வேளை காரன் பட்டமானங்காத்தான் துஷ்டராயி

11. ரகண்டன் இராஜசிங்கம் தர்மசிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்துப்பாச்சி கடல்பாச்சி மதப்புலி அடை

12. கலம்காத்தான் தொண்டியன்துறை காவலன் துறகரேவந்தன் வய்யாளினாறாயணன் இவுளிபாவடி

13. மிதித்தேறுவர்கண்டன் வைகைவளநாடன் செம்பிவளநாடன் அனுமகேதனன் கெருடகேதனன்

14. வன்னியராட்டம்தவிற்தான் கெந்தமாதனவெற்பினான் அரச ராவணராமன் பரராசகேசரி பரராச

15. கெசசிங்கம் பரராச சற்பகெருடன் ரவிவர்மன் றவிகுல திலகன் துலுக்கர்தளவிபாடன் துலுக்கர்

16. மோகந்த்தவிழ்தான் ஒட்டியர்தளவிபாடன் ஒட்டியாமோகந்தவிழ்த்தான் ஆரியமானங்காதான்

17. மதுரைமானங்காதான் நவகோடி நாராயணன் மேவலர்கள் கோளறி மேவலர்கள் விளங்கும்மிரு

18. தாளினான் வீரமுடி சேமத்தலை விளங்கு மிருதாளினான் குன்றிலுயர் மேருவை குன்றாவளைகுனில்

19. பொருதவனத்தில் தறுதலமடவாற்கள் மடலெழுதுவறுசுமுகன் வீரலெட்சுமி - விஜெயலெட்சுமி

20. காந்தினீ காமினீ கந்தற்ப்பன் கலைதெரியும் விர்ப்பனன் சகலகலைவல்ல

21. பறாசக்தி-பாசா அரிச்சந்திரன் சங்கீத சாயுஜிய வித்தியா வினோதன் சிவபூஜா துறந்தரன்

22. இராமநாதசுவாமி காரியதுறந்தரன் துகவூர்கூத்தத்துகாத்துறான குலோதுங்க சோளக

23. நல்லூற் கீள்பால் விரையாதகண்டனிலிருக்கும் ஹிறண்ணிகர்பயாஜீ ரெகுநாத

24. செதுபதிகாத்த தேவரவர்கள் புத்ரன் ஹிறண்ணிய கர்ப்ப யாசி விசையரெகு

*சங்கரன் துணை*

25. நாத சேதுபதி காத்த தேவரவர்கள் வைகுண விலையாய ரெகுவங்குஷோதையரான ஸ்ரீராம

26. சுவாமிக்கு ராவண ஹதாவிமேசன ஸ்ரீராமநாதசுவாமி பாதம் பிரியாத பருவதவர்தினியம்மனுக்கு

27. சுக்கிறவாற அறக்கட்டளைக்கு தற்மசாசனப்ட்டயம் குடுத்தபடி பட்டயமாவது அர்த்த ஜாம அபிஷேக

28. நெவேத்தியம் பூஜைக்கு ஆடித்திருவிழா சுகிற வாரஉட்ச பதுக்கும் கட்டளையிட்ட கிராமமாவது காவ

29. னூர் கண்மாயுள்வாயில் எல்லைக்கல்லுக்கு ஆயிக்குடி சின்னணதேவர் புஞ்சை தட்டுக்கு மேற்கு செங்கா

30. னேந்தல் சின்னான் வேலைக்காரன் புஞ்சை தட்டுக்கும் சிங்கனேந்தலுக்கு தென்காலுக்கும் வடக்கு தேனாருக்கும்

31. கூத்தன் தேனாற்றுக்கு கால் கவாதலைக்கும் கிழக்கு குளவிப்பட்டி இல் செல்வக்குடும்பன் புஞ்சை

32. தட்டுக்கு ஆயிக்குடிப் பொருதுக்கரையில் சின்னதேவருடை யார் புஞ்சை தட்டுக்கு ஆயிகுடி வாமதே

33. வர் புஞ்சைத்தட்டுக்கும் நரிகூட்டி பரம்புக்கு தெற்கு இன் னான்கெல்கைக்குள்பட்ட விளத்தூர் ஊறது

34. புரவு நஞ்சைப் புஞ்சையும் குடிபடை பள்ளுப்பறை உண்டாகிய வரிக்கோர்வையும் நியிநிக்ஷெபசெலதருபா

35. ஷாணமென்று சொல்லப்பட்ட அஷ்டபோக தேஷ சுவாமி யங்களும் சற்வமானியமாகப் பண்ணி

36. ஆயிக்குடி உடையாத்தேவர் வைச்ச தேப்பாபு நிலமும் அதிலுண்டாகிய மாவடை மரவடையும்

37. சின்னதொண்டி விளத்தூர் மண்கோட்டை சோளியக்குடி சிருதவயல் கொடிப்புங்கு இந்தப்

38. படி முன்னாதியில் நடந்துவருகிறது இப்போது சின்ன தொண்டி நீங்கலாக மத்த அஞ்சுகிராம

39. மும் அறந்தாங்கி வாடகையிலே கூட்டியிருக்கிறபடியி னாலே சின்னதொண்டி யெல்கை உள்

40. கடையேந்தல் மஞ்சள்க்காறை சாவிறாக்கனேத்தல் வேல ங்குடி பன்றிறெம்பல் கோடிவயல் பெருமா

41. லேந்தல் நீங்கலாக யிப்போது நடக்கிற சின்னதொண்டி நரிக்குடி புதுகண்வாயி உள்பட இவ்வள

42. வுக்கும் யெல்கைக்கும் புறவு மஞ்சள்கூறைசான் விளக்க னேந்தல் பன்றிறேம்பலத்துக்கு தெற்கு மே

43. ற்கு தளிமருங்கீற்கையிக்குளன் தர்மத்துக்கும் விசுவனாத நேந்தலுக்கு கூத்தன் வயலுக்கும் கிழக்கு தெ

44. ற்கு நவல்லக்குடி நம்பிதாளை உடையவர் தர்மத்து வடக்கு கிழக்கு பெரிய தொண்டிக்கடையில்

45. யெல்கைகல்லுக்கும் பள்ளிவாசலுக்கும் மேற்கு இந்தனாஙு கெல்கையிக்குள்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை

46. மரவடையும் சேமனூர் விரியாநேந்தல் கண்வாயிக்கு வண தேவர் புதுகண்வாயி பெரியகுளத்து கண்

47. வாயிக்கும் கிழக்கு வளநாட்டிலெ கைகஞ்சம்பிளை தோட் டதுக்கும் ஆண்டி ஊரணிக்கும் வடக்கு

48. கொடிக்குளம் ரெகுநாதகுடும்பன் புஞ்சைக்கும் கொடிக் குளம் மடத்து கண்வாயி உள்கையில் மருதூர் உடை

49. யவர் கோவிலுக்கு மேற்கு கொடிக்குளத்து வடகாலுக்கு கிழக்கு பெரியகூத்தன் ஊரணிக்கு மேற்கு

50. நக்கன்பெரியான் கண்வாயி உள்வாயிக்கு களறிகாலுக்கும் தென்மேற்கு சம்மட்டி யேந்தல் யெல்கைக்கும்

51. புறவுக்கும் புத்தூர் பாதைக்கு கொடிக்குளத்துகாலுக்கும் தெற்கு இன்னாங்கெல்கைக்கு உள்ப்பட நஞ்

52. சையும் மாவடை மரவடையும் சர்வமானியமாக இராமீசு வரம் ஸ்தலத்தில் கட்டளையிட்டது சுக்கிர

53. வாரதினத்தில் சுவாமிஸன்னதியிலேயும் விசுவநாதசுவாமி ஸன்னதியிலேயும் அம்மன் ஸன்னதியிலே

54. யும் மத்த சுத்து ஸன்னதிலேயும் உண்டியலில் வருகிற ஆதாயமும் ருத்திறாபிஷேகமும் பஞ்சாமுருதமும்

55. பட்டுப்பருத்தி பொன் வெள்ளி பொட்டுக்காரை முதலாகிய உபயமும் உள்நாட்டு உபயமும் சுத்துகோ

56. வில், சேது மாகாளியம்மன் நம்மநாச்சியம்மன் கோவிலிலே வருகிற உபயமும் பொன் வெள்ளி

57. பட்டு பருத்தியும் நாம்சன்னதியிலேபோடுகிற காணிக்கை பொன் வெள்ளி பட்டு பருத்தியும் பஞ்ச

58. பட்டமார் வருஷாந்திரம் கொடுக்கிற அறுபதுபொன்னும் அவர்கள் வகையிலே விபகார விஷேச

59. வகையிலே வருகிற அபராதம் வகை ஆதாயமும் அவர் களுக்கு தோணிச்சீட்டு கொடுக்கிறதும் ஸ்த

60. லத்து படிகாவல் வருஷாந்திரம் குடுக்கிறயேளு பொன்னும் தறகன் சொவந்திறம் தவசதானியம்

61. முதல் அளக்கப்பட்ட துக்கெல்லாம் நூறுமரக்காலுக்கு ஒரு மரக்காலும் யெண்ணெய், தேன், நெய்

62. முதலாகியதுக்கு நூறுக்கு ஒருபடியும் யெண்ணப்பட்டது கெல்லாம் நூற்றுக்கு ஒண்ணேமுக்காலும்

63. ஸ்தலத்து வியாபாரியள் வாங்குற யெண்ணப்பட சறக்கு கெல்லாம் நூற்றுக்கொண்ணும் நிறுக்கப்

64. பட்ட சறக்கு வகையிக்கு நூற்றுக்கொண்ணேகால் பலமும் மகமை பத்துப்பொன்னுக்கு அரைபண

65. மும் பாம்பன் இக்கரைப்பட்டு வருகிற நெய்சுமை ஒண் ணுக்கு ஒண்ணரையேமாகாணி பணமும்

66. பாம்பன் முதல்கொண்டு இராமீசுவரத்தில் நிக்கிற காளை மாட்டை அக்கறையேத்துவித்து கொள்கிற

67. தும் காளைமாட்டுக்குச் சூலம்போட்டு அதிலே வருகிற உபயமும் அறண்மனைப்பட்டியில் உண்டா

68. கிய பசுவும் அகுதியாயிநிற்கிற 'பசுவும் அனாதப்பிறேத மாயிப்போன பேர்வளியிலே இருந்த ஆதா

69. யமும் நம்முடைய முத்திரைக்குண்டாகிய சம்பளம் சாதம் சொவந்திரம் கோவில்கட்டளையில் ஆடித்தி

70. ருநாள் பரிவட்ட சுதந்திரமும் நம்முடைய மண்டபத்து பரிவட்ட சுவந்திரமும் புன்னைத்தோ

71. ப்பில் ஆயிதோப்பு நிலமும் முத்துதிருவுடையாதேவர் தோப்பும் இராமநாதபண்டாரம் விட்டுக்

72. குடுத்த தாவை கொல்லையும் காட்டுகொல்லையும் சின் னய்யா அவர்கள் நந்தவனமும் பாவனிசங்கர

73. மஹாறாஜா அவர்கள்விட்ட தோப்பும் கந்தமாதனபருவத மார்க்கத்தில் விஜய ரெகுநாத பெரிய

74. தோப்பும் இதுகளிலுண்டாகிய மாவடை மரவடையும் இது வெல்லாம் தான பூர்வமாககட்டளை

75. யிட்டபடியினாலே சந்திறாதித்திய ஸந்ததிப்பிரலோசம் உள்ளமட்டும் ஆண்டனுபவித்து வரகடவா

76. றாகவும் யாதாமொருதறிந்த தர்ம்மதை பரிபாலன பண்ணின பேருக்கு காசியிலேயும், சேதுவிலேயும்

77. கோடி லிங்கப்பிறதிஷ்டை பண்ணினதையும் கோடி பிரம்மப் பிறதிஷ்டைபண்ணின பலத்தையும்

78. அடையக் கடவாறாகவும் இந்ததருமதுக்கு யாதாமொருதர் விக்கினம் பண்ணின பேற்கள் காசியிலேயும்

79. தனுஷ்கோடியிலெயும் ஹத்தி ஸ்ரீவதைபண்ணின தோஷத்திலேயும் பிறம்மவதை பண்ணின தோஷத்தி

80. லேயும் போகக்கடவாராகவும் இந்தப்படிக்கு முத்து கருப்பனாசாரி யெளுத்து

81. பிரமோதூதஸ்ரீ ஆவணிமீ" க உ சுக்கிறவாறமும் றேவதி நக்ஷத்திறமும் பஞ்சமியும் அமிருத சித்த

82. யோகமும் கூடின புண்ணியதினதில் பருவதவற்தனி அம்மனுக்கு ஸ்ரீமது முத்துவிசைய ரெகுனாத

83. சேதுபதி காத்ததேவரவர்கள் உபயம் சேமனூர் சிறுதெட்டு அறண்மனையில் ஆண்டு வந்த முப்பத

84. றுகல விறப்பாடும் ஆறு புஞ்சையும் தானபூர்வமாக பண்ணி வைச்சபடியினாலே பட்டயபடிக்கு

85. ஆசந்திராதித்தியவரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்ள கடவாராகவும் இந்த சிறுதெட்டு உள்ள

86. தர்மத்தை அம்மனுக்கு பரிபாலனம்பண்ணினபேருக்கு படட்யதில் எளுதியிருகிறபடிக்கு சுகுற்தத்

87. தை அடைவாராகவும் இந்த சிறுதெட்டு உளவுதர்மத்துக்கு யாதாமொருதர் விகாதம் நினைத்த

88. பேருக்கு பட்டயத்தில் எளுதியிருகிறபடிக்கு தோஷத்தை அடைவாறாகவும் அந்தப்படிக்கு மதுரை

89. உத்தண்டமூற்த்தி நாலங்கராய ஆசாரி குமாரன் சடையப்பன் கையெளுத்து உ.

களையும் இந்தக் கட்டளைக்கு உட்படுத்தி உள்ளதைகுறிக்கப்பட்டுள்ளது. மேலும் இராமேசுவரத்தில்சுக்கிரவார நாள்அன்றுசுவாமி சன்னதி, விஸ்வநாத சன்னதி, அம்மன் சன்னதி ஆகிய சன்னதிகளில் உண்டியலில் கிடைக்கின்ற ஆதாயமும், ருத்ராபிஷேகம், பஞ்சாமிர்தம் பட்டு, பருத்தி, பொன் வெள்ளி, பொட்டுக்காரை ஆகிய உபயங்களும் இராமேசுவரம் தலத்தில் உள்ள சேதுமாகாளியம்மன், நம்பு நாச்சியம்மன் கோயில்களில் கிடைக்கின்ற உபயங்களும் சேதுமன்னர் வழங்கும் காணிக்கைளும் பட்டர்மார் ஆண்டுதோறும் அளிக்கின்ற அறுபது பொன்னும் அந்த வகையில் கிடைக்கின்ற அபராதத் தொகையும் கடற்கரையில் தோணிகளுக்கு கடவுச் சீட்டு கொடுப்பதன் மூலமும் பாடி காவல் தரகன் சுதந்திரம், ஆகிய ஆதாயங்கள் அனைத்தையும் இந்தக் கட்டளைக்கு பயன்படுத்துமாறு இந்தச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் தீர்வையாக நூறு மரக்கால் தானியத்திற்கு ஒரு மரக்கால் தானியமும், எண்ணெய், தேன், நெய் ஆகியவைகளுக்கு நூறு படிக்கு ஒரு படியும், எண்ணிக்கையாக விற்கப்படுகின்ற பொருள்களுக்கு நூற்றுக்கு ஒன்றே முக்காலும் உள்ளூர் வியாபாரிகளுக்கு நூற்றுக்கு ஒன்றும் நிறுக்கப்பட்ட பொருள்களுக்கு நூற்றுக்கு ஒன்றேகால் பணமும் மகமை பத்துப் பொன்னுக்கு அரைப்பணமும் பாம்பன் துறைமுகம் வழியாக இராமேசுவரத்திற்கு கொண்டுவரப்படுகிற நெய் சுமை ஒன்றுக்கு ஒன்னரையே மாகாணிப் பணமும் காளை மாடுகளுக்கு சூலம் போடுதல், அக்கரைக்கு அவைகளை ஏற்றி அனுப்புதல் ஆகிய வகையில் கிடைக்கும் வருவாயும் இராமேசுவரம் அரண்மனைப் பட்டியில் உள்ள பயனற்ற பசுக்கள் மற்றும் அனாதிப் பிரேதங்களின் ஆதாயம் ஆகியவைகளும் இந்தக் கட்டளைச் செலவுகளுக்கு உரியவைகளாக இருந்தன.

மற்றும் ஆடித்திருநாள், கோவில் பரிவட்டச் சுதந்திரமும், மண்டகப்படி பரிவட்டச் சுதந்திரமும் இராமேசுவரத்தை அடுத்துள்ள தோப்புகள், கொல்லைகள், நந்தவனங்கள், தரவை ஆகியவைகளிலிருந்தும் சேமனூர் கிராமத்து நிலங்களிலிருந்தும் வரப்படும் வருமானங்களையும் இந்தக் கட்டளைக்குப் பயன்படுத்த மன்னர் அனுமதி வழங்கியிருந்தார்.

## செப்பேடு எண். 39

(நகல்)

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1637 இதன்மேல்ச் செல்லா நின்ற ஜய நாம சம்வத்சர

2. த்து உத்தராயணமும் ஹேமந்த ரிதுவும் மகா மாஸமும் கிருஷ்ண பக்ஷத்து அமாவாசியும் ஆதித்த வாரமும் உத்திராட

3. நக்ஷத்ரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற மஹாஉதைய புண்யகாலத்தில் தேவை நகராதிபன் ஸேது

4. மூலா ரக்ஷா துரந்தரந் ராமநாதஸ்வாமி காரியா துரந்த ரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன்

5. பராச கஜ ஸிம்மம் ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேசுரன் கண்டநாடு கொண்டு கொண்ட

6. நாடு கொடாதான் ரவிவன்மன் ரவிமாத்தாண்டன் ரவிகுல சேகரன் சொரிமுத்து வன்னியன் ஈழமும் யாட்பாணமும் கெசவேட்டை கண்டருளிய

7. ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராச மஹா கெம்பீரன் உரிகோல் சுரதா

8. ணன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் அரச ராவண ராமன் அடியார் வேளைக்காரன் வீரவெண்பாமாலை இள

9. ஞ் சிங்கம் தழஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆற்றுப்பாச்சி கடலிற் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தா

---

* ஸ்ரீ கோதண்டராமசாமி கோயில், இராமநாதபுரம்

10. ன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளி
னான் கீர்த்திப் பிறதாபன் கொட்டமடக்கி வையா
11. ளி நாராயணன் காவிக்குடையான் கருணா கடாக்ஷந்
காமிநி கந்தற்பன் கலை தெரியும் விற்பன்னன் சத்தி
12. ய பாஷா அரிச்சந்திரன் கொடைக்குக் கற்னன் வில்லுக்கு
விசையன் பரிக்கு நகுலன் குன்றினுயர் மேரு
13. விற் குன்றா வளைகுணில் பொறித்தவன் திலதநுதல் மட
வார்கள் மடலெழுது வருசுமுகன் துஷ்டநிக்கிரஹ
14. சிஷ்ட பரிபாலன் வீரதண்டை சேயத்தலை விழங்குமிரு
தாளினான் அனுமகேதனன் சகலகுணா பிராமன் சங்
15. கீத சாயுத்திய வித்தியா வினோதன் அஷ்டதிக்கு மனோ
பயங்கரன் மதுரையார் மானங் காத்தான் தொண்டி
16. யந்துறை காவலன் துரக ரேபந்தன் வைகை வழனாடன்
வன்னிய ராட்டந் தவிழ்த்தான் அந்தம்பர
17. கண்டன் சாடிக்காறர்கள் மிண்டன் ஸ்வாமித்து ரோகியள்
கண்டன் பஞ்சவன்ன ராய ராவுத்தன் பனுக்கு
18. வார் கண்டன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன்
தளங்கண்டு தத்தளிப்பார் மிண்டன் பட்டமான
19. ங் காத்தான் துஷ்டராயிர கண்டன் தாலிக்கு வேலி சத்து
ருவாதியள் மிண்டன் வேதியர்கள் காவலன் சிந்தி
20. த்த காரியம் செயம்பண்ணும் மனோகரன் வீரலட்சுமி
காந்தன் விசைய லெட்சுமி சம்பன்ன சகல சாம்பி
21. றாச்சிய லட்சுமி நிவாசன் துகவூர்க் கூற்றத்துக் காத்தூ
ரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பா
22. ல் விரையாத கண்டனிலிருக்கும் சேதுபதி வங்ஷாதி
பனான ஸ்ரீஉறிரன்ய கெற்பயாஜி ரவிகுல சேகர ரெ
23. குனாத சேதுபதி காத்த தேவரவர்கள் தம் முகவாபுரி
யான ராமநாதபுரத்தில் ஸ்ரீமந் கோதண்டராம
24. சுவாமிக்குத் தர்ம சாசன தாம்பிற சாசநம் பட்டையங்
கொடுத்த படி நாம் இப்போது கோதண்டரா
25. ம சுவாமிக்குத் தாம்பிற சாசநம் பட்டையங் கொடுத்த
தாவது சுவாமிக்கு நித்திய கட்டளை அபிஷேக

26. நெய்வேத்தியம் திருமாலை திருவிளக்கு விசேஷதின......
கட்டளை முதலானதுக்கு நிலவர

27. ம் பண்ணிக் கட்டளையிட்டது சாக்காங்குடி பட்டபிள்ளா
கூரானேந்தல் இந்த இரண்டு ஏந்தலு

28. ம் சறுவமானியமாகக் கட்டளையிட்டு யிதுவுடனே நம்
முடைய பண்ணைக்கிறாமம் விசைய ரெகுனாத

29. சமுத்திரத்தில் நெல் 100 கலம் அதுவும் சின்னையா
வகைச் சிக்களில் நெல் 30 கலம் தமையனார் வடுகனா

30. த தேவர் எட்டிவயலில் நெல் 100 கலம் தம்பி திருவாவுடை
யாத்தேவர் நெல் 30 கலம் தம்பி சின்னத்தே

31. வர் வானரவீர மதுரையிலே நெல் 20 கலம் தம்பி சீனி
ரகுனாத தேவர் நெல் 50 கலம் தம்பி இந்திரதேவ ...

32. நாலுகோட்டை உடையாத்தேவர் நெல் 20 கலம் அடுக்
களை வகையில் இடைய ஆயன் குடியில் நெல்

33. அஞ்சு கலம் அகிலாண்ட ஈசுவரிபுரத்தில் நெல் 50 கலம்
கண்ணனூர் நெல் 5 கலம் தொண்டைமானார் வகை

34. திருப்பாச்சேத்தியில் நெல் 10 கலம் அஞ்சுகோட்டையில்
நெல் 5 கலம் ஊழல் நெல் 2 கலம் தொண்ட

*இரண்டாம் பக்கம்*

35. மானார் ராயப்பன் நெல் 20 கலம் கட்டையத்தேவர் நெல்
நெல் 10 கலம் செல்லத்தேவர் நெல்

36. 5 கலம் முத்துரகுநாததேவர் நெல் 5 கலம் மொத்தி
தேவன் நெல் 5 கலம் ஒய்யாத்தேவன் நெல் ...

37. ரகுநாதன் சேருவைகாறன் நெல் 10 கலம் வாச்சமாகாளித்
தேவன் நெல் 10 கலம் முத்தப்

38. பன் சேருவைகாறன் ... கலம் தாண்டவன் சேருவை
காறன் 5 கலம் மங்கையனாதன்குப்பன்

39. சேருவைகாறன் 2 கலம் ஷை தெய்வகன்னி 2 கலம் ராமு
சேருவைகாறன் 5 கலம் சோமாசி சேருவை

40. காறன் நெல் 2 கலம் அதியாரி பிச்சன் சேருவைகாறன்
நெல் 2 கலம் அடப்பம் திருவுடையான் நெல் 1 கலம் ஊட

41. யம் ரெகுநாதன் சேர்வைக்காரன் 1 கலம் பிள்ளைமார் காரியக்காரர் வகையில் திருவுபிள்ளை

42. கப்பன் கணக்கப் பிள்ளை உள்பட்டாரும் இந்தப்படி வருஷக் கட்டளையாக நிலவரம் பண்

43. ணி நம்முடைய இராச்சியத்தில் யிருக்கிற பிரம்ம க்ஷத்ரிய வைசியர்க்கு முதலான இரா

44. சாக்கள் ராசபுத்ரராள் குரு சூத்திரர் கருனாடகத்தார் கவறையள் வெலமா துளுவர் மல்லக

45. செட்டியள் ஏழு கூற்றம் பதினெட்டு நாடு அஞ்சுநத்த முதலான கிராமத்து வெள்ளாழ செட்டி

46. யளில் மதுரை செட்டியாள் மஞ்சப்புத்தூர்ச் செட்டியாள் கோமுட்டியள் பட்டுனூல்க்

47. காறச் செட்டியள் சலுப்பர் வலசை இடையர் சிவியார் இடையர் போயிண்டமார் தொ

48. ட்டியக் கம்பளத்தார் நாட்டு இடையர் வடுகக்குசவர் முத லாக நம் நகரிலுள்ள போக்கெ

49. ல்லாம் வருஷக் கட்டளைக்கு மகமை ஒரு பணமும் கோபால கட்டளை இடையர் பெண் கொண்

50. ட பேற்கெல்லாம் குடிக்கு 5 படி நெய்யும் ஆதிசந்திரா தித்த வரைக்கு எண்ணெய்க்கும்

51. குடுத்துவரச் சொல்லி நம்முடைய மாதா பிதாவுக்கும் நம்முடைய உபைய வங்குஷத்திலே

52. உண்டாகிய பெரியவர்களுக்குச் சுகுற்தமாக நிலவரம் பண்ணி விச்சுப் பெருங்கருணையி லிரு

53. க்கும் திருக்காவுடையார் ஈசுரமாத்தியா பிள்ளை புத்திரன் நம்முடைய தீருவு பாரிசமாக மு

54. த்திரைக் கணக்கும் கட்டளை இட்டபடியினாலே சந்திர சூரியாள் உள்ளமட்

55. டும் சந்திரப் பிறவேசம் நெல்லும் பணமும் நெய்யும் வருஷத்துக்கு வருஷம் தறுகாமல்

56. குடுத்துத் தற்ம்ம பரிபாலனமாக நடத்திவிச்சுவரக் கடவ ராகவும் இந்தப் படிக்குத் தன்ம

57. சாசன தாம்புர சாசனப் பட்டையங் கொடுத்தோம் இராமநாதபுரம் கோதண்ட ராமசுவாமி

58. க்கு இரண்யகெற்பயாசி ரவிகுல சேகர விசைய ரெகு நாதச் சேதுபதி காத்த தேவரவர்கள்

59. இந்தத் தற்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண் ணினபேர் காசியிலே இராமசேதுவிலே அனேகம்

60. புண்ணியச் சேத்திரம் புண்ணிய நதி புண்ணிய தீர்த்தங் களிலேயும் அனேகம் கோடி சிவலிங்கப் பிறதி

61. ஷ்டையும் விஷ்ணுப் பிறதிஷ்டையும் பிரமப் பிரதிஷ் டையும் பண்ணின சுகுர்தத்தையும் தான தருசனம் பண்

62. ணின பலத்தையும் அடைவாராகவும் இந்தத் தற்மத்துக்கு அஹிதம் பண்ணின பேர்கள் கங்கா ன

63. திக்கரையிலே ராமசேது தனுக்கோடியிலேயும் மற்றப் புண்ய தீர்த்தப் புண்ய நதிக்கரை

64. யளிலேயும் மாதா பிதாவையும் பிராமணரையும் பசுவை யும் ஸ்ரீகளையும் சிசுக்களையும் மநி

65. ஷ்யாளையும் வதைபண்ணின தோஷத்தை அடைவா ராகவும்

சங்கரந் துணை

## செப்பேடு எண் 39

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத சேதுபதி காத்தத் தேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமநாதபுரம் கோதண்டராம சாமி ஆலயம் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1637 ஜெய ஆண்டு (கி.பி 24-1-1715) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேலேகண்ட கோயில் நித்ய கட்டளைக்கு கிராமங்கள் தானம் |

இந்தச் செப்பேடு ரெகுநாத சேதுபதி என்ற சேதுபதி மன்னரது பொதுப்பெயரில் வழங்கப்பட்டுள்ளது. இதனுடைய காலத்தை ஆய்வு செய்யும்பொழுது இதனை வழங்கியவர் முத்து விஜய ரெகுநாத சேதுபதி மன்னர் என்பதை அறிய முடிகிறது. மேலும் இந்தச் செப்பேட்டின் வரிகள் 29, 30ல் கண்ட ''தமைய னார் முத்துவடுகநாத தேவர்'' என்ற சொற்றொடரும் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றது.

இந்த மன்னரது விருதாவளியாக எழுபது சிறப்புப் பெயர் கள் இந்தப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ''மதுரையார் மானங்காத்தான்'' (வரி-15) ''சிந்தித்த காரியம் ஜெயம் பண்ணும் மனோகரன்'' (வரி-20) என்ற இரண்டு புதிய சிறப்புப் பெயர்கள் முதன் முறையாக இந்தச் சேப்பேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சேதுபதிச் சீமையின் கோ நகராக விளங்கிய இராமநாத புரம் கோட்டையின் தென்பகுதியில் அமைந்து இருப்பது கோதண்டராமசுவாமி ஆலயம். இந்த ஆலயத்தை அடுத்துள்ள சொக்கநாதர் ஆலயத்தை தளவாய் என்ற இரண்டாவது சடைக் கண் சேதுபதி (கி.பி. 1633-45) நிர்மாணித்தார். அங்கே அந்த மன்னரது உருவச்சிலையும், நிறுவப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னர், ஸ்ரீ ராம நாத சுவாமியை வழிபடும் தீவிர பக்தராக விளங்கிய பொழுதி லும் வைணவக் கோயிலான இந்த ஆலயத்தின்பால் அக்கரை கொண்டு அன்றாட பூஜை, அபிஷேகம், நைவேத்தியம், திரு மாலை, திருவிளக்கு, ஆகியத் திருப்பணிகளுக்கும், திருவிழா விற்குமாக இந்தத் தான சாசனத்தை வழங்கியுள்ளார். இதில் குறிப்பிடப்பட்டுள்ள சாக்கான்குடி, பட்டப்புல்லான் ஆகிய இரு ஊர்களும் இன்றைய இராமநாதபுரம் வட்டத்தில் உள்ளன. வழிவழி வந்த சேதுபதிகளது சமயப் பொறையையும் சமரச நோக்கினையும் இந்த தானம் எடுத்துக் காட்டுகிறது. மன்னரும் அவரது உறவினர்களும் ஆண்டுதோறும் ஐந்நூறு கலம் நெல் இந்தக் கோயிலுக்கு வரிசைக் கட்டளையாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ததுடன் மன்னரது குடிகளும் வருட மகமையாக ஒரு பணமும், இடையர்கள் கோபாலக் கட்டளையாக திருமணத் தின் பொழுது ஐந்துபடி நெய்யும், இந்தக் கோவிலுக்குக் கொடுத்துவருமாறு உத்தரவிட்டு இருப்பது மிகவும் பாராட்டுக் குரிய செயலாகும். சேதுநாட்டில் அன்றைய இடைக்குல மக்கள் கன்று காலி வளர்ப்பவர்களாக மட்டுமல்லாமல் நல்ல விவசாயி களாகவும் இருந்தனர் என்பதை இந்தச் செப்பேடு தெரிவிக் கின்றது.

மறவர் சீமையில் வைணவர்கள் குறைந்த மக்கட்தொகை யினராக இருந்ததாலும் முந்தைய சேது மன்னர்களும் இந்தக் கோயிலின் நலனில் தகுந்த அக்கறை கொண்டிராத காரணத்தி னாலும் இந்த மன்னர் மேலே கண்ட வருடக் கட்டளை, வருட மகமை, ஆகியவைகளை ஏற்படுத்தியுள்ளார். இதனை (வரிகள் 51, 52)ல் ''மன்னர் தம்முடைய வங்குசத்திலே ஒன்றா கிய பெரியவர்களுக்குச் சுகிர்தமாக நிலவரம் பண்ணி'' வைத்த தாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் திருக்கோயில் என்பது காலம் காலமாக சமுதாயத்தின் வைதீக உணர்வுகளின் சின்னமாக விளங்கி வருவதால் அதனைப் போற்றிப்புரப்பது அரச தர்மம் அத்துடன் ஆன்மீக மக்களுடைய ஈடுபாடும் அதில் இருக்க வேண்டுமென்பதை உணர்ந்த மன்னர், இத்தகைய ஏற்பாட் டினைச் செய்து உள்ளார்.

இந்தச் செப்பேடு 18 ஆம் நூற்றாண்டில் சேதுபதிச் சீமையில் வாழ்ந்த மக்கட் சமுதாயத்தை இனங்காட்டுவதாக உள்ளது. வரிகள் 43-49ன்படி இங்கே இராஜபுத்திரர், குரு

## செப்பேடு எண் 40

(நகல்)

*முதல்பக்கம்*

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் 1640 இதன்மேல்செல்
2. லாநின்ற விளம்பி நாம ஸம்வத்ஸரத்தில் உத்தராய ணத்தில்
3. ஹேமந்த ரிதுவில் புஷ்ய மாஸத்தில் ஸ்ராவண நக்ஷத்திரமும்
4. சுபயோக ஸுபகரணம் பெத்த ஸுர்யோதய ஸங்கம பு
5. ண்ய காலத்தில் தேவநகராதிபந் ஸேதுமூலரக்ஷண துர
6. ந்தரந் ராமநாத ஸ்வாமி காரிய துரந்தரந் ஸிவபூசா துரந்தர
7. ரான ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேசுவரந் அரியராய விபாடன்
8. பாஷைக்கி தப்புவார் கண்டன் மூவராய கண்டன் பட்ட மானங்
9. காத்தான் துட்டராயிர கண்டன் அந்தம்பர கண்டன் சாடிக்காற க
10. ண்டன் சாமிதுரோஹியள் மிண்டண பஞ்சவள்ற்ராய ராகுத்தன் ப
11. னுக்குவார் கண்டன் பரதள விபாடன் பராாச சேகரன் பரத

---

இராமலிங்க விலாசம் அரண்மனை, அருங்காட்சியகம், இராமநாதபுரம்.

அமைப்பு ; 22 செ.மீ, × 14,5 செ.மீ,

## இரண்டாம் பக்கம்

30. யகரான காக்குடி கணபதி ஏந்தலுக்கு பிரதி னாமமான வேங்கி
31. டம்மா சமுத்திரம் அசேஷவித்வஜ்ஜந மஹாஜநங்களுக்கு ஸகி
32. ரண்யயோதக தாராபூர்வமாக பூதாந சாசநம் பண்ணிக்கு
33. டுத்தபடி சாசனமாவது கோவனூர்க்கு மேர்க்கு செம்மானே
34. ந்தலுக்கு வட
35. க்கு ஆலங்குளத்துக்கு கிளக்கு அரியலூருக்கு தெற்க்கு இந்த னாங்
36. கெல்லைக்கு உள்பட்ட கெணபதி ஏந்தலும் எழுநூத்தி மங்கலத்
37. துக்கு மேர்க்கு நெட்டூர்க்கு வடக்கு தச்சனேந்தல் காத்தானேந்தலுக்
38. குக் கெளக்கு தேவரேந்தலுக்கு தெற்க்கு இந்த னாங் கெல்லக்கி உள்ப
39. ட்ட காக்குடியும் தங்களுக்கு பூதாநம் பண்ணிக்குடுத்தபடி
40. னாலே இந்த இரண்டு கிராமத்துக்குண்டாகிய நஞ்சை புஞ்சை
41. மாவடை மரவடை திட்டுத்தெடலும் நிதி நிக்ஷேப ஜலத
42. ரு பாஷாண அக்ஷிணியாகாமி ஸித்தஸாத்திய மிங்குற அஷ்ட
43. போக தேஜஸ்வாம்யங்களும் தாநாதி விநிமய விக்ரய யோக்ய
44. மாக புத்ரபவுத்ர பாரம் பரம்மாக ஆச்சந்திரார்க்க ஸ்தாயியாக ஆ
45. ண்டனுபவித்துக் கொள்ளுவாராகவும் இந்த தம்மத்தை ப்ரவல்யம் பண்ணி
46. வச்ச பேருகள் கோடி சிவலிங்க ப்ரதிஷடை பண்ணின பலத்
47. தை அடயிவாராகவும் இதுக்கு விக்கிநம் பண்ணின பே
48. ருகள் கெங்கெக்கரயிலே கோகத்தி பண்ணின பலத்தை அடை
49. யிவாராகவும் இந்ததாம்பிறசாசனம் திருவுத்தர கோசமங்கை
50. யிலிருக்கும் வீரப்பாசாரி விகிதம்
51. தாந பாலந யோம்மத்யே தாநா ஸரயோநு பாலநம் தாநா
52. தீ ஸவர்க்க மவாப் நோதி பாலநாத் அச்கதம் பதம் உ.

## செப்பேடு எண். 41

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹந ஸகாப்தம் 1645 இதின்மேல்ச் செல்லா நின்ற சோபகிருது நாம
2. ஸம்வச்சரம் உத்தராயண கிரீஷ்மரிது மேஷமீ சுக்லபட்சம் நவமி நாயித்துக் கிழமை
3. அஸ்த நக்ஷத்திரம் வரியாநாம்யோகமும் பாலவா கானமும் பெத்த சுப நக்ஷத்ரசுப
4. யோக சுபகரணத்தில் தேவைநகராதிபன் சேது மூலாட்சர துரந்தரன் ராமனாத
5. சுவாமி பற்வதவர்தனி காரியா துரந்தரன் பரராச சேகரன் பரராசசேகச சிங்கம் ஸ்வ
6. ஸ்தி ஸ்ரீமன்மகா மண்டலேசுவரன் விருதாசரமண வாளன் அந்தம்பிற கண்டன் சு
7. வாமித்துரோகியள்மிண்டன் கொட்டமடக்கி துரகரெ வந்தன் பாஷா ஹரி
8. ச் சந்திரன் ஸங்கீத சாஹித்ய வித்யா வினோதன் துட்டரை அடக்கி வீரத் தண்டை சேமத்தலை வி
9. ளங்கிய தாளினான் சகல சாம்பிறாச்சிய அட்ட லெட்சிமீ நிவாசன் புவனேக வீரன் வீரகஞ்சு
10. கன் வேதியர் காவலன் அரசராமன் அடியார் வேளைக் காறன் பரமன்னர் சற்ப கெருடன் பா

---

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்.

27. ன் அசுபதி கேசபதி நரபதிக்கு மேலான சேதுபதி அனு கேதனன் கெருடகேதனன் வியாக்கிரமகேதன

28. ன் மீன கேதனன் நெமலிகேதனன் குக்குட கேதனன் காஷ கேதனன் செங்காவிக் குடையும திின்

29. மேல் விருது சல்லியுமுண்டான தேவாதிதேவன் துகவூர்க் கூத்தத்தில் காத்தூரான குலே

30. ாத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாதகண்டனில் விளங்கியதீரன் துலாபுருஷாதி

31. சோடசம்காதரன் தீட்சாதுரந்தரன் இரணிய கெற்யாசி ரவிகுல ரெகுநாதச் சேது

32. பதிகாத்த தேவரவர்களுக்கு வம் சொத்தக்காரன் ஸ்ரீமது முத்துவிசைய ரெகுனாதச் சேதுபதி

33. காத்த தேவரவர்கள் ராமேசுபரந்தில் ராமநாத சுவாமி சன்னதியிலே காஸ்ய கோ

34. த்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யெஸஸாகாச்யப காரரான தாதா சிவ புத்

35. திரன் ரெகுநாதக் குருக்களுக்கு கிரண்யோதகதார்த்தமாக பூதான சாஸநம் ப

36. ண்ணிக் குடுத்தபடி பூதான ஸாஸநமாவது கைக்கு நாட்டு வட்டகையில் பால்

37. குளத்துக்கு கீழ்பாற் கெல்கையாவது வலமாவூர்க் கண் மாயில் துறைமுகங் கொண்டா

38. னுக்கு மேற்கு தென்பாற் கெல்கையாவது வலமாவூர்க் குளக்காலுக்கு வடக்கு மேல்பாற்

39. கெல்கையாவது கருங்குடிக்குளம் கோர்வைக்கு கிளக்கு வடபாற் கெல்கையாவ

40. து ஊர் வய்யக் கண்மாய்க் கரைக்கு மண்டி வய்க்கு எல்லைக் கல்லுக்கும் தெற்கு இப்பெ

41. ரு நான்கெல்கைக்குள்ப்பட்ட பால்க்குளம் சந்திரா தித்ய தாரா பூறுவமாக பூானத

42. தாம்பிர ஸாஸநம் கட்டளையிட்ட படியினாலே இந்தப் பூமியில் வரு நஞ்சை புஞ்சை

43. மாவடை மரவடை யேந்தல் ப்பிறவிடை. திட்டுத் திடல் குடிபடை பள் பறை பாசிப் படுகை

44. கிணறு ஊரணி நிதிநிட்சேப செலதரு பாசாண யாகாமி பிச்ய ஸாஸநமென்று

## செப்பேடு எண். 41

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜய ரெகுநாத சேதுபதி காத்ததேவர்
2. செப்பேடு பெற்றவர் : இராமேஸ்வரம் ரெகுநாத குருக்கள்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1645 சோபகிருது ஆண்டு (கி.பி. 1723)
4. செப்பேட்டின் பொருள் : ரெகுநாத குருக்களுக்கு பால் குளம் கிராமம் தானம்

இந்தச் செப்பேட்டில், இந்த சேதுபதி மன்னரது விருதாவளியாக எண்பத்து எட்டு விருதுகள் குறிக்கப்பட்டுள்ளன, அவைகளில் கீழே கண்ட பதினைந்து விருதுகள் மட்டும் இந்தப் பட்டயத்தில் புதுமையாகப் புகுத்தப்பட்டுள்ளன.

1. விருதாசரமணவாளன்
2. உபயசாமர உல்லாச நளினக்காரன்
3. குறும்புகள் அடக்கி
4. இராஜகுல தீபன்
5. படைக்கும், கொடைக்கும் ஓடாத கண்டன்
6. தந்தார்தர பரதராஜ கோவதரன்
7. மனு நீதி மன்னன்
8. வைகையை அடச்சு ரெகுநாத சமுத்திரமாக பெரிய கண்மாய் உண்டு பண்ணினவன்
9. குண்டாத்தை அடைத்து இராஜ்யத்துக்கு ரெகுநாத காவிரியாக உண்டு பண்ணினவன்

10. இளமை ஆட்சிக்கு தயாபரன்
11. சத்ருவாதியர்களுக்கு இடியேறு
12. கனகபல்லக்கும் சிங்க முகமும், பஞ்சவர்ணப் பாவாடையும் நட நாடகசாலையும் உண்டான தேவன்
13. தெட்சண சிங்காசேனாபதி
14. நரபதிக்கு மேலான சேதுபதி
15. பலத்துக்கு ஆதிசேஷன்
16. அடிகுக்கு வால சிவன்
17. களிக்கோபன்

இந்த விருதுகளில் தொடர் எண் 1,2,4,10ல் குறிப்பிடப் பட்டுள்ள விருதுகள் மன்னரது மாண்மையயும் தொடர் எண்கள் 3, 5, 6, 7, 8, 9, 11, 12, 13, 14 ஆகியவைகளில் குறிபிடப்பட் டுள்ள விருதுகள் அவரது வீரத்தையும் அரசியல் சிறப்பையும் குறிப்பதற்காக வரையப்பட்டவையாகும். இந்த மன்னரது ஆட்சி நீண்டகாலம் நீடிக்கவில்லை. அவர் ஒரு சிறந்த நிர்வாகி கலைஞர் என்பதை அவரது செயல் முறைகள் நிரூபணம் செய் கின்றன. குறிப்பாக அவரது ஆட்சித் தொடக்கத்தில் எதிர்ப் பூசல்களைத் தூண்டிய பவானிசங்கரத் தேவரையும் அவரது கூட்டாளிகளையும் இந்த மன்னர் கடுமையாக ஒடுக்கினார். இதனையொத்த மற்றொரு நடவடிக்கையாக, மறவர் சீமையின் வடமேற்கு எல்லையில் உள்ள மேல் நாட்டுக் கள்ளர்கள் சேது நாட்டின் கால்நடைகளை மிகுதியாகக் கவர்ந்து சென்றபொழுது அவர்கள் மீது கடுமையாக காவல் நடவடிக்கைகளை மேற் கொண்டு அவர்களில் நூற்றுக் கணக்காவர்களை கொன்று ஒழித்தார். ''குறும்பு அடக்கி'' என்ற விருது (தொடர் எண் 3) இத்தகைய காரணங்களால் புனையப்பட்டது ஆகும்.

மேலும் பாழ் செய்யும் உட்பகையை ஒடுக்குவதற்கு கமுதி இராஜசிங்க மங்கலம். பரம்பன், கோட்டைகளை பலப்படுத்திய துடன் தஞ்சை மராத்தியரது படையெடுப்பை தவிர்ப்பதற்காக வடக்கு எல்லையில் அறந்தாங்கிக் கோட்டையையும் எப் பொழுதும் போர்நிலைக்கு ஆயத்தமாக இருக்கும் நிலையில் வைத்து இருந்தார். இராமநாதபுரம் அரண்மனை அத்தாணி மண்டபத்தை பல வண்ண ஓவியங்கள் நிறைந்த அழகு மணி மண்டபமாக மாற்றியதுடன் மண்டபத்துக்கு அருகிலேயே நட

நாடக அரங்கம் ஒன்றையும் அமைத்தார். இந்த அரங்கில் இந்த மன்னரைப் பற்றிய ''முத்துவிஜய ரெகுநாத சேதுபதி விஜயம்'' என்ற தெலுங்கு பாவைக் கூத்து நடைபெற்று வந்தது.

கலையார்வம் மிக்க இந்த மன்னர் ''உபய சாமர உல்லாச நளினக்காரன்'' ''நட நாடக சாலை உண்டான தேவன்'' என்ற விருதுகளால் புகழப்பட்டதில் வியப்பு இல்லை. வைகை கிருதுமால் ஆறுகளின் வெள்ளம் கிழக்குக் கடலில் கலந்து வீணாவதைத் தடுத்து இராமநாதபுரம் அருகே பெரிய கண்மாய் என்ற பயனுள்ள பெரிய நீர்த்தேக்கத்தை இவர் அமைத்தார். மதுரையை அடுத்த தோப்பூரை அடைந்தவுடன் குண்டாறாக மாறி மூப்பையூர் கடலில் கலக்கின்ற கிருதுமால் நதியை கமுதிக்குக் கிழக்கே, முதுகுளத்தூர் வட்டம் பயன்படும் வகையில் ரெகுநாத காவிரியாக புதிய கால் ஒன்றை அமைத்து புகழ் பெற்றார். இத்தகைய வரலாற்று நிகழ்ச்சிகளின் பின்னணியில் தான் இந்த மன்னரது சிறப்பு விருதுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்விதம் பல துறைகளிலும் தமது முன்னோரான சேது மன்னர்களை விஞ்சி நின்ற இந்த மன்னர் வளமையிலும் சிறந்திருந்ததை கொடைக்குக் கர்ணன் படைக்கும் கொடைக்கும் ஓடாதான் என்ற விருது உறுதிப்படுத்துகின்றன. இராமேசுவரம் இராமநாதசுவாமி சன்னதியில் ரெகுநாத குருக்களுக்கு கைக்கிநாட்டு பால்குளம் கிராமத்தை தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. தானம் பெற்றவர் ரெகுநாத குருக்கள் என்று குறிக்கப்பட்டிருப்பதாலும் கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி மன்னரது கொடைகளுக்கு உரியவாராக மற்றொரு ரெகுநாத குருக்கள் பெயர் செப்பேடுகளில் காணப்படுவதாலும் சேதுபதி மன்னரது குடும்பத்திற்கு நெருக்கமாக இருந்த ஒரு மராட்டிய பிராமணக் குடும்பத்தினர் சேதுமன்னர்களைப் போன்றே ரெகுநாத என்ற அடைமொழியைக் கொண்டிருந்தனர் என்று ஊகிக்கப்படுகிறது.

---

Venkatarao - Dr. N. Southern School in Telugu Literature. (1978)

## செப்பேடு எண் 43

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1651 இதி
2. ன்மேல் செல்லா நின்ற சௌம்ய நாம சம்வத்சரத்தி
3. ல் உத்தராயணத்தில் வசந்த ருதுவில் சித்திரை மீ
4. 16 உ சுக்ல பட்சத்தில் சுக்ரவாரமும் சப்தமியு
5. ம் அநுஷ நட்செத்திரமும் பிராஹ்மி நாமயோகமும் கூடி
6. ன சுபதினத்தில் தேவை நகராதிபன் சேது மூல
7. ரெட்சா துரந்தரன் சிவ பூசா துரந்தரன் ராமனா
8. த சுவாமி காரியா துரந்தரன் பரராசசேச சிங்க
9. ம் பரராச சேகரன் ரவிகுலசேகரன் ரவிவற்ம
10. மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமகா மண்
11. டலேசுபரன் அரியராயர் தளவிபாடன் பாசைக்குத்தப்
12. புவராதகண்டன் மூவராயிர கண்டன் கண்டனா
13. டு கொண்டு கொண்டனாடு குடாதான் பட்டமானங்
14. காத்தான் பாண்டி மண்டலத் தாபனாசாரியன் சே
15. ாழ மண்டல பிறதிட்டாபனாசாளயன் தொண்டம
16. ண்டல பிறசண்டன் இளமும் கொங்கும் யாள்ப்பாண
17. பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராச
18. ாதி ராசன் ராசபரமேசுரன் ராசமாத்தா

---

* திருவாவடுதுறை சீமை : திருவாவடுதுறை
அமைப்பு : 24. செ.மீ. × 14. செ.மீ.
படி எடுத்து உதவியவர் : புலவர். திரு. செ. ராஜு, தஞ்சை.

19. ண்டன் துட்டராயிர கண்டன் புவனேகவீரன் வீர
20. கஞ்சுதன் வீரவளனாடன் வேதியர் காவலன் அர
21. சராவண ராமன் அடியார் வேளைக்காறன் அ
22. ந்தப்பிற கண்டன் சாமிதுரோகியள் முண்ட
23. ன் பஞ்ச வர்ண ராய ராகுத்தன் பனுக்குவார் கண்
24. டன் விசைய லெட்சுமிகாந்தன் கலை தெரி
25. யும் விற்பனன் வீர மாற்க்கன் கீற்த்திப் பிறதாபன்
26. வய்கை வளனாடன் கொட்ட மடக்கி வய்யாளி னாரா
27. யணன் இவ்வுளி பாவடி மிதித் தேறுவார் கண்
28. டன் வீர வெண்பா மாலை தள சிங்கம் பகை ம
29. ன்னர் சிங்கம் மதப்புலி அடைக்கலங் காத்தான்
30. தாலிக்கு வேலி சத்துராதியள் முண்டன்

இரண்டாம் பக்கம்

31. வன்னியராட்டம தவிழ்த்தான் துலுக்கர் ே
32. மாகந் தவிழ்த்தான் ஒட்டியர் தள விபாடன் ஒ
33. ட்டியர் மோகந் தவிழ்த்தான் மேவலர் கோள
34. றி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் ஆ
35. ரியர் மானங் காத்தான் தொண்டியன் து
36. றை காவலன் துரக ரேபந்தன் அனுமகேத
37. னன் குடைக்குக் கற்ணன் பரரிக்கு னகுலன் பத
38. னாடக விற்ப்பன்னன் கருணா கடாட்சன் சங்
39. கீத சாகித்ய வித்யா வினோதன் சகல கல
40. ா வல்லவன் லெட்சுமீனிவாசன் வீரதண்
41. டை சேமத்தலை விளங்கும் வீர தாளினான் ராசகு
42. லக் காயகன் ராசாக்கள் தம்பிரான் பாண்டி வளனா
43. டன் செகராசர் பணிகின்ற செம்பி வள னாடன் செங்
44. காவிக் குடையான் பூலோக தேவேந்திரன் சே
45. து காவலன் வறப்பிறதீப நடனத் துகவூர் கூத்தத்து
46. காரத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பா

47. ல் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ இரண்ய
48. கெர்ப்பயாஜி ரெகுனாத சேதுபதி காத்த தேவரவர்க
49. ள் புத்திரன் விசைய ரெகுனாத சேதுபதி காத்த தே
50. வரவர்கள் ஸ்வேத நதி தெட்சண தீரமாகிய பாண்டி
51. னாட்டில் மிழலைக் கூத்தத்தில் நடுவில் கூத்தம் தனியூ
52. ர் பிரம்மதேசம் பவித்திர மாணிக்கம் சதுருவேத மங்க
53. லபுரம் ஆதி கயிலாச சிவபுர சேத்திரமாகிய திருப்பெருந்
54. துறையில் விளங்காநின்ற பிரம்ம விஷ்ணு மகே
55. ஸ்வரர் சதாசிவ ரெகுநாத பராசக்திக்கும் போகி
56. ய
57. — — — — — — — — — — — — — —
58. ஸ்ரீ ஆத்மனாத சுவாமியள் சந்நிதித
59. ானத்துக்கு சிவயோக னாயகி அ
60. ம்மனுக்கு அட்ப்ப வரிசை ஆபரணத்துக்கு மன்னார் சலா பத்தில சர்வ
61. வமானியமாக ஒரு தோரணி அஞ்சு கல்லும் நீர்தடாக முத்து சலாபங்கு
62. னித்துக்கொள்ளச் சொல்லி தாம்புர சாதன பட்டையம் சந்தி
63. ராதித்தர் வரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவ ராகவும் இந்த
64. ந்தற்மத்தை யாதொருவர் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்
65. கைக்கரையில் கோடிசிவலிங்க பிறதிஷ்டையும் கோடி
66. பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின பலனை அடைவார்
67. கள் இந்த தற்மத்துக்கு யாரொருவர் அகிதம் பண்ணி
68. நவர்கள் கெங்கைக் கரையிலும் சேதுக்கரையிலு
69. ம் மாதா பிதா குருவையும் பசுவையும் வதை
70. செய்த தோஷத்தில் போகக் கடவராகவும்

# செப்பேடு எண் 43

(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துவிஜய ரெகுநாத சேதுபதி காத்ததேவர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | திருப்பெருந்துறை ஆத்மனாத சுவாமி திருக்கோயில் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1651 சௌமிய ஆண்டு சித்திரை மாதம் 16ந் தேதி (13-4-1728) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மன்னார் முத்துச் சலாபத்தில் முத்துக் குளித்துக் கொள்ளும் உரிமை. |

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்து விஜயரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக எழுபது சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் மூன்று விருதுகள் மட்டும் புதியன. *வீரமார்க்கன், பரதநாடக விற்பன்னன், ஜெகராஜர் பணிகின்ற செம்பிவளநாடன்* என்பன அவை. இவரது முந்தைய செப்பேடுகளிலும் இவரது மூதாதையரான சேதுபதிகளது செப் பேடுகளிலும் இந்தச் சிறப்புப் பெயர் காணப்படவில்லை.

சேதுபதி மன்னர்களுக்கு மன்னார் முத்துசலாபத்தில் உள்ள உரிமை பற்றி ரெகுநாத திருமலை சேதுபதி, ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னர்களின் செப்பேடுகளில் முன்னர் கண்டோம். இராமேசுவரம் திருக்கோயிலுக்கு இதே முத்துவிஜய ரெகுநாத சேதுபதியும் முத்துச் சலாபத்தில் உரிமை வழங்கி செப்பேடுகள் அளித்துள்ளனர். இந்தச் செப்பேட்டின்படி திருப்பெருந்துறை

† Assi vol II (1884) p. 224

திருக்கோயில் தானத்தில் முத்துச்சலாபத்தின் பொழுது ஐந்துகல் வைத்து முத்துக் குளிக்கும் உரிமையைப் பெற்றனர். அதில் கிடைக்கும் முத்துக்களது வருமானத்தில் இருந்து ஆத்மநாத சுவாமி, சிவயோக நாயகி அம்மனுக்கு, அடப்ப வரிசை, ஆப ரணம் ஆகியவைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் இந்தச் செப்பேடு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டிலிருந்து திருப்பெருந்துறைக்கு தனியூர், பிரம்மதேசம். பவித்ரமாணிக்கம், சதுர்வேதி, மங்கலம் ஆதி கைலாசம், சிவபுரச் சேத்திரம் என்ற வேறு பெயர்களும் வழக் கில் இருந்து வந்தது தெரிய வருகிறது. இன்னொரு முக்கிய மான தகவலையும் இந்தச் செப்பேட்டுச் செய்தி தெரிவிக்கின்றது. அதாவது இதுவரை சேதுபதி மன்னர்களது ஆட்சி ஆண்டுகளை வரையறுத்து எழுதியுள்ளவர்கள் ராபர்ட் ஷுவல் ராஜாராம் ராவ் மற்றும் டாக்டர். சேஷாத்திரி ஆகியோர்.1 இந்தச் செப் பேடு வழங்கிய முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் ஆட்சிக் காலம் பற்றி அவர்கள் கீழ்க்கண்டவாறு கணித்துள்ளனர்.

1. ராபர்ட் ஷுவல் கி.பி. 1709 — 1723
2. ராஜாராம் ராவ் ,, 1711 — 1724
3. டாக்டர். சேஷாத்திரி ,, 1710 — 1720

ஆனால் இந்தச் செப்பேடு இதே மன்னரால் சாலிவாகன சகப்தம் 1651 சௌமிய ஆண்டுக்குச் சரியான கி. பி. 1729 வழங் கப்பட்டிருக்கிறது. இதற்கு பின்னரும் இதே மன்னரால் வேறு செப்பேடுகள் வழங்கப்பட்டதாக செய்தி இல்லை. ஆதலால் முத்து விஜய ரெகுநாத சேதுபதியின் ஆட்சிக் காலம் இந்த நூலாசிரி யர்கள் குறிப்பிட்டது போல் அல்லாமல் கி.பி. 1729ல் முடிவு பெற்றுள்ளது என்பதை தெளிவாக அறிய முடிகிறது.

---

* 1 Rajaram Rao·M anual of Ramnad Samasthanam (1891) p. 235

Dr. S. Seshadri – Sethupathis of Ramnad (unpbulished Thesis) 1972

# செப்பேடு எண். 44

(நகல்)

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1651 இதின்மேல் செல்லாநின்ற சவு
2. மிய நாம ஸம்வத்ஸரத்தில் உத்தராயணத்தில் ஏமந்திரி துவில் மகாமாசத்து பூற்வ
3. பட்சத்தில் பஞ்சமியும் திங்கள்கிழமையும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சிவ
4. னாமயோகமும் வாலவாகரணமும் சுபயோக சுபகரணமும் பெத்த சுபதினத்தி
5. ல் தேவைநகராதிபன் சேதுமூலா ரக்ஷாதுரந்தரன் ராம நாதசுவாமி காரியா துரந்
6. தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் ரவிவர்ம ரவிகுல சேகரன் ஸ்வஸ்திஸ்ரீமந் ம
7. மாமண்டலேசுரன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் ஈளமும்
8. யாட்பாணமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசபரமேசுரன் ராசமாத்தான்
9. டண் ராசமகா கெம்பீரன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் அரசராவண ராமன் அடி
10. ர் வேளைக்காறன் கொட்டமடக்கி வையாளி நாராயணன் வீரவெண்பாமாலை இள

---

ஸ்ரீ கோதண்ட இராமசாமி கோயில், இராமநாதபுரம்.

11. ஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆற்றுப்பாச்சி கடலிற்ப் பாச்சி மதப்புலி அடைக்கல
12. ங்காத்தான் தான சத்துருவாதிகள் மிண்டன் பட்டமா
13. னங்காத்தான் துஷ்டராயிர கண்டன் அந்தம்பர கண்டன்
14. சாடிக்காறர்கள் மிண்டன் ஸ்வாமித்துரோகிகர் கண்டன் பனுக்குவார் கண்டன் பஞ்
15. சவன்ன ராயராகுந்தன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் கா
16. விக்குடையான் கருணாகடாட்சன் சொரிமுத்து வன்னியன் சத்தியபாஷா அரிச்சந்திரன்
17. கொடைக்கு கற்னன் பரதநாடகப் பிறவீணன் இவுளி பாவடி மிதித்தேறுவார்
18. கண்டன் தழங்கண்டு தத்தளிப்பார் மிண்டன் பரதளவி பாடன் அனுமகேதனன் சகல குணா
19. பிராமன் சங்கீத சாயுத்திய வித்தியாவினோதன் வீரைவள நாடன் வேதியர் காவல
20. ன் காமினி கந்தற்பன் கலைதெரியும் விற்பன்னன் குன்றி னுயர் மேருவிற்குன்றாவளைகு
21. ணில் பொறித்தவன் திலதநுதல் மடவார்கள் மடலெழுத வருசுமுகன் துஷ்டநிக்கிர
22. க வீரத்தண்டை சேமத்தலை விளங்குமிரு தாழினான் தொண்டியந்துறை காவலன்
23. துரக ரேபந்தன் வைகை வளநாடன் வன்னியராட்டந் தவிழ்த்தான் மதுரையார் ஆபத்
24. சகாயன் வீரலக்ஷ்மி காந்தன் விசையலட்சுமி சம்பன்ன சகல சாம்பிராச்சிய ல
25. க்ஷிமி நிவாசன் துகவூர் கூற்றத்துக் காத்தூரான குலோத் துங்கசோழ நல்லூர் கீள்பா
26. ல் விரையாதகண்டனில் இருக்கும் சேதுபதி வங்கிஷாதி பனான உறிரண்யகெற்ப
27. யாசி ரவிகுல சேகர ரகுநாத சேதுபதி காத்ததேவாவர்கள் ராமனாதபுரம் முகவை கோதண்ட

28. ராமசுவாமிக்கு பூசை திருமாலை திருவிளக்கு தாணிகர் தலத்தாருக்கு விட்ட

இரண்டாம் பக்கம்

29. கிராமமான காராம்பல் இந்த காராம்பலுக்கு எல்கை ஆவது தென்புாவில் செ

30. தாறுவளுார்புரவு கந்தன் வயலுக்கு வடக்கு ஆத்துக்கு தென்கரை நீக்கி வடக்கு

31. ஆறுஉள்பட மேற்புரவில் சானாரேந்தல் கண்மாய்க்குள் காவனூர்ப் புரவில்

32. கானத்திடல்கிழக்கு, சானாரேந்தல் ஊர் வடக்கு புரவில் குமரியேந்தல் புர

33. வுக்கு தெக்கு ஷை கண்மாய் தென்கரைக்கு கிழக்கு காரேம்பல் பொருத்துக

34. ரைக்கு வடக்கு வன்னான்தட்டு உள்படதெக்கு ஓடிய தொண்டர்யேந்தல்

35. குளம் கோறுவை உள்பட்ட தொண்டர் யேந்தல் தென் கரைங்கொம்புதை

36. ாண்டர் யேந்தல் புரவில் பேயாண்டி தட்டுக்கு தெக்கு பெரியகுருந்தன் தட்டு நி

37. டறுதிக்கு அச்சடி பரம்பு ஊரணிகரை தெக்கு கிளக்கு ஓடிய புல்லங்குன க

38. ண்மாயின் குளம் கோறுவையில் வேற்கூம்புக்கு மேற்கு கோதண்டராமசு

39. வாமிதுணை இந்தப்படி தற்மச் சாசனம் பட்டையம் கட்டளைப்படியினாலே ஆ

40. சந்திராற்கம் புத்ர பௌத்ர பாரம்பரியம் குடுத்துவரக்கடவ ராகவும் இந்த தம்மத்தை

41. பரிபாலனம் பண்ணினவர்கள் கோடி சிவலிங்கப் பிரதீஷ் டையும் கோடி பிரம்ம பிர

42. திஷ்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவாராகவும் இந்தத் தர்மத்துக்கு அகித

43. ம் பண்ணினவர்கள் காசி சேதுவில் காராம்பசுவையும் பிராமணரையும் மா

44. தா பிதாவையும் வதைபண்ணிண தோஷத்திலே போகக் கடவராகவும் இந்தப்படி

45. க்கு தர்மசாசன பட்டையம் குடுத்தோம் கோதண்ட ராம சுவாமிக்கு ஸ்ரீஉறிரண்யக

46. ற்பயாஜி சேதுபதி கரத்த ரெகுனாதத்தேவர் தாநாத் ஸ்ரயோநு பாவநம் தா

47. த் ஸ்வர்க்க மகாப்நோதி பாலநாத் அச்சுதம பதம் இந்தப் படிக்கு தர்மசாசனப் பட்டை

48. யம் திருப்புல்லாணியில் இருக்கும் சென்ன வீரப்பன் கையெழுத்து

## செப்பேடு எண் 44

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமநாதபுரம் கோதண்ட ராமசாமி ஆலயம். |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1651 சௌமிய ஆண்டு மார்கழி மாதம் (கி.பி. 12-1-1729) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேலேகண்ட கோயிலுக்கு காராம்பல் கிராமம் தானம். |

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்துவிஜய ரெகுநாத சேதுபதி மன்னரது இயற்பெயரில் அல்லாமல் ரெகுநாத சேதுபதி என்ற பொதுப்பெயரில் இந்தச் செப்பேடு வழங்கப்பட்டுள்ளது. என்றாலும் மன்னரது ஆட்சியாண்டான சகம் 1651 சௌமிய - சித்திரையில் - திருப்பெருந்துறை ஆளுடைய பரமசாமிக்கு செப்பேடு வழங்கிஉள்ளதில் இருந்தும் இந்தச் செப்பேடு அதே சகம் ஆண்டு சவுமிய ஆண்டில் வழங்கி இருப்பதாலும் இந்தச் செப்பேடும் முத்துவிசைய ரெகுநாத சேதுபதியினது என்ற முடிவிற்கு வர ஏதுவாக இருக்கின்றது. மேலும் இந்த மன்னரது தம்பியான முத்து ரெகுநாத சேதுபதி திருப்புல்லாணி பெருமாளுக்கு இதே ஆண்டு தை மாதம் இரண்டு செப்பெடுகளை (செ.எண். 82, 83) வழங்கி இருக்கிறார். ஆதலால் முத்துவிசைய ரெகுநாத சேதுபதியின் ஆட்சி சௌமிய ஆண்டு மார்கழி மாதம் வரை நீடித்தது எனக் கொள்வது ஏற்புடையதாகும். இராமநாதபுரம் நகர் கோதண்ட இராமசுவாமி திருக்கோயிலுக்கு

ஏற்கெனவே இந்த மன்னர் சாக்காங்குடி, பட்டப்புல்லான் என்ற இரு கிராமங்களை வழங்கியிருந்த பொழுதிலும் அன்றாட கட்டளைக்கு அவைகளின் வருவாய் போதுமானதாக இல்லாததினால் இந்தப் பட்டயத்தின் மூலம் காராம்பலையும் தானமாகக் கட்டளையிட்டுள்ளார். இந்த ஊர் இராமநாதபுரம் வட்டத்தில் வைகையாற்றின் வடகரையில் காரேந்தல் என்ற பெயருடன் இருந்து வருகிறது.

இந்த மன்னரது விருதாவளியாக அறுபத்து இரண்டு சிறப்புப்பெயர்கள் இந்தப்பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. ''சகல குணாராமன்'' ''மதுரையார் ஆபத்சகாயன்'' என்ற இரண்டு பெயர்கள் மட்டும் புதியனவாக உள்ளன தானம் வழங்கப் பட்டுள்ள காராம்பலின் நான்கு எல்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொருவலூர், சாணரேந்தல், காவனூக், தொண்டாரேந்தல், புல்லங்குளம், அச்சடி பிரம்பு ஆகியவை இன்னும் வழக்கில் உள்ளன. புல்லன்குளம் மட்டும் புல்லன்குடியாகத் திரிபு பெற்றுள் ளது. இந்த ஊர்களின் பிற நான்கெல்கை புரவு என்றும் சிறிய அளவிலான வயலை தட்டு என்றும் குறித்திருப்பது இந்த வட்டார வழக்குகள் ஆகும்.

# 9

# குமார முத்துவிஜய ரெகுநாத சேதுபதி
## (கி.பி. 1730 – 40)

வலிவும் பொலிவும் பெற்ற இராமநாதபுரம் சீமை ஐந்தில் இரண்டு பகுதியினைக் கொண்ட சிவகங்கை என்ற புதிய சீமையாகவும் ஐந்தில் மூன்று பகுதியைக் கொண்ட இராமநாதபுரமாகவும் கி.பி. 1730ல் பிரிவினையடைந்து பெருமையிழந்த நிலையில் சேதுபதி மன்னராக முடிசூட்டிக் கொண்டவர் கட்டயத் தேவர். இவரை வரலாற்று ஆசிரியர்கள் குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இவரது ஆட்சிக்காலம் மிகக் குறுகிய ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக இருந்த போதிலும் இவர் தமது பக்தியுள்ளத்தை பறைசாற்றும் பல தானங்களையும் திருப்பணிகளையும் மேற்கொண்டிருந்தார். சேது வழிப்பாதையில் இராமேசுவரம் பயணிகளுக்காக தீர்த்தாண்டதானத்திலும் தங்கச்சி மடத்திலும் அன்ன சாலைகளை நிறுவினார். இராமேசுவரம், திருப்புல்லாணி, திருக்கோயில்களுக்கு பல ஊர்களை சர்வ மானியங்களாக அளித்து மகிழ்ந்தார். இராமநாதபுரம் கோட்டைக்கு கிழக்கே உள்ள பாலசுப்ரமணியசுவாமி ஆலயத்தையும் புதிதாக நிர்மாணித்து அதற்கென அக்ரஹாரம் ஒன்றையும் நிறுவினார்.

இத்தகைய திருப்பணிகளை மேற்கொண்டதுடன் அல்லாமல் திருக்கோயில் திருப்பணி செய்தவர்களையும் ஊக்குவித்து வந்தார். அவரது தளகர்த்தரான வைரவன் சேர்வைக்காரர் தேவிபட்டினத்துக்கு அண்மையில் பெருவயல் கிராமத்தில் அமைத்த ரணபலி முருகன் திருக்கோயிலுக்கும் அவருடைய பிரதானி இராமலிங்கம் பிள்ளை குளவயல் கிராமத்தில் நிறுவிய சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும் அன்றாட பூஜை, நைவேத்திய கட்டளைகள் முறையாக நடைபெறுவதற்கு சில ஊர்களை சர்வமானியங்களாக வழங்கி உதவினார்.

இந்த மன்னர் இன்னொரு சாதனையையும் ஏற்படுத்தினார். சேதுநாட்டில், முஸ்லீம்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் வாழ்ந்து வந்த போதிலும், அவர்களுக்கு அரசியல் சமுதாய நிலைகளில் அரசு ஊக்குவிப்பு இல்லாது இருந்தது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சிக்கு வந்த ரெகுநாத திருமலை சேதுபதியும், கிழவன் என்ற ரெகுநாத சேதுபதியும் இந்த மக்களது குறைபாடுகளைக் களைவதற்கு முயன்றனர். அனுமந்தக்குடி, நாரணமங்கலம், பூலாங்கால், காரயேந்தல் ஆகிய ஊர்களில் உள்ள அவர்களது புனித இடங்களுக்கு நிலக்கொடை வழங்கி ஆதரித்தார். ஆனால் இந்த மன்னர் தமது நான்காவது ஆட்சியாண்டில் இராமநாதபுரம் ஈசாசாகிப் பள்ளிவாசலுக்கு ஒரு ஊரையே சர்வமானியமாக வழங்கியிருப்பது இவரது சமரச உள்ளத்தை பறை சாற்றுவதாக உள்ளது.

வரலாற்றில் பெரும் புகழும் பெற்ற மறவர்சீமை பிளவுபட்டு பரப்பில் சுருங்கிய நிலையிலான இராமநாதபுரம் சீமையின் முதல் மன்னர் இந்த சேதுபதி.

## செப்பேடு எண் 45

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1652 இதன் மேல் செல்லாநின்ற
2. சாதாரண வருஷம் ஆனி மாதம் 8ந் தேதி உத்ராயணத் தில் தசமியும் சௌமியநாம
3. யோகமும் வால வாகனமும் சோம வாரமும் அசுபதி நட்சத்திரமும் கூடிய
4. புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன் சேது மூலா துரந் தரன் இராமநாதசுவாமி
5. காரியதுரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் பர ராச கெசசிங்கம்
6. இரவிகுல சேகரன் இரவி மார்த்தாண்டன் சொரிமுத்து வன்னியன் வீரஸ்ரீ
7. மகாமண்டலேசுவரன் அரியராயிர தளவிபாடன் பாசைக் குத் தப்புவராயிரக
8. ண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடா
9. தான் பாண்டி மண்டலத் தாபனாச்சாரியன் சோழமண்டல பிரதிஷ்ட்டாபனாச்சா
10. ரியன் தொண்டை மண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பா

---

‡ கள ஆய்வில் நூலாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டு இராம நாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் இருந்து படி எடுக்கப் பட்டது.

11. ணராயன் பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச
12. பரமேசுரன் ராச மார்த்தாண்டன் ராச கெம்பீரன் பாதாள விபாடணன் உரிக்கோ
13. ல் சுரதானன் அந்தப்பிர கண்டன் சாடிக்கார கண்டன் சுவாமித் துரோகியள்
14. மிண்டன் இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகைமன்னர்சிங்கம் துரைராய சிங்கம்
15. ஆற்றில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி, மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கு
16. வேலி சத்ருவாதியன் மிண்டன் வன்னியராட்டம் தவிள்ந் தான் மேவலர்
17. கள் கோளரி மேவலர்கள் வணங்கு மிருதாளினான் வீர மகா கெம்பீரன்
18. கீர்த்திப் பிரதாபன் ஆரிய மானங்காத்தான் தொண்டியந் துறைக் காவலன்
19. துரக ரேபந்தன் அனுமகேதனன், கொடைக்குக் கர்ணன், பரிக்கு நகுலன்
20. கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவில் குன்றாய் வளைத்து பொசித்தவன்
21. திலதநுதல் மடமாதர் மடல் எழுதவரு சுமுகன்விசயலட்சுமி காந்தன்
22. கலைதெரியும் விற்பனன் காமினி கந்தப்பன் வீரதண்டை சேமத்தலை
23. விளங்குமிகு தாளினன் ராசகுல திலதன் ராச மனோபயங் கரன் மன்
24. னரில் மன்னன் மகுடவர்தன் வேந்தன் மன்னர் சூடாமணி துட்டரில் துட்
25. டன் துட்ட நெட்டூரன் அஷ்டதிக்கு மனோ பயங்கரன் கட்ட
26. வன் நவகோடி நாராயணன் துலுக்கர் தளவிபாடன் துலுக் கர் மோக ந்த

27. விழ்ந்தான் ஒட்டிய தள விபாடன் ஒட்டிய மோகம் தவிழ் ந்தான் மலை கல

28. ங்கினும் மனங்கலங்காதான் அசுபதி, நரபதி, கெஜபதி, தனபதி, அறிவுக்கு

29. அகத்தியன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்குவிசயன் மல்லுக்கு வீடு

30. ன் வாளுக்கு அபிமன் தாலிக்கு வேலி அன்னசத்திர சோமன் அடியார்கள்

31. வேளைக்காரன் செம்பி வளநாடன் பூலோக தெய்வேந் திரன் செங்

32. காவிக் கொடியன் தனுக்கோடிக் காவலன் கெந்தமாதன கிரியான்

இரண்டாம் பக்கம்

33. துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்

34. பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ இரண்யகெற்ப யாசி ரெகுநாத

35. சேதுபதி காத்ததேவர் அவர்கள் மருமகன் குமாரமுத்து விஜய ரெகுநாத

36. சேதுபதி காத்தத் தேவர் அவர்கள் பிரதானி இராமலிங் கம் பிள்ளையவர்கள்

37. குளவயல் சுப்பிரமணிய சுவாமிக்கும் குமார விஸ்வேஸ் சுரரை பிரதிஷ்டை

38. பண்ணி திருப்பணியும் கட்டி முகிப்பிச்சு பூசை நெய்வே தனத்திற்கு தெய்வ

39. தாயமாக தானபூர்வமாக பண்ணிக் குடுத்த கிராமமாவது பனயங்கால்

40. பழஞ்சிராய் இப்படிக்கு குமாரமுத்து விசய ரெகு நாத சேதுபதி காத்த தேவர்

41. அவர்கள் விட்டுக் குடுத்தது கிராமம் பணயங்காலுக்கு எல்லையாவது இது

42. க்கு எல்கை தெல்லேந்தலுக்கும் பணயங்கால் ஊடு பாதை பலு

43. பாகலூரணிப் பாதைக்கும் குத்துக் கல்லுக்கும் மேற்கு தெற்கு எல்கை

44. சேகு இபுராகிம் மரைக்காயர் தோட்டத்துக்கும் குட்டி ஆலிப்பிள்ளை தோட்டத்

45. துக்கும் வன்னித் தோட்டத்துக்கும் வடக்கு மேற்கு எல்லையாவது வைகை வாரி

46. யன் செவ்வல் தோட்டத்துக்கும் வணங்கா முடி தோட்டத் துக்கும் மார்த்தா

47. ண்டன் செவ்வல் தோட்டத்துக்கும் குறிஞ்சானோடை பள்ளிவாசல் தோட்

48. டத்துக்கும் கிழக்கு எல்கை வடக்கு எல்கையாவது தன்ம முக்கந்தர் புகை

49. யிலைத் தோட்டத்துக்கும் சக்கிலியன் குடிக்கும் மூலிப் பயல் தோட்டத்து

50. க்கும் தெற்கு இந்நான்கு எல்கைக்குட் பட்ட பணயங்கால் புளியங்குட்ட

51. பழஞ்சிராய் ரெகுநாத சமுத்திரத்துக்கு எல்கை கிழக்கு எல்கையாவது ஆமைக்கு

52. ட்டமும் வெங்கலமுடைய பிள்ளை கண்டவாய்க் கால் கிழக்கு வதிக்கு மேற்கு

53. தெற்கு எல்கையாவது கொம்பிட மருதூர் மேலக் கண் மாய்க் கரைக்குத்

54. தெற்கு மயிலாடு திடலொட்டி மேற்கு புகையிலைத் தொண்டாலிக்கும் சே

55. து ரெகுநாத சமுத்திரத்துக்கும் வெண்ணி மாலை குமாரு சேர்வைக் காரன் நாளையில் எடுத்

56. தேறின உண்டுகரைக்கு வடக்கு மேற்கு எல்கையாவது சிறு கொம்பூதி

57. தெற்குக் கடைக்கொம்பு கரைக்கும் மேற்படி கிராமத்து வயல் கிழக்கு வதிக்கும்

## செப்பேடு எண் 45

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்தத் தேவர்.

2. செப்பேடு பெற்றவர் : குளவயல் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1652 சாதாரண ஆண்டு ஆனி மாதம் 8 ந்தேதி (கி.பி.9-6-1729)

4. செப்பேட்டின் பொருள் : மேலே கண்ட கோயிலுக்கு பூஜை நெய்வேத்தியம் நடப்பிக்க சர்வ மானியம்

இந்த மன்னர், இரணிய கற்பயாச்சி ரெகுநாத திருமலை சேதுபதி காத்த தேவரது மருமகன் என்று தெரிகிறது. இவரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் எண்பத்து ஏழு விருதுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதுவரை எந்தச் சேதுபதி மன்னரது செப்பேட்டிலும் இத்தகைய நீண்ட விருதாவளிகளின் பட்டியல் இடம் பெறவில்லை. ஆனால் இவை அனைத்தும் முந்தைய மன்னர்களது செப்பெடுகளில் கண்ட விருதுகளின் ஒட்டு மொத்தமாகும்.

இந்தச் செப்பேடு வழங்கப்பட்ட திருக்கோயில் இராமநாத புரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தின் கிழக்குப் பகுதியில் இராமநாதபுரம் நகருக்கு வடக்கே பதினைந்து கல் தொலைவில் அமைந்துள்ளது. அங்குள்ள சுப்பிரமணியர் திருக்கோயில்

சிறை பழஞ்சிராய் என்ற பெயரிலும் வழக்கில் இருந்து வருகின்றது. இதற்கு ரெகுநாத சமுத்திரம் என்ற பெயரும் இருந்து வந்துள்ளது. இதன் எல்கை மாலில் குறிப்பிடப்பட்டுள்ள பழுபாகல் ஊரணி, பளுவா ஊரணி என்றும் கொம்பிடா மருதூர், கொம்பிடைமதுரை என்றும் வழங்கி வருகின்றன. இந்த கிராமங்கள் இன்றைய இராமநாதபுரம் வட்டத்தில் கீழக்கரைக்குத் தென்மேற்கே அமைந்துள்ளன. அங்கு பள்ளி வாசல் தோட்டம் என்று (வரி 47) குறிப்பிட்டிருப்பதால் அங்கு முன்னர் இஸ்லாமியரது குடியிருப்பு இருந்து வந்தது புலனாகிறது. இதனை, சேகு இப்ராஹிம் மரைக்காயர் தோட்டம், குட்டி ஆலிப்பிள்ளை தோர்ட்டம் சர்க்கார் ராவுத்தன் தோட்டம் என்ற சொற்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இப்பொழுது அங்கு இஸ்லாமியர்கள் குடியிருப்பு இல்லை. இன்னொரு முக்கியமான செய்தி. இந்தப்பகுதியில் புகையிலைப் பயிர் விளைச்சல் செய்யப்பட்டதை தன்மமுக்கந்தர் புகையிலைத்தோட்டம், புகையிலைத் தொண்டாலி என்ற சொற்கள் இதனைக் குறிப்பிடுகின்றன. திருமாலாகிய பெருமாளை ''முகுந்தன்'' என்று அழைப்பது உண்டு. மருத நிலத்தின் இந்த கடவுளை வழிபடும் யாதவர்கள் தங்கள் பெயரின் இறுதியில் ''முக்கந்தர்'' என்ற விகுதி இணைத்து வழங்குவது அண்மைக்காலம் வரை இந்தப்பகுதியின் பழக்கமாக இருந்தது. முகுந்தன் என்ற வடசொல் மூக்கந்தன் என்று தமிழில் வழங்கி வந்துள்ளது. நன்கு பாதுகாப்பு வேலி அடைப்புடன் கூடிய தோட்டத்தில் போக்குவரத்திற்காக ஒரு சிறு நுழைவுப்பாதை அமைப்பது உண்டு. அதனை இந்தச் செப்பேட்டில் ''தொண்டு'' என்றும் ''தொண்டாலி'' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. தொண்டு வழி தொண்டாலி ஆகியுள்ளது. முன்னர் இந்தப் பகுதி காடும் செடியும் மிகுந்து மயில்கள் பெருத்த பகுதியாக இருந்துள்ளதை ' மயிலாடுதிடல்'' என்ற சொல் (வரி 94) புலப்படுத்துகின்றது. மற்றும் குமாரசேர்வைக் காரர் நாளையில் எடுத்தேறின உண்டுகால், வெங்கலமுடைய பிள்ளை கண்ட வயக்கால் என்ற தொடர்கள் அன்று அரசப் பணியில் இருந்த குமார சேர்வையும், வெங்கலமுடைய பிள்ளையும் இந்த ஊரின் குடிநீர், நீர்ப்பாசன வசதிக்கு ஆற்றின பணியினைத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றன.

## செப்பேடு எண் 46

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1652 இதன்மேல் செல்லா நின்ற
2. கலியத்தம் 4831 இதன் மேல் செல்லா நின்ற சாதாரண வருஷம் உத்தராயண
3. த்தில் தை மாதம் திங்கட்கிழமை பௌர்ணமி அமாவசியும் பூச நக்ஷத்திர
4. சித்திர நாமயோகமும் பாலவாகனமும் சிவராத்திரி தியாச்சியமும் பூகச்சியம்
5. இப்படிக்கு யுகந்த சுப நட்சத்திர சுபயோக சுபகரணமும் பெத்த தைப்பூச
6. புண்ணிய காலத்தில் பாலசுப்ரமணி சுவாமி சன்னதியில் ஸ்ரீமது தேவைநகராதிபன்
7. சேதுமூல துரந்தரன் ராமநாதசுவாமி காரியதுரந்தரன் சிவபூசா துரந்தரன்
8. பரராச சேகரன் பரராச கேச சிங்கம் ரவிகுல சேகரன் ரவிவர்மன் சொரி
9. முத்து வன்னியன் அரியராய தளவிபாடன் பாசைக்கு தப்புவராகண்டன் மூவராய
10. கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பட்டமானங்காத்தான்

---

‡ நூலாசிரியரது கள ஆய்வின் பொழுது இராமநாதபுரம் அரண்மனை ஆவணங்களில் இருந்து கண்டிபிடித்து படி எடுக்கப்பட்டது.

11. துஷ்டராய கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீர வளநாடன் வேதியர் காவலன்

12. அரசராவணராமன் அடியார் வேளைக்காரன் பாதாள விபாடன் உரிகுலசுரதானன்

13. அந்தம்பர கண்டன் சாமித்துரோகியன் மிண்டன் பஞ்ச வர்ணராயர் ராகுத்தர் மிண்டன்

14. பனுக்குவார் ராயகண்டன் கொட்டமடக்கி வய்யாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்

15. தேறுவார் கண்டன் வீர வெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம், பகைமன்னர்

16. சிங்கம் துரைராயன் ஆத்தில் பாச்சி கடலில் பாச்சி மதப் புலி அடைக்கலங்

17. காத்தான் தாலிக்கு வேலிசத்துருவாதி வன்னியராட் டந்தவிழ்த்தான் மேவலர்கள்

18. கோளரி மேவலர்கள் விழங்கு மிருதாளினான் மேவலர்கள் சிங்கம் வீரமஹா

19. கம்பீரன் கீர்த்தி பிரதாபன் ஆரியமானங்காத்தான் தொண்டியன் துறை

20. காவலன் துரகரேபந்தன் அநும கேதனன் குடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் பரத

21. நாடகப்பிரவீணன் கருணாகடாட்சகன் குன்றுயர் மேருவை குன்றாயவனை குணிலம்

22. பொரித்தவன் திலதநுதல் மடமாதர் மடல் எழுதவரும் சுமுகன் விஜயலட்சுமி காந்தன்

23. கலைதெரியும் விற்பனன் காமினி கந்த ப்பன் சத்திய வாசகன் சத்திய அரிச்சந்திரன்

24. சங்கீதசாகித்திய வித்யாவினோதன் வீரத்தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான்

25. சகல சாம்பிராச்சிய லெட்சுமி நிவாசன் துலுக்கர் தள விபாடன் துலுக்க மோகந்த

6. விள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்தான் சுப்பிரமணிய

41. பாகமும் சர்வமாக ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்தை யாதா

42. மொருவர் பரிபாலனம் பண்ணின பேர்களுக்கு கோடி சிவலிங்க பிரதிஷ்டையும்

43. கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவாராகவும்

44. இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்கள் தனுக் கோடி கரையிலும் கெங்கை

45. கரையிலேயும் மாதாபிதாவையும் குருவையும் காராம் பசுவையும் வதை பண்ணின தோஷத்திலே போகக்கடவா ராகவும்

## செப்பேடு எண். 46
(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | குமார முத்து விஜய ரெகு நாத சேதுபதி காத்த தேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | பாலசுப்பிரமணியசுவாமி கோயில், இராமநாதபுரம். |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1652 சாதாரண வருடம் தைமாதம் (கி.பி. 1730) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | இராமநாதபுரம் பாலசுப் பிரமணிய சுவாமி கோயில் சன்னதியில் சுக்கிரகாரம் பிரதிஷ்டை செய்ய நிலக் கொடை |

இந்தச் செப்பேட்டில் இந்த மன்னரது விருதாவளியாக எழுபத்து ஒரு விருதாவளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை யனைத்தும் முந்தைய சேதுபதி மன்னர்களது விருதாவளியாகச் சுட்டப்பட்டவைகள் தான்

இராமநாதபுரம் கோட்டைக்கு கிழக்கே தாயுமான அடிகளது அடக்க இடம் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் தெற்கே உள்ள பாலசுப்பிரமணிய சுவாமி சன்னதியில் சுக்கிர காரம் பிரதிஷ்டை செய்வது தொடர்பாக அந்தக் கோயிலுக்கு செவ்விருக்கை நாட்டில் உள்ள கள்ளிக்கோட்டைக் கிராமத்தில் கணசங்கியாபாகம்-இருபத்து நான்கையும் தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு தெரியப்படுத்துகிறது. இந்தக் கிராமம் இன்றைய பரமக்குடி வட்டத்தில் கிழக்குப் பகுதியில் வைகை

யாற்றுக் கரையில் உள்ளது. ஆனால் முந்தைய நிலக்கூற்றில் இந்தக் கிராமம் செவ்விருக்கை நாட்டில் அமைந்துள்ளதும் தெரிய வருகிறது.

அக்கிரகாரப் பிரதிஷ்டைக்காக இந்த தானம் வழங்கப் பட்டதால் தானம் பெற்றவர் யார் என்பதை இந்தச் செப்பேடு குறிக்கவில்லை. ஆதலால் இந்த தானத்தைப் பெற்றவர் பால சுப்பிரமணியசுவாமி கோயில் நிர்வாகிகள் என்பதை ஊகித்துக் கொள்ள வேண்டியதாக உள்ளது.

இந்தச்செப்பேட்டில் தானம் வழங்கிய சேதுபதி மன்னரைக் குறிக்கும் பொழுது ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்களது ''புத்திரன்'' முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவரவ களது ''புத்திரன்'' குமாரமுத்து ராகுநாத சேதுபதி காத்த தேவர்கள் என (வரிகள் 30-32) வரையப்பட்டுள்ளது. ஆனால் இராமநாதபுரம் சேது மன்னர்கள் பற்றிய பல்வேறு ஆவணங்கள் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி, கிழவன் என்ற ரெகுநாத சேதுபதியின் மருகர் என்றும் மகன் என்றும் குறித்துள்ளன, முந்தைய இரு சேதுபதி மன்னர்களுக்கும் ஆண்வாரிசு இல்லை முத்துவிஜய ரெகுநாத சேதுபதிக்கும் ஆண்வாரிசு இல்லை. திருமலை ரெகுநாத சேதுபதி, வழியில் வந்தவர் குமாரமுத்து விஜய ரெகு நாத சேதுபதி ஏற்கெனவே கிழவன் சேதுபதியின் கி.பி.1678ஆம் ஆண்டு பட்டயத்தில் (செப்பேடு எண் 23) கண்ட வாறு முந்தைய மன்னரது புத்திரனாக இல்லாவிட்டாலும் அடுத்து வந்த சேதுபதி முந்தைய மன்னரது புத்திரனாக தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளவது இராமநாதபுரம் அரண் மனையின் சம்பிரதாயமாக இருந்து வந்துள்ளது. தந்தை - மகன் என்ற உறவு நிலை இரத்தக் கலப்பினால் ஏற்படுவது போல சேது நாட்டு அரியாசனத்தில் அமரும் மன்னரும், தமது கடமையின் காரணமாக முன்னர் இருந்த மன்னரது மைந்தா ராகின்றார்.

# செப்பேடு எண் 47

(நகல்)

முதல் பக்கம்

1. சிவஸ்ரீமன் மஹாமண்டலேசுவரன் அரியராயிர தள விபாடன்
2. பாஷைக்குத்தப்புவராத கண்டன் மூவராயிர கண்டன் கண்ட
3. நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டி மண்டலத் தா
4. பனாசாரியன் சோழமண்டலப் பிறதிட்டாபனாசாரியன் தொண்
5. டமண்டலச் சண்டப்பிறசண்டன் பூறுவ தெட்ஷண பச்சிம
6. உத்தர சத்த சமுத்திராதிபன் யீழமூங் கொல்லமும் யாட் பாண
7. ராயன் பட்டணமு மளித்துக் கெசவேட்டை கண்ட
8. ருளியராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமாற்தாண்டன்ரா
9. சகெம்பீரன் துட்ட நிக்கிரக சிட்டர் பரிபாலனன் கட்டாரி
10. சாளுவன் நவகோடி நாராயணன் அட்டத்திக்கரசர் மனோப
11. யங்கரன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்
12. தவிழ்த்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகந்
13. தவிழ்த்தான்
14. மலை கலங்கினும் மனங்கலங்காதான் பட்டாபிஷே

---

திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை.
அமைப்பு : 19.5 செ.மீ. × 15செ.மீ.
படி எடுத்து உதவியவர் : புலவர் திரு. செ. ராஜு, தஞ்சை

15. கண் குதிரைக்கு நகுலன் அறிவுக்கத்தியன் சொல்லுக்கு
16. அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன் வாளுக் கபிமன் கொ
17. டைக்குக் கன்னன் அன்னசத்திர சோமன் அடைக்கலம்
18. காத்தவன் தாலிக்கு வேலி செம்பி வழநாடன் பூலோக
19. தெய்வேந்திரன் இரவிகுல சேகரன் இரவிய கெற்ப சுதா
20. கரன் தேவை நகராதிபன் அசுவபதி கெசபதி நரபதி சேதுப
21. தி காத்தமுத்நு ரெகுநாத தேவரவர்கள் பிறிதிலி ராச்சி
22. ய பரிபாலனம் பணணியருளா நின்ற சாலிவாகன சகா
23. த்தம் 1654 க்கு மேல் செல்லா நின்ற விரோதி கிறுது வுூ ஆவ
24. ணி மீ 31உ சவுமிய வாசரமும் பூறுவ பட்ஷத்தில் த் துவா
25. தெசியும் அவிட்ட நட்சத்திரமுஞ் சோபன நாம யோகமும்
26. பவகறணமும் பெத்த சுபதினத்தில் குமார முத்து விசைய
27. ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் திருவாவடுதுறை
28. ப் பண்டாரச் சன்னதி மடப்பிரமாகக் கட்டளையிட்ட பொ
29. சுக்குடிக்கு எல்லையாவது நஞ்சை பிஞ்சை திட்டு

*இரண்டாம் பக்கம்*

30. திடல் இடைகுடி பள்ளு உள்பட சர்வமானியமாக
31. தானபூர்வமாக நாம் தர்ம சாதனம் பண்ணிக்
32. கொடுத்தபடியினாலே சந்ராதித்யர் வரைக்கும்
33. ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவராகவும்
34. இந்த தன்மத்தை யாதாமொருவர் பரிபாலனம்
35. பண்ணினபேர் கோடி கன்னிகாதானம் பண்ணின
36. பலன் பெறுவார்கள் அகிதம் பண்ணினபேர்
37. கங்கைக் கரையிலே காராம்பசுவையும்
38. சேதுக்கரையிலே பிராமணனைக் கொன்ற தோ
39. சத்திலே போவாராகவும் உ. பழனியான் துணை இராமலிங்கம் துணை
40. ஸதல ஸ்தபதி

சோழனது வாழ்வு முடிவுறும் வடக்கிருத்தலில் பங்கு பெற்று தம்மை மாய்த்துக் கொண்ட இந்தப் புலவர் பெருமகனது மாண்பினை சங்கப்புலவர்களான பொத்தியாரும், கண்ணகனாரும் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

மடப்புரமாக வழங்கப்பட்ட பொசுக்குடி இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஊருக்கான விரிவான எல்லைகள் செப்பேட்டில் குறிக்கப்படாமல் நஞ்சை, புஞ்சை, திட்டு, திடல், இடை, குடி, பள்ளு உட்பட சர்வ மானியம் என வரிகள் 29, 30ல் குறிக்கப்பட்டுள்ளன.

மற்றும் இந்த செப்பேட்டினைப் பொறித்தவர் பெயர் குறிப்பிடப்படாமல் 'ஸ்தலஸ்தபதி என்று மட்டும் குறிப்பிடப் பட்டிருப்பதால் இந்த செப்பேடு, சேதுபதி மன்னர் திருவாவடு துறை மடத்துக்கு வருகை தந்தபொழுது அங்கேயே வழங்கப் பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

## செப்பேடு எண் 48

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1654 இதன் மேல் செல்லா நின்
2. ற பரியதாபி நாப சம்வச்ரத்தில் உத்திராயணமும் வசந்த ரிதுவில் சை
3. த்திர மாசத்தில் கிருஷ்ண பட்சத்தில் சோம வாரத்தில் அமாவாசையில்
4. ரோகினி நட்சத்திரமும் சவுபாக்கிய நாமயோகமும் ... கூடின புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன்
5. சேதுமூல்ா ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரியத் துரந்தரன் சிவபூஜா
6. துரந்தரன் பரராச சேகரன் பரராஜ மார்த்தாண்டன் அடைக்கலங்காத்தான்
7. ஸ்வஸ்திஸ்ரீ மன்னர் மன்னன் தாலிக்கு வேலி அரியாயிர தல விபாடன் பாசைக்குத் தப்புவார்
8. கண்டன் மூவாயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண் ட நாடு கொடாதான்
9. பாண்டி மண்டல தாபனாச்சரியன் சோழ மண்டல பிரதிஷ் டாபனாச்சாரியன்
10. பூர்வ தெட்சிண ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணபட்டண மும் க

---

* களஆய்வில் ஆசிரியரால் திருப்புல்லாணி ஸ்ரீ டி.பி.எல்.எஸ் சுப்பிரமணிய சாஸ்திரியிடமிருந்து படி எடுக்கப்பட்டது.
அமைப்பு : 25 செ.மீ × 16.5செ.மீ.

11. சவேட்டை கண்டருளிய ராஜாதிராஜன் ராஜபரமேசுவரன் ரா
12. ஜமார்த்தண்டன் ராஜகெம்பீரன் புவனேகவீரன் வீர கஞ்ச கன் வே
13. தியர் காவலன் அரசராவண ராமன் அடியார் வேளைக் காரன் கொட்ட
14. மடக்கி, வையாளி நாராயணன் இவுளி பாவடி மிதித் தேறுவார் கண்
15. டன் வீர வெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்
16. னர் சிங்கம் ஆற்றுப்பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங்கா
17. த்தான் சத்துராதியள் மிண்டன் பட்டமானங்காத்தான் துட்டராயர்
18. கண்டன் அந்தம் பிர கண்டன் சாடிக்காரர் கண்டன் சா மித் துரோ
19. கியள் மிண்டன் பஞ்சவண்ணராயராவுத்தன் பனுக்குவார் கண்டன் மே
20. வலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிருதாளினன் காவிக் கொடையான்
21. கருணா கடாட்சன் சொரிமுத்து வன்னியன் சத்திய அரிச் சந்திரன் கொடைக்கு கர்
22. ணன் பரிக்கு நகுலன் மல்லுக்கு வீமன், வில்லுக்கு விசயன் பரத நாட
23. கப் பிரவீணன் கலைதெரியு விற்பன்னன் குன்றினுயர் மேருவில் வில்லை
24. வளைத்து குனில் பொசித்தவன் திலதநுதல் மடவார்கள் மடல் எழுதும் சு
25. முகன் விசயலட்சுமி காந்தன் துட்ட நிக்கிரகன் சிட்ட பரி பாலன்
26. வீரதண்டை சேமத்தலை விளங்குமிருதாளினான் தொண் டியந்துறைக்

27. காவலன் துரகரே பந்தன் அனுமகேதனன் வைகை வள நாடன்

28. வன்னியராட்டம் தவிழ்ந்தான் மதுர சகாயன் விசயலட்சுமி

29. சம்பன்னன் சகல சாம்பிராட்சிய லட்சுமி வாசனான துக ஊர் கூத்தத்து

30. காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரை யாத கண்ட

31. னில் இருக்கும் ஸ்ரீ இரண்ய கெற்பயாஜி இரவி குல சேகர விசய

இரண்டாவது பக்கம்

32. ரெகுநாதசேதுபதி காத்த தேவர் அவர்கள் புத்திரன் குமாரமுத்து

33. ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் கோபாலய்யன் புத்திரன் ராமையனுக்கு தனுஷ்கோடிக் கரையில் உதக தாரா பூர்வமாக

34. தானம் பண்ணிக் கொடுத்த கிராமமாவது இறையான் ஏந்தலுக்கு வடக்கு சந்திரன்கு

35. ளத்துக்கு மேற்கு கிடார வட்டகையில் நரசிங்கன் ஏந்தலுக்குத் தெற்கு தனிச்செயத்துக்கு கிழக்கு இன் நான் கெல்லைக்குட்பட்ட சேரந்தை சர்வ

36. மானிபமாக தானம் பண்ணிக் கொடுத்தபடியினாலே அதுக்குண்டான

37. நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை நிட்சேப

38. ஜலதரு பாஷனாஅஷ்ட காமியம் என்று சொல்லப்பட்ட

39. அஷ்டபோக ஐஸ்வரியங்களையும் தானாதி வினியோக விக்கிரயங்களுக்கு

40. யோக்கியமாக சந்திராதித்த வரைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரையாக ஆண்

41. டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — இதுக்கு எவராகிலும் இந்த தர்மத்தை பரி

43. பாலனம் பண்ணின பேர்கள் காசியிலே கோடி சிவலிங்க பிர

44. திட்டை கோடி பிர்மப் பிரதிட்டையும் கோடி கன்னிகாதான

45. மும் பண்ணின பலத்தை அடைவார்களாகவும், இந்த தர்மத்

46. துக்கு அகுதம் பண்ணின பேர்கள் கங்கையிலும் காசியிலும்

47. தனுக்கோடியிலே மாதா பிதாவையும் குருவையும் காராம்

48. பசுவையும் வதை பண்ணின தோசத்தை அடைவார் களாகவும்

49. இந்த சாதனம் எழுதினேன் சென்ன வீர பண்டாரம் மகன் சென்ன வீரப்பன் எழுத்து

## செப்பேடு எண் 48

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : குமாரமுத்து ரெகுநாத சேதுபதி காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : மாங்குண்டு கோபாலய்யன் புத்திரன் இராமய்யன்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1654 பரிதாபி ஆண்டு (17—4—1732)
4. செப்பேட்டின் பொருள் : சேரந்தை கிராமம்தானம்

இந்த மன்னரது விருதாவளியாக அறுபத்தியாறு சிறப்புப் பெயர்கள் இந்தச்செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் ''*மதுரையர் பச்சதாபன்*'' என்ற ஒரேயொரு சிறப்புப் பெயர் மட்டும் புதிய விருதாவளியாகக் காணப்படுகிறது.

மாங்குண்டு கோபாலய்யன் புத்திரன் இராமையனுக்கு சேரந்தை என்ற கிராமத்தை இராமநாதபுரம் சேதுபதிமன்னர் தனுக்கோடிக்கரையில் தானம் பண்ணியதை இந்தச்செப்பேடு தெரிவிக்கின்றது. மாங்குண்டு என்பது இராமேஸ்வரம் நகருக்கு வடபுறத்தில் உள்ள சிற்றூர். தானம் வழங்கப்பட்ட சேரந்தை முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் பெயர் விகுதியான ஆந்தை என்ற சொல் இதே பகுதியில் வேறுசில ஊர்களுக்கும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். புல்லந்தை, கீரந்தை, பண்ணந்தை,மாறந்தை விடந்தை என்பன அவை. இவைதவிர கோட்டந்தை, வேட்டந்தை, என்ற ஊர்ப் பெயர்களும் இதே வட்டாரத்தில் உள்ளன. கடைச்சங்ககாலப் புலவரான ''பிசிராந்தையார்'' வாழ்ந்த பிசிராந்தையும் இந்தப் பகுதியிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தானம் பெற்ற இராமைய்யன் விஜயநகரத்திலிருந்து வந்தவர் என்றும் வடமொழியில் மிகுந்த புலமை பெற்றிருந்தவ ரென்பதும் தெரியவருகிறது. திருப்புல்லாணியிலுள்ள இராமைய் யனது பதிமூன்றாவது தலைமுறையினரான பண்டா சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் அவரது முன்னோரான இராமையன்னுக்கு சாகித்ய சிரோன்மணி என்ற விருது இருந்ததாகவும், வடமொழி இலக்கியங்களின் சாகரமாக அவர் திகழ்ந்தவரென்றும் அன்னா ரைப் பற்றி பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார். இந்தச் செப்பேடும் அவரிடத்திலேதான் உள்ளது.

தானம் வழங்கப்பட்ட சேரந்தையின் பெருநான் கெல்கை களான *அந்திரன்குளம்*, *இறையானேந்தல்*, *நரசிங்கனேந்தல்*, *தனிச்சயம்* என்ற ஊர்கள் காட்டப்பெற்றுள்ளன. ஐந்திரம் என்ற பழம்பெரும் இலக்கண நூல் பெயரிலமைந்த ஒருவரின் பெயராக அந்திரன்குளம் ஏற்பட்டுள்ளது. தனிச்சந்தை என்ற பெயர் தனிச்சயமாக திரிந்துள்ளது. மதுரை மாவட்டத்திலும் ஒரு தனிச்சயம் இருக்கின்றது. ஐம்பத்திரண்டு வரிகளில் வரை யப்பட்டுள்ள இந்த செப்பேடு மிகவும் பிழையான சொற்களுடனும் தமிழாகிய வடமொழிச் சொற்களுடனும் காணப்படுகின்றது.

கொடையினைப் பெற்ற இராமையனது ஊராகிய மாங் குண்டு இப்பொழுது மண்குண்டு என வழக்குப் பெற்றுள்ளது அத்துடன் இந்த சிற்றூரில் இப்பொழுது அந்தணர் குடியும் இல்லை.

## செப்பேடு எண் 49

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1655 இதன் மேல் செல்லா நின்ற பிரம்மாதிச வருஷம்
2. கார்த்திகை மாதம் 10ந் தேதி சனி வாரமும் பௌர்ணமி அமாவாசையும் ரோகிணி நட்சத்திரமும் சுப
3. யோக சுப தருணமும் சோம உபரக புண்ணிய காலத்தில் ஸ்வஸ்திஸ்ரீ மன் மகா மண்ட
4. லேசுரன் அரியராய தளவி பாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் மூவராயிர கண்டன் கண்ட
5. நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிய மண்டல தாபனாச்சாரியன் சோழ மண்
6. டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்ட மண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொ
7. ங்கும், யாழ்ப்பாண தேசமும் எம்மண்டலமும் கெசவேட் டை கண்டருளிய ராஜாதி ராஜன் ராஜ
8. பரமேசுவரன் ராஜ மார்த்தாண்டன் ராஜ உத்தண்டன் ராஜ கெம்பீரன் பரதள விபாடன் உரிகோல் சுரதாரணன்
9. அந்தம்பர கண்டன் பணுக்குவார் கண்டன் சாதிக்காரர் கண்டன் சாமித்துரோகி
10. யள் கண்டன் துட்டரில் துட்டன் துட்ட நெட்டூரன் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலன் புவ

---

‡ ASSI Vol IV p.p. 90 - 92

அமைப்பு : 32.5 செ.மீ. × 18.செ.மீ.

11. னேக வீரன் வீர கஞ்சுகன் வேதியர் காவலன் அடியார் வேளைக்காரன் பட்டமானங் காத்தான்

12. துட்டராயிர கண்டன் இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் ஆத்தில்

13. பாய்ச்சி, கடலில் பாய்ச்சி, மதப்புலி அடைக்கலங்

14. காத்தான் தொண்டியந்துறைக் காவலன் சிவசிதம்பரம்

*சிவசிதம்பரம்*

15. ன் துரக ரேபந்தன் வையாளி நாராயணன் இவுளி பா வடி மிதித்தேறுவார்கண்டன் வை

16. கை வளநாடன் செம்பிவளநாடன் அனுமகேதனன் கருட கேதனன் வன்னியராட்டந்

17. தவிழ்ந்தான் கந்தமாதன வெற்பினன் அரசராவண ராமன் பரராஜ கேசரி பரராஜ சிங்கம் பரரா

18. ஜ சற்ப கருடன் இரவிகுல திலகன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்

19. தவிழ்ந்தான் ஒட்டிய தள விபாடன் ஒட்டிய மோகந் தவிழ்ந்தான் ஆரிய மானங்காத்தா

20. ன் மதுரை மானங்காத்தான் நவகோடி நாராயணன் மே வலர்கள் கோலரி மேவலர்கள்

21. வணங்குமிரு தாளினான் வீரமுடி சேமத்தலை விளங்கும் இருதாளினான் குன்றிலுயர் மேருவில்

22. குன்றாவளை குணில் பொசித்தவன் திலதநுதல் மடவார் மடல் எழுதவரு சுகுனன் வீரலட்சுமி

23. விசயலட்சுமி காந்தன் காமினி கந்தப்பன் கலை தெரியு விற்பன்னன் சகலகலை வல்

24. லவன் சத்தியபாஷா அரிச்சந்திர சங்கீத சாகித்ய வித்யா வினோதன் சிவ பூஜா

25. துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் சபாபதி காரிய துரந்தரன் துகவூர்

26. கூத்தத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ் விரையாத கண்டனில் இருக்கும்

27. கிரண்ய கெற்பயாஜி தேவர் அவர்கள் ரெகுநாத சேதுபதி காத்த அகுரலாகியானி கெற்பயாஜி

28. ஸ்ரீமது குமார முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் தேவையம்பலம்

இரண்டாம் பக்கம்

29. சபாபதி கட்டளைக்கு தாம்புர சாதன பட்டயம் குடுத்தபடி பட்டயமாவது சபாபதி அபிஷேக

30. நெய்வேத்தியற்கு கட்டளையிட்ட கிராமமாவது குளத் தூருக்கு பெருநான் கெல்கையாவது

31. கிழக்கு எல்லை இடையர்குடி கரைக்கு மேற்குத் தெற்கு எல்லை எல்லைக்களத்துக்கு

32. வடக்கு மேற்கு எல்கை தெல்லாப் பிள்ளை ஊரணி கீழ்க்கரைக்கு கிழக்கு வடவெல்

33. கை கொல்லன் புஞ்சைக்கு தெற்கு இந்நான் கெல்கைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை மா

34. வடை மரவடை ஏந்தல் பிறவிடை சகலமும் சர்வமானிய மாகவும் இராமேசுவரத்தில்

35. கட்டளையிட்டது புன்னைத் தோப்பில் ரெகுநாத தேவர் தோப்பும் சின்னையர் தோப்பும் ஆ

36. டுமாடும் கிராமத்திலிருந்து வருகிற நெல் தவசங்கள் கொண்டு ஓட்டிவருகிற தவ

37. சம் தட்டுமுட்டுகள் தலத்திலே கோவில் பூசைக்கு விற்கிற சாமக்கிரிகை

38. அளக்கப்பட்ட சரக்கு நிறுக்கப்பட்ட சரக்கு எண்ணப்பட்ட சரக்கு இதுகளுக்

39. கெல்லாம் அள்ளுத்தீர்வை, மகுமைகள் வாங்க வேண்டாமென்று தானபூர்வமாக சே

40. துராமலிங்கய்யனிடத்தில் தாம்பூர சாதன பட்டயம் கட்டளையிட்ட படிக்கு

41. சந்திராதித்த சந்ததிப் பிரவேசம் உள்ள மட்டும் ஆண்டு அனுபவித்துவரக்கடவர்

42. ஆகவும். யாதாம் ஒருத்தர் இத்தருமத்தை பரிபாலனம் பண்ணின பேருக்கு காசியிலேயும்

43. சேதுவிலேயும் கோடி சிவலிங்க பிரதிட்டை பண்ணின பலத்தையும் கோடி பிரம்ம பிர
44. திட்டை பண்ணின பலத்தையும் அடையக் கடவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதா
45. மொருவர் விக்கினம் பண்ணின பேர்கள் காசியிலேயும் தனுக்கோடியிலேயும் ஸதிரி
46. வதை பண்ணின தோசத்திலேயும் பிராம்மண வதை பண்ணின தோசத்திலேயும் போகக்
47. கடவராகவும். உ இந்தப்படிக்கு ஈரப்ப பண்டாரம் கையெழுத்து.

## செப்பேடு எண். 49

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1, செப்பேடு வழங்கியவர் | : | குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்ததேவர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1655 பிரமாதீச ஆண்டு கார்த்திகை மாதம் 10ந் தேதி (கி.பி. 10—11-1733) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | இராமேசுவரம் திருக்கோயில் சபாபதி கட்டளைக்கு நிலக் கொடை |

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது விருதாவளியாக எழுபது சிறப்புப்பெயர்கள் இந்தச் செப்பேட்டில் காணப்படுகின்றன. அவைகள் அனைத்தும் முந்தைய சேதுபதி மன்னர்களது செப்பேட்டில் குறிக்கப்பட்டவை.

இராமேசுவரம் திருக்கோயில் மூன்றாம்பிரகாரத்தில் தென்கிழக்கு மூலையில் உள்ள சபாபதி ஈசுவரருக்கு அபிஷேக நெய் வேத்தியத்திற்காக குளத்தூர் கிராமம் தானம் வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கோயிலின் சுவற்றில் காணப்படும் கல்வெட்டில் இருந்து இத்தக் கட்டுமானம் பாண்டிய மன்னன் வீரபாண்டியனால் அமைக்கப்பட்டது புலனாகின்றது. இன்றைய இராமநாதபுரம் பரமக்குடி வட்டத்தில் வடகிழக்குப் பகுதியில் இந்த ஊர் அமைந்துள்ளது. இந்தச் செப்பேடு வழங்கப்படும் ஊரை சபாபதி அம்பலத்திற்கென தனியான

கட்டளை எதுவும் அந்த திருக்கோயிலில் இல்லாது இருந்த குறையை உணர்ந்து மன்னர் இந்த தானத்தின் மூலம் நிறைவு செய்துள்ளார்.

இந்தக் கட்டளைக்கு குளத்தூர் கிராமம் முழுமையாக வழங்கப்பட்ட போதிலும் இராமேஸ்வரம் நகரில் உள்ள சின்னையர் தோப்பும் புன்னைத் தோப்பும் இந்தக் கட்டளைக் காக கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இராமேசுவரம் நகருக்குள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்ற நெல் முதலிய தானியங்கள் தட்டுமுட்டு சாமான்கள் கோயில் உபயோகத்திற்காக விற்கப்படுகின்ற சாமான்கள் அளக்கப்படுபவை, எண்ணப்படுபவை ஆகிய இனங்களைச் சேர்ந்தவைகளுக்கும் அரண்மனைக்காக வசூலித்து வரப்பட்ட அள்ளுத்தீர்வை. மகமை, ஆகியவைகளையும் வசூலிக்கத் தேவையில்லை என்றும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வசூல் பணியில் சேதுராமலிங்க ஐயன் என்பவர் ஈடுபட்டிருந்தார் என்பதையும் இந்தச் செப்பேடு துலக்குகின்றது. இந்த வருவாய் அனைத்தும் சபாபதி கட்டளைக்கு சேரவேண்டும் என்ற பெரும் விருப்புடன் மன்னர் இந்த தானத்தை வழங்கியுள்ளார்.

தவசம், சாமக்கிரியை, தட்டுமுட்டு விக்கினம் என்பன இந்த வட்டார வழக்குகள்

## செப்பேடு எண். 50
(நகல்)

*முதல் பக்கம்*

1. ஸ்வஸ்திஸ்ரீமகாமண்டலேசுரன் அரிய ராயிர தளவிபாடன் பா
2. ஷைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்டு
3. கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனா சாரியன் சோழமண்
4. டலப் பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டலச் சண்டப் பிரகண்டன் பூறு
5. வ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி ஈழமுங் கொங்கும் யாட்பாணமும்
6. எம்மண்டலமுங் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுர
7. ன் ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுல திலகன் மன்னற்கு மன்னன்
8. துட்டற்கு துட்டன் துட்டநெட்டூரன் அட்டதிக்கு மனோ பயங்கரன் கட்டாரி சா
9. ளுவன் நவகோடி நாராயணன் துலுக்கர் தள விபாடன் மோகந் தவிழ்த்தா

---

திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை
அமைப்பு : 25.3செ.மீ.×17.7 செ.மீ.
படியெடுத்து உதவியவர் : புலவர். செ. ராஜு அவர்கள், தஞ்சை.

10. ன் ஒட்டியர் தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்தான் மலைகலங்கிலும் மனங்க

11. லங்காதான் நரலோக கண்டன் குடைக்கி கன்னன் பரிக்கு நகுலன் அறிவுக் கக

12. த்நியன் வில்லுக்கு விசையன் சொல்லுக் கரிச்சந்திரன் வாளுக்கு வீமன் தாலி

13. க்கு வேலி சமர கோலாகலன் அன்னசத்திர சோமன் அந்தம்பர கண்டன் அடியார் வே

14. ளைக்காரன் அடைக்கலங் காத்தான் இளஞ்சிங்கந் தளஞ் சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆற்று

15. ப்பாச்சி கடலிற்பாச்சி துட்ட நிக்கிரகன் சிட்டர் பரிபாலன் மநுநீதி சோழன் மன்மத சொ

16. ரூபன் தொண்டியந்துறை காவலன் வீரதண்டை சேமத் தலை விளங்கிய தாளினான் இவுளி

17. பாவடி மிதித்தேறுவார் கண்டன் கருணா கடாட்சன் ருத்திராட்ச மாலிகாபரணன் சிவபூசா

18. துரந்தரன் சொரிமுத்து வன்னியன் குன்றனைய மேருவிற் குன்றா வளைகுணில் பொறித்த

19. ன் தனுக்கோடி காவலன் ராமனாத சுவாமி சுப்பிரமணிய சுவாமி பாதாரவிந்த சேகர

20. ன் வீரலட்சுமி காந்தன் விசையலட்சுமி சம்பன்னன் காமினி கந்தப்பன் மேவலர் கோ

21. ளரி மேவலர் வணங்குமிரு தாளினான் சங்கீத சாயித்திய வித்தியா வினோத பரத னாடக

22. ப் பிரவீணன் செம்பினா டுடையோன் வைய்கைவளனாடன் அசுபதி கெசபதி நர

23. பதி சேதுபதி பிரிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சகாத்

24. தம் 1656க்கு மேல் செல்லாநின்ற பிரமா

25. தீட்ச ஸூ கார்த்திகை மீ 10 உ தெட்சனாயணத்து பூறுவ பட்சத்துப் பவுர்ணமையும் மந்த

26. வாரமும் ரோகினி நட்சத்திரமும் சந்திரரோபார புண்ணியகாலங் கூடின சுபதி

27. னத்தில் துகவூர்க் கற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூற் கீழபால் வி

28. ரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ இரணியகெற்ப யாசி ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள்

29. திருவாவடுதுறைப் பண்டார சன்னதி மடம் மயேசுர பூசைக்கு தற்ம சாஸநப் ப

30. ட்டையங் குடுத்தபடி பட்டையமாவது அம்பலவாணசுவாமி சன்னதியில் மயேசு

31. வர பூசைக்குக் கட்டளையிட்டது கிறாமம் ஏழுகோட்டை நாட்டில் ஓருர் வட்ட

32. கையில் திருப்பாக்கோட்டை பெரு நான்கெல்லைக் குள் பட்ட ஏந்தல் பிறவடை நஞ்

33. சை புஞ்சை மாவடை சகலமுஞ்சறுவமானியமாகவும் நம் முடைய ரா

34. ச்சியத்துச் சுங்கத்துறை எட்டு மாகாணத்துக்கும் மகமை பொதி ஒன்றுக்கு மா

35. காணிப் பணமுஞ் சீமைக்கு அரை மாகாணியும் பேட்டைத் தலங்கள் மற்றச் சில்ல

36. றையுங் கடைபோட்டிருக்கிற கடைக்கு மாதம் அரைக்கால் பணமுங் கரைது

37. றையில் நெல்லுக்குவண்டி ஒன்றுக்கு மூணு மாகாணியுஞ் சீமைக்கு அரைமாகாணி

38. யும் பாறு படகு ஏத்துமதி இறக்குமதிக்கு பத்துப்பணம் தீற்வை பட்டால் அரப்பணமும் அளத்தில் பொதி 1க்கு மகமை அரை

39. க்கால் பணமுஞ் சீமைக்கு அரை மாகாணியும் கம்பட்டத்தில் நூறு பொன்னுக்கு மக

40. மை கால்ப்பணமும் பண்ணைக்கிறாமம் சீவிதக் சிறாமங் கோவில் கிராமம் பிரமதாய

41. க் கிராமத்துக்கு விளைஞ்ச நிலத்துக்கு மாத்தால் குறுணி நெல்லும் புஞ்சை தட்டுக்கு

42. மூன்றுபடி தவசமும் இந்த படிக்கு மயேசுவர பூசைக்கு கட்டளையிட்ட

இரண்டாம் பக்கம்

43. படியினாலே சந்திராதித்த வரைக்கும் கல்லும் காவேரி புல்லும் பூமி
44. யும் உள்ளமட்டுக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ள கடவாராகவும் யிந்த
45. த் தற்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணின பேர் கோடி சிவலிங்கப்
46. பிரதிட்டையும் கோடி விறுமப் பிரதிட்டையும் கோடி கன்னிகாதானம்
47. பண்ணின பலத்தையும் அடைவாராகவும் இந்த தர்மத் துக்கு யாதாமொ
48. ருத்தர் அகிதம் நினைத்தபேர் கெங்கைக் கரையிலேயுஞ் சேதுவிலேயு மா
49. தா பிதாவையும் காராம் பசுவையும் வதை பண்ணின தோஷத்திலே
50. போகக் கடவராகவும் அம்பலவாணன் திருவடி வாழ்க உ
51. ஆவுடையார் கோயில் சன்னதியில் நம்மிட சத்திரமும் பண்டாரச் சன்
52. னதி அன்னதான மடமாகக் கட்டளையிட்டோம் இந்த படிக்கி
53. சென்ன வீரப்பன் எழுத்து உ

## செப்பேடு எண் 50
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருவாவடுதுறை பண்டார சன்னதி
3. செப்பேட்டின் காலம் : சகம் 1656 பிரமாதீச ஆண்டு கார்த்திகை மீ" 10ந் தேதி (கி.பி. 10—11—1733)
4. செப்பேட்டின் பொருள் : மயேச்சுரபூசைக்கு திருப்பக் கோட்டை கிராமம் தானம்.

இந்த தான சாசனத்தை வழங்கியவர் குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி ஆவார். அவரது பொதுப்பெயரில் அளிக்கப் பட்டுள்ள இந்தச் செப்பேட்டில், அறுபத்தியெட்டு சிறப்புப் பெயர்கள் அவரது விருதாவளியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ''இராமநாதசுவாமி, சுப்பிரமணிய சுவாமி பாதார விந்தன்'' என்ற விருது மட்டும் புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

சைவ சமயத்தின் சிறப்பான பீடமாக விளங்கிய சோழ நாட்டு திருவாவடுதுறை மடத்தின் பால் சேதுபதிகள் அனை வரும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இந்த மடத்தின் பராமரிப்பில் உள்ள திருப்பெருந்துறை ஆவுடையார் திருக் கோயிலுக்கும் மடத்திற்கும் பல ஊர்களைச் சர்வமானியமாக வழங்கியுள்ளனர். அவைகளைத் தொடர்ந்து இந்த மன்னர், ஏற்கனவே பொசுக்குடியினை மடப்புரமாக வழங்கியிருந்தும் அந்தத் திருமடத்தின் மயேச்சுரர் பூசைக்காக திருப்பாக்கோட்டை என்ற ஊரினைத் தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊர் இன்றைய தேவகோட்டை

வட்டத்தில் அமைந்துள்ளது. முன்னர் ''ஏழூர் நாட்டு ஓரூர் வட்டகையில்'' இருந்ததாக செப்பேடு வரிகள் 31,32 தெரிவிக்கின்றன. மேலும் இந்த மயேச்சுர பூஜைக்காக சேதுநாடு முழுவதும் மகமை ஒன்றினை மன்னர் ஏற்படுத்தியதையும் இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

சேதுபதிச் சீமையின் எட்டு மாகாணங்களிலும் உள்ள சுங்கத்துறையில் பொதி ஒன்றுக்கு மாகாணிப்பணமும் பெரிய ஊர்களில் அரைமாகாணிப் பணமும், சந்தைப் பேட்டையிலும் இதர இடங்களிலும் கடையொன்றுக்கு மாதம் அரைக்கால் பணமும், துறைமுகத்தில் நெல் கண்டி ஒன்றுக்கு மூன்று மாகாணிப்பணமும், ஏனைய பகுதிகளில் அரை மாகாணியும், தீர்வை விதிக்கப்பட்ட ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்கு பொதி ஒன்னுக்கு அரை மாகாணிப்பணமும், உப்பளத்தில் பொதி ஒன்னுக்கு அரைக்கால் பணமும், பிற இடங்களில் அரை மாகாணிப் பணமும், பட்டறையில் நூறு பொன்னுக்கு கால் பணமும், மகமை ஏற்படுத்தப்பட்டது. தானியங்களைப் பொறுத்த வரையில் பண்ணைக்கிராமம், சீவிதக்கிராமம், கோயில் கிராமம், பிரமதாயக் கிராமம் ஆகியவைகளில் விளைஞ்ச நிலத்துக்கு, ஒரு மாவிற்கு குறுணி நெல்லும் புஞ்சைத் தட்டிற்கு மூன்றுபடி தவசமும் மகமையாகப் பெற்றுக் கொள்ள பண்டார சன்னதிக்கு இந்தச் செப்பேட்டில் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் பணம் எத்தகைய நாணயம் என்பதற்கு குறிப்பு எதுவும் இல்லை. ஐம்பத்து மூன்று வரிகளைக் கொண்ட இந்தச் செப்பேட்டில் தலைப்பில் ஆவுடையார் கோவிலுக்கு இயல்பான வரை கோட்டுச் சித்திரம் காணப்படவில்லை.

## செப்பேடு எண். 51

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1656 இதற்கு மேல்ச் செல்லாநி
2. ன்ற ஆனந்த ஷூ நாமசம்வச்சரத்து தக்ஷிணாயண கூசமாரி துவரகிய கார்த்திகை
3. மீ கூ அமாபட்சமு த்ரயோதசியும் சோமவாரமு ஸ்வாதி நட்செத்திரமும் மிதுன
4. லெக்கினமும் சுபயோக சுபகரணமும் பெற்ற புண்ணிய காலங் கூடின சுபதி
5. னத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டேலசுவரன் அரிய ராய தளவிபாடன் பாஷெக்கு
6. தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொ
7. டாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோழ மண் டலப் பிரதிஷ்டாபனா
8. சாரியன் தொண்ட மண்டல சண்டப் பிரகண்டன் பூறுவ தெட்சண
9. பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி ஈழமுங் கொங்கு யாட்பாணமும் மெம்ம
10. மண்டலமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச பரமேசுரன் ராசமா

---

‡ ARE A. 35/1947

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்.

அமைப்பு : 27.5செ.மீ. × 23செ.மீ.

11. ர்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் மன்னர்க்கு மன்னன் துட்டர்க்கு துட்டன்
12. துட்ட நெட்டூரன் அட்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி நாறா
13. யணன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந் தவிள்ந் தான் ஒட்டியர்தள
14. விபாடன் ஒட்டியர் மோகம் தவிள்ந்தான் மலை கலங்கி னும் மனங் கலங்காதான் ந
15. ரலோக கண்டன் குடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் அறிவுக்ககஸ்தியன் வி
16. ல்லுக்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வாளுக்கு வீமன் தாலிக்கு வேலி சமர
17. கோலாகலன் அன்னசத்திர சோமன் அந்தம்பிற கண்டன் அடியார் வேளைக் கா
18. ரன் அடைக்கலங் காத்தவன் இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்
19. கம் ஆற்றுப்பாச்சி கடலிற்பாச்சி துட்ட நிக்கிரக சிஸ்ட பரிபாலன் மனுநீதி
20. சோழன் மன்மத சொரூபன் தொண்டியந் துறை காவலன் வீரதண்டை சே
21. மத்தலை விளங்குமிருதாளினான் இவுளி பாவடி மிதித் தேறுவார் கண்டன் கரு
22. ணாகடாட்சன் ருத்திராட்ச மாலிகாபரணன் சிவபூசா துரந்தரன் சொரிமுத்து வன்னிய
23. ன் குன்றனைய மேருவிற் குன்றாவளை குணில் பொரித்த தனுக்கோடி காவலன்
24. ராமனாதசுவாமி சுப்பிரமணிபசுவாமி பர்தாரவிந்த சேகரன் வீரலெட்சுமிகாந்
25. தன் விசையலெட்சுமி சம்பன்னன் காமினி கந்த ப்டன் கலைதெரியும் விர்ப்பன்னன்
26. மேவலர் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் சங்கீத சாயித்திய வி

27. த்தியா வினோதன் பரதநாடகப் பிரவீணன் செம்பி நாடுடையோன் தேவை நகராதி

28. பன் வைகை வளநாடன் காவிக்குடையான் அனுமகேத னன் பஞ்சவண்ண

29. ராவுத்தன் பனுக்குவார் கண்டன் அஞ்சாத வனராமன் சேதுமூலாரட்சா துரந்தரன்

30. அசுபதி, கெசபதி, நரபதி, சேதுபதி, பிருதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளா

31. நின்ற துகவூர்க் கூத்தத்திற் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரை

32. யாத கண்டனிலிருக்கும் ராசஸ்ரீ தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி

33. பன் ராஜஸ்ரீ இரணியகற்பயாஜி ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி இரண்

34. ணிய கெர்பயாஜி குமார முத்து விசைய ரெகுனாத சேது பதி காத்த தேவரவர்கள்

35. பளனிமலை வேலாயுதசுவாமியர்க்கு பூதான தாம்பிர சாசன பட்டையங்

36. கொடுத்த பரிசாவது பளனிமலை வேலாயுத சுவாமியார் சன்னதியில் விளா பூ

37. சை கட்டளைக்கு தைப்பூசம் எட்டாம் திருனாள் மண்டகப் படி சிறப்புக் கட்ட

38. ளை அபிஷேக நெய்வேதனம் திருமாலை, திருவிளக்கு, சந்தணம் முதலாகிய கைங்கரி

39. யம் நடப்பிவிச்சு வரச்சொல்லி கட்டளையிட்ட கிராமமா வது செம்பினாட்டில் வை

40. கை தீரத்தில் நமது செனனக்காணியான கொள்ளனூரும் செவ்விருக்கை நாட்டி

41. ல் நமது கொள் காணியான கெங்கை கொண்டானுக்கு எல்கையாவது நாகாச்சி

42. கண்மாய் உள்வாய் சுங்கம்புத்துக்கு மேற்குமென்னே நதிக் கும் கள்ளிக்கோட்

43. டைக்கும் சேது பாதைக்கும் வடக்கு மெய்யாநேந்தல் புளிக்கு கிழக்கு வல

44. சைக்கும் பாண்டியூரு எல்கைக்கும் தெற்கும் இந்த பெரு னாள் கெல்கைக்குள்ப்பட்ட

45. கொள்ளனூர் கெங்கை கொண்டா னிரண்டு கிராமத்துட னே கூடிய ஏந்தல் புரவ

46. டை நஞ்சை, புஞ்சை மாவடைதிட்டு, திடல் நிதி நிஷே பம் ஜல

47. தருபாவிய மென்று சொல்லப்பட்ட சகல சமுதாய பலப்பி ராப்தியும் அம்பலம் உம்பலம்

48. காவலுழவும் இடை குடி யுள்ளடிமையும் பள்வரி, பலவரி கீதாரவரி, ஊழியம்

49. கெங்கை கொண்டான் வாணியக்குடி செக்குவரி அயம் தீருவை ஊழிய பாளயமும்

50. சறுவமானியமாக கட்டளையிட்டோம் பளமலை பண்டாரத் தின் குமாரர் முத்துக்குமார

51. சுவாமி ஓதுவார் இந்த தர்மம் பரிபாலனம் பண்ணி கொள்வாராகவும் இந்தபடி

52. க்கு புத்திரபவுத்திர பரம்பரை புல்லும் பூமியும் கல்லுங் காவேரியும் ஆதிசந்

53. திராதித்த வரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இ

54. ந்த தர்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கோடி

55. சிவலிங்கப் பிரதிஷ்டையும் கோடி பிரம பிரதிதிஷ்டயும் கோடி கன்னி

56. காதானம் பண்ணின சுகுர்தததை அடைவாராகவும் இந்த தர்மத்துக்கு அகிதம் ப

57. ண்ணின பேர் கங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் மாதா பிதாவையும்

58. காராம் பசுவையும் தேவப் பிறாமணனையும் வதை பண்ணின தோஷத்திலே போக க

59. டவராகவும் ஸ்வ தத்தாத் த்விக்குணம் புண்யம் பரதத்தாநு பாலனம் பரதத்தா

60. பஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவே த் ஹ ஸ்வதத்தாம் பரதத்தம் பாலோ ஹ ரேத் வ

61. ஸந்தரம் ஷாஸ்தி வர்ஷ ஸஹஸ்ரணி விஷ்தயம் ஜெயயே கிர்மி பழனிமலை வே

62. லாயுதசுவாமியார் துணை.

## செப்பேடு எண் 51

*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் : குமாரமுத்து விசயரெகுநாத காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : பழனிமலை ஸ்ரீவேலாயுதசுவாமி திருக்கோயில்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1656 ஆனந்த வருடம் கார்த்திகை மீ" (கி. பி. 11—12—1734)
4. செப்பேட்டின் பொருள் : பழனிமலை வேலாயுதசுவாமி சன்னதி விளாபூசை மற்றும் தைபூசம் 8ந் திருநாள் விழாவிற்கு நிலதானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது எழுபத்து ஐந்து சிறப்புப் பெயர்கள் விருதாவளியாக இங்கு இடம் பெற்றுள்ளன. இவைகளில் நரலோககண்டன் (வரி 15) மன்மத சொரூபன் (வரி 20) *ருத்ராட்ச மாலிகாபரணன்* (வரி 22) இராமநாதசுவாமி சுப்பிரமணிய சுவாமி பாதாரவிந்த சேகரன் (வரி 24) *அஞசாதவனராமன்* (வரி 29) என்ற ஐந்து சிறப்புப் பெயர்கள் இந்தச்செப்பேட்டில் புதுமையாகக் காணப்படுகின்றன.

பழனி ஸ்ரீவேலாயுதசுவாமி சன்னதியில் தைமாதந்தோறும் நடைபெறும் விளா பூஜைக்கும் தைப்பூசம் 8ந் திருநாள் மண்டகப் படி சிறப்புக் கட்டளை அபிஷேகம் நெய்வேத்தியம் திருமாலை திருவிளக்கு, சந்தனம், முதலிய கைங்கரியங்களுக்கு பயன்படுவ தற்காக இராமநாதபுரம் சீமையில் உள்ள **கொல்லனூர், கங்கை கொண்டான்,** என்ற இரண்டு ஊர்களை தானமாக வழங்கப்பட்

ள்ளதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது கொல்லனூர் செம்பி நாட்டிலும், கங்கைகொண்டான் செவ்விருக்கை நாட்டிலும் அமைந்துள்ளதாக வரையப்பட்டுள்ளது. கொல்லனூரை ''சென்னக்காணி'' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்த மன்னர் அந்த ஊரில் பிறந்தவர் என்பது புலனாகின்றது. கி.பி. 1170ல் வாரிசுரிமைக்காக பாண்டிய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் பூசலில் தலையிட்ட இலங்கைப் படைகள் நிலை கொண்டிருந்ததும், கி.பி14ம் நூற்றாண்டில் இலங்கை மீது வெற்றிப்படை நடத்திய ''ஆரிய சக்கரவர்த்தி'' என்ற பெருமகன் பிறந்ததும் இந்தச் செவ்விருக்கை நாடு என்பதை வரலாறு விளம்புகிறது.

மேலும் இந்தக் கங்கை கொண்டான் என்ற சிற்றூர், தொடக்கத்தில் சோழ மன்னர்களது சாமந்தர்களான சேதிபதிகள் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சி முடிவுற்ற பொழுது தெற்கே வந்து மறவர் சீமையில் நிலைத்து நிறுவியது. கங்கை கொண்ட இராசேந்திர சோழனது நினைவாக இந்தப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட இரண்டு ஊர்களில் இதுவும் ஒன்று. மற்றொன்று கிடாரம் கொண்டான் என்பது. இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் இருப்பது இன்னும் இந்த செப்பேடு வேறு சில செய்திகளைத் தெரிவிக்கிறது. அதாவது இராமேசுவரத்தை, நமது நாட்டின் பிற பகுதிகளுடன் இணைந்த அன்றைய பயணிகளின் பாதை, மதுரை, மானாமதுரை வழியாக வைகை நதியின் தென்கரை ஒட்டி கிழக்கே இராமநாதபுரம் கோட்டைக்கு வடபகுதியில் சென்று இராமநாதபுரம் லக்ஷிமிபுரத்தின் வடக்கே சேது நாடு வழியாக இராமேசுவரம், சென்று சேது பாதையுடன் இணைந்தது என்பதை ''சேதுபாதைக்கும் வடக்கு'' (வரி 43) என்பதிலிருந்து ஊகிக்க முடிகிறது. 'மெய்யான் ஏந்தல்' புளிக்கு என்ற தொடர் இந்தப்பகுதி முன்னர் சமண சமயத்தின் பிடிப்பில் இருந்ததை நினைவுபடுத்துகின்றது. மெய்யானேந்தல் பள்ளி என்பது ''மெய்யானேந்தல் புளி'' என்று மருவியுள்ளது. இராமேசுவரம் நகர எல்லைக்குச் சற்று முன்னர் உள்ள பகுதி ''மெய்யாம்புளி'' என்பதாகும். மெய்யான் பள்ளியே இங்கும் ''மெய்யாம் புளியாக'' மருவியிருப்பது ஒப்புநோக்கத்தக்கது மெய்யான் அருகதேவனை குறிப்பிடும் சொல்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேதுபதிகளது சீமை வரிப்பாடுகள் எவையென்பதையும் இந்தச்செப்பேடு புலப் படுத்துகிறது. விளைநிலங்களில் இருந்து பெறுகின்ற நஞ்செய் புன்செய் தீர்வைகளைத் தவிர பள்வரி, பலவரி கீதாரவரி, வாணியக்குடி, செக்குவரி, ஆயம், தீர்வை ஆகியவையுடன் உம்பலம், ஊழியம் உள்ளடிமை என்ற மரபு வழி கட்டாயப் பணிகளும் கிராமங்களில் அன்று இருந்து வந்த நிலையினையும் இந்தச் செப்பேடு குறிப்பிடத்தவறவில்லை. உள்ளடிமை என்பதை கொத்தடிமையாகக் கொள்ளலாம். பழனிமலை வேலாயுத சுவாமி யார் துணை என்று முடிவுறும் இந்தச் செப்பேடு அறுபத்து இரண்டு வரிகளைக் கொண்டுள்ளது.

## செப்பேடு எண் 52

(நகல்)

1, ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1656 இதன்மேல் செல்லா நின்ற ஆன

2. ந்த வருஷம் தை மாதம் 1ந்தேதி பௌர்ணமையும் சோம வரரமும் பூச நட்சத்திரம் சௌமியநா

3. ரமயோகமும் பாலவாகணமும் கூடின புண்ணிய காலத் தில் தேவை நகரா

4. திபன் சேதுமூலரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூஜா து

5. ரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ கெஜசிங்கம் இரவி குல சேகரன் இரவிமார்த்

6. தாண்டன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மகாமண் டலே சுர

7. ன் அரியராய தளவிபாடணன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராய க

8. ண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டல

9. தாபனாச்சாரியான் சோழ மண்டல பிரதிஷ்டாபனாச் சாரியன் தொண்டைம

10. ண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப் பாண பட்டணமும் கெ

11. சவேட்டை கண்டருளிய ராஜாதி ராஜன் ராஜபரமேசுரன் ராஜமார்த்

---

* கள ஆய்வில் நூலாசிரியரால் புதுமடம் கிராமத்தில் கண்டு பிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

12. தாண்டன் ராஜ கம்பீரன் இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்
13. கம் துரைராயன் ஆற்றில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப் புலி அடைக்கலங்காத்
14. தான் தாலிக்கு வேலி சத்துருவாதியள் மிண்டன் வேதியர் காவலன் அரசராவ
15. ணராமன் அடியார் வேளைக்காரன் பாதாள விபாடன் உரிகோல் சுரதானன்
16. அந்தம்பர கண்டன் சாடிக்காரர் கண்டன் சுவாமி துரோகியள் மிண்டன்
17. பஞ்சவர்ணராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கி வை
18. யாளி நாராயணன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் ஆரிய மானங் க
19. ரத்தான் தொண்டியந்துறைக் காவலன் துரகரேபந்தன் அனுமகேதனன் கொ
20. டைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விஜயன் பரதநாடகப்
21. பிரவீணன் கருணா கடாட்சன் குன்றியனூர் மேருவில் குணில் பெ
22. ரரித்தவன் திலதநுதல் மடமாதர் மடலெழுதவரு சுமுகன் கருட கேதனன்
23. காவிக்கொடையான் விசையலட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பனன்
24. காமினி கந்தர்ப்பன் அட்டதிக்கு மனோபயங்கரன் துஷ்ட நிக்கிரக சிட்டபரி
25. பாலன் சங்கீத சாகித்ய வித்யா விநோதன் வீரதண்டை சேமத்தலை விள
26. ங்கிய தாளினான் சகல சாம்பிராச்சிய லெட்சுமி நிவாசன் சேது காவல
27. ன் வங்கிஷாதிபனான துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ

28. நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ இரண்ய கெர்ப்ப யா

29. ஜி ரெகுநாதசேதுபதி காத்த தேவர் அவர்கள் மருமகன் கெங்கை கொண்டனி

30. லிருக்கும் கட்டையத்தேவர் புத்திரன் ஸ்ரீகுமாரமுத்து விசையரெகுநாத சேது

31. பதிகாத்ததேவர் அவர்கள் இராமநாதபுரத்திலிருக்கும் ஈசா பள்ளி வாசல்

32. அன்னதான தன்மத்துக்கு சர்தார்வேசலி குமாரன் சார்மூஸா பாப்ஷா

33. பாரிசமாக கட்டளையிட்ட கிழவனேரிக்கு எல்கையாவது கருக்கத்திக் கண்

34. மாய்க் கடைக் கொம்புக்கு வடக்கு மாணிக்கனேரி பொருத் துக்கு கிழ

35. க்கு மேற்படி யேந்தல் தென்கரைக்குத் தெற்கு ஆதி நாராயணன் மடைசிவந்தி

36. யப்பன் பொட்டல் செய்க்கு மேற்கு இன்னான்கு எல் கைக்குட்பட்ட கிழ

37. வனேரி நஞ்சை புஞ்சை மாவிடை மரவிடை, திட்டு திடல் ஏந்தல் பிறவிடை

38. குடி, படை, பள்ளு, பறை, கீழ் நோக்கிய கிணறு, மேல் நோக்கிய மரம்,

39. அஷ்டபோக தேஜ சுவாமியங்களும் இவை பரியது சர்வ மானிபம் தாம்

40. பிரசாசனம் கட்டளையிட்ட படியினாலே ஆதி சந்திராதித்த வரை புத்திர

41. பௌத்திர பரம்பரைக்கும் அன்னதானத்துக்கும் ஆண்டனு பவித்துக் கொள்

42. ளுவாராகவும் இந்த தன்மத்திற்கு தமிழனாலும் நாலு வருணத்திலே உள்

43. ள பேரும் இசுலாமானவர்களும் பரிபாலனம் பண்ணின பேர்களும் கெ

44. ங்கைக்கரையிலேயும் சேதுவிலேயும் மக்க மதினத்திலேயும் புண்

45. ணிய தலங்களிலேயும் அன்னதானம் சொன்னதானம் வெகுகுடும்ப பிர

46. திட்டையள் பண்ணின பலத்தை அடைவாராகவும் இந்த தன்மத்துக்கு

47. அகிதம் பண்ணினபேர்கள் புண்ணியத்தலங்களிலே மாதா பிதாவை

48. வதைத்த தோஷத்திலே போகக்கடவாராகவும்.

## செப்பேடு எண். 52

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதிகாத்த தேவர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமநாதபுரம் நகர் ஈசா பள்ளிவாசல் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1656 ஆனந்த வருடம் தைமீ 1ந்தேதி (கி.பி. 14-1-1734) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | பள்ளிவாசல் அன்னதானக் கட்டளைக்கு நிலக்கொடை |

இந்தக் கொடையினை வழங்கிய குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி அவர்களது விருதாவளியாக அறுபத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் காணப்படுகின்றன. ''அந்தம்பரக் கண்டன்'' (வரி 16) என்ற ஒரே ஒரு விருது மட்டும் இங்கு புதுமையாகப் புகுத்தப்பட்டுள்ளது. ஏனையவை இவரது முந்தையோரும் இந்த மன்னரும் தங்களது முந்தையப் பட்டயங்களில் பயன்படுத்தியுள்ளவை.

இந்த அறக்கொடையைப் பெற்ற ஈசா பள்ளிவாசல் என்ற அமைப்பு இராமநாதபுரம் கோட்டை என வழங்கப்படுகின்ற இராமநாதபுரம் நகராட்சிப் பகுதி பெரிய கடைத் தெருவின் வடக்குப் பகுதியில் உள்ளது ஆகும். ஈசா சாஹிபு என்ற இறையருட் செல்வர் பள்ளிவாசலை ஒட்டி அடக்கம் பெற்றுள்ளார். இந்தப் புனித இடத்திற்கு வருகை தருகின்ற ஆன்மிக பெருமக்களுக்கு அன்னம் வழங்குவதற்காக இந்தச் சேதுபதி மன்னர் கிழவனேரி என்ற ஊரினை அறக்கொடையாக ஆணை இட்டபட்டயம் இது.

கி.பி. 1182ல் அரபு நாட்டில் (மதினா நகரில்) இருந்து சமயப் பணிக்காக பலநூறு தொண்டர்களுடன் செய்யது இப்ராஹிம் என்ற புனிதர் தமிழகம் வந்தார். கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் அவரது சமயப்பணியை தடுத்த விக்கிரம பாண்டியனை வென்று தியாகியாகிய இந்தப்புனிதர் ஏர்வாடியில் அடக்கம் பெற்றுள்ளார். அவருடன் வந்த தொண்டர்களில் ஒருவர் இந்த ஈசா சாஹிப் என்ற உத்தமர் எனக் கூறப்படுகிறது. அடக்க விடத்தை நாடி வருகின்ற ஞானச் செல்வர்களுக்கு உணவு வழங்கு வதற்காக இந்த அறக்கொடையை மன்னர் வழங்கியுள்ளார்.

சமயக் காழ்ப்பு இல்லாமல் சமரச சன்மார்க்க நிலையில் அனைத்து மக்களையும் சேதுமன்னர்கள் ஆதரித்து வந்துள்ளனர். இந்த மன்னரது முந்தையோர்களும் குறிப்பாக திருமலைரெகு நாத சேதுபதி, கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி ஆகியோர் ஆட்சிக் காலத்தில் மறவர் சீமையின் குடிகளாகிய முஸ்லீம்கள் இத்தகைய அரசியல் ஊக்குவிப்புகளைப் பெற்றதை வரலாறு விளம்புகின்றது.

இந்தக் கொடை சம்பந்தப்பட்ட கிழவனேரி கிராமம், இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளது. முதுகுளத்தூருக்கு கிழக்கே பத்துக்கல் தொலைவில் திருஉத்திரகோசமங்கை சாலைக்கு சற்று வடக்கே உள்ள சிற்றூர் ஆகும். இந்தச் செப்பேட்டில் அந்தக் கிராமத்தின் நான்கு எல் கைகளும் குறிப்பிடப் பெற்றுள்ளன. இதில்''கருக்கத்தி கண்மாய் கடைக் கொம்புக்கு'' ''மாணிக்கனேரி, பொருத்துக்கு ''(வரிகள் 34, 35) என்ற தொடர்களில் இந்த வட்டார வழக்குகளான கடைக்கொம்பு, பொருத்து என்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் இந்தக் கிராமத்தின் ''நஞ்செய், புன்செய், திட்டு, திடல், மாவடை, மரவடை. குடி, படை, பள்ளு எல்லாம்'' இந்த அறக் கொடையில் கட்டுப்பட்டிருப்பதாக குறிக்கப்பட்டுள்ளது பொது வான வாசகமாகும், ''குடி'' என்பது வேளாண் குடிகளாகிய விவசாயிகளையும், ''படை'' என்பது அரசருக்கு அபாய காலங் களில் படைகள் பூணக்கூடிய வீரர்களையும், ''ஜீவிதம்'' உதிரப் பட்டி'' போன்ற மானியங்களை அனுபவித்து வருகின்ற வீரர் குடும்பத்தினரையும் ''பள்ளு'' என்பது விவசாயப் பணிகளைச் செய்கின்ற பள்ளர்களையும் குறிப்பது ஆகும்.

இந்தச் செப்பேட்டில் இன்னொரு புதிய செய்தியும் இடம் பெற்றுள்ளது. சேதுபதி மன்னர்கள் புகலூரிலும், இராமேஸ்வரத்திலும் இராமநாதபுரத்திலும் இருந்து ஆட்சி செய்ததாக வரலாற்று ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இந்தச் செப்பேட்டின் (வரி 29) படி கங்கை கொண்டான் என்ற ஊரிலும் சேதுபதிகள் இருந்து வந்தது தெரியவருகிறது. இந்தச் செப்பேட்டின் இறுதி வாசகமாக ''இந்த தர்மத்திற்கு தமிழனாக நான்கு வர்ணத்திலே உள்ளவர்கள், இஸ்லாமான பேர்களும்'' என்றும் கங்கைக்கரையிலேயும் சேதுவிலேயும் மக்கா, மதினாத்திலேயும் புண்ணிய தலங்களிலேயும் என்றும் வரையப்பட்டிருப்பது செப்பேடு வாசகத்தில் ஒரு புதுமையாகும் சேதுபதி மன்னர் எந்த அளவிற்கு இஸ்லாமியச் சிறுபான்மையினரை மதித்து வந்தார் என்பதை அவர் இந்த தானத்தை வழங்கியது அல்லாமல், அந்த ஆவணமும் அவர்களது சமயநெறிக்கு பொருத்தமாக இருக்கவேண்டும் என எண்ணி, மேலே கண்டவாறு இந்த ஆவணத்தை வரைந்து இருப்பதில் இருந்த தெரிந்து கொள்ள முடிகிறது.

# 10

# சிவகுமார முத்துவிஜய ரெகுநாதசேதுபதி

## (கி.பி. 1736 – 1748)

கி.பி. 1736ல் இராமநாதபுரம் அரியணை ஏறிய இந்த மன்னர் சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் இராமநாதபுரம் சீமையில் திறமையுடன் ஆட்சி செலுத்தி அமைதி காத்தார். தமது தந்தையைப் போன்றே தெய்வீகத் திருப்பணிகளிலே மிகவும் நாட்டம் கொண்டிருந்தார். சேது வழிப் பாதையில் பாம்பன், அக்காள் மடம், இராமேசுவரம் ஆகிய மூன்று ஊர் களிலும் அன்ன சத்திரங்களை நிறுவி சேதுயாத்திரை செல்லும் பயணிகளது சிந்தை நிறைவு பெறும் வகையில் உணவும் உறையுளும் வழங்க ஏற்பாடு செய்தார். மேலும் சேது பாதை யில் உப்பூரில் *சீதாராமய்யர்* என்பவர் ஏற்படுத்திய தர்மச் *சத்திரமும்* இராமேஸ்வரத்தில் இடைக்குல மக்கள் நிறுவிய *நந்த கோபாலச்சத்திரமும்*, பரமக்குடியில் நாகப்பன்செட்டி ஏற்படுத்திய அன்ன *சத்திரமும்* நொடித்த நிலையில், அவை களை மேற்கொண்டு அவைகளின் அன்னப்பணி தொடருமாறு செய்தார்.

இந்த மன்னர் சைவத்திலே அழுத்தமான பற்றுடைய வராக இருந்ததால், மக்கள் இதுவரை அன்புடன்''சைவத்துரை'' என்று அழைத்து வந்தனர். ஆனால் இவரது சைவப்பற்று

அவரது கொடையுள்ளத்திற்கு தடையாக இருந்தது இல்லை என்பதை அவரது செப்பேடுகள் சொல்லுகின்றன. இராமநாத புரம் சீமையின் சிறுபான்மையினரான முஸ்லீம் மக்கள் பெரிதும் போற்றி வந்த புனிதர்களது அடக்க இடங்களுக்கு இறை யிலியாக ஊர்களை வழங்கிய சாதனையில் தந்தையையும் முந்தியவராக இருந்தார். அமைதியாக ஆட்சிப் பணியில் ஈடு பட்டிருந்த இந்த மன்னர் கி.பி.1748ல் புகழுடம்பு பெற்றார்.

## செப்பேடு எண் 53

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாத்தம் 1658 இதின்மேல் செல்

2. லானின்ற நளநாம சம்வச்சரத்தில் உத்திராயணத்தில் ஏமந்த ருதுவில்

3. புஷ்ய மாசத்தில் கிட்டின பட்சத்து அம்மாவசியும் குரு வாசரமும் ஸ்ரீவண ந

4. ட்சத்திரமும் பிரும்மிய நாம யோகமும் கவூலகரணமும் கூடின சுயோக

5. சுபகரணமும் பெத்த தையி அம்மாவாசி புண்ணிய காலத்தி ல் ராமசேதுவி

6. ல் தேவ நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராம நாதசுவாமி பரு

7. வதவர்தனி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராச சேகரன் கண்

8. டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பாண்டிய மண்டல ஸ்தாபனாசா

9. ரியன் ஈழமும் கொங்கும் யாட்பாணயன் பட்டணமும் எம் மண்டலமுங் கெ

10. காண்டு கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேஸ்வரன் ரா

11. ச மார்த்தாண்டன் ராசகுலதீபன் கொடைக்கு கர்ணன் வில்லுக்கு விசய

---

‡ ASSI. Vol. 4 pp. 95-97

12. ன் வீரரில் வீரன் வீரகஞ்சுகன் வேதியற் காவலன் வீர விக்கிர மபர்க்க
13. ன் மல்லுக்கு வீமன் பெருமைக்கு தரும புத்திரன் ஆக்கி னைக்கு சுக்கிரீபன் பிற
14. சங்கத்துக்கு ஆதிசேஷன் கருணைக்கு ரெகுராமன் சத்ய பாஷா அரிச்சந்திரன் ச
15. ங்கீத சாகித்திய வித்யா வினோதன் சத்துராதியள் மிண் டன் சகலகுண சம்ப
16. ன்னன் சருவ சீவ தயாபரன் தளங்கண்டு தத்தளிப்பார் மிண்டன் தந்தா
17. ரை தாரம் டரததாரர் சகோதரன் சகல சாம்பிராச்சிய லட்சுமி - நிவாசகன்
18. கருதலாகன் முடிஇடர்ருங்கவன் துரக நகுலன் காமினி கந்தப்பன் ஸகியா
19. — — — — — — — — — — — — — —
20. குணசீலன் இடறுவார் கோடாளி இரவிலாகலி கோவன் அரச ராவ
21. ணராமன் அடியாற் வேளைக்காரன் அடைக்கலங்காத்த வன் உரிகோல் சு
22. ரதாரணன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் மனுநீதி மன்ன
23. ன் மலை கலங்கினும் மனங் கலங்காதவன் செம்பி வள நாடன் திலத நுத
24. ல் மடலெழுதுஞ் சுமுகன் இயலிசை நாடக முத்தமில் லறிவாளன்
25. அனகன் அன்பாய் அதிவீரன் அகளங்கன் அதிசெயன் ஆம்பொருட் கடாட்
26. சன் புவனேக வீரன் மருவலர் கெசசிங்கம் விருதராச மன்றுளான் துட்ட
27. ர்கள் கொட்டமடக்கி பட்டமானங் காத்தவன் தாலிக்கு வேலி பரதள விபா

28. டன் பரமன்னர் ஸர்பகெருடன் பனுக்குவார் கண்டன் பரராச சேகரன் அ

29. அன்னதானசீலன் செகராசர் பணிபாதன் தெட்சண சிங்க சனாதிபதி துலா

30. புருசாதிட சோடச மஹாதான தீட்சா துரந்தரன் பாரத்து வாச கோத்திரத்தில் ஸ்ரீ இரணி

31. ய கர்ப்பயாசி ரகுநாத சேதுபதி அவர்கள் மருகனான ஸ்ரீமது குமார முத்து

32. விசய ரகுநாத சேதுபதி அவர்கள் புத்திரன் ஸ்ரீமது முத்துக் குமார விசய

33. ரகுநாத சேதுபதி அவர்கள் காசிப கோத்திரத்தில் ஆசி விலாயன சூத்திரத்தில்

34. ரிகு சாஹாந்தியா பகரான கலாநிதி கோனய்யன் அவர் கள் புத்திரன் ராமந

### *இரண்டாம் பக்கம்*

35. ய்யனவர்களுக்கு சகிரண்ணியோதக தாராபூர்வமாக செவ்விரு

36. க்கை நாட்டில் முதலூருக்கு பிரதி நாமமான கோவிந்த ராச சமுத்திரத்துக்கு நா

37. ங்கு எல்கை கீள் எல்கையாவது குளத்தூர் கண்மாயி தென்

38. கடைக்கொம்பு மறுகால் தலைக்கும் உடையா தேவன் பனங்கூடலுக்கு

39. மேற்கு இதின் தெற்கு வெண்ணகுடி கண்மாமி உள் வாயில் தென்கடை

40. கொம்பு ஊரணி கீள்கரைக்கி மேற்க்கு இதின் தெற்கு அரியா குடியிரு

41. ப்புக்கு மேற்க்கு காருக்குடி கண்மாயி உள்வாயில் குசவன் திடலுக்கு மே

42. ற்கு குடிமகன் புஞ்சைக்கு வடக்கு வயிறுனேந்தல் எல்கைக்கு மரமு

43. தெற்கு எல்கை கரதேவர் புஞ்சைக்கு வடக்கு இதின் ஆத்துக்கு மேற்க்கு வயிறுனேந்தல் பண்ணை
44. க் காரன் புஞ்சை வயலுக்கு வடக்கு இதின் மேற்கு வயிறு னேந்தல் க
45. ண்மாயி வடகலுங்குக்கு வடக்கு இதன் மேற்கு வயறு னேந்தல் புதுகண்மாயி
46. உள்வாயில் வகுத்து காலுக்கு வடக்கு நெஞ்சியேந்தல் எல்கைக்கும் வட
47. க்கு ராக்கப்பிள்ளையார் கோவிலுக்கு கிளக்கு முட்டத்திட னேந்தல் சின்ன திடலுக்கு கிளக்கு இதின்
48. வடக்கு நொச்சியடி இறக்கத்துக்கு கிளக்கு வயிகை ஆத் துக்கு வடக்கு மேற்கு எல்கையா
49. வது நயினாமணியக்காரன் காலுக்கு வடக்கு நின்று தில் லாப் பிள்ளை ஊரணி மேல்கரை புளி
50. யமரத்துக்கு கிளக்கு முத்திருளப்ப பிள்ளை ஊரணி கீள் கரைக்கு கிளக்கு வடக்கு ஓடிய எல்கை
51. கொளத்தூர் காலுக்கு வடக்கு தேதாங்கால்காலுக்கு நாகாச்சி எல்கைக்கி கிளக்கு இ
52. தின் கிளக்கு ஓடிய எல்கை தேத்தாங்கல எல்கைக்கு மே ற்கு மறு தொண்டி இறக்கத்தில்
53. நின்று தெற்கு ஓடிய கொளத்தூர் கிழக்கு நல்ல முத்தை யன் பட்ட
54. விருத்தி புஞ்சை கீள் பொளியில் நின்று மேற்கு இதின் தெற்கு தொரைராயன் ஏந்த
55. ல் கண்மாயி உள்வாயில் அளகுபிள்ளை சாலுக்கு மேற்கு இதின் தெற்கு மேப்படி கண்ம்
56. மாயிட தென்மூலை கரையில் நின்று காவனூர் சுாலுக்கு மேற்கு இதின் கிளக்கு காவனூர்
57. காலுக்கு வடக்கு பனையூர் பாதைக்கு கிளக்கு இதின் வடக்கு கொளத்தூர் வகுத்துகா
58. லுக்கு தெற்கு இந்த நான்கு எல்லைக்கி உட்பட்ட நஞ் சை புஞ்சை நத்தம் செய்

59. தலை திட்டுத்திடல் பாசிபடுகை மாவிடை, மரவிடை மேல்நோக்கிய மரம் கீ

60. ள்நோக்கிய கிணறு நிதி நிஷேப ஜெலதரு பாஷண சித்த சு

61. வாத்திய மென்றுசொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ சுவா மியங்களும் மற்றும்

62. எப்பேர்ப்பட்ட சகலசமுதாய ப்ராதிகளும் தானாதி வினிய விக்கிரயங்களுக்கு யோக்கியம

63. ாக நமக்கு தனுக்கோடிக் கரையில் தைஇ அமாவாசி புண்ணிய காலத்தில் சகி இர

64. ண்ணியோதக தானபூர்வமாக சருவமானியாக தானம் பண்னிக் குடுத்த

65. படியினாலே ஆசந்திராக்கமாக சந்ததி பிரவேசமே ஆண்டு அனுபவித்துக் கொ

66. ள்வாராகவும் பாட்டு பள்ளு சோலை உடையானும் சாத்தகு

67. டும்பனும் தண்டும் பூலிக்குடும்பனும் காத்தா குடும்பனும் உள்பட்ட பிரசையலும்

68. மற்றும் உண்டாகிய குடிபடையும் சர்வமானியமாக அனு பவித்துக் கொள்

69. வாராகவும்

70. — — — — — — — — — — — — இந்த தருமத்தை யாதாமொ

71. ருத்தன் பரிபாலனம் பண்ணிவவர்கள் சேதுவிலேயும் காசி யிலேயும் கோட

## செப்பேடு எண். 53

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : சிவகுமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : கலாநிதி கோனய்யன் புத்திரன் ராமய்யன்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1658 நல ஆண்டு தை அமாவாசை புண்ணிய நாள் (கி.பி19-1-1737)
4. செப்பேட்டின் பொருள் : இராமனய்யனுக்கு முதலூர் கிராமம் தானம்

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக ஐம்பத்திரண்டு சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஆக்கினைக்கு சுக்கிரீவன், பிரசங்கத்திற்கு ஆதிசேஷன், சர்வ சீவதயாபரன், கருணாகரன் முடி இடன் கவன் துரகநகுலன் இயல் இசைநாடக முத்தமிழ் அறிவாளன், அனபாய அதிவீரன், அதிஜெயன், அரும்பொருள் கடாட்சன் விர தரச மன்றுலான், அன்னதான சீலன் ஜெகராஜபணிபாலன் என்ற பன்னிரெண்டு பெயர்கள் மட்டும் புதுமையாக இந்தச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

கலாநிதி கோனய்யன் மகன் ராமனய்யன் என்பவருக்கு கோவிந்தராஜ சமுத்திரம் என்ற முதலூர் கிராமம் இந்தச் செப்பேட்டின் படி சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ளது. தானம் பெற்றவரின் பெயரில் ''ரிக் சகாந்தியக்ர்'' கலாநிதி என்ற சிறப்புத் தொடர்கள் குறிக்கப்பட்டதில் இருந்து இவர் ஒரு வடமொழி வித்தகர் என்பது தெரிகிறது. இந்த ஊர் இன்றைய இராமநாத

புரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் அமைந்து உள்ளது. முந்தைய நிலக்கூறான செவ்விருக்கை நாட்டில் அமைந்திருப் பதாக செப்பேட்டில் காணப்படுகிறது. அந்த ஊருக்கான நான்கு எல்லைகள் மிகவும் துலக்கமாக தரப்பட்டுள்ளன. இதில் சொல்லப் படுகின்ற வயறுனேந்தல் (வரிகள் 43, 45) கிராமம் இன்று வயிரவனேந்தல் என்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஊரில் நாட்டு வைத்தியம், ஆசிரியப்பணி, ஆகிய பணிகளில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு முந்தைய மன்னர்கள் மானிபங்கள் வழங்கி யிருப்பதும் அவை இந்த ஊருக்கான எல்கை மாலில் முறையே குடிமகன் புஞ்சை நல்ல முத்தையன் பட்டவிருத்தி எனக் குறிப் பிட்டு இருப்பது ஆகும். அங்கு குயவர்கள் வாழ்ந்து வந்ததை குயவன் திடல் என்ற சொற்றொடர் குறிக்கின்றது. மற்றும் குளத் தூர் கண்மாய், வெண்ணெய்குடி கண்மாய், காருகுடி, கண்மாய், பழைய புதிய கண்மாய்கள் என ஐந்து கண்மாய்களும் அவைகளுக்கான வாய்க்கால்கள் குளத்தூர்கால், காவார்கால்னூ அழகுப்பிள்ளைகால், நயினா மணியக்காரன்கால், தேத்தாங்கால் கால், என்ற பெயரில் அமைந்து இருந்ததும் இந்தச் செப்பேட்டுச் செய்தியாக உள்ளன. இவை நொச்சியடியிறக்கம், மருந்தோண்டி யிறக்கம், ஆகியன அங்குள்ள முக்கியமான அடையாளங்களா கவும் காட்டப்பட்டுள்ளன. இந்த ஊரின் கண்மாய் கலுங்கை யும் இரண்டு மடைகளையும் கி.பி 1637ல் சடைக்கன் சேதுபதி மன்னர் அமைத்தாக அங்குள்ள கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலேகண்ட எல்கைமாலில் வகுத்துக்கால், கலுங்கு, திடல், இறக்கம், பாசி, படுகை, பொலியேந்தல் என்பன இந்த வட்டாரச் சொற்கள்.

## செப்பேடு எண். 54

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1659 மேல் செல்லா னின்ற
2. பிங்கல நாம சம்வச்ரத்தில் உத்திராயனத்தில் வசந்த ரிதுவில் வைகா
3. சி மாதத்தில் பூர்வபட்சத்தில் பஞ்சமியும் சுக்கிரவாரமும் பூசநட்சத்திர
4. மும் சித்தநாம யோகமும் ஸ்வால வாகனமும் கூடிய சுபதினத்தில் பதி
5. ஸ்ரீமன் மகா மண்டலேசுரன் அரியராயிரதள விபாடன் பாசைக்குத்தப்
6. புவாராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொ
7. ண்டநாடு கொடாதான் பாண்டிய மண்டலத் தாபானாச் சாரியன் சோ
8. ழ மண்டல ஸ்தாபானாச்சாரியான் தொண்ட மண்டல சண்டப்பிரசண்
9. டண் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண பட்டணமும் எம் மண்டலமும்
10. அளித்து கசவேட்டை கண்டருளிய ராஜாதிராஜன் ராஜ பரமேஸ்வரன்

---

† நூலாசிரியரால் கள ஆய்வின் பொழுது திருஉத்தர கோச மங்கையில் கண்டுபிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

11. ராஜ மார்த்தாண்டன், ராஜகுலத் திலகன், துட்டரில் துட்டன் கொ
12. ட்டமடக்கி வையாளி நாராயணன் இவுளி, பாவடி மிதித் தேறுவார் க
13. ண்டன் சாடிக்கார கண்டன் சாமித் துரோகியர் மிண்டன் ஆற்றில் பாய்ச்சி, கடலி
14. ல் பாய்ச்சி, மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்குவே
15. லி தளங்கண்டு தத்தளிப்பார் கண்டன் அரசராவண ராமன் அ
16. டியார் வேளைக்காரன் பாதாள விபாடண் பகை மன்னர் சரபகெரு
17. டன் உரிகோல் சுரதாணன் அந்தப்புர கண்டன் இளஞ் சிங்கம் தளஞ்சி
18. ங்கம் பகை மன்னர் சிங்கம், மதுரை மானங்காத்தான் வையை வளநா
19. டன் கொடைக்குக் கருணன், பரிக்கு நகுலன், வில்லுக்கு விசயன் மல்
20. லுக்கு வீமசேனன் சத்திய அரிச்சந்திரன் பொறுமைக்கு தர்மபுத்தி
21. ரன் செம்பிளவள நாடன் வீரத்தண்டை சேமத்தலை விளங்கு மிரு தாளினா
22. ன் அநுமகேதனன் கெருட கேதனன் மீன கேதனன் சிங்க கேதன
23. ன் செங்காவிக் குடைமேல் சல்லிவிருதும் உடைய தே
24. வன் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன், இராமநாத சுவா
25. யி காரிய துரந்தரன் துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்
26. துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக் கும் மகா
27. காராசராசஸ்ரீ இரண்ய கற்பயாசி ரெகுநாத சேதுபதி காத்த தேவர்

28. அவர்கள் மாத்ரு வர்க்கத்துக்கும் பிதுரு வர்க்கத்தும் புண் ணியமா
29. கவும் ஜீரண, போசன காலத்தில் திருவிளக்கு திருவேறின பாவ நி
30. பரணமாகவும் பூதானமாகக் கொடுத்த காக்கூர் வட்டகையி

இரண்டாம் பக்கம்

31. ல் கதையனேந்தல் நான் கெல்கைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை, மாவடை
32. மரவடை, திட்டு, திடல், நிதி, நிக்ஷேப ஜலதருபாசன க்ஷரதனா காத்து
33. சகல சமுதாயப் பிராப்தியும் கோதம கோத்திரத்தில் போதாயென சூத்திர
34. த்தில் இராமலிங்க நம்பியின் புத்திரன் மங்களேஸ்வர குருக்கள் கையி
35. ல் சகித்தாரபூர்வமாக ராசராசேஸ்வரி யம்மன் சன்
36. னதியில் தானம் பண்ணிக் கொடுத்தோம் அத்தப்படிக்கு சந்திராதித்தன் வ
37. ரை சந்ததிப் பிரவேசம் ஆண்டு அனுபவித்துக் கொள்ள கடவாரா
38. கவும் இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணின பேர் கோடி சிவலிங்க
39. பிரதிஷ்டையும் கோடி விரும்ம பிரதிஷ்டையும் கோடி கோதான பூ
40. தானம் பண்ணின பலனையடையக் கடவாராக, இந்த தர்மத்திற்கு விகா
41. தம் நினைத்தபேர் கெங்கைக் கரையிலே காராம் பசுவை யும் பிராமண
42. ரையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவாராகவும்

## செப்பேடு எண் 54

(விளக்கம்)

1. செப்பேட்டை வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : ராமலிங்க நம்பியின் புத்திரன் மங்களேசுவர குருக்கள்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1599 பிங்கல ஆண்டு வைகாசி மீ" (கி. பி. 23—5—1737)
4. செப்பேட்டின் பொருள் : கதையனேந்தல் என்ற கிராம தானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய ரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் ஐம்பத்து ஒரு சிறப்பு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்படுகின்றன.

இராமலிங்க நம்பி புத்திரன் மங்களேசுவரக்குருக்கள் என்பவருக்கு மன்னர் காக்கூர் வட்டகையில் உள்ள கதையனேந்தல் என்ற கிராமத்தை பூதானமாக வழங்கியதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊர் இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் முதுகுளத்தூருக்கு கிழக்கே திருஉத்தரகோசமங்கை சாலையில் எட்டுக்கல் தொலைவில் உள்ள காக்கூர் என்ற பெரு ஊரை அடுத்த சிற்றூராகும். இந்த சிற்றூரை மன்னர் தமது இராமநாதபுரம் அரண்மனை வளாகத்தில் உள்ள ராச ராஜேஸ்வரி அம்மன் கோயில் சன்னதியில், குருக்கள் கையில் தானம் பண்ணிக் கொடுத்தாகத் தெரிகிறது. குருக்களது ஊர் பெயர் செப்பேட்டில் குறிக்கவில்லையென்றாலும்,

இராமநாதபுரத்தையடுந்த திருஉத்தரகேசமங்கை இறைவனது பெயரைத் தமது பெயராகக் கொண்டு இருப்பதால், தானம் பெற்ற மங்களேசுவர குருக்கள் இராமநாதபுரத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் அல்லது திருஉத்தரகேசமங்கை கோயில் பூஜாகரராக இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. அவரது தந்தையின் பெயரில் உள்ள ''நம்பி'' என்ற விருதியில் இருந்து குருக்களது முன்னோர்கள் தஞ்சை வள நாட்டில் இருந்து சேதுநாட்டில் குடியேறிய வைணவர் வழியினர் என்பதையும் ஊகிக்க முடிகிறது. ஆனால் இந்த தானத்தை பெற்றவர் மங்களநாதசுவாமி பூசையை மேற்கொண்டுள்ள ஸ்மார்த்தர் என்பது தெளிவு. மற்ற செப்பேடுகளையும் விட இந்த செப்பேட்டில் ஒரு செய்தி மறைமுகமாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது அதாவது இந்த சேதுபதி மன்னர் ஒருநாள் இரவு உணவு உண்டு கொண்டு இருந்தார். அப்பொழுது மன்னரது உணவு அறையில் இருந்த விளக்கு திடீரென அணைந்தது; அந்தகாரம் சூழ்ந்து நின்றது. இந்த நிகழ்ச்சியை ஒரு அசாதாரண நிகழ்வாக மன்னர் கருதினார். இராமநாதபுரம் அரண்மனையில் முன்னர் எப்பொழுதும் நிகழ்ந்திராத செயல் அல்லவா? இதற்கு வேத விற்பன்னர்கள் வழங்கிய அறிவுரை பாவநிவாரணமாக புனிதச் செயல் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் என்பது. அதனால் இந்த பூதானத்தை மன்னர் மேற்கொண்டார் எனத் தெரிய வருகிறது. ''பாவநிவாரணமாகவும்''பூதானம்'' கொடுத்த என்ற தொடர் இதனைத் தெரிவிக்கின்றது. ''ஜீரண போஜன காலத்தில் திருவிளக்கு திருவேறின'' என்ற தொடர் முன்னால் குறிக்கப்பட்டுள்ள நிகழ்வினைத் தெரியப்படுத்துகிறது.

இவ்விதம் தங்களது பெற்றோர் மூதாதையரது பாவ நிவாரணத்திற்காக அந்தணர்களுக்கு தானம் வழங்குவது நமது நாட்டின் தொன்மையான மரபு. அதனை சேதுபதி மன்னர்களும் பின்பற்றியதில் புதுமை இல்லை. இந்த மன்னரது முன்னவரான திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் பெற்றோர்களுக்கு மட்டும் அல்லாமல், அவரால் மிகவும் போற்றிப்பணியப்பட்ட மதுரை திருமலை நாயக்க மன்னரது பாவ நிவாரணத்திற்கும் திருப்பெருந்துறை திருக்கோயிலில் தானம்வழங்கியதைப் பார்த்தோம் அல்லவா !

## செப்பேடு எண். 55

(நகல்)

1. சொஸ்திஶ்ரீ சாலிவாகன சகாத்தம் 1664 இதன் மே
2. ல்ச் செல்லா நின்ற துந்துபிநாம சம்வசசரம் உத்தராய ணத்தி
3. ல் வசந்த ரிதுவில் வைய்காசி மீ" அ உ பூறுவ பட்சத்து
4. சதுற்தெசியும் சுக்குரவாரமு விசாக நட்செத்திரமும் வரி
5. யாளி னாம யோகமும் வணி கரணமும் பெற்ற சுபதின
6. த்தில் தேவ நகராதிபன் சேதுமூலர க்ஷாதுரந்தரன் ரா
7. மனாதசுவாமி காரிய துரந்தரன் கண்டநாடு கொண்டு கொ
8. ண்ட நாடு கொடாதான் பாண்டிமண்டலந் தாபனசா
9. ரியன் சோள மண்டலப் பிறதிஷ்டபானாசாரியன் தொண்
10. டமண்டல சண்டப்பிறசண்டன் ஈளமுங் கொங்கு மி
11. யாட்பாண பட்டணமும் எம்மண்டல மளித்து கெசவே
12. ட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச பரமேசுபரன் ராச
13. மாத்தாண்டன் துட்டரில் துட்டன் துட்டர் கொட்டம
14. டக்கி தொட்டவர் மறவாதவன் அன்ன சத்திர சோமன் கு

---

* ARE. A. 42/1947

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அமைப்பு : 18.7. செ.மீ. × 15.5. செ.மீ.

15. டைக்கு கற்னன் பொறுமைக்கு தற்மர் பரிக்கு நகுலன் செ
16. ங்காவிக் குடையான் சேமத்தலை விளங்கிய தாளினான்
17. கெருடகேதனன் அனுமகேதனன் சிங்ககேதனன் மீன
18. கேதனன் துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்து
19. ங்கசோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்
20. கும் ஸ்ரீ இரணிய கெற்பயாசியான முத்துரகுனாதச் சேது
21. பதிகாத்த தேவரவர்கள் புத்திரன் முத்துக் குமார விசைய
22. ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் மாத்ரு வர்க்கத்து
23. க்கும் பிதாவர்க்கத்துக்கும் புண்ணியமாக திருவுத்தரகோ
24. சமங்கை நயினார் மங்கைனாத சுவாமி சன்னதியில் சக
25. ஸ்ரலிங்க சுவாமிக்கு அபிஷேக நெய்வேத்தியம் திருமாலை
26. திருவிளக்கு நடக்கும்படிக்கு விட்டுக்குடுத்த கிறாமம் பாலே
27. யேந்தல் னாங்கெல்கை குத்துக் கல்லுக்குள் பட்ட ந
28. ஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத் திடல் நிதிநிட்
29. சேபமும் வாவி கூபமும் சொற்னாதாயும் சகலசமுதாயப் பிறா
30. த்தியும் வரி இவை உள்ளிட்ட உலுப்பையும் சறுவ மானிப மாக
31. க்குடுத்து சுவாமி மங்கைனாத சுவாமிக்கும் அம்மன்வாரே
32. று பூண் முலையம் மனுக்கும் சுக்குறவாறக் கட்டளைக்கு அ
33. ம்மனெளுந்தருளப் பண்ணுகிறதுக்கும் அம்மனுக்கு
34. திருநந்தா விளக்கும் குமாரதோப்பு நந்தவனத்துக்கும்
35. விட்டுக் குடுத்தது தேரிரு வேலியில் நம்முட காவல்க்
36. காணியாட்சியான வீசுகொண்ட தேவன் காவல் நஞ்
37. சைபத்தொன்பது மா நிலமும் புஞ்சைத் தட்டு ரெண்
38. டு அந்த ஊரிலே உண்டாகிய காவல் சுவந்திரம் சகல
39. மு நம்முட காவல்க்குடியான துலுக்கர் தறிக் கடமை
40. யும் அந்த ஊரிலே உண்டானாகிய காவல் சுவந்திரப் ப
41. ணமும் சகலமு சுவாமிக்கு சறுவமானிய மாகத் தாம்புர

42. சாதனங் கட்டளையிட்டோம் இந்தப்படிக்கு ஆதி சந்
43. திராதித்தவரை சந்திறப் பிறவேசம் ஆண்டனு பவி
44. த்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்தை யாதா
45. மொருவர் பரிபாலனம் பண்ணின பேர் கெங்கை
46. க்கரையிலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்டையும் கோ
47. டி விறும்மப் பிறதிஷ்டையும் கோடி அன்னசத்திரங்களும்
48. பண்ணி வைத்த பலனையடைவாராகவும் இந்த தற்மத்
49. துக்கு யாதாமொருவர் விகாதம் நினைத்தபேர் கெங்கைக்
50. கரையிலேயும் சேதுக்கரையிலேயும் மாதா பிதாவையும்
51. குருவையும் காராம் பசுவையும் பிராமணனையும் கொன்
52. ற தோஷத்திலே போகக் கடவாராகவும் உ ஸ்வதத்தா த்விகு
53. ணம் புண்யம் பரதத்தாந பாலநம் பரதத் தாப
54. ரேண ஸ்வதத்தம் நிஷ்லம் பவேத் உ இந்தப் படிக்கு எ
55. ளு தினேன் திருப்புல்லாணி யூர்பங்காரு பண்டாரம்
56. புத்திரன் முத்துப்பண்டாரம் கையெழுத்து உ சிவமயம்

## செப்பேடு எண் 55

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துக்குமார விஜயரகுநாத சேதுபதி காத்த தேவர்

2. செப்பேடு பெற்றவர் : திருவுத்தரகோசை மங்கை நயினார் மங்கைநாத சுவாமி ஆலயம்

3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1664 துந்துபி ஆண்டு வைகாசி மாதம் (கி.பி. 7-6-1742)

4. செப்பேட்டின் பொருள் : மேலே கண்ட கோயில் சகஸ்ர லிங்க சுவாமி அபிஷேக நைவேத்தியம் முதலியவைகளுக்கு கிராமம் நன்கொடை

இந்தச் செப்பேட்டை வழங்கிய சிவகுமார முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவரது விருதாவளியாக இருபத்து இரண்டு பெயர்கள் இத்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளில் ''தொட்டவரை மறவாதான்'' என்ற ஒரு புதிய சிறப்புப் பெயரைத் தவிர ஏனையவை முந்தைய மன்னர்களது செப்பேடுகளில் கண்டவையாகும்.

சிவத்தலங்களில் மிகவும் சிறப்பான திருவாதவூர் அடிகள் போன்றவர்களால் போற்றப்படும் திருஉத்தரகோசமங்கையின், இறைவர் மங்கைநாத சுவாமி சன்னதியில் சங்கரலிங்க சுவாமிக்கு அபிஷேகம், நைவேத்தியம். திருமாலை, திருவிளக்கு ஆகிய திருக்கைங்கரியங்கள் நடத்துவதற்காக பாலையாறு ஏந்தல் என்ற கிராமத்தை தர்மமாக விட்டுக்கொடுத்ததை இந்தச் செப்பேடு

தெரிவிக்கின்றது. இந்தச் செப்பேட்டில் இருந்து திருவுத்திர கோச மங்கை இறைவன் பெயர் மங்கைநாத சுவாமி என்றும் இறைவியின் பெயர் வாரேறுபூண்முலை அம்மன் என்றும் தெரிய வருகிறது. ஆனால் இப்பொழுது சுவாமியின் பெயர் மங்கள ஈஸ்வரர் என்றும் அம்மனின் பெயர் மங்கள ஈஸ்வரி என்றும் வழங்கப்பட்டு வருகிறது. திருவாசகத்தின் பகுதிகளான நீத்தல் விண்ணப்பத்தையும், திருப்பொன்னூசலையும் இந்த திருக்கோயி லில் தான், திருவாதவூரடிகள் இயற்றினார், இந்தப் பாடல் களில் ''உத்தரகோச மங்கைக்கு அரசே'' என்று விளித்து பாடு கிறார். இறைவன், இறைவி பெயர் எதுவும் இல்லாமல் திரு வாசகம் புனையப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தச்செப்பேடு திருஉத்திரகோசமங்கை இறைவி யின் சுக்கிரவாரக்கட்டளை திருநந்தா விளக்கு, நந்தவனம், அம்மன் எழுந்தருப்பண்ணல் ஆகியவைகளுக்கு தேரிருவேலி கிராமத்தில் உள்ள காவல்காணியான வீசு கொண்ட தேவன், காவல் நஞ்சை பத்தொன்பது மாநிலமும் புஞ்சை திட்டு நிலங் களையும், சர்வமானியமாக கட்டளையிட்டுள்ள விவரமும் தெரிய வருகிறது. அத்துடன் தேரிருவேலி கிராமத்து காவல்க் குடியான துலுக்கர் நெசவாளிகளாக இருந்தவர்கள் என்பதும் அவர்களது தறிக்கடமையும், அதில் உண்டாகிய காவல் சுதந்திரப் பணமும் கோயிலுக்குரியதாகக் கட்டளையிடப்பட்டதாகவும் இந்தச் செப் பேடு தெரியப்படுத்துகின்றது.

இந்தச் செப்பேடு சம்பந்தப்பட்ட பாலையாறு ஏந்தல் கிராமம் இராமநாதபுரம் வட்டத்திலும், தேரிருவேலி கிராமம் முதுகுளத்தூர் வட்டத்திலும் இருக்கின்றன.

முந்தைய இராமநாதபுரம் சீமையின் பாதுகாப்பு மற்றும் காவலுக்காக ஆங்காங்கு கிராமங்களில் காவலர்கள் இருந்த னர். தேசகாவல், தலங்காவல் திசைகாவல், என்று மூன்று வகையான காவல் பிரிவினர் இயங்கி வந்ததை இராமநாதபுரம் மேனுயுவல் குறிப்பிடுகிறது. இன்னும் சில ஊர் களில் தும்பிச்சி காவல் என்றதொரு காவல் பணி இருந்ததை யும் இந்த நூல் தெரியப்படுத்துகின்றது. இந்தக் காவல் பணி யினை மேற்கொண்டு இருந்தவர்களுக்கு ஆங்காங்கு காணிகள்

விட்டுக் கொடுக்கப்பட்டு இருந்ததுடன் குடிமக்களிடமிருந்து காவல் சுவந்திரம் என்ற வகைப் பணம் அல்லது விளைச்சலில் ஒரு சிறு பகுதியை வசூலித்துக் கொள்ளும் உரிமையையும் சேதுபதி மன்னர்கள் அவர்களுக்கு வழங்கி இருந்தனர்.

இந்தப் பணியில் துலுக்கரும் நியமனம் பெற்று இருந்த தாக (வரி. 39, 40) இந்தச் செப்பேட்டில் காணப்படுகிறது. பெரும்பாலும் இந்த கிராம மக்கள், தறிக்காரர்களாகவும் சிறுவணிகர்களாகவும் இருந்து வந்ததை முந்தைய செப்பேடு தெரியப்படுத்தினாலும் அரசுப் பணியில் காவல் காப்பவர் களாகவும் இருந்து வந்ததை இந்தச் செப்பேடு தெளிவு படுத் துகின்றது. இந்தச் செப்பேட்டில் (வரி, 39) காணப்படுகின்ற ''நம்முடைய காவல் குடியான'' என்ற தொடரில் இருந்து சேதுபதி பூமியில் வாழ்ந்த துலுக்கருக்கும் மன்னருக்கும் இடை யில் மிகவும் நெருக்கமான, வாஞ்சையுள்ள உறவு இருந்து வந்ததும் தெரியவருகிறது.

## செப்பேடு எண் 56

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1664 இதன் மேல்ச் செல்லாநின்ற துந்துபி வருஷ
2. நாம ஸம்வத் சரத்தில் தெட்சணாயத்தில் சரத்ரிதுவில் அற்பிசி மாஸத்தில் பவற்ணமையும் சோ
3. ம வாரமும் அசுபதி நட்செத்திரமும் வச்சிர நாம யோகமு சுபகரணமும் பெத்த சுபதினத்தில் சுபஸ்ரீ
4. மன் மகாமண்டலேசுபரன் அரிய ராயிர தள விபாடன் பாசைக்குத் தப்புவ ராயிர கண்டன் மூவரா
5. யிர கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரி
6. யன் சோளமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன் தொண்ட மண்டலப் பிறசண்ட பிறசண்டன் யீழமுங்
7. கொங்கு யாழ்ப்பான பட்டணமும் கெசவேட்டை கொண்ட ருளிய ராசாதிராசன் ராசபரமேசுப
8. ரன் ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதீபன் வீரரில் வீரன் வீரகஞ்சுகன் வீரவெண்பா
9. மாலை வீரரண கேசரி வீரவிற்கிரமாற்கன் பரிக்கு நகுலன் குடைக்குக் கற்னன் வில்லுக்கு விசையன் மல்லு
10. க்கு வீமசேனன் பொறுமைக்கு தற்மபுத்திரன் ஆக்கி னைக்கு சுக்கிரீபன் அழகுக்கு வாலசீவகன் பிறச

---

* ஏர்வாடி தர்கா பரம்பரை நிர்வாகி
அமரர் P. சையது இப்ராகிம் அவர்களிடமிருந்து
கள ஆய்வின் பொழுது நூலாசிரியரால் படி எடுக்கப்பட்டது
அமைப்பு : 32.செ.மீ X 18.6 செ.மீ

11. ங் கத்துக்கு ஆதிசேஷன் கருணைக்கு ரெகுராமன் சத்தியா
பாஷா அரிச்சந்திரன் சத்துருவாதியள் மி

12. ண்டன் சகலகுண சம்பன்ன சங்கீத சாயுத்திய வித்தியா
வினோதன் சறுவசீவ தயாபரன் சாமித்

13. துரோகியள் மிண்டன் தண்டுவார் மிண்டன் தளங்கண்டு
தத்தளிப்பார்கள் கண்டன் தந் தார

14. தார பிறதார புத்திரன் சகல சாம்பிறாச்சிய லட்சுமி நிவா
சன் கருதலர்கள் முடியிடறு கள துரந்த

15. ர னகுலன் கட்டாரி ராயன் கருணா கடாட்சன் காமிநி
கந்தப்பன் கலைதெரியும் விற்பன்ன கலியாண

16. குணசீலன் இரவிகுல சேகரன் இறவிவற்மன் இவுளி
பாவடி மிதித்தேறுவார் கண்டன் இடறு

17. வார் கண்டன் இடறுவார் கோடாலி யிரவலர் கலி கோபன்
அரசராவண ராமன் அடியார் வேளை

18. க் காறன் அந்தம் பிற கண்டன் அனுமத்நுசம் கருடத்துசம்
மீன்துவசம் சிங்கத்துசம் வியாக்கிறம

19. துவசம் நீமிதுசம் காவித்நுசமுந் செங்காவிக் குடையும்
அதின் மேல் விருது சல்லியும் உண்டான தே

20. வாதி தேவன் அடைக்கலங் காத்தான் உரிகோ சுரதான்
வீரதண்டை சேமட்தலை விளங்கிய தாளினான்

21. மனுநீதி மன்னன் மலைகலங்கினும் மனங்கலங் காதவன்
வன்னியராட்டந் தவிள்த்தான் அசுபதி கெ

22. சபதி நரபதி சேது செம்பி வளநாடன் வேதியர் காவலன்
கொளு மீதி கொண்டு குவலையங் காத்

23. தவன் சேதுமூல ரெட்சா துரந்தரன் தேவ நகராதிபன்
துரகரேவேந்தன் துலுக்கர் தள விபாட

24. ன் சோடச மகாதான சீலன் பஞ்சகால பயங்கரன் பஞ்ச
பாணா அவதாரன் பஞ்சவற்ன்ன ராவுத்தர்

25. முண்டன் படைக்குங் குடைக்கும் ஓடாத கண்டன் ராம
னாத சுவாமி பறுவதவற்தனி பாதாரவிந்த சே

26. சவிதன் தனுக்கோடி காவலன் திலத நுதல் மடமாதர்
மடலெளுது புயசுமுகன் இயலிசை நாடக முத்

27. தமிளறிவாளன் அனகன் அதிவீரன் அகளங்கன் அதி செயன் புவனேகவீரன் மருவலர் கெச சிங்

28. கம் விருதான் வலியச் சருவி வளியில் கால்நீட்டி துட்டர் கொட்ட மடக்கி பட்டமானங் காத்தான்

29. பகைமன்னர் சற்ப கெருடன் பரதள விபாடன் பனுக்கு வார் கண்டன் பர்ராச சிங்கம் தாலிக்கு வேலி

30. தெக்ஷண சிங்காசனாபதி மனு நீதி மன்னன் செகராசர் பணிபாதன் அன்னதான சோமன் அம

31. லன் அம்போரு கடாட்சன் தற்மபரி பாலனன் சற்பன்ன பாஷா துரந்தரன் சங்கீத சுவாமி பறு

32. வதவற்த்தனி நாயகி ராமநாதசுவாமி கருணா கடாட்சன் பரிபூறண கீற்த்திப் பிறதாபன் ஸ்ரீமநு இ

33. றணிகெற்ப்பயாசி ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர் கள் குமாார் ஸ்ரீமது முத்துக்குமார வி

34. சைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஏறு பாடிப் பள்ளிவாசலுக்குக் கட்டளையிட்ட கிறாம

35. த்துக்கு முசாபர் நல்ல இபுறாகிமிடத்தில் தாம்பிற சாதனம் கொடுத்தபரி சாவது இப்போது

36. செம்பி நாட்டில் பெரியமாயா குளமான எந்தலதற்க் கெல்கையாவது கீள்யெல்

37. கை நீலமுடையான் கண்மாயி கீள்கரைக்கும் சின்னு பன்னு பண்டாரம் தோட்டத்துக்கு

38. மேற்கு வடயெல்கையாவதும் பண்ணைக் காட்டில்த் தொலிச்சான் வீரன் தட்டுக்கும்

39. பனையேந்தல் புஞ்சைக் காட்டுக்கும் யெதம் பாடல் புஞ்சைக் காட்டுக்கும் தெற்கு மே

40. மலெல்கையமவது டை யெதம்பாடல் காட்டுக்கும் ஆண்டி சுத்தான் வாகையடி ஊ

41. றணிக்கும் கிளக்கு தெற்கெல்கையாவது ஓரக்கரைக்கு வடக்கு யின்னாங் கெல்கைக்

42. குள்பட்டது ஆயக்கட்டுப்படிக்கு நஞ்சை விரையடி 50 கலம் புஞ்சைத் தட்டு கொச்சமுள்பட செய்

இரண்டாம் பக்கம்

43. க்கு விரையடி 4 கலத்து 3 கலம் ஆக விரையடி 54 கலத்து 3 கலமும் ஷை ஊர் புஞ்சையில் திருவுத்திரகோசமங்

44. கைப் பிறவேசமாயிருந்த தட்டு 32' அரைக்காணி சதிர செவ்வாய் மணக்காடும் கட்டளையிட்டுக் கொ

45. டுத்தக் காட்டுக்கு யெல்லையாவது மாவிலங்க ஊரணிக் கும் அரியவன் கட்டையன் தட்டு

46. க்கும் கரிமுந்தலுக்கும் கிளக்கு தெற்கெல்கையாவது சமுத்திரக் கரைக்கு வடக்கு கிளக்கெ

47. ல்கையாவது பள்ளிமுனைக் குடாவுக்கும் வாளி நாடான் தட்டுக்கும் பூசாறி நா

48. டான் தட்டுக்கும் தச்சனூறணிக்கும் மேற்கு ஓரக்கரைக்கு தெற்கு இன்னாங்கெல்கை

49. க்குள்பட்ட செவ்வல் மணல் நஞ்சை புஞ்சையும் ஊரணி குட்டம் திட்டு திடல் மாவடை ம

50. ரவடை மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணரும் நீரும் பாசியும் பள்ளுப் பறை

51. ஊளியம் உலுப்பை வைக்கல் கட்டு வண்டில்மாடு ஆயக் கட்டுவரி உப்பளவரி நில

52. வரி பள்வரிப் பறைவரி கம்பளவரி முள்ளுவரி காணிக்கை வரி இவ்வரி முதல் யெவ்

53. வரிப்பிறக்கிலும் அவ்வரிமுதல் அஷ்டபோக தேச சாமியங் களும் ஓடையளத்தில்

54. மாதாந்தமாண்டு பறை உப்பு மூன்றெருவையில் நெல்லுப் புல்லு யேதொன்றாகிலும்

55. பொதிபிடிச்சு கொள்வினை விற்பினை யாபினை யாபாரம் பண்ணிகொள்கிறதுக்

56. கு ஆயந் தீருவை சம்மாடஞ் சத்தவரி யிதுமுதலான அஷ்ட்டபோக தேசசாமியங்களும்

57. பள்ளிவாசலுக்கு சறுவமானியமாகக் கட்டளைமிட்ட படிக்கி ஆதித்த ாந்திராதித்த சந்ததிப் பிற

58. வேசமாக புத்திர கோத்திரமாக ஆண்டனுபவித்து கொள் பவராகவும் இந்த தற்மத்தை யாதாமெ

59. ாருதர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கோடிப் பிரதிஷ்ட்
டையும் கோடி சிவலிங்கம் பிரதிஷ்ட்டை

60. யும் கோடி கன்னிகாதான பிற்ம பிரதிஷ்ட்டையும் கோடி
அன்னதான சொற்னதான கோதானமும் ப

61. ண்ணிவிக்கிற சுகுர்தத்தை அடைவாராகவும் இந்த தற்
மத்துக்கு யாதாமொருதர் அகிதம் பண்ணி

62. ன பேர்கள் கெங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் மாதா
பிதாக் குருக்களையும் காராம்பக

63. வையும் பிறாமணாளையும் வதைபண்ணின தோஷத்திலே
போவாராகவும் இந்த தற்மத்துக்கு

64. யாதாமொரு யிசிலாமானவர்களில் பரிபாலனம் பண்ணின
னவர்கள் கோடி அடுமை கொண்

65. டு உருமைக்கு விட்ட பலனும் கோடி கச்சு செய்த பலனு
மடைவாராகவும் இந்த தற்மத்துக்

66. கு விகாம் பண்ணினவர்கள் மாதா பிதா ஒஸ்தாத்தை
வதைபண்ணிவிச்சு மக்கத்துப் பள்

67. ளியை இடித்த பாவத்திலே போவாராகவும் யிப்படி சம்ம
தித்து தாம்பிற சாதனங் கொடுத்

68. தோம் ஸ்ரீயிறணியகெற்பயாசி இரகுனாதச் சேதுபதி காத்த
தேவரவர்கள் குமாரர் ஸ்ரீமது முத்துக் கு

69. மார விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள்
விசுவகோத்திரத்தில் மதுரையிலிருக்கும்

70. மூர்த்தி காலிங்கராயன் ஆசாரி குமாரன் சட்டையப்பன்
லிகிதம் உ

## செப்பேடு எண் 56
### (விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துக்குமார விஜயரெகுநாத சேதுபதி காத்ததேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | ஏர்வாடி பள்ளிவாசல் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1664 துந்துபி வருடம் ஐப்பசி மீ" (கி.பி. 1—11—1742) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | ஏர்வாடி பள்ளிவாசலுக்கு பெரிய மாயாகுளம் கிராமம் தானம் |

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக நூற்றி ஒன்று சிறப்புப் பெயர்கள் இந்தப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை சேதுபதி மன்னர்களது செப்பேடுகளில் காணப்படாத எண்ணிக்கை இது. வீரரண கேசரி, சருவசீவதயாபரன், தந்தார்தார் பிறதார புத்திரன், கருதலர்கள் முடி இடறுகள் துரந்த நிருபன், கோடசமகாதான சீலன், பஞ்ச கால பயங்கரன், அம்போரு கடாட்சன் என்பன, இதுவரை சேதுபதி மன்னர் செப்பேடுகளில் பயன்படுத்தப்படாத சிறப்புப் பெயர்களாகும். இவை அனைத்தும் இந்த மன்னரது ஆட்சிக் கால வளமையும் வள்ளண்மையையும், தம் உயிரைப்போல எவ்வுயிரையும், காக்கும் தகைமையையும் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஏர்வாடி பள்ளிவாசல் தர்மமாக பெரிய மாயாகுளம் கிராமத்தை முசாபர் நல்ல இபுராகீம் என்பவருக்கு கொடுத்த பரிசாக இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கிராமத்துக்கான எல்கை விபரங்கள் கொடுக்கப்பட்டு இருப்பதுடன் இத்ல் கட்டுப்

பட்ட நந்சைபுஞ்சை நிலங்களின் பரப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது ஐம்பது கலம் நெல் விதைக்கக் கூடிய பகுதி நந்சையும் நான்கு கலம் விதைப்பாட்டு புஞ்சையும் இதில் அடங்கியது ஆகும். அத்துடன் ஏற்கனவே திருவுத்திரகோச மங்கை ஆலயத்திற்குரியதாக இருந்த தட்டு முப்பத்திரெண்டு அரைக்காணி சதுர செவ்வல் மணிக்காடும் இந்தப் பள்ளிவாசல் தருமத்தில் சேர்த்து வழங்கப்பட்டதுடன் அதற்கான எல்கை மாலும் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த தானம் சம்பந்தபட்ட ஊர், காணி ஆகியவைகளில் இருந்து மன்னருக்கு இறுக்கப்பட்டு வந்த ஊழியம், உலுப்பை, வைக்கல் கட்டு வரி, ஆயக்கட்டு வரி, உம்பளமாட்டு வரி, நிலவரி, பள்வரி, பறைவரி, கம்பளவரி, முள்ளுவரி, காணிக்கை வரி, ஆகியவைகளுடன் மேலும் புதிதாக ஏற்படுத்திப்படுகின்ற வருவாய்களும் பள்ளிவாசலுக்குச் சேர இந்தச் செப்பேட்டில் கட்டளையிடப்பட்டுள்ளது. அத்துடன் உப்பு அளத்தில் மூன்றுக்கு ஒரு பறையும்; தானிய தவசங்கள் கொள்விளை, விற்பனைக்கு ஆயம் தீர்வையும், சம்மாடம், சத்தவரி, முதலாவைகளும் ஏர்வாடி பள்ளிவாசலுக்கு சர்வமானியமாக கட்டளையிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டயத்தின் இறுதியிலும் இதனை வழங்கிய சேதுபதி மன்னரது பெயரும் முதன் முறையாக பொறிக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பட்டயத்தின் இறுதியில் இத்தகைய தர்மத்தைக் காத்தவர்களுக்கும் அகிதம் பண்ணினவர்களுக்கும் கிடைக்கும் பலன்களைக் குறிப்பிடும் பகுதியில், இசுலாமிய முறைப்படியான வாசகங்கள் அமைந்து இருப்பது இந்தப்பட்டயத்தின் சிறப்பான அம்சமாகும். அரபுத்தாயத்தில் இசுலாமிய பிரச்சாரத்தைக் தொடங்கிய பொழுது முகம்மது நபி (ஸல்) அவர்கள் தமது பணிகளில் ஒன்றாக அடிமைகளை, அவர்களுக்குரிய தொகையை அந்த அடிமைகளை வைத்திருப்பவர்களிடம் கொடுத்து வாங்கி அவர்களுக்கு உரிமை விட்டு சுதந்திர மனிதராக வாழும்படி செய்தார்கள். தமது பிரதம் சீடர்களான அபு பக்கர் போன்றவர்களையும் அவ்விதமே கொத்தடிமை முறைகளை நீக்குவதற்கு உதவி செய்யுமாறு வலியுறுத்தினார்கள்.

ஆதலால் இந்தப்பட்டயத்தின் (வரி 65)ல் ''கோடி அடிமை உருமை கொண்டுவிட்ட பலன்'' என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல இசுலாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான மக்காவிற்கு புனித யாத்திரை மேற் கொள்வதை ''கோடி கச்சு'' (ஹஜ்ஜு என்ற புனிதப்பயணம்) செய்தபலன்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விகாதம் பண்ணிய வர்கள்'' உஸ்தாதை (பரமாச்சாரியாரை) வதை பண்ணிவிச்சு மக்கத்துப் பள்ளியை இடித்த பாலத்திலே போவாராகவும்'' என சபிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் பட்டய வாசகங்களில் ஒரு புதுமையை இந்தச் செப்பேடு புகுத்தி உள்ளது.

இதனைப் போன்றே சேதுபதி மன்னரது சகிப்புத் தன் மையையும் பரந்த மனநிலையையும் இந்தச் செப்பேடு பிரதி பலிக்கின்றது. ரெகுநாத திருமலை சேதுபதி காலம் முதல் இசுலாமியப் பள்ளிவாசல்களது பராமரிப்பிற்கும் நிலம், காணிகளை வழங்கும் மரபு சேதுபதி மன்னர்களது அறச்செயல் களில் ஒன்றாக இடம் பெற்றாலும், இந்த மன்னரது தந்தையும் இவரும் முழுமையாக கிராமத்தினை பள்ளிவாசலுக்கு தானம் வழங்கிய பெருமை உடையவர்களாகிறார்கள். இந்த அறக் கொடையினை மீசல்வண்ணிக்களஞ்சியப் புலவர் அவர்கள் தமது ''தீனெறி விளக்கம்'' என்ற இசுலாமிய தமிழ்க்காப்பியத்தில்,

*''தேறல்கொள் சரோருகப் பூந்திருவடித் தொழும்பாய் முன்னங்*
*கூறல்போன் மேலைமாயகுளமெனும் கிராமந்தன்னை*
*மாறலிலாது பானுமதியுவநாள் நாண்மட்டாகச்*
*சாறுவபூமன் விட்டான் சருவமானியமதாக....''*

சேதுபதி சந்ததி பெற்றபடலம் (பாடல் 23)

எனப்பாடியுள்ளார்.

தானம் வழங்கப்பட்ட பெரியமாயகுளம் கிராமம் பெரும் பாலும் புன்செய் நிலமாக உள்ளது. அங்குள்ள நிலம் தட்டு என்று வகைப்படுத்தி வழங்கப்பட்டது. புஞ்சைக்காடு மணக்காடு முந்தல், அடுமை, ஒஸ்தாது ஆகியவை இதே செப்பேட்டில் காணப்படும் வட்டார வழக்குகளாகும்

## செப்பேடு எண் 57

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1667 இதன்மேல் செல்லாநின்ற குறோத
2. ன ஸ்ரீ உத்தராயணத்தில் வசந்த ரிதுவில் வைய்யாசி மீ 11உ வியாளக்கிழ
3. மை பஞ்சமியும் உத்திராட நக்ஷத்திரமும் சுப்பிறநாம யோகமும் சௌலவாக
4. றணமுங் கூடின சுபதினத்தில் தேவை நகராதிபன் சேது மூல ரக்ஷா துரந்தரன்
5. ராமனாத சுவாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் பரராச கெ
6. ச சிங்கம் இரவிகுல சேகரன் இரவிமாத்தாண்டன் சொரி முத்து வன்னியன் ஸ்வஸ்தி
7. ஸ்ரீமன் மஹாமண்ட லேசுவரன் அரியராயிர தள விபாடன் பாஷைக்குத் தப்பு
8. வராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு
9. கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோள மண்டலப் பிரதிஷ்டா
10. பனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிறசண்டன் ஈ ழமும் கொங்கு மியா

---

இராமேசுவரவம் ஆபில் காபில் தர்கா பரம்பரை நிர்வாகி, திருமதி. அருள்மொழி என்ற ஆயிசா தும்மணி மரைக்காயர் இடமிருந்து கள ஆய்வின் பொழுது நூலாசிரியரால் படி எடுக்கப்பட்டது.

11. ட்பாண பட்டணமும் யெம்மண்டலமுமளித்து
12. கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசப
13. ரமீசுவரன் ராசமாத்தாண்டன் ராசகுல திலகன்
14. இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம்
15. ஆற்றில்ப் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடை
16. க்கலங் காத்தான் தாலிக்கு வேலி சத்துருவாதிய
17. ள் மிண்டன் வேதியர் காவலன் அரசராவண ரா
18. மன் அடியார் வேளைக்காறன் பரதள விபாடன் உரி
19. கோல் சுரதானன் அந்தம்பிற கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்துரோகி
20. யள் மிண்டன் பஞ்சவற்ன ராய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கி
21. வையாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் ஆரியர் மா
22. னங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துரகரேவந் தன் அனும கேதனன்
23. கெருட கேதனன் கொடைக்கு கற்னன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விசையன்
24. பரத நாடகப் பிறவீணன் கருணா கடாக்ஷன் குன்றினு யர் மேருவைக் குன்றா வ
25. ளைக்குணில் பொறித்தவன் திலத நுதல் மடமாதர் மடலெழுத வருசுமுகன் செங்கா
26. விக் குடையான் சேமத்தலை விளங்குமிரு தாளினான் விசையலெட்சுமி காந்
27. தன் கலைதெரியும் விற்பனன் காமினி காந்தப்பன் அஷ்டதிக்கு மனோபயங்கர
28. ன் துஷ்ட நிக்கிறக சிஷ்ட பரிபாலன் சங்கீத சாயித்தியன் வித்தியா வினோதன்

இரண்டாம் பக்கம்

29. சகல சாம்பிறாச்சிய லக்ஷ்மிவாசன் சேதுகாவலன் துக ஹூர்க் கூத்தத்து

30. க் காத்தூரான குலோத்துங்கசோள நல்லூர் கீள்பால் விரை யாத கண்டனிலிரு

31. க்கும் ராசமான்ய ராசஸ்ரீ இரண்யகெற்பயாசியான குமார முத்து விசைய ரகுநாதச் சே

32. சேதுபதி காத்த தேவரவர்கள் குமாரன் முத்துக்குமார விசைய இரகுநாதச் சே

33. துபதி காத்த தேவரவர்கள் ராமீசுவரத்திலிருக்கும் ஆவல் காவல் பள்ளிவா

34. சல் தன்மத்துக்கு நூறாலம்சா குமாரன் சுலுத்தான் சஹாய் சரி பகீர் பாரிசமா

35. க கட்டளையிட்ட புதுக்குளத்தை ஆண்டனுபவித்துக் கொள்பவராகவும்

36. விட்டுக்குடுத்த புதுக்குளத்துக்கு யெல்கையாவது யெல்கை குடி ஓரச்சிறகு

37. மடையில் நீர்பாய்ந்து நெல்விளைகின்ற குன்றா வயக்க லுக்கும் வாளவந்

38. தாளம்மன் கோவிலுக்கும் பச்சரித் திடலுக்கும் சேதுமாற் கத்துக்கும் வடக்கு

39. கொத்தங் குளத்துக்கும் புரவுக்கும் தென்மேற்கு அச்சங் குடிக்கும் தோட்டக்கா

40. ட்டுக்கும் தெற்கு எக்கைகுடிக் கண்மாய் வடகடைக் கொம்புக்கும் கானத் திட

41. லுக்கும் கிளக்கு யின்னாங் கெல்கைக்குள்பட்ட நஞ்சை பிஞ்சை மாவடை மர

42. வடை திட்டு திடல் மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு நிதி நிக்ஷேப

43. ஜல தரு பாஷாண ஆகாம்ய அஷ்டபோகமும் குடிபடை பள்பறைவரி யிறை

44. கலமும் சறுவ மானிபமாக கட்டளையிட்ட படியினாலே
45. சந்திராதித்தவரை சந்ததிப் பிறவேசம் புத்திர பௌவுத்திர பாரம் பரையாய் ஆண்
46. டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்துக் கு தமிளனாகிலும் நாலா
47. வர்னத்திலே உள்ளவனாகிலும் இசுலாமான வனாகிலும் வாக்குச் சகாயம் அர்த்த ச
48. காயம் பண்ணினால் கெங்கையிலும் சேதுவிலும் மக்க மதீனத்திலேயும்
49. அன்னதானமும் சொற்னதாமும் அனேகம் குடும்ப பிறதிஷ்டையும் பண்ணி
50. ன பலனை யடையக்கடவாராகவும் இந்த தற்மத்து விகாதம் நினைத்தால் புண்ணி
51. ய ஸ்தலங்களிலேயும் மக்க மதீனத்திலேயும் மாதா பிதா வையுங் கொன்ற தோ
52. ஷத்திலும் மகாபாவத்திலேயும் போகக்கடவாராகவும் உ குருவே துணை உ
53. இந்தப்படிக்கு தாம்பிற சாதனம் யெளுதினேன் திருப் புல்லாணியூரிலிருக்கு
54. ம் முத்துப் பண்டாரம் புத்திரன் இருளப்பன் கையெளுத்து உ இந்த தற்மத்துக்கு
55. தமிளனாகிலும் எவர்களாகிலும் விகாதம் நினைத்தால் கெங்கையிலும் சேதுவி
56. லும் காராம் பசுவையும் மாதாபிதாவையுங் கொன்ற தோஷத்திலே போகக் க
57. ட வாராகவும்

## செப்பேடு எண் 57

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துக்குமார விஜயரெகுநாத சேதுபதி காத்ததேவர் |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் ஆபில், காபில் பள்ளிவாசல் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1667 குரோதன ஆண்டு வைகாசி மீ 11ந் தேதி (கி.பி. 9-5-1745) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மேலேகண்ட பள்ளிவாசல் தருமத்திற்காக புதுக்குளம் கிராமம் தானம் |

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது அறுபத்தியாறு சிறப்புப் பெயர்கள் விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் முந்தைய செப்பேடுகளில் காணப்பட்டவை.

இராமேசுவரம் ஆபில் காபில் பள்ளிவாசல் இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரம் வட்டம் இராமேசுவரம் நகரில் இரயில் நிலையத்துக்கு நேர் தெற்கேயுள்ள புனித இடமாகும். செப்பேட்டில் கண்டபடி இது ஒரு பள்ளிவாசல் அல்ல. தர்கா ஆகும். பள்ளிவாசல் முஸ்லீம் மக்களது வழிபாட்டுத் தலமாகும். என்றாலும் முஸ்லீம் பெரியவர்களது புனித இடங்களை (தர்கா) பள்ளிவாசல் என்று குறிப்பிடுவது இந்த வட்டார வழக்கு நாகூர் ஆண்டகையின் பேரர் புனித பக்ருத்தீன் என்பவரது அடக்க இடம் உள்ள குடியிருப்பு. புதுக்கோட்டை மாவட்டத்தில் காட்டு

பாவா பள்ளிவாசல் என்ற பெயரில் வழக்குப் பெற்று இருப்பது ஒப்பு நோக்கத் தக்கது. இந்தப் பள்ளிவாசலுக்கு இராமநாத புரம் வட்டம் எக்கைகுடி கிராமத்துடன் இணைந்த புதுக்குளம் என்ற கிராமத்தை இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது. வரு வாய்த்துறை பதிவேடுகளில் இந்த ஊர் ''பக்கிரி புதுக்குளம்'' என்ற பெயரில் பதிவாகியுள்ளது.

மனித இனத்தின் முதல் மனிதராக திருக்குர்ஆனும், பைபிளும் போற்றுகின்ற ஆதம் அவர்களது மக்களான அபல், கெயின் ஆகிய இருவரது புனித அடக்கவிடமாக இந்த பள்ளி வாசல் கருதப்பட்டு வருகின்றது. இறைவனது கட்டளையை மீறிய ஆதம் அவர்களும் அவர்களது துணைவியாரும் சொர்க் கத்தில் இருந்து பூவுலகிற்கு அனுப்பப்பட்டபோது ஆதம் துணை வியார் அரபுத் தாயகத்திலும், ஆதம் இலங்கை நாட்டின் மிக உயரமான சுமனக் கூடமலையிலும் வந்து இறங்கியதாக நம்பப் படுகிறது. இந்த மலை பௌத்தர்கள் போதி சத்துவரான புத்த பகவானது திருவடிகளை தாங்கிய இடமாகவும் இந்து சமயத் தினர் சிவபெருமானது பாதத்தூளி சிவனடிபாத மலை என்றும் நம்புகின்றனர். மேலும் இலங்கைத் தீவை இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைக்கும் கடலில் இராமேசுவரத்தையும் எதிர்க்கரையான தலைமன்னாரையும் தொட்டுச் செல்லும் இருபத்தி மூன்று மைல் தொலைவு மணல் திட்டு ''ஆதமின் பாலம்'' என பல நூற்றாண்டுகளாக வழங்கப்படுவதாலும் அவரது மக்கள் இந்தப் பகுதியில் வாழ்ந்து மறைந்திருப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது. கெயின், அபெல் ஆகிய இருவரது கதைகள் பைபிளின் பழைய ஏற்பாட்டில் காணப் படுகிறது.*

இந்தச் செப்பேட்டின் இறுதிப்பகுதியில் இந்த தருமத் திற்கு ''தமிழனாகிலும் நாலா வர்னத்திலே உள்ளவனாகிலும் இஸ்லாமானவனாகிலும்'' ''கங்கையிலும் சேதுவிலும் மக்க, மதினத்திலும்'' என காப்புரை வாசகங்கள் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

---

பைபிள் - பழைய ஏற்பாடு ஆதியாகமம் - 4.

புதுவெள்ளம் புரட்டிக்கொண்டு சேர்க்கும் மணற் தொகுதி ஏக்கர் எனப்படும். இந்த வழக்கில் எக்கையாகி உள்ள ஊர் எக்கைகுடி. இந்தக் ஊர்க்கண்மாய்ப் பாசனத்தில் உள்ள பகுதி தான் இந்தச் செப்பேட்டில் சருவமானியமாக கட்டளையிடப் பட்டுள்ள புதுக்குளம் பகுதியாகும். இந்தப்பகுதி ''ஒருச்சிறகு மடையில் நீர்பாய்ந்து நெல்விளைகின்ற'' பகுதி எனச் செப் பேட்டில் காணப்படுவதில் இருந்து சம்பந்தப்பட்ட இடம் நல்ல வளமைமிக்க பகுதி எனக் கொள்ளமுடிகிறது. இதற்கு நான்கு எல்கை கொடுக்கப்பட்டுள்ளதில் குன்றா வயக்கால் வாழவந்த அம்மன் கோயில், பச்சரித்திடல், கானத்திடல் சேதுமார்க்கம், அச்சங்குடி, கொத்தங்குளம் புரவு ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

வாழவந்த அம்மன் என்பது புகார் நகரில் இருந்து பாண்டிய நாட்டிற்கு'' ''உலந்த பொருள் ஈட்டுதற்கு, மலர்ந்த சீர் மாடமதுரையகத்து'' ற்றகண்ணகி என்னும் கற்புத் தெய்வம். மதுரைக்குத்தெற்கே இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங் களில் இந்த பத்தினி தெய்வ வழிபாட்டிற்காக அமைக்கப்பட்ட கோட்டங்கள் ''வாழவந்த அம்மன் கோயில்'' என வழங்கப் படுகிறது. இன்றைய நிலையில் அந்தக் கோட்டங்களில் பத்தினி தெய்வவழிபாடு பராசக்தி (காளி) வழிபாடாக மாறி உள்ளது *பள்ளர்சேரி* இந்தப்பகுதிமில் *பள்ளச்சேரி* என்றும் பச்சேரி என வழக்கு பெற்றுள்ளது.

மற்றும் புரவு, கடைக்கொம்பு. சிறகுதிடல், கண்மாய் மாவடை, மரவடை என்பன இந்த வட்டாரத்தின் வழக்குகள்.

# 12

# செல்லமுத்து விஜயரெகு நாதசேதுபதி

## (கி.பி. 1748 – 1760)

இந்த மன்னரது ஆட்சி கி.பி 1748 முதல் பதிமூன்று ஆண்டுகள் இராமநாதபுரம் சீமையில் நீடித்தது. இவர் ஆட்சிக்கு அருந்துணையாக பெரும் வீரர் பிரதானி வெள்ளையன் சேர்வை விளங்கி வந்தார். கி.பி.1702, கி.பி 1709 ஆகிய ஆண்டுகளில் மறவர் சீமையைக் கைப்பற்ற படையெடுத்து படுதோல்வி அடைந்த தஞ்சை மராத்திய மன்னர் இந்த மன்னரது ஆட்சி யிலும் மற்றுமொரு படையெடுப்பை மேற்கொண்டார். சேது நாட்டின் காவலர் அனுமந்தக் குடியில் அந்த படைகளை பிரதானி வெள்ளையன் சேர்வை முறியடித்துத் துரத்தினார். மதுரையைக் கைப்பற்றியிருந்த ஆங்கிலத் தளபதியான கோப் பையும் முறியடித்து மதுரையில் நாயக்க மன்னரது கடைசி வாரிசான விஜயகுமார பங்காரு திருமலை நாயக்கரை கி.பி.1751 மதுரை அரியணையில் அமர்வதற்கும் இந்த மன்னர் பேருதளி புரிந்தார். இவரது ஆட்சியில் டச்சுக் சளரர்கள், தங்கள் வாணி பத்தை இராமநாதபுரம் சீமை கரைப் பகுதியில் பெருக் கினார்கள்.

சேது மன்னர்களுக்கே உரிய சமய பணி ஈடுபாடு காரண மாக இந்த மன்னர் இராமநாதபுரம் கோட்டைக்கு வெளியே லெட்சுமி புரத்திலும் கன்னியாகுமாரி சாலை கொக்காடி கிராமத்திலும் அன்னசாலைளையும் தண்ணீர் பந்தலையும் நிறுவினார். இவரது அமைதியான ஆட்சி கி.பி. 1760ல் முடிவுற்றது.

# செப்பேடு எண் 58

(நகல்)

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவறன் அரியரயி
2. ற தள விபாடன் பாசைக்குத் தப்புவறாயிர கண்டன் க
3. ண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடதான் பாண்டி
4. மண்டல ஸ்தாபனாசாரியான் சோளமண்டலப் பிறதி
5. ஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்ட பிறசண்
6. டன் யீளமும் கொங்கும் யால்ப்பாண ராயற் பட்டணமும்
7. யெம்மண்டலமும் அளித்து கெசவேட்டை கொண்டருளிய ராசாதிறா
8. சன் ராசபரமேசுரன் றாசமரற்த்தாண்டன் றாசகெம்பீரன் றாச மனோகர
9. ன் றாசகுலதிலகன் றாசறாஷ்ட்டாந் தவிள்த்தான் றாசாக்கள் தம்பிறான் பரராச
10. கேசரி சொரிமுத்து வன்னியன் வன்னியறாஷ்ட்டாந் தவிள்த்தான்
11. பஞ்கவற்னராய றாவுத்தற் கண்டன் அந்தம்பிர கண்டன் கண்டன் சாடிக்கா
12. ர கண்டன் சாமித்து ரோகியள் முண்டன் துர்க்க ரேவந் தன் துர்க்கறாவு
13. த்தன் தேவைநகறாதிபன் சேதுமூலாரடட்க்ஷ துரந்திரன் ராமனாத சுவாமி

14. காரியாதுரந்திரன் சேதுகாவலன் சேதுக்கு வாய்த்தவன் சிவபூ

15. ச குருபூசை மரவாத வங்கிஷாதிபன் அடைக்கலம் காத் தான் விரை

16. யாத கண்டனில் விளங்கியதீரன் யெதிரிட்ட மருவலர்கள் சிர

17. முருளவெட்டு நிலையிட்ட தீரன் ரவிகுலசேகரன் புவனேக வீர

18. ன் வீரவளனாடன் வீரகஞ்சுகன் அரசறாவண றாமன் அடியாற் வே

19. ளைக்காரன் பரதளவிபாடன் உரிகோல்சுரதன் உபயசாமர உற்பா

20. சன் கொட்டமடக்கிய வய்யாளி னாறாயணன் வீரவெண் பாமாலைய

21. ான் உபயகோடிச் சாமரஉல்லாசன் நளினக்காறன் யிளஞ் சிங்க

22. ந் தளஞ்சிங்கம் பகைமன்னற் சிங்கம் துறைராசன் ஆத்தில்ப்பாச்சி

23. கடலில்ப் பாச்சி கடலில்ப் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்நான் தா

24. லிக்கு வேலி வள நாடன் பாண்டிவள னாடன்வய்கை வள

25. னாடன் வைகைமானதியான் பொதியமால்வரையான் கெங்கை

26. யாதிபன் தொண்டியன்துறை காவலன் மதுரை வளி கண்ட

27. மாற்த்தாண்டன் கிரிதுற்க செலதுற்க வனதுற்கமுடை யான் அ

28. னுமகேதனன் கெருடகேதனன் மீனகேதனன் னரசிம்ம கேதனன்

29. செங்ொவி கேதனன் செங்காவிக் குடையோன் குடை மேல்ச்ச

30. ல்லியன் பூலோக தெயிவேந்திரன் சத்திய அரிச்சந்திரன் அரி
31. வுக்கு ஆதிசேஷன் தமிளுக்கு அகஷ்த்தியன் மல்லுக்கு வீமன்
32. வாளுக்கு அபிமன்னன் வில்லுக்கு விசயன் பரிக்கு னகுலன்
33. சாஷ்த் திரத்துக்குச் சகாதேவன் கொடைக்கி கற்னன் அளகு
34. க்கு வாலசீவகன் ஆனெக்கி மகபதி அன்னக்கொடி விளங்கிய தீ
35. ரன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் அஷ்ட்ட
36. லெட்சுமி விளங்கிய தீரன் செயதுங்கராயற் விருப்பாட்சி
37. ராயற் கிற்ஷ்னராயற் வங்கிஷாதிபனான காத்தூரான குலோ
38. த்துங்க சோளநல்லூரான கீள்பாலில் விரையாத கண்
39. டனில் யிருக்கும் அசுபதி கெசபதி நறபதி ஸ்ரீமது யிரண்ணிய
40. ய கெற்ப்பயாசி ரவிகுல முத்து விசைய இரகுனாத சேதுப
41. தி காத்த தேவறய்யர் அவற்கள் பிரதிவி ராச்சிய பரிபா

இரண்டாம் பக்கம்

42. லனம் பண்ணியருளானின்ற சாலீவாகந சகா
43. ப்தம் 1648 கலியப்த்தம் 4827 இதின்
44. மேல் செல்லானின்ற பிரபவ னாம சமீபசரத்தில் உத்தி ராயண
45. ந்தில் மகா மாசம் கிற்ஷ்ண பட்சத்தில் சோமவாரம் புன்
46. ற்பூச நட்சத்திரமும் பஞ்சமியும் கபிலவாகரணமும் கூடின
47. சுபயோக சுபதினத்தில் பூதானசாசனம் பண்ணி குடுத்த
48. து பூதானசாசனமாவது சேதுமூலத்தில் ஆதிசேது நவ
49. பாசானத்துக்கு கிளக்கு தோணித்துறை சத்திர கிராமம் தேற்

50. போகித்துறையில் சிவகெங்கை பிரதானி தாண்டவராய
51. ன் தற்மம் கட்டுகுதற்கும் ஷே யூரிலிருக்கும் பாரத்வாஜ
52. கோத்ரத்தில் ஆபஸ்தம்ப ஸ்ூத்ரத்தில் சங்கர
53. ய்யர் புத்றன் வேங்கிட கிற்ஷ்ண அய்யறிடத்தில் பூதான சாஸ
54. நமாக கட்டளையிட்ட நிலமாவாது ஷெ தேற்போகி துறையில்
55. வடக்கெல்லையாவது சமுத்திரத்திற்கும் தெற்கு கிளக் கெல்லை
56. யாவது பள்ளவேற்குடி மேட்டுக்கும் மேற்கு தென்பாற்க் கெல்
57. லையாவது பருமணல்த்தேரியில் கட்ட உசில மரத்துக்கும் கா
58. ட்டுப் பிச்சர் கோவிலுக்கும் அருகூரணி வடகரைக்கும் செங்க
59. ச்சூளை வடமேட்டுக்கும் வடக்கு மேல்பாற்கெல்லையாவது நல்ல
60. தண்ணீர்க் கசிவு ஊத்து ஊரணிக்கும் நரிகுமிச்ச திடலுக்கு
61. செங்கச்சூளை வடமேற்கு மூலைத்திடலுக்கும் ணந்திமேடு ஊரணி
62. மேல்கரைக்கும் கிளக்கு இன்னாங்கெல்லைக்குள்ப்பட்ட நிலத்தில்
63. அக்கிரகாரம் தற்மங் கட்டிக்கொள்ளச் சொல்லியும் அதில் சே
64. ற்ந்த னிலத்தில் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டு திடல்
65. நத்தம் செயித்தலை பாசி படுகை கீள்னோக்கிய கிணரு மேல்னோ
66. க்கிய மரமும் சில்வரி பெருவரி நிதி நிட்சேபம் செல தொற
67. பாஷானா சண்ணிய சித்தி சாயுத்தியமென்று சொல்லச்
68. செயித அஷ்ட்டபோக தேஜ ஸ்வாமியங்களும் சுத்த சருவமா

69. னியமாக க்ட்டளையிட்டோம் புத்திர பௌத்திர பாரம் பரையாக ஆதி
70. சந்திராதித்திய சந்திரசூரிய பிரவேசமுள்ளமட்டும் ஆண்டு
71. கொள்ள சொல்லி கூட்டளையிட்டோம் யிந்த தற்மத்தை பரிபாலி
72. னம் பண்ணினபேர்கள் காசி றாமேசுவரம் தனுக்கோடிக் கரையி
73. லேயும் கெங்கை கரையிலேயும் கோடி சிவலிங்க பிரதிஷ்ட்டை
74. விஷ்ணு பிரதிஷ்ட்டை பிரம்ம பிரதிட்டை கோடி பூதானம் கோ
75. தானம் கன்னிகாதானம் பண்ணினபலனை அடைவா ராகவும் யி
76. ந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினபேர்கள் கெங்கைகரை
77. யிலேயும் தனுக்கோடிக் கரையிலேயும் ஆயிரம் பிராம்மனா
78. ளையும் மாதா பிதாவையும் கோவதையும் கொண்ட தோஷத்தில்
79. போக கடவாராகவும் ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் ப
80. ரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வ
81. தத்தம் நிஷ்பலம் பவேது உ

மீது அழகிய சிற்றம்பலக் கவிராயரது வழியினரான குழந்தைக் கவிராயர் *மான் விடு தூது* என்ற சிற்றிலக்கியத்தைப் படைத்துப் பொன்னும் பொருளும் பரிசாகப் பெற்றார். வேறு சில தனிப் பாடல்களிலும் இந்தப் பிரதானியின் கொடைப்பண்பு புகழப் பட்டுள்ளது.

பிரதானி இராமநாதபுரம் சீமையில் சேதுமார்க்கத்தில் தேவிபட்டினத்தில் கிழக்கே அக்கிரகார தர்மம், ஒன்று ஏற் படுத்த விழைந்தார். அதற்காக பிரதானிக்கு தேர்போகி கிராமத் தில் நிலக்கொடை வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக் கின்றது. இந்தக் கொடையைப் பெற்றவர் இதே ஊரைச்சார்ந்த சங்கரைய்யர் மகன் வெங்கட கிருஷ்ணய்யர் என்பவர் தானமாக வழங்கப்பட்ட நிலத்துக்கு பெருநான்கு எல்லை தெளிளாகக் கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தான இடத்திற்கு எல்லையாக பள்ள மேற்குடி பருமணல்தேரி, காட்டுப்பிச்சர் கோயில், ஊற்றூ ஊரணி, நரிகுமிச்சதிடல் என்பன சுட்டப்பட்டுள்ளன. இந்தப்பகுதி முந்தைய காலத்தில் மணற்பாங்கானதாக இருந்ததென்பதைக் கசிவு ஊற்றூரணி, அருகு ஊரணி என்பவைகள் தெரிவிக் கின்றன. பெரும் மணற்திட்டுக்கள் தேரி எனப்படும். இத்தகைய தேரி இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்குக் கடற்கரையில் அமைந்திருந்தது அறியப்படுகிறது. நந்திமேடு ஊரணி, காட்டுப்பிச்சர் கோயில் என்ற பெயர்களிலிருந்து சோழர் களது ஆதிக்கம் இந்தப்பகுதியில் இருந்ததைக் குறிக்கும் வரலாற்று எச்சமாக உள்ளது. நத்தம் (வரி 65) என்ற சொல் முதன் முறையாக இந்தச்செப்பேட்டில் பயன்படுத்தப்பட்டு உள்ளது, தேர்போகி ஊரின் பெயரால் மிழலைக் கூற்றத்தை யடுத்து தேர்போகி நாடு (செப்பேடு எண் 79) என்ற பெரும் பகுதி இருந்ததும் தெரியவருகிறது. சேதுபதி மன்னரது பெயர் விருதியாக *காத்த தேவரய்யர்* (வரி 41) எனக் குறிப்பிட்டிருப்பது புதிய சொல்லாட்சியாகும்.

ஆனால் இவை கால நீட்சியினால் மறைந்துவிட்டதாகத் தெரிகிறது. இந்தச் சத்திரம் இன்றைய இராமநாதபுரம் வட்டம் தேர் போகி கிராமத்திற்கு கிழக்கே சிதைந்த நிலையில் உள்ளது. காட்டுப்பிச்சர் கோயில் வழக்கில் இல்லையென்றாலும் அந்தக் கோயிலும் சீரழிந்த நிலையில் உள்ளது.

## செப்பேடு எண் 59

(நகல்)

1. சிவமயம்
2. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1874க்கு மேே(ல்) செலாநின்ற ஆங்கி
3. (ர)ஸ ஹூ மார்களி மீ 20 உத்தராயணத்துப் பூருவ பட்சமுஞ் சோமவா
4. ரமும் அசுபதி நட்செத்திரமுங் கூடின சுபதினத்திலே திருவாவடுது
5. றைப் பண்டார சன்னிதி அவர்கள் அம்பலவாண சுவாமி பூஜை
6. ச மஹேஸ்வரபூசைக்கி தேவை நகராதிபன் சேது மூலரட்
7. சா துரந்தரன் இராமநாதசுவாமி பருவத வர்தநி அம்மை காரி
8. ய துரந்தரன் சுப்பிரமணிய பாதாரவிந்த சேவிதன் பரராசசிங்க
9. ம் பரராசசேகான் பரராசசேகரன் இரவிகுல சேகரன் சொரிமுத்
10. து வன்னியன் துட்ட ராசர் கண்டன் சாடிக்காறா கண்டன் சா

---

திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை,

அமைப்பு : 30 செ.மீ X 19 செமீ

படி எடுத்து அளித்தவர் : புலவர் திரு. ராஜு, தஞ்சை.

11. மித்துரோகிகள் முண்டன் அந்தம்பர கண்டன் அடியார் வேளை

12. க்காரன் அரச ராவண ராமன் பஞ்சத்து வரமாரி யனுக்கு வராதக

13. ண்டன் பட்டமானங் காத்தான் பட்டம் பரம்படத்தான் தாலிக்கு வேலி

14. ஐவாய்ப் புலி இளஞ்சிங்கர் தளஞ்சிங்கம் வீரவெண்பா மாலை

15. வைகை வளநாடன் பரதளவி பாடன் பஞ்சவற்னறாய றாவுத்தன் புவ

16. னேக வீரன் வேதியர் காவலன் கொட்டமடக்கி வைய் யாளி நாறாயண

17. ன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் பகைமன்னர் சிங்கம்

18. ஆற்றிற் பாச்சி கடலிற்பாச்சி சத்துருக்கள் மிண்டன் மேவலர்

19. கோளரி வீரகெம்பீரன் கீற்திப் பிறதாபன் கபட நாடக சூத்திரப்பிற

20. தாபன் பாஷா வீட்சணன் சகல குண சம்பன்னன் சங்கீத ச

21. ாயித்திய வித்தியா வினோதன் வீனாப் பிறசங்கன் வைகை

22. வளநாடன் தொண்டியந்துறை காவலன் அடைக்க

23. லங் காத்தான் வன்னியராட்டந் தவிழ்த்தான் மூவரா

24. ய கண்டன் சாமித்துரோகி வெண்டய காவல

25. ன் வீர தண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் து

26. ரை ராயன் செயதுங்க ராயன் வங்கிஷா தீபனான துகவூர்

27. க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோள நல்லூ

28. ர்க் கீழ்ப்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஶ்ரீமது

29. இரணிய கெற்ப யாசி ரவி குல ரெகுநாதச் சேதுபதி கா

30. த்த தேவரவர்கள் வங்குசோத்தாரகரான ஶ்ரீமது செல்ல முத்து

31. விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர்கள் எங்கள்

இரண்டாம் பக்கம்

32. மாதா பிதாவினுடைய வற்க்கத்துக்கும் புண்ணியமாகத் தரும சா
33. தனப் பட்டயங் கொடுத்தபடி முன் எங்கள் துரைத்தன பரம்பரை
34. யில் சாலிவாகன சகாப்தம் 1582க்கு மேற்செல்லா
35. சாறுவரி ஹ மாக மாத புண்ணிய காலத்திலே திருவாவடு
36. துறை ஆதீனம் அம்பலவாண பண்டார சன்னதி அவர் களுக்கு
37. ஸ்ரீமது திருமலைச் சேதுபதி ரெகுநாதத் தேவரவர்கள் தரும சா(ச)
38. னப்படி கங்கணி கட்டி சரினோஞ்சி வயலிந்த மூன்றுந் தாங்களனுபவித்
39. து வருகிறதுனாலே தங்கள் நாணாக்கிடிக்குப் பதிலாய் ஏழுகோ
40. ட்டை நாட்டில் ஒரூர் வட்டகையில் நாட்டுசேரியை தங்களு
41. க்குக் கட்டளையிட்டோம் நாட்டு சேரி எல்கையாவது கிழக்கு ஆனை
42. யாங் கோட்டைக் கண்வாய் நீர்ப்பிடிக்கு மேற்குப் தெற்குத் தெற்கு
43. தனிச்சக் கண்வாய் வடகாலுக்கும் நெட்டேந்தல் குளக் காலு
44. க்கும் வடக்கு மேற்கு அதங்குடிக்கீழ்புறத் தெல்லைக்குக் கிழக்
45. கு வடக்கு திருப்பொற் கோட்டை நஞ்சை மாலுக்குத் தெற்கு
46. இந்த நான்கெல்லைக்குள்ப்பட்ட திட்டுத் திடல் மாவடை மரவ
47. டை மேல் னோக்கிய மரம் கீழ்னோக்கிய கிணறும் ஆத்துக்கா
48. ல் ஊத்துக்கால் சல தரு பாஷாண நிதி நிட்சேபமும் அஷ்ட்ட

50. போக தேச சுவாமியங்களும் விநியாதி விக்கிறையங்க
51. ளுக்கு யோக்கியமாக சந்திராதித்தாள் உள்ளவரைக்கும்
52. ஆதீன பரம்பரையாக தாங்களே ஆண்டனுபவித்துக்கெ
53. ாள்ளக் கடவார்களாகவும் சுப்பிரமணிய
54. பாதார விந்தம் துணை
55. இந்தத் தருமத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கை
56. க் கரையிலுஞ் சேதுக்கரையிலு புண்ணிய ஸ்தலங்களிலே அ
57. னேக சிவலிங்கப் பிறதிட்டை மடப்பிறதிட்டை அக்கிராரப் பிறதிட்
58. டை கன்னிகா தானம் பண்ணின பலனை அடைவார்கள் இந்தக்
59. தருமத்துக்கு யாதொருத்தர் அஹிதஞ் செய்த பேர்கள் கெங்கை
60. க்கரையிலும் சேதுக்கரையிலுங் காராம்பசுவையும் பி
61. ராமணரையுங் குருவையும் மாதா பிதாவையுங் கொன்ற
62. தோஷத்திலேயும் அனேக சிவ தலங்களிலே சிவத்துரோகம்
63. ம் பண்ணின நரகத்திலேயும் போகக் கடவாராகதள் இப்படிக்கு
64. ஸ்ரீசெல்லமுத்து விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்
65. கள் திருவாவடுதுறைப் பண்டாரச் சன்னதி அவர்கா அம்பலவா
66. ண சுவாமி பூசை மஹேசுவர பூசைக்குத் தாம்பிர சாதனங் கொடுத்
67. தோம் உ.

## செப்பேடு எண். 59

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | செல்லமுத்து விஜய ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | திருவாவடுதுறை ஆதினகர்த்தர் அம்பலவாணன் பண்டார சன்னதி |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1674 ஆங்கிரச வருடம் மார்கழி 20ந் தேதி (கி. பி. 31.12.1752) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மகேஸ்வர பூஜைக்கு நாட்டுசேரி கிராமம் சர்வமானியம். |

இந்த மன்னரது ஐம்பத்தி மூன்று சிறப்புப்பெயர்கள் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளது. சுப்ரமணிய பாதார விந்த சேகரன் (வரி 8) பாசா விட்சனன் (வரி 20) வீணா பிரசங்கன் (வரி 21) என்ற மூன்று புதிய சிறப்புப் பெயர்களைத் தவிர ஏனைய விருதுகள் அனைத்தும், முந்தைய சேது மன்னர்களில் செப்பேடுகளில் காணப்படுபவையாகும்.

இராமநாதபுரம் மன்னர்களுக்கும், திருவாவடுதுறை ஆதின கர்த்தர்களுக்குமிடையே ரெகுநாத சேதுபதி காலம் தொட்டு நெருக்கமான தொடர்புகள் இருந்து வந்தன. அந்த மன்னர் இந்த ஆதினத்துக்கு கி.பி. 1660ல் நான்கு கிராமங்களை தானமாக வழங்கியிருந்தார். அவைகளில் நாணக்குடி கிராமம் மட்டும் அந்த ஆதினத்தாருக்கு பயன்படாத நிலையில் இருந்ததை நீக்கி அதற்குப் பதிலாக இந்த மன்னர் நாட்டுசேரி என்று கிராமத்தை தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது.

ஏற்கனவே வழங்கப்பட்ட திருப்பொற்கோட்டை கிராமத்தின் எல்கைமாலில் இருந்து தெரிய வருகிறது. இந்த இரு ஊர்கள் இன்றைய பசும்பொன் முத்துராமலிங்க மாவட்ட தேவகோட்டை வட்டத்தில் உள்ளன. இவைகளில் ஒன்றான நாட்டுச்சேரி முன்னர் ஏழுகோட்டை நாட்டில் ஓரூர் வட்டகையில் (வரி 41) இருந்ததாக தெரிய வருகிறது. இப்பொழுது ஓரூர் இராமநாத புரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தின் வடபகுதியில் அமைந்துள்ளது. நாட்டுச்சேரிக்கான நான்கு எல்லைகள் செப் பேட்டில் குறிக்கப்பட்டிருந்தும் அந்தப் பகுதியில் இருந்து எத்த கைய வருவாய்கள் அரசுக்கு இறுக்கப்பட்டன. என்ற விபரம் இல்லாததும். நாட்டுச்சேரி பெரும்பாலும் விளைநிலங்களைக் கொண்டது என்பது புலனாகின்றது.

ஆத்துக்கால், ஊத்துக்கால் (வரிகள் 48, 49) வட்டகை (வரி 41) குளக்கால் (வரி 44) நஞ்சை மால் (வரி 46) என்பன இந்த வட்டார வழக்குகள்.

சிவமயம் என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்கும் இந்தச் செப்பேடு அறுபத்து ஏழு வரிகளைக் கொண்டதாக உள்ளது. செப்பேட்டை வரைந்தவர் பெயர் இல்லை என்றாலும், இந்தச் செப்பேட்டின் கைப்பிடியின் கீழ் புடைச் சிற்பமாக நடராஜரின் ஆனந்த தாண்டவம். சிவகாமிஅம்மை, காளிகாதேவி. பதஞ்சலி வியாக்கிர பாதர் அரிய பிரதிமைகளைப் படைத்தவர் மிகவும் தேர்ந்த கலைஞர் என்பது உறுதி.

## செப்பேடு எண். 60

(நகல்)

1. ௳ சுவஸ்ரீமன்றாசா மண்டலேசுரன் அரியராய தளயி பாடன் பாசைக்கு தப்பு
2. வராத கண்டன் மூவராய கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு
3. கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோழ மண்டலப் பிரிதி
4. ட்டபனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிறகண்டன் யீளமுங் கொங்
5. கும் யாப்பானமு மளித்துக் கிசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன்
6. ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் அஷ்ட லட்சுமிப்
7. பொருந்தியவான் தற்ம ஞாய சோளநீதி தவறாத ரணமுக சுத்த
8. வீரன் நவகோடிராயன் நவகண்டசக்கிறவத்தி கெங்கை குமரி
9. முதல் செங்கோல்நடத்திய தீரன் கோபால வங்கிஷம் சூரியவங்

---

ARE. A. 2/1943

அமைப்பு : 26 செமீ. × 17.5 செமீ

செப்பேட்டின் படி அளித்து உதவியவர்
புலவர்: திரு. செ. ராஜு, தஞ்சை.

10. கிஷம் ஏவல்செய்வித்திருந்தருளினோன் எம்மண்டலமுந் திறைகொ
11. ண்டருளிய ராசர்கள் தம்பிரான் துலுக்கர்தள விபாடன் துலுக்கராட்டந் தவி
12. ள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர்மோகந் தவிள் தான் தொட்டியர் த
13. ள விபாடன் தொட்டியராட்டந் தவிள்த்ததன் மலைகலங்கினும் மனங்கலங்
14. ங்காதகண்டன் குறையமக்கி மதிகொண்டோன் வீரப்பிரதாபன் விருதரசர் மண
15. வாளன் யிந்தகோப் சற்பிற கெருடன் சமர கோலாகலன் தாலிக்கு வேலி
16. தரியலர்கள் மணவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம கெம்பீரன்
17. பாவநாசபன் திரயாகசாலை யாகமூர்ந்தி துஷ்டநிற்கிறக சிஷ்டபரிபாலனன்
18. அஷ்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரிராயன் கட்டாரிக் சாளுவன் துட்டரில்துட்ட
19. ன் துட்டராயிர கண்டன் துண்டீர நெஷ்டூரந் தவிழ்த்தான் மாளுவராயன்
20. தேசசூரன் எங்குந் திறைகொண்ட கண்டன் பதினெட்டுக் கூட்டத்து வன்னி
21. யர்கள் கண்டன் வன்னியராட்டந் தவிள்த்தான் ஒரு குடைக்கீள் உலகமுழு
22. தும் ஆண்டோன் திருவிருக்கு மணிபார்பன் கிஷ்டனரணமுத சந்திரோத
23. யன் கோடி சூரியப் பிரகாசன் ஈழமுந் திரைகொண்ட இரகுல சூரியன்
24. மதனகிறுவித சுமுகமன்ன கேசரியான அனவரத கலிதுரத தேவ
25. வடவரசர் முடியள் நடுவி விடறிவரும் ராசாதிராசன் விருது மானங்காத்
26. தருளிய தேவமகராயர் நரசிங்கராயர் இம்முடி கிருஷ்ண ராயர் தேவை பிரான்

27. ராயர் மல்லிகைராயர் சசிவர்ணராயர் சீரங்கராயர் விருப் பாச்சிராயர்

28. சேது ராசேந்திரனான தின்புய கோலாகலன் தாலிக்கு வேலி தரியலர்

29. கள் மனைவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம வலியச்சரு

30. வி வழியில்க்கால்நீட்டி அரிவையர்கள் மதரூபன் அஷ்ட யோக துரந்தரீகள்

31. தேவைவரு துரைராயன் செம்பிநாடான் அரசராவண ராமன் அரசராட்டந்தவ

32. ந்த்தான் குப்பலக்குளக்காரன் குவலையங் காத்தோன் யிறந்தகால மெடுத்தோன்

33. யிரவிகுல சேகரன் அடைக்கலங் காத்தோன் அடையவர் கள் சிங்கம் உரிகோ

34. ல் சுரதனன் உத்தண்டராயன் காவிக்குடையான் கனகாமி சேகன் தத்துபரி

35. யான் தங்கச்சிவிகையான் சாடிக்காறர் கண்டன் சறபன்ன பாசையான்

36. தொட்டவாரந் தவறாத சொரிமுத்து வன்னியன் சேது வழிகொண்டோன்

37. தொண்டித்துறை காவலன் சாமித்துரோகிகள் மிண்டன் வேல்விழி இவு

38. ளி மிதிந்தேறுவார்கள்கண்டன் அந்தப்பிரசண்டன் பூறுவ தெஷ்ண பசிம உத்

39. தர சத்த சமுத்திர தெட்சனாதிபன் வடகரைப்புலி துளப மாலையணியுஞ் சம்பிரம

40. கோலாகலன் கெருட கேதனங்கொண்ட கீற்திப் பிரதாபன் வீரவெண்பா மாலை

41. யான கு சிங்கம் தமிள்ப்பிறசிங்கம் பகைமன்னர் சிங்கம்

42. மதன மோகன உதவின ராமனாதசுவாமி காரியதுரந்தரன் தேவப் பிராமண பரி

43. (பாலகன் சிவபூசை குருபூசை அரிபூசை மறவாத துரந்த ரன் ஆத்துப்பாய்ச்சி கடலு
44. (ள் பாச்சி) பகைமன்னர் கண்டன் பனுக்குவார் மிண்டன் தளங்கண்டு தவிப்ப
45. ...ண்டன் துரைகள் சிகாமணி ராமலிங்கசுவாமி பாத மற வாமல் பார்
46. ...ண்டோன் எதுத்தவர்கள் சிங்கம் வடகரைப்புலி குளந்தையாதி
47. ...கு வெட்டி விருதுமீட்டான் அனனக்கொடியாதிபன் அஷ்டவட
48. ... ந்திேனான் மனுமுறை செலுத்திய மதன கெறுவித சுமுகன் அரி
49. .. யன் பிலத்தில்ச் சேடன் வில்லுக்கு விசையன் சொல்லுக்கு
50. ... இந்திரன் பரிக்கு நகுலன் குடைக்குக் கர்ணன் பொறுமை
51. ... தளத்தில்த் துரியோதனன் அசுபதி கெசபதி, நரபதி யாகிய சேது
52. ... நிலையிட்ட குமார முத்து விசைய ரெகுநாதச் சேது பதியவர்க
53. ...க்கும் பிறம்பும் புண்ணியத்துக்குள்ளுமாய்க் பிறிதிவி ராட்சிய பரி
54. ...ண்ணி அருளா நின்ற சாலியவாகன கலியுக சகாற்த்தம்
55. ... மேல் செல்லாநின்ற யுவ வருசம் ஆடிமாதம் 26 தேதி
56. ... முத்துக்குமார முத்து விசைய ரெகுனாத சேது காத்ந தேவ
57. ர்கள் மடம் பூறா தனமாயிருந்தபடியினாலே யின்னமே
58. ... ம் பரிபாலனமாகும்படிக்கு கிறாமம் சறுவமானியமா
59. ம் பட்டையமெளுதிக் குடுந்தனந்தலே பெருநாங்கு யெல்கையா
60. வது கீள்பாற்க் கெல்கயாவது பொற்றுடப்புக்கு மேற்க்கு தென்பாற்

61. க்கெல்கையாவது வீராண்டான் வயலுக்கு வடக்கு மேற் பாற் கெல்

62. கையாவது உருவாட்டியாத்துக்கு கிளக்கு வடபாற்கெல்கை யாவ

63. து சாணான் வயலுக்கு தெற்க்கு இன்னாங்கு யெல்கைக் குட்பட்ட சாருவூர

64. ன்நேந்தல் விரையடி 10 யிந்த விரையடி பதிங்கலத்துக்ரு வரியிறையெ

65. ச்சோறு வரிச்சோறு ஆடோட்டி, மாடோட்டி யெச் சொவந்தை

66. யும் மில்லாமல் மடமும் ஊறணியும் தற்மமும் பரிபாலினம் பண்ணி

67. வியக்கச் சொல்லி பள்ள உலகனாண்டி பாரிசம் பண்ணி விச்சபடியி

68. னாலேயும் நம்முடைய ராச்சியத்தில் தேவதாயம் விறும தாயம் ராச

69. ாக்கள் னாயக்கமாற் ராவுத்தமார் துரைமக்கள் தேவமார் பாளைய

70. காறர் தன்டிக்காறர் ஊளியக்காறர் நாட்டுவகுப்பார் இவர்களுக்கு

71. நடக்கிற (கி)ராமங்களிலேயும் பண்ணைக் கிராம சிறு தேட்டுக் கிராம இந்தக்கி

72. ராமங்களிலேயும் இருக்கிற குடி ஒண்ணுக்கு முத்திரைப் படியால்

73. ரெண்டுபடி நெல்லு அந்த அந்தக் கிராமத்து அம்பல காறன் கொத்து

74. க் கணக்கனை அளவிட்டுக் குடுக்கச் சொல்லியும் கட்ட ளையிட்டு பட்டைய

75. ம் மெளுதிக்குடுத்திருக்கிறபடியினாலேயும் கல்லுங் காவேரி யும் புல்லு

76. ம் பூமியும் சந்திராதித்தவரைக்கு இந்த தற்மத்தை பிற வலப்படுத்தி விச்சு

77. இந்த தற்மத்தை மென்மேலும் பரிபாலினம் பண்ணினவர் கன் காசியி
78. லே ராமேசீரத்திலே கன்னிமாகுமரியிலே கோதாபுரியிலே இந்
79. த சிவத்தலங்களிலே ஆயிர சிவலிங்க பிறதிஷ்டை பண்ணின
80. பலனும் அந்தச் சிவத்தலங்களிலே கோபிறாமணர் சகலத்திர பேரு
81. ம் பொசிக்கத் தக்கதாய் தடாகப் பிரதிஷ்ட்டை பண்ணின பலனை அடை
82. வாராகவும் இந்தத் தற்மத்துக்கு யாதாமொருவர் இடைகூறு
83. நினைத்தவர்கள் காசியிலே ராமேசுரத்திலே கன்யாகுமரியி
84. லே கோதாபுரியிலே இப்படிக் கொற்ற சிவத்தலங்களிலே கோ
85. கத்தி விறுமகத்தி ஸ்ரீகத்தி சிசுத்தியும் ஆயிரத்தெட்டு சிவா
86. லயத்தில் வைய்த்த விளக்கையமத்தினபாவமும் இவர்கள்
87. பண்ணின பாவத்திலே போவாராகவும் இந்தப்படிக்கு இந்தப்பட்டை
88. யமெளுதினது ராமனாதபுரத்திலிருக்கும் அட்டவணை புள்ளைமாரி
89. ல் தெய்வகன்னியாபிள்ளை மகன் தெய்வகன்னி கையெளுத்து
90. இந்தப்படிக்கு இந்தச் செப்புப்பட்டையகமளுதினேன் ராமனாத
91. புரத்திலிருக்கும் தங்கவேலை, கெங்கணா பத்தன் உ

# செப்பேடு எண் 60

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | செல்லமுத்து விஜயரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | சாருவூரனேந்தல் பள்ள உலகாண்டி |
| 3. | செப்பேட்டின் காலம் | : | யுவ வருடம் ஆடி மீ" 20ந் தேதி (கி.பி. 07-08-1755) |
| 4. | செப்பேட்டின் பொருள் : | | மடம் ஊரணி தர்மத்துக்கு நில தானம். |

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் வழங்கப்பட்ட இந்த ஆவணத்தின் காலமாகிய யுவ வருடத்தைக் கொண்டு இதனை வழங்கியவர் செல்லமுத்து விஜயரெகுநாத சேதுபதியென நிர்ணயிக்க முடிகின்றது. இவரது விருதாவளியாக நாற்பத்தியொன்பது சிறப்புப் பெயர்கள் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் கீழ்க்கண்டவை மட்டும் புதியனவாகும்.

1. தர்மஞாய சோழநீதி தவறாதான்
2. நவகண்ட சக்கரவர்த்தி
3. கெங்கை குமரிமுதல் செங்கோல் நடத்திய வீரன்
4. தரியளர்கள் மணவாளன்
5. பாவனாச பந்திரயாகசாலை யாகமூர்த்தி
6. எங்கும் திறைகொண்ட கண்டன்

7. பதினெட்டுக் கூட்ட வன்னியர்கள் கண்டன்
8. கோடி சூரியப்பிரகாசன்
9. திரு இருக்கும் பார்பன்

கி பி. 1730ல் சிவகெங்கைச் சீமையென்ற புதியதொரு தன்னரசு மறவர் சீமையின் பகுதியினின்றும் தோற்றுவிக்கப் பட்டதுடன் ஆட்சிப் பரப்பிலும் திறத்திலும் வலிமை குன்றிய அரசராக சேதுபதி ஆகிவிட்டதனால் சிறப்பித்துச் சொல்லத்தக்க அவர்களது வீரச் செயல்களுக்கு வரலாற்றில் இடமில்லை. ஆதலால் மேலே கண்ட விருதாவளிகள் அனைத்தும் பொருளற்ற தாக இருப்பினும் சம்பிரதாயத்திற்காக இந்தச் செப்பேட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி ஆட்சிக்காலத்தில் அமைத்துதவிய மடம், சாருவூரனேந்தல் கிராமத்தில் பழுதடைந் திருந்ததால் அதனையும் அதனையொட்டிய ஊரணியையும் பரி பாலனம் பண்ணிவிக்க பள்ள உலகாண்டிக்கு இந்தச் செப்பேடு வழங்கப்பட்டுள்ளது. சில பயனுள்ள செய்திகளும் இந்தச் செப்பேட்டில் பொதிந்துள்ளன. பாட்டாளி மக்களாகிய பள்ளர் வகுப்பினர், மிகுந்த ஊராக இந்த ஊர் அமைந்து இருந்ததை யும் அவர்களில் செல்வாக்கு மிக்கவர் உலகாண்டி என்பதும் தெரிய வருகிறது. இந்த மடத்தினை பரிபாலனம் செய்வதற் காக அதே ஊரில் பதின்கல விரையடி நிலம் அவரிடம் கை யளிக்கபட்டதையும், இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. சம்பந் தப்பட்ட நிலத்திற்கான நான்கெல்கைகளும் அந்த நிலத் திலிருந்து மன்னருக்கு இறுக்கப்பட்ட வரியிறை, எச்சோறு, வரிச் சோறு, ஆடோட்டி, மாடோட்டி ஆகியவைகளும் இந்தச் செப் பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த தர்மத்துக்காக அனைத்து கிராமங்களிலும் குடி ஒன்றுக்கு இரண்டு படி நெல் அளந்து கொடுக்கவும் மன்னர் கட்டளையிட்டுள்ளார். முந்தைய செப்பேடு களில் கண்ட, 'கீதாரம், நன் மாட்டு சுரபிக்காத வரி, போன் றவை இங்குகுறிப்பிடப்பட்டுள்ள ஆடோட்டி, மாடோட்டி ஆகும்.

இவைகளுக்கெல்லாம் மேலாக அன்றைய காலகட்டத்தில் கிராமங்கள் தேவதாயம், பிரம்ம தாயம், பண்ணை, சிறு தேட்டு என்று வகைப்படுத்தப்பட்டிருந்ததையும் குடிகளுள் நாயக்கர்,

ராவுத்தர் துரைமக்கள், தேவர், பாளையக்காரர், தண்டடிக் காரர், ஊழியக்காரர், என்ற பிரிவினர்களையும், அம்பலக்காரன், சொத்துக் கணக்கன் என்று கிராம அலுவலர்களையும் இந்தச் செப்பேடு இனங்காட்டுகிறது.

திருக்கோயில்களுக்குத் தானம் அளிக்கப்பட்ட நிலங்கள் *தேவதாயம்* என்றும் பிராமண உத்தமர்களுக்குச் சர்வமானியமாக வழங்கப்பட்டவை *பிரம்மதாயம்* என்றும் நிலச்சொந்தக் காரர் களால் நேரடி விவசாயத்தில் இருந்த பெரும் பரப்பு நிலம் *பண்ணை* என வழங்கப்பட்டது. *சிறு திரட்டு* என்ற சிறு அள விலான நிலம் *சிறு தேட்டு* எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதுவும் சொந்த நில வகையினது. செப்பேட்டுச் சம்பந்தப்பட்ட சாரு ஊரனேந்தல் கிராமம் இன்றைய திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ளது. வருவாய்த்துறைப் பதிவுகளில் இந்த ஊர் *''சாருவனேந்தல் என்ற பள்ள மடம்''* எனக் காணப்படுகிறது. இந்தப் பட்டயத்தின் ஒம்படைக் கிளவியாக ''ஆயிரத்தெட்டு சிவாலயத்தில் வைத்த விளக்கை அணைத்த பாவமும்'' (வரிகள் 85, 86) என்று குறிப்பிட்டிருப்பது புதிய பிரயோகம்.

# முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி

## (கி. பி. 1662—1795)

சேதுபதி மன்னர்களின் பட்டியலில் இறுதியாக இந்த மன்னரது பெயர் காணப்படுகிறது. இவர் பத்துமாதக் குழந்தையாக இருக்கும்பொழுது மன்னர் பதவி இவரைத் தேடி வந்தது பதினொரு வயதை இவர் அடைந்த பொழுது ஆற்காட்டு நவாப்பும் கும்பினியாரது படையும் இராமநாதபுரம் கோட்டையைத் தாக்கிப் பிடித்தனர். இந்த இளவரசரது பிரதிநிதியாக ஆட்சி செய்த இவரது தாயார், தமக்கையர் ஆகியோருடனும் இவரும் கைது செய்யப்பட்டு திருச்சி கோட்டையில் சிறையிடப்பட்டார். இது நிகழ்ந்தது கி.பி. 1772 ஜூன் 3ந்தேதி

இதனைத் தொடர்ந்து சீமையெங்கும் நவாப்புக்கு எதிராக எழுந்த அரசியல் குழப்பம், வரிகொடாமை இயக்கம், மக்கள் கிளர்ச்சி ஆகிய நிர்பந்தங்களினால் ஆற்காட்டு நவாப் இந்த மன்னரை கி.பி. 1781ல் சிறையினின்றும் விடுவித்து ஆட்சியை ஒப்படைத்தார். சிறந்த திட்டங்களைச் செயல்படுத்தி வந்த இந்த மன்னரது நிர்வாகத்தில் தலையிட்டு அதிகார மமதையுடன் சலுகைகளைப் பெற இயலாது ஏமாந்த கும்பினி

யார் அவர்களுக்குரிய இராஜதந்திர முறையில் திடீரென கி.பி. 1795ல் இராமநாதபுரம் அரண்மனையைக் கைப்பற்றி இந்த மன்னரை மீண்டும் திருச்சிராப்பள்ளி சிறையிலடைத்தனர். இதனைத் தொடர்ந்து மறவர் சீமையெங்கும் மக்கள் திரண்டு சித்திரங்குடி' மயிலப்பன் சேர்வைக்காரர், சிங்கன் செட்டி, புட்டூர் ஆகியோர்களது தலைமையில் ஆயுதம் தாங்கி கிளர்ச்சியில் ஈடு பட்டனர். நாற்பது நாட்கள் நீடித்த இந்த மக்கள் இயக்கத்தை ஒழுங்கான படை பயிற்சியும் ஆயுத வசதியும் கொண்ட பரங்கிப் படைகள் நசுக்கி அழித்தநுடன் சிறைபட்ட சேதுபதி மன்னர்தான் இந்தக்கிளர்ச்சிக்கு காரணமென கும்பினியார் முடிவு செய்து அவரை திருச்சியிலிருந்து சென்னை ஜெயின்ட் ஜார்ஜ்கோட்டை யில் சிறை வைத்தனர். தமது நாற்பத்தெட்டு ஆண்டுகால வாழ்வில் மொத்தம் இருபத்துமூன்று ஆண்டுகளைச் சிறையில் கழித்த இந்த சேதுபதி மன்னர் 23.1.1809ல் தியாகியானார்.

இவரது பன்னிரெண்டு வருட ஆட்சியில் பல அடிப்படைப் பணிகளை மேற்கொண்டார். நாணயச் செலவாணி, குடிமைப் பொருள்கள் வழங்குதல் பிறநாட்டு வாணிகம் டச்சுக்காரருடன் ராணுவ தொழில் நுட்ப உதவி போன்ற பல திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்தியதுடன் பல அறப்பணிகளுக்கும் ஆதாரமாக இருந்தார்.[1] சேதுபதி மன்னர்களில் மிகவும் அதிகமான அறக் கொடைகளை திருக்கோவில்களுக்கும் திருமடங்களுக்கும் தேவா லயத்திற்கும், தனியார்களுக்கும் வழங்கி உதவிய பெரும் உப காரி இந்த மன்னர் என்பதை வரலாறு விளம்புகிறது.

1. கமால் எஸ்.எம். Dr. விடுதலைப்போரில் சேதுபதி மன்னர் (1987)

# செப்பேடு எண் 61

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1682 இதின் மேல்
2. செல்லா நின்ற விக்ரமநாம சம்வஸ்திரத்து உத்தராயணத்
3. தில் வசந்த ரிதுவில் வைகாசி மாசம் சுக்கில பூர்வ பட்சத்தில் வெள்ளிக்கிழ
4. மையும் குரு வாரமும் சுபயோக சுபகரணமும் — — —
5. — — — — — — — — — — — ணாமயோக மும் பெற்ற பகுதானமும் கூடின சோம மிதுன லக்குன
6. த்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் பரராஜ சிங்கம், அசுவபதி மகாமண்
7. டலேசுவரன் விருதசார மணவாளன் அந்தம்பிர கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் கொட்டமடக்கி துரகரே பந்தன்
8. சத்திய அரிச்சந்திரன் சங்கீத சாகித்திய வித்யா வினோத ன் வீரத் தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் சகல
9. சாம்பிராச்சிய லட்சுமி வாசன் வீராதி வீரன் வேதியர்கள் காவலன் அரச ராவண ராமன் அடியார் வேலைக்காரன்
10. பரமன்னர் சற்ப கருடன் பாண்டி மண்டல தாபனாச்சாரி யன் சோழ மண்டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண் டைமண்

---

‡ நூலாசிரியரது கள ஆய்வில் திரு உத்தரகோச மங்கையில் கண்டுபிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

11. டல சண்டப்பிரசண்டன் பாசைக்குத் தப்புவார் கண்டன் கண்ட

12. நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் தாலிக்குவேலி பட்ட மானங்காத்தான் துட்டரில் துட்டன் துட்டர் கொட்ட மடக்கி இ

13. டருவார் கோடாரி — — — ஈழமும் கொங்கும் யாழ்ப் பாணபட்டணமும் எம்மண்டலமும் அளித்து கெஜவேட்டை

14. கண்டருளிய ராசாதி ராசன் ராஜ பரமேஸ்வரன் ராச மார்த்தாண்டன் ராச கம்பீரன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு ந

15. குலன் வில்லுக்கு விசையன் மல்லுக்கு வீம சேனன் பொறுமைக்கு தர்மபுத்திரன் பிரசங்கத்துக்கு ஆதிசேனன் அடைக்கலங்காத்தா

16. ன் மதப்புலி சகல குண சம்பந்தன் கலியாண குணா பிராமன் படைக்கும் கொடைக்கும் ஓடாத கண்டன் — — பரசுராமன்

17. மனுநீதி மன்னன் அநாதரட்சகன் மனங்கலங்கினுங் மன

18. ங் கலங்காத கண்டன், இளஞ்சிங்கம், பகைமன்னர் சிங்கம்

19. செம்பிவளநாடன் அதிவீரன் அகலங்கன் கருணை பொழி கடாட்

20. சன் அன்னதான சிவன் மேவலர்கள் கோளரி மேவலர்கள்

21. வணங்குமிரு தாளினான் அனும கேதனன் கெருட கேதனன் சிங்

22. க கேதனன் வியாக்கிர கேதனன் மீன கேதனன் குக்கிட கேதனன்

23. காவி கேதனன் செங்காவிக் கொடையும் அதன் மேல் விருது சல்லியுமுண்டான தேவாதி தேவன் தனலட்சுமி

24. தானியலட்சுமி, வீரலட்சுமி, விசையலட்சுமி, சந்தான லட்சுமி

25. சௌபாக்கிய லட்சுமி கீர்த்தி லட்சுமி சகல சாம்பிராச்சிய லட்சு

26. மி அட்ட லட்சுமி சீனிவாசன் அசுபதி, நரபதி சேதுபதி மகாராஜா
27. அவர்கள் துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலேத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் மாதுருவங்கி
28. சத்துக்காக சோடச மகாதான தீட்சா துரந்தரனான இரண்ய கெற்ப்
29. பயாசி இரவிகுல இரெகுநாத சேதுபதி மகாராஜா அவர்கள் வம்சத்
30. தவரான ஸ்ரீமது முத்துச்செல்லத் தேவர் அவர்கள் குமாரர் முத்து விசைய ரெகுநாத சேதுபதி காத்தத்தேவர் அவர்கள் திருஉத்திரகோ
31. சமங்கை மங்களேசுவர சுவாமி கோயில் ஸ்தானிகரான கௌதம கோத்திரத்
32. தில் போதாயண சூத்திரத்தில் ..... இராமலிங்க குருக்கள்
33. புத்திரன் மங்களேசுவர குருக்களுக்கு சகிரண்ணியோத தாராபூர்வமாக
34. தானம் பண்ணிய கிராமமாவது கருக்காத்திக்கு எல்கை யாவது வேளாநேரி நன்சை வயலுக்கு மேற்கு தெற்கே வையையாத்து
35. க்கு பாதி நஞ்சை வயலுக்கு மரகதவள்ளி, அம்பல களரி எல்லைக்குட்பட்ட கருக்
36. கரத்தி நஞ்சை புஞ்சைக்குக் கிழக்கு வடக்கு எல்கையாவது மே
37. ல் மடந்தை நஞ்சை வயலுக்குத் தெற்கு இந்நான்கெல் கைக் குறிப்பிட்ட
38. கருக்காத்திக்கு பிரதிகாமமான முத்துராமலிங்கபுரம் நஞ்சை, புஞ்சை, மாவிடை, மரவிடை
39. திட்டு, திடல், பள்ளம் படுகை, ஊரணி குடி. படை, பள்ளு பறை சகல சமுதாய
40. பிராப்தி நிதி நிட்சேப சலதரு பாஷாணங்களின் ஆதாய மென்று சொ

41. தலச் செய்த அஷ்டபோக தேச சுவாமியங்களுக்கு தானாதி
வினிய விக்கி

42. ரயங்களுக்கும் யோக்கியமாக ஆசந்திராதி புத்திர பௌத்
திர பரம்பரையாக ஆண்

43. டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்திற்கு யா
தொருமொருவன் அகிதம் பண்ணி

44. னபேர்கள் காசியிலே இராமேஸ்வரத்திலே கெங்கைக்
கரையிலே கோடி கார

45. ம் பசுவையும் கோடி பிராமணரையும் வாதம் பண்ணின
பாவத்தை அடைவா

46. ராகவும் இந்த தாம்புர சாதனம் எழுதினேன் திருப்புல்லா
ணியிலிருக்கும்

47. சங்கர பண்டாரம் மகன் சின்ன வீரப்பன் விகிதம் உ

## செப்பேடு எண் 61
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி

2. செப்பேடு பெற்றவர் : இராமலிங்க குருக்கள் மகன் மங்களேஸ்வர குருக்கள்

3. செப்பேட்டின் காலம் : சகம் 1682 விக்ரம ஆண்டு வைகாசி மீ". (கி.பி. 1761)

4. செப்பேட்டின் பொருள் : மேற்படி குருக்களுக்கு கருக்காத்தி கிராமம் தானம் வழங்கப் பட்டது.

இத்தச் செப்பேட்டை வழங்கிய மன்னர் ''ஸ்ரீமது முத்துச் செல்லத்தேவர் அவர்கள் புத்திரன் முத்துராமலிங்க விஜயரெகு நாத சேதுபதி''யாகும். இவர் ஓராண்டு வயது பாலகராக இருக்கும்பொழுது (கி.பி. 1760)ல் சேதுபதி மன்னராக முடிசூட் டப் பெற்றார். இந்த செப்பேடு அந்த மன்னரால் வழங்கப்பட் டது என்பதைவிட மன்னரது பெயரால் வழங்கப்பட்டது என கொள்வது சிறப்பாக இருக்கும். ஆதலால் இந்தச் செப்பேட்டில் முந்தைய சேதுபதிகளின் சிறப்புடன் விளங்கிய ரெகுநாத திரு மலை சேதுபதியின் எழுபத்துமூன்று சிறப்புப் பெயர்கள் இந்தப் பால சேதுபதியின் விருதாவளியாக கொடுக்கப்பட்டுள்ளது. இவரது தந்தையின் பெயர் நெருஞ்சித் தேவர் என்பதாகும். ஆனால் இராமநாதபுரம் அரண்மனை சம்பிரதாயத்தையொட்டி ''முத்துச் செல்லத்தேவர் புத்திரன்'' என்று செப்பேட்டில் பொறிக் கப்பட்டுள்ளது. (வரி. 30)

இராமநாதபுரத்திற்கு அண்மையிலுள்ள திருஉத்திரகோச மங்கை சைவப் பெருமக்களால் இறைவனது ஊராககொண்டாடப்பெறும் ஏற்றம் பெற்றுள்ளது. திருவாசகத்தின் சில பகுதிகளை இங்கு மணிவாசகப் பெருமான் இறைவன்மீது பாடினார் என்பது வரலாறு. இங்குள்ள கோயிலின் ஸ்தானிகரான மங்களேஸ்வர குருக்களுக்கு கருக்காத்தி கிராமத்தை சர்வமானியமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. சேதுபதி மன்னர்களது வழிபாட்டுத் தலங்களில் இராமேசுவரத்துக்கு அடுத்ததாக கருதப்படும் இந்தக் கோயிலின் ஸ்தானிகர் அவரது கடமையிலும் ஒழுக்கத்திலும் சிறந்த உத்தமராக இருந்த காரணத்தால் அவரது பணியும் வாழ்வும் சிறக்க மன்னர் இந்த நிலக்கொடையை வழங்கி ஊக்குவித்து உள்ளார்.

தானம் வழங்கப் பெற்றுள்ள கருக்காத்தி கிராமம் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் வட்டம் திருஉத்திரகோசமங்கையிலிருந்து ஐந்துகல் தொலைவில் களரிக் கண்மாய்க்குக் கிழக்கே அமைந்து உள்ளது. இது தற்பொழுது பேச்சில்லா கிராமமாக உள்ளது. இதன் பெரு எல்லையாகக் குறிக்கப்பட்டுள்ள வேளானேரி, இன்று வேளானூர் என்று வழக்குப் பெற்றுள்ளது. சேதுபதி மன்னரது தானம் பெற்ற பிறகு இந்த ஊரின் பெயர் முத்துராமலிங்கபுரம் என்ற வழங்கப்பட்டதை செப்பேட்டின் வரி (38) புலப்படுத்துகிறது.

## செப்பேடு எண் 62

(நகல்)

(முதல்பக்கம்)

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகஹ௱ந சகாப்தம் 1684 கலியப்தம் 4863
2. இதின்மேல் செல்லாநின்ற சித்திரபானு நாம ஸம்வத் ஸரமும் தெட்சிணா
3. யனமும் சரத்ரிதுவும் அற்பிசிமாசமும் கிருஷ்ணபட்சமும் அமாவாசியும் பா
4. னுவாசரமும் சித்திரா நட்சத்திரமும் சுபயோக சுபகரண மும் கூடின சு
5. பதினத்தில் ஸ்ரீமது தேவநகராதிபன் சேதுமூலரட்சா துரந் தரன் ராம
6. னாதசுவாமி காரியா துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் ப
7. ரராச கெசசிங்கம் இரவிகுலசேகரன் இரவி மாற்த்தாண் டன் சொரிமு
8. த்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுரன் அரியதள விபா

---

* நூலாசியரது கள ஆய்வில் திருப்புல்லாணி கிராமம் தெற்கு ரதவீதி இரா. தேசிகளிடம் இருப்பது கண்டு படி எடுக்கப் பட்டது.

அமைப்பு : 28.2. செ.மீ × 19 செ.மீ.

9. டன் பாசைக்குத்தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு
10. கொடாதான் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் சோழ மண்டல பிறதி
11. ஷ்டாபனாசாரியன் தொண்டலமண்டல சண்டப்பிரசண்டன் ஈளமும் கொங்
12. கும் யாழ்ப்பானராயன் பட்டணமும் கெசவேட்டை கொண் டருளிய ராசா
13. திராசன் ராசபரமேசுரன் ராசமாற்த்தாண்டன் ராசாகெம் பீரன் பரதள
14. விபாடன் உரிகோல்சுரதானன் அந்தம்பர கண்டன் சாடிக் காரர் கண்டன் சா
15. மித்துரோகியள் மிண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்
16. கம் மதுரை ராசர் சிங்கம் ஆத்தில்ப் பாய்ச்சி கடலில்ப் பாய்ச்சி மதப்புலி அடை
17. க்கலங்காத்தான் தாலிக்குவேலி சத்துராதியள் மிண்டன் வன்னியரா
18. ட்டந் தவிள்ந்தான் மேவலர்கள் கோளாரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான்
19. வீரகெம்பீர கீர்த்திப்பிரதாபன் ஆரியர் மானங்காத்தான் தொண்டியன்து
20. றை காவலன் துரகரேவந்தன் அனுமகேதனன் கெருட கேதனன் குடைக்கு கற்
21. ணன் பரிக்கு நகுலன் கருணாகடாட்சன் குன்றினுயர் மேருவை குன்றாய் வளைகுணில்
22. பொரித்தவன் திலதனுதல் மடமாதர் மடலெழுத வருசமு கன் விசயலெட்சுமி
23. காந்தன் கலைதெரியும் வீற்பன்னன் காமினி கந்தப்பன் வீரதண்டை சேமத்தலை விளங்
24. குமிரு தாளினான் ராசகுல திலகன் ராசமனோபயங்கரன் மன்னரில் மன்னன் ம

25. குடவற்த்தந வேந்தன் மன்னர் சூடாமணி துட்டரில் துட்டன் துட்டநி
26. ட்டூரன் அட்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி
27. நாராயணன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்தவி விழ்ந்தான் ஒட்டி
28. யர் மோகந்த விள்த்தான் மனங்கலங்கினும் மனங்கலங்கா தான் அசுவபதி நர
29. பதி, கெசபதி, தளபதி, அரிவுக்கு அகத்தியன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்
30. கு விசயன் மல்லுக்கு வீமன் தாலிக்கு வேலி அன்னசத்திர சோமன் அடியார் வேளைக்க
31. ாறன் செம்பி வளநாடன் பூலோகதேவேந்திரன் செங்காவிக் குடையான் ஸ்ரீமது
32. உறிரண்ய கெற்பயாசி முத்துவிசயரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவார்கள் பேர
33. ன் முத்துவிசய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் பூதானம் பண்ணி
34. க்குடுத்த கிறாமமாவது செம்பிநாட்டில் சிக்கில் உள்ளிட்ட பத்தில் சின்னநா
35. ட்டான் பெரியநாட்டானுக்கு எல்கையாவது கீள்பாற்க் கெல்கை செகுட்டு
36. மடைவாய்க்காலுக்கும் அயக்குடிக்காலுக்கும் மேற்கு தென்பாற்க்கெல்கை த
37. த்தங்குடிப்பாதைக்கு வடக்கு மேல்பாற்க்கெல்கை உப்புப் பாதைக்கு கிளக்கு வடபா
38. ர்க்கெல்கை பண்ணந்தைப்பாதைக்கு தெற்க்கு இன்னான் கெல்கைக்குள்
39. ளான சின்னநாட்டான் பெரியநாட்டானை சூரியோபராக புண்ணியகாலத்தில்

### இரண்டாம் பக்கம்

40. ஆதிசேதுவில் பூதானம் நாநாகோத்திரத்தில் நாநாசூத்திரத்தில் நாநாசா
41. காத்தியாயியாளான அசேஷவித்துவத் மகாசெனங்களுக்கும் பூதானம் ப
42. ண்ணிக்குடுத்தபடியினாலே சின்னநாட்டான் பெரியநாட்டானுக்குள்ள நஞ்
43. சை புஞ்சை மாவடை மரவடை கீள்நோக்கிய கிணரு மேல்நோக்கிய மர
44. ம் நிதி நிட்சேப செலதரு பாஷானாட்சிண்ணியா காம்மியம் என்று சொல்லப்பட்
45. ட அஷ்ட்டபோக தேச சுவாமியங்களும் ஆசந்திராத்க் புத்திர பவுத்திர ப
46. ாரம்பறையாக தானாதி வினிமய விக்கிறயங்களுக்கும் யோக்கியமாக சகிரண்
47. ணிய பூறுவகமாக பூதானம் பண்ணிக்குடுத்தபடியினாலே இந்த தற்மத்தை
48. பரிபாலனம் பண்ணிவிச்சவன் கெங்கைக் கரையிலேயும் ராமே
49. சுரத்திலேயும் கோடிசிவலிங்க பிறதிஷ்டையும் கோடி விஷ்ணு
50. ப்பிறதிஷ்டையும் கோடி பிறும பிறதிஷ்டையும் பண்ணிவிச்சு கிரு
51. தத்தை அடைவாராகவும் இந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினவன்
52. கெங்கைக் கரையிலேயும் தனுக்கோடிக் கரையிலேயும் மாதா
53. பிதாவையும் குருவையும் பிறாமணரையும் கோவதையும் பண்ணி
54. ன தோஷத்திலே போகக் கடவாராகவும் இந்தப்படி சம்மதித்து

55. ஸ்ரீ மதுமுத்துவிசயரெகுனாதச்சேதுபதி காத்ததேவரவர்கள்
56. சின்னநாட்டான் பெரியநாட்டான் அஷேசவித்துவத் மகாசெ
57. னங்களுக்கு பூதானம் பண்ணிக்குடுத்தோம் தாந பாலந யோர்மத்யே
58. தாநாத் ஸ்ரயோது பாலநம் தாநாத் ஸவர்க்கமவாப் நோதி பால
59. நாத் அச்சுதம் பதம் ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாது பால
60. தம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேதுஉ

## செப்பேடு எண். 62

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துவிஜய ரெகுநாத சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | வித்வத் மகாஜனங்கள் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சகம் 1684 சுக்கிரபானு அர்பசி (கி.பி. 17-10-1762) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | சின்னநாட்டாண், பெரிய நாட்டாண் கிராமம் தானம். |

இந்த தானத்தை வழங்கிய முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக எழுபத்து ஆறு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் வரையப்பட்டுள்ளன. அவைகளில் மதுரை ராசசிங்கம், மகுடவர்த்தனர் வேந்தன் என்ற இருவிருதுகள் மட்டும் புதியவை, மன்னர் பெயரும் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதியென சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

செம்பிநாட்டின் தென்பகுதியான சிக்கல் பத்தில் உள்ள சின்னநாட்டான் பெரியநாட்டான் என்ற ஊரினை வித்வத் மகாஜனங்களுக்கு சேதுபதி மன்னர் தானம் கொடுத்ததைச் சொல்லும் ஆவணமாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது. இந்த ஊர் இன்றைய முதுகுளத்தூர் வட்டப்பகுதியில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று அந்த ஊர் இல்லை.

ஆனால் இந்த ஊருக்கான பெருநான் கெல்கையாக குறிப்பிடப்படும் தத்தங்குடி பண்ணந்தை ஆய்க்குடி ஆகிய ஊர்கள் இன்றும் வழக்கிலுள்ளன. இந்தச் செப்பேட்டின் வரி

37ல் காணப்படும் ''உப்புப்பாதை'' என்ற சொல்லிலிருந்து வாலிநோக்கம் கடற்கரைப்பகுதியில் முந்தைய காலங்களில் ஏராளமான உப்பளங்கள் அமைந்திருந்த பகுதி என்பதும் அங்கிருந்து உப்புப் பொதிகள் கொத்தங்குளம் வழியாக உள்நாட்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்டதும் தெரியவருகிறது. வண்டிப் போக்குவரத்துக்கு மட்டும் பயன்படும் பெரு வழிகள் அந்தக் காலத்தில் மிகவும் குறைவாக இருந்ததால், இத்தகைய செப்பேடுகளில் அந்தப்பாதைகள் நான்கு எல்லைகளில் துலக்கமாக இடம் பெற்றுள்ளன. முன்னர் அளித்த செப்பேடுகளில் சேதுப்பாதை, இராமநாதபுரம் பாதை, பண்ணந்தை பாதை என்ற வழிகள் நான்கு எல்லைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

## செப்பேடு எண் 63

(நகல்)

1. சொத்திஸ்ரீ சாலிவாகன சகார்தம் 1685 இதன்மேல் செல்லாநின்ற சுவானுநாம சம்மட்சரத்தில் உத்தராயணத் தில் யேவந்தருனறுதுவில் புஷியமாசத்தில் அபரபட்சத்தில்

2. அமாவாசியும் சோமவாரமு உத்திரநட்செத்திரமும் சுப யோக சுபகறணமும்பெற்ற சுபதினத்தில் ஸ்ரீராமதனு கோடி சேதுமூலத்தில் ஸ்ரீமன் மகாமண்ட

3. லேசுபரன் அரியராயிரதழவிபாடன் பாசைக்குக் தப்பு வாயிரகண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு குடா தான் பாண்டிமண்டலதாபனசாரியன்

4. சோழமண்டல பிரதிஷ்ட்டாபனாசாரியன் தொண்ட மண்டல சண்டபிரசண்டன் பூறுவதெட்சன பட்சிம உத்தர ஈழமுங் கொங்கும் யாழ்ப்பணமும் அளித்துக்துக்கெச

5. வேட்டைகொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுபரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் பட்டமானங்காத்தான் துட்டாயிரகண்ட புவனேகவரன்

6. பூபாலன் கோபாலன் அஷ்ட்டதிக்கு மனோபயங்கரன் துஷ்ட்டனிக்கிரக சிஷட்டபரிபாலனன் வேதியர்காவலன் அரசராவணராமன் அந்தம்பிறகண்டன் சாமித்

7. துறொகியள் முண்டன் பஞ்சவீரன் ராயராகுத்தன் பனுக்கு வாரகண்டன் வைகைவழநாடன் கொட்டமடக்கியவை யாளி நாறாயணன் இவுளிபாவடிமிதித்தேருவார்கண்டன்

---

‡ ASSI. Vol IV. pp. 98-99.

8. வீரவெண்பாமாலை உயசாமற உல்லாசநழின அலங் காரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் பகை மன்னர் சிங்கம் துரராசசிங்கம் ஆத்துப்பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடை

9. க்கலங்காத்தான் தாலிக்குவேலி செம்பிவளநாடன் தொண் டியன் துரைகாவலன் துரகரேவேந்தன் அனுமகேதனன் கெருடகேதனன் புலிக்கொடி புரவலன் கொடைக்குகற்னன்

10. வில்லுக்குவிசையன் சொல்லுக்கரிச்சந்திரன் கருனாகடாச் சன் விஜயலட்சுமிகாந்தன் பரத நாடகப்பிரசன்னன் வீர தண்டைசேமத்தலைவிளங்குமிரு

11. தாளினான் தேவைநகராதிபன் சேதுகாவலன் சேதுமூல ரெட்சாதுரந்தரன் ஸ்ரீராமனாதசுவாமி காரியதுரந்தரன் செங்காவிக்குடையான் அன்னசத்திர ஸோமன் ஸகல ஸாம்பிறாட்சிய

## இரண்டாம் பக்கம்

12. லெட்சுமிவாசனான துகவூர்கூத்ததில் கரத்தூறான குலத் துங்கசோழநல்லூர் கீர்பால்விரையாத கண்டனலிருக்கும் ஸ்ரீமன் இரணியகெற்பயாசி ரவிகுல முத்துராமலிங்க விசையரெகுநாதச் சேதுபதிகாத்த

13. தேவரவர்கள் இராமீசுவரம் ராமனாதசுவாமி பூசாபறாய ணறான காசிபகோத்திரத்தில் ஆபஸதம்ப சூத்திரத்தில் யெசுசாகாத்திபகறான தாதாசிவராமபட்டர் புத்திரன் ரெகு நாத குருக்களுக்கு சகிதண்ணியோதக

14. தாறாபூறுவமாகத் தீற்தபுரோகிததான சாதனப்பட்டையம் குடுத்தபடி நாம் தீர்த்தசேதுயாத்திரைக்கு குடும்பத்தோ டெவந்ததில் வயிரவதீந்தமுதல் தனுஷ்கோடி அனுப்பு தீற் தம் வரைக்கும் தீர்த்தஸ்தானங்களும்

15. ராமனாதசுவாமி பருவதவர்த்தனியம்மன் மற்ற சன்னதி சுவாமி தெரிசனங்களும் சாற்த முதலானதுகளுக்கும் தம் முடையகையினாலே பவித்திரம் வாங்கிக்கொண்டு யாத்தி ரை முளுவதும் நடப்பிவிச்சுக்கொ

16. ண்டதினாலே இனிமேல் நம்மிடவம்மிசத்து ராசாகூகள் தீர்த்தயாத்திரைக்கி வந்தால் அவர்களுக்கு நீரும் உம் முடைய வம்முசத்தாரே புரோகிதம் பண்ணிவிச்சு அதில் வருகிற ஊதிபம் முளுவதையும் நீரே புரோ

17. கிதகாணியாச்சியாய் ஆதிசந்திராற்மாக சந்ததிப்பிரவேச மாக புத்திரபவுத்திர பாரம் பரையாயி ஆண்டனுபவித்துக் கொள்ளக்கடவராகவும் இந்த தர்மத்தை நம்மிடவம்மிசத் தில் யாதாமொருதர்

18. பரிபாலனம் பண்ணின பேர்களுக்கு காசியிலேயும், ராம தனுஷ்கோடியிலேயும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்ட்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவார்களாகவும் இந்த

19. தற்மத்தை அகிதம் பணணினபேர்கள் கெங்கைக்கரையி லேயும் சேதுக்கரையிலேயும் காராம் பசுவையும் தேவப் பிராமணானையும் மாதா பிதா குருவையும்வதைபண்ணின தோஷத்தில் போ கக்கட வா

20. ராகவும் ஸ்ரீராமநாதசுவாமி சகாயம்

21. இந்த தற்மசாதனபட்டயம் யெளுதினேன் ராயசம் சொக்கு கைஎளுத்து.

## செப்பேடு எண். 63
(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் தாதா சிவராம பட்டர் புத்திரர் ரெகுநாத குருக்கள் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1685 சுவான ஆண்டு (கி.பி. 1763) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | ரெகுநாத குருக்களுக்கு கோயில் மிராசு உரிமை வழங்கல் |

இந்த மன்னரது விருதாவளியாக ஐம்பத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் புவனேஸ்வரன் (வரி 5) பூபாலன், கோபாலன் (வரி 6) உபயசாமர உல்லாச நளினன் (வரி 8) என்ற நான்கு புதிய சிறப்புப் பெயர்களைத்தவிர ஏனையவை இவரது முந்தையோரான சேதுபதி மன்னர்களது பட்டயங்களில் காணப்படுபவை.

சேதுபதி மன்னரும், அவரது குடும்பத்தினரும் சேது யாத்திரைக்கு வரும் பொழுது தீர்த்தப் புரோகிதம் செய்து வைப்பதற்கு இராமேசுவரம் தாதா சிவராம படடர் புத்திரன் ரெகுநாத குருக்களுக்கு காணியாட்சி வழங்கும் தான சாதனம் இந்தச் செப்பேடு. மன்னரும் குடும்பத்தினரும் யாத்திரை மேற்க் கொண்ட பொழுது ரெகுநாத குருக்கள் பவித்ரம் வழங்கி இராமேசுவரம் வைரவ தீர்த்தம் முதல் தனுஷ்கோடி அனுப்பு தீர்த்தம் வரையான தீர்த்தக் கட்டங்களுக்கும் இராமநாத சுவாமி, பர்வதவர்த்தினியம்மன் சன்னதிகளிலும் தரிசனம், சிரார்தம்

ஆகியவை செய்வித்தும், மன்னரது பிரீதிக்கு உரியவரான காரணத்தினால் ரெகுநாத குருக்களும் அவரது வழியினரும் மன்னருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பரம்பரையாக புரோகிதம் செய்து அதன்வழி வருவாய்களை அனுபவித்துக் கொள்ளும் காணியாட்சிக்கு இந்தச் செப்பேடு ஆதாரமாக உள்ளது.

இந்தப் பட்டயத்தில் பல சமஸ்கிருதச் சொற்கள் விரவி வந்துள்ளன. அவைகளில் தீர்த்தம், புரோகிதம், சேது யாத்திரை (வரி 3) சார்த்தம், (சிரார்த்தம் வரி 4) பவித்ரம், வம்சத்தார் புத்திர, பவித்ர பாரம்பரிய, தலமும், பிரதிஷ்டை, சுகிர்தம், மாதா, பிதா, குரு, சகாயம், என்பன அந்தச் சொற்கள்.

வைரவ தீர்த்த முதல் தனுஷ்கோடி அனுப்பு தீர்த்தம் வரை பல தீர்த்தக்கட்டங்கள் இராமேசுவரம் நகரிலும், தீவிலும் அமைந்து புனித தீர்த்தங்களாகக் கருதப்பட்டு வந்தன. பாம் பனில் இருந்த வைரவ தீர்த்தம் கால நீட்சியில் மறைந்து விட்டது 23-12-1964ல் ஏற்பட்ட கடற்கோளினால் தனுஷ்கோடி தீர்த்தமும் அழிந்து விட்டது. இராமேசுவரம் நகரிலும் திருக் கோயிலுக்கு உள்ளேயும் உள்ள மொத்தம் இருபத்து இரண்டு தீர்த்தங்கள் சேது யாத்திரை மேற்கொள்பவர்களுடைய நீராட லுக்குரியதாக இன்று இருந்து வருகின்றன. இந்த தீர்த்தங்களின் புனிதத்தை கி.பி. பதினைந்தாவது நூற்றாண்டில் நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய சேது புராணம் என்ற இலக்கியத்தில் பரக்க காணலாம்.

## செப்பேடு எண். 64

(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1605 இதின் மேல் செல்லாநின்ற ஸ்வபானு னாம சம்வச்ரத்தில் உத்த ராயண வசந்த ரிது ஜேஷ்ட மாதம் நவமி ஞாயித்துக் கிழமையும்

2. சந்திர பிரபையான் யோக சேஷ வாகன பெத்த ——— ——————— ஸ்வஸ்தி ஸ்ரீ மன் தேவை

3. நகராதிபன் சேது மூல ரட்சா துரந்தரன் பரராஜ சேகர பரராஜ கேசரி பரராஜ

இராமநாத சுவாமி துணை

4. கஜசிங்கம் இரவிகுல சேகரன் சொரிமுத்து வன்னியன் புவனேக வீர

5. ஸ்ரீ மகா மண்டலேசுவரன் அரியாயிர தள விபாடன் பூசைக்கு தப்புவ

6. ராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்

7. டி மண்டலத் தாபனாச்சாரியன் சோழ மண்டல பிரதிஷ்டா பனாச்சாரியன் தொண்டை மண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்

8. கும் யாழ்ப்பாண பட்டணமும் எம்மண்டமும் அளித்து கெஜ வே

9. ட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச பரமேஸ்வரன் ராச மார்த்தாண்டன்

---

‡ சென்னை அருங்காட்சியகம், எழும்பூர். சென்னை.

10. ராஜ கெம்பீரன் இளஞ்சிங்கம், தளசிங்கம் பகைமன்னர் சிங்கம் துலை

11. ரராயன் ஆத்தில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங் காத்

12. தான் தாலிக்கு வேலி சத்துராதியள் மிண்டன் துட்டராயிர கண்டன் வீர கஞ்சுகன் வீர வள நாடன் வன்னியராட்டந் தவுழ்த்

13. தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீ

14. ர மகா கெம்பீரன் கீர்த்தி பிரதாபன் பரத நாடகப் பிரவீணன் ஆரியர்

15. மானங்காத்தான் தொண்டியந்துறைக்காவலன் துரக ரேபந்த

16. ன் அனும கேதனன் கருட கேதனன் வியாக்குர கேதனன் சிம்ம கேதன

17. ன் குடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பாதாளவிபாடன் உரிகோல் சுரதா

18. னன் படைக்கும் கொடைக்கும் ஓடாத கண்டன் தந்தார் தாள் பாதாளம் சேர்

19. ந்தான் மனுநீதி மன்னன் அன்னதான சீலன் மலைகலங்கி னுங் மனங் கலங்

20. காத கண்டன் செம்பிவள நாடன் அளகன் அகளங்கன் அதிக உபரியான

இரண்டாம் பக்கம்

21. வைகை அடைச்சு ரெகுநாத சமுத்திரமாக பெரியகண்மாய் உண்டு பண்ணி

22. னவன் குண்டாத்தை அடைச்சு இராச்சியத்துக்கு இரெகு நாத காவேரியாக உண்டு ப

23. ண்ணினவன் ஏழையை இரட்சிக்குப் தயாபரன் சத்துரு வாதியள்க்கு இடி இ

24. யங்கள பல்லக்கும் சிங்க முகமும் பஞ்சவர்ண பாவா டையும் நட நாட

25. க சாலையும் உண்டான தேவன் பலத்துக்கு ஆதிசேசன் அழகுக்கு வால
25. சீவகன் காமினி கந்தப்பன் கன கோபாலன் பஞ்சபாணா வதாரன் பாதள
27. விபாடன் தட்சிண சிங்காசன சேனாதிபதி சேதுகாவலன் அசுபதி கெஜபதி, நரப
28. திகளுக்கு மேலான சேதுபதி செங்காவிக் குடையன் இரண்ய கெற்ப
29. யாசியான முத்துரெகுநாத சேதுபதி காத்ததேவரவர்கள் பரத்வாஜ் கோ
30. த்திரத்தில் ஆபஸ்தம்பசூத்திரத்தில் யஜுர்பிரியாபரான சே
31. சவதானியின் புத்திரன் சந்திரசேகர அவதானிக்கு சகி ரண்ணியமாக
32. அரைவாரியாக தாம்பிர சாதனம் பண்ணிக் கொடுத்ததான தாம்பிர சாசனமாவது
33. கிடாத்திருக்கை நாட்டில் அரியக் குடியான கடம்பவன நல்லூர்
34. இந்த கிராமத்துக்கு நான்கு எல்கையாவது மஞ்சி ஊர் புஞ்சைக்குக் கிழக்கு பெரும்பாதைக்கு தெற்குபோகலுருக்கு
35. மேற்கு புத்தூருக்கு கிழக்கு பெரும்பாதைக்கு தெற்கு போகலுருக்கு
36. அரியக்குடிக்கு பிரதிநாமமான முத்து ரெகுநாத சமுத்தி ரத்தில் முன்
37. அக்கிரகாரம் கால் பங்கு நீக்கிய கிராமமும் முக்கால் பங்கும் முன் அ
38. க்கிரகாரம் கால் பங்கு பின் சர்வ சேவார்த்திகளில் ஜீவிதம்
39. பங்கும் ஒன்றும் தனுக்கோடிக் கரையில் தானம் பண்ணிக் கொடுத்த படியினா
40. லே இந்தக் கிராமம் முக்கால் பங்கும் முன் அக்கிரகார கால் பங்கில்

41. பதினாலில் ஒரு பங்கும் — — — — — — — —
42. பிறவிடை திட்டுத்திடல், கீழ் நோக்கிய கிணறும், மேல் நோக்கிய மரமும் நிதி நிட்சேப
43. சலதரு பாசான ஆசெண்ணிய ஆகம்மிய சித்தி ஸ்வாப்திய மெனச்
44. சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ சுவாமியங்களும் வினய விக்கிரையங்களுக்கு போக்கிய
45. மாக புத்திர பௌத்திர ஆசந்திரராதித்ய சந்திரப்பிரவேசம் ஆண்டனுபவித்துக் கொள்ளக்
46. கடவராகவும், இந்த தர்மத்திற்கு யாதொருவர் அகிதம் பண்ணிண பேர்கள்
47. கங்கைக் கரையிலே காராம் பசுவை வதை பண்ணின தோஷத்திலே போகக்
48. க் கடவார்களாகவும் இந்த தர்மத்தை பரிபாலணம் பண்ணிகிற பேர்கள்
49. கோடிக் கன்னிகாதானமும் கோடி சிவலிங்க பிரதிட்டையும் அஷ்வமேகமும் பண்ணிய
50. பண்ணிய பலன் அடைவார்களாகவும் இந்த பட்டயம் சின்னப்பக்தர் மகன் வேலாயுதம் உ

## செப்பேடு எண் 64
(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : சேஷ அவதானிமகன் சந்திர சேகர அவதானி
3. செப்பேட்டின் காலம் : சகம். 1685 சோபானு ஆண்டு பங்குனி மாதம் (கி.பி.1763)
4. செப்பேட்டின் பொருள் : அரியக்குடி கிராமம் மேள்படி அவதானியாருக்கு தானம்.

முந்தையச் செப்பேட்டில் குறிக்கப்பட்டவாறு பாலகரான இந்தச் சேதுபதி மன்னர் பெயரில் அரியக்குடி கிராமம் தானம் வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் இந்த மன்னரின் முந்தையோர் களது சிறப்புப் பெயர்கள் இந்த மன்னரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளுடன் பலத்துக்கு ஆதிசேஷன், கனகோபாலன் தட்சணசிங்காசன சேனாதிபதி என்ற மூன்று புதிய பெயர்களும் இந்த விருதாவளி யில் சேர்க்கப்பட்டுள்ளன.

சந்திரசேகர அவதானி என்ற சான்றோருக்கு அரியக்குடி என்ற சிற்றூரினை சேதுபதி மன்னர் தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. நிரம்பிய அறிவும் நிகரில் லாத இறையருளும் எய்தியவர்கள்தான் அரிய அவதானங் களைச் செய்து காட்ட முடியும். அவதானம் என்பது அதிசயிக் கத்தக்க கலையாகும். இறைவனின் அருட் கொடையுங்கூட மிகமிக வேகமாக செயல்படும் மனித நினைவாற்றலைக் கொண்டு கேட்போர் வினாக்களுக்கு இலக்கண இலக்கிய இலௌகீக சம்பந்தமான பதில்களை தயக்கமின்றி சரியாக

தெரிவிக்கும் முறைதான் அவதானமாகும். கேள்விக்கணைகளை அடுத்தடுத்து பலர் ஒரே சமயத்தில் எட்டு வினாக்களாகவும் தொடுப்பது உண்டு. இவைகளுக்கு பதிலிறுக்கும் ஆற்றல் பெற்றவர்கள் முறையே அட்டவதானி, சோடஷ அவதானி, சதாவதானி என்று அழைக்கப்பட்டனர். இந்தக் கலையில் தேர்ந்து விளங்கியவர்கள் நமது தமிழகத்தில் பதினெட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் ஆங்காங்கு ஓரிருவர் இருந்தனர். அவர்களில் முதுகுளத்தூர், அட்டாவதானம், பெரிய சரவணப் பெருமாள் கவிராயர். சென்னை, அட்டாவதானம் வீராச்சாமி செட்டியார் திருப்பத்தூர் அட்டாவதானம் அருள் வாக்கி அப்துல்காதிர் புலவர், முதுகுளத்தூர் அட்டாவதானம் கலியாணசுந்தரம் பிள்ளை, கோட்டாறு சதாவதானம் மகாமதி சேகுதம்பிப்பாவலர் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

இத்தகைய அரிய அவதானக் கலையில் வல்ல அறிஞர் ஒருவரைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் இந்த நிலக்கொடையைச் சேதுபதி மன்னர் வழங்கியுள்ளார். இந்தக் கொடையினைப் பெற்ற சந்திரசேகர அவதானிகள் தந்தையான சேஷனும் ஒரு சிறந்த அவதானியாக இருந்தார் என்பதும் நான்கு வேதங்களில் ஒன்றான யஜுர் வேதத்தில் வல்லவராக விளங்கினார் என்பதும் ''யஜுர் பிரியாபரரான சேஷாவதானி'' (வரி 35, 36) என்ற செப்பேட்டுத் தொடர் தெரிவிக்கின்றது,

தானம் வழங்கப்பட்ட அரியக்குடி கிராமம் கிடாத்திருக்கை நாட்டில் அமைந்திருந்தது. இதற்கு கடம்பவன நல்லூர் என்ற பெயரும் இருந்ததை செப்பேட்டு வரி 38 தெரிவிக்கின்றது. இந்தக் கிராமப் பெயர் தானம் வழங்கப்பட்ட பிறகு முத்துரெகு நாத சமுத்திரம் என்ற புதிய பெயரைப் பெற்றிருந்தது. இன்றைய பரமக்குடி வட்டத்தில் போகலூருக்குத் தென்மேற்கே இரண்டு கல் தொலைவில் அரியக்குடி புத்தூர் என்ற பெயரில் தற்பொழுது வழங்கப்படுகிறது. பெரும் நான்கு எல்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மஞ்சியூர் தற்பொழுது மஞ்சூர் என்று வழக்கில் இருந்து வருகிறது. பெயருக்குத் தக்கவாறு (மஞ்சு மேகம்) இந்த ஊர் இன்றும் மழைவளம் பெற்று வறட்சி இல்லாத ஊராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. சேதுபதி சீமையின் வட கிழக்குப் பகுதியில் அரியக்குடி என்ற பெயரினை உடைய பேரூர் ஒன்றும் உள்ளது. இந்த ஊர் நாட்டுக்கோட்டைப் பெருமக்களால் தென் திருப்பதியாகப் போற்றி வரப்பெறுகிறது. இங்குகோயில் கொண்டுள்ள இறைவர் ''திருவேங்கடமுடையான்'' என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறார்.

# செப்பேடு எண் 65

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1686 யிதின் மே
2. மல் செல்லாநின்ற தாருணஷூ ஆடிமீ 15உ தெட்சி ணாயண
3. த்தில் சுக்கிலபட்சமும் புதவாரமும் சதுர்தெசியும் உத்திராட ந
4. ட்சத்திரமும் சுபநாம யோகமும் வாலவாகரணமும் பெற்ற
5. புண்ணிய தினத்தில் ஸ்ரீ மகாமண்டலேசுவரன் அரிய
6. ராயதளவிபாடன் பாசைக்கி தப்புவராய கண்டன் கண்
7. டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் பாண்டி மண்ட
8. லதாபநாசாரியன் சோளமண்டல பிரதிட்டாப னாசாரிய
9. ன் தொண்டமண்டல சண்ட பிறசண்டன் பூர்வதெட்சிண பச்சி
10. ம உத்தரம் மூலமும் கொங்கும் யாள்ப்பாணமும் எம்மண்ட
11. லமும் அளித்து கெசவேட்டை யாண்டருளிய ராசாதி ராசன் ர
12. ாசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் பட்ட ம

---

ARE. A, 29/1947
இராமலிங்க விலாசம் அரண்மனை, அருங்காட்சியகம்
அமைப்பு : 23 செ.மீ. × 19 செமீ.

13. ரனம் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீரன் பூபா
14. லன் கோபாலன் அட்டதிக்கு மனோ பயங்கரன் துட்டநிக் கிரக சி
15. ட்ட பரிபாலனன் வேதியர் காவலன் அரசராவணராமன் அந்த
16. ம் பிறகண்டன் சாமித்துரோகி யள்முண்டன் பஞ்சவர்ண ராய
17. ராவுத்தன் பனுக்குவார்கண்டன் வைகை வளநாடன் கொட்
18. மடக்கி வைய்யாளினாறாயணன் இவுளிபரவடி மிதித்தேரு
19. வார்கண்டன் வீரவெண்பாமாலை உபைய சாமரம் உல்லாச
20. நளினன் அலங்காரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைம
21. ன்னர்சிங்கம் மதுரைராய சிங்கம் ஆற்றுப்பாச்சி கடலில் பாச்சி
22. மதப்புலி அடைக்கலங் காத்தன் தாலிக்கிவேலி செம்பி
23. வளநாடன் தொண்டியன் துறைகாவலன் துரக
24. ரேவந்தன் அனுமகேதனன் கெருடகேதனன் புலிக் கொடிப் பு
25. ரவலன் குடைக்கி கற்ணன் வில்லுக்கு விசையன் சொல்லு
26. க்கு அரிச்சந்திரன் கறுணா கடாச்சன் விசையலெட்சுமி நர்த்தன
27. பரத நாடகப் பிரவீணன் கலை தெரியும் விற்பன்னன் வீரதண்
28. டைசேமத்தலை விளங்குமிரு தாரினான் தேவைநகராதி பன் சேது
29. காவலன் சேதுமூலாரெட்ச துரந்தரன் ஸ்ரீ ராமனாதசுவாமி
30. காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் குருபூசை மரவாத கீ
31. ர்த்திபன் செங்காவிக் குடையான் அன்னசத்திரசோமன்

32. சகல சாம்பிறாச்சிய லெட்சுமி விலாசன் துகவூர்க்கூத்தத்தில்
33. காத்துரரான குலோத்துங்க சோளநல்லூர் கீழ்பால் வி
34. ரையாத கண்டனிலிருக்கும் இரணிய கெர்ப்பயாசி
35. முத்துராமலிங்க விசைய ரெகுனாத சேதுபதி காத்த ே
36. தவரவர்கள் செம்பினாட்டில் தீயனூரிலிருக்கும் செந்தில்
37. பெருமாள்பிள்ளை புத்திரன் பிறதானி தாமோதரம்பிள்ளை
38. உபையமாக ஷை கட்டளை இராமனாதசுவாமி பறுவத வ
39. ர்த்தனி அம்மன்பூசை னெய்வேதனத்துக்கு இராமனாத ப
40. ண்டாரமவர்கள் பாரிசம் தர்ம சாதனம் தாம்புர சாதனம் ப
41. ட்டையம் யெளுதிக் குடுத்தபடி அஞ்சு கோட்டை பத்தில்
42. நிலமளகிய மங்களம் கிராமமும் ஷை கண்மாயு ஏந்தலு
43. ம் பிரவடை இன்னாங் கெல்கைக்குள்பட்ட நஞ்சை புஞ்
44. சை நிலமும் திட்டு திடல் மாவடை, மரவடை வரி மகமை
45. தோப்புத் துரவு மேல்னோக்கிய மரம் கீள்நோக்கிய கிண
46. ர்நீரும் பாசியும் குடிபடை பள்ளு பறை நிதிதிட் சேபசெ
47. லதரு பாசானகாமியமென்று சொல்லப்பட்ட அட்டபோக ெ
48. தச்சுவாமியங்களும் இராமனாத சுவாமிக்கு தான் சாதனம
49. ாக அனுபவிச்சு கொள்வாராகவும் இந்த தர்மத்தை யா
50. தாமொருதர் பரிபாலனம் பண்ணிண பேர்கள் கா
51. சியிலேயும் சேதுவிலேயும் கோடி சிவலிங்க பிரதிட்
52. டையும் கோடி பிறும்ம பிரதிட்டையும் பண்ணின பலத்
53. தை அடைவாராகவும் இந் தர்மத்துக்கு அகிதம் பண்ணின
54. பேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும் கோடி பிறு
55. ம கத்தியும் சேதுவிலே காராம் பசுவை கொன்ற தோச
56. த்திலேயும் போவார்கள் இந்த இந்த தாம்பர சாதனம் எழுதின
57. து வீரப்பண்டார மகன் திருப்புல்லாணி வ
58. உ ஸ்ரீராமநாதசுவாமி சகாயம்.

## செப்பேடு எண் 65

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் ஆதினகர்த்தர் இராமநாதபண்டாரம்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1686 தாரண ஆண்டு ஆடிமாதம் 15ந் தேதி (கி.பி. 15 7-1764)
4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் இராமநாத சுவாமி பர்வதவர்த்தினியம்மன் நெய்வேதன கட்டளைக்கு கிராமதானம்

இந்தச் செப்பேட்டில் அறுபத்துஇரண்டு சிறப்புப் பெயர்கள், இதனை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாகப் கப் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளில், குருபூஜை மறவாத கீர்த்திபன் (வரிகள் 30, 31) என்ற ஒரே ஒரு புதிய அடைமொழியைத் தவிர ஏனையவை அனைத்தும் இந்த மன்னரது முந்தையோரது செப்பேடுகளில் காணப்பட்டவை. ரெகுநாத திருமலை சேதுபதியும், ரெகுநாத கிழவன் சேதுபதியும் தஞ்சைத் தரணியில் உள்ள திருவாவடுதுறை திருமடத்தின் பால் மிகுந்த அக்கரைகொண்டு அந்த ஆதின கர்த்தர்களுக்கு பலநிலக்கொடைகளை வழங்கியது போல இந்த மன்னரும் அந்த மடத்திற்கு தமது குரு தெட்சணையாக வழங்கியுள்ள காரணத்தினால் ''குருபூஜை மறவாத கீர்த்திபன்'' என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

இந்த மன்னரது ஆட்சியின் தொடக்கத்தில் பிரதானியாக இருந்தவர் தாமோதரம் பிள்ளை என்பவர். இவரது பணிக் காலத்தில் பல அரிய பணிகளை இயற்றி சேது நாட்டின்

சிறப்பை நாடறியச் செய்தார். இவரது பெயரில் வேள்விக் கோவை என்ற சிற்றிலக்கியம் இயற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவரும், சிவகங்கைச் சீமையின் பிரதானியான தாண்டவராய பிள்ளையும் உடன் பிறந்தார்களைப் போல ஒன்றுபட்டு இந்த இரண்டு சீமைகளின் நலனிற்காக உழைத்ததை ''கான் சாயபு சண்டை'' என்ற நாடோடி இலக்கியவரிகளில் காணப்படுகின்றன. இராமநாதபுரம் கோட்டைக்கு தென்மேற்கே உள்ள தீயனூர் கிராமத்தைச் சேர்ந்த இவர் கி.பி. 1770ல் கொலையுண்டு மரணமடைந்தார். இந்தச் சிறந்த பணியாளரது புண்ணியமாக சேதுபதி மன்னர் நிலமழகிய மங்கலம் என்ற ஊரை இராமேசுவரம் திருக்கோயிலின் பூஜைக்கு நிவேதனமாக வழங்கியதை இந்தச் செப்பேடு புலப்படுத்துகிறது. இந்த நிலக் கொடையை பெற்றுக் கொண்டவர் இராமநாத பண்டாரம் என்று குறிப்பிட்டிருப்பதால் அன்றைய இராமேசுவரம் திருக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பில் அந்த ஆதீன கர்த்தர் இருந்து வந்ததையும் இந்தப்பட்டயம் புலப்படுத்துகிறது.

கொடையாக வழங்கப்பட்ட நிலமழகிய மங்கலம் இன்றைய இராமநாதபுரம் மாவட்ட திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ளது. திருவாடானை நகருக்கு வடகிழக்கே எட்டுக்கல் தொலைவில் அமைந்துள்ள இந்த வளமையான ஊர் முந்தைய நிலப்பிரிவான அஞ்சுகோட்டை பற்றில் அமைந்திருந்த விவரத்தையும் (வரி 41) இந்தச் செப்பேட்டில் காணமுடிகிறது. அப்பொழுது அந்த ஊருக்கு ''நயமொழி மங்கலம்'' என்ற நல்ல செந்தமிழ்ப் பெயர் இருந்ததை கல்வெட்டுச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

ஐம்பத்து எட்டு வரிகளைக் கொண்ட இந்த செப்பேட்டினை எழுதியவர் பெயர் வீரப்ப பண்டாரம் மகன் திருப்புல்லாணி. பிறப்பிலே பண்டாரமாக இருந்தாலும் இவரது குடும்பத்தினர் திருப்புல்லாணி ஆழ்வார் போல வைணவ ஈடுபாடும் திருப்புல்லாணி தர்ப்பாசன அழகியார் மீது கொண்ட பக்தியினாலும் அந்தத் திருத்தலத்தின் பெயரையே தங்களது குழந்தையின் இயற்பெயராகச் சூட்டினர் போலும். இன்றும் சிலர், தங்கள் பெயராக, காசி, மதுரை, நாகூர் என்ற ஊர்ப்பெயர்களைச் சூட்டிக்கொள்வது ஒப்புநோக்கத்தக்கது.

## செப்பேடு எண் 66

(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1690 இதின் மேல் செல்லாநின்ற வி
2. ரோதி வருடம் ஆவணி மாதம் 21ந் தேதி பானுவாசம் திருவோண நட்சத்திரமும் பூரபட்ச
3. த்து திரியோதசியும் சோபநாமயோகமும் கபிலவாசமும் பெற்ற சுபதினத்
4. தில் ஸ்ரீ மன் மகா மண்டேலேசுவரன் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன்
5. அரியாயிர தள விபாடன் பாசைக்குத் தப்புவார் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட
6. நாடு கொடாதான் பாண்டிய மண்டல ஸ்தாபனாச்சாரியன் சோழ மண்டல பிரதிஷ்டாப
7. னாச்சாரியன் தொண்டை மண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண
8. தேசமும் எம்மண்டலமும் கெஜ வேட்டை கண்டருளிய ராஜாதிராஜன் ராஜ பரமே
9. ஸ்வரன் ராஜ மார்த்தாண்ட ராஜ கெம்பீரன் ராஜகுல திலகன் இரவிகுல சேகரன் கொ
10. டைக்குக் கர்ணன் அந்தப்பிரகண்டன் சாடிக்காரகண்டன் சாமித்துரோகியள் மி
11. ண்டன் துஷ்டரில் துஷ்டன் துஷ்டர் கொட்டமடக்கி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்

---

‡ அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.

12. னர் சிங்கம் ஆத்துப்பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங்காத்தான், தாலிக்குவேலி சத்
13. துராதியள் மிண்டன் வன்னியராட்டம் தவிழ்த்தான் தொண்டியந்துறைக் காவலன் துர
14. க ரேபந்தன் அனுமகேதனன் கருடகேதனன் சிம்மகேதனன் கொடைக்குக் கர்ணன்
15. பொறுமைக்கு தர்மன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசையன் பகைக்கு நகுலன் அறி
16. வுக்கு அகத்தியன் சத்திய அரிச்சந்திரன் வீர வெண்பா மாலை உபயசாமரன் உல்லாச
17. சல்லாபன் சங்கீத சாகித்திய வித்யா வினோதன் திலத நுதல் மடமாதர் மடல் எழுதவரு
18. சுமுகன் விசையலட்சுமி கடாட்சன் அரசராவண ராமன் அடியார்க்கு வேளைக்காரன் வீர
19. தண்டை சேமத்தலை விளங்குமிகு தாளினான் துஷ்ட நிக்கிரன் சிட்டர் பரிபாலன் துலுக்கர் தளவிபா
20. டன் துலுக்க மோகம் தவிள்ந்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகம் தவிழ்ந்தான்
21. பாதாள விபாடன் மலை கலங்கினுங் மனங்கலங்காதான் அன்ன சத்திர சோமன் பரலோக
22. தேவேந்திரன் சிவபூஜா துரந்தரன் அநேக விர்ம பிரதிஷ் டாபக்காரன் செம்பிவளநா
23. டன் செங்காவிக் கொடையும் அதன் மேல் விருது வெண் கவரி பெற்றவன் சகல சாம்பி
24. ராச்சிய லெட்சுமி நிவாசன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் துகவூர் கூத்தத்தி
25. ல் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் விள
26. ங்கிய துலாபுருஷ தானாதி சோடச மகாதான துரத்தான் இரண்ய கெற்ப யாசி இரவி
27. குல சேகர ரெகுநாத சேதுபதி காத்தத் தேவர் வங்கிசத்து காரரான

28. முத்துராமலிங்க விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் சேதுமார்க்க

29. கத்தில் வேதாள தீர்த்தத்தில் பூர்வ பாகத்தில் முத்து சாத்தக்குட்டி செட்டி குமாரன் முத்து

30. கூரி செட்டி தர்மத்துக்கு ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் ஆபஸ் தம்பவரத்தில் யஜுர் பிர

இரண்டாவது பக்கம்

31. வாயிர வங்கிகராய ரெங்கநாதபுரத்தில் இருக்கும் ஸ்ரீநிவா ச அய்யன் புத்திரன் வெங்

32. ங்கிட நாராயண ஐயன் கையில் தர்ம பத்தில் அன்னராய தண்ணீர் பந்தல் அ

33. க்கிரகாரத்திற்குமாக தானம் பண்ணிவிச்சு கொடுத்த சே திரமாவது குறிச்சி

34. க்காட்டு வட்டகையில் தர்மத்துக்குத் தானம் பண்ணின கிராமமாவது அனிச்சகுடியில்

35. ஒரூர் பட்ட இதற்கு எல்கையாவது இராஜசிங்க மங்கலம் நாட்டார் காலில் முன் ஆ

36. ட்டங்குடி காலுக்கும் அரியாங்கோட்டை எல்கைக்குத் தெற்கு புலியாத்தி

37. கண்மாய் மூலக்கரைக்கும் நேர் கிழக்கான புளியமரத்துக்கு வடக்கு மேல்

38. பாற்கெல்கையாவது நகரத்து கோட்டையேந்தல் மூலக் கரையில் பறையன்

39. உம்பளத் தோட்டத்திற்கும் கிழக்கு நகரத்து நாவிதன் உம்பளத் தோட்டத்துக்

40. கும் கிழக்கு கீழ்பார்க்கெல்கையாவது ஆட்டாங்குடிக்கா லுக்கு மேற்கு இந்நான்

41. கெல்கைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை, மாவிடை, மரவடை திட்டு, திடல் கீழ் நோக்கி

42, ய கிணறு, மேல் நோக்கிய மரம், மச்சாதி முதலாய பிரார்த்தியும் தர்மத்திற்கு தான பூ

43. ர்வமாக இராமசேது தனுக்கோடிக் கரையில் தானபூர்வ மாக பண்ணிவிச்சுக்

44. கொடுத்த படியினாலே ஆச்சந்திரர்கள் வரைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரியமா

45. க சந்திராதித்திய வரை சந்ததிப் பிரவேசம் ஆண்டு அனு பவித்துக் கொள்ளக் கடவா

46. ாராகவும் இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலேயும் சேதுவிலே

47. யும் தனுஷ்கோடிக் கரையிலேயும் கோடி கோதானமும் கோடி பிரம்ம பிரதிஷ்டை கோடி சி

48. வலிங்க பிரதிஷ்டை கோடி அஷ்வமேதக யாகமும் பண் ணின புண்ணியம் பெறு

49. வாராகவும் இந்த தர்மத்துக்கும் அகிதம் நினைத்த பேர்கள் காசியிலேயும் சேதுவிலே

50. யும் தனுஷ்கோடியிலும் கோடி கோகத்தி கோடி பிரம்ம கத்தியும் பண்ணின பாவத்தை அனுபவிப்பார்களாகவும்,

51. இந்தப்படிக்கு மதுரையில் இருக்கும் சுப்பைய பட்ட நா லங்காராய குமாரன் உத்தண்ட வைரவன் அஸ்தவிகிதம்.

## செப்பேடு எண். 66

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : ரெங்கநாதபுரம் வெங்கிட நாராயண அய்யங்கார்
3. செப்பேட்டின் காலம் : சகம் 1690—78 விரோதி வருடம் ஆவணி மாதம் 21ந் தேதி (கி.பி. 6-9-1768)
4. செப்பேட்டின் பொருள் : வேதாளை கிராமத்தில் தண்ணீர் பந்தல் அன்னசத்திரம் நடத்த அனிச்சகுடி கிராமம் தானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக அறுபத்து ஏழு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. அவைகளில் பரலோக தேவந்திரன், அநேக பிர்ம்ம பிரதிஷ்டாபகாரன் என்ற இரண்டு புதிய பெயர்கள் மட்டும் முந்தையச் செப்பேடுகளில் காணப்படாதவை.

வேதாளையில் உள்ள அன்னதான மடம் தண்ணீர் பந்தல் அக்ரகார தர்மத்தைத் தொடர்வதற்காக ரெங்கநாதபுரம் வெங்கிட நாராயண அய்யங்காருக்கு அனிச்சகுடி கிராமத்தை மன்னர் தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. வேதாளை என்ற கிராமம் இராமநாதபுரம் வட்டத்தில் மண்டபத்திற்கு அண்மையில் உள்ளது. இங்குள்ள வேதாள தீர்த்தத்தில் புனித நீராடிய சுதர்சனன் என்ற கந்தர்வன் சாப விமோசனம்

பெற்றான் எனவும் அதன் காரணமாக இந்தத் தீர்த்தம் வேதாள வரத தீர்த்தம் என்ற பெயர் பெற்றதாகத் தெரிகிறது[1]. இராமேசுவரம் திருக்கோயில் வளாகத்தில் உள்ள இருபத்து இரண்டு தீர்த்தங்களுடன் இராமேசுவரம் தீவை அடுத்துள்ள மண்டபம், வேதாளை, திருப்புல்லாணி, தேவிபட்டினம், திருப்பாலைக்குடி, உப்பூர் ஆகிய ஊர்களில் உள்ள அறுபத்து நான்கு தீர்த்தங்களில் புனித நீராடி நிர்மலம் பெறுவது ஐதீகம். இவைகளின் மொத்த எண்ணிக்கை ஐம்பத்து ஆறு எனவும், சில நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. இவைகளில் பல காலப் போக்கில் மறைந்துவிட்டன. அவைகளின் பட்டியலில் இந்த வேதாள வரத தீர்த்தமும் அடங்கும்.

ஆனால் இந்தச் செப்பேட்டுக் காலத்திற்கு முன்னர் இந்தத் தீர்த்தம் சேதுயாத்திரை வரும் பயணிகளினால் மிகவும் பயன்படுத் தப்பட்டு வந்துள்ளது. அவர்களின் நலன் கருதி அங்கே தண்ணீர் பந்தலும் அன்னதான சத்திரமும் முத்து சாத்துக்குட்டி செட்டி மகன் முத்துக்கூரிசெட்டி என்பவரால் நிறுவப்பட்டிருந்தது. இந்தத் தர்மசீலரைப் பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை. இவரது தந்தையின் பெயரிலிருந்து இவர் இராமநாதபுரம் சீமையில் வாழும் மஞ்சப்புத்தூர் ஆயிர வைசிய பிரிவு செட்டிப் பிரமுகர் என்பது தெரியவருகிறது. ஏனெனில் இந்தச் சீமையில் தெலுங்கு பேசுகின்ற தேவாங்கர், கோமுட்டி, தமிழ்பேசுகின்ற நகரத்தார், வாணியர், வேளாண் மக்கள் சுந்தரம் என்ற இளமகர் பிரிவு களைச் சேர்ந்தமக்கள் ''செட்டி''என்ற பெயர் விகுதியுடன் வழங் கப்பட்டு வந்துள்ளனர் என்றாலும் இந்த தருமத்தை நிறுவியவர் பெயர் ''முத்து சாத்துக்குட்டி'' என்று குறிப்பிடப்படுவதில் இருந்து இவர் மஞ்சப்புத்தூர் செட்டி என்பது தெரியவருகிறது. இந்தச் செப்பேட்டில் (வரி 29, 31) கண்டுள்ள ''செட்டி'' என்ற சொல் மஞ்சப்புத்தூர் செட்டி வகுப்பினரைக் குறிக்கின்றது.

தானம் வழங்கப்பட்டுள்ள அனிச்சகுடி கிராமம் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் ராஜசிங்க மங்கலத்துக்கு தென்மேற்கே உள்ளது. இந்தக் கிராமத்திற்கான

1. கல்யாணம் பிள்ளை M. A. - இராமேசுவரம் தல வரலாறு (1965) பக்கம் :

எல்கை மாலில் குறிக்கப்பட்டுள்ள ஆட்டாங்குடி, அரியாங் கோட்டை, புளியாத்திக் கண்மாய், நகரம் ஆகியவை இன்றும் வழக்கில் உள்ளன. தானம் பெற்ற வெங்கிட நாராயண அய்யங் காரது ஊரான ரெங்கநாதபுரம் எங்குள்ளது என்பது அறியத் தக்கதாக இல்லை.

இந்த தானம் வழங்கப்படுவதற்கு முன்னர், இந்த கிரா மத்தில், பறைத்தொழில், மழித்தல் தொழில் ஈடுபட்டு இருந்த வர்களுக்கு காணிகள் அளிக்கப்பட்டு இருந்ததை, எல்கைமாலில் காட்டப்பட்டுள்ள பறையன் உம்பளம், நாவிதன் உம்பளம் என்ற தொடர்கள் தெரிவிக்கின்றன. மற்றும் வரிகள், 28, 29ல் குறிப் பிடப்பட்டுள்ள நகரம், இன்று நகரமங்கலம் என வழங்கப்படு கிறது.

## செப்பேடு எண். 67

(நகல்)

1. சாலிவாகன சகாப்தம் 1702 கலியப்த 4872 இதன்மேல்
2. ச்செல்லா நின்ற பிலவ நாம ஸம்வத்ஸரத்தில் தெஷிணா
ய நத்தில்
3. சூத்திரகாமத்தில் அசுபதி நக்ஷத்திரத்தில் சுபயோக சுப
கரணமும் பெற்றசு
4. பதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூலாதுரந்தரன்
ராமனாத சுவாமி க
5. ாரிய துரந்தரன் பரராசசிங்கம் பரராசசேகரன் பரராச
கெற்ப நிருப
6. தனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேதனன் கெருட
கேதனன் சிங்க
7. கேதனன் மயூர கேதனன் ஆக்கிட கேதனன் செங்காவிக்
குடைமேல் க
8. வரியிர் வைச்ச விருதுடைய ராசாதிராசன் ராசமார்தான்
9. டன் ராசகுலத்திலகன் சங்கீத சாயித்திய வித்தியாவினோ
தன் சோள ம
10. ண்டல பிறதிஷ்டாபனாச்சாயன் தொண்டர் மண்டல சண்
டப்பிறசண்டன் பா
11. ண்டி மண்டல ஸ்தாபனாச்சாரியன் ஈளமுங்கொங்கும் யா
ள்ப்பான ராயன் பட்டண
12. மும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன் தில
தல் மடவார்கள் மடலெ

13. ளுத வரு சுமுகன் பதினெண் பாசை வீரப்பிறவீனன் அகளங்கன் அனந்தக
14. லியான குணாபி ராமன் அபிமானங்காத்தவன் மனுநீதி மறவாதவன் வே
15. தியர் காவலன் திலதநுதல் மடவார்கள் மடலெழுதவரு சுமுகன் தொ
16. ண்டியந் துறை காவலன் வீரதண்டை சேமத்தலை விழங்கு மிருதாளினா
17. ன் துஷ்ட நிக்கறக சிஷ்ட பரிபாலனன் அஷ்டலட்சுமி வாசன் சத்திய அரிச்சந்திர
18. ன் வில்லுக்கு விசையன் துகவூர்க் கூத்தத்துக்கதிபரான குலோத்துங்க சோள
19. நல்லூர்கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கி ஷாதிபரானஸ்ரீ
20. மது ஹிரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனாதசேதுபதி யவர்கள் வங்கி
21. சோத்தகரான ஸ்ரீ மதுமுத்துராமலிங்க விசையரெகுனாத சேதுபதி
22. யவர்கள் அனுமனேரி பிறிதி நாமமான முத்துராமலிங்கபுரம் நோரா
23. கோத்ரத்தில் நாநா ஸுத்ரத்தில் நாநா லாபகரான அசெஷவித்துமாசனங்களுக்கு தானபூருவ
24. கமாக தாம்புர சாஸநம் பண்ணிக் குடுத்தபடி கட்டுக்கரைக் தெ
25. க்கு குப்பைச் செய் வெங்காயக்குண்டுக்கு வடக்கு கொடிக் குளம் ப
26. ள்ளர் சேரிக்குத்ந் தெக்கு நெடுங்கண்ணிக்கு கீள்பிலை இலுப்பையடி
27. யூரணிக்குத் தெக்கு பாதைக்குடியிருப்புக்குள் கீள் புறத்தில் ரெகுநாதக்
28. காவேரிக்குள், வாய்க் காடு வெட்டிப் புஞ்சைக்கு மேற்கு கொ

29. ரைக்ள்ளம் காடுவெட்டிப் புஞ்சைக்கும் மேற்கு கோரைக் குளம் காடு வெ

30. ட்டிப் புஞ்சைக்கு மேற்கு கோரைக்குளம் கொத்துக்குள்

31. எல்கைப் புஞ்சைக்கு மேற்கு ரெகுனாத காவேரிக்குத் தெற்கு மல்லல் திரு

32. மேனிக் குடும்பம் புஞ்சைக்கு மேற்கு பொடுகட்டி யூரணிக் கு வடக்கு நாயா

பின்பக்கம்

33. ரேந்தல் விளாவடிப் பிஞ்சைக்கு வடக்கு தாளியாரேந்தல் கீள்கரை அருள

34. ப்பன் புஞ்சைக்குக் கிளக்கு தாளியாரேந்தல் வடகாலுக்கு கிழக்கு குண்டாள

35. ஊரணிக்குக் கிளக்கு வளநாட்டுப்பறையன் புஞ்சைக்குக் கிளக்கு வளநாட்டு

36. புஞ்சைக்குக் கிளக்கு கொடிக்குளம் சேதிக்குடும்பன் பொட்டப்புஞ்சைக்

37. குக் கிளக்கு கொடிக்குளம் பத்தன் புஞ்சைக்கு கிளக்கு கொடிக்குளம் கண்வா

38. ய்த் தென்கரைக்குத் தெக்கு இன்னான் கெல்கைக்குள்ப் பட்ட மாவடை. மரவடை

39. முத்தப்பன் புஞ்சைக்கு மறிச்சுக்கட்டி உள்வடக்கு கொடிக் குளம் விளாங்க

40. காட்டுத்திடல் மேல் நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு ஆத்துக்கால் ஊத்து

41. க்கால் செலரு பாஷாணம் நிதி நிகெஷபம் அஷ்ட போக தெச்சுவாமி யங்க

42. ளும் விநுவாதி விக்கிறயங்களுக்கும் யோக்கியமாக குளத் தூரான் குமாரன்

43. சுப்பய்யன் கஸ்தூரி அய்யன் குமாரன் லட்சுமி நாராய ணய்யன் லட்சுமணய்

44. ய்யன் குமாரன் சின்னச்சுப்பையன் அய்யாவளயன் குமாரன் திருவேங்கட

45. னாதன் வீரராகுவய்யன் குமாரன் சுப்பையன் ஐய்யங் கார் குமாரன் சீ

46. னிவாசன் அளகரய்யன் குமாரன் முத்தய்யன் சேனாபதி சாத்திரியார்

47. குமாரன் வேதாந்தமய்யன் நரசிங்கஅய்யன் குமாரன் குமாரன் ராமலிங்கய்யன்

48. நாரணவாத்தியார் குமாரன் வெங்கிட சுப்பன் ஆக மகா சனங்கள் பத்து

49. ப்பேருக்கும் தாம்புர சாஸனம் பண்ணிக்கொடுத்தபடி யினாலே ஆ

50. ண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்தைப் பரி பாலனம் ப

51. ண்ணினவர்கள் கெங்கைக்கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்

52. களிலே கோடி சிவலிங்க பிறதிஷ்டை கோடி கன்னிகா தானம் கோடி

53. அக்கிரகாரப் பிரதிஷ்டை பண்ணின பலனை அடைவார் கள் இந்ததற்மத்து

54. க்கு அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையிலே சேதுவிலே மதா பிதா

55. குருவை வதை பண்ணின தோஷத்தை அடைவாராகவும்

56. — — — — — — — — — — — — — —

57. — — — — — — — — — — — — — —

58. — — — — — — — — — — — — — —

59. — — — — — — — — — — — — — —

60. — — — — முத்துராமலிங்க விசைய ரெகுநாதச் சே

61. துபதி காத்த தேவாவர்கள் முத்துராமலிங்கபுரம் அசேச வித்து மகா

62. சனங்களுக்குத் தானமாகக் குடுத்தது இந்தப்படிக்கு பொக்கிசக் கணக்

63. கு ஆதினாராயண பிள்ளை மகன் தளவாத்தான் கை யெளுத்துப் படிக்கு

64. முத்துப்பத்தர் மகன் வேலாயுதம் கையெழுத்து.

## செப்பேடு எண் 67

### (விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : சுப்பையன் முதலிய பத்துப்பேர்கள்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1702 பிலவ ஆண்டு (கி.பி. 15-11-1781)
4. செப்பேட்டின் பொருள் : மேலே கண்ட பத்து மகா ஜனங்களுக்கு முத்துராமலிங்கபுரம் சர்வ மானியமாக வழங்கப்பட்டது.

இந்தச் செப்பேட்டில் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி மன்னரது விருதாவளியாக முப்பத்துமூன்று சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் இந்த மன்னரது செப்பேடுகளிலும் இவரது முந்தையோரது செப்பேடுகளிலும் காணப்பட்டவை. புதியன எதுவும் இல்லை.

*அனுமனேரி* என்ற முத்துராமலிங்கபுரம் குளத்தூரான் குமாரன் சுப்பையன் 1. கஸ்தூரி ஐயன் குமாரன் லட்சுமி நாராயணன் 2. லட்சுமண ஐயன் குமாரன் சின்ன சுப்பையன் 3. அய்யாவய்யன் குமாரன் திருவேங்கடநாதன் 4. வீரராகவய்யன் குமாரன் சுப்பய்யன் 5. ஐயங்கார் குமாரன் சீனிவாசகன் 6. அழகய்யன் குமாரன் முத்தய்யன் 7. சேனாதிபதி சாத்திரியார் குமாரன் வேதாந்தமய்யன் 8. நரசிங்கய்யன் குமாரன் ராமசிங்கய்யன் 9. நாரண வாத்தியார் குமாரன் வெங்கிட சுப்பையன் ஆகிய பத்து அந்தணர்களுக்கு சேதுபதி

மன்னர் தான பூருவமாக வழங்கியதை இந்தச் செப்பேடு சொல்கிறது. இந்தக் கிராமம் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் அமைந்துள்ளது. இதிகாச தொடர்புடையதான இந்த ஊருக்கு அனுமன் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இராமகாதையை நினைவுபடுத்தும் பல ஊர்கள் இந்த வட்டாரத்தில் உள்ளன. இராமநாதபுரம், இராமேசுவரம், இரகுநாதபுரம் இரகுநாதமடை, அனுமந்தக்குடி, சத்ருக்கன் கண்டான் சேதுக்கரை, சேதுகால், கோதண்டராமன் பட்டணம், கோதண்டராமன் கோவில், தனுஷ்கோடி, ராமநதி, வாலி நோக்கம், தர்ப்ப சயனம், என்பன அவை.

இந்த நிலக்கொடை பெற்ற பதின்மரும் வேதவிற்பனர்கள். சாத்திரியார், வாத்தியார் என அவர்களது பெயர் விகுதிகள் தெரிவிக்கின்றன. இன்னும் இவர்களில் ஒருவரைத் தவிர (ஐயங்கார் மகன் சீனிவாசன்) ஏனைய ஒன்பதின்மரும் சிவப் பிராமணர்கள். ஆனால் இவர்கள் பெயர் அல்லது தந்தையார் பெயர் அனைத்தும் வைணவப் பெயர்களாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்க தொன்று. இவர்களுக்கு தானம் வழங்கப்பட்ட ஊர்ப்பகுதிக்கு நான்கு எல்லைகள் விளக்கமாக இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. புலங்களை எண்ணிட்டுக் குறிப்பிடும் வழக்கம் அப்பொழுது இல்லாத காரணத்தினால் நஞ்சை, புஞ்சை, நிலங்கள் சில, இடு குறிப்பெயராலும் வேறு சில உரியவர் பெயராலும் குறிப்பிடப்பட்டதை செப்பேடுகள் (வரிகள் 25 40) தெரிவிக்கின்றன. குப்பைச் செய், காடு வெட்டி புஞ்சை, திருமேனிக்குடும்பன் புஞ்சை, விளாவடிப் புஞ்சை, அருளப்பன் புஞ்சை, பறையன் புஞ்சை, பொட்டப் புஞ்சை, புத்தன் புஞ்சை முத்தப்பன் புஞ்சை, என்பன அவை. கொத்து என்பது வட்டார வழக்கு. தொடர்ச்சி என்ற பொருள். அதேபோல குடும்பன் என்ற சொல்லும் இந்தப்பகுதியின் குடியினரான ''பள்ளர் சாதி' 'யினரில் ஒரு பிரிவை குறிக்கும் குழுஊக் குறி. இந்தச் சொல் வேறு எந்த ஆவணத்திலும் காணப்படவில்லை. வேறு பகுதிகளிலும் ''குடும்பன்'' பள்ளரைக் குறிக்கும் வழக்கில் இல்லை.

ரெகுநாத காவேரி என்பது குண்டாற்றில் இருந்து கமுதிக்கு கிழக்கே பிரியும் ஒருகால். மதுரை மாவட்டத்திலிருந்து

புறப்பட்டு கிழக்கு நோக்கி ஓடிவந்து, கமுதிவழியாக தெற்கே மூக்கையூர் என்ற இடத்தில் கடலில் கலக்கின்ற இந்த ஆற்றினை, கமுதி அருகே அணைமூலம் தடுத்து கால்வாய் ஒன்றை விஜயரெகுநாத சேதுபதி புதிதாக அமைத்தார். அந்தக்காலின் பெயர்தான் ரெகுநாத காவேரியாகும். முதுகுளத்தூர் பரமக்குடி, வட்டங்களில் உள்ள சுமார் 100 கண்மாய்கள் இந்த நீரால் பயன்படுவதுடன் குண்டாற்றில் பெருவெள்ளம் ஏற்படும்பொழுது, கமுதி நகருக்கு பேரழிவு ஏற்படாமலும் இந்தக்கால் உதவி வருகிறது.

# செப்பேடு எண் 68

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1702 இதன்மேல் செல்லா நின்ற
2. பிலவநாம சம்வச்ர தை மாதம் 15ந் தேதியும் தசமியும் வியாழக்கிழமையும் ரோகிணி நட்சத்திரமும் கூடின சுபயோக சு
3. பகாலத்தில் தேவை நகராதிபன் சேது மூல துரந்தரன் இராமநாதசுவாமி காரிய
4. துரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ சிங்கம் பரராஜ
5. கேசரி நிருபதனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேத ன் கெருட கேத
6. னன் குக்கிட கேதனன் மயூரகேதனன் செங்காவிக்கொடை மேல் கவரிமயிர செல்லி
7. வைத்த விருதுடையான் ராஜாதிராஜன் ராஜபரமேஸ்வ ரன் ராஜகுல திலகன்
8. ராஜ மார்த்தாண்டன் ராஜ கெம்பீரன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன்
9. சோழ மண்டல பிரதிஷ்டபனாச்சாரியன் தொண்ட மண்ட ல சண்டப்

---

‡ நூலாசிரியரது கள ஆய்வில் திருப்புல்லாணி கிராமம் தெற்கு ரத வீதி ஸ்ரீ.ரா. தேசிகனிடம் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டு படி எடுக்கப்பட்டது.

10. பிரசண்டன் பாண்டி மண்டல ஸ்தாபனாச்சாரியன் ஈழமும் கொங்கும் யாழ்

11. பாணராயன் பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராஜாதி ராஜ

12. ன் அபிமானங்காத்தவன் அகளங்கன் அனந்த கலியாண குணாபிரா மன்

13, மனுநீதி மறவாதான் வைகை வளநாடன் வேதியர்கள் குல காவலன் தில

14. தநுதல் மடவார் மடலெழுதவரு சுமுகன் பதினெண்பாசை

15. வீணாப் பிரவீணன் தொண்டியந்துறைக் காவலன் மலை கலங்கினும் மன

16. ங் கலங்காதான் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனன் அஷ்ட லட்சுமி நிவாஸன்

17. சத்திய அரிச்சந்திரன் வில்லுக்கு விசயன் சொல்லுக்கு அகத்தியன் இவு

18. ளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் உரிகோல் சுரதானன் வீரதண்டை

19. சேமத்தலை விளங்குமிரு தாளினன் துகவூர் கூத்தத்துக் காத்தூரான குலோத்

20. துங்கசோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக் கும் வங்கிஷ

21. ாதியரான ஸ்ரீமது இரண்ய கெர்ப்பயாஜி இரவிகுல ரெகு நாத சேதுபதி காத்த

22. தேவர் அவர்கள் வங்கிஷத்தரான ஸ்ரீமது முத்துராமலிங்க விசை

23. ய ரெகுநாத சேதுபதி காத்ததேவர் அவர்கள் ஆதி சேது வில் புல்லாணி

24. ச்சேத்திரத்தில் புருஷோத்தம பண்டிதர் அவர்கள் சத்திரத் தில் பிரா

25. மண போஜனத்திற்கு சர்வமானியமாக சகிரன்னியோதக தான

26. பூர்வமாக தாம்பிரசாதனம் பண்ணிக் கொடுத்தபடி நிலவரி இடங்கைவரி
27. வலங்கைவரி கீதாரம் கரைமணியம் மத்த ஆதண்ட பல சுவந்த
28. ரங்களும் சர்வமானியமாக தானம் பண்ணிக் குடுத்த கழுநீர் மங்க
29. லாம் வடபால் எல்லையாவது சிக்கல் பள்ளியான் செய் ஆண்டி
30. க்காத்தான் செய்க்குத் தெற்கு கீழ்பால் எல்கையாவது சிறைக்கு
31. ளம் கண்மாய் மேல்கரைக்கு மேற்கு தென்பால் எல்கையா
32. வது சின்னாகைக் குடி காலுக்கும் திடலுக்கும் மேற்படி கண்மாய் — — தலைக்
33. கு கிழக்கு இந்நான்கு எல்லைக்குட்பட்ட மாவிடை, மர விடை, திட்
34. டுத் திடல் மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு ஆத்துக்கால் ஊத்துக்
35. கால் சகலதரு பாசனம் நிதி நிஷேபம் அஷ்டபோக தேஜ சு
36. வாமியங்களும் வினுயாதி விக்ரயங்களுக்கு யோக்கியமாக ஆதி
37. சந்திராதித்திய வம்ச புத்ர பௌத்திர பரம்பரையாக ஆண்ட
38. னுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தருமத்தை
39. பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையிலே சேது விலே கோ
40. டி சிவலிங்கப் பிரதிஷ்டை கோடி கன்னிகாதானம் கோடி அக்கிரஹார பி
41. ரதிஷடை பண்ணின பலத்தை அடைவார்களாக இந்த தர்மத்துக்கு யா
42. தானும் மொருவர் விகாதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலே சேதுவிலே மா

43. தா பிதா குரு வதை பண்ணின தோஷத்தை அடைவார் களாக
44. — — — — — — — — — — — — — —
45. — — — — — — — — — — — — — —
46. — — — — — — — — — —— — — —
47. — — — — — — — — — — — — — —
49. இந்தப்படிக்கு பொக்கிஷம் கணக்கு ஆதிநாராயணப் பிள்ளை மகன் தளவாத்தா
50. ன் கையெழுத்துப் படிக்கு வேலாயுதம் கையெழுத்து

## செப்பேடு எண். 68

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | பண்டித புருஷோத்தம்தாஸ் சத்திரம் திருப்புல்லாணி |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1702 பிலவ தை மாதம் 15ந் தேதி (கி. பி. 24-1-1782) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேலேகண்ட சத்திரத்திற்கு கழுதீர் மங்கலம் கிராமம் சர்வ மான்யம். |

முத்துராமலிங்க சேதுபதி மன்னரது விருதாவளியாக முப்பத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் இந்தப்பட்டயத்தில் இடம் பெற்றுள்ளன. இவைகள் அனைத்தும் முந்தைய செப்பேடுகளில் காணப்பட்டவை ஆகும்.

இராமநாதபுரத்திற்கு அண்மையில் உள்ள திருப்புல்லாணி, வைணவர்களது சிறந்த திவ்யசேத்திரம் ஆகும். இங்குள்ள பெருமாள் கோயிலினை திருப்பணி செய்த சேதுபதிகள் கோயில் வழிபாட்டிற்கும் உடலாக பல ஊர்களை வழங்கியுள்ளனர். இந்த ஊருக்கு வருகை தருகின்றன வைணப் பிராம்மணர்களது பசி தீர்க்கும் பணியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் பண்டித புருஷோத்தம்தாஸ் என்ற வடநாட்டார் ஒரு சத்திரத்தை அங்கு ஏற்படுத்தினார். இந்த மன்னரது ஆட்சிக் காலத்தில் அந்த அன்னசத்திரத்தின் பணி தடைபடும் நிலையில், மன்னர் முது

குளத்தூர் வட்டம் சிக்கலையடுத்துள்ள கழுநீர் மங்கலம் என்ற கிராமத்தை சர்வமான்யமாக இந்தச் சத்திரத்திற்கு வழங்கியுள்ளதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. அந்தக் கிராமத்தின் அரசிறையாக தண்டல் செய்யப்பட்ட நிலவரி, இடங்கை வரி, வலங்கை வரி, கீதாரம், கரைமணியம் என்பவையும் இந்த செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊருக்கு வருகை தருகின்ற பக்த கோடிகளுக்கு திங்கள் தோறும் துவாதசி அன்று உணவு வழங்குவதற்காக முந்தைய சேதுபதி மன்னரது பிரதானியான வெள்ளை சேர்வை என்பவர் ஏற்படுத்திய அன்னசத்திரமும் இங்கு அமைந்துள்ளது. அந்த தர்மத்திற்காக முந்தைய *சேதுபதி மன்னர்*, செல்லமுத்துத் தேவர், காஞ்சிரங்குடி என்ற கிராமத்தை சர்வமான்யமாக வழங்கியுள்ளார். இவ்விதம் அன்னதாதாக்களாக விளங்கிய சேது மன்னர்களை அருள் தமிழால் பாடி மகிழ்ந்து இருப்பது வெறும் புகழ்ச்சி இல்லை.

மேலும், இதே நூற்றாண்டில் இராமசுவர தலயாத்திரை செய்து திரும்பிய திருவாங்கூர் மன்னர், இந்த திருக்கோயிலுக்கு வருகை தந்ததுடன் கோயில் இறைவரது பாயசக் கட்டளைக்கு அண்மையில் உள்ள காக்கூர் கிராமத்தை சேது மன்னரிடம் கிரையம் பெற்று இதே திருக்கோயிலுக்கு தானம் வழங்கியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கேரள மன்னரது திருப்புல்லாணி வருகை, *திருப்புல்லாணி* தொண்டி நாடகம் என்ற சிற்றிலக்கியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.‡

‡ புலவர். வீரராகவ ஐயங்கார் - திருப்புல்லாணி தொண்டி நாடகம் செந்தமிழ் தொகுதி 47(1951)

## செப்பேடு எண் 69

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியுக சகாப் தம் 4882 இதன் மேல்ச்
2. செல்லா நின்ற பிலவ நாம சம்வத்சரத்தில் தெக்ஷணா யநதத்தில் தனுற் மா
3. சத்தில் பூச நக்ஷத்திரத்தில் சுபயோக சுபகரணமும் பெற்ற சுபதினத்தில்
4. தேவை நகராதிபன் சேது மூலா துரந்தரன் ராமநாதசுவா மி காரியா துரந்த
5. ரன் பரராச சிங்கம் பரராச சேகரன் பரராசகெற்ப நிற் பேதனன் சொரி
6. முத்து வன்னியன் அனும கேதனன் கெருட கேதனன் சிங்ககேதனன் மயூர
7. கேதனன் குக்கிட கேதனன் செங்காவிக் குடைமேல் கவரி வைச்ச விருது
8. டைய ராசாதிராசன் ராச மாத்தாண்டன் ராசகுலதிலகன் சங்கீத சாயித்
9. திய வித்தியா வினோதன் சோள மண்ட(ல)ப் பிரதிஷ் டா பனாசாரியன் தொண்ட
10. மண்டல சண்டப் பிரசண்டன் பாண்டி மண்டல ஸ்தாபனா சாரியன் இளமு
11. ங் கொங்கும் யாள்பான ராயன் பட்டணமும் கெசவேட் டை கொண்ட

12. ருளிய ராசாதிராசன் திலக நுதல் மடவார்கள் மடலெழுது வருசுமுகன் பதி
13. னென் பாசை வீணாப் பிறவீணன் அகளங்கன் அனந்த கலியான குணாபிராமன்
14. அபிமானங் காத்தவன் மனுநீதி மறவாதான் வேதியர்கள் காவலன் தொண்டி
15. யந்துறை காவலன் வீரத
16. ஸ்ரீ இராமநாத சுவாமி ஸகாயம்
17. ண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்ட நிக்கிறக சிஷ்ட
18. பரிபாலனன் அஷ்ட லட்சிமி வாசன் சத்திய அரிச்சந்திரன் வில்லு
19. க்கு விசையன் துகலூர்க் கூத்தத்துக் கதிபரான குலோத் துங்க சோ
20. ள நல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கி ஷாதிபரா
21. ன ஸ்ரீமது இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனாதச் சேதுபதி காத்
22. த தேவரவர்கள் வங்கிஷோத்தகரான ஸ்ரீமது முத்து ராமலிங்க விசைய
23. ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஆவுடையார் கோவிலுக்கு
24. தேவர் கட்டளை உச்சிக் கால கட்டளைக்கு நடக்கும் சுவாத்தியம்
25. விலானூர் இடையூர் செருகானூர் பூதகுடி கோடிக்குளம் ஆவு
26. டையார் கோவில்த் தெற்கு மடம் நடக்கிற தோப்பு மனை தென்
27. னந் தோப்பு ஊர்த் தோப்பு குருமுடையான் தோப்பு செக்கடி
28. த் தோப்பு சுக்கிறவாரக் கட்டளைத் தோப்பு மாரியம்மன் கோ

29. வில்த் திடல் உள்ளூர் மனைகள் உள்ளூரிலிருக்கும் நஞ்சை புஞ்சை
30. உள்பட நெல்லியடிக்குளம் நெல்லியடித் தோப்பு இந்தக் கட்ட
31. ளைக்கு நடக்கிற கிறாமங்களில் சுங்கம் மகமை காடு காவல்வரி
32. உள்ளுர் வரி சாணார் வரி இடங்கைவரி வலங்கை வரி யுடன் கூடி

இரண்டாம் பக்கம்

33. ய பதினெட்டு வரியும் சுவாமிக்கு சறுவ மானியமாக கோ விலில்க் க
34. ட்டளைக்கு வாங்கிக் கொள்ளச் சொல்லி கட்டளை இட் டோம் இந்த தற்
35. மத்தை திருவாடுதுறை பண்டாரச் சன்னதி அவர்களுக் குள்ளே விசாரித்துக்
36. கொள்ளச் சொல்லி மணியம் கணக்கு கங்காணம் கிறாம ந்திரத்து
37. க்கும் கட்டளைக்கும் வேண்டாமென்று பரதேசி முத்திரை யாய் கட்
38. டளை இட்டோம் இதுவில்லாமல் ராமநாதபுரம் சீமை திருவாடனைச்சீ
39. மையில் ஊருஊருக்கும் நஞ்சை, புஞ்சை, நாலுசெய் இரண்டுசெய்
40. நாலு குறுக்கம் ரெண்டு குறுக்கம் புஞ்சையும் அவர்கள் தானே வி
41. சாரிச்சுக் கொள்ளச் சொல்லி கட்டளை இட்டோம் திரு விழா முதலான
42. விசேஷ தினத்திலும் வருகிற ஆடுமாடுகள் காணிக்கை சேதுபதி சீமை உ
43. டையாத் தேவர் சீமையிலிருந்து வருகிறதெல்லாம் கட்ட ளையில் சேரப்

44. ண்ணச் சொல்வி கட்டளையிட்டோமதுவும் தேவர் கட்டளைக்கு உண்டா

45. ன திருவாபரணம் வஷ்த்து வாகன பூசன பாத்திர பாண்ட முதலானதெ

46. ல்லாம் நெல்லியடி மண்டபமும் இந்த தற்மத்தை திருவாவடுதுறை பண்டா

47. ரச் சன்னதியவர்கள் பாரிசத்தில் கட்டளையிட்டோம் பாரம்பரையாய் ஆண்டனு

48. பவித்துக் கொள்வாராகவும் இந்த தற்மந்தை பரிபாலனம் பண்ணினபேர்

49. கெங்கையிலும் சேதுவிலேயு கோடி கன்னிகாதானமும் கோடிபிற்ம பிறதிட்

50. டையுங் கோடி சிவலிங்க பிறதிட்டையும் பண்ணின பலனையடைவார்

51. கள் இந்த தற்(மத்து)க்கு யாதாமொருவர் விகாதம் பண்ணினபேர் கெங்கைக்

52. கரையிலே சேதுவிலே மாதா பிதா குருவை வதை பண்ணினதோ

53. ஷத்தையடைவாராகவும் உ ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தா

54. நு பாலநம் பரதத்தாபஹாரேன ஸ்வதத்தம் நிஷ்பலக் பவேது உ

55. தாந பாலன யோர்மத்யே தாநா ஸீரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க

56. மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம் உ ஏகைக பகந்லோ

57. கே சர்வேசா மேவ பூபஜாம் நகோஜ்ய ந சுரக்யா பிப்ர தத்தா வ

58. சுந்தரா உ இந்தப் படிக்கு பொக்கிசம் ஆதிநாராயண பிள்ளை மகன்

59. தளவிடத்தான் கவாதுபடிக்கு வேலாயுதம் கையெழுத்து உ

## செப்பேடு எண் 69

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | திருப்பெருந்துறை திருக்கோயில் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1703 பிலவ ஆண்டு தனுஷ் மாதம் (கி.பி. 1781) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேற்படி கோயில் உச்சிக்காலக் கட்டளைக்கு சில சுதந்திரங்களை வசூலித்துக் கொள்ளும் உரிமை. |

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேது மன்னரது விருதாவளியாக குறிப்பிடப்பட்டுள்ள முப்பத்து மூன்று சிறப்புப் பெயர்களும் முந்தையப் பட்டயங்களில் காணப்பட்டவை.

திருப்பெருந்துறை ஆவுடைய பரமசுவாமி திருக்கோயிலில் தேவர் கட்டளை என்ற உச்சிக் காலக் கட்டளை சிறப்பாக நடைபெறுவதற்கு உதவியாக விளானூர், இடையூர், சிறுகனூர், பூதகுடி கோடிக்குளம் ஆகிய கிராமங்களும் ஆவுடையார் கோயில் கிராமத்தில் உள்ள தென்னந்தோப்புக்கள், நஞ்சை புஞ்சைகள் மனை நிலம் ஆகியவை சேது அரசர்களால் ஏற்கனவே சர்வமான்யமாக வழங்கப்பட்டிருந்தன. இந்தக் கிராமங்களிலிருந்து மன்னருக்குச் செலுத்த வேண்டிய சுங்கம், மகமை, காடுகாவல்வரி, உள்ளூர் வரி, சாணார் வரி, இடங்கை வரி, வலங்கை வரி உட்பட்ட பதினெட்டு வகை வரிகளை திருவாவடுதுறை ஆதின கர்த்த வசூலித்துக் கொள்ள இந்தச் செப்பேட்டில் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இராமநாபுரம் திருவாடனைச் சீமைகளில் ஊருக்கு ஊர் நஞ்சை, புஞ்சை நிலங்களை விசாரித்துப் பார்த்து திருப்பெருந்துறை கோயிலுக்கு நான்கு அல்லது இரண்டு குறுக்கம் நிலங்களை பெற்றுக் கொள்ளவும் திருவிழாக் காலங்களில் சேதுபதி சீமை உடையார்தேவர் சீமைகளிலும் இருந்து வரப் பெறுகின்ற ஆடு மாடு காணிக்கையெல்லாம் தேவர் கட்டளையில் சேர்த்துப் பயன்படுத்திக் கொள்ளவும் இந்தச் செப்பேட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. உடையார்தேவர் சீமை என்பது கி.பி. 1730ல் முத்துவடுகநாத பெரிய உடையார்தேவர் மகன்சசிவர்ணத் தேவரால் ஏற்படுத்தப்பட்ட சிவகங்கைச் சீமையாகும். ''தேவர் கட்டளை'' எந்தச் சேதுபதி மன்னர் காலத்தில் ஏற்படுத்தப் பட்டது என்பது அறியத்தக்கதாக இல்லை. இராமேசுவரம் திருக் கோயிலின் உச்சிக்காலக் கட்டளையும், தேவர் கட்டளை என்றே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், திருவாபரணம், வஸ்து, வாகனம் பூசணம், பாத்திரம் பண்டம் முதலியவையெல்லாம் இந்தக் கட்டளைக்கென்றே வழங்கப்பட்டிருப்பதாகக் குறிக்கப் பட்டிருக்கின்றது. இதனை ஏற்படுத்தியவர் சடைக்கன் உடையார் சேதுபதி என்பது ஊகம். குறுக்கம் (என்பது 90 சென்ட் நிலம்) உச்சிக்காலம், பாரிசம் என்பது வட்டார வழக்குகள்.

# செப்பேடு எண். 70

(நகல்)

1- மகாமண்டலேசுவரன் அரியராயிர தள விபாடன்

2. பாசைக்குத் தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொ

3· ண்டநாடு கொடாதான் பாண்டி மண்டலத் தாபனாச்சாரி யன்

4. சோழமண்டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்டை மண் டல

5. சண்டப்பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணமு

6. ங் கெச வேட்டை கண்டருளிய ராசாதி ராஜன் ராசபர

7. மேசுபரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீர ராச

8· ன் ராசமனோபயங்கரன் ராசகுல திலகன் அந்தம்பிர கண்டன்

9. சாமித்துரோகியள் மிண்டன் பாதாளவிபாடன் பட்ட

10. மானங்காத்தான் வேதியர் காவலன் துஷ்டநிக்ரகன் சிஷ்

11. டபரிபாலனன் மலைக்கலங்கினு மனங்கலங்காதான் யொட்டியர்

12. தளவிபாடன் யொட்டியர் மோகந் தவிள்ந்தான் வன்னிய

13. ராட்டந் தவிழ்ந்தான் பஞ்சவன்ன ராகுத்தன் மஞ்சு புகழ் கொண்ட

14. வன் வன்னியராட்டம் ‌‌-விழ்ந்தான் வீரலட்சுமி

15. வீரலட்சுமி, தனலட்சுமி, தான்யலட்சுமி அட்டல

16. ட்சுமி காந்தன் காமினி கந்தர்பன் சகல கலை வல்லவன் வீர வெம்பா

17. மாலை விருதரசர் மணவாளன் வில்லுக்கு விசையன் சொல்லுக் கரி

18. ச்சந்திரன் மல்லுக்கு வீமன் பரிக்கு நகுலன் கொடைக்கு கர்ணன் இள

19. ஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்திற் பாய்ச்சி கட

20. லில் பாய்ச்சி தாலிக்கு வேலி தண்டுவார் மிண்டன் கோடாளி

21. சருவந்த மாமுடி அடைக்கலங்காத்தான் தாலிக்கு வேலி துட்

22. டர்கள் கொட்டமடக்கி இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் தொ

23. ண்டியந்துறைக் காவலன் மதுரை மானங்காத்தான் செங் காவிகு

24. டையான் கெருடக் கொடி அனுமக்கோடி , சிங்கக்கொடி புலிக்கொடி குக்கிட

இரண்டாம் பக்கம்

25. க்கொடியுடையான் செம்பிவளநாடன் சேது

26. காவலன் சேது மூலதுரத்ந்ரன் ராமநாதசுவாமி காரியந் துரந்தரன்

27. ஏழைபங்காளன் எதிர்த்தவர் மார்பிலாணி அசுபதி கெச பதி நரபதி

28. ரவிகுல முத்துவிசைய ரெகுநாத ராமலிங்க சேதுபதி காத்த தேவ

29. ரவர்கள் பிரிதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளா நின்ற சாலிவாகன

30. சகாப்தம் 1702 கலியுகம் 4872 மேல் செல்லா

31. நின்ற பிலவஸ்ரீ கார்த்திகை மீ 5 தேதி முத்துப்பேட்டை சருவேசுவ

12. ஈளமுங் கொங்கும் யாள்ப்பாணராயன் பட்டணமும் கெச வேட்டை
13. கொண்டருளிய ராசாதிராசன் திலதநுதல் மடவார்கள் மடலெழுது வ
14. ரு சுமுகன் பதினெணன்பாஷை வீணாப்பிறவீணன் அகளங் கன் அனந்த க
15. லியாண குணாபிராமன் அபிமானங் காத்தவன் மனுநீதி மற
16. வாதான் வேதியர்கள் காவலன் தொண்டியந்துறை காவ
17. லன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்ட நிக்கி
18. றக சிஷ்ட பரிபாலனன் அஷ்டலட்சுமி வாசன் சத்திய அரிச்சந்
19. திரன் வில்லுக்கு விசையன் துகவூர்க் கூத்தத்துக் கதிபரா ன கு
20. லோத்துங்க சோழ நல்லூர்க் கீள்பால் விரையாத கண் டனிலி
21. ருக்கும் வங்கிஷாதிபரான ஸ்ரீமது இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனா
22. தச் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிசோத்தகரான ஸ்ரீமது முத்துரா
23. மலிங்க விசைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் திருவாவடுது
24. றை பண்டாரச் சன்னிதியவர்கள் மடத்துக்கு அம்பலவா ன சுவா
25. மி சன்னதியில் மயேசுர பூசைக்கு பண்டாரச் சன்னதி யவ
26. ரகள் கையில் தானபூருவமாக தாம்பிர சாசனம் பண்ணிக்
27. குடுத்த கிறாமமாவது வள்ளைக்குளம் எல்லைப்புரவு தெற்கே சிக்கள்
28. கண்மாய் நீர்ப்பிடிக்கும் ஷேயூர்க் கண்மாய் உள்வாயில் கொடி

29. க்கால் கேனிப்புரம்புக்கு வடக்கு மேற்கே வய்ய னாயக் கன் ஊ

30. ரணிக்கும் எத்திலு நாயக்கன் மாலையீட்டு ஊரணிக்கும் பனிவாசல்

31. எல்கையில் ரெகுநாத நாயக்கன் பொட்டச் செய்க்கும் கிளக்கு வ

32. டக்கே அண்ணுனிக் கண்மாய் உள்வாயில் ஆய்க்குடி எல்கையில்

33. சேதுக் குடும்பன் எல்கை உரைத்திப் புஞ்சைக்கும் கீள்பால் கண்ணாங்

34. குடி புஞ்சைக் காட்டில் அடைக்கலன் எல்கைப் புஞ்சைக் கும் கீள்பா

35. ல் கடம்போடைப் புஞ்சைக் காட்டில் ஆதினாராயணக் குடும்பன் கட

36. மைப் புஞ்சைக்கும் தெற்கு கிளக்கே அண்ணுவிக் கண் மாய் உள்வாயில்

37. சுருங்கன் கடமைப் புஞ்சைக்கும் ஷே கண்மாய் பிறகரை கரையில் குள

38. வெட்டுப் புஞ்சைக் கீள்பால் சிக்கள் புஞ்சைக் காட்டில் கீள்கரை

39. பாதைக்கு தென்புறம் இருக்கிற புஞ்சைக்கும் சிக்கள் கண் மாய் கீள்கரை

40. உத்தராள்வுக்கும் மேற்கு இந்தப்படி நான்கெல்கைக்குள் பட்ட திட்டுத் தி

41. டல் மாவடை மரவடை மேல்நோக்கிய மரம் கீள்நோக் கிய கிணறு ஆத்து

42. க்கால் ஊத்துக்கால் செல தரு பாஷானம் நிதி நிட்சேபம் அஷ்ட போக

43. தேச சுவாமியங்களும் விஞயாதி விக்கிறங்களுக்கும் யோக்கியமாக

44. ஆதி சந்திராதித்தவரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள் ளக் கடவாராக

ஷை

45. வும் இந்த தற்மத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக்கரை
46. யிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்களிலே கோடி சிவலிங் கப் பிற
47. திஷ்டை கோடி கன்னிகாதானம் கோடி கோடி அக்கிறா கார பிரதிஷ்டை பண்ணின
48. பலனையடைவாசர்கள் இந்தத் தர்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் கெ
49. ங்கைக் கரையில் சேதுவில் மாதா பிதா குருவை வதை பண்ணின தோஷ
50. த்தையடைவார்கள் உ ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாது ப
51. ாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது உ ஏள
52. கவ பஹந் லோகே சர்வேஷா மேவ பூபுஜாம் நகோஜ்ய ந கரக்ய்
53. ா விப்ரதத்தா வசுந்தரா உ தாந பாநல யோர்மத்யே தா நா
54. ஸ்ரயோது பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பால நாததச்சு
55. தம் பதம் உ இந்தப்படிக்கு பொக்கிசக் கணக்கு ஆதினா ராயண பிள்
56. ளை மகன் தளவாத்தான் கையெழுத்துப்படிக்கு முத்துப் பக்தர் மக
57. ன் வேலாயுதம் கையெழுத்து உ

# செப்பேடு எண் 71

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருவாவடுதுறை ஆதின பண்டார சன்னதி
3. செப்பேட்டின் காலம் : சகம் 1703 பிலவ ஆண்டு தனுர் மாசம் (கி.பி. 2-1-1782)
4. செப்பேட்டின் பொருள் : மயேச்சுர பூசைக்கு வல்லைக் குளம் தானம்

இந்தச் செப்பேட்டினை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக இருப்பத்தியேழு சிறப்புப்பெயர்கள் மட்டும் காணப்படுகின்றன. இவையனைத்தும் முந்தையச் செப்பேடுகளில் பயன்படுத்தப்பட்டவை.

இராமேசுவரம் திருக்கோயிலுக்கு அடுத்தபடியாக சேது மன்னர்களது தானங்களை திருவாவடுதுறை ஆதினம் பெற்று வந்துள்ளது. ஏற்கனவே இந்தமடத்தின் அம்பலவாண நாத சன்னதியில் மயேச்சுர பூசைக்காக, பொசுக்குடி, நாட்டுசேரி ஆகிய ஊர்களை முந்தையச் சேது மன்னர்கள் தானம் அளித்துள்ளனர். அந்தப் பூசையின் சிறப்பைக் கருதி இந்த மன்னர் வல்லைக்குளம் என்ற ஊரினை அதே தர்மத்திற்கு தானமாக வழங்கி உள்ளனர். இந்த ஊர் இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் தென்கிழக்குப் பகுதியில் சிக்கிள் என்ற ஊரின் மேல் புறமாக அமைந்துள்ளது. இந்த ஊரின் எல்லைகளை செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கில், பனிவாசல், கடம்போடை, ஆய்க்குடி, சிக்கில் கண்மாய், அன்னுணிக் கண்மாய், இராமநாத

32. ரன் கோயிலுக்கு சருவமானியமாக தாம்பிர சாதனம் கு
33. டுத்த நிலமாவது முத்துப்பேட்டை சருவேசுவரன் கோவி
34. லும் சங்கரவலசை
35. யாவது சக்கிலியன் குண்டுக்கு தெற்கு எல்கையாவது
36. கிழக்கு மேற்கு எல்கையாவது வண்ணானூரனிக்கு வடக்கு எல்கை
37. தளம் புளி இன்னான்கு எல்கை நிலமும் இந்தக் கோவிலுக்கு விட்டு கொடுத்த தெ
38. ஞ்சியேந்தல் எல்கையாவது பாப்பானேந்தல் கண்மாய்க்கும்
39. மேற்கு குண்டமுடையார் கோயிலுக்கு வடக்கு மலட்டாறுக்கு கிழக்கு வயருனேந்தல் கால் முதலூர் கண்மாய்
40. க்கரைக்குத் தெந்கு இன்னான்கு எல்கைக்குட்பட்ட மர
41. வடை மாவடை கீழ்நோக்கிக கிணறு மேல்நோக்கிய மரங்கள் வரத்
42. துக்கால் நிதிநிட்சேபம் செலதரு பாஷாணமெனப்படும் அஷ்ட தேச சு
43. மியங்களும் வீனியாதி விக்கிரயங்களுக்குயோக்கிய
44. யமாகவும் பாத்தியராவர்களுக்கு பெரியபட்டண முத்துப்
45. பேட்டை சுங்கத்தில் நித்தம் இரண்டுபணம்
46. ஆதி சந்திரரதித்த வரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்வாராகவும்
47. இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணினவர் காசியிலேயும்
48. சேதுவிலேயும் அனேக புண்ணியம் பண்ணின
49. வர்கள் இந்த தர்மத்தை அகிதம் பண்ணின பேர்கள்
50. ———— கோடி பாவத்தையும் பண்ணி குருவையும் மாதா பிதாவையும்
51. ம் வதை பண்ணின தோஷத்தையடைவாராகவும் இந்தப் படிக்கு பொ
52. க்கிஷங் கணக்கு ஆதிநாராயண பிள்ளை மகன் தளவாத்தான்
53. யெழுத்துப்படிக்கு முத்துப் பத்தர் மகன் வேலாயுதன் யெழுத்து உ

## செப்பேடு எண். 70

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : முத்துப்பேட்டை கிராம சர்வேசுவரன் கோவில்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1703 பிலவ ஆண்டு கார்த்திகை 5ந் தேதி (கி. பி. 1781)
4. செப்பேட்டின் பொருள் : மேலேகண்ட தேவாலயத்திற்கு முத்துப்பேட்டை. தெஞ்சியேந்தல் கிராமங்கள் சர்வமானியம்.

இந்தச் செப்பேட்டில் சேதுபதி மன்னரது அறுபத்திமூன்று சிறப்புப் பெயர்கள் மன்னரது விருதாவளியாகக் காணப்படுகின்றன. இவைகளில். ''தென்னவன் ஆட்டம் தவிழ்த்தான்'', ''ஏழைப்பங்காளன்'' என்ற இரு சிறப்புப் பெயர்களைத் தவிர ஏனையவையனைத்தும் இந்த மன்னரதும் இவரது முந்தையோரது செப்பேடுகளில் காணப்பட்டவை ஆகும்.

இராமநாதபுரம் வட்டம் முத்துப்பேட்டை கிராமத்தில் உள்ள சர்வேசுவரன் ஆலயத்திற்கு முத்துப்பேட்டை தெஞ்சியேந்தல் (பரமக்குடி வட்டம்) கிராமங்களை சர்வமானியமாக வழங்குவதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. பதினேழாவது நூற்றாண்டின் இறுதியில் மறவர் சீமையில் கிறித்தவ மதம், மதுரை சேசு சபை, மூலமாக நுழைந்தது. இந்து ஆஸ்திக வாதிகள் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தினர். அப்பொழுது ஆட்சியில் இருந்த ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னரை நெருக்கினார். இராமநாதபுரம் ஆட்சி பீடத்திற்கு போட்டியிட்ட

அரசு வழியினர் சிலரும் குறிப்பாக சிறுவெள்ளி பாளையக்காரர் அந்தச் சமயத்தை ஏற்று இருந்ததால் சேதுபதி மன்னரது ஆட்சிக்கு எதிரான சூழ்நிலை மீண்டும் எழுந்தது. மதம் மாற்றத்தில் ஈடுபட்ட ஜான் பிரிட்டோ பாதிரியார் நாடு கடத்தப் பட்டார். சில வருடங்கள் கழித்து அதே பாதிரியார் மீண்டும் அந்தப் பணியில் ஈடுபட்டதால் அவரது உயிர் இராமநாதபுரத்திற்கு வடக்கே உள்ள ஒரியூர் கோட்டையில் 4—2—1693ந் தேதி பறிக்கப்பட்டது *. கிழவனை அடுத்துப் பட்டமேறிய விஜய ரெகுநாத சேதுபதியும் மதமாற்றத்தை எதிர்த்தார். என்றாலும், புதிய மதத்தை ஏற்றவர்கள் நாளடைவில் சருகணி, பொன்னளிக் கோட்டை, ஓரியூர், இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் தேவாலயங்கள் அமைப்பதற்கு, அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அரசு ஊக்குவிப்புகள் வழங்கப்படவில்லை.

இந்தக் குறைவினை நிறைவு செய்தாற்போல இந்த மன்னர், முத்துப்பேட்டை ஆலயத்திற்கு இரண்டு கிராமங்களை பரமக்குடி வட்டத்தில் உள்ள தெஞ்சியேந்தலும், இராமநாதபுரம் வட்டத்திலுள்ள முத்துப்பேட்டையும், சர்வமானியமாக வழங்கினார். சமயப்பொறையுடன் சேதுகாவலர்கள் ஆட்சியை நட்த்தியதற்கு இந்தச் செப்பேடு ஒரு சான்றாக அமைந்துள்ளது. முத்துப்பேட்டை ஆலயம் போர்ச்சுக்கீசியரால் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (கி. பி. 1638/39) நிர்மாணிக்கப் பட்டது ஆகும், அடுத்த ஒரு நூறு ஆண்டுவரை கொச்சியிலுள்ள குரு பீடத்துடனும், இந்த தேவாலய நிர்வாகம் இணைக்கப் பட்டு இருந்தது பின்னர் புதுச்சேரி பாதிரியாரின் கண்காணிப் பிலும் இருந்து வந்து மதுரையில் சேசு சபை வலுப்பட்ட பொழுது, மதுரைபொறுப்பில் வந்தது.

* Sauliere Dr. S. J. - The Reds and (1947) pp. 345-474

## செப்பேடு எண் 71

(நகல்)

1. ஸ்வஸ்தஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியப்தம் 4872 இதன்
2. மேற் செல்லா நின்ற பிலவ நாம ஸத்வத்ரைத்தில் தெக்ஷ னாயநத்தி
3. ல் சரத் ரிதுவில் தனுர் மாசத்தில் பூச நக்ஷதிரத்தில் சுபயோகமும் சுபகரன
4. மும் பெத்த சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூலா மூலா துரந்தரன்
5. ராமநாத ஸ்வாமி காரியா துரந்தரன் பரராசசிங்கம் பர ராசசேகரன்
6. பரராச கெற்ப நிறபேதனன் சொரிமுத்து வன்னியன் அனும கேதன
6. ன் கெருட கேதனன் சிங்க கேதனன் மயூர கேதனன் குக்கிட கேதனன்
8. செங்காவிக் குடைமேல் கவரிமயிர் வைத்த விருதுடைய ராசாதி
9. ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகுல திலகன் சங்கீத சாயித்திய
10. வித்தியா வினோதன் சோளமண்டலப் பிறதிஷ்டாபனா சாரியன் தொண்
11. டமண்டல சண்டபிரசண்டன் பாண்டிமண்டல பத்மனாசா ரியன்

---

‡ திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை.
அமைப்பு : 22 செ.மீ × 16.00 செ,மீ

புரம் பாதை ஆகியன அனைத்தும் இன்னும் வழக்கில் உள்ளன. சேதுக் குடும்பன், அடைக்கலன் குடும்பன், ஆதிநாராயணக் குடும்பன் ஆகியோர் பள்ள இனத்தவரில் ஒரு பிரிவினரான ''குடும்பன்'' வகையைச் சேர்ந்தவர்கள். பதினாறாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இந்தப் பகுதி பரமக்குடி பாளையத்துடன் இணைந்து தும்பிச்சி நாயக்கரது ஆட்சியில் இருந்ததால், இந்தப் பகுதியில் சில ஊர்களில் தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்ட ''நாயக்கர்'' சிலர் நிலைத்து வாழ்ந்தனர். செப்பேட்டின் வரி 30, 31ல் குறிப்பிடப்படுகின்ற எத்திலு நாயக்கன் மாலையீட்டு ஊரணி ரெகுநாத நரயக்கன் பொட்டல் செய் என்பன அவர்களின் எச்சங்கள்.

20-ஆம் நூற்றாண்டில் இலங்கையைக் கைப்பற்றிய! ஆங்கிலேயர் கண்டி அரசரைச் சிறைப்படுத்தி வேலூர்க் கோட்டையில் அடைத்தனர். அவரது மகன் பங்காருசாமி மற்றும் பன்னிரெண்டு உறவினர்கள் அரசியல் பென்ஷனர்களாக கீழக்கரையிலும் சிக்களிலும் வாழ்ந்து வந்தனர் என்பதும் அவர்களுக்கு சிக்களில் சொந்தமான இடங்கள் இருந்து வந்ததும் தெரிய வருகின்றது.‡ பொட்டல்செய், புஞ்சைக்காடு, கண்மாய் உள்வாயில், பிறகரை, கண்மாய் வெட்டு, கேணிப்பிறம்பு என்பன இந்த வட்டாரத்தின் வழக்குகள் ஆகும்.

‡ Tamilnadu Archives Records - Madura Dist. Vol. 4670 (1872) pp. 170-171, Vol. 1159 (1812) pp - 13.

## செப்பேடு எண். 72

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியப்தம் 4881 இதன்
2. மேல்ச் செல்லா நின்ற பிலவ நாம ஸம்வத்ஸரம் தைய்மாசம் 15உ யும் தி
3, சமியும் வியாழக்கிழமையும் ரோகிணி நட்செத்திரமும் கூடின சுபயோ
4. க சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூலா துரந்தரன் ராமனாத ஸ்வ
5. ாமி காரியதுரந்தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் பரராச சிங்க
6. ம் பரராசகெற்ப நிறபேதனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேதனன் கெ
7. ருடகேதனன் குக்கிடகேதனன் மயூரகதேனன் செங்காவிக் குடைமேல் கவ
8. ரிமயிர் வைத்தவிருதுடைய ராசாதிராசன் ராச பரமேசுப ராசகுல தில
9. லகன் ராசமாத்தண்டன் ராசகெம்பீரன் சங்கீத சாயித்திய விக்தியாவி

---

நூலாசிரியரது கள ஆய்வின் பொழுது திருப்புல்லாணி கிராமம் தெற்குரத வீதி திரு. ரா. தேசிகனிடம் கண்டெடுக்கப் பெற்று படி எடுக்கப்பட்டது.
அமைப்பு : 29 செ.மீ x 16 செ.மீ

10. னோதன் சோளமண்டலப் பிரதிஷ்டாபனா சாரியன் கொண்
ட மண்டல சண்ட

11. ப்பிரகண்டன் பாண்டிமண்டல ஷ்தாபனாச்சாரியன் ஈளமுங்
கொங்கும்

12. யாள்பானராயன் பட்டணமும் கெசவேட்டை கொண்டருளி
ய ராசர

13. திராசன் அபிமானங்காத்தவன் அகளங்கன் அனந்த கலி
யாண குணாபிராமன்

14. மனுந்திமறவாதான் வைய்கை வளநாடன் வேதியர்கள்
காவலன் திலவ

15. நுதல் மடவார்கள் மடலெழுதவரு சுமுகன் பதினெண்
பாஷை வீணாப்

16. றவீணன் தொண்டியந்

17. துறைகாவலன் மலைகலங்கினும் மனங்கலங்காதான்
துஷ்டநிக்கிற

18. சிஷ்டபரிபாலனன் அஷ்டலக்ஷிமிவாசன் சத்திய அரிச்
சந்திரன் வில்லுக்கு வி

19. சையன் சொல்லுக்கு அகத்தியன் இவுளிபாவடி மிதித்
தேறுவார்கண்டன்

20. உரிகோல் சுரதானன் வீரதண்டை விளங்குமிரு தாளினான்

21. துகவூர்க் கூத்தத்துக்கதிபரான குலோத்துங்கசோள
நல்லூர் கீள்பால்

22. விரையாத கண்டனிலிருக்கும் வங்கிஷாதிபரான ஸ்ரீமது
இரணியகெற்

23. பயாசி ரவிகுல ரெகுனாத சேதுபதி காத்ததேவரவர்கள்
வங்கிஷோ

24. த்தகரான ஸ்ரீமதுமுத்துராமலிங்க விசைய ரெகுனாதச்
சேதுபதிகாத்

25. ததேவரவர்கள் வைகை தீரத்தில் நாகாச்சி மடம்
தற்மத்துக்கு புருசோ

26. த்தமபண்டிதரவர்கள் கையில் சறுவமானியமாக சஹிரணி
யோதக

27. தாறாபூருவகமாக தாம்பிரசாசனம் தானம் பண்ணிக் குடுத்தபடி நிலவ

28. ரி இடங்கைய்வரி வலங்கைய்வரி கீதாரம் கரை மணிய மத்த ஆத

29. டைப்பலசுவந்தையளும் சறுவமானியமாக தானம் பண்ணி

30. க்கொடுத்த பேயராமத்தேவன் யேந்தல் கிளக்கு எல்கை யாவ

31. து பெரியானேந்தல் எல்கையில்

இரண்டாம் பக்கம்

32. மேப்படியூர் கொல்லமுத்தனாசாரியர் புஞ்சைக்கு மேற்கு தவளைக்

33. குளம் கண்மாய் மூலக்கரை பிறகரை கரையடி தேத்தாங் காலுக்கு

34. தெற்கு தெற்கு எல்கையாவது சித்தனேந்தல் வடகண்ம ாய் மூலக்கரை

35. க்கும் கிளக்கு சந்தைப்பாதைக்கு மேற்கு இதன் மேற்கு சித்தனேந்தல் வ

36. டகண்மாய் கடக்கொம்புக்கு வடக்கு பெயராமாயேந்தல் இதன்மூல

37. கரைக்கும் பெயராமாயேந்தல்க் கண்மாய் வெட்டுத்தாவுக் கும் கிளக்

38. கு யேந்தல் வடகரை பிறகரை புஞ்சை அதுக்கும் பிற கரைமேற்கு எல்

39. கையாவது அக்கிறமேசி எல்கை புஞ்சையில் சிலையப் னம்பலகாறன்

40. செய்க்கு இருளாண்டியார் புஞ்சைக்கு மேற்கு இதன் வட க்கு அஞ்சாமடை

41. கிளக்கு வயலுக்கு தெக்கு அஞ்சாமடை பள்ளபூவனயார் உளவு உளுத

42. புஞ்சைக்கு வீகாந்பரம்புக்கு தெற்கு தவளைக்குளம் தென் கண்மாய் நடுக்க

43. ண்மாய் பாகைபொட்டல் பரம்புக்கு மேற்க்கு ஆக ஏந்தல் வடகாட்டுப்புர

44. வு எல்கை நான்கெல்கைக்குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை

45. மரவடை மேல்நோக்கிய கிணறு, கீள்நோக்கிய கிணறு, சலதருபாஷண

46. ம் நிச்சேபம் ஆத்துக்கால் ஊத்துக்கால் சகலமும் வினியா திவிக்கிறய

47. ங்களுக்கும் யோக்கியமாக ஆதிசந்திராதித்தவரைக்கும் புத்திர பவுத்திர

48. பாரம்பரையமாக ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தற்க

49. த்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையி

50. லே சேதுவிலே புண்ணியத்தலங்களில் கோடி சிவலிங்கப் பிறதிட்டை

51. கோடி அக்கிறகாரப் பிறதிட்டை கோடிகன்னிகாதானம் பண்ணின பலனை

52. யடைவார்கள் இந்த தர்மத்துக்கு பரிபாலனம் பண்ணின பேர்

53. கெங்கைக்கரையிலே சேதுவிலே மாதா பிதா குருவை வதை பண்ணின தோஷத்திலே

54. யயைவார்கள் உ ஸ்வதத்தாத்வி குணம் புணியம் பரதத் தாது பாலநம் பரதத்தாப

55. ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பாவேது-உ-தாநபாலந யோர்மத்யே தாநாத் ஸ்ராயோ

56. நு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம் ஏகைவ பகிநி

57. லோகே ஸர்வேஷா மேவ பூபுஜாம் நயோஜ்யா கரக் ரஹ்யா வி

58. ப்ரதத்தா வஸுந்தரா உ இந்தப்படிக்கு பொக்கிசம் கணக்கு ஆதிநாராயண

59. பிள்ளைமகன் தளவத்தாதான் கையெளுத்துபடிக்கு வேலா யுதம் கை

60. யெழுத்து உ

ஸ்ரீ ராமநாத ஸ்வாமி சகாயம்

# செப்பேடு எண் 72

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : புருஷோத்தம பண்டிதர்
3. செப்பேட்டின் காலம் : சகம் 1703 பிலவ ஆண்டு தை மீ 15 தேதி (கி.பி. 24-4-1782)
4. செப்பேட்டின் பொருள் : நாகாச்சி மடதர்மத்திற்கு பேய் ராமத்தேவனேந்தல் தானம்

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்துராமலிங்க சேதுபதி மன்னரது விருதாவளியாக இந்த செப்பேட்டில் முப்பத்து ஒன்பது சிறப்புப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தச் செப்பேட்டை சேதுபதி மன்னர் நாகாச்சி மடதர்மத் திற்காக பேய்ராமத்தேவனேந்தல் என்ற ஊரினை தானமாக புருஷோத்தம் பண்டிதர் என்பவர் கையில் கொடுத்ததாகத் தெரிகிறது. இராமேசுவரம் தலயாத்திரை வருகின்ற பக்தகோடி கள் வடக்கில் இருந்து வந்து வங்கக்கடற்கரையில் உள்ள ஆத்தங்கரைச் சத்திரத்தில் தங்கியபிறகு கிழக்கு நோக்கி கடற் கரை வழியாக பிள்ளைமடம் சத்திரத்தைக் கடந்து மண்டபம் தோணித்துறைக்குச் செல்லுதல் வேண்டும். ஆற்றங்கரை சுழி முகத்தில் வைகையாறு சங்கமிப்பதால் முகத்துவாரத்தை கால் நடையாக கார்காலத்தில் கடப்பது ஆபத்தாக இருந்து வந்தது இதனைத் தவிர்ப்பதற்காக கிழக்கே செல்லாமல் ஆற்றங் கரையில் தெற்கே சிறிது தொலைவு சென்று வைகையாற்றைப் படகு மூலம் கடப்பது எளிதாக இருந்தது. அவ்விதம் வருபவர் களுக்கு நாகாச்சிமடம் மிகவும் பயனுள்ள தங்குமிடமாக அமைந்

திருந்தது. அங்கு களைப்பாறும் பயணிகளுக்கு உணவு இருப்பிட வசதி கொடுப்பதற்காக சேதுபதிமன்னர் இந்த தானத்தை வழங்கியுள்ளார். இந்தமடம் இப்பொழுது இல்லை.

தானம் வழங்கப்பட்ட பேய்ராமத் தேவனேந்தல் முந்தைய கைக்கி நாட்டும்பிரிவிலிருந்தது. இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் வைகையாற்றின் வடபகுதியில் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் பாடிய பகழிக் கூத்தரது கிராம மான சன்னாசிக்கு அண்மையிலுள்ளது. தானம் வழங்கப்பட்ட ஊரிலிருந்து சேதுபதி மன்னருக்கு இறுக்கப்பட்ட நிலவரி, இடங்கைவரி, வலங்கை வரி, கீதாரம் கரைமணியம், ஆதடை மற்றும் பல சுதந்திரங்களும், இந்த மடதர்மத்திற்காக மன்னர் விட்டுக்கொடுத்துள்ளார்.

இந்த ஊருக்கான பெருநான்கெல்கை கொடுக்கப்பட் டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள பெரியானேந்தல் தவளைக்குளம், தேத்தாங்கால், சித்தனேந்தல் அக்கிரமேசி, அஞ்சாமடை ஆகிய அனைத்து ஊர்களும் இன்னும் உள்ளன.

செப்பேட்டில் காணப்படும் மூலக்கரை, பிரகரை, கரையடி கடைக்கொம்பு, வெட்டுத்தாவு, பாகை, பறம்பு, புறவு, ஏந்தல் ஆத்துக்கால், ஊத்துக்கால், ஆகியன வட்டார வழக்குகள் ஆகும்.

## செப்பேடு எண். 73

(நகல்)

1. ஸ்வஸ்தி சாலிவாகன சகாப்தம் 1703 கலிய வருஷ 4882 இதன்மேல் செல்

2. லா நின்ற பிலவ நாம சம்வச்ரத்தில் உத்தராயணத்தில் தைய் அமாவாசை புண்

3. ய காலமும் உத்திராட நட்சத்திரமும் சுபயோக சுபகரண மும் பெற்ற சுபதினத்து

4. தேவை நகராதிபன் சேதுமூல துரந்தரன் ரரமநாத சுவா மி காரியதுரந்தரன் பரராச

5, சிங்கம் பாராச சேகரன் பரராச மன்னர் சொரிமுத்து வன்னியன் அனு

6. ம கேதனன் கெருடகேதனன் சிங்க கேதனன் மயூரகேத னன் குக்கிட கேதனன் செ

7. ங்காவிக்குடை மேல் கவரி மயிர் வச்ச விருதுடைய ராசாதி ராசன் ராசமாத்தா

8 ண்டன் ராசகுல திலகன் சங்கீத சாயித்திய வினோதன் சோழமண்டல பிரதிஷ்டாபனாச்சாரி

9. யன் தொண்ட மண்டல சண்டப் பிரசண்டன் பாண்டி மண்டல ஸ்தாபனாச்சாரியன் ஈழ

10. முங்கொங்கும் யாழ்ப்பாணராய பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய

---

‡ நூலாசிரியரால் இராமநாதபுரம் அரண்மனை ஆவணங்களில் இருந்து கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு படி எடுக்கப் பட்டது.

11. ராசாதிராசன் திலதநுதல் மடவார் மடலெழுத வருசுமுகன் பதினெண் பா
12. சை வீணா பிறவீணன் அகளங்கன் அனந்த கலியாண குணாபிராமன் பட்டமான
13. ங்காத்தான் மனுநீதி மறவாதான் வேதியர் காவலன் தொ ண்டியந்துறைக்
14. காவலன் வீரதண்டை சேமத்தளை விளங்குமிரு தாளினா ன் துஷ்ட நிக்கிரக சி
15. ட்ட பரிபாலனன் மறுநீதசோழன், மன்மத சொரூபன் திக் கெல்லாம் புகழ்
16. கொண்டராயன் ஹிரண்ய கெர்ப்ப சுதாகரன் உரிகோல் சுரதானன் மேவ
17. லர் கண்டன் விருது கங்கனம் பெற்றவன் சிவபூஜாதுரந்த
18. ரன் தனுக்கோடி காவலன் வெள்ளயானை வாகனன்கி
19. ரண்ய கெற்பயாஜி இரவிகுல ரெகுநாத சேதுபதி காத்த தேவ
20. ரவர்கள் வங்கிஷ கோத்திரான ஸ்ரீமது முத்துராமலிங்க
21. விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் பூ தானம் ப
22: ண்ணிவிச்சது முகவை இராமநாதபுர முத்துராமலிங்க சுவாமிக்கு
23. மாறியாடும் பெருமாள் பிள்ளை மகன் முத்துவயிரப்பிள்ளை மாரிபத்தாக
24. அய்யாச்சாமி குருக்களிடத்தில் தான சாதனம் கொடுத்தது செம்பிநாட்டில்
25. சொக்கானை மத்திவயல் இந்த இரண்டு கிராமம் சர்வமா
26. னிபமாக ஆதி சேதுவில் தான சாதனம் பண்ணிக்குடுத்த ற்கு எல்
27. லைப்புரவாவது மத்தியல் எல்கைக்குப் புரவு வல்லபாட லுக்கு மேற்கு
28. சிறைக்குளம் கண்மாய்க்கு வடக்கு கழுநீர் மங்கலத்துக்கு கி

29. மூக்கு சிக்கிள் அய்யானாரூரணிக்கு தெற்கு சொக்கானை எல்கை
30. புரவாவது பனிவாசலுக்கு மேற்கு சிக்கிள் பேய்க் கோன்
31. கருப்பண கோயிலுக்கு வடக்கு பேய்க்குளம் ஊருணிக்கும் சின்னக்கண்மாய்
32. கீழ்க்கரைக்கும் கிழக்கு நத்தம் குடியிருப்புக்கு வடக்கு சிக்கிள் காளா
33. ன் கரைக்குத் தெற்கு இந்த இரண்டு கிராமத்து நான் கெல்லைக்குட்பட்ட
34. நஞ்சை. புஞ்சை, திட்டு, திடல், மாவடை, மரவடை கீழ் நோக்கிய கிளை
35. று மேல் நோக்கிய மரம் நிதி நிஷேபம் ஜலதரு பாஷான மச்ச
36. மென்னிய காமியம் என்று சொல்லப்பட்ட அஷ்ட போக கிச்சக மி
37. யங்களும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த த
38. ர்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர் காசி
39. யிலும் ஆதி சேதுவிலும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்டையும்
40. கோடி விஷ்ணு பிரதிஷ்ட்டையும் பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின பலனை அடைய
41. கடவராகவும் இந்த தர்மத்திற்கு விகாதம் பண்ணினபேர் கா
2. சியிலும் சேதுவிலும் கோடி பிராமணனையும் கோடி கா ராம் பசு
43. வையும் தாயையும் குருவையும் வதை பண்ணின பாவத் தை
44. அடைநக் கடவராகவும்
45. சமூகம் உத்தரவுப்படி ராயசம் குப்பையாண்டி கையெழுத்து
46. அருணாசலம் கையெழுத்து

# செப்பேடு எண் 73

(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி. |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமநாதபுரம் அய்யாச்சாமி குருக்கள் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1703 பிலவ ஆண்டு தை மாதம் (கி.பி. 13-1-1782) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | இராமநாதபுரம் முத்துராமலிங்க சுவாமி ஆலயத்திற்கு இரண்டு ஊர்கள் சர்வமானியம். |

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது விருதாவளியாக முப்பத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ''செங்காவிக் கொடைமேல் கவரி மயிர் வைச்ச விருதுடையான் ''இரணிய கற்ப சுதாகரன்'' ''வெள்ளானை, வாகனன்'' என்ற புதுப்பெயர்களைத் தவிர ஏனையவை இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்பட்டவையாகும். இரணிய கற்ப வேள்வி செய்த ரெகுநாத திருமலை சேதுபதியின் ''குமாரன்'' என்ற முறையில் இரணிய கற்ப சுதாகரன் என்ற சிறப்புப் பெயரும், அஷ்ட ஐஸ்வரியங்களைக் கொண்ட தேவேந்திரனது வெள்ளை நிற யானையை உடையவன் என்ற சிறப்புப் பெயரும் வந்துள்ளன.

---

‡ Rajaram Row T. Manual of Ramnad Samasthanam (1891) page 327

இராமநாதபுரம் கோட்டைக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவிலுள்ள லட்சுமிபுரத்தில் முத்துராமலிங்க சுவாமி கோயில் அமைந்துள்ளது. இதனை எடுப்பித்தவர் முத்துவிஜய ரெகுநாத சேதுபதியாகும். மிகுந்த அழுத்தமான சிவபக்தர் என்ற வகையில் அந்த மன்னர் நாள்தோறும், இராமேசுவரம் திருக்கோயிலுக்குச் செல்ல இயலாத நிலையில், இராமேசுவரம் இறைவனை இராமநாதபுரத்திலேயே பூஜிப்பதற்காக இந்தக் கோயிலை நிறுவினார் என்ற செய்தி இராமநாதபுரம் மேன் யுவலில் காணப்படுகிறது. இந்த மன்னரை அடுத்துப் பட்ட மேறிய செல்லமுத்து விஜயரெகுநாத சேதுபதி என்பவர் இந்த ஆலயத்திற்கு அண்மையில் செல்லபூபாலசத்திரம் என்ற பெயரில் அன்ன சாலை ஒன்றை அமைத்துள்ளார். இந்தக் கோயிலின் வடக்குப் பகுதியில் சமரச சன்மார்க்க சித்தாந்தம், கண்ட தாயு மான அடிகளது சமாதியுற்ற தோட்டமும் உள்ளது.

இந்தக் கோயிலின் பராமரிப்புக்காக சொக்கானை, மத்தி வயல் என்ற இரு கிராமங்களை சர்வமான்யமாக வழங்கி யுள்ளதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. அந்தக் கிராமங் களுக்கான நான்கு எல்கை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள *சிக்கல், சிறைக்குளம், கழுநீர்மங்கலம், பேய்க்குளம்* ஆகிய நான்கு ஊர்களும் இன்றும் வழக்கில் உள்ளன. ஆனால் வல்ல பாடல் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஊர்மட்டும் வல்லக்குளம் என்ற பெயரில் வழங்கி வருகின்றது. இந்த ஊர்கள் அனைத்தும் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளன.

''பாடல்'' என்ற பெயர் விகுதியுடைய இன்னொரு ஊர் வல்லபாடல் கிராமத்திற்கு வடகிழக்கே ஐந்துகல் தொலைவில் உள்ள இதம் பாடல் ஆகும். இத்தகைய பாடல் என்ற பெயர் விகுதிகளையுடைய ஊர்கள் தமிழகத்தில் வேறு எங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை.

## செப்பேடு எண் 74

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1703 கலியப்தம் 4882 இதன்மே

2. ற் செல்லாநின்ற சுபகிறுதுநாம சம்வத்சரத்தில் உத்தராயண வசந்த ரிது வை

3. காசி மாசம் கிஷ்ண பக்ஷம் அமாவாசி இந்து வாரம் ரோகிணி நட்க்ஷத்திரம் சித்தநாம

4. யோகமும் சதுற்ப்பாத கரணமுங் கூடினசுபதினத்தில் தேவை நகராதிபன் சே

5. து மூல துரந்தரன் ராமனாதசுவாமி காரிய துரந்தான் சிவபூசா துரந்தர

6. ன் பரராசசேகரன் பரராசசிங்கம் அரியராயிர தளவிபாடன் கண்ட

7. னாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டி மண்டல ஸ்தாபனாச்

8. ரியன் சோளமண்டல பிறதிஷ்டாபனாசாரியன் தொண்ட மண்டல சண்ட

9. ப் பிறசண்டன் ஈளமுங் கொங்குந் யாழ்ப்பாணராயன் பட்டணமும்

10. அளித்துக் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிலகன் ராச பரமேஸ்வர

---

* ARE. A.A/1990. இந்தச் செப்பேட்டினை படி எடுத்து உதவியது : புலவர் திரு. செ. ராஜு, தஞ்சை.

11. ன் ராசமார்த்தாண்டன் ராசகுலதிலகன் ராசகெம்பீரன் துஷ்டராயிரகண்ட
12. ன் மூவராயிர கண்டன் வேதியர்கள் காவலன் வைகை வளநாடான் தொ
13. ண்டியந்துறை காவலன் செம்பிவளநாடான் பட்டமானங்
14. காத்தவன் கொட்டமடக்கி இவுளி பா
15, வடி மிதித்தேறுவார்கண்டன் சொரிமு
16. த்து வன்னியன் திலதநுதல் மடவார்க
17. ள் மடலெழுத வருசுமுகன் சங்கீத சாயித்ய வித்தியாவி னோ
18. தன் பதிணென்பாசை வீணாப்பிறவீணன் சகல சாம்பிறா றாச்சிய லக்ஷ்மி
19. வாசன் சத்திய அரிச்சந்திரன் கொடைக்கு கர்ணன் வில் லுக்கு வி
20. சையன் சொல்லுக்கு அகத்தியன் அனுமகேதனன் கெருட கேத
21. னன் மயூரகேதனன் குக்கிட கேதனன் சிங்ககேதனன் மனு நீதி ம
22. றவாதவன் செங்காவிக்குடை விருதுசல்லியுடையவன் சே மத்த
23. லை விளங்குமிருதாளினான் மதுரவதனன் வங்கிசாதிபரா ன துகவூர்க்
24. கூத்தத்து குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையா த கண்ட
25. னிலிருக்கும் ஸ்ரீமது இரணியகெற்பயாசி ரவிகுல ரெகு னாத
26. ச்சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிச பரிபாலகரான ஸ்ரீமது
27. முத்துராமலிங்க விசைய ரெகுனாத சேதுபதி காத்த தேவர
28. வர்கள் பாரத்வாஜ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யெஜுஸா

29. காத்யாபகரான ராமசிவன் புத்திரன் சுப்பிறமணிய அய்யனுக்
30. கு குளபட்டி பாதியும் பூதானம் தாம்பிர சாசனமாகப் பண்ணி
31. க் கொடுத்தபடி இந்தக்கிறாமத்துக்கு எல்கையாவது விளத் தூர்
32. வகுத்துக்காலுக்கு வடக்கு ஆயக்குடிக் கண்மாய்ப் பொரு த்து கரைக்கு
33. குடிக் காலுக்குத் தெற்கு ஆயக்குடிக் கண்மாய் பொருத்து கரைக்கு
34. மேற்க்கு இன்னாங்கெல்கைக்குள்பட்ட குளப்பட்டி பாதி க்கு மாவடை
35. மரவடை திட்டுத்திடல் நஞ்சை புஞ்சை ஆத்துக்கால் ஊத் துக்கால் செ
36. ய்த்தளை நிதி நிக்ஷேபம் மேல்நோக்கிய கிணறு கீழ் நோ க்கிய கிணறு செ
37. லதரு பாஷாணம் நிதி நிசேஷம் என்று சொல்லப்பட்ட அஷ்டபோக
38. தேசகாமியமும் விநுயாதி விக்கிறயங்களுக்கு யோக்கிய மாக ஆ
39. தி சந்திராதித்தவரைக்கு ஆண்டனுபவித்துக் கொள்வா றாகவு
40. இந்த தற்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி னவர்
41. கள் கெங்கைக்கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங் களிலே
42. கோடி கன்னிகாதானம் கோடிகோதானம் கோடி சிவலிங்க பிற
43. திஷ்ட அக்கிறகாரம் பிறதிஷ்டை பண்ணின பலத்தை யடைவாராகவு
44. ம் இந்த தற்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணி னவர்கள் கெ

45. ங்கைக் கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்களிலே மாதா பிதா

46. குருவை குருவை வதை பண்ணின பாவத்தையடைவா ராகவும் உ

47. ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பர தத்தாப ஹா

48. ண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது தாந பாலந யோர்மத் யே தாந

49. ாஜ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்கமவாப்நோதி பால நாத் அச்சு

50. தம் பதம் ஏகைவபகஸ்ரீ லோகே ஸர்வேஷ மேவபூபுஜாம் ரயோ

51. ஜ்ய நகரச் ராஹ்யா விப்ரதத்தா வசுந்தரா உ பட்டைய மெளுதினே

52. ன் சவாதுப்படிக்கு வேலாயுதம் கையெழுத்து உ ராம னாதசுவாமி

53. சகாயம் உ

# செப்பேடு எண் 74

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகு நாத சேதுபதி

2. செப்பேடு பெற்றவர் : இராமசிவன் புத்திரன் சுப்பிர மணிய அய்யன்

3. செப்பேட்டின் காலம் : சகம் 1704 சோபகிருது வைகாசி மாதம் (கி. பி. 13-05-1782)

4. செப்பேட்டின் பொருள் : குளப்பட்டி கிராமதானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்துராமலிங்க சேதுபதி மன்னரது விருதாவளியாக நாற்பத்து நான்கு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டு உள்ளன. இவையனைத் தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்பட்டவை.

குளப்பட்டியின் பாதிப் பகுதியை யஜுர் வேத விற்பன்ன ரான சுப்பிரமணிய அய்யருக்கு பூதானமாக வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊரின் இன்னொரு பகுதி ஏற்கெனவே தேவதாயமாகவோ, பிரம்மதாயமாகவோ, வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறது. ஐம் பத்திரண்டு வரிகளைக் கொண்ட இந்தச் செப்பேட்டின் இறுதி ஏழு வரிகளில் சமஸ்கிருதச் சுலோகம் இடம் பெற்றுள்ளது.

இந்த ஊர் பரமக்குடி வட்டத்தின் தென்பகுதியில் அமைந் துள்ளது. இதற்கான நான்கெல்கைகளும் துலக்கமாகக் கொடுக்க பட்டுள்ளன. அவைகளில் குறிப்பிடப்பட்டு உள்ள வகுத்துக்கால், முகவனை, பொருத்துக்கரை, என்பன இந்த வட்டாரவழக்குகள்.

ஆகும். இந்த ஊரின் ஒருபாதி ஏற்கனவே தானமாக வழங்கப் பட்டுவிட்டதால், இந்தச் செப்பேடு பெற்றவர் இந்த கிராமத்தின் மற்றொரு பாதியினைத்தான் பெற்றார் என்பது வரி 30/33ல் இருந்து தெரியவருகிறது.

அந்தப்பகுதி எது என்பதும் அதனைப் பெற்றவர் யார் என்பதும் அறியத்தக்கதாக இல்லை. அத்துடன் இந்த ஊரில் இருந்து எத்தகைய வரிப்பாடுகள் மன்னரது கடமையாகப் பெறப்பட்டது என்பதும் தெரியவில்லை.

ஆதலால் தானம் வழங்கப்பட்ட பாதிப்பகுதி முழுவதும், விளை நிலங்களை மட்டும் கொண்டது என்பதனை வரி 35 லிருந்து ஊகிக்க முடிகிறது.

## செப்பேடு எண் 75

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீமது மகாமண்டலேவரன் அரியராயிர தளவிபா டன் பாசை
2. க்கு தப்புவராயிரகண்டன் மூவராயிரகண்டன் கண்டனாடு கொண்
3. டு கொண்டனாடுகொடாதான் பாண்டிமண்டலதாபனா சாரியன்
4. சோளமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன் தொண்ட மண்டல சண்டப்பிரசண்
5. டன் ஈளமும் கொங்கும் யாள்பானபட்டணமும் கெச வேட்டை கொ
6. ண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன் ராசமாற்தாண் டன்
7. ராசகெம்பீரன் ராசகுலதிலகன் துட்டரில்துட்ட இளஞ்சிங் கந் தளஞ்
8. சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்துப்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி
9. தாலிக்குவேலி தொண்டித் துரைகாவலன் வைகைவள நாடன்
10. அரசராவணராமன் அடியார்வேளைக்காறன் பரதளவி பாடன்
11. துரகரேபந்தன் அந்தம்பிறகண்டன் சாடிக்காறர்கண்டன்

ASSI. Vol. IV. pp. 103-104

12. சாமித்துரோகியள் மிண்ட்டன் பனுக்குவார் கண்டன் செம்பி
13. வளநாடன் சேமத்தலைவிளங்குமிருதாளினான் செங்காவிக்
14. குடையான் அனுமத்துவசம் கெருடத்துவசம் சிங்கத்துவசம்
15. மீனத்துவசமுடையவன் திலதநுதல் மடமாதர்மடலெழு
16. — — — — — — — — — — — — — —
17. தவருசுமுகன் பரதநாடகப் பிறவீணன் வலியச்சருவி மதுரை
18. மானங்காத்தான் சத்திய அரிச்சந்திரன் குடைக்கு கர்னன் பரிக்கு
19. நகுலன் அறிவுக்கு அகத்தியன் பொறுமைக்குத் தற்மன் நிதிக்குக் கு
20. பேரன் வில்லுக்கு விசையன் தேவை நகராதிபன் ராமனா
21. தசுவாமி காரியதுரந்தரன் சிவபூசாதுரந்தரன் இவுளி பாவடி
22. மிதித்தேறுவார்கண்டன் பஞ்சபாணாவதாரன்சங்கீதசாயித்
23. திய வித்தியாவினோதன் ஒட்டியர்தளவிபாடன் ஒட்டியர் மோ
24. கந்தவிள்த்தான் துலுக்கர்தளவிபாடன் துலுக்கர்மோகந்
25. தவிள்த்தான் சமரகோலாகலன் சொன்னமொழிமாறாத சுமுகன்
26. அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய துகவூர்க்கூத்தத் துக்க
27. ரத்தூரான குலோத்துங்கசோளநல்லூர் கீள்பால்விரையா
28. தகண்டனிலிருக்கும் ராசாமனிய ராசஸ்ரீ இரணியகெற்பயா
29. சி ஸ்ரீ முத்துராமலிங்க விசைய ரெகுநாத சேதுபதி காத்தத்
30. தேவரவர்கள் பிறிதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியரு
31. ளாநின்ற ஸ்வஸ்திஸ்ரீ 4884 கலியப்தம் சாலிவாகன சகாப்தம் 1705 இதன்
32. மேல் செல்லா நின்ற சோபகிருதுநாம கலிசவம் ஸம்வத்சரத்தில் உத்தராயணத்தில் கிரீ

33. ஷ்ரிதுவின் மிதுனமாசையில் சுக்கிலபட்சத்து திரயோதெ
34. சியும் அனுசநட்சத்திரமும் சுக்கிரவாரமும் சித்திநாமயோக
மும்
35. தை துலாகரணமுங்கூடின சுபயோக சுபதினத்தில் சுத்
தோ தக
36. தாராபூர்வமாக தானம் பண்ணினது வரகுண வளநாட்டு
பிரம
37. தேசமான ராசசிங்கமங்கலம் கையிலாசநாதசுவாமிகோயில்
38. அற்சனபாகத்துக்கு மந்திரநாதகுருக்கள் புத்திரன் சங்கர
லிங்கக்கு
39. ருக்களுக்கு இராசசிங்கமங்கலம்ஊருக்கடைக்குப் பரிவற்த்த
னையாக வி
40. ட்டுக்குடுத்த கிறாமமாவது வரகுணவளநாட்டு பிரமதேச
மான புவ
41. னேசுவரி புரத்துக்கு பிரதிநாமமான முடித்தனாவயமுளு
தும் சஹிரண்
42. ணியோதக தாராபூருவமாக தானம்பண்ணினபடியினாலே
43. ஆண்டுகொள்வாராகவும் முடித்தனாவயலுக்கு எல்கை
யாவது
44. கருங்குடி கண்மாய்க்கு மேற்கு சோளந்தூர் வயலுக்கு
வடக்கு பொ
45. ன்மாரிவயலுக்கு கிளக்கு அத்தானூர் கண்மாய்க்கு தெற்
கு இன்னா
46. ன்கெல்கைக்குள்ப்பட்ட யேந்தல் பிரவிடை மாவடை
மேல்நோக்கிய
47. மரம் கீழ்நோக்கிய கிணறு நிதிநிக்ஷேபம் செலதருபாஷாண
48. ஆகாமியஅஷ்டபோகமும் சந்திராதித்யவரைக்கும் தானாதி
49. வினுயாதி விக்கிறையங்களுக்கும் புத்திரபாரம்பரியமா
50. க ஆண்டு அனுபவித்துக்கொள்ளக் கடவராகவும், இந்த
தற்மத்
51. துக்கு வாக்குச்சகாயம் அற்தசகாயம் பண்ணினவர்கள்
கோடி

52. சிவலிங்கப்பிறதிஷையும் கோடி பிறம பிரதிஷையும் கோடி
53. கன்னிகாதானமும் பண்ணினபலனே அடைவாராகவும் இந்த
54. தற்மத்துக்கு விகாதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையி
55. லே பிறமகத்தியும் ஸ்திரிகத்தியும் கோகத்தியும் பண்ணின பாவத்தி
56. லே போகக்கடவராகவும் ஸ்வதத்தாவி குணம், புண்யம் பரத்ததா
57. நு பாலனம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பிவே
58. து பரிபாலன யோமார்த்தாயே தாநூச்ரயோநு பாலநம்
59. நூநா ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்
60. இந்தப்படிக்கு எளுதினேன் வேலாயுதம் உ கைலா
61. நாத சுவாமி ஸகாயம் உ,

# செப்பேடு எண் 75

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி.
2. செப்பேடு பெற்றவர் : இராஜசிங்க மங்கலம் சங்கர லிங்க குருக்கள்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1705 சோபகிருது ஆண்டு மிதுன மாதம் (கி. பி. 13-6-1783)
4. செப்பேட்டின் பொருள் : மேலேகண்ட குருக்களுக்கு முடித் தனாவயல் கிராமம் சர்வ மான்யம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது அறுபத்தியிரண்டு சிறப்புப் பெயர்கள் இந்தப்பட்டயத்தில் கொடுக்கப் பட்டுள்ளன. நிதிக்குக் குபேரன், சொன்னமொழி மாறாத சுமுகன், என்ற இரண்டு சிறப்புப் பெயர்கள் மட்டும் புதுமையானவை. ஏனையவை முந்தையச் செப்பேடுகளில் காணப் பட்டவையாகும்.

இராஜசிங்கமங்கலம் கைலாசநாத சுவாமி ஆலயம் எட்டாவது நூற்றாண்டில் வரகுணபாண்டியன் என்ற மன்னரால் நிர் மாணிக்கப்பட்டது. அந்த ஆலயத்தின் பூஜாகரரான சங்கர லிங்க குருக்களுக்கு அதே பகுதியில் உள்ள முடித்தனாவயல் என்ற கிராமம் தானமாக வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இராஜசிங்கமங்கலம் இராஜசிம்ம,பாண்டியன் என்ற மன்னரது நினைவாக வழங்கப்பட்ட ஊர்களில் இந்த மங்கலமும் ஒன்று. ஊரின் தென்கிழக்கே ஐந்து கல் தொலைவில்

அமைந்துள்ளது. *முடித்தனாவயல்* பேச்சில்லா கிராமமாக *கொத்த மங்கலம் புவனேஸ்வரிபுரம்* என்றதொரு பெயரும் இருந்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

இந்த ஊருக்கு அண்மையிலேயே ''உலக மகாதேவி''யின் பெயரால் உலகமகாதேவிபட்டினம் என்ற புவனேஸ்வரிபுரம்என்ற இந்த ஊரும் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு ஊர்களும் ராஜராஜ சோழனது பாண்டிய நாட்டுப் படையெடுப் பின் பொழுது ஏற்பட்டனவாகும்.

தானம் பெற்றவர் மன்னரிடமிருந்து வேறொரு கிராம மாகிய ''ஊகுக்கடை''யைப் பெற்று இருந்தார் என்பதும் என்ன காரணத்தினாலோ, அதனைக் கொடுத்துவிட்டு முடித்ததனா வயலைப் பெற்றார் என்பதனை வரி. 37ல் உள்ள பரிவர்த்தனை என்ற சொல் தெரிவிக்கின்றது.

## செப்பேடு எண் 77
*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜய ரெகுநாத முத்து சேதுபதியவர்கள்
2. செப்பேடு பெற்றவர் : வீரலெட்சுமி நாச்சியார்
3. செப்பேட்டின் காலம் : கி.பி. 1808 அக்டோபர் 4ந்தேதி
4. செப்பேட்டின் பொருள் : பரிந்துரை

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் செப்பேடுகளில் மிகவும் சுருக்கமானதும் சேதுபதி மன்னர்களில் இறுதியான சேதுபதி வழங்கிய இறுதியான செப்பேடு என்ற முறையிலும் வரலாற்றுச் சிறப்புடையதாக உள்ளது. கி.பி. 1600 முதல் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த தன்னரசு மன்னர்களான பதினாறு சேதுபதிகளில் கடைசி மன்னராவிருந்த முத்துவிஜய ரெகுநாத முத்துராமலிங்க சேதுபதியவர்கள் இதனை வழங்கியுள்ளார். இதுவரைக் காணப்பட்ட செப்பேடுகள் அனைத்தும் திருக்கோயில், திருமடம், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் கல்வி, கேள்வி, புலங்களில் சிறந்து விளங்கிய அறிஞர் பெருமக்களுக்கு வழங்கப்பட்ட தானங்களை குறிப்பிடுபவைகள் ஆகும்.

ஆனால் இந்தச் செப்பேடு அவைகளினின்றும் மாற்றமாக சேதுபதி மன்னர் தமது இரண்டாவது மனைவிக்கு பிறக்கவிருக்கும் குழந்தைக்கு அரசு ஆதரவும் சலுகையும் கொடுக்கவேண்டுமென்பதற்காக சென்னை செயின்ட் ஜார்ச் கோட்டைச் சிறையிலிருந்த பொழுது வரைந்து வழங்கிய பரிந்துரையைக் கொண்டது. அந்த மன்னரது இறுதி விருப்பத்தைக் கொண்ட ஆவணமாகவும் இதனைக் கொள்ளலாம். ஏனெனில் அவர் 07-06-1795 முதல் தொடர்ந்து திருச்சிக் கோட்டையிலும் பாதுகாப்புக் கைதி

## செப்பேடு எண். 77

(நகல்)

1. இராமநாதபுரம் ஜெமீன் கிரண்ய கர்
2. ப்பயாஜி இரவிகுல முத்துவிசைய ரெகுநாத முத்து
3. ராமலிங்க சேதுபதியவர்கள் தன்பாரி
4. கெற்பவதியாகியிருக்கும் வீரலட்சுமி நாச்
5. சியார் அவர்களுக்கு 1808 வருடம் அக்டோபர் மீ 4ந்தேதி
6. எழுதிக் கொடுத்த சாசனம்
7. 1795ம் வருடம் மார்ச் மீ 4 தேதி நவாபு வாலாசாகி
8. புக்கும் மதராஸ் ஒப்பேர்ட் கவர்னர் துரையவர்
9. களுக்கும் நடந்த உடன்படிக்கை படிக்கும்
10. 1803 ஆம் வரு ஏப்ரல் மீ 5ந் தேதி, 24ந்தேதி
11. யிலும் கவர்மெண்டார் அவர்களா
12. லே பிறத்திருக்கித்திரமான உத்திரவுப்
13. படிக்கும் கர்ப்பவதியாய் இருக்கின்ற என்பாரி வீரல
14. லட்சுமி நாச்சியாருக்கு குழந்தை பிறந்த உ
15. டன் இராமநாதபுரம் ஜெமீனுக்குத் கொண்டு
16. போய் தமக்கை மங்களேஸ்வரி நாச்சி
17. யாரிடம் ஒப்புவித்து கவர்மெ
18. ண்டு பென்சனும் ஜெமீனில் அலவெண்சு
19. ம் சந்ததி பரம்பரையாய் கொடுத்து
20. பாதுகாத்து வரவும்.
21. — — — — — — — — — — — — — —
22. — — — — — — — — — — — — — —
23. — — — — — — — — — — — — — —

---

‡ நூலாசிரியரது கள ஆய்வின் பொழுது இந்தச் செப்பேடு சென்னைபட்டணம் தாம்பரத்தில் உள்ள மன்னர் வழியின ரான திரு சுந்தரசாமித்தேவர் என்பவரிடம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

இந்த தான சாசனம் பெற்ற கிருஷ்ண அய்யங்கார் முத்துராமலிங்க சேதுபதி மன்னரது இரண்டாவது பிரதானியாக பணியாற்றியவர் என்பதும் இவருக்குச் சின்னப் பிரதானி என்ற பட்டம் இருந்ததும் தெரிய வருகிறது. இவரது முழு உருவச்சிலை இராமேசுவரம் திருக்கோயில் மூன்றாவது பிரகாரத்தில் கிழக்குப் பகுதியில் காணப்படுகிறது. சின்னப் பிரதானியாக இருந்து ஆற்றிய பணிக்காக சேது மன்னர் இந்த தானத்தை வழங்கியுள்ளார். தானம் வழங்கப்பட்ட ஊரின் நான்கு எல்லைகளும் அங்கிருந்து கிடைக்கப்பெறும் வருவாய்களும் குறிக்கப்பட்டு இருப்பதால், அந்த ஊர் வளமைமிக்கதாக இருந்தது தெரியவருகிறது. இன்னொரு பிரதானியான முத்திருளப்ப பிள்ளையைப் போல இவரும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பினியாரது ஆதரவாளராக மாறிய காரணத்தால் இவரை மன்னர் சிறையிலிட்டார் என்ற செய்தியும் கும்பினியாரது ஆவணமொன்றில் காணப்படுகிறது.‡

இந்த செப்பேடு முழுவதும்கிரந்த எழுத்துக்கள் விரவி வந்துள்ளன.

‡ Madura District Records. Vol. 1160 (1812) page 56,57

## செப்பேடு எண். 76

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : இராமநாதபுரம் கிருஷ்ணஅய்யங்கார்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1706 சோபகிருது (கி.பி. 10-4-1783)
4. செப்பேட்டின் பொருள் : செப்பேடு கொண்டான் என்ற கிராமம் சர்வமான்யம்

இந்த மன்னரது விருதாவளிகளாக அறுபத்து இரண்டு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளில் ''அநேக பிரம்ம பிரதிஷ்டாபகரன்'' ஒரே ஒரு சிறப்புப்பெயர் மட்டும் புதுமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் நகர் சேஷாத்திரி அய்யங்கார் மகன் கிருஷ்ணண அய்யங்கார் என்பவருக்கு முத்துராமலிங்க பூபால புரம் என்ற செப்பேடு கொண்டான் கிராமம் தானம் வழங்கப் பட்டதை இந்தச் செப்பேடு குறிக்கின்றது. இந்த ஊருக்காக குறிப்பிடப்பட்ட எல்கைகளிலிருந்து இந்த ஊர் இன்றைய இராமநாதபுர மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் இருந்தது தெரிய வருகிறது. ஆனால் இந்த ஊர் இன்று வழக்கில் இல்லை ஆனால் முந்தைய நிலக்கூறான கைக்கி நாட்டில் இருந்ததை ''கைக்கி நாட்டு பத்தில்'' என இச் செப்பேட்டில் குறிக்கப் பட்டுள்ளது.

47. ட்ட செப்பேடு கொண்டான் கிருஷ்ணய்யங்காருக்கு பூதா
ன சகிரன்யோதக தான

48. சாசனம் பண்ணிக் கொடுத்த படியினாலே இதிலுள்ள
நஞ்சை புஞ்சை

49. திட்டுத்திடல் மாவடை மரவடை கீழ்நோக்கிய கிணறு
மேல்நோக்கிய மரம்

50. குட்டம் குளம் குளக்கால் குடிபடை பள்ளு பறை சொர்
ணதாயம் நிதி நிஷே

51. ப சலதரு பாஷாண என்று சொல்லப்பட்ட அஷ்ட

52. தேச சுவாமியங்களும் வினிமய விக்கிரயங்களுக்கும்

53. யோக்யமாக புத்திர பவுத்திர பாரம்பரியமாக ஆசந்திரார்
க்க ஸ்தாகியாக சந்திர பிரவேசம்

54, வரையும் சந்திராத்திப வரையும் ஆண்டு அனுபவித்து
கொள்வாராகவுந் இந்த தர்

55. மத்தை பரிபாலனம் பண்ணினபேர்கள் கோடி சிவலிங்க
பிரதிஷ்டையும்

56. கோடி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி கோதானமும்
பண்ணின புண்ணிய

57. ம்பெறுவாராகவும் இந்த தருமத்துக்கு அகிதம் நினைத்த
பேர் காசி சேதுவில்

58. கோகத்தி பிரமஹத்தி பண்ணின பாவத்தை அடைவாராக
வும் உ

29. பூலோக தேவேந்திரன் சிவபூசா துரந்தரன் அநேக பிரம் மப் பிரதிஷ்டாபகாரன் செம்பி வ

30. ளநாடன் செங்காவிக்குடையும் அதன்மேல் விருது வெண்க வரியும் பெ

31. ற்றவன் சகலசாம்பிராச்சிய லெட்சுமிநிவாஸன் ராமநாத சுவாமி காரி

32. ய துரந்தரன் தொகவூர் கூத்தத்து காத்தூரான குலோத்

33. துங்க சோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனில் விளங்கிய துலாபு

34. ருஷதானாதி சோடச மஹாதான துரந்தரனான ஸ்ரீஹிரண்ய கர்பயாசி இரவி

35. குலசேகர ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் ஸ்ரீ

36. மது முத்துராமலிங்க விசயரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் ஹரி

37. த கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யஜுஸ்சா காத்தியபரான சேஷாத்ரி அ

38. ய்யங்கார் புத்ரன் கிருஷ்ணய்யய்காருக்கு மேஷசங்கராந்தி புண்யகாலத்தில்

39. ராமநாதபுரத்தில் நிறாவில் சகிரண்யோதக தானபூர்வ மாக பூதான ஸா

40. சனம் பண்ணிக்கொடுத்தபடி பூதான சாசனமாவது கைக் கி நாட்டு பத்

41. தில் செப்பேடு கொண்டானுக்குப் பிரதிநாமமான முத்து ராமலிங்க பூபாலபுரம்

42. நமக்கு தானசாசனம் பண்ணிக் கொடுத்தபடியினாலே இதுக்கு எல்கை

43. யாவது சேதுபாதைக்கு மேற்கு தென்பாற்கெல்கையாவது பத்தனே

44. ந்தலணையாய் வடகரை உள்ளூரணி தென்கரை அரசுக்கு வடக்கு மேற்க

45. ல்கையாவது.......ரத்துக்கு தெற்கு இன்னான்கெல்லைக் குள்ப்ப

12. ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் இரவி குல
13. சேகரன் பனுக்குவார் கண்டன் அந்தம்பர கண்டன் சாடிக் காரர்
14. கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் துட்டரில் துட்டன்
15. — — — — — — — — — — — — — —
16. துட்டர் கொட்டமடக்கி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்ன
17. ர்சிங்கம் ஆத்துப்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங்
18. காத்தான் தாலிக்கு வேலி சத்திராதிகள் மிண்டன் வன் னியராட்
19. டந்தவிழ்த்தான் தொண்டியந்துறை காவலன் துரகரே பந்தன் அ
20. னுமகேதனன் கெருடகேதனன் சிங்ககேதனன் கொடைக்கு கர்
21. ணன் பொருமைக்கு தருமன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசய
22. ன் பரிக்கு நகுளன் அறிவுக்கு அகஸ்தியன் சத்திய அரி சந்திரன் வீரவெம்
23. பாமாலை உபயசாமரம் உல்லாச சல்லாப சங்கீத சாயித்ச் திய வித்தி
24. யாவினோதன் திலதனுதல் மடமாதர் மடலெளுத வரு சுமுகன் விசய
25. லெட்சுமி காந்தன் அரச ராவண ராமன் அடியார் வேளைக்காரன் வீரத
26. ண்டைசேமத்தலை விளங்கு மிருதாளினான் துட்டநிக்கிறக சிஷட பரிபால
27. னன் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் பரதளவி
28. பாடன் மலைகலங்கினும் மனம் கலங்காதான் அன்னசத் திர சோமன்

## செப்பேடு எண் 76

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1705 கலியப்தம் 4885 இதன்
2. மேல் செல்லானின்ற சோபகிருது நாம ஸம்வத்ஸரத்தில் உத்தராய
3. ணத்தில் வஸந்த ருதுவில் சைத்ரமாசத்தில் சுக்கில பட்சத் தில் குரு
4. வாரமும் அஷ்டமியும் புனர்வசு நட்சத்திரமும் சுதர்ம நாம யோகமும்
5. சுபயோக சுபகரணமும் கூடின சுபயோக சுபதினத்தில் ஸ்ரீமது மஹாமண்ட
6. லேசுரன் தேவேந்திராதிபன் ஸேதுமூல ரட்சாதுரந்தரன் அரியாயிர த
7. ளவிபாடன் பாஷைக்கு தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொ
8. ண்டு கொண்டநாடு குடாதான் பாண்டி மண்டல ஸ்தாப னா சாரியன்
9. சோள மண்டல பிரதிஷ்டாப ணாசாரியன் தொண்ட மண்டல சண்டப்பி
10. ரசண்டன் ஈழமும் கொங்கும் யாட்பாண தேசமும் எம் மண்டல மு
11. ங்கெச வேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபர மேசுரன்

---

‡ A.S.S,I Vol 4 pp. 100 – 101

யாக வைக்கப்பட்டிருந்தார். அவரது முதல் மனைவி இராஜேஸ்வரி நாச்சியாரும் அவரது ஒரேயொரு பெண் குழந்தையும் இராமநாதபுரம் அரண்மனையில் இருந்தனர். அவரது இரண்டாவது மனைவி வீரலட்சுமி நாச்சியார் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மன்னருடன் வாழ்ந்து கருவுற்ற நிலையில் அவருக்கு பரிந்துரையாக இந்தச் செப்பேட்டினை மன்னர் வரைந்துள்ளார்.

ஆங்கிலேயரது அரசியல் நலன்களுக்கு எதிராக செயல்பட்ட காரணத்தினால் 7-05-1795ம் தேதியன்று அவர்கள் திடீரென இராமநாதபுரம் அரண்மனையைக் கைப்பற்றி மன்னரைப் பதவி நீக்கம் செய்தனர். அத்துடன் சிறையிலும் இட்டனர். தொடர்ந்து எட்டு ஆண்டுகள் இராமநாதபுரம் சீமையை அவர்களது நேரடி ஆட்சியில் வைத்திருந்துவிட்டு, கி.பி. 1803ல் மன்னரது தமக்கையார் மங்களேஸ்வரி நாச்சியாரை மறவர் சீமையின் ஜமீன்தாரினியாக நியமனம் செய்தனர்.

ஆங்கிலேயரது பாதுகாப்புக் கைதியாக இருந்த காரணத்தினால் சேதுபதிகளது வழக்கமான விருதாவளிகளெதுவும் இந்த செப்பேட்டில் குறிப்பிடபடவில்லை. செப்பேடு வரி ஒன்றில் இராமநாதபுரம் சீமைக்குப் பதில் ''இராமநாதபுரம் ஜெமீன்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் இந்த காரணத்தினால் தான். மற்றும் வழக்கமான செப்பேட்டு மங்கலச்சொல், சக ஆண்டுக் காலக்கணக்கு ஆகியவைகளும் இந்தச் செப்பேட்டில் காணப் படவில்லை.

மன்னரது உடல்நிலை சீராக இல்லையென்ற காரணத்தினால் அவர் இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தச் செப்பேட்டில் கையெழுத்திட்டுள்ளார். அத்துடன் சிறையிலிருந்து விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கையும் அவரிடம் இல்லை. ஆதலால் அவரது வாரிசான வீரலட்சுமி நாச்சியாரது குழந்தையை அவரது தமக்கை பராமரித்து வளர்ப்பார் என்ற நம்பிக்கையும் இந்தச் செப்பேட்டு வாசகத்தில் பிரதிபலிக்கின்றது.

தமது குழந்தைக்கான பற்றுக்கோலாக வீரலட்சுமிநாச்சியார் இந்த ஆவணத்தை மன்னரிடமிருந்து பெற்றதும் அவர் இராமநாதபுரத்திற்கு உடனே திரும்பவில்லை. தமது துணைவ

ரான மன்னரை நலிவுற்ற நிலையில் நிராதவராக சென்னையில் விட்டுச் செல்லவும் மனமில்லாத தயக்க நிலையில் மூன்று மாதங்கள் மனவேதனையுடன் இந்த மன்னருக்கு அருகில் இருந்து ஆறுதல் அளித்து வந்தார். 23-1-1809 மன்னர் இயற்கை எய்தினார். சேதுபதிகளது சிறப்புமிக்க வரலாற்று ஏடு இந்த மன்னருடன் முடிவடைந்தது.

பலமுறையீடுகளை ஆங்கிலேயருக்கு அளித்தும் பலன்களும் காணாது விரக்தியடைந்த நிலையில் வீரலட்சுமி நாச்சியார் 31.10-1809ம் தேதி சென்னையிலிருந்து இராமநாதபுரம் திரும்பினார்.*

* Madurai District Vol 1197 (1809 AD) P. 221

## செப்பேடு எண். 78

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1651 இதன் மேல் செல்லா நின்ற
2. ஸ்ரீமுக வருஷம் உத்திராயணத்து ஏமந்த ருதுவில் தை மாதம் கிருஷ்ண பட்சத்தில்
3. அமாவாசையும் திங்கட்கிழமையும் திருவோண நட்சத்திர மும் யித்யாதி யோகமும்
4. சககனி கரணமும் இப்படிக்கொத்த சுபதினமான மகோதய புண்ணியகாலத்தில் தேவை
5. நகராதிபன் சேதுமூலரட்சா துரந்தரன் வீரதண்டை
6. சேமத்தலை விளங்கிய தாளினான் சிவபூஜா துரந்தரன் சேதுகாவலன் வங்கிஷாபதியான
7. துகவூர் கூத்தம் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் விரையாத கண்டனிலிருக்கும்
8. இரண்ய கெர்ப்ப யாஜி ரெகுநாத தேவர் புத்திரன் ரெகு நாத தேவர் பத்தினியாகிய
9. காதலிநாச்சியார் பண்ணின தன்மம் ராமேசுவரத்தில் ராம நாதசுவாமி அறக்கட்டளைக்
10. குத் தான சாசன பட்டயம் குடுத்தபடி இந்த தர்மத்திற்கு விட்ட கிராமமாவது
11. செம்பிய நாட்டில் குவளஞ்சாத்தானுக்குக் கிழக்கு நொச்சிப் பொருத்துக்கு வடக்கு

---

நூலாசிரியரது கள ஆய்வில் கண்டுபிடிக்கப் பெற்று படி எடுக்கப்பட்டது.

12. கிழக்கு தெய்வச்ச நல்லூர் காலுக்கும் மேற்கு கடம்பன் குடிக்கு குடவேலிக்கும்

13. தெற்கு இன்னான்கு எல்கைக்குட்பட்ட மேலச்சீத்தையும் அது உண்டாகிய நஞ்சை புஞ்சை

14. மாவடை மரவடை மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும் குடிபடை

15. பள்ளு, பறை சகலமும் சர்வமானியமாக இராமநாத பண்டாரம் பாரிசமாக கட்டளை

16. யிட்ட படியினாலே சந்திராதித்த காலம் வரையிலும் ஆண்டனுபவித்துக் கொண்டு தர்மம் நடத்தி

17. வரக் கடவோமாகவும் இந்த தர்மம் யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினபேர்

18. சிவலிங்கப் பிரதிட்டை பண்ணின தர்மத்தை அடைவா ராகவும் இந்த தர்மத்திற்கு

19. அகிதம் பண்ணினபேர் கெங்கையிலும் சேதுவிலும் காராம் பசுவையும்

20. மாதா பிதாவையும் பிராமணரையும் வதை பண்ணின தோஷத்திலே போகக் கடவாராகவும்

21. இப்படி சம்மதித்து ரெகுநாதத் தேவர் பத்தினியாகிய காதலிநாச்சியார் பண்ணின

22. தர்மத்துக்கு தான சாசனப் பட்டயம் கொடுத்தோம் ராம லிங்கம் துணை

## செப்பேடு எண் 78
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி காத்த தேவர் தர்மபத்தினி காதலி நாச்சியார்.
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில்.
3. செப்பேடு பெற்றநாள் : சாலிவாகன சகாப்தம் 1615 ஸ்ரீமக வருடம் தை மாதம் (கி. பி. 1693)
4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில் அறைக் கட்டளைக்குமேலச்சீத்தை என்ற கிராமம் தானம்.

இந்தச் செப்பேடு இராமநாதபுரம் சேதுபதி மன்னரது மனைவி காதலி நாச்சியாரால் வழங்கப்பட்டிருப்பதால் மன்னரது ஏழு விருதுகள் மட்டும் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. அரசர்கள் மட்டுமல்லாமல் அரசரது பிராட்டிகளும் தான சாசனங்கள் வழங்குவது தமிழக அரசியலில் ஒரு மரபாக இருந்து வந்ததை சோழ, பாண்டிய, நாயக்க வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆனால் சேதுபதிகளது அரச பிராட்டிகள் இத்தகைய செப்பேடுகளை முன்னர் வழங்கியதற்கான செய்திகள் எதுவுமில்லை. அந்த வகையில் இதுவே முதல் செப்பேடாகும்.

இந்தச் செப்பேட்டினை வழங்கிய காதலி நாச்சியார், ரெகுநாத கிழவன் சேதுபதியின் இரண்டாவது மனைவியாகும். இந்தப்பெயர் அரிதாக பெண்களுக்குசூட்டப்பட்டிருக்கிறது. மலையரசன் மகளாக இருந்து தவம் புரிந்து தனது மனம் நிறைந்த

சிவபெருமானையே கணவராகப் பெற்ற காதலியான இறைவியின் பெயர் இது. ''மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வே'' யென குமரகுருபர சுவாமிகள் இந்த மலைவளர் காதலியைத் தான் பாடியுள்ளார். முழுப் பெயரான மலைவளர் காதலி. அன்பின் பெருக்காக, சுருக்கமாக, காதலி என அழைக்கப் பட்டார். இராமேசுவரம் திருக்கோயில் இறைவியின் பெயரும் மலைவளர் காதலிதான். தாயுமான அடிகள் தமது ''மலைவளர் காதலி பதிகத்தில்'' இந்த அம்மையை பத்துப் பாடல்களில் போற்றிப் பாடியுள்ளார்.

இராமேசுவரம் இறைவியின் பெயரைக் கொண்ட இந்த அம்மையார் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர். இராமநாதபுரம் சீமையின் வடக்குப் பகுதியும், கள்ளர் மிகுதியான அன்பில், கானாடு பகுதிகளின் சிறந்த கள்ளர் தலைவர்களான ரெகுநாத தொண்டமானையும் நமனத் தொண்டமானையும் அவர்களது வீரச் செயல்களுக்காக தமது தளபதிகளாக ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னர் ஏற்றிருந்தார். நாட்டின் ஒருமைப்பாட்டை பேணவும் அமைதிகாணும் முயற்சியாகவும் மறவர் போன்று முக்குலத்தோரின் மற்றொரு பிரிவினரான இந்த கள்ளர் தலைவர்களுக்கு பதவி கொடுத்தும் பின்னர் அவர்களது தங்கையான காதலி நாச்சியாரை திருமணம் செய்ததும் ஒரு முன்னோடி நிகழ்ச்சி.‡ ஆனால் காலப்போக்கில் சேதுமன்னர்களது ஆட்சியை நிலைகுலையச் செய்த பணியில், மதுரை, தஞ்சை, மன்னர்கள் ஆற்காட்டு நவாப் ஆகியவர்களுடன் இவர்களது வழித்தோன்றல்களும் ஈடுபட்டனர் என்பது வரலாறு.

மறவர்களது எட்டுக்கிளைகளில் சிறப்பான செம்பிநாட்டுக் கிளையைச் சார்ந்தவரான சேதுபதி மன்னர், கள்ளர் இனத்துக் காதலி நாச்சியாரைத் துணைவியாக ஏற்றுக் கொண்டதன் விளைவாக மைத்துனர் முறையிலான ரெகுநாத தொண்டமானது பதவியை உயர்த்தி திருமயம் கோட்டை ஆளுநராக அவரை நியமனம் செய்தார். அப்பொழுது வலம்புரிச் சங்கு, இராமபாணம் என்ற சிறப்பான வாள், ஆகியவைகளை தொண்டமானுக்கு பரிசுப் பொருளாக சேதுமன்னர் வழங்கியதாக புதுக்கோட்டை வரலாறு தெரிவிக்கின்றது. சேதுபதி மன்னரது மறை

‡ Rajaram Rao T. Manual of Ramrad Samasthanam (1891) p.p. 228-229

விற்குப் பின்னர் திருமயம் கோட்டையை அடுத்த பகுதியில் ''புதுக்கோட்டை'' என்ற தன்னரசு ஒன்றை ரெகுநாத தொண்டமான் அமைத்தார்.

கி.பி. 1710ல் ரெகுநாத சேதுபதி மன்னர் இறந்த பொழுது மன்னரது மனைவிகளும் ஆசை கிழத்திகளுமான நாற்பத்தியேழு பேர் தீப்புகுந்து மரணத்தைத் தழுவிய பயங்கர மான நிகழ்ச்சி இராமநாதபுரம் வரலாற்றில் பதிவு செய்யப்பட் டுள்ளது. இவர்களில் இந்தச் செப்பேட்டை வழங்கிய காதலி நாச்சியார் எரிவாய் புகும் முன்னர் தமது சகோதரர் ரெகுநாத தொண்டமானிடம் பிரியாவிடை பெற்ற உருக்கமான காட்சியை யும் இராமநாதபுரம் மேன்யுவல் தெரிவிக்கின்றது.

இந்தச் செப்பேட்டில் தானமாக வழங்கப்பட்டுள்ள மேலச் சீத்தைக் கிராமம் இராமநாதபுர மாவட்டத்தில் இராமநாதபுரம் வட்டத்தில் இராமநாதபுரம் உத்திரகோசமங்கை வழியில் பத்தா வது கல்லில் சாலைக்கு மேற்புறமாக அமைந்துள்ளது. முந்தையச் சமுதாயத்தில் மகளிருக்கு சொத்துரிமை இல்லையென்றாலும், அவர்களது பெற்றோர்களும், கணவரும் வழங்கிய அன்பளிப்புக் காணிகள் ''சிறு தேட்டு'' என்று வழங்கப்பட்டன. அத்தகைய காணிகளைக் கொண்டதாக மேலச்சீத்தைக் கிராமம் இருந்திருக்க வேண்டும். செட்டிநாட்டுப்பகுதியில் இன்றும் ''சிறுதேட்டு'', சிறு தட்டு என்று (அன்பளிப்பு என்ற பொருளில்) வழக்கில் இருந்து வருகிறது. இந்த அரச பிராட்டியார் இராமேசுவரம் சேதுவழிப் பாதையில் அன்னசத்திரம் ஒன்றையும் ஏற்படுத்தி அந்த அன்ன சாலைக்கு அருகிலுள்ள ''எம்மண்டலமும் கொண்டான்'' என்ற ஊரினையும் அந்த அறச்சாலைக்குத் தானமாக வழங்கினார். அந்தக்கிராமம் இன்று ''என் மனம் கொண்டான்'' என்று வழங்கப்பட்டு வருகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற் காலப் பாண்டியப் பேரரசராக விளங்கிய மாறவர்மன் சுந்தர பாண்டியரது சிறப்பு பெயர் எம்மண்டலமும் கொண்டான் என்பது நினைவுக்கூரத்தக்கது. அந்தப் பேரரசரது நினைவாக எழுந்த இந்த ஊர் காலப்போக்கில் என்மனம் கொண்டானாக மருவி யுள்ளது.

## செப்பேடு எண் 79

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1631 இதின் செல்லா நின்ற விரோ
2. தி நாம சம்வத்ஸரத்தில்தெட்சிணாயணத்தில் சரத்ருதுவில் காரித்திகை மீ'ல் க்ருஷ்ண
3. பட்சத்தில் அமாவாசையும் ஆதித்ய வாரமும் அநுராதா நட்சத்திரமும் பிரிதி நாமயோக
4. மும் நாகவா கரணமும் சுபயோக சுபகரணமும் கூடின புண்ணிய தினத்தில் தே
5. வை நகராதிபன் சேதுமூல ரக்ஷா துரந்தரன் ராமநாத சுவாமி கார்ய துரந்தரன்
6. ராமநாதசுவாமி கார்யதுரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன்
7. பர ராஜ கஜஸிம்ஹம் ரவிகுலஸேகரன் ரவிமாற்தாண்டன் சொரிமுத்து வன்
8. னியன் ஸ்வஸ்திஸ்ரீ மன்மஹா மண்டலேசுவரன் அரியராய தளவிபாடன் பாஷை
9. க்குத் தப்புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
10. ன் பட்டமானங்காத்தான் துட்டாயிர கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவள

---

‡ காரைக்குடி தமிழ்க் கல்லூரி பேராசிரியை திருமதி ந.வள்ளியம்மாள் அவர்களிடம் உள்ளது. இந்தபடி அவர்கள் உதவியது.

11. நாடன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் மதுரை
12. ராயன் ஆத்திற் பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக் கலங் காத்தான் தாலிக்கு
13. வேலி சத்துரு வாதியள்மிண்டன் வன்னியராட்டந் தவிழ்த் தான் மேவலர்கள் கோளரி
14. மேவலர்கள் வணங்கு மிருதாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்தி பிரதாபன் ஆரிய ம
15. ானங் காத்தான் தொண்டியந்துறைக் காவலன் துரகபந் தன் அனுமகேதநன் பாதள
16. விபாடன் குடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்கா
17. ரன் உரிகோல்சுரதாநன் அந்தம்மபரகண்டன் மூவாயிர கண்டன் சாடிக்காறர் கண்ட
18. ன் ஸ்வாமித் துரோகியள் மிண்டன் பஞ்சவன்னராய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் இ
19. வுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
20. ன் பாண்டிமண்டல ஸ்தாபநாச்சார்யன் சோழ மண்டல பிரதிட்டாபநாச்சார்யான்
21. பூர்வ தெக்ஷிண பச்சிம உத்தர சதுர் சமுத்ராதிபதி ஈள மும் கொங்கும் யாட்பான
22. பட்டணமும் கெசவேட்டையாடியருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன் நவகோடி
23. நாராயணன் நவகண்ட சக்ரவர்த்தி மலைகலங்கினும் மனங்கலங்காத கண்டன் கொட்ட
24. மடக்கிவைய்யாளி நாறாயணன் காவிக்குடையான் பரத நாடகப் பிரவீணன் கருணாக
25. டாக்ஷன் காமினி கந்தர்பன் சத்ய பாஷா ஹரிசந்திரன் சங்கீத சாகித்ய பவித்ரவிநோதன்
26. வீர தண்டை சேமத்தலை வணங்கும் மிருதாளினான் சாம்ராஜ்ய லக்ஷ்மி நிவாஸன் சேதுகா

27. வலன் வம்சாதிபனான துகவூர்க் கூற்றத்து கரத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்ப்ப

28. ால் விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீ ஹிரண்யகர்ப்ப யாஜி ரெகுநாதசேதுபதி காத்த தேவரவ

29. ர்கள் புத்ரன் ஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாஜி ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் தர்ம பத்தினியான

30. ராய தொண்டமான் புத்ரி ரெகுநாதராய தொண்டமா னார் சகோதரியான கா

31. தலி நாச்சியாரவர்கள் நானாகோத்ரத்தில் நானா சூத்ரத் தில் நானா சாகாத்யாதிய

32. ளான ஷடமருஷண கோத்ரத்தில் ஆவஸ்தம்ப சூத்திரத் தில் யஜுுச்சாகாத்யாதியான

33. குமாண்டூர் வீரம நல்லூரில் இருக்கும் வெங்கடேஸ் வரய்யன் புத்ரன் சங்கரந

34. ாராயணய்யன் முதலாகியனார் பிராமணருக்கு ராமீசுவரத் தில் தனுஷ்கோடிக் கரை

35. யில் அக்ரஹாரத்துக்கு சங்கரநாராயணய்யன் கய்யில் ஸஹிரபோ உதக தாரா

36. பூர்வமாக பூதாநம் பண்ணிக் கொடுத்தோம் பூமியாவது தேர்போகி நாட்டி

37. ல் களத்தூருக்கு எல்கையாவது கள்ளிக்குடி கண்வாய்க்கு மேற்கு தேர்போகியி

38. ல் தேனாற்றுக்கு வடக்கு கொட்டக்குடி வயலுக்கு கிழக்கு திருத்தங்கூர் பாம்பாற்றுக்குத் தெ

39. ற்கு இந்தப் பெருநான்கெல்லைக்குள்பட்ட களத்தூருக்கு ப்ரதிநாமமான ரெகுநாதராய கா

40. தலி ஆயிபுரம் கணஸங்யை பாகம் 55 இந்த பாகம் இதி லுள்ள நஞ்சை திட்டு திட

41. ல் மாவடை மரவடை கீழ் நோக்கிய கிணறு மேல்நோக் கிய மரம் குள குட்டம் ஏந்தல் பிறவடை

42. பாசி படுகை ஆவிரை கொழிஞ்சி தேன்படு பொதும்பு ஊறணி உடைப்பு மீன்படு பள்ளம்

43. குர்ப்பிணி குளிப்பு இதிலுள்ள பள்வரிப் பலவரி மடத்து வரி வேண்டுகோல் செம்புவிலை

44. காணிக்கை வண்டில் மாடு கொட்டிய எருது சுரவிப்பசு பேடி விலாடம் நீராணி

45. க்கம் யிதிலுண்டான சகலவரியும் தங்களுக்கு சர்வ மான்ய மாகக் கட்டளையிட்ட படியி

46. னாலே யிதிலுள்ள நிதிநிக்ஷேப ஜலதரி பாஷாணாக்ஷின்ய காம்ய சித்த சாத்ய மென

47. ச் சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜஸ்வாம்யங்களும் ஆசந்திராதித்யாதியாகவும் புத்ரபௌத்ரபா

48. ரம்பர்யமாக தானாதி விநிதவிக்ரயங்களுக்கும் யோக்ய மாக ஆண்டனுபவித்து வர

49. வரக் கடவாராகவும் இந்த தர்மத்தை பரிபாலநம் பண் ணின பேர் கோடி சிவலிங்க

50. பிரதிஷ்டையும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின சுகத்தையடைவாராகவும்

51. இந்த அக்ரஹாரத்து யாதாமொருவன் துரோகம் பண்ணி னவன் கெங்கைக் கரையிலெ காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவானாகவும்.

## செப்பேடு எண் 79

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத சேதுபதி காத்ததேவர் தர்மபத்தினி காதலி நாச்சியார் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | வீரமநல்லூர் வெங்கடேஸ்வரய்யன் புத்திரன் சங்கர நாராயணய்யன் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1631 விரோதி ஆண்டு கார்த்திகை மாதம் (கி.பி. 1709) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | தனுஷ்கோடியில் அக்ரகாரத்திற்காக கிராமம் தானம். |

இந்தச் செப்பேட்டை வழங்கியவரது கணவர் ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னரது அறுபத்தியிரண்டு சிறப்புப் பெயர்கள் விருதாவளியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் ''பூர்வதட்சணபட்சிம உத்தர சதுர் சமுத்ராதிபதி'' ''நவகண்ட சக்கரவர்த்தி'' ஆகிய இரண்டு ஏிருதுகள் புதியவனாவாக இந்தச் செப்பேட்டில் பயன்படுத்தபட்டுள்ளன. இவை இரண்டும் விஜயநகர மன்னர்களால் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டவை.

இராமேசுவரம் தனுஷ்கோடிக் கரையில் அக்ரகாரத் தர்மமாக இராமநாதபுரம் சீமை தேர்போகி நாட்டு களத்தூர் கிராமத்தின் ஐம்பத்து ஐந்து கன பாகம் மட்டும் சங்கர நாராயண அய்யனுக்கு தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இதனை வழங்கியவர் ரகுநாத கிழவன் சேதுபதி மன்னரது மனைவி காதலி. இன்றைய பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டம் தேவகோட்டை வட்டத்தில் இந்தக்கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் பளவரி, பல்வரி,

மடத்துவரி, செம்பு வரி, காணிக்கை வண்டிமாடு, கோட்டிய எருது, சுரபிப் பசு, பேடி, விளாடம், நீராணிக்கம் என்ற வரிப் பாடுகள் இருந்தவிபரமும் தெரிய வருகிறது. இவைகளில் பள வரி, பல்வரி, மடத்துவரி, கோட்டிய எருது என்ற வரிப்பாடுகள் இராமநாதபுரம் சீமையின் பிற்பகுதிகளில் இருந்து வந்ததை முந்தையச் செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் சுரபிப்பசு, பேடி, விளாடம், நீராணிக்கம் என்பன தேர்போகி நாட்டில் மட்டும் இறுக்கப்பட்ட வரிகள் என தெரியவருகிறது. பால்சுரக்கும் பசு சுரபிப்பசு, மலடாக்கப்பட்ட எருது பேடி காளைமாடுகளின் கால் நகத்தில் பூட்டப்படுவது விலாடம்; நீரி லிருந்து பெறுகின்ற மலர், இலை, கிழங்கு போன்றவை நீரா ணிக்கம்; மாடுகளுக்கான வரி விதிப்பு ஒரே சீராக இல்லாமல் அவைகளின் பயன்பாட்டுக்கு தக்கவாறு வரிவிதிப்பு ஏற்படுத்தப் பட்டிருந்தது. அதனால் கறவைப்பசு, வண்டிமாடு, மலடாக்கப் பட்ட எருது, என அவைகள் வகைப்படுத்தப்பட்டன.

கி. பி. 1291ல் பாண்டி நாட்டிற்கு வருகை தந்த உலகப் பயணி மார்க்கோ போலோ குதிரைகளுக்கு விலாடம் கட்டக் கூடியவர்கள் தமிழ்நாட்டில் இல்லையென்பதாக அவரது பயணக் குறிப்புகளில் வரைந்து வைத்துள்ளார். ஆதலால் பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டுடன் பெருமளவில் குதிரை வணிகம் செய்த அரேபிய முஸ்லீம்கள் மூலம் விலாடம் கட்டும் பழக்கம் முதலில் குதிரைகளுக்கும் பின்னர் எருதுகளுக்கும் ஏற்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். விலாடம் கட்டும் தொழிலுக்கு வரி விதிப்பு ஏற்பட்டதை இந்த ஒரு செப்பேட்டில் தான் காணமுடிகிறது,

தானமாக வழங்கப்பட்ட பிறகு இந்த களத்தூரின் பெயர் ''ரெகுநாத ராய காதலி ஆயிபுரம்'' என வழங்கப்பட்டது. சேதுபதி மன்னரது மனைவி என்ற முறையில் தானம் வழங்கிய வர் காதலி நாச்சியார் ஆனாலும் அவரது இயற்பெயர் காதலி ஆயி என்பது. ''ஆயி'' என்ற விகுதி கள்ளர், மறவர் இன பெண்மணிகளைக் குறிப்பதாகும்.

## செப்பேடு எண். 80

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1633 யிதின்மேல் செல்லாநின்ற கரநாம
2. சம்வச்ரத்தில் தெட்சணாயனத்தில் கிரீஷ்ம ருதுவில் கார்த் திகை மாசத்தில் சோம வாரமும் புன
3. ர் பூச நட்சத்திரமும் சித்தநாம யோகமும் பாலாவாகரண மும் கூடின சுபதினத்தில் தேவை
4. வ நகராதிபன் ராமனாத சுவாமி காரியந்துரந்தரன் சிவ பூஜா துரந்தரன் பரராஜசேகரன் பர
5. ராஜ கெசசிங்கம் இரவிகுலசேகரன் சொரிமுத்து வன்னி யன் அரியராய தளவிபாடன் வாக்குத்
6. த் தப்புவாராக் கண்டன் மூவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு 'கொடாதா
7. ன் பட்டமானங்காத்தான் துட்டராயர்கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவ
8. நாடன் பரத வித்யாதரன் இயலிசை வித்யாதரன் வீர வீரமார்த்தாண்டன் பரதள விபாடன் உரி
9. கோல் சுரதானன் அந்தம்பர கண்டன் சாடிக்காரர் கண் டன் சாமித் துரோகியள் மிண்டன்
10. பஞ்சவண்ணராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட் டமடக்கி வையாளி நாராயணன் இவு
11. ளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் இளஞ்சிங்கம் தளஞ் சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரை

---

† கள ஆய்வின் பொழுது நூலாசிரியரால் இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களிலிருந்து படி எடுக்கப்பட்டது.

இந்த நூலின் அச்சுப்பணி தொடங்கிய பிறகு இந்தச் செப் பேடு கிடைத்ததால் இந்த நூலின் பக்கங்கள் 35, 36, 37ல் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பில் இந்தச் செப்பேடு சேர்க்கப் படவில்லை.

12. ராயன் ஆத்தில்பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி ஐவாப் புலி அடைக்கலங் காத்தான் தாலிக்

13. குவேலி சத்துராதிகள் மிண்டன் வன்னியராட்டந் தவிள்ந் தான் மேவளர்கள் கோன் மேவலர்கள் விள

14. ங்கு மிருதாளினான் வீரகம்பீறன் தொண்டித்துறை காவலன் துரகரேவந்தன் அனுமகேதனன் மீன

15. கேதனன் கொடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் குன்றனை மேருவிற் குன்றா வளைகுணில் பொறித்த

. வன் திலதநுதல் மடமாதர் மடலெழுதவரு சுமுகன் விசய லட்சுமி காந்தன் சகலகலாவிற்பன்

17. னன் காமினி கந்தர்ப்பன் அட்டதிக்கு மனோபயங்கரன் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலன் வீர

18. தண்டை சேமத்தலை விளங்குமிருதாளினான் சேது காவலன் வங்குசாதிபனான துகவூர் கூத்தத்து

19. காத்தூரரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரை யாத கண்டனிலிருக்கும் இரண்ய கர்ப்ப யாஜி

20. ரெகுநாத தேவர் மருமகன் செம்பிநாட்டிலே திருஉத்தர கோச மங்கையிலிருக்கும் கடம்பத்

21. தேவர்புத்திரன் விசயரகுநாத சேதுபதி சகோதரரான முத்து வயிரவநாத தேவரவர்கள் கிடா

22. ரத்திலிருக்கும் சாந்தபிள்ளை புத்திரன் ராமாயணப் பிர சங்கம் சர்க்கரை புலவருக்கு இரா

23. ம சுவாமி சன்னதியில் வேதபாரகரும் இயலிசை நாடகத் தமிழ் வித்யாதரரும் கூடிய சபையில்

24. இராமயண பிரசங்கத்துக்குப் பரிசாக ராமசாமி பட்டாபி சேகத்தில் கட்டளையிட்ட கிராமமாவது

25. வெள்ளாம்பத்தில் சாத்தணி வயலுக்கும் ஏம்பல் குளத்து காலுக்கும் தெற்கு மஞ்சக்குடி புற

26. வாகிய வலையன் வயலுக்கும் கீழ்காவனூருக்கும் கிளக்கு விளத்தூருக்கு மேற்படியூர் புறவா

27. கிய பொத்தையன் வயலுக்கும் வடக்கு ஆசான் வயலுக் கும் ஏம்பல் குளத்துக்கும் மேற்கு யின்னாங்

28. கெல்கைக்குட்பட்ட கொட்டகுடி கொந்தலான் வயல் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத்திடல் மேல்

29. நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு நீரும் பாசிகுடிபடை பள்ளு பறை இறைவரி ஊழியம் உலுப்

30. பை சகலசமுதாயப் பிராப்திகளும் நிதிநிஷேபம் சலதரு பாஷண விருத்விஷத் என்று சொல்லப்பட்ட

31. அஷ்டபோக தேச ஸ்வாமியங்களும் தான விக்கின வினி யோகங்களுக்கு யோக்யமாக சந்திரார்க்க

32. சந்ததி பிரவேசம் புத்திர பவுத்திர பரம்பரையாக சர்வ மான்யமாக ஆண்டனுபவித்து கொள்ளவும்

33. இந்த தருமத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலேயும் மற்ற புண்ணிய

34. த் தலங்களிலேயும் பெரியோர்கள் சன்னிதானங்களிலேயும் ரரமசுவாமி சரித்திரங்களாகிய இராமாயணத்தை

35. கேள்வியானவர்கள் எந்தப்பலனை அடைவார்களோ அந்த பலத்தை அடைவாராகவும் இந்த தருமத்துக்கு

36. அகுதம் பண்ணின பேர்கள் ராமசுவாமி சரித்திரத்தை யசாத்தியமாக நினைத்தவர்கள் போகின்ற தோசத்தி

37. லேயும் கங்கைகரையிலேயும் தனுக்கோடி கரையிலேயும் ராமபக்தரையும் சிவபக்தரையும் இம்மிசை பண்ணின

38. தோசத்தை அடைவாராகவும்

*இறுவரம்பில் இராமன் என்றோர் உம்பர்*
*நிறுவர் என்பது நிச்சயம் ஆதலான்*
*மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்*
*பெறுவர் என்பது பேசவும் வேண்டுமோ!*

## செப்பேடு எண் 80

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | சேதுபதி மன்னரது தமயனார் முத்து வயிரவநாதத் தேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | பொன்னெட்டி மாலை சக்கரைப் புலவர் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாஹன சகாப்தம் 1633 கர வருடம் கார்த்திகை மீ" (கி,பி. 1711) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | புலவருக்கு கோடகுடி கொ ல்ன் வயல் என்ற கிராமம் தானம் |

இந்தச் செப்பேட்டில் இராமநாதபுரம் மன்னரது விஜயரகு நாத சேதுபதியின் விருதாவளியாக ஐம்பத்து ஏழு சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் பரத வித்யாதரன் இயல் இசை வித்யாதரன் என்ற இருவிருதுகள் மட்டும் புதியன வாகவும் அமைந்துள்ளன.

இந்தச் செப்பேடு அந்த மன்னரது மையனாரால் வழங்கப் பட்டிருப்பதால், இதனை அரசவழியினர் செப்பேடாக கொள்ளப் பட்டுள்ளது. கி.பி, 1710ல் ரெகுநாத கிழவன் சேதுபதி கால மான பொழுது ஏற்பட்ட அரசியல் நெருக்கடியினால் அவரது தங்கை மக்களில் மூத்தவரான முத்து வயிரவநாதத்தேவர் புறக் கணிக்கப்பட்டு இளையவரான திருவுடையாத் தேவர், விஜய ரகுநாத சேதுபதியாக பட்டம் சூட்டப்ப்பெற்றார். என்றாலும், முத்து வயிரவ நாதத்தேவர் தமது தம்பியின் ஆட்சிக் காலத்தில் மிகவும் பொறுப்பான பதவி ஒன்றிலிருந்து இந்தச் செப்பேட் டினை வழங்கியுள்ளார்.

கிடாரம் கொண்டான் என்ற மறவர்சீமை ஊரினைச் சேர்ந்த சாந்தப் பிள்ளை மகன் சர்க்கரைப் புலவருக்கு கோடகுடி கொந்தலான் வயல் என்ற ஊரினை தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தப்புலவரது இயற்பெயர் அறியத் தக்கதாக இல்லை. இவரது கண்டிலும் இனிய கம்பராமாயண சொற்பொழிவுத் திறனுக்காக சர்க்கரை என்ற இனிய பெயர் இவருக்கு வழங்கப்பட்டது. சேதுபதி மகிழ் சர்க்கரை கவிராஜ சிங்கம் என்ற புலவரது சீட்டுக் கவித்தொடர் இதனை உறுதிப் படுத்துகிறது. ஏற்கனவே இந்தப் புலவருக்கு சேதுபதி மன்னர் உளக்குடி என்ற ஊரினை முற்றூட்டாக வழங்கி இருந்தார்.

இராமேசுவரம கோயில் இராமநாதசுவாமி திரு முன்னர் கம்ப இராமாயண சொற்பொழிவினை மிகச் சிறப்பாக இராம பட்டாபிஷேக நிகழ்ச்சியுடன் முடித்த பொழுது, அறிஞர் பெரு மக்கள் கூடியிருந்த அந்த அவையில் இந்த தான சாசனம் வழங்கப்பட்டு புலவர் சிறப்பிக்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. (வரி 23-24) திருமலை ரெகுநாத சேதுபதி ஆட்சிக் காலத்திலிருந்து தமிழ்ப்புலவர் பெருமக்களது கொடை மடமாக சேதுபதி ஆதீனம் விளங்கி வந்துள்ளது. புத்தம் புதிய இலக்கியப் படைப்புகளுக்காக புலவர்கள் பல ஊர்களை பரிசி லாகப் பெற்றனர். ஆனால் கன்னல் தமிழில் கேட்போர் சிந்தை யும் செவியும் இனிக்கும் கம்ப இராமாயண சொற்பொழிவுக்கு ஊரினை பரிசிலாக வழங்கிய ஒப்புவமை இல்லாத தமிழ் உள்ளம் சேதுமன்னர்களுக்கு மட்டும் தான் இருந்தது.

முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் கம்ப மகா கவியின் காவியம் எந்த அளவில் சேதுநாட்டில் போற்றப்பட்டது என்ப தற்கு சிறந்த சான்றாகவும் இந்த தானம் அமைந்துள்ளது. இந்தப் புலவர் திருச்சீர் அலைவாய் முருகன் மீது திருச்செந்தூர் கோவை ஒன்றையும் படைத்துள்ளார். இவரது வழியினர் அனை வருமே புலவர்களாக விளங்கி வந்துள்ளனர்.

தானமாக வழங்கப்பட்ட கோடகுடி கொத்தலான் வயல் கிராமம் இன்றைய திருவாடனை வட்டத்தில் கொட்டகுடி என்ற பெயரில் வழங்கி வருகிறது. இந்தச் செப்பேட்டின் காப்புரையில் (வரி 34-37) ''ராமசுவாமி சரித்திரத்தை யசாத்தியமாக நினைத் தவர்கள்'' என்றும் ''இராமாயணத்தை கேள்வியானவர்கள் எந்தப் பலனை அடைவார்களோ'' என்றும் குறிப்பிட்டிருப்பது ஒரு புதுமையான காப்புரை ஆகும்.

# செப்பேடு எண். 81

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்து வயிரவநாதத் தேவர்
2. செப்பேடு பெற்றவர் : அழகர்மலை திருமலையாண்ட திருவேங்கடாச்சாரியார்
3. செப்பேட்டின் காலம் : சகம் 1634 நந்தன ஆண்டு ஆஷாட மாதம் (கி.பி. 22-07-1712)
4. செப்பேட்டின் பொருள் : அழகர் மலையில அன்ன தானம் ஊரணி தர்மங்களுக்கு கிராமங்கள் தானம்

இந்தச் செப்பேட்டினை வழங்கியவர் முத்து விஜய ரகுநாத சேதுபதியின் சகோதரர் முத்து வயிரவநாதத்தேவர் ஆவார். இவர் திரு. உத்தரகோசமங்கை கடம்பத்தேவர், மகனும் முத்து விசயரகுநாத சேதுபதி மன்னரது தமையனார் என்பதை செப் பேட்டின் வரி 7 புலப்படுத்துகிறது. இவரது பதவியைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாவிட்டாலும் அன்றைய அரசு நிர்வாகத் தில் பல புதிய மாறுதல்களைப் புகுத்திய முத்து விசைய ரெகு நாத சேதுபதி மன்னர் தமது அதிகார வரம்புகளை பரவலாக்கி தமது சகோதரருக்கும் உயர் பதவி ஒன்றினை வழங்கியிருக்க வேண்டுமென ஊகிக்கப்படுகிறது.

அழகர் மலையில் அன்னதானம் மேற்கொள்ளவும் அங்கு வருகை தருகின்ற பயணிகளுக்கு உபயோகமாக அழகர்கோவிலி லும், அப்பன் திருப்பதி என்ற இடத்திலும் ஊரணி தர்மம் ஏற் படுத்தவும், ஆய்க்குடி சுந்தனாவூர் ஆகிய இரண்டு கிராமங் களை தானம் வழங்கியதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. குறிப்பாக ஆண்டுதோறும் சித்திரை பௌர்ணமியில் இங்குள்ள

20. த அர்த்த மானிபத்தில் வருகிற பலபாகத்தை கவரமி அழகர் கோ

21. விலுக்கும் அப்பன் திருப்பதிக்கும் மான்யத்திலே தடாகப் பிரதிஷடைப் பண்ணிவித்து தடாகம் வெட்ட வேண்டியது க்கு அந்த இ

22. ரண்டு கிராமப் பலவரிச் சொன்னாதாயம் வெட்டிவரி உண்டானதை வருஷத்துக்கு வருஷம் தடாகம் வெட்டு வித்துவரச் சொல்லி

23. யும் சகிரோண்யதக தாராபூர்வமாக தானம்பண்ணிக் கட் டளையிட்ட படியினாலே ஆசந்திராக்கஸ்தாகியாய் சந்தி ரப் பிரவேசம் புத்ர

24. பௌத்ர பாரம்பரையாய் தன்ம பரிபாலனம்பண்ணி ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவராகவும் இந்த தர்மத்தை யாதா

25. மொருவர் பரிபாலனம் பண்ணிணபேர்கள் காசியிலேயும், சேதுவில்ேயும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி தேவ பிரதிஷ்டையும் ப

26. ண்ணின பாக்கியத்தை அடைவார்கள் இந்த தம்மத்தை யாதாமொருவர் அகுதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலே

27. யும் சேதுவிலேயும் மாதா பிதாவையும் குருவையும் காராம் பசுவையும் பிராமணரையும் வதைபண்ணின தோஷத்தி லேயும் போவாராகவும்

*இரண்டாம் பக்கம்*

28. ஸ்வதித்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம்

29. பரதத்தாப ஹாரோ ஸ்வதத்தம் நிஷ்பலம் பாவேத் உ

30. நாத பாலந யோர்மத் யேதானா ச்ரேயோநு பாலநம் தா

31. நாத் ஸ்வர்க்கம் அவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்

32. இந்த சாசனம் எளுதினேன் காமங்கோட்டை உடையினா பிள்ளை

33. புத்ரன் ராயசம் முத்து ஆதினாறாயண பிள்ளை தாளை பத்திரப்படிக்கு விசுவநாத

34. ஆசாரி புத்திரன் முத்தப் பாசாரி எழுத்து உ

8. ன்ன ராயராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கிய வையாளி னாராயணன் இவுளிபாவடி மிதித் தேறுவார் கண்டன் இளஞ்சிங்கம்

9. தளஞ்சிங்கம் வன்னியராட்டந் தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்திப் பிறதாபன்

10. ஆரியர் மானங் காத்தான் தொண்டியந்துறை காவலன் துரகரேவந்தன் அனுமகேதனன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரத நாடக

11. ப்பிறவீணன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவிற் குன்றாய் வளைகுணிப் பொறித்தவன் திலதநுதல் மடலெழுத வருசு

12. முகன் காவிக் குடையான் விசயலட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பன்னன் காழிநகர் காமன் அட்டதிக்கு மனோபயங்கரன் துட்டர்

13. நிக்கிரக சிட்டர்பரிபாலன் சங்கீத சாகித்ய வித்யா விநோதன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் சகல சாம்ராஜ்ய ல

14. ட்சுமி நிவாசன் சேதுகாவலன் வீரபிரதிபனான துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்சு சோழநல்லூர்க்கீ

15. ல் விரையாத கண்டனிலிருக்கும் உறிரண்ய கர்ப்பயாஜி விசய ரகுநாத சேதுபதி தேவரவர்கள் ஜேஷ்டன் திருவுத் தரகோ

16. சமங்கையிலிருக்கும் கடம்பத்தேவர் அவர்கள் புத்ரன் முத்து வயிரவநாதத்வேவர் அவர்கள் அழகர் திருமலையிலிருக்கும் காசிய

17. ப கோத்திரத்தில் ஆஸ்வலாயன சூத்ரத்தில் ரிக் சாகாத் யாயியாய ஸ்ரீமது வேதமார்க்க பிறதிஷ்டாபனாசாரியன் உபய வேதாந்தாசா

18. ரியராயெழுந்தருளியிருக்கிற திருமாலையாண்ட திருவேங்கடாச்சாரியார் அவர்களுக்கு பூருவா

19. பூறுவமாக நடந்துவந்திருக்கும் ஆய்க்குடி சுந்தனாவூரில் அர்த்த மானிபம் அரமணையை சார்ந்து நடந்து வந்தபடியினாலே அந்

## செப்பேடு எண். 81

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1634 இதன்மேற் செல்லாநின்ற நந்தன நாம சம்வத்சரத்தில் தெட்சணா யனத்தில் கிருஷ்ம ரு
2. துவில் ஆஷாட மாசத்தில் கிருஷ்ண பட்சத்தில் அமா வாசியும் அங்காரக வாஸரமும் புஷ்ய நட்சத்திரமும் சோப நநாம யோகமும் பால
3. வாகரணமும் கூடின புண்ணிய காலத்தில் தேவை நகரா திபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராமநாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூஜா துரந்
4. தரன் பரராசசேகரன் ராஜகெஜசிங்கம் ரவிகுல கோத்ரன் ரவிவர்ம சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமந் மகா மண்டலேசுவரன் அ
5. ரியராய தள விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பட்ட
6. மானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேகவீரன் வீர சத்தீசுரன் வீரவளனாடான் வேதியர் காவலன் அரச ராவண ராமன் அடியா
7. ர் வேளைக்காரன் பரதள விபாடன் உரிகோல் சுரதாணன் அந்தம்பர கண்டன் சாடிக்காறர் கண்டன் சுவாமி துரோ கியள் மிண்டன் பஞ்சவ

---

‡ அழகர் திருக்கோயில் தேவஸ்தானத்தில் உள்ளது இந்தச் செப்பேடு

அழகர் மதுரைக்கு எழுந்தருளுவதை ஒட்டி அங்கு கூடுகின்ற பெருந்திரளான மக்களது நன்மைக்காக இந்த தர்மம் ஏற்படுத்தப் பட்டது. இதே வயிரவனாத தேவரது புண்யமாக திருவாடானை திருக்கோயில் ''புஷ்கரணி'' திருக்குளம் ஆழப்படுத்தப்பட்ட கல்வெட்டுச் சேய்தியும் உள்ளது.‡ இது கி.பி. 1720ம் ஆண்டு நிகழ்ச்சியாக இருப்பதால் தொடர்ந்து தமது சகோதர மன்ன ருக்கு இவர் துணையாக இருந்து வந்தவர் என்பது தெளி வாகிறது.

இந்த இரு கிராமங்களின் வருவாயில் பகுதியை- அர்த்த பாகத்தை அனுபவித்து வந்த அழகர் திருமலையைச் சேர்ந்த உபய வேதாந்தாச்சாரியான திருமலையாண்ட திருவேங்கடச் சாரியாரே இந்த தானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த கிராமங்களின் அர்த்தபாகத்தை இந்த பரம வைஷ்ணவர் எந்த மன்னரிடமிருந்து பெற்றுக்கொண்டார் என்பது அறிய தக்கதாக இல்லை. செப்பேட்டில் பூர்வாபூர்வமாக அனுபவித்து வருகின் றனர் என்ற விபரம் தெரியவருகிறது. இந்த செப்பேட்டில் கண்ட இரண்டு ஊர்களும் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக் குடி வட்டத்தில் வைகை ஆற்றின் தென்கரையில் உள்ளன. இந்த ஊர்களிலிருந்து இறுக்கப்பட்ட பல வரி, வெட்டி வரி, சொர்ண ஆதாயம் ஆகிய வருவாய்களைக் கொண்டு ஆண்டுதோறும் ஊரணி தர்மம் நடத்தப்பட வேண்டும் என்ற நியதியையும் இந்தச் செப்பேட்டில் காணமுடிகின்றது. சேது நாட்டுக்கு வெளியே சேதுபதி மன்னர் மேற்கொண்ட அன்ன சத்திரப்பணி இது ஒன்று மட்டும்தான்.

சிவபூஜா துரந்தரரான சேதுமன்னர்களும் இவர்களது வழி யினரும் அவர்கள் வழிபடும் இறைவனுக்கு மட்டுமல்லாமல் வைணவ திருக்கோயில்களுக்கும் இத்தகைய கொடையினை வழங்கி இருப்பது அவர்களது சமயப் பொறைக்கும், சமரச நோக்கிற்கும் ஏற்றதொரு எடுத்துக் காட்டாகும்.

‡ A. R. 436 / 1914 திருவாடானை திருக்கோயில்.

## செப்பேடு எண் 82
(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1651 இதன்மேல் செல்லாநின்ற சௌமி
2. யநாம சம்வச்ரத்து உத்தராயணத்து ஏமந்த ரிதுவில் கிருஷ்ணபட்சத்தில்
3. அமாவாசைப் புண்ணியகாலத்தில் உத்திராடத்தில் சௌ மிய விசாகத்தில் தேவை நக
4. ராதிபன் சேதுமூலரட்சா துரந்தான் சிவபூஜா துரந்தரன் இராமநாதசுவாமி காரி
5. யதுரந்தரன் பரராஜ சேகரன் பரராச கெச சிங்கம் இரவி குல சேகரன் இரவிவர்மன் சொரிமுத்
6. துவன்னியன் வீரஸ்ரீ மகாமண்டலேசுரன் அரியராயிர தளவிபாடன் பாசைக்குத்
7. தப்புவராயிர கண்டன் மூவாயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட
8. நாடு கொடாதான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீரன் வீ
9. ரகஞ்சுகன் வீர வளநாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் அடியார்
10. வேளைக்காரன் அந்தம்பிர கண்டன் சாமித் துரோகியள் மிண்டன் பஞ்
11. சவர்ணராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் விசைய லட்சுமி காந்த
12. ன் கலைதெரியும் விற்பனன் காமினி கந்தர்ப்பன் சத்ய பாஷா அரிச்சந்திரன்

13. வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் விக்கிர மார்க்கன்

14. கீர்த்திப் பிரதாபன் வைகை வள நாடன் கொட்டமடக்கி வையா

15. ளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீர வெண்

16. பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ம

17. தப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்குவேலி சத்ருராதி யள்மிண்

18. டன் வன்னியராட்டம் தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவ

19. லர்கள் வணங்குமிரு தாளினான் கீர்த்திப் பிரதாபன் ஆரிய மானங்காத்தா

20. ன் தொண்டியந்துறைக் காவலன் துரகரேபந்தன் அனும கேதனன் கொடை

21. க்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரதநாடக விற்பனன் கருணா கடாட்சன்

22. ன்சங்கீத சாகித்ய வித்யா வினோதன் சகலகலா வல்லவன்

23. லெட்சுமி நிவாசன் சேதுகாவலன் வங்கிஷாதிபன் துகவூர் கூத்தத்து

இரண்டாவது பக்கம்

24. காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரை யாத க

25. ண்டனிலிருக்கும் ஸ்ரீ இரண்ய கெர்ப்ப யாஜி சேது பதி காத்த ரெகுநாத

26. தேவர் புத்திரன் சேதுபதி காத்ததேவர் முத்துவிசைய ரெகுநாததேவர் தம்

27. பி முத்துரெகுநாத சேதுபதி காத்ததேவர் சுவாமி தெய்வச் சிலை பெருமா

28. ள் சுவாமிக்கு பட்டகாணிக்கைக்கு விட்ட கிராமமாவது ஆதங் கொத்தங்கு

29. டியில் பிரமதாயம் ஒரு பங்கு நீங்கலாக சீவிதமான பங்கும் அந்தவூர்

30. மடை குழி ஏந்தல்களும் சுவாமி தெய்வச்சிலை பெருமாளுக்கு தான பூர்வமாக

31. தாம்பிரசாதன பட்டயமும் கட்டளையிட்ட ஆதன் கொத்தங்குடிக்கு

32. எல்கையாவது கீழ் எல்கை ஓநாய் பொட்டலுக்குக் கிழக்கு தென் எல்கை ஆ

33. லங்குளத்துக்கு வடக்கு மேல் எல்கை மருதம்பீக் குளத்துக்கு தெற்கு வட எல்கை ஆ

34. ... ... ... திடலுக்குத் தெற்கு பூசரி, கடம்போடை, கண்ணாகுடி ஆய்க்குடி, கள்ளியடந்த

35. ல் நஞ்சைப்புல்லான் கீழ்விடந்தை, மேலவிடந்தை சிவகுளம், ஆனைகால், பெரி

36. ய எலை, சின்ன எலை. கனகத்திரளாக இன்னான்கெல்கைக்குட்பட்ட மாவடை

37. மரவடை, திட்டு, திடல், கீழ் நோக்கிய கிணறு, மேல் நோக்கிய மரமும் தான பூர்

38. வமாக சுவாமி தெய்வச்சிலை பெருமாளுக்கு விட்டபடியதனாலே இதுக்கு விக்கி

39. னம் பண்ணினபேர்கள் கெங்கைக் கரையிலேயும், சேதுக் கரையிலும் காராம் ப

40. சுவை கொன்ன தோஷத்திலேயும் விரும்மகத்தி பண்ணின தோஷத்திலே

41. யும் விசுவாச பாதகம் பண்ணின தோஷத்திலேயும் கத்தத துரோகம் பண்ணின

42. தோஷத்திலேயும் மாதா பிதாக்களை நிந்தாக்கினை பண்

43. ணின தோஷத்திலேயும் நம்பினாரைச் சதித்த தோஷத்திலேயும் தெய்வத்

44. த் துரோகம் பண்ணின தோசத்திலேயும் இப்படி மகா பாதகங்க

45. ள் பண்ணின தோஷத்திலேயும் போகக் கடவார்களாகவும்

46. இதுவும் ராஜாக்கள் முன்னிலையாக சுவாமி தெய்வச்சிலை பெருமாளுக்கு

47. விட்ட கிராமம் ஆதங்கொத்தங்குடி

## செப்பேடு எண் 82

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் ; முத்து விஜய ரெகுநாத சேது பதி தம்பி முத்து ரெகுனாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருப்புல்லாணி திருக்கோயில்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1667 சௌமிய ஆண்டு தை அமாவாசை நாள் (கி.பி. 1729)
4. செப்பேட்டின் பொருள் : திருப்புல்லாணிசுவாமி தெய்வ சிலை பெருமாளுக்கு ஆதன் கொத்தங்குடி கிராமம் தானம்

இந்தச் செப்பேட்டிலும் இந்த மன்னரது தமையனார் முத்து விஜய ரெகுனாத சேதுபதி மன்னரது அறுபது விருதாவளி கள் மட்டும் கொடுக்கப்பட்டு உள்ளன. சேது மன்னராக பதவியேற்றதுடன் சேதுபதிகள் தங்களது வழிபடு தெய்வத் திற்கு காணிக்கையாக ஊர் அல்லது நிலத்தினை மான்யமாக வழங்குவதை ஒரு மரபாக பேணி வந்தனர். அதனை ஒட்டி இந்த மன்னர் திருப்புல்லாணி தலத்து தெய்வச்சிலை பெருமா ளுக்கு ஆதன் கொத்தங்குடி கிராமத்தின் பிரமதாயம் பங்கு ஒன்று நீங்கலாக எஞ்சிய சீவிதமான பங்கினையும் இந்தக் கிராமத் தின் மடை, குழி, ஏந்தல்களையும் சர்வமான்யமாக கட்டளை யிட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கிராமம் இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது.

பிரமதாயம் என்பது பிராமணர்களுக்காக வழங்கப்படும் காணியாகும். அதனைப் ரோன்று அரசுப் பணியில் சிறந்த சேவை செய்த போர்வீரனுக்கோ அல்லது அந்த வீர மரணமெய்

திய அந்த வீரனது குடும்பத்தினருக்கோ வாழ்நாள் முழுவதும் அனுபவித்துக் கொள்வதற்காக வழங்கப்படும் நிலக்கொடை சீவிதம் ஆகும். ஆதன்கொத்ததங்குடி கிராமத்தில் அத்தகைய ஒரு குடும்பத்தினரின் அனுபவத்திலிருந்து அவர்களது வாழ்க் கைக்குப் பின்னர் அரசுக்கு சொந்தமாயிருந்த அந்தப் பகுதியை இந்தச் செப்பேட்டின் மூலம் மன்னர் சர்வமானியமாக வழங்கி யுள்ளதை ''ஜீவிதம்'' என்ற சொல் குறிப்பிடுகிறது.

தானம் வழங்கப்பட்ட கிராமத்தின் நான்கு எல்கைகளாகக் குறிக்கப்பட்டுள்ள ஆலங்குளம், மருதங்குளம், பூசரி, கடம்போடை கண்ணாகுடி, ஆய்க்குடி, ஐங்கலப்புல்லாணி, கீழ் விடத்தை, மேல்விடத்தை, ஆனைகால், பெரிய இலை, சின்ன இலை, ஆகியன இன்றும் வழக்கில் உள்ளன. பூசொரி பூசேரி என்றும் பெரிய இலை, சின்ன இலை, பெரிய ஏழை, சின்ன ஏழை என விகாரம் பெற்றுள்ளன. மொத்த தொகுப்பு என்ற பொருளில் ''கனகத்திரள்'' (வரி 36) என்ற சொல் குறிக்கப்பட்டு இருப் பது அருமையான முந்தைய வழக்கு. அத்துடன் திருப்புல்லாணி திருக்கோயில் இறைவர் பெயர் தெய்வச்சிலை பெருமாள் நாயனார் என்ற நல்ல தமிழ்ப்பெயரில் வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. அதே பெயர் இன்று ''ஆதி ஜகந்நாதப் பெருமாள்'' என வழங்கப்படுகிறது. தானம் வழங்கப்பட்ட ஊர்ப் பெயர் ''ஆதன்'' கொத்தன்குடியில் உள்ள ''ஆதன்'' முது குளத்தூர் வட்டத்தில் மட்டும் வழக்கில் இருக்கிறது. ஆதன் தந்தை தான் ஆந்தை என மருவி ஒலிக்கின்றது. பிசிர் ஆந்தையரது பிசுர்க்குடியும் இந்தப் பகுதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## செப்பேடு எண் 83

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹந ஸகாப்தம் 1651 இதன் மேற் செ
2. ல்லா நின்ற சவும்மியநாம ஸம்வஸ்ரத்தில் உத்தரா யணத்தில் யேமந்
3. தரிதுவில் தைய் மாசத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் அம்மா வாசையும் புத
4. வாரமும் உத்திராட நக்ஷத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற தைய
5. ம்மவாசை புண்ணிய காலத்தில் தேவைநகராதிபன் சேது மூலரக்ஷா
6. துரந்தரன் சிவபூசா துரந்தரன் ராமனாத சுவாமி காரிய துரந்தரன்
7. பரராசகெச சிங்கம் பரராசசேகரன் இரவிகுல சேகரன் ரவி வற்
8. மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலேஸ்வர
9. ன் அரியராயிர தளவிபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன்
10. மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொ
11. டாதான் பட்ட மானங்காத்தான் துட்டாயிர கண்டன் புவனேக வீர

---

‡ இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம் இராமநாதபுரம்.

12. ன் வீர கஞ்சுகன் வீரவளனாடன் வேதியர் காவலன் அரச ராவண
13. ராமன் அடியார் வேளைக்காறன் அந்தம்பிற கண்டன் சாமித் துரோ
14. கியன்மிண்டன் பஞ்சவற்ணராய ராவுத்தன் பனுக்குவார் கண்ட
15. ன் விசையலெட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பன்னன் காமிநி
6. கந்தப்பன் சத்திய அரிச்சந்திரன் வீரதண்டை சேமத்தலை விளங்கு
17. மிருதாளினான் வீரசூர விக்கிறமாறகன் கீற்திப்பிரதாபன் வை
18. கை வளனாடன் கொட்டமடக்கி வைய்யாளி நாராயணன் இவுளி
19. பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பா மாலை இளஞ்சிங்க
20. ந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் மதப்புலி அடைக் கலங்
21. காத்தான் தாலிக்கு சத்துருவாதி யள்மிண்டன் வன்னிய
22. ராட்டந் தவிள்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்
23. கு மிகு தாளினான் கீற்திப் பிறதாபன் ஆரிய மானங் காத்தான்
24. தொண்டியந்துறை காவலன் துரக்கரே வேந்தன் அனுமகேதன
25. ன் குடைக்குக் கற்னன் பரிக்கு நகுலன் பரத நாடகப் பிறவீண
26. ன் கருணா கடாட்சன் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன்
27. சகல சாம்பிறாச்சிய லக்ஷமீநிவாசன் சேது காவலன் வங்
28. கிஷாதிபனாகிய அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய துக

29. வூர்க் கூற்றத்து காத்தூரான குலோத்துங்க சோள நல்லூர்
30. கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கெற்ப
31. யாசி சேதுபதி காத்த ரெகுனாத தேவர் புத்திரன் சேது பதி காத்த
32. தேவர் முத்து விசைய ரெகுனாத தேவர் தம்பி முத்து ரெகுனாதச் சே
33. துபதி காத்ததேவர் சுவாமி தெய்வச்சிலைப் பெருமாள் நயினார் கீளைக்
34. க்காடு கட்டுப்பட்டுக் கிடந்த படியினாலே சிலராதீதத்து முன் நடந்
35. தபடிக்குச் சறுவமானியமாக சுவாமிக்குத் திருப்பிவிட்டுத் தாம்பு
36. ர சாதனங் குடுத்தபடி சாதனமாவது இந்தக் கீளைக் காட்டுக்கு
37. எல்லையாவது வடபாற்கெல்கை முன் சீப்புடையார் கோ
38. விலுக்கும் தென்கிளக்குச் சக்கரக் கல்லுக்கும் வயிரவன் கோ
39. விலுக்கு வடமேற்குக் கல்லுக்கும் இதின் கிளக்குக் கல்லு க்கும்
40. விளுந்த புளி ஊறணிக்கும் நயினான் மரைக்காயன் கல்லுக்
41. கும் தெற்கு கீள்பாற்கெல்கை பத்தராதர வைக்குக் கிளக்கு
42. ச் சக்கரக் கல்லுக்கு ஆனை விளுந்தான் மேல்கரைச் சக்கரக்
43. கல்லுக்கும் உப்பு ஊறணி கீள் கரைக்கும் அலைவாய்க் கரை
44. ச் சக்கரக் கல்லுக்கும் மேற்கு தென்பாற்கெல்கை அலைவா
45. ய்க்கரைக்கு வடக்கு மேல் பாற்கெல்கை உட்பாத்து அளத்
46. துக்கு கிளக்கு இன்னாங் கெல்கைக்குள்ளிட்ட நஞ்சை புஞ்
47. சை மாவடை மரவடை திட்டுத்திடல் கீழ் நோக்கிய கிணறு

48. மேல் நோக்கிய மரம் நிதிநிட்சேப செலதரு பாஷாணா ஷாவை

49. காமிய சித்த சாத்தியமாகிய அஷ்டபோகப் பலப் பிறாத் தியும் ரா

50. சாக்கள் முன்னிலையாக தெய்வச் சிலைப் பெருமாள் நயினாரு

51. க்கு விட்டுக்குடுத்த கீளைக்காடு இந்தத் தற்மத்தை பரி பாலனம்

52. பண்ணின பேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும் கோடி

53. சிவலிங்கப் பிரதிஷ்டையும் கோடி பிறும்ம பிறதிஷ்டையும்

54. கோடி கோதான பூதானமும் பண்ணின பலனையடைவா

55. ராகவும் இதுக்கு விகாதம் பண்ணின பேர்கள் கெங்கைக்

56. கரையிலும் சேதுக்கரையிலும் காராம் பசுவையும் பிராம

57. ணரையும் மாதா பிதாவையும் கொன்ற தோஷ

58. த்திலே போகக் கடவாராகவும்.

# செப்பேடு எண் 83

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் தம்பி முத்து ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | திருப்புல்லாணி திருக்கோவில் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1651 சௌமிய ஆண்டு தை அமாவாசை நாள் (கி.பி. 7-1-1730) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | திருப்புல்லாணி கீழைக்காட்டுப் பகுதி திருக்கோயிலுக்கு சர்வ மானியம் |

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்து ரெகுநாத சேதுபதி முத்து விசைய ரகுநாத சேதுபதி மன்னரது இளவல் மறவர் சீமையின் மன்னராக இவர் இருந்ததாக எந்த வரலாறும் இல்லை. ஆனால் இந்தச் செப்பேட்டில் ''*முத்துவிஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் தம்பி*'' என்று இவர் குறிக்கப் பெற்றுள்ளார். இராமநாதபுரம் சீமை வரலாற்றில் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி இறந்தபிறகு சுந்தரேச தண்டத்தேவர் என்பவர் ஒரு குறுகிய காலம் சேதுபதியாக இருந்ததாகவும் அவரை வென்று கொன்றுவிட்டு பவானி சங்கரத்தேவர் என்பவர் ஆட்சியைக் கைப்பற்றியதாக இராமநாதபுரம் மேன்யுவலில் குறிக்கப்பட்டுள்ளது. *இதனைப் பொய்யாக்கும் வகையில் இந்தச் செப்பேடு,

---

* Raja Ram Rao. T. Manual of Ramnad Samasthanam (1891) page. 238

சகம் 1651 சௌமிய ஆண்டு தைமாதம் வரையப்பட்டுள்ளது. இதிலிருந்து முத்துவிஜய ரெகுநாத சேதுபதி அம்மை நோயினால் அறந்தாங்கிப் போரில் இறந்தபொழுது அவரதுஇளவலான முத்துவடுகநாதன், முத்துரெகுநாத சேதுபதி என்ற பெயரில் சிறிது காலம் இராமநாதபுரம் மன்னராக இருந்தார் என்பதை இந்தச் செப்பேடும் அடுத்து வரும் செப்பேடும் புலப்படுத்துகின்றன. இந்தக் காரணத்தினால் இவரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் எதுவும் குறிக்கப்படாமல் இவரது தமையனரான முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் அறுபத்திரண்டு விருதாவளிகள் மட்டும் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. முத்துவிஜய ரகுநாத சேதுபதியையடுத்து அரசு கட்டில் ஏறினவர். சுந்தரேசுவர தேவர் அல்ல என்பதும் புலனாகின்றது.

திருப்புல்லாணி தெய்வச்சிலை பெருமாள் நயினார் ஆலயத்திற்கு ஏற்கெனவே தானம் வழங்கப்பட்டிருந்த கீழைக்காட்டுப் பகுதி பற்றிய சிக்கல்களைத் தீர்த்து மீண்டும் திருப்புல்லாணி திருக்கோயிலுக்கு அந்தப்பகுதியை சர்வமானியமாக உத்தரவிட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இதில் சம்பந்தப்பட்ட கீழைக்காடு என்பது தெய்வச்சிலைப் பெருமாள் கோயில் கொண்டுள்ள திருப்புல்லாணி கிராமத்திற்கு கிழக்காகவும் கிழக்குக் கடற்கரைக்கு வடகிழக்காகவும் சேதுவழிப்பாதைக்கு தெற்காகவும் நெய்னா மரைக்கான் கிராமத்திற்கு மேற்காகவும் உள்ள பரந்த காட்டுப்பகுதியாகும். இன்றைய ரெகுநாதபுரம் வண்ணான்குண்டு தென்னம்பிள்ளை வலசை, கீரிவலசை, துத்துக்கப் வலசை ஆகிய ஊர்களைக் கொண்ட இந்தப் பகுதி தொன்றுதொட்டு தெய்வச்சிலைப் பெருமாள் நயினாரது சொத்தாக இருந்துவந்துள்ளது என்பதை அங்கே நாட்டப்பட்டுள்ள *திருவாழிக்கற்கள்* (வரிகள் 38, 42, 44) புலப்படுத்துகின்றன. கட்டுப்பட்டுக் கிடந்த (வரி34) தீத்து (வரி 34) திருப்பிவிட்டு (வரி 35) என்பன இந்த வட்டார வழக்குகள் ஆகும்.

## செப்பேடு எண் 84

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1678ம் வருஷம் இதன் மேல் செ
2. ல்லா நின்ற தாது நாம சம்வச்சரத்தில் உத்தராயணத் தில் கிரீஷ்மருதுவில் ஆடி மாதம் 8ம் தேதி கிருஷ்
3. ணபட்சத்தில் பஞ்சமையும் குருவாரமும் அவிட்ட நட்சத் திரமும் சுபயோக சுபக்கரணமும் பெ
4. ற்ற சுபதினத்தில் ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மகாமண்டலே சுவரன் அரியராய தளவிபாட
5. ன் பாஷைக்கு தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு
6. கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலதாபனாச்சா யன் சோழமண்டல
7. ப்பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்ட மண்டல சண்டப் பிரகண்டன் ஈழமும்
8. கொங்கும் யாழ்ப்பாண பட்டணமும்எம்மண்டலமும் அளித்து கெசவேட்டை கண்
9. டருளிய ராசாதிராசன் ராசபரமேஸ்வரன் ராசமார்த்தாண் டன் ராசகுல திலகன் துட்ட
10. ரில் துட்டன் துட்டர் கொட்டமடக்கி துட்டர் நீட்டூரன் வையாளி நாராயண

---

இந்தச் செப்பேடு சித்துரெட்டியார் மடத்து பூஜகரிடம் உள்ளது. நூலாசிரியரால் நேரில் சென்று படிஎடுக்கப்பட்டது

11. ன் இவிளிபாவடி மிதித்தேறுவார் கண்டள் அரசரில் ராவணராமன் அடியார் வேளைக்கா
12. ரன் பாதளவிபாடன் உரிகோல் சுரதாணன் அந்தம்பிற கண்டன் சாடிக்கார
13. ன் சாமித்துரோகியள் மிண்டன் பஞ்ச பாணவதாரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பர
14. மன்னர் சிங்கம் ஆத்தில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங்காத்தான்
15. தாலிக்கு வேலி தொண்டியந்துறை காவலன் வைகை வளநாடான் அனுமகேதனன்
16. ன் கருட கேதனன் சிங்ககேதனன் மீனகேதனன் செங்காவிகு
17. டையும் அதன்மேல் வெண்கவரியும் பெற்ற தேவாதி தேவன் தேவை
18. நகராதிபன் சேதுமூல ரட்சாதுரந்தரன் ராமநாதசுவாமி காரியதுரந்
19. தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் இரவிகுல சேகரன் சொரி
20. முத்துவன்னியன் புவனேசுவரன் திலதநுதல் மடமாதர் மடலெழுதிய சுமு
21. கன் விசையலட்சிமி காந்தன் கலைதெரியு விற்பன்னன் காமினி கந்தப்ப
22. ன் சத்திய அரிச்சந்திரன் பூலோக தேவேந்திரன் வில்லுக்கு விசையன் மல்லுக்
23. கு வீம சேனன் கொடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் வீரத்தண்டைசேமத்தலை விளங்
24. குமிருதாளினன் அசுபதி கெஜபதி நரபதி சேதுபதியாகிய துகவூர் கூற்றத்து
25. காத்தூ ரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்ட
26. னில் இருக்கும் ராஜராஜன் ராஜஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாசி முத்துவிஜயரகுநாத

27. சேதுபதி காத்த தேவரவர்கள் மருமகன் ஸ்ரீதனுக்கோடி ராமுத்தேவரவர்கள்

28. நத்தக்காட்டில் சித்துசெட்டியார்கள் மடம் சுப்பையனுக்கு தானம் பண்ணின

29. கிராமம் வேப்பங்குளம் இந்த வேப்பங்குளத்திற்கு எல்கை யாவது பல்லவ குலாந்த

30. க நல்லூர் ஆகிய பரளச்சி கண்மாய்க்கும் செவ்வல் புஞ்சைக்கும்மேற்

31. கு சின்னதிருக்கணிக்கு தென்மேற்கு நாட்டுகணக்கு முத் திருளப்ப பிள்ளை

32. புஞ்சைக்கு வடக்கு பள்ளஊரணிக்கும் பாதைக்கும் கிழக்கு இன்னாங்கெல்லைக்

33. குட்பட்ட வேப்பங்குளம் நஞ்சைபுஞ்சை மாவடை மரவடை திட்டுத்திடல் நிதி நிட்சேப

34. சலதருபாஷாண சித்தசாத்தியமென்று சொல்லப்பட்ட அஷ்டசுவாமிய

35. யங்களும்சந்திராதித்த சந்ததி பிரவேசம் சர்வமானியமாக தானம் பண்

36. ணிக்கொடுத்த படிக்கு ஆண்டனுபவித்துக் கொள்வார் களாவும் இந்

37. த தருமத்துக்கு உபகாரம்பண்ணின பேர் கோடி சிவலிங்க பிரதிஷ்டை

38. கோடி பிரும்ம பிரதிஷ்டை பண்ணின சொர்ணதான கோதான பூதானம்

39. பண்ணின பிரயோஜனம் அடைவாராகவும் இந்த தருமத் துக்கு விகாதம் நினைத்த பேர்

40. கெங்கைக்கரையிலே காராம்பசுவையும் மாதாபிதாவையும் குருவையும்

41. கொன்ன தோஷத்திலே போகக்கடவாராகவும் உ.சிவமயம்

# செப்பேடு எண் 84
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜய ரெகுநாத சேதுபதி மருமகன் தனுக்கோடி இராமுத்தேவர்
2. செப்பேடு பெற்றவர் : சித்துரெட்டியார் மடம், நத்தக்காடு
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1678 ஆடி மீ 8 (கி.பி. 756)
4. செப்பேட்டின் பொருள் : வேப்பங்குளம் கிராமம் தானம்

இராமநாதபுரம் மன்னரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டின் அறுபத்தினான்கு விருதுப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் முந்தையச் செப்பேடுகளில் காணப்பட்டவை.

நத்தக்காடு கிராமத்திலுள்ள சித்துரெட்டியார் மடத்துக்கு வேப்பங்குளம் கிராமத்தைச் சர்வமானியமாக வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு உறுதி செய்கிறது. இதனை வழங்கிய காலமாகிய கி.பி. 1756ல் சேதுநாட்டை ஆட்சி செய்தவர், முத்துக்குமார விஜய ரெகுநாத சேதுபதி ஆவார். ஆனால் இந்தச் செப்பேடு அவரால் வழங்கப் படவில்லை. அவரது மருகர் தனுக்கோடி ராமுத்தேவர் என்பவர் இதனை வழங்கியுள்ளார். மன்னருக்குப் பதிலாக எந்தச் சூழ்நிலையில் இந்த தானத்தை அவர் வழங்கி உத்தரவிட்டார் என்பது தெரியவில்லை. சேதுபதி ஆட்சியில் சேதுபதிகளைப்போல அரசவழியினரும் அரசு அலுவலர்களும் இத்தகையச் செப்பேடுகள் வழங்கியதை இந்தத்

தொகுப்பில் ஏற்கெனவே கொடுக்கப் பட்டுள்ளன. மன்னரது தெற்குப்பகுதி பிரதிநிதியாக தனுக் கோடி இராமுத்தேவர் பணியேற்றிருக்கவேண்டுமென்பது ஊகம்.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சித்துரெட்டி யார் மடம் அருப்புக் கோட்டை வட்டத்தில் பரளாட்சி என்ற ஊருக்கு வடக்கே ஆறுகல் தொலைவில் உள்ளது. இந்த மடம் உள்ள பகுதி தற்பொழுது வடக்கு நத்தம் என்று வழங்கப்படு கிறது. செப்பேட்டில் இதன் பெயர் நத்தக்காடு ஆகும். பதினைந்து பதினாறாவது நூற்றாண்டுகளில் ஆந்திர மாநிலத் திலிருந்து இங்கு குடியேறிய வருக மக்களில் சிறப்பான சித்து ரெட்டியார் என்பவர் இதனை நிறுவியிருக்க வேண்டும். இந்த மடத்தின் கல்தூண் ஒன்றில் சித்துரெட்டியாரும் அவரது மனைவியும் அதன் எதிரேயுள்ள மற்றொரு தூணில் அவரது மகனும் மனைவியர் இருவர் திருவுருவங்களும் வடிக்கப்பட்டு காட்சியளிக்கின்றன.

இந்த மடத்தை மக்கள் ஆறுமுகசாமி மடம் என்று வழங்கி வருகின்றனர். நூறாண்டுகளுக்கு முன்னர் இந்த மடத்திற்கு எதிர் பகுதியில் ஜீவசமாதி கொண்ட ஆறுமுகம்சாமி என்ற சித்தரது சமாதியும் முருகனுக்காக அங்கு அமைக்கப்பட்டுள்ள சிறிய திருக்கோயிலும் மக்களிடம் பிரபலமாகியிருப்பதே இதற்குக் காரணமாகும். அந்த சித்தர் சமாதி அடைந்த சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் ஆண்டுதோறும் அவருக்கு குருபூஜை விழா சிறப்பாக நடந்தேறி வருகிறது.

இந்த மட கைங் காரியத்திற்க்காக தானம் வழங்கப்பட் டுள்ள வேப்பங்குளம் இந்த ஊரை அடுத்த பரளாச்சி சாலையில் செட்டிகுளம் விலக்கு வழிக்கு, கிழக்கேயுள்ளது. இதன் நான்கு எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ளவையிலிருந்து மூன்று புதிய தகவல்கள், கிடைக்கின்றன. பரளாட்சி என்று வழங்கப்படும் ஊரின் முந்தைய சிறப்புப் பெயர் பல்லவர் குலாந்தக நல்லூர் என்பது. மதுராந்தகன், சோழ குலாந்தகன் பாண்டிய குலாந் தகன் ஆகிய வரலாற்றுப் பெயர்கள் மக்களது உயிரைப் பறிப்ப தில் பேதமில்லாது கடமையாற்றும் கண்களில்லாத அந்த கன் போல செயல்படும் எமன் என்ற பொருளில், முறையே ''மதுரை க்கு, சோழனுக்கு, பாண்டியனுக்கு எமன் என்ற பொருளில் இந்த

ஊரின் பெயர் அமைந்திருப்பதிலிருந்து ''ஏக வீர பரசக்கர கோலாகலப் பல்லவன்'' என்ற விருதுப் பெயரினையுடைய ஸ்ரீ *மாறபாண்டியனது* விருதுப் பெயராக இருக்க வேண்டுமென்பது இந்த மன்னர் சின்னமனூர் செப்பேட்டில் குறிக்கப்படுகின்ற வரகுணமகாராஜாவின் மைந்தன் ஆவார். கி.பி. ஒன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் ஆட்சி புரிந்த மன்னர்.

மேலும் நான்கெல்கையில் ''நாட்டுக் கணக்கு முத்திருளப் பப்பிள்ளை புஞ்சைக்கு வடக்கு'' என்ற தொடரிலிருந்து இராம நாதபுரம் சீமைப் பிரதானியாக இருந்த முத்திருளப்பபிள்ளையை (கி.பி. 1782-91) இது குறிப்பதாகும். ஆங்கில மொழியில் தேர்ச்சியும், நிர்வாகத்தைத் திறம்பட நடத்தும் அற்புதத் திற னும் பெற்ற இந்தப் பிரதானி அண்மையிலுள்ள உச்சிநத்தம் கிராமத்தில் வளர்ந்தவர் என்பதும் முன்னர் பரளாச்சிப் பகுதியில் ''நாட்டுக் கணக்கராக'' இருந்தவர் என வழங்கும் செவிவழிச் செய்தியினை இந்தச் செப்பேடு உறுதி செய்கின்றது.

## செப்பேடு எண் 85

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1589 மேல்செல்லா நின்ற பிலவங்க நாமஸம்வச்ரத்து உத்தராயண
2. த்து வசந்தரிதுவில் வைகாசி மாத்தையில் சுக்கிலபட்ஷ தில் வியாழக்கிழமையும் கிருத்திகையும் புனர்பூச நட்சத் திரமும் கொ
3. ண்டநாம யோகமும் கோசவாகரணமும் பெத்தபுண்ணிய காலத்தில் தேவைநகராதிபன் சேது ரட்சாதுரந்த
4. ரன் —— ராமநாதசுவாமி காரியதுரந்தரன் சிவபூஜா துரந் தரன் பரராஜசேகரன் பரராஜசிங்கம்
5. ரவிகுலசேகரன் ரவிவர்மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமது மகாமண்டலேசுவரன் அரியராயதள
6. விபாடன் பாசைக்கு தப்புவராயகண்டன் மூவாயிர கண்டன் கண்டநாடு கொண்டுகொண்டநா
7. டுகுடாதான் பட்டமானங்காத்தான் துட்டராயர் கண்டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவளநாட
8. ன் வேதியர்காவலன் அரசராவணராமன் அடியார்வேளைக் காரன் பரதநாடகப்பிரவீணன் உரிகோ
9. ல் சுரதாணன் ——————— சாமித்துரோகியள்மிண்டன் பஞ்சவன்னராய
10. ராகுத்தன் பனுக்குவார்கண்டன் நவகோடிநாராயணன் கொட்டமடக்கி வைய்யாளி நாராயணன்
11. இவுளிபாவடி மிதித்தேறுவார்கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை

---

* A. S. S. I Vol pp. 75-77

12. மன்னர்சிங்கம் மதுரராயன் ஆத்தில் பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கு
13. வேலி சத்ருவாதியள் மிண்டன் வன்னியராட்டம் தவிழ்த் தான் மேவலர்கள் கோளரி மேவலர்
14. வணங்கு மிருதாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்திப் பிரதாபன் ஆரியமானங் காத்தான் தொண்டியன் து
15. றை காவலன் கொடைக்கு கர்ணன் பரதநாடகப்பிரவீணன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவில்
16. குன்றாய்வளை குணில்பொறித்தவன் திலதநுதல் மடமா தர் மடலெழுத வரு சுமுகன் விசயலெட்சுமி காந்தன் கலை
17. தெரியும் சுமுகன் விற்பன்னன் காமினி கந்தப்பன் சத்ய அரிச்சந்திரன் சகல சங்கீத வித்யா வினோதன்
18. வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் சகல சாம்பிராச்சிய லட்சுமி நிவாஸன் செயதுங்கராச

முதல் ஏடு (இரண்டாவது பக்கம்)

19. ன் வங்கிசாதிபனான துகவூர் கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரை
20. யாத கண்டனிலிருக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவர் புத்திரர் ஸ்ரீ திருமலைய இரணிய கெர்ப்பயாசி சேது
21. பதி ரகுநாத தேவரவர்களுக்கு புண்ணியமாக பாண்டி யூரிலிருக்கும் சொக்கப்பன் சேருவை
22. காரன் புத்திரன் பெருமாள் சேர்வை காரன் ராமேசுவரத் தில் ராமநாத சுவாமிக்கு அறை கட்டளை தன்மத்துக்
23. கட்டளையிட்ட கிராமத்துக்கு தானதன்ம சாதனங் கொடு த்தபடி இப்போது மேலை மாகாணச் சீர்மை ராதா
24. நல்லூர் தட்டில் ஆனந்தூராகிய கிராமமும், பாப்பாகுடி ஏந்தலும் தன்னுடைய அறை கட்டளைக்கு
25. சைராணியோதக தாராபூர்வமாக ஆசந்திராக்கமாக கட்ட ளை இட்ட படியினாலே சேர்ந்தமங்
26. கலத்துக்கும் ஊடுபிலாருக்கு மேற்கு சிறுநாகுடி வடகுளக் காலுக்கு மேற்கு ஊடுபிலாருக்கு தெற்கு
27. தென்கிழக்கு சிறுநாகுடி குமரர் கோவிலுக்கும் வடக்கு பொந்தியன் ஏந்தல்

28. உள்பட எல்கை இதனில் விட்டு தெற்குப்போந்து சிறுநா குடி தெற்குபிலாருக்கு மேற்கு வாநாடன் ஊ
29. ரணிக்கு வடக்கு கண்ணாற்று கரையில் எல்லை காலுக்கு கிழக்கு படயன் வயக்கால் ஊரணி
30. எல்லைக் கல்லுக்கு வடக்கு இதனிடை விட்டு தென்மேற் கு போந்து துவார் குளக்காலுக்கு கிழக்
31. கு குருகூரணிக்கும் துவார் குளத்துக்கரைக்கும் வடக்கு இதன் விட்டு மேற்கு துவார் குளக்காலுக்கு கிழ
32. க்கு உ
33. ஸ்ரீ சுப்ரமணிய திருமலை ஹிரண்ய கர்ப்பயாஜி

இரண்டாவது ஏடு (முதல்பக்கம்)

34. வடக்கு எலிகுளத்து வயலுக்கு தெற்கு நீலனேந்தலும் மேலைவயல் குடியிருப்பு மடத்துக்கு
35. கிழக்கு இந்த நிலம் விட்டு வடகிழக்கு காட்டுக்குளம் பொருத்து கரைக்கும் பெருமாள் ஊரணி
36. க்கும் தெற்கு பெரியகுளத்து கீழ்மடைக்கண் நாகவயலுக் கும் காட்டு குளத்து வயலுக்கும் தெ
37. ற்கு இந்த படிக்கு திருமதிச் சடையார் காட்டுக்குளம் நீங்க லாக ஆனந்தூர் நான்கெல்லையும் பாப்பா
38. குடி நான்கெல்லையும் இந்த இரண்டு கிராமத்தில்உண்டா கிய ஊரது புறவு நஞ்சை புஞ்சை ஏந்தல் குட்ட
39. ம் மாவடை மரவடை பட்டம் படுகை திட்டுதிடல் மேல் நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறு
40. நீரும் பாசியும் குடி பள்ளுப்பறை இதுமுதலாகிய நிதி நிஷேப ஜலதரு பாஷாண அஷ்டபோக
41. தேஜ சுவாமியங்களும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு அறைக் கட்டளையுடனே கூடின தர்
42. மம் சந்திராதித்தவரை சந்ததிப்பிரவேசம் வரை உத்தி ரோத்திரமாக நடத்தி விச்சுக் கொள்ளுவா
43. ராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி நடத்திவிச்சவர்கள் கோ

44. டி லிங்க பிரதிட்டையும் கோடி விரும பிரதிட்டையும் பண்ணின சுகத்தை
45. அடைவாராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருத்தர் அகுதம் பண்ணின பேர் கெங்கை
46. லும் சேதுவிலும் மாதா பிதாவையும் குருக்களையும் காராம் பசுவையும் பிராமணரையும்
47. வதை பண்ணின தோஷத்தில் போகக் கடவாராகவும் இந்தப் படிக்கு சம்மதித்து ஸ்ரீதிருமலைய
48. இரணிய கர்ப்பயாசி சேதுபதி ரெகுநாத தேவர் பெருமாள் ராமேசுவரத்தில்
49. ராமநாதசுவாமி அறக்கட்டளைக்கு நடத்திவிக்கிற தன் கட்டளையிட்ட ஆனந்தூரும் பாப்பாகுடியும்
50. யும் தன்மசாதனம் கொடுத்தோம் உ
51. — — — — — — — — — — — — — —

*இரண்டாவது ஏடு (இரண்டாவது பக்கம்)*

52. — — — — — — ... உ விஸ்வநாத
53. ஆசாரிபுத்திரன் ரகுநாதன் லிகிதம் பரிதாவி வருஷம் அர்ப்பிசி மீ 17தேதி ராமலிங்க சுவாமிக்கு
54. பெருமாள் சேர்வைகாரன் அறக் கட்டளைக்கு முதலே கட்டளையிட்ட ஆனந்தூர் பாப்பாகுடி சுவாமி
55. க்கு அபிஷேக நெய்வேத்தியத்துக்கு போதாத படியினாலே கர்த்தாக்களுக்கு புண்ணியமாக உரசூர் கட்ட
56. — — — — — — — — — — — — — —
57. ளையிட்டபடி யினாலே உரசூருக்கு எல்கை ஆந்தைகுடி மண்மாயிக்கு மேற்கு இரவி
58. மங்கலத்து கண்மாய் உள்வாய்க்கு வடக்கு மேற்கு ஏகாம் பரநாதர் சுவாமி சன்னதி அரசுக்கு
59. கிழக்கு கங்கைகுடி வயலுக்கும் கண்மாய் பொருத்துகரைக் கும் தெற்கு இதன் அடுத்த
60. வெள்ளூருக்கு தெற்கு இந்த நான்கெல்கைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மரவடை குடி

61. பள்ளு பறை இதுமுதலாகிய நிதி நிட்க்ஷேப ஜலதரு பாஷாண அஷ்ட யோக தேஜ

62. சுவாமியங்களும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு அறக் கட்டளையுடனே கூடின தன்மம்

63. சந்திராதித்தவரை சந்ததிப்பிரவேசம்வரை உத்தரோத்த ரமாக நடத்தி விச்சுக் கொள்ளு

64. ளுவாராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருதர் அகி தம் பண்ணினபேர் கெங்கையிலும் சேது

65. விலும் மாதா பிதாவையும் குருவையும், வதைத்த தோஷ த்திலே போககடவாராகவும் உ

மூன்றாவது ஏடு

66. இந்த அறக்கட்டளை தன்மத்தை மணிய....... அய்யன் பாரிசமாகவும் இராமேசுவரம் ஆரி

67. ய மஹாசனங்களில் தெய்வங்கள் பெருமாள் இராமநாத பாரிசமாகவும் கட்டளையிட்ட படியினா

68. லே உத்தரோத்தரமாக நடத்தி விச்சுக் கொள்ளக் கடவா ராகவும் தெய்வங்கப் பெருமாள் ராமநாதருக்கு

69. பாப்பாகுடியிலே அறுகலவிரைப்பாடு சொக்கப்பன் சேரு வைகாரனவாள் தானபூர்வமாக

70. கட்டளையிட்ட படியினாலே ஆண்டு அனுபவித்துக் கொ ண்டு அறைக் கட்டளை தன்மத்தை

71. பரிபாலனம் பண்ணி நடத்திவிச்சு கொள்ளுவாராகவும் ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்ரீதிரு

72. மலைய ஹிரண்ய கர்ப்பயாஜி சேதுபதி

## செப்பேடு எண் 85

**(விளக்கம்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | பாண்டியூர் சொக்கப்பன் சேர்வை புத்திரன் பெருமாள் சேர்வை |
| 2. | செப்பேடு பெற்றவர் | ; | இராமேசுவரம் திருக்கோயில் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1589 பிலவங்க ஆண்டு வைகாசி மாதம் (கி. பி. 1568) |
| 4. | செப்டேட்டின் பொருள் | : | ஆனந்தூர் கிராமம், பாப்பாக் குடியேந்தல் இராமேசுவரம் கோயிலுக்கு தானம். |

இராமநாதபுரத்திற்கு வடக்கே பத்துக்கல் தொலைவிலுள்ள பாண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த சொக்கப்பன் சேர்வை மகன் பெருமாள் சேர்வை திருமலை சேதுபதி மன்னர் புண்ணியமாக இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயில் அறக் கட்டளைக்கு சேதுநாட்டின் மேலமாகாண சீமையில் உள்ள ஆனந்தூர் கிராமத்தையும், பாப்பாக்குடி யேந்தலையும் தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது. ''சேதுபதி மன்னர் புண்ணியமாக'' என்ற சொற்றொடரிலிருந்து மன்னரது விசுவாசத்திற்கும் அன்புக்கும் அருகதையான ஒரு உயர்ந்த அலுவலர் பெருமாள் சேர்வை என்பது புலப்படுகிறது. மன்னர் களுக்குப் பதிலாக முழு அதிகாரம் பெற்ற அவர்களது அலுவலர்களும் தானம் வழங்குவது வரலாற்றில் காணக்கூடிய இயல்பான நிகழ்ச்சி. என்றாலும் அவை மிக அருமையாகவே நிகழ்ந்துள்ளன. பெருமாள் சேர்வைக்காரரது தந்தை சொக் கப்பன் சேர்வை கான நாட்டில் புதுக்கோட்டை சீமையில் திரு

மலை சேதுபதி மன்னரது அரசப் பிரதிநிதியாக இருந்தபொழுது அங்கு அவர் இத்தகைய அறக்கொடைகளை மன்னரது பெயரால் வெளியிட்டிருப்பதை புதுக்கோட்டைச் சீமைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அவையாவன :

1. சகம் 1585-ல் (கி.பி.1663-ல்) மேலையூர் விண்ணகர பெருமாளுக்கு திருவிடையாட்டக் காணியாக பெரியவராயன் வயல் முதலிய காணிகளை சர்வமாயமாக வழங்கியிருப்பது.

2. திருமயம் அழகியமெய்யருக்கு சகம் 1579-ல் (கி.பி. 1657) பிரம்மதாயமாகவும் தெய்வதாயமாகவும் கோட்டையூர் புரவில் காணிகளை வழங்கியிருப்பது.

3. திருமயம் விராச்சிலை உலகவிடங்கன் சுவாமிக்கு பல்லக்கு சேவை, பிராமண போஜனம், திருப்பணி ஆகிய தர்மங்களுக்கு வீரகண்டன் பட்டி என்ற ஊரினை குடிநீங்கா தேவதானமாக வழங்கியிருப்பது

இந்த மன்னரை அடுத்து வந்த கிழவன் சேதுபதி முத்து விஜய ரெகுநாத சேதுபதி ஆகிய மன்னர்கள் காலத்திலும் இதே மரபு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

செப்பேடு வழங்கியுள்ளவர் சொக்கப்பன் சேர்வை மகன் பெருமாள் சேர்வை என்று குறிப்பிட்டிருப்பதால் இவர் இராமநாதபுரம் பகுதியில் கணிசமான அளவில் உள்ள அகமுடையார் மக்கள் இனத்தைச்சேர்ந்தவர் என்பது வெளிப்படை. ''சேர்வை'' என்பது பொதுவாக சேவை, பணி, என்ற பொருளினைத் தந்தாலும் சேதுபதி மன்னரது படை அணிப்பிரிவிலும் தேச காவல் திசை காவல் பணியிலும் மிகுதியாக ஈடுபட்டு இருந்த அகமுடையார் சமூகத்தினரைக் குறிக்க இந்த சொல் வழக்கில் வந்துள்ளது. மற்றும் சிறப்பாக போர்த்திறனில் விஞ்சி நின்ற மறவர், இசுலாமியர் இனத்தவர்களைக் குறிப்பதற்கும் இந்தச் சொல் ஒரே வழி கையாளப்பட்டுள்ளது. குறிப்பாக போகலூரைச் சேர்ந்த இசுலாமியரான கனி சேர்வைக்காரர் சித்திரங்குடியைச் சேர்ந்த மறவர் தலைவரான வெள்ளையத்தேவர் மயிலப்பன் சேர்வைக்காரர் ஆகியோர்கள் இந்த சொல் வழக்கிற்கு சிறந்த உதாரணங்கள் ஆவர்.

அகமுடையார் இனத்தவரில் சேதுபதி மன்னரது தள கர்த்தர்களாக உயர்ந்த பதவிகளில் சிறப்பாக பணியாற்றிய *வைரவன் சேர்வைக்காரர், வெள்ளையன் சேர்வைக்காரர்* ஆகிய தளபதிகளை பிற்கால சேது நாட்டு வரலாற்றில் காணமுடிகிறது. ஆனால் கானாட்டில் திருமலை சேதுபதி மன்னரது பிரதிநிதிகளாக இருந்த பெருமாள்சேர்வை, சொக்கப்பன் சேர்வை பற்றிய வேறு செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு இல்லை. அவர்களது சொந்த ஊரான பாண்டியூரில் கூட அந்தப் பெரு மக்களைப் பற்றி தகவல்களைப் பெற முடியவில்லை.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பெறும் ''மேல மாகாண சீர்மையைச் சேர்ந்த இராதாநல்லூர் தட்டில், ஆனந்தூர் ஆகிய கிராமம் பாப்பக்குடியேந்தலும்'' (வரிகள் 23, 34) இராமநாத புரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் உள்ளன. ''சீர்மை'' என்ற பெரு நிலப்பரப்பின் கூறு, மதுரை நாயக்க மன்னர் ஆட்சியில் நடைமுறைக்கு வந்தது. தற்பொழுது வழக்கிலுள்ள ''சீமை'' என்ற சொல் சீர்மையின் இடைக்குறைவு. இராதா நல்லூர் தற்பொழுது இராதானூர் என்று மருவியுள்ளது. ஆனந்தூர், பாப்பாக்குடியேத்தல் என்ற பெயர்களில் மாற்றம் இன்று வரை எதுவும் இல்லை. சோழர், பாண்டியர் ஆட்சியில், ஆனந்தூர் இராஜராஜபுரம் என்று வழங்கப்பட்டது. கோனேரின்மை கொண்டான் என்ற பராக்கிரமபாண்டியத் தேவனது (கி.பி. 1162-70) கல்வெட்டு ஒன்றில் இந்த ஊர் ஆனந்தூர் ஆன ''அபிஷேகர சுந்தர நல்லூர்'' என்றும் அங்கு திருக் கோயில் கொண்டுள்ள நாயனார், திருமதிச்சடை ஸ்ரீவரமுடை நாயனார் என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த ஊர் அதே பழம் பெயரிலும் அங்கு உள்ள குளம் திருமதிச் சடையார் காட்டுக் குளம் என்று வழங்கப்படுவதிலிருந்து இந்த ஊர் தொன்மைச் சிறப்பு மிக்கது என்பது புலப்படுகிறது. மற்றும் இந்தச் செப் பேட்டில் வழக்கமாகக் குறிப்பிடப்படும் எல்லைகள் மிகவும் விளக்க மாகக் குறிக்கப்பட்டுள்ளன.

மற்றும், இந்தச் செப்பேடு சில புதிய செய்திகளைத் தெரிவிக்கின்றன முதலாவதாக ஏற்கனவே வழங்கப்பட்ட அறக்

கொடை பற்றி ஆணை பிறப்பிக்கும் பொழுது அந்தப் புதிய ஆணையும் தொடர்புடைய அந்தச் செப்பேட்டின் தொடர்ச்சியாக வரையப்பட்டது, கி.பி. 1668 ல் வழங்கப்பட்ட நிலக்கொடை இராமநாதசுவாமி அறக்கட்டளைக்குப் போதுமானதாக இல்லை என்பதை அறிந்தவுடன் கி.பி. 1673ல் மீண்டும் அதே அறக் கொடைக்கு உரசூர் கிராமம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த கட்டளையை திறம்பட நடத்திவைக்க அந்த ஊர்மணியம் ஐயனையும் இராமேசுவரம் ஆரிய மகாஜனங்களில் தெய்வங்கள் பெருமாள் என்பவரையும் பொறுப்பாக்கி உத்தரவிடப்பட்டுள் ளது. இந்தப் புதிய உத்தரவும் இந்தச் செப்பேட்டின் மூன்றாவது, நான்காவது பக்கங்களில் தொடர்ச்சியாக வரையப்பட்டுள்ளது.

இன்னொரு புதிய செய்தி. பெருமாள் சேர்வைக்காரரது இந்த நிலக்கொடை ஆணையைப் சேதுபதிமன்னர் பார்வை யிட்டு அங்கீகரித்ததற்கு அடையாளமாக செப்பேட்டில் இரண்டு இடங்களில் முதல் செப்பேட்டின் இரண்டாவது பக்கத்தில் 33வது வரியிலும் இரண்டாவதுசெப்பேட்டின் 72வதுவரியிலும்''ஸ்ரீசுப்பிர மணிய ஸ்ரீ திருமலய ஹிரண்ய கற்பயாசி சேதுபதி ரெகுநாதன்'' என கைச்சாத்திட்டு வரையப்பட்டுள்ளது.

பொதுவாக இந்தச் செப்பேடு தமிழும் கிரந்தமும், தெலுங் கும் கலந்த மணிப்பிரவாள தொடராக வரையப்பட்டுள்ளது. இதைச் செப்பேட்டில் காணப்படும், ஊடுபிலாறு (வரி.26) குளக் கால் (வரி. 26) குடியிருப்பு (வரி. 34) பொருத்துக்கரை (வரி.35) மடைக்கண் (வரி. 36) ஊரது புரவு (வரி. 38) என்பன இந்த வட்டார வழக்குகள்.

## செப்பேடு எண் 86

(நகல்)

1. சுபஸ்ரீ ஸ்ரீமது மகாமண்டலேசுபரன் அரியாயிர தள விபா டன் பாசை
2. க்கு தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடா
3. தான் பாண்டி மண்டலப் பிரதாபனாரியான் சோள மண் லப் பிறதி
4. ஷ்ட்டாச்சாரியான் தொண்ட மண்டலப் பிறசண்டன் ஈழமுங் கொ
5. ங்கும் யாள்பாணமும் அளித்து கெசவேட்டை கொண் டருளி
6. ய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீ
7. ரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் தொட்டியர் மோகந்தவிள்த் தான் துலு

---

நூலாசிரியரால் இந்தச் செப்பேடு இராமநாதபுரம் அரண் மனையில் கண்டெடுக்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட வரலாற்று ஆவணக்குழுவிற்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது, இப்பொழுது இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகத்திலுள்ளது.

8. க்கர் மோகந்தவிள்த்தான் எட்டன் தலையில் கட்டும் விருதைக் கா
9. விலே கட்டுங் கலங்காத கண்டன் தாலிக்கு வேலி சத்தி ராதிகள் மு
10. ண்டன் சொரிமுத்து வன்னியன் சேதுகாவலன் அடைக் கலங்
11. காத்தான் சேதுமூல துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தர
12. ன் சிவபூசா துரந்தரன் இரணிய கெர்ப ரவிகுல திலகன் சாமித்துரோக
13. தர் வெண்டயம் விளங்கும் இருதாளினான் அனுமக் கொடி கெருட
14. டக்கொடி சேவல்க்கொடி உடையான் தொண்டியன் துறை
15. காவலன் செம்பிவள நாடாதிபன் பூலோக தெய்வேந்திரன் வில்லு
16. க்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் குடைக்கு கர் ணன் பஞ்
17. ச பாணாவுதாரன் வீரலட்சுமி விசைய லட்சுமி ராச லெட்சுமி சா
18. ம்பிருட் செயலட்சுமி அஷ்ட்ட லட்சுமி வாசன் பஞ்சவர்ணப் பாவடை
19. விருதினான் செங்காவிக்கொடி உடையோன் மலைக்கல ங்கினும்
20. மனங்கலங்காத கண்டன் சிவசமய பரிபாலநன் அசுபதி கசபதி, நரபதி
21. தேவை நகராதிபனான ரகுநாதசேதுபதி ராச்சிய பரிபாலன
22. ம் பண்ணியருளா நின்ற கலியுகம்-4762 சாலிய வாக
23. ன சகாப்தம் 1613 மேல் செல்லா நின்ற பிரசோ ற்பதி
24. வைகாசி மீ° 17ந் தேதி இளமநேரியிலிருக்கும் நயினுகுட்டி சேருவை கார
25. னுக்கு வலையரில் ராதான் கிளை பூச்சிக் கிளை பட்டங் கட்டி கிளை வீரப்பிள்ளை கிளை படை

26. யன்கிளை அப்வன்கிளை கோணாண்டி கிளை வதி பிடிங் கி கிளை இந்த எட்டு
27. க்கிளையிலுஞ் சேர்ந்த மூப்பனார் வேளாந்தரவை பெரிய வீரமூப்பன் சி
28. ன்னா மூப்பன் குசவன்குளி அரங்கக் கிளவன் மடத்துடை யான் மூப்பன் நெ
29. டு உடையான் மூப்பன் சக்கரைக் கோட்டை வீராண்டி மூப்பன் கருப்ப
30. ட்டிக் கிளவன் காஞ்சானு ரணி காஞ்சான் மருங்கன் பெரு வயல் பிச்
31, சமூப்பன் சிட்டாரு கோட்டை வீரமூப்பன் அத்தியூத்து பெரிய குப்பன்
32. மூப்பன் சின்னக்குப்பான் மூப்பன் ஆண்டிக் கறுப்ப மூப்பன் அளகாங்
33. குளம் நொண்டி முட்டக் கிளவன் ராமமூப்பன் மெய்யமூப் பன் ஆத்தாங்கரை
34. ச் சின்னச் சருக்கான் பெரிய சருக்கான் கறுத்தப்பயல்மா காளி எண்மண்ட
35. லங் கொண்டான் தில்லாமூப்பன் கோடிக்காக் கிளவன்
36. தாமரைக்குளம் நம்பியாமூப்பன் காரிதின்னி குப்பா மூப்பன் இருட்டூரணி
37. ஒச்சிமூப்பன் ஓய்யாமூப்பன் பட்டாணி மூப்பன் உடையா மூப்பன் குசமூ
38. ப்பன் ரெட்டையூரணி அரங்கமூப்பன் புண்ணிய மூப்பன் பிலிச்சான் மூப்
39. பன் வெள்ளையமூப்பன் நாகாச்சிக் கறுப்ப மூப்பன் கோ னுடையாமூப்ப
40. ன் வேதாளை தூங்கமூப்பன் சுந்தரதாசி மடம் சடையமூப் பன் ராமீசுரம்
41. மாகாளி மூப்பன் ராமுமூப்பன் நினைக்குளம் ராக்க மூப்பன் மோருக்குள

42. ம் வலைக் காவல்கார மூப்பன் ஏறுபடி அங்கமூப்பன் மடத்துடையா மூப்ப
43. ன் வேம்பாறு மாரி மூப்பன் திருப்பாலைக்குடி கூத்த மூப்பன் ஏனாதி கறுப்பமூ
44. ப்பன் மங்கலக்குடி சின்ன மெய்ய மூப்பன் சுந்தர பாண்டியன் பட்டண
45. ம் துள்ளுக்குட்டி மூப்பன் நாங்களனை வோருந் தங்களுக்கு பளிகாணி
46. க்கு எளுதிக்குடுத்த பட்டைய சாதனமாவது வேளந்தரவை வீரப்
47. பன் மகன் பிள்ளை வீராயி தங்கள் வளவில் சிறு பிள்ளையில் வந்து

இரண்டாவது பக்கம்

48. சேந்திருந்ததி அந்த பெண் பிள்ளை பெரிய பிள்ளையாய் ருதுவ
49. ாகி சாதியில் கட்டிக் குடாமலிருக்கையில் வயத்தில் கெற்பமாயி
50. ருந்தது அதுகாரியம் தாய் தகப்பன் அண்ணன் தம்பி சாதி யார்
51. அரிந்து அந்தப் பெண் பிள்ளை கண்டிச்சு கேள்க்கு மிட
52. த்தில் அந்த பெண் பிள்ளை சாதியாரிடத்தில் சொன்னது நயினார்க் குட்டி
53. சேருவைக் காரனுடனே கூடி வயத்திலே கெற்பம் வந்ததென்று ருசுவுட
54. னே சொன்னாள் அவளைச் சாதியார் தெண்டினை பண்ணி உடனே உயிர்வ
55. தைப் பண்ணிப் போட்டு நயினுக்குட்டி சேருவைக்காரனை பளிக்கு பளி குடு
56. வென்று துரையவர்களது சமூகத்தில் கொண்டு போய் விட்டு துரையவர்
57. களும் ஞாயத்தை விளங்கி நயினுக்குட்டி சேருவைக்காரனை பளிக்குப் பளி குடுக்கச்

58. சொல்லி உத்தரவாகி அந்தப் படிக்கு மரணமான வலைப் பிள்ளையை ஒரு கட்

59. டையிலும் நயினுகுட்டி சேருவைக்காரன் தங்கச்சி உடை யக்காளை ஒ

60. ரு கட்டையிலும் வைத்து தீய் வைத்தார்கள் கட்டையும் மெரியும் வய்த்தே

61. பாதே எங்களுக்கு பளிக்குப் பளி வந்ததென்று உடையக் காளைக் கட்டையை

62. விட்டுக் கிளே இறக்கிவிட்டு நம்மட பிள்ளைக்குப் பிள்ளை வந்ததென்று மூ

63. ப்பமார் ஒப்புக் கொண்டு வலையர் எட்டுக் கிளைக்கு ஜா திப்பிள்ளையென்று

64. பேருங் கொடுத்து எட்டுக்கிளை மூப்பமாருங்கூடி சாதிப் பிள்ளையாகிய உடை

65. டயக்காளுக்கு பளிக்கு எழுதிக் கொடுத்த சாதனப்பட்டை யமாவது யெ

66. ங்கள் சாதியில் கலியாணத்துக்கு ஏழு பணமு அன்பது பாக்கு குறுணி

67. அரிசியும் ஒரு கிடாய் குரங்கும் சடங்குக்கு மூணு பணமும் முப்பது பாக்கு

68. படியரிசியு ஒரு கிடாய் குரங்கும் சடங்குக்கு மூணு பண மும் பதினஞ்சி பாக்கு

69. ம் மூணு படி அரிசியும் ஒரு கோளியும் குடுக்கிறது அதுவும் வலையர்குடி ஒண்

70. ணுக்கு வருஷ கட்டளை ரெண்டு பணமு முணு படி தவசமு கைம் பெண் குடி ஒண்

71. ணுக்கு ஒரு பழைய ஒருபடிதவசமு யிந்தப்படி குடுக்கிறது எங்கள் சாதியி

72. ல் விவகாரம் வியாக்கியங்கள் வந்தா சாதிப்பிள்ளையை வைத்து கொ

73. ண்டு மூப்பமாரு கூடியிருந்து விபகாரங் கேட்டு குத்தஞ் சுமதி யானயிடத்தில் அ

74. பராதம் வாங்கிற பணம் சாதிப்பிள்ளையைச் சாருகிறது புருஷன் ரெண்சாதி

75. ராச்சேர்கையாயிருந்து தீந்து போகிறதா யிருந்தால் தீருவை 60

76. ரண்டாம் தீருவைமுப்பது பணமும் தீருவை சார்ந்த பெயருக்கு குடுத்து விடுகிறது

77. அபராதப்பணம் சாதிப்பிள்ளையைச் சாருகிறது பெயரில் பி(ள்)ளையில்

78. லாமல் போனாலும் தாயாதி பங்காளிகளில்லாமற் போனாலும் உரு

79. மைக்காரர் ஒருவருமில்லாதவர் மரணமானாலும் சாதிப் பிள்ளை முன்

80. கை சிரைத்துக் கருமம் பண்ணுகிறது அவனுடைய ஆஷ்தி சாதிப்பிள்ளையைச்

81 சாருகிறது யிந்தப்படிக்கு நாங்கள் எட்டுக் கிளை வங்கிஷ மூப்பமாருங்கூடிச் சா

82. திப்பி(ள்)ளைக்கு பளிச்சாதனப் பட்டையமெளுதிக் கொடுத்த படியினாலே பட்

83. டையத்தி லெளுதியிருக்கிற பிரகாரமாதித்த சந்திர பிரபையுள்ளவரைக்கு

84. ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இதற்கு யாதாமொருவர் தடங்கல்

85. பண்ணினார்களேயானால் அவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசு

86. வைக் கொன்ற தோஷத்திலும் தனுக்கோடிக் கரையிலே பிராமணவதை

87. பண்ணின தோஷத்திலும் மாதா பிதாவைக் கொன்ற தோஷத்திலும் போக

88. க்கடவாராகவும் இராமனாத சுவாமி துணை உ

# செப்பேடு எண் 87
(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | இராமநாதபுரம் சீமையில் உள்ள மூப்பன் மார்கள். |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இளமனேரி நைனுக்குட்டிச் சேர்வைக்காரன் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம், 1613 பிரஜோற்பதி ஆண்டு வைகாசி மீ 17 (கி பி. 1691) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | வலையசாதி சாதிப்பிள்ளை அங்கீகாரமும், சலுகைகளும். |

இந்தச் செப்பேடு சேதுபதி மன்னரால் வழங்கப்பட்டது அல்ல. என்றாலும் மன்னரது ஒப்புதலின் பேரில் ஏற்பட்ட நியாயத் தீர்வு பற்றிய காரணத்தினால் இந்தச் செப்பேட்டில் கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி மன்னரது நாற்பத்துநான்கு சிறப்புப் பெயர்கள் விருதாவளியாக வரையப்பட்டுள்ளன. சேதுபதி மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்படாத சில சிறப்புப் பெயர்களும் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. அவையாவன.

1. பாண்டிமண்டல பிரதாபனாச்சாரியான்
2. சோழ மண்டல பிரதிஷ்டாச்சாரியான்
3. தொண்டை மண்டல பிரசண்டன்
4. பஞ்சவர்ணப் பாவாடை விருதினான்
5. சிவசமயப் பரிபாலனன்.

இராமநாதபுரத்தையடுத்த வேளாண்தரவை வலையன் வீரமூப்பன் மகள் வீராயி திருமணம் ஆகாத நிலையில் இளமனேரி கிராமம் நைனுக்குட்டிசேர்வைக்காரனை சேர்ந்துகற்பவதியானாள். அதையறிந்த அவளது குடும்பத்தினர் அவளை ''தண்டனை பண்ணி உயிர்வதை செய்துவிட்டனர்'' அத்துடன் அமையாமல் நைனுக்குட்டி சேர்வைக்காரனை சேதுபதி மன்னர் முன் நிறுத்தி இறந்துபோன வீராயிக்கு பழிக்குப்பழி கொடுக்கவேண்டுமென கோரினர். மன்னரும் அவர்களது நியாயத்தை விளங்கி பழிக்குப் பழி கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

அதன்படி இறந்துபோன வீராயினது சடலத்தை ஒரு சிதையிலும், நைனுக்குட்டி சேர்வைக்காரனது தங்கை உடையக் காளை இன்னொரு சிதையிலும் உயிருடன் கிடத்திதீ வைத் தனர். அப்பொழுது முதிய மூப்பன்மார்களது மனம் மாறி சிதையிலிருந்து உடையக்காளை அகற்றி தங்களுக்கு பழிக்குப் பழியாகவும், பிள்ளைக்குப் பிள்ளையாகவும் தங்களது சாதிப் பிள்ளையாக எட்டுக்கிளை மூப்பன் மார்களும் ஒப்புதல் அளித்து அவர்களது சமுதாயத்தில் சாதிப்பிள்ளை யாகிவிட்ட உடையாக் களுக்கு சிலஉரிமைகளையும் சலுகைகளையும் வழங்கும் முகமாக வரைந்தது இந்த இசைவுமுறி பட்டயம் ஆகும்.

மீன்பிடி சமூகத்தைச் சேர்ந்த பரவர்களிடம் ''சாதித் தலைவன்'' இருந்து வருவது ''சாதிப்பிள்ளை'' யுடன் ஒப் பிடத்தக்கது. இன்றைக்குச் சரியாக முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் தங்களது சமூகத்தைச் சேர்ந்த கன்னியொருத்தி களவு மணத்தில் கற்பவதியானதற்காக அவளைக் கொன்றதுடன் அமையாமல் களவு மனத்தில் ஈடுபட்ட காதலனை பழிக்குப்பழி கோரிப்பெறும் நிலையினை அறியும் பொழுது அப்பொழுது நில விய சாதி வெறியின் பயங்கரமான பிடிப்பை புரிந்து கொள்ள முடிகிறது. மேலும், தமையன் செய்த குற்றத்திற்காக தங்கை உடையக்காள் உயிரோடு சிதையில் படுத்து உயிர்விடத் துணிந்த மன உறுதியும் அதன் காரணமாக மூப்பன்மார்களது மனச்சான்று விழித்துக் கொண்டு பெண் கொலை பாவத்திலிருந்து அவர்களை நீக்கி பெண்மைக்கு உயர்வு தந்தோர் வரிசையில் அவர்களை உயர்த்திக் கொண்டதை இந்தச் செப்பேடு தெரிவிக் கின்றது.

வேறு சில செய்திகளையும் தெரிவிக்கிற சாதனமாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது. வலையர் எனப்படும் சமூகத்தினர் இராமநாதபுரம் சீமையில் எந்தெந்த ஊர்களில் வாழ்ந்து வந்தனர் என்பதையும் அவர்கள் சில நாட்களில் எத்தகைய அன்பளிப்புகளை தங்களது சமூகப் பிரதிநிதியான சாதிப் பிள்ளைக்கு வழங்கி வந்தனர் என்பதையும் அவர்களது சமுதாயச் சடங்குகளில் சாதிப்பிள்ளையின் கடமைகள் என்ன என்பதையும் இந்தச் செப்பேடு விபரமாகச் சுட்டுகிறது. மேலும் இன்றைய சில ஊர்களுக்கு முந்தைய பெயர் எவை என்பதையும் இந்தச் செப்பேட்டில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக இன்றையவாளான்தரவை(வேளாண்தரவை)குசவன்குடி(குசவன் குழி),காஞ்சிரங் குடி,(காஞ்சான் ஊருணி),அழகன்குளம்(அழகங் குளம்) எம்மனங் கொண்டான் என் மண்டலமும் கொண்டான்) சுந்தரமடையான் (சுந்தரதாசிமடம்) என்பன அந்தப் பெயர்கள். முந்தைய ஊர்களது பெயர்கள் அடைப்புக் கோட்டுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. இதைப் போன்றே வலையர்களது எட்டு கிளைப் பெயர்களை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. 1. இராதான் கிளை 2. வதிபிடுங்கிகிளை 3. பூச்சிகிளை 4. பட்டங்கட்டிகிளை 5. வீரப்பின்ளைகிளை 6. படையன் கிளை 7. ஐவன் கிளை 8. கோனாண்டிக் கிளை இத்தகைய கிளைப் பிரிவுகள் பற்றிய விபரங்கள் எட்கார் தர்ஸ்டன் என்ற ஆசிரியர் தென்னிந்திய சாதிகள் பற்றி விரிவாக வரைந்த நூலில்‡ கூட காணப்படவில்லை. செப்பேடு குறிப்பிடுகின்ற ஊர்கள் அனைத்திலும் இன்று வலையர்கள் என்ற பிரிவினர் யாரும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ள வலையர்கள் மீன்பிடி தொழிலை உடைய மக்கட் பிரிவினராகும். சேதுபதி சீமையின் இன்னொரு பகுதியான கானாட்டின் காடுகளில் வேட்டையாடும் தொழிலை உடையவர்களைக் குறிக்க வலையர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அவர்கள் இவர்களைப் போல ''மூப்பன்மார்'' விகுதி சேர்ப்பதில்லை. மாறாக ''அம்பலம்'' என்ற விகுதியைத் தங்கள் பெயர்களில் இணைத்துக் கொள்கின்றனர்.

---

Edgar Thurston – Castes Tribes of South India. (1909) Vol. VII page. 273.80.

## செப்பேடு எண். 87

(நகல்)

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1667
2. கலியுகம் 4816 இதின் மேல்ச் செல்லா
3. நின்ற குறோதன ஸூத்தில் உத்திராயணத்தில் சிறிது
4. விலமாக மாஸ்த்தையில் பூறுவ பக்ஷத்தில் சத்தமி
5. யும் ஸத்திவாசரமும் அசுவதி நக்ஷசத்திரமும் சுப பிற நாமயோ
6. கமும் வணிகரணமும் பெற்ற சுபதினத்தில் தேறின விபகார
7. மாவது ராமேசுரத்திலிருக்கும் குருக்கள்மார் சபையாரும்
8. நயினாக்கள் ஆரிய மகாசெனங்களும் லக்ஷ்ச்சுமண தீற்த்தப்
9. பரிஷை விபகாரமாக ராமனாதபுரத்தில் வந்து ராசஸ்ரீ இ
10. ரணிய கெற்பயாசி முத்துக்குமார விசைய ரெகுனாதச் சே
11. துபதி காத்த தேவரவர்கள் சமுகத்தில் கரையேறு மிடத்தில்
12. கர்த்தாக்கள் கட்டளையிட்டது தளகற்த்தம் - வெள்ளை சே
13. ர்வை காரரவர்கள் -ள- பிறதானி ஆண்டி யப்பபிள்ளை ய
14. வர்(வ)கள் பெரிய கட்டளை இராமனாத பண்டார மவர் கள் சி

---

* இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம். இராமநாதபுரம்.

15. த்திர மணிய காறன் இவர்கள் முன்னிலையாகப் பல நடுவ

16. ரையும் வைச்சு கொண்டு முன்பின்தட்டி ஞாயமானபடி

17. தரச் சொல்லி கட்டளையிட்ட பிறகாரத்துக்கு தேறின மத்தியஸ்

18. த்தர் புரோகுதம் சின்னய்யன் உப்பூர் வேதமய்யன் தேவிபட்ட

19. ணம் வெங்குட்டய்யன் ராமீசுரம் திம்மணா சாரியார் தனு

20. க்கோடி யாசாரியார் காமாச்சியப்பன் யெத்து வளிச் சேஷய்ய

21. ன் சுப்பிரமணியக் கவிராயர் கடல்துறை ராமனாத பிள்ளை அளம்

22. கணக்கு இருளப்ப பிள்ளை அட்டவணைச் சுப்பிறமணிய பிள்ளை கவ

23. றை சங்கரன் செட்டியார் திருமலை செட்டியார் வயிரவன் செ

24. ட்டியார் சூரியனாராயண செட்டி வங்காரு செட்டி ராமேசு வரம் ே

25. காமுட்டி ராமு செட்டி அலிப்புலி ராவுத்தர் உத்தமப் பணிக் கன் மயி

26. லேறி னாடான் இந்த மத்தியஸ்த்தர் கூடியிருந்து கோட்டை

27. வாசல்பிள்ளையார் சன்னதியிலே விபகாரம் தேறுகிறது

28. குருக்கள்மார் சபையார் வாய்மொழியும் அவர்கள் முறிந

29. றுக்கும் செயிதி அட்டவணையும் நயினாக்கள் ஆரிய மகா சென

30. ங்கள் முறிநறுக்கும் செயிதி யட்டவணையும் ருட மூலம

31. ாகப் பார்த்து கொண்டு அப்பால் பெரிய கட்டளை ராம னாத பண்

32. டார மவர்கள் அறையிலிருந்த தாம்பிர சாதனப் பிறக

33. ாரம் முன்நூற்றுப் பதினாழு வருஷம் தேறின செயிதிய

34. ளும் பரிஷை பட்டமார் எழுதிக் குடுத்த செயிதியட்ட வணை
35. யும் முன் —ா— திருமலைச் சேதுபதி காத்த தேவரவர்கள்
36. நாளையிலே பெரிய தெய்வ கன்னியா பிள்ளை யவர்கள்
37. முன்னிலையாக குருக்கள்மார் சபையாருக்கும் பரிஷை ப
38. ட்டமாருக்கும் தெரிந்த பத்திரத்துச் செயிதியும் — ா — பெரிய அய்யா
39. அவர்கள் கற்த்தாக்கள் நாளையிலேயும் —ா— விசைய ரெகுனா
40. தச் சேதுபதி காத்த தேவரவர்கள் நாளையிலேயும் நடந்து வ
41. ந்த காரியங்களுமெல்லாம் எத்து வெளிச் சேஷய்யன் எ
42. ளுதிக் குடுத்த செய்தி யட்டவணையும் இதுக ளெல்லாம் வாசித்து
43. ப் பார்த்து இதுகளிலேயிருத்த விபகாரங்க ளெல்லாம் தெ
44. ரிந்து கொண்டு தேறினது லஷ்ச்சுமண தீர்த்தக் கரையி
45. ல் முன்பின் நடத்த ஞாயம் குருக்கள் மார் சபையாரகை
46. யாடிவந்த மறாஷ்ட்டப் பரிஷையளும் சத்திரியப் பரி ஷை யளும் கு
47. ச்சரியார் வாணியப் பரிஷையளித்த வகையதாயங்க சகலமுமினி
48. குருக்கள்மார் சபையாரே அனுபவிக்க கட வராகவும்கொங் கணியப் பரி
49. ஷை இந்த வகை யாதாயங்கள் குருக்கள் மார் சபை யாருக்குப்
50. பாதியும் மடத்துக்குப் பாதியும் பரிஷைபட்டமார் கூட்டி வந்து கையா
51. டிவருகிற பரிஷையளுக்கெல்லாம் பத்துக்கு ரண்டு தீர்வை யும் இந்த
52. வகைப் பரிஷையாதாங்களெல்லாம் யெப்போதும் அற்ற படிக்கு கு

53. ருக்கள்மார் சபையாரே கையாடியனுபவித்து கொள்ளு கிறது
54. இந்தப் பரிஷை யாதாயங்களை யதகடி பண்ணிநயினார் கள் ஆ
55. ரிய மகாசனங்கள் கையாடின ஆதாயங்களெல்லாம் குருக்கு
56. மார் சபையாருக்குக் குடுத்து விடுகிறது இனிமேலும் யாதாமொரு
57. வன் அதற்குண மாகரேகைப் படுத்தாமல் கையாடின ஆதாயங்
58. களும் குருக்கள்மார் சபையாருக்குக் குடுத்து அரண்மனை க்கு ஆயிரத்திரு நூ
59. றுபொன் அபாராதமும் யிறுத்துக் கட்டளை இட்டபுத்தி யும் கேழ்க்க கடவ
60. ராகவும் என்று விபகாரம் தேறினபடியினாலே யிந்தப்படி
61. க்குச் சந்திராதித்தவரை சந்ததிப் பிறவேசம் இந்தப் பரிஷை
62. யாதாயங்களெல்லாம் குருக்கள்மார் சபையாரே ஆண்டனு
63. பவித்துக் கொள்ளக் கடவராகவும் இதிலே குருக்கள்மார் சபை
64. யார்பங்கு பாகம் தீருகிற போதெல்லாம் சங்கரக் குருக்கள்
65. முன்னிலையா தேர்ந்து சங்கரக்குருக்களுக்கு ரண்டு பங்கு மற்றகு
66. ருக்கள்மார் சபைக்கெல்லாம் சனத்துக்கு ஒரு பங்குமாகப்
67. பற்றிக் கொள்ளுவராகவும் யிந்தத் தாம்பிரசாதனப் பிற காரத்து
68. க்கு யிந்தப் பரிஷையாதாயங்களெல்லாம் குருக்கள்மார் சபை
69. யாரைச் சாரப்பண்ணி நடத்தைபண்ணி கொண்ட பேர்
70. ள்கெங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் கோடி சிவலி

71. ங்கப் பிரதிஷ்டை பண்ணின பலனும் கோடி கன்னிகா
72. தானம் பண்ணின பலனும் கோடி அக்கிரகாரம் பிறதிஷ்
ட்டை
73. பண்ணின பலனும் அடைய்வராகவும் யிந்தத் தாம்பிற
சாதன
74. பிறகாரம் சங்கரகுருக்கள் மேல்பங்கு குருக்கள்மார் சவை
75. யாருக்கு உதவியாயிருந்த உதையப் பெருமாளுக்கு ஒரு
பங்
76. கும் சாமிக்கு ஒருபங்கும் புத்திரபவுத்திர பாரபரியந்தம்
77. அனுபவித்து வருவாராகவும் யிந்த தாம்பிற சாதன
78. த்தை யடியளிச்சவன் கெங்கைக் கரையிலேயும் சேதுவி
79. லேயும் கோடி கோ கத்நி பிறம்மகத்தி பண்ணினதோஷத்தி
80. லேயும் தன் மாதா பிதாவையும் குருவையும் கொன்ற
தோ
81. ஷத்திலேயும் போகக்கடவாராகவும் யிந்த சாதன மெழு
82. தினேன் ராயசம் முத்தரசுபிள்ளை மகன் றாமலிங்கம்
எழுத்து
83. படிக்கு தாம்பிரசாதனம் தீர்ந்தது ஈசுரமூர்த்தி ஆசாரி
84. மகன் குழந்தை வேல் - ராமலிங்கம் துணை
85. ஆவத்தாருணன் உமாபதி சிதம்பரன் சுந்தரேச நயினரார்

## செப்பேடு எண் 87

(விளக்கம்)

1\. செப்பேட்டின் காலம் : சகம் 1667 குரோதன வருடம் கி.பி. 1745

2\. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் குருக்கள்மார் சபையாருக்கும், ஆரிய மகா னங்களுக்குமான பிரச்சனை பற்றிய தீர்ப்பு உரை.

இராமநாதபுரம் மன்னர் முத்துக்குமார விசைய ரெகுநாத சேதுபதி திருமுன்னர் கொண்டு வரப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்புரையை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இராமேசுவரம் லெட்சுமண தீர்த்தக்கரை வருவாய்களை அனுபவிக்கும் உரிமை சம்பந்தமாக இராமேசுவரம் குருக்கள் மகாசபையாருக்கும் நைனாக்கள் ஆரிய மகாஜனங்களுக்கும் இடையில் எழுந்த இந்த உரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக ஒரு குழுவினை மன்னர் அமைத்தார். வேத சாத்திரங்களையும் வியாகரண தருக்கத்தையும் மனுநீதியையும் கற்றுத் தேர்ந்த இந்தச் சான்றோர்களின் பிரச்சினையைத் தீர்க்க நியமனம் பெற்ற குழுவில் கீழ்க்கண்ட சாதாரண மக்கள் அங்கம் வகித்தது விந்தையாக இருக்கிறது. நியாயம் என்பது சகல மக்களுக்கும் பொருந்துவதுதானே!

1. புரோகிதம் சின்னையன்
2. உப்பூர் வேதமையன்
3. தேவிபட்டினம் வெங்கட்டையன்
4. இராமேசுவரம் திம்மன் ஆசாரியார்
5. தனுஷ்கோடி ஆசாரியார்

6. காமாட்சியப்பன்
7. எத்துவெளி சேஷய்யன்
8. சுப்பிரமணியன் கவிராயர்
9. கடல்துறை இராமநாதபிள்ளை
10. அளம் கணக்கு இருளப்பபிள்ளை
11. அட்டவணை சுப்பிரமணியபிள்ளை
12. கவரைசங்கரன் செட்டியார்
13. திருமலைச் செட்டியார்
14. வைரவன் செட்டியார்
15. சூரியநாராயணன் செட்டி
16. வங்காரு செட்டி
17. கோமுட்டி ராமு செட்டி
18. அலிப்பிலி ராவுத்தர்
19. உத்தமபணிக்கன்
20. மயிலேறி நாடான்

இந்த இருபது நடுவர் குழுவுடன் தளகர்த்தன் வெள்ளையன் சேர்வைக்காரர், பிரதானி ஆண்டியப்பபிள்ளை, பெரிய கட்டளை இராமநாத பண்டாரம், சித்திர மணியக்காரன் ஆகிய நால்வரும் இந்த ஆய்வில் முன்னிலை வகித்தனர். இவர்கள் ராமநாதபுரம் கோட்டை வாசலில் உள்ள பிள்ளையார் சன்னதியிலமர்ந்து இரு தரப்பினரது வழக்கினைக் கேட்டனர். சம்பந்தப்பட்டஆவணங்களைப் பரிசீலனை செய்தனர். இதனை விவகாரம்''தேறுகிறது'' என வரி எண் 27ல் வட்டார வழக்காகக் குறிக்கப்பட்டுள்ளது.

முதலில் குருக்கள் மகாசபையாரது வாய்மொழியையும் அவர்கள் வசமிருந்த முறிநறுக்குகளையும் செய்தி அட்டவணைகளையும் பின்னர் நைனாக்கள் ஆரிய மகாஜனங்கள் முறி நறுக்கு செய்தி அட்டவணைகளையும் படித்து பார்த்து பரிசீலித்தனர். இரு தரப்பினரும் இராமேசுவரம் கோயில் சம்பந்தப்பட்டவர்கள். ஆதலால் இராமேசுவரம் கோயில் ஆதின கர்த்தரது வசமிருந்த செப்பேட்டு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன. அவைகளின்படி இந்த வழக்கிற்கு முன்னூற்றுப் பதினேழு ஆண்டுகள் முன்பு இருந்து சம்பந்தப்பட்ட செய்திகள், லட்சுமணத் தீர்த்தக்கரை பட்டர்மார் எழுதிக் கொடுத்த செய்தி அட்டவணை, திருமலை

சேதுபதி மன்னர் ஆட்சிக்காலத்தில் பெரிய தெய்வக்கன்னியா பிள்ளை அவர்கள் முன்னிலையாக குருக்கள் மகாசபையாரும். ஆரிய மகாஜனங்களும் ஒப்புக்கொண்டவைகளையும் பின்னர் கிழவன் சேதுபதி. முத்துவிஜய ரெகுநாத சேதுபதி மன்னர்கள் நிகழ்வுகளையெல்லாம் வாசித்துப்பார்த்து அந்த வழக்கின் முழுமையான பின்னணி, முன்னர் வழங்கப்பட்ட நியாங்கள் நடப்பு ஆகியவைகளை நன்கு உணர்ந்தவர்களாக நடுவர்கள் முடிவுக்கு வருகின்றனர்.

அவர்களது தீர்ப்புரையின்படி லெட்சுமண தீர்த்தக்கரையில் குருக்கள்மார் சபையார் கையாடி வந்த மகாராஷ்டிரப் பரிசை, க்ஷத்திரியப் பரிசை குச்சாரியர் (குஜராத்) வாணிபப் பரிசை யாரிந்த வகை ஆதாயங்களை அனைத்தையும் குருக்கள் மார் சபையார் அனுபவிக்கக் கடவர். கொங்காணியப் பரிசை ஆதாயங்களை குருக்கள் மகாசபையார் பாதியும் இராமநாத பண்டார மடத்திற்கு பாதியுமாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இவைதவிர ஆரிய மகாஜனங்கள் கையாடி வருகிற பரிசைகளுக்கு ஆதாயத்தில் இருபது விழுக்காடு குருக்கள் மகாசபையாருக்கு கொடுத்துவிட வேண்டியது[4]. இதுவரை இவ்விதம் செய்யாது ஆரிய மகா ஜனங்கள் அதகடி பண்ணியதை குருக்கள் மாசபையாருக்குக் கொடுத்துவிடுவதுடன் இவ்விதம் மேலும் நடந்துவிடக் கூடாதெனக் கண்டிப்பு செய்ததுடன் தவறுக்கு அரண்மனையாருக்கு ஆயிரத்து இருநூறு பொன் அபராதம் அளிக்க வேண்டியது.

இந்தப்படி குருக்கள் மகாசபையார் பங்கு பாகம் தீருகிற பொழுதெல்லாம் சங்கர குருக்கள் முன்னிலையாக இருந்து வர வேண்டியது. அதற்காக ஆதாயத்தில் குருக்கள்மார் சபையாரது ஜனங்களுக்கு தலைக்கு ஒரு பங்கும் சங்கர குருக்கள் இரண்டு பங்கும் பற்றிக் கொள்ள வேண்டியது என முடிவு செய்யப்பட்டது. இதற்கும் மேல் கூடுதலாக வருகின்ற பங்கில் குருக்கள் மகா சபையாருக்கு உதவி இருந்த உதயபெருமாளுக்கு ஒரு பங்கும் சேரவேண்டியது என நடுவர்களது முடிவு இந்தச் செப்பேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், கல்வியிலும் ஞானத்திலும் சிறந்து, மக்களது வழிகாட்டிகளாக சமுதாயச் செல்வாக்கு பெற்றிருந்த அந்தணர்களுக்கிடையில் ஏற்பட்ட உரிமைப்பூசலை சேதுபதி மன்னர் எவ்விதம் தீர்த்து வைத்தார் என்பதையும், அந்த தீர்வு ஏற்படுவதற்கு நியமனம் பெற்ற நடுவர்கள் வாய்மொழி ஆவணங்கள் அனுபவம் பற்றிய செய்திகளை கி.பி. 1428ல் இருந்து சேகரித்து அறிந்த பிறகு தங்களது முடிவினைத் தெரிவித்துள்ள பாங்கு சேதுபதி மன்னரது நீதித்துறைக்கு சிறப்பளிக்கக் கூடியதாக உள்ளது. ஆதலால் இந்தச் செப்பேடு நீதித்துறை வரலாற்றின் சிறப்பான ஏடாக விளங்குகிறது. மற்றும் வடபுலங்களில் இருந்து வந்த இந்த ஆரிய மகா ஜனங்களது குடியேற்றம் இராமேசுவரத்தில் ஏற்பட்டது. கி.பி. 1428 என்ற முக்கியமான வரலாற்று நிகழ்வையும் இந்தச் செப்பேடு சுட்டாமல் சுட்டுகிறது.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தளகர்த்தர் வெள்ளையன் சேர்வை சேதுமன்னரது மிகச் சிறந்த தளபதி என்பதையும் மதுரை வரலாறு தெரிவிக்கின்றது. மற்றும் அவரது மாமனாரான தளகர்த்தர் வைரவன் சேர்வைக்காரரைப் போன்று இவரும் அறம்பல ஆற்றி அரும்புகழ் கொண்டவர். இராமநாத பண்டாரம் எனக் குறிப்பிட்டிருப்பது இராமேசுவரம் திருக்கோயில் நிர்வாகத்தை அப்பொழுது கண்காணித்து வந்தஆதின கர்த்தரின் பொதுப்பெயர். இன்னொரு நடுவரான சித்திர மணியக்காரன் என்பவர் சேதுபதி மன்னரது சிறந்த அலுவலர் என்பதும் பரமக்குடியைச் சேர்ந்தவர் என்பதும் தெரிய வருசிறது. இன்னும் பரமக்குடியில் *மணியக்காரன் சத்திரம்* என்ற பெயரில் உள்ள அன்னசத்திரம் இந்த அலுவலரை நினைவூட்டுவதாக உள்ளது.

கரையேறுமிடத்தில் (வரி 11) தேறுகிறது (வரி 27) கையாடி வந்த வரிகள் (46, 41, 57) அதகடி (வரி 54) அடியளிச்சவன் (வரி 78) என்பன இந்த வட்டாரத்திற்குரிய சொற்களாகும். வரி.57ல் குறிப்பிடப்பட்டுள்ள சொல் ''ரேகைப் படுத்தாமல்'' ஒரு அருமையான சொல்லாட்சியாகும். கைவிரலைப் பயன்படுத்தி ஒருபொருளைக் கையாளும்பொழுது, நமது பார்வைக்குப்படாமல் நமது விரல்கள், உள்ளங்கை, ஆகியவைகளில் உள்ள சிறு மெல்லிய கோடுகள் அந்தப் பொருளின்மீது படிந்து விடுவது இயல்பு. ஆதலால் தெரியாமல் கூட மீண்டும் தவறு செய்யக்கூடாது என்பதற்கு இந்தச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

## செப்பேடு எண் 88

(நகல்)

1. சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலே சுரன்அரிய ராயிரதளவிபாடன் பாசைக்கு தப்
2. புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்ட நாடுகொண்டு கொண்டநாடு கொடாத
3. ான் பாண்டிமண்டல தாபனாசாரியன் சோழமண்டலப் பிரதிஷ்டாபனாச்சாரிய
4. ன் தொண்ட மண்டலப்பிர சண்டப் பிரசண்டன்யீழமுங் கொங்கும் யாட்பாண
5. தேசமும் எம்மண்டலமுங் கெச வேட்டைகொண்டருளிய ராசாதிராசன் ராசபர
6. மேசுரன் ராச மார்த்தாண்டன்ராச கெம்பீரன்ராசமனோ பயங்கரன் உரி கோல் சுர
7. தானன் அந்தம்பிரகண்டன் சாடிக்காரர்கள் கண்டன்சாமித் துரோகியள் மிண்டன்
8. பரதழவிபாடன் துஷ்டநிக்கிரகசிஷ்ட பரிபாலன் வேதியர் காவலன் பட்டமானங்க
9. ாத்தான் மலைகலங்கிலும் மனங்கலங்காதான் பஞ்சவன்ன ராயராவுத்தமிண்டன்
10. வன்னியராட்டந்தவிழ்த்தான் ஒட்டிய ராட்டந்தவிழ்த் தான்து

---

‡ கள ஆய்வின்பொழுது, இந்தச் செப்பேடு பெருவயல் திரு. எஸ். மீனாட்சி சுந்தரத்திடம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு நூலாசிரியரால் படி எடுக்கப்பட்டது.
வடிவம் :

11. லுக்க தளளிபாடன் துலுக்கராட்டந்தவிழ்த்தான் திலத நுதல்மடமாதர் மடலெ

12. ழுதவருசுமுகன் ளிசையலட்சுமிகாந்தன் காமினிகந்தப்பன் கலைதெரியும் வி

13. ற்பனன் சகலகலைவல்லவன் சண்டபிரசண்டன் சத்தியரிச் சந்திரன் சங்கீதசாயுத்

14. தியவித்தியாவினோதன் வீரவெண்பாமாலை விருதரசர் மணவாளன்இழுஞ்சிங்கத

15. ளந்சிங்கம் பகைமன்னர் சிங்கம் பரராசசிங்கம் ஆத்தில் பாச்சிகடலில் ப

16. ாச்சிதாலிக்கு வேலி தர்மபரிபாலன் அடைக்கலங்கரத்தான் கொட்டமடக்கி வ

17. ய்யாளிநாராயணன் யிவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் துரகரேபந்தன் நாடு க

18. லக்கி தொண்டியந்துறைக் காவலன் தண்டுவார் மிண்டன் வலியச்சருவிமதுரை மா

19. னங்காத்தான் செங்காவிக்குடையான் கெருடக்கொடி அனுமக்கொடி சி

20. ங்கக் கொடி யாழிக்கொடி புலிக்கொடி மீனக்கொடித்துவ சன் வில்லுக்கு

21. விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் பொறுமைக்குத் தர் மன்புகழுக்கு குமுண

22. ன் செம்பிவளநாடன் தேவை நகராதி பன்சேதுகாவலன் சேதுமூலரட்ச

23. ா துரந்தான் ராமனாதசுவாமி காரிய துரந்தரன் ஏழை பங்காளன் எதுத்தார்கு

24. மார்பிலாணி கிரிதுற்க செலதுற்க மதில் துறக விபாடன் சேதுமார்க்க

25. ந்தளவினாச தர்ம பரிபாலனம் பண்ணிவிச்ச ராசமானிய ராசஸ்ரீ ஹிரணிய

26. கெற்பயாசியாகிய ஸ்ரீமது ரவிகுல முத்துக்குமாரவிசைய ரகுநாதசேதுபதி கா

27. த்த தேவரவர்கள் பிறிதிவி ராச்சியம் பரிபாலனம் பண்ணி அருழாநின்ற

28. நாளா வன கலியுகம் 4842ல் சாலிய வாகன சகாத்தம் 1663

29. யிதன்மேல்ச்செல்லாநின்ற துற்மதி ஸ்ரீ சித்திரை மாதம் 1 தேதி ஆதித்தவாரமுந் சத்

30. தமியும் உத்தராட நட்சத்திரமுந் சித்தி நாமயோகமும் மறு வால வாகணமும்ரிஷ

31. பலக்கினமுங்கூடின புண்ணிய தினத்தில் பெருவயல்ரண பலி முருக சுவாமி

32. மியாருக்குச் சேதுராசாவின் பேட்டை பல ராவணபொம்மு செட்டியா

33. ர் மாணிக்கன் செட்டியார் வயிரவன் செட்டியார் சிவசங் கரன்செட்டியார்

34. வயிரவன்செட்டியார் முதலாகிய பலரும் மத்துமுள அன் பத்தாறு தேசத்து

35. ப்பலரும் மகமை நிறுத்திக் கொடுத்த பரிசாவது ரணபலி முருகன் சுவாமிமுருகன்

36. சூற்பகை செட்டி குமரன் என்ற முன்னோர்கள் நூலின் படிக்கு எங்கள் செட்டு விய

37. ா பாரத்துக்குக் குருமூத கர்த்தற்ராகிய ரணபலிமுருக சுவாமியாகச்சே சு

இரண்டாவது பக்கம்

38. வாமியாருக்கு அபிஷேக நெய்வேதனம் திருமாலை திரு விழக்கு முதலாகிய

39. சோடசோபகாரத்துக்கு மண்டபம் கட்டிவிக்கிறதுக்கு திரு விழா உச்சப மண்ட

40. பப்படி தர்மம் நடத்தைக்கும் திருநந்தவன முதலாகிய கயின்கிரியங்களு

41. க்கு மகமைநிறுத்திக்குடுத்த பரிசாவதுசேதுராசாவின் பேட்டையை நோ

42. க்கி வருகிற வியாபாரம் பாக்குமிளகு பலசரக்குசெம்பு சவுளிப் பஞ்சுப்
43. பொதிக்கெல்லாம் பொதிஒன்று அரைப்பணமும் மத்த நெல்லுக்காய்க தானி
44. யம் நவதானியம் வெத்திலை பரித்தி மத்தச்சரக்கு மத்த முள்ள வியாபாரப்
45. பொதியளுக்கும் சீமைக்கும் உள்ளபடிக்கு மகமையும் ரண பெலி முருக சுவா
46. மியாருக்கு மகமை நிறுத்தி தானம் பண்ணிக்குடுத்தபடியி னாலே ஆசந்திரா
47. ற்கஞ் சந்திராதித்தவரை சந்ததிப் பிரவேசமுள்ள வரைக் கும் குடுத்து வர
48. க்கட வோமாகவும் இப்படிக்கு நடந்துவருகிற மகமை தற்மத்து
49. க்கு யாதமொருவர் வாக்கு சகாயம் அற்த்த சகாயம் சரீரசகாயத்
50. துடனேயுங்கூட பரிபாலனம் பண்ணினவர்கள் காசியிலே சேதுவி
51. லேயும் மத்தப்புண்ணிய ஸ்தலங்களிலேயும் கோடிபிரம்ம பிரதிஷ்டையும்
52. கோடி விஷ்ணுப்பிரதிஷ்டையும் கோடி சிவலிங்க பிரதிஷ் டையும் கோடி
53. பூதான கோதான கன்னிகாதான சோடசமஹாதானங் களையும் பண்ணினாலெ
54. ந்தக்சுகிர் தவிஷேச முண்டோ அந்தச் சுகிர்த விசேஷங்க ளையும் அஷ்ட
55. யீசுடரியங்களையும் வங்கிஷாபிற்த்தியுமடைந்து பலசாதகங் களிலேயு
56. ம் எண்பத்தோரு கோடி சொற்கமண்டலங்களிலே உள்ள வைபோகங்களை
57. அடையக்கடவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதாமொருவ ர் அகிதம் பண்ண நினைத்தா

58. லும் அவர்கள் கெங்காதீர்த்திலேயும் ஸ்ரீ ராமதனுக்கோடி யிலேயும் கோடிப் பிரமஹ

59. த்தி கோஹத்தி சிசுஹத்திஸ்திரிஹத்தியும் பண்ணின தோ ஷத்தையும் மாதா பிதாவை வ

60. தை செய்த தோஷத்யையும் அடைந்து அனேக கொடிய ரோகத்தையும் அன்ன வவஸ்தா

61. பந்தத்தையும் லெட்சயும் புத்திரச் சயத்தையும் அடைந்து மறுமையிலேயும் வைவசுத

62. பட்டினத்திலே தென்பாரிசத்தில் இருக்கப்பட்ட விராள கி ராள் உணர்த்த கோச னென்

63. னப்பட்ட இமகிங்கிராயளயிம் படான் தெண்டினையும் இருபத்து எட்டுக்கோ

64. மாவூர்வாதி நரகத்திலோ அழுந்தக் கடவாராகவுமென்று இந்த இருவகைச்

65. சபதங்களையும் இருவகைக்கருமங்களும் மகமையிலே நட த்தினபேருக்கு

66. வாகக்கடவதென்று பலர் சகலரும் சம்மதியாக மனோ வாக்குக் காயகருமங்

67. களுடன் சபிச்சு அவரவர் பெரும்புண்ணியம் ஹஸ்தவிகிதங் களும் வகிச்

68. சு பட்டயங்குடுத்தபடியினாலே மகமைத் தற்மத்தை அபி விற்தியாக ந

69. டத்திவிச்சுக்கொள்ளக்கடவார் களாகவும் இந்தத் தாலிகா சாதனப்படிக்கு தா

70. ம் பிரசாதனம் சிலாசாதனமும் பெருவயல் ரணபலி முருக சுவாமி சன்ன

71. தித் தானத்தார் தலத்தாரும் பண்ணிவிச்சுக் கொள்ளக் கடவாராகவும் இந்த

72. ப்படி சேதுராசாவின் பேட்டைப்பல ஹஸ்தலிகிதம் போட்டு விச்சு ஏடு

73. தொட்டுக்குடுத்தபடிக்கு எழுதினேன் விசுவகுல வங்கிஷத் தில் மதுரை நாலாங்கார்

74. யன் சட்டையப்பன் எழுதினது

## செப்பேடு எண் 88

*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் ; இராமநாதபுரம் சேதுராசன் பேட்டை வணிகர்கள்
2. செப்பேடு பெற்றவர் : பெருவயல் இரணபலிமுருகன் கோயில் தானத்தார்
3. செப்பேட்டின் காலம் : சகம் 1663 துர்மதி சித்திரை (கி.பி. 1741)
4. செப்பேட்டின் பொருள் : மேற்படி கோயிலுக்கு மகமை ஏற் படுத்தியது.

இந்தச் செப்பேட்டின் தொடக்கமாக இராமநாதபுரம் மன்னர் குமாரமுத்து விஜயரெகுநாதசேதுபதியின் விருதாவளி யாக எழுபத்துநான்கு சிறப்புப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முந்தையச் செப்பேடுகளில் கண்டதைத் தவிர்த்து விருதரசர் மணவாளன், யாழிக்கொடி, புலிக்கொடி, மீனக்கொடி துவசன், சேதுமார்க்க தள வினாச தர்மபரிபாலனம் பண்ணிவிச்சராச மானிய ராசா என்ற மூன்று புதிய விருதுகள் கொடுக்கப்பட் டுள்ளன. இவை மன்னரது பெருமையைப் புகழ்வதாகும்.

தேவிபட்டினத்தை அடுத்த பெருவயல் கிராமத்தில் தள வாய் வயிரவன் சேர்வைக்காரரால் நிர்மாணிக்கப்பட்டது இரண பலி முருகையா திருக்கோயிலாகும். இந்தக் கோயிலின் பூஜை முதலியவைகளுக்கு அதே தளவாய் முதலூர், சக்கிரவாளநல்லூர் சதுர்வேதமங்கலம், பாம்பாட்டி, பாஞ்சார், ஆகிய கிராமப் பகுதி களை சொந்தத்தில் வாங்கி தானம் வழங்கியிருந்தார். சேதுபதி மன்னரும் சாமிப்பட்டணம், கலையனூர், கிராமங்களையும், சிவ கங்கை மன்னர், முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவர்

திருவெற்றியூர் கிராமத்தையும் அறந்தாங்கித் தொண்டமான்கள் அவத்தானிகோட்டை, சிரத்தானியேந்தல் ஆகிய ஊர்களையும் திருநெல்வேலிப் பாளையக்காரர் முத்துவிஜய சொக்கலிங்க நாயக்கர் நம்பிபுரம் உட்பட்ட பன்னிரெண்டு ஊர்களையும் இதே கோயிலின் கைங்காரியங்களுக்காகத் தானம் அளித்துள்ளனர். இதனை தொடர்ந்து இராமநாதபுரம் பேட்டை வணிகப்பெரு மக்களும் இந்தக் கோயில் பயன்பாட்டுக்கு மகமை ஒன்றை ஏற்படுத்தியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

இராமநாதபுரம் பேட்டைக்கு வரப்பெறுகின்ற பஞ்சு, பாக்கு மிளகு, பலசரக்கு செம்பு ஆகியவைகளுக்கு பொதி ஒன்றுக்கு அரைப்பணமும் நெல், நவதானியம், வெற்றிலை, பருத்தி முதலியவைகளுக்கு உரிய மகமையும் வசூலித்து இந்தத் திருக் கோயிலின் அபிஷேக, நெய்வேதன, திருமாலை, திருவிளக்கு, திருவிழா, திருநந்தவனம், ஆகியவைகளுக்கு வழங்குவது என்ற இந்த வணிகர்களது இசைவுமுறியாக இந்தச் செப்பேடு அமைந் துள்ளது.

முந்தைய நூற்றாண்டுகளில் சேதுபதிகளது அரசப்பிரதிநிதி யாக விளங்கிய வணிக நாயகர் சீதக்காதியின் முயற்சியினால் ரெகுநாதக் கிழவன் சேதுபதியின் ஆட்சியில் செழுமை பெற்ற கடல் வாணிகமும், உள்நாட்டு வணிகமும் முத்துக்குமார விஜய ரெகுநாத சேதுபதியின் ஆட்சியிலும் வளர்ந்துவந்துள்ளதை இந்தச் செப்பேட்டிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. பாக்கு, மிளகு ஆகிய பொருள்கள் இலங்கையிலிருந்தும், செம்பு டச்சு வணிகர்களால் வெளிநாட்டிலிருந்தும் கீழக்கரை, தேவிபட்டினம் கடல் துறைகளின் வழியாக இறக்குமதி செய்யப்பட்டன. கீழக் கரை சொக்கநாதசுவாமி கோயில் குருக்களுக்கு இரெகுநாதக் கிழவன் சேதுபதி ஏற்படுத்திய மகமையிலும் (செ. எண். 25) இதே பொருள்கள் கீழக்கரை துறைமுகத்தில் கையாளப்பட்டது ஒப்புநோக்கத்தக்கது.

மகமை ஏற்படுத்திய வணிகப் பெருமக்களின் இயற்பெயர் களிலிருந்து அவர்கள் தெலுங்கு வைசியர், தமிழ் ஆயிரவைசிய செட்டியார்கள் என தெரியவருகிறது. பயில்கின்ற மொழியி னாலும் அன்றாட பாவனைகளிலும் இந்த வணிகர்களிடையே வேறுபாடுகள் மிகுந்து இருந்த பொழுதிலும், சமய நம்பிக்கையில் மிகுந்த ஒருமைப்பாட்டுடன் இயங்கி வந்தனர். ஹாலாஸ்ய

புராணத்தில் மதுரைத் திருக்கோயிலின் இறைவர் சொக்கநாதர் நிகழ்த்திய அறுபத்திநான்கு திருவிளையாடல்களில் ஐம்பத்தி யேழாவது திருவிளையாடலில் திருநீலகண்டசிவனார் தமது திருக்குமரன் குமரவேலை மதுரை நகர் செட்டி ஒருவரது மூங்கைப் பிள்ளையாக அவதரிக்கச் செய்யுமாறு சபித்த கதை யினை இந்தச்செப்பேடு நினைவு கூர்கிறது. ஆதலால் இந்த வணிக மக்கள் முருகப்பிரானை தங்களது செட்டு வியாபாரத் துக்கு ''குருமூர்த்தக் கணத்தவர்'' என இந்தச்செப்பேட்டில் குறிப்பிட்டுள்ளனர். (வரிகள் 36, 37).

இந்த தர்மத்தை நிறைவேற்றி வைத்த சுகிர்தத்திற்கும் அகிதம்பண்ண நினைத்தவர்களுக்கும் முறையே ஏற்படும் பலன் களையும், பாதகங்களையும் இந்தச் செப்பேடு சுட்டிக்காண் பித்தபோதிலும் இந்த மகமை இன்று - ஏன் பல நூற்றாண்டு களாகப் பின்பற்றப்படவில்லை. சமயத்தை வாழ்க்கையின் செம்பாகமாகக் கொண்டொழுகும் பண்பு மக்களிடம் மறைந்து விட்டதும் அதனை ஊக்குவித்த அரசியலமைப்பு நாளடைவில் அடியோடு மாறிவிட்டதும் இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இன்னொரு செய்தியையும் இந்தச் செப்பேடு குறிப்பிடு கின்றது. பொதுவாக செப்பேடுகளைத் தயாரிப்பதற்கு முன்னர் அதில் வரையவேண்டிய பொருளை முதலில் ஏட்டில் எழுதி படித்துக்காண்பித்து, சம்பந்தப்பட்டவர்களது இசைவினைப் பெற்ற பின்னரே அதனை வரைந்தனர் என்பதாகும். இந்தச் செய்தியை ''தங்களது இருகரங்களாலும் தொட்டுக்கொடுத்த பின்னர்'' என்ற செப்பேட்டு வரி தெரிவிக்கின்றது.

## செப்பேடு எண் 89

(நகல்)

1. நந்தன வருசம் ஆவணி மாசம் 17தேதி இராமேசுவரத் திலிருக்கும் றாமநாதக
2. வாமி கோவில் பூசகாள் குருக்கள் சபையார் நயினா ஸ்தானிகாள் மு
3. தலான ஆரியமகாஜனங்கள் 512 பேர்களுக்கும் தேவர் கட்டளை
4. ரெகுநாத குருக்கள் உடையார் தேவர் கட்டளை பெரிய நயினானும் நா
5. த அய்யர் உடையவர்கட்டளை வாமதேவ குருக்கள் நாயக்கர் கட்ட
6. ளை ஈசுரபட்டர் பிரதானிகட்டளை ஆதிநாராயணபிள்ளை முதலிய பெ
7. ரியதனக்காரருக்கும் பிச்சகட்டளை இராமநாதபண்டாரம் யெளுதிக்குடு
8. த்த உடன்படிக்கை சாதனம் அசரத்து நவாபு அவர்கள் திவானி யத்தில் சே
9. துபதி ஆண்டவர்களை பிடித்து கொண்டுபோயி திருச் சுனாப்பளி
10. யில் வைத்துக்கொண்டு சீமை வுரோட்டுக்கு கட்டிக் கொண்டதிநாலே
11. கோவில் பூசைகளும் கட்டளைகளும் நடவாமல் போனதால் நீங்கள்
12. யெல்லோரும் ஒன்று சேர்ந்து சென்னபட்டணம் போயி ரா ரா திவா

13. ன் ராயரவர்களையும் அசரது நவாபு அவர்களையும் கண்டு பேட்டி செயி

14. வித்து கோவில்கட்டளை கிறாமங்களை யென்னிடம் சாரி செய்ய வேணு

15. மென்று சேதி அட்டவணைமூலம் தெரியப்படுத்திக் கொண்டதால் எங்

16. கள் நினைப்புபடி யென்னிடம் கிராமங்களை விடும்படி பரவானாவும் மகா

17. சனங்களுக்கு கவுல் நாமாவும் குடுத்திருப்பதால் யெஸர் கட்டளை கிறாம

18. வரும்படிகளையும் இன்னம் வரக்கூடிய நிலங்களின் வரும் படியை

19. யும் மற்றயெல்லா வரும்படியும் நான் ஒரே மொத்தமாக கசானா

20. களஞ்சியம் சேர்ப்பிவித்து சப்திக்கு முன் திருவாபரண முதலியது கருவூ

21. லம் தான கணக்குப்படிக்குள்ள சொத்துக்கள் தானி காளிடமும் யாத்தி

22. ரை சனங்கள் றாசாக்களாலும் சுவாமிக்கி குடுக்கப்பட்டப் பாத்தரம் பட்

23. டு பரிவட்டம் வாகனம் விறுது ஆனை குதிரை பசுமாடு முதலியதும் கோ

24. வில் கணக்கு சொக்கப்ப றாச சேகரறாசர் கட்டளை கல் வெட்டுப்படியும் விசு

25. வநாத நாயக்கர் வீரப்பநாயக்கர் அவர்கள் கட்டளைப் படி கெங்கை காவ

26. டி 5-3, 5-2 பங்கில் சுவாமி பங்கையும் உண்டியல் காணிக்

27. கையும் முத்திரை கணக்கு 'தாக்கல்படிக்கு உள்ளதையும் வாயி மூப்புக்காரணி

28. யர்ச்சகரான நயினார் தானிகளும் வைத்து பராமரித்தும் சுவாமி நை

29. வேத்தியம் முதலியன கையிங்கிரியம் செய்யு மிறாசிதார் களை வேலை தாள்

30. வன்னியில் கண்டித்தும் கோ ில் சொத்துக்கள் யிருப்பி டங்களில் தா
31. னிகாள் முத்திரை போட்டு வந்த படிக்கும் கட்டளைக் காரர்களால் கொடுக்கும்
32. சாமன்களை ஆரிய மகாசனங்கள் மிராசுதார நயினா ஸ் தரனி
33. காள் முன்னுக்கு வாங்கி சுவாமிக்கு! உபயேசகப்படுத்திக் கட்டளை கணக்கி
34. ல் யேர்ப்பட்ட சுவந்திரம் ஊதியங்களை பெற்று கொண் டும் பரிவட்டம்
35. கட்டி மரியாதை செய்துவந்ததில் கட்டளை சுவந்திரம் ஊதியம்
36. ஒண்ணாகிவி'்டதால் நயினா தானிகாள் யெல்லாரும் இருந்து
37. யேர்படுத்திய கணக்குப்படி வருஷம் 1க்கு திருக்கை மருக் கை வராக
38. ன் பொன் 1000 பொன்னும் சுவந்திரம் முதலிய்தும் பெற் றுக்கொள்ளவே
39. னுமென்று ம ராரா நாயக்கர் கட்டளை கோவில் காரியம் ஈ
40. சுரபட்டர் இடத்திலிருந்த சொத்துக்களும் கிராமங்களும் யென்
41. னிடம் சேர்ந்துவிட்டதால் அவர்களை மாமுல்படி கோவில் காரி
42. யம் நயினாஸ்தானிகள் கூடயிருந்து பார்த்தும் பெரிய அறை
43. யில் சகல அபிஷேக சாமான்களையும் காவடிகளையும் பார்வையி
44. ட்டு அபிஷேகம் செய்ய சீட்டுக்குடுக்கவேணுமென்றும் காணிக்
45. கை உண்டியல் முதலானதும் பெரியஅறை மிறாஸ் சேது
46. ப்பண்டாரம் உத்தரவாதத்தில் இருக்கும் அறையும் மத்த சொத்து

47. க்கள் இருக்கும் அறைகளிலும் மத்த முத்திரையுடன் ஈசு பர பட்டர்

48. கோவில் முத்திரையும் போட்டுவர வேணுமென்றும் ஈசுர

49. பட்டர் கட்டளைக்கி யேர்பட்டிருந்த வருஷம் 1க்கு பொன் 120 பணம் 8 ம்

50. சாதமும் பெத்துகொள்ள வேணுமென்றும் பிரதானி க

51. ட்டளை ஆதிநாராயணபிள்ளை பாத்தியத்திலிருந்த கட்ட ளைகளையும்

52. சொத்துக்களையும் சேர்த்து விட்டதால் அந்தக் கட்டளை களில் யே

53. ர்பட்ட வருஷம் 1க்கு பொன் 100 பொன்னும் நாள் ஒன் றுக்கு நாலரை சாதமும் அவர்கள்

54. பெத்துக்கொண்டு கோவில் சகல வரவு செலவு கணக்கு களும்

55. மேல்ப்பார்த்து யென்னுடைய மடத்துக்கு சொந்த தஸ்த ரமும் காப்பா

56. த்தி வரவேணும்மென்றும் நடுவர் முன்னிலையில் நீங்கள் சொன்

57. னதை நானும் ஒப்புக்கொண்டு இந்த சாசனம் கொடுக்க இசவு கு

58. டுத்தபின் யெனக்கு கோவில் விசாரனை தர்மகர்த்தாயெ ன்ற பேரு

59. ம் கன்னியதானமுன்னுக்கு சன்னாசி முத்திரையும் குடு த்து

60. ஆறுகால் பீடத்தில் வைத்து பரிவட்டம்கட்டி சேதுராம னாத பண்

61. டாரம் என்ற பேறும் ராமநாதந் யென்று ஒப்பத்தோடும் கு

62. டுத்தும் ஆதியில் பிச்சைக்கட்டளை மடத்தில் யென்னெயி லிருந்து காரி

63. யம் பார்க்கவும் மடம் சிலவுக்கு வடிச்ச 12 சாதமும் கோவில்

64. கிராமத்தில் நாலரை நிலமும் அனுபவித்துக்கொள்ளும்படி செய் திருப்ப
65. தால் சுவாமி காரியம் தவராமல் பாத்துவரக்கடவேனாக வும் தவ
66. றினால் நடுவர்களும் நீங்களும் செய்யும் பஞ்சாயத்துக் குள்ளாகி
67. யிருப்பேனாகவும் இந்தபடிக்கி நானும் நீங்களும் எங்கள்
68. சந்ததியாரும் யெனக்குப்பின் யென்னைப்போல் நேமுகமாயி வ
69. ரப்பட்ட தர்மகர்த்தா பண்டாரங்களும் வளி வளி பரம்பரை
70. யாக நடந்து கொண்டு வரக்கடவராகவும் உ ராமநாதந்
71. இதற்கு அறியும் சாச்சி ஆவத்தா
72. ரண பிள்ளை பெரியமாயன் ராமலிங்கம் செட்டி இந்த
73. சாதனம் யெளுதிசை அங்கப்ப ஆசாரி அச்சரம்

## செப்பேடு எண் 89

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | இராமேசுவரம் திருக்கோயில் இராமநாத பண்டாரம். |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | ஆரிய மகாஜனங்கள். |
| 3. | செப்பேட்டின் காலம் | : | நந்தன ஆண்டு ஆவணி மாதம் 17ந் தேதி (கி. பி. 28 8-1772) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | இசைவு முறி |

இராமேஸ்வரம் திருக்கோயில் மடாதிபதி இராமநாத பண்டாரத்திற்கும் அந்தக் கோயிலின் பூஜகர், குருக்கள், சபையார், நயினாக்கள், ஸ்தானிகர் ஆகிய மகாஜனங்கள் 512 பேர்களுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

தன்னரசு மன்னர்களாகத் திகழ்ந்த சேதுபதிகளில் கி.பி. 1760 வரை ஆட்சி செய்த செல்லமுத்து ரெகுநாத சேதுபதி ஆண் வாரிசு இல்லாமல் இறந்த பொழுது, அவரது தங்கை முத்துத் திருவாயி நாச்சியாரது மகன் ஓராண்டு கூட நிறைவு பெறாத பாலகன் முத்துராமலிங்கம் சேதுபதி மன்னராக அறிவிக்கப்பட்டார். கி. பி. 1741 முதல் தென் மாநிலங்களின் நவாப்பாக நியமனம் பெற்ற வாலாஜா முகம்மது அலி, மறவர் சீமையும் தமது ஆதிக்கத்துக்கு உட்பட்டது எனக்கூறி சேதுபதியிடம் கப்பம் கோரினார். அவரது கோரிக்கை மறுக்கப்பட்டதால் இராமநாதபுரம் கோட்டையை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் கூலிப்படை உதவியுடன் தாக்கி 3-6-1772ல் மறவர் சீமையை தனது உடமையாக ஆக்கிக் கொண்டதுடன் இளைஞரான சேதுபதியையும் அவரது குடும்பத்தினரையும் திருச்சிக் கோட்டையில் சிறை வைத்தார்.

இந்தக் குழப்பமான நிலையில் சேதுபதி மன்னரது நேரடி நிர்வாகத்திலிருந்த இராமேசுவரம் கோயிலின் பூஜை மற்றும் நடைமுறைகளும் நிலை குலைந்தன. இதனை நீக்கி இயல்பான கோவில் நிர்வாகத்தை ஏற்படுத்த கோயில் பூஜகர்களும் 'கட்டளை தாரர்களும் சென்னைக்குச் சென்று நவாப்பைச் சந்தித்து நவாப்பினது ஆலோசனையையும் அனுமதியையும் பெற்றுத் திரும்பினர். திருக்கோயிலின் நடைமுறைகளைக் கண்காணித்து முறைப்படுத்த இராமநாத பண்டாரம் பொறுப்பேற்றுக்கொண்டு ஆரிய மகாஜனங்களுக்கு எழுதிக் கொடுத்த இசைவு முறியாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது.

ஏற்கெனவே செப்பேடு எண் 2ல் கண்டவாறு இராமேசுவரம் திருக்கோயில் பணிகளில் கி. பி. 1428 முதல் ஈடுபட்டிருந்த பஞ்சதேச பிராமணர்களின் எண்ணிக்கை அப்பொழுது 512 என்றும் அவர்களில் ஈசுபரபட்டர் என்பவர் கோவில் சொத்துக் களைச் சிறப்பான நிலையில் நிர்வகித்து வந்தார் என்பதும் அவர் நாயக்க மன்னரது கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பு உடையவராகவும் இருந்தார் எனத் தெரிகிறது. இந்தக் கட்டளையைமதுரை மன்னர் முத்து வீரப்ப நாயக்கரால் ஏற்படுத் தப் பட்டிருக்கவேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

இதனைப் போன்றே சேதுபதி மன்னர்களது ''தேவர் கட்டளை'' ''உடையாத்தேவர் கட்டளை'' ''பிரதானி கட்டளை'' பிச்சை கட்டளை'' மற்றும் ''விசுவநாத நாயக்கர், வீரப்ப நாயக்கர், சொக்கர் இராஜசேகர ரா்ஜர் கட்டளைகளும் இந்தக் கோயிலில் ஏற்படுத்தப்பட்டிருந்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. மேலும் இந்தக் கோயிலுக்கு வருகின்ற பொன், வெள்ளி நாணயங்கள், ஆகியவைகளை இருப்பு வைப் பதற்குக் கஜானாவும், திரு ஆபரணங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு கருவூலம், நிலங்களின் விளைச்சலை திரு. அமுது ஆகியவைகளுக்குப் பயன்படுத்த களஞ்சியமும் தனித் தனியாக இந்தக் கோயிலில் இருந்த விபரமும் இந்தச் செப் பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இவைகளையும் கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட காணிக்கைகள், உண்டியல்கள், பாத்திர பண்டங்கள், பட்டு, பரிவட்டம், வாகனம், விருது, ஆணை, குதிரை, பசுமாடு, கங்கை நீர்க்காவடி ஆகியவைகளையும் கோயில்

கணக்கரும் நயினார் ஸ்தானிகர் ஆகியோரும் சுவாமி நைவேத்தியம் அபிஷேகம் முதலியவைகளை கோயில் மிராசுதாரர்களும் மேற்பார்வையிட்டு வந்தனர்.

இந்தப்பணிகளைச் செய்வதற்காக அவர்களுக்கு சுவந்திரம் ஊதியம் வழங்கப்பட்டதுடன் சிலருக்கு பரிவட்டம் மரியாதைகளும் அளிக்கப்பட்டு வந்தன. இவைகளைத் தொடர்ந்து வேலை ''தாழ்வண்ணியில்'' (வரிகள் 29, 30) ''சுவாமிகாரியம் தவறாமல் பார்த்து வர'' (வரி 65) கர்நாடக நவாப்பின் ஆணைப்படி இவர்களனைவரும் நடுவர் ஒருவரது முன்னிலையில் கூடி இந்த இசைவுமுறியைத் தயாரித்து இராமநாத பண்டாரம் மேற்பார்த்து வர பொறுப்பு வழங்கியுள்ளனர். பண்டாரத்தின் செலவிற்கு வடித்தசாதம் நாள்தோறும் பன்னிரெண்டும் கோவில் கிராமத்தில் நாலரைக் கிராமமும் அனுபவித்துக் கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவினையையொட்டி இராமநாதபண்டாரத்தை ஆறுகால் பீடத்தில் அமர்த்தி பரிவட்டம் அணிவித்து ''சேது இராமநாதபண்டாரம்'' என்ற புதிய பெயரையும் சூட்டி கோயில் தர்மகர்த்தா என்ற சிறப்பினையும் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்ததாகத் தெரியவருகிறது. இந்த நிகழ்ச்சி கோயிலின் சுவாமி சன்னிதானத்தில் நடைபெற்றது என்ற குறிப்பும் பிச்சைக் கட்டளைக்கு பயன்படுத்திவந்த மடத்தில் பண்டாரம் இருந்து வந்தார் என்ற செய்தியும் இந்தச் செப்பேட்டில் உள்ளது.

சேது நாட்டின் மிக நெருக்கடியான காலத்தில் இராமேசுவரம் திருக்கோயிலின் நிர்வாகம் இயல்பாக இயங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையை விவரிக்கும் ஆவணமாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்த சேது மன்னரது பிடிப்பிலிருந்த கோயில் நிர்வாகம் பண்டாரத்தின் முழுப்பொறுப்பிற்கு மாற்றப்பட்டது இந்தக் கோயில் வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஆகும்.

இந்தச் செப்பேட்டில் காணப்படும் திவானி, ஜாரி அரசரது நவாப்பு. பரவானா, கவுல், தாக்கல், மிராசுதார், மாமூல், தஸ்தரம் ஆகிய சொற்கள். அன்றைய நவாப்பின் ஆட்சிமொழியான பார்சி மொழிச் சொற்கள், மற்றும் ''கட்டிக் கொண்டதனாலே'' ''வரும்படி'' ''நேமுகம்'' ''இசவு'' என்பன இத்த வட்டாரத்து வழக்குகளாகும்.

## தொடர் எண் 90

(ஓலைப்பட்டயம் — நகல்)

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1705 இன்மேல் செல்லா நின்ற சுபகிருது வருசம் மார்கழி மாதம் 27 சுவாமி மா

2. லவநாத சுவாமிக்கும் மரகதவல்லியம்மனுக்கும் மகா சாத்தாவுக்கும் நித்தியம் பூசை மாத உத்சபம் அபிசேக நெய்வே

3. தனத்துக்கு திருப்பணி வேலைக்கும் மகாராச ராச மானிய ரா-இரணிய கெற்பயாசி ரவி குல முத்து விசைய ரெகுநாத சேதுபதி

4. காத்த தேவரவர்கள் கட்டளையிட்ட கிறாமமாவது அனுமந்தக்குடி முன் பூறுவீகமாக நடந்து வந்ததை அரண்மனையில் திறப்பில்

5. சேத்துக் கொண்டு மகா ராஜ ஸ்ரீமானிய ஸ்ரீ முத்துவிசைய ரெகுநாத முத்துராமலிங்க சேதுபதி காத்த தேவரவர்கள் உத்தர

6. வின் பேரில் பிரதானி முத்திருளப்ப பிள்ளையவர்கள் உத்தரவு பண்ணின கிறாமம் வடக்குச்செய்யானேந்தலுக்கு பெருநான் கெல்லையாவது

7. கீள்பார்க் கெல்லையாவது பன்னானேந்தல் குளக்காலுக்கும் மேற்கு மேற்பார்க்கெல்லையாவது சிவந்தான் கோட்டை எல்லைக்கு

8. கிளக்கு வடபார்க்கெல்லையாவது புள்குளத்து யெல்லை க்கு தெற்கு தென்பார்க்கெல்லையாவது தெற்குச் செய்யா தல் பரம்பூரணிக்கு

9. வடக்கு இந்த பெருநான்கெல்கைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை மேல்நோக்கிய மரமும் கீள்நோக்கிய கிண

10. றும் வயப்புச் செப்பிறை சகல சமுதாய பிரபா பாத்திய மும் சுவாமி மாலவநாதர்க்கும் மரகதவல்லி அம்மனுக்கும் மகா சாத்தாவுக்கும்

11. தான சாதனம் பூறுவமாக கட்டளையிட்டோம் ஆதி சந்திராதித்த உள்ளவரைக்கும் அனுபவித்துக் கொள்ளக் கடவதாகவும்

12. இந்த தர்மத்துக்கு யாதாமொருவன் விகாதம் பண்ணின வர் கெங்கைக் கரையில் காராம் பசுவையும் பிதாவையும் குருவையும் கொ

13. ண்ட தோஷபிராத்தியடையக் கடவாராகவும் இதுக்கு சாட்சி வணங்காமுடி பளனியப்ப சேருவைகாரன் ஷ. அனியாபதி அய்யண

14. னம்பலம்

## தொடர் எண் 90

### ஓலைப்பட்டயம்

### (விளக்கம்)

1. பட்டயம் வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி
2. பட்டயம் பெற்றவர் : மாளுவநாதசுவாமி கோயில் அனுமந்தக்குடி
3. பட்டயத்தின் காலம் : சகம் 1705 சுபகிருது மார்கழி மாதம் 27தேதி
4. பட்டயத்தின் பொருள் : வடக்குச் செய்யானேந்தல் கிராமம் தானம்

முந்தைய காலங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களாக ஓலைப்பட்டயங்கள் இருந்தன. இசைவுமுறி, பிடிபாடு, விடுதலை போன்ற பொதுக்காரியங்களுக்கும் கிரயம், போக்கியம், பத்தடைப்பு, காணியாச்சி, உரிமைமாற்றம், தானம் போன்ற நிலம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளுக்கும் ஓலை நறுக்குகள் பயன்படுத்தப்பட்டன. இவைகளில், உரியவர், ஒப்பமும் சாட்சிகளின் கைச்சாத்தும் பெற்றவுடன் அவை ஆவணங்களாகக் கருதப்பட்டன. எழுத்தாணியினால் வரையும் வழக்கத்திலான இந்த ஓலைப்பட்டயங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வழக்கத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அருகி மறைந்து விட்டன. அத்தகைய ஆவணங்களில் ஒன்றைப் பற்றிய செய்தி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

சேதுபதி மன்னர்கள் பொதுவாகத் திருக்கோயில் மடம், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள் ஆகியோருக்கு வழங்கும் தானங்களுக்கும் செப்புப் பட்டயங்களைப் போன்று

ஓலைப்பட்டயங்களைப் பயன்படுத்தினர். இவைகளில் மிகவும் தொன்மையான ஓலைப்பட்டயம் ஒன்று கி.பி. 1326ல் மங்கை பாக குருக்களுக்கு வழங்கப்பட்டதை இராமநாதபுரம் மேன்யுவல் தெரிவிக்கின்றது‡.

இத்தகைய ஆவணமென்று அனுமந்தக்குடி கோயிலில் நல்லநிலையில் இருந்து வருகின்றது. இன்றைய பசும்பொன் மாவட்டத்தில் தேவகோட்டை வட்டம் தேவகோட்டை நகருக்குக் கிழக்கே எட்டுக்கல் தொலைவில் இந்த ஊர் அமைந்துள்ளது. சேதுபதி சீமையில் உள்ள இராமாயண இதிகாசம் சம்மந்தப் பட்ட பல ஊர்களில் இதுவும் ஒன்று. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த வட்டாரத்தில் கணிசமான (எண்ணிக்கையில் சம ணர்கள் வாழ்ந்து வந்த செய்தினை இந்தப் பட்டயம் தெரிவிக் கின்றது. அண்மைக்காலம் வரை இந்த ஊருக்குக் கிழக்கே பனஞ்சாயலிலும் மேற்கே சாத்தப்பள்ளியிலும் அமண் பள்ளிகள் இயங்கி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வட்டாரத்தில் உள்ள நாகர்குளம், நாகாடி நாகாணி, பள்ளி, தர்மம், சங்க மங்களம், சாத்தரசன் கோட்டை, சாத்தனூர், குணபதி மங்கலம் என்ற ஊர்களின் பெயர்கள் சமணர்களது குடியிருப்புகளை நினை வூட்டுபவை. மழித்த தலையினரான இந்த மக்கள் மொட்டைப் பிள்ளைமார் என்ற பிரிவினராக இருந்து நாளடைவில் பரந்த இந்து சமுதாயத்தில் கலந்து விட்டனர். ஆனால் அனுமந்தக் குடியில் மாளுவநாதசுவாமி ஆலய வழிபாட்டினைத் தொடர்ந்து வருகின்ற சில சமணர் குடும்பங்கள் இன்றும் இருந்து வரு கின்றனர்.

ஜீனேந்திரமங்கலம் என்றும் குரவடிமிதி என்றும் இந்த ஊர் முன்னர் வழங்கப்பட்டதை அங்குள்ள கல் வெட்டு (கி.பி 1553) தெரிவிக்கின்றது.‡ இந்தக் கோவிலுக்கு ஏற்கனவே சர்வமானியமாக வழங்கியிருந்த அனுமந்தக்குடி கிராமத்தை ஏதோ ஒரு காரணத்தினால் ''அரண்மனை திறப் பில்'' சேர்த்துக் கொண்டு அதற்குப் பதிலாக வடக்குச் செய்யா னேந்தல் என்ற ஊரினை சேதுபதி மன்னர் இந்தத் திருக்

‡ Rajaram Rao T-Manual of Ramnad Samasthanam (1891) P. 206

‡ A.R.E. 408/907

கோயிலுக்கு வழங்கிய ஆணை இந்தப் பட்டயம் ஆகும்.‡ இதனை வழங்கியவர் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் (கி.பி 1760-95)

இந்த உத்தரவு ஓலைப்பட்டயத்தில் அமைக்கப்பட்டிருப்பதால் மன்னரது விருதாவளிகள், யுகம், ஆண்டுக்கணக்கு போன்றவைகள் இதில் இடம் பெறவில்லை ''ஸ்ரீ ராமஜெயம்'' என்ற தொடக்கச் சொல்லுடன் இரண்டு ஏடுகளில் மன்னரது ஆணை பதினான்கு வரிகளில் வரையப்பட்டுள்ளது. இந்த மன்னரது உத்தரவினை வெளியிட்டுள்ள பிரதானி முத்திருளப்பப் பிள்ளையின் பெயரும் சாட்சிகளாக ஒப்பமிட்டுள்ள பழனியப்பன் சேர்வை அழியாபதி அய்யணன் அம்பலம் என்ற பெயர்களும் இந்தப் பட்டயத்தில் காணப்படுகின்றன. சேது மன்னர்களது சமயப் பொறைக்குச் சான்றாக இந்தப் பட்டயம் இருந்து வருகிறது.

‡ கல்வெட்டு இதழ் எண் 18 : பக்கங்கள் 2-6.

செந்தமிழ்ச் சேது வேந்தர்களது தொண்ணூறு பட்டயங்கள் தெரிவிக்கின்ற சிந்தை இனிக்கும் செய்திகளை இதுவரை இந்தத் தொகுப்பில் கண்டோம்.

ஆலயங்கள், அன்னசத்திரங்கள், அருள்நிறை திருமடங்கள், அடியார்களது புனித இடங்கள் என்ற பல்வேறு அறக்கோட்டங்களும், அவதானிகள், ஆகம பண்டிதர்கள், அருந்தமிழ்ப் புலவர்கள் ஆகிய அறிஞர் பெருமக்களும், சமூக சமுதாய மேம்பாட்டிற்கு அரிய தொண்டு ஆற்ற இந்த அறக்கொடைகள் உறுதுணையாக அமைந்து வந்துள்ளன.

அன்பு உள்ளத்துடனும், அற உணர்வுடனும் மாண்பான மனித நேயத்தை மையமாகக் கொண்டு, இந்த அறக்கொடைகளை வழங்கிய செம்மனச் சான்றோர்களான சேதுபதி மன்னர்கள் கடந்த நானூறு ஆண்டுகால வரலாற்றில் வாழ்ந்து வருகின்றார்கள்.

நன்றி மறவாத தமிழ்மக்களாகிய நாம் அந்த நல்லாட்சியர்களான வரலாற்று நாயகர்களை நெஞ்சத்தில் நொடிப்பொழுதாவது நிறுத்தி நினைவு கூர்வோமாக!

## சேதுபதி மன்னர்கள் தானமாக வழங்கிய ஊர்கள் (செப்பேடுகளில் கண்டவாறு)

*இராமநாதபுரம் வட்டம்*

1. அத்திஊத்து
2. அல்லிக்குளம்
3. இருவரை வென்றான்
4. உத்தரவை
5. காரையடிமுறிவு
6. காவல்பற்று
7. கருக்காத்தி
8. காராம்பல்
9. குத்தக்கோட்டை
10. கோரைக்குளம்
11. கோவிந்தன்ஏந்தல்
12. சாமநத்தம்
13. தம்பிராட்டி ஏந்தல்
14. தினைக்குளம்
15. திருஉத்தரகோசமங்கை
16. பழஞ்சிறை
17. பனையங்கால்
18. பாலை ஏந்தல்
19. புதுக்குளம்
20. பட்டப் பிள்ளான் இரு கூரானேந்தல்
21. மலங்கரை
22. மனையன் ஏந்தல்
23. முத்துப் பேட்டை
24. மாயா குளம்
25. முப்பனை
26. முருக்கடிப் பற்று
27. மேதலை ஓடை
28. மேலச் சீத்தை
29. ரகுநாத மடை
30. வெள்ளா பற்று

*ஆ) பரமக்குடி வட்டம்*

1. அரியக்குடி
2. கங்கை கொண்டான்
3. குளத்தூர்
4. குளவிப்பட்டி
5. கொத்தங்குளம்
6. கொளத்தூர் (அனுமனேரி)
7. கோந்தை
8. கொல்லன் ஊர்
9. செப்பேடு கொண்டான்
10. சேதுகாவலன்
11. தெஞ்சியேந்தல்
12. தியாகவன்சேரி
13. பாண்டியூர்
14. பேய்ராமத்தேவன்ஏந்தல்
15. முதலூர்
16. மும்முடிசாத்தன்
17. வெங்கிட்டங்குறிச்சி

*இ) முதுகுளத்தூர் வட்டம்*

1. ஆதன் கொத்தன் குடி
2. இறையான் ஏந்தல்
3. கருங்குளம்
4. கருங்குளம்
5. கள்ளிக்குளம்
6. கருக்காத்தி

7. கண்ணன் பொதுவன்
8. கருமல்
9. கதையன் ஏந்தல்
10. கள்ளிக் கோட்டை
11. கிழவனேரி
12. கழுநீர் மங்கலம்
13. குமாரகுறிச்சி
14. கொத்தங்குளம்
15. சின்ன நாட்டான
பெரிய நாட்டான்
15. சொக்கானை
16. சேரந்தை
17. நல்லுக் குறிச்சி
18. புளியங்குடி
19. பொசுக்குடி
20. பொட்டல் குளம்
21. மூத்தான் சிங்களம்
22. மத்திவயல்
23. வள்ளைக்குளம்
24. விடந்தை
25. வேலங்குளம்

ஈ கழுதி வட்டம்

1 . மருதங்க நல்லூர்

உ) திருவாடானை வட்டம்

1. அனிச்ச குடி
2. ஆனந்தூர்
3. உரத்தூர்
4. இராமநாத மடை
5. கள்ளக்குடி ஏந்தல்
6. சிங்கன் ஏந்தல்
7. சின்னத் தொண்டி
8. சிறுத்த வயல்
9. சோழியக்குடி
10. கொடிப்புங்கு
11. கோடகுடி கொந்தலான்
வயல்
12. நில மழகிய மங்கலம்
13. பகையணி
14. பால்குளம்
15, பாப்பாகுடி
16. புல்லுருடி
17. சாருவூரன் ஏந்தல்
18. பிராந்தணி
19. முடித்தனாவயல்
20. விளத்தூர்
21. சுந்தரபாண்டியன்
பட்டினம்
22. பொன்னுக்கு மீண்டா
23. சிறுகவயல்
24. கொந்தன் கோட்டை
25. கட்டி சேரி
26. கரிசல் குளம்
27. உடையனாய சமுத்திரம்
28. மருங்கூர்

ஊ) தேவகோட்டை வட்டம்

1. கங்கணி
2. கட்டி யேரி
3. திருப்பாக் கோட்டை
4. நாஞ்சி வயல்
5. நாணக்குடி
6. நாட்டு சேரி
7. களத்தூர்

எ) அறந்தாங்கி வட்டம்

1. சிறுகானூர்
2. நடுவில் கூற்தம்
3. தனியூர்
4. தச்சமல்லி
5. தச்சமல்லி ஏந்தல்
6. பவித்திர மாணிக்க சதுர் வேதி மங்கலம்
7. பிரம்ம தேசம்
8. பூதகுடி
9. பெருங் காடு

ஏ) திருவாரூர் வட்டம்

1. அன்ன வாசல்

ஏ) சிவகங்கை வட்டம்;

1. இடையன் கோட்டை
2. கள்ளிக்குடி
3. கூக்குடி
4. கீழைச்சாரன் ஏம்பல்
5. சூரன் ஏம்பல்
6. திருப்பநாதி
7. பனிவயல்
8. புதுக்கோட்டை
9. மல்லன்ஊரனி
10. மாவூரணி
11. பெரியான் ஏந்தல்

ஐ) இளையான்குடி வட்டம்

1. காக்குடி
2. கணபதி ஏந்தல்

ஒ) அருப்புக்கோட்டை வட்டம்

1. சென்னீலக்குடி

இணைப்பு (ஆ)

## சேதுபதி மன்னர் செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிற ஊர்கள்

1. அச்சங்குளம்
2. அதங்குடி
3. அத்தானூர்
4. அமனிப்புளி
5. அரியாகுடி
6. அரியாங்கோட்டை
7. அருங்குளம்
8. அரையணி
9. அல்லிக்குளம்
10. அழகாங்குளம்
11. அயக்குடி
12. அறந்தாங்கி
13. அம்பட்டன்கோட்டை
14. அக்கிரகாரம் குளத்தூர்
5. அரும்பூர்
16. அத்தி ஊத்து
17. அரியக்குடி என்ற கடம்பவன நல்லூர்
18. அனிச்சகுடி
19. அஞ்சானைக்குத்தி
20. அடப்பன்தாழ்வு
21. அஞ்சுகோட்டை
22. அச்சடிபிரம்பு
23. அயக்குடி
24. அக்கிரமேசி
25. அஞ்சாமடை
26. அகிலாண்டஈசுவரியூர்
27. ஆத்தாங்கரை
28. ஆலங்குளம்
29. ஆயக்குடி
30. இதம்பாடல்
31. இராமனேரி
32. இராமநாத சமுத்திரம்
33. இருட்டூரணி
34. இடையன் கோட்டை
35. இராமநாதபுரம்
36. இராமேசுவரம்
37. இத்தியடிக்காடு
38. உப்பூர்
39. உடையனாத சமுத்திரம்
40. உடையான்குடி
41. உளக்குடி
42. எக்கைகுடி
43. எச்சிக்கோட்டை
44. எடத்துவழி
45. என்மனங்கொண்டான்
46. எட்டிசேரி
47. எட்டிவயல்
48. எழுநூத்தி மங்கலம்
49. எழுத்தணி
50. ஏறுபதி
51. ஒ்டானேந்தல்
52. ஒருவனேந்தல்
53. ஓரூர்
54. கங்கைகொண்டான்
55. கலியாணமாதேவி
56. கள்ளிக்கோட்டை
57. கடம்பவனநல்லூர்
58. கந்தமாதனம்
59. கருங்குளம்
60. கழுநீர் மங்கலம்
61. கண்ணார்குடி
62. காமன்கோட்டை

63. காருகுடி
64. காவனூர்
65. கிடாரம்
66. கீழக்கரை
67. கீழ்விடத்தை
68. குளவிப்பட்டி
69. குழுக்கோட்டை
70. குடவேலி
71. குயவன் குழி
72. குவளன் சாத்தான்
73. குறிஞ்சிக்காடு
74. கொத்தங்குளம்
75. கொடிக்குளம்
76. கோட்டையேந்தல்
77. கொம்பூதி
78. கொல்லனூர்
79. கொள்ளையனேந்தல்
80. கோவூர்
81. கருக்காத்தி
82. கரிசல்குளம்
83. கப்பலூர்
84. கொத்தன் கோட்டை
85. கம்பான் அக்கிரகாரம்
86. கூடல் அழகிய பெருமாள் கோவில்
87. கீழைப் பிராந்தளி
88. குமுலூர்
89. கண்ணனூர்
90. கோவனூர்
91. காத்தானேந்தல்
92. கொடிக்குளம்
93. கண்ணாங்குடி
94. சக்காக்கோட்டை
95. சங்கம்புத்தூர்
96. சம்மட்டியேந்தல்
97. சங்கரன் வலசை
98. சாணான் வயல்
99. சிக்கில்
100. சித்தார் கோட்டை
101. சிறுகுடி
102. சிறைக்குளம்
103. சின்னத்தொண்டி
104. சிறுகானூர்
105. சிறுனாக்குடி
106. சின்னா கைக்குடி
107. சின்னஇலை
108. சீகன்குளம்
109. சுந்தரதாஸ் மடம்
110. சூரன் கோட்டை
111. செட்டியேந்தல்
112. செப்பேடு கொண்டான்
113. சேதுக்கரை
114. சேமனூர்
115. சோத்துக்கலையூர்
116. சோழந்தூர்
117. சுந்தரபாண்டியன் பட்டணம்
118. சிருகவயல்
119. செம்மான் ஏந்தல்
120. சோழந்தூர்
121. சீவனூர்
122. சடையமங்கலம்
123. தச்சமல்லி
124. தனுஷ்கோடி
125. தனிச்சியம்
126. தாமரைக்குளம்
127. திடக்கோட்டை
128. திட்டக்குளம்
129. திருப்பாலைக்குடி
130. தினைக்குளம்

131. திருஉத்திரகோசமங்கை
132. தீயனூர்
133. துக்காகுடி
134. துவார்
135. துறைமுகங்கொண்டான்
136. தெய்வச்சிலை நல்லூர்
137. தேவிபட்டினம்
138. தேத்தாங்கால்
139. தேரிருவேலி
140. தொண்டி
141. திருவெத்தியூர்
142. தத்தங்குடி
143. துர்க்கைவன தாழங்குடி
144. தாளியாரேந்தல்
145. நல்லுக்குடி
146. நரிக்கூட்டி
147. நயினா மரைக்கான்
148. நவலக்குடி
149. நாகாச்சி
150. நாகமங்கலம்
151. நிலமழகிய மங்கலம்
152. நீருகுடி
153. நெய்மேனி
154. புதுக்குடி
155. புத்தூர்
156. பூசாரி கடம்போடை
157. போகலூர்
158. பெரியஇலை
159. பொன்னாதியேந்தல்
160. புதுப்பையூர்
161. பனஞ்சாயல்
162. பெரியான் ஏந்தல்
163. புவனேஸ்வரிபுரம்
164. பள்ளிமடை
165. மங்களக்குடி
166. மஞ்சியூர்
167. மல்லல்
168. மறுத்தொண்டி
169. மறுச்சுக்கட்டி
170. முடித்தனாவயல்
171. முத்துரெகுநாத சமுத்திரம்
172. மெய்யானேந்தல்
173. மெய்யாம்புலி
174. மென்னந்தி
175. மேலக்கரை
176. மேல மடந்தை
177. மேலவிடத்தை
178. மேண்மங்கலம்
179. மொச்சி
180. மோர்குளம்
181. மடந்தை
182. மஞ்சிஊர்
183. போகலூர்
184. புத்தூர்
185. புல்லுவயல்
186. பட்டமங்கலம்
187. புதுக்குடி
188. புல்லூர் மந்தூர்
189. புலியூர்
190. மல்லனூர்
191. மண்டலக்கோட்டை
192. மேலப்பிராந்தணி
193. மயிலுமாரி
194. பண்ணந்தை
195. மறிச்சுக்கட்டி
196. மல்லல்
197. ரங்கநாதபுரம்
198. ராஜசிங்கமங்கலம்

199. ராதானூர்
200. ரெட்டையூரணி
201. ரெகுநாதராய ஆயிபுரம்
202. வளமாவூர்
203. வயறுனேந்தல்
204. வல்லபாடல்
205. விரானூர்
206. விரியான் ஓடை
207. விரையாத கண்டன்
208. வேதாளை
209, வெண்ணெய்க்குடி
210. வேளான்தரவை
211. வெள்ளூர்
212. வேலங்குடி
213. வேம்பாறு
214. வட்டாணம்
215. வெள்ளமுடையான்
216. வாலில்லாபுளி
217. வீரானூர்
218. விழிமங்கலம்
219. வல்லபாடல்
220. வெண்ணத்தூர்
221. வேங்கூர்
222. விளாங்காட்டூர்

# செப்பேடு பெற்றவர்கள் தொகுப்பு

| | அ) ஆலயங்கள் | செப்பேடு எண் |
|---|---|---|
| 1. | இராமேசுவரம் திருக்கோயில் | 1, 3, 4, 8, 9, 10, 18, 21, 31, 37, 38, 49, 65,78,85 |
| 2. | திருப்பெருந்துறை திருக்கோயில் | 16 17,19,22 23,24,43,59 69 |
| 3. | திருஉத்திரகோசமங்கை திருக்கோயில் | 26, 55 |
| 4. | திருப்புல்லாணி திருக்கோயில் | 32, 35, 82, 83 |
| 5. | கோதண்டராம சுவாமி ஆலயம் இராமநாதபுரம் | 39, 44 |
| 6. | எழுவாபுரி ஈஸ்வரர் திருக்கோயில் எழுவன் கோட்டை | 29 |
| 7. | தியாகராஜ சுவாமி திருக்கோயில் திருவாரூர் | 42 |
| 8. | சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குளவயல் | 45 |
| 9. | வேலாயுத சுவாமி திருக் கோயில் பழனிமலை | 51 |
| 10. | முத்துராமலிங்க சுவாமி திருக்கோயில் இராமநாதபுரம் | 73 |
| 11. | சமணக் கோயில் அனுமந்தக்குடி | 90 |
| | ஆ) திருமடங்கள் | |
| 1. | சொக்கநாத சுவாமி மடம் பெருங்கரை | 20 |
| 2. | முருகப்பன் மடம் | 33 |
| 3. | அன்னதான மடம் இராமேசுவரம் | 34 |
| 4. | திருவாவடுதுறை ஆதினமடம் திருவாவடுதுறை | 47,50,71 |
| 5. | சாரு ஊரனேந்தல் மடம் | 60 |
| 6. | நாகாச்சி மடம், நாகாச்சி | 72 |
| 7. | சித்து ரெட்டியார் மடம் வடக்கு நத்தம் | 84 |
| | (இ) சத்திரம் | |
| 1. | தண்ணீர் பந்தல் சத்திரம் வேதாளை | 66 |
| 2. | புருஷோத்தம பண்டித 'சத்திரம் திருப்புல்லாணி | 68 |
| 3. | அழகர்கோயில் சத்திரம் | 81 |
| | (ஈ) பள்ளிவாசல்கள் | |
| 1. | ஈசா பள்ளிவாசல், இராமநாதபுரம் | 52 |

2. சுல்த்தான் சையது இபுராகிம் (வலி) தர்கா 56
3. ஆயில் காபில் தர்கா இராமேசுவரம் 57

(உ) தேவலாயம்

1. சருவேசுர சுவாமி தேவாலயம், முத்துப்பேட்டை 70

(ஊ) அக்கிரகாரங்கள்

1. சுந்தரபாண்டியன் பட்டினம் அக்கிரகாரம் 28
2. அத்திஊத்து கிராம அக்கிரகாரம் 36
3. இராமநாதபுரம் பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சன்னதி அக்கிரகாரம் . . . . . . 46
4. தேர்போகி அக்கிரகாரம் . . . . 58
5. தனுஸ்கோடியில் அக்கிரகாரம் ... 79

(எ) இசைவு முறி

1. இராமேசுவரம் குருக்கள்மார் சபையார் தமிழ் ஆரியர் அனைவரும்... 7

(ஏ) காணியாட்சி

1. இராமேசுவரம் குருக்கள்மார் சபையார் 13
2. இராமநாதபுரம் ராஜராஜ௯ஸ்வரி அம்பாள் நவராத்திரி உற்சவம் நடப்பித்து வர இராமேசுவரம் சங்கர குருக்கள் 14
3. இராநாதபுரம் மாரி துர்க்கை அம்மன் கோயில் நித்திய கட்டளை திருவிழா நடத்த 15
4. கீழக்கரை சொக்கநாத சுவாமி பூஜாகரர் இராமலிங்க குருக்களுக்கு கீழக்கரை துறைமுகப்பட்டின வருவாயில் காணியாட்சி 25
5. இராமேசுவர சங்கர குருக்கள்சேதுபதி மன்னரது கட்டளை நிறைவேற்ற 27
6. இராமேசுவரம் குருக்கள்சேதுபதி மன்னர் குடும்பத் தினருக்கு தீர்த்த புரோகிதம் செய்ய 63

(ஐ) அரசு ஆணைகள்

1. இராமேசுவரத்தில் நடக்கும் குற்றங்களை தண்டிக்க 5
2. இராமேசுவரம் கோயில் கட்டளைகளை நிறை வேற்றுவது சம்பந்தமான விளக்கம் 6, 11

ஒ) தனியார்களுக்கு வழங்கியவை

1. இராமேசுவரத்தில் பஞ்சதேச ஆரியர்களுக்கு 2
2. செவ்வியம் அகோபிலய்யன் 12
3. சோளகை சேர்வைகாரன், இளமனூர் 30
4. கணபதி ஏந்தல் வித்வத் மஹாஜனங்கள் 40
5. ரெகுநாத குருக்கள் இராமேசுவரம் 41
6. கோபால் அய்யன் குமாரன் ராம அய்யன் 48
7. கலாநிதி கோனய்யன் புத்திரன் ராமனய்யன் 33
8. இராமலிங்க நம்பிகள் மகன் மங்களேசுவர குருக்கள் 54
9. மங்களேசுவர குருக்கள் 61
10. வேத விற்பன்னர்கள் 62
11. குளத்தூரான் குமாரன்சுப்பையன் முதலியோர் 67
12. இராம அய்யன் புத்திரன் சுப்பிரமணியன் 77
13. சங்கரலிங்க குருக்கள் ராஜசிங்கமங்கலம் 75
14. கிருஷ்ணயங்கார் இராமநாதபுரம் 76
15. வீரலட்சுமி நாச்சியார் இராமநாதபுரம் 77
16. சர்க்கரை புலவர், கிடாரம் ... 80

ஓ) பிறவகை

1. வலையர்குடி தலைவர்களதுபலிசாதன பட்டயம் .... 86
2. இராமேசுவர குருக்கள்மார்சபையார் ஆரிய மகாஜனங்கள் 87
3. பெருவயல் முருகையா கோயிலுக்கு மகமை 88
4. இராமேசுவரம் இராமநாண்டாரத்தின் பிடிபாடு 89



## இந்த நூலாசிரியரது பிற படைப்புகள்

1. இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் (1984)
2. விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987)
   (தமிழ்நாடு அரசு பரிசும் பாராட்டும் பெற்றது)
3. முஸ்லீம்களும் தமிழகமும் (1988)
   (சென்னை சீதக்காதி அறக்கட்டளையின் மாநில நிலைப்போட்டி பரிசும் பாராட்டும் பெற்றது)
4. மாவீரர் மருதுபாண்டியர் (1989)
   (தமிழ்நாடு அரசு பரிசும் பாராட்டும் பெற்றது)
5. அலிபாத்துஷா காப்பியம் (1991)
   (பதினேழாம் நூற்றாண்டு சிற்றிலக்கியம் முதல்பதிப்பு)
6. மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)


தொடர்பு கொள்ளவும் :

**ஷர்மிளா பதிப்பகம்**

21, ஈசா பள்ளிவாசல் தெரு

இராமநாதபுரம் - 623 501

பரணி அச்சகம், மதுரை-1

*சேதுபதிகளது ஆட்சி :*

இந்த நூற்றாண்டில் இந்த மன்னர்களது ஆட்சியின் பரப்பு தஞ்சை வளநாட்டின் திருவாரூர் வரை விரிந்து பரவி இருந்ததை இராமநாதபுரம் மானுவலில் இருந்து தெரியவரு கிறது. புதுக்கோட்டைக் கல்வெட்டுகளும் சமஸ்தான வரலாறும் திருவாரூர் கோயில் செப்பேடும் இந்த ஆட்சிப்பரப்பிற்கான அத்தாட்சியை உறுதிசெய்வதுடன், சேதுபதி சீமையின் வடக்கு காவல் அரணாக திருமெய்யம் கோட்டை விளங்கியிருப்பதையும் உறுதிசெய்கின்றன.[23] இந்த சேதுபதி மன்னர்கள் மறவர் இனத் தின் பிரதானமான எட்டுக் கிளைகளில் ஒன்றான செம்பிநாட் டுக் கிளையைச் சேர்ந்தவர்கள். செம்பிநாடு என்பது சோழ நாட்டை குறிப்பது ஆகும். தங்களது பூர்வீக நாட்டையும் நாட்டு மன்னர்களையும் நினைவுபடுத்தும் வகையில் அவர்கள் புதிதாகக் குடியேறி நிலைத்து வாழ்ந்த பாண்டி நாட்டுப்பகுதிக்கு ''செம்பிநாடு'' எனப்பெயர் சூட்டி மகிழ்ந்தனர். பன்னிரண் டாம் நூற்றாண்டிற்கு முந்தைய பாண்டி மண்டலத்தில் செம்பி நாடு என்ற நிலக்கூறு இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனைப்போன்றே தங்களது குடியிருப்புக்களுக்கும், அவர்களுடைய பூர்வீக சோழநாட்டு ஊர்ப்பெயர்களையே சூட்டி னர். அந்தப்பெயர்களிலேயே அந்த ஊர்கள் இன்றளவும் வழங் கப்பட்டு வருகின்றன. இராமநாதபுரத்திற்கு அண்மையில் உள்ள *அகளங்கன் கோட்டை, குலோத்துங்க சோழநல்லூர், விரையாத கண்டன், கங்கை கொண்டான், கிடாரம் கொண்டான், கி(ள்)ளியூர், செம்பியன்குடி, சோழபுரம், சோழப்பெரியான், சோழந்தூர், சோழியக்குடி, சோழசேரி, சோழகுளம், சோழந்தி,* ஆகியவை அந்த ஊர்கள்.

ஆனால், இந்தக் காலக் கட்டங்களில் தனி ஆதிக்கம் செலுத்தத்தக்க அரசு எதுவும், இந்தப் பகுதியில் இருந்ததாக வரலாற்றுச் செய்திகள் இல்லை. மாறாக கி.பி. 912ல் பராந்த கச் சோழன், பேரரசன் ராஜசிம்மபாண்டியனை தோற்கடித்து மதுரையில் வீராபிசேகம் செய்து கொண்டான். ''மதுரை

23. Statement of Accounts - Pudukottai Records (1810)

இந்நூலில் சேதுபதி மன்னர்கள் கொடுத்த தானங்களைத் தாங்கி நிற்கும் தொண்ணூறு செப்பேடுகளைத் திரட்டி அவற்றில் உள்ள வரலாற்றுச் செய்திகளையும் சமயச் செய்திகளையும், சமுதாயச் செய்திகளையும் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். தொடக்கத்தில் சேதுபதி மன்னர்களின் தோற்றம் பற்றிய செய்திகளை ஆய்கிறார். 'பதி' என்ற சொல், ஊரையும், தலைவன் அல்லது அரசன் என்பதையும் குறிக்கும். 'சேதுபதி' என்பது இராமேசுவரத்தைக் குறிக்கும். இராமேசுவரத்தையும் அங்கு சென்று வரும் பாதையையும் காத்து நின்றதால் இம் மன்னர்களுக்கு ''சேதுபதி காத்த தேவர்'' என்ற பெயர் இருந்தது. இதைத்தான் இம்மன்னர்கள் தமது செப்பேடுகள் அனைத்திலும் குறித்துள்ளனர். 'சேது' என்றும் இராமேசுவரத்தை வடமொழியில் குறிப்பர். 'சேதுபதி' என்பது இராமேசுவரத்தின் அரசர் என்ற பொருளிலும் வந்ததால் இவர்களை சேதுபதி என சுருக்கமாக அழைக்கிறோம். இவர்களது குலதெய்வம் இராமநாத சுவாமி யாகும். அதைக் கமால் அவர்கள் குறிக்கும் போது ''அந்த தெய்வத்தின் தொண்டர் அடிப்பொடியாக வாழ்ந்தனர்'' என்று குறித்துள்ளது ஒரு பெரும் சமய தத்துவத்தையே வெளிக்காட்டு கிறது. சேதுபதி மன்னர்கள் மறவர். இனத்தின் எட்டுக்கிளைகளில் ஒன்றான செம்பி நாட்டுக் கிளையைச் சார்ந்தவர்கள் என்பதைக் குறிக்கிறார். சூரன் கோட்டை கற்கோட்டையாக மாறி இராம நாதபுரமாக மாறியதை, வருவாய்த்துறை பதிவேடுகளிலிருந் தும் விளக்குகிறார்.

இச்சேதுபதி மன்னர்கள் தங்களது வாழ்வில் – பிறப்பு, இறப்பு, முடிசூட்டல் ஆகிய சடங்குகளில் ''பிரம்மண்ய'' நடை முறைகளைப் பின்பற்றியவர்கள் என்பதையும், இந்துசமய சைவசித்தாந்த நெறியினை உறுதியாகப் பின்பற்றியவர்கள் என்பதையும், அதே சமயம் மற்ற சமயத்தினரிடம் கொண்ட அன்பையும் ஈடுபாட்டையும் தெளிவாகக் காட்டுகிறார். யார் ஒருவர் தமது சமயத்தத்துவங்களை உண்மையாக உணர்கிறார் களோ, அவரே பிற சமயங்கள் அனைத்தையும் பாராட்டி போற்றி நிற்பர். அறியாதாரே ஒருவரோடொருவருக்குள் பகைமையை வளர்ப்பர். சேதுபதி மன்னர் சிறந்த சமயப்பற் றுள்ளவர்களாகத் திகழ்ந்ததால் தான், சமணம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய அனைத்து சமயங்களையும் போற்றியுள்ளனர்.

பொழுது இராமநாதபுரம் வட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தானம் வழங்கப்பட்டபிறகு இந்த ஊருக்கு ''பிரதி நாமமாக முத்துவிஜய ரெகுநாத சேதுபதி பூபாலபுரம்'' என்ற பெயர் ஏற்பட்டதை இந்தச் செப்பேட்டின் வரி (35) புலப்படுத்துகிறது.

இந்த தானத்தைப் பெற்றவர்களது இயற்பெயர்கள் செப்பேட்டில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அவர்களை மிகுந்த மரியாதையுடன் ''அபிஷேஷை வித்துவனமான மகாஜனங்கள்'' என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளதில் இருந்து இந்த அந் தணர்கள் வேதத்தில் வல்ல அத்தியாயன பட்டர்கள் அல்லது குருக்கள் என்பதும் தெரியவருகின்றது.

மண்டபம் கிராமத்தின் கீழ்க்கோடியில் கடற்கரையை யடுத்து ஒரு சத்திரமும் பிள்ளையார் கோவிலும் இந்த மன்ன ரால் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்தன. இதற்கு சேதுக்கு வாய்த் தான் சத்திரம் அல்லது தோணித்துறை சத்திரம் என்ற பெயர் வழங்கப்பட்டது. இதன் பராமரிப்பிற்காக இந்த மன்னர் மண்டபம், தேர்போகி, மேலவயல், வளமாவூர் ஆகிய நான்கு கிராமங்களை சர்வமானியமாக வழங்கியிருந்தார். சேதுயாத்திரை யாக இங்கு வரும் பயணிகளைப் படகுகளில் ஏற்றி சுமார் இரண்டு கிலோ மீட்டர் அகலமுள்ள பாம்பன் ஆற்றைக் கடந்து பாம்பனில் கொண்டு விடுவதற்கும் இராமேசுவரத்தில் இருந்து திரும்பும் பயணிகளை பாம்பனில் இருந்து ஏற்றி இங்கு கொண்டு வரு வதற்கும் இந்த மன்னர் ஏற்பாடுகளைச் செய்திருந்தார், பாம்பன் கடற்பாலத்திட்டம் 1973—90ல் நடைமுறைப் படுத்தப்பட்ட பொழுது மதுரை பாம்பன்சாலை தேசிய நெடுஞ்சாலையாக (தற்பொழுது சேதுபதி நெடுஞ்சாலை) அமைப்பதற்கு ஏதுவாக இந்தச் சத்திரம் முழுமையாக இடித்து அகற்றப்பட்டது. பிள்ளை யார்கோவிலின் சிறு பகுதி மட்டும் சாலையையொட்டி இன்று உள்ளது. தானம் வழங்கப்பட்ட அத்தியூத்து கிராமத்தின் பெரும் நான்கு எல்கையாக வெட்டனேந்தல், ஒருவனேந்தல், திருவத்தியார் ஊருணி, மஞ்சோளாடை, தெய்வேந்திரநல்லூர் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தியூத்து கிராமத்தைத் தவிர ஏனையவை இன்றைய வழக்கில் இல்லை. அதனைப் போலவே இந்தக் கிராமத்தில் அந்தணர் குடும்பம் எதுவும் நிலைத்து இருக்கவில்லை.

இராமப்பையன் அம்மானை என்ற நாடோடி இலக்கியம் இங்கு கோட்டை ஒன்று இருந்ததைக் குறிப்பிடுகிறது.

## செப்பேடு எண். 37

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1636 இதன்மேல் செல்லாநின்ற செயவருஷம் சித்

2. திரை மாதம் 1-ந்தேதி சோம வாரமும் தசமியும் ஸ்ரவண நட்சத்திரமும் சுபயோக சுபகரணமும்

3. பெத்த புண்ணிய தினத்திலே சுக வருஷம் ஸ்ரீமான் மகா மண்டலேஸ்சுரன் அரியராயதள விபா

4. டணன் பாசைக்கு தப்புவார் கண்டன் மூவராய கண்டன், கண்ட நாடு கொண்ட

5. நாடு கொடாதான் பாண்டி மண்டல தாபனாச்சாரியான் சோழமண்டல பிரதிஷ்டாபனாச்சாரி

6. யன் தொண்டமண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண தேசமும் எம்மண்டல

7. மும் கசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன், ராச பரமேசுரன் ராச மார்த்தாண்டன்

8. ராச உத்தண்டன், ராச கம்பீரன் பாதாள விபாடணன் உரிகோல் சுரதானன் அந்தப்பரகண்டன்

9. பனுக்குவார் கண்டன், பிக்கள் கண்டன் சாமித்துரோகியள் முண்டன் துஷ்டரில் துட்டன் து

10. ட்ட நெட்டூரன் துஷ்டநிக்ர சிஷ்ட பரிபாலன் புவனேக வீரன் வீர கஞ்சுகன் வேதியர் கா

---

கள ஆய்வில் இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் இருந்து நூலாசிரியரால் படி எடுக்கப்பட்டது.

# செப்பேடு எண். 38

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர்

2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி திருக்கோயில்

3. செப்பேட்டின் காலம் ; சாலிவாகன சகாப்தம் 1636 ஜெய வருஷம் சித்திரை மீ" 1 (கி.பி 1714)

4. செப்பேட்டின் பொருள்: திருக்கோயில் சுக்கிரவாரக் கட்டளைக்கு நிலக்கொடை

இந்தச் செப்பேட்டினை வழங்கிய சேதுபதி மன்னரது எழுபத்து இரண்டு விருதுகள் இந்த செப்பேட்டில் காணப் படுகின்றன. இவை அனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடு எண் 31ல் பொறிக்கப் பட்டுள்ளவையாகும்.

இராமேசுவரம் இராமநாதசுவாமி பாதம் பிரியாத பர்வத வர்த்தினி அம்மனுக்கு சுக்கிரவார அறக் கட்டளையாக வழங்கப் பட்டுள்ள விபரங்களை இந்த செப்பேடு சொல்கிறது. இராமேசு வரம் திருக்கோயிலின் அர்த்தசாம அபிஷேகம், நெய்வேத்தியம் பூஜைக்கும், ஆடித்திருவிழா சுக்கிரவார உற்சவத்திற்கும் ஆகும் செலவுகளை சரிக்கட்டுவதற்கு விளத்தூர் கிராமத்தையும். ஆய்க் குடி உடையாத்தேவர் தோப்பினையும் சோழியக்குடி, சிறுத்த வயல்கொடிப்புங்கு ஆகிய ஐந்து கிராமங்களையும் மற்றும் சின்னத் தொண்டி கிராமத்தின் சில பகுதிகள் நீங்கலாக நஞ்சை புன்சை நிலங்களையும் சேமனூர், விரியானேந்தல் பகுதி நஞ்செய் நிலங்

## செப்பேடு எண். 37

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர்

2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி திருக்கோயில்

3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1636 ஜெயவருஷம் சித்திரை மாதம் 1ந்தேதி (கி.பி. 17-16)

4. செப்பேட்டின் பொருள்: இராமேசுவரம் திருக்கோயில் சுக்கிரவாரக் கட்டளைக்கு மன்னார் முத்துச் சலாபத்தில் உரிமை

இந்த மன்னரது விருதாவளிகளாக எழுபத்து இரண்டு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. இவைகளில் *பிக்கார் கண்டன், பரராஜ சற்ப கருடன்* என்ற இரு விருதுகள் மட்டும் புதிய விருதுகளாகக் காணப்படுகின்றன. இவை இரண்டும் இந்த மன்னரது இணையற்ற வீரத்தை சுட்டுவதாகும்.

இராமநாதபுரம் *முத்து விஜய ரெகுநாத சேதுபதி* மன்னர், மன்னார் சலாபத்தில் தமக்குள்ள உரிமையில் இராமேசுவரம் திருக்கோயிலுக்கு முத்துச்சலாபம் மூலம் கிடைக்கும் ஊதியத்தை கோயில் சுக்கிர வாரக் கட்டளைக்கு பயன்படுத்த இந்தப் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களது முன்னோர்களான திருமலை ரெகுநாத சேதுபதி கிழவன் ரெகுநாத சேதுபதி ஆகியவர்களைப் பின்பற்றி முத்துச் சலாப உரிமையை இந்த மன்னரும் இந்த திருக்கோயிலுக்கு

சேத்திரர், கர்நாடகத்தார், கவரையர், வெளமர், மல்லகச்செட்டி- வெள்ளாளஞ்செட்டி, மதுரைச் செட்டி, மஞ்சப்புத்தூர் செட்டி, கோமுட்டி, பட்டு நூல்க்காரர், சலுப்பர், வலசை இடையர், சிவியார் இடையர், போயிண்டமார், தொட்டிய கம்பளத்தார், நாட்டு இடையர், வடுகர், குசவர் என்ற வகையான சமூகத் தினரைக் கொண்டதாக அன்றைய சமுதாயம் இருந்தது. இடைக்குல மக்களில் மூன்று வகை கொடுக்கப்பட்டுள்ளது. *1. நாட்டு இடையர் 2. வலசை இடையர் 3. சிவியார் இடையர்* என்பன. முதலாவது, இரண்டாவது, இடைக்குலமக்கள் இராம நாதபுரம் நகரின் கிழக்கு, தெற்குப் பகுதியிலும் உள்ளவர்கள். விவசாயத்திலும் கால்நடைகள் வளர்ப்பதிலும் ஈடுபட்டு இருந்த துடன் கார்த்திகை, மார்கழி மாதங்களில் வடக்கே தங்களது ஆட்டுக் கிடைகளுடன் சோழ சீமைக்கும் சென்று வந்தனர். சோழ சீமைக்குத் தங்கள் உறவினர்களது ஆட்டுக்கிடைகளை இட்டுச் சென்று ஊதியத்துடன் வீடு திரும்பியதுடன் உறவுப் பெண்களை அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். இதனால் இவர்களை *''பெண்டுக்கு மேய்க்கும் இடையர்''* எனக் குறிப்பிடு வதும் உண்டு. மூன்றாவது பிரிவினரான சிவிகை இடையர் என்பது சிவியார் இடையர் எனத் திரிபு பெற்றுள்ளது. இவர் களைப் பற்றி ஆசிரியர் தர்ஸ்டனும் அபிதான சிந்தாமணி ஆசிரியரும் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் பல்லக்கு தூக்கிகள் என்றும் கர்நாடகத்தில் இருந்து தமிழகத்தில் குடியேறியவர்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மன்னரது பண்ணைக்கிராமமான விஜயரெகுநாத சமுத்திரம் மற்றும் அவரது மகள் அகிலாண்டேஸ்வரி பெயரிலான அகிலாண் டேஸ்வரிபுரம் ஆகியவை இன்று வழக்கில் இல்லை. திருப்பாச் சேத்திப் பகுதியில் தொண்டமான் பிரிவினர் இருந்ததை வரிகள் 33-35 தெரிவிக்கின்றன.

சேர்வைக்காரன், அடப்பன், காரியக்காரன், கணக்கப் பிள்ளை, முத்திரைக் கணக்கு-என்பன இராமநாதபுரம் சேதுபதி மன்னரது சேவையில் பணியாற்றிய அரசுப்பணியாளர்களைக் குறிப்பிடுவது ஆகும்.

---

‡ EdgarThurston - Castes and Tribes of South India (1909) Vol. II p. 384.
சிங்காரவேலு முதலியார். அபிதானசிந்தாமணி (1911)

இராமேசுவரத்து அரண்மனை (வரி-68) என்பது திருமலை ரெகுநாத சேதுபதியின் காலத்தில் அவரது சொந்த உபயோகத்திற்காக இராமேசுவரம் மேலரத வீதியில் அமைக்கப்பட்டதாகும். விளத்தூர் மண்கோட்டை (வரி-37) குறிக்கப்படுவதில் இருந்து தொண்டி சாலையில்-விளத்தூரில் ஒரு காவல் அரண் இருந்து வந்ததும் இந்தச் செப்பேட்டின் வழி தெரிய வருகிறது.

திருக்கோயிலுக்காக தானமாக விடப்பட்ட நிலங்களைத் தவிர பலபட்டடை வருவாய்கள் எங்கெல்லாம் கோயிலுக்கு கிடைத்தது என்பதை விவரிக்கும் ஒரு அரிய செப்பேடு இது.

## செப்பேடு எண். 41

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹந ஸகாப்தம் 1645 இதின்மேல்ச் செல்லா நின்ற சோபகிருது நாம

2. ஸம்வச்சரம் உத்தராயண கிரீஷ்மரிது மேஷமீ சுக்லபட்சம் நவமி நாயித்துக் கிழமை

3. அஸ்த நக்ஷத்திரம் வரியா நாம்யோகமும் பாலவா கானமும் பெத்த சுப நக்ஷத்ரசுப

4. யோக சுபகரணத்தில் தேவைநகராதிபன் சேது மூலாட்சர துரந்தரன் ராமனாத

5. சுவாமி பற்வதவர்தனி காரியா துரந்தரன் பரராச சேகரன் பரராசகேச சிங்கம் ஸ்வ

6. ஸ்தி ஸ்ரீமன்மகா மண்டலேசுவரன் விருதாசரமண வாளன் அந்தம்பிற கண்டன் சு

7. வாமித்துரோகியள்மிண்டன் கொட்டமடக்கி துரகரெ வந்தன் பாஷா ஹரி

8. ச் சந்திரன் ஸங்கீத சாஹித்ய வித்யா வினோதன் துட்டரை அடக்கி வீரத் தண்டை சேமத்தலை வி

9. ளங்கிய தாளினான் சகல சாம்பிறாச்சிய அட்ட லெட்சிமீ நிவாசன் புவனேக வீரன் வீரகஞ்சு

10. கன் வேதியர் காவலன் அரசராமன் அடியார் வேளைக் காறன் பரமன்னர் சற்ப கெருடன் பா

---

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்.

12. நாடக பிரவீணந் கருணா கடாக்ஷன் மதப்புலி அடைக்கலங் காத்தான்
13. தாலிக்கு வேலி ஸத்ருவாதியள் மிண்டன் வன்னியராட் டந் தவிள்த்
14. தான் கொட்டமடக்கி வைய்யாளி னாறாய
15. ணன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்
16. னர் சிங்கம் அரசராவண ராமன் அடியார்
17. வேளைக்காறன் வீர வளனாடன் வேதியர் காவலன் புவநேக
18. வீரன் தொண்டியந்துறை காவலன் துரகரேவந்தன் அனு மகே
19. தனன் கெருடகேதனன் காவிக்கொடையான் ரவிக்குல சேகர
20. ன் ரவிவம்மன் சொரிமுத்து வன்னியன் மதுரை மானங்
21. காத்தான் மஹாதாநக்ஷாத்ராவதரந் திலத நுதல் மட மாதர் ம
22. டலெழுத வருசுமுகன் விசையலெச்சுமி காந்தன் கலைதெ
23. ரியும்விற்ப்பன்னன் காமினிகந்தப்பன் ஸத்யாபாஷா ஹரிச் சந்திரந்
24. ஸகலஸாம்ராஜீய லக்ஷிமி வாஸன் வீரதண்டை சேமத் தலை வி
25. ளங்கிய தாளினான் சேதுகாலவன் வங்சாதிபன் துகவூர் கூத்தத்து
26. க் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீள் பால் விரயாதகண்
27. டனிலிருக்கும் ஸ்ரீ ஹீரண்ய கர்ப்பயாஜி ரெகுநாத சேதுபதி காத்த
28. தேவர் புத்திரன் ஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாஜி விசைய ரகு னாத சேதுபதி
29. காத்த தேவரவரகள் னானாகோத்ர னானாசூத்ரரான னானாஸாகாத்

தானம் வழங்கப்பட்ட பால்குளம் இராமநாதபுரம் சீமையின் வரகுணவளநாட்டு இராஜசிங்கமங்கலம் மாகாணத்தைச் சேர்ந்தது அந்த ஊரின் எல்கை மால் வரையும் பொழுது முந்தைய பாண்டி நிலக்கூற்றின் பெயரான கைக்கி நாடு குறிக்கபபட்டிருப்பது ஒரு சிறப்பாகும். இந்த நாடு செவ்விருக்கை நாட்டுக்கு வடக்கிலும் இடையள நாட்டிற்கு தென்மேற்கிலும் தென்னாலை நாட்டிற்கு தெற்கிலும் அமைந்திருந்தது தெரிய வருகிறது.

இந்தச் செப்பேட்டில் இருந்து இன்னொரு வரலாற்றுச் செய்தியும் கிடைக்கின்றது, மறவர் சீமை வீரன் ஒருவன் மாற்றார் மீதான போரில் அவர்களது கடல்துறை ஒன்றை கைப்பற்றி புகழ் சேர்த்தான் என்பது இந்த நிகழ்ச்சி எப்பொழுது எங்கு நடைபெற்றது என்பது புலப்படவில்லையாயினும் அவனது வெற்றிப் பெயரில் ''துறைமுகங் கொண்டான்'' என்ற ஒரு காணி வளமாவூர் கண்மாயை அடுத்திருந்தது தெரிய வருகிறது. இந்தச் செப்பேட்டில் கண்டுள்ள பால்குளம் கிராமத்திற்கு மேற்கே அமைந்திருந்தது. செப்பேட்டின் வரி நாற்பதில் சொல்ல படுகின்ற கிராமம் (ஊர்) வைய்யக் கண்மாய் ஊரவயக் கண் மாய் என இப்பொழுது அரசு ஆவணங்களில் பதிவு பெற்றுள்ளது வட்டகை (வரி 36) (குளம் கோர்வை (வரி 39) குளக்கால் (வரி 38) அகிதம் (வரி 51) ஆகியவை இந்தச் வட்டாரத்திற்குரிய வழக்குகள் ஆகும்.

11. ண்டி மண்டலத் தாபனாசாரியன் பாசைக்குத் தப்புவராய கண்டன் கண்டனாடு கொண்டு கொண்

12. டநாடு கொடாதான் தாலிக்குவேலி ப(ா)ட்ட மானங் காத்தான் இடருவார் கோடாலி

13. ய சாமா உல்லாச நளினக் காறன் குறும்பு களடக்கி அடைக்கலங் காத்தவன் மனோன்

14. மணி கடாட்சன் யெம்மண்டலமும் கெசவேட்டை கொண்ட ருளி ராசாதிராசன் ராசமா

15. ற்தாண்டன் ராசகுல தீபன் வீரஈதிவீரன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விசையன் பலத்துக்கு அபிமன் சொ

16. ல்லுக்கு அரிசிசந்திரன் பொறுமைக்கு தற்மர் கருணைக்கு ராமன் மதப்புலி நித்திய அன்னதான

17. சீலன் கல்லியாண குணாபிராமன் சகலகுண சம பன்னன் படைக்குங் குடைக்குங் ஓடாத தண்டன்

18. தந்தார்தா பரத ராச கோதரன் மனுநீதி மன்னன் மலை கலங்கினாலு, மனங்கலங்காத கண்டன்

19. செம்பிவளநாடன் அனகன் அகளங்கன் அதிக வுபாயன் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வ

20. ணங்கு மிருதாளினான் தொண்டியந்துறை காவலன் வைகையை அடைச்சு ரெகுனாத

21. சமுத்திரமாக பெரிய கண்மாய் வுண்டு பண்ணினவன் குண்டாத்தை யடைச்சுராச்

22. சியத்துக்கு ரெகுனாதக் காவேரியாக வுண்டு பண்ணின வன் ஆத்திப்பாச்சி கடலில்ப் ப

23. ாச்சி யெமை – யாட்சி க்குந்தயாபரன் சத்துரு வாதியளுக்கு இடியேறு பரிக்கு நகுலன் குடைக்கு

24. க் கற்னன் கனக பல்லக்கும் சிங்க முகமும் பஞ்சவர்ன்னப் பாவாடையும் நடநாடக சாலையு முண்டான தே

25. வன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் பெலத்துக்கு ஆதிசேஷன் அழகுக்கு வாலசிவன் கா

26. மினி கந்தற்பன் கலிகோபன் பஞ்சபாணாவதாரன் பாதள விபாடன் தெட்சண சிங்காசனாதிபதி சேதுகாவல

32. திரவியமென்று சொல்லப்பட்ட அஷ்டபோக
33. சுவாமி ஆதாயங்களும் தெய்வதாயம் மானியம் உம்ப
34. ளம் நீங்கலாக ச்கல சமுதாய பிராப்தியும் சுக்கிர
35. வாரக்கட்டளையாக பண்ணின படியினாலே புத்தி
36. ர பௌத்திர பரம்பரையாக சந்ததியாகவும் ஆ
37. சந்திராத்தமாக தர்மபரி பாலனமாக அனுபவித்து
38. க் கொள்ளக் கடவாராகவும் இந்த தர்மத்தை யாதாம்
39. மொருவர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலும்
40. ஆதிசேதுவிலும் ஆயிரம் கோதானம் பூதானம், பண்ணி,
41. ன பலன்பெறுவார்கள். இந்த தர்மத்திற்கு யாதாமொ
42. ருத்தர் அகிதம், பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலும்
43. ஆதிசேதுவிலும் காராம் பசுவைக் கொன்ன தோசத்திலே
44. போகக் கடவாராகவும். உ

15. விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கெற்ப யாஜி ரெகுநா
16. த சேதுபதி புத்திரன் ஸ்ரீ முத்துவிஜய ரெகுநாத சேதுபதி காத்த
17. தேவர் அவர்கள் திருவாரூர் தியாகராஜ சுவாமியாருக்கு மகாதான தன்ம
18. சாசனப்பட்டயம் எழுதிக் கொடுத்தபடி இவருக்குத் தானம் பண்ணிக்
19. க் கொடுத்த கிராமமாவது சோழ மண்டலத்தில் திருவாரூர் சீமை
20. யில் நம்பிபாடி மாகாணத்தில் பாண்டையாய் ஆற்றுப் பாய்ச்சலில் வ
21. டசனார் அன்னவாசலுக்கு எல்கையாவது இதின் பால் எல்கைக்கு அன்ன
22. குடிக்கு மேற்கு தென்பால் எல்கை பாண்டவாய்க்காலுக்கு வடக்கு மேல் ,
23. பால் எல்கை கலியாணி மாதவிக்குக் கிழக்கு வடபால் எல்கை
24. மேற்படி கல்யாண மாதேவி எல்கைக்குக் தெற்கு இன்னான்
25. கெல்கைக்குட்பட்ட அன்னவாசலை சித்திரா பௌர்ணமை புண்ணிய
26. காலத்தில் ஆதிசேதுவின் சுவாமி தியாகராஜ சாமியாருக்கு
27. இராஜஸ்ரீ மகாராஜா அவர்கள் கொடுந்த அன்னவாசலை

இரண்டாம் பக்கம்

28. தியாகராஜருக்கும் தாராப்பூர்வமாக ஸ்ரீ ஹிரண்ய கெற்ப யாஜி
29. சேதுபதி அவர்கள் தானம் பண்ணிக் கொடுத்த
30. படியினாலே இந்தக் கிராமத்துக்கு உண்டாகிய நஞ்
31. சை புஞ்சை செலதரு பாசான அஷ்டகாம

வெற்றியை குறிக்கும் வண்ணம் இந்தத் திருக்கோயிலில் வீரா பிசேகம் செய்து கொண்டு ''திருபுவன வீரதேவன்'' என்ற தனது விருதுடன் கூடிய கல்வெட்டையும் இங்கு பொறிக்கச் செய்தான். இவ்விதம் சோழ மன்னர்களால் சிறப்பான திருப் பணிகள் செய்யப்பட்டு வரலாற்றில் வாழ்கின்றது. இந்த ஊர். இங்கு எழுந்தருளியுள்ள தியாகேசருக்கு தமது திருவாரூர் சீமை யில் உள்ள அன்னவாசல் என்ற ஊரினை தானம் செய்ததை இந்தப்பட்டயம் தெரிவிக்கின்றது. இந்தக் கிராமக்திற்கான நான்கு எல்கைகளும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் மனியம் போன்ற வருவாய்களைத் தவிர ஏனையப் பகுதிகளின் வருவாய் அனைத்தும் இந்தத் திருக்கோயிலுக்கு சேரவேண்டு மென்பதாக இந்தப் பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இந்த மன்னர் தீவிரமான சிவபக்தர் என்ற முறையில் அவரது முன் னோர் யாரும் செய்யாத தர்மத்தை இவர் நிறைவேற்றியிருப் பது அங்கு புற்றிடம் கொண்ட பெருமானிடமும் இறைவி திருக் காம வல்லி ¡ரீதும் கொண்ட சிறப்பான ஈடுபாட்டைக் குறிப்ப தாக உள்ளது.

இந்தப்பட்டயம் இன்னும் சில சிறப்பான தகவல்களைத் தருகின்றது. ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னரது ஆட்சிக் காலத்தில் சேது நாட்டின் எல்லைகள் விரிவுபெற்று சோழ மண் டலத்து திருவாரூர்வரை பரந்திருந்ததாக இராமநாதபுரம் மேன் யுவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[1] இதனை உறுதி செய்யும் வேறு ஆவணங்கள் இல்லாத நிலையில் இந்தப் பட்டயச் செய்தி திரு வாரூர் சீமையில் நம்பிபாடி மாகாணத்தில் பாண்டாய் ஆற்றுப் போக்கில் உள்ள அன்னவாசல் கிராமத்தை தானம் செய்ததாக வரைந்திருப்பது இந்த உண்மையை உறுதி செய்கிறது. பதி னெட்டாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் சோழமண்டல முத்து திருவாரூர் சீமை நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்ப தற்கு இந்தப்பட்டயம் ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

கி.பி. 1730-ல் மறவர் சீமையில் ஏற்பட்ட வாரிசு வழிச் சண்டையில் தலையிட்டு பவானி சங்கரத் தேவரை அகற்றி கட்டத்தேவருக்கும், சசிவர்ணத்தேவருக்கும் படையுதவி வழங்கிய தஞ்சை மராட்டிய மன்னர் தமது ஒப்பந்தப்படி வெள்ளாற்றுக்கு வடக்கே உள்ள சேதுபதி சீமையை கைப்பற்றிக் கொண்டதால் அன்றிலிருந்து திருவாரூர் சீமை தஞ்சை மராத்தியரது உடைமை யாகியது.

1 Rajaram Rao - T Manual of Ramnad Samasthanam (1891)

## செப்பேடு எண் 43

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1651 இதி
2. ன்மேல் செல்லா நின்ற சௌம்ய நாம சம்வத்சரத்தி
3. ல் உத்தராயணத்தில் வசந்த ருதுவில் சித்திரை மீ
4. 16 உ சுக்ல பட்சத்தில் சுக்ரவாரமும் சப்தமியு
5. ம் அநுஷ நட்செத்திரமும் பிராஹ்மி நாமயோகமும் கூடி
6. ன சுபதினத்தில் தேவை நகராதிபன் சேது மூல
7. ரெட்சா துரந்தரன் சிவ பூசா துரந்தரன் ராமனா
8. த சுவாமி காரியா துரந்தரன் பரராசகேச சிங்க
9. ம் பரராச சேகரன் ரவிகுலசேகரன் ரவிவற்ம்
10. மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமகா மண்
11. டலேசுபரன் அரியராயர் தளவிபாடன் பாசைக்குத்தப்
12. புவராதகண்டன் மூவராயிர கண்டன் கண்டனா
13. டு கொண்டு கொண்டனாடு குடாதான் பட்டமானங்
14. காத்தான் பாண்டி மண்டலத் தாபனாசாரியன் சே
15. ாழ மண்டல பிறதிட்டாபனாசாளயன் தொண்டம
16. ண்டல பிறசண்டன் இளமும் கொங்கும் யாள்ப்பாண
17. பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராச
18. ாதி ராசன் ராசபரமேசுரன் ராசமாத்தா

---

* திருவாவடுதுறை சீமை : திருவாவடுதுறை
அமைப்பு : 24. செ.மீ. × 14. செ.மீ.
படி எடுத்து உதவியவர் : புலவர். திரு. செ. ராஜு, தஞ்சை.

மன்னரது பிரதானி இராமலிங்கம் பிள்ளையின் சொந்தத் திருப்பணி என்பது இந்தச் செப்பேட்டிலிருந்து தெரியவருகிறது. இதனை இராமநாதபுரம் சமஸ்தான மேன்யுவலும்‡ உறுதி செய்கிறது. இத்தகைய அறப்பணியை அரசர் செய்யவில்லையென்றாலும் அவரது பணியாளர் செய்த தர்மம் காலமெல்லாம் செவ்வனே தொடர வேண்டும் என்ற சிறந்த நோக்கில் இத்தகைய திருப்பணிகளுக்கு மன்னர் சர்வமானியங்கள் வழங்கி வந்துள்ளதை இராமநாதபுரம் வரலாற்றில் காண முடிகிறது. முதன் முறையாக பார்த்திபனூர் அருகே பிடாரிசேரி என்ற இடத்தில் மங்கம்மாள் என்ற மங்கை நல்லாள் அமைத்த அன்ன சத்திரத்திற்கும் இராமேஸ்வரத்தில் கோதண்டராம செட்டி என்பவர் அமைத்த தர்ம சாலைக்கும் இராமேசுவரம் பாம்பன் சாலையில் மருத்துவக் குலத்தினர் அமைத்த திருமடத்திற்கும் ரெகுநாத திருமலை சேதுபதி மன்னர் அறக் கொடைகள் பல வழங்கி ஆதரித்துள்ளார்.

அவரை அடுத்து வந்த விஜயரெகுநாத சேதுபதியும் இத்தகைய அறச்செயல்களை ஊக்குவித்துள்ளார். இந்தச் செப்பேடு வழங்கிய குமார முத்து விஜய ரெகு நாத சேதுபதி தனது தளகர்த்தர் வைரவன் சேர்வைக்காரர் பெருவயல் கிராமத்தில் அமைத்த முருகன் ஆலயத்திற்கும் பல ஊர்களை வழங்கினார். மேலும், இதே தளகர்த்தர் பாம்பனிலும், யாதவ குலத்தினர் இராமேசுவரத்திலும், தளகர்த்தர் வெள்ளயன் சேர்வைக்காரர் திருப்புல்லாணியிலும் அமைத்த சத்திரத்திற்கும் அறக்கொடையை வழங்கி உதவினார். இந்தச் செப்பேட்டுச் செய்திகளிலிருந்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராமநாத புரம் சீமையில் மன்னர் மட்டுமல்லாமல் மன்னரது குடிகளும் அறப்பணிகளை ஆர்வத்துடன் மேற்கொண்டனர் என்பது தெரியவருகிறது. ''அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி'' என்பது பழமொழி அல்லவா?

மேலும் இந்தச் செப்பேடு வேறு சில செய்திகளையும் தெரிவிக்கின்றன. தானம் வழங்கப்பட்ட பழையன்கால் கிராமம் இன்று பனயங்கால் புளியங்கூட்டம் என்ற பெயரிலும் பழஞ்

‡ Rajaram Row – T – Manuval of Ramnad Samasthanam (1891)

58. உடையான் கருங்குளம் புதுக்கண்மாய் பொருத்துக் கண் மாம் கரைக்குய் கிழக்கோ

59. டிய மாடைக் குளத்துக்கும் உடையான் கருங்கன் வண்ணான் செய் சக்கிலியன்

60. செய் சக்கார்ராவுத்தன் செய்க்கும் கிழக்கு வடக்கு எல்கையாவது வாகைக்

61. குளம் கருப்பஞ் செய்க்கும் கரும்பனார் ஓடைக்கும் புதுக் குளம் கண்மாய்க் கரைக்

62. கும் தெற்கு இன்னான்கு எல்கைக்குட்பட்ட பழஞ்சிராய் ரெகுநாத சமுத்திரத்

63. தைச் சார்ந்த நஞ்சை, புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை ஊருணிகுட்டை

64. மேல்நோக்கிய மரம், கீழ்நோக்கிய கிணறு குடிபடை, பள்ளு, பறை, பாசிபடு.

65. நிட்சபம் செலத்துரு பாசாணமும் சகல சமுதாய பிராத்தி யும் கன்றும்கா

66. ளியும் புல்லும் பூமியும் உள்ளளவும் ஆதி சந்திராதித்த வரை சந்ததிப்பிரவேசமாக

67. அனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும், இத்தன்மத்தை பரிபாலனம் பண்ணினபேர்

68. காசி இராமேசுரத்தில் பலகோடி சிவலிங்க பிரதிஷ்டை பண்ணின பலனை அடைவராகவும் இதுக்கு அகுநம் கங்கைக்கரையில்

## செப்பேடு எண் 47

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | குமாரமுத்து விசைய ரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | திருவாவடுதுறை பண்டார சன்னதி |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1654 விரோதி கிருது ஆண்டு ஆவணி மீ 31ந் தேதி (கி.பி. 1-9-1731) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | பொசுக்குடி கிராமம் பண்டார சன்னதிக்கு மடப்புரமாக வழங்கப்பட்டது |

இந்த செப்பேட்டினை குமாரமுத்து விசைய ரெகுநாத சேதுபதி திருவாவடுதுறை பண்டார சன்னதிக்கு வழங்கியுள்ளார் மடங்களுக்கு வழங்கப்படும் கொடைகள் *மடப்புரம்* ஆகும். திருவாவடுதுறை ஆதினமும் சைவ சமயத்திற்கான சிறந்த மடமாக விளங்கியதால் தானமாக வழங்கப்பட்ட பொசுக்குடி, மடப்புரம் எனப்பட்டது. இந்த மன்னரது விருதாவளியான நாற்பது சிறப்புப் பெயர்களில் 'வாளுக்கு அபிமன்' என்ற ஒரே யொரு பெயர்மட்டும், புதிய விருதாகக் காணப்படுகிறது.

சங்ககாலத்தில் வாழ்ந்த *பிசிராந்தையார்* என்ற பெரும் புலவரது ஊரான *பிசிர்குடி* தான் நாளடைவில் பொசுக்குடியாக மாற்றம் பெற்றுள்ளது. கடைச் சங்க இலக்கியமான புறநானூறு பிசிராந்தையாரது பாடல் எண் 67 ஆகத் தொகுக்கப்பட்டுள்ளது உணர்ச்சிதான் நட்பாம் கிழமை என்ற வள்ளுவரின் வாக்கு குக்கு எடுத்துக்காட்டாக தமது ஆருயிர் நண்பரான கோப்பெருஞ்

27. சுவாமி கருணா கடாட்சன் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி

28. பதியான துகவூர் கூத்தத்தில் காத்துரான குலோத்துங்க சோழ நல்லூர்

29. கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கெர்ப்பாதிபதியன் ரெகுநாதச்

30. சேதுபதி காத்த தேவரவர்கள்புத்திரன் முத்து விசைய ரகுநாதசேதுபதி

31. காத்த தேவரவர்கள் புத்திரரும் குமார முத்து ரெகுநாத சேதுபதி தேவரவர்கள்

32. பாலசுப்ரமணியசுவாமி கோவில் சன்னதியில் அக்கிரகாரம் பிரதிஷ்டை பண்ணி

33. க்கொடுத்தோம் உதக தான பூறுவமாக கொடுத்த கிராம மாவது செவ்விருக்கை

34. நாட்டில் குமக்கோட்டைக்கு கிளக்கு கொல்லனூருக்கு தெற்கு மின்னந்திக்கு

35. மேற்கு காமன்கோட்டைக்கு வடக்கு இந்நான்கெல்கைக் குள்பட்ட கள்ளிக்

36. கோட்டை நஞ்சை, புஞ்சை திட்டுத்திடல் மரவடை, ஏந்தல்

37. பிரவடை, ஊரணி, குட்டம், தோப்பு, துரவு மேல்நோக் கிய மரம் கீழ்நோக்கிய

38. கிணறு, நிதிநிச்சேபம், செல்லநுந பாஷாணமும் முதலான அட்டபோக பாக்கியங்கள்

39. முக்கல சமுதாய பிராப்தியும் அக்கிரகாரத்துக்கு தானம் பண்ணிக்கொடுத்த படியினாலே

40. சந்திராதித்த வரைக்கும் கெணசங்கியாபாகம் இருபத்து நாலு இந்த இருபத்துனாலு

41. பாகமும் சர்வமாக ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்தை யாதா

42. மொருவர் பரிபாலனம் பண்ணின பேர்களுக்கு கோடி சிவலிங்க பிரதிஷ்டையும்

43. கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவாராகவும்

44. இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்கள் தனுக் கோடி கரையிலும் கெங்கை

45. கரையிலேயும் மாதாபிதாவையும் குருவையும் காராம் பசுவையும் வதை பண்ணின தோஷத்திலே போகக்கடவா ராகவும்

# செப்பேடு எண். 46

**(விளக்கம்)**

1. செப்பேடு வழங்கியவர் : குமார முத்து விஜய ரெகு நாத சேதுபதி காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : பாலசுப்பிரமணியசுவாமி கோயில், இராமநாதபுரம்.
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1652 சாதாரண வருடம் தைமாதம் (கி.பி. 1730)
4. செப்பேட்டின் பொருள் : இராமநாதபுரம் பாலசுப் பிரமணிய சுவாமி கோயில் சன்னதியில் சுக்கிரகாரம் பிரதிஷ்டை செய்ய நிலக் கொடை

இந்தச் செப்பேட்டில் இந்த மன்னரது விருதாவளியாக எழுபத்து ஒரு விருதாவளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை யனைத்தும் முந்தைய சேதுபதி மன்னர்களது விருதாவளியாகச் சுட்டப்பட்டவைகள் தான்

இராமநாதபுரம் கோட்டைக்கு கிழக்கே தாயுமான அடி களது அடக்க இடம் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் தெற்கே உள்ள பாலசுப்பிரமணிய சுவாமி சன்னதியில் சுக்கிர காரம் பிரதிஷ்டை செய்வது தொடர்பாக அந்தக் கோயிலுக்கு செவ்விருக்கை நாட்டில் உள்ள கள்ளிக்கோட்டைக் கிராமத்தில் கணசங்கியாபாகம்-இருபத்து நான்கையும் தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு தெரியப்படுத்துகிறது. இந்தக் கிராமம் இன்றைய பரமக்குடி வட்டத்தில் கிழக்குப் பகுதியில் வைகை

யாற்றுக் கரையில் உள்ளது. ஆனால் முந்தைய நிலக்கூற்றில் இந்தக் கிராமம் செவ்விருக்கை நாட்டில் அமைந்துள்ளதும் தெரிய வருகிறது.

அக்கிரகாரப் பிரதிஷ்டைக்காக இந்த தானம் வழங்கப் பட்டதால் தானம் பெற்றவர் யார் என்பதை இந்தச் செப்பேடு குறிக்கவில்லை. ஆதலால் இந்த தானத்தைப் பெற்றவர் பால சுப்பிரமணியசுவாமி கோயில் நிர்வாகிகள் என்பதை ஊகித்துக் கொள்ள வேண்டியதாக உள்ளது.

இந்தச்செப்பேட்டில் தானம் வழங்கிய சேதுபதி மன்னரைக் குறிக்கும் பொழுது ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்களது ''புத்திரன்'' முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவரவ களது ''புத்திரன்'' குமாரமுத்து ராகுநாத சேதுபதி காத்த தேவர்கள் என (வரிகள் 30-32) வரையப்பட்டுள்ளது. ஆனால் இராமநாதபுரம் சேது மன்னர்கள் பற்றிய பல்வேறு ஆவணங்கள் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி, கிழவன் என்ற ரெகுநாத சேதுபதியின் மருகர் என்றும் மகன் என்றும் குறித்துள்ளன, முந்தைய இரு சேதுபதி மன்னர்களுக்கும் ஆண்வாரிசு இல்லை முத்துவிஜய ரெகுநாத சேதுபதிக்கும் ஆண்வாரிசு இல்லை. திருமலை ரெகுநாத சேதுபதி, வழியில் வந்தவர் குமாரமுத்து விஜய ரெகு நாத சேதுபதி ஏற்கெனவே கிழவன் சேதுபதியின் கி.பி.1678ஆம் ஆண்டு பட்டயத்தில் (செப்பேடு எண் 23) கண்ட வாறு முந்தைய மன்னரது புத்திரனாக இல்லாவிட்டாலும் அடுத்து வந்த சேதுபதி முந்தைய மன்னரது புத்திரனாக தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளவது இராமநாதபுரம் அரண் மனையின் சம்பிரதாயமாக இருந்து வந்துள்ளது. தந்தை – மகன் என்ற உறவு நிலை இரத்தக் கலப்பினால் ஏற்படுவது போல சேது நாட்டு அரியாசனத்தில் அமரும் மன்னரும், தமது கடமையின் காரணமாக முன்னர் இருந்த மன்னரது மைந்தா ராகின்றார்.

# செப்பேடு எண் 47

(நகல்)

முதல் பக்கம்

1. சிவஸ்ரீமன் மஹாமண்டலேசுவரன் அரியராயிர தள விபாடன்
2. பாஷைக்குத்தப்புவராத கண்டன் மூவராயிர கண்டன் கண்ட
3. நாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டி மண்டலத் தா
4. பனாசாரியன் சோழமண்டலப் பிறதிட்டாபனாசாரியன் தொண்
5. டமண்டலச் சண்டப்பிறசண்டன் பூறுவ தெட்ஷண பச்சிம
6. உத்தர சத்த சமுத்திராதிபன் யீழமூங் கொல்லமும் யாட் பாண
7. ராயன் பட்டணமு மளித்துக் கெசவேட்டை கண்ட
8. ருளியராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமாற்தாண்டன்ரா
9. சகெம்பீரன் துட்ட நிக்கிரக சிட்டர் பரிபாலனன் கட்டாரி
10. சாளுவன் நவகோடி நாராயணன் அட்டத்திக்கரசர் மனோப
11. யங்கரன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்
12. தவிழ்த்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகந்
13. தவிழ்த்தான்
14. மலை கலங்கினும் மனங்கலங்காதான் பட்டாபிஷே

---

திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை.
அமைப்பு : 19.5 செ.மீ. × 15செ.மீ.
படி எடுத்து உதவியவர் : புலவர் திரு. செ. ராஜு, தஞ்சை

15. கண் குதிரைக்கு நகுலன் அறிவுக்கத்தியன் சொல்லுக்கு
16. அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன் வாளுக் கபிமன் கொ
17. டைக்குக் கன்னன் அன்னசத்திர சோமன் அடைக்கலம்
18. காத்தவன் தாலிக்கு வேலி செம்பி வழநாடன் பூலோக
19. தெய்வேந்திரன் இரவிகுல சேகரன் இரவிய கெற்ப சுதா
20. கரன் தேவை நகராதிபன் அசுவபதி கெசபதி நரபதி சேதுப
21. தி காத்தமுத்து ரெகுநாத தேவரவர்கள் பிறிதிலி ராச்சி
22. ய பரிபாலனம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சகா
23. த்தம் 1654 க்கு மேல் செல்லா நின்ற விரோதி கிறுது ஹூ ஆவ
24. ணி மீ 31வ சவுமிய வாசரமும் பூறுவ பட்ஷத்தில் த் துவா
25. தெசியும் அவிட்ட நட்சத்திரமுஞ் சோபன நாம யோகமும்
26. பவகறணமும் பெத்த சுபதினத்தில் குமார முத்து விசைய
27. ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் திருவாவடுதுறை
28. ப் பண்டாரச் சன்னதி மடப்பிரமாகக் கட்டளையிட்ட பொ
29. சுக்குடிக்கு எல்லையாவது நஞ்சை பிஞ்சை திட்டு

*இரண்டாம் பக்கம்*

30. திடல் இடைகுடி பள்ளு உள்பட சர்வமானியமாக
31. தானபூர்வமாக நாம் தர்ம சாதனம் பண்ணிக்
32. கொடுத்தபடியினாலே சந்ராதித்யர் வரைக்கும்
33. ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவராகவும்
34. இந்த தன்மத்தை யாதாமொருவர் பரிபாலனம்
35, பண்ணினபேர் கோடி கன்னிகாதானம் பண்ணின
36. பலன் பெறுவார்கள் அகிதம் பண்ணினபேர்
37. கங்கைக் கரையிலே காராம்பசுவையும்
38. சேதுக்கரையிலே பிராமணனைக் கொன்ற தோ
39. சத்திலே போவாராகவும் உ. பழனியான் துணை இராமலிங்கம் துணை
40. ஸ்தல ஸ்தபதி

# செப்பேடு எண் 47

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : குமாரமுத்து விசைய ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருவாவடுதுறை பண்டார சன்னதி
3. செப்பேட்டின் காலம் : சகம் 1654 விரோதி கிருது ஆண்டு ஆவணி மீ 31ந் தேதி (கி.பி. 1-9-1731)
4. செப்பேட்டின் பொருள் : பொசுக்குடி கிராமம் பண்டார சன்னதிக்கு மடப்புரமாக வழங்கப்பட்டது

இந்த செப்பேட்டினை குமாரமுத்து விசைய ரெகுநாத சேதுபதி திருவாவடுதுறை பண்டார சன்னதிக்கு வழங்கியுள்ளார் மடங்களுக்கு வழங்கப்படும் கொடைகள் மடப்புரம் ஆகும். திருவாவடுதுறை ஆதினமும் சைவ சமயத்திற்கான சிறந்த மடமாக விளங்கியதால் தானமாக வழங்கப்பட்ட பொசுக்குடி, மடப்புரம் எனப்பட்டது. இந்த மன்னரது விருதாவளியான நாற்பது சிறப்புப் பெயர்களில் 'வாளுக்கு அபிமன்' என்ற ஒரே யொரு பெயர்மட்டும், புதிய விருதாகக் காணப்படுகிறது.

சங்ககாலத்தில் வாழ்ந்த பிசிராந்தையார் என்ற பெரும் புலவரது ஊரான பிசிர்குடி தான் நாளடைவில் பொசுக்குடியாக மாற்றம் பெற்றுள்ளது. கடைச் சங்க இலக்கியமான புறநானூறு பிசிராந்தையாரது பாடல் எண் 67 ஆகத் தொகுக்கப்பட்டுள்ளது "உணர்ச்சிதான் நட்பாம் கிழமை என்ற வள்ளுவரின் வாக்கு -க்கு எடுத்துக்காட்டாக தமது ஆருயிர் நண்பரான கோப்பெருஞ்

சோழனது வாழ்வு முடிவுறும் வடக்கிருத்தலில் பங்கு பெற்று தம்மை மாய்த்துக் கொண்ட இந்தப் புலவர் பெருமகனது மாண்பினை சங்கப்புலவர்களான பொத்தியாரும், கண்ணகனாரும் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

மடப்புரமாக வழங்கப்பட்ட பொசுக்குடி இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஊருக்கான விரிவான எல்லைகள் செப்பேட்டில் குறிக்கப்படாமல் நஞ்சை, புஞ்சை, திட்டு, திடல், இடை, குடி, பள்ளு உட்பட சர்வமானியம் என வரிகள் 29, 30ல் குறிக்கப்பட்டுள்ளன.

மற்றும் இந்த செப்பேட்டினைப் பொறித்தவர் பெயர் குறிப்பிடப்படாமல் 'ஸ்தலஸ்தபதி என்று மட்டும் குறிப்பிடப் பட்டிருப்பதால் இந்த செப்பேடு, சேதுபதி மன்னர் திருவாவடுதுறை மடத்துக்கு வருகை தந்தபொழுது அங்கேயே வழங்கப் பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

## செப்பேடு எண் 48

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1654 இதன் மேல் செல்லா நின்

2. ற பரியதாபி நாப சம்வச்ரத்தில் உத்திராயணமும் வசந்த ரிதுவில் சை

3. த்திர மாசத்தில் கிருஷ்ண பட்சத்தில் சோம வாரத்தில் அமாவாசையில்

4. ரோகினி நட்சத்திரமும் சவுபாக்கிய நாமயோகமும் ... கூடின புண்ணிய காலத்தில் தேவை நகராதிபன்

5. சேதுமூல்ா ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரியத் துரந்தரன் சிவபூஜா

6. துரந்தரன் பரராச சேகரன் பரராஜ மார்த்தாண்டன் அடைக்கலங்காத்தான்

7. ஸ்வஸ்திஸ்ரீ மன்னர் மன்னன் தாலிக்கு வேலி அரியாயிர தல விபாடன் பாசைக்குத் தப்புவார்

8. கண்டன் மூவாயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண் ட நாடு கொடாதான்

9. பாண்டி மண்டல தாபணாச்சரியன் சோழ மண்டல பிரதிஷ் டாபனாச்சாரியன்

10. பூர்வ தெட்சிண ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணபட்டண மும் க

---

* களஆய்வில் ஆசிரியரால் திருப்புல்லாணி ஸ்ரீ டி.பி.எல்.எஸ் சுப்பிரமணிய சாஸ்திரியிடமிருந்து படி எடுக்கப்பட்டது. அமைப்பு : 25 செ.மீ × 16.5செ.மீ.

11. சவேட்டை கண்டருளிய ராஜாதிராஜன் ராஜபரமேசுவரன் ரா
12. ஜமார்த்தண்டன் ராஜகெம்பீரன் புவனேகவீரன் வீர கஞ்ச கன் வே
13. தியர் காவலன் அரசராவண ராமன் அடியார் வேளைக் காரன் கொட்ட
14. மடக்கி, வையாளி நாராயணன் இவுளி பாவடி மிதித் தேறுவார் கண்
15. டன் வீர வெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்
16. னர் சிங்கம் ஆற்றுப்பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங்கா
17. த்தான் சத்துராதியள் மிண்டன் பட்டமானங்காத்தான் துட்டராயர்
18. கண்டன் அந்தம் பிர கண்டன் சாடிக்காரர் கண்டன் சா மித் துரோ
19. கியள் மிண்டன் பஞ்சவண்ணராயராவுத்தன் பனுக்குவார் கண்டன் மே
20. வலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிருதாளினன் காவிக் கொடையான்
21. கருணா கடாட்சன் சொரிமுத்து வன்னியன் சத்திய அரிச் சந்திரன் கொடைக்கு கர்
22. ணன் பரிக்கு நகுலன் மல்லுக்கு வீமன், வில்லுக்கு விசயன் பரத நாட
23. கப் பிரவீணன் கலைதெரியு விற்பன்னன் குன்றினுயர் மேருவில் வில்லை
24. வளைத்து குனில் பொசித்தவன் திலதநுதல் மடவார்கள் மடல் எழுதும் சு
25. முகன் விசயலட்சுமி காந்தன் துட்ட நிக்கிரகன் சிட்ட பரி பாலன்
26. வீரதண்டை சேமத்தலை விளங்குமிருதாளினான் தொண் டியந்துறைக்

27. காவலன் துரக ரே பந்தன் அனுமகேதனன் வைகை வள நாடன்

28. வன்னியராட்டம் தவிழ்ந்தான் மதுர சகாயன் விசயலட்சுமி

29. சம்பன்னன் சகல சாம்பிராட்சிய லட்சுமி வாசனான துக ஊர் கூத்தத்து

30. காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்ட

31. னில் இருக்கும் ஸ்ரீ இரண்ய கெற்பயாஜி இரவி குல சேகர விசய

இரண்டாவது பக்கம்

32. ரெகுநாதசேதுபதி காத்த தேவர் அவர்கள் புத்திரன் குமாரமுத்து

33. ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் கோபாலய்யன் புத்திரன் ராமையனுக்கு தனுஷ்கோடிக் கரையில் உதக தாரா பூர்வமாக

34. தானம் பண்ணிக் கொடுத்த கிராமமாவது இறையான் ஏந்தலுக்கு வடக்கு சந்திரன்கு

35. ளத்துக்கு மேற்கு கிடார வட்டகையில் நரசிங்கன் ஏந்தலுக்குத் தெற்கு தனிச்செயத்துக்கு கிழக்கு இன் நான் கெல்கைக்குட்பட்ட சேரந்தை சர்வ

36. மானிபமாக தானம் பண்ணிக் கொடுத்தபடியினாலே அதுக்குண்டான

37. நந்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை நிட்சேப

38. ஜலதரு பாஷனாஅஷ்ட காமியம் என்று சொல்லப்பட்ட

39. அஷ்டபோக ஐஸ்வரியங்களையும் தானாதி வினியோக விக்கிரயங்களுக்கு

40. யோக்கியமாக சந்திராதித்த வரைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரையாக ஆண்

41. டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — — இதுக்கு எவராகிலும் இந்த தர்மத்தை பரி

43. பாலனம் பண்ணின பேர்கள் காசியிலே கோடி சிவலிங்க பிர

44. திட்டை கோடி பிர்மப் பிரதிட்டையும் கோடி கன்னிகாதான

45. மும் பண்ணின பலத்தை அடைவார்களாகவும், இந்த தர்மத்

46. துக்கு அகுதம் பண்ணின பேர்கள் கங்கையிலும் காசியிலும்

47. தனுக்கோடியிலே மாதா பிதாவையும் குருவையும் காராம்

48. பசுவையும் வதை பண்ணின தோசத்தை அடைவார் களாகவும்

49. இந்த சாதனம் எழுதினேன் சென்ன வீர பண்டாரம் மகன் சென்ன வீரப்பன் எழுத்து

## செப்பேடு எண் 48

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : குமாரமுத்து ரெகுநாத சேதுபதி காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : மாங்குண்டு கோபாலய்யன் புத்திரன் இராமய்யன்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1654 பரிதாபி ஆண்டு (17—4—1732)
4. செப்பேட்டின் பொருள் : சேரந்தை கிராமம்தானம்

இந்த மன்னரது விருதாவளியாக அறுபத்தியாறு சிறப்புப் பெயர்கள் இந்தச்செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் ''*மதுரையர் பச்சதாபன்*'' என்ற ஒரேயொரு சிறப்புப் பெயர் மட்டும் புதிய விருதாவளியாகக் காணப்படுகிறது.

மாங்குண்டு கோபாலய்யன் புத்திரன் இராமையயனுக்கு சேரந்தை என்ற கிராமத்தை இராமநாதபுரம் சேதுபதிமன்னர் தனுக்கோடிக்கரையில் தானம் பண்ணியதை இந்தச்செப்பேடு தெரிவிக்கின்றது. மாங்குண்டு என்பது இராமேஸ்வரம் நகருக்கு வடபுறத்தில் உள்ள சிற்றூர். தானம் வழங்கப்பட்ட சேரந்தை முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் பெயர் விகுதியான ஆந்தை என்ற சொல் இதே பகுதியில் வேறுசில ஊர்களுக்கும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். புல்லந்தை, கீரந்தை, பண்ணந்தை, மாறந்தை விடந்தை என்பன அவை. இவைதவிர கோட்டந்தை, வேட்டந்தை, என்ற ஊர்ப் பெயர்களும் இதே வட்டாரத்தில் உள்ளன. கடைச்சங்ககாலப் புலவரான ''பிசிராந்தையார்'' வாழ்ந்த பிசிராந்தையும் இந்தப் பகுதியிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தானம் பெற்ற இராமையயன் விஜயநகரத்திலிருந்து வந்தவர் என்றும் வடமொழியில் மிகுந்த புலமை பெற்றிருந்தவ ரென்பதும் தெரியவருகிறது. திருப்புல்லாணியிலுள்ள இராமைய் யனது பதிமூன்றாவது தலைமுறையினரான பண்டா சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் அவரது முன்னோரான இராமையனுக்கு சாகித்ய சிரோன்மணி என்ற விருது இருந்ததாகவும், வடமொழி இலக்கியங்களின் சாகரமாக அவர் திகழ்ந்தவரென்றும் அன்னா ரைப் பற்றி பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார். இந்தச் செப்பேடும் அவரிடத்திலேதான் உள்ளது.

தானம் வழங்கப்பட்ட சேரந்தையின் பெருநான் கெல்கை களான அந்திரன்குளம், இறையானேந்தல், நரசிங்கனேந்தல், தனிச்சயம் என்ற ஊர்கள் காட்டப்பெற்றுள்ளன. ஐந்திரம் என்ற பழம்பெரும் இலக்கண நூல் பெயரிலமைந்த ஒருவரின் பெயராக அந்திரன்குளம் ஏற்பட்டுள்ளது. தனிச்சந்தை என்ற பெயர் தனிச்சயமாக திரிந்துள்ளது. மதுரை மாவட்டத்திலும் ஒரு தனிச்சயம் இருக்கின்றது. ஐம்பத்திரண்டு வரிகளில் வரை யப்பட்டுள்ள இந்த செப்பேடு மிகவும் பிழையான சொற்களுடனும் தமிழாகிய வடமொழிச் சொற்களுடனும் காணப்படுகின்றது.

கொடையினைப் பெற்ற இராமையனது ஊராகிய மாங் குண்டு இப்பொழுது மண்குண்டு என வழக்குப் பெற்றுள்ளது அத்துடன் இந்த சிற்றூரில் இப்பொழுது அந்தணர் குடியும் இல்லை.

# செப்பேடு எண் 49

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1655 இதன் மேல் செல்லா நின்ற பிரம்மாதிச வருஷம்

2. கார்த்திகை மாதம் 10ந் தேதி சனி வாரமும் பௌர்ணமி அமாவாசையும் ரோகிணி நட்சத்திரமும் சுப

3. யோக சுப தருணமும் சோம உபரக புண்ணிய காலத்தில் ஸ்வஸ்திஸ்ரீ மன் மகா மண்ட

4. லேசுரன் அரியராய தளவி பாடன் பாசைக்குத் தப்புவராய கண்டன் மூவராயிர கண்டன் கண்ட

5. நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிய மண்டல தாபனாச்சாரியன் சோழ மண்

6. டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்ட மண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொ

7. ங்கும், யாழ்ப்பாண தேசமும் எம்மண்டலமும் கெசவேட் டை கண்டருளிய ராஜாதி ராஜன் ராஜ

8. பரமேசுவரன் ராஜ மார்த்தாண்டன் ராஜ உத்தண்டன் ராஜ கெம்பீரன் பரதள விபாடன் உரிகோல் சுரதாரணன்

9. அந்தம்பர கண்டன் பணுக்குவார் கண்டன் சாதிக்காரர் கண்டன் சாமித்துரோகி

10. யள் கண்டன் துட்டரில் துட்டன் துட்ட நெட்டூரன் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலன் புவ

---

‡ ASSI Vol IV p.p. 90 - 92

அமைப்பு : 32.5 செ.மீ. × 18.செ.மீ.

11. னேக வீரன் வீர கஞ்சுகன் வேதியர் காவலன் அடியார் வேளைக்காரன் பட்டமானங் காத்தான்

12. துட்டராயிர கண்டன் இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் ஆத்தில்

13. பாய்ச்சி, கடலில் பாய்ச்சி, மதப்புலி அடைக்கலங்

14. காத்தான் தொண்டியந்துறைக் காவலன் சிவசிதம்பரம்

*சிவசிதம்பரம்*

15. ன் துரக ரேபந்தன் வையாளி நாராயணன் இவுளி பா வடி மிதித்தேறுவார்கண்டன் வை

16. கை வளநாடன் செம்பிவளநாடன் அனுமகேதனன் கருட கேதனன் வன்னியராட்டந்

17. தவிழ்ந்தான் கந்தமாதன வெற்பினன் அரசராவண ராமன் பரராஜ கேசரி பரராஜ சிங்கம் பரரா

18. ஜ சற்ப கருடன் இரவிகுல திலகன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்

19. தவிழ்ந்தான் ஒட்டிய தள விபாடன் ஒட்டிய மோகந் தவிழ்ந்தான் ஆரிய மானங்காத்தா

20. ன் மதுரை மானங்காத்தான் நவகோடி நாராயணன் மே வலர்கள் கோலரி மேவலர்கள்

21. வணங்குமிரு தாளினான் வீரமுடி சேமத்தலை விளங்கும் இருதாளினான் குன்றிலுயர் மேருவில்

22. குன்றாவளை குணில் பொசித்தவன் திலதநுதல் மடவார் மடல் எழுதவரு சுகுனன் வீரலட்சுமி

23. விசயலட்சுமி காந்தன் காமினி கந்தப்பன் கலை தெரியு விற்பன்னன் சகலகலை வல்

24. லவன் சத்தியபாஷா அரிச்சந்திர சங்கீத சாகித்ய வித்யா வினோதன் சிவ பூஜா

25. துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் சபாபதி காரிய துரந்தரன் துகவூர்

26. கூத்தத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ் விரையாத கண்டனில் இருக்கும்

27. கிரண்ய கெற்பயாஜி தேவர் அவர்கள் ரெகுநாத சேதுபதி காத்த அகுரலாகியானி கெற்பயாஜி

28. ஸ்ரீமது குமார முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் தேவையம்பலம்

இரண்டாம் பக்கம்

29. சபாபதி கட்டளைக்கு தாம்புர சாதன பட்டயம் குடுத்தபடி பட்டயமாவது சபாபதி அபிஷேக

30. நெய்வேத்தியற்கு கட்டளையிட்ட கிராமமாவது குளத் தூருக்கு பெருநான் கெல்கையாவது

31. கிழக்கு எல்லை இடையர்குடி கரைக்கு மேற்குத் தெற்கு எல்லை எல்லைக்களத்துக்கு

32. வடக்கு மேற்கு எல்கை தெல்லாப் பிள்ளை ஊரணி கீழ்க்கரைக்கு கிழக்கு வடவெல்

33. கை கொல்லன் புஞ்சைக்கு தெற்கு இந்நான் கெல்கைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை மா

34. வடை மரவடை ஏந்தல் பிறவிடை சகலமும் சர்வமானிய மாகவும் இராமேசுவரத்தில்

35. கட்டளையிட்டது புன்னைத் தோப்பில் ரெகுநாத தேவர் தோப்பும் சின்னையர் தோப்பும் ஆ

36. டுமாடும் கிராமத்திலிருந்து வருகிற நெல் தவசங்கள் கொண்டு ஓட்டிவருகிற தவ

37. சம் தட்டுமுட்டுகள் தலத்திலே கோவில் பூசைக்கு விற்கிற சாமக்கிரிகை

38. அளக்கப்பட்ட சரக்கு நிறுக்கப்பட்ட சரக்கு எண்ணப்பட்ட சரக்கு இதுகளுக்

39. கெல்லாம் அள்ளுத்தீர்வை, மகுமைகள் வாங்க வேண்டாமென்று தானபூர்வமாக சே

40. துராமலிங்கய்யனிடத்தில் தாம்பூர சாதன பட்டயம் கட்டளையிட்ட படிக்கு

41. சந்திராதித்த சந்ததிப் பிரவேசம் உள்ள மட்டும் ஆண்டு அனுபவித்துவரக்கடவர்

42. ஆகவும். யாதாம் ஒருத்தர் இத்தருமத்தை பரிபாலனம் பண்ணின பேருக்கு காசியிலேயும்

43. சேதுவிலேயும் கோடி சிவலிங்க பிரதிட்டை பண்ணின
பலத்தையும் கோடி பிரம்ம பிர

44. திட்டை பண்ணின பலத்தையும் அடையக் கடவாராகவும்
இந்த தர்மத்துக்கு யாதா

45. மொருவர் விக்கினம் பண்ணின பேர்கள் காசியிலேயும்
தனுக்கோடியிலேயும் ஸதிரி

46. வதை பண்ணின தோசத்திலேயும் பிராம்மண வதை
பண்ணின தோசத்திலேயும் போகக்

47. கடவராகவும். உ இந்தப்படிக்கு ஈரப்ப
பண்டாரம் கையெழுத்து.

# செப்பேடு எண். 49

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1, | செப்பேடு வழங்கியவர் | : | குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்ததேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1655 பிரமாதீச ஆண்டு கார்த்திகை மாதம் 10ந் தேதி (கி.பி. 10—11–1733) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | இராமேசுவரம் திருக்கோயில் சபாபதி கட்டளைக்கு நிலக் கொடை |

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது விருதாவளியாக எழுபது சிறப்புப்பெயர்கள் இந்தச் செப்பேட்டில் காணப்படுகின்றன. அவைகள் அனைத்தும் முந்தைய சேதுபதி மன்னர்களது செப்பேட்டில் குறிக்கப்பட்டவை.

இராமேசுவரம் திருக்கோயில் மூன்றாம்பிரகாரத்தில் தென்கிழக்கு மூலையில் உள்ள சபாபதி ஈசுவரருக்கு அபிஷேக நெய் வேத்தியத்திற்காக குளத்தூர் கிராமம் தானம் வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கோயிலின் சுவற்றில் காணப்படும் கல்வெட்டில் இருந்து இத்தக் கட்டுமானம் பாண்டிய மன்னன் வீரபாண்டியனால் அமைக்கப்பட்டது புலனாகின்றது. இன்றைய இராமநாதபுரம் பரமக்குடி வட்டத்தில் வடகிழக்குப் பகுதியில் இந்த ஊர் அமைந்துள்ளது. இந்தச் செப்பேடு வழங்கப்படும் ஊரை சபாபதி அம்பலத்திற்கென தனியான

கட்டளை எதுவும் அந்த திருக்கோயிலில் இல்லாது இருந்த குறையை உணர்ந்து மன்னர் இந்த தானத்தின் மூலம் நிறைவு செய்துள்ளார்.

இந்தக் கட்டளைக்கு குளத்தூர் கிராமம் முழுமையாக வழங்கப்பட்ட போதிலும் இராமேஸ்வரம் நகரில் உள்ள சின்னையர் தோப்பும் புன்னைத் தோப்பும் இந்தக் கட்டளைக் காக கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இராமேசுவரம் நகருக்குள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்ற நெல் முதலிய தானியங்கள் தட்டுமுட்டு சாமான்கள் கோயில் உபயோகத்திற்காக விற்கப்படுகின்ற சாமான்கள் அளக்கப்படுபவை, எண்ணப்படுபவை ஆகிய இனங்களைச் சேர்ந்தவைகளுக்கும் அரண்மனைக்காக வசூலித்து வரப்பட்ட அள்ளுத்தீர்வை. மகமை, ஆகியவைகளையும் வசூலிக்கத் தேவையில்லை என்றும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வசூல் பணியில் சேதுராமலிங்க ஐயன் என்பவர் ஈடுபட்டிருந்தார் என்பதையும் இந்தச் செப்பேடு துலக்குகின்றது. இந்த வருவாய் அனைத்தும் சபாபதி கட்டளைக்கு சேரவேண்டும் என்ற பெரும் விருப்புடன் மன்னர் இந்த தானத்தை வழங்கியுள்ளார்.

தவசம், சாமக்கிரியை, தட்டுமுட்டு விக்கினம் என்பன இந்த வட்டார வழக்குகள்

## செப்பேடு எண். 50
(நகல்)

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீமகாமண்டலேசுரன் அரிய ராயிர தளவிபாடன் பா
2. ஷைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்டு
3. கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனா சாரியன் சோழமண்
4. டலப் பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டலச் சண்டப் பிரகண்டன் பூறு
5. வ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி ஈழமுங் கொங்கும் யாட்பாணமும்
6. எம்மண்டலமுங் கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுர
7. ன் ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுல திலகன் மன்னற்கு மன்னன்
8. துட்டற்கு துட்டன் துட்டநெட்டூரன் அட்டதிக்கு மனோ பயங்கரன் கட்டாரி சா
9. ளுவன் நவகோடி நாராயணன் துலுக்கர் தள விபாடன் மோகந் தவிழ்த்தா

---

திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை
அமைப்பு : 25.3செ.மீ.×17.7 செ.மீ.
படியெடுத்து உதவியவர் : புலவர். செ. ராஜு அவர்கள், தஞ்சை.

10. ன் ஒட்டியர் தள விபாடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்தான் மலைகலங்கிலும் மனங்க
11. லங்காதான் நரலோக கண்டன் குடைக்கி கன்னன் பரிக்கு நகுலன் அறிவுக் கக
12. த்தியன் வில்லுக்கு விசையன் சொல்லுக் கரிச்சந்திரன் வாளுக்கு வீமன் தாலி
13. க்கு வேலி சமர கோலாகலன் அன்னசத்திர சோமன் அந்தம்பர கண்டன் அடியார் வே
14. ளைக்காரன் அடைக்கலங் காத்தான் இளஞ்சிங்கந் தளஞ் சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆற்று
15. ப்பாச்சி கடலிற்பாச்சி துட்ட நிக்கிரகன் சிட்டர் பரிபாலன் மநுநீதி சோழன் மன்மத சொ
16. ரூபன் தொண்டியந்துறை காவலன் வீரதண்டை சேமத் தலை விளங்கிய தாளினான் இவுளி
17. பாவடி மிதித்தேறுவார் கண்டன் கருணா கடாட்சன் ருத்திராட்ச மாலிகாபரணன் சிவபூசா
18. துரந்தரன் சொரிமுத்து வன்னியன் குன்றனைய மேருவிற் குன்றா வளைகுணில் பொறித்த
19. ன் தனுக்கோடி காவலன் ராமனாத சுவாமி சுப்பிரமணிய சுவாமி பாதாரவிந்த சேகர
20. ன் வீரலட்சுமி காந்தன் விசையலட்சுமி சம்பன்னன் காமினி கந்தப்பன் மேவலர் கோ
21. ளரி மேவலர் வணங்குமிரு தாளினான் சங்கீத சாயித்திய வித்தியா வினோத பரத னாடக
22. ப் பிரவீணன் செம்பினா டுடையோன் வைய்கைவளனாடன் அசுபதி கெசபதி நர
23. பதி சேதுபதி பிரிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சகாத்
24. தம் 1656க்கு மேல் செல்லாநின்ற பிரமா
25. தீட்ச ஹூ கார்த்திகை மீ 10 உ தெட்சனாயணத்து பூறுவ பட்சத்துப் பவுர்ணமையும் மந்த
26. வாரமும் ரோகினி நட்சத்திரமும் சந்திரரோபார புண்ணியகாலங் கூடின சுபதி

27. னத்தில் துகவூர்க் கற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூற் கீழபால் வி

28. ரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீஇரணியகெற்ப யாசி ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள்

29. திருவாவடுதுறைப் பண்டார சன்னதி மடம் மயேசுர பூசைக்கு தற்ம சாஸநப் ப

30. ட்டையங் குடுத்தபடி பட்டையமாவது அம்பலவாணசுவாமி சன்னதியில் மயேசு

31. வர பூசைக்குக் கட்டளையிட்டது கிறாமம் ஏழுகோட்டை நாட்டில் ஓருர் வட்ட

32. கையில் திருப்பாக்கோட்டை பெரு நான்கெல்லைக் குள் பட்ட ஏந்தல் பிறவடை நஞ்

33. சை புஞ்சை மாவடை சகலமுஞ்சறுவமானியமாகவும் நம் முடைய ரா

34. ச்சியத்துச் சுங்கத்துறை எட்டு மாகாணத்துக்கும் மகமை பொதி ஒன்றுக்கு மா

35. காணிப் பணமுஞ் சீமைக்கு அரை மாகாணியும் பேட்டைத் தலங்கள் மற்றச் சில்ல

36. றையுங் கடைபோட்டிருக்கிற கடைக்கு மாதம் அரைக்கால் பணமுங் கரைது

37. றையில் நெல்லுக்குவண்டி ஒன்றுக்கு மூணு மாகாணியுஞ் சீமைக்கு அரைமாகாணி

38. யும் பாறு படகு ஏத்துமதி இறக்குமதிக்கு பத்துப்பணம் தீற்வை பட்டால் அரப்பணமும் அளத்தில் பொதி 1க்கு மகமை அரை

39. க்கால் பணமுஞ் சீமைக்கு அரை மாகாணியும் கம்பட்டத்தில் நூறு பொன்னுக்கு மக

40. மை கால்ப்பணமும் பண்ணைக்கிறாமம் சீவிதக் சிறாமங் கோவில் கிராமம் பிரமதாய

41. க் கிராமத்துக்கு விளைஞ்ச நிலத்துக்கு மாத்தால் குறுணி நெல்லும் புஞ்சை தட்டுக்கு

42. மூன்றுபடி தவசமும் இந்த படிக்கு மயேசுவர பூசைக்கு கட்டளையிட்ட

இரண்டாம் பக்கம்

43. படியினாலே சந்திராதித்த வரைக்கும் கல்லும் காவேரி புல்லும் பூமி
44. யும் உள்ளமட்டுக்கும் ஆண்டனுபவித்துக் கொள்ள கடவாராகவும் யிந்த
45. த் தற்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணின பேர் கோடி சிவலிங்கப்
46. பிரதிட்டையும் கோடி விறுமப் பிரதிட்டையும் கோடி கன்னிகாதானம்
47. பண்ணின பலத்தையும் அடைவாராகவும் இந்த தர்மத் துக்கு யாதாமொ
48. ருத்தர் அகிதம் நினைத்தபேர் கெங்கைக் கரையிலேயுஞ் சேதுவிலேயு மா
49. தா பிதாவையும் காராம் பசுவையும் வதை பண்ணின தோஷத்திலே
50. போகக் கடவராகவும் அம்பலவாணன் திருவடி வாழ்க வ
51. ஆவுடையார் கோயில் சன்னதியில் நம்மிட சத்திரமும் பண்டாரச் சன்
52. னதி அன்னதான மடமாகக் கட்டளையிட்டோம் இந்த படிக்கி
53. சென்ன வீரப்பன் எழுத்து வ

## செப்பேடு எண் 50
### (விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருவாவடுதுறை பண்டார சன்னதி
3. செப்பேட்டின் காலம் : சகம் 1656 பிரமாதீச ஆண்டு கார்த்திகை மீ 10ந் தேதி (கி.பி. 10—11—1733)
4. செப்பேட்டின் பொருள் : மயேச்சுரபூசைக்கு திருப்பக் கோட்டை கிராமம் தானம்.

இந்த தான சாசனத்தை வழங்கியவர் குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி ஆவார். அவரது பொதுப்பெயரில் அளிக்கப் பட்டுள்ள இந்தச் செப்பேட்டில், அறுபத்தியெட்டு சிறப்புப் பெயர்கள் அவரது விருதாவளியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ''இராமநாதசுவாமி, சுப்பிரமணிய சுவாமி பாதார விந்தன்'' என்ற விருது மட்டும் புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

சைவ சமயத்தின் சிறப்பான பீடமாக விளங்கிய சோழ நாட்டு திருவாவடுதுறை மடத்தின் பால் சேதுபதிகள் அனை வரும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இந்த மடத்தின் பராமரிப்பில் உள்ள திருப்பெருந்துறை ஆவுடையார் திருக் கோயிலுக்கும் மடத்திற்கும் பல ஊர்களைச் சர்வமானியமாக வழங்கியுள்ளனர். அவைகளைத் தொடர்ந்து இந்த மன்னர், ஏற்கனவே பொசுக்குடியினை மடப்புரமாக வழங்கியிருந்தும் அந்தத் திருமடத்தின் மயேச்சுரர் பூசைக்காக திருப்பாக்கோட்டை என்ற ஊரினைத் தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊர் இன்றைய தேவகோட்டை

வட்டத்தில் அமைந்துள்ளது. முன்னர் ''ஏழூர் நாட்டு ஒரூர் வட்டகையில்'' இருந்ததாக செப்பேடு வரிகள் 31,32 தெரிவிக்கின்றன. மேலும் இந்த மயேச்சுர பூஜைக்காக சேதுநாடு முழுவதும் மகமை ஒன்றினை மன்னர் ஏற்படுத்தியதையும் இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

சேதுபதிச் சீமையின் எட்டு மாகாணங்களிலும் உள்ள சுங்கத்துறையில் பொதி ஒன்றுக்கு மாகாணிப்பணமும் பெரிய ஊர்களில் அரைமாகாணிப் பணமும், சந்தைப் பேட்டையிலும் இதர இடங்களிலும் கடையொன்றுக்கு மாதம் அரைக்கால் பணமும், துறைமுகத்தில் நெல் கண்டி ஒன்றுக்கு மூன்று மாகாணிப்பணமும், ஏனைய பகுதிகளில் அரை மாகாணியும், தீர்வை விதிக்கப்பட்ட ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்கு பொதி ஒன்னுக்கு அரை மாகாணிப்பணமும், உப்பளத்தில் பொதி ஒன்னுக்கு அரைக்கால் பணமும், பிற இடங்களில் அரை மாகாணிப் பணமும், பட்டறையில் நூறு பொன்னுக்கு கால் பணமும், மகமை ஏற்படுத்தப்பட்டது. தானியங்களைப் பொறுத்த வரையில் பண்ணைக்கிராமம், சீவிதக்கிராமம், கோயில் கிராமம், பிரமதாயக் கிராமம் ஆகியவைகளில் விளைஞ்ச நிலத்துக்கு, ஒரு மாவிற்கு குறுணி நெல்லும் புஞ்சைத் தட்டிற்கு மூன்றுபடி தவசமும் மகமையாகப் பெற்றுக் கொள்ள பண்டார சன்னதிக்கு இந்தச் செப்பேட்டில் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் பணம் எத்தகைய நாணயம் என்பதற்கு குறிப்பு எதுவும் இல்லை. ஐம்பத்து மூன்று வரிகளைக் கொண்ட இந்தச் செப்பேட்டில் தலைப்பில் ஆவுடையார் கோவிலுக்கு இயல்பான வரை கோட்டுச் சித்திரம் காணப்படவில்லை.

## செப்பேடு எண். 51

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1656 இதற்கு மேல்ச் செல்லாநி

2. ன்ற ஆனந்த ௵ நாமசம்வச்சரத்து தக்ஷிணாயண கூசமாரி துவரகிய கார்த்திகை

3. மீ கூ அமாபட்சமு த்ரயோதசியும் சோமவாரமு ஸ்வாதி நட்செத்திரமும் மிதுன

4. லெக்கினமும் சுபயோக சுபகரணமும் பெற்ற புண்ணிய காலங் கூடின சுபதி

5. னத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டேலசுவரன் அரிய ராய தளவிபாடன் பாஷெக்கு

6. தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொ

7. டாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோழ மண் டலப் பிரதிஷ்டாபனா

8. சாரியன் தொண்ட மண்டல சண்டப் பிரகண்டன் பூறுவ தெட்சண

9. பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி ஈழமுங் கொங்கு யாட்பாணமும் மெம்ம

10. மண்டலமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச பரமேசுரன் ராசமா

---

‡ ARE A. 35/1947

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்.

அமைப்பு : 27.5செ.மீ. × 23செ.மீ.

11. ர்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் மன்னர்க்கு மன்னன் துட்டர்க்கு துட்டன்
12. துட்ட நெட்டூரன் அட்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி நாறா
13. யணன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந் தவிள்ந் தான் ஒட்டியர்தள
14. விபாடன் ஒட்டியர் மோகம் தவிள்ந்தான் மலை கலங்கி னும் மனங் கலங்காதான் ந
15. ரலோக கண்டன் குடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் அறிவுக்ககஸ்தியன் வி
16. ல்லுக்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வாளுக்கு வீமன் தாலிக்கு வேலி சமர
17. கோலாகலன் அன்னசத்திர சோமன் அந்தம்பிற கண்டன் அடியார் வேளைக் கா
18. ரன் அடைக்கலங் காத்தவன் இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்
19. கம் ஆற்றுப்பாச்சி கடலிற்பாச்சி துட்ட நிக்கிரக சிஸ்ட பரிபாலன் மனுநீதி
20. சோழன் மன்மத சொரூபன் தொண்டியந் துறை காவலன் வீரதண்டை சே
21. மத்தலை விளங்குமிருதாளினான் இவுளி பாவடி மிதித் தேறுவார் கண்டன் கரு
22. ணாகடாட்சன் ருத்திராட்ச மாலிகாபரணன் சிவபூசா துரந்தரன் சொரிமுத்து வன்னிய
23. ன் குன்றனைய மேருவிற் குன்றாவளை குணில் பொரித்த தனுக்கோடி காவலன்
24. ராமனாதசுவாமி சுப்பிரமணிபசுவாமி பர்தாரவிந்த சேகரன் வீரலெட்சுமிகாந்
25. தன் விசையலெட்சுமி சம்பன்னன் காமினி கந்த ப்டன் கலைதெரியும் விர்ப்பன்னன்
26. மேவலர் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் சங்கீத சாயித்திய வி

27. த்தியா வினோதன் பரதநாடகப் பிரவீணன் செம்பி நாடுடையோன் தேவை நகராதி

28. பன் வைகை வளநாடன் காவிக்குடையான் அனுமகேத னன் பஞ்சவண்ண

29. ராவுத்தன் பனுக்குவார் கண்டன் அஞ்சாத வனராமன் சேதுமூலாரட்சா துரந்தரன்

30. அசுபதி, கெசபதி, நரபதி, சேதுபதி, பிருதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளா

31. நின்ற துகவூர்க் கூத்தத்திற் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரை

32. யாத கண்டனிலிருக்கும் ராசஸ்ரீ தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி

33. பன் ராஜஸ்ரீ இரணியகற்பயாஜி ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி இரண்

34. ணிய கெர்பயாஜி குமார முத்து விசைய ரெகுனாத சேது பதி காத்த தேவரவர்கள்

35. பளனிமலை வேலாயுதசுவாமியர்க்கு பூதான தாம்பிர சாசன பட்டையங்

36. கொடுத்த பரிசாவது பளனிமலை வேலாயுத சுவாமியார் சன்னதியில் விளா பூ

37. சை கட்டளைக்கு தைப்பூசம் எட்டாம் திருனாள் மண்டகப் படி சிறப்புக் கட்ட

38. ளை அபிஷேக நெய்வேதனம் திருமாலை, திருவிளக்கு, சந்தணம் முதலாகிய கைங்கரி

39. யம் நடப்பிவிச்சு வரச்சொல்லி கட்டளையிட்ட கிராமமா வது செம்பினாட்டில் வை

40. கை தீரத்தில் நமது செனனக்காணியான கொள்ளனூரும் செவ்விருக்கை நாட்டி

41. ல் நமது கொள் காணியான கெங்கை கொண்டானுக்கு எல்கையாவது நாகாச்சி

42. கண்மாய் உள்வாய் சுங்கம்புத்துக்கு மேற்குமென்னே நதிக் கும் கள்ளிக்கோட்

11. ர்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் மன்னர்க்கு மன்னன் துட்டர்க்கு துட்டன்
12. துட்ட நெட்டூரன் அட்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி நாறா
13. யணன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந் தவிள்ந் தான் ஒட்டியர்தள
14. விபாடன் ஒட்டியர் மோகம் தவிள்ந்தான் மலை கலங்கி னும் மனங் கலங்காதான் ந
15. ரலோக கண்டன் குடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் அறிவுக்ககஸ்தியன் வி
16. ல்லுக்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வாளுக்கு வீமன் தாலிக்கு வேலி சமர
17. கோலாகலன் அன்னசத்திர சோமன் அந்தம்பிற கண்டன் அடியார் வேளைக் கா
18. ரன் அடைக்கலங் காத்தவன் இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்
19. கம் ஆற்றுப்பாச்சி கடலிற்பாச்சி துட்ட நிக்கிரக சிஸ்ட பரிபாலன் மனுநீதி
20. சோழன் மன்மத சொரூபன் தொண்டியந் துறை காவலன் வீரதண்டை சே
21. மத்தலை விளங்குமிருதாளினான் இவுளி பாவடி மிதித் தேறுவார் கண்டன் கரு
22. ணாகடாட்சன் ருத்திராட்ச மாலிகாபரணன் சிவபூசா துரந்தரன் சொரிமுத்து வன்னிய
23. ன் குன்றனைய மேருவிற் குன்றாவளை குணில் பொரித்த தனுக்கோடி காவலன்
24. ராமனாதசுவாமி சுப்பிரமணியசுவாமி பர்தாரவிந்த சேகரன் வீரலெட்சுமிகாந்
25. தன் விசையலெட்சுமி சம்பன்னன் காமினி கந்த ப்டன் கலைதெரியும் விர்ப்பன்னன்
26. மேவலர் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் சங்கீத சாயித்திய வி

27. த்தியா வினோதன் பரதநாடகப் பிரவீணன் செம்பி நாடுடையோன் தேவை நகராதி

28. பன் வைகை வளநாடன் காவிக்குடையான் அனுமகேத னன் பஞ்சவண்ண

29. ராவுத்தன் பனுக்குவார் கண்டன் அஞ்சாத வனராமன் சேதுமூலாரட்சா துரந்தரன்

30. அசுபதி, கெசபதி, நரபதி, சேதுபதி, பிருதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளா

31. நின்ற துகவூர்க் கூத்தத்திற் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரை

32. யாத கண்டனிலிருக்கும் ராசஸ்ரீ தளவாய் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி

33. பன் ராஜஸ்ரீ இரணியகற்பயாஜி ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிஷாதி இரண்

34. ணிய கெர்பயாஜி குமார முத்து விசைய ரெகுனாத சேது பதி காத்த தேவரவர்கள்

35. பளனிமலை வேலாயுதசுவாமியர்க்கு பூதான தாம்பிர சாசன பட்டையங்

36. கொடுத்த பரிசாவது பளனிமலை வேலாயுத சுவாமியார் சன்னதியில் விளா பூ

37. சை கட்டளைக்கு தைப்பூசம் எட்டாம் திருனாள் மண்டகப் படி சிறப்புக் கட்ட

38. ளை அபிஷேக நெய்வேதனம் திருமாலை, திருவிளக்கு, சந்தணம் முதலாகிய கைங்கரி

39. யம் நடப்பிவிச்சு வரச்சொல்லி கட்டளையிட்ட கிராமமா வது செம்பினாட்டில் வை

40. கை தீரத்தில் நமது செனனக்காணியான கொள்ளனூரும் செவ்விருக்கை நாட்டி

41. ல் நமது கொள் காணியான கெங்கை கொண்டானுக்கு எல்கையாவது நாகாச்சி

42. கண்மாய் உள்வாய் சுங்கம்புத்துக்கு மேற்குமென்னே நதிக் கும் கள்ளிக்கோட்

43. டைக்கும் சேது பாதைக்கும் வடக்கு மெய்யாநேந்தல் புளிக்கு கிழக்கு வல

44. சைக்கும் பாண்டியூரு எல்கைக்கும் தெற்கும் இந்த பெரு னாள் கெல்கைக்குள்ப்பட்ட

45. கொள்ளனூர் கெங்கை கொண்டா னிரண்டு கிராமத்துட னே கூடிய ஏந்தல் புரவ

46. டை நஞ்சை, புஞ்சை மாவடைதிட்டு, திடல் நிதி நிஷே பம் ஜல

47. தருபாவிய மென்று சொல்லப்பட்ட சகல சமுதாய பலப்பி ராப்தியும் அம்பலம் உம்பலம்

48. காவலுழவும் இடை குடி யுள்ளடிமையும் பள்வரி, பலவரி கீதாரவரி, ஊழியம்

49. கெங்கை கொண்டான் வாணியக்குடி செக்குவரி அயம் தீருவை ஊழிய பாளயமும்

50. சறுவமானியமாக கட்டளையிட்டோம் பளமலை பண்டாரத் தின் குமாரர் முத்துக்குமார

51. சுவாமி ஓதுவார் இந்த தர்மம் பரிபாலனம் பண்ணி கொள்வாராகவும் இந்தபடி

52. க்கு புத்திரபவுத்திர பரம்பரை புல்லும் பூமியும் கல்லுங் காவேரியும் ஆதிசந்

53. திராதித்த வரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இ

54. ந்த தர்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கோடி

55. சிவலிங்கப் பிரதிஷ்டையும் கோடி பிரம பிரதிதிஷ்டயும் கோடி கன்னி

56. காதானம் பண்ணின சுகுர்ததை அடைவாராகவும் இந்த தர்மத்துக்கு அகிதம் ப

57. ண்ணின பேர் கங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் மாதா பிதாவையும்

58. காராம் பசுவையும் தேவப் பிறாமணனையும் வதை பண்ணின தோஷத்திலே போக க

59. டவராகவும் ஸ்வ தத்தாத் த்விக்குணம் புண்யம் பரதத்தாநு பாலனம் பரதத்தா

60. பஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவே த் உ ஸ்வதத்தாம் பரதத்தம் பாலோ ஹ ரேத் வ

61. ஸந்தரம் ஷாஸ்தி வர்ஷ ஸஹஸ்ரணி விஷ்தயம் ஜெயயே கிர்மி பழனிமலை வே

62. லாயுதசுவாமியார் துணை.

# செப்பேடு எண் 51

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : குமாரமுத்து விசயரெகுநாத காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : பழனிமலை ஸ்ரீவேலாயுதசுவாமி திருக்கோயில்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1656 ஆனந்த வருடம் கார்த்திகை மீ (கி. பி. 11—12—1734)
4. செப்பேட்டின் பொருள் : பழனிமலை வேலாயுதசுவாமி சன்னதி விளாபூசை மற்றும் தைபூசம் 8ந் திருநாள் விழா விற்கு நிலதானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது எழுபத்து ஐந்து சிறப்புப் பெயர்கள் விருதாவளியாக இங்கு இடம் பெற்றுள்ளன. இவைகளில் நரலோககண்டன் (வரி 15) மன்மத சொரூபன் (வரி 20) *ருத்ராட்ச மாலிகாபரணன்* (வரி 22) இராமநாதசுவாமி சுப்பிரமணிய சுவாமி பாதாரவிந்த சேகரன் (வரி 24) *அஞ்சாதவனராமன்* (வரி 29) என்ற ஐந்து சிறப்புப் பெயர்கள் இந்தச்செப்பேட்டில் புதுமையாகக் காணப்படுகின்றன.

பழனி ஸ்ரீவேலாயுதசுவாமி சன்னதியில் தைமாதந்தோறும் நடைபெறும் விளா பூஜைக்கும் தைப்பூசம் 8ந் திருநாள் மண்டகப் படி சிறப்புக் கட்டளை அபிஷேகம் நெய்வேத்தியம் திருமாலை திருவிளக்கு, சந்தனம், முதலிய கைங்கரியங்களுக்கு பயன்படுவ தற்காக இராமநாதபுரம் சீமையில் உள்ள *கொல்லனூர்*, *கங்கை கொண்டான்*, என்ற இரண்டு ஊர்களை தானமாக வழங்கப்பட்

ள்ளதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது கொல்லனூர் செம்பி நாட்டிலும், கங்கைகொண்டான் செவ்விருக்கை நாட்டிலும் அமைந்துள்ள தாக வரையப்பட்டுள்ளது. கொல்லனூரை ''செனனக்காணி'' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்த மன்னர் அந்த ஊரில் பிறந்தவர் என்பது புலனாகின்றது. கி. பி. 1170ல் வாரிசுரிமைக் காக பாண்டிய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுல் பூசலில் தலையிட்ட இலங்கைப் படைகள் நிலை கொண்டிருந்ததும், கி.பி14ம் நூற்றாண்டில் இலங்கை மீது வெற்றிப்படை நடத்திய ''ஆரிய சக்கரவர்த்தி'' என்ற பெருமகன் பிறந்ததும் இந்தச் செவ் விருக்கை நாடு என்பதை வரலாறு விளம்புகிறது.

மேலும் இந்தக் கங்கை கொண்டான் என்ற சிற்றூர், தொடக்கத்தில் சோழ மன்னர்களது சாமந்தர்களான சேதிபதிகள் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சி முடிவுற்ற பொழுது தெற்கே வந்து மறவர் சீமையில் நிலைத்து நிறுவியது. கங்கை கொண்ட இராசேந்திர சோழனது நினைவாக இந்தப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட இரண்டு ஊர்களில் இதுவும் ஒன்று. மற்றொன்று கிடாரம் கொண்டான் என்பது. இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் இருப்பது இன்னும் இந்த செப்பேடு வேறு சில செய்திகளைத் தெரிவிக் கிறது. அதாவது இராமேசுவரத்தை, நமது நாட்டின் பிற பகுதிகளுடன் இணைந்த அன்றைய பயணிகளின் பாதை, மதுரை, மானாமதுரை வழியாக வைகை நதியின் தென்கரை ஒட்டி கிழக்கே இராமநாதபுரம் கோட்டைக்கு வடபகுதியில் சென்று இராமநாதபுரம் லக்ஷிமிபுரத்தின் வடக்கே சேது நாடு வழியாக இராமேசுவரம், சென்று சேது பாதையுடன் இணைந்தது என்பதை ''சேதுபாதைக்கும் வடக்கு'' (வரி 43) என்பதிலிருந்து ஊகிக்க முடிகிறது. 'மெய்யான் ஏந்தல்' புளிக்கு என்ற தொடர் இந்தப்பகுதி முன்னர் சமண சமயத்தின் பிடிப்பில் இருந்ததை நினைவுபடுத்துகின்றது. மெய்யானேந்தல் பள்ளி என்பது ''மெய்யானேந்தல் புளி'' என்று மருவியுள்ளது. இராமேசுவரம் நகர எல்லைக்குச் சற்று முன்னர் உள்ள பகுதி ''மெய்யாம்புளி'' என்பதாகும். மெய்யான் பள்ளியே இங்கும் ''மெய்யாம் புளியாக'' மருவியிருப்பது ஒப்புநோக்கத்தக்கது மெய்யான் அருகதேவனை குறிப்பிடும் சொல்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேதுபதிகளது சீமை வரிப்பாடுகள் எவையென்பதையும் இந்தச்செப்பேடு புலப் படுத்துகிறது. விளைநிலங்களில் இருந்து பெறுகின்ற நஞ்செய் புன்செய் தீர்வைகளைத் தவிர பள்வரி, பலவரி கீதாரவரி, வாணியக்குடி, செக்குவரி, ஆயம், தீர்வை ஆகியவையுடன் உம்பலம், ஊழியம் உள்ளடிமை என்ற மரபு வழி கட்டாயப் பணிகளும் கிராமங்களில் அன்று இருந்து வந்த நிலையினையும் இந்தச் செப்பேடு குறிப்பிடத்தவறவில்லை. உள்ளடிமை என்பதை கொத்தடிமையாகக் கொள்ளலாம். பழனிமலை வேலாயுத சுவாமி யார் துணை என்று முடிவுறும் இந்தச் செப்பேடு அறுபத்து இரண்டு வரிகளைக் கொண்டுள்ளது.

## செப்பேடு எண் 52

(நகல்)

1, ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1656 இதன்மேல் செல்லா நின்ற ஆன

2. ந்த வருஷம் தை மாதம் 1ந்தேதி பௌர்ணமையும் சோம வாரமும் பூச நட்சத்திரம் சௌமியநா

3. ாமயோகமும் பாலவாகணமும் கூடின புண்ணிய காலத் தில் தேவை நகரா

4. திபன் சேதுமூலரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூஜா து

5· ரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ கெஜசிங்கம் இரவி குல சேகரன் இரவிமார்த்

6. தாண்டன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மகாமண் டலே சுர

7. ன் அரியராய தளவிபாடணன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் மூவராய க

8. ண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டல

9. தாபனாச்சாரியான் சோழ மண்டல பிரதிஷ்டாபனாச் சாரியன் தொண்டைம

10. ண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப் பாண பட்டணமும் கெ

11. சவேட்டை கண்டருளிய ராஜாதி ராஜன் ராஜபரமேசுரன் ராஜமார்த்

---

* கள ஆய்வில் நூலாசிரியரால் புதுமடம் கிராமத்தில் கண்டு பிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

12. தாண்டன் ராஜ கம்பீரன் இளஞ்சிங்கம், தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்
13. கம் துரைராயன் ஆற்றில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப் புலி அடைக்கலங்காத்
14. தான் தாலிக்கு வேலி சத்துருவாதியள் மிண்டன் வேதியர் காவலன் அரசராவ
15. ணராமன் அடியார் வேளைக்காரன் பாதாள விபாடன் உரிகோல் சுரதானன்
16. அந்தம்பர கண்டன் சாடிக்காரர் கண்டன் சுவாமி துரோகியள் மிண்டன்
17. பஞ்சவர்ணராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கி வை
18. யாளி நாராயணன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் ஆரிய மானங் க
19. ாத்தான் தொண்டியந்துறைக் காவலன் துரகரேபந்தன் அனுமகேதனன் கொ
20. டைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விஜயன் பரதநாடகப்
21. பிரவீணன் கருணா கடாட்சன் குன்றியனூர் மேருவில் குணில் பெ
22. ாரித்தவன் திலதநுதல் மடமாதர் மடலெழுதவரு சுமுகன் கருட கேதனன்
23. காவிக்கொடையான் விசையலட்சுமி காந்தன் கலை தெரியும் விற்பனன்
24. காமினி கந்தர்ப்பன் அட்டதிக்கு மனோபயங்கரன் துஷ்டநிக்கிரக சிட்டபரி
25. பாலன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன் வீரதண்டை சேமத்தலை விள
26. ங்கிய தாளினான் சகல சாம்பிராச்சிய லெட்சுமி நிவாசன் சேது காவல
27. ன் வங்கிஷாதிபனான துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்துங்க சோழ

28. நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ இரண்ய கெர்ப்ப யா

29. ஜி ரெகுநாதசேதுபதி காத்த தேவர் அவர்கள் மருமகன் கெங்கை கொண்டனி

30. லிருக்கும் கட்டையத்தேவர் புத்திரன் ஸ்ரீகுமாரமுத்து விசையரெகுநாத சேது

31. பதிகாத்ததேவர் அவர்கள் இராமநாதபுரத்திலிருக்கும் ஈசா பள்ளி வாசல்

32. அன்னதான தன்மத்துக்கு சர்தர்வேசலி குமாரன் சார்மூஸா பாப்ஷா

33. பாரிசமாக கட்டளையிட்ட கிழவனேரிக்கு எல்கையாவது கருக்கத்திக் கண்

34. மாய்க் கடைக் கொம்புக்கு வடக்கு மாணிக்கனேரி பொருத் துக்கு கிழ

35. க்கு மேற்படி யேந்தல் தென்கரைக்குத் தெற்கு ஆதி நாராயணன் மடைசிவந்தி

36. யப்பன் பொட்டல் செய்க்கு மேற்கு இன்னான்கு எல் கைக்குட்பட்ட கிழ

37. வனேரி நஞ்சை புஞ்சை மாவிடை மரவிடை, திட்டு திடல் ஏந்தல் பிறவிடை

38. குடி, படை, பள்ளு, பறை, கீழ் நோக்கிய கிணறு, மேல் நோக்கிய மரம்,

39. அஷ்டபோக தேஜ சுவாமியங்களும் இவை பரியது சர்வ மானிபம் தாம்

40. பிரசாசனம் கட்டளையிட்ட படியினாலே ஆதி சந்திராதித்த வரை புத்திர

41. பௌத்திர பரம்பரைக்கும் அன்னதானத்துக்கும் ஆண்டனு பவித்துக் கொள்

42. ளுவாராகவும் இந்த தன்மத்திற்கு தமிழனாலும் நாலு வருணத்திலே உள்

43. ள பேரும் இசுலாமானவர்களும் பரிபாலனம் பண்ணின பேர்களும் கெ

44. ங்கைக்கரையிலேயும் சேதுவிலேயும் மக்க மதினத்திலேயும் புண்

45. ணிய தலங்களிலேயும் அன்னதானம் சொன்னதானம் வெகுகுடும்ப பிர

46. திட்டையள் பண்ணின பலத்தை அடைவாராகவும் இந்த தன்மத்துக்கு

47. அகிதம் பண்ணினபேர்கள் புண்ணியத்தலங்களிலே மாதா பிதாவை

48. வதைத்த தோஷத்திலே போகக்கடவாராகவும்.

# செப்பேடு எண். 52

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதிகாத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : இராமநாதபுரம் நகர் ஈசா பள்ளிவாசல்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1656 ஆனந்த வருடம் தைமீ 1ந்தேதி (கி.பி. 14-1-1734)
4. செப்பேட்டின் பொருள் : பள்ளிவாசல் அன்னதானக் கட்டளைக்கு நிலக்கொடை

இந்தக் கொடையினை வழங்கிய குமாரமுத்து விஜய ரெகுநாத சேதுபதி அவர்களது விருதாவளியாக அறுபத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் காணப்படுகின்றன. ''அந்தம்பரக் கண்டன்'' (வரி 16) என்ற ஒரே ஒரு விருது மட்டும் இங்கு புதுமையாகப் புகுத்தப்பட்டுள்ளது. ஏனையவை இவரது முந்தையோரும் இந்த மன்னரும் தங்களது முந்தையப் பட்டயங்களில் பயன்படுத்தியுள்ளவை.

இந்த அறக்கொடையைப் பெற்ற ஈசா பள்ளிவாசல் என்ற அமைப்பு இராமநாதபுரம் கோட்டை என வழங்கப்படுகின்ற இராமநாதபுரம் நகராட்சிப் பகுதி பெரியகடைத் தெருவின் வடக்குப் பகுதியில் உள்ளது ஆகும். ஈசா சாஹிபு என்ற இறையருட் செல்வர் பள்ளிவாசலை ஒட்டி அடக்கம் பெற்றுள்ளார். இந்தப் புனித இடத்திற்கு வருகை தருகின்ற ஆன்மிக பெருமக்களுக்கு அன்னம் வழங்குவதற்காக இந்தச் சேதுபதி மன்னர் கிழவனேரி என்ற ஊரினை அறக்கொடையாக ஆணை இட்டபட்டயம் இது.

கி.பி. 1182ல் அரபு நாட்டில் (மதினா நகரில்) இருந்து சமயப் பணிக்காக பலநூறு தொண்டர்களுடன் செய்யது இப்ராஹிம் என்ற புனிதர் தமிழகம் வந்தார். கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் அவரது சமயப்பணியை தடுத்த விக்கிரம பாண்டியனை வென்று தியாகியாகிய இந்தப்புனிதர் ஏர்வாடியில் அடக்கம் பெற்றுள்ளார். அவருடன் வந்த தொண்டர்களில் ஒருவர் இந்த ஈசா சாஹிப் என்ற உத்தமர் எனக் கூறப்படுகிறது. அடக்கவிடத்தை நாடி வருகின்ற ஞானச் செல்வர்களுக்கு உணவு வழங்குவதற்காக இந்த அறக்கொடையை மன்னர் வழங்கியுள்ளார்.

சமயக் காழ்ப்பு இல்லாமல் சமரச சன்மார்க்க நிலையில் அனைத்து மக்களையும் சேதுமன்னர்கள் ஆதரித்து வந்துள்ளனர். இந்த மன்னரது முந்தையோர்களும் குறிப்பாக திருமலைரெகுநாத சேதுபதி, கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி ஆகியோர் ஆட்சிக் காலத்தில் மறவர் சீமையின் குடிகளாகிய முஸ்லீம்கள் இத்தகைய அரசியல் ஊக்குவிப்புகளைப் பெற்றதை வரலாறு விளம்புகின்றது.

இந்தக் கொடை சம்பந்தப்பட்ட கிழவனேரி கிராமம், இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளது. முதுகுளத்தூருக்கு கிழக்கே பத்துக்கல் தொலைவில் திருஉத்திரகோசமங்கை சாலைக்கு சற்று வடக்கே உள்ள சிற்றூர் ஆகும். இந்தச் செப்பேட்டில் அந்தக் கிராமத்தின் நான்கு எல்கைகளும் குறிப்பிடப் பெற்றுள்ளன. இதில் ''கருக்கத்தி கண்மாய் கடைக் கொம்புக்கு'' ''மாணிக்கனேரி, பொருத்துக்கு ''(வரிகள் 34, 35) என்ற தொடர்களில் இந்த வட்டார வழக்குகளான கடைக்கொம்பு, பொருத்து என்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் இந்தக் கிராமத்தின் ''நஞ்செய், புன்செய், திட்டு, திடல், மாவடை, மரவடை. குடி, படை, பள்ளு எல்லாம்'' இந்த அறக்கொடையில் கட்டுப்பட்டிருப்பதாக குறிக்கப்பட்டுள்ளது பொதுவான வாசகமாகும், ''குடி'' என்பது வேளாண் குடிகளாகிய விவசாயிகளையும், ''படை'' என்பது அரசருக்கு அபாய காலங்களில் படைகள் பூணக்கூடிய வீரர்களையும், ''ஜீவிதம்'' உதிரப் பட்டி'' போன்ற மானியங்களை அனுபவித்து வருகின்ற வீரர் குடும்பத்தினரையும் ''பள்ளு'' என்பது விவசாயப் பணிகளைச் செய்கின்ற பள்ளர்களையும் குறிப்பது ஆகும்.

இந்தச் செப்பேட்டில் இன்னொரு புதிய செய்தியும் இடம் பெற்றுள்ளது. சேதுபதி மன்னர்கள் புகலூரிலும், இராமேஸ்வரத்திலும் இராமநாதபுரத்திலும் இருந்து ஆட்சி செய்ததாக வரலாற்று ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இந்தச் செப்பேட்டின் (வரி 29) படி கங்கை கொண்டான் என்ற ஊரிலும் சேதுபதிகள் இருந்து வந்தது தெரியவருகிறது. இந்தச் செப்பேட்டின் இறுதி வாசகமாக ''இந்த தர்மத்திற்கு தமிழனாக நான்கு வர்ணத்திலே உள்ளவர்கள், இஸ்லாமான பேர்களும்'' என்றும் கங்கைக்கரையிலேயும் சேதுவிலேயும் மக்கா, மதினாத்திலேயும் புண்ணிய தலங்களிலேயும் என்றும் வரையப்பட்டிருப்பது செப்பேடு வாசகத்தில் ஒரு புதுமையாகும் சேதுபதி மன்னர் எந்த அளவிற்கு இஸ்லாமியச் சிறுபான்மையினரை மதித்து வந்தார் என்பதை அவர் இந்த தானத்தை வழங்கியது அல்லாமல், அந்தஆவணமும் அவர்களது சமயநெறிக்கு பொருத்தமாக இருக்கவேண்டும் என எண்ணி, மேலே கண்டவாறு இந்த ஆவணத்தை வரைந்து இருப்பதில் இருந்த தெரிந்து கொள்ள முடிகிறது.

# 10

# சிவகுமார முத்துவிஜய ரெகுநாதசேதுபதி

## (கி.பி. 1736 – 1748)

கி.பி. 1736ல் இராமநாதபுரம் அரியணை ஏறிய இந்த மன்னர் சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் இராமநாதபுரம் *சீமையில் திறமையுடன்* ஆட்சி செலுத்தி அமைதி காத்தார். தமது தந்தையைப் போன்றே தெய்வீகத் திருப்பணிகளிலே மிகவும் நாட்டம் கொண்டிருந்தார். சேது வழிப் பாதையில் பாம்பன், அக்காள் மடம், இராமேசுவரம் ஆகிய மூன்று ஊர் களிலும் அன்ன சத்திரங்களை நிறுவி சேதுயாத்திரை செல்லும் பயணிகளது சிந்தை நிறைவு பெறும் வகையில் உணவும் உறையுளும் வழங்க ஏற்பாடு செய்தார். மேலும் சேது பாதை யில் உப்பூரில் *சீதாராமய்யர்* என்பவர் ஏற்படுத்திய தர்மச் *சத்திரமும்* இராமேஸ்வரத்தில் இடைக்குல மக்கள் நிறுவிய *நந்த கோபாலச்சத்திரமும்*, பரமக்குடியில் நாகப்பன்செட்டி ஏற்படுத்திய அன்ன *சத்திரமும்* நொடித்த நிலையில், அவை களை மேற்கொண்டு அவைகளின் அன்னப்பணி தொடருமாறு செய்தார்.

இந்த மன்னர் சைவத்திலே அழுத்தமான பற்றுடைய வராக இருந்ததால், மக்கள் இதுவரை அன்புடன்''*சைவத்துரை*'' என்று அழைத்து வந்தனர். ஆனால் இவரது சைவப்பற்று

அவரது கொடையுள்ளத்திற்கு தடையாக இருந்தது இல்லை என்பதை அவரது செப்பேடுகள் சொல்லுகின்றன. இராமநாத புரம் சீமையின் சிறுபான்மையினரான முஸ்லீம் மக்கள் பெரிதும் போற்றி வந்த புனிதர்களது அடக்க இடங்களுக்கு இறை யிலியாக ஊர்களை வழங்கிய சாதனையில் தந்தையையும் முந்தியவராக இருந்தார். அமைதியாக ஆட்சிப் பணியில் ஈடு பட்டிருந்த இந்த மன்னர் கி.பி.1748ல் புகழுடம்பு பெற்றார்.

# செப்பேடு எண் 53

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாத்தம் 1658 இதின்மேல் செல்
2. லானின்ற நளநாம சம்வச்சரத்தில் உத்திராயணத்தில் ஏமந்த ருதுவில்
3. புஷ்ய மாசத்தில் கிட்டின பட்சத்து அம்மாவசியும் குரு வாசரமும் ஸ்ரீவண ந
4. ட்சத்திரமும் பிரும்மிய நாம யோகமும் கவூலகரணமும் கூடின சுயோக
5. சுபகரணமும் பெத்த தையி அம்மாவாசி புண்ணிய காலத்தி ல் ராமசேதுவி
6. ல் தேவ நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராம நாதசுவாமி பரு
7. வதவர்தனி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராச சேகரன் கண்
8. டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பாண்டிய மண்டல ஸ்தாபனாசா
9. ரியன் ஈழமும் கொங்கும் யாட்பாணயன் பட்டணமும் எம் மண்டலமுங் கெ
10. காண்டு கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேஸ்வரன் ரா
11. ச மார்த்தாண்டன் ராசகுலதீபன் கொடைக்கு கர்ணன் வில்லுக்கு விசய

---

‡ ASSI. Vol. 4 pp. 95-97

12. ன் வீரரில் வீரன் வீரகஞ்சுகன் வேதியற் காவலன் வீர விக்கிர மபர்க்க
13. ன் மல்லுக்கு வீமன் பெருமைக்கு தரும புத்திரன் ஆக்கி னைக்கு சுக்கிரீபன் பிற
14. சங்கத்துக்கு ஆதிசேஷன் கருணைக்கு ரெகுராமன் சத்ய பாஷா அரிச்சந்திரன் ச
15. ங்கீத சாகித்திய வித்யா வினோதன் சத்துராதியள் மிண் டன் சகலகுண சம்ப
16. ன்ணன் சருவ சீவ தயாபரன் தளங்கண்டு தத்தளிப்பார் மிண்டன் தந்தா
17. ரை தாரம் டரததாரர் சகோதரன் சகல சாம்பிராச்சிய லட்சுமி - நிவாசகன்
18. கருதலாகன் முடிஇடர்ருங்கவன் துரக நகுலன் காமினி கந்தப்பன் ஸகியா
19. — — — — — — — — — — — — — —
20. குணசீலன் இடறுவார் கோடாளி இரவிலாகலி கோவன் அரச ராவ
21. ணராமன் அடியாற் வேளைக்காரன் அடைக்கலங்காத்த வன் உரிகோல் சு
22. ரதாரணன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் மனுநீதி மன்ன
23. ன் மலை கலங்கினும் மனங் கலங்காதவன் செம்பி வள நாடன் திலத நுத
24. ல் மடலெழுதுஞ் சுமுகன் இயலிசை நாடக முத்தமில் லறிவாளன்
25. அனகன் அன்பாய் அதிவீரன் அகளங்கன் அதிசெயன் ஆம்பொருட் கடாட்
26. சன் புவனேக வீரன் மருவலர் கெசசிங்கம் விருதராச மன்றுளான் துட்ட
27. ர்கள் கொட்டமடக்கி பட்டமானங் காத்தவன் தாலிக்கு வேலி பரதள விபா

28. டன் பரமன்னர் ஸர்பகெருடன் பனுக்குவார் கண்டன் பரராச சேகரன் அ

29. அன்னதானசீலன் செகராசர் பணிபாதன் தெட்சண சிங்க சனாதிபதி துலா

30. புருசாதிட சோடச மஹாதான தீட்சா துரந்தரன் பாரத்து வாச கோத்திரத்தில் ஸ்ரீ இரணி

31. ய கர்ப்பயாசி ரகுநாத சேதுபதி அவர்கள் மருகனான ஸ்ரீமது குமார முத்து

32. விசய ரகுநாத சேதுபதி அவர்கள் புத்திரன் ஸ்ரீமது முத்துக் குமார விசய

33. ரகுநாத சேதுபதி அவர்கள் காசிப கோத்திரத்தில் ஆசி விலாயன சூத்திரத்தில்

34. ரிகு சாஹாந்தியா பகரான கலாநிதி கோனய்யன் அவர் கள் புத்திரன் ராமந

*இரண்டாம் பக்கம்*

35. ய்யனவர்களுக்கு சகிரண்ணியோதக தாராபூர்வமாக செவ்விரு

36. க்கை நாட்டில் முதலூருக்கு பிரதி நாமமான கோவிந்த ராச சமுத்திரத்துக்கு நா

37. ங்கு எல்கை கீள் எல்கையாவது குளத்தூர் கண்மாயி தென்

38. கடைக்கொம்பு மறுகால் தலைக்கும் உடையா தேவன் பனங்கூடலுக்கு

39. மேற்கு இதின் தெற்கு வெண்ணகுடி கண்மாமி உள் வாயில் தென்கடை

40. கொம்பு ஊரணி கீள்கரைக்கி மேற்க்கு இதின் தெற்கு அரியா குடியிரு

41. ப்புக்கு மேற்க்கு காருக்குடி கண்மாயி உள்வாயில் குசவன் திடலுக்கு மே

42. ற்கு குடிமகன் புஞ்சைக்கு வடக்கு வயிறுனேந்தல் எல்கைக்கு மரமு

43. தெற்கு எல்கை கரதேவர் புஞ்சைக்கு வடக்கு இதின் ஆத்துக்கு மேற்க்கு வயிறுனேந்தல் பண்ணை
44. க் காரன் புஞ்சை வயலுக்கு வடக்கு இதின் மேற்கு வயிறு னேந்தல் க
45. ண்மாயி வடகலுங்குக்கு வடக்கு இதன் மேற்கு வயறு னேந்தல் புதுகண்மாயி
46. உள்வாயில் வகுத்து காலுக்கு வடக்கு நெஞ்சியேந்தல் எல்கைக்கும் வட
47. க்கு ராக்கப்பிள்ளையார் கோவிலுக்கு கிளக்கு முட்டத்திட னேந்தல் சின்ன திடலுக்கு கிளக்கு இதின்
48. வடக்கு நொச்சியடி இறக்கத்துக்கு கிளக்கு வயிகை ஆத் துக்கு வடக்கு மேற்கு எல்கையா
49. வது நயினாமணியக்காரன் காலுக்கு வடக்கு நின்று தில் லாப் பிள்ளை ஊரணி மேல்கரை புளி
50. யமரத்துக்கு கிளக்கு முத்திருளப்ப பிள்ளை ஊரணி கீள் கரைக்கு கிளக்கு வடக்கு ஓடிய எல்கை
51. கொளத்தூர் காலுக்கு வடக்கு தேதாங்கால்காலுக்கு நாகாச்சி எல்கைக்கி கிளக்கு இ
52. தின் கிளக்கு ஓடிய எல்கை தேத்தாங்கல எல்கைக்கு மே ற்கு மறு தொண்டி இறக்கத்தில்
53. நின்று தெற்கு ஓடிய கொளத்தூர் கிழக்கு நல்ல முத்தை யன் பட்ட
54. விருத்தி புஞ்சை கீள் பொளியில் நின்று மேற்கு இதின் தெற்கு தொரைராயன் ஏந்த
55. ல் கண்மாயி உள்வாயில் அளகுபிள்ளை சாலுக்கு மேற்கு இதின் தெற்கு மேப்படி கண்ம்
56. மாயிட தென்மூலை கரையில் நின்று காவனூர் சூாலுக்கு மேற்கு இதின் கிளக்கு காவனூர்
57. காலுக்கு வடக்கு பனையூர் பாதைக்கு கிளக்கு இதின் வடக்கு கொளத்தூர் வகுத்துகா
58. லுக்கு தெற்கு இந்த நான்கு எல்லைக்கி உட்பட்ட நஞ் சை புஞ்சை நத்தம் செய்

59. தலை திட்டுத்திடல் பாசிபடுகை மாவிடை, மரவிடை மேல்நோக்கிய மரம் கீ
60. ள்நோக்கிய கிணறு நிதி நிஷேப ஜெலதரு பாஷண சித்த சு
61. வாத்திய மென்றுசொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ சுவா மியங்களும் மற்றும்
62. எப்பேர்ப்பட்ட சகலசமுதாய ப்ராதிகளும் தானாதி வினிய விக்கிரயங்களுக்கு யோக்கியம
63. ாக நமக்கு தனுக்கோடிக் கரையில் தைஇ அமாவாசி புண்ணிய காலத்தில் சகி இர
64. ண்ணியோதக தானபூர்வமாக சருவமானியாக தானம் பண்னிக் குடுத்த
65. படியினாலே ஆசந்திராக்கமாக சந்ததி பிரவேசமே ஆண்டு அனுபவித்துக் கொ
66. ள்வாராகவும் பாட்டு பள்ளு சோலை உடையானும் சாத்தகு
67. டும்பனும் தண்டும் பூலிக்குடும்பனும் காத்தா குடும்பனும் உள்பட்ட பிரசையலும்
68. மற்றும் உண்டாகிய குடிபடையும் சர்வமானியமாக அனு பவித்துக் கொள்
69. வாராகவும்
70. — — — — — — — — — — — — இந்த தருமத்தை யாதாமொ
71. ருத்தன் பரிபாலனம் பண்ணிவவர்கள் சேதுவிலேயும் காசி யிலேயும் கோட

## செப்பேடு எண். 53

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : சிவகுமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : கலாநிதி கோனய்யன் புத்திரன் ராமய்யன்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1658 நல ஆண்டு தை அமாவாசை புண்ணிய நாள் (கி.பி 19-1-1737)
4. செப்பேட்டின் பொருள் : இராமனய்யனுக்கு முதலூர் கிராமம் தானம்

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக ஐம்பத்திரண்டு சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஆக்கினைக்கு சுக்கிரீவன், பிரசங்கத்திற்கு ஆதிசேஷன், சர்வ சீவதயாபரன், கருணாகரன் முடி இடன் கவன் துரகநகுலன் இயல் இசைநாடக முத்தமிழ் அறிவாளன், அனபாய அதிவீரன், அதிஜெயன், அரும்பொருள் கடாட்சன் விர தரச மன்றுலான், அன்னதான சீலன் ஜெகராஜபணிபாலன் என்ற பன்னிரெண்டு பெயர்கள் மட்டும் புதுமையாக இந்தச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

கலாநிதி கோனய்யன் மகன் ராமனய்யன் என்பவருக்கு கோவிந்தராஜ சமுத்திரம் என்ற முதலூர் கிராமம் இந்தச் செப்பேட்டின் படி சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ளது. தானம் பெற்றவரின் பெயரில் ''ரிக் சகாந்தியக்ர்'' கலாநிதி என்ற சிறப்புத் தொடர்கள் குறிக்கப்பட்டதில் இருந்து இவர் ஒரு வடமொழி வித்தகர் என்பது தெரிகிறது. இந்த ஊர் இன்றைய இராமநாத

புரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் அமைந்து உள்ளது. முந்தைய நிலக்கூறான செவ்விருக்கை நாட்டில் அமைந்திருப்பதாக செப்பேட்டில் காணப்படுகிறது. அந்த ஊருக்கான நான்கு எல்லைகள் மிகவும் துலக்கமாக தரப்பட்டுள்ளன. இதில் சொல்லப் படுகின்ற வயறுனேந்தல் (வரிகள் 43, 45) கிராமம் இன்று வயிரவனேந்தல் என்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஊரில் நாட்டு வைத்தியம், ஆசிரியப்டணி, ஆகிய பணிகளில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு முந்தைய மன்னர்கள் மானிபங்கள் வழங்கி யிருப்பதும் அவை இந்த ஊருக்கான எல்கை மாலில் முறையே குடிமகன் புஞ்சை நல்ல முத்தையன் பட்டவிருத்தி எனக் குறிப் பிட்டு இருப்பது ஆகும். அங்கு குயவர்கள் வாழ்ந்து வந்ததை குயவன் திடல் என்ற சொற்றொடர் குறிக்கின்றது. மற்றும் குளத் தூர் கண்மாய், வெண்ணெய்குடி கண்மாய், காருகுடி, கண்மாய், பழைய புதிய கண்மாய்கள் என ஐந்து கண்மாய்களும் அவைகளுக்கான வாய்க்கால்கள் குளத்தூர்கால், காவார்கால்னூ அழகுப்பிள்ளைகால், நயினா மணியக்காரன்கால், தேத்தாங்கால் கால், என்ற பெயரில் அமைந்து இருந்ததும் இந்தச் செப்பேட்டுச் செய்தியாக உள்ளன. இவை நொச்சியடியிறக்கம், மருந்தோண்டி யிறக்கம், ஆகியன அங்குள்ள முக்கியமான அடையாளங்களா கவும் காட்டப்பட்டுள்ளன. இந்த ஊரின் கண்மாய் கலுங்கை யும் இரண்டு மடைகளையும் கி.பி 1637ல் சடைக்கன் சேதுபதி மன்னர் அமைத்தாக அங்குள்ள கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலேகண்ட எல்கைமாலில் வகுத்துக்கால், கலுங்கு, திடல், இறக்கம், பாசி, படுகை, பொலியேந்தல் என்பன இந்த வட்டாரச் சொற்கள்.

## செப்பேடு எண். 54

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1659 மேல் செல்லா னின்ற
2. பிங்கல நாம சம்வச்ரத்தில் உத்திராயனத்தில் வசந்த ரிதுவில் வைகா
3. சி மாதத்தில் பூர்வபட்சத்தில் பஞ்சமியும் சுக்கிரவாரமும் பூசநட்சத்திர
4. மும் சித்தநாம யோகமும் ஸ்வால வாகனமும் கூடிய சுபதினத்தில் பதி
5. ஸ்ரீமன் மகா மண்டலேசுரன் அரியராயிரதள விபாடன் பாசைக்குத்தப்
6. புவாராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொ
7. ண்டநாடு கொடாதான் பாண்டிய மண்டலத் தாபானாச் சாரியன் சோ
8. ழ மண்டல ஸ்தாபானாச்சாரியான் தொண்ட மண்டல சண்டப்பிரசண்
9. டண் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண பட்டணமும் எம் மண்டலமும்
10. அளித்து கசவேட்டை கண்டருளிய ராஜாதிராஜன் ராஜ பரமேஸ்வரன்

---

† நூலாசிரியரால் கள ஆய்வின் பொழுது திருஉத்தர கோச மங்கையில் கண்டுபிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

11. ராஜ மார்த்தாண்டன், ராஜகுலத் திலகன், துட்டரில் துட்டன் கொ
12. ட்டமடக்கி வையாளி நாராயணன் இவுளி, பாவடி மிதித் தேறுவார் க
13. ண்டன் சாடிக்கார கண்டன் சாமித் துரோகியர் மிண்டன் ஆற்றில் பாய்ச்சி, கடலி
14. ல் பாய்ச்சி, மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்குவே
15. லி தளங்கண்டு தத்தளிப்பார் கண்டன் அரசராவண ராமன் அ
16. டியார் வேளைக்காரன் பாதாள விபாடண் பகை மன்னர் சரபகெரு
17. டன் உரிகோல் சுரதாணன் அந்தப்புர கண்டன் இளஞ் சிங்கம் தளஞ்சி
18. ங்கம் பகை மன்னர் சிங்கம், மதுரை மானங்காத்தான் வையை வளநா
19. டன் கொடைக்குக் கருணன், பரிக்கு நகுலன், வில்லுக்கு விசயன் மல்
20. லுக்கு வீமசேனன் சத்திய அரிச்சந்திரன் பொறுமைக்கு தர்மபுத்தி
21. ரன் செம்பிளவள நாடன் வீரத்தண்டை சேமத்தலை விளங்கு மிரு தாளினா
22. ன் அநுமகேதனன் கெருட கேதனன் மீன கேதனன் சிங்க கேதன
23. ன் செங்காவிக் குடைமேல் சல்லிவிருதும் உடைய தே
24. வன் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன், இராமநாத சுவா
25. யி காரிய துரந்தரன் துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலோத்
26. துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக் கும் மகா
27. காராசராசஸ்ரீ இரண்ய கற்பயாசி ரெகுநாத சேதுபதி காத்த தேவர்

28. அவர்கள் மாத்ரு வர்க்கத்துக்கும் பிதுரு வர்க்கத்தும் புண்ணியமா

29. கவும் ஜீரண, போசன காலத்தில் திருவிளக்கு திருவேறின பாவ நி

30. பரணமாகவும் பூதானமாகக் கொடுத்த காக்கூர் வட்டகையி

இரண்டாம் பக்கம்

31. ல் கதையனேந்தல் நான் கெல்கைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை, மாவடை

32. மரவடை, திட்டு, திடல், நிதி, நிக்ஷேப ஜலதருபாசன க்ஷரதனா காத்து

33. சகல சமுதாயப் பிராப்தியும் கோதம கோத்திரத்தில் போதாயென சூத்திர

34. த்தில் இராமலிங்க நம்பியின் புத்திரன் மங்களேஸ்வர குருக்கள் கையி

35. ல் சகித்தாரபூர்வமாக ராசராசேஸ்வரி யம்மன் சன்

36. னதியில் தானம் பண்ணிக் கொடுத்தோம் அத்தப்படிக்கு சந்திராதித்தன் வ

37. ரை சந்ததிப் பிரவேசம் ஆண்டு அனுபவித்துக் கொள்ள கடவாரா

38. கவும் இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணின பேர் கோடி சிவலிங்க

39. பிரதிஷ்டையும் கோடி விரும்ம பிரதிஷ்டையும் கோடி கோதான பூ

40. தானம் பண்ணின பலனையடையக் கடவாராக, இந்த தர்மத்திற்கு விகா

41. தம் நினைத்தபேர் கெங்கைக் கரையிலே காராம் பசுவை யும் பிராமண

42. ரையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவாராகவும்

# செப்பேடு எண் 54

**(விளக்கம்)**

1. செப்பேட்டை வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : ராமலிங்க நம்பியின் புத்திரன் மங்களேசுவர குருக்கள்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாத்தம் 1599 பிங்கல ஆண்டு வைகாசி மீ (கி. பி. 23—5—1737)
4. செப்பேட்டின் பொருள் : கதையனேந்தல் என்ற கிராம தானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய ரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் ஐம்பத்து ஒரு சிறப்பு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்படுகின்றன.

இராமலிங்க நம்பி புத்திரன் மங்ளேசுவரக்குருக்கள் என்பவருக்கு மன்னர் காக்கூர் வட்டகையில் உள்ள கதையனேந்தல் என்ற கிராமத்தை பூதானமாக வழங்கியதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊர் இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் முதுகுளத்தூருக்கு கிழக்கே திருஉத்தரகோசமங்கை சாலையில் எட்டுக்கல் தொலைவில் உள்ள காக்கூர் என்ற பெரு ஊரை அடுத்த சிற்றூராகும். இந்த சிற்றூரை மன்னர் தமது இராமநாதபுரம் அரண்மனை வளாகத்தில் உள்ள ராசராஜேஸ்வரி அம்மன் கோயில் சன்னதியில், குருக்கள் கையில் தானம் பண்ணிக் கொடுத்தாகத் தெரிகிறது. குருக்களது ஊர் பெயர் செப்பேட்டில் குறிக்கவில்லையென்றாலும்,

இராமநாதபுரத்தையடுத்த திருஉத்தரகேசமங்கை இறைவனது பெயரைத் தமது பெயராகக் கொண்டு இருப்பதால், தானம் பெற்ற மங்களேசுவர குருக்கள் இராமநாதபுரத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் அல்லது திருஉத்தரகேசமங்கை கோயில் பூஜாகரராக இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. அவரது தந்தையின் பெயரில் உள்ள ''நம்பி'' என்ற விருதியில் இருந்து குருக்களது முன்னோர்கள் தஞ்சை வள நாட்டில் இருந்து சேதுநாட்டில் குடியேறிய வைணவர் வழியினர் என்பதையும் ஊகிக்க முடிகிறது. ஆனால் இந்த தானத்தை பெற்றவர் மங்களநாதசுவாமி பூசையை மேற்கொண்டுள்ள ஸ்மார்த்தர் என்பது தெளிவு. மற்ற செப்பேடுகளையும் விட இந்த செப்பேட்டில் ஒரு செய்தி மறைமுகமாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது அதாவது இந்த சேதுபதி மன்னர் ஒருநாள் இரவு உணவு உண்டு கொண்டு இருந்தார். அப்பொழுது மன்னரது உணவு அறையில் இருந்த விளக்கு திடீரென அணைந்தது; அந்தகாரம் சூழ்ந்து நின்றது. இந்த நிகழ்ச்சியை ஒரு அசாதாரண நிகழ்வாக மன்னர் கருதினார். இராமநாதபுரம் அரண்மனையில் முன்னர் எப்பொழுதும் நிகழ்ந்திராத செயல் அல்லவா? இதற்கு வேத விற்பன்னர்கள் வழங்கிய அறிவுரை பாவநிவாரணமாக புனிதச் செயல் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் என்பது. அதனால் இந்த பூதானத்தை மன்னர் மேற்கொண்டார் எனத் தெரிய வருகிறது. ''பாவநிவாரணமாகவும்''பூதானம்'' கொடுத்த என்ற தொடர் இதனைத் தெரிவிக்கின்றது. ''ஜீரண போஜன காலத்தில் திருவிளக்கு திருவேறின'' என்ற தொடர் முன்னால் குறிக்கப்பட்டுள்ள நிகழ்வினைத் தெரியப்படுத்துகிறது.

இவ்விதம் தங்களது பெற்றோர் மூதாதையரது பாவ நிவாரணத்திற்காக அந்தணர்களுக்கு தானம் வழங்குவது நமது நாட்டின் தொன்மையான மரபு. அதனை சேதுபதி மன்னர்களும் பின்பற்றியதில் புதுமை இல்லை. இந்த மன்னரது முன்னவரான திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் பெற்றோர்களுக்கு மட்டும் அல்லாமல், அவரால் மிகவும் போற்றிப்பணியப்பட்ட மதுரை திருமலை நாயக்க மன்னரது பாவ நிவாரணத்திற்கும் திருப்பெருந்துறை திருக்கோயிலில் தானம்வழங்கியதைப் பார்த்தோம் அல்லவா !

## செப்பேடு எண். 55

(நகல்)

1. சொஸ்திஶ்ரீ சாலிவாகன சகாத்தம் 1664 இதன் மே
2. ல்ச் செல்லா நின்ற துந்துபிநாம சம்வசசரம் உத்தராய ணத்தி
3. ல் வசந்த ரிதுவில் வைய்காசி மீ˝ அ உ பூறுவ பட்சத்து
4. சதுற்தெசியும் சுக்குரவாரமு விசாக நட்செத்திரமும் வரி
5. யாளி னாம யோகமும் வணி கரணமும் பெற்ற சுபதின
6. த்தில் தேவ நகராதிபன் சேதுமூலர க்ஷாதுரந்தரன் ரா
7. மனாதசுவாமி காரிய துரந்தரன் கண்டநாடு கொண்டு கொ
8. ண்ட நாடு கொடாதான் பாண்டிமண்டலந் தாபனசா
9. ரியன் சோள மண்டலப் பிறதிஷ்டபானாசாரியன் தொண்
10. டமண்டல சண்டப்பிறசண்டன் ஈளமுங் கொங்கு மி
11. யாட்பாண பட்டணமும் எம்மண்டல மளித்து கெசவே
12. ட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச பரமேசுபரன் ராச
13. மாத்தாண்டன் துட்டரில் துட்டன் துட்டர் கொட்டம
14. டக்கி தொட்டவர் மறவாதவன் அன்ன சத்திர சோமன் கு

---

* ARE. A. 42/1947

இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம், இராமநாதபுரம்

அமைப்பு : 18.7. செ.மீ. × 15.5. செ.மீ.

15. டைக்கு கற்னன் பொறுமைக்கு தற்மர் பரிக்கு நகுலன் செ
16. ங்காவிக் குடையான் சேமத்தலை விளங்கிய தாளினான்
17. கெருடகேதனன் அனுமகேதனன் சிங்ககேதனன் மீன
18. கேதனன் துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்து
19. ங்கசோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்
20. கும் ஸ்ரீ இரணிய கெற்பயாசியான முத்துரகுனாதச் சேது
21. பதிகாத்த தேவரவர்கள் புத்திரன் முத்துக் குமார விசைய
22. ரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் மாத்ரு வர்க்கத்து
23. க்கும் பிதாவர்க்கத்துக்கும் புண்ணியமாக திருவுத்தரகோ
24. சமங்கை நயினார் மங்கைனாத சுவாமி சன்னதியில் சக
25. ஸ்ரலிங்க சுவாமிக்கு அபிஷேக நெய்வேத்தியம் திருமாலை
26. திருவிளக்கு நடக்கும்படிக்கு விட்டுக்குடுத்த கிறாமம் பாலை
27. யேந்தல் னாங்கெல்கை குத்துக் கல்லுக்குள் பட்ட ந
28. ஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத் திடல் நிதிநிட்
29. சேபமும் வாவி கூபமும் சொற்னாதாபும் சகலசமுதாயப் பிறா
30. த்தியும் வரி இவை உள்ளிட்ட உலுப்பையும் சறுவ மானிப மாக
31. க்குடுத்து சுவாமி மங்கைனாத சுவாமிக்கும் அம்மன்வாரே
32. று பூண் முலையம் மனுக்கும் சுக்குறவாறக் கட்டளைக்கு அ
33. ம்மனெளுந்தருளப் பண்ணுகிறதுக்கும் அம்மனுக்கு
34. திருநந்தா விளக்கும் குமாரதோப்பு நந்தவனத்துக்கும்
35. விட்டுக் குடுத்தது தேரிரு வேலியில் நம்முட காவல்க்
36. காணியாட்சியான வீசுகொண்ட தேவன் காவல் நஞ்
37. சைபத்தொன்பது மா நிலமும் புஞ்சைத் தட்டு ரெண்
38. டு அந்த ஊரிலே உண்டாகிய காவல் சுவந்திரம் சகல
39. மு நம்முட காவல்க்குடியான துலுக்கர் தறிக் கடமை
40. யும் அந்த ஊரிலே உண்டானாகிய காவல் சுவந்திரப் ப
41. ணமும் சகலமு சுவாமிக்கு சறுவமானிய மாகத் தாம்பிர

42. சாதனங் கட்டளையிட்டோம் இந்தப்படிக்கு ஆதி சந்
43. திராதித்தவரை சந்திறப் பிறவேசம் ஆண்டனு பவி
44. த்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்தை யாதா
45. மொருவர் பரிபாலனம் பண்ணின பேர் கெங்கை
46. க்கரையிலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்டையும் கோ
47. டி விறும்மப் பிறதிஷ்டையும் கோடி அன்னசத்திரங்களும்
48. பண்ணி வைத்த பலனையடைவாராகவும் இந்த தற்மத்
49. துக்கு யாதாமொருவர் விகாதம் நினைத்தபேர் கெங்கைக்
50. கரையிலேயும் சேதுக்கரையிலேயும் மாதா பிதாவையும்
51. குருவையும் காராம் பசுவையும் பிராமணனையும் கொன்
52. ற தோஷத்திலே போகக் கடவாராகவும் உ ஸ்வதத்தா த்விகு
53. ணம் புண்யம் பரதத்தாந பாலநம் பரதத் தாப
54. ரேண ஸ்வதத்தம் நிஷ்லம் பவேத் உ இந்தப் படிக்கு எ
55. ழுதினேன் திருப்புல்லாணி யூர்பங்காரு பண்டாரம்
56. புத்திரன் முத்துப்பண்டாரம் கையெழுத்து உ சிவமயம்

## செப்பேடு எண் 55

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துக்குமார விஜயரகுநாத சேதுபதி காத்த தேவர்
2. செப்பேடு பெற்றவர் : திருவுத்தரகோசை மங்கை நயினார் மங்கைநாத சுவாமி ஆலயம்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1664 துந்துபி ஆண்டு வைகாசி மாதம் (கி.பி. 7-6-1742)
4. செப்பேட்டின் பொருள் : மேலே கண்ட கோயில் சகஸ்ர லிங்க சுவாமி அபிஷேக நைவேத்தியம் முதலியவைகளுக்கு கிராமம் நன்கொடை

இந்தச் செப்பேட்டை வழங்கிய சிவகுமார முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவரது விருதாவளியாக இருபத்து இரண்டு பெயர்கள் இத்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளில் ''தொட்டவரை மறவாதான்'' என்ற ஒரு புதிய சிறப்புப் பெயரைத் தவிர ஏனையவை முந்தைய மன்னர்களது செப்பேடுகளில் கண்டவையாகும்.

சிவத்தலங்களில் மிகவும் சிறப்பான திருவாதவூர் அடிகள் போன்றவர்களால் போற்றப்படும் திருஉத்தரகோசமங்கையின், இறைவர் மங்கைநாத சுவாமி சன்னதியில் சங்கரலிங்க சுவாமிக்கு அபிஷேகம், நைவேத்தியம். திருமாலை, திருவிளக்கு ஆகிய திருக்கைங்கரியங்கள் நடத்துவதற்காக பாலையாறு ஏந்தல் என்ற கிராமத்தை தர்மமாக விட்டுக்கொடுத்ததை இந்தச் செப்பேடு

தெரிவிக்கின்றது. இந்தச் செப்பேட்டில் இருந்து திருவுத்திர கோச மங்கை இறைவன் பெயர் மங்கைநாத சுவாமி என்றும் இறைவியின் பெயர் வாரேறுபூண்முலை அம்மன் என்றும் தெரிய வருகிறது. ஆனால் இப்பொழுது சுவாமியின் பெயர் மங்கள ஈஸ்வரர் என்றும் அம்மனின் பெயர் மங்கள ஈஸ்வரி என்றும் வழங்கப்பட்டு வருகிறது. திருவாசகத்தின் பகுதிகளான நீத்தல் விண்ணப்பத்தையும், திருப்பொன்னூசலையும் இந்த திருக்கோயி லில் தான், திருவாதவூரடிகள் இயற்றினார், இந்தப் பாடல் களில் ''உத்தரகோச மங்கைக்குஅரசே'' என்று விளித்து பாடு கிறார். இறைவன், இறைவி பெயர் எதுவும் இல்லாமல் திரு வாசகம் புனையப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தச்செப்பேடு திருஉத்திரகோசமங்கை இறைவி யின் சுக்கிரவாரக்கட்டளை திருநந்தா விளக்கு, நந்தவனம், அம்மன் எழுந்தருப்பண்ணல் ஆகியவைகளுக்கு தேரிருவேலி கிராமத்தில் உள்ள காவல்காணியான வீசு கொண்ட தேவன், காவல் நஞ்சை பத்தொன்பது மாநிலமும் புஞ்சை திட்டு நிலங் களையும், சர்வமானியமாக கட்டளையிட்டுள்ள விவரமும் தெரிய வருகிறது. அத்துடன் தேரிருவேலி கிராமத்து காவல்க் குடியான துலுக்கர் நெசவாளிகளாக இருந்தவர்கள் என்பதும் அவர்களது தறிக்கடமையும், அதில் உண்டாகிய காவல் சுதந்திரப் பணமும் கோயிலுக்குரியதாகக் கட்டளையிடப்பட்டதாகவும் இந்தச் செப் பேடு தெரியப்படுத்துகின்றது.

இந்தச் செப்பேடு சம்பந்தப்பட்ட பாலையாறு ஏந்தல் கிராமம் இராமநாதபுரம் வட்டத்திலும், தேரிருவேலி கிராமம் முதுகுளத்தூர் வட்டத்திலும் இருக்கின்றன.

முந்தைய இராமநாதபுரம் சீமையின் பாதுகாப்பு மற்றும் காவலுக்காக ஆங்காங்கு கிராமங்களில் காவலர்கள் இருந்த னர். தேசகாவல், தலங்காவல் திசைகாவல், என்று மூன்று வகையான காவல் பிரிவினர் இயங்கி வந்ததை இராமநாதபுரம் மேனுயுவல் குறிப்பிடுகிறது. இன்னும் சில ஊர் களில் தும்பிச்சி காவல் என்றதொரு காவல் பணி இருந்ததை யும் இந்த நூல் தெரியப்படுத்துகின்றது. இந்தக் காவல் பணி யினை மேற்கொண்டு இருந்தவர்களுக்கு ஆங்காங்கு காணிகள்

விட்டுக் கொடுக்கப்பட்டு இருந்ததுடன் குடிமக்களிடமிருந்து காவல் சுவந்திரம் என்ற வகைப் பணம் அல்லது விளைச்சலில் ஒரு சிறு பகுதியை வசூலித்துக் கொள்ளும் உரிமையையும் சேதுபதி மன்னர்கள் அவர்களுக்கு வழங்கி இருந்தனர்.

இந்தப் பணியில் துலுக்கரும் நியமனம் பெற்று இருந்த தாக (வரி. 39, 40) இந்தச் செப்பேட்டில் காணப்படுகிறது. பெரும்பாலும் இந்த கிராம மக்கள், தறிக்காரர்களாகவும் சிறுவணிகர்களாகவும் இருந்து வந்ததை முந்தைய செப்பேடு தெரியப்படுத்தினாலும் அரசுப் பணியில் காவல் காப்பவர் களாகவும் இருந்து வந்ததை இந்தச் செப்பேடு தெளிவு படுத் துகின்றது. இந்தச் செப்பேட்டில் (வரி, 39) காணப்படுகின்ற ''நம்முடைய காவல் குடியான'' என்ற தொடரில் இருந்து சேதுபதி பூமியில் வாழ்ந்த துலுக்கருக்கும் மன்னருக்கும் இடை யில் மிகவும் நெருக்கமான, வாஞ்சையுள்ள உறவு இருந்து வந்ததும் தெரியவருகிறது.

## செப்பேடு எண் 56
(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1664 இதன் மேல்ச் செல்லாநின்ற துந்துபி வருஷ
2. நாம ஸம்வத் சரத்தில் தெட்சணாயத்தில் சரத்ரிதுவில் அற்பிசி மாஸத்தில் பவற்ணமையும் சோ
3. ம வாரமும் அசுபதி நட்செத்திரமும் வச்சிர நாம யோகமு சுபகரணமும் பெத்த சுபதினத்தில் சுபஸ்ரீ
4. மன் மகாமண்டலேசுபரன் அரிய ராயிர தள விபாடன் பாசைக்குத் தப்புவ ராயிர கண்டன் மூவரா
5. யிர கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரி
6. யன் சோளமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன் தொண்ட மண்டலப் பிறசண்ட பிறசண்டன் யீழமுங்
7. கொங்கு யாழ்ப்பான பட்டணமும் கெசவேட்டை கொண்ட ருளிய ராசாதிராசன் ராசபரமேசுப
8. ரன் ராசமாற்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதீபன் வீரரில் வீரன் வீரகஞ்சுகன் வீரவெண்பா
9. மாலை வீரரண கேசரி வீரவிற்கிரமாற்கன் பரிக்கு நகுலன் குடைக்குக் கற்னன் வில்லுக்கு விசையன் மல்லு
10. க்கு வீமசேனன் பொறுமைக்கு தற்மபுத்திரன் ஆக்கி னைக்கு சுக்கிரீபன் அழகுக்கு வாலசீவகன் பிறச

---

* ஏர்வாடி தர்கா பரம்பரை நிர்வாகி
அமரர் P. சையது இப்ராகிம் அவர்களிடமிருந்து
கள ஆய்வின் பொழுது நூலாசிரியரால் படி எடுக்கப்பட்டது
அமைப்பு : 32.செ.மீ X 18.6 செ.மீ

11. ங் கத்துக்கு ஆதிசேஷன் கருணைக்கு ரெகுராமன் சத்தியா பாஷா அரிச்சந்திரன் சத்துருவாதியள் மி
12. ண்டன் சகலகுண சம்பன்ன சங்கீத சாயுத்திய வித்தியா வினோதன் சறுவசீவ தயாபரன் சாமித்
13. துரோகியள் மிண்டன் தண்டுவார் மிண்டன் தளங்கண்டு தத்தளிப்பார்கள் கண்டன் தந் தார
14. தார பிறதார புத்திரன் சகல சாம்பிறாச்சிய லட்சுமி நிவா சன் கருதலர்கள் முடியிடறு கள துரந்த
15. ர னகுலன் கட்டாரி ராயன் கருணா கடாட்சன் காமிநி கந்தப்பன் கலைதெரியும் விற்பன்ன கலியாண
16. குணசீலன் இரவிகுல சேகரன் இறவிவற்மன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் இடறு
17. வார் கண்டன் இடறுவார் கோடாலி யிரவலர் கலி கோபன் அரசராவண ராமன் அடியார் வேளை
18. க் காறன் அந்தம் பிற கண்டன் அனுமந்நுசம் கருடத்துசம் மீன்துவசம் சிங்கத்துசம் வியாக்கிறம
19. துவசம் நீமிதுசம் காவித்துசமுஞ் செங்காவிக் குடையும் அதின் மேல் விருது சல்லியும் உண்டான தே
20. வாதி தேவன் அடைக்கலங் காத்தான் உரிகோ சுரதான் வீரதண்டை சேமட்தலை விளங்கிய தாளினான்
21. மனுநீதி மன்னன் மலைகலங்கினும் மனங்கலங் காதவன் வன்னியராட்டந் தவிள்த்தான் அசுபதி கெ
22. சபதி நரபதி சேது செம்பி வளநாடன் வேதியர் காவலன் கொளு மீதி கொண்டு குவலையங் காத்
23. தவன் சேதுமூல ரெட்சா துரந்தரன் தேவ நகராதிபன் துரகரேவேந்தன் துலுக்கர் தள விபாட
24. ன் சோடச மகாதான சீலன் பஞ்சகால பயங்கரன் பஞ்ச பாணா அவதாரன் பஞ்சவற்ன்ன ராவுத்தர்
25. முண்டன் படைக்குங் குடைக்கும் ஓடாத கண்டன் ராம னாத சுவாமி பறுவதவற்தனி பாதாரவிந்த சே
26. சவிதன் தனுக்கோடி காவலன் திலத நுதல் மடமாதர் மடலெளுது புயசுமுகன் இயலிசை நாடக முத்

27. தமிளறிவாளன் அனகன் அதிவீரன் அகளங்கன் அதி செயன் புவனேகவீரன் மருவலர் கெச சிங்

28. கம் விருதான் வலியச் சருவி வளியில் கால்நீட்டி துட்டர் கொட்ட மடக்கி பட்டமானங் காத்தான்

29. பகைமன்னர் சற்ப கெருடன் பரதள விபாடன் பனுக்கு வார் கண்டன் பர்ராச சிங்கம் தாலிக்கு வேலி

30. தெக்ஷண சிங்காசனாபதி மனு நீதி மன்னன் செகராசர் பணிபாதன் அன்னதான சோமன் அம

31. லன் அம்போரு கடாட்சன் தற்மபரி பாலனன் சற்பன்ன பாஷா துரந்தரன் சங்கீத சுவாமி பறு

32. வதவற்த்தனி நாயகி ராமநாதசுவாமி கருணா கடாட்சன் பரிபூறண கீற்த்திப் பிறதாபன் ஸ்ரீமது இ

33. றணிகெற்ப்பயாசி ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர் கள் குமாரர் ஸ்ரீமது முத்துக்குமார வி

34. சைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஏறு பாடிப் பள்ளிவாசலுக்குக் கட்டளையிட்ட கிறாம

35. த்துக்கு முசாபர் நல்ல இபுறாகிமிடத்தில் தாம்பிற சாதனம் கொடுத்தபரி சாவது இப்போது

36. செம்பி நாட்டில் பெரியமாயா குளமான ஏந்தலதற்க் கெல்கையாவது கீள்யெல்

37. கை நீலமுடையான் கண்மாயி கீள்கரைக்கும் சின்னு பன்னு பண்டாரம் தோட்டத்துக்கு

38. மேற்கு வடயெல்கையாவதும் பண்ணைக் காட்டில்த் தொலிச்சான் வீரன் தட்டுக்கும்

39. பனையேந்தல் புஞ்சைக் காட்டுக்கும் யெதம் பாடல் புஞ்சைக் காட்டுக்கும் தெற்கு மே

40. மலெல்கையமவது ஷை யெதம்பாடல் காட்டுக்கும் ஆண்டி சுத்தான் வாகையடி ஊ

41. றணிக்கும் கிளக்கு தெற்கெல்கையாவது ஓரக்கரைக்கு வடக்கு யின்னாங் கெல்கைக்

42. குள்பட்டது ஆயக்கட்டுப்படிக்கு நஞ்சை விரையடி 50 கலம் புஞ்சைத் தட்டு கொச்சமுள்பட செய்

இரண்டாம் பக்கம்

43. க்கு விரையடி 4 கலத்து 3 கலம் ஆக விரையடி 54 கலத்து 3 கலமும் ஷை ஊர் புஞ்சையில் திருவுத்திரகோசமங்

44. கைப் பிறவேசமாயிருந்த தட்டு 32' அரைக்காணி சதிர செவ்வாய் மணக்காடும் கட்டளையிட்டுக் கொ

45. டுத்தக் காட்டுக்கு யெல்லையாவது மாவிலங்க ஊரணிக் கும் அரியவன் கட்டையன் தட்டு

46. க்கும் கரிமுந்தலுக்கும் கிளக்கு தெற்கெல்கையாவது சமுத்திரக் கரைக்கு வடக்கு கிளக்கெ

47. ல்கையாவது பள்ளிமுனைக் குடாவுக்கும் வாளி நாடான் தட்டுக்கும் பூசாறி நா

48. டான் தட்டுக்கும் தச்சனூறணிக்கும் மேற்கு ஓரக்கரைக்கு தெற்கு இன்னாங்கெல்கை

49. க்குள்பட்ட செவ்வல் மணல் நஞ்சை புஞ்சையும் ஊரணி குட்டம் திட்டு திடல் மாவடை ம

50. ரவடை மேல்நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணரும் நீரும் பாசியும் பள்ளுப் பறை

51. ஊளியம் உலுப்பை வைக்கல் கட்டு வண்டில்மாடு ஆயக் கட்டுவரி உப்பளவரி நில

52. வரி பள்வரிப் பறைவரி கம்பளவரி முள்ளுவரி காணிக்கை வரி இவ்வரி முதல் யெவ்

53. வரிப்பிறக்கிலும் அவ்வரிமுதல் அஷ்டபோக தேச சாமியங் களும் ஓடையளத்தில்

54. மாதாந்தமாண்டு பறை உப்பு மூன்றெருவையில் நெல்லுப் புல்லு யேதொன்றாகிலும்

55. பொதிபிடிச்சு கொள்வினை விற்பினை யாபினை யாபாரம் பண்ணிகொள்கிறதுக்

56. கு ஆயந் தீருவை சம்மாடஞ் சத்தவரி யிதுமுதலான அஷ்ட்டபோக தேசசாமியங்களும்

57. பள்ளிவாசலுக்கு சறுவமானியமாகக் கட்டளையிட்ட படிக்கி ஆதித்த ரந்திராதித்த சந்ததிப் பிற

58. வேசமாக புத்திர கோத்திரமாக ஆண்டனுபவித்து கொள் பவராகவும் இந்த தற்மத்தை யாதாமெ

59. ாருதர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கோடிப் பிரதிஷ்ட்
டையும் கோடி சிவலிங்கம் பிரதிஷ்ட்டை

60. யும் கோடி கன்னிகாதான பிற்ம பிரதிஷ்ட்டையும் கோடி
அன்னதான சொற்னதான கோதானமும் ப

61. ண்ணிவிக்கிற சுகுர்தத்தை அடைவாராகவும் இந்த தற்
மத்துக்கு யாதாமொருதர் அகிதம் பண்ணி

62. ன பேர்கள் கெங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் மாதா
பிதாக் குருக்களையும் காராம்பக

63. வையும் பிறாமணாளையும் வதைபண்ணின தோஷத்திலே
போவாராகவும் இந்த தற்மத்துக்கு

64. யாதாமொரு யிசிலாமானவர்களில் பரிபாலனம் பண்ணின
னவர்கள் கோடி அடுமை கொண்

65. டு உருமைக்கு விட்ட பலனும் கோடி கச்சு செய்த பலனு
மடைவாராகவும் இந்த தற்மத்துக்

66. கு விகாம் பண்ணினவர்கள் மாதா பிதா ஒஸ்தாத்தை
வதைபண்ணிவிச்சு மக்கத்துப் பள்

67. ளியை இடித்த பாவத்திலே போவாராகவும் யிப்படி சம்ம
தித்து தாம்பிற சாதனங் கொடுத்

68. தோம் ஸ்ரீயிறணியகெற்பயாசி இரகுனாதச் சேதுபதி காத்த
தேவரவர்கள் குமாரர் ஸ்ரீமது முத்துக் கு

69. மார விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள்
விசுவகோத்திரத்தில் மதுரையிலிருக்கும்

70. மூர்த்தி காலிங்கராயன் ஆசாரி குமாரன் சட்டையப்பன்
லிகிதம் உ

## செப்பேடு எண் 56
### (விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துக்குமார விஜயரெகுநாத சேதுபதி காத்ததேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | ஏர்வாடி பள்ளிவாசல் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1664 துந்துபி வருடம் ஐப்பசி மீ (கி.பி. 1—11—1742) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | ஏர்வாடி பள்ளிவாசலுக்கு பெரிய மாயாகுளம் கிராமம் தானம் |

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக நூற்றி ஒன்று சிறப்புப் பெயர்கள் இந்தப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை சேதுபதி மன்னர்களது செப்பேடுகளில் காணப்படாத எண்ணிக்கை இது. வீரரண கேசரி, சருவசீவதயாபரன், தந்தார்தார் பிறதார புத்திரன், கருதலர்கள் முடி இடறுகள் துரந்த நிருபன், கோடசமகாதான சீலன், பஞ்சகால பயங்கரன், அம்போரு கடாட்சன் என்பன,. இதுவரை சேதுபதி மன்னர் செப்பேடுகளில் பயன்படுத்தப்படாத சிறப்புப் பெயர்களாகும். இவை அனைத்தும் இந்த மன்னரது ஆட்சிக் கால வளமையும் வள்ளண்மையையும், தம் உயிரைப்போல எவ்வுயிரையும், காக்கும் தகைமையையும் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன,

ஏர்வாடி பள்ளிவாசல் தர்மமாக பெரிய மாயாகுளம் கிராமத்தை முசாபர் நல்ல இபுராகீம் என்பவருக்கு கொடுத்த பரிசாக இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கிராமத்துக்கான எல்கை விபரங்கள் கொடுக்கப்பட்டு இருப்பதுடன் இதில் கட்டுப்

பட்ட நந்சைபுஞ்சை நிலங்களின் பரப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது ஐம்பது கலம் நெல் விதைக்கக் கூடிய பகுதி நந்சையும் நான்கு கலம் விதைப்பாட்டு புஞ்சையும் இதில் அடங்கியது ஆகும். அத்துடன் ஏற்கனவே திருவுத்திரகோச மங்கை ஆலயத்திற்குரியதாக இருந்த தட்டு முப்பத்திரெண்டு அரைக்காணி சதுர செவ்வல் மணிக்காடும் இந்தப் பள்ளிவாசல் தருமத்தில் சேர்த்து வழங்கப்பட்டதுடன் அதற்கான எல்கை மாலும் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த தானம் சம்பந்தபட்ட ஊர், காணி ஆகியவைகளில் இருந்து மன்னருக்கு இறுக்கப்பட்டு வந்த ஊழியம், உலுப்பை, வைக்கல் கட்டு வரி, ஆயக்கட்டு வரி, உம்பளமாட்டு வரி, நிலவரி, பள்வரி, பறைவரி, கம்பளவரி, முள்ளுவரி, காணிக்கை வரி, ஆகியவைகளுடன் மேலும் புதிதாக ஏற்படுத்திப்படுகின்ற வருவாய்களும் பள்ளிவாசலுக்குச் சேர இந்தச் செப்பேட்டில் கட்டளையிடப்பட்டுள்ளது. அத்துடன் உப்பு அளத்தில் மூன்றுக்கு ஒரு பறையும்; தானிய தவசங்கள் கொள்விளை, விற்பனைக்கு ஆயம் தீர்வையும், சம்மாடம், சத்தவரி, முதலானவைகளும் ஏர்வாடி பள்ளிவாசலுக்கு சர்வமானியமாக கட்டளையிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டயத்தின் இறுதியிலும் இதனை வழங்கிய சேதுபதி மன்னரது பெயரும் முதன் முறையாக பொறிக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பட்டயத்தின் இறுதியில் இத்தகைய தர்மத்தைக் காத்தவர்களுக்கும் அகிதம் பண்ணினவர்களுக்கும் கிடைக்கும் பலன்களைக் குறிப்பிடும் பகுதியில், இசுலாமிய முறைப்படியான வாசகங்கள் அமைந்து இருப்பது இந்தப்பட்டயத்தின் சிறப்பான அம்சமாகும். அரபுத்தாயத்தில் இசுலாமிய பிரச்சாரத்தைக் தொடங்கிய பொழுது முகம்மது நபி (ஸல்) அவர்கள் தமது பணிகளில் ஒன்றாக அடிமைகளை, அவர்களுக்குரிய தொகையை அந்த அடிமைகளை வைத்திருப்பவர்களிடம் கொடுத்து வாங்கி அவர்களுக்கு உரிமை விட்டு சுதந்திர மனிதராக வாழும்படி செய்தார்கள். தமது பிரதம சீடர்களான அபுபக்கர் போன்றவர்களையும் அவ்விதமே கொத்தடிமை முறைகளை நீக்குவதற்கு உதவி செய்யுமாறு வலியுறுத்தினார்கள்.

ஆதலால் இந்தப்பட்டயத்தின் (வரி 65)ல் ''கோடி அடிமை உருமை கொண்டுவிட்ட பலன்'' என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல இசுலாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான மக்காவிற்கு புனித யாத்திரை மேற் கொள்வதை ''கோடி கச்சு'' (ஹஜ்ஜு என்ற புனிதப்பயணம்) செய்தபலன்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விகாதம் பண்ணிய வர்கள்'' உஸ்தாதை (பரமாச்சாரியரை) வதை பண்ணிவிச்சு மக்கத்துப் பள்ளியை இடித்த பாலத்திலே போவாராகவும்'' என சபிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் பட்டய வாசகங்களில் ஒரு புதுமையை இந்தச் செப்பேடு புகுத்தி உள்ளது.

இதனைப் போன்றே சேதுபதி மன்னரது சகிப்புத் தன் மையையும் பரந்த மனநிலையையும் இந்தச் செப்பேடு பிரதி பலிக்கின்றது. ரெகுநாத திருமலை சேதுபதி காலம் முதல் இசுலாமியப் பள்ளிவாசல்களது பராமரிப்பிற்கும் நிலம், காணிகளை வழங்கும் மரபு சேதுபதி மன்னர்களது அறச்செயல் களில் ஒன்றாக இடம் பெற்றாலும், இந்த மன்னரது தந்தையும் இவரும் முழுமையாக கிராமத்தினை பள்ளிவாசலுக்கு தானம் வழங்கிய பெருமை உடையவர்களாகிறார்கள். இந்த அறக் கொடையினை மீசல்வண்ணிக்களஞ்சியப் புலவர் அவர்கள் தமது ''தீனெறி விளக்கம்'' என்ற இசுலாமிய தமிழ்க்காப்பியத்தில்,

*''தேறல்கொள் சரோருகப் பூந்திருவடித் தொழும்பாய் முன்னங்*
*கூறல்போன் மேலைமாயகுளமெனும் கிராமந்தன்னை*
*மாறலிலாது பானுமதியுவநாள் நாண்மட்டாகச்*
*சாறுவபூமன் விட்டான் சருவமானியமதாக....''*

சேதுபதி சந்ததி பெற்ற படலம் (பாடல் 23)

எனப்பாடியுள்ளார்.

தானம் வழங்கப்பட்ட பெரியமாயகுளம் கிராமம் பெரும் பாலும் புன்செய் நிலமாக உள்ளது. அங்குள்ள நிலம் தட்டு என்று வகைப்படுத்தி வழங்கப்பட்டது. புஞ்சைக்காடு மணக்காடு முந்தல், அடுமை, ஒஸ்தாது ஆகியவை இதே செப்பேட்டில் காணப்படும் வட்டார வழக்குகளாகும்

## செப்பேடு எண் 57

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1667 இதன்மேல் செல்லாநின்ற குறோத
2. ன ஸ்ரீ உத்தராயணத்தில் வசந்த ரிதுவில் வைய்யாசி மீ" 11உ வியாளக்கிழ
3. மை பஞ்சமியும் உத்திராட நக்ஷத்திரமும் சுப்பிறநாம யோகமும் சௌலவாக
4. றணமுங் கூடின சுபதினத்தில் தேவை நகராதிபன் சேது மூல ரக்ஷா துரந்தரன்
5. ராமனாத சுவாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் பரராச செ
6. ச சிங்கம் இரவிகுல சேகரன் இரவிமாத்தாண்டன் சொரி முத்து வன்னியன் ஸ்வஸ்தி
7. ஸ்ரீமன் மஹாமண்ட லேசுவரன் அரியராயிர தள விபாடன் பாஷைக்குத் தப்பு
8. வராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு
9. கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோள மண்டலப் பிரதிஷ்டா
10. பனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிறசண்டன் ஈ ழமும் கொங்கு மியா

---

இராமேசுவரவம் ஆபில் காபில் தர்கா பரம்பரை நிர்வாகி, திருமதி. அருள்மொழி என்ற ஆயிசா தும்மணி மரைக்காயர் இடமிருந்து கள ஆய்வின் பொழுது நூலாசிரியரால் படி எடுக்கப்பட்டது.

11. ட்பாண பட்டணமும் யெம்மண்டலமுமளித்து
12. கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசப
13. ரமீசுவரன் ராசமாத்தாண்டன் ராசகுல திலகன்
14. இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம்
15. ஆற்றில்ப் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடை
16. க்கலங் காத்தான் தாலிக்கு வேலி சத்துருவாதிய
17. ள் மிண்டன் வேதியர் காவலன் அரசராவண ரா
18. மன் அடியார் வேளைக்காறன் பரதள விபாடன் உரி
19. கோல் சுரதானன் அந்தம்பிற கண்டன் சாடிக்காறர் கண்டன் சாமித்துரோகி
20. யள் மிண்டன் பஞ்சவற்ன ராய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கி
21. வைய்யாளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் ஆரியர் மா
22. னங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துரகரேவந் தன் அனுமகேதனன்
23. கெருட கேதனன் கொடைக்கு கற்னன் பரிக்கு நகுலன் வில்லுக்கு விசையன்
24. பரத நாடகப் பிறவீணன் கருணா கடாக்ஷன் குன்றினு யர் மேருவைக் குன்றா வ
25. ளைக்குணில் பொறித்தவன் திலத நுதல் மடமாதர் மடலெழுத வருசுமுகன் செங்கா
26. விக் குடையான் சேமத்தலை விளங்குமிரு தாளினான் விசையலெட்சுமி காந்
27. தன் கலைதெரியும் விற்பனன் காமினி காந்தப்பன் அஷ்ட திக்கு மனோபயங்கர
28. ன் துஷ்ட நிக்கிறக சிஷ்ட பரிபாலன் சங்கீத சாயித்தியன் வித்தியா வினோதன்

இரண்டாம் பக்கம்

29. சகல சாம்பிறாச்சிய லக்ஷ்மிவாசன் சேதுகாவலன் துக ஹூர்க் கூத்தத்து

30. க் காத்தூரான குலோத்துங்கசோள நல்லூர் கீள்பால் விரை யாத கண்டனிலிரு

31. க்கும் ராசமான்ய ராசஸ்ரீ இரண்யகெற்பயாசியான குமார முத்து விசைய ரகுநாதச் சே

32. சேதுபதி காத்த தேவரவர்கள் குமாரன் முத்துக்குமார விசைய இரகுநாதச் சே

33. துபதி காத்த தேவரவர்கள் ராமீசுவரத்திலிருக்கும் ஆவல் காவல் பள்ளிவா

34. சல் தன்மத்துக்கு நூறாலம்சா குமாரன் சுலுத்தான் சஹாய் சரி பகீர் பாரிசமா

35. க கட்டளையிட்ட புதுக்குளத்தை ஆண்டனுபவித்துக் கொள்பவராகவும்

36. விட்டுக்குடுத்த புதுக்குளத்துக்கு யெல்கையாவது யெல்கை குடி ஓரச்சிறகு

37. மடையில் நீர்பாய்ந்து நெல்விளைகின்ற குன்றா வயக்க லுக்கும் வாளவந்

38. தாளம்மன் கோவிலுக்கும் பச்சரித் திடலுக்கும் சேதுமாற் கத்துக்கும் வடக்கு

39. கொத்தங் குளத்துக்கும் புரவுக்கும் தென்மேற்கு அச்சங் குடிக்கும் தோட்டக்கா

40. ட்டுக்கும் தெற்கு எக்கைகுடிக் கண்மாய் வடகடைக் கொம்புக்கும் கானத் திட

41. லுக்கும் கிளக்கு யின்னாங் கெல்கைக்குள்பட்ட நஞ்சை பிஞ்சை மாவடை மர

42. வடை திட்டு திடல் மேல் நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு நிதி நிக்ஷேப

43. ஜல தரு பாஷாண ஆகாம்ய அஷ்டபோகமும் குடிபடை பள்பறைவரி யிறை

44. கலமும் சறுவ மானிபமாக கட்டளையிட்ட படியினாலே
45. சந்திராதித்தவரை சந்ததிப் பிறவேசம் புத்திர பௌவுத்திர பாரம் பரையாய் ஆண்
46. டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தற்மத்துக் கு தமிளனாகிலும் நாலா
47. வர்னத்திலே உள்ளவனாகிலும் இசுலாமான வனாகிலும் வாக்குச் சகாயம் அர்த்த ச
48. காயம் பண்ணினால் கெங்கையிலும் சேதுவிலும் மக்க மதீனத்திலேயும்
49. அன்னதானமும் சொற்னதாமும் அனேகம் குடும்ப பிறதிஷ்டையும் பண்ணி
50. ன பலனை யடையக்கடவாராகவும் இந்த தற்மத்து விகாதம் நினைத்தால் புண்ணி
51. ய ஸ்தலங்களிலேயும் மக்க மதீனத்திலேயும் மாதா பிதா வையுங் கொன்ற தோ
52. ஷத்திலும் மகாபாவத்திலேயும் போகக்கடவாராகவும் உ குருவே துணை உ
53. இந்தப்படிக்கு தாம்பிற சாதனம் யெளுதினேன் திருப் புல்லாணியூரிலிருக்கு
54. ம் முத்துப் பண்டாரம் புத்திரன் இருளப்பன் கையெளுத்து உ இந்த தற்மத்துக்கு
55. தமிளனாகிலும் எவர்களாகிலும் விகாதம் நினைத்தால் கெங்கையிலும் சேதுவி
56. லும் காராம் பசுவையும் மாதாபிதாவையுங் கொன்ற தோஷத்திலே போகக் க
57. ட வாராகவும்

## செப்பேடு எண் 57

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துக்குமார விஜயரெகுநாத சேதுபதி காத்ததேவர்
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் ஆபில், காபில் பள்ளிவாசல்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1667 குரோதன ஆண்டு வைகாசி மீ 11ந் தேதி (கி.பி. 9-5-1745)
4. செப்பேட்டின் பொருள் : மேலேகண்ட பள்ளிவாசல் தருமத் திற்கர்க புதுக்குளம் கிராமம் தானம்

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது அறு பத்தியாறு சிறப்புப் பெயர்கள் விருதாவளியாக இந்தச் செப்பேட் டில் குறிக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் முந்தைய செப்பேடு களில் காணப்பட்டவை.

இராமேசுவரம் ஆபில் காபில் பள்ளிவாசல் இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரம் வட்டம் இராமேசுவரம் நகரில் இரயில் நிலையத்துக்கு நேர் தெற்கேயுள்ள புனித இடமாகும். செப் பேட்டில் கண்டபடி இது ஒரு பள்ளிவாசல் அல்ல. தர்கா ஆகும். பள்ளிவாசல் முஸ்லீம் மக்களது வழிபாட்டுத் தலமாகும். என்றா லும் முஸ்லீம் பெரியவர்களது புனித இடங்களை (தர்கா) பள்ளிவாசல் என்று குறிப்பிடுவது இந்த வட்டார வழக்கு நாகூர் ஆண்டகையின் பேரர் புனித பக்ருத்தீன் என்பவரது அடக்க இடம் உள்ள குடியிருப்பு. புதுக்கோட்டை மாவட்டத்தில் காட்டு

பாவா பள்ளிவாசல் என்ற பெயரில் வழக்குப் பெற்று இருப்பது ஒப்பு நோக்கத் தக்கது. இந்தப் பள்ளிவாசலுக்கு இராமநாத புரம் வட்டம் எக்கைகுடி கிராமத்துடன் இணைந்த புதுக்குளம் என்ற கிராமத்தை இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது. வரு வாய்த்துறை பதிவேடுகளில் இந்த ஊர் ''பக்கிரி புதுக்குளம்'' என்ற பெயரில் பதிவாகியுள்ளது.

மனித இனத்தின் முதல் மனிதராக திருக்குர்ஆனும், பைபிளும் போற்றுகின்ற ஆதம் அவர்களது மக்களான அபல், கெயின் ஆகிய இருவரது புனித அடக்கவிடமாக இந்த பள்ளி வாசல் கருதப்பட்டு வருகின்றது. இறைவனது கட்டளையை மீறிய ஆதம் அவர்களும் அவர்களது துணைவியாரும் சொர்க் கத்தில் இருந்து பூவுலகிற்கு அனுப்பப்பட்டபோது ஆதம் துணை வியார் அரபுத் தாயகத்திலும், ஆதம் இலங்கை நாட்டின் மிக உயரமான சுமனக் கூடமலையிலும் வந்து இறங்கியதாக நம்பப் படுகிறது. இந்த மலை பௌத்தர்கள் போதி சத்துவரான புத்த பகவானது திருவடிகளை தாங்கிய இடமாகவும் இந்து சமயத் தினர் சிவபெருமானது பாதத்தூளி சிவனடிபாத மலை என்றும் நம்புகின்றனர். மேலும் இலங்கைத் தீவை இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைக்கும் கடலில் இராமேசுவரத்தையும் எதிர்க்கரையான தலைமன்னாரையும் தொட்டுச் செல்லும் இருபத்தி மூன்று மைல் தொலைவு மணல் திட்டு ''ஆதமின் பாலம்'' என பல நூற்றாண்டுகளாக வழங்கப்படுவதாலும் அவரது மக்கள் இந்தப் பகுதியில் வாழ்ந்து மறைந்திருப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது. கெயின், அபெல் ஆகிய இருவரது கதைகள் பைபிளின் பழைய ஏற்பாட்டில் காணப் படுகிறது.*

இந்தச் செப்பேட்டின் இறுதிப்பகுதியில் இந்த தருமத் திற்கு ''தமிழனாகிலும் நாலா வர்னத்திலே உள்ளவனாகிலும் இஸ்லாமானவனாகிலும்'' ''கங்கையிலும் சேதுவிலும் மக்க, மதினத்திலும்'' என காப்புரை வாசகங்கள் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

---

* பைபிள் - பழைய ஏற்பாடு ஆதியாகமம் - 4.

புதுவெள்ளம் புரட்டிக்கொண்டு சேர்க்கும் மணற் தொகுதி ஏக்கர் எனப்படும். இந்த வழக்கில் எக்கையாகி உள்ள ஊர் எக்கைகுடி. இந்தக் ஊர்க்கண்மாய்ப் பாசனத்தில் உள்ள பகுதி தான் இந்தச் செப்பேட்டில் சருவமானியமாக கட்டளையிடப் பட்டுள்ள புதுக்குளம் பகுதியாகும். இந்தப்பகுதி ''ஒருச்சிறகு மடையில் நீர்பாய்ந்து நெல்விளைகின்ற'' பகுதி எனச் செப் பேட்டில் காணப்படுவதில் இருந்து சம்பந்தப்பட்ட இடம் நல்ல வளமைமிக்க பகுதி எனக் கொள்ளமுடிகிறது. இதற்கு நான்கு எல்கை கொடுக்கப்பட்டுள்ளதில் குன்றா வயக்கால் வாழவந்த அம்மன் கோயில், பச்சரித்திடல், கானத்திடல் சேதுமார்க்கம், அச்சங்குடி, கொத்தங்குளம் புரவு ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

வாழவந்த அம்மன் என்பது புகார் நகரில் இருந்து பாண்டிய நாட்டிற்கு'' ''உலந்த பொருள் ஈட்டுதற்கு, மலர்ந்த சீர் மாடமதுரையகத்து'' ற்றகண்ணகி என்னும் கற்புத் தெய்வம். மதுரைக்குத்தெற்கே இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங் களில் இந்த பத்தினி தெய்வ வழிபாட்டிற்காக அமைக்கப்பட்ட கோட்டங்கள் ''வாழவந்த அம்மன் கோயில்'' என வழங்கப் படுகிறது. இன்றைய நிலையில் அந்தக் கோட்டங்களில் பத்தினி தெய்வவழிபாடு பராசக்தி (காளி) வழிபாடாக மாறி உள்ளது *பள்ளர்சேரி* இந்தப்பகுதிமில் *பள்ளச்சேரி* என்றும் பச்சேரி என வழக்கு பெற்றுள்ளது.

மற்றும் புரவு, கடைக்கொம்பு. சிறகுதிடல், கண்மாய் மாவடை, மரவடை என்பன இந்த வட்டாரத்தின் வழக்குகள்.

# 12

# செல்லமுத்து விஜயரெகு நாதசேதுபதி

## (கி.பி. 1748 – 1760)

இந்த மன்னரது ஆட்சி கி.பி 1748 முதல் பதிமூன்று ஆண்டுகள் இராமநாதபுரம் சீமையில் நீடித்தது. இவர் ஆட்சிக்கு அருந்துணையாக பெரும் வீரர் பிரதானி வெள்ளையன் சேர்வை விளங்கி வந்தார். கி.பி.1702, கி.பி 1709 ஆகிய ஆண்டுகளில் மறவர் சீமையைக் கைப்பற்ற படையெடுத்து படுதோல்வி அடைந்த தஞ்சை மராத்திய மன்னர் இந்த மன்னரது ஆட்சியிலும் மற்றுமொரு படையெடுப்பை மேற்கொண்டார். சேது நாட்டின் காவலர் அனுமந்தக் குடியில் அந்த படைகளை பிரதானி வெள்ளையன் சேர்வை முறியடித்துத் துரத்தினார். மதுரையைக் கைப்பற்றியிருந்த ஆங்கிலத் தளபதியான கோப்பையும் முறியடித்து மதுரையில் நாயக்க மன்னரது கடைசி வாரிசான விஜயகுமார பங்காரு திருமலை நாயக்கரை கி.பி.1751 மதுரை அரியணையில் அமர்வதற்கும் இந்த மன்னர் பேருதவி புரிந்தார். இவரது ஆட்சியில் டச்சுக் சளரர்கள், தங்கள் வாணிபத்தை இராமநாதபுரம் சீமை கரைப் பகுதியில் பெருக்கினார்கள்.

சேது மன்னர்களுக்கே உரிய சமய பணி ஈடுபாடு காரணமாக இந்த மன்னர் இராமநாதபுரம் கோட்டைக்கு வெளியே லெட்சுமி புரத்திலும் கன்னியாகுமாரி சாலை கொக்காடி கிராமத்திலும் அன்னசாலையையும் தண்ணீர் பந்தலையும் நிறுவினார். இவரது அமைதியான ஆட்சி கி.பி. 1760ல் முடிவுற்றது.

## செப்பேடு எண் 58

(நகல்)

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவறன் அரியரயி
2. ற தள விபாடன் பாசைக்குத் தப்புவறாயிர கண்டன் க
3. ண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடதான் பாண்டி
4. மண்டல ஸ்தாபனாசாரியான் சோளமண்டலப் பிறதி
5. ஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சண்ட பிறசண்
6. டன் யீளமும் கொங்கும் யால்ப்பாண ராயற் பட்டணமும்
7. யெம்மண்டலமும் அளித்து கெசவேட்டை கொண்டருளிய ராசாதிறா
8. சன் ராசபரமேசுரன் றாசமரற்த்தாண்டன் றாசகெம்பீரன் றாச மனோகர
9. ன் றாசகுலதிலகன் றாசறாஷ்ட்டாந் தவிள்த்தான் றாசாக்கள் தம்பிறான் பரராச
10. கேசரி சொரிமுத்து வன்னியன் வன்னியறாஷ்ட்டாந் தவிள்த்தான்
11. பஞ்கவற்னராய றாவுத்தற் கண்டன் அந்தம்பிர கண்டன் கண்டன் சாடிக்கா
12. ர கண்டன் சாமித்து ரோகியள் முண்டன் துர்க்க ரேவந் தன் துர்க்கறாவு
13. த்தன் தேவைநகறாதிபன் சேதுமூலாரடட்க்ஷ துரந்திரன் ராமனாத சுவாமி

14. காரியாதுரந்திரன் சேதுகாவலன் சேதுக்கு வாய்த்தவன் சிவபூசெ
15. ச குருபூசை மரவாத வங்கிஷாதிபன் அடைக்கலம் காத் தான் விரை
16. யாத கண்டனில் விளங்கியதீரன் யெதிரிட்ட மருவலர்கள் சிர
17. முருளவெட்டு நிலையிட்ட தீரன் ரவிகுலசேகரன் புவனேக வீர
18. ன் வீரவளனாடன் வீரகஞ்சுகன் அரசறாவண றாமன் அடியாற் வே
19. ளைக்காரன் பரதளவிபாடன் உரிகோல்சுரதன் உபயசாமர உற்பா
20. சன் கொட்டமடக்கிய வய்யாளி னாறாயணன் வீரவெண் பாமாலைய
21. ான் உபயகோடிச் சாமரஉல்லாசன் நளினக்காறன் யிளஞ் சிங்க
22. ந் தளஞ்சிங்கம் பகைமன்னற் சிங்கம் துறைராசன் ஆத்தில்ப்பாச்சி
23. கடலில்ப் பாச்சி கடலில்ப் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்நான் தா
24. லிக்கு வேலி வள நாடன் பாண்டிவள னாடன்வய்கை வள
25. னாடன் வைகைமானதியான் பொதியமால்வரையான் கெங்கை
26. யாதிபன் தொண்டியன்துறை காவலன் மதுரை வளி கண்ட
27. மாறத்தாண்டன் கிரிதுற்க செலதுற்க வனதுற்கமுடை யான் அ
28. னுமகேதனன் கெருடகேதனன் மீனகேதனன் னரசிம்ம கேதனன்
29. செங்கொவி கேதனன் செங்காவிக் குடையோன் குடை மேல்ச்ச

30. ல்லியன் பூலோக தெயிவேந்திரன் சத்திய அரிச்சந்திரன் அரி
31. வுக்கு ஆதிசேஷன் தமிளுக்கு அகஷ்த்தியன் மல்லுக்கு வீமன்
32. வாளுக்கு அபிமன்னன் வில்லுக்கு விசயன் பரிக்கு னகுலன்
33. சாஷ்த் திரத்துக்குச் சகாதேவன் கொடைக்கி கற்னன் அளகு
34. க்கு வாலசீவகன் ஆனெக்கி மகபதி அன்னக்கொடி விளங்கிய தீ
35. ரன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் அஷ்ட்ட
36. லெட்சுமி விளங்கிய தீரன் செயதுங்கராயற் விருப்பாட்சி
37. ராயற் கிற்ஷ்னராயற் வங்கிஷாதிபனான காத்தூரான குலோ
38. த்துங்க சோளநல்லூரான கீள்பாலில் விரையாத கண்
39. டனில் யிருக்கும் அசுபதி கெசபதி நறபதி ஸ்ரீமது யிரண்ணிய
40. ய கெற்ப்பயாசி ரவிகுல முத்து விசைய இரகுனாத சேதுப
41. தி காத்த தேவறய்யர் அவற்கள் பிரதிவி ராச்சிய பரிபா

இரண்டாம் பக்கம்

42. லனம் பண்ணியருளானின்ற சாலீவாகந சகா
43. ப்தம் 1648 கலியப்த்தம் 4827 இதின்
44. மேல் செல்லானின்ற பிரபவ னாம சமீபசரத்தில் உத்தி ராயண
45. ந்தில் மகா மாசம் கிற்ஷ்ண பட்சத்தில் சோமவாரம் புன்
46. ற்பூச நட்சத்திரமும் பஞ்சமியும் கபிலவாகரணமும் கூடின
47. சுபயோக சுபதினத்தில் பூதானசாசனம் பண்ணி குடுத்த
48. து பூதானசாசனமாவது சேதுமூலத்தில் ஆதிசேது நவ
49. பாசானத்துக்கு கிளக்கு தோணித்துறை சத்திர கிராமம் தேற்

50. போகித்துறையில் சிவகெங்கை பிரதானி தாண்டவராய
51. ன் தற்மம் கட்டுகுதற்கும் ஷே யூரிலிருக்கும் பாரத்வாஜ
52. கோத்ரத்தில் ஆபஸ்தம்ப ஸ்ுத்ரத்தில் சங்கர
53. ய்யர் புத்றன் வேங்கிட கிற்ஷ்ண அய்யறிடத்தில் பூதான சாஸ
54. நமாக கட்டளையிட்ட நிலமாவாது ஷெ தேற்போகி துறையில்
55. வடக்கெல்கையாவது சமுத்திரத்திற்கும் தெற்கு கிளக் கெல்கை
56. யாவது பள்ளவேற்குடி மேட்டுக்கும் மேற்கு தென்பாற்க் கெல்
57. கையாவது பருமணல்த்தேரியில் கட்ட உசில மரத்துக்கும் கா
58. ட்டுப் பிச்சர் கோவிலுக்கும் அருகூரணி வடகரைக்கும் செங்க
59. ச்சூளை வடமேட்டுக்கும் வடக்கு மேல்பாற்கெல்கையாவது நல்ல
60. தண்ணீர்க் கசிவு ஊத்து ஊரணிக்கும் நரிகுமிச்ச திடலுக்கு
61. செங்கச்சூளை வடமேற்கு மூலைத்திடலுக்கும் ஊந்திமேடு ஊரணி
62. மேல்கரைக்கும் கிளக்கு இன்னாங்கெல்கைக்குள்பட்ட நிலத்தில்
63. அக்கிரகாரம் தற்மங் கட்டிக்கொள்ளச் சொல்லியும் அதில் சே
64. ற்ந்த னிலத்தில் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டு திடல்
65. நத்தம் செயித்தலை பாசி படுகை கீள்னோக்கிய கிணரு மேல்னோ
66. க்கிய மரமும் சில்வரி பெருவரி நிதி நிட்சேபம் செல தொற
67. பாஷானா சண்ணிய சித்தி சாயுத்தியமென்று சொல்லச்
68. செயித அஷ்ட்டபோக தேஜ ஸ்வாமியங்களும் சுத்த சருவமா

69. னியமாக க்ட்டளையிட்டோம் புத்திர பௌத்திர பாரம் பரையாக ஆதி

70. சந்திராதித்திய சந்திரசூரிய பிரவேசமுள்ளமட்டும் ஆண்டு

71. கொள்ள சொல்லி கூட்டளையிட்டோம் யிந்த தற்மத்தை பரிபாலி

72. னம் பண்ணினபேர்கள் காசி றாமேசுவரம் தனுக்கோடிக் கரையி

73. லேயும் கெங்கை கரையிலேயும் கோடி சிவலிங்க பிரதிஷ்ட்டை

74. விஷ்ணு பிரதிஷ்ட்டை பிரம்ம பிரதிட்டை கோடி பூதானம் கோ

75. தானம் கன்னிகாதானம் பண்ணினபலனை அடைவா ராகவும் யி

76. ந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினபேர்கள் கெங்கைகரை ர

77. யிலேயும் தனுக்கோடிக் கரையிலேயும் ஆயிரம் பிராம்மனா

78. ளையும் மாதா பிதாவையும் கோவதையும் கொண்ட தோஷத்தில்

79. போக கடவாராகவும் ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் ப

80. ரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வ

81. தத்தம் நிஷ்பலம் பவேது உ

# செப்பேடு எண் 58

*(விளக்கம்)*

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜய ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : தேர்போகி சங்கரய்யர் புத்திரன் வெங்கடகிருஷ்ணன்
3. செப்பேட்டின் காலம் : சகம் 1669 பிரபவ ஆண்டு மகா மாசம் (கி.பி. 1747)
4. செப்பேட்டின் பொருள் : அக்கிரகார தர்மத்திற்கு பூமி தானம்

இந்தச் செப்பேட்டை வழங்கியவர் முத்துவிஜய ரெகுநாத சேதுபதியெனக் குறிப்பிட்டிருந்தாலும் இந்தச் செப்பேட்டின் காலத்தை ஆய்வு செய்யும் பொழுது இதனை வழங்கியவர் முத்துக்குமார விஜயரகுநாத சேதுபதி என்பது தெரிய வருகிறது. செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிரபவ ஆண்டிற்கு சரியான சக ஆண்டு 1669 ஆகும். சகம் 1648 எனக் குறிப்பிட்டிருப்பது தவறு.

இந்தச் செப்பேட்டில் சேதுபதி மன்னரது விருதாவளியாக தொன்னூறு சிறப்புப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகளில் எதிரிட்ட மறுவலர்கள் சிரமுறிவு வெட்டு நிலையிட்ட தீரன் (வரிகள் 16, 17) வைகை மான தியானி (வரி 25) பொதிய மால் விரையன் கங்கையாதீபன் (வரி 25) நரசிம்ம கேதனன் (வரி 28) என்ற ஐந்து புதிய விருதுகள் இந்த விருதாவளியில் இடம் பெற்றுள்ளன.

கி.பி. 1730ல் மறவர் சீமையின் ஐந்தில் இரண்டு பகுதியை பெற்று சின்னமறவர் சீமை, அல்லது சிவகங்கைச் சீமை என்ற புதிய தன்னரசு நாட்டினை ஏற்படுத்தியவர் சசிவர்ணத்தேவர் அவரது மகன் முத்துவடுகநாத தேவருக்குப் பிரதானியாக வழங்கியவர் முல்லையூர் தாண்டவராயப் பிள்ளை என்பவர். சிறந்த அமைச்சராக அரசியல் அறிஞராகத் திகழ்ந்த இவர், இராமநாதபுரம். சிவகங்கையும் ஒரே தலைமையில் இணைந்தது என்ற முறையில் சிறப்பாக அரசின் நிர்வாகத்தை இயக்கியவர். இவர்

மீது அழகிய சிற்றம்பலக் கவிராயரது வழியினரான குழந்தைக் கவிராயர் *மான் விடு தூது* என்ற சிற்றிலக்கியத்தைப் படைத்துப் பொன்னும் பொருளும் பரிசாகப் பெற்றார். வேறு சில தனிப் பாடல்களிலும் இந்தப் பிரதானியின் கொடைப்பண்பு புகழப் பட்டுள்ளது.

பிரதானி இராமநாதபுரம் சீமையில் சேதுமார்க்கத்தில் தேவிபட்டினத்தில் கிழக்கே அக்கிரகார தர்மம், ஒன்று ஏற் படுத்த விழைந்தார். அதற்காக பிரதானிக்கு தேர்போகி கிராமத் தில் நிலக்கொடை வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக் கின்றது. இந்தக் கொடையைப் பெற்றவர் இதே ஊரைச்சார்ந்த சங்கரைய்யர் மகன் வெங்கட கிருஷ்ணய்யர் என்பவர் தானமாக வழங்கப்பட்ட நிலத்துக்கு பெருநான்கு எல்லை தெளிளாகக் கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தான இடத்திற்கு எல்லையாக பள்ள மேற்குடி பருமணல்தேரி, காட்டுப்பிச்சர் கோயில், ஊற்றூ ஊரணி, நரிகுமிச்சதிடல் என்பன சுட்டப்பட்டுள்ளன. இந்தப்பகுதி முந்தைய காலத்தில் மணற்பாங்கானதாக இருந்ததென்பதைக் கசிவு ஊற்றூரணி, அருகு ஊரணி என்பவைகள் தெரிவிக் கின்றன. பெரும் மணற்திட்டுக்கள் தேரி எனப்படும். இத்தகைய தேரி இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்குக் கடற்கரையில் அமைந்திருந்தது அறியப்படுகிறது. நந்திமேடு ஊரணி, காட்டுப்பிச்சர் கோயில் என்ற பெயர்களிலிருந்து சோழர் களது ஆதிக்கம் இந்தப்பகுதியில் இருந்ததைக் குறிக்கும் வரலாற்று எச்சமாக உள்ளது. நத்தம் (வரி 65) என்ற சொல் முதன் முறையாக இந்தச்செப்பேட்டில் பயன்படுத்தத்தப்பட்டு உள்ளது, தேர்போகி ஊரின் பெயரால் மிழலைக் கூற்றத்தை யடுத்து தேர்போகி நாடு (செப்பேடு எண் 79) என்ற பெரும் பகுதி இருந்ததும் தெரியவருகிறது. சேதுபதி மன்னரது பெயர் விகுதியாக காத்த தேவரய்யர் (வரி 41) எனக் குறிப்பிட்டிருப்பது புதிய சொல்லாட்சியாகும்.

ஆனால் இவை கால நீட்சியினால் மறைந்துவிட்டதாகத் தெரிகிறது. இந்தச் சத்திரம் இன்றைய இராமநாதபுரம் வட்டம் தேர் போகி கிராமத்திற்கு கிழக்கே சிதைந்த நிலையில் உள்ளது. காட்டுப்பிச்சர் கோயில் வழக்கில் இல்லையென்றாலும் அந்தக் கோயிலும் சீரழிந்த நிலையில் உள்ளது.

# செப்பேடு எண் 59

(நகல்)

1. சிவமயம்
2. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1874க்கு மே(ல்) செலாநின்ற ஆங்கி
3. (ர)ஸ வருஷ மார்களி மீ 20 உத்தராயணத்துப் பூருவ பட்சமுஞ் சோமவா
4. ரமும் அசுபதி நட்செத்திரமுங் கூடின சுபதினத்திலே திருவாவடுது
5. றைப் பண்டார சன்னிதி அவர்கள் அம்பலவாண சுவாமி பூஜை
6. ச மஹேஸ்வரபூசைக்கி தேவை நகராதிபன் சேது மூலரட்
7. சா துரந்தரன் இராமநாதசுவாமி பருவத வர்தநி அம்மை காரி
8. ய துரந்தரன் சுப்பிரமணிய பாதாரவிந்த சேவிதன் பரராசசிங்க
9. ம் பரராசசேகான் பரராசசேகரன் இரவிகுல சேகரன் சொரிமுத்
10. து வன்னியன் துட்ட ராசர் கண்டன் சாடிக்காறா கண்டன் சா

---

திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை,

அமைப்பு : 30 செ.மீ X 19 செமீ

படி எடுத்து அளித்தவர் : புலவர் திரு. ராஜு, தஞ்சை.

11. மித்துரோகிகள் முண்டன் அந்தம்பர கண்டன் அடியார் வேளை
12. க்காரன் அரச ராவண ராமன் பஞ்சத்து வரமாரி யனுக்கு வராதக
13. ண்டன் பட்டமானங் காத்தான் பட்டம் பரம்படத்தான் தாலிக்கு வேலி
14. ஐவாய்ப் புலி இளஞ்சிங்கர் தளஞ்சிங்கம் வீரவெண்பா மாலை
15. வைகை வளநாடன் பரதளவி பாடன் பஞ்சவற்னறாய றாவுத்தன் புவ
16. னேக வீரன் வேதியர் காவலன் கொட்டமடக்கி வைய் யாளி நாறாயண
17. ன் இவுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் பகைமன்னர் சிங்கம்
18. ஆற்றிற் பாச்சி கடலிற்பாச்சி சத்துருக்கள் மிண்டன் மேவலர்
19. கோளரி வீரகெம்பீரன் கீற்திப் பிறதாபன் கபட நாடக சூத்திரப்பிற
20. தாபன் பாஷா வீட்சணன் சகல குண சம்பன்னன் சங்கீத ச
21. ாயித்திய வித்தியா வினோதன் வீனாப் பிறசங்கன் வைகை
22. வளநாடன் தொண்டியந்துறை காவலன் அடைக்க
23. லங் காத்தான் வன்னியராட்டந் தவிழ்த்தான் மூவரா
24. ய கண்டன் சாமித்துரோகி வெண்டய காவல
25. ன் வீர தண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் து
26. ரை ராயன் செயதுங்க ராயன் வங்கிஷா தீபனான துகவூர்
27. க் கூற்றத்துக் காத்தூரரான குலோத்துங்க சோள நல்லூ
28. ர்க் கீழ்ப்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீமது
29. இரணிய கெற்ப யாசி ரவி குல ரெகுநாதச் சேதுபதி கா
30. த்த தேவரவர்கள் வங்குசோத்தாரகரான ஸ்ரீமது செல்ல முத்து
31. விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர்கள் எங்கள்

இரண்டாம் பக்கம்

32. மாதா பிதாவினுடைய வற்க்கத்துக்கும் புண்ணியமாகத் தரும சா
33. தனப் பட்டயங் கொடுத்தபடி முன் எங்கள் துரைத்தன பரம்பரை
34. யில் சாலிவாகன சகாப்தம் 1582க்கு மேற்செல்லா
35. சாறுவரி ஷ மாக மாத புண்ணிய காலத்திலே திருவாவடு
36. துறை ஆதீனம் அம்பலவாண பண்டார சன்னதி அவர் களுக்கு
37. ஸ்ரீமது திருமலைச் சேதுபதி ரெகுநாதத் தேவரவர்கள் தரும சா(ச)
38. னப்படி கங்கணி கட்டி சரினோஞ்சி வயலிந்த மூன்றுந் தாங்களனுபவித்
39. து வருகிறதுனாலே தங்கள் நாணாக்கிடிக்குப் பதிலாய் ஏழுகோ
40. ட்டை நாட்டில் ஓரூர் வட்டகையில் நாட்டுசேரியை தங்களு
41. க்குக் கட்டளையிட்டோம் நாட்டு சேரி எல்கையாவது கிழக்கு ஆனை
42. யாங் கோட்டைக் கண்வாய் நீர்ப்பிடிக்கு மேற்குப் தெற்குத் தெற்கு
43. தனிச்சக் கண்வாய் வடகாலுக்கும் நெட்டேந்தல் குளக் காலு
44. க்கும் வடக்கு மேற்கு அதங்குடிக்கீழ்புறத் தெல்லைக்குக் கிழக்
45. கு வடக்கு திருப்பொற் கோட்டை நஞ்சை மாலுக்குத் தெற்கு
46. இந்த நான்கெல்லைக்குள்ப்பட்ட திட்டுத் திடல் மாவடை மரவ
47. டை மேல் னோக்கிய மரம் கீழ்னோக்கிய கிணறும் ஆத்துக்கா
48. ல் ஊத்துக்கால் சல தரு பாஷாண நிதி நிட்சேபமும் அஷ்ட்ட

50. போக தேச சுவாமியங்களும் விநியாதி விக்கிறையங்க
51. ளுக்கு யோக்கியமாக சந்திராதித்தாள் உள்ளவரைக்கும்
52. ஆதீன பரம்பரையாக தாங்களே ஆண்டனுபவித்துக்கெ
53. ாள்ளக் கடவார்களாகவும் சுப்பிரமணிய
54. பாதார விந்தம் துணை
55. இந்தத் தருமத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கை
56. க் கரையிலுஞ் சேதுக்கரையிலு புண்ணிய ஸ்தலங்களிலே அ
57. னேக சிவலிங்கப் பிறதிட்டை மடப்பிறதிட்டை அக்கிராரப் பிறதிட்
58. டை கன்னிகா தானம் பண்ணின பலனை அடைவார்கள் இந்தக்
59. தருமத்துக்கு யாதொருத்தர் அஹிதஞ் செய்த பேர்கள் கெங்கை
60. க்கரையிலும் சேதுக்கரையிலுங் காராம்பசுவையும் பி
61. ராமணரையுங் குருவையும் மாதா பிதாவையுங் கொன்ற
62. தோஷத்திலேயும் அனேக சிவ தலங்களிலே சிவத்துரோகம்
63. ம் பண்ணின நரகத்திலேயும் போகக் கடவாராகதள் இப்படிக்கு
64. ஸ்ரீசெல்லமுத்து விசைய ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்
65. கள் திருவாவடுதுறைப் பண்டாரச் சன்னதி அவர்கா அம்பலவா
66. ண சுவாமி பூசை மஹேசுவர பூசைக்குத் தாம்பிர சாதனங் கொடுத்
67. தோம் உ.

# செப்பேடு எண். 59

**(விளக்கம்)**

1. செப்பேடு வழங்கியவர் : செல்லமுத்து விஜய ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருவாவடுதுறை ஆதினகர்த்தர் அம்பலவாணன் பண்டார சன்னதி
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1674 ஆங்கிரச வருடம் மார்கழி 20ந் தேதி (கி.பி. 31.12.1752)
4. செப்பேட்டின் பொருள் : மகேஸ்வர பூஜைக்கு நாட்டுசேரி கிராமம் சர்வமானியம்.

இந்த மன்னரது ஐம்பத்தி மூன்று சிறப்புப்பெயர்கள் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளது. சுப்ரமணிய பாதார விந்த சேகரன் (வரி 8) பாசா விட்சனன் (வரி 20) வீணா பிரசங்கன் (வரி 21) என்ற மூன்று புதிய சிறப்புப் பெயர்களைத் தவிர ஏனைய விருதுகள் அனைத்தும், முந்தைய சேது மன்னர்களில் செப்பேடுகளில் காணப்படுபவையாகும்.

இராமநாதபுரம் மன்னர்களுக்கும், திருவாவடுதுறை ஆதின கர்த்தர்களுக்குமிடையே ரெகுநாத சேதுபதி காலம் தொட்டு நெருக்கமான தொடர்புகள் இருந்து வந்தன. அந்த மன்னர் இந்த ஆதினத்துக்கு கி.பி. 1660ல் நான்கு கிராமங்களை தான மாக வழங்கியிருந்தார். அவைகளில் நாணக்குடி கிராமம் மட்டும் அந்த ஆதினத்தாருக்கு பயன்படாத நிலையில் இருந்ததை நீக்கி அதற்குப் பதிலாக இந்த மன்னர் நாட்டுசேரி என்று கிராமத்தை தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது.

ஏற்கனவே வழங்கப்பட்ட திருப்பொற்கோட்டை கிராமத்தின் எல்கைமாலில் இருந்து தெரிய வருகிறது. இந்த இரு ஊர்கள் இன்றைய பசும்பொன் முத்துராமலிங்க மாவட்ட தேவகோட்டை வட்டத்தில் உள்ளன. இவைகளில் ஒன்றான நாட்டுச்சேரி முன்னர் ஏழுகோட்டை நாட்டில் ஓரூர் வட்டகையில் (வரி 41) இருந்ததாக தெரிய வருகிறது. இப்பொழுது ஓரூர் இராமநாத புரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தின் வடபகுதியில் அமைந்துள்ளது. நாட்டுச்சேரிக்கான நான்கு எல்லைகள் செப் பேட்டில் குறிக்கப்பட்டிருந்தும் அந்தப் பகுதியில் இருந்து எத்த கைய வருவாய்கள் அரசுக்கு இறுக்கப்பட்டன. என்ற விபரம் இல்லாததும். நாட்டுச்சேரி பெரும்பாலும் விளைநிலங்களைக் கொண்டது என்பது புலனாகின்றது.

ஆத்துக்கால், ஊத்துக்கால் (வரிகள் 48, 49) வட்டகை (வரி 41) குளக்கால் (வரி 44) நஞ்சை மால் (வரி 46) என்பன இந்த வட்டார வழக்குகள்.

சிவமயம் என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்கும் இந்தச் செப்பேடு அறுபத்து ஏழு வரிகளைக் கொண்டதாக உள்ளது. செப்பேட்டை வரைந்தவர் பெயர் இல்லை என்றாலும், இந்தச் செப்பேட்டின் கைப்பிடியின் கீழ் புடைச் சிற்பமாக நடராஜரின் ஆனந்த தாண்டவம். சிவகாமிஅம்மை, காளிகாதேவி. பதஞ்சலி வியாக்கிர பாதர் அரிய பிரதிமைகளைப் படைத்தவர் மிகவும் தேர்ந்த கலைஞர் என்பது உறுதி.

## செப்பேடு எண். 60

(நகல்)

1. உ சுவஸ்ரீமன்றாசா மண்டலேசுரன் அரியராய தளயி பாடன் பாசைக்கு தப்பு
2. வராத கண்டன் மூவராய கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு
3. கொடாதான் பாண்டிமண்டலத் தாபனாசாரியன் சோழ மண்டலப் பிரிதி
4. ட்டபனாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிறகண்டன் யீளமுங் கொங்
5. கும் யாப்பானமு மளித்துக் கிசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன்
6. ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் அஷ்ட லட்சுமிப்
7. பொருந்தியவான் தற்ம ஞாய சோளநீதி தவறாத ரணமுக சுத்த
8. வீரன் நவகோடிராயன் நவகண்டசக்கிறவத்தி கெங்கை குமரி
9. முதல் செங்கோல்நடத்திய தீரன் கோபால வங்கிஷம் சூரியவங்

---

ARE. A. 2/1943

அமைப்பு : 26 செமீ. × 17.5 செமீ

செப்பேட்டின் படி அளித்து உதவியவர்
புலவர்: திரு. செ. ராஜு, தஞ்சை.

10. கிஷம் ஏவல்செய்வித்திருந்தருளினோன் எம்மண்டலமுந் திறைகொ
11. ண்டருளிய ராசர்கள் தம்பிரான் துலுக்கர்தள விபாடன் துலுக்கராட்டந் தவி
12. ள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர்மோகந் தவிள் தான் தொட்டியர் த
13. ள விபாடன் தொட்டியராட்டந் தவிள்த்ததன் மலைகலங் கினும் மனங்கலங்
14. ங்காதகண்டன் குறையமக்கி மதிகொண்டோன் வீரப்பிற தாபன் விருதரசர் மண
15. வாளன் யிந்தகோப் சற்பிற கெருடன் சமர கோலாகலன் தாலிக்கு வேலி
16. தரியலர்கள் மணவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம கெம்பீரன்
17. பாவநாசபன் திரயாகசாலை யாகமூர்ந்தி துஷ்டநிற்கிறக சிஷ்டபரிபாலனன்
18. அஷ்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரிராயன் கட்டாரிக் சாளுவன் துட்டரில்துட்ட
19. ன் துட்டராயிர கண்டன் துண்டீர நெஷ்டூரந் தவிழ்த்தான் மாளுவராயன்
20. தேசசூரன் எங்குந் திறைகொண்ட கண்டன் பதினெட்டுக் கூட்டத்து வன்னி
21. யர்கள் கண்டன் வன்னியராட்டந் தவிள்த்தான் ஒரு குடைக்கீள் உலகமுழு
22. தும் ஆண்டோன் திருவிருக்கு மணிபார்பன் கிஷ்டனரண முத சந்திரோத
23. யன் கோடி சூரியப் பிரகாசன் ஈழமுந் திரைகொண்ட இரகுல சூரியன்
24. மதனகிறுவித சுமுகமன்ன கேசரியான அனவரத கலிதுரத தேவ
25. வடவரசர் முடியள் நடுவி விடறிவரும் ராசாதிராசன் விருது மானங்காத்
26. தருளிய தேவமகராயர் நரசிங்கராயர் இம்முடி கிருஷ்ண ராயர் தேவை பிரான்

27. ராயர் மல்லிகைராயர் சசிவர்ணராயர் சீரங்கராயர் விருப் பாச்சிராயர்

28. சேது ராசேந்திரனான தின்புய கோலாகலன் தாலிக்கு வேலி தரியலர்

29. கள் மனைவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம வலியச்சரு

30. வி வழியில்க்கால்நீட்டி அரிவையர்கள் மதரூபன் அஷ்ட யோக துரந்தரீகள்

31. தேவைவரு துரைராயன் செம்பிநாடான் அரசராவண ராமன் அரசராட்டந்தவ

32. ந்த்தான் குப்பலக்குளக்காரன் குவலையங் காத்தோன் யிறந்தகால மெடுத்தோன்

33. யிரவிகுல சேகரன் அடைக்கலங் காத்தோன் அடையவர் கள் சிங்கம் உரிகோ

34. ல் சுரதனன் உத்தண்டராயன் காவிக்குடையான் கனகாமி சேகன் தத்துபரி

35. யான் தங்கச்சிவிகையான் சாடிக்காறர் கண்டன் சறபன்ன பாசையான்

36. தொட்டவாரந் தவறாத சொரிமுத்து வன்னியன் சேது வழிகொண்டோன்

37. தொண்டித்துறை காவலன் சாமித்துரோகிகள் மிண்டன் வேல்விழி இவு

38. ளி மிதிந்தேறுவார்கள்கண்டன் அந்தப்பிரசண்டன் பூறுவ தெஷ்ண பசிம உத்

39. தர சத்த சமுத்திர தெட்சனாதிபன் வடகரைப்புலி துளப மாலையணியுஞ் சம்பிரம

40. கோலாகலன் கெருட கேதனங்கொண்ட கீற்திப் பிரதாபன் வீரவெண்பா மாலை

41. யான கு சிங்கம் தமிள்ப்பிறசிங்கம் பகைமன்னர் சிங்கம்

42. மதன மோகன உதவின ராமனாதசுவாமி காரியதுரந்தரன் தேவப் பிராமண பரி

10. கிஷம் ஏவல்செய்வித்திருந்தருளினோன் எம்மண்டலமுந் திறைகொ
11. ண்டருளிய ராசர்கள் தம்பிரான் துலுக்கர்தள விபாடன் துலுக்கராட்டந் தவி
12. ள்த்தான் ஒட்டியர்தள விபாடன் ஒட்டியர்மோகந் தவிள்தான் தொட்டியர் த
13. ள விபாடன் தொட்டியராட்டந் தவிள்த்ததன் மலைகலங்கினும் மனங்கலங்
14. ங்காதகண்டன் குறையமக்கி மதிகொண்டோன் வீரப்பிறதாபன் விருதரசர் மண
15. வாளன் யிந்தகோப் சற்பிற கெருடன் சமர கோலாகலன் தாலிக்கு வேலி
16. தரியலர்கள் மணவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம கெம்பீரன்
17. பாவநாசபன் திரயாகசாலை யாகமூர்ந்தி துஷ்டநிற்கிறக சிஷ்டபரிபாலனன்
18. அஷ்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரிராயன் கட்டாரிக் சாளுவன் துட்டரில்துட்ட
19. ன் துட்டராயிர கண்டன் துண்டீர நெஷ்டூரந் தவிழ்த்தான் மாளுவராயன்
20. தேசசூரன் எங்குந் திறைகொண்ட கண்டன் பதினெட்டுக் கூட்டத்து வன்னி
21. யர்கள் கண்டன் வன்னியராட்டந் தவிள்த்தான் ஒரு குடைக்கீள் உலகமுழு
22. தும் ஆண்டோன் திருவிருக்கு மணிபார்பன் கிஷ்டனரண முத சந்திரோத
23. யன் கோடி சூரியப் பிரகாசன் ஈழமுந் திரைகொண்ட இரகுல சூரியன்
24. மதனகிறுவித சுமுகமன்ன கேசரியான அனவரத கலிதுரத தேவ
25. வடவரசர் முடியள் நடுவி விடறிவரும் ராசாதிராசன் விருது மானங்காத்
26. தருளிய தேவமகராயர் நரசிங்கராயர் இம்முடி கிருஷ்ண ராயர் தேவை பிரான்

27. ராயர் மல்லிகைராயர் சசிவர்ணராயர் சீரங்கராயர் விருப் பாச்சிராயர்

28. சேது ராசேந்திரனான தின்புய கோலாகலன் தாலிக்கு வேலி தரியலர்

29. கள் மனைவாழன் தண்டுவார்கள் மிண்டன் சம்பிரம வலியச்சரு

30. வி வழியில்க்கால்நீட்டி அரிவையர்கள் மதரூபன் அஷ்ட யோக துரந்தரீகள்

31. தேவைவரு துரைராயன் செம்பிநாடான் அரசராவண ராமன் அரசராட்டந்தவ

32. ந்த்தான் குப்பலக்குளக்காரன் குவலையங் காத்தோன் யிறந்தகால மெடுத்தோன்

33. யிரவிகுல சேகரன் அடைக்கலங் காத்தோன் அடையவர் கள் சிங்கம் உரிகோ

34. ல் சுரதனன் உத்தண்டராயன் காவிக்குடையான் கனகாமி சேகன் தத்துபரி

35. யான் தங்கச்சிவிகையான் சாடிக்காறர் கண்டன் சறபன்ன பாசையான்

36. தொட்டவாரந் தவறாத சொரிமுத்து வன்னியன் சேது வழிகொண்டோன்

37. தொண்டித்துறை காவலன் சாமித்துரோகிகள் மிண்டன் வேல்விழி இவு

38. ளி மிதிந்தேறுவார்கள்கண்டன் அந்தப்பிரசண்டன் பூறுவ தெஷ்ண பசிம உத்

39. தர சத்த சமுத்திர தெட்சனாதிபன் வடகரைப்புலி துளப மாலையணியுஞ் சம்பிரம

40. கோலாகலன் கெருட கேதனங்கொண்ட கீற்திப் பிரதாபன் வீரவெண்பா மாலை

41. யான கு சிங்கம் தமிள்ப்பிறசிங்கம் பகைமன்னர் சிங்கம்

42. மதன மோகன உதவின ராமனாதசுவாமி காரியதுரந்தரன் தேவப் பிராமண பரி

43. (பாலகன் சிவபூசை குருபூசை அரிபூசை மறவாத துரந்த ரன் ஆத்துப்பாய்ச்சி கடலு

44. (ள் பாச்சி) பகைமன்னர் கண்டன் பனுக்குவார் மிண்டன் தளங்கண்டு தவிப்ப

45. ...ண்டன் துரைகள் சிகாமணி ராமலிங்கசுவாமி பாத மற வாமல் பார்

46. ...ண்டோன் எதுத்தவர்கள் சிங்கம் வடகரைப்புலி குளந்தையாதி

47. ...கு வெட்டி விருதுமீட்டான் அனனக்கொடியாதிபன் அஷ்டவட

48. ... ந்தினோன் மனுமுறை செலுத்திய மதன கெறுவித சுமுகன் அரி

49. .. யன் பிலத்தில்ச் சேடன் வில்லுக்கு விசையன் சொல்லுக்கு

50. ... இந்திரன் பரிக்கு நகுலன் குடைக்குக் கர்ணன் பொறுமை

51. ... தளத்தில்த் துரியோதனன் அசுபதி கெசபதி, நரபதி யாகிய சேது

52. ... நிலையிட்ட குமார முத்து விசைய ரெகுநாதச் சேது பதியவர்க

53. ...க்கும் பிறம்பும் புண்ணியத்துக்குள்ளுமாய்க் பிறிதிவி ராட்சிய பரி

54. ...ண்ணி அருளா நின்ற சாலியவாகன கலியுக சகாற்த்தம்

55. ... மேல் செல்லாநின்ற யுவ வருசம் ஆடிமாதம் 26 தேதி

56. ... முத்துக்குமார முத்து விசைய ரெகுனாத சேது காத்ந தேவ

57. ர்கள் மடம் பூறா தனமாயிருந்தபடியினாலே யின்னமே

58. ... ம் பரிபாலனமாகும்படிக்கு கிறாமம் சறுவமானியமா

59. ம் பட்டையமெழுதிக் குடுந்தனந்தலே பெருநாங்கு யெல்கையா

60. வது கீள்பாற்க் கெல்கயாவது பொற்றுடப்புக்கு மேற்க்கு தென்பாற்

77. இந்த தற்மத்தை மென்மேலும் பரிபாலினம் பண்ணினவர்
கன் காசியி

78. லே ராமேசீரத்திலே கன்னிமாகுமரியிலே கோதாபுரியிலே
இந்

79. த சிவத்தலங்களிலே ஆயிர சிவலிங்க பிறதிஷ்டை
பண்ணின

80. பலனும் அந்தச் சிவத்தலங்களிலே கோபிறாமணர் சகலத்
திர பேரு

81. ம் பொசிக்கத் தக்கதாய்.தடாகப் பிரதிஷ்ட்டை பண்ணின
பலனை அடை

82. வாராகவும் இந்தத் தற்மத்துக்கு யாதாமொருவர் இடை
கூறு

83. நினைத்தவர்கள் காசியிலே ராமேசுரத்திலே கன்யாகுமரியி

84. லே கோதாபுரியிலே இப்படிக் கொற்ற சிவத்தலங்களிலே
கோ

85. கத்தி விறுமகத்தி ஸ்ரீகத்தி சிசுத்தியும் ஆயிரத்தெட்டு சிவா

86. லயத்தில் வைய்த்த விளக்கையமத்தினபாவமும் இவர்கள்

87. பண்ணின பாவத்திலே போவாராகவும் இந்தப்படிக்கு
இந்தப்பட்டை

88. யமெளுதினது ராமனாதபுரத்திலிருக்கும் அட்டவணை
புள்ளைமாரி

89. ல் தெய்வகன்னியாபிள்ளை மகன் தெய்வகன்னி
கையெளுத்து

90. இந்தப்படிக்கு இந்தச் செப்புப்பட்டையகமளுதினேன்
ராமனாத

91. புரத்திலிருக்கும் தங்கவேலை, கெங்கணா பத்தன் உ

# செப்பேடு எண் 60

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : செல்லமுத்து விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : சாருவூரனேந்தல் பள்ள உலகாண்டி
3. செப்பேட்டின் காலம் : யுவ வருடம் ஆடி மீ" 20ந் தேதி (கி.பி. 07-08-1755)
4. செப்பேட்டின் பொருள் : மடம் ஊரணி தர்மத்துக்கு நில தானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் வழங்கப்பட்ட இந்த ஆவணத்தின் காலமாகிய யுவ வருடத்தைக் கொண்டு இதனை வழங்கியவர் செல்லமுத்து விஜயரெகுநாத சேதுபதியென நிர்ணயிக்க முடிகின்றது. இவரது விருதாவளியாக நாற்பத்தியொன்பது சிறப்புப் பெயர்கள் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் கீழ்க்கண்டவை மட்டும் புதியனவாகும்.

1. தர்மஞாய சோழநீதி தவறாதான்
2. நவகண்ட சக்கரவர்த்தி
3. கெங்கை குமரிமுதல் செங்கோல் நடத்திய வீரன்
4. தரியளர்கள் மணவாளன்
5. பாவனாச பந்திரயாகசாலை யாகமூர்த்தி
6. எங்கும் திறைகொண்ட கண்டன்

7. பதினெட்டுக் கூட்ட வன்னியர்கள் கண்டன்
8. கோடி சூரியப்பிரகாசன்
9. திரு இருக்கும் மார்பன்

கி பி. 1730ல் சிவகெங்கைச் சீமையென்ற புதியதொரு தன்னரசு மறவர் சீமையின் பகுதியினின்றும் தோற்றுவிக்கப் பட்டதுடன் ஆட்சிப் பரப்பிலும் திறத்திலும் வலிமை குன்றிய அரசராக சேதுபதி ஆகிவிட்டதனால் சிறப்பித்துச் சொல்லத்தக்க அவர்களது வீரச் செயல்களுக்கு வரலாற்றில் இடமில்லை. ஆதலால் மேலே கண்ட விருதாவளிகள் அனைத்தும் பொருளற்ற தாக இருப்பினும் சம்பிரதாயத்திற்காக இந்தச் செப்பேட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி ஆட்சிக்காலத்தில் அமைத்துதவிய மடம், சாருவூரனேந்தல் கிராமத்தில் பழுதடைந் திருந்ததால் அதனையும் அதனையொட்டிய ஊரணியையும் பரி பாலனம் பண்ணிவிக்க பள்ள உலகாண்டிக்கு இந்தச் செப்பேடு வழங்கப்பட்டுள்ளது. சில பயனுள்ள செய்திகளும் இந்தச் செப்பேட்டில் பொதிந்துள்ளன. பாட்டாளி மக்களாகிய பள்ளர் வகுப்பினர், மிகுந்த ஊராக இந்த ஊர் அமைந்து இருந்ததை யும் அவர்களில் செல்வாக்கு மிக்கவர் உலகாண்டி என்பதும் தெரிய வருகிறது. இந்த மடத்தினை பரிபாலனம் செய்வதற் காக அதே ஊரில் பதின்கல விரையடி நிலம் அவரிடம் கை யளிக்கபட்டதையும், இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. சம்பந் தப்பட்ட நிலத்திற்கான நான்கெல்கைகளும் அந்த நிலத் திலிருந்து மன்னருக்கு இறுக்கப்பட்ட வரியிறை, எச்சோறு, வரிச் சோறு, ஆடோட்டி, மாடோட்டி ஆகியவைகளும் இந்தச் செப் பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த தர்மத்துக்காக அனைத்து கிராமங்களிலும் குடி ஒன்றுக்கு இரண்டு படி நெல் அளந்து கொடுக்கவும் மன்னர் கட்டளையிட்டுள்ளார். முந்தைய செப்பேடு களில் கண்ட, கீதாரம், நன் மாட்டு சுரபிக்காத வரி, போன் றவை இங்குகுறிப்பிடப்பட்டுள்ள ஆடோட்டி, மாடோட்டி ஆகும்.

இவைகளுக்கெல்லாம் மேலாக அன்றைய காலகட்டத்தில் கிராமங்கள் தேவதாயம், பிரம்ம தாயம், பண்ணை, சிறு தேட்டு என்று வகைப்படுத்தப்பட்டிருந்ததையும் குடிகளுள் நாயக்கர்,

ராவுத்தர் துரைமக்கள், தேவர், பாளையக்காரர், தண்டடிக் காரர், ஊழியக்காரர், என்ற பிரிவினர்களையும், அம்பலக்காரன், சொத்துக் கணக்கன் என்று கிராம அலுவலர்களையும் இந்தச் செப்பேடு இனங்காட்டுகிறது.

திருக்கோயில்களுக்குத் தானம் அளிக்கப்பட்ட நிலங்கள் *தேவதாயம்* என்றும் பிராமண உத்தமர்களுக்குச் சர்வமானியமாக வழங்கப்பட்டவை *பிரம்மதாயம்* என்றும் நிலச்சொந்தக் காரர் களால் நேரடி விவசாயத்தில் இருந்த பெரும் பரப்பு நிலம் *பண்ணை* என வழங்கப்பட்டது. *சிறு திரட்டு* என்ற சிறு அள விலான நிலம் *சிறு தேட்டு* எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதுவும் சொந்த நில வகையினது. செப்பேட்டுச் சம்பந்தப்பட்ட சாரு ஊரனேந்தல் கிராமம் இன்றைய திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ளது. வருவாய்த்துறைப் பதிவுகளில் இந்த ஊர் *''சாருவனேந்தல் என்ற பள்ள மடம்''* எனக் காணப்படுகிறது. இந்தப் பட்டயத்தின் ஒம்படைக் கிளவியாக ''ஆயிரத்தெட்டு சிவாலயத்தில் வைத்த விளக்கை அணைத்த பாவமும்'' (வரிகள் 85, 86) என்று குறிப்பிட்டிருப்பது புதிய பிரயோகம்.

# முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி

## (கி. பி. 1662—1795)

சேதுபதி மன்னர்களின் பட்டியலில் இறுதியாக இந்த மன்னரது பெயர் காணப்படுகிறது. இவர் பத்துமாதக் குழந்தை யாக இருக்கும்பொழுது மன்னர் பதவி இவரைத் தேடி வந்தது பதினொரு வயதை இவர் அடைந்த பொழுது ஆற்காட்டு நவாப் பும் கும்பினியாரது படையும் இராமநாதபுரம் கோட்டையைத் தாக்கிப் பிடித்தனர். இந்த இளவரசரது பிரதிநிதியாக ஆட்சி செய்த இவரது தாயார், தமக்கையர் ஆகியோருடனும் இவரும் கைது செய்யப்பட்டு திருச்சி கோட்டையில் சிறையிடப்பட்டார். இது நிகழ்ந்தது கி.பி. 1772. ஜுன் 3ந்தேதி

இதனைத் தொடர்ந்து சீமையெங்கும் நவாப்புக்கு எதி ராக எழுந்த அரசியல் குழப்பம், வரிகொடாமை இயக்கம், மக்கள் கிளர்ச்சி ஆகிய நிர்பந்தங்களினால் ஆற்காட்டு நவாப் இந்த மன்னரை கி.பி. 1781ல் சிறையினின்றும் விடுவித்து ஆட்சியை ஒப்படைத்தார். சிறந்த திட்டங்களைச் செயல்படுத்தி வந்த இந்த மன்னரது நிர்வாகத்தில் தலையிட்டு அதிகார மமதையுடன் சலுகைகளைப் பெற இயலாது ஏமாந்த கும்பினி

யார் அவர்களுக்குரிய இராஜதந்திர முறையில் திடீரென கி.பி. 1795ல் இராமநாதபுரம் அரண்மனையைக் கைப்பற்றி இந்த மன்னரை மீண்டும் திருச்சிராப்பள்ளி சிறையிலடைத்தனர். இதனைத் தொடர்ந்து மறவர் சீமையெங்கும் மக்கள் திரண்டு சித்திரங்குடி' மயிலப்பன் சேர்வைக்காரர், சிங்கன் செட்டி, புட்டூர் ஆகியோர்களது தலைமையில் ஆயுதம் தாங்கி கிளர்ச்சியில் ஈடு பட்டனர். நாற்பது நாட்கள் நீடித்த இந்த மக்கள் இயக்கத்தை ஒழுங்கான படை பயிற்சியும் ஆயுத வசதியும் கொண்ட பரங்கிப் படைகள் நசுக்கி அழித்ததுடன் சிறைபட்ட சேதுபதி மன்னர்தான் இந்தக்கிளர்ச்சிக்கு காரணமென கும்பினியார் முடிவு செய்து அவரை திருச்சியிலிருந்து சென்னை ஜெயின்ட் ஜார்ஜ்கோட்டை யில் சிறை வைத்தனர். தமது நாற்பத்தெட்டு ஆண்டுகால வாழ்வில் மொத்தம் இருபத்துமூன்று ஆண்டுகளைச் சிறையில் கழித்த இந்த சேதுபதி மன்னர் 23.1.1809ல் தியாகியானார்.

இவரது பன்னிரெண்டு வருட ஆட்சியில் பல அடிப்படைப் பணிகளை மேற்கொண்டார். நாணயச் செலவாணி, குடிமைப் பொருள்கள் வழங்குதல் பிறநாட்டு வாணிகம் டச்சுக்காரருடன் ராணுவ தொழில் நுட்ப உதவி போன்ற பல திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்தியதுடன் பல அறப்பணிகளுக்கும் ஆதாரமாக இருந்தார்.[1] சேதுபதி மன்னர்களில் மிகவும் அதிகமான அறக் கொடைகளை திருக்கோவில்களுக்கும் திருமடங்களுக்கும் தேவா லயத்திற்கும், தனியார்களுக்கும் வழங்கி உதவிய பெரும் உப காரி இந்த மன்னர் என்பதை வரலாறு விளம்புகிறது.

1. கமால் எஸ்.எம். Dr. விடுதலைப்போரில் சேதுபதி மன்னர் (1987)

## செப்பேடு எண் 61
(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1682 இதின் மேல்
2. செல்லா நின்ற விக்ரமநாம சம்வஸ்திரத்து உத்தராயணத்
3. தில் வசந்த ரிதுவில் வைகாசி மாசம் சுக்கில பூர்வ பட்சத்தில் வெள்ளிக்கிழ
4. மையும் குரு வாரமும் சுபயோக சுபகரணமும் — — —
5. — — — — — — — — — — — ணாமயோக மும் பெற்ற பகுதானமும் கூடின சோம மிதுன லக்குன
6. த்தில் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன் இராமநாதசுவாமி காரிய துரந்தரன் பரராஜ சிங்கம், அசுவபதி மகாமண்
7. டலேசுவரன் விருதசார மணவாளன் அந்தம்பிர கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் கொட்டமடக்கி துரகரே பந்தன்
8. சத்திய அரிச்சந்திரன் சங்கீத சாகித்திய வித்யா வினோத ன் வீரத் தண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் சகல
9. சாம்பிராச்சிய லட்சுமி வாசன் வீராதி வீரன் வேதியர்கள் காவலன் அரச ராவண ராமன் அடியார் வேலைக்காரன்
10. பரமன்னர் சற்ப கருடன் பாண்டி மண்டல தாபனாச்சாரி யன் சோழ மண்டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண் டைமண்

---

‡ நூலாசிரியரது கள ஆய்வில் திரு உத்தரகோச மங்கையில் கண்டுபிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

11. டல சண்டப்பிரசண்டன் பாசைக்குத் தப்புவார் கண்டன் கண்ட

12. நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் தாலிக்குவேலி பட்ட மானங்காத்தான் துட்டரில் துட்டன் துட்டர் கொட்ட மடக்கி இ

13. டருவார் கோடாரி — — — ஈழமும் கொங்கும் யாழ்ப் பாணபட்டணமும் எம்மண்டலமும் அளித்து கெஜவேட்டை

14. கண்டருளிய ராசாதி ராசன் ராஜ பரமேஸ்வரன் ராச மார்த்தாண்டன் ராச கம்பீரன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு ந

15. குலன் வில்லுக்கு விசையன் மல்லுக்கு வீம சேனன் பொறுமைக்கு தர்மபுத்திரன் பிரசங்கத்துக்கு ஆதிசேனன் அடைக்கலங்காத்தா

16. ன் மதப்புலி சகல குண சம்பந்தன் கலியாண குணா பிராமன் படைக்கும் கொடைக்கும் ஓடாத கண்டன் — — பரசுராமன்

17. மனுநீதி மன்னன் அநாதரட்சகன் மனங்கலங்கினுங் மன

18. ங் கலங்காத கண்டன், இளஞ்சிங்கம், பகைமன்னர் சிங்கம்

19. செம்பிவள நாடன் அதிவீரன் அகலங்கன் கருணை பொழி கடாட்

20. சன் அன்னதான சிவன் மேவலர்கள் கோளரி மேவலர்கள்

21. வணங்குமிரு தாளினான் அனும கேதனன் கெருட கேதனன் சிங்

22. க கேதனன் வியாக்கிர கேதனன் மீன கேதனன் குக்கிட கேதனன்

23. காவி கேதனன் செங்காவிக் கொடையும் அதன் மேல் விருது சல்லியுமுண்டான தேவாதி தேவன் தனலட்சுமி

24. தானியலட்சுமி, வீரலட்சுமி, விசையலட்சுமி, சந்தான லட்சுமி

25. சௌபாக்கிய லட்சுமி கீர்த்தி லட்சுமி சகல சாம்பிராச்சிய லட்சு

26. மி அட்ட லட்சுமி சீனிவாசன் அசுபதி, நரபதி சேதுபதி மகாராஜா
27. அவர்கள் துகவூர் கூத்தத்தில் காத்தூரான குலேத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் மாதுருவங்கி
28. சத்துக்காக சோடச மகாதான தீட்சா துரந்தரனான இரண்ய கெற்ப்
29. பயாசி இரவிகுல இரெகுநாத சேதுபதி மகாராஜா அவர்கள் வம்சத்
30. தவரான ஸ்ரீமது முத்துச்செல்லத் தேவர் அவர்கள் குமாரர் முத்து விசைய ரெகுநாத சேதுபதி காத்தத்தேவர் அவர்கள் திருஉத்திரகோ
31. சமங்கை மங்களேசுவர சுவாமி கோயில் ஸ்தானிகரான கௌதம கோத்திரத்
32. தில் போதாயண சூத்திரத்தில் ..... இராமலிங்க குருக்கள்
33. புத்திரன் மங்களேசுவர குருக்களுக்கு சகிரண்ணியோத தாராபூர்வமாக
34. தானம் பண்ணிய கிராமமாவது கருக்காத்திக்கு எல்கை யாவது வேளாநேரி நன்சை வயலுக்கு மேற்கு தெற்கே வையையாத்து
35. க்கு பாதி நஞ்சை வயலுக்கு மரகதவள்ளி, அம்பல களரி எல்லைக்குட்பட்ட கருக்
36. கரத்தி நஞ்சை புஞ்சைக்குக் கிழக்கு வடக்கு எல்கையாவது மே
37. ல் மடந்தை நஞ்சை வயலுக்குத் தெற்கு இந்நான்கெல் கைக் குறிப்பிட்ட
38. கருக்காத்திக்கு பிரதிகாமமான முத்துராமலிங்கபுரம் நஞ்சை, புஞ்சை, மாவிடை, மரவிடை
39. திட்டு, திடல், பள்ளம் படுகை, ஊரணி குடி. படை, பள்ளு பறை சகல சமுதாய
40. பிராப்தி நிதி நிட்சேப சலதரு பாஷாணங்களின் ஆதாய மென்று சொ

41. தலச் செய்த அஷ்டபோக தேச சுவாமியங்களுக்கு தானாதி வினிய விக்கி

42. ரயங்களுக்கும் யோக்கியமாக ஆசந்திராதி புத்திர பௌத் திர பரம்பரையாக ஆண்

43. டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்திற்கு யா தொருமொருவன் அகிதம் பண்ணி

44. னபேர்கள் காசியிலே இராமேஸ்வரத்திலே கெங்கைக் கரையிலே கோடி கார

45. ம் பசுவையும் கோடி பிராமணரையும் வாதம் பண்ணின பாவத்தை அடைவா

46. ராகவும் இந்த தாம்புர சாதனம் எழுதினேன் திருப்புல்லா ணியிலிருக்கும்

47. சங்கர பண்டாரம் மகன் சின்ன வீரப்பன் விகிதம் உ

## செப்பேடு எண் 61

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமலிங்க குருக்கள் மகன் மங்களேஸ்வர குருக்கள் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1682 விக்ரம ஆண்டு வைகாசி மீ". (கி.பி. 1761) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேற்படி குருக்களுக்கு கருக் காத்தி கிராமம் தானம் வழங்கப் பட்டது. |

இத்தச் செப்பேட்டை வழங்கிய மன்னர் ''ஸ்ரீமது முத்துச் செல்லத்தேவர் அவர்கள் புத்திரன் முத்துராமலிங்க விஜயரெகு நாத சேதுபதி''யாகும். இவர் ஒராண்டு வயது பாலகராக இருக்கும்பொழுது (கி.பி. 1760)ல் சேதுபதி மன்னராக முடிசூட் டப் பெற்றார். இந்த செப்பேடு அந்த மன்னரால் வழங்கப்பட் டது என்பதைவிட மன்னரது பெயரால் வழங்கப்பட்டது என கொள்வது சிறப்பாக இருக்கும். ஆதலால் இந்தச் செப்பேட்டில் முந்தைய சேதுபதிகளின் சிறப்புடன் விளங்கிய ரெகுநாத திரு மலை சேதுபதியின் எழுபத்துமூன்று சிறப்புப் பெயர்கள் இந்தப் பால சேதுபதியின் விருதாவளியாக கொடுக்கப்பட்டுள்ளது. இவரது தந்தையின் பெயர் நெருஞ்சித் தேவர் என்பதாகும். ஆனால் இராமநாதபுரம் அரண்மனை சம்பிரதாயத்தையொட்டி ''முத்துச் செல்லத்தேவர் புத்திரன்'' என்று செப்பேட்டில் பொறிக் கப்பட்டுள்ளது. (வரி. 30)

இராமநாதபுரத்திற்கு அண்மையிலுள்ள திருஉத்திரகோச மங்கை சைவப் பெருமக்களால் இறைவனது ஊராககொண்டாடப்பெறும் ஏற்றம் பெற்றுள்ளது. திருவாசகத்தின் சில பகுதிகளை இங்கு மணிவாசகப் பெருமான் இறைவன்மீது பாடினார் என்பது வரலாறு. இங்குள்ள கோயிலின் ஸ்தானிகரான மங்களேஸ்வர குருக்களுக்கு கருக்காத்தி கிராமத்தை சர்வமானியமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. சேதுபதி மன்னர்களது வழிபாட்டுத் தலங்களில் இராமேசுவரத்துக்கு அடுத்ததாக கருதப்படும் இந்தக் கோயிலின் ஸ்தானிகர் அவரது கடமையிலும் ஒழுக்கத்திலும் சிறந்த உத்தமராக இருந்த காரணத்தால் அவரது பணியும் வாழ்வும் சிறக்க மன்னர் இந்த நிலக்கொடையை வழங்கி ஊக்குவித்து உள்ளார்.

தானம் வழங்கப் பெற்றுள்ள கருக்காத்தி கிராமம் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் வட்டம் திருஉத்திரகோசமங்கையிலிருந்து ஐந்துகல் தொலைவில் களரிக் கண்மாய்க்குக் கிழக்கே அமைந்து உள்ளது. இது தற்பொழுது பேச்சில்லா கிராமமாக உள்ளது. இதன் பெரு எல்லையாகக் குறிக்கப்பட்டுள்ள வேளானேரி, இன்று வேளானூர் என்று வழக்குப் பெற்றுள்ளது. சேதுபதி மன்னரது தானம் பெற்ற பிறகு இந்த ஊரின் பெயர் முத்துராமலிங்கபுரம் என்ற வழங்கப்பட்டதை செப்பேட்டின் வரி (38) புலப்படுத்துகிறது.

## செப்பேடு எண் 62

(நகல்)

(முதல்பக்கம்)

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகஹ நசகாப்தம் 1684 கலியப்தம் 4863
2. இதின்மேல் செல்லாநின்ற சித்திரபானு நாம ஸம்வத் ஸரமும் தெட்சிணா
3. யனமும் சரத்ரிதுவும் அற்பிசிமாசமும் கிருஷ்ணபட்சமும் அமாவாசியும் பா
4. னுவாசரமும் சித்திரா நட்சத்திரமும் சுபயோக சுபகரண மும் கூடின சு
5. பதினத்தில் ஸ்ரீமது தேவநகராதிபன் சேதுமூலரட்சா துரந் தரன் ராம
6. னாதசுவாமி காரியா துரந்தரன் சிவபூசா துரந்தரன் பரராசசேகரன் ப
7. ரராச கெசசிங்கம் இரவிகுலசேகரன் இரவி மாற்த்தாண் டன் சொரிமு
8. த்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுரன் அரியதள விபா

---

* நூலாசியரது கள ஆய்வில் திருப்புல்லாணி கிராமம் தெற்கு ரதவீதி இரா. தேசிகளிடம் இருப்பது கண்டு படி எடுக்கப் பட்டது.

அமைப்பு : 28.2. செ.மீ × 19 செ.மீ.

9. டன் பாசைக்குத்தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு
10. கொடாதான் பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் சோழ மண்டல பிறதி
11. ஷ்டாபனாசாரியன் தொண்டலமண்டல சண்டப்பிரசண்டன் ஈளமும் கொங்
12. கும் யாழ்ப்பானராயன் பட்டணமும் கெசவேட்டை கொண் டருளிய ராசா
13. திராசன் ராசபரமேசுரன் ராசமாற்த்தாண்டன் ராசாகெம் பீரன் பரதள
14. விபாடன் உரிகோல்சுரதானன் அந்தம்பர கண்டன் சாடிக் காரர் கண்டன் சா
15. மித்துரோகியள் மிண்டன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்
16. கம் மதுரை ராசர் சிங்கம் ஆத்தில்ப் பாய்ச்சி கடலில்ப் பாய்ச்சி மதப்புலி அடை
17. க்கலங்காத்தான் தாலிக்குவேலி சத்துராதியள் மிண்டன் வன்னியரா
18. ட்டந் தவிள்ந்தான் மேவலர்கள் கோளாரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான்
19. வீரகெம்பீர கீர்த்திப்பிரதாபன் ஆரியர் மானங்காத்தான் தொண்டியன்து
20. றை காவலன் துரகரேவந்தன் அனுமகேதனன் கெருட கேதனன் குடைக்கு கற்
21. ணன் பரிக்கு நகுலன் கருணாகடாட்சன் குன்றினுயர் மேருவை குன்றாய் வளைகுணில்
22. பொரித்தவன் திலதனுதல் மடமாதர் மடலெழுத வருசமு கன் விசயலெட்சுமி
23. காந்தன் கலைதெரியும் வீற்பன்னன் காமினி கந்தப்பன் வீரதண்டை சேமத்தலை விளங்
24. குமிரு தாளினான் ராசகுல திலகன் ராசமனோபயங்கரன் மன்னரில் மன்னன் ம

25. குடவற்த்தந வேந்தன் மன்னர் சூடாமணி துட்டரில் துட் டன் துட்டநி

26. ட்டூரன் அட்டதிக்கு மனோபயங்கரன் கட்டாரி சாளுவன் நவகோடி.

27. நாராயணன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்தவி விழ்ந்தான் ஒட்டி.

28. யர் மோகந்த விள்த்தான் மனங்கலங்கினும் மனங்கலங்கா தான் அசுவபதி நர

29. பதி, கெசபதி, தளபதி, அரிவுக்கு அகத்தியன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்

30. கு விசயன் மல்லுக்கு வீமன் தாலிக்கு வேலி அன்னசத் திர சோமன் அடியார் வேளைக்க

31. ாறன் செம்பி வளநாடன் பூலோகதேவேந்திரன் செங்காவிக் குடையான் ஸ்ரீமது

32. உறிரண்ய கெற்பயாசி முத்துவிசயரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவார்கள் பேர

33. ன் முத்துவிசய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் பூதானம் பண்ணி

34. க்குடுத்த கிறாமமாவது செம்பிநாட்டில் சிக்கில் உள்ளிட்ட பத்தில் சின்னநா

35. ட்டான் பெரியநாட்டானுக்கு எல்கையாவது கீள்பாற்க் கெல்கை செகுட்டு

36. மடைவாய்க்காலுக்கும் அயக்குடிக்காலுக்கும் மேற்க்கு தென்பாற்க்கெல்கை த

37. த்தங்குடிப்பாதைக்கு வடக்கு மேல்பாற்க்கெல்கை உப்புப் பாதைக்கு கிளக்கு வடபா

38. ர்க்கெல்கை பண்ணந்தைப்பாதைக்கு தெற்க்கு இன்னான் கெல்கைக்குள்

39. ளான சின்னநாட்டான் பெரியநாட்டானை சூரியோபராக புண்ணியகாலத்தில்

55. ஸ்ரீ மதுமுத்துவிசயரெகுனாதச்சேதுபதி காத்ததேவரவர்கள்

56. சின்னநாட்டான் பெரியநாட்டான் அஷேசவித்துவத் மகாசெ

57. னங்களுக்கு பூதானம் பண்ணிக்குடுத்தோம் தாந பாலந யோர்மத்யே

58. தாநாத் ஸ்ரயோது பாலநம் தாநாத் ஸவர்க்கமவாப் நோதி பால

59. நாத் அச்சுதம் பதம் ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாது பால

60. தம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேதுஉ

## செப்பேடு எண். 62

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜய ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : வித்வத் மகாஜனங்கள்
3. செப்பேட்டின் காலம் : சகம் 1684 சுக்கிரபானு அர்பசி (கி.பி. 17-10-1762)
4. செப்பேட்டின் பொருள் : சின்னநாட்டாண், பெரிய நாட்டாண் கிராமம் தானம்.

இந்த தானத்தை வழங்கிய முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் விருதாவளியாக எழுபத்து ஆறு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் வரையப்பட்டுள்ளன. அவைகளில் மதுரை ராசசிங்கம், மகுடவர்த்தனர் வேந்தன் என்ற இருவிருதுகள் மட்டும் புதியவை, மன்னர் பெயரும் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதியென சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

செம்பிநாட்டின் தென்பகுதியான சிக்கல் பத்தில் உள்ள சின்னநாட்டான் பெரியநாட்டான் என்ற ஊரினை வித்வத் மகாஜனங்களுக்கு சேதுபதி மன்னர் தானம் கொடுத்ததைச் சொல்லும் ஆவணமாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது. இந்த ஊர் இன்றைய முதுகுளத்தூர் வட்டப்பகுதியில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று அந்த ஊர் இல்லை.

ஆனால் இந்த ஊருக்கான பெருநான் கெல்கையாக குறிப்பிடப்படும் தத்தங்குடி பண்ணந்தை ஆய்க்குடி ஆகிய ஊர்கள் இன்றும் வழக்கிலுள்ளன. இந்தச் செப்பேட்டின் வரி

37ல் காணப்படும் ''உப்புப்பாதை'' என்ற சொல்லிலிருந்து வாலிநோக்கம் கடற்கரைப்பகுதியில் முந்தைய காலங்களில் ஏராளமான உப்பளங்கள் அமைந்திருந்த பகுதி என்பதும் அங்கிருந்து உப்புப் பொதிகள் கொத்தங்குளம் வழியாக உள்நாட்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்டதும் தெரியவருகிறது. வண்டிப் போக்குவரத்துக்கு மட்டும் பயன்படும் பெரு வழிகள் அந்தக் காலத்தில் மிகவும் குறைவாக இருந்ததால், இத்தகைய செப்பேடுகளில் அந்தப்பாதைகள் நான்கு எல்லைகளில் துலக்கமாக இடம் பெற்றுள்ளன. முன்னர் அளித்த செப்பேடுகளில் சேதுப்பாதை, இராமநாதபுரம் பாதை, பண்ணந்தை பாதை என்ற வழிகள் நான்கு எல்லைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

## செப்பேடு எண் 63

(நகல்)

1. சொத்திஸ்ரீ சாலிவாகன சகார்தம் 1685 இதன்மேல் செல்லாநின்ற கவானுநாம சம்மட்சரத்தில் உத்தராயணத் தில் யேவந்தருனறுதுவில் புஷியமாசத்தில் அபரபட்சத்தில்
2. அமாவாசியும் சோமவாரமு உத்திரநட்செத்திரமும் சுப யோக சுபகறணமும்பெற்ற சுபதினத்தில் ஸ்ரீராமதனு கோடி சேதுமூலத்தில் ஸ்ரீமன் மகாமண்ட
3. லேசுபரன் அரியராயிரதழவிபாடன் பாசைக்குக் தப்பு வாயிரகண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு குடா தான் பாண்டிமண்டலதாபனசாரியன்
4. சோழமண்டல பிரதிஷ்ட்டாபனாசாரியன் தொண்ட மண்டல சண்டபிரசண்டன் பூறுவதெட்சன பட்சிம உத்தர ஈழமுங் கொங்கும் யாழ்ப்பணமும் அளித்துக்துக்கெச
5. வேட்டைகொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுபரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் பட்டமானங்காத்தான் துட்டாயிரகண்ட புவனேகவரன்
6. பூபாலன் கோபாலன் அஷ்ட்டதிக்கு மனோபயங்கரன் துஷ்ட்டனிக்கிரக சிஷ்ட்டபரிபாலனன் வேதியர்காவலன் அரசராவணராமன் அந்தம்பிறகண்டன் சாமித்
7. துறொகியள் முண்டன் பஞ்சவீரன் ராயராகுத்தன் பனுக்கு வாரகண்டன் வைகைவழநாடன் கொட்டமடக்கியவை யாளி நாறாயணன் இவுளிபாவடிமிதித்தேருவார்கண்டன்

‡ ASSI. Vol IV. pp. 98–99.

8. வீரவெண்பாமாலை உயசாமற உல்லாசநழின அலங் காரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் பகை மன்னர் சிங்கம் துரராாசசிங்கம் ஆத்துப்பாச்சி கடலில் பாச்சி மதப்புலி அடை

9. க்கலங்காத்தான் தாலிக்குவேலி செம்பிவளநாடன் தொண் டியன் துரைகாவலன் துரகரேவேந்தன் அனுமகேதனன் கெருடகேதனன் புலிக்கொடி புரவலன் கொடைக்குகற்னன்

10. வில்லுக்குவிசையன் சொல்லுக்கரிச்சந்திரன் கருனாகடாச் சன் விஜயலட்சுமிகாந்தன் பரத நாடகப்பிரசன்னன் வீர தண்டைசேமத்தலைவிளங்குமிரு

11. தாளினான் தேவைநகராதிபன் சேதுகாவலன் சேதுமூல ரெட்சாதுரந்தரன் ஸ்ரீராமனாதசுவாமி காரியதுரந்தரன் செங்காவிக்குடையான் அன்னசத்திர ஸோமன் ஸகல ஸாம்பிறாட்சிய

### இரண்டாம் பக்கம்

12. லெட்சுமிவாசனான துகவூர்கூத்ததில் கரத்தூறான குலத் துங்கசோழநல்லூர் கீர்பால்விரையாத கண்டனலிருக்கும் ஸ்ரீமன் இரணியகெற்பயாசி ரவிகுல முத்துராமலிங்க விசையரெகுநாதச் சேதுபதிகாத்த

13. தேவரவர்கள் இராமீசுவரம் ராமனாதசுவாமி பூசாபறாய ணறான காசிபகோத்திரத்தில் ஆபஸதம்ப சூத்திரத்தில் யெசுசாகாத்திபகறான தாதாசிவராமபட்டர் புத்திரன் ரெகு நாத குருக்களுக்கு சகிதண்ணியோதக

14. தாறாபூறுவமாகத் தீற்தபுரோகிததான சாதனப்பட்டையம் குடுத்தபடி நாம் தீர்த்தசேதுயாத்திரைக்கு குடும்பத்தோ டெவந்ததில் வயிரவதீந்தமுதல் தனுஷ்கோடி அனுப்பு தீற் தம் வரைக்கும் தீர்த்தஸ்தானங்களும்

15. ராமனாதசுவாமி பருவதவர்ததனியம்மன் மற்ற சன்னதி சுவாமி தெரிசனங்களும் சாற்த முதலானதுகளுக்கும் தம் முடையகையினாலே பவித்திரம் வாங்கிக்கொண்டு யாத்தி ரை முளுவதும் நடப்பிவிச்சுக்கொ

16. ண்டதினாலே இனிமேல் நம்மிடவம்மிசத்து ராசாகூகள் தீர்த்தயாத்திரைக்கி வந்தால் அவர்களுக்கு நீரும் உம் முடைய வம்முசத்தாரே புரோகிதம் பண்ணிவிச்சு அதில் வருகிற ஊதிபம் முளுவதையும் நீரே புரோ

17. கிதகாணியாச்சியாய் ஆதிசந்திராற்மாக சந்ததிப்பிரவேச மாக புத்திரபவுத்திர பாரம் பரையாயி ஆண்டனுபவித்துக் கொள்ளக்கடவராகவும் இந்த தர்மத்தை நம்மிடவம்மிசத் தில் யாதாமொருதர்

18. பரிபாலனம் பண்ணின பேர்களுக்கு காசியிலேயும், ராம தனுஷ்கோடியிலேயும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்ட்டையும் பண்ணின சுகிர்தத்தை அடைவார்களாகவும் இந்த

19. தற்மத்தை அகிதம் பணணினபேர்கள் கெங்கைக்கரையி லேயும் சேதுக்கரையிலேயும் காராம் பசுவையும் தேவப் பிராமணாளையும் மாதா பிதா குருவையும்வதைபண்ணின தோஷத்தில் போ கக்கட வா

20. ராகவும் ஸ்ரீராமநாதசுவாமி சகாயம்

21. இந்த தற்மசாதனபட்டயம் யெளுதினேன் ராயசம் சொக்கு கைஎளுத்து.

## செப்பேடு எண். 63
(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் தாதா சிவராம பட்டர் புத்திரர் ரெகுநாத குருக்கள்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1685 சுவான ஆண்டு (கி.பி. 1763)
4. செப்பேட்டின் பொருள் : ரெகுநாத குருக்களுக்கு கோயில் மிராசு உரிமை வழங்கல்

இந்த மன்னரது விருதாவளியாக ஐம்பத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் புவனேஸ்வரன் (வரி 5) பூபாலன், கோபாலன் (வரி 6) உபயசாமர உல்லாச நளினன் (வரி 8) என்ற நான்கு புதிய சிறப்புப் பெயர்களைத்தவிர ஏனையவை இவரது முந்தையோரான சேதுபதி மன்னர்களது பட்டயங்களில் காணப்படுபவை.

சேதுபதி மன்னரும், அவரது குடும்பத்தினரும் சேது யாத்திரைக்கு வரும் பொழுது தீர்த்தப் புரோகிதம் செய்து வைப்பதற்கு இராமேசுவரம் தாதா சிவராம படடர் புத்திரன் ரெகுநாத குருக்களுக்கு காணியாட்சி வழங்கும் தான சாதனம் இந்தச் செப்பேடு. மன்னரும் குடும்பத்தினரும் யாத்திரை மேற்க் கொண்ட பொழுது ரெகுநாத குருக்கள் பவித்ரம் வழங்கி இராமேசுவரம் வைரவ தீர்த்தம் முதல் தனுஷ்கோடி அனுப்பு தீர்த்தம் வரையான தீர்த்தக் கட்டங்களுக்கும் இராமநாத சுவாமி, பர்வதவர்த்தினியம்மன் சன்னதிகளிலும் தரிசனம், சிரார்தம்

ஆகியவை செய்வித்தும், மன்னரது பிரீதிக்கு உரியவரான காரணத்தினால் ரெகுநாத குருக்களும் அவரது வழியினரும் மன்னருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பரம்பரையாக புரோகிதம் செய்து அதன்வழி வருவாய்களை அனுபவித்துக் கொள்ளும் காணியாட்சிக்கு இந்தச் செப்பேடு ஆதாரமாக உள்ளது.

இந்தப் பட்டயத்தில் பல சமஸ்கிருதச் சொற்கள் விரவி வந்துள்ளன. அவைகளில் தீர்த்தம், புரோகிதம், சேது யாத்திரை (வரி 3) சார்த்தம், (சிரார்த்தம் வரி 4) பவித்ரம், வம்சத்தார் புத்திர, பவித்ர பாரம்பரிய, தலமும், பிரதிஷ்டை, சுகிர்தம், மாதா, பிதா, குரு, சகாயம், என்பன அந்தச் சொற்கள்.

வைரவ தீர்த்த முதல் தனுஷ்கோடி அனுப்பு தீர்த்தம் வரை பல தீர்த்தக்கட்டங்கள் இராமேசுவரம் நகரிலும், தீவிலும் அமைந்து புனித தீர்த்தங்களாகக் கருதப்பட்டு வந்தன. பாம்பனில் இருந்த வைரவ தீர்த்தம் கால நீட்சியில் மறைந்து விட்டது 23-12-1964ல் ஏற்பட்ட கடற்கோளினால் தனுஷ்கோடி தீர்த்தமும் அழிந்து விட்டது. இராமேசுவரம் நகரிலும் திருக்கோயிலுக்கு உள்ளேயும் உள்ள மொத்தம் இருபத்து இரண்டு தீர்த்தங்கள் சேது யாத்திரை மேற்கொள்பவர்களுடைய நீராடலுக்குரியதாக இன்று இருந்து வருகின்றன. இந்த தீர்த்தங்களின் புனிதத்தை கி.பி. பதினைந்தாவது நூற்றாண்டில் நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய *சேது புராணம்* என்ற இலக்கியத்தில் பரக்க காணலாம்.

## செப்பேடு எண். 64
(நகல்)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1605 இதின் மேல் செல்லாநின்ற ஸவபானு னாம சம்வச்ரத்தில் உத்த ராயண வசந்த ரிது ஜேஷ்ட மாதம் நவமி ஞாயித்துக் கிழமையும்
2. சந்திர பிரபையான் யோக சேஷ வாகன பெத்த ——— ———————— ஸ்வஸ்தி ஸ்ரீ மன் தேவை
3. நகராதிபன் சேது மூல ரட்சா துரந்தரன் பரராஜ சேகர பரராஜ கேசரி பரராஜ

இராமநாத சுவாமி துணை

4. கஜசிங்கம் இரவிகுல சேகரன் சொரிமுத்து வன்னியன் புவனேக வீர
5. ஸ்ரீ மகா மண்டலேசுவரன் அரியாயிர தள விபாடன் பூசைக்கு தப்புவ
6. ராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்
7. டி மண்டலத் தாபனாச்சாரியன் சோழ மண்டல பிரதிஷ்டா பனாச்சாரியன் தொண்டை மண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்
8. கும் யாழ்ப்பாண பட்டணமும் எம்மண்டமும் அளித்து கெஜ வே
9. ட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராச பரமேஸ்வரன் ராச மார்த்தாண்டன்

---

‡ சென்னை அருங்காட்சியகம், எழும்பூர். சென்னை.

25. க சாலையும் உண்டான தேவன் பலத்துக்கு ஆதிசேசன் அழகுக்கு வால
25. சீவகன் காமினி கந்தப்பன் கன கோபாலன் பஞ்சபாணா வதாரன் பாதள
27. விபாடன் தட்சிண சிங்காசன சேனாதிபதி சேதுகாவலன் அசுபதி கெஜபதி, நரப
28. திகளுக்கு மேலான சேதுபதி செங்காவிக் குடையன் இரண்ய கெற்ப
29. யாசியான முத்துரெகுநாத சேதுபதி காத்ததேவரவர்கள் பரத்வாஜ் கோ
30. த்திரத்தில் ஆபஸ்தம்பசூத்திரத்தில் யஜுர்பிரியாபரான சே
31. சவதானியின் புத்திரன் சந்திரசேகர அவதானிக்கு சகி ரண்ணியமாக
32. அரைவாரியாக தாம்பிர சாதனம் பண்ணிக் கொடுத்ததான தாம்பிர சாசனமாவது
33. கிடாத்திருக்கை நாட்டில் அரியக் குடியான கடம்பவன நல்லூர்
34. இந்த கிராமத்துக்கு நான்கு எல்கையாவது மஞ்சி ஊர் புஞ்சைக்குக் கிழக்கு பெரும்பாதைக்கு தெற்குபோகலுருக்கு
35. மேற்கு புத்தூருக்கு கிழக்கு பெரும்பாதைக்கு தெற்கு போகலுருக்கு
36. அரியக்குடிக்கு பிரதிநாமமான முத்து ரெகுநாத சமுத்தி ரத்தில் முன்
37. அக்கிரகாரம் கால் பங்கு நீக்கிய கிராமமும் முக்கால் பங்கும் முன் அ
38. க்கிரகாரம் கால் பங்கு பின் சர்வ சேவார்த்திகளில் ஜீவிதம்
39. பங்கும் ஒன்றும் தனுக்கோடிக் கரையில் தானம் பண்ணி க் கொடுத்த படியினா
40. லே இந்தக் கிராமம் முக்கால் பங்கும் முன் அக்கிரகார கால் பங்கில்

41. பதினாலில் ஒரு பங்கும் — — — — — — — —

42. பிறவிடை திட்டுத்திடல், கீழ் நோக்கிய கிணறும், மேல் நோக்கிய மரமும் நிதி நிட்சேப

43. சலதரு பாசான ஆசெண்ணிய ஆகம்மிய சித்தி ஸ்வாப்திய மெனச்

44. சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜ சுவாமியங்களும் வினய விக்கிரையங்களுக்கு போக்கிய

45. மாக புத்திர பௌத்திர ஆசந்திரராதித்ய சந்திரப்பிரவேசம் ஆண்டனுபவித்துக் கொள்ளக்

46. கடவராகவும், இந்த தர்மத்திற்கு யாதொருவர் அகிதம் பண்ணிண பேர்கள்

47. கங்கைக் கரையிலே காராம் பசுவை வதை பண்ணின தோஷத்திலே போகக்

48. க் கடவார்களாகவும் இந்த தர்மத்தை பரிபாலணம் பண்ணி கிற பேர்கள்

49. கோடிக் கன்னிகாதானமும் கோடி சிவலிங்க பிரதிட்டையும் அஷ்வமேகமும் பண்ணிய

50. பண்ணிய பலன் அடைவார்களாகவும் இந்த பட்டயம் சின்னப்பக்தர் மகன் வேலாயுதம் உ

## செப்பேடு எண் 64
(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | சேஷ அவதானிமகன் சந்திர சேகர அவதானி |
| 3. செப்பேட்டின் காலம் | : | சகம். 1685 சோபானு ஆண்டு பங்குனி மாதம் (கி.பி.1763) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | அரியக்குடி கிராமம் மேள்படி அவதானியாருக்கு தானம். |

முந்தையச் செப்பேட்டில் குறிக்கப்பட்டவாறு பாலகரான இந்தச் சேதுபதி மன்னர் பெயரில் அரியக்குடி கிராமம் தானம் வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் இந்த மன்னரின் முந்தையோர்களது சிறப்புப் பெயர்கள் இந்த மன்னரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளுடன் பலத்துக்கு ஆதிசேஷன், கனகோபாலன் தட்சணசிங்காசன சேனாதிபதி என்ற மூன்று புதிய பெயர்களும் இந்த விருதாவளியில் சேர்க்கப்பட்டுள்ளன.

சந்திரசேகர அவதானி என்ற சான்றோருக்கு அரியக்குடி என்ற சிற்றூரினை சேதுபதி மன்னர் தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. நிரம்பிய அறிவும் நிகரில்லாத இறையருளும் எய்தியவர்கள்தான் அரிய அவதானங்களைச் செய்து காட்ட முடியும். அவதானம் என்பது அதிசயிக்கத்தக்க கலையாகும். இறைவனின் அருட் கொடையுங்கூட மிகமிக வேகமாக செயல்படும் மனித நினைவாற்றலைக் கொண்டு கேட்போர் வினாக்களுக்கு இலக்கண இலக்கிய இலௌகீக சம்பந்தமான பதில்களை தயக்கமின்றி சரியாக

தெரிவிக்கும் முறைதான் அவதானமாகும். கேள்விக்கணைகளை அடுத்தடுத்து பலர் ஒரே சமயத்தில் எட்டு வினாக்களாகவும் தொடுப்பது உண்டு. இவைகளுக்கு பதிலிறுக்கும் ஆற்றல் பெற்றவர்கள் முறையே அட்டவதானி, சோடஷ அவதானி, சதாவதானி என்று அழைக்கப்பட்டனர். இந்தக் கலையில் தேர்ந்து விளங்கியவர்கள் நமது தமிழகத்தில் பதினெட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் ஆங்காங்கு ஓரிருவர் இருந்தனர். அவர்களில் முதுகுளத்தூர், அட்டாவதானம், பெரிய சரவணப் பெருமாள் கவிராயர். சென்னை, அட்டாவதானம் வீராச்சாமி செட்டியார் திருப்பத்தூர் அட்டாவதானம் அருள் வாக்கி அப்துல்காதிர் புலவர், முதுகுளத்தூர் அட்டாவதானம் கலியாணசுந்தரம் பிள்ளை, கோட்டாறு சதாவதானம் மகாமதி சேகுதம்பிப்பாவலர் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

இத்தகைய அரிய அவதானக் கலையில் வல்ல அறிஞர் ஒருவரைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் இந்த நிலக்கொடையைச் சேதுபதி மன்னர் வழங்கியுள்ளார். இந்தக் கொடையினைப் பெற்ற சந்திரசேகர அவதானிகள் தந்தையான சேஷனும் ஒரு சிறந்த அவதானியாக இருந்தார் என்பதும் நான்கு வேதங்களில் ஒன்றான யஜுர் வேதத்தில் வல்லவராக விளங்கினார் என்பதும் ''யஜுர் பிரியாபரரான சேஷாவதானி'' (வரி 35, 36) என்ற செப்பேட்டுத் தொடர் தெரிவிக்கின்றது,

தானம் வழங்கப்பட்ட அரியக்குடி கிராமம் கிடாத்திருக்கை நாட்டில் அமைந்திருந்தது. இதற்கு கடம்பவன நல்லூர் என்ற பெயரும் இருந்ததை செப்பேட்டு வரி 38 தெரிவிக்கின்றது. இந்தக் கிராமப் பெயர் தானம் வழங்கப்பட்ட பிறகு முத்துரெகுநாத சமுத்திரம் என்ற புதிய பெயரைப் பெற்றிருந்தது. இன்றைய பரமக்குடி வட்டத்தில் போகலூருக்குத் தென் மேற்கே இரண்டு கல் தொலைவில் அரியக்குடி புத்தூர் என்ற பெயரில் தற்பொழுது வழங்கப்படுகிறது. பெரும் நான்கு எல்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மஞ்சியூர் தற்பொழுது மஞ்சூர் என்று வழக்கில் இருந்து வருகிறது. பெயருக்குத் தக்கவாறு (மஞ்சு மேகம்) இந்த ஊர் இன்றும் மழைவளம் பெற்று வறட்சி இல்லாத ஊராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. சேதுபதி சீமையின் வட கிழக்குப் பகுதியில் அரியக்குடி என்ற பெயரினை உடைய பேரூர் ஒன்றும் உள்ளது. இந்த ஊர் நாட்டுக்கோட்டைப் பெருமக்களால் தென் திருப்பதியாகப் போற்றி வரப்பெறுகிறது. இங்குகோயில் கொண்டுள்ள இறைவர் ''திருவேங்கடமுடையான்'' என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறார்.

# செப்பேடு எண் 65

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1686 யிதின் மே
2. மல் செல்லாநின்ற தாருணஸூ ஆடிமீ 15உ தெட்சி ணாயண
3. த்தில் சுக்கிலபட்சமும் புதவாரமும் சதுர்தெசியும் உத்திராட ந
4. ட்சத்திரமும் சுபநாம யோகமும் வாலவாகரணமும் பெற்ற
5. புண்ணிய தினத்தில் ஸ்ரீ மகாமண்டலேசுவரன் அரிய
6. ராயதளவிபாடன் பாசைக்கி தப்புவராய கண்டன் கண்
7. டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் பாண்டி மண்ட
8. லதாபநாசாரியன் சோளமண்டல பிரதிட்டாப னாசாரிய
9. ன் தொண்டமண்டல சண்ட பிறசண்டன் பூர்வதெட்சிண பச்சி
10. ம உத்தரம் மூலமும் கொங்கும் யாள்ப்பாணமும் எம்மண்ட
11. லமும் அளித்து கெசவேட்டை யாண்டருளிய ராசாதி ராசன் ர
12. ாசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் பட்ட ம

---

ARE. A, 29/1947
இராமலிங்க விலாசம் அரண்மனை, அருங்காட்சியகம்
அமைப்பு : 23 செ.மீ. × 19 செமீ.

13. ரனம் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீரன் பூபா
14. லன் கோபாலன் அட்டதிக்கு மனோ பயங்கரன் துட்டநிக் கிரக சி
15. ட்ட பரிபாலனன் வேதியர் காவலன் அரசராவணராமன் அந்த
16. ம் பிறகண்டன் சாமித்துரோகி யள்முண்டன் பஞ்சவர்ண ராய
17. ராவுத்தன் பனுக்குவார்கண்டன் வைகை வளநாடன் கொட்
18. மடக்கி வைய்யாளினாறாயணன் இவுளிபரவடி மிதித்தேரு
19. வார்கண்டன் வீரவெண்பாமாலை உபைய சாமரம் உல்லாச
20. நளினன் அலங்காரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைம
21. ன்னர்சிங்கம் மதுரைராய சிங்கம் ஆற்றுப்பாச்சி கடலில் பாச்சி
22. மதப்புலி அடைக்கலங் காத்தன் தாலிக்கிவேலி செம்பி
23. வளநாடன் தொண்டியன் துறைகாவலன் துரக
24. ரேவந்தன் அனுமகேதனன் கெருடகேதனன் புலிக் கொடிப் பு
25. ரவலன் குடைக்கி கற்ணன் வில்லுக்கு விசையன் சொல்லு
26. க்கு அரிச்சந்திரன் கறுணா கடாச்சன் விசையலெட்சுமி நர்த்தன
27. பரத நாடகப் பிரவீணன் கலை தெரியும் விற்பன்னன் வீரதண்
28. டைசேமத்தலை விளங்குமிரு தாளினான் தேவைநகராதி பன் சேது
29. காவலன் சேதுமூலாரெட்ச துரந்தரன் ஸ்ரீ ராமனாதசுவாமி
30. காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் குருபூசை மரவாத கீ
31. ர்த்திபன் செங்காவிக் குடையான் அன்னசத்திரசோமன்

32. சகல சாம்பிறாச்சிய லெட்சுமி விலாசன் துகவூர்க்கூத்தத்தில்
33. காத்தூரான குலோத்துங்க சோளநல்லூர் கீழ்பால் வி
34. ரையாத கண்டனிலிருக்கும் இரணிய கெர்ப்பயாசி
35. முத்துராமலிங்க விசைய ரெகுனாத சேதுபதி காத்த தே
36. தவரவர்கள் செம்பினாட்டில் தீயனூரிலிருக்கும் செந்தில்
37. பெருமாள்பிள்ளை புத்திரன் பிறதானி தாமோதரம்பிள்ளை
38. உபையமாக ஷை கட்டளை இராமனாதசுவாமி பறுவத வ
39. ர்த்தனி அம்மன்பூசை னெய்வேதனத்துக்கு இராமனாத ப
40. ண்டாரமவர்கள் பாரிசம் தர்ம சாதனம் தாம்புர சாதனம் ப
41. ட்டையம் யெளுதிக் குடுத்தபடி அஞ்சு கோட்டை பத்தில்
42. நிலமளகிய மங்களம் கிராமமும் ஷை கண்மாயு ஏந்தலு
43. ம் பிரவடை இன்னாங் கெல்கைக்குள்பட்ட நஞ்சை புஞ்
44. சை நிலமும் திட்டு திடல் மாவடை, மரவடை வரி மகமை
45. தோப்புத் துரவு மேல்னோக்கிய மரம் கீள்நோக்கிய கிண
46. ர்நீரும் பாசியும் குடிபடை பள்ளு பறை நிதிதிட் சேபசெ
47. லதரு பாசானகாமியமென்று சொல்லப்பட்ட அட்டபோக செ
48. தச்சுவாமியங்களும் இராமனாத சுவாமிக்கு தான் சாதனம
49. ாக அனுபவிச்சு கொள்வாராகவும் இந்த தர்மத்தை யா
50. தாமொருதர் பரிபாலனம் பண்ணிண பேர்கள் கா
51. சியிலேயும் சேதுவிலேயும் கோடி சிவலிங்க பிரதிட்
52. டையும் கோடி பிறும்ம பிரதிட்டையும் பண்ணின பலத்
53. தை அடைவாராகவும் இந் தர்மத்துக்கு அகிதம் பண்ணின
54. பேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும் கோடி பிறு
55. ம கத்தியும் சேதுவிலே காராம் பசுவை கொன்ற தோச
56. த்திலேயும் போவார்கள் இந்த இந்த தாம்பர சாதனம் எழுதின
57. து வீரப்பண்டார மகன் திருப்புல்லாணி வ
58. உ ஸ்ரீராமநாதசுவாமி சகாயம்.

## செப்பேடு எண் 65

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : இராமேசுவரம் ஆதினகர்த்தர் இராமநாதபண்டாரம்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1686 தாரண ஆண்டு ஆடிமாதம் 15ந் தேதி (கி.பி. 15 7-1764)
4. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் இராமநாத சுவாமி பர்வதவர்த்தினியம்மன் நெய்வேதன கட்டளைக்கு கிராமதானம்

இந்தச் செப்பேட்டில் அறுபத்துஇரண்டு சிறப்புப் பெயர்கள், இதனை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாகப் கப் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளில், குருபூஜை மறவாத கீர்த்திபன் (வரிகள் 30, 31) என்ற ஒரே ஒரு புதிய அடைமொழியைத் தவிர ஏனையவை அனைத்தும் இந்த மன்னரது முந்தையோரது செப்பேடுகளில் காணப்பட்டவை. ரெகுநாத திருமலை சேதுபதியும், ரெகுநாத கிழவன் சேதுபதியும் தஞ்சைத் தரணியில் உள்ள திருவாவடுதுறை திருமடத்தின் பால் மிகுந்த அக்கரைகொண்டு அந்த ஆதின கர்த்தர்களுக்கு பலநிலக்கொடைகளை வழங்கியது போல இந்த மன்னரும் அந்த மடத்திற்கு தமது குரு தெட்சணையாக வழங்கியுள்ள காரணத்தினால் ''குருபூஜை மறவாத கீர்த்திபன்'' என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

இந்த மன்னரது ஆட்சியின் தொடக்கத்தில் பிரதானியாக இருந்தவர் தாமோதரம் பிள்ளை என்பவர். இவரது பணிக் காலத்தில் பல அரிய பணிகளை இயற்றி சேது நாட்டின்

சிறப்பை நாடறியச் செய்தார். இவரது பெயரில் வேள்விக் கோவை என்ற சிற்றிலக்கியம் இயற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவரும், சிவகங்கைச் சீமையின் பிரதானியான தாண்டவராய பிள்ளையும் உடன் பிறந்தார்களைப் போல ஒன்றுபட்டு இந்த இரண்டு சீமைகளின் நலனிற்காக உழைத்ததை ''கான் சாயபு சண்டை'' என்ற நாடோடி இலக்கியவரிகளில் காணப்படுகின்றன. இராமநாதபுரம் கோட்டைக்கு தென்மேற்கே உள்ள தீயனூர் கிராமத்தைச் சேர்ந்த இவர் கி.பி. 1770ல் கொலையுண்டு மரணமடைந்தார். இந்தச் சிறந்த பணியாளரது புண்ணியமாக சேதுபதி மன்னர் நிலமழகிய மங்கலம் என்ற ஊரை இராமேசுவரம் திருக்கோயிலின் பூஜைக்கு நிவேதனமாக வழங்கியதை இந்தச் செப்பேடு புலப்படுத்துகிறது. இந்த நிலக் கொடையை பெற்றுக் கொண்டவர் இராமநாத பண்டாரம் என்று குறிப்பிட்டிருப்பதால் அன்றைய இராமேசுவரம் திருக் கோயிலின் நிர்வாகப் பொறுப்பில் அந்த ஆதீன கர்த்தர் இருந்து வந்ததையும் இந்தப்பட்டயம் புலப்படுத்துகிறது.

கொடையாக வழங்கப்பட்ட நிலமழகிய மங்கலம் இன்றைய இராமநாதபுரம் மாவட்ட திருவாடானை வட்டத்தில் அமைந்துள்ளது. திருவாடானை நகருக்கு வடகிழக்கே எட்டுக்கல் தொலைவில் அமைந்துள்ள இந்த வளமையான ஊர் முந்தைய நிலப்பிரிவான அஞ்சுகோட்டை பற்றில் அமைந்திருந்த விவரத்தையும் (வரி 41) இந்தச் செப்பேட்டில் காணமுடிகிறது. அப்பொழுது அந்த ஊருக்கு ''நயமொழி மங்கலம்'' என்ற நல்ல செந்தமிழ்ப் பெயர் இருந்ததை கல்வெட்டுச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

ஐம்பத்து எட்டு வரிகளைக் கொண்ட இந்த செப்பேட்டினை எழுதியவர் பெயர் வீரப்ப பண்டாரம் மகன் திருப்புல்லாணி. பிறப்பிலே பண்டாரமாக இருந்தாலும் இவரது குடும்பத்தினர் திருப்புல்லாணி ஆழ்வார் போல வைணவ ஈடுபாடும் திருப்புல்லாணி தர்ப்பாசன அழகியார் மீது கொண்ட பக்தியினாலும் அந்தத் திருத்தலத்தின் பெயரையே தங்களது குழந்தையின் இயற்பெயராகச் சூட்டினர் போலும். இன்றும் சிலர், தங்கள் பெயராக, காசி, மதுரை, நாகூர் என்ற ஊர்ப்பெயர்களைச் சூட்டிக்கொள்வது ஒப்புநோக்கத்தக்கது.

## செப்பேடு எண் 66

**(நகல்)**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1690 இதின் மேல் செல்லா நின்ற வி
2. ரோதி வருடம் ஆவணி மாதம் 21ந் தேதி பானுவாசம் திருவோண நட்சத்திரமும் பூரபட்ச
3. த்து திரியோதசியும் சோபநாமயோகமும் கபிலவாசமும் பெற்ற சுபதினத்
4. தில் ஸ்ரீ மன் மகா மண்டேலேசுவரன் தேவை நகராதிபன் சேதுமூல ரட்சா துரந்தரன்
5. அரியாயிர தள விபாடன் பாசைக்குத் தப்புவார் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட
6. நாடு கொடாதான் பாண்டிய மண்டல ஸ்தாபனாச்சாரியன் சோழ மண்டல பிரதிஷ்டாப
7. னாச்சாரியன் தொண்டை மண்டல சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாண
8. தேசமும் எம்மண்டலமும் கெஜ வேட்டை கண்டருளிய ராஜாதிராஜன் ராஜ பரமே
9. ஸ்வரன் ராஜ மார்த்தாண்ட ராஜ கெம்பீரன் ராஜகுல திலகன் இரவிகுல சேகரன் கொ
10. டைக்குக் கர்ணன் அந்தப்பிரகண்டன் சாடிக்காரகண்டன் சாமித்துரோகியள் மி
11. ண்டன் துஷ்டரில் துஷ்டன் துஷ்டர் கொட்டமடக்கி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்

‡ அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.

12. னர் சிங்கம் ஆத்துப்பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி அடைக்கலங்காத்தான், தாலிக்குவேலி சத்

13. துராதியள் மிண்டன் வன்னியராட்டம் தவிழ்த்தான் தொண்டியந்துறைக் காவலன் துர

14. க ரேபந்தன் அனுமகேதனன் கருடகேதனன் சிம்மகேதனன் கொடைக்குக் கர்ணன்

15. பொறுமைக்கு தர்மன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசையன் பகைக்கு நகுலன் அறி

16. வுக்கு அகத்தியன் சத்திய அரிச்சந்திரன் வீர வெண்பா மாலை உபயசாமரன் உல்லாச

17. சல்லாபன் சங்கீத சாகித்திய வித்யா வினோதன் திலத நுதல் மடமாதர் மடல் எழுதவரு

18. சுமுகன் விசையலட்சுமி கடாட்சன் அரசராவண ராமன் அடியார்க்கு வேளைக்காரன் வீர

19. தண்டை சேமத்தலை விளங்குமிகு தாளினான் துஷ்ட நிக்கிரன் சிட்டர் பரிபாலன் துலுக்கர் தளவிபா

20. டன் துலுக்க மோகம் தவிள்ந்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகம் தவிழ்ந்தான்

21. பாதாள விபாடன் மலை கலங்கினுங் மனங்கலங்காதான் அன்ன சத்திர சோமன் பரலோக

22. தேவேந்திரன் சிவபூஜா துரந்தரன் அநேக விர்ம பிரதிஷ் டாபக்காரன் செம்பிவளநா

23. டன் செங்காவிக் கொடையும் அதன் மேல் விருது வெண் கவரி பெற்றவன் சகல சாம்பி

24. ராச்சிய லெட்சுமி நிவாசன் இராமநாத சுவாமி காரிய துரந்தரன் துகவூர் கூத்தத்தி

25. ல் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனில் விள

26. ங்கிய துலாபுருஷ தானாதி சோடச மகாதான துரத்தான் இரண்ய கெற்ப யாசி இரவி

27. குல சேகர ரெகுநாத சேதுபதி காத்தத் தேவர் வங்கிசத்து காரரான

28. முத்துராமலிங்க விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் சேதுமார்க்க

29. கத்தில் வேதாள தீர்த்தத்தில் பூர்வ பாகத்தில் முத்து சாத்தக்குட்டி செட்டி குமாரன் முத்து

30. கூரி செட்டி தர்மத்துக்கு ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் ஆபஸ் தம்பவரத்தில் யஜுர் பிர

இரண்டாவது பக்கம்

31. வாயிர வங்கிகராய ரெங்கநாதபுரத்தில் இருக்கும் ஸ்ரீநிவா ச அய்யன் புத்திரன் வெங்

32. ங்கிட நாராயண ஐயன் கையில் தர்ம பத்தில் அன்னராய தண்ணீர் பந்தல் அ

33. க்கிரகாரத்திற்குமாக தானம் பண்ணிவிச்சு கொடுத்த சே திரமாவது குறிச்சி

34. க்காட்டு வட்டகையில் தர்மத்துக்குத் தானம் பண்ணின கிராமமாவது அனிச்சகுடியில்

35. ஓரூர் பட்ட இதற்கு எல்கையாவது இராஜசிங்க மங்கலம் நாட்டார் காலில் முன் ஆ

36. ட்டங்குடி காலுக்கும் அரியாங்கோட்டை எல்கைக்குத் தெற்கு புலியாத்தி

37. கண்மாய் மூலக்கரைக்கும் நேர் கிழக்கான புளியமரத்துக்கு வடக்கு மேல்

38. பாற்கெல்கையாவது நகரத்து கோட்டையேந்தல் மூலக் கரையில் பறையன்

39. உம்பளத் தோட்டத்திற்கும் கிழக்கு நகரத்து நாவிதன் உம்பளத் தோட்டத்துக்

40. கும் கிழக்கு கீழ்பார்க்கெல்கையாவது ஆட்டாங்குடிக்கா லுக்கு மேற்கு இந்நான்

41. கெல்கைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை, மாவிடை, மரவடை திட்டு, திடல் கீழ் நோக்கி

42, ய கிணறு, மேல் நோக்கிய மரம், மச்சாதி முதலாய பிரார்த்தியும் தர்மத்திற்கு தான பூ

43. ர்வமாக இராமசேது தனுக்கோடிக் சுரையில் தானபூர்வ மாக பண்ணிவிச்சுக்

44. கொடுத்த படியினாலே ஆச்சந்திரர்கள் வரைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரியமா

45. க சந்திராதித்திய வ்ரை சந்ததிப் பிரவேசம் ஆண்டு அனு பவித்துக் கொள்ளக் கடவா

46. ரராகவும் இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலேயும் சேதுவிலே

47. யும் தனுஷ்கோடிக் கரையிலேயும் கோடி கோதானமும் கோடி பிரம்ம பிரதிஷ்டை கோடி சி

48. வலிங்க பிரதிஷ்டை கோடி அஷ்வமேதக யாகமும் பண் ணின புண்ணியம் பெறு

49. வாராகவும் இந்த தர்மத்துக்கும் அகிதம் நினைத்த பேர்கள் காசியிலேயும் சேதுவிலே

50. யும் தனுஷ்கோடியிலும் கோடி கோகத்தி கோடி பிரம்ம கத்தியும் பண்ணின பாவத்தை அனுபவிப்பார்களாகவும்,

51. இந்தப்படிக்கு மதுரையில் இருக்கும் சுப்பைய பட்ட நா லங்காராய குமாரன் உத்தண்ட வைரவன் அஸ்தவிகிதம்.

## செப்பேடு எண். 66

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | ரெங்கநாதபுரம் வெங்கிட நாராயண அய்யங்கார் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1690—78 விரோதி வருடம் ஆவணி மாதம் 21ந் தேதி (கி.பி. 6-9-1768) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | வேதாளை கிராமத்தில் தண்ணீர் பந்தல் அன்னசத்திரம் நடத்த அனிச்சகுடி கிராமம் தானம். |

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக அறுபத்து ஏழு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. அவைகளில் பரலோக தேவந்திரன், அநேக பிர்ம்ம பிரதிஷ்டாபகாரன் என்ற இரண்டு புதிய பெயர்கள் மட்டும் முந்தையச் செப்பேடுகளில் காணப்படாதவை.

வேதாளையில் உள்ள அன்னதான மடம் தண்ணீர் பந்தல் அக்ரகார தர்மத்தைத் தொடர்வதற்காக ரெங்கநாதபுரம் வெங்கிட நாராயண அய்யங்காருக்கு அனிச்சகுடி கிராமத்தை மன்னர் தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. வேதாளை என்ற கிராமம் இராமநாதபுரம் வட்டத்தில் மண்டபத்திற்கு அண்மையில் உள்ளது. இங்குள்ள வேதாள தீர்த்தத்தில் புனித நீராடிய சுதர்சனன் என்ற கந்தர்வன் சாப விமோசனம்

பெற்றான் எனவும் அதன் காரணமாக இந்தத் தீர்த்தம் வேதாள வரத தீர்த்தம் என்ற பெயர் பெற்றதாகத் தெரிகிறது[1]. இராமேசுவரம் திருக்கோயில் வளாகத்தில் உள்ள இருபத்து இரண்டு தீர்த்தங்களுடன் இராமேசுவரம் தீவை அடுத்துள்ள மண்டபம், வேதாளை, திருப்புல்லாணி, தேவிபட்டினம், திருப்பாலைக்குடி, உப்பூர் ஆகிய ஊர்களில் உள்ள அறுபத்து நான்கு தீர்த்தங்களில் புனித நீராடி நிர்மலம் பெறுவது ஐதீகம். இவைகளின் மொத்த எண்ணிக்கை ஐம்பத்து ஆறு எனவும், சில நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. இவைகளில் பல காலப் போக்கில் மறைந்துவிட்டன. அவைகளின் பட்டியலில் இந்த வேதாள வரத தீர்த்தமும் அடங்கும்.

ஆனால் இந்தச் செப்பேட்டுக் காலத்திற்கு முன்னர் இந்தத் தீர்த்தம் சேதுயாத்திரை வரும் பயணிகளினால் மிகவும் பயன்படுத் தப்பட்டு வந்துள்ளது. அவர்களின் நலன் கருதி அங்கே தண்ணீர் பந்தலும் அன்னதான சத்திரமும் முத்து சாத்துக்குட்டி செட்டி மகன் முத்துக்கூரிசெட்டி என்பவரால் நிறுவப்பட்டிருந்தது. இந்தத் தர்மசீலரைப் பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை. இவரது தந்தையின் பெயரிலிருந்து இவர் இராமநாதபுரம் சீமையில் வாழும் மஞ்சப்புத்தூர் ஆயிர வைசிய பிரிவு செட்டிப் பிரமுகர் என்பது தெரியவருகிறது. ஏனெனில் இந்தச் சீமையில் தெலுங்கு பேசுகின்ற தேவாங்கர், கோமுட்டி, தமிழ்பேசுகின்ற நகரத்தார், வாணியர், வேளாண் மக்கள் சுந்தரம் என்ற இளமகர் பிரிவு களைச் சேர்ந்தமக்கள் ''செட்டி'' என்ற பெயர் விகுதியுடன் வழங் கப்பட்டு வந்துள்ளனர் என்றாலும் இந்த தருமத்தை நிறுவியவர் பெயர் ''முத்து சாத்துக்குட்டி'' என்று குறிப்பிடப்படுவதில் இருந்து இவர் மஞ்சப்புத்தூர் செட்டி என்பது தெரியவருகிறது. இந்தச் செப்பேட்டில் (வரி 29, 31) கண்டுள்ள ''செட்டி'' என்ற சொல் மஞ்சப்புத்தூர் செட்டி வகுப்பினரைக் குறிக்கின்றது.

தானம் வழங்கப்பட்டுள்ள அனிச்சகுடி கிராமம் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் ராஜசிங்க மங்கலத்துக்கு தென்மேற்கே உள்ளது. இந்தக் கிராமத்திற்கான

1. கல்யாணம் பிள்ளை M.A. - இராமேசுவரம் தல வரலாறு (1965) பக்கம் :

எல்கை மாலில் குறிக்கப்பட்டுள்ள ஆட்டாங்குடி, அரியாங் கோட்டை, புளியாத்திக் கண்மாய், நகரம் ஆகியவை இன்றும் வழக்கில் உள்ளன. தானம் பெற்ற வெங்கிட நாராயண அய்யங் காரது ஊரான ரெங்கநாதபுரம் எங்குள்ளது என்பது அறியத் தக்கதாக இல்லை.

இந்த தானம் வழங்கப்படுவதற்கு முன்னர், இந்த கிரா மத்தில், பறைத்தொழில், மழித்தல் தொழில் ஈடுபட்டு இருந்த வர்களுக்கு காணிகள் அளிக்கப்பட்டு இருந்ததை, எல்கைமாலில் காட்டப்பட்டுள்ள பறையன் உம்பளம், நாவிதன் உம்பளம் என்ற தொடர்கள் தெரிவிக்கின்றன. மற்றும் வரிகள், 28, 29ல் குறிப் பிடப்பட்டுள்ள நகரம், இன்று நகரமங்கலம் என வழங்கப்படு கிறது.

## செப்பேடு எண். 67

(நகல்)

1. சாலிவாகன சகாப்தம் 1702 கலியப்த 4872 இதன்மேல்
2. ச்செல்லா நின்ற பிலவ நாம ஸம்வத்ஸரத்தில் தெஷிணா ய நத்தில்
3. சூத்திரகாமத்தில் அசுபதி நக்ஷத்திரத்தில் சுபயோக சுப கரணமும் பெற்றசு
4. பதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூலாதுரந்தரன் ராமனாத சுவாமி க
5. ாரிய துரந்தரன் பரராசசிங்கம் பரராசசேகரன் பரராச கெற்ப நிறுப
6. தனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேதனன் கெருட கேதனன் சிங்க
7. கேதனன் மயூர கேதனன் ஆக்கிட கேதனன் செங்காவிக் குடைமேல் க
8. வரியிர் வைச்ச விருதுடைய ராசாதிராசன் ராசமார்தான்
9. டன் ராசகுலத்திலகன் சங்கீத சாயித்திய வித்தியாவினோ தன் சோள ம
10. ண்டல பிறதிஷ்டாபனாச்சாயன் தொண்டர் மண்டல சண் டப்பிறசண்டன் பா
11. ண்டி மண்டல ஸ்தாபனாச்சாரியன் ஈளமுங்கொங்கும் யா ள்ப்பான ராயன் பட்டண
12. மும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன் தில தல் மடவார்கள் மடலெ

13. ளுத வரு சுமுகன் பதினெண் பாசை வீரப்பிறவீனன் அகளங்கன் அனந்தக
14. லியான குணாபி ராமன் அபிமானங்காத்தவன் மனுநீதி மறவாதவன் வே
15. தியர் காவலன் திலதநுதல் மடவார்கள் மடலெழுதவரு சுமுகன் தொ
16. ண்டியந் துறை காவலன் வீரதண்டை சேமத்தலை விழங்கு மிருதாளினா
17. ன் துஷ்ட நிக்கறக சிஷ்ட பரிபாலனன் அஷ்டலட்சுமி வாசன் சத்திய அரிச்சந்திர
18. ன் வில்லுக்கு விசையன் 'துகவூர்க் கூத்தத்துக்கதிபரான குலோத்துங்க சோள
19. நல்லூர்கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கி ஷாதிபரானஸ்ரீ
20. மது ஹிரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனாதசேதுபதி யவர்கள் வங்கி
21. சோத்தகரான ஸ்ரீ மதுமுத்துராமலிங்க விசையரெகுனாத சேதுபதி
22. யவர்கள் அனுமனேரி பிறிதி நாமமான முத்துராமலிங்க புரம் நோரா
23. கோத்ரத்தில் நாநா ஸூத்ரத்தில் நாநா லாபகரான அசெஷவித்துமாசனங்களுக்கு தானபூருவ
24. கமாக தாம்புர சாஸநம் பண்ணிக் குடுத்தபடி கட்டுக்கரைக் தெ
25. க்கு குப்பைச் செய் வெங்காயக்குண்டுக்கு வடக்கு கொடிக் குளம் ப
26. ள்ளர் சேரிக்குத்ந் தெக்கு நெடுங்கண்ணிக்கு கீள்பிலை இலுப்பையடி
27. யூரணிக்குத் தெக்கு பாதைக்குடியிருப்புக்குள் கீள் புறத்தில் ரெகுநாதக்
28. காவேரிக்குள், வாய்க் காடு வெட்டிப் புஞ்சைக்கு மேற்கு கொ

29. ரைக்ள்ளம் காடுவெட்டிப் புஞ்சைக்கும் மேற்கு கோரைக் குளம் காடு வெ

30. ட்டிப் புஞ்சைக்கு மேற்கு கோரைக்குளம் கொத்துக்குள்

31. எல்கைப் புஞ்சைக்கு மேற்கு ரெகுனாத காவேரிக்குத் தெற்கு மல்லல் திரு

32. மேனிக் குடும்பம் புஞ்சைக்கு மேற்கு பொடுகட்டி யூரணிக் கு வடக்கு நாயா

பின்பக்கம்

33. ரேந்தல் விளாவடிப் பிஞ்சைக்கு வடக்கு தாளியாரேந்தல் கீள்கரை அருள

34. ப்பன் புஞ்சைக்குக் கிளக்கு தாளியாரேந்தல் வடகாலுக்கு கிழக்கு குண்டாள

35. ஊரணிக்குக் கிளக்கு வளநாட்டுப்பறையன் புஞ்சைக்குக் கிளக்கு வளநாட்டு

36. புஞ்சைக்குக் கிளக்கு கொடிக்குளம் சேதிக்குடும்பன் பொட்டப்புஞ்சைக்

37. குக் கிளக்கு கொடிக்குளம் பத்தன் புஞ்சைக்கு கிளக்கு கொடிக்குளம் கண்வா

38. ய்த் தென்கரைக்குத் தெக்கு இன்னான் கெல்கைக்குள்ப் பட்ட மாவடை. மரவடை

39. முத்தப்பன் புஞ்சைக்கு மறிச்சுக்கட்டி உள்வடக்கு கொடிக் குளம் விளாங்க

40. காட்டுத்திடல் மேல் நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு ஆத்துக்கால் ஊத்து

41. க்கால் செலரு பாஷாணம் நிதி நிகெஷபம் அஷ்ட போக தெச்சுவாமி யங்க

42. ளும் விநுவாதி விக்கிறயங்களுக்கும் யோக்கியமாக குளத் தூரான் குமாரன்

43. சுப்பய்யன் கஸ்தூரி அய்யன் குமாரன் லட்சுமி நாராய ணய்யன் லட்சுமணய்

44. ய்யன் குமாரன் சின்னச்சுப்பையன் அய்யாவளயன் குமாரன் திருவேங்கட

45. னாதன் வீரராகுவய்யன் குமாரன் சுப்பையன் ஐய்யங் கார் குமாரன் சீ
46. னிவாசன் அளகரய்யன் குமாரன் முத்தய்யன் சேனாபதி சாத்திரியார்
47. குமாரன் வேதாந்தமய்யன் நரசிங்கஅய்யன் குமாரன் குமாரன் ராமலிங்கய்யன்
48. நாரணவாத்தியார் குமாரன் வெங்கிட சுப்பன் ஆக மகா சனங்கள் பத்து
49. ப்பேருக்கும் தாம்புர சாஸனம் பண்ணிக்கொடுத்தபடி யினாலே ஆ
50. ண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தர்மத்தைப் பரி பாலனம் ப
51. ண்ணினவர்கள் கெங்கைக்கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்
52. களிலே கோடி சிவலிங்க பிறதிஷ்டை கோடி கன்னிகா தானம் கோடி
53. அக்கிரகாரப் பிரதிஷ்டை பண்ணின பலனை அடைவார் கள் இந்ததற்மத்து
54. க்கு அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையிலே சேதுவிலே மதா பிதா
55. குருவை வதை பண்ணின தோஷத்தை அடைவாராகவும்
56. — — — — — — — — — — — — — —
57. — — — — — — — — — — — — — —
58. — — — — — — — — — — — — — —
59. — — — — — — — — — — — — — —
60. — — — — முத்துராமலிங்க விசைய ரெகுநாதச் சே
61. துபதி காத்த தேவாவர்கள் முத்துராமலிங்கபுரம் அசேச வித்து மகா
62. சனங்களுக்குத் தானமாகக் குடுத்தது இந்தப்படிக்கு பொக்கிசக் கணக்
63. கு ஆதினாராயண பிள்ளை மகன் தளவாத்தான் கை யெளுத்துப் படிக்கு
64. முத்துப்பத்தர் மகன் வேலாயுதம் கையெழுத்து.

## செப்பேடு எண் 67

### (விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி

2. செப்பேடு பெற்றவர் : சுப்பையன் முதலிய பத்துப்பேர்கள்

3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1702 பிலவ ஆண்டு (கி.பி. 15-11-1781)

4. செப்பேட்டின் பொருள் : மேலே கண்ட பத்து மகா ஜனங்களுக்கு முத்துராமலிங்கபுரம் சர்வ மானியமாக வழங்கப்பட்டது.

இந்தச் செப்பேட்டில் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி மன்னரது விருதாவளியாக முப்பத்துமூன்று சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் இந்த மன்னரது செப்பேடுகளிலும் இவரது முந்தையோரது செப்பேடுகளிலும் காணப்பட்டவை. புதியன எதுவும் இல்லை.

*அனுமனேரி* என்ற முத்துராமலிங்கபுரம் குளத்தூரான் குமாரன் சுப்பையன் 1. கஸ்தூரி ஐயன் குமாரன் லட்சுமி நாராயணன் 2. லட்சுமண ஐயன் குமாரன் சின்ன சுப்பையன் 3. அய்யாவய்யன் குமாரன் திருவேங்கடநாதன் 4. வீரராகவய்யன் குமாரன் சுப்பய்யன் 5. ஜயங்கார் குமாரன் சீனிவாசகன் 6. அழகய்யன் குமாரன் முத்தய்யன் 7. சேனாதிபதி சாத்திரியார் குமாரன் வேதாந்தமய்யன் 8. நரசிங்கய்யன் குமாரன் ராமசிங்கய்யன் 9. நாரண வாத்தியார் குமாரன் வெங்கிட சுப்பையன் ஆகிய பத்து அந்தணர்களுக்கு சேதுபதி

மன்னர் தான பூருவமாக வழங்கியதை இந்தச் செப்பேடு சொல்கிறது. இந்தக் கிராமம் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் அமைந்துள்ளது. இதிகாச தொடர்புடையதான இந்த ஊருக்கு அனுமன் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இராமகாதையை நினைவுபடுத்தும் பல ஊர்கள் இந்த வட்டாரத்தில் உள்ளன. இராமநாதபுரம், இராமேசுவரம், இரகுநாதபுரம் இரகுநாதமடை, அனுமந்தக்குடி, சத்ருக்கன் கண்டான் சேதுக்கரை, சேதுகால், கோதண்டராமன் பட்டணம், கோதண்டராமன் கோவில், தனுஷ்கோடி, ராமநதி, வாலி நோக்கம், தர்ப்பசயனம், என்பன அவை.

இந்த நிலக்கொடை பெற்ற பதின்மரும் வேதவிற்பனர்கள். சாத்திரியார், வாத்தியார் என அவர்களது பெயர் விகுதிகள் தெரிவிக்கின்றன. இன்னும் இவர்களில் ஒருவரைத் தவிர (ஐயங்கார் மகன் சீனிவாசன்) ஏனைய ஒன்பதின்மரும் சிவப் பிராமணர்கள். ஆனால் இவர்கள் பெயர் அல்லது தந்தையார் பெயர் அனைத்தும் வைணவப் பெயர்களாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்க தொன்று. இவர்களுக்கு தானம் வழங்கப்பட்ட ஊர்ப்பகுதிக்கு நான்கு எல்லைகள் விளக்கமாக இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. புலங்களை எண்ணிட்டுக் குறிப்பிடும் வழக்கம் அப்பொழுது இல்லாத காரணத்தினால் நஞ்சை, புஞ்சை, நிலங்கள் சில, இடு குறிப்பெயராலும் வேறு சில உரியவர் பெயராலும் குறிப்பிடப்பட்டதை செப்பேடுகள் (வரிகள் 25 40) தெரிவிக்கின்றன. குப்பைச் செய், காடு வெட்டி புஞ்சை, திருமேனிக்குடும்பன் புஞ்சை, விளாவடிப் புஞ்சை, அருளப்பன் புஞ்சை, பறையன் புஞ்சை, பொட்டப் புஞ்சை, புத்தன் புஞ்சை முத்தப்பன் புஞ்சை, என்பன அவை. கொத்து என்பது வட்டார வழக்கு. தொடர்ச்சி என்ற பொருள். அதேபோல குடும்பன் என்ற சொல்லும் இந்தப்பகுதியின் குடியினரான ''பள்ளர் சாதி'யினரில் ஒரு பிரிவை குறிக்கும் குழூஉக் குறி. இந்தச் சொல் வேறு எந்த ஆவணத்திலும் காணப்படவில்லை. வேறு பகுதிகளிலும் ''குடும்பன்'' பள்ளரைக் குறிக்கும் வழக்கில் இல்லை.

ரெகுநாத காவேரி என்பது குண்டாற்றில் இருந்து கமுதிக்கு கிழக்கே பிரியும் ஒருகால். மதுரை மாவட்டத்திலிருந்து

புறப்பட்டு கிழக்கு நோக்கி ஓடிவந்து, கமுதிவழியாக தெற்கே மூக்கையூர் என்ற இடத்தில் கடலில் கலக்கின்ற இந்த ஆற்றினை, கமுதி அருகே அணைமூலம் தடுத்து கால்வாய் ஒன்றை விஜயரெகுநாத சேதுபதி புதிதாக அமைத்தார். அந்தக்காலின் பெயர்தான் ரெகுநாத காவேரியாகும். முதுகுளத்தூர் பரமக்குடி, வட்டங்களில் உள்ள சுமார் 100 கண்மாய்கள் இந்த நீரால் பயன் படுவதுடன் குண்டாற்றில் பெருவெள்ளம் ஏற்படும்பொழுது, கமுதி நகருக்கு பேரழிவு ஏற்படாமலும் இந்தக்கால் உதவி வருகிறது.

## செப்பேடு எண் 68

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1702 இதன்மேல் செல்லா நின்ற
2. பிலவநாம சம்வச்ர தை மாதம் 15ந் தேதியும் தசமியும் வியாழக்கிழமையும் ரோகிணி நட்சத்திரமும் கூடின சுபயோக சு
3. பகாலத்தில் தேவை நகராதிபன் சேது மூல துரந்தரன் இராமநாதசுவாமி காரிய
4. துரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ சிங்கம் பரராஜ
5. கேசரி நிருபதனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேத ன் கெருட கேத
6. னன் குக்கிட கேதனன் மயூரகேதனன் செங்காவிக்கொடை மேல் கவரிமயிர செல்லி
7. வைத்த விருதுடையான் ராஜாதிராஜன் ராஜபரமேஸ்வ ரன் ராஜகுல திலகன்
8. ராஜ மார்த்தாண்டன் ராஜ கெம்பீரன் சங்கீத சாகித்ய வித்யா வினோதன்
9. சோழ மண்டல பிரதிஷ்டபனாச்சாரியன் தொண்ட மண்ட ல சண்டப்

---

‡ நூலாசிரியரது கள ஆய்வில் திருப்புல்லாணி கிராமம் தெற்கு ரத வீதி ஸ்ரீ.ரா. தேசிகனிடம் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டு படி எடுக்கப்பட்டது.

10. பிரசண்டன் பாண்டி மண்டல ஸ்தாபனாச்சாரியன் ஈழமும் கொங்கும் யாழ்
11. பாணராயன் பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராஜாதி ராஜ
12. ன் அபிமானஙகாத்தவன் அகளங்கன் அனந்த கலியாண குணாபிரா மன்
13, மனுநீதி மறவாதான் வைகை வளநாடன் வேதியர்கள் குல காவலன் தில
14. தநுதல் மடவார் மடலெழுதவரு சுமுகன் பதினெண்பாசை
15. வீணாப் பிரவீணன் தொண்டியந்துறைக் காவலன் மலை கலங்கினும் மன
16. ங் கலங்காதான் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனன் அஷ்ட லட்சுமி நிவாஸன்
17. சத்திய அரிச்சந்திரன் வில்லுக்கு விசயன் சொல்லுக்கு அகத்தியன் இவு
18. ளிபாவடி மிதித்தேறுவார் கண்டன் உரிகோல் சுரதானன் வீரதண்டை
19. சேமத்தலை விளங்குமிரு தாளினன் துகவூர் கூத்தத்துக் காத்தூரரான குலோத்
20. துங்கசோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்டனிலிருக் கும் வங்கிஷ
21. ாதியரான ஸ்ரீமது இரண்ய கெர்ப்பயாஜி இரவிகுல ரெகு நாத சேதுபதி காத்த
22. தேவர் அவர்கள் வங்கிஷத்தரான ஸ்ரீமது முத்துராமலிங்க விசை
23. ய ரெகுநாத சேதுபதி காத்ததேவர் அவர்கள் ஆதி சேது வில் புல்லாணி
24. ச்சேத்திரத்தில் புருஷோத்தம பண்டிதர் அவர்கள் சத்திரத் தில் பிரா
25. மண போஜனத்திற்கு சர்வமானியமாக சகிரன்னியோதக தான

26. பூர்வமாக தாம்பிரசாதனம் பண்ணிக் கொடுத்தபடி நிலவரி இடங்கைவரி
27. வலங்கைவரி கீதாரம் கரைமணியம் மத்த ஆதண்ட பல சுவந்த
28. ரங்களும் சர்வமானியமாக தானம் பண்ணிக் குடுத்த கழுநீர் மங்க
29. லாம் வடபால் எல்லையாவது சிக்கல் பள்ளியான் செய் ஆண்டி
30. க்காத்தான் செய்க்குத் தெற்கு கீழ்பால் எல்கையாவது சிறைக்கு
31. ளம் கண்மாய் மேல்கரைக்கு மேற்கு தென்பால் எல்கையா
32. வது சின்னாகைக் குடி காலுக்கும் திடலுக்கும் மேற்படி கண்மாய் — — தலைக்
33. கு கிழக்கு இந்நான்கு எல்லைக்குட்பட்ட மாவிடை, மர விடை, திட்
34. டுத் திடல் மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு ஆத்துக்கால் ஊத்துக்
35. கால் சகலதரு பாசனம் நிதி நிஷேபம் அஷ்டபோக தேஜ சு
36. வாமியங்களும் வினியாதி விக்ரயங்களுக்கு யோக்கியமாக ஆதி
37. சந்திராதித்திய வம்ச புத்ர பௌத்திர பரம்பரையாக ஆண்ட
38. னுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த தருமத்தை
39. பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையிலே சேது விலே கோ
40. டி சிவலிங்கப் பிரதிஷ்டை கோடி கன்னிகாதானம் கோடி அக்கிரஹார பி
41. ரதிஷடை பண்ணின பலத்தை அடைவார்களாக இந்த தர்மத்துக்கு யா
42. தானும் மொருவர் விகாதம் பண்ணின் பேர்கள் கெங்கைக் கரையிலே சேதுவிலே மா

43. தா பிதா குரு வதை பண்ணின தோஷத்தை அடைவார் களாக

44. — — — — — — — — — — — — — —

45. — — — — — — — — — — — — — —

46. — — — — — — — — — — — — —

47. — — — — — — — — — — — — — —

49. இந்தப்படிக்கு பொக்கிஷம் கணக்கு ஆதிநாராயணப் பிள்ளை மகன் தளவாத்தா

50. ன் கையெழுத்துப் படிக்கு வேலாயுதம் கையெழுத்து

## செப்பேடு எண். 68

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜய ரெகு நாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | பண்டித புருஷோத்தம்தாஸ் சத்திரம் திருப்புல்லாணி |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1702 பிலவ தை மாதம் 15ந் தேதி (கி. பி. 24-1-1782) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேலேகண்ட சத்திரத்திற்கு கழுதீர் மங்கலம் கிராமம் சர்வ மான்யம். |

முத்துராமலிங்க சேதுபதி மன்னரது விருதாவளியாக முப்பத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் இந்தப்பட்டயத்தில் இடம் பெற்றுள்ளன. இவைகள் அனைத்தும் முந்தைய செப்பேடுகளில் காணப்பட்டவை ஆகும்.

இராமநாதபுரத்திற்கு அண்மையில் உள்ள திருப்புல்லாணி, வைணவர்களது சிறந்த திவ்யசேத்திரம் ஆகும். இங்குள்ள பெருமாள் கோயிலினை திருப்பணி செய்த சேதுபதிகள் கோயில் வழிபாட்டிற்கும் உடலாக பல ஊர்களை வழங்கியுள்ளனர். இந்த ஊருக்கு வருகை தருகின்றன வைணப் பிராம்மணர்களது பசி தீர்க்கும் பணியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் பண்டித புருஷோத்தம்தாஸ் என்ற வடநாட்டார் ஒரு சத்திரத்தை அங்கு ஏற்படுத்தினார். இந்த மன்னரது ஆட்சிக் காலத்தில் அந்த அன்னசத்திரத்தின் பணி தடைபடும் நிலையில், மன்னர் முது

குளத்தூர் வட்டம் சிக்கலையடுத்துள்ள கழுநீர் மங்கலம் என்ற கிராமந்தை சர்வமான்யமாக இந்தச் சத்திரத்திற்கு வழங்கியுள்ளதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. அந்தக் கிராமத்தின் அரசிறையாக தண்டல் செய்யப்பட்ட நிலவரி, இடங்கை வரி, வலங்கை வரி, கீதாரம், கரைமணியம் என்பவையும் இந்த செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊருக்கு வருகை தருகின்ற பக்த கோடிகளுக்கு திங்கள் தோறும் துவாதசி அன்று உணவு வழங்குவதற்காக முந்தைய சேதுபதி மன்னரது பிரதானியான வெள்ளை சேர்வை என்பவர் ஏற்படுத்திய அன்னசத்திரமும் இங்கு அமைந்துள்ளது. அந்த தர்மத்திற்காக முந்தைய சேதுபதி மன்னர், செல்லமுத்துத் தேவர், காஞ்சிரங்குடி என்ற கிராமத்தை சர்வமான்யமாக வழங்கியுள்ளார். இவ்விதம் அன்னதாதாக்களாக விளங்கிய சேது மன்னர்களை அருள் தமிழால் பாடி மகிழ்ந்து இருப்பது வெறும் புகழ்ச்சி இல்லை.

மேலும், இதே நூற்றாண்டில் இராமசுவர தலயாத்திரை செய்து திரும்பிய திருவாங்கூர் மன்னர், இந்த திருக்கோயிலுக்கு வருகை தந்ததுடன் கோயில் இறைவரது பாயசக் கட்டளைக்கு அண்மையில் உள்ள காக்கூர் கிராமத்தை சேது மன்னரிடம் கிரையம் பெற்று இதே திருக்கோயிலுக்கு தானம் வழங்கியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கேரள மன்னரது திருப்புல்லாணி வருகை, *திருப்புல்லாணி தொண்டி நாடகம்* என்ற சிற்றிலக்கியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.‡

‡ புலவர். வீரராகவ ஐயங்கார் - திருப்புல்லாணி தொண்டி நாடகம் செந்தமிழ் தொகுதி 47(1951)

## செப்பேடு எண் 69

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியுக சகாப் தம் 4882 இதன் மேல்ச்
2. செல்லா நின்ற பிலவ நாம சம்வத்சரத்தில் தெக்ஷணா யநதத்தில் தனுற் மா
3. சத்தில் பூச நக்ஷத்திரத்தில் சுபயோக சுபகரணமும் பெற்ற சுப தினத்தில்
4. தேவை நகராதிபன் சேது மூலா துரந்தரன் ராமநாதசுவா மி காரியா துரந்த
5. ரன் பரராச சிங்கம் பரராச சேகரன் பரராசகெற்ப நிற் பேதனன் சொரி
6. முத்து வன்னியன் அனும கேதனன் கெருட கேதனன் சிங்ககேதனன் மயூர
7. கேதனன் குக்கிட கேதனன் செங்காவிக் குடைமேல் கவரி வைச்ச விருது
8. டைய ராசாதிராசன் ராச மாத்தாண்டன் ராசகுலதிலகன் சங்கீத சாயித்
9. திய வித்தியா விநோதன் சோள மண்ட(ல)ப் பிரதிஷ் டா பனாசாரியன் தொண்ட
10. மண்டல சண்டப் பிரசண்டன் பாண்டி மண்டல ஸ்தாபனா சாரியன் இளமு
11. ங் கொங்கும் யாள்பான ராயன் பட்டணமும் கெசவேட் டை கொண்ட

12. ருளிய ராசாதிராசன் திலக நுதல் மடவார்கள் மடலெழுது வருசுமுகன் பதி
13. னென் பாசை வீணாப் பிறவீணன் அகளங்கன் அனந்த கலியான குணாபிராமன்
14. அபிமானங் காத்தவன் மனுநீதி மறவாதான் வேதியர்கள் காவலன் தொண்டி
15. யந்துறை காவலன் வீர த
16. ஸ்ரீ இராமநாத சுவாமி ஸகாயம்
17. ண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்ட நிக்கிறக சிஷ்ட
18. பரிபாலனன் அஷ்ட லட்சிமி வாசன் சத்திய அரிச்சந்திரன் வில்லு
19. க்கு விசையன் துகவூர்க் கூத்தத்துக் கதிபரான குலோத் துங்க சோ
20. ள நல்லூர் கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கி ஷாதிபரா
21. ன ஸ்ரீமது இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனாதச் சேதுபதி காத்
22. த தேவரவர்கள் வங்கிஷோத்தகரான ஸ்ரீமது முத்து ராமலிங்க விசைய
23. ரெகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஆவுடையார் கோவிலுக்கு
24. தேவர் கட்டளை உச்சிக் கால கட்டளைக்கு நடக்கும் சுவாத்தியம்
25. விலானூர் இடையூர் செருகானூர் பூதகுடி கோடிக்குளம் ஆவு
26. டையார் கோவில்த் தெற்கு மடம் நடக்கிற தோப்பு மனை தென்
27. னந் தோப்பு ஊர்த் தோப்பு குருமுடையான் தோப்பு செக்கடி
28. த் தோப்பு சுக்கிறவாரக் கட்டளைத் தோப்பு மாரியம்மன் கோ

29. வில்த் திடல் உள்ளூர் மனைகள் உள்ளூரிலிருக்கும் நஞ்சை புஞ்சை

30. உள்பட நெல்லியடிக்குளம் நெல்லியடித் தோப்பு இந்தக் கட்ட

31. ளைக்கு நடக்கிற கிறாமங்களில் சுங்கம் மகமை காடு காவல்வரி

32. உள்ளூர் வரி சாணார் வரி இடங்கைவரி வலங்கை வரியுடன் கூடி

*இரண்டாம் பக்கம்*

33. ய பதினெட்டு வரியும் சுவாமிக்கு சறுவ மானியமாக கோவிலில்க் க

34. ட்டளைக்கு வாங்கிக் கொள்ளச் சொல்லி கட்டளை இட்டோம் இந்த தற்

35. மத்தை திருவாடுதுறை பண்டாரச் சன்னதி அ.வர்களுக்குள்ளே விசாரித்துக்

36. கொள்ளச் சொல்லி மணியம் கணக்கு கங்காணம் கிறாமந்திரத்து

37. க்கும் கட்டளைக்கும் வேண்டாமென்று பரதேசி முத்திரையாய் கட்

38. டளை இட்டோம் இதுவில்லாமல் ராமநாதபுரம் சீமை திருவாடனைச்சீ

39. மையில் ஊருஊருக்கும் நஞ்சை, புஞ்சை, நாலுசெய் இரண்டுசெய்

40. நாலு குறுக்கம் ரெண்டு குறுக்கம் புஞ்சையும் அவர்கள் தானே வி

41. சாரிச்சுக் கொள்ளச் சொல்லி கட்டளை இட்டோம் திருவிழா முதலான

42. விசேஷ தினத்திலும் வருகிற ஆடுமாடுகள் காணிக்கை சேதுபதி சீமை உ

43. டையாத் தேவர் சீமையிலிருந்து வருகிறதெல்லாம் கட்டளையில் சேரப்

44. ண்ணச் சொல்வி கட்டளையிட்டோமதுவும் தேவர் கட்டளைக்கு உண்டா
45. ன திருவாபரணம் வஷ்த்து வாகன பூசன பாத்திர பாண்ட முதலானதெ
46. ல்லாம் நெல்லியடி மண்டபமும் இந்த தற்மத்தை திருவாவடுதுறை பண்டா
47. ரச் சன்னதியவர்கள் பாரிசத்தில் கட்டளையிட்டோம் பாரம்பரையாய் ஆண்டனு
48. பவித்துக் கொள்வாராகவும் இந்த தற்மந்தை பரிபாலனம் பண்ணினபேர்
49. கெங்கையிலும் சேதுவிலேயு கோடி கன்னிகாதானமும் கோடிபிற்ம பிறதிட்
50. டையுங் கோடி சிவலிங்க பிறதிட்டையும் பண்ணின பலனையடைவார்
51. கள் இந்த தற்(மத்து)க்கு யாதாமொருவர் விகாதம் பண்ணினபேர் கெங்கைக்
52. கரையிலே சேதுவிலே மாதா பிதா குருவை வதை பண்ணினதோ
53. ஷத்தையடைவாராகவும் உ ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தா
54. நு பாலநம் பரதத்தாபஹாரேன ஸ்வதத்தம் நிஷ்பலக் பவேது உ
55. தாந பாலன யோர்மத்யே தாநா ஸீரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க
56. மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம் உ ஏகைக பகந்லோ
57. கே சர்வேசா மேவ பூபஜாம் நகோஜ்ய ந சுரக்யா பிப்ர தத்தா வ
58. சுந்தரா உ இந்தப் படிக்கு பொக்கிசம் ஆதிநாராயண பிள்ளை மகன்
59. தளவிடத்தான் கவாதுபடிக்கு வேலாயுதம் கையெழுத்து உ

# செப்பேடு எண் 69

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜய ரெகு நாத சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | திருப்பெருந்துறை திருக் கோயில் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1703 பிலவ ஆண்டு தனுஷ் மாதம் (கி.பி. 1781) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மேற்படி கோயில் உச்சிக்காலக் கட்டளைக்கு சில சுதந்திரங் களை வசூலித்துக் கொள்ளும் உரிமை. |

இந்தச் செப்பேட்டை வழங்கிய சேது மன்னரது விருதா வளியாக குறிப்பிடப்பட்டுள்ள முப்பத்து மூன்று சிறப்புப் பெயர் களும் முந்தையப் பட்டயங்களில் காணப்பட்டவை.

திருப்பெருந்துறை ஆவுடைய பரமசுவாமி திருக்கோயிலில் தேவர் கட்டளை என்ற உச்சிக் காலக் கட்டளை சிறப்பாக நடை பெறுவதற்கு உதவியாக விளானூர், இடையூர், சிறுகனூர், பூதகுடி கோடிக்குளம் ஆகிய கிராமங்களும் ஆவுடையார் கோயில் கிராமத் தில் உள்ள தென்னந்தோப்புக்கள், நஞ்சை புஞ்சைகள் மனை நிலம் ஆகியவை சேது அரசர்களால் ஏற்கனவே சர்வமான்யமாக வழங்கப்பட்டிருந்தன. இந்தக் கிராமங்களிலிருந்து மன்னருக்குச் செலுத்த வேண்டிய சுங்கம், மகமை, காடுகாவல்வரி, உள்ளூர் வரி, சாணார் வரி, இடங்கை வரி, வலங்கை வரி உட்பட்ட பதினெட்டு வகை வரிகளை திருவாவடுதுறை ஆதின கர்த்த வசூலித்துக் கொள்ள இந்தச் செப்பேட்டில் ஆணை வழங்கப் பட்டுள்ளது.

மேலும் இராமநாபுரம் திருவாடனைச் சீமைகளில் ஊருக்கு ஊர் நஞ்சை, புஞ்சை நிலங்களை விசாரித்துப் பார்த்து திருப்பெருந்துறை கோயிலுக்கு நான்கு அல்லது இரண்டு குறுக்கம் நிலங்களை பெற்றுக் கொள்ளவும் திருவிழாக் காலங்களில் சேதுபதி சீமை உடையார்தேவர் சீமைகளிலும் இருந்து வரப் பெறுகின்ற ஆடு மாடு காணிக்கையெல்லாம் தேவர் கட்டளையில் சேர்த்துப் பயன்படுத்திக் கொள்ளவும் இந்தச் செப்பேட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. உடையார்தேவர் சீமை என்பது கி.பி. 1730ல் முத்துவடுகநாத பெரிய உடையார்தேவர் மகன்சசிவர்ணத் தேவரால் ஏற்படுத்தப்பட்ட சிவகங்கைச் சீமையாகும். ''தேவர் கட்டளை'' எந்தச் சேதுபதி மன்னர் காலத்தில் ஏற்படுத்தப் பட்டது என்பது அறியத்தக்கதாக இல்லை. இராமேசுவரம் திருக் கோயிலின் உச்சிக்காலக் கட்டளையும், தேவர் கட்டளை என்றே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், திருவாபரணம், வஸ்து, வாகனம் பூசணம், பாத்திரம் பண்டம் முதலியவையெல்லாம் இந்தக் கட்டளைக்கென்றே வழங்கப்பட்டிருப்பதாகக் குறிக்கப் பட்டிருக்கின்றது. இதனை ஏற்படுத்தியவர் சடைக்கன் உடையார் சேதுபதி என்பது ஊகம். குறுக்கம் (என்பது 90 சென்ட் நிலம்) உச்சிக்காலம், பாரிசம் என்பது வட்டார வழக்குகள்.

## செப்பேடு எண். 70

(நகல்)

1- மகாமண்டலேசுவரன் அரியராயிர தள விபாடன்
2. பாசைக்குத் தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொ
3. ண்டநாடு கொடாதான் பாண்டி மண்டலத் தாபனாச்சாரி யன்
4. சோழமண்டல பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்டை மண் டல
5. சண்டப்பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணமு
6. ங் கெச வேட்டை கண்டருளிய ராசாதி ராஜன் ராசபர
7. மேசுபரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீர ராச
8. ன் ராசமனோபயங்கரன் ராசகுல திலகன் அந்தம்பிர கண்டன்
9. சாமித்துரோகியள் மிண்டன் பாதாளவிபாடன் பட்ட
10. மானங்காத்தான் வேதியர் காவலன் துஷ்டநிக்ரகன் சிஷ்
11. டபரிபாலனன் மலைக்கலங்கினு மனங்கலங்காதான் யொட்டியர்
12. தளவிபாடன் யொட்டியர் மோகந் தவிள்ந்தான் வன்னிய
13. ராட்டந் தவிழ்ந்தான் பஞ்சவன்ன ராகுத்தன் மஞ்சு புகழ் கொண்ட
14. வன் வன்னியராட்டம் ~விழ்ந்தான் வீரலட்சுமி
15. வீரலட்சுமி, தனலட்சுமி, தான்யலட்சுமி அட்டல

16. ட்சுமி காந்தன் காமினி கந்தர்பன் சகல கலை வல்லவன் வீர வெம்பா

17. மாலை விருதரசர் மணவாளன் வில்லுக்கு விசையன் சொல்லுக் கரி

18. ச்சந்திரன் மல்லுக்கு வீமன் பரிக்கு நகுலன் கொடைக்கு கர்ணன் இள

19. ஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்திற் பாய்ச்சி கட

20. லில் பாய்ச்சி தாலிக்கு வேலி தண்டுவார் மிண்டன் கோடாளி

21. சருவந்த மாமுடி அடைக்கலங்காத்தான் தாலிக்கு வேலி துட்

22. டர்கள் கொட்டமடக்கி இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் தொ

23. ண்டியந்துறைக் காவலன் மதுரை மானங்காத்தான் செங் காவிகு

24. டையான் கெருடக் கொடி அனுமக்கோடி , சிங்கக்கொடி புலிக்கொடி குக்கிட

*இரண்டாம் பக்கம்*

25. க்கொடியுடையான் செம்பிவளநாடன் சேது

26. காவலன் சேது மூலதுரத்ந்ரன் ராமநாதசுவாமி காரியந் துரந்தரன்

27. ஏழைபங்காளன் எதிர்த்தவர் மார்பிலாணி அசுபதி கெச பதி நரபதி

28. ரவிகுல முத்துவிசைய ரெகுநாத ராமலிங்க சேதுபதி காத்த தேவ

29. ரவர்கள் பிரிதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளா நின்ற சாலிவாகன

30. சகாப்தம் 1702 கலியுகம் 4872 மேல் செல்லா

31. நின்ற பிலவஸ்ரீ கார்த்திகை மீ 5 தேதி முத்துப்பேட்டை சருவேசுவ

32. ரன் கோயிலுக்கு சருவமானியமாக தாம்பிர சாதனம் கு
33. டுத்த நிலமாவது முத்துப்பேட்டை சருவேசுவரன் கோவி
34. லும் சங்கரவலசை
35. யாவது சக்கிலியன் குண்டுக்கு தெற்கு எல்கையாவது
36. கிழக்கு மேற்கு எல்கையாவது வண்ணானூரனிக்கு வடக்கு எல்கை
37. தளம் புளி இன்னான்கு எல்கை நிலமும் இந்தக் கோவிலுக்கு விட்டு கொடுத்த தெ
38. ஞ்சியேந்தல் எல்கையாவது பாப்பானேந்தல் கண்மாய்க்கும்
39. மேற்கு குண்டமுடையார் கோயிலுக்கு வடக்கு மலட்டாறுக்கு கிழக்கு வயருனேந்தல் கால் முதலூர் கண்மாய்
40. க்கரைக்குத் தெந்கு இன்னான்கு எல்கைக்குட்பட்ட மர
41. வடை மாவடை கீழ்நோக்கிக கிணறு மேல்நோக்கிய மரங்கள் வரத்
42. துக்கால் நிதிநிட்சேபம் செலதரு பாஷாணமெனப்படும் அஷ்ட தேச சு
43. மியங்களும் வீனியாதி விக்கிரயங்களுக்குயோக்கிய
44. யமாகவும் பாத்தியராவர்களுக்கு பெரியபட்டண முத்துப்
45. பேட்டை சுங்கத்தில் நித்தம் இரண்டுபணம்
46. ஆதி சந்திரரதித்த வரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்வாராகவும்
47. இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணினவர் காசியிலேயும்
48. சேதுவிலேயும் அனேக புண்ணியம் பண்ணின
49. வர்கள் இந்த தர்மத்தை அகிதம் பண்ணின பேர்கள்
50. ——————கோடி பாவத்தையும் பண்ணி குருவையும் மாதா பிதாவையும்
51. ம் வதை பண்ணின தோஷத்தையடைவாராகவும் இந்தப் படிக்கு பொ
52. க்கிஷங் கணக்கு ஆதிநாராயண பிள்ளை மகன் தளவாத்தான்
53. யெழுத்துப்படிக்கு முத்துப் பத்தர் மகன் வேலாயுதன் யெழுத்து உ

## செப்பேடு எண். 70

(*விளக்கம்*)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | முத்துப்பேட்டை கிராம சர்வேசுவரன் கோவில் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1703 பிலவ ஆண்டு கார்த்திகை 5ந் தேதி (கி. பி. 1781) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மேலேகண்ட தேவாலயத்திற்கு முத்துப்பேட்டை. தெஞ்சியேந்தல் கிராமங்கள் சர்வமானியம். |

இந்தச் செப்பேட்டில் சேதுபதி மன்னரது அறுபத்திமூன்று சிறப்புப் பெயர்கள் மன்னரது விருதாவளியாகக் காணப்படுகின்றன. இவைகளில். ''தென்னவன் ஆட்டம் தவிழ்த்தான்'', ''ஏழைப்பங்காளன்'' என்ற இரு சிறப்புப் பெயர்களைத் தவிர ஏனையவையனைத்தும் இந்த மன்னரதும் இவரது முந்தையோரது செப்பேடுகளில் காணப்பட்டவை ஆகும்.

இராமநாதபுரம் வட்டம் முத்துப்பேட்டை கிராமத்தில் உள்ள சர்வேசுவரன் ஆலயத்திற்கு முத்துப்பேட்டை தெஞ்சியேந்தல் (பரமக்குடி வட்டம்) கிராமங்களை சர்வமானியமாக வழங்குவதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. பதினேழாவது நூற்றாண்டின் இறுதியில் மறவர் சீமையில் கிறித்தவ மதம், மதுரை சேசு சபை, மூலமாக நுழைந்தது. இந்து ஆஸ்திக வாதிகள் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தினர். அப்பொழுது ஆட்சியில் இருந்த ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னரை நெருக்கினார். இராமநாதபுரம் ஆட்சி பீடத்திற்கு போட்டியிட்ட

அரசு வழியினர் சிலரும் குறிப்பாக சிறுவெள்ளி பாளையக்காரர் அந்தச் சமயத்தை ஏற்று இருந்ததால் சேதுபதி மன்னரது ஆட்சிக்கு எதிரான சூழ்நிலை மீண்டும் எழுந்தது. மதம் மாற்றத்தில் ஈடுபட்ட ஜான் பிரிட்டோ பாதிரியார் நாடு கடத்தப் பட்டார். சில வருடங்கள் கழித்து அதே பாதிரியார் மீண்டும் அந்தப் பணியில் ஈடுபட்டதால் அவரது உயிர் இராமநாதபுரத்திற்கு வடக்கே உள்ள ஒரியூர் கோட்டையில் 4—2—1693ந் தேதி பறிக்கப்பட்டது *. கிழவனை அடுத்துப் பட்டமேறிய விஜய ரெகுநாத சேதுபதியும் மதமாற்றத்தை எதிர்த்தார். என்றாலும், புதிய மதத்தை ஏற்றவர்கள் நாளடைவில் சருகணி, பொன்னளிக் கோட்டை, ஓரியூர், இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் தேவாலயங்கள் அமைப்பதற்கு, அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அரசு ஊக்குவிப்புகள் வழங்கப்படவில்லை.

இந்தக் குறைவினை நிறைவு செய்தாற்போல இந்த மன்னர், முத்துப்பேட்டை ஆலயத்திற்கு இரண்டு கிராமங்களை பரமக்குடி வட்டத்தில் உள்ள தெஞ்சியேந்தலும், இராமநாதபுரம் வட்டத்திலுள்ள முத்துப்பேட்டையும், சர்வமானியமாக வழங்கினார். சமயப்பொறையுடன் சேதுகாவலர்கள் ஆட்சியை நட்த்தியதற்கு இந்தச் செப்பேடு ஒரு சான்றாக அமைந்துள்ளது. முத்துப்பேட்டை ஆலயம் போர்ச்சுக்கீசியரால் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (கி. பி. 1638/39) நிர்மாணிக்கப் பட்டது ஆகும், அடுத்த ஒரு நூறு ஆண்டுவரை கொச்சியிலுள்ள குரு பீடத்துடனும், இந்த தேவாலய நிர்வாகம் இணைக்கப் பட்டு இருந்தது பின்னர் புதுச்சேரி பாதிரியாரின் கண்காணிப் பிலும் இருந்து வந்து மதுரையில் சேசு சபை வலுப்பட்ட பொழுது, மதுரைபொறுப்பில் வந்தது.

* Sauliere Dr. S. J. - The Reds and (1947) pp. 345-474

## செப்பேடு எண் 71

(நகல்)

1. ஸ்வஸ்தஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியப்தம் 4872 இதன்
2. மேற் செல்லா நின்ற பிலவ நாம ஸத்வத்ஸரைத்தில் தெக்ஷு ணாய நத்தி
3. ல் சரத் ரிதுவில் தனுர் மாசத்தில் பூச நக்ஷதிரத்தில் சுபயோகமும் சுபகரன
4. மும் பெத்த சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூலா மூலா துரந்தரன்
5. ராமநாத ஸ்வாமி காரியா துரந்தரன் பரராசசிங்கம் பர ராசசேகரன்
6. பரராச கெற்ப நிறபேதனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேதன
6. ன் கெருட கேதனன் சிங்க கேதனன் மயூர கேதனன் குக்கிட கேதனன்
8. செங்காவிக் குடைமேல் கவரிமயிர் வைத்த விருதுடைய ராசாதி
9. ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகுல திலகன் சங்கீத சாயித்திய
10. வித்தியா வினோதன் சோளமண்டலப் பிறதிஷ்டாபனா சாரியன் தொண்
11. டமண்டல சண்டபிரசண்டன் பாண்டிமண்டல பத்மனாசா ரியன்

---

‡ திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை.
அமைப்பு : 22 செ.மீ × 16.00 செ,மீ

12. ஈளமுங் கொங்கும் யாள்ப்பாணராயன் பட்டணமும் கெச வேட்டை
13. கொண்டருளிய ராசாதிராசன் திலதநுதல் மடவார்கள் மடலெழுது வ
14. ரு சுமுகன் பதினெணன்பாஷை வீணாப்பிறவீணன் அகளங் கன் அனந்த க
15. லியாண குணாபிராமன் அபிமானங் காத்தவன் மனுநீதி மற
16. வாதான் வேதியர்கள் காவலன் தொண்டியந்துறை காவ
17. லன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்ட நிக்கி
18. றக சிஷ்ட பரிபாலனன் அஷ்டலட்சுமி வாசன் சத்திய அரிச்சந்
19. திரன் வில்லுக்கு விசையன் துகவூர்க் கூத்தத்துக் கதிபரா ன கு
20. லோத்துங்க சோழ நல்லூர்க் கீள்பால் விரையாத கண் டனிலி
21. ருக்கும் வங்கிஷாதிபரான ஸ்ரீமது இரணிய கெற்பயாசி ரவிகுல ரெகுனா
22. தச் சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிசோத்தகரான ஸ்ரீமது முத்துரா
23. மலிங்க விசைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் திருவாவடுது
24. றை பண்டாரச் சன்னிதியவர்கள் மடத்துக்கு அம்பலவா ன சுவா
25. மி சன்னதியில் மயேசுர பூசைக்கு பண்டாரச் சன்னதி யவ
26. ரகள் கையில் தானபூருவமாக தாம்பிர சாசனம் பண்ணிக்
27. குடுத்த கிறாமமாவது வள்ளைக்குளம் எல்லைப்புரவு தெற்கே சிக்கள்
28. கண்மாய் நீர்ப்பிடிக்கும் ஷேயூர்க் கண்மாய் உள்வாயில் கொடி

29. க்கால் கேனிப்புரம்புக்கு வடக்கு மேற்கே வய்ய னாயக் கன் ஊ

30. ரணிக்கும் எத்திலு நாயக்கன் மாலையீட்டு ஊரணிக்கும் பனிவாசல்

31. எல்கையில் ரெகுநாத நாயக்கன் பொட்டச் செய்க்கும் கிளக்கு வ

32. டக்கே அண்ணுனிக் கண்மாய் உள்வாயில் ஆய்க்குடி எல்கையில்

33. சேதுக் குடும்பன் எல்கை உரைத்திப் புஞ்சைக்கும் கீள்பால் கண்ணாங்

34. குடி புஞ்சைக் காட்டில் அடைக்கலன் எல்கைப் புஞ்சைக் கும் கீள்பா

35. ல் கடம்போடைப் புஞ்சைக் காட்டில் ஆதினாராயணக் குடும்பன் கட

36. மைப் புஞ்சைக்கும் தெற்கு கிளக்கே அண்ணுவிக் கண் மாய் உள்வாயில்

37. சுருங்கன் கடமைப் புஞ்சைக்கும் ஷே கண்மாய் பிறகரை கரையில் குள

38. வெட்டுப் புஞ்சைக் கீள்பால் சிக்கள் புஞ்சைக் காட்டில் கீள்கரை

39. பாதைக்கு தென்புறம் இருக்கிற புஞ்சைக்கும் சிக்கள் கண் மாய் கீள்கரை

40. உத்தராள்வுக்கும் மேற்கு இந்தப்படி நான்கெல்கைக்குள் பட்ட திட்டுத் தி

41. டல் மாவடை மரவடை மேல்நோக்கிய மரம் கீள்நோக் கிய கிணறு ஆத்து

42. க்கால் ஊத்துக்கால் செல தரு பாஷானம் நிதி நிட்சேபம் அஷ்ட போக

43. தேச சுவாமியங்களும் வினுயாதி விக்கிறங்களுக்கும் யோக்கியமாக

44. ஆதி சந்திராதித்தவரைக்கும் ஆண்டனுபவித்துக் கொள் ளக் கடவாராக

ஷை

45. வும் இந்த தற்மத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக்கரை

46. யிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்களிலே கோடி சிவலிங்கப் பிற

47. திஷ்டை கோடி கன்னிகாதானம் கோடி கோடி அக்கிறா கார ப்ரதிஷ்டை பண்ணின

48. பலனையடைவார்கள் இந்தத் தர்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் கெ

49. ங்கைக் கரையில் சேதுவில் மாதா பிதா குருவை வதை பண்ணின தோஷ

50. த்தையடைவார்கள் உ ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாது ப

51. ாலநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது உ ஏள

52. கவ பஹுந் லோகே சர்வேஷா மேவ பூபுஜாம் நகோஜ்ய நகரக்ய்

53. ா விப்ரதத்தா வசுந்தரா உ தாந பாநல யோர்மத்யே தா நா

54. ஸ்ரயோது பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பால நாததச்சு

55. தம் பதம் உ இந்தப்படிக்கு பொக்கிசக் கணக்கு ஆதினாராயண பிள்

56. ளை மகன் தளவாத்தான் கையெழுத்துப்படிக்கு முத்துப் பக்தர் மக

57. ன் வேலாயுதம் கையெழுத்து உ

## செப்பேடு எண் 71
(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | திருவாவடுதுறை ஆதின பண்டார சன்னதி |
| 3. செப்பேட்டின் காலம் | : | சகம் 1703 பிலவ ஆண்டு தனுர் மாசம் (கி.பி. 2-1-1782) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | மயேச்சுர பூசைக்கு வல்லைக் குளம் தானம் |

இந்தச் செப்பேட்டினை வழங்கிய சேதுபதி மன்னரது விருதாவளியாக இருப்பத்தியேழு சிறப்புப்பெயர்கள் மட்டும் காணப்படுகின்றன. இவையனைத்தும் முந்தையச் செப்பேடுகளில் பயன்படுத்தப்பட்டவை.

இராமேசுவரம் திருக்கோயிலுக்கு அடுத்தபடியாக சேது மன்னர்களது தானங்களை திருவாவடுதுறை ஆதினம் பெற்று வந்துள்ளது. ஏற்கனவே இந்தமடத்தின் அம்பலவாண நாத சன்னதியில் மயேச்சுர பூசைக்காக, பொசுக்குடி, நாட்டுசேரி ஆகிய ஊர்களை முந்தையச் சேது மன்னர்கள் தானம் அளித்துள்ளனர். அந்தப் பூசையின் சிறப்பைக் கருதி இந்த மன்னர் வல்லைக்குளம் என்ற ஊரினை அதே தர்மத்திற்கு தானமாக வழங்கி உள்ளனர். இந்த ஊர் இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் தென்கிழக்குப் பகுதியில் சிக்கிள் என்ற ஊரின் மேல்புறமாக அமைந்துள்ளது. இந்த ஊரின் எல்லைகளை செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கில், பனிவாசல், கடம்போடை, ஆய்க்குடி, சிக்கில் கண்மாய், அன்னுணிக் கண்மாய், இராமநாத

புரம் பாதை ஆகியன அனைத்தும் இன்னும் வழக்கில் உள்ளன. சேதுக் குடும்பன், அடைக்கலன் குடும்பன், ஆதிநாராயணக் குடும்பன் ஆகியோர் பள்ள இனத்தவரில் ஒரு பிரிவினரான ''குடும்பன்'' வகையைச் சேர்ந்தவர்கள். பதினாறாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இந்தப் பகுதி பரமக்குடி பாளையத்துடன் இணைந்து தும்பிச்சி நாயக்கரது ஆட்சியில் இருந்ததால், இந்தப் பகுதியில் சில ஊர்களில் தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்ட ''நாயக்கர்'' சிலர் நிலைத்து வாழ்ந்தனர். செப்பேட்டின் வரி 30, 31ல் குறிப்பிடப்படுகின்ற எத்திலு நாயக்கன் மாலையீட்டு ஊரணி ரெகுநாத நரயக்கன் பொட்டல் செய் என்பன அவர்களின் எச்சங்கள்.

20-ஆம் நூற்றாண்டில் இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் கண்டி அரசரைச் சிறைப்படுத்தி வேலூர்க் கோட்டையில் அடைத்தனர். அவரது மகன் பங்காருசாமி மற்றும் பன்னிரெண்டு உறவினர்கள் அரசியல் பென்ஷனர்களாக கீழக்கரையிலும் சிக்களிலும் வாழ்ந்து வந்தனர் என்பதும் அவர்களுக்கு சிக்களில் சொந்தமான இடங்கள் இருந்து வந்ததும் தெரிய வருகின்றது.‡ பொட்டல்செய், புஞ்சைக்காடு, கண்மாய் உள் வாயில், பிறகரை, கண்மாய் வெட்டு, கேணிப்பிறம்பு என்பன இந்த வட்டாரத்தின் வழக்குகள் ஆகும்.

‡ Tamilnadu Archives Records - Madura Dist. Vol. 4670 (1872) pp. 170-171, Vol. 1159 (1812) pp - 13.

## செப்பேடு எண். 72

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1703 கலியப்தம் 4881 இதன்

2. மேல்ச் செல்லா நின்ற பிலவ நாம ஸம்வத்ஸரம் தைய்மா சம் 15உயும் தி

3, சமியும் வியாழக்கிழமையும் ரோகிணி நட்செத்திரமும் கூடி ன சுபயோ

4. க சுபதினத்தில் தேவை நகராதிபன் சேதுமூலா துரந்தரன் ராமனாத ஸ்வ

5. ாமி காரியதுரந்தரன் சிவபூசாதுரந்தரன் பரராசசேகரன் பரராச சிங்க

6. ம் பரராசகெற்ப நிறபேதனன் சொரிமுத்து வன்னியன் அனுமகேதனன் கெ

7. ருடகேதனன் குக்கிடகேதனன் மயூரகதேனன் செங்காவிக் குடைமேல் கவ

8. ரிமயிர் வைத்தவிருதுடைய ராசாதிராசன் ராச பரமேசுப ராசகுல தில

9. லகன் ராசமாத்தண்டன் ராசகெம்பீரன் சங்கீத சாயித்திய விக்தியாவி

---

நூலாசிரியரது கள ஆய்வின் பொழுது திருப்புல்லாணி கிராமம் தெற்குரத வீதி திரு. ரா. தேசிகனிடம் கண் டெடுக்கப் பெற்று படி எடுக்கப்பட்டது.

அமைப்பு : 29 செ.மீ x 16 செ.மீ

10. னோதன் சோளமண்டலப் பிரதிஷ்டாபனா சாரியன் கொண் ட மண்டல சண்ட
11. ப்பிரகண்டன் பாண்டிமண்டல ஷ்தாபனாச்சாரியன் ஈளமுங் கொங்கும்
12. யாள்பானராயன் பட்டணமும் கெசவேட்டை கொண்டருளி ய ராசர
13. திராசன் அபிமானங்காத்தவன் அகளங்கன் அனந்த கலி யாண குணாபிராமன்
14. மனுந்திமறவாதான் வைய்கை வளநாடன் வேதியர்கள் காவலன் திலவ
15. நுதல் மடவார்கள் மடலெழுதவரு சுமுகன் பதினெண் பாசை வீணாப்
16. றவீணன் தொண்டியந்
17. துறைகாவலன் மலைகலங்கினும் மனங்கலங்காதான் துஷ்டநிக்கிற
18. சிஷ்டபரிபாலனன் அஷ்டலக்ஷிமிவாசன் சத்திய அரிச் சந்திரன் வில்லுக்கு வி
19. சையன் சொல்லுக்கு அகத்தியன் இவுளிபாவடி மிதித் தேறுவார்கண்டன்
20. உரிகோல் சுரதானன் வீரதண்டை விளங்குமிரு தாளினான்
21. துகவூர்க் கூத்தத்துக்கதிபரான குலோத்துங்கசோள நல்லூர் கீள்பால்
22. விரையாத கண்டனிலிருக்கும் வங்கிஷாதிபரான ஸ்ரீமது இரணியகெற்
23. பயாசி ரவிகுல ரெகுனாத சேதுபதி காத்ததேவரவர்கள் வங்கிஷோ
24. த்தகரான ஸ்ரீமதுமுத்துராமலிங்க விசைய ரெகுனாதச் சேதுபதிகாத்
25. ததேவரவர்கள் வைகை தீரத்தில் நாகாச்சி மடம் தற்மத்துக்கு புருசோ
26. த்தமபண்டிதரவர்கள் கையில் சறுவமானியமாக சஹிரணி யோதக

27. தாறாபூருவகமாக தாம்பிரசாசனம் தானம் பண்ணிக் குடுத்தபடி நிலவ

28. ரி இடங்கைய்வரி வலங்கைய்வரி கீதாரம் கரை மணிய மத்த ஆத

29. டைப்பலசுவந்தையளும் சறுவமானியமாக தானம் பண்ணி

30. க்கொடுத்த பேயராமத்தேவன் யேந்தல் கிளக்கு எல்கை யாவ

31. து பெரியானேந்தல் எல்கையில்

இரண்டாம் பக்கம்

32. மேப்படியூர் கொல்லமுத்தனாசாரியர் புஞ்சைக்கு மேற்கு தவளைக்

33. குளம் கண்மாய் மூலக்கரை பிறகரை கரையடி தேத்தாங் காலுக்கு

34. தெற்கு தெற்கு எல்கையாவது சித்தனேந்தல் வடகண்ம ாய் மூலக்கரை

35. க்கும் கிளக்கு சந்தைப்பாதைக்கு மேற்கு இதன் மேற்கு சித்தனேந்தல் வ

36. டகண்மாய் கடக்கொம்புக்கு வடக்கு பெயராமாயேந்தல் இதன்மூல

37. கரைக்கும் பெயராமாயேந்தல்க் கண்மாய் வெட்டுத்தாவுக் கும் கிளக்

38. கு யேந்தல் வடகரை பிறகரை புஞ்சை அதுக்கும் பிற கரைமேற்கு எல்

39. கையாவது அக்கிறமேசி எல்கை புஞ்சையில் சிலையப் னம்பலகாறன்

40. செய்க்கு இருளாண்டியார் புஞ்சைக்கு மேற்கு இதன் வட க்கு அஞ்சாமடை

41. கிளக்கு வயலுக்கு தெக்கு அஞ்சாமடை பள்ளபூவனயார் உளவு உளுத

42. புஞ்சைக்கு வீகாந்பரம்புக்கு தெற்கு தவளைக்குளம் தென் கண்மாய் நடுக்க

43. ண்மாய் பாகைபொட்டல் பரம்புக்கு மேற்க்கு ஆக ஏந்தல் வடகாட்டுப்புர

44. வு எல்கை நான்கெல்கைக்குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை

45. மரவடை மேல்நோக்கிய கிணறு, கீள்நோக்கிய கிணறு, சலதருபாஷண

46. ம் நிச்சேபம் ஆத்துக்கால் ஊத்துக்கால் சகலமும் வினியா திவிக்கிறய

47. ங்களுக்கும் யோக்கியமாக ஆதிசந்திராதித்தவரைக்கும் புத்திர பவுத்திர

48. பாரம்பரையமாக ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இந்த தற்க

49. த்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையி

50. லே சேதுவிலே புண்ணியத்தலங்களில் கோடி சிவலிங்கப் பிறதிட்டை

51. கோடி அக்கிறகாரப் பிறதிட்டை கோடிகன்னிகாதானம் பண்ணின பலனை

52. யடைவார்கள் இந்த தர்மத்துக்கு பரிபாலனம் பண்ணின பேர்

53. கெங்கைக்கரையிலே சேதுவிலே மாதா பிதா குருவை வதை பண்ணின தோஷத்திலே

54. யயைவார்கள் உ ஸ்வதத்தாத்வி குணம் புணியம் பரதத் தாது பாலநம் பரதத்தாப

55. ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பாவேது-உ-தாநபாலந யோர்மத்யே தாநாத் ஸ்ராயோ

56. நு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம் ஏகைவ பகிநி

57. லோகே ஸர்வேஷா மேவ பூபுஜாம் நயோஜ்யா கரக் ரஹ்யா வி

58. ப்ரதத்தா வஸுந்தரா உ இந்தப்படிக்கு பொக்கிசம் கணக்கு ஆதிநாராயண

59. பிள்ளைமகன் தளவத்தான் கையெளுத்துபடிக்கு வேலாயுதம் கை

60. யெழுத்து உ

*ஸ்ரீ ராமநாத ஸ்வாமி சகாயம்*

# செப்பேடு எண் 72

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : புருஷோத்தம பண்டிதர்
3. செப்பேட்டின் காலம் : சகம் 1703 பிலவ ஆண்டு தை மீ 15 தேதி (கி.பி. 24-4-1782)
4. செப்பேட்டின் பொருள் : நாகாச்சி மடதர்மத்திற்கு பேய் ராமத்தேவனேந்தல் தானம்

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்துராமலிங்க சேதுபதி மன்னரது விருதாவளியாக இந்த செப்பேட்டில் முப்பத்து ஒன்பது சிறப்புப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தச் செப்பேட்டை சேதுபதி மன்னர் நாகாச்சி மடதர்மத் திற்காக பேய்ராமத்தேவனேந்தல் என்ற ஊரினை தானமாக புருஷோத்தம் பண்டிதர் என்பவர் கையில் கொடுத்ததாகத் தெரிகிறது. இராமேசுவரம் தலயாத்திரை வருகின்ற பக்தகோடி கள் வடக்கில் இருந்து வந்து வங்கக்கடற்கரையில் உள்ள ஆத்தங்கரைச் சத்திரத்தில் தங்கியபிறகு கிழக்கு நோக்கி கடற் கரை வழியாக பிள்ளைமடம் சத்திரத்தைக் கடந்து மண்டபம் தோணித்துறைக்குச் செல்லுதல் வேண்டும். ஆற்றங்கரை சுழி முகத்தில் வைகையாறு சங்கமிப்பதால் முகத்துவாரத்தை கால் நடையாக கார்காலத்தில் கடப்பது ஆபத்தாக இருந்து வந்தது இதனைத் தவிர்ப்பதற்காக கிழக்கே செல்லாமல் ஆற்றங் கரையில் தெற்கே சிறிது தொலைவு சென்று வைகையாற்றைப் படகு மூலம் கடப்பது எளிதாக இருந்தது. அவ்விதம் வருபவர் களுக்கு நாகாச்சிமடம் மிகவும் பயனுள்ள தங்குமிடமாக அமைந்

திருந்தது. அங்கு களைப்பாறும் பயணிகளுக்கு உணவு இருப்பிட வசதி கொடுப்பதற்காக சேதுபதிமன்னர் இந்த தானத்தை வழங்கியுள்ளார். இந்தமடம் இப்பொழுது இல்லை.

தானம் வழங்கப்பட்ட பேய்ராமத் தேவனேந்தல் முந்தைய கைக்கி நாட்டும்பிரிவிலிருந்தது. இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் வைகையாற்றின் வடபகுதியில் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் பாடிய பகழிக் கூத்தரது கிராம மான சன்னாசிக்கு அண்மையிலுள்ளது. தானம் வழங்கப்பட்ட ஊரிலிருந்து சேதுபதி மன்னருக்கு இறுக்கப்பட்ட நிலவரி, இடங்கைவரி, வலங்கை வரி, கீதாரம் கரைமணியம், ஆதடை மற்றும் பல சுதந்திரங்களும், இந்த மடதர்மத்திற்காக மன்னர் விட்டுக்கொடுத்துள்ளார்.

இந்த ஊருக்கான பெருநான்கெல்கை கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள பெரியானேந்தல் தவளைக்குளம், தேத்தாங்கால், சித்தனேந்தல் அக்கிரமேசி, அஞ்சாமடை ஆகிய அனைத்து ஊர்களும் இன்னும் உள்ளன.

செப்பேட்டில் காணப்படும் மூலக்கரை, பிரகரை, கரையடி கடைக்கொம்பு, வெட்டுத்தாவு, பாகை, பறம்பு, புறவு, ஏந்தல் ஆத்துக்கால், ஊத்துக்கால், ஆகியன வட்டார வழக்குகள் ஆகும்.

## செப்பேடு எண். 73

(நகல்)

1. ஸ்வஸ்தி சாலிவாகன சகாப்தம் 1703 கலிய வருஷ 4882 இதன்மேல் செல்
2. லா நின்ற பிலவ நாம சம்வச்ரத்தில் உத்தராயணத்தில் தைய் அமாவாசை புண்
3. ய காலமும் உத்திராட நட்சத்திரமும் சுபயோக சுபகரண மும் பெற்ற சுபதினத்து
4. தேவை நகராதிபன் சேதுமூல துரந்தரன் ரரமநாத சுவா மி காரியதுரந்தரன் பரராச
5, சிங்கம் பாராச சேகரன் பரராச மன்னர் சொரிமுத்து வன்னியன் அனு
6. ம கேதனன் கெருடகேதனன் சிங்க கேதனன் மயூரகேத னன் குக்கிட கேதனன் செ
7. ங்காவிக்குடை மேல் கவரி மயிர் வச்ச விருதுடைய ராசாதி ராசன் ராசமாத்தா
8 ண்டன் ராசகுல திலகன் சங்கீத சாயித்திய வினோதன் சோழமண்டல பிரதிஷ்டாபனாச்சாரி
9. யன் தொண்ட மண்டல சண்டப் பிரசண்டன் பாண்டி மண்டல ஸ்தாபனாச்சாரியன் ஈழ
10. முங்கொங்கும் யாழ்ப்பாணராய பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய

‡ நூலாசிரியரால் இராமநாதபுரம் அரண்மனை ஆவணங்களில் இருந்து கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு படி எடுக்கப் பட்டது.

11. ராசாதிராசன் திலதநுதல் மடவார் மடலெழுத வருசுமுகன் பதினெண் பா

12. சை வீணா பிறவீணன் அகளங்கன் அனந்த கலியாண குணாபிராமன் பட்டமான

13. ங்காத்தான் மனுநீதி மறவாதான் வேதியர் காவலன் தொண்டியந்துறைக்

14. காவலன் வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் துஷ்ட நிக்கிரக சி

15. ட்ட பரிபாலனன் மறுநீதசோழன், மன்மத சொரூபன் திக்கெல்லாம் புகழ்

16. கொண்டராயன் ஹிரண்ய கெர்ப்ப சுதாகரன் உரிகோல் சுரதானன் மேவ

17. லர் கண்டன் விருது கங்கனம் பெற்றவன் சிவபூஜாதுரந்த

18. ரன் தனுக்கோடி காவலன் வெள்ளயானை வாகனன்கி

19. ரண்ய கெற்பயாஜி இரவிகுல ரெகுநாத சேதுபதி காத்த தேவ

20. ரவர்கள் வங்கிஷ கோத்திரான ஸ்ரீமது முத்துராமலிங்க

21. விசைய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் பூதானம் ப

22: ண்ணிவிச்சது முகவை இராமநாதபுர முத்துராமலிங்க சுவாமிக்கு

23. மாறியாடும் பெருமாள் பிள்ளை மகன் முத்துவயிரப்பிள்ளை மாரிபத்தாக

24. அய்யாச்சாமி குருக்களிடத்தில் தான சாதனம் கொடுத்தது செம்பிநாட்டில்

25. சொக்கானை மத்திவயல் இந்த இரண்டு கிராமம் சர்வமா

26. னிபமாக ஆதி சேதுவில் தான சாதனம் பண்ணிக்குடுத்தற்கு எல்

27. லைப்புரவாவது மத்தியல் எல்கைக்குப் புரவு வல்லபாடலுக்கு மேற்கு

28. சிறைக்குளம் கண்மாய்க்கு வடக்கு கழுநீர் மங்கலத்துக்கு கி

29. மூக்கு சிக்கிள் அய்யானாரூரணிக்கு தெற்கு சொக்கானை எல்கை

30. புரவாவது பனிவாசலுக்கு மேற்கு சிக்கிள் பேய்க் கோன்

31. கருப்பண கோயிலுக்கு வடக்கு பேய்க்குளம் ஊருணிக்கும் சின்னக்கண்மாய்

32. கீழ்க்கரைக்கும் கிழக்கு நத்தம் குடியிருப்புக்கு வடக்கு சிக்கிள் காளா

33. ன் கரைக்குத் தெற்கு இந்த இரண்டு கிராமத்து நான் கெல்லைக்குட்பட்ட

34. நஞ்சை. புஞ்சை, திட்டு, திடல், மாவடை, மரவடை கீழ் நோக்கிய கிளை

35. று மேல் நோக்கிய மரம் நிதி நிக்ஷேபம் ஜலதரு பாஷான மச்ச

36. மென்னிய காமியம் என்று சொல்லப்பட்ட அஷ்ட போக கிச்சக மி

37. யங்களும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும் இந்த த

38. ர்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர் காசி

39. யிலும் ஆதி சேதுவிலும் கோடி சிவலிங்கப் பிரதிஷ்டையும்

40. கோடி விஷ்ணு பிரதிஷ்ட்டையும் பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின பலனை அடைய

41. கடவராகவும் இந்த தர்மத்திற்கு விகாதம் பண்ணினபேர் கா

2. சியிலும் சேதுவிலும் கோடி பிராமணனையும் கோடி கா ராம் பசு

43. வையும் தாயையும் குருவையும் வதை பண்ணின பாவத் தை

44. அடைஙக் கடவராகவும்

45. சமூகம் உத்தரவுப்படி ராயசம் குப்பையாண்டி கையெழுத்து

46. அருணாசலம் கையெழுத்து

# செப்பேடு எண் 73

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி.
2. செப்பேடு பெற்றவர் : இராமநாதபுரம் அய்யாச்சாமி குருக்கள்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1703 பிலவ ஆண்டு தை மாதம் (கி.பி. 13-1-1782)
4. செப்பேட்டின் பொருள் : இராமநாதபுரம் முத்துராமலிங்க சுவாமி ஆலயத்திற்கு இரண்டு ஊர்கள் சர்வமானியம்.

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது விருதாவளியாக முப்பத்து ஒன்பது சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ''செங்காவிக் கொடைமேல் கவரி மயிர் வைச்ச விருதுடையான் ''இரணிய கற்ப சுதாகரன்'' ''வெள்ளானை, வாகனன்'' என்ற புதுப்பெயர்களைத் தவிர ஏனையவை இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்பட்டவையாகும். இரணிய கற்ப வேள்வி செய்த ரெகுநாத திருமலை சேதுபதியின் ''குமாரன்'' என்ற முறையில் இரணிய கற்ப சுதாகரன் என்ற சிறப்புப் பெயரும், அஷ்ட ஐஸ்வரியங்களைக் கொண்ட தேவேந்திரனது வெள்ளை நிற யானையை உடையவன் என்ற சிறப்புப் பெயரும் வந்துள்ளன.

---

‡ Rajaram Row T. Manual of Ramnad Samasthanam (1891) page 327

இராமநாதபுரம் கோட்டைக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவிலுள்ள லட்சுமிபுரத்தில் முத்துராமலிங்க சுவாமி கோயில் அமைந்துள்ளது. இதனை எடுப்பித்தவர் முத்து விஜய ரெகுநாத சேதுபதியாகும். மிகுந்த அழுத்தமான சிவபக்தர் என்ற வகையில் அந்த மன்னர் நாள்தோறும், இராமேசுவரம் திருக்கோயிலுக்குச் செல்ல இயலாத நிலையில், இராமேசுவரம் இறைவனை இராமநாதபுரத்திலேயே பூஜிப்பதற்காக இந்தக் கோயிலை நிறுவினார் என்ற செய்தி இராமநாதபுரம் மேன் யுவலில் காணப்படுகிறது. இந்த மன்னரை அடுத்துப் பட்ட மேறிய செல்லமுத்து விஜயரெகுநாத சேதுபதி என்பவர் இந்த ஆலயத்திற்கு அண்மையில் செல்லபூபாலசத்திரம் என்ற பெயரில் அன்ன சாலை ஒன்றை அமைத்துள்ளார். இந்தக் கோயிலின் வடக்குப் பகுதியில் சமரச சன்மார்க்க சித்தாந்தம், கண்ட தாயு மான அடிகளது சமாதியுற்ற தோட்டமும் உள்ளது.

இந்தக் கோயிலின் பராமரிப்புக்காக சொக்கானை, மத்தி வயல் என்ற இரு கிராமங்களை சர்வமான்யமாக வழங்கி யுள்ளதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. அந்தக் கிராமங் களுக்கான நான்கு எல்கை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள *சிக்கல், சிறைக்குளம், கழுநீர்மங்கலம், பேய்க்குளம்* ஆகிய நான்கு ஊர்களும் இன்றும் வழக்கில் உள்ளன. ஆனால் வல்ல பாடல் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஊர்மட்டும் வல்லக்குளம் என்ற பெயரில் வழங்கி வருகின்றது. இந்த ஊர்கள் அனைத்தும் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ளன.

''பாடல்'' என்ற பெயர் விகுதியுடைய இன்னொரு ஊர் வல்லபாடல் கிராமத்திற்கு வடகிழக்கே ஐந்துகல் தொலைவில் உள்ள இதம் பாடல் ஆகும். இத்தகைய பாடல் என்ற பெயர் விகுதிகளையுடைய ஊர்கள் தமிழகத்தில் வேறு எங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை.

## செப்பேடு எண் 74

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1703 கலியப்தம் 4882 இதன்மே
2. ற் செல்லாநின்ற சுபகிறுதுநாம சம்வத்சரத்தில் உத்தரா யண வசந்த ரிது வை
3. காசி மாசம் கிஷ்ண பக்ஷம் அமாவாசி இந்து வாரம் ரோகிணி நட்க்ஷத்திரம் சித்தநாம
4. யோகமும் சதுற்ப்பாத கரணமுங் கூடினசுபதினத்தில் தேவை நகராதிபன் சே
5. து மூல துரந்தரன் ராமனாதசுவாமி காரிய துரந்தான் சிவபூசா துரந்தர
6. ன் பரராசசேகரன் பரராசசிங்கம் அரியராயிர தளவிபா டன் கண்ட
7. னாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பாண்டி மண்டல ஸ்தாபனாச்
8. ரியன் சோளமண்டல பிறதிஷ்டாபனாசாரியன் தொண்ட மண்டல சண்ட
9. ப் பிறசண்டன் ஈளமுங் கொங்குந் யாழ்ப்பாணராயன் பட்டணமும்
10. அளித்துக் கெசவேட்டை கொண்டருளிய ராசாதிலகன் ரா ச பரமேஸ்வர

---

* ARE. A.A/1990. இந்தச் செப்பேட்டினை படி எடுத்து உதவியது : புலவர் திரு. செ. ராஜு, தஞ்சை.

11. ன் ராசமார்த்தாண்டன் ராசகுலதிலகன் ராசகெம்பீரன் துஷ்டராயிரகண்ட
12. ன் மூவராயிர கண்டன் வேதியர்கள் காவலன் வைகை வளநாடான் தொ
13. ண்டியந்துறை காவலன் செம்பிவளநாடான் பட்டமானங்
14. காத்தவன் கொட்டமடக்கி இவுளி பா
15, வடி மிதித்தேறுவார்கண்டன் சொரிமு
16. த்து வன்னியன் திலதநுதல் மடவார்க
17. ள் மடலெழுத வருசுமுகன் சங்கீத சாயித்ய வித்தியாவி னோ
18. தன் பதிணென்பாசை வீணாப்பிறவீணன் சகல சாம்பிறா றாச்சிய லக்ஷ்மி
19. வாசன் சத்திய அரிச்சந்திரன் கொடைக்கு கர்ணன் வில் லுக்கு வி
20. சையன் சொல்லுக்கு அகத்தியன் அனுமகேதனன் கெருட கேத
21. னன் மயூரகேதனன் குக்கிட கேதனன் சிங்ககேதனன் மனு நீதி ம
22. றவாதவன் செங்காவிக்குடை விருதுசல்லியுடையவன் சேமத்த
23. லை விளங்குமிருதாளினான் மதுரவதனன் வங்கிசாதிபரான துகவூர்க்
24. கூத்தத்து குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரையாத கண்ட
25. னிலிருக்கும் ஸ்ரீமது இரணியகெற்பயாசி ரவிகுல ரெகுனாத
26. ச்சேதுபதி காத்த தேவரவர்கள் வங்கிச பரிபாலகரான ஸ்ரீமது
27. முத்துராமலிங்க விசைய ரெகுனாத சேதுபதி காத்த தேவர
28. வர்கள் பாரத்வாஜ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யெஜுஸா

29. காத்யாபகரான ராமசிவன் புத்திரன் சுப்பிறமணிய அய்யனுக்

30. கு குளபட்டி பாதியும் பூதானம் தாம்பிர சாசனமாகப் பண்ணி

31. க் கொடுத்தபடி இந்தக்கிறாமத்துக்கு எல்கையாவது விளத் தூர்

32. வகுத்துக்காலுக்கு வடக்கு ஆயக்குடிக் கண்மாய்ப் பொரு த்து கரைக்கு

33. குடிக் காலுக்குத் தெற்கு ஆயக்குடிக் கண்மாய் பொருத்து கரைக்கு

34. மேற்க்கு இன்னாங்கெல்கைக்குள்பட்ட குளப்பட்டி பாதி க்கு மாவடை

35. மரவடை திட்டுத்திடல் நஞ்சை புஞ்சை ஆத்துக்கால் ஊத் துக்கால் செ

36. ய்த்தளை நிதி நிக்ஷேபம் மேல்நோக்கிய கிணறு கீழ் நோ க்கிய கிணறு செ

37. லதரு பாஷாணம் நிதி நிசேஷம் என்று சொல்லப்பட்ட அஷ்டபோக

38. தேசகாமியமும் விநுயாதி விக்கிறயங்களுக்கு யோக்கிய மாக ஆ

39. தி சந்திராதித்தவரைக்கு ஆண்டனுபவித்துக் கொள்வா றாகவு

40. இந்த தற்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி னவர்

41. கள் கெங்கைக்கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங் களிலே

42. கோடி கன்னிகாதானம் கோடிகோதானம் கோடி சிவலிங்க பிற

43. திஷ்ட அக்கிறகாரம் பிறதிஷ்டை பண்ணின பலத்தை யடைவாராகவு

44. ம் இந்த தற்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணி னவர்கள் கெ

45. ங்கைக் கரையிலே சேதுவிலே புண்ணிய ஸ்தலங்களிலே மாதா பிதா
46. குருவை குருவை வதை பண்ணின பாவத்தையடைவா ராகவும் உ
47. ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பர தத்தாப ஹா
48. ண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது தாந பாலந யோர்மத் யே தாந
49. ாஜ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்கமவாப்நோதி பால நாத் அச்சு
50. தம் பதம் ஏகைவபகஸ்ரீ லோகே ஸர்வேஷ மேவபூபுஜாம் ரயோ
51. ஜ்ய நகரச் ராஹ்யா விப்ரதத்தா வசுந்தரா உ பட்டைய மெளுதினே
52. ன் சவாதுப்படிக்கு வேலாயுதம் கையெழுத்து உ ராம னாதசுவாமி
53. சகாயம் உ

# செப்பேடு எண் 74

*(விளக்கம்)*

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரெகு நாத சேதுபதி |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமசிவன் புத்திரன் சுப்பிர மணிய அய்யன் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1704 சோபகிருது வைகாசி மாதம் (கி. பி. 13-05-1782) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | குளப்பட்டி கிராமதானம். |

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்துராமலிங்க சேதுபதி மன்னரது விருதாவளியாக நாற்பத்து நான்கு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டு உள்ளன. இவையனைத் தும் இந்த மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்பட்டவை.

குளப்பட்டியின் பாதிப் பகுதியை யஜுர் வேத விற்பன்ன ரான சுப்பிரமணிய அய்யருக்கு பூதானமாக வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்த ஊரின் இன்னொரு பகுதி ஏற்கெனவே தேவதாயமாகவோ, பிரம்மதாயமாகவோ, வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறது. ஐம் பத்திரண்டு வரிகளைக் கொண்ட இந்தச் செப்பேட்டின் இறுதி ஏழு வரிகளில் சமஸ்கிருதச் சுலோகம் இடம் பெற்றுள்ளது.

இந்த ஊர் பரமக்குடி வட்டத்தின் தென்பகுதியில் அமைந் துள்ளது. இதற்கான நான்கெல்கைகளும் துலக்கமாகக் கொடுக்க பட்டுள்ளன. அவைகளில் குறிப்பிடப்பட்டு உள்ள வகுத்துக்கால், முகவனை, பொருத்துக்கரை, என்பன இந்த வட்டாரவழக்குகள்.

ஆகும். இந்த ஊரின் ஒருபாதி ஏற்கனவே தானமாக வழங்கப் பட்டுவிட்டதால், இந்தச் செப்பேடு பெற்றவர் இந்த கிராமத்தின் மற்றொரு பாதியினைத்தான் பெற்றார் என்பது வரி 30/33ல் இருந்து தெரியவருகிறது.

அந்தப்பகுதி எது என்பதும் அதனைப் பெற்றவர் யார் என்பதும் அறியத்தக்கதாக இல்லை. அத்துடன் இந்த ஊரில் இருந்து எத்தகைய வரிப்பாடுகள் மன்னரது கடமையாகப் பெறப்பட்டது என்பதும் தெரியவில்லை.

ஆதலால் தானம் வழங்கப்பட்ட பாதிப்பகுதி முழுவதும், விளை நிலங்களை மட்டும் கொண்டது என்பதனை வரி 35 லிருந்து ஊகிக்க முடிகிறது.

# செப்பேடு எண் 75

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீமது மகாமண்டலேவரன் அரியராயிர தளவிபா டன் பாசை
2. க்கு தப்புவராயிரகண்டன் மூவராயிரகண்டன் கண்டனாடு கொண்
3. டு கொண்டனாடுகொடாதான் பாண்டிமண்டலதாபனா சாரியன்
4. சோளமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன் தொண்ட மண்டல சண்டப்பிரசண்
5. டன் ஈளமும் கொங்கும் யாள்பானபட்டணமும் கெச வேட்டை கொ
6. ண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன் ராசமாற்தாண் டன்
7. ராசகெம்பீரன் ராசகுலதிலகன் துட்டரில்துட்ட இளஞ்சிங் கந் தளஞ்
8. சிங்கம் பகைமன்னர் சிங்கம் ஆத்துப்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி
9. தாலிக்குவேலி தொண்டித் துரைகாவலன் வைகைவள நாடன்
10. அரசராவணராமன் அடியார்வேளைக்காறன் பரதளவி பாடன்
11. துரகரேபந்தன் அந்தம்பிறகண்டன் சாடிக்காறர்கண்டன்

ASSI. Vol. IV. pp. 103–104

12. சாமித்துரோகியள் மிண்ட்டன் பனுக்குவார்கண்டன் செம்பி
13. வளநாடன் சேமத்தலைவிளங்குமிருதாளினான் செங்காவிக்
14. குடையான் அனுமத்துவசம் கெருடத்துவசம் சிங்கத்துவசம்
15. மீனத்துவசமுடையவன் திலதநுதல் மடமாதர்மடலெழு
16. — — — — — — — — — — — — — —
17. தவருசுமுகன் பரதநாடகப் பிறவீணன் வலியச்சருவி மதுரை
18. மானங்காத்தான் சத்திய அரிச்சந்திரன் குடைக்கு கர்னன் பரிக்கு
19. நகுலன் அறிவுக்கு அகத்தியன் பொறுமைக்குத் தற்மன் நிதிக்குக் கு
20. பேரன் வில்லுக்கு விசையன் தேவை நகராதிபன் ராமனா
21. தசுவாமி காரியதுரந்தரன் சிவபூசாதுரந்தரன் இவுளி பாவடி
22. மிதித்தேறுவார்கண்டன் பஞ்சபாணாவதாரன்சங்கீதசாயித்
23. திய வித்தியாவினோதன் ஒட்டியர்தளவிபாடன் ஒட்டியர் மோ
24. கந்தவிள்த்தான் துலுக்கர்தளவிபாடன் துலுக்கர்மோகந்
25. தவிள்த்தான் சமரகோலாகலன் சொன்னமொழிமாறாத சுமுகன்
26. அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய துகவூர்க்கூத்தத் துக்க
27. ரத்தூரான குலோத்துங்கசோளநல்லூர் கீள்பால்விரையா
28. தகண்டனிலிருக்கும் ராசாமனிய ராசஸ்ரீ இரணியகெற்பயா
29. சி ஸ்ரீ முத்துராமலிங்க விசைய ரெகுநாத சேதுபதி காத்தத்
30. தேவரவர்கள் பிறிதிவிராச்சிய பரிபாலனம் பண்ணியரு
31. ளாநின்ற ஸ்வஸ்திஸ்ரீ 4884 கலியப்தம் சாலிவாகன சகாப்தம் 1705 இதன்
32. மேல் செல்லா நின்ற சோபகிருதுநாம கலிசவம் ஸம்வத்சரத்தில் உத்தராயணத்தில் கிரீ

33. ஷ்ரிதுவின் மிதுனமாசையில் சுக்கிலபட்சத்து திரயோதெ
34. சியும் அனுசநட்சத்திரமும் சுக்கிரவாரமும் சித்திநாமயோக மும்
35. தை துலாகரணமுங்கூடின சுபயோக சுபதினத்தில் சுத் தோ தக
36. தாராபூர்வமாக தானம் பண்ணினது வரகுண வளநாட்டு பிரம
37. தேசமான ராசசிங்கமங்கலம் கையிலாசநாதசுவாமிகோயில்
38. அற்சனபாகத்துக்கு மந்திரநாதகுருக்கள் புத்திரன் சங்கர லிங்கக்கு
39. ருக்களுக்கு இராசசிங்கமங்கலம்ஊருக்கடைக்குப் பரிவற்த்த னையாக வி
40. ட்டுக்குடுத்த கிறாமமாவது வரகுணவளநாட்டு பிரமதேச மான புவ
41. னேசுவரி புரத்துக்கு பிரதிநாமமான முடித்தனாவயமுளு தும் சஹிரண்
42. ணியோதக தாராபூருவமாக தானம்பண்ணினபடியினாலே
43. ஆண்டுகொள்வாராகவும் முடித்தனாவயலுக்கு எல்கை யாவது
44. கருங்குடி கண்மாய்க்கு மேற்கு சோளந்தூர் வயலுக்கு வடக்கு பொ
45. ன்மாரிவயலுக்கு கிளக்கு அத்தானூர் கண்மாய்க்கு தெற் கு இன்னா
46. ன்கெல்கைக்குள்ப்பட்ட யேந்தல் பிரவிடை மாவடை மேல்நோக்கிய
47. மரம் கீழ்நோக்கிய கிணறு நிதிநிக்ஷேபம் செலதருபாஷாண
48. ஆகாமியஅஷ்டபோகமும் சந்திராதித்யவரைக்கும் தானாதி
49. வினுயாதி விக்கிறையங்களுக்கும் புத்திரபாரம்பரியமா
50. க ஆண்டு அனுபவித்துக்கொள்ளக் கடவராகவும், இந்த தற்மத்
51. துக்கு வாக்குச்சகாயம் அற்தசகாயம் பண்ணினவர்கள் கோடி

52. சிவலிங்கப்பிறதிஷையும் கோடி பிறம பிரதிஷையும் கோடி
53. கன்னிகாதானமும் பண்ணினபலனே அடைவாராகவும் இந்த
54. தற்மத்துக்கு விகாதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையி
55. லே பிறமகத்தியும் ஸ்திரிகத்தியும் கோகத்தியும் பண்ணின பாவத்தி
56. லே போகக்கடவராகவும் ஸ்வதத்தாவி குணம், புண்யம் பரத்ததா
57. நு பாலனம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பிவே
58. து பரிபாலன யோமார்த்தாயே தாநூச்ரயோநு பாலநம்
59. நூநா ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்
60. இந்தப்படிக்கு எளுதினேன் வேலாயுதம் உ கைலா
61. நாத சுவாமி ஸகாயம் உ,

## செப்பேடு எண் 75

(*விளக்கம்*)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி. |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராஜசிங்க மங்கலம் சங்கர லிங்க குருக்கள் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1705 சோபகிருது ஆண்டு மிதுன மாதம் (கி. பி. 13-6-1783) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | மேலேகண்ட குருக்களுக்கு முடித் தனாவயல் கிராமம் சர்வ மான்யம். |

இந்தச் செப்பேட்டை வழங்கிய மன்னரது அறுபத்தி யிரண்டு சிறப்புப் பெயர்கள் இந்தப்பட்டயத்தில் கொடுக்கப் பட்டுள்ளன. நிதிக்குக் குபேரன், சொன்னமொழி மாறாத சுமுகன், என்ற இரண்டு சிறப்புப் பெயர்கள் மட்டும் புதுமை யானவை. ஏனையவை முந்தையச் செப்பேடுகளில் காணப் பட்டவையாகும்.

இராஜசிங்கமங்கலம் கைலாசநாத சுவாமி ஆலயம் எட்டா வது நூற்றாண்டில் வரகுணபாண்டியன் என்ற மன்னரால் நிர் மாணிக்கப்பட்டது. அந்த ஆலயத்தின் பூஜாகரரான சங்கர லிங்க குருக்களுக்கு அதே பகுதியில் உள்ள முடித்தனாவயல் என்ற கிராமம் தானமாக வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இராஜசிங்கமங்கலம் இராஜசிம்ம பாண்டியன் என்ற மன்னரது நினைவாக வழங்கப்பட்ட ஊர்களில் இந்த மங்கலமும் ஒன்று. ஊரின் தென்கிழக்கே ஐந்து கல் தொலைவில்

அமைந்துள்ளது. *முடித்தனாவயல்* பேச்சில்லா கிராமமாக *கொத்த மங்கலம் புவனேஸ்வரிபுரம்* என்றதொரு பெயரும் இருந்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

இந்த ஊருக்கு அண்மையிலேயே ''உலக மகாதேவி''யின் பெயரால் உலகமகாதேவிபட்டினம் என்ற புவனேஸ்வரிபுரம்என்ற இந்த ஊரும் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு ஊர்களும் ராஜராஜ சோழனது பாண்டிய நாட்டுப் படையெடுப் பின் பொழுது ஏற்பட்டனவாகும்.

தானம் பெற்றவர் மன்னரிடமிருந்து வேறொரு கிராம மாகிய ''ஊருக்கடை''யைப் பெற்று இருந்தார் என்பதும் என்ன காரணத்தினாலோ, அதனைக் கொடுத்துவிட்டு முடித்ததனா வயலைப் பெற்றார் என்பதனை வரி. 37ல் உள்ள பரிவர்த்தனை என்ற சொல் தெரிவிக்கின்றது.

## செப்பேடு எண் 77

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜய ரெகுநாத முத்து சேதுபதியவர்கள்
2. செப்பேடு பெற்றவர் : வீரலெட்சுமி நாச்சியார்
3. செப்பேட்டின் காலம் : கி.பி. 1808 அக்டோபர் 4ந்தேதி
4. செப்பேட்டின் பொருள் : பரிந்துரை

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் செப்பேடுகளில் மிகவும் சுருக்கமானதும் சேதுபதி மன்னர்களில் இறுதியான சேதுபதி வழங்கிய இறுதியான செப்பேடு என்ற முறையிலும் வரலாற்றுச் சிறப்புடையதாக உள்ளது. கி.பி. 1600 முதல் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த தன்னரசு மன்னர்களான பதினாறு சேதுபதிகளில் கடைசி மன்னராவிருந்த முத்துவிஜய ரெகுநாத முத்துராமலிங்க சேதுபதியவர்கள் இதனை வழங்கியுள்ளார். இதுவரைக் காணப்பட்ட செப்பேடுகள் அனைத்தும் திருக்கோயில், திருமடம், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் கல்வி, கேள்வி, புலங்களில் சிறந்து விளங்கிய அறிஞர் பெருமக்களுக்கு வழங்கப்பட்ட தானங்களை குறிப்பிடுபவைகள் ஆகும்.

ஆனால் இந்தச் செப்பேடு அவைகளினின்றும் மாற்றமாக சேதுபதி மன்னர் தமது இரண்டாவது மனைவிக்கு பிறக்கவிருக்கும் குழந்தைக்கு அரசு ஆதரவும் சலுகையும் கொடுக்கவேண்டுமென்பதற்காக சென்னை செயின்ட் ஜார்ச் கோட்டைச் சிறையிலிருந்த பொழுது வரைந்து வழங்கிய பரிந்துரையைக் கொண்டது. அந்த மன்னரது இறுதி விருப்பத்தைக் கொண்ட ஆவணமாகவும் இதனைக் கொள்ளலாம். ஏனெனில் அவர் 07-06-1795 முதல் தொடர்ந்து திருச்சிக் கோட்டையிலும் பாதுகாப்புக் கைதி

12. ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன் இரவி குல
13. சேகரன் பனுக்குவார் கண்டன் அந்தம்பர கண்டன் சாடிக் காரர்
14. கண்டன் சாமித்துரோகியள் மிண்டன் துட்டரில் துட்டன்
15. — — — — — — — — — — — — — —
16. துட்டர் கொட்டமடக்கி இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை மன்ன
17. ர்சிங்கம் ஆத்துப்பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங்
18. காத்தான் தாலிக்கு வேலி சத்திராதிகள் மிண்டன் வன் னியராட்
19. டந்தவிழ்த்தான் தொண்டியந்துறை காவலன் துரகரே பந்தன் அ
20. னுமகேதனன் கெருடகேதனன் சிங்ககேதனன் கொடைக்கு கர்
21. ணன் பொருமைக்கு தருமன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசய
22. ன் பரிக்கு நகுளன் அறிவுக்கு அகஸ்தியன் சத்திய அரி சந்திரன் வீரவெம்
23. பாமாலை உபயசாமரம் உல்லாச சல்லாப சங்கீத சாயித்ச் திய வித்தி
24. யாவினோதன் திலதனுதல் மடமாதர் மடலெழுத வரு சுமுகன் விசய
25. லெட்சுமி காந்தன் அரச ராவண ராமன் அடியார் வேளைக்காரன் வீரத
26. ண்டைசேமத்தலை விளங்கு மிருதாளினான் துட்டநிக்கிறக சிஷ்ட பரிபால
27. னன் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் பரதளவி
28. பாடன் மலைகலங்கினும் மனம் கலங்காதான் அன்னசத் திர சோமன்

29. பூலோக தேவேந்திரன் சிவபூசா துரந்தரன் அநேக பிரம் மப் பிரதிஷ்டாபகாரன் செம்பி வ
30. ளநாடன் செங்காவிக்குடையும் அதன்மேல் விருது வெண்க வரியும் பெ
31. ற்றவன் சகலசாம்பிராச்சிய லெட்சுமிநிவாஸன் ராமநாத சுவாமி காரி
32. ய துரந்தரன் தொகவூர் கூத்தத்து காத்தூரான குலோத்
33. துங்க சோளநல்லூர் கீள்பால் விரையாத கண்டனில் விளங்கிய துலாபு
34. ருஷதானாதி சோடச மஹாதான துரந்தரனான ஸ்ரீஹிரண்ய கர்பயாசி இரவி
35. குலசேகர ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் ஸ்ரீ
36. மது முத்துராமலிங்க விசயரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் ஹரி
37. த கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் யஜுஸ்சா காத்தியபரான சேஷாத்ரி அ
38. ய்யங்கார் புத்ரன் கிருஷ்ணய்யய்காருக்கு மேஷசங்கராந்தி புண்யகாலத்தில்
39. ராமநாதபுரத்தில் நிறாவில் சகிரண்யோதக தானபூர்வ மாக பூதான ஸா
40. சனம் பண்ணிக்கொடுத்தபடி பூதான சாசனமாவது கைக் கி நாட்டு பத்
41. தில் செப்பேடு கொண்டானுக்குப் பிரதிநாமமான முத்து ராமலிங்க பூபாலபுரம்
42. நமக்கு தானசாசனம் பண்ணிக் கொடுத்தபடியினாலே இதுக்கு எல்கை
43. யாவது சேதுபாதைக்கு மேற்கு தென்பாற்கெல்கையாவது பத்தனே
44. ந்தலணையாய் வடகரை உள்ளூரணி தென்கரை அரசுக்கு வடக்கு மேற்க
45. ல்கையாவது.......ரத்துக்கு தெற்கு இன்னான்கெல்லைக் குள்ப்ப

47. ட்ட செப்பேடு கொண்டான் கிருஷ்ணய்யங்காருக்கு பூதா ன சகிரன்யோதக தான

48. சாசனம் பண்ணிக் கொடுத்த படியினாலே இதிலுள்ள நஞ்சை புஞ்சை

49. திட்டுத்திடல் மாவடை மரவடை கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய மரம்

50. குட்டம் குளம் குளக்கால் குடிபடை பள்ளு பறை சொர் ணதாயம் நிதி நிஷே

51. ப சலதரு பாஷாண என்று சொல்லப்பட்ட அஷ்ட

52. தேச சுவாமியங்களும் வினிமய விக்கிரயங்களுக்கும்

53. யோக்யமாக புத்திர பவுத்திர பாரம்பரியமாக ஆசந்திரார் க்க ஸ்தாகியாக சந்திர பிரவேசம்

54, வரையும் சந்திராத்திய வரையும் ஆண்டு அனுபவித்து கொள்வாராகவுந் இந்த தர்

55. மத்தை பரிபாலனம் பண்ணினபேர்கள் கோடி சிவலிங்க பிரதிஷ்டையும்

56. கோடி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி கோதானமும் பண்ணின புண்ணிய

57. ம்பெறுவாராகவும் இந்த தருமத்துக்கு அகிதம் நினைத்த பேர் காசி சேதுவில்

58. கோகத்தி பிரமஹத்தி பண்ணின பாவத்தை அடைவாராக வும் உ

## செப்பேடு எண். 76

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : இராமநாதபுரம் கிருஷ்ணஅய்யங்கார்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1706 சோபகிருது (கி.பி. 10-4-1783)
4. செப்பேட்டின் பொருள் : செப்பேடு கொண்டான் என்ற கிராமம் சர்வமான்யம்

இந்த மன்னரது விருதாவளிகளாக அறுபத்து இரண்டு சிறப்புப் பெயர்கள் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளில் ''அநேக பிரம்ம பிரதிஷ்டாபகரன்'' ஒரே ஒரு சிறப்புப்பெயர் மட்டும் புதுமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் நகர் சேஷாத்திரி அய்யங்கார் மகன் கிருஷ்ணண அய்யங்கார் என்பவருக்கு முத்துராமலிங்க பூபாலபுரம் என்ற செப்பேடு கொண்டான் கிராமம் தானம் வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு குறிக்கின்றது. இந்த ஊருக்காக குறிப்பிடப்பட்ட எல்கைகளிலிருந்து இந்த ஊர் இன்றைய இராமநாதபுர மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் இருந்தது தெரிய வருகிறது. ஆனால் இந்த ஊர் இன்று வழக்கில் இல்லை ஆனால் முந்தைய நிலக்கூறான கைக்கி நாட்டில் இருந்ததை ''கைக்கி நாட்டு பத்தில்'' என இச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த தான சாசனம் பெற்ற கிருஷ்ண அய்யங்கார் முத்துராமலிங்க சேதுபதி மன்னரது இரண்டாவது பிரதானி யாக பணியாற்றியவர் என்பதும் இவருக்குச் சின்னப் பிரதானி என்ற பட்டம் இருந்ததும் தெரிய வருகிறது. இவரது முழு உருவச்சிலை இராமேசுவரம் திருக்கோயில் முன்றாவது பிர காரத்தில் கிழக்குப் பகுதியில் காணப்படுகிறது. சின்னப் பிர தானியாக இருந்து ஆற்றிய பணிக்காக சேது மன்னர் இந்த தானத்தை வழங்கியுள்ளார். தானம் வழங்கப்பட்ட ஊரின் நான்கு எல்லைகளும் அங்கிருந்து கிடைக்கப்பெறும் வருவாய்களும் குறிக் கப்பட்டு இருப்பதால், அந்த ஊர் வளமைமிக்கதாக இருந்தது தெரியவருகிறது. இன்னொரு பிரதானியான முத்திருளப்ப பிள்ளையைப் போல இவரும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பினி யாரது ஆதரவாளராக மாறிய காரணத்தால் இவரை மன்னர் சிறையிலிட்டார் என்ற செய்தியும் கும்பினியாரது ஆவணமொன் றில் காணப்படுகிறது.‡

இந்த செப்பேடு முழுவதும்கிரந்த எழுத்துக்கள் விரவி வந்துள்ளன.

‡ Madura District Records. Vol. 1160 (1812) page 56,57

## செப்பேடு எண். 77

(நகல்)

1. இராமநாதபுரம் ஜெமீன் கிரண்ய கர்
2. ப்பயாஜி இரவிகுல முத்துவிசைய ரெகுநாத முத்து
3. ராமலிங்க சேதுபதியவர்கள் தன்பாரி
4. கெற்பவதியாகியிருக்கும் வீரலட்சுமி நாச்
5. சியார் அவர்களுக்கு 1808 வருடம் அக்டோபர் மீ 4ந்தேதி
6. எழுதிக் கொடுத்த சாசனம்
7. 1795ம் வருடம் மார்ச் மீ 4 தேதி நவாபு வாலாசாகி
8. புக்கும் மதராஸ் ஒப்பேர்ட் கவர்னர் துரையவர்
9. களுக்கும் நடந்த உடன்படிக்கை படிக்கும்
10. 1803 ஆம் வரு ஏப்ரல் மீ 5ந் தேதி, 24ந்தேதி
11. யிலும் கவர்மெண்டார் அவர்களா
12. லே பிறத்திருக்கித்திரமான உத்திரவுப்
13. படிக்கும் கர்ப்பவதியாய் இருக்கின்ற என்பாரி வீரல
14. லட்சுமி நாச்சியாருக்கு குழந்தை பிறந்த உ
15. டன் இராமநாதபுரம் ஜெமீனுக்குத் கொண்டு
16. போய் தமக்கை மங்களேஸ்வரி நாச்சி
17. யாரிடம் ஒப்புவித்து கவர்மெ
18. ண்டு பென்சனும் ஜெமீனில் அலவெண்சு
19. ம் சந்ததி பரம்பரையாய் கொடுத்து
20. பாதுகாத்து வரவும்.
21. — — — — — — — — — — — — — —
22. — — — — — — — — — — — — — —
23. — — — — — — — — — — — — — —

---

‡ நூலாசிரியரது கள ஆய்வின் பொழுது இந்தச் செப்பேடு சென்னைபட்டணம் தாம்பரத்தில் உள்ள மன்னர் வழியின ரான திரு சுந்தரசாமித்தேவர் என்பவரிடம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு படி எடுக்கப்பட்டது.

## செப்பேடு எண் 76

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1705 கலியப்தம் 4885 இதன்
2. மேல் செல்லாநின்ற சோபகிருது நாம ஸம்வத்ஸரத்தில் உத்தராய
3. ணத்தில் வஸந்த ருதுவில் சைத்ரமாசத்தில் சுக்கில பட்சத் தில் குரு
4. வாரமும் அஷ்டமியும் புனர்வசு நட்சத்திரமும் சுதர்ம நாம யோகமும்
5. சுபயோக சுபகரணமும் கூடின சுபயோக சுபதினத்தில் ஸ்ரீமது மஹாமண்ட
6. லேசுரன் தேவேந்திராதிபன் ஸேதுமூல ரட்சாதுரந்தரன் அரியாயிர த
7. ளவிபாடன் பாஷைக்கு தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொ
8. ண்டு கொண்டநாடு குடாதான் பாண்டி மண்டல ஸ்தாப நா சாரியன்
9. சோள மண்டல பிரதிஷ்டாப ணாசாரியன் தொண்ட மண்டல சண்டப்பி
10. ரசண்டன் ஈழமும் கொங்கும் யாட்பாண தேசமும் எம் மண்டல மு
11. ங்கெச வேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபர மேசுரன்

‡ A.S.S,I Vol 4 pp. 100 – 101

யாக வைக்கப்பட்டிருந்தார். அவரது முதல் மனைவி இராஜேஸ் வரி நாச்சியாரும் அவரது ஒரேயொரு பெண் குழந்தையும் இராமநாதபுரம் அரண்மனையில் இருந்தனர். அவரது இரண்டா வது மனைவி வீரலட்சுமி நாச்சியார் செயின்ட் ஜார்ஜ் கோட்டை யில் மன்னருடன் வாழ்ந்து கருவுற்ற நிலையில் அவருக்கு பரிந் துரையாக இந்தச் செப்பேட்டினை மன்னர் வரைந்துள்ளார்.

ஆங்கிலேயரது அரசியல் நலன்களுக்கு எதிராக செயல் பட்ட காரணத்தினால் 7-05-1795ம் தேதியன்று அவர்கள் திடீ ரென இராமநாதபுரம் அரண்மனையைக் கைப்பற்றி மன்னரைப் பதவி நீக்கம் செய்தனர். அத்துடன் சிறையிலும் இட்டனர். தொடர்ந்து எட்டு ஆண்டுகள் இராமநாதபுரம் சீமையை அவர் களது நேரடி ஆட்சியில் வைத்திருந்துவிட்டு, கி.பி. 1803ல் மன்னரது தமக்கையார் மங்களேஸ்வரி நாச்சியாரை மறவர் சீமையின் ஜமீன்தாரினியாக நியமனம் செய்தனர்.

ஆங்கிலேயரது பாதுகாப்புக் கைதியாக இருந்த காரணத் தினால் சேதுபதிகளது வழக்கமான விருதாவளிகளெதுவும் இந்த செப்பேட்டில் குறிப்பிடபடவில்லை. செப்பேடு வரி ஒன்றில் இராமநாதபுரம் சீமைக்குப் பதில் ''இராமநாதபுரம் ஜெமீன்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் இந்த காரணத்தினால் தான். மற்றும் வழக்கமான செப்பேட்டு மங்கலச்சொல், சக ஆண்டுக் காலக்கணக்கு ஆகியவைகளும் இந்தச் செப்பேட்டில் காணப் படவில்லை.

மன்னரது உடல்நிலை சீராக இல்லையென்ற காரணத்தி னால் அவர் இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தச் செப்பேட்டில் கையெழுத்திட்டுள்ளார். அத்துடன் சிறையிலிருந்து விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கையும் அவரிடம் இல்லை. ஆதலால் அவரது வாரிசான வீரலட்சுமி நாச்சியாரது குழந் தையை அவரது தமக்கை பராமரித்து வளர்ப்பார் என்ற நம்பிக் கையும் இந்தச் செப்பேட்டு வாசகத்தில் பிரதிபலிக்கின்றது.

தமது குழந்தைக்கான பற்றுக்கோலாக வீரலட்சுமிநாச்சி யார் இந்த ஆவணத்தை மன்னரிடமிருந்து பெற்றதும் அவர் இராமநாதபுரத்திற்கு உடனே திரும்பவில்லை. தமது துணைவ

ரான மன்னரை நலிவுற்ற நிலையில் நிராதவராக சென்னையில் விட்டுச் செல்லவும் மனமில்லாத தயக்க நிலையில் மூன்று மாதங்கள் மனவேதனையுடன் இந்த மன்னருக்கு அருகில் இருந்து ஆறுதல் அளித்து வந்தார். 23-1-1809 மன்னர் இயற்கை எய்தினார். சேதுபதிகளது சிறப்புமிக்க வரலாற்று ஏடு இந்த மன்னருடன் முடிவடைந்தது.

பலமுறையீடுகளை ஆங்கிலேயருக்கு அளித்தும் பலன்களும் காணாது விரக்தியடைந்த நிலையில் வீரலட்சுமி நாச்சியார் 31.10-1809ம் தேதி சென்னையிலிருந்து இராமநாதபுரம் திரும்பினார்.*

* Madurai District Vol 1197 (1809 AD) P. 221.

## செப்பேடு எண். 78

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1651 இதன் மேல் செல்லா நின்ற
2. ஸ்ரீமுக வருஷம் உத்திராயணத்து ஏமந்த ருதுவில் தை மாதம் கிருஷ்ண பட்சத்தில்
3. அமாவாசையும் திங்கட்கிழமையும் திருவோண நட்சத்திர மும் யித்யாதி யோகமும்
4. சககனி கரணமும் இப்படிக்கொத்த சுபதினமான மகோதய புண்ணியகாலத்தில் தேவை
5. நகராதிபன் சேதுமூலரட்சா துரந்தரன் வீரதண்டை
6. சேமத்தலை விளங்கிய தாளினான் சிவபூஜா துரந்தரன் சேதுகாவலன் வங்கிஷாபதியான
7. துகவூர் கூத்தம் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் விரையாத கண்டனிலிருக்கும்
8. இரண்ய கெர்ப்ப யாஜி ரெகுநாத தேவர் புத்திரன் ரெகு நாத தேவர் பத்தினியாகிய
9. காதலிநாச்சியார் பண்ணின தன்மம் ராமேசுவரத்தில் ராம நாதசுவாமி அறக்கட்டளைக்
10. குத் தான சாசன பட்டயம் குடுத்தபடி இந்த தர்மத்திற்கு விட்ட கிராமமாவது
11. செம்பிய நாட்டில் குவளஞ்சாத்தானுக்குக் கிழக்கு நொச்சிப் பொருத்துக்கு வடக்கு

---

நூலாசிரியரது கள ஆய்வில் கண்டுபிடிக்கப் பெற்று படி எடுக்கப்பட்டது.

12. கிழக்கு தெய்வச்ச நல்லூர் காலுக்கும் மேற்கு கடம்பன் குடிக்கு குடவேலிக்கும்

13. தெற்கு இன்னான்கு எல்கைக்குட்பட்ட மேலச்சீத்தையும் அது உண்டாகிய நஞ்சை புஞ்சை

14. மாவடை மரவடை மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும் குடிபடை

15. பள்ளு, பறை சகலமும் சர்வமானியமாக இராமநாத பண்டாரம் பாரிசமாக கட்டளை

16. யிட்ட படியினாலே சந்திராதித்த காலம் வரையிலும் ஆண்டனுபவித்துக் கொண்டு தர்மம் நடத்தி

17. வரக் கடவோமாகவும் இந்த தர்மம் யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணினபேர்

18. சிவலிங்கப் பிரதிட்டை பண்ணின தர்மத்தை அடைவா ராகவும் இந்த தர்மத்திற்கு

19. அகிதம் பண்ணினபேர் கெங்கையிலும் சேதுவிலும் காராம் பசுவையும்

20. மாதா பிதாவையும் பிராமணரையும் வதை பண்ணின தோஷத்திலே போகக் கடவாராகவும்

21. இப்படி சம்மதித்து ரெகுநாதத் தேவர் பத்தினியாகிய காதலிநாச்கியார் பண்ணின

22. தர்மத்துக்கு தான சாசனப் பட்டயம் கொடுத்தோம் ராம லிங்கம் துணை

# செப்பேடு எண் 78

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | ரெகுநாத சேதுபதி காத்த தேவர் தர்மபத்தினி காதலி நாச்சியார். |
| 2. செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில். |
| 3. செப்பேடு பெற்றநாள் | : | சாலிவாகன சகாப்தம் 1615 ஸ்ரீமக வருடம் தை மாதம் (கி. பி. 1693) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில் அறைக் கட்டளைக்குமேலச்சீத்தை என்ற கிராமம் தானம். |

இந்தச் செப்பேடு இராமநாதபுரம் சேதுபதி மன்னரது மனைவி காதலி நாச்சியாரால் வழங்கப்பட்டிருப்பதால் மன்னரது ஏழு விருதுகள் மட்டும் இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. அரசர்கள் மட்டுமல்லாமல் அரசரது பிராட்டிகளும் தான சாசனங்கள் வழங்குவது தமிழக அரசியலில் ஒரு மரபாக இருந்து வந்ததை சோழ, பாண்டிய, நாயக்க வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆனால் சேதுபதிகளது அரச பிராட்டிகள் இத்தகைய செப்பேடுகளை முன்னர் வழங்கியதற்கான செய்திகள் எதுவுமில்லை. அந்த வகையில் இதுவே முதல் செப்பேடாகும்.

இந்தச் செப்பேட்டினை வழங்கிய காதலி நாச்சியார், ரெகுநாத கிழவன் சேதுபதியின் இரண்டாவது மனைவியாகும். இந்தப்பெயர் அரிதாக பெண்களுக்குசூட்டப்பட்டிருக்கிறது. மலையரசன் மகளாக இருந்து தவம் புரிந்து தனது மனம் நிறைந்த

சிவபெருமானையே கணவராகப் பெற்ற காதலியான இறைவி யின் பெயர் இது. ''மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வே'' யென குமரகுருபர சுவாமிகள் இந்த மலைவளர் காதலியைத் தான் பாடியுள்ளார். முழுப் பெயரான மலைவளர் காதலி. அன்பின் பெருக்காக, சுருக்கமாக, காதலி என அழைக்கப் பட்டார். இராமேசுவரம் திருக்கோயில் இறைவியின் பெயரும் மலைவளர் காதலிதான். தாயுமான அடிகள் தமது ''மலைவளர் காதலி பதிகத்தில்'' இந்த அம்மையை பத்துப் பாடல்களில் போற்றிப் பாடியுள்ளார்.

இராமேசுவரம் இறைவியின் பெயரைக் கொண்ட இந்த அம்மையார் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர். இராமநாதபுரம் சீமையின் வடக்குப் பகுதியும், கள்ளர் மிகுதியான அன்பில், கானாடு பகுதிகளின் சிறந்த கள்ளர் தலைவர்களான ரெகுநாத தொண்டமானையும் நமனத் தொண்டமானையும் அவர்களது வீரச் செயல்களுக்காக தமது தளபதிகளாக ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னர் ஏற்றிருந்தார். நாட்டின் ஒருமைப்பாட்டை பேணவும் அமைதிகாணும் முயற்சியாகவும் மறவர் போன்று முக்குலத்தோரின் மற்றொரு பிரிவினரான இந்த கள்ளர் தலை வர்களுக்கு பதவி கொடுத்தும் பின்னர் அவர்களது தங்கையான காதலி நாச்சியாரை திருமணம் செய்ததும் ஒரு முன்னோடி நிகழ்ச்சி.‡ ஆனால் காலப்போக்கில் சேதுமன்னர்களது ஆட்சியை நிலைகுலையச் செய்த பணியில், மதுரை, தஞ்சை, மன்னர்கள் ஆற்காட்டு நவாப் ஆகியவர்களுடன் இவர்களது வழித்தோன் றல்களும் ஈடுபட்டனர் என்பது வரலாறு.

மறவர்களது எட்டுக்கிளைகளில் சிறப்பான செம்பிநாட்டுக் கிளையைச் சார்ந்தவரான சேதுபதி மன்னர், கள்ளர் இனத்துக் காதலி நாச்சியாரைத் துணைவியாக ஏற்றுக் கொண்டதன் விளைவாக மைத்துனர் முறையிலான ரெகுநாத தொண்ட மானது பதவியை உயர்த்தி திருமயம் கோட்டை ஆளுநராக அவரை நியமனம் செய்தார். அப்பொழுது வலம்புரிச் சங்கு, இராமபாணம் என்ற சிறப்பான வாள், ஆகியவைகளை தொண்ட மானுக்கு பரிசுப் பொருளாக சேதுமன்னர் வழங்கியதாக புதுக் கோட்டை வரலாறு தெரிவிக்கின்றது. சேதுபதி மன்னரது மறை

‡ Rajaram Rao T. Manual of Ramrad Samasthanam (1891) p.p. 228-229

விற்குப் பின்னர் திருமயம் கோட்டையை அடுத்த பகுதியில் ''புதுக்கோட்டை'' என்ற தன்னரசு ஒன்றை ரெகுநாத தொண்டமான் அமைத்தார்.

கி.பி. 1710ல் ரெகுநாத சேதுபதி மன்னர் இறந்த பொழுது மன்னரது மனைவிகளும் ஆசை கிழத்திகளுமான நாற்பத்தியேழு பேர் தீப்புகுந்து மரணத்தைத் தழுவிய பயங்கர மான நிகழ்ச்சி இராமநாதபுரம் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் இந்தச் செப்பேட்டை வழங்கிய காதலி நாச்சியார் எரிவாய் புகும் முன்னர் தமது சகோதரர் ரெகுநாத தொண்டமானிடம் பிரியாவிடை பெற்ற உருக்கமான காட்சியையும் இராமநாதபுரம் மேன்யுவல் தெரிவிக்கின்றது.

இந்தச் செப்பேட்டில் தானமாக வழங்கப்பட்டுள்ள மேலச் சீத்தைக் கிராமம் இராமநாதபுர மாவட்டத்தில் இராமநாதபுரம் வட்டத்தில் இராமநாதபுரம் உத்திரகோசமங்கை வழியில் பத்தாவது கல்லில் சாலைக்கு மேற்புறமாக அமைந்துள்ளது. முந்தையச் சமுதாயத்தில் மகளிருக்கு சொத்துரிமை இல்லையென்றாலும், அவர்களது பெற்றோர்களும், கணவரும் வழங்கிய அன்பளிப்புக் காணிகள் ''சிறு தேட்டு'' என்று வழங்கப்பட்டன. அத்தகைய காணிகளைக் கொண்டதாக மேலச்சீத்தைக் கிராமம் இருந்திருக்க வேண்டும். செட்டிநாட்டுப்பகுதியில் இன்றும் ''சிறுதேட்டு'', சிறு தட்டு என்று (அன்பளிப்பு என்ற பொருளில்) வழக்கில் இருந்து வருகிறது. இந்த அரச பிராட்டியார் இராமேசுவரம் சேதுவழிப் பாதையில் அன்னசத்திரம் ஒன்றையும் ஏற்படுத்தி அந்த அன்ன சாலைக்கு அருகிலுள்ள ''எம்மண்டலமும் கொண்டான்'' என்ற ஊரினையும் அந்த அறச்சாலைக்குத் தானமாக வழங்கினார். அந்தக்கிராமம் இன்று ''என் மனம் கொண்டான்'' என்று வழங்கப்பட்டு வருகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்காலப் பாண்டியப் பேரரசராக விளங்கிய மாறவர்மன் சுந்தர பாண்டியரது சிறப்பு பெயர் எம்மண்டலமும் கொண்டான் என்பது நினைவுக்கூரத்தக்கது. அந்தப் பேரரசரது நினைவாக எழுந்த இந்த ஊர் காலப்போக்கில் என்மனம் கொண்டானாக மருவியுள்ளது.

## செப்பேடு எண் 79

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1631 இதின் செல்லா நின்ற விரோ
2. தி நாம சம்வத்ஸரத்தில்தெட்சிணாயணத்தில் சரத்ருதுவில் காரித்திகை மீ'ல் க்ருஷ்ண
3. பட்சத்தில் அமாவாசையும் ஆதித்ய வாரமும் அநுராதா நட்சத்திரமும் பிரிதி நாமயோக
4. மும் நாகவா கரணமும் சுபயோக சுபகரணமும் கூடின புண்ணிய தினத்தில் தே
5. வை நகராதிபன் சேதுமூல ரக்ஷா துரந்தரன் ராமநாத சுவாமி கார்ய துரந்தரன்
6. ராமநாதசுவாமி கார்யதுரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன்
7. பர ராஜ கஜஸிம்ஹம் ரவிகுலஸேகரன் ரவிமாற்தாண்டன் சொரிமுத்து வன்
8. னியன் ஸ்வஸ்திஸ்ரீ மன்மஹா மண்டலேசுவரன் அரியராய தளவிபாடன் பாஷை
9. க்குத் தப்புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
10. ன் பட்டமானங்காத்தான் துட்டாயிர கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவள

---

‡ காரைக்குடி தமிழ்க் கல்லூரி பேராசிரியை திருமதி ந.வள்ளியம்மாள் அவர்களிடம் உள்ளது. இந்தபடி அவர்கள் உதவியது.

11. நாடன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பகை மன்னர் சிங்கம் மதுரை

12. ராயன் ஆத்திற் பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக் கலங் காத்தான் தாலிக்கு

13. வேலி சத்துரு வாதியள்மிண்டன் வன்னியராட்டந் தவிழ்த் தான் மேவலர்கள் கோளரி

14. மேவலர்கள் வணங்கு மிருதாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்தி பிரதாபன் ஆரிய ம

15. ானங் காத்தான் தொண்டியந்துறைக் காவலன் துரகபந் தன் அனுமகேதநன் பாதள

16. விபாடன் குடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் அரசராவண ராமன் அடியார் வேளைக்கா

17. ரன் உரிகோல்சுரதாநன் அந்தம்மபரகண்டன் மூவாயிர கண்டன் சாடிக்காறர் கண்ட

18. ன் ஸ்வாமித் துரோகியள் மிண்டன் பஞ்சவன்னராய ராவுத்தன் பனுக்குவார் கண்டன் இ

19. வுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா

20. ன் பாண்டிமண்டல ஸ்தாபநாச்சார்யன் சோழ மண்டல பிரதிட்டாபநாச்சார்யான்

21. பூர்வ தெக்ஷிண பச்சிம உத்தர சதுர் சமுத்ராதிபதி ஈள மும் கொங்கும் யாட்பான

22. பட்டணமும் கெசவேட்டையாடியருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன் நவகோடி

23. நாராயணன் நவகண்ட சக்ரவர்த்தி மலைகலங்கினும் மனங்கலங்காத கண்டன் கொட்ட

24. மடக்கிவைய்யாளி நாறாயணன் காவிக்குடையான் பரத நாடகப் பிரவீணன் கருணாக

25. டாக்ஷன் காமினி கந்தர்பன் சத்ய பாஷா ஹரிசந்திரன் சங்கீத சாகித்ய பவித்ரவிநோதன்

26. வீர தண்டை சேமத்தலை வணங்கும் மிருதாளினான் சாம்ராஜ்ய லக்ஷ்மி நிவாஸன் சேதுகா

27. வலன் வம்சாதிபனான துகவூர்க் கூற்றத்து கரத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்ப்ப

28. ால் விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீ ஹிரண்யகர்ப்ப யாஜி ரெகுநாதசேதுபதி காத்த தேவரவ

29. ர்கள் புத்ரன் ஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாஜி ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் தர்ம பத்தினியான

30. ராய தொண்டமான் புத்ரி ரெகுநாதராய தொண்டமா னார் சகோதரியான கா

31. தலி நாச்சியாரவர்கள் நானாகோத்ரத்தில் நானா சூத்ரத் தில் நானா சாகாத்யாதிய

32. ளான ஷடமருஷண கோத்ரத்தில் ஆவஸ்தம்ப சூத்திரத் தில் யஜுச்சாகாத்யாதியான

33. குமாண்டூர் வீரம நல்லூரில் இருக்கும் வெங்கடேஸ் வரய்யன் புத்ரன் சங்கரந

34. ாராயணய்யன் முதலாகியனார் பிராமணருக்கு ராமீசுவரத் தில் தனுஷ்கோடிக் கரை

35. யில் அக்ரஹாரத்துக்கு சங்கரநாராயணய்யன் கய்யில் ஸஹிரபோ உதக தாரா

36. பூர்வமாக பூ தாநம் பண்ணிக் கொடுத்தோம் பூமியாவது தேர்போகி நாட்டி

37. ல் களத்தூருக்கு எல்கையாவது கள்ளிக்குடி கண்வாய்க்கு மேற்கு தேர்போகியி

38. ல் தேனாற்றுக்கு வடக்கு கொட்டக்குடி வயலுக்கு கிழக்கு திருத்தங்கூர் பாம்பாற்றுக்குத் தெ

39. ற்கு இந்தப் பெருநான்கெல்லைக்குள்பட்ட களத்தூருக்கு ப்ரதிநாமமான ரெகுநாதராய கா

40. தலி ஆயிபுரம் கணஸங்யை பாகம் 55 இந்த பாகம் இதி லுள்ள நஞ்சை திட்டு திட

41. ல் மாவடை மரவடை கீழ் நோக்கிய கிணறு மேல்நோக் கிய மரம் குள குட்டம் ஏந்தல் பிறவடை

42. பாசி படுகை ஆவிரை கொழிஞ்சி தேன்படு பொதும்பு ஊறணி உடைப்பு மீன்படு பள்ளம்

43. குர்ப்பிணி குளிப்பு இதிலுள்ள பள்வரிப் பலவரி மடத்து வரி வேண்டுகோல் செம்புவிலை

44. காணிக்கை வண்டில் மாடு கொட்டிய எருது சுரவிப்பசு பேடி விலாடம் நீராணி

45. க்கம் யிதிலுண்டான சகலவரியும் தங்களுக்கு சர்வ மான்ய மாகக் கட்டளையிட்ட படியி

46. னாலே யிதிலுள்ள நிதிநிக்ஷேப ஜலதரி பாஷாணாக்ஷின்ய காம்ய சித்த சாத்ய மென

47. ச் சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜஸ்வாம்யங்களும் ஆசந்திராதித்யாதியாகவும் புத்ரபௌத்ரபா

48. ரம்பர்யமாக தானாதி விநிதவிக்ரயங்களுக்கும் யோக்ய மாக ஆண்டனுபவித்து வர

49. வரக் கடவாராகவும் இந்த தர்மத்தை பரிபாலநம் பண் ணின பேர் கோடி சிவலிங்க

50. பிரதிஷ்டையும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின சுகத்தையடைவாராகவும்

51. இந்த அக்ரஹாரத்து யாதாமொருவன் துரோகம் பண்ணி னவன் கெங்கைக் கரையிலெ காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவானாகவும்.

## செப்பேடு எண் 79

(*விளக்கம்*)

1. செப்பேடு வழங்கியவர் : ரெகுநாத சேதுபதி காத்ததேவர் தர்மபத்தினி காதலி நாச்சியார்
2. செப்பேடு பெற்றவர் : வீரமநல்லூர் வெங்கடேஸ்வரய்யன் புத்திரன் சங்கர நாராயணய்யன்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1631 விரோதி ஆண்டு கார்த்திகை மாதம் (கி.பி. 1709)
4. செப்பேட்டின் பொருள் : தனுஷ்கோடியில் அக்ரகாரத்திற்காக கிராமம் தானம்.

இந்தச் செப்பேட்டை வழங்கியவரது கணவர் ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னரது அறுபத்தியிரண்டு சிறப்புப் பெயர்கள் விருதாவளியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் ''பூர்வதட்சணபட்சிம உத்தர சதுர் சமுத்ராதிபதி'' ''நவகண்ட சக்கரவர்த்தி'' ஆகிய இரண்டு விருதுகள் புதியவனாவாக இந்தச் செப்பேட்டில் பயன்படுத்தபட்டுள்ளன. இவை இரண்டும் விஜயநகர மன்னர்களால் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டவை.

இராமேசுவரம் தனுஷ்கோடிக் கரையில் அக்ரகாரத் தர்மமாக இராமநாதபுரம் சீமை தேர்போகி நாட்டு களத்தூர் கிராமத்தின் ஐம்பத்து ஐந்து கன பாகம் மட்டும் சங்கர நாராயண அய்யனுக்கு தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இதனை வழங்கியவர் ரகுநாத கிழவன் சேதுபதி மன்னரது மனைவி காதலி. இன்றைய பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டம் தேவகோட்டை வட்டத்தில் இந்தக்கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் பளவரி, பல்வரி,

மடத்துவரி, செம்பு வரி, காணிக்கை வண்டிமாடு, கோட்டிய எருது, சுரபிப் பசு, பேடி, விளாடம், நீராணிக்கம் என்ற வரிப் பாடுகள் இருந்தவிபரமும் தெரிய வருகிறது. இவைகளில் பள வரி, பல்வரி, மடத்துவரி, கோட்டிய எருது என்ற வரிப்பாடுகள் இராமநாதபுரம் சீமையின் பிற்பகுதிகளில் இருந்து வந்ததை முந்தையச் செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் சுரபிப்பசு, பேடி, விளாடம், நீராணிக்கம் என்பன தேர்போகி நாட்டில் மட்டும் இறுக்கப்பட்ட வரிகள் என தெரியவருகிறது. பால்சுரக்கும் பசு சுரபிப்பசு, மலடாக்கப்பட்ட எருது பேடி காளைமாடுகளின் கால் நகத்தில் பூட்டப்படுவது விலாடம்; நீரி லிருந்து பெறுகின்ற மலர், இலை, கிழங்கு போன்றவை நீரா ணிக்கம்; மாடுகளுக்கான வரி விதிப்பு ஒரே சீராக இல்லாமல் அவைகளின் பயன்பாட்டுக்கு தக்கவாறு வரிவிதிப்பு ஏற்படுத்தப் பட்டிருந்தது. அதனால் கறவைப்பசு, வண்டிமாடு, மலடாக்கப் பட்ட எருது, என அவைகள் வகைப்படுத்தப்பட்டன.

கி. பி. 1291ல் பாண்டி நாட்டிற்கு வருகை தந்த உலகப் பயணி மார்க்கோ போலோ குதிரைகளுக்கு விலாடம் கட்டக் கூடியவர்கள் தமிழ்நாட்டில் இல்லையென்பதாக அவரது பயணக் குறிப்புகளில் வரைந்து வைத்துள்ளார். ஆதலால் பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டுடன் பெருமளவில் குதிரை வணிகம் செய்த அரேபிய முஸ்லீம்கள் மூலம் விலாடம் கட்டும் பழக்கம் முதலில் குதிரைகளுக்கும் பின்னர் எருதுகளுக்கும் ஏற்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். விலாடம் கட்டும் தொழிலுக்கு வரி விதிப்பு ஏற்பட்டதை இந்த ஒரு செப்பேட்டில் தான் காணமுடிகிறது,

தானமாக வழங்கப்பட்ட பிறகு இந்த களத்தூரின் பெயர் ''ரெகுநாத ராய காதலி ஆயிபுரம்'' என வழங்கப்பட்டது. சேதுபதி மன்னரது மனைவி என்ற முறையில் தானம் வழங்கிய வர் காதலி நாச்சியார் ஆனாலும் அவரது இயற்பெயர் காதலி ஆயி என்பது. ''ஆயி'' என்ற விருதி கள்ளர், மறவர் இன பெண்மணிகளைக் குறிப்பதாகும்.

## செப்பேடு எண். 80

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1633 யிதின்மேல் செல்லாநின்ற கரநாம
2. சம்வச்ரத்தில் தெட்சணாயனத்தில் கிரீஷ்ம ருதுவில் கார்த் திகை மாசத்தில் சோம வாரமும் புன
3. ர் பூச நட்சத்திரமும் சித்தநாம யோகமும் பாலாவாகரண மும் கூடின சுபதினத்தில் தேவை
4. வ நகராதிபன் ராமனாத சுவாமி காரியந்துரந்தரன் சிவ பூஜா துரந்தரன் பரராஜசேகரன் பர
5. ராஜ கெசசிங்கம் இரவிகுலசேகரன் சொரிமுத்து வன்னி யன் அரியராய தளவிபாடன் வாக்குத்
6. த் தப்புவாராக் கண்டன் மூவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு 'கொடாதா
7. ன் பட்டமானங்காத்தான் துட்டராயர்கண்டன் புவனேக வீரன் வீரகஞ்சுகன் வீரவ
8. நாடன் பரத வித்யாதரன் இயலிசை வித்யாதரன் வீர வீரமார்த்தாண்டன் பரதள விபாடன் உரி
9. கோல் சுரதானன் அந்தம்பர கண்டன் சாடிக்காரர் கண் டன் சாமித் துரோகியள் மிண்டன்
10. பஞ்சவண்ணராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட் டமடக்கி வையாளி நாராயணன் இவு
11. ளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் இளஞ்சிங்கம் தளஞ் சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரை

---

† கள ஆய்வின் பொழுது நூலாசிரியரால் இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களிலிருந்து படி எடுக்கப்பட்டது.

இந்த நூலின் அச்சுப்பணி தொடங்கிய பிறகு இந்தச் செப் பேடு கிடைத்ததால் இந்த நூலின் பக்கங்கள் 35, 36, 37ல் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பில் இந்தச் செப்பேடு சேர்க்கப் படவில்லை.

12. ராயன் ஆத்தில்பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப்புலி ஐவாப் புலி அடைக்கலங் காத்தான் தாலிக்

13. குவேலி சத்துராதிகள் மிண்டன் வன்னியராட்டந் தவிள்ந் தான் மேவளர்கள் கோன் மேவலர்கள் விள

14. ங்கு மிருதாளினான் வீரகம்பீறன் தொண்டித்துறை காவலன் துரகரேவந்தன் அனுமகேதனன் மீன

15. கேதனன் கொடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் குன்றனை மேருவிற் குன்றா வளைகுணில் பொறித்த

. வன் திலதநுதல் மடமாதர் மடலெழுதவரு சுமுகன் விசய லட்சுமி காந்தன் சகலகலாவிற்பன்

17. னன் காமினி கந்தர்ப்பன் அட்டதிக்கு மனோபயங்கரன் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலன் வீர

18. தண்டை சேமத்தலை விளங்குமிருதாளினான் சேது காவலன் வங்குசாதிபனான துகவூர் கூத்தத்து

19. காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரை யாத கண்டனிலிருக்கும் இரண்ய கர்ப்ப யாஜி

20. ரெகுநாத தேவர் மருமகன் செம்பிநாட்டிலே திருஉத்தர கோச மங்கையிலிருக்கும் கடம்பத்

21. தேவர்புத்திரன் விசயரகுநாத சேதுபதி சகோதரரான முத்து வயிரவநாத தேவரவர்கள் கிடா

22. ரத்திலிருக்கும் சாந்தபிள்ளை புத்திரன் ராமாயணப் பிர சங்கம் சர்க்கரை புலவருக்கு இரா

23. ம சுவாமி சன்னதியில் வேதபாரகரும் இயலிசை நாடகத் தமிழ் வித்யாதரரும் கூடிய சபையில்

24. இராமயண பிரசங்கத்துக்குப் பரிசாக ராமசாமி பட்டாபி சேகத்தில் கட்டளையிட்ட கிராமமாவது

25. வெள்ளாம்பத்தில் சாத்தணி வயலுக்கும் ஏம்பல் குளத்து காலுக்கும் தெற்கு மஞ்சக்குடி புற

26. வாகிய வலையன் வயலுக்கும் கீழ்காவனூருக்கும் கிளக்கு விளத்தூருக்கு மேற்படியூர் புறவா

27. கிய பொத்தையன் வயலுக்கும் வடக்கு ஆசான் வயலுக் கும் ஏம்பல் குளத்துக்கும் மேற்கு யின்னாங்

28. கெல்கைக்குட்பட்ட கொட்டகுடி கொந்தலான் வயல் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத்திடல் மேல்
29. நோக்கிய மரம் கீள்நோக்கிய கிணறு நீரும் பாசிகுடிபடை பள்ளு பறை இறைவரி ஊழியம் உலுப்
30. பை சகலசமுதாயப் பிராப்திகளும் நிதிநிஷேபம் சலதரு பாஷண விருத்விஷத் என்று சொல்லப்பட்ட
31. அஷ்டபோக தேச ஸ்வாமியங்களும் தான விக்கின வினி யோகங்களுக்கு யோக்யமாக சந்திரார்க்க
32. சந்ததி பிரவேசம் புத்திர பவுத்திர பரம்பரையாக சர்வ மான்யமாக ஆண்டனுபவித்து கொள்ளவும்
33. இந்த தருமத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலேயும் மற்ற புண்ணிய
34. த் தலங்களிலேயும் பெரியோர்கள் சன்னிதானங்களிலேயும் ரரமசுவாமி சரித்திரங்களாகிய இராமாயணத்தை
35. கேள்வியானவர்கள் எந்தப்பலனை அடைவார்களோ அந்த பலத்தை அடைவாராகவும் இந்த தருமத்துக்கு
36. அகுதம் பண்ணின பேர்கள் ராமசுவாமி சரித்திரத்தை யசாத்தியமாக நினைத்தவர்கள் போகின்ற தோசத்தி
37. லேயும் கங்கைகரையிலேயும் தனுக்கோடி கரையிலேயும் ராமபக்தரையும் சிவபக்தரையும் இம்மிசை பண்ணின
38. தோசத்தை அடைவாராகவும்

*இறுவரம்பில் இராமன் என்றோர் உம்பர்*
*நிறுவர் என்பது நிச்சயம் ஆதலான்*
*மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்*
*பெறுவர் என்பது பேசவும் வேண்டுமோ!*

## செப்பேடு எண் 80

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | சேதுபதி மன்னரது தமயனார் முத்து வயிரவநாதத் தேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | பொன்னெட்டி மாலை சக்கரைப் புலவர் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாஹன சகாப்தம் 1633 கர வருடம் கார்த்திகை மீ" (கி,பி. 1711) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | புலவருக்கு கோடகுடி கொலன் வயல் என்ற கிராமம் தானம் |

இந்தச் செப்பேட்டில் இராமநாதபுரம் மன்னரது விஜயரகுநாத சேதுபதியின் விருதாவளியாக ஐம்பத்து ஏழு சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் பரத வித்யாதரன் இயல் இசை வித்யாதரன் என்ற இருவிருதுகள் மட்டும் புதியனவாகவும் அமைந்துள்ளன.

இந்தச் செப்பேடு அந்த மன்னரது மையனாரால் வழங்கப் பட்டிருப்பதால், இதனை அரசவழியினர் செப்பேடாக கொள்ளப் பட்டுள்ளது. கி.பி, 1710ல் ரெகுநாத கிழவன் சேதுபதி காலமான பொழுது ஏற்பட்ட அரசியல் நெருக்கடியினால் அவரது தங்கை மக்களில் மூத்தவரான முத்து வயிரவநாதத்தேவர் புறக்கணிக்கப்பட்டு இளையவரான திருவுடையாத் தேவர், விஜய ரகுநாத சேதுபதியாக பட்டம் சூட்டப்பெற்றார். என்றாலும், முத்து வயிரவ நாதத்தேவர் தமது தம்பியின் ஆட்சிக் காலத்தில் மிகவும் பொறுப்பான பதவி ஒன்றிலிருந்து இந்தச் செப்பேட்டினை வழங்கியுள்ளார்.

கிடாரம் கொண்டான் என்ற மறவர்சீமை ஊரினைச் சேர்ந்த சாந்தப் பிள்ளை மகன் சர்க்கரைப் புலவருக்கு கோடகுடி கொந்தலான் வயல் என்ற ஊரினை தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தப்புலவரது இயற்பெயர் அறியத் தக்கதாக இல்லை. இவரது கண்டிலும் இனிய கம்பராமாயண சொற்பொழிவுத் திறனுக்காக சர்க்கரை என்ற இனிய பெயர் இவருக்கு வழங்கப்பட்டது. சேதுபதி மகிழ் சர்க்கரை கவிராஜ சிங்கம் என்ற புலவரது சீட்டுக் கவித்தொடர் இதனை உறுதிப் படுத்துகிறது. ஏற்கனவே இந்தப் புலவருக்கு சேதுபதி மன்னர் உளக்குடி என்ற ஊரினை முற்றுாட்டாக வழங்கி இருந்தார்.

இராமேசுவரம கோயில் இராமநாதசுவாமி திரு முன்னர் கம்ப இராமாயண சொற்பொழிவினை மிகச் சிறப்பாக இராம பட்டாபிஷேக நிகழ்ச்சியுடன் முடித்த பொழுது, அறிஞர் பெரு மக்கள் கூடியிருந்த அந்த அவையில் இந்த தான சாசனம் வழங்கப்பட்டு புலவர் சிறப்பிக்கப்பட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. (வரி 23-24) திருமலை ரெகுநாத சேதுபதி ஆட்சிக் காலத்திலிருந்து தமிழ்ப்புலவர் பெருமக்களது கொடை மடமாக சேதுபதி ஆதீனம் விளங்கி வந்துள்ளது. புத்தம் புதிய இலக்கியப் படைப்புகளுக்காக புலவர்கள் பல ஊர்களை பரிசி லாகப் பெற்றனர். ஆனால் கன்னல் தமிழில் கேட்போர் சிந்தை யும் செவியும் இனிக்கும் கம்ப இராமாயண சொற்பொழிவுக்கு ஊரினை பரிசிலாக வழங்கிய ஒப்புவமை இல்லாத தமிழ் உள்ளம் சேதுமன்னர்களுக்கு மட்டும் தான் இருந்தது.

முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் கம்ப மகா கவியின் காவியம் எந்த அளவில் சேதுநாட்டில் போற்றப்பட்டது என்ப தற்கு சிறந்த சான்றாகவும் இந்த தானம் அமைந்துள்ளது. இந்தப் புலவர் திருச்சீர் அலைவாய் முருகன் மீது திருச்செந்தூர் கோவை ஒன்றையும் படைத்துள்ளார். இவரது வழியினர் அனை வருமே புலவர்களாக விளங்கி வந்துள்ளனர்.

தானமாக வழங்கப்பட்ட கோடகுடி கொத்தலான் வயல் கிராமம் இன்றைய திருவாடனை வட்டத்தில் கொட்டகுடி என்ற பெயரில் வழங்கி வருகிறது. இந்தச் செப்பேட்டின் காப்புரையில் (வரி 34-37) ''ராமசுவாமி சரித்திரத்தை யசாத்தியமாக நினைத் தவர்கள்'' என்றும் ''இராமாயணத்தை கேள்வியானவர்கள் எந்தப் பலனை அடைவார்களோ'' என்றும் குறிப்பிட்டிருப்பது ஒரு புதுமையான காப்புரை ஆகும்.

## செப்பேடு எண். 81

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | முத்து வயிரவநாதத் தேவர் |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | அழகர்மலை திருமலையாண்ட திருவேங்கடாச்சாரியார் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சகம் 1634 நந்தன ஆண்டு ஆஷாட மாதம் (கி.பி. 22-07-1712) |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | அழகர் மலையில அன்ன தானம் ஊரணி தர்மங்களுக்கு கிராமங்கள் தானம் |

இந்தச் செப்பேட்டினை வழங்கியவர் முத்து விஜய ரகுநாத சேதுபதியின் சகோதரர் முத்து வயிரவநாதத்தேவர் ஆவார். இவர் திரு. உத்தரகோசமங்கை கடம்பத்தேவர், மகனும் முத்து விசயரகுநாத சேதுபதி மன்னரது தமையனார் என்பதை செப் பேட்டின் வரி 7 புலப்படுத்துகிறது. இவரது பதவியைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாவிட்டாலும் அன்றைய அரசு நிர்வாகத் தில் பல புதிய மாறுதல்களைப் புகுத்திய முத்து விசைய ரெகு நாத சேதுபதி மன்னர் தமது அதிகார வரம்புகளை பரவலாக்கி தமது சகோதரருக்கும் உயர் பதவி ஒன்றினை வழங்கியிருக்க வேண்டுமென ஊகிக்கப்படுகிறது.

அழகர் மலையில் அன்னதானம் மேற்கொள்ளவும் அங்கு வருகை தருகின்ற பயணிகளுக்கு உபயோகமாக அழகர்கோவிலி லும், அப்பன் திருப்பதி என்ற இடத்திலும் ஊரணி தர்மம் ஏற் படுத்தவும், ஆய்க்குடி சுந்தனாவூர் ஆகிய இரண்டு கிராமங் களை தானம் வழங்கியதை இந்த செப்பேடு தெரிவிக்கின்றது. குறிப்பாக ஆண்டுதோறும் சித்திரை பௌர்ணமியில் இங்குள்ள

8. ன்ன ராயராகுத்தன் பனுக்குவார் கண்டன் கொட்டமடக்கிய வையாளி னாராயணன் இவுளிபாவடி மிதித் தேறுவார் கண்டன் இளஞ்சிங்கம்

9. தளஞ்சிங்கம் வன்னியராட்டந் தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிரு தாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்திப் பிறதாபன்

10. ஆரியர் மானங் காத்தான் தொண்டியந்துறை காவலன் துரகரேவந்தன் அனுமகேதனன் கொடைக்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரத நாடக

11. ப்பிறவீணன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவிற் குன்றாய் வளைகுணில்ப் பொறித்தவன் திலதநுதல் மடலெழுத வருசு

12. முகன் காவிக் குடையான் விசயலட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பன்னன் காழிநகர் காமன் அட்டதிக்கு மனோபயங்கரன் துட்டர்

13. நிக்கிரக சிட்டர்பரிபாலன் சங்கீத சாகித்ய வித்யா விநோதன் வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் சகல சாம்ராஜ்ய ல

14. ட்சுமி நிவாசன் சேதுகாவலன் வீரபிரதிபனான துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்சு சோழநல்லூர்க்கீ

15. ல் விரையாத கண்டனிலிருக்கும் உறிரண்ய கர்ப்பயாஜி விசய ரகுநாத சேதுபதி தேவரவர்கள் ஜேஷ்டன் திருவுத்தரகோ

16. சமங்கையிலிருக்கும் கடம்பத்தேவர் அவர்கள் புத்ரன் முத்து வயிரவநாதத்வேவர் அவர்கள் அழகர் திருமலையிலிருக்கும் காசிய

17. ப கோத்திரத்தில் ஆஸ்வலாயன சூத்ரத்தில் ரிக் சாகாத்யாயியாய ஸ்ரீமது வேதமார்க்க பிறதிஷ்டாபனாசாரியன் உபய வேதாந்தாசா

18. ரியராயெழுந்தருளியிருக்கிற திருமாலையாண்ட திருவேங்கடாச்சாரியார் அவர்களுக்கு பூருவா

19. பூறுவமாக நடந்துவந்திருக்கும் ஆய்க்குடி சுந்தனாவூரில் அர்த்த மானிபம் அரமணையை சார்ந்து நடந்து வந்தபடியினாலே அந்

20. த அர்த்த மானிபத்தில் வருகிற பலபாகத்தை கவரமி அழகர் கோ

21. விலுக்கும் அப்பன் திருப்பதிக்கும் மான்யத்திலே தடாகப் பிரதிஷடைப் பண்ணிவித்து தடாகம் வெட்ட வேண்டியது க்கு அந்த இ

22. ரண்டு கிராமப் பலவரிச் சொன்னாதாயம் வெட்டிவரி உண்டானதை வருஷத்குக்கு வருஷம் தடாகம் வெட்டு வித்துவரச் சொல்லி

23. யும் சகிரோண்யதக தாராபூர்வமாக தானம்பண்ணிக் கட் டளையிட்ட படியினாலே ஆசந்திராக்கஸ்தாகியாய் சந்தி ரப் பிரவேசம் புத்ர

24. பௌத்ர பாரம்பரையாய் தன்ம பரிபாலனம்பண்ணி ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவராகவும் இந்த தர்மத்தை யாதா

25. மொருவர் பரிபாலனம் பண்ணிணபேர்கள் காசியிலேயும், சேதுவிலேய்யும் கோடி பிரம்ம பிரதிஷ்டையும் கோடி தேவ பிரதிஷ்டையும் ப

26. ண்ணின பாக்கியத்தை அடைவார்கள் இந்த தம்மத்தை யாதாமொருவர் அகுதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலே

27. யும் சேதுவிலேயும் மாதா பிதாவையும் குருவையும் காராம் பசுவையும் பிராமணரையும் வதைபண்ணின தோஷத்தி லேயும் போவாராகவும்

*இரண்டாம் பக்கம்*

28. ஸ்வதித்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம்

29. பரதத்தாப ஹாரோ ஸ்வதத்தம் நிஷ்பலம் பாவேத் உ

30. நாத பாலந யோர்மத் யேதானா ச்ரேயோநு பாலநம் தா

31. நாத் ஸ்வர்க்கம் அவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்

32. இந்த சாசனம் எளுதினேன் காமங்கோட்டை உடையினா பிள்ளை

33. புத்ரன் ராயசம் முத்து ஆதினாறாயண பிள்ளை தாளை பத்திரப்படிக்கு விசுவநாத

34. ஆசாரி புத்திரன் முத்தப் பாசாரி எழுத்து உ

# செப்பேடு எண். 81

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1634 இதன்மேற்ச் செல்லாநின்ற நந்தன நாம சம்வத்சரத்தில் தெட்சணா யனத்தில் கிருஷ்ம ரு
2. துவில் ஆஷாட மாசத்தில் கிருஷ்ண பட்சத்தில் அமா வாசியும் அங்காரக வாஸரமும் புஷ்ய நட்சத்திரமும் சோப நநாம யோகமும் பால
3. வாகரணமும் கூடின புண்ணிய காலத்தில் தேவை நகரா திபன் சேதுமூல ரட்சா துரந்தரன் ராமநாதசுவாமி காரிய துரந்தரன் சிவபூஜா துரந்
4. தரன் பரராசசேகரன் ராஜகெஜசிங்கம் ரவிகுல கோத்ரன் ரவிவர்ம சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமந் மகா மண்டலேசுவரன் அ
5. ரியராய தள விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் பட்ட
6. மானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேகவீரன் வீர சத்தீசுரன் வீரவளனாடான் வேதியர் காவலன் அரச ராவண ராமன் அடியா
7. ர் வேளைக்காரன் பரதள விபாடன் உரிகோல் சுரதாணன் அந்தம்பர கண்டன் சாடிக்காறர் கண்டன் சுவாமி துரோ கியள் மிண்டன் பஞ்சவ

---

‡ அழகர் திருக்கோயில் தேவஸ்தானத்தில் உள்ளது இந்தச் செப்பேடு

அழகர் மதுரைக்கு எழுந்தருளுவதை ஒட்டி அங்கு கூடுகின்ற பெருந்திரளான மக்களது நன்மைக்காக இந்த தர்மம் ஏற்படுத்தப் பட்டது. இதே வயிரவனாத தேவரது புண்யமாக திருவாடானை திருக்கோயில் ''புஷ்கரணி'' திருக்குளம் ஆழப்படுத்தப்பட்ட கல்வெட்டுச் சேய்தியும் உள்ளது.‡ இது கி.பி. 1720ம் ஆண்டு நிகழ்ச்சியாக இருப்பதால் தொடர்ந்து தமது சகோதர மன்னருக்கு இவர் துணையாக இருந்து வந்தவர் என்பது தெளிவாகிறது.

இந்த இரு கிராமங்களின் வருவாயில் பகுதியை- அர்த்த பாகத்தை அனுபவித்து வந்த அழகர் திருமலையைச் சேர்ந்த உபய வேதாந்தாச்சாரியான திருமலையாண்ட திருவேங்கடச் சாரியாரே இந்த தானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த கிராமங்களின் அர்த்தபாகத்தை இந்த பரம வைஷ்ணவர் எந்த மன்னரிடமிருந்து பெற்றுக்கொண்டார் என்பது அறிய தக்கதாக இல்லை. செப்பேட்டில் பூர்வாபூர்வமாக அனுபவித்து வருகின்றனர் என்ற விபரம் தெரியவருகிறது. இந்த செப்பேட்டில் கண்ட இரண்டு ஊர்களும் இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் வைகை ஆற்றின் தென்கரையில் உள்ளன. இந்த ஊர்களிலிருந்து இறுக்கப்பட்ட பல வரி, வெட்டி வரி, சொர்ண ஆதாயம் ஆகிய வருவாய்களைக் கொண்டு ஆண்டுதோறும் ஊரணி தர்மம் நடத்தப்பட வேண்டும் என்ற நியதியையும் இந்தச் செப்பேட்டில் காணமுடிகின்றது. சேது நாட்டுக்கு வெளியே சேதுபதி மன்னர் மேற்கொண்ட அன்ன சத்திரப்பணி இது ஒன்று மட்டும்தான்.

சிவபூஜா துரந்தரரான சேதுமன்னர்களும் இவர்களது வழியினரும் அவர்கள் வழிபடும் இறைவனுக்கு மட்டுமல்லாமல் வைணவ திருக்கோயில்களுக்கும் இத்தகைய கொடையினை வழங்கி இருப்பது அவர்களது சமயப் பொறைக்கும், சமரச நோக்கிற்கும் ஏற்றதொரு எடுத்துக் காட்டாகும்.

‡ A. R. 436 / 1914 திருவாடானை திருக்கோயில்.

## செப்பேடு எண் 82
(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1651 இதன்மேல் செல்லாநின்ற சௌமி
2. யநாம சம்வச்ரத்து உத்தராயணத்து ஏமந்த ரிதுவில் கிருஷ்ணபட்சத்தில்
3. அமாவாசைப் புண்ணியகாலத்தில் உத்திராடத்தில் சௌமிய விசாகத்தில் தேவை நக
4. ராதிபன் சேதுமூலரட்சா துரந்தான் சிவபூஜா துரந்தரன் இராமநாதசுவாமி காரி
5. யதுரந்தரன் பரராஜ சேகரன் பரராசகெச சிங்கம் இரவிகுல சேகரன் இரவிவர்மன் சொரிமுத்
6. துவன்னியன் வீரஸ்ரீ மகாமண்டலேசுரன் அரியராயிர தளவிபாடன் பாசைக்குத்
7. தப்புவராயிர கண்டன் மூவாயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட
8. நாடு கொடாதான் பட்டமானங் காத்தான் துட்டராயிர கண்டன் புவனேக வீரன் வீ
9. ரகஞ்சுகன் வீர வளநாடன் வேதியர் காவலன் அரச ராவண ராமன் அடியார்
10. வேளைக்காரன் அந்தம்பிர கண்டன் சாமித் துரோகியள் மிண்டன் பஞ்
11. சவர்ணராய ராகுத்தன் பனுக்குவார் கண்டன் விசைய லட்சுமி காந்த
12. ன் கலைதெரியும் விற்பனன் காமினி கந்தர்ப்பன் சத்ய பாஷா அரிச்சந்திரன்

13. வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளினான் விக்கிர மார்க்கன்

14. கீர்த்திப் பிரதாபன் வைகை வள நாடன் கொட்டமடக்கி வையா

15. ளி நாராயணன் இவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீர வெண்

16. பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் ம

17. தப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்குவேலி சத்ருராதி யள்மிண்

18. டன் வன்னியராட்டம் தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவ

19. லர்கள் வணங்குமிரு தாளினான் கீர்த்திப் பிரதாபன் ஆரிய மானங்காத்தா

20. ன் தொண்டியந்துறைக் காவலன் துரகரேபந்தன் அனும கேதனன் கொடை

21. க்குக் கர்ணன் பரிக்கு நகுலன் பரதநாடக விற்பனன் கருணா கடாட்சன்

22. ன்சங்கீத சாகித்ய வித்யா வினோதன் சகலகலா வல்லவன்

23. லெட்சுமி நிவாசன் சேதுகாவலன் வங்கிஷாதிபன் துகவூர் கூத்தத்து

*இரண்டாவது பக்கம்*

24. காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீழ்பால் விரை யாத க

25. ண்டனிலிருக்கும் ஸ்ரீ இரண்ய கெர்ப்ப யாஜி சேது பதி காத்த ரெகுநாத

26. தேவர் புத்திரன் சேதுபதி காத்ததேவர் முத்துவிசைய ரெகுநாததேவர் தம்

27. பி முத்துரெகுநாத சேதபதி காத்ததேவர் சுவாமி தெய்வச் சிலை பெருமா

28. ள் சுவாமிக்கு பட்டகாணிக்கைக்கு விட்ட கிராமமாவது ஆதங் கொத்தங்கு

29. டியில் பிரமதாயம் ஒரு பங்கு நீங்கலாக சீவிதமான பங்கும் அந்தவூர்

30. மடை குழி ஏந்தல்களும் சுவாமி தெய்வச்சிலை பெருமாளுக்கு தான பூர்வமாக

31. தாம்பிரசாதன பட்டயமும் கட்டளையிட்ட ஆதன் கொத்தங்குடிக்கு

32. எல்கையாவது கீழ் எல்கை ஓநாய் பொட்டலுக்குக் கிழக்கு தென் எல்கை ஆ

33. லங்குளத்துக்கு வடக்கு மேல் எல்கை மருதம்பீக் குளத்துக்கு தெற்கு வட எல்கை ஆ

34. ... ... ... திடலுக்குத் தெற்கு பூசரி, கடம்போடை, கண்ணாகுடி ஆய்க்குடி, கள்ளியடந்த

35. ல் நஞ்சைப்புல்லான் கீழ்விடந்தை, மேலவிடந்தை சிவகுளம், ஆனைகால், பெரி

36. ய எலை, சின்ன எலை. கனகத்திரளாக இன்னான்கெல்கைக்குட்பட்ட மாவடை

37. மரவடை, திட்டு, திடல், கீழ் நோக்கிய கிணறு, மேல் நோக்கிய மரமும் தான பூர்

38. வமாக சுவாமி தெய்வச்சிலை பெருமாளுக்கு விட்டபடி யதனாலே இதுக்கு விக்கி

39. னம் பண்ணினபேர்கள் கெங்கைக் கரையிலேயும், சேதுக் கரையிலும் காராம் ப

40. சுவை கொன்ன தோஷத்திலேயும் விரும்மகத்தி பண்ணின தோஷத்திலே

41. யும் விசுவாச பாதகம் பண்ணின தோஷத்திலேயும் கத்தத துரோகம் பண்ணின

42. தோஷத்திலேயும் மாதா பிதாக்களை நிந்தாக்கினை பண்

43. ணின தோஷத்திலேயும் நம்பினாரைச் சதித்த தோஷத்திலேயும் தெய்வத்

44. த் துரோகம் பண்ணின தோசத்திலேயும் இப்படி மகா பாதகங்க

45. ள் பண்ணின தோஷத்திலேயும் போகக் கடவார்களாகவும்

46. இதுவும் ராஜாக்கள் முன்னிலையாக சுவாமி தெய்வச்சிலை பெருமாளுக்கு

47. விட்ட கிராமம் ஆதங்கொத்தங்குடி

# செப்பேடு எண் 82

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் ; முத்து விஜய ரெகுநாத சேதுபதி தம்பி முத்து ரெகுனாத சேதுபதி
2. செப்பேடு பெற்றவர் : திருப்புல்லாணி திருக்கோயில்
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1667 சௌமிய ஆண்டு தை அமாவாசை நாள் (கி.பி. 1729)
4. செப்பேட்டின் பொருள் : திருப்புல்லாணிசுவாமி தெய்வ சிலை பெருமாளுக்கு ஆதன் கொத்தங்குடி கிராமம் தானம்

இந்தச் செப்பேட்டிலும் இந்த மன்னரது தமையனார் முத்து விஜய ரெகுனாத சேதுபதி மன்னரது அறுபது விருதாவளிகள் மட்டும் கொடுக்கப்பட்டு உள்ளன. சேது மன்னராக பதவியேற்றதுடன் சேதுபதிகள் தங்களது வழிபடு தெய்வத்திற்கு காணிக்கையாக ஊர் அல்லது நிலத்தினை மான்யமாக வழங்குவதை ஒரு மரபாக பேணி வந்தனர். அதனை ஒட்டி இந்த மன்னர் திருப்புல்லாணி தலத்து தெய்வச்சிலை பெருமாளுக்கு ஆதன் கொத்தங்குடி கிராமத்தின் பிரமதாயம் பங்கு ஒன்று நீங்கலாக எஞ்சிய சீவிதமான பங்கினையும் இந்தக் கிராமத்தின் மடை, குழி, ஏந்தல்களையும் சர்வமான்யமாக கட்டளையிட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இந்தக் கிராமம் இன்றைய முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது.

பிரமதாயம் என்பது பிராமணர்களுக்காக வழங்கப்படும் காணியாகும். அதனைப் ரோன்று அரசுப் பணியில் சிறந்த சேவை செய்த போர்வீரனுக்கோ அல்லது அந்த வீர மரணமெய்

திய அந்த வீரனது குடும்பத்தினருக்கோ வாழ்நாள் முழுவதும் அனுபவித்துக் கொள்வதற்காக வழங்கப்படும் நிலக்கொடை சீவிதம் ஆகும். ஆதன்கொத்ததங்குடி கிராமத்தில் அத்தகைய ஒரு குடும்பத்தினரின் அனுபவத்திலிருந்து அவர்களது வாழ்க்கைக்குப் பின்னர் அரசுக்கு சொந்தமாயிருந்த அந்தப் பகுதியை இந்தச் செப்பேட்டின் மூலம் மன்னர் சர்வமானியமாக வழங்கியுள்ளதை ''ஜீவிதம்'' என்ற சொல் குறிப்பிடுகிறது.

தானம் வழங்கப்பட்ட கிராமத்தின் நான்கு எல்கைகளாகக் குறிக்கப்பட்டுள்ள ஆலங்குளம், மருதங்குளம், பூசரி, கடம்போடை கண்ணாகுடி, ஆய்க்குடி, ஐங்கலப்புல்லாணி, கீழ் விடத்தை, மேல்விடத்தை, ஆனைகால், பெரிய இலை, சின்ன இலை, ஆகியன இன்றும் வழக்கில் உள்ளன. பூசொரி பூசேரி என்றும் பெரிய இலை, சின்ன இலை, பெரிய ஏழை, சின்ன ஏழை என விகாரம் பெற்றுள்ளன. மொத்த தொகுப்பு என்ற பொருளில் ''கனகத்திரள்'' (வரி 36) என்ற சொல் குறிக்கப்பட்டு இருப்பது அருமையான முந்தைய வழக்கு. அத்துடன் திருப்புல்லாணி திருக்கோயில் இறைவர் பெயர் தெய்வச்சிலை பெருமாள் நாயனார் என்ற நல்ல தமிழ்ப்பெயரில் வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. அதே பெயர் இன்று ''ஆதி ஜகந்நாதப் பெருமாள்'' என வழங்கப்படுகிறது. தானம் வழங்கப்பட்ட ஊர்ப் பெயர் ''ஆதன்'' கொத்தன்குடியில் உள்ள ''ஆதன்'' முதுகுளத்தூர் வட்டத்தில் மட்டும் வழக்கில் இருக்கிறது. ஆதன் தந்தை தான் ஆந்தை என மருவி ஒலிக்கின்றது. பிசிர் ஆந்தையரது பிசுர்க்குடியும் இந்தப் பகுதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## செப்பேடு எண் 83

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹந ஸகாப்தம் 1651 இதன் மேற் செ
2. ல்லா நின்ற சவும்மியநாம ஸம்வஸ்ரத்தில் உத்தரா யணத்தில் யேமந்
3. தரிதுவில் தைய் மாசத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் அம்மா வாசையும் புத
4. வாரமும் உத்திராட நக்ஷத்திரமும் சுபயோக சுபகர்ணமும் பெற்ற தைய
5. ம்மவாசை புண்ணிய காலத்தில் தேவைநகராதிபன் சேது மூலரக்ஷா
6. துரந்தரன் சிவபூசா துரந்தரன் ராமனாத சுவாமி காரிய துரந்தரன்
7. பரராசகெச சிங்கம் பரராசசேகரன் இரவிகுல சேகரன் ரவி வற்
8. மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலேஸ்வர
9. ன் அரியராயிர தளவிபாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன்
10. மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொ
11. டாதான் பட்ட மானங்காத்தான் துட்டாயிர கண்டன் புவனேக வீர

‡ இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம் இராமநாதபுரம்.

12. ன் வீர கஞ்சுகன் வீரவளனாடன் வேதியர் காவலன் அரச ராவண
13. ராமன் அடியார் வேளைக்காறன் அந்தம்பிற கண்டன் சாமித் தூரோ
14. கியன்மிண்டன் பஞ்சவற்ணராய ராவுத்தன் பனுக்குவார் கண்ட
15. ன் விசையலெட்சுமி காந்தன் கலைதெரியும் விற்பன்னன் காமிநி
6. கந்தப்பன் சத்திய அரிச்சந்திரன் வீரதண்டை சேமத்தலை விளங்கு
17. மிருதாளினான் வீரசூர விக்கிரமாறகன் கீற்திப்பிரதாபன் வை
18. கை வளனாடன் கொட்டமடக்கி வைய்யாளி நாராயணன் இவுளி
19. பாவடி மிதித்தேறுவார் கண்டன் வீரவெண்பா மாலை இளஞ்சிங்க
20. ந் தளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் மதப்புலி அடைக் கலங்
21. காத்தான் தாலிக்கு சத்துருவாதி யள்மிண்டன் வன்னிய
22. ராட்டந் தவிள்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்
23. கு மிகு தாளினான் கீற்திப் பிறதாபன் ஆரிய மானங் காத்தான்
24. தொண்டியந்துறை காவலன் துரக்கரே வேந்தன் அனும கேதன
25. ன் குடைக்குக் கற்னன் பரிக்கு நகுலன் பரத நாடகப் பிறவீண
26. ன் கருணா கடாட்சன் சங்கீத சாயித்திய வித்தியா வினோதன்
27. சகல சாம்பிறாச்சிய லஷுமீநிவாசன் சேது காவலன் வங்
28. கிஷாதிபனாகிய அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய துக

29. லூர்க் கூற்றத்து காத்தூரான குலோத்துங்க சோள நல்லூர்
30. கீள்பால் விரையாத கண்டனிலிருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கெற்ப
31. யாசி சேதுபதி காத்த ரெகுனாத தேவர் புத்திரன் சேது பதி காத்த
32. தேவர் முத்து விசைய ரெகுனாத தேவர் தம்பி முத்து ரெகுனாதச் சே
33. துபதி காத்ததேவர் சுவாமி தெய்வச்சிலைப் பெருமாள் நயினார் கீளைக்
34. க்காடு கட்டுப்பட்டுக் கிடந்த படியினாலே சிலராதீதத்து முன் நடந்
35. தபடிக்குச் சறுவமானியமாக சுவாமிக்குத் திருப்பிவிட்டுத் தாம்பு
36. ர சாதனங் குடுத்தபடி சாதனமாவது இந்தக் கீளைக் காட்டுக்கு
37. எல்லையாவது வடபாற்கெல்கை முன் சீப்புடையார் கோ
38. விலுக்கும் தென்கிளக்குச் சக்கரக் கல்லுக்கும் வயிரவன் கோ
39. விலுக்கு வடமேற்குக் கல்லுக்கும் இதின் கிளக்குக் கல்லு க்கும்
40. விளுந்த புளி ஊறணிக்கும் நபினான் மரைக்காயன் கல்லுக்
41. கும் தெற்கு கீள்பாற்கெல்கை பத்தராதர வைக்குக் கிளக்கு
42. ச் சக்கரக் கல்லுக்கு ஆனை விளுந்தான் மேல்கரைச் சக்கரக்
43. கல்லுக்கும் உப்பு ஊறணி கீள் கரைக்கும் அலைவாய்க் கரை
44. ச் சக்கரக் கல்லுக்கும் மேற்கு தென்பாற்கெல்கை அலைவா
45. ய்க்கரைக்கு வடக்கு மேல் பாற்கெல்கை உட்பாத்து அளத்
46. துக்கு கிளக்கு இன்னாங் கெல்கைக்குள்ளிட்ட நஞ்சை புஞ்
47. சை மாவடை மரவடை திட்டுத்திடல் கீழ் நோக்கிய கிணறு

48. மேல் நோக்கிய மரம் நிதிநிட்சேப செலதரு பாஷாணா ஷாவை
49. காமிய சித்த சாத்தியமாகிய அஷ்டபோகப் பலப் பிறாத் தியும் ரா
50. சாக்கள் முன்னிலையாக தெய்வச் சிலைப் பெருமாள் நயினாரு
51. க்கு விட்டுக்குடுத்த கீளைக்காடு இந்தத் தற்மத்தை பரி பாலனம்
52. பண்ணின பேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும் கோடி
53. சிவலிங்கப் பிரதிஷ்டையும் கோடி பிறும்ம பிறதிஷ்டையும்
54. கோடி கோதான பூதானமும் பண்ணின பலனையடைவா
55. ராகவும் இதுக்கு விகாதம் பண்ணின பேர்கள் கெங்கைக்
56. கரையிலும் சேதுக்கரையிலும் காராம் பசுவையும் பிராம
57. ணரையும் மாதா பிதாவையும் கொன்ற தோஷ
58. த்திலே போகக் கடவாராகவும்.

# செப்பேடு எண் 83

(விளக்கம்)

| | | |
|---|---|---|
| 1. செப்பேடு வழங்கியவர் | : | முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் தம்பி முத்து ரெகுநாத சேதுபதி |
| 2. செப்பேடு பெற்றவர் | : | திருப்புல்லாணி திருக்கோவில் |
| 3. செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1651 சௌமிய ஆண்டு தை அமாவாசை நாள் (கி.பி. 7-1-1730) |
| 4. செப்பேட்டின் பொருள் | : | திருப்புல்லாணி கீழைக்காட்டுப் பகுதி திருக்கோயிலுக்கு சர்வ மானியம் |

இந்தச் செப்பேட்டை வழங்கிய முத்து ரெகுநாத சேதுபதி முத்து விசைய ரகுநாத சேதுபதி மன்னரது இளவல் மறவர் சீமையின் மன்னராக இவர் இருந்ததாக எந்த வரலாறும் இல்லை. ஆனால் இந்தச் செப்பேட்டில் ''*முத்துவிஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் தம்பி*'' என்று இவர் குறிக்கப் பெற்றுள்ளார். இராமநாதபுரம் சீமை வரலாற்றில் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி இறந்தபிறகு சுந்தரேச தண்டத்தேவர் என்பவர் ஒரு குறுகிய காலம் சேதுபதியாக இருந்ததாகவும் அவரை வென்று கொன்றுவிட்டு பவானி சங்கரத்தேவர் என்பவர் ஆட்சியைக் கைப்பற்றியதாக இராமநாதபுரம் மேன்யுவலில் குறிக்கப்பட்டுள்ளது. *இதனைப் பொய்யாக்கும் வகையில் இந்தச் செப்பேடு,

---

* Raja Ram Rao. T. Manual of Ramnad Samasthanam (1891) page. 238

சகம் 1651 சௌமிய ஆண்டு தைமாதம் வரையப்பட்டுள்ளது. இதிலிருந்து முத்துவிஜய ரெகுநாத சேதுபதி அம்மை நோயினால் அறந்தாங்கிப் போரில் இறந்தபொழுது அவரதுஇளவலான முத்துவடுகநாதன், முத்துரெகுநாத சேதுபதி என்ற பெயரில் சிறிது காலம் இராமநாதபுரம் மன்னராக இருந்தார் என்பதை இந்தச் செப்பேடும் அடுத்து வரும் செப்பேடும் புலப்படுத்துகின்றன. இந்தக் காரணத்தினால் இவரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டில் எதுவும் குறிக்கப்படாமல் இவரது தமையனரான முத்து விஜய ரெகுநாத சேதுபதியின் அறுபத்திரண்டு விருதாவளிகள் மட்டும் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. முத்துவிஜய ரகுநாத சேதுபதியையடுத்து அரசு கட்டில் ஏறினவர். சுந்த ரேசுவர தேவர் அல்ல என்பதும் புலனாகின்றது.

திருப்புல்லாணி தெய்வச்சிலை பெருமாள் நயினார் ஆலயத்திற்கு ஏற்கெனவே தானம் வழங்கப்பட்டிருந்த கீழைக்காட்டுப் பகுதி பற்றிய சிக்கல்களைத் தீர்த்து மீண்டும் திருப்புல்லாணி திருக்கோயிலுக்கு அந்தப்பகுதியை சர்வமானியமாக உத்தரவிட்டதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இதில் சம்பந்தப்பட்ட கீழைக்காடு என்பது தெய்வச்சிலைப் பெருமாள் கோயில் கொண்டுள்ள திருப்புல்லாணி கிராமத்திற்கு கிழக்காகவும் கிழக்குக் கடற்கரைக்கு வடகிழக்காகவும் சேதுவழிப்பாதைக்கு தெற்காகவும் நெய்னா மரைக்கான் கிராமத்திற்கு மேற்காகவும் உள்ள பரந்த காட்டுப்பகுதியாகும். இன்றைய ரெகுநாதபுரம் வண்ணான்குண்டு தென்னம்பிள்ளை வலசை, கீரிவலசை, துத்துக்கப் வலசை ஆகிய ஊர்களைக் கொண்ட இந்தப் பகுதி தொன்றுதொட்டு தெய்வச்சிலைப் பெருமாள் நயினாரது சொத்தாக இருந்துவந்துள்ளது என்பதை அங்கே நாட்டப்பட்டுள்ள திருவாழிக்கற்கள்[1] (வரிகள் 38, 42, 44) புலப்படுத்துகின்றன. கட்டுப்பட்டுக் கிடந்த (வரி34) தீத்து (வரி 34) திருப்பிவிட்டு (வரி 35) என்பன இந்த வட்டார வழக்குகள் ஆகும்.

## செப்பேடு எண் 84

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1678ம் வருஷம் இதன் மேல் செ
2. ல்லா நின்ற தானு நாம சம்வச்சரத்தில் உத்தராயணத் தில் கிரீஷ்மருதுவில் ஆடி மாதம் 8ம் தேதி கிருஷ்
3. ணபட்சத்தில் பஞ்சமையும் குருவாரமும் அவிட்ட நட்சத் திரமும் சுபயோக சுபக்கரணமும் பெ
4. ற்ற சுபதினத்தில் ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மகாமண்டலே சுவரன் அரியராய தளவிபாட
5. ன் பாஷைக்கு தப்புவராயிர கண்டன் மூவராயிர கண்டன் கண்டநாடு கொண்டு
6. கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்டலதாபனாச்சா யன் சோழமண்டல
7. ப்பிரதிஷ்டாபனாச்சாரியன் தொண்ட மண்டல சண்டப் பிரகண்டன் ஈழமும்
8. கொங்கும் யாழ்ப்பாண பட்டணமும்எம்மண்டலமும் அளித்து கெசவேட்டை கண்
9. டருளிய ராசாதிராசன் ராசபரமேஸ்வரன் ராசமார்த்தாண் டன் ராசகுல திலகன் துட்ட
10. ரில் துட்டன் துட்டர் கொட்டமடக்கி துட்டர் நீட்டூரன் வையாளி நாராயண

---

இந்தச் செப்பேடு சித்துரெட்டியார் மடத்து பூஜகரிடம் உள்ளது. நூலாசிரியரால் நேரில் சென்று படிஎடுக்கப்பட்டது

11. ன் இவிளிபாவடி மிதித்தேறுவார் கண்டள் அரசரில் ரா வணராமன் அடியார் வேளைக்கா

12. ரன் பாதளவிபாடன் உரிகோல் சுரதாணன் அந்தம்பிற கண்டன் சாடிக்கார

13. ன் சாமித்துரோகியள் மிண்டன் பஞ்ச பாணவதாரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பர

14. மன்னர் சிங்கம் ஆத்தில் பாய்ச்சி கடலில் பாய்ச்சி மதப் புலி அடைக்கலங்காத்தான்

15. தாலிக்கு வேலி தொண்டியந்துறை காவலன் வைகை வளநாடான் அனுமகேதனன்

16. ன் கருட கேதனன் சிங்ககேதனன் மீனகேதனன் செங்கா விகு

17. டையும் அதன்மேல் வெண்கவரியும் பெற்ற தேவாதி தேவன் தேவை

18. நகராதிபன் சேதுமூல ரட்சாதுரந்தரன் ராமநாதசுவாமி காரியதுரந்

19. தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் இரவிகுல சேகரன் சொரி

20. முத்துவன்னியன் புவனேசுவரன் திலதநுதல் மடமாதர் மடலெழுதிய சுமு

21. கன் விசையலட்சிமி காந்தன் கலைதெரியு விற்பன்னன் காமினி கந்தப்ப

22. ன் சத்திய அரிச்சந்திரன் பூலோக தேவேந்திரன் வில்லுக்கு விசையன் மல்லுக்

23. கு வீம சேனன் கொடைக்கு கர்ணன் பரிக்கு நகுலன் வீரத்தண்டைசேமத்தலை விளங்

24. குமிருதாளினன் அசுபதி கெஜபதி நரபதி சேதுபதியாகிய துகவூர் கூற்றத்து

25. காத்தூ ரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்பால் விரையாத கண்ட

26. னில் இருக்கும் ராஜராஜன் ராஜஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாசி முத்துவிஜயரகுநாத

27. சேதுபதி காத்த தேவரவர்கள் மருமகன் ஸ்ரீதனுக்கோடி ராமுத்தேவரவர்கள்

28. நத்தக்காட்டில் சித்துசெட்டியார்கள் மடம் சுப்பையனுக்கு தானம் பண்ணின

29. கிராமம் வேப்பங்குளம் இந்த வேப்பங்குளத்திற்கு எல்கை யாவது பல்லவ குலாந்த

30. க நல்லூர் ஆகிய பரளச்சி கண்மாய்க்கும் செவ்வல் புஞ்சைக்கும்மேற்

31. கு சின்னதிருக்கணிக்கு தென்மேற்கு நாட்டுகணக்கு முத் திருளப்ப பிள்ளை

32. புஞ்சைக்கு வடக்கு பள்ளஊரணிக்கும் பாதைக்கும் கிழக்கு இன்னாங்கெல்லைக்

33. குட்பட்ட வேப்பங்குளம் நஞ்சைபுஞ்சை மாவடை மரவடை திட்டுத்திடல் நிதி நிட்சேப

34. சலதருபாஷாண சித்தசாத்தியமென்று சொல்லப்பட்ட அஷ்டசுவாமிய

35. யங்களும்சந்திராதித்த சந்ததி பிரவேசம் சர்வமானியமாக தானம் பண்

36. ணிக்கொடுத்த படிக்கு ஆண்டனுபவித்துக் கொள்வார் களாவும் இந்

37. த தருமத்துக்கு உபகாரம்பண்ணின பேர் கோடி சிவலிங்க பிரதிஷ்டை

38. கோடி பிரும்ம பிரதிஷ்டை பண்ணின சொர்ணதான கோதான பூதானம்

39. பண்ணின பிரயோஜனம் அடைவாராகவும் இந்த தருமத் துக்கு விகாதம் நினைத்த பேர்

40. கெங்கைக்கரையிலே காராம்பசுவையும் மாதாபிதாவையும் குருவையும்

41. கொன்ன தோஷத்திலே போகக்கடவாராகவும் உ.சிவமயம்

## செப்பேடு எண் 84

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : முத்துவிஜய ரெகுநாத சேதுபதி மருமகன் தனுக்கோடி இராமுத்தேவர்
2. செப்பேடு பெற்றவர் : சித்துரெட்டியார் மடம், நத்தக்காடு
3. செப்பேட்டின் காலம் : சாலிவாகன சகாப்தம் 1678 ஆடி மீ 8 (கி.பி. 756)
4. செப்பேட்டின் பொருள் : வேப்பங்குளம் கிராமம் தானம்

இராமநாதபுரம் மன்னரது விருதாவளியாக இந்தச் செப்பேட்டின் அறுபத்தினான்கு விருதுப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் முந்தையச் செப்பேடுகளில் காணப்பட்டவை.

நத்தக்காடு கிராமத்திலுள்ள சித்துரெட்டியார் மடத்துக்கு வேப்பங்குளம் கிராமத்தைச் சர்வமானியமாக வழங்கப்பட்டதை இந்தச் செப்பேடு உறுதி செய்கிறது. இதனை வழங்கிய காலமாகிய கி.பி. 1756ல் சேதுநாட்டை ஆட்சி செய்தவர், முத்துக்குமார விஜய ரெகுநாத சேதுபதி ஆவார். ஆனால் இந்தச் செப்பேடு அவரால் வழங்கப் படவில்லை. அவரது மருகர் தனுக்கோடி ராமுத்தேவர் என்பவர் இதனை வழங்கியுள்ளார். மன்னருக்குப் பதிலாக எந்தச் சூழ்நிலையில் இந்த தானத்தை அவர் வழங்கி உத்தரவிட்டார் என்பது தெரியவில்லை. சேதுபதி ஆட்சியில் சேதுபதிகளைப்போல அரசவழியினரும் அரசு அலுவலர்களும் இத்தகையச் செப்பேடுகள் வழங்கியதை இந்தத்

தொகுப்பில் ஏற்கெனவே கொடுக்கப் பட்டுள்ளன. மன்னரது தெற்குப்பகுதி பிரதிநிதியாக தனுக் கோடி இராமுத்தேவர் பணியேற்றிருக்கவேண்டுமென்பது ஊகம்.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சித்துரெட்டி யார் மடம் அருப்புக் கோட்டை வட்டத்தில் பரளாட்சி என்ற ஊருக்கு வடக்கே ஆறுகல் தொலைவில் உள்ளது. இந்த மடம் உள்ள பகுதி தற்பொழுது வடக்கு நத்தம் என்று வழங்கப்படு கிறது. செப்பேட்டில் இதன் பெயர் நத்தக்காடு ஆகும். பதினைந்து பதினாறாவது நூற்றாண்டுகளில் ஆந்திர மாநிலத் திலிருந்து இங்கு குடியேறிய வருக மக்களில் சிறப்பான சித்து ரெட்டியார் என்பவர் இதனை நிறுவியிருக்க வேண்டும். இந்த மடத்தின் கல்தூண் ஒன்றில் சித்துரெட்டியாரும் அவரது மனைவியும் அதன் எதிரேயுள்ள மற்றொரு தூணில் அவரது மகனும் மனைவியர் இருவர் திருவுருவங்களும் வடிக்கப்பட்டு காட்சியளிக்கின்றன.

இந்த மடத்தை மக்கள் ஆறுமுகசாமி மடம் என்று வழங்கி வருகின்றனர். நூறாண்டுகளுக்கு முன்னர் இந்த மடத்திற்கு எதிர் பகுதியில் ஜீவசமாதி கொண்ட ஆறுமுகம்சாமி என்ற சித்தரது சமாதியும் முருகனுக்காக அங்கு அமைக்கப்பட்டுள்ள சிறிய திருக்கோயிலும் மக்களிடம் பிரபலமாகியிருப்பதே இதற்குக் காரணமாகும். அந்த சித்தர் சமாதி அடைந்த சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் ஆண்டுதோறும் அவருக்கு குருபூஜை விழா சிறப்பாக நடந்தேறி வருகிறது.

இந்த மட கைங் காரியத்திற்க்காக தானம் வழங்கப்பட் டுள்ள வேப்பங்குளம் இந்த ஊரை அடுத்த பரளாச்சி சாலையில் செட்டிகுளம் விலக்கு வழிக்கு, கிழக்கேயுள்ளது. இதன் நான்கு எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ளவையிலிருந்து மூன்று புதிய தகவல்கள், கிடைக்கின்றன. பரளாட்சி என்று வழங்கப்படும் ஊரின் முந்தைய சிறப்புப் பெயர் பல்லவர் குலாந்தக நல்லூர் என்பது. மதுராந்தகன், சோழ குலாந்தகன் பாண்டிய குலாந் தகன் ஆகிய வரலாற்றுப் பெயர்கள் மக்களது உயிரைப் பறிப்ப தில் பேதமில்லாது கடமையாற்றும் கண்களில்லாத அந்த கன் போல செயல்படும் எமன் என்ற பொருளில், முறையே ''மதுரை க்கு, சோழனுக்கு, பாண்டியனுக்கு எமன் என்ற பொருளில் இந்த

ஊரின் பெயர் அமைந்திருப்பதிலிருந்து ''ஏக வீர பரசக்கர கோலாகலப் பல்லவன்'' என்ற விருதுப் பெயரினையுடைய ஸ்ரீ *மாறபாண்டியனது* விருதுப் பெயராக இருக்க வேண்டுமென்பது இந்த மன்னர் சின்னமனூர் செப்பேட்டில் குறிக்கப்படுகின்ற வரகுணமகாராஜாவின் மைந்தன் ஆவார். கி.பி. ஒன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் ஆட்சி புரிந்த மன்னர்.

மேலும் நான்கெல்கையில் ''நாட்டுக் கணக்கு முத்திருளப் பப்பிள்ளை புஞ்சைக்கு வடக்கு'' என்ற தொடரிலிருந்து இராம நாதபுரம் சீமைப் பிரதானியாக இருந்த முத்திருளப்பபிள்ளையை (கி.பி. 1782-91) இது குறிப்பதாகும். ஆங்கில மொழியில் தேர்ச்சியும், நிர்வாகத்தைத் திறம்பட நடத்தும் அற்புதத் திற னும் பெற்ற இந்தப் பிரதானி அண்மையிலுள்ள உச்சிநத்தம் கிராமத்தில் வளர்ந்தவர் என்பதும் முன்னர் பரளாச்சிப் பகுதியில் ''நாட்டுக் கணக்கராக'' இருந்தவர் என வழங்கும் செவிவழிச் செய்தியினை இந்தச் செப்பேடு உறுதி செய்கின்றது.

# செப்பேடு எண் 85

(நகல்)

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1589 மேல்செல்லா நின்ற பிலவங்க நாமஸம்வச்ரத்து உத்தராயண
2. த்து வசந்தரிதுவில் வைகாசி மாத்தையில் சுக்கிலபட்ஷ தில் வியாழக்கிழமையும் கிருத்திகையும் புனர்பூச நட்சத் திரமும் கொ
3. ண்டநாம யோகமும் கோசவாகரணமும் பெத்தபுண்ணிய காலத்தில் தேவைநகராதிபன் சேது ரட்சாதுரந்த
4. ரன் —— ராமநாதசுவாமி காரியதுரந்தரன் சிவபூஜா துரந் தரன் பரராஜசேகரன் பரராஜசிங்கம்
5. ரவிகுலசேகரன் ரவிவர்மன் சொரிமுத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமது மகாமண்டலேசுவரன் அரியராயதள
6. விபாடன் பாசைக்கு தப்புவராயகண்டன் மூவாயிர கண்டன் கண்டநாடு கொண்டுகொண்டநா
7. டுகுடாதான் பட்டமானங்காத்தான் துட்டராயர் கண்டன் புவனேகவீரன் வீரகஞ்சுகன் வீரவளநாட
8. ன் வேதியர்காவலன் அரசராவணராமன் அடியார்வேளைக் காரன் பரதநாடகப்பிரவீணன் உரிகோ
9. ல் சுரதாணன் —————— சாமித்துரோகியள்மிண்டன் பஞ்சவன்னராய
10. ராகுத்தன் பனுக்குவார்கண்டன் நவகோடிநாராயணன் கொட்டமடக்கி வைய்யாளி நாராயணன்
11. இவுளிபாவடி மிதித்தேறுவார்கண்டன் வீரவெண்பாமாலை இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் பகை

* A. S. S. I Vol pp. 75-77

12. மன்னர்சிங்கம் மதுரராயன் ஆத்தில் பாச்சி கடலில்பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் தாலிக்கு

13. வேலி சத்ருவாதியள் மிண்டன் வன்னியராட்டம் தவிழ்த் தான் மேவலர்கள் கோளரி மேவலர்

14. வணங்கு மிருதாளினான் வீரமகா கெம்பீரன் கீர்த்திப் பிரதாபன் ஆரியமானங் காத்தான் தொண்டியன் து

15. றை காவலன் கொடைக்கு கர்ணன் பரதநாடகப்பிரவீணன் கருணா கடாட்சன் குன்றினுயர் மேருவில்

16. குன்றாய்வளை குணில்பொறித்தவன் திலதநுதல் மடமா தர் மடலெழுத வரு சுமுகன் விசயலெட்சுமி காந்தன் கலை

17. தெரியும் சுமுகன் விற்பன்னன் காமினி கந்தப்பன் சத்ய அரிச்சந்திரன் சகல சங்கீத வித்யா வினோதன்

18. வீரதண்டை சேமத்தலை விளங்கிய தாளினான் சகல சாம்பிராச்சிய லட்சுமி நிவாஸன் செயதுங்கராச

முதல் ஏடு (இரண்டாவது பக்கம்)

19. ன் வங்கிசாதிபனான துகவூர் கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர் கீள்பால் விரை

20. யாத கண்டனிலிருக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவர் புத்திரர் ஸ்ரீ திருமலைய இரணிய கெர்ப்பயாசி சேது

21. பதி ரகுநாத தேவரவர்களுக்கு புண்ணியமாக பாண்டி யூரிலிருக்கும் சொக்கப்பன் சேருவை

22. காரன் புத்திரன் பெருமாள் சேர்வை காரன் ராமேசுவரத் தில் ராமநாத சுவாமிக்கு அறை கட்டளை தன்மத்துக்

23. கட்டளையிட்ட கிராமத்துக்கு தானதன்ம சாதனங் கொடு த்தபடி இப்போது மேலை மாகாணச் சீர்மை ராதா

24. நல்லூர் தட்டில் ஆனந்தூராகிய கிராமமும், பாப்பாகுடி ஏந்தலும் தன்னுடைய அறை கட்டளைக்கு

25. சைராணியோதக தாராபூர்வமாக ஆசந்திராக்கமாக கட்ட ளை இட்ட படியினாலே சேர்ந்தமங்

26. கலத்துக்கும் ஊடுபிலாருக்கு மேற்கு சிறுநாகுடி வடகுளக் காலுக்கு மேற்கு ஊடுபிலாருக்கு தெற்கு

27. தென்கிழக்கு சிறுநாகுடி குமரர் கோவிலுக்கும் வடக்கு பொந்தியன் ஏந்தல்

28. உள்பட எல்கை இதனில் விட்டு தெற்குப்போந்து சிறுநா
குடி தெற்குபிலாருக்கு மேற்கு வாநாடன் ஊ

29. ரணிக்கு வடக்கு கண்ணாற்று கரையில் எல்லை காலுக்கு
கிழக்கு படயன் வயக்கால் ஊரணி

30. எல்லைக் கல்லுக்கு வடக்கு இதனிடை விட்டு தென்மேற்
கு போந்து துவார் குளக்காலுக்கு கிழக்

31. கு குருகூரணிக்கும் துவார் குளத்துக்கரைக்கும் வடக்கு
இதன் விட்டு மேற்கு துவார் குளக்காலுக்கு கிழ

32. க்கு உ

33. ஸ்ரீ சுப்ரமணிய திருமலை ஹிரண்ய கர்ப்பயாஜி

*இரண்டாவது ஏடு (முதல்பக்கம்)*

34. வடக்கு எலிகுளத்து வயலுக்கு தெற்கு நீலனேந்தலும்
மேலைவயல் குடியிருப்பு மடத்துக்கு

35. கிழக்கு இந்த நிலம் விட்டு வடகிழக்கு காட்டுக்குளம்
பொருத்து கரைக்கும் பெருமாள் ஊரணி

36. க்கும் தெற்கு பெரியகுளத்து கீழ்மடைக்கண் நாகவயலுக்
கும் காட்டு குளத்து வயலுக்கும் தெ

37. ற்கு இந்த படிக்கு திருமதிச் சடையார் காட்டுக்குளம் நீங்க
லாக ஆனந்தூர் நான்கெல்லையும் பாப்பா

38. குடி நான்கெல்லையும் இந்த இரண்டு கிராமத்தில்உண்டா
கிய ஊரது புறவு நஞ்சை புஞ்சை ஏந்தல் குட்ட

39. ம் மாவடை மரவடை பட்டம் படுகை திட்டுதிடல் மேல்
நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறு

40. நீரும் பாசியும் குடி பள்ளுப்பறை இதுமுதலாகிய நிதி
நிஷேப ஜலதரு பாஷாண அஷ்டபோக

41. தேஜ சுவாமியங்களும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு
அறைக் கட்டளையுடனே கூடின தர்

42. மம் சந்திராதித்தவரை சந்ததிப்பிரவேசம் வரை உத்தி
ரோத்திரமாக நடத்தி விச்சுக் கொள்ளுவா

43. ராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம்
பண்ணி நடத்திவிச்சவர்கள் கோ

44. டி லிங்க பிரதிட்டையும் கோடி விரும பிரதிட்டையும் பண்ணின சுகத்தை
45. அடைவாராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருத்தர் அகுதம் பண்ணின பேர் கெங்கை
46. லும் சேதுவிலும் மாதா பிதாவையும் குருக்களையும் காராம் பசுவையும் பிராமணரையும்
47. வதை பண்ணின தோஷத்தில் போகக் கடவாராகவும் இந்தப் படிக்கு சம்மதித்து ஸ்ரீதிருமலைய
48. இரணிய கர்ப்பயாசி சேதுபதி ரெகுநாத தேவர் பெருமாள் ராமேசுவரத்தில்
49. ராமநாதசுவாமி அறக்கட்டளைக்கு நடத்திவிக்கிற தன் கட்டளையிட்ட ஆனந்தூரும் பாப்பாகுடியும்
50. யும் தன்மசாதனம் கொடுத்தோம் உ
51. — — — — — — — — — — — — — —

## இரண்டாவது ஏடு (இரண்டாவது பக்கம்)

52. — — — — — — ... உ விஸ்வநாத
53. ஆசாரிபுத்திரன் ரகுநாதன் லிகிதம் பரிதாவி வருஷம் அர்ப்பிசி மீ 17தேதி ராமலிங்க சுவாமிக்கு
54. பெருமாள் சேர்வைகாரன் அறக் கட்டளைக்கு முதலே கட்டளையிட்ட ஆனந்தூர் பாப்பாகுடி சுவாமி
55. க்கு அபிஷேக நெய்வேத்தியத்துக்கு போதாத படியினாலே கர்த்தாக்களுக்கு புண்ணியமாக உரசூர் கட்ட
56. — — — — — — — — — — — — — —
57. ளையிட்டபடி யினாலே உரசூருக்கு எல்கை ஆந்தைகுடி மண்மாயிக்கு மேற்கு இரவி
58. மங்கலத்து கண்மாய் உள்வாய்க்கு வடக்கு மேற்கு ஏகாம் பரநாதர் சுவாமி சன்னதி அரசுக்கு
59. கிழக்கு கங்கைகுடி வயலுக்கும் கண்மாய் பொருத்துகரைக் கும் தெற்கு இதன் அடுத்த
60. வெள்ளூருக்கு தெற்கு இந்த நான்கெல்கைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மரவடை குடி

61. பள்ளு பறை இதுமுதலாகிய நிதி நிட்க்ஷேப ஜலதரு பாஷாண அஷ்ட யோக தேஜ

62. சுவாமியங்களும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு அறக் கட்டளையுடணே கூடின தன்மம்

63. சந்திராதித்தவரை சந்ததிப்பிரவேசம்வரை உத்தரோத்த ரமாக நடத்தி விச்சுக் கொள்ளு

64. ளுவாராகவும் இந்த தன்மத்துக்கு யாதாமொருதர் அகி தம் பண்ணினபேர் கெங்கையிலும் சேது

65. விலும் மாதா பிதாவையும் குருவையும், வதைத்த தோஷ த்திலே போககடவாராகவும் உ

## மூன்றாவது ஏடு

66. இந்த அறக்கட்டளை தன்மத்தை மணிய........ அய்யன் பாரிசமாகவும் இராமேசுவரம் ஆரி

67. ய மஹாசனங்களில் தெய்வங்கள் பெருமாள் இராமநாத பாரிசமாகவும் கட்டளையிட்ட படியினா

68. லே உத்தரோத்தரமாக நடத்தி விச்சுக் கொள்ளக் கடவா ராகவும் தெய்வங்கப் பெருமாள் ராமநாதநுக்கு

69. பாப்பாகுடியிலே அறுகலவிரைப்பாடு சொக்கப்பன் சேரு வைகாரனவாள் தானபூர்வமாக

70. கட்டளையிட்ட படியினாலே ஆண்டு அனுபவித்துக் கொ ண்டு அறைக் கட்டளை தன்மத்தை

71. பரிபாலனம் பண்ணி நடத்திவிச்சு கொள்ளுவாராகவும் ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்ரீதிரு

72. மலைய ஹிரண்ய கர்ப்பயாஜி சேதுபதி

## செப்பேடு எண் 85
(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | பாண்டியூர் சொக்கப்பன் சேர்வை புத்திரன் பெருமாள் சேர்வை |
| 2. | செப்பேடு பெற்றவர் | ; | இராமேசுவரம் திருக்கோயில் |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாப்தம் 1589 பிலவங்க ஆண்டு வைகாசி மாதம் (கி. பி. 1568) |
| 4. | செப்டேட்டின் பொருள் | : | ஆனந்தூர் கிராமம், பாப்பாக் குடியேந்தல் இராமேசுவரம் கோயிலுக்கு தானம். |

இராமநாதபுரத்திற்கு வடக்கே பத்துக்கல் தொலைவிலுள்ள பாண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த சொக்கப்பன் சேர்வை மகன் பெருமாள் சேர்வை திருமலை சேதுபதி மன்னர் புண்ணியமாக இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயில் அறக் கட்டளைக்கு சேதுநாட்டின் மேலமாகாண சீமையில் உள்ள ஆனந்தூர் கிராமத்தையும், பாப்பாக்குடி யேந்தலையும் தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது. ''சேதுபதி மன்னர் புண்ணியமாக'' என்ற சொற்றொடரிலிருந்து மன்னரது விசுவாசத்திற்கும் அன்புக்கும் அருகதையான ஒரு உயர்ந்த அலுவலர் பெருமாள் சேர்வை என்பது புலப்படுகிறது. மன்னர் களுக்குப் பதிலாக முழு அதிகாரம் பெற்ற அவர்களது அலு வலர்களும் தானம் வழங்குவது வரலாற்றில் காணக்கூடிய இயல்பான நிகழ்ச்சி. என்றாலும் அவை மிக அருமையாகவே நிகழ்ந்துள்ளன. பெருமாள் சேர்வைக்காரரது தந்தை சொக் கப்பன் சேர்வை கான நாட்டில் புதுக்கோட்டை சீமையில் திரு

மலை சேதுபதி மன்னரது அரசப் பிரதிநிதியாக இருந்தபொழுது அங்கு அவர் இத்தகைய அறக்கொடைகளை மன்னரது பெயரால் வெளியிட்டிருப்பதை புதுக்கோட்டைச் சீமைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அவையாவன :

1. சகம் 1585-ல் (கி.பி.1663-ல்) மேலையூர் விண்ணகர பெருமாளுக்கு திருவிடையாட்டக் காணியாக பெரியவராயன் வயல் முதலிய காணிகளை சர்வமாயமாக வழங்கியிருப்பது.

2. திருமயம் அழகியமெய்யருக்கு சகம் 1579-ல் (கி.பி. 1657) பிரம்மதாயமாகவும் தெய்வதாயமாகவும் கோட்டையூர் புரவில் காணிகளை வழங்கியிருப்பது.

3. திருமயம் விராச்சிலை உலகவிடங்கன் சுவாமிக்கு பல்லக்கு சேவை, பிராமண போஜனம், திருப்பணி ஆகிய தர்மங்களுக்கு வீரகண்டன் பட்டி என்ற ஊரினை குடிநீங்கா தேவதானமாக வழங்கியிருப்பது

இந்த மன்னரை அடுத்து வந்த கிழவன் சேதுபதி முத்து விஜய ரெகுநாத சேதுபதி ஆகிய மன்னர்கள் காலத்திலும் இதே மரபு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

செப்பேடு வழங்கியுள்ளவர் சொக்கப்பன் சேர்வை மகன் பெருமாள் சேர்வை என்று குறிப்பிட்டிருப்பதால் இவர் இராமநாதபுரம் பகுதியில் கணிசமான அளவில் உள்ள அகமுடையார் மக்கள் இனத்தைச்சேர்ந்தவர் என்பது வெளிப்படை. ''சேர்வை'' என்பது பொதுவாக சேவை, பணி, என்ற பொருளினைத் தந்தாலும் சேதுபதி மன்னரது படை அணிப்பிரிவிலும் தேச காவல் திசை காவல் பணியிலும் மிகுதியாக ஈடுபட்டு இருந்த அகமுடையார் சமூகத்தினரைக் குறிக்க இந்த சொல் வழக்கில் வந்துள்ளது. மற்றும் சிறப்பாக போர்த்திறனில் விஞ்சி நின்ற மறவர், இசுலாமியர் இனத்தவர்களைக் குறிப்பதற்கும் இந்தச் சொல் ஒரே வழி கையாளப்பட்டுள்ளது. குறிப்பாக போகலூரைச் சேர்ந்த இசுலாமியரான கனி சேர்வைக்காரர் சித்திரங்குடியைச் சேர்ந்த மறவர் தலைவரான வெள்ளையத்தேவர் மயிலப்பன் சேர்வைக்காரர் ஆகியோர்கள் இந்த சொல் வழக்கிற்கு சிறந்த உதாரணங்கள் ஆவர்.

அகமுடையார் இனத்தவரில் சேதுபதி மன்னரது தள கர்த்தர்களாக உயர்ந்த பதவிகளில் சிறப்பாக பணியாற்றிய வைரவன் சேர்வைக்காரர், வெள்ளையன் சேர்வைக்காரர் ஆகிய தளபதிகளை பிற்கால சேது நாட்டு வரலாற்றில் காணமுடிகிறது. ஆனால் கானாட்டில் திருமலை சேதுபதி மன்னரது பிரதிநிதி களாக இருந்த பெருமாள்சேர்வை, சொக்கப்பன் சேர்வை பற்றிய வேறு செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு இல்லை. அவர்களது சொந்த ஊரான பாண்டியூரில் கூட அந்தப் பெரு மக்களைப் பற்றி தகவல்களைப் பெற முடியவில்லை.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பெறும் ''மேல மாகாண சீர்மையைச் சேர்ந்த இராதாநல்லூர் தட்டில், ஆனந்தூர் ஆகிய கிராமம் பாப்பக்குடியேந்தலும்'' (வரிகள் 23, 34) இராமநாத புரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தில் உள்ளன. ''சீர் மை'' என்ற பெரு நிலப்பரப்பின் கூறு, மதுரை நாயக்க மன்னர் ஆட்சியில் நடைமுறைக்கு வந்தது. தற்பொழுது வழக்கிலுள்ள ''சீமை'' என்ற சொல் சீர்மையின் இடைக்குறைவு. இராதா நல்லூர் தற்பொழுது இராதானூர் என்று மருவியுள்ளது. ஆனந் தூர், பாப்பாக்குடியேத்தல் என்ற பெயர்களில் மாற்றம் இன்று வரை எதுவும் இல்லை. சோழர், பாண்டியர் ஆட்சியில், ஆனந்தூர் இராஜராஜபுரம் என்று வழங்கப்பட்டது. கோனே ரின்மை கொண்டான் என்ற பராக்கிரமபாண்டியத் தேவனது (கி.பி. 1162-70) கல்வெட்டு ஒன்றில் இந்த ஊர் ஆனந்தூர் ஆன ''அபிஷேகர சுந்தர நல்லூர்'' என்றும் அங்கு திருக் கோயில் கொண்டுள்ள நாயனார், திருமதிச்சடை ஸ்ரீவரமுடை நாயனார் என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த ஊர் அதே பழம் பெயரிலும் அங்கு உள்ள குளம் திருமதிச் சடையார் காட்டுக் குளம் என்று வழங்கப்படுவதிலிருந்து இந்த ஊர் தொன்மைச் சிறப்பு மிக்கது என்பது புலப்படுகிறது. மற்றும் இந்தச் செப் பேட்டில் வழக்கமாகக் குறிப்பிடப்படும் எல்லைகள் மிகவும் விளக்க மாகக் குறிக்கப்பட்டுள்ளன.

மற்றும், இந்தச் செப்பேடு சில புதிய செய்திகளைத் தெரிவிக்கின்றன முதலாவதாக ஏற்கனவே வழங்கப்பட்ட அறக்

கொடை பற்றி ஆணை பிறப்பிக்கும் பொழுது அந்தப் புதிய ஆணையும் தொடர்புடைய அந்தச் செப்பேட்டின் தொடர்ச்சியாக வரையப்பட்டது, கி.பி. 1668 ல் வழங்கப்பட்ட நிலக்கொடை இராமநாதசுவாமி அறக்கட்டளைக்குப் போதுமானதாக இல்லை என்பதை அறிந்தவுடன் கி.பி. 1673ல் மீண்டும் அதே அறக் கொடைக்கு உரகூர் கிராமம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த கட்டளையை திறம்பட நடத்திவைக்க அந்த ஊர்மணியம் ஐயனையும் இராமேசுவரம் ஆரிய மகாஜனங்களில் தெய்வங்கள் பெருமாள் என்பவரையும் பொறுப்பாக்கி உத்தரவிடப்பட்டுள் ளது. இந்தப் புதிய உத்தரவும் இந்தச் செப்பேட்டின் மூன்றாவது, நான்காவது பக்கங்களில் தொடர்ச்சியாக வரையப்பட்டுள்ளது.

இன்னொரு புதிய செய்தி. பெருமாள் சேர்வைக்காரரது இந்த நிலக்கொடை ஆணையைப் சேதுபதிமன்னர் பார்வை யிட்டு அங்கீகரித்ததற்கு அடையாளமாக செப்பேட்டில் இரண்டு இடங்களில் முதல் செப்பேட்டின் இரண்டாவது பக்கத்தில் 33வது வரியிலும் இரண்டாவதுசெப்பேட்டின் 72வதுவரியிலும்''ஸ்ரீசுப்பிர மணிய ஸ்ரீ திருமலய ஹிரண்ய கற்பயாசி சேதுபதி ரெகுநாதன்'' என கைச்சாத்திட்டு வரையப்பட்டுள்ளது.

பொதுவாக இந்தச் செப்பேடு தமிழும் கிரந்தமும், தெலுங் கும் கலந்த மணிப்பிரவாள தொடராக வரையப்பட்டுள்ளது. இதைச் செப்பேட்டில் காணப்படும், ஊடுபிலாறு (வரி.26) குளக் கால் (வரி. 26) குடியிருப்பு (வரி. 34) பொருத்துக்கரை (வரி.35) மடைக்கண் (வரி. 36) ஊரது புரவு (வரி. 38) என்பன இந்த வட்டார வழக்குகள்.

## செப்பேடு எண் 86

(நகல்)

1. சுபஸ்ரீ ஸ்ரீமது மகாமண்டலேசுபரன் அரியாயிர தள விபா டன் பாசை

2. க்கு தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடா

3. தான் பாண்டி மண்டலப் பிரதாபனாரியான் சோள மண் லப் பிறதி

4. ஷ்ட்டாச்சாரியான் தொண்ட மண்டலப் பிறசண்டன் ஈழமுங் கொ

5. ங்கும் யாள்பாணமும் அளித்து கெசவேட்டை கொண் டருளி

6. ய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீ

7. ரன் இளஞ்சிங்கம் தளஞ்சிங்கம் தொட்டியர் மோகந்தவிள்த் தான் துலு

---

* நூலாசிரியரால் இந்தச் செப்பேடு இராமநாதபுரம் அரண் மனையில் கண்டெடுக்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட வரலாற்று ஆவணக்குழுவிற்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது, இப்பொழுது இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகத்திலுள்ளது.

8. க்கர் மோகந்தவிள்த்தான் எட்டன் தலையில் கட்டும் விருதைக் கா
9. விலே கட்டுங் கலங்காத கண்டன் தாலிக்கு வேலி சத்தி ராதிகள் மு
10. ண்டன் சொரிமுத்து வன்னியன் சேதுகாவலன் அடைக் கலங்
11. காத்தான் சேதுமூல துரந்தரன் இராமநாத சுவாமி காரிய துரந்தர
12. ன் சிவபூசா துரந்தரன் இரணிய கெர்ப ரவிகுல திலகன் சாமித்துரோக
13. தர் வெண்டயம் விளங்கும் இருதாளினான் அனுமக் கொடி கெருட
14. டக்கொடி சேவல்க்கொடி உடையான் தொண்டியன் துறை
15. காவலன் செம்பிவள நாடாதிபன் பூலோக தெய்வேந்திரன் வில்லு
16. க்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் குடைக்கு கர்ணன் பஞ்
17. ச பாணாவுதாரன் வீரலட்சுமி விசைய லட்சுமி ராச லெட்சுமி சா
18. ம்பிருட் செயலட்சுமி அஷ்ட்ட லட்சுமி வாசன் பஞ்சவர்ணப் பாவடை
19. விருதினான் செங்காவிக்கொடி உடையோன் மலைக்கல ங்கினும்
20. மனங்கலங்காத கண்டன் சிவசமய பரிபாலநன் அசுபதி கசபதி, நரபதி
21. தேவை நகராதிபனான ரகுநாதசேதுபதி ராச்சிய பரிபாலன
22. ம் பண்ணியருளா நின்ற கலியுகம்-4762 சாலிய வாக
23. ன சகாப்தம் 1613 மேல் செல்லா நின்ற பிரசோ ற்பதி
24. வைகாசி மீ 17ந் தேதி இளமநேரியிலிருக்கும் நயினுகுட்டி சேருவை கார
25. னுக்கு வலையரில் ராதான் கிளை பூச்சிக் கிளை பட்டங் கட்டி கிளை வீரப்பிள்ளை கிளை படை

26. யன்கிளை அப்வன்கிளை கோணாண்டி கிளை வதி பிடிங் கி கிளை இந்த எட்டு
27. க்கிளையிலுஞ் சேர்ந்த மூப்பனார் வேளாந்தரவை பெரிய வீரமூப்பன் சி
28. ன்னூ மூப்பன் குசவன்குளி அரங்கக் கிளவன் மடத்துடை யான் மூப்பன் நெ
29. டு உடையான் மூப்பன் சக்கரைக் கோட்டை வீராண்டி மூப்பன் கருப்ப
30. ட்டிக் கிளவன் காஞ்சானு ரணி காஞ்சான் மருங்கன் பெரு வயல் பிச்
31, சமூப்பன் சிட்டாரு கோட்டை வீரமூப்பன் அத்தியூத்து பெரிய குப்பன்
32. மூப்பன் சின்னக்குப்பான் மூப்பன் ஆண்டிக் கறுப்ப மூப்பன் அளகாங்
33. குளம் நொண்டி முட்டக் கிளவன் ராமமூப்பன் மெய்யமூப் பன் ஆத்தாங்கரை
34. ச் சின்னச் சருக்கான் பெரிய சருக்கான் கறுத்தப்பயல்மா காளி எண்மண்ட
35. லங் கொண்டான் தில்லாமூப்பன் கோடிக்காக் கிளவன்
36. தாமரைக்குளம் நம்பியாமூப்பன் காரிதின்னி குப்பா மூப்பன் இருட்டூரணி
37. ஒச்சிமூப்பன் ஒய்யாமூப்பன் பட்டாணி மூப்பன் உடையா மூப்பன் குசமூ
38. ப்பன் ரெட்டையூரணி அரங்கமூப்பன் புண்ணிய மூப்பன் பிலிச்சான் மூப்
39. பன் வெள்ளையமூப்பன் நாகாச்சிக் கறுப்ப மூப்பன் கோ னுடையாமூப்ப
40. ன் வேதாளை தூங்கமூப்பன் சுந்தரதாசி மடம் சடையமூப் பன் ராமீசுரம்
41. மாகாளி மூப்பன் ராமுமூப்பன் நினைக்குளம் ராக்க மூப்பன் மோருக்குள

42. ம் வலைக் காவல்கார மூப்பன் ஏறுபடி அங்கமூப்பன் மடத் துடையா மூப்ப

43. ன் வேம்பாறு மாரி மூப்பன் திருப்பாலைக்குடி கூத்த மூப் பன் ஏனாதி கறுப்பமூ

44. ப்பன் மங்கலக்குடி சின்ன மெய்ய மூப்பன் சுந்தர பாண்டி யன் பட்டண

45. ம் துள்ளுக்குட்டி மூப்பன் நாங்களனை வோருந் தங்களுக் கு பளிகாணி

46. க்கு எளுதிக்குடுத்த பட்டைய சாதனமாவது வேளந்தர வை வீரப்

47. பன் மகன் பிள்ளை வீராயி தங்கள் வளவில் சிறு பிள்ளை யில் வந்து

இரண்டாவது பக்கம்

48. சேந்திருந்ததி அந்த பெண் பிள்ளை பெரிய பிள்ளையாய் ருதுவ

49. ாகி சாதியில் கட்டிக் குடாமலிருக்கையில் வயத்தில் கெற் பமாயி

50. ருந்தது அதுகாரியம் தாய் தகப்பன் அண்ணன் தம்பி சாதி யார்

51. அரிந்து அந்தப் பெண் பிள்ளை கண்டிச்சு கேள்க்கு மிட

52. த்தில் அந்த பெண் பிள்ளை சாதியாரிடத்தில் சொன்ன து நயினார்க் குட்டி

53. சேருவைக் காரனுடனே கூடி வயத்திலே கெற்பம் வந்த தென்று ருசுவுட

54. னே சொன்னாள் அவளைச் சாதியார் தெண்டினை பண் ணி உடனே உயிர்வ

55. தைப் பண்ணிப் போட்டு நயினுக்குட்டி சேருவைக்காரனை பளிக்கு பளி குடு

56. வென்று துரையவர்களது சமூகத்தில் கொண்டு போய் விட்டு துரையவர்

57. களும் ஞாயத்தை விளங்கி நயினுக்குட்டி சேருவைக்கார னை பளிக்குப் பளி குடுக்கச்

58. சொல்லி உத்தரவாகி அந்தப் படிக்கு மரணமான வலைப் பிள்ளையை ஒரு கட்

59. டையிலும் நயினுகுட்டி சேருவைக்காரன் தங்கச்சி உடை யக்காளை ஒ

60. ரு கட்டையிலும் வைத்து தீய் வைத்தார்கள் கட்டையும் மெரியும் வய்த்தடே

61. பாதே எங்களுக்கு பளிக்குப் பளி வந்ததென்று உடையக் காளைக் கட்டையை

62. விட்டுக் கிளே இறக்கிவிட்டு நம்மட பிள்ளைக்குப் பிள்ளை வந்ததென்று மூ

63. ப்பமார் ஒப்புக் கொண்டு வலையர் எட்டுக் கிளைக்கு ஜா திப்பிள்ளையென்று

64. பேருங் கொடுத்து எட்டுக்கிளை மூப்பமாருங்கூடி சாதிப் பிள்ளையாகிய உடை

65. டயக்காளுக்கு பளிக்கு எழுதிக் கொடுத்த சாதனப்பட்டை யமாவது யெ

66. ங்கள் சாதியில் கலியாணத்துக்கு ஏழு பணமு அன்பது பாக்கு குறுணி

67. அரிசியும் ஒரு கிடாய் குரங்கும் சடங்குக்கு மூணு பணமும் முப்பது பாக்கு

68. படியரிசியு ஒரு கிடாய் குரங்கும் சடங்குக்கு மூணு பண மும் பதினஞ்சி பாக்கு

69. ம் மூணு படி அரிசியும் ஒரு கோளியும் குடுக்கிறது அதுவும் வலையர்குடி ஒண்

70. ணூக்கு வருஷ கட்டளை ரெண்டு பணமு முணு படி தவசமு கைம் பெண் குடி ஒண்

71. ணுக்கு ஒரு பழைய ஒருபடிதவசமு யிந்தப்படி குடுக்கிறது எங்கள் சாதியி

72. ல் விவகாரம் வியாக்கியங்கள் வந்தா சாதிப்பிள்ளையை வைத்து கொ

73. ண்டு மூப்பமாரு கூடியிருந்து விபகாரங் கேட்டு குத்தஞ் சுமதி யானயிடத்தில் அ

74. பராதம் வாங்கிற பணம் சாதிப்பிள்ளையைச் சாருகிறது புருஷன் ரெண்சாதி

75. ராச்சேர்கையாயிருந்து தீந்து போகிறதா யிருந்தால் தீருவை 60

76. ரண்டாம் தீருவைமுப்பது பணமும் தீருவை சார்ந்த பெயருக்கு குடுத்து விடுகிறது

77. அபராதப்பணம் சாதிப்பிள்ளையைச் சாருகிறது பெயரில் பி(ள்)ளையில்

78. லாமல் போனாலும் தாயாதி பங்காளி களில்லாமற் போனாலும் உரு

79. மைக் காரர் ஒருவருமில்லாதவர் மரணமானாலும் சாதிப் பிள்ளை முன்

80. கை சிரைத்துக் கருமம் பண்ணுகிறது அவனுடைய ஆஷ்தி சாதிப்பிள்ளையைச்

81 சாருகிறது யிந்தப்படிக்கு நாங்கள் எட்டுக் கிளை வங்கிஷ மூப்பமாருங்கூடிச் சா

82. திப்பி(ள்)ளைக்கு பளிச்சாதனப் பட்டையமெளுதிக் கொடுத்த படியினாலே பட்

83. டையத்தி லெளுதியிருக்கிற பிரகாரமாதித்த சந்திர பிரபையுள்ளவரைக்கு

84. ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இதற்கு யாதாமொருவர் தடங்கல்

85. பண்ணினார்களேயானால் அவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசு

86. வைக் கொன்ற தோஷத்திலும் தனுக்கோடிக் கரையிலே பிராமணவதை

87. பண்ணின தோஷத்திலும் மாதா பிதாவைக் கொன்ற தோஷத்திலும் போக

88. க்கடவாராகவும் இராமனாத சுவாமி துணை உ

## செப்பேடு எண் 87

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : இராமநாதபுரம் சீமையில் உள்ள மூப்பன் மார்கள்.
2. செப்பேடு பெற்றவர் : இளமனேரி நைனுக்குட்டிச் சேர்வைக்காரன்
3. செப்பேட்டின் காலம் : சகம், 1613 பிரஜோற்பதி ஆண்டு வைகாசி மீ 17 (கி பி. 1691)
4. செப்பேட்டின் பொருள் : வலையசாதி சாதிப்பிள்ளை அங்கீகாரமும், சலுகைகளும்.

இந்தச் செப்பேடு சேதுபதி மன்னரால் வழங்கப்பட்டது அல்ல. என்றாலும் மன்னரது ஒப்புதலின் பேரில் ஏற்பட்ட நியாயத் தீர்வு பற்றிய காரணத்தினால் இந்தச் செப்பேட்டில் கிழவன் என்ற ரெகுநாத சேதுபதி மன்னரது நாற்பத்துநான்கு சிறப்புப் பெயர்கள் விருதாவளியாக வரையப்பட்டுள்ளன. சேதுபதி மன்னரது முந்தைய செப்பேடுகளில் காணப்படாத சில சிறப்புப் பெயர்களும் இந்தச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. அவையாவன.

1. பாண்டிமண்டல பிரதாபனாச்சாரியான்
2. சோழ மண்டல பிரதிஷ்டாச்சாரியான்
3. தொண்டை மண்டல பிரசண்டன்
4. பஞ்சவர்ணப் பாவாடை விருதினான்
5. சிவசமயப் பரிபாலனன்.

இராமநாதபுரத்தையடுத்த வேளாண்தரவை வலையன் வீரமூப்பன் மகள் வீராயி திருமணம் ஆகாத நிலையில் இளமனேரி கிராமம் நைனுக்குட்டிசேர்வைக்காரனை சேர்ந்துகற்பவதியானாள். அதையறிந்த அவளது குடும்பத்தினர் அவளை ''தண்டனை பண்ணி உயிர்வதை செய்துவிட்டனர்'' அத்துடன் அமையாமல் நைனுக்குட்டி சேர்வைக்காரனை சேதுபதி மன்னர் முன் நிறுத்தி இறந்துபோன வீராயிக்கு பழிக்குப்பழி கொடுக்கவேண்டுமென கோரினர். மன்னரும் அவர்களது நியாயத்தை விளங்கி பழிக்குப் பழி கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

அதன்படி இறந்துபோன வீராயினது சடலத்தை ஒரு சிதையிலும், நைனுக்குட்டி சேர்வைக்காரனது தங்கை உடையக் காளை இன்னொரு சிதையிலும் உயிருடன் கிடத்திதீ வைத் தனர். அப்பொழுது முதிய மூப்பன்மார்களது மனம் மாறி சிதையிலிருந்து உடையக்காளை அகற்றி தங்களுக்கு பழிக்குப் பழியாகவும், பிள்ளைக்குப் பிள்ளையாகவும் தங்களது சாதிப் பிள்ளையாக எட்டுக்கிளை மூப்பன் மார்களும் ஒப்புதல் அளித்து அவர்களது சமுதாயத்தில் சாதிப்பிள்ளை யாகிவிட்ட உடையாக் களுக்கு சிலஉரிமைகளையும் சலுகைகளையும் வழங்கும் முகமாக வரைந்தது இந்த இசைவுமுறி பட்டயம் ஆகும்.

மீன்பிடி சமூகத்தைச் சேர்ந்த பரவர்களிடம் ''சாதித் தலைவன்'' இருந்து வருவது ''சாதிப்பிள்ளை'' யுடன் ஒப் பிடத்தக்கது. இன்றைக்குச் சரியாக முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் தங்களது சமூகத்தைச் சேர்ந்த கன்னியொருத்தி களவு மணத்தில் கற்பவதியானதற்காக அவளைக் கொன்றதுடன் அமையாமல் களவு மனத்தில் ஈடுபட்ட காதலனை பழிக்குப்பழி கோரிப்பெறும் நிலையினை அறியும் பொழுது அப்பொழுது நில விய சாதி வெறியின் பயங்கரமான பிடிப்பை புரிந்து கொள்ள முடிகிறது. மேலும், தமையன் செய்த குற்றத்திற்காக தங்கை உடையக்காள் உயிரோடு சிதையில் படுத்து உயிர்விடத் துணிந்த மன உறுதியும் அதன் காரணமாக மூப்பன்மார்களது மனச்சான்று விழித்துக் கொண்டு பெண் கொலை பாவத்திலிருந்து அவர்களை நீக்கி பெண்மைக்கு உயர்வு தந்தோர் வரிசையில் அவர்களை உயர்த்திக் கொண்டதை இந்தச் செப்பேடு தெரிவிக் கின்றது.

வேறு சில செய்திகளையும் தெரிவிக்கிற சாதனமாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது. வலையர் எனப்படும் சமூகத்தினர் இராமநாதபுரம் சீமையில் எந்தெந்த ஊர்களில் வாழ்ந்து வந்தனர் என்பதையும் அவர்கள் சில நாட்களில் எத்தகைய அன்பளிப்புகளை தங்களது சமூகப் பிரதிநிதியான சாதிப் பிள்ளைக்கு வழங்கி வந்தனர் என்பதையும் அவர்களது சமுதாயச் சடங்குகளில் சாதிப்பிள்ளையின் கடமைகள் என்ன என்பதையும் இந்தச் செப்பேடு விபரமாகச் சுட்டுகிறது. மேலும் இன்றைய சில ஊர்களுக்கு முந்தைய பெயர் எவை என்பதையும் இந்தச் செப்பேட்டில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக இன்றையவாளான்தரவை(வேளாண்தரவை)குசவன்குடி(குசவன் குழி),காஞ்சிரங் குடி,(காஞ்சான் ஊருணி),அழகன்குளம்(அழகங் குளம்) எம்மனங் கொண்டான் என் மண்டலமும் கொண்டான்) சுந்தரமடையான் (சுந்தரதாசிமடம்) என்பன அந்தப் பெயர்கள். முந்தைய ஊர்களது பெயர்கள் அடைப்புக் கோட்டுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. இதைப் போன்றே வலையர்களது எட்டு கிளைப் பெயர்களை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. 1. இராதான் கிளை 2. வதிபிடுங்கிகிளை 3. பூச்சிகிளை 4. பட்டங்கட்டிகிளை 5. வீரப்பின்ளைகிளை 6. படையன் கிளை 7. ஐவன் கிளை 8. கோனாண்டிக் கிளை இத்தகைய கிளைப் பிரிவுகள் பற்றிய விபரங்கள் எட்கார் தர்ஸ்டன் என்ற ஆசிரியர் தென்னிந்திய சாதிகள் பற்றி விரிவாக வரைந்த நூலில்‡ கூட காணப்படவில்லை. செப்பேடு குறிப்பிடுகின்ற ஊர்கள் அனைத்திலும் இன்று வலையர்கள் என்ற பிரிவினர் யாரும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்தச் செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ள வலையர்கள் மீன்பிடி தொழிலை உடைய மக்கட் பிரிவினராகும். சேதுபதி சீமையின் இன்னொரு பகுதியான கானாட்டின் காடுகளில் வேட்டையாடும் தொழிலை உடையவர்களைக் குறிக்க வலையர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அவர்கள் இவர்களைப் போல ''மூப்பன்மார்'' விகுதி சேர்ப்பதில்லை. மாறாக ''அம்பலம்'' என்ற விகுதியைத் தங்கள் பெயர்களில் இணைத்துக் கொள்கின்றனர்.

Edgar Thurston – Castes Tribes of South India. (1909) Vol. VII page. 273.80.

## செப்பேடு எண். 87

(நகல்)

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1667
2. கலியுகம் 4816 இதின் மேல்ச் செல்லா
3. நின்ற குறோதன ஷூத்தில் உத்திராயணத்தில் சிறிது
4. விலமாக மாஸ்த்தையில் பூறுவ பக்ஷத்தில் சத்தமி
5. யும் ஸத்திவாசரமும் அசுவதி நக்ஷசத்திரமும் சுப பிற நாமயோ
6. கமும் வணிகரணமும் பெற்ற சுபதினத்தில் தேறின விபகார
7. மாவது ராமேசுரத்திலிருக்கும் குருக்கள்மார் சபையாரும்
8. நயினாக்கள் ஆரிய மகாசெனங்களும் லக்ஷ்ச்சுமண தீற்த்தப்
9. பரிஷை விபகாரமாக ராமனாதபுரத்தில் வந்து ராசஸ்ரீ இ
10. ரணிய கெற்பயாசி முத்துக்குமார விசைய ரெகுனாதச் சே
11. துபதி காத்த தேவரவர்கள் சமுகத்தில் கரையேறு மிடத்தில்
12. கர்த்தாக்கள் கட்டளையிட்டது தளகற்த்தம் - வெள்ளை சே
13. ர்வை காரரவர்கள் -ள- பிறதானி ஆண்டி யப்பபிள்ளை ய
14. வர்(வ)கள் பெரிய கட்டளை இராமனாத பண்டார மவர்கள் சி

---

* இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகம். இராமநாதபுரம்.

15. த்திர மணிய காறன் இவர்கள் முன்னிலையாகப் பல நடுவ

16. ரையும் வைச்சு கொண்டு முன்பின்தட்டி ஞாயமானபடி

17. தரச் சொல்லி கட்டளையிட்ட பிறகாரத்துக்கு தேறின மத்தியஸ்

18. த்தர் புரோகுதம் சின்னய்யன் உப்பூர் வேதமய்யன் தேவிபட்ட

19. ணம் வெங்குட்டய்யன் ராமீசுரம் திம்மணா சாரியார் தனு

20. க்கோடி யாசாரியார் காமாச்சியப்பன் யெத்து வளிச் சேஷய்ய

21. ன் சுப்பிரமணியக் கவிராயர் கடல்துறை ராமனாத பிள்ளை அளம்

22. கணக்கு இருளப்ப பிள்ளை அட்டவணைச் சுப்பிறமணிய பிள்ளை கவ

23. றை சங்கரன் செட்டியார் திருமலை செட்டியார் வயிரவன் செ

24. ட்டியார் சூரியனாராயண செட்டி வங்காரு செட்டி ராமேசு வரம் சே

25. காமுட்டி ராமு செட்டி அலிப்புலி ராவுத்தர் உத்தமப் பணிக் கன் மயி

26. லேறி னாடான் இந்த மத்தியஸ்த்தர் கூடியிருந்து கோட்டை

27. வாசல்பிள்ளையார் சன்னதியிலே விபகாரம் தேறுகிறது

28. குருக்கள்மார் சபையார் வாய்மொழியும் அவர்கள் முறிந

29. றுக்கும் செயிதி அட்டவணையும் நயினாக்கள் ஆரிய மகா சென

30. ங்கள் முறிநறுக்கும் செயிதி யட்டவணையும் ருட மூலம

31. ாகப் பார்த்து கொண்டு அப்பால் பெரிய கட்டளை ராம னாத பண்

32. டார மவர்கள் அறையிலிருந்த தாம்பிர சாதனப் பிறக

33. ாரம் முன்நூற்றுப் பதினாழு வருஷம் தேறின செயிதிய

34. ளும் பரிஷை பட்டமார் எழுதிக் குடுத்த செயிதியட்ட வணை
35. யும் முன் —ா— திருமலைச் சேதுபதி காத்த தேவரவர்கள்
36. நாளையிலே பெரிய தெய்வ கன்னியா பிள்ளை யவர்கள்
37. முன்னிலையாக குருக்கள்மார் சபையாருக்கும் பரிஷை ப
38. ட்டமாருக்கும் தெரிந்த பத்திரத்துச் செயிதியும் — ா — பெரிய அய்யா
39. அவர்கள் கற்த்தாக்கள் நாளையிலேயும் —ா— விசைய ரெகுனா
40. தச் சேதுபதி காத்த தேவரவர்கள் நாளையிலேயும் நடந்து வ
41. ந்த காரியங்களுமெல்லாம் எத்து வெளிச் சேஷய்யன் எ
42. ழுதிக் குடுத்த செய்தி யட்டவணையும் இதுக ளெல்லாம் வாசித்து
43. ப் பார்த்து இதுகளிலேயிருத்த விபகாரங்க ளெல்லாம் தெ
44. ரிந்து கொண்டு தேறினது லஷ்ச்சுமண தீர்த்தக் கரையி
45. ல் முன்பின் நடத்த ஞாயம் குருக்கள் மார் சபையாரகை
46. யாடிவந்த மறாஷ்ட்டப் பரிஷையளும் சத்திரியப் பரி ஷை யளும் கு
47. ச்சரியார் வாணியப் பரிஷையளித்த வகையதாயங்க சகலமுமினி
48. குருக்கள்மார் சபையாரே அனுபவிக்க கட வராகவும்கொங் கணியப் பரி
49. ஷை இந்த வகை யாதாயங்கள் குருக்கள் மார் சபை யாருக்குப்
50. பாதியும் மடத்துக்குப் பாதியும் பரிஷைபட்டமார் கூட்டி வந்து கையா
51. டிவருகிற பரிஷையளுக்கெல்லாம் பத்துக்கு ரண்டு தீர்வை யும் இந்த
52. வகைப் பரிஷையாதாங்களெல்லாம் யெப்போதும் அற்ற படிக்கு கு

53. ருக்கள்மார் சபையாரே கையாடியனுபவித்து கொள்ளு
கிறது
54. இந்தப் பரிஷை யாதாயங்களை யதகடி பண்ணிநயினார்
கள் ஆ
55. ரிய மகாசனங்கள் கையாடின ஆதாயங்களெல்லாம் குருக்கு
56. மார் சபையாருக்குக் குடுத்து விடுகிறது இனிமேலும்
யாதாமொரு
57. வன் அதற்குண மாகரேகைப் படுத்தாமல் கையாடின
ஆதாயங்
58. களும் குருக்கள்மார் சபையாருக்குக் குடுத்து அரண்மனை
க்கு ஆயிரத்திரு நூ
59. றுபொன் அபாராதமும் யிறுத்துக் கட்டளை இட்டபுத்தி
யும் கேழ்க்க கடவ
60. ராகவும் என்று விபகாரம் தேறினபடியினாலே யிந்தப்படி
61. க்குச் சந்திராதித்தவரை சந்ததிப் பிறவேசம் இந்தப்
பரிஷை
62. யாதாயங்க ளெல்லாம் குருக்கள்மார் சபையாரே ஆண்டனு
63. பவித்துக் கொள்ளக் கடவராகவும் இதிலே குருக்கள்மார்
சபை
64. யார்பங்கு பாகம் தீருகிற போதெல்லாம் சங்கரக் குருக்கள்
65. முன்னிலையா தேர்ந்து சங்கரக்குருக்களுக்கு ரண்டு பங்கு
மற்றகு
66. ருக்கர்மார் சபைக்கெல்லாம் சனத்துக்கு ஒரு பங்குமாகப்
67. பற்றிக் கொள்ளுவராகவும் யிந்தத் தாம்பிரசாதனப் பிற
காரத்து
68. க்கு யிந்தப் பரிஷையாதாயங்களெல்லாம் குருக்கள்மார்
சபை
69. யாரைச் சாரப்பண்ணி நடத்தைபண்ணி கொண்ட பேர்
70. ள்கெங்கைக் கரையிலேயும் சேதுவிலேயும் கோடி சிவலி

71. ங்கப் பிரதிஷ்டை பண்ணின பலனும் கோடி கன்னிகா
72. தானம் பண்ணின பலனும் கோடி அக்கிரகாரம் பிறதிஷ்ட்டை
73. பண்ணின பலனும் அடைய்வராகவும் யிந்தத் தாம்பிற சாதன
74. பிறகாரம் சங்கரகுருக்கள் மேல்பங்கு குருக்கள்மார் சவை
75. யாருக்கு உதவியாயிருந்த உதையப் பெருமாளுக்கு ஒரு பங்
76. கும் சாமிக்கு ஒருபங்கும் புத்திரபவுத்திர பாரபரியந்தம்
77. அனுபவித்து வருவாராகவும் யிந்த தாம்பிற சாதன
78. த்தை யடியளிச்சவன் கெங்கைக் கரையிலேயும் சேதுவி
79. லேயும் கோடி கோ கத்தி பிறம்மகத்தி பண்ணினதோஷத்தி
80. லேயும் தன் மாதா பிதாவையும் குருவையும் கொன்றதோ
81. ஷத்திலேயும் போகக்கடவாராகவும் யிந்த சாதன மெழு
82. தினேன் ராயசம் முத்தரசுபிள்ளை மகன் றாமலிங்கம் எழுத்து
83. படிக்கு தாம்பிரசாதனம் தீர்ந்தது ஈசுரமூர்த்தி ஆசாரி
84. மகன் குழந்தை வேல் - ராமலிங்கம் துணை
85. ஆவத்தாருணன் உமாபதி சிதம்பரன் சுந்தரேச நயினரார்

## செப்பேடு எண் 87

(விளக்கம்)

1. செப்பேட்டின் காலம் : சகம் 1667 குரோதன வருடம் கி.பி. 1745

2. செப்பேட்டின் பொருள் : இராமேசுவரம் குருக்கள்மார் சபையாருக்கும், ஆரிய மகா ணங்களுக்குமான பிரச்சனை பற்றிய தீர்ப்பு உரை.

இராமநாதபுரம் மன்னர் முத்துக்குமார விசைய ரெகுநாத சேதுபதி திருமுன்னர் கொண்டு வரப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்புரையை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. இராமேசுவரம் லெட்சுமண தீர்த்தக்கரை வருவாய்களை அனுபவிக்கும் உரிமை சம்பந்தமாக இராமேசுவரம் குருக்கள் மகாசபையாருக்கும் நைனாக்கள் ஆரிய மகாஜனங்களுக்கும் இடையில் எழுந்த இந்த உரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக ஒரு குழுவினை மன்னர் அமைத்தார். வேத சாத்திரங்களையும் வியாகரண தருக்கத்தையும் மனுநீதியையும் கற்றுத் தேர்ந்த இந்தச் சான்றோர்களின் பிரச்சினையைத் தீர்க்க நியமனம் பெற்ற குழுவில் கீழ்க்கண்ட சாதாரண மக்கள் அங்கம் வகித்தது விந்தையாக இருக்கிறது. நியாயம் என்பது சகல மக்களுக்கும் பொருந்துவதுதானே!

1. புரோகிதம் சின்னையய்யன்
2. உப்பூர் வேதமையய்யன்
3. தேவிபட்டினம் வெங்கட்டையய்யன்
4. இராமேசுவரம் திம்மன் ஆசாரியார்
5. தனுஷ்கோடி ஆசாரியார்

6. காமாட்சியப்பன்
7. எத்துவெளி சேஷய்யன்
8. சுப்பிரமணியன் கவிராயர்
9. கடல்துறை இராமநாதபிள்ளை
10. அளம் கணக்கு இருளப்பபிள்ளை
11. அட்டவணை சுப்பிரமணியபிள்ளை
12. கவரைசங்கரன் செட்டியார்
13. திருமலைச் செட்டியார்
14. வைரவன் செட்டியார்
15. சூரியநாராயணன் செட்டி
16. வங்காரு செட்டி
17. கோமுட்டி ராமு செட்டி
18. அலிப்பிலி ராவுத்தர்
19. உத்தமபணிக்கன்
20. மயிலேறி நாடான்

இந்த இருபது நடுவர் குழுவுடன் தளகர்த்தன் வெள்ளையன் சேர்வைக்காரர், பிரதானி ஆண்டியப்பபிள்ளை, பெரிய கட்டளை இராமநாத பண்டாரம், சித்திர மணியக்காரன் ஆகிய நால்வரும் இந்த ஆய்வில் முன்னிலை வகித்தனர். இவர்கள் ராமநாதபுரம் கோட்டை வாசலில் உள்ள பிள்ளையார் சன்னதியிலமர்ந்து இரு தரப்பினரது வழக்கினைக் கேட்டனர். சம்பந்தப் பட்டஆவணங்களைப் பரிசீலனை செய்தனர். இதனை விவகாரம்''தேறுகிறது'' என வரி எண் 27ல் வட்டார வழக்காகக் குறிக்கப்பட்டுள்ளது.

முதலில் குருக்கள் மகாசபையாரது வாய்மொழியையும் அவர்கள் வசமிருந்த முறிநறுக்குகளையும் செய்தி அட்டவணைகளையும் பின்னர் நைனாக்கள் ஆரிய மகாஜனங்கள் முறி நறுக்கு செய்தி அட்டவணைகளையும் படித்து பார்த்து பரிசீலித்தனர். இரு தரப்பினரும் இராமேசுவரம் கோயில் சம்பந்தப்பட்டவர்கள். ஆதலால் இராமேசுவரம் கோயில் ஆதின கர்த்தரது வசமிருந்த செப்பேட்டு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன. அவைகளின்படி இந்த வழக்கிற்கு முன்னூற்றுப் பதினேழு ஆண்டுகள் முன்பு இருந்து சம்பந்தப்பட்ட செய்திகள், லட்சுமணத் தீர்த்தக்கரை பட்டர்மார் எழுதிக் கொடுத்த செய்தி அட்டவணை, திருமலை

சேதுபதி மன்னர் ஆட்சிக்காலத்தில் பெரிய தெய்வக்கன்னியா பிள்ளை அவர்கள் முன்னிலையாக குருக்கள் மகாசபையாரும். ஆரிய மகாஜனங்களும் ஒப்புக்கொண்டவைகளையும் பின்னர் கிழவன் சேதுபதி. முத்துவிஜய ரெகுநாத சேதுபதி மன்னர்கள் நிகழ்வுகளையெல்லாம் வாசித்துப்பார்த்து அந்த வழக்கின் முழுமையான பின்னணி, முன்னர் வழங்கப்பட்ட நியாங்கள் நடப்பு ஆகியவைகளை நன்கு உணர்ந்தவர்களாக நடுவர்கள் முடிவுக்கு வருகின்றனர்.

அவர்களது தீர்ப்புரையின்படி லெட்சுமண தீர்த்தக்கரையில் குருக்கள்மார் சபையார் கையாடி வந்த மகாராஷ்டிரப் பரிஷை, க்ஷத்திரியப் பரிஷை குச்சாரியர் (குஜராத்) வாணிபப் பரிஷையாரிந்த வகை ஆதாயங்களை அனைத்தையும் குருக்கள் மார் சபையார் அனுபவிக்கக் கடவர். கொங்காணியப் பரிஷை ஆதாயங்களை குருக்கள் மகாசபையார் பாதியும் இராமநாத பண்டார மடத்திற்கு பாதியுமாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இவைதவிர ஆரிய மகாஜனங்கள் கையாடி வருகிற பரிஷைகளுக்கு ஆதாயத்தில் இருபது விழுக்காடு குருக்கள் மகாசபையாருக்கு கொடுத்துவிட வேண்டியது[4]. இதுவரை இவ்விதம் செய்யாது ஆரிய மகா ஜனங்கள் அதகடி பண்ணியதை குருக்கள் மாசபையாருக்குக் கொடுத்துவிடுவதுடன் இவ்விதம் மேலும் நடந்துவிடக் கூடாதெனக் கண்டிப்பு செய்ததுடன் தவறுக்கு அரண்மனையாருக்கு ஆயிரத்து இருநூறு பொன் அபராதம் அளிக்க வேண்டியது.

இந்தப்படி குருக்கள் மகாசபையார் பங்கு பாகம் தீருகிற பொழுதெல்லாம் சங்கர குருக்கள் முன்னிலையாக இருந்து வர வேண்டியது. அதற்காக ஆதாயத்தில் குருக்கள்மார் சபையாரது ஜனங்களுக்கு தலைக்கு ஒரு பங்கும் சங்கர குருக்கள் இரண்டு பங்கும் பற்றிக் கொள்ள வேண்டியது என முடிவு செய்யப்பட்டது. இதற்கும் மேல் கூடுதலாக வருகின்ற பங்கில் குருக்கள் மகா சபையாருக்கு உதவி இருந்த உதயபெருமாளுக்கு ஒரு பங்கும் சேரவேண்டியது என நடுவர்களது முடிவு இந்தச் செப்பேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், கல்வியிலும் ஞானத்திலும் சிறந்து, மக்களது வழிகாட்டிகளாக சமுதாயச் செல்வாக்கு பெற்றிருந்த அந்தணர்களுக்கிடையில் ஏற்பட்ட உரிமைப்பூசலை சேதுபதி மன்னர் எவ்விதம் தீர்த்து வைத்தார் என்பதையும், அந்த தீர்வு ஏற்படுவதற்கு நியமனம் பெற்ற நடுவர்கள் வாய்மொழி ஆவணங்கள் அனுபவம் பற்றிய செய்திகளை கி.பி. 1428ல் இருந்து சேகரித்து அறிந்த பிறகு தங்களது முடிவினைத் தெரிவித்துள்ள பாங்கு சேதுபதி மன்னரது நீதித் துறைக்கு சிறப்பளிக்கக் கூடியதாக உள்ளது. ஆதலால் இந்தச் செப்பேடு நீதித்துறை வரலாற்றின் சிறப்பான ஏடாக விளங்கு கிறது. மற்றும் வடபுலங்களில் இருந்து வந்த இந்த ஆரிய மகா ஜனங்களது குடியேற்றம் இராமேசுவரத்தில் ஏற்பட்டது. கி.பி. 1428 என்ற முக்கியமான வரலாற்று நிகழ்வையும் இந்தச் செப்பேடு சுட்டாமல் சுட்டுகிறது.

இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தளகர்த்தர் வெள்ளையன் சேர்வை சேதுமன்னரது மிகச் சிறந்த தளபதி என்பதையும் மதுரை வரலாறு தெரிவிக்கின்றது. மற்றும் அவரது மாமனாரான தளகர்த்தர் வைரவன் சேர்வைக்காரரைப் போன்று இவரும் அறம்பல ஆற்றி அரும்புகழ் கொண்டவர். இராமநாத பண்டாரம் எனக் குறிப்பிட்டிருப்பது இராமேசுவரம் திருக்கோயில் நிர்வாகத்தை அப்பொழுது கண்காணித்து வந்தஆதின கர்த்தரின் பொதுப்பெயர். இன்னொரு நடுவரான சித்திர மணியக்காரன் என்பவர் சேதுபதி மன்னரது சிறந்த அலுவலர் என்பதும் பரமக் குடியைச் சேர்ந்தவர் என்பதும் தெரிய வருசிறது. இன்னும் பரமக்குடியில் *மணியக்காரன் சத்திரம்* என்ற பெயரில் உள்ள அன்னசத்திரம் இந்த அலுவலரை நினைவூட்டுவதாக உள்ளது.

கரையேறுமிடத்தில் (வரி 11) தேறுகிறது (வரி 27) கையாடி வந்த வரிகள் (46, 41, 57) அதகடி (வரி 54) அடியளிச் சவன் (வரி 78) என்பன இந்த வட்டாரத்திற்குரிய சொற்களா கும். வரி.57ல் குறிப்பிடப்பட்டுள்ள சொல் ''ரேகைப் படுத் தாமல்'' ஒரு அருமையான சொல்லாட்சியாகும். கைவிரலைப் பயன்படுத்தி ஒருபொருளைக் கையாளும்பொழுது, நமது பார் வைக்குப்படாமல் நமது விரல்கள், உள்ளங்கை, ஆகியவைகளில் உள்ள சிறு மெல்லிய கோடுகள் அந்தப் பொருளின்மீது படிந்து விடுவது இயல்பு. ஆதலால் தெரியாமல் கூட மீண்டும் தவறு செய்யக்கூடாது என்பதற்கு இந்தச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

## செப்பேடு எண் 88

(நகல்)

1. சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலே சுரன்அரிய ராயிரதளவிபாடன் பாசைக்கு தப்
2. புவார் கண்டன் மூவராயிர கண்டன் கண்ட நாடுகொண்டு கொண்டநாடு கொடாத
3. ான் பாண்டிமண்டல தாபனாசாரியன் சோழமண்டலப் பிரதிஷ்டாபனாச்சாரிய
4. ன் தொண்ட மண்டலப்பிர சண்டப் பிரசண்டன்யீழமுங் கொங்கும் யாட்பாண
5. தேசமும் எம்மண்டலமுங் கெச வேட்டைகொண்டருளிய ராசாதிராசன் ராசபர
6. மேசுரன் ராச மார்த்தாண்டன்ராச கெம்பீரன்ராசமனோ பயங்கரன் உரி கோல் சுர
7. தானன் அந்தம்பிரகண்டன் சாடிக்காரர்கள் கண்டன்சாமித் துரோகியள் மிண்டன்
8. பரதழவிபாடன் துஷ்டநிக்கிரகசிஷ்ட பரிபாலன் வேதியர் காவலன் பட்டமானங்க
9. ாத்தான் மலைகலங்கிலும் மனங்கலங்காதான் பஞ்சவன்ன ராயராவுத்தமிண்டன்
10. வன்னியராட்ட ந்தவிழ்த்தான் ஒட்டிய ராட்டந்தவிழ்த் தான்து

---

‡ கள ஆய்வின்பொழுது, இந்தச் செப்பேடு பெருவயல் திரு. எஸ். மீனாட்சி சுந்தரத்திடம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு நூலாசிரியரால் படி எடுக்கப்பட்டது.
வடிவம் :

11. லுக்க தளஎிபாடன் துலுக்கராட்டந்தவிழ்த்தான் திலத நுதல்மடமாதர் மடலெ
12. ழுதவருசுமுகன் எிசையலட்சுமிகாந்தன் காமினிகந்தப்பன் கலைதெரியும் வி
13. ற்பனன் சகலகலைவல்லவன் சண்டபிரசண்டன் சத்தியரிச் சந்திரன் சங்கீதசாயுத்
14. தியவித்தியாவினோதன் வீரவெண்பாமாலை விருதரசர் மணவாளன்இழஞ்சிங்கத
15. ளந்சிங்கம் பகைமன்னர் சிங்கம் பரராசசிங்கம் ஆத்தில் பாச்சிகடலில் ப
16. ரச்சிதாலிக்கு வேலி தர்மபரிபாலன் அடைக்கலங்கரத்தான் கொட்டமடக்கி வ
17. ய்யாளிநாராயணன் யிவுளி பாவடி மிதித்தேறுவார் கண்டன் துரகரேபந்தன் நாடு க
18. லக்கி தொண்டியந்துறைக் காவலன் தண்டுவார் மிண்டன் வலியச்சருவிமதுரை மா
19. னங்காத்தான் செங்காவிக்குடையான் கெருடக்கொடி அனுமக்கொடி சி
20. ங்கக் கொடி யாழிக்கொடி புலிக்கொடி மீனக்கொடித்துவ சன் வில்லுக்கு
21. விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் பொறுமைக்குத் தர் மன்புகழுக்கு குமுண
22. ன் செம்பிவளநாடன் தேவை நகராதி பன்சேதுகாவலன் சேதுமூலரட்ச
23. ா துரந்தான் ராமனாதசுவாமி காரிய துரந்தரன் ஏழை பங்காளன் எதுத்தார்கு
24. மார்பிலாணி கிரிதுற்க செலதுற்க மதில் துறக விபாடன் சேதுமார்க்க
25. ந்தளவினாச தர்ம பரிபாலனம் பண்ணிவிச்ச ராசமானிய ராசஸ்ரீ ஹிரணிய
26. கெற்பயாசியாகிய ஸ்ரீமது ரவிகுல முத்துக்குமாரவிசைய ரகுநாதசேதுபதி கா

27. த்த தேவரவர்கள் பிறிதிவி ராச்சியம் பரிபாலனம் பண்ணி அருழாநின்ற

28. நாளா வன கலியுகம் 4842ல் சாலிய வாகன சகாத்தம் 1663

29. யிதன்மேல்ச்செல்லாநின்ற துற்மதி ஸ்ரீ சித்திரை மாதம் 1 தேதி ஆதித்தவாரமுந் சத்

30. தமியும் உத்தராட நட்சத்திரமுந் சித்தி நாமயோகமும் மறு வால வாகணமும்ரிஷ

31. பலக்கினமுங்கூடின புண்ணிய தினத்தில் பெருவயல்ரண பலி முருக சுவாமி

32. மியாருக்குச் சேதுராசாவின் பேட்டை பல ராவணபொம்மு செட்டியா

33. ர் மாணிக்கன் செட்டியார் வயிரவன் செட்டியார் சிவசங் கரன்செட்டியார்

34. வயிரவன்செட்டியார் முதலாகிய பலரும் மத்துமுள அன் பத்தாறு தேசத்து

35. ப்பலரும் மகமை நிறுத்திக் கொடுத்த பரிசாவது ரணபலி முருகன் சுவாமிமுருகன்

36. சூற்பகை செட்டி குமரன் என்ற முன்னோர்கள் நூலின் படிக்கு எங்கள் செட்டு விய

37. ா பாரத்துக்குக் குருமூத கர்த்தற்ராகிய ரணபலிமுருக சுவாமியாகச்சே சு

இரண்டாவது பக்கம்

38. வாமியாருக்கு அபிஷேக நெய்வேதனம் திருமாலை திரு விழக்கு முதலாகிய

39. சோடசோபகாரத்துக்கு மண்டபம் கட்டிவிக்கிறதுக்கு திரு விழா உச்சப மண்ட

40. பப்படி தர்மம் நடத்தைக்கும் திருநந்தவன முதலாகிய கயின்கிரியங்களு

41. க்கு மகமைநிறுத்திக்குடுத்த பரிசாவதுசேதுராசாவின் பேட்டையை நோ

42. க்கி வருகிற வியாபாரம் பாக்குமிளகு பலசரக்குசெம்பு சவுளிப் பஞ்சுப்

43. பொதிக்கெல்லாம் பொதிஒன்று அரைப்பணமும் மத்த நெல்லுக்காய்க தானி

44. யம் நவதானியம் வெத்திலை பரித்தி மத்தச்சரக்கு மத்த முள்ள வியாபாரப்

45. பொதியளுக்கும் சீமைக்கும் உள்ளபடிக்கு மகமையும் ரண பெலி முருக சுவா

46. மியாருக்கு மகமை நிறுத்தி தானம் பண்ணிக்குடுத்தபடியி னாலே ஆசந்திரா

47. ற்கஞ் சந்திராதித்தவரை சந்ததிப் பிரவேசமுள்ள வரைக் கும் குடுத்து வர

48. க்கட வோமாகவும் இப்படிக்கு நடந்துவருகிற மகமை தற்மத்து

49. க்கு யாதமொருவர் வாக்கு சகாயம் அற்த்த சகாயம் சரீரசகாயத்

50. துடனேயுங்கூட பரிபாலனம் பண்ணினவர்கள் காசியிலே சேதுவி

51. லேயும் மத்தப்புண்ணிய ஸ்தலங்களிலேயும் கோடிபிரம்ம பிரதிஷ்டையும்

52. கோடி விஷ்ணுப்பிரதிஷ்டையும் கோடி சிவலிங்க பிரதிஷ் டையும் கோடி

53. பூதான கோதான கன்னிகாதான சோடசமஹாதானங் களையும் பண்ணினாலெ

54. ந்தக்சுகிர் தவிஷேச முண்டோ அந்தச் சுகிர்த விசேஷங்க ளையும் அஷ்ட

55. யீசுபரியங்களையும் வங்கிஷாபிற்த்தியுமடைந்து பலசாதகங் களிலேயு

56. ம் எண்பத்தோரு கோடி சொற்கமண்டலங்களிலே உள்ள வைபோகங்களை

57. அடையக்கடவாராகவும் இந்த தர்மத்துக்கு யாதாமொருவ ர் அகிதம் பண்ண நினைத்தா

58. லும் அவர்கள் கெங்காதீர்த்திலேயும் ஸ்ரீ ராமதனுக்கோடி யிலேயும் கோடிப் பிரமஹ

59. த்தி கோஹத்தி சிசுஹத்திஸ்திரிஹத்தியும் பண்ணின தோ ஷத்தையும் மாதா பிதாவை வ

60. தை செய்த தோஷத்யையும் அடைந்து அனேக கொடிய ரோகத்தையும் அன்ன வவஸ்தா

61. பந்தத்தையும் லெட்சயும் புத்திரச் சயத்தையும் அடைந்து மறுமையிலேயும் வைவசுத

62. பட்டினத்திலே தென்பாரிசத்தில் இருக்கப்பட்ட விராள கி ராள் உணர்த்த கோச னென்

63. னப்பட்ட இமகிங்கிராயளயிம் படான் தெண்டினையும் இருபத்து எட்டுக்கோ

64. மாவூர்வாதி நரகத்திலோ அழுந்தக் கடவாராகவுமென்று இந்த இருவகைச்

65. சபதங்களையும் இருவகைக்கருமங்களும் மகமையிலே நட த்தினபேருக்கு

66. வாகக்கடவதென்று பலர் சகலரும் சம்மதியாக மனோ வாக்குக் காயகருமங்

67. களுடன் சபிச்சு அவரவர் பெரும்புண்ணியம் ஹஸ்தவிகிதங் களும் வகிச்

68. சு பட்டயங்குடுத்தபடியினாலே மகமைத் தற்மத்தை அபி விற்தியாக ந

69. டத்திவிச்சுக்கொள்ளக்கடவார் களாகவும் இந்தத் தாலிகா சாதனப்படிக்கு தா

70. ம் பிரசாதனம் சிலாசாதனமும் பெருவயல் ரணபலி முருக சுவாமி சன்ன

71. தித் தானத்தார் தலத்தாரும் பண்ணிவிச்சுக் கொள்ளக் கடவாராகவும் இந்த

72. ப்படி சேதுராசாவின் பேட்டைப்பல ஹஸ்தலிகிதம் போட்டு விச்சு ஏடு

73. தொட்டுக்குடுத்தபடிக்கு எழுதினேன் விசுவகுல வங்கிஷத் தில் மதுரை நாலாங்கார்

74. யன் சட்டையப்பன் எழுதினது

## செப்பேடு எண் 88

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் ; இராமநாதபுரம் சேதுராசன் பேட்டை வணிகர்கள்

2. செப்பேடு பெற்றவர் : பெருவயல் இரணபலிமுருகன் கோயில் தானத்தார்

3. செப்பேட்டின் காலம் : சகம் 1663 துர்மதி சித்திரை (கி.பி. 1741)

4. செப்பேட்டின் பொருள் : மேற்படி கோயிலுக்கு மகமை ஏற்படுத்தியது.

இந்தச் செப்பேட்டின் தொடக்கமாக இராமநாதபுரம் மன்னர் குமாரமுத்து விஜயரெகுநாதசேதுபதியின் விருதாவளியாக எழுபத்துநான்கு சிறப்புப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முந்தையச் செப்பேடுகளில் கண்டதைத் தவிர்த்து விருதரசர் மணவாளன், யாழிக்கொடி, புலிக்கொடி, மீனக்கொடி துவசன், சேதுமார்க்க தள வினாச தர்மபரிபாலனம் பண்ணிவிச்சராச மானிய ராசா என்ற மூன்று புதிய விருதுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மன்னரது பெருமையைப் புகழ்வதாகும்.

தேவிபட்டினத்தை அடுத்த பெருவயல் கிராமத்தில் தளவாய் வயிரவன் சேர்வைக்காரரால் நிர்மாணிக்கப்பட்டது இரணபலி முருகையா திருக்கோயிலாகும். இந்தக் கோயிலின் பூஜை முதலியவைகளுக்கு அதே தளவாய் முதலூர், சக்கிரவாளநல்லூர் சதுர்வேதமங்கலம், பாம்பாட்டி, பாஞ்சார், ஆகிய கிராமப் பகுதிகளை சொந்தத்தில் வாங்கி தானம் வழங்கியிருந்தார். சேதுபதி மன்னரும் சாமிப்பட்டணம், கலையனூர், கிராமங்களையும், சிவகங்கை மன்னர், முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவர்

திருவெற்றியூர் கிராமத்தையும் அறந்தாங்கித் தொண்டமான்கள் அவத்தானிகோட்டை, சிரத்தானியேந்தல் ஆகிய ஊர்களையும் திருநெல்வேலிப் பாளையக்காரர் முத்துவிஜய சொக்கலிங்க நாயக்கர் நம்பிபுரம் உட்பட்ட பன்னிரெண்டு ஊர்களையும் இதே கோயிலின் கைங்காரியங்களுக்காகத் தானம் அளித்துள்ளனர். இதனை தொடர்ந்து இராமநாதபுரம் பேட்டை வணிகப்பெரு மக்களும் இந்தக் கோயில் பயன்பாட்டுக்கு மகமை ஒன்றை ஏற்படுத்தியதை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

இராமநாதபுரம் பேட்டைக்கு வரப்பெறுகின்ற பஞ்சு, பாக்கு மிளகு, பலசரக்கு செம்பு ஆகியவைகளுக்கு பொதி ஒன்றுக்கு அரைப்பணமும் நெல், நவதானியம், வெற்றிலை, பருத்தி முதலியவைகளுக்கு உரிய மகமையும் வசூலித்து இந்தத் திருக் கோயிலின் அபிஷேக, நெய்வேதன, திருமாலை, திருவிளக்கு, திருவிழா, திருநந்தவனம், ஆகியவைகளுக்கு வழங்குவது என்ற இந்த வணிகர்களின் இசைவுமுறியாக இந்தச் செப்பேடு அமைந் துள்ளது.

முந்தைய நூற்றாண்டுகளில் சேதுபதிகளது அரசப்பிரதிநிதி யாக விளங்கிய வணிக நாயகர் சீதக்காதியின் முயற்சியினால் ரெகுநாதக் கிழவன் சேதுபதியின் ஆட்சியில் செழுமை பெற்ற கடல் வாணிகமும், உள்நாட்டு வணிகமும் முத்துக்குமார விஜய ரெகுநாத சேதுபதியின் ஆட்சியிலும் வளர்ந்துவந்துள்ளதை இந்தச் செப்பேட்டிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. பாக்கு, மிளகு ஆகிய பொருள்கள் இலங்கையிலிருந்தும், செம்பு டச்சு வணிகர்களால் வெளிநாட்டிலிருந்தும் கீழக்கரை, தேவிபட்டினம் கடல் துறைகளின் வழியாக இறக்குமதி செய்யப்பட்டன. கீழக் கரை சொக்கநாதசுவாமி கோயில் குருக்களுக்கு இரெகுநாதக் கிழவன் சேதுபதி ஏற்படுத்திய மகமையிலும் (செ. எண். 25) இதே பொருள்கள் கீழக்கரை துறைமுகத்தில் கையாளப்பட்டது ஒப்புநோக்கத்தக்கது.

மகமை ஏற்படுத்திய வணிகப் பெருமக்களின் இயற்பெயர் களிலிருந்து அவர்கள் தெலுங்கு வைசியர், தமிழ் ஆயிரவைசிய செட்டியார்கள் என தெரியவருகிறது. பயில்கின்ற மொழியி னாலும் அன்றாட பாவனைகளிலும் இந்த வணிகர்களிடையே வேறுபாடுகள் மிகுந்து இருந்த பொழுதிலும், சமய நம்பிக்கையில் மிகுந்த ஒருமைப்பாட்டுடன் இயங்கி வந்தனர். ஹாலாஸ்ய

புராணத்தில் மதுரைத் திருக்கோயிலின் இறைவர் சொக்கநாதர் நிகழ்த்திய அறுபத்திநான்கு திருவிளையாடல்களில் ஐம்பத்தியேழாவது திருவிளையாடலில் திருநீலகண்டசிவனார் தமது திருக்குமரன் குமரவேலை மதுரை நகர் செட்டி ஒருவரது மூங்கைப் பிள்ளையாக அவதரிக்கச் செய்யுமாறு சபித்த கதையினை இந்தச்செப்பேடு நினைவு கூர்கிறது. ஆதலால் இந்த வணிக மக்கள் முருகப்பிரானை தங்களது செட்டு வியாபாரத்துக்கு ''குருமூர்த்தக் கணத்தவர்'' என இந்தச்செப்பேட்டில் குறிப்பிட்டுள்ளனர். (வரிகள் 36, 37).

இந்த தர்மத்தை நிறைவேற்றி வைத்த சுகிர்தத்திற்கும் அகிதம்பண்ண நினைத்தவர்களுக்கும் முறையே ஏற்படும் பலன்களையும், பாதகங்களையும் இந்தச் செப்பேடு சுட்டிக்காண்பித்தபோதிலும் இந்த மகமை இன்று - ஏன் பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்படவில்லை. சமயத்தை வாழ்க்கையின் செம்பாகமாகக் கொண்டொழுகும் பண்பு மக்களிடம் மறைந்து விட்டதும் அதனை ஊக்குவித்த அரசியலமைப்பு நாளடைவில் அடியோடு மாறிவிட்டதும் இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இன்னொரு செய்தியையும் இந்தச் செப்பேடு குறிப்பிடுகின்றது. பொதுவாக செப்பேடுகளைத் தயாரிப்பதற்கு முன்னர் அதில் வரையவேண்டிய பொருளை முதலில் ஏட்டில் எழுதி படித்துக்காண்பித்து, சம்பந்தப்பட்டவர்களது இசைவினைப் பெற்ற பின்னரே அதனை வரைந்தனர் என்பதாகும். இந்தச் செய்தியை ''தங்களது இருகரங்களாலும் தொட்டுக்கொடுத்த பின்னர்'' என்ற செப்பேட்டு வரி தெரிவிக்கின்றது.

## செப்பேடு எண் 89

(நகல்)

1. நந்தன வருசம் ஆவணி மாசம் 17தேதி இராமேசுவரத் திலிருக்கும் றாமநாதக

2. வாமி கோவில் பூசகாள் குருக்கள் சபையார் நயினா ஸ்தானிகாள் மு

3. தலான ஆரியமகாஜனங்கள் 512 பேர்களுக்கும் தேவர் கட்டளை

4. ரெகுநாத குருக்கள் உடையார் தேவர் கட்டளை பெரிய நயினானும் நா

5. த அய்யர் உடையவர்கட்டளை வாமதேவ குருக்கள் நாயக்கர் கட்ட

6. ளை ஈசுரபட்டர் பிரதானிகட்டளை ஆதிநாராயணபிள்ளை முதலிய பெ

7. ரியதனக்காரருக்கும் பிச்சகட்டளை இராமநாதபண்டாரம் யெளுதிக்குடு

8. த்த உடன்படிக்கை சாதனம் அசரத்து நவாபு அவர்கள் திவானி யத்தில் சே

9. துபதி ஆண்டவர்களை பிடித்து கொண்டுபோயி திருச் சுனாப்பளி

10. யில் வைத்துக்கொண்டு சீமை வுரோட்டுக்கு கட்டிக் கொண்டதிநாலே

11. கோவில் பூசைகளும் கட்டளைகளும் நடவாமல் போனதால் நீங்கள்

12. யெல்லோரும் ஒன்று சேர்ந்து சென்னபட்டணம் போயி ரா ரா திவா

13. ன் ராயரவர்களையும் அசரது நவாபு அவர்களையும் கண்டு பேட்டி செயி
14. வித்து கோவில்கட்டளை கிறாமங்களை யென்னிடம் சாரி செய்ய வேணு
15. மென்று சேதி அட்டவணைமூலம் தெரியப்படுத்திக் கொண்டதால் எங்
16. கள் நினைப்புபடி யென்னிடம் கிராமங்களை விடும்படி பரவானாவும் மகா
17. சனங்களுக்கு கவுல் நாமாவும் குடுத்திருப்பதால் யெஸர் கட்டளை கிறாம
18. வரும்படிகளையும் இன்னம் வரக்கூடிய நிலங்களின் வரும் படியை
19. யும் மற்றயெல்லா வரும்படியும் நான் ஒரே மொத்தமாக கசானா
20. களஞ்சியம் சேர்ப்பிவித்து சப்திக்கு முன் திருவாபரண முதலியது கருவூ
21. லம் தான கணக்குப்படிக்குள்ள சொத்துக்கள் தானி காளிடமும் யாத்தி
22. ரை சனங்கள் றாசாக்களாலும் சுவாமிக்கி குடுக்கப்பட்டப் பாத்தரம் பட்
23. டு பரிவட்டம் வாகனம் விறுது ஆனை குதிரை பசுமாடு முதலியதும் கோ
24. வில் கணக்கு சொக்கப்ப றாச சேகரறாசர் கட்டளை கல் வெட்டுப்படியும் விசு
25. வநாத நாயக்கர் வீரப்பநாயக்கர் அவர்கள் கட்டளைப் படி கெங்கை காவ
26. டி 5-3, 5-2 பங்கில் சுவாமி பங்கையும் உண்டியல் காணிக்
27. கையும் முத்திரை கணக்கு 'தாக்கல்படிக்கு உள்ளதையும் வாயி மூப்புக்காரணி
28. யர்ச்சகரான நயினார் தானிகளும் வைத்து பராமரித்தும் சுவாமி நை
29. வேத்தியம் முதலியன கையிங்கிரியம் செய்யு மிறாசிதார் களை வேலை தாள்

30. வன்னியில் கண்டித்தும் கோ ூல் சொத்துக்கள் யிருப்பி டங்களில் தா

31. னிகாள் முத்திரை போட்டு வந்த படிக்கும் கட்டளைக் காரர்களால் கொடுக்கும்

32. சாமன்களை ஆரிய மகாசனங்கள் மிராசுதார நயினா ஸ் தரனி

33. காள் முன்னுக்கு வாங்கி சுவாமிக்கு! உபயேசகப்படுத்திக் கட்டளை கணக்கி

34. ல் யேர்ப்பட்ட சுவந்திரம் ஊதியங்களை பெற்று கொண் டும் பரிவட்டம்

35. கட்டி மரியாதை செய்துவந்ததில் கட்டளை சுவந்திரம் ஊதியம்

36. ஒண்ணாகிவி'்டதால் நயினா தானிகாள் யெல்லாரும் இருந்து

37. யேர்படுத்திய கணக்குப்படி வருஷம் 1க்கு திருக்கை மருக் கை வராக

38. ன் பொன் 1000 பொன்னும் சுவந்திரம் முதலிய்தும் பெற் றுக்கொள்ளவே

39. ணுமென்று ம ாரா நாயக்கர் கட்டளை கோவில் காரியம் ஈ

40. சுரபட்டர் இடத்திலிருந்த சொத்துக்களும் கிராமங்களும் யென்

41. னிடம் சேர்ந்துவிட்டதால் அவர்களை மாமுல்படி கோவில் காரி

42. யம் நயினாஸ்தானிகள் கூடயிருந்து பார்த்தும் பெரிய அறை

43. யில் சகல அபிஷேக சாமான்களையும் காவடிகளையும் பார்வையி

44. ட்டு அபிஷேகம் செய்ய சீட்டுக்குடுக்கவேணுமென்றும் காணிக்

45. கை உண்டியல் முதலானதும் பெரியஅறை மிறாஸ் சேது

46. ப்பண்டாரம் உத்தரவாதத்தில் இருக்கும் அறையும் மத்த சொத்து

47. க்கள் இருக்கும் அறைகளிலும் மத்த முத்திரையுடன் ஈசு பர பட்டர்

48. கோவில் முத்திரையும் போட்டுவர வேணுமென்றும் ஈசுர

49. பட்டர் கட்டளைக்கி யேர்பட்டிருந்த வருஷம் 1க்கு பொன் 120 பணம் 8 ம்

50. சாதமும் பெத்துகொள்ள வேணுமென்றும் பிரதானி க

51. ட்டளை ஆதிநாராயணபிள்ளை பாத்தியத்திலிருந்த கட்ட ளைகளையும்

52. சொத்துக்களையும் சேர்த்து விட்டதால் அந்தக் கட்டளை களில் யே

53. ர்பட்ட வருஷம் 1க்கு பொன் 100 பொன்னும் நாள் ஒன் றுக்கு நாலரை சாதமும் அவர்கள்

54. பெத்துக்கொண்டு கோவில் சகல வரவு செலவு கணக்கு களும்

55. மேல்ப்பார்த்து யென்னுடைய மடத்துக்கு சொந்த தஸ்த ரமும் காப்பா

56. த்தி வரவேணும்மென்றும் நடுவர் முன்னிலையில் நீங்கள் சொன்

57. னதை நானும் ஒப்புக்கொண்டு இந்த சாசனம் கொடுக்க இசவு கு

58. டுத்தபின் யெனக்கு கோவில் விசாரனை தர்மகர்த்தாயெ ன்ற பேரு

59. ம் கன்னியதானமுன்னுக்கு சன்னாசி முத்திரையும் குடு த்து

60. ஆறுகால் பீடத்தில் வைத்து பரிவட்டம்கட்டி சேதுராம னாத பண்

61. டாரம் என்ற பேறும் ராமநாதந் யென்று ஒப்பத்தோடும் கு

62. டுத்தும் ஆதியில் பிச்சைக்கட்டளை மடத்தில் யென்னெயி லிருந்து காரி

63. யம் பார்க்கவும் மடம் சிலவுக்கு வடிச்ச 12 சாதமும் கோவில்

64. கிராமத்தில் நாலரை நிலமும் அனுபவித்துக்கொள்ளும்படி செய் திருப்ப

65. தால் சுவாமி காரியம் தவராமல் பாத்துவரக்கடவேனாக வும் தவ

66. றினால் நடுவர்களும் நீங்களும் செய்யும் பஞ்சாயத்துக் குள்ளாகி

67. யிருப்பேனாகவும் இந்தபடிக்கி நானும் நீங்களும் எங்கள்

68. சந்ததியாரும் யெனக்குப்பின் யென்னப்போல் நேமுகமாயி வ

69. ரப்பட்ட தர்மகர்த்தா பண்டாரங்களும் வளி வளி பரம்பரை

70. யாக நடந்து கொண்டு வரக்கடவராகவும் உ ராமநாதந்

71. இதற்கு அறியும் சாச்சி ஆவத்தா

72. ரண பிள்ளை பெரியமாயன் ராமலிங்கம் செட்டி இந்த

73. சாதனம் யெளுதிசை அங்கப்ப ஆசாரி அச்சரம்

## செப்பேடு எண் 89

(விளக்கம்)

1. செப்பேடு வழங்கியவர் : இராமேசுவரம் திருக்கோயில் இராமநாத பண்டாரம்.
2. செப்பேடு பெற்றவர் : ஆரிய மகாஜனங்கள்.
3. செப்பேட்டின் காலம் : நந்தன ஆண்டு ஆவணி மாதம் 17ந் தேதி (கி. பி. 28 8-1772)
4. செப்பேட்டின் பொருள் : இசைவு முறி

இராமேஸ்வரம் திருக்கோயில் மடாதிபதி இராமநாத பண்டாரத்திற்கும் அந்தக் கோயிலின் பூஜகர், குருக்கள், சபையார், நயினாக்கள், ஸ்தானிகர் ஆகிய மகாஜனங்கள் 512 பேர்களுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது.

தன்னரசு மன்னர்களாகத் திகழ்ந்த சேதுபதிகளில் கி.பி. 1760 வரை ஆட்சி செய்த செல்லமுத்து ரெகுநாத சேதுபதி ஆண் வாரிசு இல்லாமல் இறந்த பொழுது, அவரது தங்கை முத்துத் திருவாயி நாச்சியாரது மகன் ஓராண்டு கூட நிறைவு பெறாத பாலகன் முத்துராமலிங்கம் சேதுபதி மன்னராக அறிவிக்கப்பட்டார். கி. பி. 1741 முதல் தென் மாநிலங்களின் நவாப்பாக நியமனம் பெற்ற வாலாஜா முகம்மது அலி, மறவர் சீமையும் தமது ஆதிக்கத்துக்கு உட்பட்டது எனக்கூறி சேதுபதியிடம் கப்பம் கோரினார். அவரது கோரிக்கை மறுக்கப்பட்டதால் இராமநாதபுரம் கோட்டையை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் கூலிப்படை உதவியுடன் தாக்கி 3-6-1772ல் மறவர் சீமையை தனது உடமையாக ஆக்கிக் கொண்டதுடன் இளைஞரான சேதுபதியையும் அவரது குடும்பத்தினரையும் திருச்சிக் கோட்டையில் சிறை வைத்தார்.

இந்தக் குழப்பமான நிலையில் சேதுபதி மன்னரது நேரடி நிர்வாகத்திலிருந்த இராமேசுவரம் கோயிலின் பூஜை மற்றும் நடைமுறைகளும் நிலை குலைந்தன. இதனை நீக்கி இயல்பான கோவில் நிர்வாகத்தை ஏற்படுத்த கோயில் பூஜகர்களும் 'கட்டளை தாரர்களும் சென்னைக்குச் சென்று நவாப்பைச் சந்தித்து நவாப்பினது ஆலோசனையையும் அனுமதியையும் பெற்றுத் திரும்பினர். திருக்கோயிலின் நடைமுறைகளைக் கண்காணித்து முறைப்படுத்த இராமநாத பண்டாரம் பொறுப்பேற்றுக்கொண்டு ஆரிய மகாஜனங்களுக்கு எழுதிக் கொடுத்த இசைவு முறியாக இந்தச் செப்பேடு அமைந்துள்ளது.

ஏற்கெனவே செப்பேடு எண் 2ல் கண்டவாறு இராமேசுவரம் திருக்கோயில் பணிகளில் கி. பி. 1428 முதல் ஈடுபட்டிருந்த பஞ்சதேச பிராமணர்களின் எண்ணிக்கை அப்பொழுது 512 என்றும் அவர்களில் ஈசுபரபட்டர் என்பவர் கோவில் சொத்துக்களைச் சிறப்பான நிலையில் நிர்வகித்து வந்தார் என்பதும், அவர் நாயக்க மன்னரது கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பு உடையவராகவும் இருந்தார் எனத் தெரிகிறது. இந்தக் கட்டளையைமதுரை மன்னர் முத்து வீரப்ப நாயக்கரால் ஏற்படுத்தப் பட்டிருக்கவேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

இதனைப் போன்றே சேதுபதி மன்னர்களது ''தேவர் கட்டளை'' ''உடையாத்தேவர் கட்டளை'' ''பிரதானி கட்டளை'' பிச்சை கட்டளை'' மற்றும் ''விசுவநாத நாயக்கர், வீரப்ப நாயக்கர், சொக்கர் இராஜசேகர ராஜர் கட்டளைகளும் இந்தக் கோயிலில் ஏற்படுத்தப்பட்டிருந்ததை இந்தச் செப்பேடு தெரிவிக்கின்றது. மேலும் இந்தக் கோயிலுக்கு வருகின்ற பொன், வெள்ளி நாணயங்கள், ஆகியவைகளை இருப்பு வைப்பதற்குக் கஜானாவும், திரு ஆபரணங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு கருவூலம், நிலங்களின் விளைச்சலை திரு. அமுது ஆகியவைகளுக்குப் பயன்படுத்த களஞ்சியமும் தனித் தனியாக இந்தக் கோயிலில் இருந்த விபரமும் இந்தச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இவைகளையும் கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட காணிக்கைகள், உண்டியல்கள், பாத்திர பண்டங்கள், பட்டு, பரிவட்டம், வாகனம், விருது, ஆணை, குதிரை, பசுமாடு, கங்கை நீர்க்காவடி ஆகியவைகளையும் கோயில்

## தொடர் எண் 90

*(ஓலைப்பட்டயம் — நகல்)*

*முதல் பக்கம்*

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1705 இன்மேல் செல்லா நின்ற கபகிருது வருசம் மார்கழி மாதம் 27 சுவாமி மா

2. லவநாத சுவாமிக்கும் மரகதவல்லியம்மனுக்கும் மகா சாத்தாவுக்கும் நித்தியம் பூசை மாத உத்சபம் அபிசேக நெய்வே

3. தனத்துக்கு திருப்பணி வேலைக்கும் மகாராச ராச மானிய ரா-இரணிய கெற்பயாசி ரவி குல முத்து விசைய ரெகுநாத சேதுபதி

4. காத்த தேவரவர்கள் கட்டளையிட்ட கிறாமமாவது அனுமந்தக்குடி முன் பூறுவீகமாக நடந்து வந்ததை அரண்மனையில் திறப்பில்

5. சேத்துக் கொண்டு மகா ராஜ ஸ்ரீமானிய ஸ்ரீ முத்துவிசைய ரெகுநாத முத்துராமலிங்க சேதுபதி காத்த தேவரவர்கள் உத்தர

6. வின் பேரில் பிரதானி முத்திருளப்ப பிள்ளையவர்கள் உத்தரவு பண்ணினகிறாமம் வடக்குச்செய்யானேந்தலுக்கு பெருநான் கெல்லையாவது

7. கீள்பார்க் கெல்லையாவது பன்னானேந்தல் குளக்காலுக் கும் மேற்கு மேற்பார்க்கெல்லையாவது சிவந்தான் கோட்டை எல்லைக்கு

8. கிளக்கு வடபார்க்கெல்லையாவது புள்குளத்து யெல்லைக்கு தெற்கு தென்பார்க்கெல்லையாவது தெற்குச் செய்யாதல் பரம்பூரணிக்கு

9. வடக்கு இந்த பெருநான்கெல்கைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை மேல்நோக்கிய மரமும் கீள்நோக்கிய கிணை

10. றும் வயப்புச் செப்பிறை சகல சமுதாய பிரபா பாத்தியமும் சுவாமி மாலவநாதர்க்கும் மரகதவல்லி அம்மனுக்கும் மகா சாத்தாவுக்கும்

11. தான சாதனம் பூறுவமாக கட்டளையிட்டோம் ஆதி சந்திராதித்த உள்ளவரைக்கும் அனுபவித்துக் கொள்ளக் கடவதாகவும்

12. இந்த தர்மத்துக்கு யாதாமொருவன் விகாதம் பண்ணினவர் கெங்கைக் கரையில் காராம் பசுவையும் பிதாவையும் குருவையும் கொ

13. ண்ட தோஷபிராத்தியடையக் கடவாராகவும் இதுக்கு சாட்சி வணங்காமுடி. பளனியப்ப சேருவைகாரன் ஷை. அனியாபதி அய்யண

14. னம்பலம்

## தொடர் எண் 90

### *ஓலைப்பட்டயம்*

### (விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | பட்டயம் வழங்கியவர் | : | முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி |
| 2. | பட்டயம் பெற்றவர் | : | மாளுவநாதசுவாமி கோயில் அனுமந்தக்குடி |
| 3. | பட்டயத்தின் காலம் | : | சகம் 1705 சுபகிருது மார்கழி மாதம் 27தேதி |
| 4. | பட்டயத்தின் பொருள் | : | வடக்குச் செய்யானேந்தல் கிராமம் தானம் |

முந்தைய காலங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களாக ஓலைப்பட்டயங்கள் இருந்தன. இசைவுமுறி, பிடிபாடு, விடுதலை போன்ற பொதுக்காரியங்களுக்கும் கிரயம், போக்கியம், பத்தடைப்பு, காணியாச்சி, உரிமைமாற்றம், தானம் போன்ற நிலம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளுக்கும் ஓலை நறுக்குகள் பயன்படுத்தப்பட்டன. இவைகளில், உரியவர், ஒப்பமும் சாட்சிகளின் கைச்சாத்தும் பெற்றவுடன் அவை ஆவணங்களாகக் கருதப்பட்டன. எழுத்தாணியினால் வரையும் வழக்கத்திலான இந்த ஓலைப்பட்டயங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வழக்கத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அருகி மறைந்து விட்டன. அத்தகைய ஆவணங்களில் ஒன்றைப் பற்றிய செய்தி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

சேதுபதி மன்னர்கள் பொதுவாகத் திருக்கோயில் மடம், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள் ஆகியோருக்கு வழங்கும் தானங்களுக்கும் செப்புப் பட்டயங்களைப் போன்று

ஓலைப்பட்டயங்களைப் பயன்படுத்தினர். இவைகளில் மிகவும் தொன்மையான ஓலைப்பட்டயம் ஒன்று கி.பி. 1326ல் மங்கை பாக குருக்களுக்கு வழங்கப்பட்டதை இராமநாதபுரம் மேன்யுவல் தெரிவிக்கின்றது‡.

இத்தகைய ஆவணமென்று அனுமந்தக்குடி கோயிலில் நல்லநிலையில் இருந்து வருகின்றது. இன்றைய பசும்பொன் மாவட்டத்தில் தேவகோட்டை வட்டம் தேவகோட்டை நகருக்குக் கிழக்கே எட்டுக்கல் தொலைவில் இந்த ஊர் அமைந்துள்ளது. சேதுபதி சீமையில் உள்ள இராமாயண இதிகாசம் சம்மந்தப் பட்ட பல ஊர்களில் இதுவும் ஒன்று. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த வட்டாரத்தில் கணிசமான எண்ணிக்கையில் சமணர்கள் வாழ்ந்து வந்த செய்தினை இந்தப் பட்டயம் தெரிவிக் கின்றது. அண்மைக்காலம் வரை இந்த ஊருக்குக் கிழக்கே பனஞ்சாயலிலும் மேற்கே சாத்தப்பள்ளியிலும் அமண் பள்ளிகள் இயங்கி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வட்டாரத்தில் உள்ள நாகர்குளம், நாகாடி நாகாணி, பள்ளி, தர்மம், சங்க மங்களம், சாத்தரசன் கோட்டை, சாத்தனூர், குணபதி மங்கலம் என்ற ஊர்களின் பெயர்கள் சமணர்களது குடியிருப்புகளை நினை வூட்டுபவை. மழித்த தலையினரான இந்த மக்கள் மொட்டைப் பிள்ளைமார் என்ற பிரிவினராக இருந்து நாளடைவில் பரந்த இந்து சமுதாயத்தில் கலந்து விட்டனர். ஆனால் அனுமந்தக் குடியில் மாளுவநாதசுவாமி ஆலய வழிபாட்டினைத் தொடர்ந்து வருகின்ற சில சமணர் குடும்பங்கள் இன்றும் இருந்து வரு கின்றனர்.

ஜீனேந்திரமங்கலம் என்றும் குரவடிமிதி என்றும் இந்த ஊர் முன்னர் வழங்கப்பட்டதை அங்குள்ள கல் வெட்டு (கி.பி 1553) தெரிவிக்கின்றது.‡ இந்தக் கோவிலுக்கு ஏற்கனவே சர்வமானியமாக வழங்கியிருந்த அனுமந்தக்குடி கிராமத்தை ஏதோ ஒரு காரணத்தினால் ''அரண்மனை திறப் பில்'' சேர்த்துக் கொண்டு அதற்குப் பதிலாக வடக்குச் செய்யா னேந்தல் என்ற ஊரினை சேதுபதி மன்னர் இந்தத் திருக்

‡ Rajaram Rao T-Manual of Ramnad Samasthanam (1891) P. 206

‡ A.R.E. 408/907

கோயிலுக்கு வழங்கிய ஆணை இந்தப் பட்டயம் ஆகும்.‡ இதனை வழங்கியவர் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் (கி.பி 1760-95)

இந்த உத்தரவு ஓலைப்பட்டயத்தில் அமைக்கப்பட்டிருப்ப தால் மன்னரது விருதாவளிகள், யுகம், ஆண்டுக்கணக்கு போன்ற வைகள் இதில் இடம் பெறவில்லை ''ஸ்ரீ ராம ஜெயம்'' என்ற தொடக்கச் சொல்லுடன் இரண்டு ஏடுகளில் மன்னரது ஆணை பதினான்கு வரிகளில் வரையப்பட்டுள்ளது. இந்த மன்னரது உத்தரவினை வெளியிட்டுள்ள பிரதானி முத்திருளப்பப் பிள்ளை யின் பெயரும் சாட்சிகளாக ஒப்பமிட்டுள்ள பழனியப்பன் சேர்வை அழியாபதி அய்யணன் அம்பலம் என்ற பெயர்களும் இந்தப் பட்டயத்தில் காணப்படுகின்றன. சேது மன்னர்களது சமயப் பொறைக்குச் சான்றாக இந்தப் பட்டயம் இருந்து வருகிறது.

‡ கல்வெட்டு இதழ் எண் 18 : பக்கங்கள் 2-6.

செந்தமிழ்ச் சேது வேந்தர்களது தொண்ணூறு பட்டயங்கள் தெரிவிக்கின்ற சிந்தை இனிக்கும் செய்திகளை இதுவரை இந்தத் தொகுப்பில் கண்டோம்.

ஆலயங்கள், அன்னசத்திரங்கள், அருள்நிறை திருமடங்கள், அடியார்களது புனித இடங்கள் என்ற பல்வேறு அறக்கோட்டங்களும், அவதானிகள், ஆகம பண்டிதர்கள், அருந்தமிழ்ப் புலவர்கள் ஆகிய அறிஞர் பெருமக்களும், சமூக சமுதாய மேம்பாட்டிற்கு அரிய தொண்டு ஆற்ற இந்த அறக்கொடைகள் உறுதுணையாக அமைந்து வந்துள்ளன.

அன்பு உள்ளத்துடனும், அற உணர்வுடனும் மாண்பான மனித நேயத்தை மையமாகக் கொண்டு, இந்த அறக்கொடைகளை வழங்கிய செம்மனச் சான்றோர்களான சேதுபதி மன்னர்கள் கடந்த நானூறு ஆண்டுகால வரலாற்றில் வாழ்ந்து வருகின்றார்கள்.

**நன்றி மறவாத தமிழ்மக்களாகிய நாம் அந்த நல்லாட்சியர்களான வரலாற்று நாயகர்களை நெஞ்சத்தில் நொடிப்பொழுதாவது நிறுத்தி நினைவு கூர்வோமாக!**

# சேதுபதி மன்னர்கள் தானமாக வழங்கிய ஊர்கள்
## (செப்பேடுகளில் கண்டவாறு)

*இராமநாதபுரம் வட்டம்*

1. அத்திஊத்து
2. அல்லிக்குளம்
3. இருவரை வென்றான்
4. உத்தரவை
5. காரையடிமுறிவு
6. காவல்பற்று
7. கருக்காத்தி
8. காராம்பல்
9. குத்தக்கோட்டை
10. கோரைக்குளம்
11. கோவிந்தன்ஏந்தல்
12. சாமநத்தம்
13. தம்பிராட்டி ஏந்தல்
14. தினைக்குளம்
15. திருஉத்தரகோசமங்கை
16. பழஞ்சிறை
17. பனையங்கால்
18. பாலை ஏந்தல்
19. புதுக்குளம்
20. பட்டப் பிள்ளான் இரு கூரானேந்தல்
21. மலங்கரை
22. மனையன் ஏந்தல்
23. முத்துப் பேட்டை
24. மாயா குளம்
25. முப்பனை
26. முருக்கடிப் பற்று
27. மேதலை ஓடை
28. மேலச் சீத்தை
29. ரகுநாத மடை
30. வெள்ளா பற்று

*ஆ) பரமக்குடி வட்டம்*

1. அரியக்குடி
2. கங்கை கொண்டான்
3. குளத்தூர்
4. குளவிப்பட்டி
5. கொத்தங்குளம்
6. கொளத்தூர் (அனுமனேரி)
7. கோந்தை
8. கொல்லன் ஊர்
9. செப்பேடு கொண்டான்
10. சேதுகாவலன்
11. தெஞ்சியேந்தல்
12. தியாகவன்சேரி
13. பாண்டியூர்
14. பேய்ராமத்தேவன்ஏந்தல்
15. முதலூர்
16. மும்முடிசாத்தன்
17. வெங்கிட்டங்குறிச்சி

*இ) முதுகுளத்தூர் வட்டம்*

1. ஆதன் கொத்தன் குடி
2. இறையான் ஏந்தல்
3. கருங்குளம்
4. கருங்குளம்
5. கள்ளிக்குளம்
6. கருக்காத்தி

7. கண்ணன் பொதுவன்
8. கருமல்
9. கதையன் ஏந்தல்
10. கள்ளிக் கோட்டை
11. கிழவனேரி
12. கழுநீர் மங்கலம்
13. குமாரகுறிச்சி
14. கொத்தங்குளம்
15. சின்ன நாட்டான பெரிய நாட்டான்
15. சொக்கானை
16. சேரந்தை
17. நல்லுக் குறிச்சி
18. புளியங்குடி
19. பொசுக்குடி
20. பொட்டல் குளம்
21. மூத்தான் சிங்களம்
22. மத்திவயல்
23. வள்ளைக்குளம்
24. விடந்தை
25. வேலங்குளம்

ஈ கழுதி வட்டம்

1 . மருதங்க நல்லூர்

உ) திருவாடானை வட்டம்

1. அனிச்ச குடி
2. ஆனந்தூர்
3. உரத்தூர்
4. இராமநாத மடை
5. கள்ளக்குடி ஏந்தல்
6. சிங்கன் ஏந்தல்
7. சின்னத் தொண்டி
8. சிறுத்த வயல்
9. சோழியக்குடி
10. கொடிப்புங்கு
11. கோடகுடி கொந்தலான் வயல்
12. நில மழகிய மங்கலம்
13. பகையணி
14. பால்குளம்
15. பாப்பாகுடி
16. புல்லுருடி
17. சாருவூரன் ஏந்தல்
18. பிராந்தணி
19. முடித்தனாவயல்
20. விளத்தூர்
21. சுந்தரபாண்டியன் பட்டினம்
22. பொன்னுக்கு மீண்டா
23. சிறுகவயல்
24. கொந்தன் கோட்டை
25. கட்டி சேரி
26. கரிசல் குளம்
27. உடையனாய சமுத்திரம்
28. மருங்கூர்

ஊ) தேவகோட்டை வட்டம்

1. கங்கணி
2. கட்டி யேரி
3. திருப்பாக் கோட்டை
4. நாஞ்சி வயல்
5. நாணக்குடி
6. நாட்டு சேரி
7. களத்தூர்

எ) அறந்தாங்கி வட்டம்

1. சிறுகானூர்
2. நடுவில் கூற்தம்
3. தனியூர்
4. தச்சமல்லி
5. தச்சமல்லி ஏந்தல்
6. பவித்திர மாணிக்க சதுர் வேதி மங்கலம்
7. பிரம்ம தேசம்
8. பூதகுடி
9. பெருங் காடு

ஏ) திருவாரூர் வட்டம்

1. அன்ன வாசல்

ஏ) சிவகங்கை வட்டம் ;

1. இடையன் கோட்டை
2. கள்ளிக்குடி
3. கூக்குடி
4. கீழைச்சாரன் ஏம்பல்
5. சூரன் ஏம்பல்
6. திருப்பநாதி
7. பனிவயல்
8. புதுக்கோட்டை
9. மல்லன்ஊரனி
10. மாவூரணி
11. பெரியான் ஏந்தல்

ஐ) இளையான்குடி வட்டம்

1. காக்குடி
2. கணபதி ஏந்தல்

ஒ) அருப்புக்கோட்டை வட்டம்

1. சென்னீலக்குடி

இணைப்பு (ஆ)

## சேதுபதி மன்னர் செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிற ஊர்கள்

1. அச்சங்குளம்
2. அதங்குடி
3. அத்தானூர்
4. அமனிப்புளி
5. அரியாகுடி
6. அரியாங்கோட்டை
7. அருங்குளம்
8. அரையணி
9. அல்லிக்குளம்
10. அழகாங்குளம்
11. அயக்குடி
12. அறந்தாங்கி
13. அம்பட்டன்கோட்டை
14. அக்கிரகாரம் குளத்தூர்
5. அரும்பூர்
16. அத்தி ஊத்து
17. அரியக்குடி என்ற கடம்பவன நல்லூர்
18. அனிச்சகுடி
19. அஞ்சானைக்குத்தி
20. அடப்பன்தாழ்வு
21. அஞ்சுகோட்டை
22. அச்சடிபிரம்பு
23. அயக்குடி
24. அக்கிரமேசி
25. அஞ்சாமடை
26. அகிலாண்டஈசுவரியூர்
27. ஆத்தாங்கரை
28. ஆலங்குளம்
29. ஆயக்குடி
30. இதம்பாடல்
31. இராமனேரி
32. இராமநாத சமுத்திரம்
33. இருட்டூரணி
34. இடையன் கோட்டை
35. இராமநாதபுரம்
36. இராமேசுவரம்
37. இத்தியடிக்காடு
38. உப்பூர்
39. உடையனாத சமுத்திரம்
40. உடையான்குடி
41. உளக்குடி
42. எக்கைகுடி
43. எச்சிக்கோட்டை
44. எடத்துவழி
45. என்மனங்கொண்டான்
46. எட்டிசேரி
47. எட்டிவயல்
48. எழுநூத்தி மங்கலம்
49. எழுத்தணி
50. ஏறுபதி
51. ஒ ் டானேந்தல்
52. ஒருவனேந்தல்
53. ஓரூர்
54. கங்கைகொண்டான்
55. கலியாணமாதேவி
56. கள்ளிக்கோட்டை
57. கடம்பவனநல்லூர்
58. கந்தமாதனம்
59. கருங்குளம்
60. கழுநீர் மங்கலம்
61. கண்ணார்குடி
62. காமன்கோட்டை

63. காருகுடி
64. காவனூர்
65. கிடாரம்
66. கீழக்கரை
67. கீழ்விடத்தை
68. குளவிப்பட்டி
69. குழுக்கோட்டை
70. குடவேலி
71. குயவன் குழி
72. குவளன் சாத்தான்
73. குறிஞ்சிக்காடு
74. கொத்தங்குளம்
75. கொடிக்குளம்
76. கோட்டையேந்தல்
77. கொம்பூதி
78. கொல்லனூர்
79. கொள்ளையனேந்தல்
80. கோவூர்
81. கருக்காத்தி
82. கரிசல்குளம்
83. கப்பலூர்
84. கொத்தன் கோட்டை
85. கம்பான் அக்கிரகாரம்
86. கூடல் அழகிய பெருமாள் கோவில்
87. கீழைப் பிராந்தளி
88. குமுலூர்
89. கண்ணனூர்
90. கோவனூர்
91. காத்தானேந்தல்
92. கொடிக்குளம்
93. கண்ணாங்குடி
94. சக்காக்கோட்டை
95. சங்கம்புத்தூர்
96. சம்மட்டியேந்தல்
97. சங்கரன் வலசை
98. சாணான் வயல்
99. சிக்கில்
100. சித்தார் கோட்டை
101. சிறுகுடி
102. சிறைக்குளம்
103. சின்னத்தொண்டி
104. சிறுகானூர்
105. சிறுனாக்குடி
106. சின்னா கைக்குடி
107. சின்னஇலை
108. சீகன்குளம்
109. சுந்தரதாஸ் மடம்
110. சூரன் கோட்டை
111. செட்டியேந்தல்
112. செப்பேடு கொண்டான்
113. சேதுக்கரை
114. சேமனூர்
115. சோத்துக்கலையூர்
116. சோழந்தூர்
117. சுந்தரபாண்டியன் பட்டணம்
118. சிருகவயல்
119. செம்மான் ஏந்தல்
120. சோழந்தூர்
121. சீவனூர்
122. சடையமங்கலம்
123. தச்சமல்லி
124. தனுஷ்கோடி
125. தனிச்சியம்
126. தாமரைக்குளம்
127. திடக்கோட்டை
128. திட்டக்குளம்
129. திருப்பாலைக்குடி
130. தினைக்குளம்

131. திருஉத்திரகோசமங்கை
132. தீயனூர்
133. துக்காகுடி
134. துவார்
135. துறைமுகங்கொண்டான்
136. தெய்வச்சிலை நல்லூர்
137. தேவிபட்டினம்
138. தேத்தாங்கால்
139. தேரிருவேலி
140. தொண்டி
141. திருவெத்தியூர்
142. தத்தங்குடி
143. துர்க்கைவன தாழங்குடி
144. தாளியாரேந்தல்
145. நல்லுக்குடி
146. நரிக்கூட்டி
147. நயினா மரைக்கான்
148. நவலக்குடி
149. நாகாச்சி
150. நாகமங்கலம்
151. நிலமழகியமங்கலம்
152. நீருகுடி
153. நெய்மேனி
154. புதுக்குடி
155. புத்தூர்
156. பூசாரி கடம்போடை
157. போகலூர்
158. பெரியஇலை
159. பொன்னாதியேந்தல்
160. புதுப்பையூர்
161. பனஞ்சாயல்
162. பெரியான் ஏந்தல்
163. புவனேஸ்வரிபுரம்
164. பள்ளிமடை
165. மங்களக்குடி
166. மஞ்சியூர்
167. மல்லல்
168. மறுத்தொண்டி
169. மறுச்சுக்கட்டி
170. முடித்தனாவயல்
171. முத்துரெகுநாதசமுத்திரம்
172. மெய்யானேந்தல்
173. மெய்யாம்புலி
174. மென்னந்தி
175. மேலக்கரை
176. மேல மடந்தை
177. மேலவிடத்தை
178. மேண்மங்கலம்
179. மொச்சி
180. மோர்குளம்
181. மடந்தை
182. மஞ்சிஊர்
183. போகலூர்
184. புத்தூர்
185. புல்லுவயல்
186. பட்டமங்கலம்
187. புதுக்குடி
188. புல்லூர் மந்தூர்
189. புலியூர்
190. மல்லனூர்
191. மண்டலக்கோட்டை
192. மேலப்பிராந்தணி
193. மயிலுமாரி
194. பண்ணந்தை
195. மறிச்சுக்கட்டி
196. மல்லல்
197. ரங்கநாதபுரம்
198. ராஜசிங்கமங்கலம்

199. ராதானூர்
200. ரெட்டையூரணி
201. ரெகுநாதராய ஆயிபுரம்
202. வளமாவூர்
203. வயறுனேந்தல்
204. வல்லபாடல்
205. விரானூர்
206. விரியான் ஓடை
207. விரையாத கண்டன்
208. வேதாளை
209, வெண்ணெய்க்குடி
210. வேளான்தரவை
211. வெள்ளூர்
212. வேலங்குடி
213. வேம்பாறு
214. வட்டாணம்
215. வெள்ளமுடையான்
216. வாலில்லாபுளி
217. வீரானூர்
218. விழிமங்கலம்
219. வல்லபாடல்
220. வெண்ணத்தூர்
221. வேங்கூர்
222. விளாங்காட்டூர்

# செப்பேடு பெற்றவர்கள் தொகுப்பு

| | | செப்பேடு எண் |
|---|---|---|
| | *அ) ஆலயங்கள்* | |
| 1. | இராமேசுவரம் திருக்கோயில் | 1, 3, 4, 8, 9, 10, 18, 21, 31, 37, 38, 49, 65,78,85 |
| 2. | திருப்பெருந்துறை திருக்கோயில் | 16 17,19,22 23,24,43,59 69 |
| 3. | திருஉத்திரகோசமங்கை திருக்கோயில் | 26, 55 |
| 4. | திருப்புல்லாணி திருக்கோயில் | 32, 35, 82, 83 |
| 5. | கோதண்டராம சுவாமி ஆலயம் இராமநாதபுரம் | 39, 44 |
| 6. | எழுவாபுரி ஈஸ்வரர் திருக்கோயில் எழுவன் கோட்டை | 29 |
| 7. | தியாகராஜ சுவாமி திருக்கோயில் திருவாரூர் | 42 |
| 8. | சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குளவயல் | 45 |
| 9. | வேலாயுத சுவாமி திருக் கோயில் பழனிமலை | 51 |
| 10. | முத்துராமலிங்க சுவாமி திருக்கோயில் இராமநாதபுரம் | 73 |
| 11. | சமணக் கோயில் அனுமந்தக்குடி | 90 |
| | *ஆ) திருமடங்கள்* | |
| 1. | சொக்கநாத சுவாமி மடம் பெருங்கரை | 20 |
| 2. | முருகப்பன் மடம் | 33 |
| 3. | அன்னதான மடம் இராமேசுவரம் | 34 |
| 4. | திருவாவடுதுறை ஆதினமடம் திருவாவடுதுறை | 47,50,71 |
| 5. | சாரு ஊரனேந்தல் மடம் | 60 |
| 6. | நாகாச்சி மடம், நாகாச்சி | 72 |
| 7. | சித்து ரெட்டியார் மடம் வடக்கு நத்தம் | 84 |
| | *(இ) சத்திரம்* | |
| 1. | தண்ணீர் பந்தல் சத்திரம் வேதாளை | 66 |
| 2. | புருஷோத்தம பண்டித 'சத்திரம் திருப்புல்லாணி | 68 |
| 3. | அழகர்கோயில் சத்திரம் | 81 |
| | *(ஈ) பள்ளிவாசல்கள்* | |
| 1. | ஈசா பள்ளிவாசல், இராமநாதபுரம் | 52 |

2. சுல்த்தான் சையது இபுராகிம் (வலி) தர்கா 56
3. ஆயில் காபில் தர்கா இராமேசுவரம் 57

(உ) தேவலாயம்

1. சருவேசுர சுவாமி தேவாலயம், முத்துப்பேட்டை 70

(ஊ) அக்கிரகாரங்கள்

1. சுந்தரபாண்டியன் பட்டினம் அக்கிரகாரம் 28
2. அத்திஊத்து கிராம அக்கிரகாரம் 36
3. இராமநாதபுரம் பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சன்னதி அக்கிரகாரம் . . . . . . 46
4. தேர்போகி அக்கிரகாரம் . . . . 58
5. தனுஸ்கோடியில் அக்கிரகாரம் ... 79

(எ) இசைவு முறி

1. இராமேசுவரம் குருக்கள்மார் சபையார் தமிழ் ஆரியர் அனைவரும்... 7

(ஏ) காணியாட்சி

1. இராமேசுவரம் குருக்கள்மார் சபையார் 13
2. இராமநாதபுரம் ராஜராஜஈஸ்வரி அம்பாள் நவராத்திரி உற்சவம் நடப்பித்து வர இராமேசுவரம் சங்கர குருக்கள் 14
3. இராநாதபுரம் மாரி துர்க்கை அம்மன் கோயில் நித்திய கட்டளை திருவிழா நடத்த 15
4. கீழக்கரை சொக்கநாத சுவாமி பூஜாகரர் இராமலிங்க குருக்களுக்கு கீழக்கரை துறைமுகப்பட்டின வருவாயில் காணியாட்சி 25
5. இராமேசுவர சங்கர குருக்கள்சேதுபதி மன்னரது கட்டளை நிறைவேற்ற 27
6. இராமேசுவரம் குருக்கள்சேதுபதி மன்னர் குடும்பத் தினருக்கு தீர்த்த புரோகிதம் செய்ய 63

(ஐ) அரசு ஆணைகள்


1. இராமேசுவரத்தில் நடக்கும் குற்றங்களை தண்டிக்க 5

2. இராமேசுவரம் கோயில் கட்டளைகளை நிறைவேற்றுவது சம்பந்தமான விளக்கம் 6, 11


ஓ) தனியார்களுக்கு வழங்கியவை


1. இராமேசுவரத்தில் பஞ்சதேச ஆரியர்களுக்கு 2

2. செவ்வியம் அகோபிலய்யன் 12

3. சோளகை சேர்வைகாரன், இளமனூர் 30

4. கணபதி ஏந்தல் வித்வத் மஹாஜனங்கள் 40

5. ரெகுநாத குருக்கள் இராமேசுவரம் 41

6. கோபால் அய்யன் குமாரன் ராம அய்யன் 48

7. கலாநிதி கோனய்யன் புத்திரன் ராமனய்யன் 33

8. இராமலிங்க நம்பிகள் மகன் மங்களேசுவர குருக்கள் 54

9. மங்களேசுவர குருக்கள் 61

10. வேத விற்பன்னர்கள் 62

11. குளத்தூரான் குமாரன்சுப்பையன் முதலியோர் 67

12. இராம அய்யன் புத்திரன் சுப்பிரமணியன் 77

13. சங்கரலிங்க குருக்கள் ராஜசிங்கமங்கலம் 75

14. கிருஷ்ணயங்கார் இராமநாதபுரம் 76

15. வீரலட்சுமி நாச்சியார் இராமநாதபுரம் 77

16. சர்க்கரை புலவர், கிடாரம் ... 80


ஓ) பிறவகை


1. வலையர்குடி தலைவர்களதுபலிசாதன பட்டயம் .... 86

2. இராமேசுவர குருக்கள்மார்சபையார் ஆரிய மகாஜனங்கள் 87

3. பெருவயல் முருகையா கோயிலுக்கு மகமை 88

4. இராமேசுவரம் இராமநாண்டாரத்தின் பிடிபாடு 89



இந்த நூலாசிரியரது பிற படைப்புகள்

1. இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் (1934)
2. விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987)
(தமிழ்நாடு அரசு பரிசும் பாராட்டும் பெற்றது)
3. முஸ்லீம்களும் தமிழகமும் (1988)
(சென்னை சீதக்காதி அறக்கட்டளையின் மாநில நிலைப்போட்டி பரிசும் பாராட்டும் பெற்றது)
4. மாவீரர் மருதுபாண்டியர் (1989)
(தமிழ்நாடு அரசு பரிசும் பாராட்டும் பெற்றது)
5. அலிபாத்துஷா காப்பியம் (1991)
(பதினேழாம் நூற்றாண்டு சிற்றிலக்கியம் முதல்பதிப்பு)
6. மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)

தொடர்பு கொள்ளவும் :

**ஷர்மிளா பதிப்பகம்**

21, ஈசா பள்ளிவாசல் தெரு

இராமநாதபுரம் - 623 501

பரணி அச்சகம், மதுரை-1